# வெண்முரசு

மகாபாரதம் நாவல் வரிசை

# கல்போருசிறுநுரை

ஜெயமோகன்

# கல்பொருசிறுநுரை - 1

## பகுதி ஒன்று : பொற்பூழி – 1

அரசே கேள்! சொல்லச் சொல்ல சிதறுவதும் எண்ண எண்ணப் பெருகுவதும் வகுக்கும்தோறும் மீறுவதுமான ஒன்றை அறம் என்றனர் முன்னோர். அது கண்ணீரில் தெளிவது, புன்னகையில் ஒளிவிடுவது, கனிவில் கூர்கொள்வது. பேசிப் பேசி பெருக்கியவை பொருளிழந்து உதிர்வன என்றுணர்ந்தவன் மெய்யறிந்தோன், எண்ணிப் பெருக்கியவற்றை எண்ணாது சுருக்குபவனே யோகி, ஒரு சிரிப்பில் ஒரு துளி விழிநீரில் அமைபவன் கவிஞன் என்கின்றனர். இப்புவியில் அறம் பேசப்படாத நாளே இல்லை. ஆகவே அறம் மீறப்படாத நாளும் இல்லை.

விண்ணிலிருந்து ஒளிச்சரடு என மண்மேல் விழுந்து அறத்தோர் அல்லவர் என மானுடரை இரு பிரிவென பிரிப்பது எது? இங்கு இவ்வண்ணம் மானுடர் வாழவேண்டுமென்று வகுத்தது எதுவோ அது. அறமென இங்கு தன்னை காட்டுவது, அறத்தை கடந்து சென்றாலொழிய முழுதுரு தெளியாதது, சார்ந்தோர் அறிவது, மீறியோர் மேலும் அறிவது. அது வாழ்க! அதன் வண்ணங்கள் பொலிக! அதன் வழிகள் துலங்குக! இலக்குகள் அனைத்திலும் அது நிலைகொள்க! ஆம், அவ்வாறே ஆகுக!

சதபதத்தைச் சார்ந்த ஃபூர்ஜ குலத்து இசைச்சூதன் பிரவகனின் மைந்தனாகிய கருணன் நான். பன்னிரண்டு தலைமுறைகளாக இசைப்பாடல்கள் திகழும் நா கொண்டவன். மெய்யறிவெனும் நெய் நிறைந்த கலம் எங்கள் நெஞ்சு. அதிலெழும் சுடர் எங்கள் நாக்கு. இக்கரிய சிறு உடலில் பற்றியெழுந்த தீயின் திருத்தழல் எந்தையரிலிருந்து என்னில் பற்றிக்கொண்டது. என்னிலிருந்து என் மைந்தனுக்கு நான் பொருத்திக்கொடுப்பது. எரித்தழிப்பது, அவிகொள்வது, ஒளியூட்டுவது, விண்விண் எனத் தாவுவது. அரசே, ஒருபோதும் தூய்மை அழியாதது. தூய்மை செய்வது. இருப்பதும் நிகழ்வதும் ஒன்றென்றானது. துடிப்பே தானென்றானது. கணமும் நிலைகொள்ளாதது. எனினும் ஊழ்கம் அறிந்தது. இவ்வுலகையே உண்டாலும் பெருகும் பசி கொண்டது. எனினும் தன் எல்லையை உணர்ந்தது. திசைகளில் சுடர்களாக, வெறும் வெளியில் மீன்களாக, நீரில் ஒளியாக, மலர்களில் வண்ணமாக, சொல்லில் மெய்மையாகத் திகழ்வது, இங்கு என்னில் இவ்வண்ணம் எழுந்துள்ளது.
இவ்வேள்விக்குண்டத்தில் எழுந்த தழலுக்கு வணக்கம்.

பாரதவர்ஷம் கண்ட பெருவேள்வியின் கதையை இதுகாறும் சொன்னேன். அதன் ஒவ்வொன்றும் பேருருக்கொண்டது. கட்டெறும்பு நடுவே யானையென இதுவரை பாரதவர்ஷம் இயற்றிய வேள்விகள் நடுவே அது திகழ்கிறது என்கின்றனர் பாணர். அஸ்தினபுரி அந்த வேள்வியால் மண்ணிலிருந்து ஏழு அடி உயரம் விண்ணில் எழுந்துள்ளது என்கிறார்கள். அங்குள்ள மரங்களின் கனிகள் அனைத்தும் இருமடங்கு இனிமை கொண்டன. அங்குள்ள உலோகங்கள் அனைத்திலும் மும்மடங்கு இசையொலி நிறைந்துள்ளது. ஆயிரத்து எட்டு அவைகளிலாக அங்கு நூல் ஆய்ந்து தெளியப்பட்டது. பல்லாயிரம் களங்களில் அறுபத்து நான்கு கலைகளும் ஆடி

முடிக்கப்பட்டன. பல்லாயிரம் பல்லாயிரம் பந்திகள் அன்னம் அமுதென நாவால் உணரப்பட்டது. அனைத்துக் கைகளிலும் பொன்னும் வெள்ளியும் திகழ்ந்தன. அனைத்து உள்ளங்களிலும் களிவெறி நிறைந்திருந்தது.

ஒருவர் எஞ்சாது அனைத்து மானுடரும் மகிழ்ந்து கூத்தாடும் ஒரு நகரில் தெய்வங்கள் வந்திறங்குகின்றன. வானில் பொன்னொளிர் முகில்கள் நிறைந்திருந்தன. அவற்றிலிருந்து கணம் கோடியென தேவர்கள் இறங்கி அங்கு நிறைந்தனர். அவர்கள் உலோகப்பரப்பில் ஒளிர்வென விழிகொண்டனர். நீரில் அலையென மகிழ்ந்தாடினர். அனலில் ஒளியென வெறி கொண்டனர். தொடுவது எதுவும், நோக்குவன அனைத்தும், அறிவன முழுவதும் தேவர்களே என்று அங்குளோர் அகத்தே அறிந்தனர். தெய்வங்கள் அந்தக் காற்றை விண்ணின் தூய்மையால் நிறைத்தனர். அதை உயிர்த்தவர் அனைவரும் தேவர்கள் என்றானார்கள். பின்னிரவில் இசையும் குளிரும் வண்ணங்களும் சுவையும் மணமும் ஒன்றே என்றான கணங்களில் அவர்களின் கால்கள் நிலம்தொடவில்லை. அதை அவர்களும் அறியவில்லை.

கருவூலம் ஒழிய, கைதளர, உளம் நிறைய அள்ளி அள்ளிக் கொடுத்து பெருஞ்செல்வனானார் அஸ்தினபுரியின் பேரரசரான யுதிஷ்டிரன். அந்தணர் வாழ்த்த, குடிகள் வணங்க அரியணை அமர்ந்தார். மூதாதையரை வணங்கி முனிவரை பணிந்து நற்சொல் பெற்றார். அஸ்தினபுரியின் அரண்மனை பாரதவர்ஷம் தன் நெஞ்சில் அணிந்த மணியாரத்தின் பொற்பதக்கத்தின் மையத்தில் ஒளிரும் அருமணியென்றாகியது. அதன் பேரவைக்கூடத்தில் ஹஸ்தி அமர்ந்த அரியணையில் மணிமுடி சூடி யுதிஷ்டிரன் கோலேந்தினார். அவர் அருகே

அமர்ந்தாள் ஐம்புரிக் குழல் முடித்து மணிமுடிசூடிய பாஞ்சாலன் கன்னி. மும்முடி சூடிய வேந்தனை வாழ்த்தி அந்தணர் வேதமுரைத்தனர். முரசுகள் இயம்பின. கொம்புகள் பிளிறின. பல்லாயிரம் நாவுகளால் நகர் அவர்களை வாழ்த்திக் கூவியது.

அத்தனை பருப்பொருட்களும் ஒலியெழுப்புவதை அங்கு கண்டனர். வாழ்க வாழ்க என்றன கோட்டைச்சுவர்கள். மணிமாடக்குவடுகள் ஓங்காரமிட்டன. தெருப்புழுதிப் பரப்புகள் முரசுத்தோல்களாயின. நீரோடைகள் யாழ்நரம்புகளென்றாயின. சங்குகள் என முழங்கின சாளரங்கள். பெருகி அலைத்த பசுவெளிக்காடுகள் மேல் கவிழ்ந்த வானம் சல்லரியாகியது. வாழ்த்துகள் அன்றி பிறிதொன்றை செவி கொள்ளாது அங்கிருந்தார் பாரதவர்ஷத்தின் தனியரசர். தௌம்யர் தலைமையில் அந்தணர் சூழ்ந்திருந்தனர். கௌதமர் முதன்மைகொள்ள முனிவர் அவை நிறைத்திருந்தனர். துணையரசர்கள் வாழ்த்தி அமைந்தனர். புலவரும் சூதரும் குடித்தலைவர்களும் வணிகர்களும் அங்கிருந்தனர்.

தௌம்யர் அரசரிடம் "வேதச் சொல் கனிந்த அந்தணர் தொட்டளித்த மணிமுடி அணிந்து அமர்ந்திருக்கிறீர்கள், அரசே. அருமுனிவர் அளித்த சொல்லனைத்தும் உங்களைச் சூழ்ந்திருக்கின்றன. குடிகளின் வாழ்த்து பீடமென உங்களை ஏந்தி நிற்கிறது. இத்தருணத்தில் இப்புவியில் இவ்வண்ணம் பிறிதொரு மானுடர் திகழ்ந்ததில்லை. இங்கு இந்திரன் நீரே என்றுணர்க!" என்றார். யுதிஷ்டிரன் மகிழ்ந்து தலைவணங்கினார். "என் மூதாதையரும் என் குடியினரும் இதன்பொருட்டு ஆன்றோர் அனைவருக்கும் நன்றிக்கடன் கொண்டிருக்கிறோம். என் கொடிவழிகள் இன்றுரைக்கப்பட்ட சொற்கள்

ஒவ்வொன்றையும் செல்வமெனக் கொள்க! அவர்கள் சித்தம் களஞ்சியமாகுக!” என்றார்.

கௌதமர் “அரசே, முடிசூடும் அரசர் அனைவரும் ஒருகணமேனும் இந்திரனெனத் திகழ்ந்து மீண்டாலொழிய விண்ணேக இயலாதென்கின்றன நூல்கள். வெற்றிவேலேந்தி அறமுரைத்து அமர்கையில், தந்தையென உளம் பெருகி குடிபுரக்கையில், அந்தணர் முன் சொல்பணிகையில், முனிவர் அடிசூடுகையில், புலவர் வாழ்த்துகையில் அரசன் இந்திரனாகிறான். நீயோ இப்போது இந்திரனென்றே அமர்ந்திருக்கிறாய். அருகே உன் பொருட்டு இத்தருணத்தில் இந்திரன் தன் மணிமுடி கழற்றி வைத்து விண்ணில் நின்றிருக்கிறான். இனி எப்போதும் பாரதவர்ஷத்தில் முடிசூடும் எவரும் உன் பெயர் உரைத்தே கோலேந்துவர். பேரறத்தான் என்று இந்நிலத்தெழுபவர் நினைவில் என்றும் நிலைகொள்வாய். ஆம், அவ்வாறே ஆகுக!” என்று வாழ்த்தினார்.

அவை நிறைந்திருந்த குடிகள் போற்றினர். அண்டைநாட்டு அரசர்கள் மகிழ்வோசை எழுப்பினர். நிரைவகுத்திருந்த முனிவர்கள் யோகக்கழி தூக்கி வாழ்த்தினர். வேதம் எழுந்தது அந்தணர் நாவுகளில். கங்கைநீருடன் அரிமலர் பொழிந்தது. எழுந்து கை கூப்பியபோது யுதிஷ்டிரன் விழிநீர் உகுத்துக்கொண்டிருந்தார். சூழ்ந்து நின்றிருந்த இளையோர் உளம் பெருகி இருந்தனர் என விழிகள் காட்டின. அருகமர்ந்திருந்த அரசி கல்லெனச் சமைந்திருந்தாள். அவள் கண்கள் மட்டும் கூர் கொண்டிருந்தன. “எங்குளர் எனினும் நிறைக என் அன்னையர் இருவரும் பெருந்தந்தையும்! மகிழ்க என் பேரமைச்சர் விதுரர்! விண்ணிலிருந்து வாழ்த்துக என் உடன்பிறந்தார் கர்ணனும் சுயோதனனும் தம்பியர் நிரையும்!

களிகொள்க என் மைந்தர்!” என்றபோது யுதிஷ்டிரன் உளம் விம்மி கூப்பிய கைமலர்மேல் நெற்றி வைத்து உடல் அதிர்ந்து அழுதார்.

வேள்வியை நிறைவுசெய்யும் சடங்குகள் மூன்று என்று மறையோர் அறிவித்தனர். வேள்வியின் பொருட்டு அவைசூழப்பட்டு நிலைநிறுத்தப்பட்ட நெறிநூல்களை குடிகளுக்கு அளித்தருளல், அன்ன நிறைவு செய்தல், வேள்விச் சாம்பலை கங்கைப் பெருக்கில் கரைத்து விண்ணோருக்கு நன்றி கூறி நிறைவேற்றுதல். யுதிஷ்டிரன் ஆகுக என ஆணையிட்டார். அவைக்கு இரு பெரும் அடுக்குகளாக செம்பட்டு சுற்றப்பட்டு பொற்தாலங்களில் ஏந்தி கொண்டுவரப்பட்ட நிறுவுகை நூல்களையும் அமைதி நூல்களையும் அவைமுன் வைத்தார். தௌம்யர் அவையில் எழுந்து “ஆன்றோரே, பீஷ்மரால் நிறுவப்பட்ட நூல்கள் ஓர் அடுக்கு. வேள்வியின் நிறைவென அமைக்கப்பட்ட அமைதி நூல்கள் இன்னொரு அடுக்கு. அறிஞர் அமர்ந்த அவைகள் ஆய்ந்து பழுது நீக்கி அவையேற்பு செய்து அளித்திருப்பவை இவை. அவற்றை அரசர் தன் செங்கோலால் இங்கிருக்கும் குடித்தொகை அனைத்திற்கும் மேல் நிலைகொள்ளச்செய்க! இனி இப்பாரதவர்ஷம் இந்நூல்களால் ஆளப்படுவதாக!” என்றார்.

அவை மேடையில் பொன்னாலான துலாத்தட்டொன்று நிறுவப்பட்டது. அதன் இரு தட்டுகளில் இடத்தட்டில் நிறுவுகை நூல்களும் வலத்தட்டில் அமைதி நூல்களும் வைக்கப்பட்டன. அவை முற்றிலும் நிகர்எடை கொள்வது வரை சுவடிகளை அடுக்கினர். முள் அசைவிலாது நின்றபோது அவையில் அமர்ந்திருந்த குடிகள் அனைவரும் எழுந்து தங்கள் கோல்களையும் கைகளையும் தூக்கி வாழ்த்தொலி பெருக்கினர்.

“அழியா நெறிகள் வாழ்க! வெல்க நாராயணப் பெருவேதம்! நிலைகொள்க வேத நெறி!” என்று கூவினர். யுதிஷ்டிரன் எழுந்து “இதோ இந்நூல்கள் இங்கே நிலைகொள்கின்றன. அஸ்தினபுரியின் மணிமுடியும் செங்கோலும் உடைவாளும் கொடியும் இந்நூல்களின் காவலென, சான்றென, ஊர்தியென என்றும் நின்றிருக்கும். ஆம், அவ்வாறே ஆகுக!” என அறிவித்தார். “ஆம்! ஆம்! ஆம்!” என முழக்கமிட்டது அவை.

தௌம்யர் சொன்னார் “ஒன்று மூதாதையர் அளித்தது. பிறிதொன்று நாம் கண்டடைந்த மெய்மை. ஒன்று பிறிதை நிகர் செய்யும். தந்தை மைந்தரை என ஒன்று பிறிதை வாழ்த்தும். மைந்தர் தந்தையை என ஒன்று பிறிதொன்றை பேணும். சாந்தியும் அனுசாசனமும் செஞ்சிறகுகள் என்றாக பாரதவர்ஷமெங்கும் பறந்தெழுக இந்த விண்பருந்து! ஆம், அவ்வாறே ஆகுக!” அவை வாழ்த்தொலி எழுப்பியது. யுதிஷ்டிரன் எழுந்து தன் செங்கோலை அத்துலாவின் இரு தட்டுகளுக்கும் குறுக்காக வைத்தார். பின் அதன் முன் மண்டியிட்டு மும்முறை தலைவணங்கினார். தன் வாளுடன் அதனருகே நிலைகொண்டார். அந்தணரும் முனிவரும் குடிகளும் மலர் அரியிட்டு வாழ்த்தி அத்தருணத்தை தெய்வங்களுக்குரியதாக்கினர்.

பின்னர் அவை கலையும் அறிவிப்பு எழுந்தது. யுதிஷ்டிரன் மும்முறை வணங்கி, வாழ்த்துப் பேரொலியும் மங்கல இசையும் அலையலையென எழுந்து அள்ளிக்கொண்டு செல்வதுபோல் திரும்பி அவையொழிந்து வெளியேறினார். சிற்றறையில் சற்றே ஓய்வெடுத்து இன்நீரும் பிடியன்னமும் அருந்தி மணிமுடி மாற்றி உண்போர் ஒழிந்த அன்னசாலை நோக்கி நடந்தார். நூற்றெட்டு எச்சில் இலைகளை தன் கையாலேயே

எடுத்து கூடையிலிட்டு அன்னசாலையை அவர் தூய்மை செய்யவேண்டுமென நெறியிருந்தது. தம்பியர் கைகூப்பி உடன் வர ஒவ்வொரு இலையாக நின்று வணங்கி எச்சில் இலையை இரு கைகளாலும் எடுத்து அருகே நின்றிருந்த ஏவலனின் கூடையில் இட்டார்.

அச்சடங்குக்கென அந்தணரும் பிற குடியினரும் உண்டு முடித்து எழுந்த ஏழு அன்னசாலைகளில் இலைகள் அவ்வண்ணமே எச்சில் நிறைந்து வைக்கப்பட்டிருந்தன. இரண்டாவது அன்னசாலைக்குள் யுதிஷ்டிரன் நுழைந்தபோது அங்கே ஒரு கீரி எச்சில் இலைகளின் மேல் உருண்டு புரள்வதை கண்டார். எவ்வண்ணம் அது அங்கு வந்ததென்று திகைத்து நோக்கினார். அவர் நோக்குவதைக் கண்டே பிறர் அதை உணர்ந்தனர். அதை விரட்டும் பொருட்டு ஏவலர் கூச்சலிட்டபடி ஓடினர். திரும்பி நின்று மென்மயிர் உடல் சிலிர்த்து மணிவிழி உருட்டி அவர்களை அது பார்த்தது. வீரர் கோல்களுடன் கூச்சலிட்டு அதை துரத்த முற்பட்டனர்.

“நில்லுங்கள்!” என்று யுதிஷ்டிரன் கூவினார். அக்கீரியின் ஒருபுறம் பொன் என சுடர் விட்டது. “இது எளிய கானுயிர் அல்ல. கந்தர்வரோ தேவரோ மாற்றுருக்கொண்ட முனிவரோ என்று தோன்றுகிறது. இவ்வண்ணம் பொன்னுடல் கொண்ட கீரியொன்றை முன்பு கண்டதில்லை, நூலிலும் அறிந்ததில்லை” என்று யுதிஷ்டிரன் கூறினார். தௌம்யரும் அப்போதுதான் அதை கண்டார். “ஆம், இது எளிய விலங்கு அல்ல” என்றார். பிறரை விலக்கி கைகூப்பியபடி அருகணைந்து முழந்தாளிட்டு அக்கீரியின் அருகே அமர்ந்து “தாங்கள் யாரென்றறியேன். எனது அரசப் பெருவேள்வியின் அன்னநிலையில் வந்து இவ்வண்ணம் புரள்வது எதன் பொருட்டு என்று கூறுக!” என்றார்.

கீரி அவரை நோக்கி மெல்லிய குரலில் அவர் மட்டும் கேட்கும்படியாக கூறியது "வேந்தே, முன்பொரு நாள் வசிஷ்டர் அடர்கானகத்தில் வேள்வி ஒன்றை நிகழ்த்தினார். சித்திரை முழுநிலவு நாளில் அவ்வேள்வியை நிகழ்த்துவது அவர் மரபு. அனைத்து அவிப்பொருட்களுடன், அனைத்து அந்தணர் முறைமைகளுடன், முனிவர் குலங்களனைத்தும் இடம்பெற, ஆயிரம் பேர் அன்னமுண்டு அமைய, ஆயிரம் சூதர் சொல் பெற்றுச் செல்ல, அனைத்துக் கலைகளும் திகழ அதை நிகழ்த்துவது அவர் வழக்கம். ஆனால் அம்முறை வடமலை தேடிச்சென்ற அவர் அங்கொரு தவம் முடித்து கீழிறங்குகையில் வழி தவறிவிட்டிருந்தார். பன்னிரு முறை வழி தேர்ந்து கீழிறங்கிய பிறகும்கூட சென்றடைய வேண்டிய இடமல்ல தான் வந்தடைந்தது என்று உணர்ந்தார்."

எனில் தன்னை மீறிய ஆடல் ஒன்று அதிலிருப்பதை உணர்ந்து உளம் அமைந்து அங்கே ஒரு சிற்றோடைக் கரையில் அமர்ந்தார். நாள் கணித்து நோக்கியபோதுதான் அது சித்திரை முழுநிலவு நாளென்று தெரிந்தது. அவ்வேள்வியை அங்கேயே நிகழ்த்த அவர் எண்ணினார். அவ்வேள்விக்குரிய பொருட்கள் எதுவும் அன்று அவரிடம் இல்லை. அன்னமென ஒரு மணி எஞ்சியிருக்கவில்லை. அக்காட்டில் ஒரு கனியோ ஒரு கிழங்கோ இருக்கவில்லை. உணவென்று எதுவும் அவருக்குக் கிடைத்து மூன்று நாட்களாகியிருந்தன. ஆனால் வேதச்சொல் அவர் உளத்தில் நிறைந்திருந்தது. சூழ நோக்கிய பின் விறகு தேர்ந்து அடுக்கி இரு கல்லெடுத்து உரசி எரியெழுப்பி வேதம் உரைத்து வேள்வி நிகழ்த்தினார். கல்முனையில் தன் கைவெட்டி சொட்டும் குருதியை நெய்யென்று உதிர்த்து அவியாக்கினார்.

அவ்வேள்வி முடித்து எழுந்தபோது அங்கே விண்ணிலிருந்து தவழ்ந்து என சுழன்று மண் வந்து தொட்ட சிறகொன்று கந்தர்வனென எழுந்தது. அவரை வணங்கி "முனிவரே, என் பெயர் நீலவன். இக்காட்டில் இத்தருணத்தை எதிர்நோக்கி தவம் இருந்தவன். தூய வேதம் திகழும் கணமொன்று இங்கு அமைந்தால் நான் விண்புகக் கூடும் என சொல் இருக்கிறது. மண்ணில் தூய வேதம் திகழும் தருணங்களை எதிர்நோக்கி அலைந்து இவ்விடத்தை கண்டடைந்தேன். மானுடர் எவரும் வராத இங்கே எவ்வண்ணம் வேதம் திகழும் என்று அறியாது அச்சொல்லை மட்டுமே நம்பி இங்கு இருந்தேன். இன்று அது நிகழ்ந்தது. நான் வீடுபேறடைந்தேன். என் உருக்களில் ஒன்றே தங்கள் முன் திகழ்கிறது" என்றான். பின்னர் மீண்டும் இளநீல நிறத் தூவலென மாறி மண்ணில் கிடந்தான்.

புன்னகையுடன் அவனை வணங்கி வாழ்த்தியபின் வழி தெளிந்து தெற்கு நோக்கி நடக்கலானார் வசிஷ்டர். நான் புதருக்குள்ளிருந்து அந்த வேள்வியை பார்த்துக்கொண்டிருந்தேன். அவர்கள் சென்ற பின்னர் அருகணைந்து அந்த வேள்விக்குளத்தின் வாடாத அனலை முகர்ந்தேன். மீண்டும் திரும்பி புதர்களுக்குள் சென்று வேட்டையாடி உண்டேன். திரும்புகையில் அன்று குளிர் மிகுந்திருப்பதை கண்டேன். என் வளைக்குள் புகுந்தபோதும்கூட உடல் நடுங்கிக்கொண்டிருந்தது. அப்போதுதான் அந்த வேள்விக் குழியில் அனல் எஞ்சியிருப்பதை நினைவு கூர்ந்து அங்கு சென்றேன். அருகணைந்தபோது அச்சாம்பலிலும் மணலிலும் வெம்மை எஞ்சியிருப்பதைக் கண்டு அதன் மேல் படுத்து புரண்டேன். அதன் வெம்மையில் மயங்கி அன்றிரவு துயின்றேன்.

மறுநாள் விழித்துக்கொண்டபோது என் உடல் பாதிப்பங்கு பொன்னென மாறியிருப்பதை கண்டேன். நான் அதை உணரவில்லை. என்னைக் கண்டதும் என் குலத்தார் அஞ்சி ஒலியெழுப்பியபடி விலகி ஓடியதைக் கண்டபோதுதான் என் உடலில் ஏதோ மாற்றம் நிகழ்ந்திருப்பதை உணர்ந்தேன். கங்கை நீரில் சென்று என் உருவை நோக்கி நிகழ்ந்ததை உணர்ந்து திகைத்தேன். அவர்களிடம் சென்று "இது என் பிழையல்ல, நம் குடிக்கு வந்த மாண்பென்று கொள்க! இன்னமும் என் உடலில் பாதி நம் குடியினரைப்போன்றே இருப்பதை உணர்க!" என்றேன். அவர்கள் அஞ்சி ஓடினர். நான் அவர்களிடம் "என்னை விலக்காதீர்கள். என்னை ஏற்றுக்கொள்ளுங்கள்" என்று கூவினேன். "நம் குடிக்கு வந்த தெய்வக் கனிவல்லவா நான்?"

அவர்களில் குடிமூத்தவர் என்னை நோக்கி "ஆம், ஆனால் உன் உடலில் பாதி பொன்னென்று ஆகிவிட்டிருக்கிறது. பொன்னானவன் எங்களுடன் வாழ முடியாது. நாங்கள் உலகியலார். பழிகொள்ளாது வாழ இயலாதவர். பிழைகளினூடாகவே கற்பவர்கள். குருதியும் அழுக்கும் கொண்ட உடல் எங்களுடையது. நொடியோசையில் உடல் சுருட்டி ஒளிந்துகொள்ளவேண்டியவர்கள் நாம். ஒளிரும் இவ்வுடலுடன் உன்னால் ஒளிய முடியுமா என்ன? உன்னை உடனமைத்து இயல்பாக வாழ எங்களால் இயலாது" என்றார்.

நான் திகைத்து நின்றேன். "நீ தெய்வமாகும் செலவு கொண்டவன். உன் உடல் களைந்து பொன்னென்றே ஆகுக! ஒளியுடன் வந்து எங்கள் ஆலயத்தில் அமர்க! அன்றி, அப்பொன்னைக் களைந்து மீண்டும் நம் குடிக்கே வருக! சேறணிந்து குருதி உண்டு எங்களில் ஒருவன் என்றாகு!

பொன்னென்றும் உடலென்றும் திரிந்த உரு கொண்டு ஒருவன் இங்கு எங்களுடன் வாழ இயலாது" என்றார். "ஆம், செல்க!" என்றனர் என் குடியினர். "இவன் அச்சமூட்டுகிறான்" என்றாள் என் அன்னை. "இவன் எங்களையும் காட்டிக்கொடுப்பான்" என்றனர் உடன்பிறந்தார். "நீ பொன்கொண்டவன், எனினும் கீரி. பொன்னை விரும்புவோர் உன்னை கொல்லவும் கூடும்" என்றார் முதுதந்தை ஒருவர். "உன்னை காத்துக்கொள்க! எங்களால் உனக்கு காவலளிக்க இயலாது."

அவர்கள் என்னை விட்டு விலகிச்சென்ற பின் துயருற்றவனாக நான் வசிஷ்டர் சென்ற திசைக்கே சென்றேன். அவரது காலடிகளை மணம்கொண்டு விரைந்து இரவும் பகலும் ஓடி தெற்கே நெடுந்தொலைவு சென்றுவிட்டிருந்த அவரை சென்றடைந்தேன். கங்கை நதிக்கரையில் ஊழ்கத்திலிருந்த அவர் அருகே அணைந்து காலடிகளை வணங்கி நின்றேன். விழி திறந்து அவர் என்னை கண்டார். நிகழ்ந்ததென்ன என்று அவர் முன்னரே உணர்ந்துகொண்டார். "முனிவரே, என்னை வாழ்த்துக! எஞ்சிய உடலையும் பொன்னென்றாக்கி அருள்க!" என்றேன். "நான் அதற்கு ஆற்றல் கொண்டவன் அல்ல. அது தெய்வவிளையாட்டு" என்றார்.

அவர் என்னை தவிர்க்கிறார் என உணர்ந்தேன். "அந்தணரே, என்னை வாழ்த்துக! என்மேல் கனிக!" என மன்றாடினேன். "நீயே உணர்க, நான் இயற்றிய வேள்வியில் நீ பாதிப்பங்கே பொன்னாகிறாய் எனில் அதன்பொருள் என்ன? என் ஆற்றலின் எல்லை அதுதான் என்றல்லவா? பாதிப்பங்கு பொன்னானவன் நீ மட்டுமல்ல. எஞ்சியதைப் பொன்னாக்கவே நானும் இங்கு தவமியற்றிக்கொண்டிருக்கிறேன்" என்றார். "என் எஞ்சிய உடலை பொன்னென்றாக்குவது எவ்வண்ணம்?" என்று நான்

கேட்டேன். "இவை நம் வழியாக நிகழும் நம்மைக் கடந்தவை. உன்னை பொன்னென்றாக்கியது நான் நிகழ்த்திய வேள்வி. அதற்கு நிகரான பிறிதொரு பெருவேள்வி ஒன்றை சென்றடைக! அங்கு எரி மிச்சத்தில் இவ்வண்ணம் புரள்க! அது உன்னை முற்றிலும் பொன்னென்றாக்கும்" என்றார்.

நான் அவரை வணங்கி அங்கிருந்து கிளம்பினேன். அரசே, என் அகவை ஆயிரம் ஆண்டுகள் என்று உணர்க! என் உடல் பொன்னென்று ஆகியிருப்பதால் எனக்கு சாவில்லை. நான் இதுவரை நூற்றெட்டு பெருவேள்விகளை சென்றடைந்து அவ்வனலில் புரண்டிருக்கிறேன். அவை எவையுமே அறநிறைவு கொண்டவை அல்ல என்பதனால் என் உடல் பொன்னென்று ஆகவில்லை. சலித்து துயருற்று இங்கு வந்தேன். யயாதியும் தசரதனும் கார்த்தவீரியனும் செய்த வேள்விகளால்கூட நான் பொன்னுரு பெறவில்லை.

ஒருநாள் அறிந்தேன், இங்கு இப்பெருவேள்வியொன்று நிகழவிருப்பதை. எனவே இந்நகர் நாடி வந்தேன். இவ்வேள்வி அனைத்து வகையிலும் நிறைவு கொள்வதை எதிர்பார்த்து காத்திருந்தேன். கலை திகழும் அவைகளில் சென்று வேள்வி நிறைவின் கணம் அங்கு எழுகிறதா என்று பார்த்தேன். இல்லையென்று அறிந்தேன். எரி ஓம்பிய களங்களுக்கு சென்றேன். அங்கு சாம்பலில் விழுந்து புரண்டேன். அங்கும் நிறைவடையவில்லை இவ்வேள்வி என்று உணர்ந்தேன். உன் அவைக்கு வந்து அங்கு நிகழ்ந்த சொல்லை கேட்டேன். அங்கும் நிறைவடையவில்லை என்று உணர்ந்து இங்கு அன்னசாலைக்கு வந்தேன். இங்கு விரிந்திருக்கும் இந்த எச்சிலில் புரண்டால் என் உடல் பொன்னென்றாகும் என்று

எண்ணினேன். இல்லை இங்கும் இவ்வேள்வி நிறைவடையவில்லை என்றே கண்டேன்.

“என் தவம் முழுதுறவில்லை. பொன்நிறைவு கொள்ளாமல் இதோ உன் முன் நின்றிருக்கிறேன். இந்த வேள்வி நிறைவுறவில்லை என்று உணர்க!” என்றது கீரி.

# கல்பொருசிறுநுரை - 2

## பகுதி ஒன்று : பொற்பூழி – 2

யுதிஷ்டிரன் கைகூப்பி வணங்கி, விழிநீர் உகுத்து, கீரியிடம் கூறினார் “சற்று முந்தைய கணம் வரை என்னிடம் இருந்த பெருமிதம் முற்றழிந்தது. எளியன் என, சிறியன் என, தகுதியற்றவன் என இன்று உணர்கிறேன். வேதம் பெருமையை அல்ல மெய்மையையே நாடுகிறது என்று தங்கள் சொல்லினூடாக உணர்ந்தேன். இங்கு வேள்விநிறைவு நிகழவில்லை என்று காட்டும்பொருட்டே தங்கள் வருகை நிகழ்ந்தது. தங்கள் அடிபணிகிறேன். என்னை வாழ்த்துக!” கீரி அவரை வாழ்த்தியது. யுதிஷ்டிரன் “செல்க, என் மீது கனிவு கொள்க! எங்கேனும் தங்கள் உடலில் மறுபாதி பொன்னென்றாகும் எனில் இங்கு வந்து எனக்கு அருள்க! அதுவரை தங்கள் சொல் காத்து இங்கிருப்பேன்” என்றார். கீரி “அவ்வண்ணமே” என்றுரைத்து திரும்பிச் சென்றது.

யுதிஷ்டிரன் திரும்பி தௌம்யரிடம் "ஆசிரியரே, இங்கு வேள்விநிறைவு நிகழவில்லை. அது நிறைவுறும்பொருட்டு நான் காத்திருக்க வேண்டும். அதுவரை என் நோன்பு தொடரவேண்டும்" என்றார். தௌம்யர் "அரசே, இது கடுநோன்பு. வேள்விக்காவலன் நாற்பத்தொரு நாள் ஓருணவு கொண்டு வெறுந்தரையில் உறங்கி எழுவேளை இறைதொழுது தன்னந்தனிமையில் வாழவேண்டும். நோன்பு முறித்து நீங்கள் அரண்மனை நுழையவேண்டிய நாள் இது" என்றார். யுதிஷ்டிரன் "ஆம், அதையே நான் செய்யவேண்டும். நான் நோன்பை தொடர்கிறேன்" என்றார்.

"அறிக, அக்கீரி ஆயிரம் ஆண்டுகளாக காத்திருக்கிறது என்று கூறியது! மேலும் ஆயிரம் ஆண்டுகள் அது காத்திருக்க நேரலாம். ஆயிரமாயிரம் ஆண்டுகள்கூட ஆகலாம். அதுவரை தாங்கள் இங்கு இவ்வண்ணம் இருப்பது இயல்வதா? உங்கள் வாழ்க்கை வீணாகும். நீங்கள் அடைந்த வெற்றிப்பயன் இல்லாமலாகும். வேள்வி முடித்து நீங்கள் கொள்ளும் புகழ் வந்தடையாமல் போகும்" என்றார் தௌம்யர். "ஆனால் வேள்வியை நிறைவுசெய்தாகவேண்டும். எடுத்ததை முடிக்காது அமைவது என் குடிக்கு இயல்பல்ல" என்றார் யுதிஷ்டிரன். "இது முடிவே அடையாது. கேளுங்கள் என் சொற்களை. உங்களை எதிர்நோக்கிக் காத்திருக்கிறது பாரதவர்ஷம். உங்கள் வாளை எதிர்பார்த்திருக்கிறது அறம். உங்களை எண்ணி வாழும் மக்களை நினைவுள்ளுங்கள்" என்றர் தௌம்யர்.

"நான் வேள்வியை நிறைவுசெய்யாதொழிவதே மக்களுக்குச் செய்யும் தீங்கு" என்றார் யுதிஷ்டிரன். தௌம்யர் "அரசே, நீங்கள் இன்று அவையில் நிறுத்திய நெறிநூல்கள் ஏற்கப்படவேண்டும் என்றால் வேள்விநிறைவு செய்யப்படவேண்டும். வேதச்சான்று

அதன் பின்னரே அந்நெறிநூல்களுக்கு அமைகிறது. இவ்வேள்வி நிறைவடையாமல் போகுமென்றால் அந்நூல்கள் வெற்று ஏட்டுச்சுவடிகளென ஆகி செல்லரித்து அழியும். அவற்றில் வாழும் அறம் மண்ணுக்கே மீளும். நீங்கள் செய்வது எவ்வகையிலும் முறையல்ல" என்றார். "இன்று இவ்வண்ணம் நிகழ்ந்தது இம்முடிவை நான் எடுக்கும் பொருட்டே" என்றார் யுதிஷ்டிரன். "அரசே, அவையமர்ந்து நீங்கள் பெற்ற சான்றோரின் வாழ்த்துக்கள், குடிகளின் போற்றுதல்கள், அந்தணரின் வேதம் ஆகியவற்றைவிட மேலானதா இந்தக் கீரியின் சொல்?" என்று தௌம்யர் சீற்றத்துடன் கேட்டார்.

"ஆம், அதன் உடலை பொன்னாக்க எதனாலும் இயலவில்லை அல்லவா? வேதம் கனியவில்லை எனக்கு" என்றார் யுதிஷ்டிரன். "ஆசிரியரே, என்னை புரிந்துகொள்ளுங்கள். வேதநிறைவு எய்தப்படவில்லை என இங்கே நின்றிருக்கும் அனைவரும் அறிவோம். இச்சொல் இங்கிருந்து எழுந்து பரவும். அதை எவராலும் தடுக்க முடியாது. எனில் நாம் நிறுவும் அறத்திற்கு என்ன மதிப்பு இருக்கமுடியும்? நாராயணவேதம் தொல்வேதங்களை மீறி எழுந்தது. இன்றும் அதற்கு முழுதேற்பு நிகழவில்லை. இது ஒன்றே போதும், அவ்வேதம் எங்கும் மக்களால் மறுக்கப்படுவதற்கு. அம்மறுப்பை சொல்லிச் சொல்லி பெருக்குவார்கள் எதிரிகள்."

கைதொழுது யுதிஷ்டிரன் சொன்னார் "ஆசிரியரே, அந்தக் கீரியின் உடலின் பாதியை பொன்னாக்கியது வசிஷ்டர் நாவிலெழுந்த தொல்வேதம். குருதியை நெய்யாக்கி கடுங்கானகத்தில் தவம் செய்த முனிவர்கள் அறிந்த அழியாச் சொல். அதன் மறுபகுதியை பொன்னாக்கவேண்டும் எழுந்துவந்திருக்கும் ஐந்தாம் வேதம். எண்ணுக, இங்கே

வேதநிறைவு நிகழும் என்றால், அந்தக் கீரியின் உடல் முற்றிலும் பொன்னாகுமென்றால், அதன்பின் பாரதவர்ஷத்தில் எவர் நாராயணவேதத்தை மறுக்கமுடியும்? அதன்பொருட்டு நான் என் வாழ்க்கையையே கொடுக்கவேண்டும் என்றால் அதுவே முறை. என் கொடிவழிகளும் இங்கே இவ்வண்ணம் காத்திருக்கவேண்டும் என்றாலும் அது முறையே. ஆயிரம் பல்லாயிரம் ஆண்டுகள் நாராயணவேதம் வேள்வித்தெய்வங்களால் ஏற்கப்படும்பொருட்டு காத்திருக்கவேண்டும் என்றால் நாம் என்ன செய்யமுடியும்? அது தெய்வ ஆணை, நாம் எளியோர்."

யுதிஷ்டிரன் இளையோனாகிய சகதேவனை நோக்கி "இளவலே, குறைபட்ட வேள்வி நிறைவுற்றது என்று எண்ணி நான் அதை முடிக்க இயலாது. வேள்வியை தொடங்கியவன் நான். இனி என் நோன்பை முறிக்கவும் கூடாது. நான் இவ்வேள்விநிறைவுக்கென காத்திருக்கும் நிலையிலேயே என் உயிர் பிரியும் என என் மூதாதையர் வகுத்திருப்பார்களெனில் அவ்வண்ணமே ஆகுக! என் பொருட்டு நீயே கோல்கொண்டு அஸ்தினபுரியை ஆளுக!" என்று கூறினார். தௌம்யர் "தங்கள் உறுதிக்கு முன்னால் ஒன்றும் சொல்வதற்கில்லை" என்று சோர்வுடன் சொன்னார்.

யுதிஷ்டிரன் தன் அரண்மனைக்கு அருகில் சோலைக்குள் அமைந்த தவக்குடிலில் சென்று அங்கு தங்கினார். முன்பென ஒற்றை உடையும் ஒருவேளை உணவும் கொண்டு நோன்பு நோற்றார். நகர் இயல்பு நிலைக்கு திரும்பியது. வேள்விப்பந்தல்கள் அகன்றன. தெருக்கள் மீண்டும் ஒழுங்கு கொண்டன. ஒவ்வொன்றும் தங்கள் இடத்தை சென்றடைந்தன. விசைகளெல்லாம் தளர்நிலையை சென்றடைந்தன.

அரண்மனையில் சகதேவன் அரசு நிகழ்த்த, அரசி அகத்தளத்தில் முற்றொடுங்க, ஒவ்வொருவரும் காத்திருந்தனர். ஒருவரும் சொல்லிக்கொள்ளவில்லை எனினும் இது எத்தனை நாள் என எண்ணியிருந்தனர். பின்னர் அது முடிவிலா நோன்பென்று கருதிக்கொண்டனர்.

பதினெட்டாவது மாதம் கீரி திரும்பி வந்தது. தன் நோன்புக் குடிலிலிருந்து காலையில் வெளிவந்த யுதிஷ்டிரன் முற்றத்தில் முற்றிலும் பொன்னுடல் சுடர நின்றிருந்த கீரியைக் கண்டு அருகணைந்து முழந்தாளிட்டு வணங்கினார்.
பொற்கம்பிகள்போல மென்மயிர் சிலிர்த்து மெருகு கொண்டு நின்ற கீரி அவரிடம் சொன்னது "அரசே, நான் முழுமை கொண்டேன். விண்புகுவதற்குள் உங்களுக்கு அளித்த சொல்லை நினைவுகூர்ந்து இங்கு வந்தேன்." யுதிஷ்டிரன் வணங்கி "அருள்க எனக்கு! கூறுக, தங்கள் உடலை முழுமைகொள்ளச் செய்த அப்பெருவேள்வி எங்கு நிகழ்ந்தது?" என்றார்.

கீரி சொன்னது. அரசே இங்கிருந்து நான் செல்கையில் உளம் சோர்ந்திருந்தேன். சலித்து துயருற்று இனி ஏதுமில்லை என்றே எண்ணினேன். அடைந்த இப்பொன்னை உதறினால் என்ன என்று ஏங்கினேன். துர்வாசரிடம் சென்று பணிந்து "முனிவரே, இப்பொன்னை நான் உதறி மீண்டும் எளிய கீரியென்றாக வேண்டும். மூப்பும் சாக்காடும் துயரும் துயிலும் எனக்கு அமையவேண்டும், அருள்க!" என்றேன். அவர் வாய்விட்டு நகைத்து "அடைந்த பொன்னை துறப்பது எளிதல்ல, பொன்னை அடைவதைவிட ஆயிரம் மடங்கு தவம் தேவைப்படுவது அது" என்றார். "இங்குள்ள முனிவரில் பெரும்பகுதியினர் அவ்வப்போது சென்றடையும் சோர்வு அது... செல்க!" என்றார்.

மேலும் துயர்கொண்டு திரும்பிவந்து கங்கைக்கரையோரம் ஒரு சிறு பொந்தில் தவம் இருந்தேன். ஒவ்வொரு நாளும் கங்கைக்குச் சென்று என் உருவை நோக்கி ஏங்கினேன். ஒருநாள் என் பொன்னுருவை நீரில் பாவையெனக் காட்டி நோக்கி நோக்கி நான் நான் என விம்மிதம் கொண்டேன். உளச்சோர்வில் சில நாளில் என் கீரியுருவை நீரில் காட்டி இதுவே நான், பிறிதெலாம் பொய்யென்று நினைத்தேன். அரசே, பொன்னுக்கும் ஊனுக்கும் நடுவே ஒவ்வொரு நாளுமென சென்று திரும்பிக்கொண்டிருந்தேன். என் ஊன் பொன்னை அறியவில்லை. பொன் ஊனையும் அறியவில்லை. ஊன் பொன்னாக விழைந்தது. பொன் ஊனாக மாறத் தவித்தது.

என் கனவில் ஒருநாள் பொன்னென எழுந்தேன். மறுநாள் கீரி என திளைத்தேன். கீரியின் சேற்றில் பொன்னுரு திளைப்பதைக் கண்டு திடுக்கிட்டு எழுந்து அமர்ந்து விழிநீர் சிந்தினேன். பொன்னென ஆன உடலுடன் மலைமுகட்டில் நின்று கதிரவனை எதிர்கொண்டு விம்மிதம் அடைந்தேன். என்னை கீரியென வேட்டையாட வரும் வேட்டை உயிர்களைக் கண்டு வருக, என்னை கொல்க என்று நினைப்பேன். என் பொன் கண்டு அவை திகைத்து பின்வாங்கும். என் பொன் கண்டு என்னை துரத்தும் வேடர்களோ என் கீரியுடல் கண்டு திகைத்து வில் தாழ்த்துவார்கள். இருநிலை கொண்டவன் ஓயாது ஆடும் ஊசல். பொன் சுமையென்றாகும், ஒளி சுமையென்றாகும், அழகு சுமையென்றாகும், இப்புவியின் அனைத்தையும் துலங்கவைக்கும் ஹிரண்யம் என்னுடலில் அவ்வண்ணம் ஒரு நோயென குடி கொண்டது.

நான் கண்ட ஒவ்வொருவரிடமும் அஸ்தினபுரியின் ராஜசூயத்தைவிடப் பெரிய வேள்வி ஒன்றுண்டா என்று

கேட்டேன். அவ்வண்ணம் தெற்கிலிருந்து வந்த பாணன் ஒருவனிடம் கேட்டபோது "பாரதவர்ஷத்தில் எங்கும் இனி இவ்வண்ணம் ஒரு பெருவேள்வி எவரும் நிகழ்த்த இயலாது, இனி பல்லாயிரம் ஆண்டுகளுக்கு அதை நிகழ்த்தும் அரசகுடிகள் எதுவும் விழிக்கு தட்டுப்படவும் இல்லை" என்றான். நான் துயருடன் அவனுடன் சென்றேன். அவன் ஓரிடத்தில் அந்தி தங்கியபோது உடன் அணைந்தேன். அவர்கள் ஒரு ஆலமரத்தடியில் இளைப்பாறலாயினர். அப்பால் சென்று நான் வேர்ப்பொந்தில் சுருண்டேன். மேலும் சில பாணர் குடும்பத்துடன் அங்கிருந்தனர். அவர்களில் ஒருவன் கரிய உடலும் முறுக்கு மீசையும் கூரிய விழிகளும் கொண்ட தென்னகத்துப் பாணன்.

அவர்கள் அமர்ந்ததுமே அஸ்தினபுரியின் வேள்வியை சொல்லிச் சொல்லி திளைக்கத்தொடங்கினர். தென்னகத்தான் கிணைமீட்டிப் பாடினான். அவன் மனையாட்டியின் கையில் இருந்த இளைய குழவி கையில் ஒரு மரப்பொம்மையை வைத்திருந்தது. அப்பாவையை அது மடியில் வைத்தும், நெஞ்சில் பதித்தும், துயில்கையில் உடலோடு வைத்தும் மகிழ்வதை கண்டேன். அவர்கள் அனைவரும் அஸ்தினபுரியில் பொன்னும் பொருளும் பெற்றதை எண்ணி எண்ணி கொண்டாடிக்கொண்டிருந்தனர். "இக்குழவிக்கு பரிசென எதுவும் கிடைக்கவில்லையா?" என்றார் ஒருவர். "அஸ்தினபுரியில் அவளுக்கு மும்முறை கைநிறைய பொன் கிடைத்தது. அனைத்தையுமே அன்னையிடம் கொடுத்துவிட்டாள். அதை வாங்கும் பொருட்டுகூட அந்தப் பாவையை நிலத்தில் வைக்கவில்லை. கால்கள் நடுவே அதை இடுக்கிக்கொண்டு வாங்கினாள். அங்கிருந்தோர் அனைவரும் நகைத்தனர்" என்றான் அப்பாணன்.

“ஏன், அந்தப் பாவை அத்தனை அரியதா?” என்று அவர் கேட்டார். “அவளுக்கு அவ்வண்ணமே” என்றான் தென்னகத்துப் பாணன். “அதை அவளுக்கு ஒரு மூதன்னை அளித்தாள். அதை அவளால் மறக்க முடியவில்லை போலும்.” “அவள் யார்?” என்று உசாவி அவர்கள் சூழ்ந்துகொண்டார்கள். அக்கதையை பாணன் சொன்னான். தென்னாட்டிலிருந்து இவ்வேள்விக்கென அவர்கள் கிளம்பி வந்தபோது தண்டகக் காட்டை கடந்தனர். ஒரு சொல் பிழையென செவியில் விழுந்ததால் ஓர் அடி திசை மாற்றி வைத்தனர். ஆகவே வழி தவறினர். ஒருமுறை தவறிய வழி பிற அனைத்து வழிகளையும் தவறென்று ஆக்குகிறது. மேலும் மேலும் கணிப்புகள் தவற செம்பாலை என ஓரிலைகூட பசுமையின்றி விரித்துக்கிடந்த நிலம் ஒன்றை சென்றடைந்தனர்.

உணவின்றி நீரின்றி ஆறு நாட்கள் அப்பாலையில் அலைந்தனர். ஒரு மானுடரும் விழிக்கு தென்படவில்லை. இறுதியில் எண்ணம் மட்டுமே கருந்திரி என எரியும் உலர்ந்த உடல்களென ஓரிடத்தில் சென்றமர்ந்தனர். அங்கேயே களைத்து உயிர்விட வேண்டியதுதான் என்று எண்ணியிருக்கையில் காகத்தின் ஓசையை அவர்கள் கேட்டனர். காகத்தின் சொல்லில் இருந்து அங்கே எங்கோ மானுடர் வாழ்வதை உணர்ந்தனர். அவ்வெண்ணமே உயிரை தூண்ட தன் குடும்பத்தை அழைத்தபடி அந்த திசை நோக்கி சென்றபோது தாழ்ந்த நிலமொன்றில் முற்றிலும் வறண்ட சுனையொன்றின் கரையில் குடில் ஒன்றை கண்டார்கள். அது சருகு மூடி மானுடர் வாழாத கூடு எனத் தோன்றியது. ஆனால் அங்கே மானுடர் இருப்பதை காகங்களின் ஒலி காட்டியது.

அக்குடிலை அணுகி அதன் முற்றத்தில் நின்று "அன்னையே, மூத்தாரே, அயலவன் நான். ஆறாப் பசி எரிந்து கொண்டிருக்கும் உடல் கொண்டவன். அன்னம் அளியுங்கள். அன்னையே, அருள்க!" என்று கூவினான் பாணன். உள்ளிருந்து ஒரு மூதாட்டி வந்து எட்டிப் பார்த்தாள். மடிதொடும் வரை சுருங்கிய வறுமுலைகள், காய்ந்த கனியென வற்றிய உடல், குழிந்த விழிகளில் நீர்மைகொண்டு கனிந்த கண்கள், தோள் தொடும்படி வளைந்திருந்த வடிகாதுகள். அன்னை "வருக!" என்று இன்சொல் உரைத்தாள். பல்லில்லாத வாய் காட்டி நகைத்து "அமர்க! பிடியன்னம் இங்குள்ளது. அதை அளிக்கிறேன்" என்று உள்ளே சென்று கொப்பரை ஒன்றில் கொதிக்கும் அன்னத்தை கொண்டு வந்து அளித்தாள்.

அடுப்பிலிருந்து அதை நேரடியாக எடுத்திருந்தாள். அது அவளுக்கும் அவள் குடும்பத்துக்கும் உரியது என்று அறிந்தபோதும்கூட பசியால் தன்னை மறந்து தனக்கும் குடிக்கும் பகிர்ந்து அதை உண்டான் பாணன். பசிகொண்டு தளர்ந்திருந்த சிறு குழந்தை இரு கைகளாலும் அன்னத்தை அள்ளி அள்ளி உண்டது. பின்னர் அன்னத்தை அளித்த அம்மூதாட்டியை நோக்கி நகைத்தது. அவள் உள்ளிருந்து ஒரு சிறு மரப்பாவையை அவளுக்கு கொண்டு வந்து அளித்தாள். அன்னம் கிடைத்ததும் குழவியென மீண்டுவிட்டிருந்த இளமகள் பாய்ந்து அதைப் பிடித்து வாங்கி உடலுடன் பற்றிக்கொண்டாள். தன் தாலத்தில் இருந்து அன்னம் எடுத்து அந்தப் பாவைக்கு ஊட்டினாள் குழந்தை. முதுமகள் சிரித்து "அந்தக் கைகளால் ஆயிரம் வாய்களுக்கு அமுதூட்டுக, அன்னையே!" என்று அக்குழவியிடம் சொன்னாள்.

குழவியைச் சுட்டி "அந்தப் பாவைதான் இது" என்றான் பாணன். "அன்னத்தின் அச்சுவையுடன் இணைந்துவிட்டது இந்தப் பாவை. இவளால் அதை மறக்க முடியவில்லை." பாணர்களில் ஒருவன் "அந்த மூதன்னை தனக்காக சமைத்த உணவு போலும்" என்றான். தென்னகத்துப் பாணன் அமைதியடைந்து சொல்தளர்ந்தான். "கூறுக, அந்தப் பாலையில் அவ்வன்னம் உங்களுக்காக எவ்வண்ணம் காத்திருந்தது?" என்று பாணர்கள் மீண்டும் கேட்டனர். தென்னகப் பாணனின் விறலி "பசிக்குப் பழியில்லை என்பார்கள். ஒரு சொல் உசாவாமல் அதை அள்ளி நாங்கள் உண்டோம்" என்றாள். பாணன் "ஆம், அன்று அவ்வண்ணம் இருந்தோம். பசி கொள்கையில் அனைவரும் விலங்குகளே" என்றான்.

அன்னத்தின் இறுதிப் பருக்கைவரை அள்ளி உண்ட பின்னரே அவ்வன்னைக்கு உணவுள்ளதா என்ற எண்ணம் ஏற்பட்டது. "உங்கள் உணவா அது, அன்னையே?" என்று துயருடன் கேட்டேன். "ஆம், எனது கணவர் இங்குள்ளார். குடி செழிக்க இங்கு வாழ்ந்தவர்கள் நாங்கள். இதைச் சூழ்ந்திருக்கும் நிலமெல்லாம் எங்கள் கழனியென்று பசுமைகொண்டிருந்தது ஒரு காலத்தில். எங்கள் காளைகளும் பசுக்களும் ஓயாது கழுத்துமணி ஒலிக்க இங்கே நின்றிருந்தன. மழை பொய்த்து பன்னிரண்டு ஆண்டுகள் ஆகின்றன. ஏன் பொய்த்தது மழை என்றறியோம். எவரோ எங்கோ பெரும் பிழையொன்று இழைத்திருக்கவேண்டும். வான் வறண்டது, பயிர் வறண்டது, பின் மண் வறண்டது. காற்றும் வறண்டபோது ஒவ்வொருவராக இங்கிருந்து கிளம்பிச்சென்றனர். நோயுற்ற என் கணவரை கொண்டுசெல்ல இயலாததால் நான் இங்கிருக்கிறேன்" என்றாள் அவ்வன்னை.

“இங்கு ஒரு துளி நீர்விழுந்து பல்லாண்டுகள் ஆகின்றன. மண்ணுக்கு அடியில் உள்ள சுனைகளும் ஓய்ந்தன. மரங்கள் பட்டு மறைந்தன. புல்லும் கருகின. பூச்சிகளை உண்டு உயிர்த்தோம். அவையும் மறைந்தன. அன்னம் தேடி இங்கு அலைந்தேன். நெடுந்தொலைவில் ஓர் எலிவளைக்குள் இருந்து மூன்று பிடி நெல்லை கண்டடைந்தேன். அதை கொண்டு வந்து அன்னம் சமைத்து வைத்திருந்தபோதுதான் நீங்கள் வந்தீர்கள்” என்றாள் அம்முதுமகள். “அன்னையே, எனில் உங்களுக்கும் உங்கள் கணவருக்கும் உணவில்லையா?” என்று என் மனையாட்டி கேட்டாள். “ஆம், எங்கள் வயிற்றில் அனல் எரிகிறது. ஆனால் விருந்தினருக்கு அளிக்காது உண்டிருந்தால் எங்கள் மூதாதையர் அனைவரும் பற்றி எரிந்திருப்பார்கள். இவ்வனல் சிறிது. இது எங்களை உண்ணட்டும். இவ்விறப்பும் அறமே” என்று அன்னை சொன்னாள்.

அக்கணம் என்னில் கிளர்ந்ததென்ன என்று நான் அறியேன். நான் வெறிகொண்டு எழுந்து அம்முற்றத்தில் நின்று இரு கைகளாலும் என் வறுநெஞ்சில் அறைந்து விண் நோக்கி கூவினேன். “மெய்ச்சொல் வேதமென்று உரைத்தனர் மூதாதையர். மெய்யென்பது குருதியால், கண்ணீரால் தொட்டெடுக்கப்படுவதென்று உரைத்தனர் முனிவர். இன்று இங்கு நின்று ஆணையிடுகிறேன், தெய்வங்களே எழுக! என் சொல்லுக்கு வருக! இது என் ஆணை, வீழ்க மாமழை! வீழ்க மாமழை! வீழ்க மாமழை! வீழாதொழியுமெனில் இக்கணமே எழுத்தாணியால் நெஞ்சில் குத்தி இறந்து விழுவேன். வீழ்க மாமழை!”

அச்சொல் உரைத்து முடித்த கணமே மின் வெட்டியது, இடி முழங்கியது, பெருந்தோகையென மண்ணை அறைந்து

பொழியத்தொடங்கியது மழை. திசையெங்குமிருந்து ஈசல்கள் பெருகியெழுந்தன. ஆடைகளைக் கழற்றி வீசி ஈசல்களை பிடித்துக்கொண்டு வந்தோம். அவற்றை வறுத்து உண்டு பசியாறினோம். உண்டு குடித்து உண்டு குடித்து கொண்டாடினோம். பன்னிரு நாட்கள் ஈசலே உணவாக அங்கிருந்தோம். அசைவிலாததுபோல் நின்று பெய்தது மழை. இமை திறந்தவைபோல் சுனைகள் உயிர்கொண்டன. கோல்கண்ட நாகங்கள்போல் சீறி எழுந்து பத்தி விரித்து ஓடைகள் பெருகின. மழைகாத்து தவம்செய்த பல்லாயிரம் சிற்றுயிர்கள் மேலெழுந்து வந்து திளைத்தாடின.

"மானுடர் நாவில் வாழும் பல்லாயிரம்கோடிச் சொற்களில் ஒன்று விண்ணில் இருந்து ஒலியைப் பெற்றுக் கொண்டு வேதச்சொல் என எழுகிறது என்பார்கள். என் சொல்லில் ஒன்று வேதமென்றாகியது. இருத்தலுக்கு பொருள் கிட்டியது" என்று தென்னகப் பாணன் சொன்னான். உடல் மெய்ப்புகொண்டு சிலிர்த்திருக்க நான் அவனை பார்த்துக்கொண்டிருந்தேன். "அந்த அன்னையின் குடில் இருக்கும் இடத்தை சொல்க!" என்று ஒரு சூதர் கேட்டார். அவன் சொன்னதை என் உள்ளத்தில் பதித்துக்கொண்டேன். ஒருகணமும் அங்கே தங்கவியலாமல் உடனே கிளம்பினேன். நூறு இடங்களில் அதர் வினாவி அங்கு சென்று சேர்ந்தேன்.

நான் சென்றபோது அந்நிலம் செழித்திருந்தது. குடிகள் திரும்பி வந்துவிட்டிருந்தனர். மேழிகள் மண்ணை கீறிக்கொண்டிருந்தன. ஆநிரைகள் மேய்ந்தன. விழிகளிலும் சொற்களிலும் ஒளி நிறைந்திருந்தது. நான் அந்த அன்னையை சென்று வணங்கினேன். குடி சூழ பெருகி அமர்ந்திருந்த அன்னையிடம் என் கதையை சொன்னேன். "மூதன்னையே, அன்று அந்தப்

பாணனுக்கு அன்னம் சமைத்த அடுப்பை காட்டுக!" என்றேன். "அன்று இங்கு அந்தப் பாணன் சொல்லில் வேதம் எழுந்தது. வானம் கனிந்து மழை விழுந்தது. ஆகவே அந்த அடுப்பை அப்படியே பூசைநிலை எனப் பேணுகிறோம். அங்கே அணையாச் சுடர் ஒன்று எரிகிறது. வருக!" என்று அழைத்துச்சென்று காட்டினாள்.

"புதிய இல்லத்தின் அருகே இருந்த சிறு குடிலில் அவ்வடுப்பு வேள்விக்குளம்போல செங்கல் வைத்து பேணப்பட்டிருந்தது. சிற்றகல் சுடர் எரிந்துகொண்டிருந்தது. நான் தெய்வங்களே என கூவியபடி ஓடிச் சென்று அச்சாம்பலில் விழுந்து புரண்டேன். எழுந்து நோக்கியபோது என் உடல் இவ்வாறு இருப்பதை கண்டேன். அதை உங்களிடம் உரைப்பதற்காக இங்கு ஓடிவந்தேன்" என்று அந்தக் கீரி கூறியது. யுதிஷ்டிரன் மகிழ்ந்து "என் வேள்வி நிறைவின் வழி என்ன என்று கண்டடைந்தேன். நலம்பெறுக! என்னை வாழ்த்துக!" என்று கீரியை வணங்கினார். கீரியிடம் வழிகேட்டு மூதன்னையின் குடிலை அடைந்தார்.

அந்தச் சிற்றூரைச் சென்றடைந்து அணையாச் சுடர் எரிந்த வேள்வி அடுப்பிலிருந்து ஒரு பிடி சாம்பலை அள்ளி பொற்பட்டுக் கிழியில் சுற்றிக்கொண்டு வந்தார் யுதிஷ்டிரன். ராஜசூய வேள்வியின் சாம்பலுடன் அதைக் கலந்து கங்கையில் கரைத்தார். அவ்வண்ணம் இப்புவியில் இதுவரை நிகழ்ந்த வேள்விகளில் தலையாயது நிறைவு கொண்டது. ஐந்தாம் வேதம் மண்ணில் தன்னை ஆழ நிறுவிக்கொண்டது. மகிழ்ந்தனர் தேவர்கள். நிறைவுற்றன வேள்வித் தெய்வங்கள். இனிதாயின ஐம்பெரும் பருக்கள். ஆம், அவ்வாறே ஆகுக!

# கல்பொருசிறுநுரை - 3

## பகுதி இரண்டு : நீலச்சிறுபீலி – 1

தண்டகாரண்யத்தின் நடுவே பதினெட்டு மலைமுடிகளால் சூழப்பட்ட பள்ளத்தாக்கில் நடுவே அமைந்திருந்தது மந்தரம் எனும் அச்சிற்றூர். அர்ஜுனன் சௌந்தர்யம், சௌம்யம் என அழைக்கப்பட்ட இரு மலைமுகடுகளுக்கு நடுவே மண்மடிந்து மலைச்சரிவு என்றாகி இறங்கி வந்து வளைந்தெழுந்து மேலே செல்லும் கணவாயினூடாக புரவியில் வந்து விளிம்பில் நின்று கீழே பசுமை நிறைந்து பின்மாலை ஒளியில் அலைகொண்டிருந்த அப்பள்ளத்தாக்கை பார்த்தான். அந்தப் புரவிப்பாதை மலைச்சரிவில் செந்நிற உள்ளங்கை வரி என இறங்கிச் சுழன்று மந்தரம் நோக்கி சென்றது. வானில் பறந்த செம்பருந்தின் நிழல் அக்குவைநிலத்தின் பசுமையலைகளுக்குமேல் சென்றது. பருந்து அவனுக்கு இணையான உயரத்தில் சுழன்று அருகணைந்தபோது அதன் நீட்டப்பட்ட அலகை, வெண்கழுத்தை, விழிமணிகளை அவன் கண்டான்.

மையத்தில் அமைந்த மந்தரத்தில் இருந்து எழுந்து விரிந்து பரவிய பதினெட்டு ஊர்கள் அப்பள்ளத்தாக்கின் பசுமைக்குள் மறைந்தும் தெளிந்தும் என தெரிந்தன. அவை ஒவ்வொன்றும் மந்தரத்துடன் செந்நிற வரிப்பாதைகளால் இணைக்கப்பட்டிருந்தன. மலைகளில் இருந்து இறங்கிய வெள்ளி மின்னும் சிற்றோடைகள் அருவிகளென விழுந்தும், வளைந்து சுழன்றிறங்கியும், இணைந்து சிற்றாறுகள் என்றாகி

மந்தரத்தை நோக்கி சென்றன. வலமும் இடமும் அவ்வூரை வளைத்த ஆறுகள் ஒன்றிணைந்து ஊர்த்வம், ஆர்த்ரம் என்று பெயரிடப்பட்ட இரு மலைகளின் நடுவே பாறை வெடிப்பென உருவாகி இருந்த பள்ளத்தில் விழுந்து ஒற்றை அருவியென பெருகி கீழிறங்கி அகன்று சென்றன.

அர்ஜுனன் அந்த நிலப்பகுதியைப்பற்றி முன்னரே அறிந்திருந்தான். நெடுங்காலம் மழை இல்லாமல் ஆகி, உயிர்கள் வறண்டு, வெம்புழுதிக் குழியென்று மாறிவிட்டிருந்த மண் அது. அங்கு நிகழ்ந்த பேரறச்செயல் ஒன்றினால் வான்மழை கொண்டது. மூன்றாண்டு காலம் இடைவெளியிலாது பெய்த மழையால் அது செழிப்புற்றது. மண்ணுக்குள்ளிருந்து பசுமையும் சிறகுகளுமாக உயிர் பெருகி, தளிர் நுரைத்து, மலர் நுரைத்து, ஓங்கி எழுந்து மூடியது. பாவலர் அந்நிலத்தை தேடி வந்துகொண்டிருந்தனர். அங்கிருந்த பெயரற்ற மலைகள் அனைத்திற்கும் பெயர்கள் அமைந்தன. சொல் பெற்றதும் அவை முகம் கொண்டன. பொருள் சூடின.

அந்த ஆறுகள் சுஜலை என்றும் சுஃபலை என்றும் பெயர் பெற்றன. இணைந்து ஒன்றாகியபோது சுவாகை என்று ஆகியது. அவ்வூர் மந்தரமென்ற பெயரைப் பெற்றபோது சூழ்ந்திருந்த ஒவ்வொரு ஊருக்கும் அவ்வாறே நற்பெயர்கள் அமைந்தன. தொலைதூர நிலங்களில் இருந்து மானுடர் அங்கு வந்து குடியேறினர். நிலம் எவ்வகை நன்றோ அவ்வகை நன்று மானுடர்கள். மானுடர் எவ்வகை நன்றோ அவ்வகை நன்று நிலம். அந்நிலத்தைப் பற்றி சொற்கள்தான் வந்துகொண்டிருந்தன, பொருட்கள் என எதையும் அவன் காணவில்லை. “அங்கிருந்து கொண்டுவரப்பட்டவை எவை?” என்று அவன் கேட்டபோது வணிகன் “அரசே, அவர்கள்

எதையும் விற்பதில்லை" என்றான். "ஏன்?" என்று அவன் கேட்டான். "அவர்கள் எதையும் வாங்குவதில்லை" என்று வணிகன் சொன்னான். அர்ஜுனன் புன்னகைத்தான். "அவர்கள் தங்களுக்கு வேண்டியனவற்றை மட்டுமே படைக்கிறார்கள்" என்றான் வணிகன்.

அர்ஜுனன் தன் புரவியைத் தட்டி செம்மண் பூழி பறந்த சாலையில் சுழன்றிறங்கினான். பொன்னிற முகிலொன்றால் தாங்கி விண்ணிலிருந்து இறக்கி கொண்டுசெல்லப்படுவதுபோல் அந்நிலம் நோக்கி அவன் செல்வதை அவனே தொலைவிலிருந்தென கண்டான். எண்ணியதைவிட விரைவில் பள்ளத்தாக்கை அடையமுடிந்தது. அங்கு மிகக் குறைவாகவே வேளாண்மை நடந்தது என்பது தெரிந்தது. வளம் மிகுந்த நிலம் இயல்பாகவே விளைசெடிகள், கனிமரங்கள், கொடிகள் செறிந்து வயல்போல் மாறிவிட்டிருந்தது. ஆங்காங்கே ஓடைநீர் செறுத்து கொண்டுவரப்பட்டு தேக்கப்பட்ட சிறிய வயல்களில் நெல்லும் பிற மணிகளும் பயிரிடப்பட்டிருந்தன. அவற்றின் பசுமையலைப்பரப்பு காற்றில் துவண்டது.

அவ்வேளையில் வயல்களில் எவரும் இருக்கவில்லை. புல் செழித்து இடையளவு வளர்ந்திருந்த நிலத்தில் புல் மேலேயே களைத்ததுபோல் படுத்து அசைபோட்டுக்கொண்டிருந்தன ஆநிரைகள். பருத்த உடலும் அச்சமின்மையின் மிதப்பும் கொண்டவை. மங்கிய விழிகளில் துயில் நிறைந்திருந்தது. செவிகள் சோம்பலுடன் அசைந்தன. அந்த புல்செறிந்த மண்ணில் அவை பகல் முழுக்க நடந்து மேய வேண்டியதில்லை. அந்நிலத்திற்கு வந்த ஓரிரு நாழிகையிலேயே அவற்றின் வயிறு நிறைந்துவிட்டிருக்கும்.

பசும்புல்பரப்பு விளைந்த நெல்வயல்போல் நீளிலை செறிந்து வெண்கதிர் சூடி காற்றில் உலைந்தாடிக்கொண்டிருந்தது.

மேலிருந்து பார்க்கையில் அந்நிலத்தின்மீது பறவைகள் செறிந்து சுழன்றுகொண்டிருப்பதை அவன் கண்டான். அங்கே நிறைய உணவிருக்கக்கூடும் என்றே எண்ணினான். கீழே வந்த பின்னர் அது ஏன் என்று தெரிந்தது. அங்கு புல்பரப்பு முழுக்க சிற்றுயிர்கள் துள்ளித் தெறித்தும், சுண்டிப் பறந்தும், சிறகு அதிர்ந்துச் சுழன்றும், புகையென அலைகொண்டும் சுழித்தும் எழுந்தும் அமைந்தும் ஒளிர்ந்து பறந்துகொண்டிருந்தன. அவற்றைப் பிடிக்கும் சிறு குருவிகள் பல்லாயிரக்கணக்கில் சிலைத்தும் கொஞ்சியும் பறந்தன. சிறகடிப்பால் நிறைந்திருந்தது காற்று.

வண்ணங்கள்! பறவைகளென, மலர்களென, மணிக்கற்களென, பூச்சிகளென, சிற்றுயிர்களென. சாலையை சொடுக்கிக் கடந்து சென்ற ஒரு பாம்புகூட பல வண்ணங்களில் மின்னியது. செம்மண் பசுமையாகிறது, பசுமை மலர்களாகிறது, மலர்கள் சிறகுகள் கொள்கின்றன. புரவி அவன் ஆணையை மீறி நின்று பசும்புல்லை தின்னத் தொடங்கியது. அதன் வாயில் புல் கடிபடும் ஓசையைக் கேட்டபடி அவன் நின்றான். விலங்குகள் மேயும் ஒலி அவனை முகம் மலரச்செய்வது. சுவை சுவை என்று அவை ஒலிப்பதுபோல. சுவை அதன் உடலெங்கும் சிற்றலையென பரவியது. புட்டத்திலும் பிடரியிலும் சிலிர்த்த வாலில் சுழன்றது. குளம்புகளை மெல்ல எடுத்து வைத்து முன்னகர்ந்தபடி, செவிகளை விடைத்து அசைத்து தலையை உலுக்கி சிற்றுயிர்களை உதறி உதறி அது மேய்ந்துகொண்டிருந்தது.

அவன் அதன் அருகே இடையில் கைவைத்து நின்று அந்நிலத்தை நோக்கிக்கொண்டிருந்தான். ஒளிர்ந்த பசுமை உளம் நிறையச்செய்து இனிய பெருமூச்சுகளாக எழுந்துகொண்டிருந்தது. விழிநீர் கசியும் ஒரு நெகிழ்வு. சொல்லென்று திரள ஒண்ணாத ஓர் உணர்வு. தலையில் மூன்றடுக்காக ஏந்திய கலங்களுடன், பசுவொன்றை பற்றியபடி ஆயர் பெண்ணொருத்தி அப்பாதையில் வந்தாள், அர்ஜுனன் பாதையிலிருந்து விலகி செழித்த புல்லுக்குள் நுழைந்து அங்கே பாசிபடர்ந்து கிடந்த கல்லொன்றின் மேல் ஏறி நின்றான். அவன் புரவி அவனை வெறுமனே திரும்பி நோக்கிவிட்டு கழுத்தைத் திருப்பி விலாவை நக்கியபின் மீண்டும் மேய்ந்தது.

அவன் காலடியில் ஈரமண்ணிலிருந்து சிற்றுயிர்கள் எம்பிக் குதித்தன. அவள் விழி சுருக்கி அவனை கூர்ந்து பார்த்தபடி வந்தாள். பசு நன்கு பெருத்து, கால்கள் அவ்வெடை தாங்காமல் ஒன்றோடொன்று பின்ன, மெல்ல வாலைச் சுழற்றியபடி, திமில் கொழுத்து அதிர்ந்து வலப்பக்கம் சரிந்து துள்ள, மதம் கொண்ட கண்கள் எதையும் நோக்காதொழிய மெல்ல நடந்து வந்தது. அப்பெண்ணும் சென்று செய்வதற்கொன்றுமில்லை என்பதுபோல் மிக இயல்பாக நடந்து வந்தாள். அயலவரை நோக்கி அஞ்சுவது அங்கில்லை என்று அவள் நோக்கு காட்டியது. புன்னகைத்தபடி அருகணைந்து "எவர்?" என்றாள்.

அர்ஜுனன் "நான் அயல்நாட்டவன். காங்கேய நிலத்தில் இருந்து வருகிறேன். வடதிசை முனிவர் ஒருவர் இங்கு நிலை அமைத்திருப்பதாக அறிந்தேன். அவரை வணங்கிச் செல்லலாம் என்று வந்தேன்" என்றான். அவள் "இங்குதான் ஊர்நடுவில் அவரது இல்லம். கரியோன் என்று அவர் தன் பெயரைச் சொன்னார். அப்பேரிலேயே நாங்கள் அழைக்கிறோம். ஆனால்

அவர் இங்கிருப்பது பிறிதெவருக்கும் தெரியாது. அவரை மிக அரிதாகவே எவரேனும் வந்து பார்க்கிறார்கள். அவர்களும் அவர் இங்கிருப்பதை வந்த பின்னரே அறிகிறார்கள். தனிமையில் இங்கிருக்கிறார். தவம் செய்வதும் இல்லை, நூலாய்வதும் இல்லை" என்றாள்.

அர்ஜுனன் புன்னகைத்து "மைந்தருடன் விளையாடுகிறார் போலும்" என்றான். அவள் உரக்க நகைத்து "ஆம், எப்படி அறிந்தீர்கள்? காலை எழுந்ததிலிருந்து இரவு துயில்வது வரை அவருடன் இருப்பவர்கள் இளம் சிறுவர்களும் சிறுமியருமே. அவர் கூறுவது அவர்களுக்கே புரிகிறது. சலிப்பின்றி குழந்தைகளுடன் விளையாட முதியவரால் இயலும் என்பதை இப்போதுதான் பார்க்கிறேன். அவரை கண்டுபிடிப்பது எளிது. ஊருக்குள் நுழைகையில் எங்கு இளஞ்சிறார் ஒலி கேட்கிறதோ அங்கு செல்லுங்கள். அங்கு அவர் அவர்களுடன் ஆடிக்கொண்டிருப்பார். ஆனால் தேடி அணைபவர்களுடன் பெரும்பாலும் அவர் ஒன்றும் பேசுவதில்லை. அவர்கள் கூற வேண்டியதை கூறிவிட்டு வணங்கி மீள்கிறார்கள்" என்றாள். அர்ஜுனன் "நானும் வணங்கி மீளவே வந்தேன்" என்றான்.

அவளுடைய பசு சற்று முன்னால் சென்று தலைதூக்கி சரிந்துகொண்டிருக்கும் வானொளியைப் பார்த்தபடி நின்றது. "கருவுற்றிருக்கிறதா?" என்று அவன் பசுவை நோக்கி கேட்டான். "ஆம், இரண்டு கன்றுகள் வயிற்றில் இருக்கின்றன" என்று அவள் சொன்னாள். "இங்கு வந்தபோது சிறு கன்றாக இருந்தது. இங்கிருக்கும் பசுமையில் விரைவிலேயே பேருருக்கொண்டுவிட்டது. இங்கு பெரும்பாலும் கன்றுகள் இரண்டிரண்டாகவே பிறக்கின்றன. கண்ணெதிரிலேயே ஆநிரை பெருகிச்சூழ்கிறது. ஒவ்வொன்றும் இங்கே நூறுமேனி

பெருகுகின்றன. இந்நிலத்தில் உயிர் நிறைந்திருக்கிறது.” அர்ஜுனன் “அறிவேன்” என்று சொன்னான். “இறையருள்” என்றபின் அவள் நடந்தகன்றாள்.

அவனுடைய புரவி பிறிதொன்றிலாத ஊழ்கத்திலென புல் தின்று கொண்டிருந்தது. அதன் கடைவாயில் கடிபட்ட வேர்கள் உதிர்ந்தன. பசிய நுரை திரண்டு சொட்டியது. அப்பாலிருந்து இரண்டு புரவிகள் எழுந்து அதை நோக்கி வந்தன. அவை புல் உண்டு வயிறு நிறைந்திருந்தமையால் விளையாடத் துவங்கின. அவன் புரவியை நோக்கி ஒரு பெண் புரவி தலையை குலுக்கியது. அவன் புரவி திரும்பி தன் விலாவை நாவால் நக்கியபின் அர்ஜுனனிடம் மெல்லிய ஓசையில் அவனது கருத்தென்ன என்று கேட்டது. அர்ஜுனன் ஒருகணம் எண்ணியபின் அதன் சேணத்தையும் கடிவாளத்தையும் அவிழ்த்து கையிலெடுத்துக்கொண்டு “செல்க, மகிழ்க!” என்றபின் திரும்பி அந்தப் பாதையினூடாக ஊர் நோக்கி நடந்தான்.

அர்ஜுனன் சீரான நடையுடன் அவ்வூரை அணைந்தான். வயலுக்கும் ஊருக்கும் நடுவே வேறுபடுத்தும் வேலியோ பிற அடையாளங்களோ இருக்கவில்லை. சுற்றிச்சென்ற ஓடையொன்றின் மீது மூன்று மரத்தடிகள் சேர்த்து போடப்பட்டிருந்தன. அதன் மேல் நடந்து ஊருக்குள் நுழைந்தான். தெருவென அமைப்பு எதுவும் இன்றி ஒன்றுக்குள் ஒன்று சுழன்று செல்லும் வட்டங்களாக வீடுகள் அமைக்கப்பட்டிருந்தன. அங்கிருந்து அகழ்ந்தெடுத்த செம்மண்ணை குழைத்துச் செய்த செங்கட்டிகளை அடுக்கி எழுப்பிய சுவர்களின் மீது முடைந்த புல்லை கூரையென்றாக்கி கட்டப்பட்ட தாழ்வான இல்லங்கள். அகன்ற குளிர்ந்த திண்ணைகள். நெய்விளக்குகள் எரியும் சிறிய பிறைகள்.

தெருக்களில் வண்டிகள் என எவையும் சென்ற தடம் தெரியவில்லை. புரவிக்குளம்புத் தடம் கூட இல்லை. அவ்வேளையில் அனைத்து இல்லங்களிலிருந்தும் சிறுவர்கள் இறங்கி முற்றத்தில் ஓடி விளையாடிக்கொண்டிருந்தனர். திண்ணைகளில் கால்நீட்டி அமர்ந்த முதுபெண்டிர் ஒருவரோடொருவர் பேசி, வெற்றிலை மென்று சிறு சிறு கைவேலைகளில் ஈடுபட்டிருந்தனர். ஓரிருவர் அவனை குனிந்து நோக்கினர். எவருமே அயலவரைக் கண்ட அசைவு காட்டவில்லை. எவருக்கும் புதியவன் ஒரு விந்தை என்றும் தோன்றவில்லை. அவன் தெருவில் குறுக்கே ஓடிய இரு குழந்தைகளை தன் மீது அவர்கள் மோதிவிடாதபடி பற்றி நிறுத்தி தலையில் கைவைத்து குழலைக் கலைத்து சிரித்து "செல்க!" என்றான். ஒரு குழந்தை அவனை சிறிய சுட்டுவிரலால் காட்டி எதையோ சொல்லவருவதுபோல் உதடு குவித்தது. பின்னர் முன்னால் ஓடியது.

ஊருக்கு நடுவே அமைந்திருந்த குடிலைச் சுற்றி குழந்தைகளின் கூச்சல் மிகுந்திருந்தது. அணுகுந்தோறும் அது அவருடைய இடம் என்று அவன் அறிந்தான். குடில் முற்றத்திற்குச் சென்றபோது அங்கு ஓடிக்கொண்டிருந்த அத்தனை குழந்தைகளும் வெவ்வேறு இடங்களில் சென்று மறைந்தன. காலடியோசையில் பதுங்கும் சிறு பூச்சிகள்போல அவை மண்ணின் துளைகளுக்குள் மறைந்துவிட்டன என்று தோன்றியது. ஓரிரு கணங்களில் அத்தனை குழந்தைகளும் எப்படி விழியிலிருந்து மறைய முடியும் என்று அவன் வியந்தான். சுற்றிச் சுற்றி பார்த்தபோது அங்கு எவரும் இல்லை என்றே தோன்றியது.

அவன் குனிந்து சிறிய வாயிலினூடாக குடிலின் அறைக்குள் பார்த்தான். அங்கிருந்து எவரும் வெளிவரவில்லை. தன் கையிலிருந்த சேணத்தையும் கடிவாளத்தையும் திண்ணையில் வைத்துவிட்டு, மண் படிந்த தோல் குறடுகளைக் கழற்றி படியில் வைத்து, மெல்ல நடந்து ஏறி குனிந்து உள்ளே சென்று, குளிர்ந்த அரையிருள் பரவிய அறைக்குள் நின்று சுற்றிலும் பார்த்தான். அங்கு நிலத்தில் இரண்டு மணைப்பலகைகளும் ஒரு சிறு விளக்குமேடையும் இருந்தன. உண்பதற்குரிய மரக்கப்பரைகள் ஓர் ஓரமாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. மேலே தொங்கிய கொடியில் படுப்பதற்குரிய பாயும் மரவுரியும் சுருட்டி வைக்கப்பட்டிருந்தன. பிறிதொன்றும் அங்கிருக்கவில்லை. அங்கு எவரும் குடியிருப்பதாகக்கூட தெரியவில்லை. அவ்வப்போது எவரோ வந்து தங்கிச்செல்லும் இடம் எனத் தோன்றியது.

மீண்டும் முற்றத்திற்கு வந்து, அங்குதானா என்று எவரிடமேனும் கேட்கலாமா என்று எண்ணி திரும்பிப்பார்த்தான். தொலைவிலிருந்து இளைய யாதவர் சிற்றில் நோக்கி நாற்புறமும் விழியோட்டித் தேடியபடி வருவதை பார்த்தான். அவர் அவனைப் பார்த்து புன்னகைத்துவிட்டு மேலும் பொருட்படுத்தாமல் திரும்பித்திரும்பி சிறு இடுக்குகளை எல்லாம் பார்த்தார். “எங்கே போய்விட்டீர்கள்? என்னால் எவரையுமே கண்டுபிடிக்க இயலவில்லை. ஒருவர்கூட கண்ணுக்குத் தென்படவில்லை. அய்யய்யோ என்ன செய்வேன்!” என்றார். அப்போதுதான் தன்னருகே சுவர் மடிப்புக்குள் இரண்டு அகவை தோன்றும் சிறுவன் ஒருவன் மறைந்து நின்றிருப்பதை அர்ஜுனன் கண்டான். அவன் சுவரோடு ஒட்டி முகம் மறைத்து நின்று ஓசையிலாது குலுங்கி சிரித்துக்கொண்டான்.

ஒருகணத்தில் அந்தப் பகுதியெங்கும் மறைந்திருந்த அத்தனை குழந்தைகளையும் அவன் பார்த்துவிட்டான். சற்று முன் ஒருவர்கூட ஏன் விழிக்குத் தென்படவில்லை என்று எண்ணியபோது அப்போது அவர்களின் உலகில் தான் இல்லை என்று தோன்றியது. இளைய யாதவர் முற்றத்தில் ஒவ்வொரு இடமாகச் சென்று குழந்தைகளை தேடினார். தரையில் கிடந்த புல்முடைந்த தடுக்கொன்றை தூக்கிப் பார்த்தபோது அவன் அருகே நின்றிருந்த சிறுவன் சற்று ஓசையெழ நகைத்தான். பின்னர் குனிந்து ஊ என்றொரு ஓசை எழுப்பினான். "பிடித்துவிட்டேன்!" என்று சொல்லிக்கொண்டு ஓடிவந்து இளைய யாதவர் அவனை தொட்டார். அவன் உடல் குலுங்க நகைத்து அந்நகைப்பின் விசையாலேயே விழுந்து கால்களை உதைத்து கைகளை பறப்பதுபோல் அசைத்து துடித்தான்.

பிற குழவிகள் அனைத்தும் வெவ்வேறு இடங்களிலிருந்து வெளிவந்து உரக்க கூவி நகைத்தன. "தோற்றுவிட்டான்! ருத்ரன் தோற்றுவிட்டான்!" என்று கூவின. இளைய யாதவர் அவனை இரு கைகளாலும் பிடித்துத் தூக்கி முற்றத்தில் கொண்டுவந்து சுழற்றி நிறுத்தி "இவன் முறை... இனி இவன் முறை" என்றார். ஒரு பெண் குழந்தை அர்ஜுனனை நோக்கி "இவர் விளையாட வரவில்லையா?" என்றாள். அர்ஜுனன் தயங்கி "இல்லை, நான்..." என்றான். "அவரும் இந்த ஆட்டத்தில் உண்டு" என்று இளைய யாதவர் சொன்னார்.

அர்ஜுனன் புன்னகைத்து ஏதோ சொல்வதற்குள் ருத்ரன் "நான் எண்ணத்தொடங்குவேன்" என்றான். "எண்ணு" என்று சொன்ன பின்னர் இளைய யாதவர் காட்டை நோக்கி ஓடினார். குழந்தைகள் ஒவ்வொருவரும் நீரில் மீன்கள் சிதறி மறைவதுபோல் மறைந்தனர். அர்ஜுனன் ஒருகணம் திகைத்த

பின் சிரித்தபடி இல்லத்திற்குள் புகுந்தான். சுற்றி நோக்கியபின் சுவரில் கால்வைத்து எம்பி உடலை எழுப்பி மேலே உத்தரத்திற்கு மேல் அமர்ந்துகொண்டான். ருத்ரன் எண்ணி முடித்து "வருகிறேன்! வருகிறேன்" என்று கூவியபின் கண்களிலிருந்து கையை எடுத்து சுற்றுமுற்றும் பார்த்தான். பின்னர் கீழிருந்த காலடித்தடங்களை பார்த்தபடி தேடத் தொடங்கினான்.

அவனால் எவரையும் கண்டுபிடிக்க முடியவில்லை. புல்பரப்புக்குள் ஒளிந்திருந்த பெண்குழந்தையை அவன் அணுகும்போது பின்னாலிருந்த வேறொரு பெண் குழந்தை "கூ!" என்று ஓசையிட்டது. உடனே எண்ணம் சிதறி அவன் ஓசை கேட்ட இடம் நோக்கி வந்தான். அதை அணுகுவதற்குள் வேறொரு இடத்தில் ஓசை கேட்டது. அவன் சுழன்று சுழன்று தேடினான். தனக்குத்தானே "எங்கே இருக்கிறீர்கள்?" என்று கேட்டுக்கொண்டான். "நான் பிடிப்பேன்!" என்று வஞ்சினம் உரைத்தான். "நேற்று உன்னை மூன்று தரம் பிடித்தேன்!" என்று யாரிடமோ கூறினான். பிறகு மீண்டும் இல்லத்தை அணுகி உள்ளே அறைகளை பார்த்தபின் பின்பக்கம் இறங்கி வெளியே சுற்றி மீண்டு வந்தான்.

அவன் உள்ளம் சோர்ந்திருப்பது தெரிந்தது. "நான் அம்மாவிடம் கூறுவேன்" என்றான். "நீ பழம் தின்றது எனக்குத் தெரியும்" என்றான். பிறகு "பிடிபடுபவர்களுக்கு நான் வெல்லம் தருவேன்" என்றான். அர்ஜுனன் சிரித்துவிட்டான். அவன் அச்சிரிப்பினூடாக தன்னை காட்டிவிட்டான் என்று தோன்றியது. ருத்ரன் படிகளினூடாக உள்ளே வந்து மேலே பார்த்து "பிடித்துவிட்டேன்! பிடித்துவிட்டேன்! இங்கிருக்கிறார்!" என்றான். இரு கைகளையும் விரித்து "இங்கிருக்கிறார்! பிடித்துவிட்டேன்!

எவ்வளவு பெரியவரை பிடித்துவிட்டேன்!" என்றான். அர்ஜுனன் உத்தரத்தில் தொங்கி கீழிறங்கி "ஆம், பிடித்துவிட்டான்" என்றான். ருத்ரன் ஓடிவந்து அவன் இடையில் இருந்த ஆடையை பற்றிக்கொண்டு கூச்சலிட்டு துள்ளித் துள்ளி உடல் அதிர்ந்தான். அச்சிற்றுடலிலிருந்து எழுந்த ஆற்றல் அவனை வியப்படைய வைத்தது. தொண்டை நரம்புகள் புடைத்திருந்தன. உடல் நாணேற்றப்பட்ட வில் எனத் தெரிந்தது. கூச்சல் செவிகளை ரீங்கரிக்கச் செய்தது.

நான்கு திசைகளிலிருந்தும் குழந்தைகள் ஓடி வந்தனர். இளைய யாதவர் அருகணைந்து "இவர் தோற்பார் என எனக்குத் தெரியும்" என்றார். "எப்படி தெரியும்?" என்று ஒருவன் கேட்டான். "இவரால் ஒளிந்துகொள்ளவே முடியாது" என்றார் இளைய யாதவர். அவன் "நீங்கள் ஒளிந்துகொண்டால் பிடிக்கவே முடியாது" என்றான். அர்ஜுனன் "ஆம், அவர் சிறு அகவையிலேயே மிக நன்றாக ஒளிந்துகொள்ளக்கூடியவர். அவருக்கும் சேர்த்து நான்தான் வெளிப்படுவேன்" என்றான். "இப்போது உங்கள் முறை..." என்று ஒரு பெண்குழந்தை சொன்னது.

"இவள் பெயர் தயை. இந்த ஊர் தலைவரின் மகள்" என்று இளைய யாதவர் சொன்னார். அர்ஜுனன் "இந்த அகவையிலேயே அன்னைபோல் இருக்கிறாள்" என்றான். "எவ்வண்ணமோ பெயருக்கேற்றபடி பெண்கள் தங்களை மாற்றிக்கொள்கிறார்கள்" என்றார் இளைய யாதவர். "இது அவள் மூதன்னையின் பெயர்." தயை "என்ன பேசுகிறீர்கள்? இப்போது அவர் முறை" என்று சொன்னாள். "இவளுடைய மூதன்னை மறைந்துவிட்டாள். இங்கே மழையை கொண்டுவந்தவள். அவளை தெய்வமென நிறுத்தி வழிபடுகிறார்கள்" என்றார்

இளைய யாதவர். “அவர் பிடிக்கவேண்டும்... அவருடைய முறை!” என்று தயை கூச்சலிட்டாள்.

“ஆம், நீ பிடி” என்றபடி இளைய யாதவர் விலகிச் சென்றார். குழந்தைகள் கூச்சலிட்டபடி அகன்றன. அர்ஜுனன் கண்களை மூடிக்கொண்டான். ஒன்று இரண்டு என எண்ணத் தொடங்கினான். தன்மேல் விழிகளை உணர்ந்தான். பலநூறு விழிகள். அவை அனைத்தும் இளையோருக்குரியவை. சிறுவர்களுக்குரியவை. மெய்ப்பு கொண்டு அவன் விழிகளைத் திறந்து சூழ நோக்கினான். அவன் கால்கள் நடுங்கிக்கொண்டிருந்தன. மீண்டும் கண்களை மூடியபோது முகங்கள் ஒவ்வொன்றையாக பார்த்தான். அவன் கண்களில் இருந்து நீர் வழியலாயிற்று.

“எண்ணியாகிவிட்டதா?” என்று தயை கேட்டாள். “ஆம்” என்று அவன் சொன்னான். கண்களைத் துடைத்தபின் திரும்பி “வருகிறேன்... வந்துகொண்டிருக்கிறேன்!” என்று கூவியபடி அக்குழந்தைகளைத் தேடிச் சென்றான்.

# கல்பொருசிறுநுரை - 4

## பகுதி இரண்டு : நீலச்சிறுபீலி – 2

இளைய யாதவர் குடிலின் அறைக்குள் வந்து அங்கிருந்த மென்மரத்தாலான மணை மீது கால் மடித்து அமர்ந்து, மூங்கில் தட்டியால் ஆன சுவரில் சாய்ந்து, மடிமேல்

கைகளைக் கோத்து வைத்துக்கொண்டு புன்னகையுடன் "கூறுக!" என்றார். அங்கு வந்தபோதிருந்த அனைத்து உளநிலைகளும் மறைந்து அதுவரை குழந்தைகளுடன் ஒளிந்து விளையாடி, கூவிச் சிரித்து அடைந்த அனைத்து மலர்வுகளுடன் அர்ஜுனன் அவர் முன் அமர்ந்தான். தொடர்ந்து விளையாட்டைப் பற்றியே பேசவிருப்பவன்போல "மிகத் துடிப்பான குழந்தைகள். அவர்களின் ஒளிந்துகொள்ளும் திறன் வியப்பூட்டுவது" என்றான்.

"எல்லாக் குழந்தைகளும் ஒளிந்துகொள்ள விரும்புகின்றன, கண்டுபிடிக்கப்படுகையில் மகிழ்ச்சி கொள்கின்றன" என்று இளைய யாதவர் சொன்னார். "சிறு விலங்குகள் கூட." அவர் விழிகள் சிரிப்பில் இடுங்கின. "சிற்றகவையில் நான் விரும்பி ஆடியது இது. ஆயர்பாடியில் நான் ஒளிந்துகொள்ளாத இடங்களே இல்லை என்பார்கள். பானைகளுக்கு உள்ளேயும் மண்ணிலிருக்கும் சிறு பிளவுகளுக்குள்ளும் கூட ஒளிந்துகொள்வேன். கட்டாந்தரையில் மறைபவன், காற்றில் ஊறி எழுபவன் என என்னைப்பற்றி பாடுவார்கள். அசைவிலாதிருப்பேன். என்னை அங்கில்லை என எண்ணிக்கொள்வேன். எங்குமில்லை என உளம் அமைவேன். இல்லாமலாவேன். என் அருகிருப்பவர்கூட என்னை உணரமுடியாது."

"ஆயர்பாடியே என்னைத் தேடி அலையும். நூற்றுக்கணக்கான குரல்கள் என் பெயர் சொல்லி அழைக்கும். ஆடல் முடிந்துவிட்டது, பொழுதிறங்குகிறது கண்ணா, வந்து விடு என்று என் அன்னை அழைப்பாள். எங்கிருக்கிறாய், என்ன செய்கிறாய் என்று கூவுவாள். வெண்ணை இருக்கிறது, வெல்லம் இருக்கிறது என்பாள். வராவிட்டால் இருட்டறையில்

அடைப்பேன், மத்துப்பிடியால் அடிப்பேன் என அச்சுறுத்துவாள். முதலில் சிரித்தபடி, பின் பதறியபடி, பின்னர் எப்போதோ அதில் அழுகை கலக்கத்தொடங்கும். உரிய அளவு அவர்கள் அழுதுவிட்டார்களா என்று நான் பார்த்துக்கொண்டிருப்பேன். என் பொருட்டு அழுவதில் எவரெல்லாம் முந்தியிருக்கிறார்கள் என்று பார்ப்பேன். முதலில் சிரிப்பேன். பின்னர் என் பொருட்டு அழுபவர்களுடன் நானும் இணைந்து அழுவேன். என்னை அவர்கள் கண்டெடுக்கையில் கண்ணீர் விட்டுக்கொண்டிருப்பேன். அவர்கள் என்னை தழுவுகையில் நான் அவர்களை தழுவிக்கொள்வேன்."

"அன்று ஒரு சிறுவனாக என்னில் ஓடியது என்ன என்று இன்று கணிக்க முடிவதில்லை. ஆனால் தேடுந்தோறும் அருகணைவதில் ஒரு அழகு உள்ளது என்று எனக்குத் தோன்றும். திரும்பி அவர்களை நோக்கி நான் செல்கையில் என்னை மிகவும் தேடி மிக உளம் உருகி தவித்தவர்களே பேரின்பத்தை அடைகிறார்கள் என்பதை கண்டேன். ஓடிவந்து என் அருகே விழுந்து அள்ளி நெஞ்சோடணைத்து உடலெங்கும் முத்தமிட்டு கண்ணீருடன் என் மார்பிலும் முகத்திலும் முகம் சேர்த்துக்கொள்ளும் அன்னை அடையும் அந்தப் பேரின்பத்தை அவளுக்கு அளிக்க விரும்புவேன். நான் அடையும் இன்பமென்பது அவர்களுக்கு அளித்து அவ்வின்பத்திலிருந்து பெற்றுக்கொள்ளும் பங்கு மட்டும்தான்."

அவர் உரக்க நகைத்து "இழந்ததைப் பெறுவதொன்றே புவியில் இன்பமென்று எஞ்சியிருக்கிறது மானுடருக்கு என்று பின்னாளில் சாந்தீபனி குருநிலையின் ஆசிரியர் எனக்கு கற்பித்தார். விழிநீரும் வியர்வையும் சிந்தி உழைத்து, உளமொருக்கி தவம் செய்து செல்வங்களென, சிறப்புகள் என

மானுடர் பெறுவன அனைத்தும் குழவியாக இங்கு வருகையில் அவர்களுக்கு அளிக்கப்பட்டவை. அவர்களைச் சூழ்ந்து அமைந்திருந்தவை. அவர்கள் புதிதாக அடைவதில்லை, மீளப்பெறுகிறார்கள். அவற்றை முன்னர் அறிந்திருக்கிறார்கள் என்பதனால்தான் அடைந்ததுமே நிறைவுகொள்கிறார்கள். மானுடர் அடையும் அனைத்து இன்பங்களின்போதும் அவர்கள் குழவியராகிறார்கள். நடத்தையில், பேச்சில், எண்ணத்தில் குழவிகளென துள்ளுகிறார்கள்" என்றார்.

"இங்கு இக்குழவியருடன் அமர்ந்து விளையாடுவதை நெடுங்காலத்துக்குப் பிறகு கூர்ந்து பார்த்து ஆசிரியர் சொல் எவ்வளவு உண்மை என்று வியந்துகொண்டிருக்கிறேன். இச்சிறு ஊரில் குழந்தைகள் மலைகளையும் ஆறுகளையும் தங்கள் களத்தில் எடுத்து வைத்து விளையாடுகின்றனர். ஒரு கூழாங்கல் மலையாகிறது. ஒரு தளிர்க்கொடி ஆறாகிறது. அவர்கள் விண்மீன்களையும் விண்விற்களையும் எடுத்தாள்கின்றனர். அவர்களின் களத்தில் பிரம்மம் அமைத்த பெருஞ்செல்வங்கள் அனைத்தும் விளையாட்டுப் பாவைகளென வந்து அமைந்திருப்பதை பார்க்கிறேன். அவை அவர்களுக்கு அளிக்கும் பேரின்பத்தை அவற்றை இழந்து பின்னர் பிறிதொரு வடிவில் எப்போதோ கண்டடைகிறார்கள். கடலை இழந்து துளியைப் பெற்று கடலை கற்பனை செய்து களிப்படைகிறார்கள். கடலில் திளைக்கிறார்கள் சிறுமைந்தர்."

"ஆகவேதான் சொல் முதிரா சிறு குழவியர்கூட மெய்மையின் சொற்களை கூறிவிடுகிறார்கள். நேற்று ருத்ரன் கைநீட்டி புல்வெளியை நோக்கிக்கொண்டு என்னிடம் சொன்னான். நான் அங்கு சென்று அந்தப் புல்லை மேய்ந்தபோது தலையாட்டினேன், என்மேல் ஒரு நீலக் குருவி வந்து

அமர்ந்தது என்று. அக்குருவி அமர்ந்த தடத்தை அவன் உடலில் பார்க்க முடியுமென்று தோன்றியது. இரண்டின்மை என்பதை குழவிகள் மிக இயல்பாக அடைகின்றன. அவை அறிவதில்லை, ஆகின்றன. வளர்கையில் இரண்டில் ஒன்றெனத் திரண்டு தானென அமைந்த பின்னர் அடைந்த அனைத்தையும் இழந்து இழந்து மீண்டும் அப்பெருநிலையை நோக்கி செல்லத்தவிக்கிறார்கள் மானுடர்."

அர்ஜுனன் அவர் பேசுவதை வியப்புடன் கேட்டுக்கொண்டிருந்தான். அவர் சொல்லடங்கி நெடுநாட்களாகிறது. ஒவ்வொன்றையும் அறிந்தவரின் சலிப்பு. அப்போது ஒவ்வொன்றையும் புதிதாகக் கண்டடைவதன் கிளர்ச்சி அடைந்திருந்தார். அவன் விழிகளைப் பார்த்தபின் சிரித்து "நன்று, இத்தனை தொலைவு விலகி வந்து இங்கு தங்கியிருப்பதும் உகந்ததே" என்றார். அர்ஜுனன் "இங்கு எவரேனும் வருவதுண்டா?" என்றான். "மிக அரிதாக. துவாரகையில் இருப்பவர்களுக்கு நான் இங்கு தங்கியிருப்பது தெரியாது. சாத்யகி ஒருவேளை ஒற்றர்கள் வழியாக அறியக்கூடும்" என்றார் இளைய யாதவர். அர்ஜுனன் "நான் சூதர்களிடம் கேட்டு அறிந்தேன்" என்றான்.

"ஆம், சூதர்கள் எவ்வண்ணமோ அறிந்திருக்கிறார்கள். தங்களுக்குள் மந்தணச் செய்தியாக இதை பகிர்ந்துகொண்டிருக்கிறார்கள். எனக்குச் சொல்லியாக வேண்டுமெனத் தோன்றும் கதைகள் தங்களிடம் இருந்தால் நெடுந்தொலைவு நடந்து இங்கு வருகிறார்கள். இங்கு அவர்களுக்குக் கொடுப்பதற்கு பரிசுகள் எதுவும் இல்லை. வெறுங்கையுடன் திரும்ப விருப்புள்ளவர்கள் வந்தடைகிறார்கள். நீ அறிந்திருப்பாய், இச்சிற்றூரில் பணம்

என்பது இல்லை. ஆகவே பொன்னும் வெள்ளியும் மதிப்பு கொண்டது அல்ல. இங்குள்ளோருக்கு அருமணிகளும் உலோகங்களும் பயன்பாட்டுப் பொருட்கள் மட்டுமே. ஆகவே இங்கு இரும்புக்கு இருக்கும் மதிப்பு செம்புக்கு இல்லை, செம்பின் மதிப்பு வெண்கலத்திற்கு இல்லை, வெண்கலத்தின் மதிப்பு பொன்னுக்கு இல்லை" என்றார் இளைய யாதவர்.

"மெய்யாகவே இங்கே ஒரு குழந்தை கேட்டது, இரும்பைவிட மென்மையான பொன்னை எப்படி மதிப்பு மிக்கதென்று மலைகளுக்கு அப்பால் உள்ளவர்கள் கருதுகிறார்கள் என்று. இவர்கள் இங்கிருந்து கிளம்பி மலைப்பகுதிகளின் காடுகளுக்குச் சென்று அலையும் குடிகளாகத் தங்கி மீண்டு வந்தவர்கள். அவர்களின் மைந்தர்கள் இங்கு பிறந்தவர்கள். இங்கு வந்தவர்கள் தாங்கள் வாழ்ந்த இடங்களை, வந்த வழிகளை முற்றாகவே மறந்துவிட்டிருக்கின்றனர். இங்கு இந்த மலைக்குகைக்குள் மழை கடுகி இறங்குகிறது. ஆகவே இங்குள்ளோர் பெருங்குடியென திரண்டிருக்கிறார்கள். இவர்கள் விழைவன அனைத்தும் இங்குள்ளன. ஆகவே விற்பதற்கும் வாங்குவதற்கும் ஏதுமில்லை. வணிகர்கள் இங்கு தேடி வருவதுமில்லை" என்றார் இளைய யாதவர். "எனவே இங்கே ஒவ்வொன்றும் இங்குள்ள மதிப்பையே அடைகின்றன. வெளியுலகின் மதிப்புகள் இங்கில்லை."

அவர் இளைஞனைப்போல பேசிக்கொண்டே இருக்க விழைந்தார். "வணிகம் என்பது என்ன? ஒவ்வொன்றுக்கும் மதிப்பளிக்கும் செயல் அது. ஒப்பிட்டு ஒப்பிட்டு அம்மதிப்பை அது அளிக்கிறது. ஒன்றை பிறிதொன்றுடன். ஓர் ஊர் மதிப்பை பிறிதொரு ஊருடன். ஒவ்வொன்றையும் உலகத்துடன். ஒப்பிட ஏதுமில்லாதபோது மதிப்பிட இயலாது நின்றுவிடுகிறது." அவர்

தனக்குத்தானே பேசிக்கொண்டிருப்பதாக அவனுக்குப் பட்டது. “வணிகம் எங்கும் சென்று தொட்டுவிடுகிறது. உலகம் வணிகமென்னும் பல்லாயிரம் கைகளால் ஒவ்வொன்றையும் இழுத்துக்கொண்டிருக்கிறது. சொல்லையும் அது விட்டுவைப்பதில்லை” என்றார்.

“ஒன்றுடன் ஒன்று இணைந்து ஒன்றுக்கு ஒன்று பொருள் அளித்தே சொற்கள் இங்கே திகழ்கின்றன. ஒரு சொல்லுக்கு மொத்த மொழியும் பொருளை அளிக்கிறது என்பார்கள். எழுகையில் சொல் அனைத்தும் வேதமே என்று ஒரு கூற்று உண்டு. வேதச்சொல் என்பது மின்மினிபோல. ஒளியை ஏந்தியிருக்கும் எளிய சிறுபூச்சி. அதன் கால்கள், சிறகுகள், கண்கள், வயிறு, வாய் அனைத்துமே அவ்வொளிக்காக. அவை இல்லையேல் அவ்வொளி பறக்க இயலாது. ஒரு நாவால் சொல்லப்பட்டு இன்னொரு செவியால் கேட்கப்படுகையிலேயே வேதம் மானுடத்தன்மை கொள்ளத் தொடங்கிவிடுகிறது. அது வணிகக் களத்தில் வந்தமைந்து ஒப்பீட்டு மதிப்பை பெறத் தொடங்கிவிடுகிறது. ஒருபுறம் இன்மையின் அமைதியும் மறுபுறம் முளைத்தெழும் பொருளின் முடிவிலியும் கொண்டது நாம் அறியும் வேதச்சொல். இணைகையில் பொருள்செறிகையில் அது இவ்வுலகுக்குரியது. மலையிறங்கும் நதி மாசுபடுகிறது. மலையிறங்கா நதி பயனற்றது. தன்னை மாசுபடுத்தி மன்பதைக்கு ஊட்டுவதே அன்னைப்பெருக்கு...” அவர் கண்களை மூடி கைகளைக் கட்டி அமர்ந்திருந்தார். பின்னர் “அவ்வண்ணமே அது ஆகும். அதன் நெறி அது” என்றார்.

சற்றுநேர அமைதிக்குப் பின் “இங்குள்ளோர் தங்களை அறிந்திருக்கவில்லை” என்று அர்ஜுனன் சொன்னான். இளைய

யாதவர் உரக்க நகைத்து "அன்றி மெய்யாகவே அறிந்திருக்கிறார்களா? என் மேல் சுமத்தப்பட்ட அனைத்தையும் கழற்றிவிட்டு முற்புலரி கருவறைத்தெய்வமென அணியிலியாக அமர்ந்திருக்கிறேனா?" என்றார். சில கணங்களுக்குப் பின் அர்ஜுனன் "ஆம்" என்றான். "நன்று சொன்னாய். நீ என்னைத் தேடி வந்தது எதன்பொருட்டு?" என்றார் இளைய யாதவர்.

"யாதவரே, அஸ்தினபுரி பெருவேள்விக்குப் பின் மக்கள் செறிந்து வணிகம் பெருகி வளம் நிறைந்து வாழத் தொடங்கிவிட்டது. ஆனால் அங்கிருந்து நாங்கள் ஒவ்வொருவராக கிளம்பிக்கொண்டிருக்கிறோம். அந்நகரில் எங்கள் எவராலும் வாழ முடியவில்லை. ஒவ்வொருவரும் கையில் அடைந்தவற்றை கண்ணெதிரே தூக்கி நோக்குகையில் இதன் பொருட்டா என்ற துணுக்குறலை அடைகிறோம். சொல்லொணா விலை கொடுத்துப் பெற்ற பயனற்ற சிறு பொருளெனத் தோன்றுகின்றன அஸ்தினபுரியின் மணிமுடியும் செங்கோலும். அனைத்தும் செழிக்கும் நகரில் அரசன் செய்வதற்கொன்றுமில்லை என்பார்கள். அங்கு மூத்தவரும் வாளாவிருக்கிறார்" என்று அர்ஜுனன் சொன்னான்.

"அவர் நெறிசூழ்வதை விட்டுவிட்டார். வகுக்கப்பட்டுவிட்ட நெறிநூல்களை அவர் தன் உள்ளத்திலிருந்தே விலக்கிவிட்டிருக்கிறார். அதை ஒருநாள் அவரிடம் நானே கேட்டேன். நான் இதுகாறும் நெறிசூழ்ந்தது, எண்ணி எண்ணி வந்தடைந்தது இரு பெரும் நூல்தொகைகளைத்தான். அவை இனி இங்கிருக்கும், என் செங்கோல் அதை நிறுவிவிட்டது. அந்நூலை கையில் வைத்து சொல்லாள்பவன் எவனாயினும் தருமனே. நான் செய்வதற்கு ஒன்றுமில்லை என்றார். நான்

ஒருநாள் சென்றபோது அவர் தனிமையில் அமர்ந்து சூதாடிக்கொண்டிருந்தார். நாற்களத்தில் கருக்களென எவையுமில்லை என்பதை கண்டேன். விந்தை என எண்ணி அருகே சென்றேன்.”

“அவர் என்னை திரும்பி நோக்கி, கருக்கள் வைக்காமல் ஆடும் ஆடல் ஒன்று உண்டு. உள்ளத்தால் தொட்டுத் தொட்டு ஆடுவது என்றார். தனிமையில் நாற்களம் ஆடுகையில் எப்போதும் எதிர்த்தரப்பில் என் எதிரியை கற்பனை செய்து நிறுத்துவேன். அவ்வண்ணம் நிலைகொள்ளும் எதிரியும் நானே என பின்னர் உணர்ந்தேன். எதிரியை வெறுத்தேன், எனவே என்னை வெறுத்தேன். என்னை விரும்பினேன், எனவே எதிரியை விரும்பினேன். என் இடைவெளிகளை எதிரியென்றாகி நிறைத்துக்கொண்டேன். என் எல்லைகளை எதிரியினூடாகக் கடந்தேன். என்னை நானே வென்றும் தோற்றும் ஆடினேன். இப்போதுதான் முதல்முறையாக எதிர்ப்பக்கம் எவருமில்லாமல் ஆடிக்கொண்டிருக்கிறேன் என்றார்.”

“என்னால் அவர் சொல்வதென்ன என்று புரிந்துகொள்ள முடியவில்லை. எதிர்த்தரப்பின் காய்நகர்த்தலை எவரென்று அமைந்து செய்வீர்கள் என்று கேட்டேன். எதிர்த்தரப்பில் காய்நகர்த்தப்படுவதில்லை என்றார். அதெப்படி என்றேன். இளையோனே, இது ஒற்றைத்திசை நகர்வுகள் மட்டுமே கொண்ட ஆட்டம் என்றார். அவர் உளம் கலங்கியிருக்கிறாரோ என்றுகூடத் தோன்றியது. அவர் சிரித்து என் உளம் தெளிவாகவே இருக்கிறது. இவ்வகையிலும் ஆடக்கூடும். ஏன் ஆட்டம் என்பது இருமையாலானதாக இருக்கவேண்டும் என்றார்.”

“எனில் ஆட்டநெறிகள் அனைத்தும் மறைந்துவிடுகின்றன அல்லவா? அந்நெறிகள்தானே ஆட்டம் எனப்படுகின்றன என்றேன். இல்லை, நெறிகள் சற்றே திரிபு கொள்கின்றன, அவ்வளவுதான் என்றார். நான் புரியாமல் நின்றிருப்பதைக் கண்டு உன்னிடம் புரியவைக்க இயலாது. நீயே கண்டடையவேண்டியதுதான் என்றார். நான் மேற்கொண்டு எதுவும் பேசவில்லை. ஆனால் அவரை நோக்கிக்கொண்டே இருந்தேன். அவர் சொல்லடங்கிவிட்டிருந்தார். இருக்கையில் இல்லாமலாகி மீண்டார். அவைகளில் அமர்ந்திருக்கையில் அவர் அங்கில்லை என்பதை உணர்ந்தேன், பிறரும் அவ்வுணர்வை அடைந்தார்கள் என அறிந்தேன்.”

அஸ்தினபுரியில் என் உடன்பிறந்தார் ஒவ்வொருவரும் தங்கள் உலகுக்குள் சுருங்கிவிட்டிருந்தார்கள். ஒவ்வொருவரும் அவர்களுக்குரியது எது எனக் கொண்டிருந்தார்களோ அதை இழந்துவிட்டிருந்தனர். பீமசேனன் கதையை தொடவில்லை. காடுகளில் அவரை குரங்குகள் ஏற்றுக்கொள்ளவில்லை. அவர் காட்டுக்குள் சென்று அவ்வப்போது மட்டுமே மீண்டார். அவரிடம் பிறர் பேசியே நெடுநாட்களாகின்றது என்றார்கள். நகுலன் புரவிகளையும் சகதேவன் நிமித்தநூல்களையும் மறந்தனர். அவர்கள் எங்கே வாழ்கிறார்கள் என்றே எனக்குத் தெரியவில்லை. யாதவரே, அவ்வப்போது அரண்மனை இடைநாழிகளில் அவர்களை நேருக்குநேர் சந்திப்பேன். முற்றிலும் அயலவர்போல் விழிதொட்டுக்கொள்வோம். வெற்றுச் சொல் எடுத்து பேசிக்கொண்டு உடனே விலகிச் செல்வோம்.

நான் திரௌபதியை ஒரே ஒருமுறை, துர்க்கையன்னையின் ஆலயத்துப் பூசனையின்போது மட்டுமே பார்த்தேன். அவள்

என்னை அறியவில்லை என்று தோன்றியது. நான் நோக்கிய அந்த முதிய பெண்மணி நான் எவ்வகையிலும் அறிந்தவள் அல்ல. அவள் நீள்குழல் முற்றிலும் நரையோடி வெண்ணுரை என தோளில் வழிந்திருந்தது. உடல் மெலிந்து தளர்ந்திருந்தது. ஆகவே அவளுடைய பெரிய எலும்புக்கூட்டு வடிவம் மேலும் துலங்கியது. கண்கள் நோக்கிழந்தவை என, உள்திரும்பியவை என தோன்றின. அவள் முன் நிற்கையில் அமைதியிழந்தேன். ஆகவே என்னை பின்னிழுத்துக்கொண்டேன்.

நான் சுபத்திரையை மீண்டும் பார்க்கவே இல்லை. அவள் துவாரகையில் இருக்கிறாள் என்றும், அஸ்தினபுரியுடனான அனைத்து உறவுகளையும் துணித்துக்கொண்டுவிட்டாள் என்றும் அறிந்தேன். அஸ்தினபுரியிலிருந்து எச்சொல்லும் தனக்கு வரலாகாது என ஆணையிட்டிருந்தாள். துவாரகையில் இளமைந்தன் பரீக்ஷித் இருப்பதுவரை சற்றேனும் தொடர்பிருந்தது. அவனை இங்கே கொண்டுவந்த பின்னர் அதுவும் அறுபட்டு மறக்கப்பட்டது. மைந்தன் உடல்தேறிவிட்டான், ஆனால் நலம்பெறவில்லை. அவனைப் பார்ப்பவர்கள் அவனுடைய மூதாதை பாண்டுவைப் போலவே இருப்பதாகச் சொன்னார்கள். குருகுலத்தின் ஊழ் துரத்துகிறது என்றார்கள். பாண்டுவும் விசித்திரவீரியனும் தேவாபியும் என தொடரும் அறியமுடியாத ஒரு கதைச்சரடு.

“முதலில் நான் அங்கிருந்து கிளம்பினேன்” என்று அர்ஜுனன் தொடர்ந்தான். “ஏன் கிளம்பினேன் என்று சொல்லத் தெரியவில்லை. அங்கே இருக்கமுடியவில்லை. அங்கே என்னை இருத்திக்கொள்ள பலவாறாக முயன்றேன். அது என் இடம், நான் வென்றெடுத்தது, எனக்குரிய கடமைகள் கொண்டது என்று என்னுள் வாழ்ந்த ஷத்ரியனிடம் சொல்லிச் சொல்லி

சலித்தேன். அருகிருக்கும் காடுகளில் சென்று மீளலாம் என என்னுள் வாழும் வில்லவனுக்குச் சொல்லி ஓய்ந்தேன். என் உடன்பிறந்தார் உறவினர் அனைவருமே அயலார் எனத் தோன்றினர். அவர்களின் ஒவ்வொரு சொல்லும் வேறெவரை நோக்கியோ சென்றன. நான் வெற்றுவிழிகளுடன் நிற்பதைக் கண்டு அவர்கள் ஒன்றை மீண்டும் மீண்டும் சொன்னார்கள். அதைக் கேட்டு எரிச்சலுற்று நான் கூச்சலிட்டேன். அத்தனை பேரிடமும் பூசலிட்டேன். என் நரம்புகள் இழுபட்டு நின்றன. நான் அதிர்ந்துகொண்டே இருந்தேன்.”

அவ்வரண்மனை, அந்நகரம், அங்கிருக்கும் ஒவ்வொரு பொருளும் எனக்கு அலுப்பூட்டின. அவை மாறா வடிவு கொண்டிருந்தன. ஆகவே வளராப் பொருள் கொண்டிருந்தன” என்றான் அர்ஜுனன். “ஒருநாள் என் அறையில் அமர்ந்திருந்தேன். எதிரே மரத்தாலான பீடம் ஒன்று இருந்தது. அதன் முழுமைவடிவு, அவ்வடிவில் அது தன்னை அமைத்துக்கொண்டு அங்கிருந்தமையில் இருந்த நாணின்மை என்னை கூசவைத்தது. இரும்பைக் கடிப்பதுபோல. சில கணங்களில் எழுந்து வெளியே ஓடி முற்றத்தில் உருவற்ற முகில்களின் கீழே நின்றேன். இவ்வுணர்வை நான் எவரிடமும் சொல்லிவிட முடியாது, யாதவரே. இது வெறும் உளக்குழப்பமாகக் கூட இருக்கலாம். ஆனால் இதை நான் உணர்கிறேன். என்னுள் இரும்பு உரசிக்கொள்வதுபோல ஓர் ஒவ்வாமையின் ஓசையே எழுகிறது. என் அகச்சொற்களில் எல்லாம் அவ்வோசைதான்.

ஒருநாள் காலையில் எழுந்தேன். ஓர் எண்ணமும் எழவில்லை, ஆனால் நான் கிளம்பிக் கொண்டிருந்தேன். கிளம்புகிறேன் என எண்ண எண்ண உவகை கொண்டேன். விடுதலையை என்

உடல் உணர்ந்தது. என் நடையும் முகமும் மாறிவிட்டன. மூத்தவரைச் சென்று பார்த்தேன். என் எண்ணத்தைச் சொன்னதும் அவர் திகைப்பின்றி, ஆர்வமும் இன்றி, சோர்வுடன் "எங்கு செல்கிறாய்?" என்று கேட்டார். "திசைப்பயணம் ஒன்று செய்யலாம் என்றிருக்கிறேன்" என்றேன். அவ்வெண்ணமே அப்போதுதான் தோன்றியது. "நாம் பாரதவர்ஷத்தை வென்றுவிட்டோம், முழுதாள்கிறோம். இனியென்ன?" என்றார். "இனி நாம் வென்றுவிட்டோம் என்னும் எண்ணம் நம்மையும் பிறரையும் ஆளவேண்டும். நம் முதல் தோல்வியை எத்தனை ஒத்திப்போடுகிறோமோ அத்தனை நன்று."

நான் தயங்கி "இல்லை. என்னால் இங்கு நிலைகொள்ள இயலவில்லை" என்றேன். "ஒவ்வொரு நாளும் நான் முற்றாக அறிந்திராத புதிய ஊரில் துயில் விழித்தால் மட்டுமே என்னை நான் தொகுத்துக்கொள்ள இயலும். நான் மலையேறிக் கொண்டிருப்பவன், எடை உதிர்த்து முன் செல்ல வேண்டியவன். என்னை வாழ்த்துங்கள்" என்றேன். அவர் என்னை நெடுநேரம் நோக்கிக்கொண்டிருந்தார். அவர் என்னிடம் வந்துசேர அத்தனை தொலைவு இருந்தது. அவருடன் இருக்கையில் நானும் நெடுந்தொலைவிலேயே இருந்தேன். யாதவரே, அஸ்தினபுரியில் இருக்கும் மூத்தவரை எனக்கு அணுக்கமானவராக உணரவே இயலவில்லை. அவரை எங்கள் கடந்தகாலங்களில், காட்டில் வைத்துப்பார்க்கையிலேயே என் உடன்பிறந்தார் என எண்ணமுடிகிறது.

மூத்தவர் நீள்மூச்சுடன் "இது இவ்வாறே ஆகுமென்று எனக்குத் தோன்றியிருந்தது. நினைவறிந்த நாள் முதலே நாம் நாடோடிகளாக வாழ்ந்திருக்கிறோம். இன்று இங்கு வந்து இவ்வண்ணம் அமையவேண்டும் என்று எண்ணியிருந்தோம்.

ஆனால் அமைவது நமக்கு பழக்கமில்லை. நம்முடையவை நின்ற கால்கள் அல்ல. அரண்மனை மஞ்சத்தறைகளைவிட வழியோரத்து மரத்தடிகளையே நாம் மிகுதியும் அறிந்திருக்கிறோம்" என்ற பின் "செல்க! உன்னில் இருந்து தேடும் ஒன்று முழுதமையுமெனில் எங்கேனும் நீயும் அமரமுடியும். அதுவரை சென்றுகொண்டிருப்பாய். கடல்வரை நதி நிற்பதில்லை என்பார்கள்" என்றார்.

நான் அவர் கால் தொட்டு வாழ்த்து பெற்றேன். "இளையோனே, நீ மகிழ்வுடன் இருப்பாய் எனில் என்னையும் இளையோரையும் இந்நிலத்தையும் நீ துறப்பதிலும் பிழையில்லை. நீ திரும்பி வரவேண்டும் என்னும் ஆணையை ஒரு தோள்சுமையென உனக்கு நான் அளிக்கப்போவதில்லை" என்றார். நான் என் கைவில்லை மட்டும் எடுத்துக்கொண்டு அங்கிருந்து கிளம்பினேன். தாங்கள் எங்கு இருப்பீர்கள் என்று எனக்குத் தெரியவில்லை. உங்களை தேடிவரவேண்டும் என்னும் எண்ணமும் எனக்கு இருக்கவில்லை. ஆனால் அஸ்தினபுரியில் இருந்து கிளம்பியதுமே என் அகம் உங்களை நாடுவதை நான் உணர்ந்துகொண்டேன்.

"யாதவரே, நீங்கள் இருக்கக்கூடும் என்று எண்ணி எண்ணி நான் தேடி வந்த இடங்களிலெல்லாம் இருந்தீர்கள். ஆனால் நான் முன்னரே அறிந்த ஒரு வடிவில். எனக்கு அருளும் விழிகளுடன். இப்போது நான் முற்றிலும் அறியாத ஓர் இடத்தில் எனக்குத் தெரியாத ஒரு முகம் சூடி நீங்கள் அமர்ந்திருக்கும் இடத்திலேயே நீங்கள் மெய்யாக இருக்கிறீர்கள் என்று எனக்குத் தோன்றியது. அதை எவ்வண்ணம் கண்டுபிடிப்பதென்று எனக்குத் தெரியவில்லை. ஆயினும் உங்களை எண்ணி எண்ணி என் எல்லைகளைக் கடந்து

இத்தொலைவை வென்றேன். இந்தப் பாதை நான் எனக்குள் அமைத்து நீட்டி நீட்டி வந்தடைந்த ஒன்று" என்று அர்ஜுனன் சொன்னான்.

"இங்கு வந்து உங்களைப் பார்க்கையில் உணர்கிறேன். நீங்கள் இருக்கும் நிலையை முன்னர் அறிந்திருக்கிறேன். ஆனால் உங்களைப் பார்க்கும் என்னை இந்நிலையில் நான் உணர்ந்ததே இல்லை" என்று அர்ஜுனன் சொன்னான். இளைய யாதவர் புன்னகை செய்தார்.

# கல்பொருசிறுநுரை - 5

**பகுதி இரண்டு : நீலச்சிறுபீலி – 3**

அர்ஜுனன் சொன்னான். அஸ்தினபுரியிலிருந்து கிழக்கே சென்று மகதத்தினூடாக வங்கத்தில் இறங்கி கலிங்கத்தை அடைந்தேன். அங்கிருந்து மேற்காகத் திரும்பி விதர்ப்பத்தினூடாக மாளவம் நோக்கி சென்றேன். செல்லும் வழியில் நான் கிளம்பிய ஓரிரு நாட்களுக்குப் பின்னர் மூத்தவர் பீமசேனன் அவ்வாறே வடதிசை நோக்கி சென்றுவிட்டதை அறிந்தேன். அவர் வெள்ளிப் பனிமலை அடுக்குகளின் எல்லையை கண்டுவிட்டார், அதைக் கடந்து அப்பால் செல்லாது அவரால் அமைய இயலாது. அவர் பீதர் நாட்டை நோக்கி சென்று கொண்டிருப்பார், அங்கு அவர்களுடன் இயல்பாகக் கலக்க அவரால் இயலும், ஒருவேளை மீண்டு வராமலே ஆகக்கூடும்.

மேலும் சில நாட்களுக்குப் பிறகு சகதேவன் தெற்கு நோக்கி சென்றான் என்னும் செய்தியை அறிந்தேன். நகுலன் மேற்கு நோக்கி என்று பின்னர் கேட்டேன். மூத்தவர் அவர்களை வாழ்த்தி அனுப்பியிருப்பார். அவர்கள் மூவரும் முன்னரே அவர்கள் சென்ற பயணத்தையே மீளவும் செல்கிறார்கள். கொடியும் படையும் கொண்டு சென்றபோது தவறவிட்டவற்றை தன்னந்தனியாக சென்று தொட்டெடுக்க விழைகிறார்கள் போலும். மூத்தவர் யுதிஷ்டிரனும் அவ்வண்ணமே, அவர் சென்ற பயணங்களில் பிறிதொருவராக மீண்டும் செல்கிறார். எனில் நானும் கிழக்கு நோக்கித்தானே செல்ல வேண்டும்? கிழக்கே செல்லவே என் உள்ளம் விழைந்தது. என்றும் கிழக்கே என் திசை. என் தெய்வத்தந்தைக்குரியது அது.

மாளவத்திலிருந்து தெற்கு நோக்கி வரும்போது காட்டில் ஒரு சூதனை கண்டேன். அந்த மரத்தடியில் அவனுடன் ஏழெட்டு வணிகர்கள் மட்டும் இருந்தனர். தன் கிணையையும் யாழையும் மீட்டிப் பாடிய அவன் அஸ்தினபுரியின் பெருவேள்வியின் கதையை சொன்னான். அவன் அதை முடித்தபோது சொன்ன கதை அதுவரை கேட்டிராதது. அஸ்தினபுரியிலிருந்து கதைகள் கிளம்பி நாடெங்கும் சென்றுகொண்டிருந்தன. யாதவரே, இன்று அஸ்தினபுரிக்கு நாடெங்கிலுமிருந்து கதைகள் வந்து சேர்ந்துகொண்டிருக்கின்றன. அவ்வண்ணம் கூறப்பட்ட ஒரு கதை அது. பாதி பொன்னுடலான ஒரு கீரியின் கதை. அதை நான் அப்போதுதான் அறிகிறேன். அஸ்தினபுரியை கதைகளின் வழியாக திரும்பத் திரும்ப கண்டடைந்துகொண்டே இருக்கிறேன்.

அவன் அக்கதையை சொல்லி முடித்து வணங்கினான். சூழ்ந்திருந்தவர்கள் அஸ்தினபுரியைப் பற்றி பேசலாயினர்.

அப்பெரும்போரை, அதில் திரண்டெழுந்த வேதத்தை. பாற்கடல் கடைந்த அமுதென்று எழுந்தது அது என்றார் ஒருவர். யாதவரே, நான் கேட்டது பிறிதொரு போர். தெய்வங்கள் ஆட மானுடர் அவற்றின் கையில் திகைத்து அமர்ந்திருந்தனர் அதில். அனலைச் சூழ்ந்து அனைவரும் படுத்துக்கொண்ட பின்னர் நான் விண்மீன்களை நோக்கிக்கொண்டிருந்தேன். அரைத்துயில் வந்து என்னை மூடியபோது என் உள்ளம் எழுந்து அக்கதை காட்டிய வழியினூடாகச் சென்று அம்முதுமகள் அனல் மூட்டிய அடுப்பை வந்தடைந்துவிட்டது. அந்த அடுப்பின் அருகே ஒரு சிறுகுடிலில் தாங்கள் அமர்ந்திருந்தீர்கள்.

“எவ்வண்ணம்?” என்று இளைய யாதவர் கேட்டார். அர்ஜுனன் புன்னகைத்து “யாதவரே, தாங்கள் ஒருவயதுக் குழந்தையாக இருந்தீர்கள். பூழியில் விளையாடி மண்மூடிய உடல்கொண்டிருந்தீர்கள். மண்ணில் இருந்து ஒரு விதையை என ஒரு முதுமகள் தங்களை தூக்கி எடுத்தாள். நீங்கள் கால்களை உதறி திமிறிக் கூச்சலிட்டுத் துடிக்க பற்றி இழுத்து தூக்கிச்சென்றாள். குடிலுக்குப் பின்புறம் வெந்நீர் கலத்தின் அருகே கொண்டுசென்று நிறுத்தி இரு கைகளையும் பிடித்து சேர்த்து வைத்து உங்களை நீராட்ட முயன்றாள். நீங்கள் கூச்சலிட்டு துள்ளிக்கொண்டிருந்தமையால் ஒரு காலால் உங்கள் இரு கால்களையும் சேர்த்துப் பிடித்து நிலத்தோடு பதித்தபின் வலக்கையால் மரக்குடுவையில் அள்ளி இளவெந்நீரை உங்கள் மேல் ஊற்றினாள்” என்றான்.

நீங்கள் அந்த நீரை வாயில் உறிஞ்சி அவள் மேல் துப்பி கூச்சலிட்டு அழுதீர்கள். அவள் அதை மகிழ்ந்து சிரித்து ஏற்று நீரை அள்ளி விட்டு உங்களை கழுவினாள். நீர் உடலில்

விழுந்து சற்று நேரம் கழிந்ததுமே நீங்கள் அதில் மகிழ்ந்து அவள் கையை உதறி மீண்டு அத்தோண்டியை வாங்கி நீங்களே நீரள்ளிவிட்டு குளிக்கத்தொடங்கினீர்கள். உங்கள் சிரிப்பை அருகில் நின்று பார்த்துக்கொண்டிருந்தேன். மேல்வாயில் இரு பால்பற்கள். அகன்ற செவ்விதழ்கள். தலையில் சூட்டப்பட்ட பீலியில் நீர்த்துளிகள். முதலில் அது அனிருத்தனின் மைந்தன் வஜ்ரநாபன் என்ற எண்ணம் எனக்கு ஏற்பட்டது. பின்னர் அறிந்தேன், அது தாங்களே என்று. யாதவர்களில் தலையில் பீலிவிழி சூடுபவர் தாங்கள் ஒருவரே. புழுதியிலாடி மறைந்திருக்கையிலும் பீலி நீலச்சுடர் எனத் தெரிந்ததை எண்ணினேன். எங்கும் அப்பீலியைக்கொண்டே உங்களை அறிந்துகொள்ள முடியும்.

நீங்கள் என்னை நோக்கி கைநீட்டி "விளையாட வா!" என்றீர்கள். நானும் அப்போது அதே அகவை கொண்ட குழவியாக இருந்தேனா? தெரியவில்லை. "விளையாட வா!" என்று மீண்டும் அழைத்தீர்கள். உங்கள் சொற்களை கேட்டேன். "என்ன விளையாட்டு?" என்று நான் கேட்டேன். "இங்கே விளையாட்டு..." என்றீர்கள். விழித்துக்கொண்டேன். இருளை நோக்கி படுத்திருந்தேன். ஒளிரும் நீல விண்மீன் ஒன்று மிக அருகே என தொங்கிக்கொண்டிருந்தது. அதை நோக்கிக்கொண்டிருக்கையில் நான் துயரற்றிருந்தேன். இனிமையே என ஆகிவிட்டிருந்தேன். இழந்தவை அனைத்தையும் கடந்து மறுகரையில் நின்றிருந்தேன்.

சூதனின் ஆடையின் ஓசை கேட்டு நான் எழுந்து அமர்ந்தேன். அனலுக்கு அப்பால் அச்சூதனும் எழுந்து அமர்ந்திருந்தான். என்னை நோக்கி புன்னகைத்து "ஒரு கனவு" என்றான். "எவரிடம் சொல்ல என எண்ணினேன், விழித்துக்கொண்டேன்."

நான் “கூறுக!” என்றேன். “அங்கே அன்னத்தால் வேள்வி நிகழ்ந்த அடுப்பருகே நான் மகாருத்ரனை கண்டேன். நெற்றியில் அனல்விழி எழுந்த கோலம். விழிமணி மாலைகள். முப்புரி வேல். நஞ்சுண்ட கழுத்து. ஆனால் விந்தை, ஓர் அகவை மட்டுமே கொண்ட சிறுவனென அமர்ந்திருந்தார் சங்கரன். புலித்தோலாடை அணிந்து இடையில் உடுக்கை தொங்க. விந்தையான கனவு என கனவுக்குள்ளேயே எண்ணிக்கொண்டேன், எழுந்தேன்” என்றான். “எண்ணி எண்ணி குழைகின்றேன். எவ்வண்ணம் இக்கனவை பொருள்கொள்வேன்?” என்றான் சூதன். “பொருள்கொள்ளாச் சொற்கள் சூதர்களிடம் இருக்கலாகாது என்பார்கள்.”

நான் அவனிடம் “அவ்விழி சென்ற யுகங்களில் பகை முடிக்க, அறம் திகழ, இறையருள் பொலிய வெங்கனல்கொண்டு திறந்தது. இது கலியுகம். ஒவ்வொருவரும் தங்கள் நன்மைகளினூடாக, கனிவினூடாக கற்றுக்கொள்ளும் காலங்கள் அவை. பிழைகளினூடாக, வஞ்சத்தினூடாக கற்றுக்கொள்ளும் ஒரு காலம் எழுந்துள்ளது. இக்காலத்திற்குரிய தோற்றம் பிறிதொன்று. அந்த நுதல்விழி இன்று வண்ணம் பெற்று பீலிவிழி என்றாகியுள்ளது போலும்” என்றேன். நான் கூறியது அவனுக்குப் புரிந்தது என்று அவன் விழிகள் காட்டின. எழுந்து “வாழ்த்துக, சூதரே!” என்று அவன் கால் தொட்டு வணங்கினேன். “வெல்க!” என்று அவன் கூறினான். அந்த மரத்தடியிலிருந்து இங்கு வந்தேன்.

இளைய யாதவர் அவனை நோக்கிக்கொண்டு அமர்ந்திருந்தார். “இங்கு வரும்போது ஏன் வருகிறேன் என்று தெளிவுகொண்டிருக்கவில்லை. இங்கு வந்தபின்னும் எனக்கு தெரியவில்லை. ஆனால் இங்கிருந்தும் செல்லவே

வந்திருக்கிறேன்" என்றான் அர்ஜுனன். "மீண்டும் பார்க்கவேண்டும் என்று தோன்றியது எதற்காக? மீளவும் என்னிடம் எதையேனும் கேட்க விழைகிறாய் என்றால் நான் கூறியனவற்றை நீ மறுக்கிறாய், அன்றி கடந்துசெல்கிறாய்" என்றார் இளைய யாதவர். "உனக்குரிய சொற்கள் அனைத்தையும் நான் முன்னரே உரைத்துவிட்டேன். அவை உன்பொருட்டே சொல்வடிவானவை."

அர்ஜுனன் "ஆம், இங்கு வரை வரும்போது நான் அதைப்பற்றித்தான் எண்ணிக்கொண்டிருந்தேன். இன்னும் ஏதேனும் நீங்கள் கூற இயலுமா என்று. நீங்கள் எனக்குரைத்தவை என்றுமென நின்றிருக்கும் சொற்கள். அவை வளர்பவை, காலம் நீளும் தோறும் முடிவிலாது பெருகுபவை. வேதங்களென, மெய்நூல்களென, காவியங்களென நிறைபவை. இங்கு என்றும் அவை நின்றிருக்கும், வடமாமலைகளைப்போல. எனினும் அச்சொற்கள் என்னை வந்தடைந்தபின்னர் நான் எவ்வண்ணம் அவற்றை எதிர்கொண்டேன்? விண்ணிலிருந்து செம்முகிலொன்று பொற்குவையென மாறி விழுந்து கையை அடைந்ததுபோல் வந்தது இறைப்பாடல். ஆனால் அக்கணத்திலிருந்து ஒவ்வொரு சொல்லாக நான் இழக்கத்தான் தொடங்கினேன்" என்றான்.

குருக்ஷேத்ரப் பெருங்களத்தில் பதினெட்டு நாட்களில் எனக்கு அளிக்கப்பட்ட ஒவ்வொரு சொல்லையும் நான் முற்றிலும் இழந்தேன். பதினெட்டாவது நாள் போர் முடிவில் வெற்றி வெற்றி என பெருமுரசம் ஒலித்தபோது ஒரு சொல் எஞ்சா உள்ளத்துடன் அங்கு நின்றிருந்தேன். உளமேங்கி அழுதேன். ஒரு சொல்லின் இறப்பென்பது அவ்வளவு எளிதல்ல. யாதவரே, ஒரு சொல் முடிவிலா பொருள் கொள்ளும் தகைமை

கொண்டது. அதுவே அதன் உயிர். பொருளை அளிக்கும் தன் திறனை அது இழக்கையிலேயே சொல் உதிர்கிறது. வைரமென திரும்பித் திரும்பி பல்லாயிரம் பட்டைகளைக் காட்டி ஒளிவிடுகிறது, இழந்து கல்லாகிறது. அத்தனை சொற்களையும் இழந்தவன் தீயூழ் கொண்டவன். தெய்வங்களால் கைவிடப்பட்டவன். தன்னை தானே கைவிட்டவன்.

அங்கிருந்து நான் அஸ்தினபுரிக்கு மீண்டபோது என் உள்ளமெங்கும் சொல்லின்மை நிறைந்திருந்தது. உங்களுடன் பேசுவதற்கு ஒன்றும் இருக்கவில்லை. திசைவெற்றிகாக என்னை பணித்தார் மூத்தவர். நான் கிழக்கு நோக்கி கிளம்பியபோது "இந்திரனின் திசை நோக்கி செல்கிறாய். உன் தந்தை விரித்த கைகளுடன் அங்கு உன்னை எதிர்பார்த்து காத்திருப்பார். செல்க!" என்றார். "ஆம்" என்று நான் உரைத்தேன். "இந்திரனை வென்றவன் துணை உன்னுடன் இருக்கட்டும்" என்றார் மூத்தவர். அத்தருணத்தில் ஒரு விந்தையான உணர்வு எனக்கு ஏற்பட்டது. சிற்றிளமையில் நீங்கள் இந்திரனை வென்று மந்தரமலையைத் தூக்கி குடையாக்கினீர்கள் என்று சூதர்கள் பாடுவதுண்டு, யாதவ நிலமெங்கும் இந்திர ஆலயங்கள் இல்லாமல் ஆயிற்று. மந்தரமலையே தெய்வமென ஆக்கப்பட்டது. வென்ற இந்திரனை தோழனென ஆக்கி உடன் வைத்துக்கொண்டீர்களா? அவனுடன்தான் அத்தனை நாள் விளையாடிக் கொண்டிருந்தீர்களா? நீங்கள் கூறிய அத்தனை சொற்களும் இந்திரனுக்குரியவையா?

அன்று உங்கள் மேல் அடைந்த சினமும் கொந்தளிப்பும் நினைவுள்ளது. உங்களிடம் வாழ்த்து பெறாமலே கிழக்குத்திசை வெல்ல கிளம்பினேன் என்பது நினைவுக்கு வந்தது. செல்லும்போது உங்களிடம் இருந்து எப்போதைக்குமென

கிளம்பிச்செல்கிறேன் என்றே தோன்றியது. இனி அஸ்தினபுரிக்கு திரும்பி வரக்கூடாது என்றே எண்ணினேன். ஆனால் நகர் எல்லையைக் கடந்ததுமே தனிமைகொள்ளத் தொடங்கினேன். மேலும் மேலும் என வந்தமைந்த வெறுமையால் உடல் வீங்கிப்பெருத்து எடைகொண்டு அசைவிலாதாகியது. தேரில் வெற்றுச் சடலமென என் உடல் அமைந்திருந்தது. முற்றிலும் உயிர் இழந்துவிட்ட ஓர் இரவு சூழ்ந்திருந்தது.

அன்று என் உடலிலிருந்து பிரிந்து நான் என்னை பார்த்துக்கொண்டிருந்தேன். தேரிலிருந்து அசைந்துகொண்டிருந்த வீங்கிப்பெருத்த அவ்வுடலிலிருந்து புழுக்கள் நெளிவதுபோல் தோன்றியது. உடலின் பெரும்பகுதி அசைவை இழந்தது. என் சுட்டுவிரலை நான் பார்த்தேன். அதில் சற்று உயிர் இருந்தது. அவ்விரலை என் கைகளால் இறுகப் பற்றினேன். உடலெங்கும் உயிர் பரவ கண்விழித்து எழுந்து என்னை நோக்கி புன்னகைத்து "யாதவரே, என்னுடன் இருங்கள்" என்று என் உடல் கூவியது. "நான் உன்னுடன் இருப்பேன், நீ விழைந்த வடிவில்" என்றபடி அவ்வுடலின் அருகே நான் அமர்ந்தேன். விழித்துக்கொண்டபோது என் முகம் புன்னகைத்துக்கொண்டிருப்பதை உணர்ந்தேன்.

தேர் சென்றுகொண்டிருந்தது. என்னருகே உங்களை உணர்ந்தேன். அருஞ்சொல் ஆற்றியமைந்த கோலத்தில் அல்ல. தேரோட்டியாகவும் அல்ல. நாம் முதலில் கண்டபோது இருந்த அந்த இளந்தோழனாக. பொருளற்ற சொற்களை அள்ளி ஒருவரோடொருவர் இரைத்து விளையாடி மகிழ்ந்திருந்த காலங்களில் இருந்த அந்த முகத்துடன், அவ்விளமைச் சிரிப்புடன். கூச்சல்கள், கொந்தளிப்புகள், இளமையின்

மந்தணங்கள், களியாட்டுகள், இளிவரல்கள். யாதவரே, நான் விடுபட்டேன். அப்பயணம் முழுக்க நீங்கள் என்னுடன் இருந்தீர்கள். என்னுடன் விளையாடிக் கொண்டிருந்தீர்கள். வழிகாட்டினீர்கள். இளைஞனென கீழ்த்திசை சென்றேன். வென்று மீண்டபோது பிறிதொருவனாக இருந்தேன்.

யாதவரே, மீண்டும் அஸ்தினபுரி வந்து உங்களை அணைந்தபோது இருந்தவன் அவ்விளைஞன். நீங்கள் அளித்த மெய்மையின் ஒரு சொல் கூட எஞ்சாதவன், எனில் உங்களை அணுக்கன் என உணர்ந்தவன். இன்று அங்கிருந்து கிளம்பியவனும் அவனே. இப்போது உங்களை உடன் கொண்டுசெல்ல விரும்புகிறேன். உங்கள் ஒரு சொல், ஒரு பொருள் எனக்குத் தேவை. அது உடனிருக்குமெனில் இந்த நீள் பயணம் எனக்கு ஒன்றும் இடர் கொண்டதல்ல. நாளும் புத்தொளியுடன் விரிவது, புதியவை தேடிவருவது. எனக்கென ஒரு சொல் உரையுங்கள், பெற்றுக்கொண்டு நாளை காலையில் இங்கிருந்து கிளம்புகிறேன்.

இளைய யாதவர் நகைத்து "இங்கு நான் வெற்றிருப்பென அமர்ந்திருக்கிறேன். எவரிடமும் பெற்றுக்கொள்வதற்கும் எவருக்கும் அளிப்பதற்கும் எதுவும் இல்லை. இப்புவியில் நான் எழுந்த நோக்கம் நிறைவேறிவிட்டது. இயற்றுவதற்கொன்றுமில்லை. காத்திருப்பதற்கே ஒன்றுள்ளது" என்றார். அவர் முகத்தை பார்த்துக்கொண்டிருந்த அர்ஜுனன் "தங்கள் சொற்கள் பெரும்பாலும் எனக்கு புரிவதில்லை. எனினும் என்றேனும் இது புரியுமென்று எண்ணிக்கொள்கிறேன்" என்றான். பின்னர் சிரித்து "நான் இங்கு வந்தபோது எண்ணிவந்த ஒன்று உண்டு. வெறும் அறிவின்மை என

இப்போது படுகிறது" என்றான். "என்ன?" என்றார் இளைய யாதவர். "இளிவரலாகிவிடும், வேண்டாம்" என்றான் அர்ஜுனன்.

"சொல்" என்றார் இளைய யாதவர். "நீங்களே அறிவீர்கள்" என்றான் அர்ஜுனன். "நான் உங்கள் அழியாச் சொல்லை மீண்டும் எனக்கெனச் சொல்லமுடியுமா என்று கேட்க விழைந்தேன். நீங்கள் எனக்குக் காட்டிய அப்பேருருவை மீண்டும் காண ஏங்கினேன்." இளைய யாதவர் நகைத்து "அதை மீண்டும் சொல்லிவிட்டேன். பேருருவையும் பார்த்துவிட்டாய்" என்றார். அவன் அவர் சொல்வதென்ன என்று புரியாமல் பார்த்துக்கொண்டிருந்தான்.

வாயிலில் அச்சிற்றூரின் மூன்று சிறுமியர் வந்து நின்றிருந்தனர். தயை மூங்கிலைப்பற்றி காலை ஊசலென ஆட்டியபடி "உங்கள் இருவரையும் அன்னம் கொள்வதற்கு அழைத்து வரும்படி அன்னை சொன்னாள்" என்றாள். இன்னொரு பெண் எலிபோல் குரலெழுப்பி "அதற்குள் வானில் விண்மீன் எழுந்துவிடும், ஆகவே பிந்தவேண்டாம் என்று சொல்லச் சொன்னார்கள்" என்றாள். தயையை சுட்டிக்காட்டி "இவள் அதை மறந்துவிட்டாள், நான்தான் சொன்னேன்" என்றாள். இன்னொரு பெண் முன்னால் வந்து உள்ளே எட்டிப்பார்த்து "நல்ல அன்னம் இனிப்பானது. தேன்!" என்றாள்.

"இதோ வருகிறேன்" என்று இளைய யாதவர் எழுந்துவிட்டார். அர்ஜுனனும் எழுந்து அப்பெண்கள் அருகே சென்று அவள் தோளில் கைவைத்து "இங்கே தேன் எங்கிருந்து கிடைக்கிறது?" என்றான். "அங்கே உயர்ந்த மலைமீது... அங்கே கனிகளாக காய்த்துத் தொங்குகிறது. இங்கிருந்து பார்த்தால் தெரியும்" என்றாள் தயை. இன்னொருத்தி வந்து "அது பசுவின் அகிடுபோல மலையின் அகிடு என்று என் பாட்டி கூறினார்"

என்றாள். "தேன் விண்ணவரின் உணவு. கந்தர்வர்கள் சிறகுடன் பறந்து தேனை அருந்துகிறார்கள்" என்றாள் தயை.

அவர்களுக்கு உணவிட ஒரு சிறு குடில் ஒருக்கப்பட்டிருந்தது. இரவானதால் தேன் கலந்த கஞ்சியும் பழக்கூழும். இளைய யாதவர் ஒவ்வொரு துளியையாக சுவைத்து தலையை அசைத்து உண்டார். இல்லத்து இளம்பெண் அவருக்கு அன்னம் அளிக்கையில் உளம் நெகிழ்ந்து விழி கனிந்து உடலெங்கும் ஓர் ஒளி பரவி நிற்பதுபோல் தோன்றினாள். உள்ளிருக்கும் அனலால் உருகும் பொன் என்று எங்கோ ஒரு சூதன் பாடியதை அர்ஜுனன் நினைவுகூர்ந்தான். அவர் உண்டு முடித்து "நன்று, இனிமை என் உடலெங்கும் நிறைந்துள்ளது. இவ்விரவெங்கும் என் உடன் நிற்பது இது" என்றார். அவள் விழி தாழ்த்தி பெருமூச்சுவிட்டாள். இளைய யாதவர் நிலம் தொட்டு வணங்கி எழுந்துகொண்டார்.

சொல்லமைந்து அரையிருளில் அவருக்குப் பின்னால் நடந்த அர்ஜுனன் தன் புரவியை எண்ணி புல்வெளியை பார்த்தான். எங்கோ அது தன் சுற்றத்துடன் சேர்ந்திருக்கும் என்று எண்ணி திரும்பியபோது திடுக்கிடல்போல் ஓர் உணர்வு எழுந்தது. அவனருகே அவரில்லை என்று. விழிக்கு முன் பருவுடலுடன் அவர் தோன்றிக்கொண்டிருந்தார். ஆனால் உள்ளம் அவர் இல்லை என்றே உணர்ந்தது. அந்த மாயை அவனை திடுக்கிடச் செய்ய அவன் அவர் அருகே மேலும் நெருங்கி சென்றான். அவர் குடிலுக்குள் நுழைந்து தன் பாயையும் மரவுரியையும் எடுத்து விரித்து மரத்தாலான தலையணையைப் போட்டு கைகூப்பியபடி மல்லாந்து படுத்தார். "தேவி!" என்றார். உடனே முற்றிலும் அணைந்து துயில்கொண்டார்.

எப்போதுமே இரு கைகளையும் இருபுறமும் வைத்து உடலை நேராக்கி விழிகள் மேல் நோக்கி திறந்திருக்க மெல்ல இமை மூடி அக்கணமே துயில்வது அவர் வழக்கம் என அவன் எண்ணிக்கொண்டான். சீரான மூச்சு வந்துகொண்டிருந்தது. அவர் அங்கு இல்லை என்ற உணர்வையே மேலும் மேலும் உள்ளம் உணர்ந்தது. கை நீட்டி அவர் உடலை தொட்டால் அங்கு இன்மையையே உணரமுடியும் என்று தோன்றியது. அவன் அவர் அருகே கண்மூடி படுத்துக்கொண்டான். கண்களை மூடிய பிறகு அவ்வுடலும் அங்கு இல்லை என்றாயிற்று. திடுக்கிட்டு எழுந்து ஒருக்களித்து மீண்டும் அவரை பார்த்தான். சீரான மூச்சுடன் அவர் அங்கு துயின்றுகொண்டிருந்தார். அந்த இன்மை உணர்வை அகற்றவே இயலவில்லை.

அவன் கண்களை மூடிக்கொண்டு நெடுநேரம் படுத்திருந்தான். அவ்வப்போது எழுந்து அவரை பார்த்தான். முற்புலரியில் எழுந்து ஓசையிலாது வெளியே சென்று முகம் கை கழுவி வந்தான். வாசலில் நின்று துயின்றுகொண்டிருந்த அவரை பார்த்தான். பின்னர் நடந்து சென்று ஒற்றையடிப்பாதையில் நின்று மெல்லிய சீழ்க்கை ஓசை எழுப்பினான். விழியொளித் துளிகளாக புல்வெளியில் நிறைந்து நின்றிருந்த புரவிகளின் கூட்டத்திலிருந்து கனைப்பொலி எழுப்பியது அவன் புரவி. புல்நடுவிலூடாக குளம்படி ஓசையுடன் அவனை நோக்கி வந்தது. அவன் உடல்மேல் தன் உடலை உரசி தலையை தோளின் மேல் வைத்தது. அவன் அதன் கழுத்தைத் தட்டி காதுகளைத் தட்டி அசைத்த பின்னர் சேணத்தை மாட்டி கடிவாளத்தைப் பொருத்தி கால் சுழற்றி ஏறி அமர்ந்து “செல்க!” என்றான். வந்த வழியே அது சீரான காலடி ஓசைகளுடன் கடந்து சென்றது. இம்முறை தன்னந்தனியாக ஒரு பயணம் செய்கிறோம் என்று எண்ணிக்கொண்டான்.

# கல்பொருசிறுநுரை - 6

## பகுதி மூன்று : ஒழியா நாற்களம் – 1

சாத்யகி மலைப்பாதைகளினூடாக ஏழு நாட்கள் பயணம் செய்து மந்தரத்தை அடைந்தபோது இளம்புலரி எழுந்திருந்தது. இரவெலாம் அவனது புரவி தன் விழியொளியாலேயே வழி தேர்ந்து அங்கு வந்து சேர்ந்திருந்தது. தரையில் முகர்ந்து முன்னர் சென்ற புரவிகளின் மணம் பெற்றுக்கொண்டு, அவ்வப்போது மூக்கு சீறியும், சினைத்தும், குளம்புகளால் காலைத் தட்டியும் அது நடந்தது. இரவில் நிலவொளி எழுந்திருந்தது அதற்கு உதவியாக இருந்தது. புரவியின் மீது கடிவாளத்தை தளரப்பற்றி தோள் தழைய அரைத்துயிலிலென சாத்யகி அமர்ந்திருந்தான். சுற்றிலும் விரிந்திருந்த முட்புதர்ப் பெருநிலம் பல்லாயிரம் பூச்சிகளின் குரல்கள் இணைந்து உருவான முழக்கமாக இருந்தது. விண்மீன்கள் சிதறி வானில் பரவியிருந்தன. காற்று எல்லா திசைகளிலிருந்தும் மாறி மாறி வீசிக்கொண்டிருந்தது.

அவ்வப்போது வானை நோக்கி செல்லும் திசையை அவன் உறுதி செய்துகொண்டான். அங்கு திசை தவறுவதற்கான வாய்ப்புகளே இருக்கவில்லை. புரவிக்குளம்புகளாலான ஒற்றைப் பாதை வளைந்து ஏறி இறங்கி, மலைஇடுக்குகளில் புகுந்து வெளிவந்து, தனி ஓடைபோல் சென்றுகொண்டிருந்தது. புதர்க்காடுகளுக்குள் சிறு விலங்குகள் சலசலத்து ஓடின. இரு முறை அவன் கூட்டமாக செல்லும் யானைகளை பார்த்தான்.

இருட்குவைகள் எழுந்து எழுந்து இருளுக்குள் செல்வதுபோல் அவை அகன்றன. அவன் வருகையை முன்னரே உணர்ந்துவிட்டிருந்த அன்னை யானை சிறிய பிளிறல்களால் பிற யானைகளுக்கு அறிவுறுத்தியது. பிறிதொரு மந்தை சரிவுக்குக் கீழே நிற்பதை அங்கிருந்து எழுந்த குரல் காட்டியது. அவன் புரவி குளம்புகளால் தரையைத் தட்டியபடி அவை சாலையைக் கடந்து மறுபக்கம் செல்லும்பொருட்டு காத்து நின்றது. அவை சென்றபின் பெருமூச்சுடன் காலெடுத்து வைத்து நடந்தது.

வழியில் அவன் எங்கோ சற்று துயின்றிருக்கவேண்டும். விழித்தபோது விண்மீன்கள் இடம் மாறியிருந்தன. விழி துழாவி தேடியபடி வழியை கண்டடைந்தான். பெருமூச்சுடன் கைகளைத் தூக்கி உடலை நிமிர்த்தி சோம்பல் முறித்தான். புலரும்போதேனும் அம்மலையிடுக்குத் தாழ்வரை துலங்க வேண்டும் என்று எண்ணிக்கொண்டான். புரவி இரு மலைகளின் இடைவெளியினூடாக விளிம்பை சென்றடைந்தபோது எதிரே கீழிருந்து குளிர்காற்று வந்து அறைந்தது. கீழே கண் துலங்கும்படி வெளிச்சம் பரவியிருந்தது. அதில் பசுமை நிறைந்து காற்றில் கொப்பளித்தது. சூழ்ந்திருந்த வானம் மெல்லிய வெளிச்சத்துடன் முழுவட்டமெனத் தெரிந்தது. தாழ்வரையின் நடுவே மந்தரத்தை அவன் கண்டான். அக்காட்சியில் தன்னை மறந்தவனாக நெடுநேரம் அமர்ந்திருந்தான்.

மலைகளுக்கு அப்பால் கதிர்முகம் எழுந்தது. அனைத்து முடிப்பாறைகளும் ஒரு பக்கம் பொன்னாக மாறின. பறவைகள் தெளிந்த வானில் சிறகுலைத்து சுழன்று சுழன்று எழுந்தமர்ந்தன. அங்கிருந்து ஓசைகள் எதுவும் கேட்கவில்லை.

உயிர்களின் ஓசைகள் நெடுந்தொலைவு கேட்பதில்லை. படைக்கலன்களும் கருவிகளும் எழுப்பும் ஓசைகளே காற்றைக் கடந்தும் சென்று சேர்கின்றன. அவை உயிர்க்குலங்களுக்கு அப்பால் என எழும் விழைவு கொண்டவை. உயிர்க்குலங்களின் ஓசைகளைக் கொண்டு உருவாக்கப்பட்டவையும்கூட. அவன் புரவியைத் தட்டி அதை புழுதி படிந்த பாதையினூடாக கீழே இறக்கிக்கொண்டு சென்றான். வளைந்து வளைந்து இறங்கியபோது தன்னை ஒரு பருந்தென உணர்ந்தான்.

பச்சைப்புல் இடைவரை செழித்துப் பரந்து கிடந்த நிலத்தை அடைந்ததும் அவன் புரவி காலை ஊன்றி நின்றுவிட்டது. "செல்க! செல்க!" என்று அவன் அதை தட்டினான். அது தலையை அசைத்து ஓசை எழுப்பியது. அவன் அச்சிற்றூருக்கு இருக்கும் தொலைவை பார்த்த பின்னர் கடிவாளத்தையும் சேணத்தையும் கழற்றி அங்கிருந்த சிறிய மரத்தின் மீது தொங்கவிட்டான். அதன் பின்பக்கம் தட்டி "செல்க!" என்றபின் நடந்து மந்தரத்தை சென்றடைந்தான். நீர் நிரம்பி ஓடிக்கொண்டிருந்த ஓடைக்கு அருகே வந்து குனிந்து கைகால்களை கழுவிக்கொண்டு மறுபக்கம் கால் வைத்து மரப்பாதையிலேறி ஊருக்குள் நுழைந்தான்.

எதிரே கையில் கூடையுடன் வந்த முதுமகள் அவனிடம் இயல்பாக "வடநிலத்து முனிவரை பார்க்க வந்திருக்கிறீர்களா?" என்றாள். பிறிதெவரும் அங்கு வருவதில்லை என்று அவ்வினாவிலிருந்து உணர்ந்து அவன் புன்னகையுடன் "ஆம், அன்னையே. வணங்குகிறேன்" என்றான். அவளுக்கு முகமன் உரைக்கத் தெரியவில்லை. வெறுமனே தலையசைத்தாள். அவள் "அங்கு மரத்தடியில் அமர்ந்திருக்கிறார். செல்க!" என்றாள். அவன் இளைய யாதவரின் குடில்வாயிலை

வந்தடைந்தான். உள்ளே எவரும் இருப்பதுபோல் தெரியவில்லை. உள்ளே பொருளென எதுவுமே இல்லை என்று தோன்றியது. திரும்பிப் பார்த்தபோது குறுங்காட்டின் விளிம்பில் மரத்தடியின் வேரில் இளைய யாதவர் அமர்ந்து குழலூதிக்கொண்டிருப்பதை கண்டான். அருகணைந்து சற்று அப்பால் நின்றான்.

மரக்கூட்டங்களின்மேல் புலரியொளி எழுந்திருந்தது. பறவைகள் பறந்திறங்கி புற்பரப்பில் அமர்ந்து எழுந்தன. அவன் வருவதை எவரும் உணரவில்லை. அவரைச் சூழ்ந்து குழந்தைகள் அமர்ந்திருந்தன. பெரும்பாலும் பெண் குழந்தைகள். இளைய யாதவர் விழிமூடியிருந்தார். சற்றே பெரிய குழந்தைகளின் நீண்ட விழிகள் இசையில் மயங்கி சிவந்து வெறிப்பு கொண்டிருந்தன. துயிலென இமை தழைந்திருக்க முகம் தழைந்து கனவில் குழைந்திருக்க அமர்ந்தும் படுத்தும் இளம்குழவிகள் இசையில் அமைந்திருந்தன. ஒவ்வொரு முகமாக நோக்கியபடி அவன் நின்றான். மானுடர் பிறிது எவரேனும் இசையில் அத்தனை தோய இயலுமா? பெண்களைப்போல ஆண்கள் இசைக்கு முழுதளிக்க இயலுமா? பெண்களும் குழவிப்பருவத்திலன்றி இசையே என்றாக முடியுமா?

குழலிசையே பெண்களுக்குரியது. சுழன்று சுழன்று இனிமை மேலும் இனிமை என்று செல்வது. குழைந்து மன்றாடி உருகி திளைத்து எழுந்து ஒளிர்ந்து பொலிந்து மீண்டும் எழுவது. பெண்டிர் மட்டுமே அதை முழுதுணர முடியும். அதன் அத்தனை அசைவுகளிலும் பெண்மை இருந்தது. சிற்றோடைகளில், தளிர்க்கொடிகளில், புகைச்சுருள்களில், பட்டின் நெளிவுகளில், மெல்லிறகுகளில் எழும் பெண்மை.

பாலைநிலத்து அலைகளில், நீர் நுரையில் , திசைவளைவில் தோன்றும் மென்மை. அவன் பெருமூச்சுடன் மீண்டபோது விழிநீர் வழிந்து மார்பை நனைத்திருந்தது. இரு கைகளையும் மார்பில் சேர்த்து வைத்து தலைகுனிந்து நின்றிருந்தான்.

குழலை உதட்டிலிருந்து எடுத்தபின் விழிதிறந்த இளைய யாதவர் அவனை நோக்கி "வருக!" என்றார். அவன் அச்சொல்லை நெடுந்தொலைவில் என கேட்டான். "எப்போது வந்தாய்?" என்றார் இளைய யாதவர். அவன் முழந்தாளிட்டு மண்ணில் அமர்ந்து தலைவணங்கினான். "என்ன நிகழ்வு?" என்று அவர் கேட்டார். "எத்தனை காலமாகிறது இக்குழலோசை என் செவியில் கேட்டு!" என்றான். "இங்கு ஒவ்வொரு நாளும் இசைக்கிறேன். நாளில் பெரும்பகுதி குழலிசையும் விளையாட்டும்தான்" என்றார். "ஆம், குடிலுக்குள் பார்த்தேன். நூலென எதுவுமில்லை" என்று அவன் சொன்னான்.

பெண் குழந்தைகள் இசை நின்றுவிட்டதை அறியாதவைபோல் அங்கு பரவியிருந்தன. அவன் நோக்குவதைப் பார்த்து இளைய யாதவர் புன்னகைத்து "தேனீக்கள்போல இசை கேட்க வேண்டும் என்பார்கள். தேனில் பிறந்து உடல்கொள்கின்றன. தேனையே சிறகாகக்கொண்டவை அவை எனப்படுகின்றன. அவற்றின் அசைவு தேனின் நடனம். அவற்றின் இசை தேனின் ஓசை" என்றார். சாத்யகி "இவ்விசை பெண்டிருக்குரியது என்று எனக்குத் தோன்றியது" என்றான். "ஆம், அவர்களை அணுகியறியும் ஆண்களால் இசைக்கப்படவேண்டியது" என்று இளைய யாதவர் கூறினார். சாத்யகி புன்னகைத்தான்.

அவர் அவன் தோளில் கைவைத்து எழுந்துகொண்டு குழலை இடைக்கச்சையில் செருகியபடி நடந்தார். அவன் பெருமூச்சுகளை விட்டுக்கொண்டு உடன் நடந்தான். "கூறுக!"

என்றார் இளைய யாதவர். "அரசே, தாங்கள் நகர் திரும்ப வேண்டும்" என்று அவன் சொன்னான். "அதைக் கூறவா இத்தனை தொலைவு வந்தாய்?" என்றார். "ஆம், அதை கூறுவதற்காக மட்டுமே தேடி வந்தேன்" என்று சாத்யகி சொன்னான். "தாங்கள் அறியாதது எதுவும் இன்றில்லை. எனினும் அறிய வேண்டியவற்றை அறிவிப்பது என் கடமை என்பதனால் வந்தேன்." அவர் ஒன்றும் சொல்லவில்லை. "என் சொற்கள் சொல்லப்பட்டன என்றாகவேண்டும், சொல்லியிருக்கலாம் என்று தோன்றலாகாது. ஆகவேதான்" என்றான்.

"சொல்" என்றார். "துவாரகை இன்று எந்நிலையில் இருக்கிறது என்று அறியவேண்டும். ஒருவேளை நீங்கள் அறிந்திருக்க வாய்ப்பில்லை என்றும் தோன்றுகிறது. ஏனெனில் மைந்தரைப்பற்றி தீயவை எதையும் தந்தையர் அறிவதே இல்லை. அவர்களின் அகத்திலிருந்து ஒன்று எழுந்து அவற்றை விலக்குகிறது. ஆகவே அவர்களின் விழி காண மறுக்கிறது" என்றான். இளைய யாதவர் ஒன்றும் சொல்லாமல் தலைகுனிந்து நடந்தார். "அஸ்தினபுரியிலிருந்து அரசரிளையோர் நால்வரும் கிளம்பிச்சென்றுவிட்டனர் என்று தாங்கள் அறிந்திருப்பீர்கள். சில நாட்களுக்கு முன் அரசர் யுதிஷ்டிரனும் அரசியுடன் கானேகினார். அஸ்தினபுரியின் அரசு இன்று அவர் குடியின் இளையவர் யுயுத்ஸுவிடம் அளிக்கப்பட்டுள்ளது. யுயுத்ஸு மணந்த சூதப்பெண் சம்வகையால் அப்பேரரசு இன்று நடத்தப்படுகிறது" என்றான்.

இளைய யாதவர் கேட்டுக்கொண்டு நடந்தார். "துவாரகையிலிருந்து பரீக்ஷித்தை இந்திரப்பிரஸ்தத்துக்கு கொண்டுசென்றுவிட்டார்கள். அவனுக்கு பதினெட்டு ஆண்டு

அகவை நிறையும்போது மணிமுடியை அவனிடம் அளித்துவிட்டு அரசு ஒழியவேண்டும் என்பது யுயுத்ஸுவுக்கு அரசர் இட்ட ஆணை. அதுவரை யுயுத்ஸுவின் சொல்லே அஸ்தினபுரியை ஆளும். அச்சொல்லுக்கு மெய்ச்சொல் சாந்தி நூல்களும் அனுசாசன நூல்களும் நிலைகொள்கின்றன." இளைய யாதவர் ஒன்றும் சொல்லவில்லை என்று கண்டு அவன் தொடர்ந்தான். "அஸ்தினபுரி சம்வகையால் முறையாகவே ஆளப்படுகிறது. அரசி என்றும் அன்னை என்றும் கொல்வேல் கொற்றவை என்றும் அவரை மக்கள் வணங்குகிறார்கள். சத்யவதியின் வடிவம் அவர் என்கிறார்கள். யுயுத்ஸு நெறி நோக்க அந்நெறிகளை செயலாக்குகிறார். சொல்லும் பொருளுமென அவர்கள் இணைந்துள்ளார்கள் என்று சூதர்கள் பாடுகிறார்கள்."

"ஆனால் ஏழு முறை நான் சென்று பார்த்தபோது அஸ்தினபுரியின் அவையிலும் அரசரிடமும் நான் ஒன்று உணர்ந்தேன். அது சம்வகையில் இருந்து உருவான கொள்கை என தெளிந்தேன்" என சாத்யகி தொடர்ந்தான். "அவர்களுக்கு இன்று துவாரகையுடனோ பிற துணைநாடுகளுடனோ நேரடித் தொடர்புகள் ஏதுமில்லை. அங்கநாடும் இடும்பநாடும் மட்டுமே தன் குருதித் தொடர்பு நாடென்று அரசி எண்ணுகிறார். கர்ணனின் மைந்தன் முடி சூடி அதை ஆள்கிறான். பார்பாரிகனின் இளையோன் இடும்பநாட்டை ஆள்கிறான். பிற நாடுகள் எதன் உட்சிக்கல்களிலும் அஸ்தினபுரி தலையிடுவதில்லை. நான் அனுப்பிய தூது எதற்குமே முறையான மறுமொழி வரவில்லை. துவாரகையிலிருந்து செல்லும் செய்திகள் எதையுமே ஓரிரு சொற்களுக்கு மேல் அரசி செவிகொள்வதில்லை என்று தூதர் உரைத்தனர்."

துவாரகையின் நிலையை அரசி கருத்தில் கொள்ளவேண்டுமென்று சொல்வதற்காக முதல்முறையாக நான் அங்கு சென்றேன். என்னை ரிஷபவனத்தின் அரசன் என்ற நிலையில் அரசி அவையில் வரவேற்றார். என் தூதை சொல்லும்படி ஆணையிட்டார். நான் "அரசி, துவாரகைப் பெருநகர் குடிப்பூசல்களாலும் முடிப்பூசல்களாலும் அழிந்துகொண்டிருக்கிறது. அஸ்தினபுரியை ஆக்கியவர் துவாரகையின் அரசராகிய இளைய யாதவர். அவரே அஸ்தினபுரிக்கும் காவலர் என அறிவீர்கள். இளைய யாதவரின் நகரை தாங்கள் அழியவிடலாகாது. படையுடன் வந்து அங்கு நெறி நிலைநாட்டவேண்டும்" என்றேன். அவையினர் அரசியின் சொற்களுக்காகக் காத்து அமர்ந்திருந்தனர்.

சற்றுநேரம் எண்ணம்சூழ்ந்த பின் அரசி என்னிடம் "எதை நிலைநாட்டவேண்டும்?" என்று கேட்டார். "குலத்தார் நடுவே ஒருமையை. அரியணையில் அரசை. குடிகளிடையே நம்பிக்கையை" என்றேன். "அங்கு அரசரால் முடிசூட்டப்பட்டவர் யார்?" என்று சம்வகை கேட்டார். "அரசர் இருக்கையிலேயே ருக்மிணியின் மைந்தர் சாருதேஷ்ணன் பட்டத்து இளவரசராக அவையமர்ந்தது உண்டு" என்றேன். "அப்போது பிரத்யும்னன் சம்பராசுரரின் அரண்மனையில் இருந்தார்." சம்வகை "ஆம், ஆனால் யாதவக் குடியவைகளில் பட்டத்து இளவரசர் என அமர்ந்திருந்தவர் சத்யபாமையின் மைந்தரான பானு" என்றார். "ஆம், ஆனால்..." என்றபின் நிறுத்திக்கொண்டேன். "ஆனால் பின்னாளில் படைகொண்டு சென்று வென்றவர்கள் ருக்மிணியின் மைந்தர் பிரத்யும்னனும் ஜாம்பவதியின் மைந்தர் சாம்பனும். அவர்கள் படைநிலங்களில் பட்டத்து இளவரசர்களாக அமர்ந்ததுண்டு" என்றார்.

அவர் சொல்லவருவது என்ன என்று எனக்கு புரிந்தது. "ஆம், அதனால்தான் இத்தனை குழப்பங்களும். அதன்பொருட்டே தங்கள் உதவியை நாடி வந்தேன்" என்றேன். "குடிப்பூசல் எவரிடம்?" என்று சம்வகை கேட்டார். அவர் அனைத்தும் அறிந்திருந்திருக்கிறார் என்று தெரிந்தது. ஆனால் நான் சொல்லவேண்டும் என எதிர்பார்க்கிறார். நான் குறைத்துச் சொல்ல முடியாது, பெருக்கவும். ஆகவே நிகழ்வதை சொன்னேன். "அரசி, அங்கே மூன்று குலக்குழுக்கள் என மக்கள் பிரிந்திருக்கின்றனர். ஏனென்றால் அரசகுடியினர் அவ்வண்ணம் பிரிந்திருக்கிறார்கள். துவாரகையின் மக்களில் பெரும்பகுதியினர் யாதவர்களே. அவர்கள் சத்யபாமையின் மைந்தர் பானுவை அரசனாக எண்ணுகிறார்கள்."

"இன்னொரு சாரார் ஷத்ரியர்கள். வெவ்வேறு காலங்களில் துவாரகைக்கு வந்தவர்கள். பெரும்பாலும் அரசர் மணம்கொண்ட நாடுகளிலிருந்து வந்தவர்கள். அரசுப்பொறுப்புகளையும் படைப்பொறுப்புகளையும் நடத்தியவர்கள். அவர்கள் ருக்மிணிதேவியின் மைந்தர் பிரத்யும்னனையே தங்கள் அரசர் என எண்ணுகிறார்கள். ஷத்ரியர்களில் பெரும்பாலானவர்கள் ருக்மிணிதேவியின் விதர்ப்பநாட்டவர். அரசி நக்னஜித்தியின் கோசலநாட்டினரும், மித்ரவிந்தையின் அவந்தியினரும், பத்ரையின் கேகயத்தினரும் பிரத்யும்னனை ஆதரிக்கிறார்கள். ஷத்ரியர்களின் எண்ணிக்கை வலுவானதாகவே உள்ளது" என்றேன்.

"எஞ்சியோர் நிஷாதர், அசுரர்" என்றார் சம்வகை. "ஆம், அரசி. ஆனால் அவர்களின் எண்ணிக்கையும் சிறிதல்ல" என்றேன். "நிஷாதகுடியினரான ஜாம்பவதியின் மைந்தர் சாம்பர் பெருவீரர். அவருடன் காளிந்தியின் மைந்தர்கள் சுருதனும் பிறரும்

நின்றிருக்கிறார்கள். மத்ரநாட்டு அரசி லக்ஷ்மணை ஷத்ரியர்களுடன் நின்றிருக்க விரும்பினார்கள். ஆனால் அவைகளில் அவர் மைந்தர்கள் நிஷாதர்களாகவே நடத்தப்பட்டனர். ஆகவே சென்ற சில மாதங்களாக அவர்கள் சாம்பனின் ஆதரவாளர்களாக மாறிவிட்டிருக்கிறார்கள். துவாரகையில் நிஷாதர், அரக்கர், அசுரர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாகவே முன்பு இருந்தது. ஆனால் இப்போது வெவ்வேறு நிலங்களில் இருந்து வந்து குடியேறி நிறைந்திருக்கிறார்கள். யாதவர்களிலும் ஷத்ரியர்களிலும் பலர் குருக்ஷேத்ரப் போரில் கொல்லப்பட்டுவிட்டனர். ஆகவே ஏனையோர் பெருகித்தெரிகிறார்கள்.”

நான் மேலே சொல்வதற்காக அரசி காத்திருந்தார். “யாதவர்களிடையே குடிப்பூசல் உள்ளது. விருஷ்ணிகளும் போஜர்களும் அந்தகர்களும் முரண் கொண்டு நின்றிருக்கின்றனர். விருஷ்ணிகள் தங்களுடையதே துவாரகை என எண்ணுகிறார்கள். அந்த எண்ணம் பிற யாதவர்களை ஒவ்வாமைகொள்ளச் செய்கிறது. சததன்வாவின் கொலைக்கு பழிவாங்கும் வெறி இன்னும் அந்தகர்களிடையே உள்ளது. குருக்ஷேத்ரப் போரிலிருந்து திரும்பி வந்த கிருதவர்மன் அந்தகர்களின் தலைவனாக ஆகிக்கொண்டிருக்கிறார். அவர் இன்னும் துவாரகையை வந்தடையவில்லை. அவர் எங்கிருக்கிறார் என்றும் எவருக்கும் தெரியவில்லை. ஆனால் அவரைப்பற்றி பேசிக்கொண்டே இருக்கிறார்கள். போஜர்கள் விருஷ்ணிகள் மீதான ஐயத்தால் அந்தகர்களுடன் சேர்ந்துகொண்டிருக்கிறார்கள்.”

“இன்று தேவை துவாரகையின் குடிகளிடையே ஒத்திசைவை உருவாக்கி அரியணையை உறுதி செய்தல். இளைய யாதவர்

அமர்ந்த அரியணையில் உரிய அரசரை அமர்த்தி, அவருடைய கோலுக்கு அஸ்தினபுரியின் வாள் துணையாகும் என அறிவித்தல். அதை செய்தாகவேண்டும் அஸ்தினபுரியின் அரசர்" என்று உரைத்தேன். சம்வகை "நன்று, அவ்வண்ணம் ஒருவரை நான் அரியணையில் அமர்த்துகிறேன். அதன் பின் நான் என்ன செய்யவேண்டும்? அவரை பிறர் ஏற்கவில்லை எனில் என்ன வழி?" என்றார். "அஸ்தினபுரியின் பெரும்படை அவ்வரசருக்கு துணை இருக்கிறதென்று குடிகள் அறிந்தால் போதும்" என்றேன்.

அரசி சற்றே புன்னகைத்து "அப்பெரும்படை இங்கிருந்து கிளம்பிச்சென்று பெரும்பாலை நிலங்களுக்கு அப்பால் துவாரகையில் நெடுங்காலம் தங்க இயலாது. பூசலொன்று வருமெனில் இங்கிருந்து கிளம்பி அங்கு வரை செல்வதும் எளிதல்ல. யாதவரே, துவாரகை பாரதவர்ஷத்திலிருந்து விரிந்த வெறுநிலங்களால் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே பாரதவர்ஷத்தின் எந்த நாடும் அதை ஆள இயலாது. முன்பு அந்நிலத்தை இளைய யாதவர் தெரிவு செய்ததே பாரதவர்ஷத்தின் கைகள் அங்கு செல்லக்கூடாதென்பதற்காகத்தான். இன்று அதுவே எதிர்விளைவை உருவாக்கியுள்ளது. அஸ்தினபுரியல்ல, எந்த நாடும் துவாரகையை முழுதும் கட்டுப்படுத்த இயலாது" என்றார்.

"துவாரகை தன் நெறிகளை தானே கண்டடைய வேண்டும். தன் அரசரை அதுவே தெரிவு செய்யவேண்டும். அஸ்தினபுரி உண்மையில் அங்கே செய்வதற்கொன்றுமில்லை" என்றார் சம்வகை. "அரசி, அவ்வண்ணம் தாங்கள் எங்களை கைவிடலாகாது" என்றேன். "இது கைவிடுவதல்ல. இயலாத

ஒன்றை பொறுப்பேற்றுகொள்ளலாகாது என்பது அரசுசூழ்தலின் நெறிகளில் ஒன்று. தொடங்காதிருக்கையில் அச்சமேனும் எஞ்சும், தொடங்கி தோல்வியடைந்தால் அது வீழ்ச்சியின் தொடக்கம் என்று ஆகக்கூடும்" என்றார் சம்வகை. "நேரடியாகவே சொல்கிறேனே, அங்கே இரு மாவீரர்கள் உள்ளனர். அனிருத்தனும் சாம்பனும்தான் பாரதவர்ஷத்தில் இன்றிருக்கும் போர்வீரர்களில் முதன்மையானவர்கள். அஸ்தினபுரியில் இன்று ஐந்து அரசர்களும் இல்லை. அவர்களின் மைந்தர்களும் களம்பட்டுவிட்டனர். அனிருத்தனுக்கும் சாம்பனுக்கும் எதிராக நாங்கள் எவரை படைமுகம் கொள்ளச் செய்யமுடியும்?"

நான் திகைத்துவிட்டேன். அரசி தன் நுண்மாண் நுழைபுலத் தேர்ச்சிக்கு அடியில் எளிய பொதுக்குடிப் பெண்ணே என்பதை அந்த நேரடிச்சொல் காட்டியது. ஆனால் அவர் மேலும் பேசியபோது கடந்து காணும் கண்கொண்ட பேரரசி அவர் என்று தெரிந்தது. "யாதவரே, இன்று அஸ்தினபுரி பாரதவர்ஷத்தின் மாபெரும் பேரரசு. அரசுகளும் அமைப்புகளும் வளர்வதில் எப்போதும் ஒரு முறைமை தெரிகிறது. அவை வளர வளர அவற்றில் உள்ள ஒவ்வொன்றும் வளர்கின்றன. அவற்றைச் சூழ்ந்திருக்கும் ஒவ்வொன்றும் அதேயளவு வளர்கின்றன. பிழைகள் வளர்கின்றன, முரண்பாடுகள் வளர்கின்றன, அன்றாடச் சிக்கல்கள் ஒவ்வொன்றும் பேருருக் கொள்கின்றன. ஒரு சிறுநாட்டில் ஒரேநாளில் முடியும் ஒரு சின்னஞ்சிறு இடர் பேரரசில் பல மாதங்கள், பல ஆண்டுகள் நீளக்கூடும். ஏனென்றால் ஒவ்வொன்றுடனும் அப்பேரரசின் பேரமைப்பில் உள்ள ஒவ்வொன்றும் வந்து சேர்ந்துகொள்கிறது. சினங்கள், ஐயங்கள், கசப்புகள், குழப்பங்கள், பிழைகள் எல்லாம்

வந்தமைந்து ஒவ்வொரு புள்ளியும் பேருருக்கொண்டு பேரெடைகொண்டு வீங்கிப் பெருத்து எழுகிறது.”

“ஆனால் விந்தை என இன்னொன்றும் உண்டு. அப்பேரரசின் ஆட்சியமைப்பு அவ்வண்ணம் பெரிதாக வளர்ந்துசெல்வதில்லை. அது நுரைபெருப்பதுபோல நோக்க நோக்கப் பெருகி வியனுருக் கொள்ளும். அதன் உட்கூறுகள் வளர்ந்து விரிந்து செல்லும். அவற்றுக்கிடையே எண்ணி எண்ணித் தொடமுடியாத தொடர்பாடல்முறைமைகள் அமையும். மானுட உருவாக்கமா தெய்வப்படைப்பா என்று உணரமுடியாத அளவுக்கு நுண்ணியதும் சிக்கலானதும் பேருருக்கொண்டதுமான ஓர் ஆட்சியமைப்பு சில ஆண்டுகளில் தன்னைத்தானே கட்டிக்கொண்டு வளர்ந்து தலைக்குமேல் என எழுந்து நிற்கும்.”

“ஆனால் அவ்வளர்ச்சிக்கு ஓர் எல்லை உண்டு. அங்கே அது உறைந்து நிற்கத் தொடங்கும். புற்றென வளர்ந்து பாறையென ஆகிவிட்டதுபோல. அதன்பின் அதனால் எழமுடியாது. ஆனால் பேரரசோ முந்தைய விரைவிலேயே பெருகிக்கொண்டிருக்கும். ஒரு கட்டத்தில் ஆட்சியமைப்பு அதன்முன் திகைத்து நிற்கும். அது நிலைக்கத் தொடங்கியதுமே செயலிழக்கவும் தொடங்கும். ஏனென்றால் செயலாற்றும்பொருட்டு உருவானவை அதன் அமைப்புகளும் நெறிகளும். வளர்ந்துகொண்டே இருக்கும் ஒன்றின் முறைமைகள் அதிலுள்ளவை. நிலைகொண்டதுமே அதன் கூறுகள் ஒன்றுடன் ஒன்று முட்டி உரசிப் பின்னி சிடுக்காகும். அதன் ஆற்றல் அழியலாகும். அது வளர்ந்ததைவிட மேலும் விரைவாக அது அழியத்தொடங்கும். நெரிபடும் ஒலிகள் கேட்கும். ஒரு கணத்தில் யானையைக்

கட்டிய சங்கிலிபோல ஆட்சியமைப்பு உடைந்து தெறிக்கும். அப்பேரரசு சரியும்" என்று அரசி சொன்னார்.

"யாதவரே, அடித்தளம் மீது அமைக்கப்பட்ட எந்தக் கட்டடமும் ஒருநாள் விரிசலிட்டு மண்மேல் விழும் என்பார்கள் சிற்பிகள். ஒவ்வொரு கட்டடத்தையும் மண் இழுத்துக்கொண்டிருக்கிறது. எடையென ஒவ்வொரு பொருளிலும் அவ்விழைவே திகழ்கிறது. ஒரு கட்டடம் கட்டப்பட்டு மிகச் சில நாட்களுக்குள்ளாகவே அதில் முதல் விரிசல் தோன்றிவிடுகிறது. எத்தனை அடைத்தாலும் எவ்வளவு திருத்தினாலும் அந்த விரிசல் பெரிதாகிக்கொண்டேதான் இருக்கும். ஏனென்றால் அது மண்ணின் விசை. மண்ணின் பேருருவுக்கு முன் மலைகள் சிறுபூழித்துணுக்குகள்தான். விரிசலை மறைக்கலாம். அவ்விரிசலை ஏற்றுக்கொண்டே மேலே செல்லலாம். ஆனால் உறுதியாக, மாற்றே இன்றி விரிசல் அக்கட்டடத்தின்மேல் படரும், பிளந்து வீழ்த்தும்."

"பேரரசின் வளர்ச்சியும் எங்கோ நின்றுவிடும். நிலத்தின் இயல்பால் அது கட்டுப்படுத்தப்படும். படைகள் செல்லும் தொலைவு என்னும் எல்லை எப்படியாயினும் அதற்குண்டு. ஆனால் அப்பேரரசு உருவாக்கும் அச்சமும் ஐயமும் அதன் மீதான காழ்ப்பும் பெருகிக்கொண்டே செல்பவை. ஒன்று பிறிதை வளர்க்க அவை இருளென எழுந்து சூழ்ந்துகொள்பவை. ஆகவே என்றேனும் ஒருநாள் எந்தப் பேரரசுக்கும் அதன் எதிரிகள் மும்மடங்கென ஆவார்கள். அவர்களால் அப்பேரரசு வெல்லப்படும். அதன் மீதிருக்கும் அச்சமும் ஐயமும் காழ்ப்பும் பகைவெறியாக மாறி அதை முற்றழிக்கும். இம்மண்ணில் அவ்வண்ணம் அழிந்து மறைந்த பேரரசுகள் மண்ணில்

பூழியென கரைந்தன. சொல்லில் கனவென நிலைகொள்கின்றன.”

“ஆகவே இங்கே நான் ஒவ்வொரு நாளையும் அடியொழுக்கு நிறைந்த ஆற்றை என கடக்கிறேன். ஒவ்வொரு காலடியையும் சேற்றுநிலத்து யானை என வைக்கிறேன். இன்று நான் செய்யும் ஒரு சிறுபிழை போதும், பெருகிப்பெருகி இப்பேரரசை அது வீழ்த்திவிடும். என் கண்முன்கூட அது நிகழலாம். ஆகவே நான் துவாரகையில் தலையிடப்போவதில்லை” என்று சொல்லி அரசி கைகூப்பினார். “அரசி, துவாரகையின் இடர் என்பது...” என நான் மேலும் தொடங்க அரசி “சேற்றுநிலம் என நான் சொன்னதே துவாரகையைத்தான், யாதவரே” என்றபின் எனக்கான அவைச்சொல் முடிந்துவிட்டதைக் காட்டும்பொருட்டு மறுபக்கம் திரும்பிக்கொண்டார். நான் எழுந்து தலைவணங்கி வெளிவந்தேன்.

முற்றத்தில் நின்று பேசிக்கொண்டிருப்பதை உணர்ந்த சாத்யகி “தாங்கள் அமரலாமே?” என்று இளைய யாதவரிடம் சொன்னான். “ஆம்” என்று அவர் சென்று திண்ணையில் இடப்பட்ட ஈச்சம்பாயில் அமர்ந்துகொண்டார். சாத்யகி அவர் அருகே வந்தான். அவன் கீழே அமரப்போக அவர் அவன் தோளைப் பற்றி இழுத்து தன் அருகே தனக்கிணையாக அமரச்செய்தார். அவன் உடல் குறுகினான். “இங்கே மேல்கீழ் என ஏதுமில்லை. மானுடரிலும் பொருட்களிலும்” என்று இளைய யாதவர் சொன்னார். சாத்யகி தலையசைத்தான்.

# கல்பொருசிறுநுரை - 7

**பகுதி மூன்று : ஒழியா நாற்களம் – 2**

சாத்யகி சொன்னான் "அரசவையிலிருந்து வெளியே வந்தபோது உளம்சலித்திருந்தேன். அவ்வண்ணமே திரும்பி ரிஷபவனத்திற்குச் சென்றுவிடவேண்டும் என்றும், என் ஆநிரைகளுடன் அறியாக் காடொன்றில் அமர்ந்திருக்கவேண்டும் என்றும், காட்டுவிலங்குபோல அங்கேயே இறந்து மண்ணாகி மறைந்துவிடவேண்டும் என்றும் விழைந்தேன். ஆனால் என்னால் அது இயலாதென்றும் அறிந்திருந்தேன். அரசே, என் பற்று உங்கள்மேல் மட்டும் அல்ல. நான் இளைஞனாக வந்து இந்த ஐந்து அனல்முத்திரைகளை பெற்றுக்கொண்ட நாளில் கண்ட பொன்பொலிந்த துவாரகை என் கண்ணிலும் கனவிலும் திகழ்கிறது. என் கண்முன் அது சரியலாகாது என்பதே என் விழைவு. எனக்குப் பின் அது என்னவாகும் என்று எண்ண முடியவில்லை. ஆனால் அன்று நான் செய்வதற்கொன்றுமில்லை. இன்று நான் செய்யக்கூடுவன சில உண்டு. அவற்றை செய்யாதொழிந்தால் நான் சென்றமைய எங்கும் நிலைகொண்ட மண்ணிருக்க முடியாது. வேறுவழியே இல்லை."

ஆம், இப்புவியில் உலகியலில் திளைப்பவர் அனைவரும் அடையும் முதுமைத்துயர் இதுவே. உலகியலில் ஈட்டிய அனைத்தையும் எட்டுக் கைகளாலும் கட்டித்தழுவிக்கொண்டு அசைவிலாது கிடக்கவே அவர்கள் விழைகிறார்கள். எத்தனை இறுக்கினாலும் அது கரைந்தழியும் என்ற உண்மையை அவர்களால் ஏற்கவே முடிவதில்லை. தன் மைந்தரிடமும் அரசை அளிக்கமுடியாத முதிய அரசர்கள் பலர் உண்டு. தன்

பெயரர்கள் முதுமக்களாகும் வரை அரியணையில் அமர்ந்தவர்களும் உண்டு. அவர்களை இயக்குவது பொருள்விழைவல்ல, ஆதிக்கவெறியும் அல்ல. தானறிந்த உலகில் தான் ஈட்டியவற்றை அழியாது வைத்துக்கொள்ளவேண்டும் என்ற வீண்எண்ணமே. ஆனால் அதை அறிந்தாலும் அதிலிருந்து என்னால் வெளியேற முடியவில்லை.

அரசரை அவர் தனியறைக்குள் சென்று கண்டேன். அவ்வறைக்குள் இருந்தவர் யுதிஷ்டிரன் என்றே முதலில் நினைத்தேன். யுயுத்ஸு சூழ அமர்ந்த புலவர்களுடன் நூலாய்ந்துகொண்டிருந்தார். குறுகி தழைந்த தோள்கள், தாழ்ந்த தலை. என் சொல்கேட்டு உள்ளே சென்ற ஏவலன் மீண்டுவந்து நுழைவொப்புதலை அறிவிக்க நான் சென்று தலைவணங்கினேன். "அஸ்தினபுரியின் அரசருக்கு வணக்கம். நான் துவாரகையிலிருந்து வருகிறேன்" என்றபோதுதான் அவர் சொற்களின் சூழ்கையிலிருந்து விடுபட்டு என்னை நோக்கி வந்தார். "வருக, யாதவரே! ரிஷபவனத்திலிருந்து வருகிறீர்களா?" என எழுந்து என்னை வரவேற்றார். பீடம் அளித்தார். "நான் துவாரகையிலிருந்து வருகிறேன். அரசுச்செய்தி ஒன்றுடன்" என்றேன். "நீங்கள் அரசியை சந்திக்கவேண்டும்" என்றார்.

நான் ஏற்கெனவே அரசியை சந்தித்ததையும் அவரிடம் கூறியதையும் முழுக்க மீண்டும் உரைத்தேன். கேட்டு முடித்தபின் அவர் விழிகளை சற்று தாழ்த்தி அமர்ந்தபின் "நான் இங்கிருந்து நெறியை மட்டுமே கூற முடியும். அரசி கூறுவதுதான் நடைமுறை மெய்மை. நூல்நெறிகளின் படி பிறிதொரு அரசின் முடிசூழ் உரிமையில் ஓர் அரசன் தலையிடுவதென்றால் மூன்று சூழ்நிலைகள் அமையவேண்டும்.

தலையிடும் அரசனும் அவ்வரசனும் ஒற்றைக்குருதி கொண்டவர்களாக இருக்கவேண்டும். அதுவே முதன்மைநெறி. அதை சாத்விகம் என்கிறார்கள். அல்லது அவர்கள் ஒரு நதிநீரை பகிர்ந்துகொண்டவர்களாக இருக்கவேண்டும். ஒரு நிலப்பாதையை பகிர்ந்து கொண்டிருக்க வேண்டும் அந்நிலையில் தலையிடுவது மத்திமம் எனப்படுகிறது. அவ்வரசன் தன் எதிரிகளுடன் சேர்ந்து ஆற்றல் பெற்றவனாக ஆகும் வாய்ப்பிருக்கும்போது முந்திக்கொள்வது அரசுசூழ்தலில் உகந்தது, அறத்தின்படி அதகம் எனப்படுகிறது" என்றார்.

"யாதவரே, துவாரகையுடன் நமக்கு இம்மூன்று வகையிலும் உறவில்லை. எனில் எவ்வண்ணம் நாம் இதில் தலையிட இயலும்?" என்றார் யுயுத்ஸு. சிற்றவையென சூழ்ந்து அமர்ந்திருந்த புலவர்களில் ஒருவர் "வரலாற்று நூல்களின்படி அஸ்தினபுரிக்கு துவாரகையுடன் எந்த அரசாடலும் இருக்க இயலாது" என்றார். நான் சினத்துடன் எழுந்து தலைவணங்கி "இனி இந்நகருக்குள் இதன்பொருட்டு நான் வரமாட்டேன்" என்று சொல்லி வெளிவந்தேன். ஆனால் அவ்வண்ணம் சொன்னது யுயுத்ஸுவை ஆறுதல்கொள்ளச் செய்வதையே கண்டேன். அவர் "தாங்கள் சினம் கொண்டிருக்கிறீர்கள். ஆனால் நான் இங்கே அரசன் என அமர்ந்திருக்கவில்லை. தொகுக்கப்பட்ட இரு நெறிநூலடுக்குகளின் காவலன் என என்னை நிறுத்திச் சென்றிருக்கிறார் மூத்தவர்" என்றார்.

அன்றே அஸ்தினபுரியிலிருந்து நீங்கினேன். இன்றைய அஸ்தினபுரி நாம் அறிந்த நகரல்ல. அது பலமுறை சுழற்றிவிடப்பட்ட சூதுச்சகடம்போல் விழிகளை குழப்பியது. நான் பல முறை வழி தவறினேன். அந்தணர் ஒருவரிடம் வழி உசாவியே என்னால் வெளிவர முடிந்தது. முற்றிலும் அயல்

முகங்கள். முகங்கள் இடங்களை அயலாக ஆக்கிவிடுகின்றன. தொலைவிலிருந்து பார்த்தபோது அந்நகரின் ஓசையே அயலெனத் தோன்றியது. அதன் கோட்டை பகலொளியில் கண்கூச சுடர்விட்டுக்கொண்டிருந்தது. ஒளியே நம்மை குருடாக்கும் என அங்கே அறிந்தேன். அக்கோட்டையை வெட்டவெளி என எண்ணி அருகணைந்தபின் திகைத்தேன். வழி மீண்டு என் புரவியில் தனித்து துயருற்று மீண்டும் துவாரகைக்கே சென்றேன்.

செல்லும் வழியில் சினம் ஓய்ந்து சொல் தெளிந்தபோது ஒன்று உணர்ந்தேன். அரசே, சம்வகை கூறியது உண்மை, இனி எந்த நாடும் துவாரகையின் அரசியலில் தலையிடப்போவதில்லை. சிந்துநாடு உட்பூசல்களில் சிக்கிக் கிடக்கிறது. கூர்ஜரம் ஒடிந்து கிடக்கிறது. மாளவம் சுருங்கி செயலற்றுவிட்டது. பிற நாடுகள் அனைத்தும் நெடுந்தொலைவில் எங்கோ உள்ளன. குருக்ஷேத்ரப் பெரும்போருக்குப் பின் ஒவ்வொரு நாடும் ஆற்றல் அழிந்துவிட்டிருக்கிறது. ஆற்றல்மிக்க அரசுதான் நாடுகளுக்குள் சிற்றரசர்களையும் குடித்தலைவர்களையும் அடக்கி கோன்மையை நிலைநாட்டியிருக்கிறது. அரசன் தளர்கையில் பூசல்கள் வெடிக்கின்றன. ஒவ்வொரு நாட்டிலும் துவாரகையின் கதையே நிகழ்கிறது. ஆகவே ஒவ்வொரு நாடும் இன்னொரு நாட்டில் பூசல்கள் நிகழ்வதில் ஆறுதல் கொள்கிறது. முடிந்தால் ஒற்றர்கள் வழியாக பூசல்களை வளர்க்கிறது.

பூசல் நிகழும் நாட்டில் முதலில் வீழ்ச்சியடைவது வணிகம். நிலைகொண்ட கோல் இல்லை என்னும் செய்தியல்ல ஐயமேகூட வணிகர்களை விலக்கிவிடுகிறது. அங்கே காவல் இல்லை. கள்வர்களை அச்சுறுத்தும் சொல் இல்லை.

அரசனில்லா நாட்டில் நின்ற தூணும் வரி கேட்கும் என்று வணிகர்களிடையே ஒரு சொல் உண்டு. இன்று துவாரகையின் நிலையும் அதுவே. அங்கே உங்கள் மைந்தர்கள் அனைவருமே வரி கொள்கிறார்கள். குடித்தலைவர்கள் தனித்தனியாக வரி கொள்கிறார்கள். ஒருவர் வரி கொண்டார் என்றால் அந்த அளவுக்கு அவர் தன்னை மிஞ்சிவிட்டார் என்று உணர்பவர் தானும் வரி கேட்டு வணிகன் முன் வாளுடன் நிற்கிறார்.

துவாரகைக்கு கரைவணிகர்கள் வராமலாயினர். ஆகவே துறைமுகத்தை கடல்வணிகர்கள் தவிர்க்கத் தொடங்கினர். நாளுக்கு நூறு கலம் வந்த துறைமேடையில் இன்று ஒரு கலம் வந்தணைந்தால் அரிது. வருபவர்களிடமும் தோன்றியபடி வரி கொள்ளப்படுகிறது. வணிகர்கள் ஐயங்களால் ஆட்டுவிக்கப்படுபவர்கள். ஐயங்களை பரப்புபவர்கள். துவாரகையின் தெருக்கள் ஒழிந்துகிடக்கின்றன. பண்டநிலைகள் உப்பு உதிர்ந்து பாழடைகின்றன. ஆயினும் குடிகள் எதையும் உணரவில்லை. அவர்களிடம் சென்றகாலத்துச் செல்வம் எஞ்சியிருக்கிறது. அதைக்கொண்டு முன்பெனவே உண்டு குடித்து களியாடி பூசலிட்டு வாழ்கிறார்கள். அரசே, எக்குடியாயினும் எவ்வரசாயினும் ஒருதலைமுறைக்கு மேல் செல்வம் பெருகிச் செல்லக்கூடாது. களஞ்சியத்தில் நெல் இருப்பவன் வயலில் கிளியிறங்குவதை காண்பதில்லை.

உண்மையில் துவாரகை என்ற பெயரையே பாரதவர்ஷத்தின் மக்கள் மறந்துவிட்டிருக்கிறார்கள். எவரேனும் இயல்பாக அச்சொல்லை சொல்லிக் கேட்பதே அரிதாக இருப்பதை நான் அவ்வாறு எண்ணியபோதுதான் தெளிவுற உணர்ந்தேன். இத்தனை எளிதாக எங்கள் பெருநகர் மறக்கப்படுமென்பதை எண்ணிப்பார்க்க இயலவில்லை. துவாரகைக்குச் செல்லும்

வழியில் சிற்றூர் ஒன்றின் அருகே பெருஞ்சாலையோரம் சூதர் குழுவினருடன் அமர்ந்திருக்கையில் பேச்சினூடாக "நான் துவாரகையிலிருந்து வருகிறேன்" என்றபோது ஒருவன் "துவாரகையா? அது அஸ்தினபுரியின் அருகில் அல்லவா உள்ளது?" என்றான். பிறிதொருவன் "இல்லை, தண்டகாரண்யத்திற்கு கிழக்கே" என்றான். இன்னொருவன் "அது முன்பிருந்த ஒரு நகரம், இன்றில்லை" என்றான். ஒருவன் "இன்று அவ்வாறு பல சிற்றூர்கள் உள்ளன" என்றான்.

உடனே ஓர் இசைச்சூதன் கதை சொன்னான். "அறிக, இளைய யாதவரால் கடல்நுரைகளைக் கொண்டு பாறைகள்மேல் உருவாக்கப்பட்டது துவாரகை!" அரசே, அவன் சொன்ன கதை இது. மதுராபுரியை வென்றபின் மூத்தவராகிய பலராமருடன் முடியுரிமைக்காக பூசலிட்டீர்கள். குடிவழக்கப்படி முடியுரிமை மூத்தவருக்கே என்றனர் குடிமூத்தோர். ஆகவே நீங்கள் விலகிச் சென்றீர்கள். தொலைநிலத்துக் கடல்முனை ஒன்றை அடைந்தீர்கள். உங்கள் மாயக்குழலை மீட்டியபடி கரைப்பாறையில் நின்றபோது இசைகேட்டு கடல் கொந்தளித்தது. பொங்கிய அலைகளில் இருந்து வெண்ணுரை கிளம்பி வந்து குவிந்தெழுந்து அந்நகரமாகியது. அதன் குடிகளும் படைகளும் ஏவலரும் காவலரும் உங்கள் குழலிசை உருவாக்கும் மாயையே. "அந்நகர் அவர் கண்ட கனவு. அங்கே குழலிசை கேட்டுக்கொண்டே இருக்கும். ஒருகணம் அதை கேட்காமலாகிறவர்கள் அங்கே நகரமே இல்லை, வெறும் பாறைகள்தான் உள்ளன என்று கண்டு திகைப்பார்கள்" என்றான். சலிப்புடன் நான் எழுந்துவிட்டேன்.

எவ்வண்ணம் ஒரு நகரை இப்படி மறக்கிறார்கள்? அரசே, ஒரு நகர் பாரதவர்ஷத்தின் ஓர் உறுப்பு. அங்கே குருதி என வந்து

சென்றுகொண்டிருப்பவர்கள் வணிகர்கள். மூச்சு என வந்து செல்பவர்கள் சூதர்கள். பல்லாயிரம் சிற்றூர்கள் துவாரகைக்காக பொருட்களை செய்தன. பலநூறு நகர்களிலிருந்து அங்கு செல்லும் வண்டிகளும் படகுகளும் கிளம்பின. பல்லாயிரம் பல்லாயிரம் அங்காடிகளில் துவாரகையின் பொருட்கள் விற்கப்பட்டன. கைகளில் திகழ்ந்தன. நாவுகளில் அப்பெயர் ஒலித்தது. சூதரும் வணிகரும் வராதாகும்போது மெல்ல மெல்ல அந்நகர் உயிரற்றதாகிறது. உயிரிழக்கும் உறுப்பு உதிர்வது உடலின் நெறிகளில் ஒன்று. துவாரகையை பாரதவர்ஷம் உதிர்க்க ஒருங்கிவிட்டது. அதில் மீண்டும் உயிர் எழவில்லை எனில் மீள முடியாமல் ஆகும்.

ஆனாலும்கூட சூதர்கள் அதை எவ்வண்ணம் மறக்கிறார்கள்? எண்ணி எண்ணி வியக்கிறேன். இப்புவியில் துவாரகை அளவிற்கு பாடப்பட்ட பெருநகர் பிறிதொன்றுண்டா என்ன? உண்மையில் பாடிப் பாடித்தான் அதை மறக்கிறார்கள். சொல் சேர்த்து சொல் சேர்த்து அதைப் புனைந்து பிறிதொன்றாக்கி விண்ணுக்கு எழுப்பி தங்கள் சொல்லுலகில் கொண்டுசென்று நிறுத்திக்கொண்டார்கள். காவியங்களில் துவாரகை என்றும் இருக்கும். நாவுகளில் என்றும் திகழும். அது பிறிதொரு நகர், அதற்கு மண்ணோ கல்லோ தேவையில்லை. மானுடரோ அரசோ மணிமுடியோ அங்கே இல்லை. அதற்கு காலமில்லை. ஒருவேளை அங்கு ஒளியுடன் அந்நகர் திகழ வேண்டுமெனில் இங்கு இந்நகர் மண்ணில் உதிர்ந்து மறைந்தாகவேண்டும் போலிருக்கிறது.

மானுடர் தங்கள் கனவிலிருந்து எழுப்பிக்கொள்ளும் அப்பெருநகரை எவரேனும் இங்கு வந்து கல்லிலும் மண்ணிலும் கண்டால் சலிப்புறுவார்கள் போலும். அக்கற்பனை

மேல் உள்ள வெறுப்பாலேயே இந்நகரை உதறுகிறார்களா? பெருவீரர்கள் இளமையிலேயே உயிர்துறக்க வேண்டுமென்பது ஒரு காவிய நெறி. இருந்து இயலா உடலுடன் அவர்கள் வாழ்வார்கள் எனில் அவர்களின் கதைகள் பொருளிழக்கும். அதுவே துவாரகையின் ஊழா? பாரதவர்ஷமே அவ்வண்ணம் விழைகிறதா? அவ்விழைவுதான் தீச்சொல் என எழுந்து அந்நகரை மூடியிருக்கிறதா? எண்ணும்போது கருநாகம் பாதி விழுங்கிய வெண்பறவை என்றே துவாரகை என் கற்பனையில் எழுகிறது.

எண்ணி எண்ணி சலிக்கிறேன், எவ்வண்ணம் சொற்கூட்டுவது என்று எனக்குத் தெரியவில்லை. தாங்கள் தங்கள் கனவிலிருந்து உயிர்கொடுத்து அமைத்த அம்மாநகர் அழிந்துகொண்டிருக்கிறது. துவாரகையின் தெருக்களில் இன்று நிகழ்வதென்ன என்று கூற விழைகிறேன். அரசே, துவாரகை தொலைவிலிருந்து நோக்கும்போதுதான் ஒன்று. அது உள்ளே மூன்று துண்டுகளாக ஆகிவிட்டிருக்கிறது. நகரின் கடலோரத் தென்பகுதியை சத்யபாமையின் மைந்தர்கள் தம் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார்கள். இளவரசர் ஃபானு அங்கே ஒரு யாதவப் படைப்பிரிவை சூழ நிறுத்தி பதினெட்டு துணைமாளிகைகளை தன் ஆட்சியில் வைத்திருக்கிறார். துறைமுகமும் சூழ்பகுதியும் சாம்பனின் ஆணையில் உள்ளன. துறைமுகம் முதல் பண்டநிலை வரை சாம்பன் தனது அசுரப் படைகளை நிறுத்தியிருக்கிறார்.

அரசே, துவாரகையை பிற நிலங்களுடன் இணைக்கும் நான்கு பெருவழிப் பாதைகளையும், அவற்றுக்கு நடுவே உள்ள பாலைவனப் பகுதியையும் ருக்மிணியின் மைந்தர்கள் ஆட்சி செய்கிறார்கள். பிரத்யும்னனின் படைகளின் பாடிவீடுகள் அங்கே

அமைந்துள்ளன. சத்யபாமையின் மைந்தர் ஃபானுவின் தலைமையில் அந்தகர்கள் ஒருங்கிணைய போஜரும் விருஷ்ணிகளும் தங்கள் குடித்தலைவர்களின் தலைமையில் அவருடன் முரண்பட்டும் பூசலிட்டும் உடனிருக்கிறார்கள். இன்றுள்ள அரசியல் நாளொரு நிலை என மாறிக்கொண்டிருக்கிறது. சாம்பனும் பிரத்யும்னனுமே முதன்மை எதிரிகள். யாதவர்கள் எப்பக்கம் சேர்வார்கள் என்பதே வினா. ஷத்ரியர்களின் பக்கம் சேர்வார்கள் என்றால் யாதவர்கள் அங்கே இரண்டாம் குடிகள். நிஷாதர்களுடன் சேர்ந்தால் என்றென்றும் தாங்களும் நிஷாதர்களாக கருதப்படுவார்கள். ஆகவே அவர்கள் அந்திப்பறவைகள் என அலைபாய்கிறார்கள்.

அந்த அல்லலை வளர்க்கிறார்கள் பிரத்யும்னனும் சாம்பனும். ஒருவேளை யாதவர்கள் மறுபக்கம் செல்வார்கள் என்றால் தங்களுக்கு ஆதரவாக அக்குடிகளில் ஒன்றை பிரித்தெடுத்துக்கொள்ளும் திட்டம் இரு சாராருக்குமே உள்ளது. ஆகவே இரு சாராருமே யாதவர்களிடையே பூசலை வளர்க்கிறார்கள். உண்மையில் யாதவர் நடுவே இருக்கும் இப்பூசலே இன்று துவாரகையில் இன்றுநாளை என போரை ஒத்திப்போட்டு செயற்கையான அமைதியை உருவாக்கியிருக்கிறது. யாதவர் ஒருங்கிணைந்து ஒருபக்கம் சென்றால் போர் தொடங்கிவிடும். சாம்பனும் பிரத்யும்னனும் போரிட்டால் இரு பக்கமும் அழிவே எஞ்சும். நிஷாதர்கள் எண்ணிக்கை வல்லமை கொண்டவர்கள், ஷத்ரியர்கள் போரில் வெறிகொண்டவர்கள். நடுவே யாதவர்களோ பூசலிடும் விழைவை வெல்லத் தெரியாதவர்கள்.

அரசே, யாதவர் நடுவே சிறிய சண்டைகள் ஓய்ந்த நாளே இல்லை. நான் கிளம்பும் அன்று கூட அந்தகர்களின் குழு ஒன்று சென்று போஜர்களின் குடிகளைத் தாக்கி படைக்கலங்களையும் செல்வங்களையும் கொள்ளையடித்து மீண்டது. போஜர்கள் அந்தகர்களை தாக்கினார்கள். எந்த நோக்கமும் இல்லாமல் விருஷ்ணிகளில் சிலரும் சேர்ந்து அந்தகர்களை தாக்க ஃபானுவின் படை வந்து போஜர்களை மட்டும் தாக்கி துரத்தியது. விருஷ்ணிகளை அரசப் படைகள் தாக்கவில்லை என்ற செய்தி பரவியபோது போஜர்களும் அந்தகர்களும் இணைந்துகொண்டனர். அவர்கள் விருஷ்ணிகளை தாக்க முற்பட்டனர். நான் என் படைகள் அனைத்தையும் திரட்டிக் கொண்டு நிறுத்தி இரு யாதவநிரைகளையும் பிரித்து இரவெலாம் பேசிப் பேசி சொல்லமையச் செய்தேன்.

துவாரகையின் அரியணைப் போட்டியில் அயலவர் இன்னமும் நேரடியாக பங்கெடுக்கவில்லை. ஆனால் எப்போது வேண்டுமென்றாலும் படையுடன் வந்து துவாரகையைச் சூழ்ந்துகொள்ளச் சித்தமாக இருப்பதாக விதர்ப்பத்தின் ருக்மி பிரத்யும்னனுக்கு செய்தி அனுப்பியிருக்கிறார். அவர் உண்மையில் துவாரகைக்கு அரசராக வேண்டுமென விழைவது சாருதேஷ்ணனைத்தான். பிரத்யும்னனின் குருதியில் வந்த மைந்தர் அனிருத்தன் பாணாசுரரின் மகள் உஷையை மணந்திருக்கிறார். அவரே பிரத்யும்னனுக்குப் பின் அரசராகக்கூடும். அனிருத்தனின் மைந்தர் வஜ்ரநாபனின் படைக்கலம்கொள்ளல் சடங்கை பெருவிழாவாகவே பிரத்யும்னன் எடுத்தார். அது ருக்மியை சினம்கொள்ளச் செய்திருக்கிறது. அது ஒரு சிறு தயக்கமாக எஞ்சியிருக்கிறது.

ஆனால் அந்தகர்களின் தரப்பில் கிருதவர்மன் களமிறங்குவார் என்றால் ஐயமே இன்றி உடனே ருக்மி படைகொண்டு வருவார். மதுராபுரியிலிருந்து பலராமரின் படைகள் துவாரகைக்கு வருமென்றாலும் ருக்மியின் படை நகருக்குள் நுழையும். அசுரர்களின் ஆதரவு எவருக்கு என்பது இன்னும் தெளிவாகவில்லை. பாணாசுரரின் குடியின் ஆதரவு அனிருத்தனுக்கே என எண்ணப்படுகிறது. சம்பராசுரரும் ஹிரண்யநாபரும் பிரத்யும்னனையே ஆதரிக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். ஆனால் அவர்கள் நிஷாதராகிய சாம்பனை ஆதரிக்கும் வாய்ப்பும் உண்டு. துவாரகை அயல்நிலத்துப் படைகளின் ஆடற்களமாக எக்கணமும் ஆகக்கூடும். அரசே, உச்சிக்கோடையில் புல்வெளி என இருக்கிறது துவாரகை. இளவரசர்கள் ஒவ்வொரு நாளும் வெவ்வேறு இடங்களில் பற்றி எரியும் நெருப்பை அணைக்கும் பதற்றத்தில் இருக்கிறார்கள்.

அரசியர் எண்மரும் இந்த அரசியலிலிருந்து முற்றாக விலகிவிட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு கணமும் இந்நகரத்தை ஆண்ட பேரரசி சத்யபாமை முற்றிலும் துறவு பூண்டதுபோல் கடலோரத்தில் சிறுமாளிகையில் தனித்து வாழ்கிறார். ஒருநாளும் தன் மைந்தர்கள் தன்னை வந்து சந்திக்கலாகாதென்று ஆணையிட்டிருக்கிறார். செய்திகள் எதையும் எவரும் அங்கே கொண்டுசென்று சேர்க்க கூடாதென்று சொல்லப்பட்டிருக்கிறது. யாதவ அரசி பாமைக்கு ஒவ்வொரு சொல்லுக்கு எதிர்ச்சொல் வைத்தவர் ஷத்ரிய அரசி ருக்மிணி. எண்ணத்திற்கு எதிரெண்ணம் என நிகழ்ந்தவர். இன்று செயலோய்ந்து மைந்தருடன் தங்கியிருக்கிறார். அவரும் அவ்வண்ணமே அரசு செய்திகள் எதையுமே கேட்டு அறிவதில்லை.

ஒருவகையில் அவர்களின் விலக்கமும் நகருக்கு நன்றென்று தோன்றுகிறது. அவர்கள் சொல் எவ்வகையிலும் பொருள்கொள்ளப்போவதில்லை. மைந்தர் வளர்ந்து அவர்களின் கைகளை கடந்துசென்றுவிட்டிருக்கிறார்கள். ஒருவரை ஒருவர் கண்காணிக்கிறார்கள். எதிரிகள் குறித்த செய்திகளை நாளுக்கு நூறுதடவை கேட்டு அறிந்துகொள்கிறார்கள். எதிரிகளைப் பற்றி பேசிக்கொண்டிருக்கிறார்கள். எண்ணுகிறார்கள், கனவுகாண்கிறார்கள். அங்கே பிறிதொரு சொல்லோ எண்ணமோ கனவோ இல்லை. ஒருவர் கொள்ளும் வஞ்சம் அவர் எதிரியிலும் அதே வகையில் வஞ்சத்தை எழுப்புகிறது என்பதை இப்போது கண்டேன். வஞ்சம்போல் பிரதிபலிப்பது வேறொன்றும் இல்லை. வஞ்சம் இலாத ஒருவரேனும் துவாரகையில் உண்டா என்பதே ஐயமாக இருக்கிறது.

வஞ்சச் சூழல் பிறரை அங்கே வாழமுடியாமலாக்குகிறது. நாம் சொல்லும் ஒவ்வொரு சொல்லும் திரிந்தே பொருள்படுகிறது. எவரிடமும் விழிநோக்கி பேசமுடிவதில்லை. மெல்லமெல்ல நாமும் சொற்களை எண்ணித்தெரிந்து சொல்லத் தொடங்குகிறோம். நம் உள்ளமும் சூழ்ச்சி கொள்கிறது. எண்ணினால் விந்தை, மொழி இத்தனை ஆழ்ந்த பள்ளங்கள் கொண்டது, இத்தனை அவிழ்க்க முடியாத சிடுக்குகள் கொண்டது என இன்றே அறிந்தேன். அதைவிடவும் விந்தை ஒன்றுண்டு. நற்பொழுதுகளில் மொழியை இனிதாக்கும் கவிதைகளும் பாடல்களும் வஞ்சச் சூழல்களில் எரியை காற்றென ஐயங்களையும் குழப்பங்களையும் பகைமையையும் மூட்டிவிடுகின்றன. அரசே, இன்று துவாரகையில் வஞ்சம் அணையாது திகழ்வது சூதர்களால்தான்.

அங்கு இனி திகழும் சொல்லென ஒன்றே எஞ்சுகின்றது. தங்கள் ஆணை. தாங்கள் வந்தாகவேண்டும். நகர்புகுந்து தந்தை என எழுந்து தங்கள் மைந்தருக்கு ஆணையிடுக! அந்நகர் மேல் தங்கள் கோல் எழவேண்டும். தாங்கள் அங்கு மீண்டும் அரியணை அமராவிடில் அந்நகர் அழியும், ஐயமில்லை. அதை கூறவே இங்கு வந்தேன். தாங்கள் அந்நகரை ஆக்கியது இத்தகைய கீழ்மை நிறைந்த அழிவின் பொருட்டல்ல அல்லவா? உங்கள் சொல்லுக்கு நிகராக துவாரகை என்னும் பொருளும் அங்கே நிலைகொள்ளவேண்டும் அல்லவா? அரசே, ஆக்கப்பட்ட அனைத்தும் அழியும் என்பதை அறிந்திருப்பீர்கள் என்பதை அறியாதவனல்ல நான். ஆனால் அவை தன் கண்ணெதிரிலேயே அழியவேண்டுமென்று விழைபவர் எவரும் இருக்கமாட்டார்கள். மைந்தர் சாவை கண்முன் காண்பதைப்போல் தந்தைகொள்ளும் பெருந்துயர் வேறேது?

ஆம், நீங்கள் அளித்த பெருஞ்செல்வத்தை யாதவர் இழந்துவிட்டனர். பேரருவி முன் கைக்குவை நீட்டி நீர் அருந்துபவர்கள் அவர்கள். அவர்களின் விடாயளவே அவர்களுக்குத் தேவை. தங்கள் சிறுமையை அவர்கள் இன்னும் உணரவில்லை. அச்சிறுமையையே படைக்கலம் என, பீடமெனக் கொண்டு அமர்ந்திருக்கிறார்கள். ஆனால் அவர்களை நீங்கள் அறியமாட்டீர்களா என்ன? அறிந்த பின்னர் நீங்கள் அளித்ததுதானே அந்நகர்? அரசே, இன்று அவர்கள் சிறியோர் ஆக இருக்கலாம். அவர்களின் குருதியில் பெருமைமிக்க மைந்தர் எழக்கூடுமே? அவர்களின்பொருட்டு அந்நகர் அங்கே நின்றிருக்கலாகுமே? அந்நகரை அவர்கள் இழந்தால் எழும் மைந்தர் இடிபாடுகளை அல்லவா அடைவார்கள்? இன்மைகூட நன்று, அங்கே கனவுகள் எழமுடியும். அரசே, இடிந்தவை

மாபெரும் சுமை. அவற்றைக் கடந்து முளைத்தெழுவது பற்பல தலைமுறைகளால் இயல்வது அல்ல.

சாத்யகியின் குரல் எழுந்தது. அவன் குனிந்து இளைய யாதவரின் கால்களை பிடித்துக்கொண்டான். "எழுக அரசே, தங்கள் குடி காக்க எழுக! எங்கள் கொடிவழியினருக்காக எழுக! உங்கள் அடிவணங்கி இதுநாள்வரை வாழ்ந்தவன். என் குருதிவழியின் இறுதித்துளியையும் தங்கள்பொருட்டு அளித்தவன். என் விழிநீர் கண்டு இரங்குக! அங்கு நீங்கள் எழுந்தருளுவதொன்றே போதும். தங்களால் ஒரு சொல்லில் ஒரு விரலசைவில் அந்நகரை மீட்க இயலும். பிற எவரையும்விட அதை நன்கு அறிந்தவன் நான். தெய்வமொன்றே எங்களை காக்கமுடியும், பிறிதொரு தெய்வம் எங்களுக்கு இல்லை. தெய்வமெழுந்தும் எங்கள் குலம் அழியுமென்றால் இப்பாரதவர்ஷத்தின் குலங்களில் கீழ்க்குலம் என்றே நாங்கள் அறியப்படுவோம். அருள்க!"

# கல்பொருசிறுநுரை - 8

**பகுதி மூன்று : ஒழியா நாற்களம் – 3**

இளைய யாதவரின் குடில் முன் மரத்தடியில் அமர்ந்து சாத்யகி சொன்னான் "அரசே, துவாரகை இன்றொரு மாபெரும் நாற்களம் என மாறியிருக்கிறது. அங்குள்ள ஒவ்வொரு மானுடரும் அதன் காய்கள். வேறெங்கிருந்தோ கைகக்கள் அவர்களை ஆட்டுவிக்கின்றன. ஒவ்வொருவரும்

அதில் மோதிக்கொண்டிருக்கிறார்கள், எவருடைய ஆடல் என்றறியாது. நகரினூடாகச் செல்கையில் எதிர்ப்படும் ஒவ்வொருவரும் வெவ்வேறு முகம் கொண்டவர்கள் என்ற அச்சத்தை அடைகிறேன். ஒருவர் என்னிடம் பேசும்போது அச்சொற்களின் பிறிதொரு பொருள் எது என்று வியக்கிறேன். ஒரு கணம் அத்தனை பேரின் நிழலும் எழுந்து உயிர்கொண்டு அங்கு திகழத்தொடங்கிவிடும் என்று தோன்றுகிறது. உருக்கொண்டு நடமாடுபவையே நிழல்கள் என்றும், கரிய வடுவென மண்ணில் படிந்து மறைந்து நீண்டு வளைந்து நெளிந்து குறுகி ஆடுபவையே மெய்யுருவங்கள் என்றும் தோன்றுகிறது.”

துவாரகையைப்போல இப்போது நான் அஞ்சக்கூடிய பிறிதொரு இடமில்லை. அல்லது இவ்வண்ணம் சொல்கிறேன், அந்நகருக்கடியில் அதை தாங்கி நின்றிருந்த பெரும்பாறை மென்மையான களியாக மாறிவிட்டிருக்கிறது. அதன் மேல் அந்நகரின் ஒவ்வொரு மாளிகையும் கோட்டையும் பாதைகளும் உலைந்தாடிக் கொண்டிருக்கின்றன. விலங்குகளின் கண்களில்கூட சூதையும் வஞ்சத்தையும் பார்ப்பதென்பது எளிதல்ல. அங்கிருந்து அகன்று சென்றதென்ன என்று நான் பலமுறை எண்ணிப்பார்த்ததுண்டு. தாங்கள் அன்றி எதுவும் அங்கிருந்து அகலவில்லை. எனில் அங்கிருந்த அனைத்தையும் கட்டுப்படுத்தியிருந்தவர் தாங்களா? அமுதெனத் திகழ்ந்த ஒன்று சற்றே திரிகையில் கொடிய நஞ்சென்று ஆகிவிடக்கூடுமா? இங்கே நஞ்சென்று இருப்பவை எல்லாம் அமுதென இனித்தவைதானா? எனக்கு புரியவில்லை.

அந்நகரை கைவிட்டுவிட்டு எங்கேனும் கிளம்பிச்சென்றுவிடவேண்டுமென்று எனக்குத் தோன்றுகிறது.

ஆனால் அது நீங்கள் விட்டுச்சென்ற இடம், நான் இன்னும் இருந்துகொண்டிருக்கும் இடம். அரசே, அங்கிருக்கையில் ஒவ்வொருநாளும் உங்களையே எண்ணிக்கொண்டிருக்கிறேன். அதுவே அந்நிலத்தின் மேல் எனக்கு பிடிப்பை உருவாக்குகிறது. நீங்கள் எனக்கு ஆணையிட்டுச் செல்லவில்லை என்றாலும் அங்கிருப்பதும் அதை காப்பதும் என் பொறுப்பென்றும் தோன்றுகிறது. எதுவரினும் இதை கைவிடலாகாது என்று எனக்கு நானே ஆணையிட்டுக்கொள்கிறேன். நான் செய்யக்கூடுவதென்ன என்று எண்ணி எண்ணி தவித்தேன். மீண்டும் உங்களை அங்கே கொண்டுவருவதொன்றே செய்யக்கூடுவது. ஆனால் என் சொற்கள் எளியவை. வலியில் துயரில் கூச்சலிடும் சிற்றுயிர்களின் ஓசையை நாளுமெனக் கேட்டபடிதான் விண்ணில் அமர்ந்திருக்கின்றன தெய்வங்கள். அந்நகரென அமைந்தவர் அரசியர். துவாரகை என எண்ணும்போது உங்களுள் எழுபவை அவர்களின் முகங்கள். ஆகவே அவர்களின் சொல்லுடன் கிளம்ப எண்ணினேன்.

நான் செல்லும்போது பேரரசி சத்யபாமை தன் கடலோர நீர்மாளிகையில் இருந்தார். யாதவர்களின் படைகள் சூழ்ந்த அந்த இடத்திற்குச் செல்ல எனக்கு தடையிருக்கவில்லை. மையச்சாலையில் இருந்து பிரிந்துசென்ற கற்பாதை கடல்மேல் அமைந்த கற்பாலத்தின் மேலேறி வளைந்திறங்கி அந்தச் சிறுமாளிகையை அடைந்தது. அங்கே சென்று அரண்மனை முகப்பில் நின்று என் வருகையை அறிவிக்கக் கோரினேன். "பேரரசி எவரையும் பார்க்க விழையவில்லை" என்றார்கள் சேடியர். "நான் பார்த்தாகவேண்டும், நான் அரசரின் அணுக்கன் என்று கூறுக!" என்று சொன்னேன். உள்ளே சென்று மீண்டு வந்து "பேரரசி எவரையும் நேர்காண்பதில்லை, உங்கள் சொற்களுக்கு மறுமொழி எழவில்லை" என்றாள் சேடி. "நான்

இளைய யாதவரின் சொல்கொண்டவன். இன்று நான் அரசியை பார்த்தாகவேண்டும்" என்று மீண்டும் சொன்னேன். நீங்கள் எனக்கு அளித்த அடையாளக் கணையாழியை கொடுத்து "இதை அவரிடம் காட்டுக!" என்றேன்.

சிறு பொழுதுக்கு மேல் சேடி வந்து என்னை உள்ளே செல்லச் சொன்னாள். அது முன்பு படகுகளுக்குரிய நங்கூரங்களையும் துடுப்புகளையும் வைக்கும்பொருட்டு கட்டப்பட்ட சிறு கற்குடில். அதை பின்னர் மாளிகையென்றாக்கினர். அலைகள் வந்தறைந்து துமியெழும் விளிம்பில் அமைந்திருந்தது. கொந்தளிக்கும் அலைகளுக்கு மேல் அசைவிலாது நின்றிருக்கும் கலம் போன்றது. மேலே மெல்லிய வெண்புகையென துமி பறந்துகொண்டிருக்கும். சுவர்களனைத்தும் உருகி வழிந்துகொண்டிருப்பதுபோல் முடிவிலாது உருகிக்கொண்டிருக்கும் ஒரு கட்டடம். நான் எழுந்து உள்ளே சென்றபோது என் பாவை வெண்சுவர்களில் நெளிந்து நெளிந்து கரைந்து வழிந்துகொண்டிருந்தது. என் காலடிகள் நீர்த்துளியின் மென்மயிர்ப்பரப்பில் பதிந்து ஈரத் தடங்களாகி ஒளிகொண்டு மீண்டும் அணையத் தொடங்கின.

பேரரசி ஏன் அங்கு வந்து தங்கியிருக்கிறார் என்று எனக்கு புரியவில்லை. அங்கு எவரும் நாளெல்லாம் தங்கமுடியாது. நான் சென்ற அறைக்குள் நீர்த்துளிகள் பனித்து துளித்துச் சொட்டும் ஒலியே நிறைந்திருந்தது. அங்கே அரசி ஒரு கற்பீடத்தில் அமர்ந்திருந்தார். "அமர்க!" என்று அரசி காட்டிய இருக்கை உப்பாலானதுபோல் இருந்தது. ஒவ்வொன்றும் அங்கு குளிர்ந்து விறைப்பு கொண்டிருந்தன. முறைமைச்சொல் உரைத்து தலைவணங்கி அதில் அமர்ந்தேன். பேரரசி எளிய மரவுரி ஆடை அணிந்திருந்தார். நீண்ட குழலை சுருட்டி

கொண்டையாக்கி சரித்திருந்தார். அவரின் இமைகளில், புருவங்களில், தலைமயிரில் எங்கும் நீர்த்துளிகள் படர்ந்திருந்தன. ஓரிரு ஆண்டுகளுக்குள் அகவை முதிர்ந்து மூதன்னை என ஆகிவிட்டிருந்தார். அரசே, கடலோரம் சிறு துளைகளிலிருந்து அவ்வப்போது எட்டி நோக்கும் விந்தையான சிறு பூச்சிபோல் தோன்றினார்.

கண்கள் நரைத்து நோக்கு உள்ளொடுங்கி அங்கிலாததுபோல் இருந்தார். "கூறுக!" என்று எனக்கு ஆணையிட்டார். நான் கொண்டு வந்தவை அனைத்தும் அரசியல் செய்திகள். அவை அந்த உப்புக்கலம் போன்ற மாளிகையில் எவ்வகையிலும் பொருளற்றவை. நான் அரசியிடம் "பொறுத்தருள்க, அன்னையே!" என்றேன். "யாதவ குலத்தின் பொருட்டு மீண்டும் ஒருமுறை பொறுத்தருள்க, தேவி!" என்றேன். அரசே, தங்களின் பொருட்டும் மூன்றாவது முறை பொறுத்தருளும்படி கேட்டேன். அவர் முகத்தில் எந்த உணர்வும் எழவில்லை. தலையை மட்டும் அசைத்தார். "அரசி, அஸ்தினபுரியிலிருந்து இன்று செய்தி வந்தது. அங்கு சம்வகை முடிகொண்டிருக்கிறார் என்று அறிந்திருப்பீர்கள். அஸ்தினபுரி தன் படைகள் நின்றிருக்கும் எல்லையை அறுதியாக வகுத்து அளித்திருக்கிறது. அவ்வெல்லையிலிருந்து இனி எப்போதும் அஸ்தினபுரியின் படைகள் வெளிச்சென்று வேறு நாடுகளை தாக்குவதில்லை என்று முடிவு கொள்ளப்பட்டுள்ளது" என்றேன்.

"அஸ்தினபுரிக்கு கப்பம் கட்டவேண்டிய நாடுகள் எவையுமில்லை. இனி அஸ்தினபுரியை தங்கள் தலைமை நகரென உணர்ந்த நாடுகள் மட்டும் ஆண்டுக்கொடையென உகந்த நிதியை அளித்தால் போதுமானது. பாரதவர்ஷமெங்கும் நூற்றெட்டு நாடுகள் அவ்வண்ணம் நிதியளிக்க

ஒப்புக்கொண்டுள்ளன. அஸ்தினபுரியின் நிதிக்கொடை நாடு என்பது ஒரு மாபெரும் கூட்டமைப்பு. அதில் சேர்வதென்பது அனைத்து வகையிலும் பாதுகாப்பு, அடையாளம், மதிப்பு. அதற்கு அந்நிதி பெருந்தொகை அல்ல. அஸ்தினபுரிக்கு அது படைகொண்டு சென்று திறை வென்று வருவதைவிட பெருஞ்செல்வம் என்று இங்குள்ள அமைச்சர்கள் கூறுகிறார்கள். பெண் மட்டுமே எடுக்கக்கூடிய மிகச் சிறந்த முடிவு அது என்று ஸ்ரீகரர் கூறினார். அஸ்தினபுரி இனி படைகளை பேண வேண்டியதில்லை. படைகொண்டு சென்று ஊர்களை அழித்து பழி கொள்ள வேண்டியதில்லை. படை புரக்கும் செலவும் அதன் பொருட்டு மிகைவரியும் இனி இல்லை. பிறரை அச்சுறுத்தும் பொறுப்பிலிருந்து விடுபடுவதுபோல் நாம் அடையும் விடுதலை வேறில்லை என்றார் அமைச்சர்" என்று நான் சொன்னேன்.

"எவ்வகையிலும் நன்று. அஸ்தினபுரியிலிருந்து அவர்களின் நிறுவுகை நூல்களும் அமைதி நூல்களும் சூதர்களாலும் பாவலர்களாலும் அந்தணர்களாலும் முனிவர்களாலும் நாவிலும் ஏட்டிலும் அனலிலும் நெஞ்சிலும் என கொண்டுசெல்லப்பட்டு பாரதவர்ஷமெங்கும் பரவிக்கொண்டிருக்கின்றன. அந்நூல்களினூடாகவே அது பாரதவர்ஷத்தை ஆள்கிறது. படை சென்ற திசைகளிலெல்லாம் சொல் சென்றால் போதுமென்று உணர்ந்த பேரரசி என்று சம்வகையை பாடினார்கள். படைகளைவிட மும்மடங்கு பணியைச் செய்து ஆட்கொள்வது சொல்லென்பதை இப்போது கண்டேன். எவ்வகையிலும் அது நன்று" என்றேன். "எனில் நமக்கு அவ்வாறு நன்றல்ல. அஸ்தினபுரியின் துணை இருக்கிறதென்பதே யாதவர்களை இந்நகரில் சற்றேனும் மேல்தூக்கம் கொண்டவர்களாக நிலை நிறுத்தியிருக்கிறது.

விருஷ்ணிகள் அவர்களில் மேலே நின்றிருப்பதும் அதனாலேயே. அந்தத் துணை இல்லாமலாகிறது.”

“அந்தகர்களும் போஜர்களும் போர்களில் பல முறை வென்றவர்கள். விருஷ்ணிகள் போர்வீரர்கள் அல்ல என்று தாங்கள் அறிந்திருப்பீர்கள். அஸ்தினபுரியின் படை எழுந்து வரும் என்பதை ஒவ்வொரு சிறு பூசலிலும் உரக்கச் சொல்லாத விருஷ்ணி இங்கில்லை. இன்று ஒவ்வொருவரும் திகைத்துப் போயிருக்கிறார்கள். இவ்வகை சொற்கள் மிக விரைவாக பரவுகின்றன. எங்கு போயிற்று உன் அஸ்தினபுரி என்று எளிய தெருப்பூசல்களிலேயே பிறர் கேட்கிறார்கள். அரசி, இங்கு பீதரும் யவனரும் சோனகரும் கலம் கொண்டு நிறுத்தி திறை அளித்துச் செல்லும் வணிக உரையாடலிலேயேகூட அஸ்தினபுரி இனி துவாரகையை தாங்காது என்ற உண்மை வந்தமைந்துவிட்டிருக்கிறது. இனி ஒவ்வொரு சொல்லும் நிறையிழக்கும். வாள்கள் கூர் இழக்கும். நமது கோட்டைகள் மெலியும். கண்ணெதிரே அதை காண்கிறோம்.”

“இங்கு நிகழ்ந்துகொண்டிருந்த ஒவ்வொன்றும் விசை கொள்கின்றன. இத்தருணத்தில் இந்நகரைக் காப்பதற்கு இதன் தந்தையென யாதவர் இங்கு எழுந்தருள வேண்டும். இந்நகர் அவரது ஒரு சொல் முளைத்து உருவானது. அவரது ஒரு விழி நோக்கு இங்கு அனைத்தையும் முறை அமையச்செய்யும். நான் சென்று கால் பணிந்து யாதவரை அழைத்து வருகிறேன்” என்றேன். அரசி ஒன்றும் சொல்லவில்லை. கைகோத்து மடியில் வைத்து இமை சரிய அமர்ந்திருந்தார். நான் மீண்டும் பணிந்து “என் பொருட்டு நான் அரசரை அழைக்கலாகும். ஆனால் அரசியர் பொருட்டு அழைப்பதே மேலும் முறை. மன்றாடுவதற்கு அப்பால் ஆணையிடுவதற்கும்

உரிமைகொண்ட முதல் அரசி தாங்கள். அரசி, அவரிடம் இங்கு வருக என்று ஒரு சொல் ஏட்டில் உரையுங்கள். அல்லது என் முகம் நோக்கி கூறுங்கள். தங்கள் சொல்லெனக் கொண்டு அதை அரசரிடம் சேர்ப்பேன்" என்றேன்.

அரசி நெடுநேரம் அமைதியாக இருந்தார். அவர் என்ன எண்ணுகிறார் என்று என்னால் கருத இயலவில்லை. பின் நிலம் நோக்கி மிக மெலிந்த குரலில் "எனது சொல் என்றுமுள்ளது. ஆனால் அச்சொல் தனித்துச் செல்வதில் எப்பொருளுமில்லை. இங்கு எண்மர் இருக்கிறோம். எட்டுக் குரல்களும் ஒன்றென ஒலிக்குமெனில் அரசர் இங்கு வரக்கூடும். பிற எழுவரிடம் செல்க! அவர்களிடமிருந்தும் சொல் பெறுக! எட்டு அரசியரின் சொல்லுடன் அவரை காண்க!" என்றார். "அது போதும் அரசி, அச்சொல்லுடன் நான் சென்று அவரை அழைத்து வருவேன். துவாரகையை மீட்பேன், ஐயம் தேவையில்லை" என்றேன். அரசி தன் கையிலிருந்து கணையாழியைக் கழற்றி என்னிடம் அளித்தார். "இது அவர் எனக்களித்த ஆணைச் சொல். இவ்வாழ்வில் ஒருபோதும் பிரியேன் எனும் சொல்லாக இதை நான் அன்று கொண்டேன். செல்க!" என்றார். நான் அதை பெற்றுக்கொண்டு தலைவணங்கி வெளிவந்தேன்.

அரசே, அங்கிருந்து திரும்பிச் செல்கையில் அந்த மாளிகையைப் பற்றி எண்ணிக்கொண்டே இருந்தேன். ஏவற்பெண்டு என்னை அழைத்துச் சென்றாள். "இங்குதான் இருக்கிறாரா?" என்றேன். "ஆம்" என்றாள். "துயில்வதும் இங்கா?" என்றேன். "ஆம்" என்றாள். அந்த மாளிகை அழுதுகொண்டிருந்தது, கீழே கொந்தளிக்கும் கடலுக்குமேல் உருகிக்கொண்டிருந்தது. நான் அதை மீண்டும் மீண்டும்

நோக்கியபடி கற்பலகை பதித்த பாலத்தின் மேல் நடந்து சாலையை அடைந்தேன்.

நான் சாலைக்கு வந்தபோது எனக்காகக் காத்து மூன்று காவலர்கள் நின்றிருந்தார்கள். அவர்களின் தலைவன் என்னை வந்து வணங்கி "இளவரசர் ஃபானு தங்களை பார்க்க விழைகிறார், அரசே" என்று சொன்னான். நான் பிறிதொரு பணியில் இருப்பதாகவும் இப்போது அரசுப்பணியென எதையும் ஏற்க இயலாதென்றும் சொன்னேன். "தங்களை அழைத்து வரவேண்டுமென்று ஆணை. எவ்வகையிலும்" என்று அவன் சொன்னபோது அது எளிய அழைப்பல்ல என்று எனக்கு புரிந்தது. நான் அவர்களுடன் சென்றேன். கற்பலகைச் சாலையில் நடந்து புரவி நின்றிருந்த இடத்தை அடைந்தோம். புரவியில் நான் ஏறிக்கொள்ள புரவிகளில் அவர்கள் தொடர்ந்து வந்தனர். துவாரகையின் மைய அரண்மனையின் தென்மேற்கு வாயிலுக்கு சென்றோம். அங்கே விருஷ்ணிகளின் சகடக் கொடி பறந்துகொண்டிருந்தது. அரசே, ஒரு படி தாழ்வாகவே துவாரகையின் செம்பருந்துக் கொடி பறந்தது.

நான் விரிந்த பளிங்குக்கூடத்தில் தன்னந்தனியாக காத்திருந்தேன். சுவர்களில் வரையப்பட்டிருந்த ஓவியங்கள் அனைத்தும் மங்கலடைந்து உதிர்ந்துகொண்டிருந்தன. தாங்கள் அரசி சத்யபாமையை வென்றதும் மணந்ததும் அங்கு மெய்நிகர் வண்ணக்காட்சியாக இருந்ததை நான் அறிவேன். என்றென்றும் என அங்கிருக்குமென எண்ணிய அக்காட்சி அவ்வாறு உதிர்ந்து வண்ணப்பொலிவிழந்து தோன்றுமென ஒருபோதும்

எண்ணியதில்லை. குறடொலிக்க வெளிவந்த ஏவலன் என்னை உள்ளே அழைத்துச் சென்றபோது உளம் தளர்ந்திருந்தேன். பெருங்கதவு திறந்தபோது ஓசை எழுந்தது. அரசே, நீங்கள் அங்கிருந்தபோது ஒவ்வொன்றும் ஒன்றுடன் ஒன்று இயல்பாகப் பொருந்தின. ஒன்றின்மேல் ஒன்று வழுக்கின. ஓசையோ உரசலோ எழவில்லை. அன்று அனைத்தும் முரண்கொண்டன. முனகின, ஊளையிட்டன. வலிகொண்டு கூச்சலிட்டன.

மூத்தவரான ஃபானுவும் சுஃபானுவும் அறைக்குள் இருந்தனர். உடன்பிறந்தார் பக்கத்து அறைக்குள் இருந்து வந்தனர். ஃபானு அரசர் என பெரிய பீடத்தில் அமர்ந்திருந்தார். எனக்கு முறைச்சொல் உரைத்து பீடம் அளித்தார். நான் முகமன் உரைத்து அமர்ந்ததும் "அரசியிடமிருந்து என்ன பெற்றீர்கள்?" என்றார். நான் "ஒரு சொல் பெற்றேன், சொல்லுக்கிணையான ஒரு கணையாழி, ஒரு பெரும் பொறுப்புக்காக கிளம்பிக்கொண்டிருக்கிறேன்" என்றேன். "நீங்கள் அங்கு எதற்காகச் சென்றீர்கள் என்று எனக்கு தெரியும்" என்று ஃபானு சொன்னார். "அரசர் என்னிடமிருந்து செங்கோலை பெற்றுக்கொள்ளவேண்டும் என்றும் அவரே இந்நகரை முன்போல ஆட்சி செய்யவேண்டும் என்றும் கூறினீர்கள். இனி அது நடக்காது. விருஷ்ணிகள் தங்கள் தலைவரென என்னை ஏற்றுக்கொண்டுவிட்டார்கள். என் சொல்லே இனி இங்கே ஆளும். பிறிதெவரின் சொல்லும் அல்ல" என்றார்.

நான் "விருஷ்ணிகளின் அரசுகள் மூன்றென சிதறிக்கிடக்கின்றன" என்றேன். "ஆம், மதுவனத்தில் இன்னமும் சூரசேனரின் குருதியே ஆள்கிறது. மதுராபுரியை பலராமர் ஆள்கிறார். நான் அவர்களுக்கு அணுக்கமானவன். ஒரு சொல்லில், ஒரு கொடியசைவில் அங்கிருந்து படைகளை இங்கு

கொண்டுவர என்னால் இயலும். அது நிகழவிருக்கிறது விரைவில். இந்நகர் மட்டும் இத்தனை தொலைவில் இல்லையெனில் இதற்குள் இது என் முழுதாட்சிக்குள் வந்திருக்கும். எனினும் இந்நகரை மெய்யாகவே நான்தான் ஆள்கிறேன். சில பகுதிகளை சிலர் தங்கள் கையில் வைத்துக்கொண்டு ஆள்கிறார்கள் என்று சொல்லிக்கொள்கிறார்கள். அது பொய்" என்றார்.

நான் "பேரரசி விருஷ்ணிகளின்மேல் சொல்லிழந்திருக்கிறார்கள் என்று நானும் அறிவேன். ஆகவேதான் அவருடைய ஆணையைப் பெற்று இளைய யாதவரை சந்திக்கச் செல்கிறேன். இந்நகர் அவருடைய மணிமுடியில் ஓர் அருமணியென அமைந்திருந்தது. என்றும் அவ்வாறே இருக்கவேண்டும் என விழைபவர்களில் ஒருவன் நான்" என்றேன். "அவர் இங்கு வந்தாலும் அவருடைய சொல் இங்கு திகழப்போவதில்லை" என்று கூறியபடி சுஃபானு முன்னே வந்தார். "எந்த முகத்துடன் அவர் இந்நகருக்குள் நுழைவார்? அவர் விருஷ்ணிகளை கொன்றழித்தவர். போரில் நமது படைகள் அத்தனை முழுமையாக அழிந்திருக்காவிட்டால் இந்நகர் இவ்வாறு கைவிடப்பட்டிருக்காது. இந்நகரில் பிறிதொரு சொல் திகழும் தீயூழே அமைந்திருந்திருக்காது" என்றார்.

அங்கே தங்கள் மைந்தர்கள் எழுவர் மேலும் இருந்தனர். ஸ்வரஃபானுவும் பிரஃபானுவும், பானுமானும் சந்திரஃபானுவும், பிரகத்பானுவும் அதிபானுவும் ஸ்ரீபானுவும் சூழ நின்றிருந்தனர். அவர்களின் விழிகளிலெல்லாம் அச்சொற்களே திகழ்ந்தன. சுஃபானு மேலும் உரக்க "தன் குடியை தானே கொன்றழித்துவிட்டு அக்குடிமேல் கோல்கொள்ள வருகிறாரா?

நன்று. அதையும் பார்ப்போம்" என்றார். நான் "இளவரசே, இப்போதும் நமது பிழையை நாம் உணரவில்லை. அவர் நம்மை இட்டுச்சென்ற இடத்திற்கு நாம் செல்லவில்லை. நாமே அவரை கைவிட்டோம். அவருக்கெதிராக படைநின்றோம். உருண்டுவரும் பெரும்பாறைக்கு முன் நின்று தருக்கும் சிறுபுற்கள் அழியாமலிருக்குமா என்ன? அன்று உங்கள் அனைவரின் முன் நின்று நெஞ்சில் அறைந்து நான் கூவினேன், இப்புவியே எதிர்த்து வந்தாலும் இளைய யாதவரை எவரும் வெல்ல இயலாது என்று. அன்று அவரை வென்று சிறைப்பிடித்துக்கொண்டு வருவோம் என்று சொன்னவர் நீங்கள். உங்கள் சொல்லை நினைவுகூர்க!" என்றேன்.

ஃபானு சற்று தளர்ந்து "அவரை வெல்வோம் என்று சொல்லவில்லை. அஸ்தினபுரியை வெல்வோம் என்றுதான் சொன்னோம்" என்றார். "அஸ்தினபுரியை வென்றபின் துவாரகையை கொண்டுசென்று அவர் காலடியில் வைத்து தந்தையே வந்து எங்கள் நகரை மீண்டும் கொள்க என்று கூறுவோம் என்றுதான் நான் சொன்னேன்" என்றார். "உளநாடகங்கள் பல. மெய் எவருக்கும் தெரியும்" என்று நான் சொன்னேன். அச்சொல்லால் சீற்றமடைந்த ஃபானு மீண்டும் நிலைமீண்டு பீடத்திலிருந்து எழுந்து நின்று கூவினார். "அன்று என் அன்னையிடம் அவரிடம் ஒரு வார்த்தை சொல்லுங்கள் என்று மன்றாடினேன். தந்தையை யாதவருக்கெதிராக செல்லவேண்டாம் என்று கூறும் குலஉரிமை கொண்டவர் அன்னை மட்டுமே. தந்தைக்கெதிராக ஒரு சொல்லும் உரைக்கமாட்டேன் என்று சொல்லி அன்று தன் கோலை நிலம் வைத்து அரியணையிலிருந்து எழுந்தார். ஒன்று அறிக! வைத்த கோலை திரும்பி எடுக்க எவராலும் இயலாது. இளைய யாதவரே ஆயினும். அன்றே விருஷ்ணிகளும் அந்தகர்களும்

அவர் மேல் நம்பிக்கை இழந்துவிட்டார்கள். இனி அது மீளப்போவதில்லை.”

“அவர் வந்து சொல்லுரைத்து அதன் பின்னரும் அவரால் இயலாதுபோகுமெனில் அது ஊழென்று கொள்வோம். அவரால் கைவிடப்படுவதை மட்டுமே பெரும்பிழை என்று கருதுகிறேன்” என்று நான் சொன்னேன். மேலும் சொல்லெடுக்காது நான் எழப்போனபோது ஃபானு “பொறுங்கள். அந்தக் கணையாழியை இங்கு கொடுங்கள்” என்றார். “இது அரசரிடம் கொடுக்கும் பொருட்டு அரசியால் அளிக்கப்பட்டது” என்றேன். “அரசி இதை அவர் சொல்லென மட்டும் தந்தனுப்பினாரா?” என்றார். அப்போதுதான் அரசிஅறைக்குள் மைந்தர்களின் ஒற்றர்கள் இருக்கிறார்கள் என்று தெளிந்தேன். “இல்லை, பிற எழுவரையும் கண்டு செல்லச் சொன்னார்” என்றேன். “முதல் அரசி சொல்லளித்துவிட்டார் என்று பிற அரசியரிடம் சொல்லுங்கள். பிற எழுவரின் சொல்லையும் பெற்று இங்கு வருக! இந்தக் கணையாழியை நான் தருகிறேன். எட்டுச் சொற்களுடன் சென்று அரசரை பாருங்கள். எட்டில் ஒருவர் குறைந்தாலும் நீங்கள் இங்கிருந்து அரசியின் கோரிக்கையுடன் செல்ல இயலாது” என்றார் ஃபானு.

“ஏன்?” என்று கேட்டேன். சுஃபானு “விருஷ்ணிகளின் குலத்தலைவர்கள் விரைவில் இங்கு கூடவிருக்கிறார்கள். பலராமரும் சூரசேனரும் கூட இங்கு வரக்கூடும். அனைவரும் அமர்ந்து இங்கு முடிவெடுக்கப்போகிறோம். இதன் நடுவே இங்கு இளைய யாதவர் வரவேண்டியதில்லை” என்றார். தந்தையை அவர் இளைய யாதவர் என்ற சொல்லால் குறிப்பிட்டது என்னை துணுக்குறச் செய்தது. பிரகத்பானு “அவர் இங்கு வந்தால் தன் ஆணவத்தால் பிற அனைவருக்கும்

எதிராகவே நிலை கொள்வார். விருஷ்ணிகளுக்கு எதிராக அந்தகர்களுக்கோ போஜர்களுக்கோ தலைமை தாங்கினால்கூட வியப்பதற்கில்லை" என்றார். ஃபானு "குலமுறைமைப்படி யாதவர்களுக்குரியது இந்நிலம். அதில் எந்த ஐயமும் இல்லை. எந்த மறுசொல்லும் ஏற்கப்படப்போவதில்லை. இல்லையென்று கூறுங்கள் பார்ப்போம். நீங்களும் யாதவரல்லவா?" என்றார்.

"ஆம், ஆனால் இதை எழுப்பியவர் இளைய யாதவர்" என்றேன். ஃபானு "கார்த்தவீரியருக்குப் பிறகு யாதவ குலத்தில் பிறந்த பெருந்தலைவர் என்று எந்தையை சொல்வார்கள். இந்நகரை அவர் எழுப்பினார். நன்று, ஆனால் இந்நகர் அவர் சொல்லில் எழுந்ததா என்ன? யாதவர்கள் தங்களுக்குத் தலைவர் என ஒருவர் தேவை என்று எண்ணியிருந்தார்கள். நானே கார்த்தவீரியன் என்று இவர் சொன்னபோது அவர்கள் ஒருங்கிணைந்தார்கள். சூரசேனரின் வாளும் பலராமரின் கதையுமில்லாமல் அவரால் வென்றிருக்க முடியுமா? மதுராவின் பெரும் செல்வம் இன்றி துவாரகை எழுந்திருக்க இயலுமா? கம்சன் சேர்த்து வைத்த செல்வமே துவாரகையாயிற்று. இல்லையென்று எவரும் மறுக்க இயலாது. எவ்வகையிலும் இது யாதவரின் செல்வமே. விருஷ்ணிகளின் கருவூலமே இந்நகரென்றாயிற்று" என்றார்.

"இன்று ஷத்ரியர் இந்நகரை கொள்ள நினைக்கிறார்கள். இங்கு நிகழ்ந்துகொண்டிருப்பதென்ன என்று நாங்கள் அறிவோம். இன்று ஒவ்வொரு யாதவரும் மெல்ல ஷத்ரியர்களை அஞ்சத்தொடங்கிவிட்டிருக்கிறார்கள். ருக்மிணியின் மைந்தர்கள் இந்நகரைக் கொள்ள தருணம் நோக்கியிருக்கிறார்கள். விதர்ப்பத்திலிருந்து ருக்மியின் படை இங்கே வருகிறது என்று அறிந்தேன். பிற ஷத்ரிய அரசிகளும் உடன் இணைந்து

இருக்கிறார்கள். அவர்கள் அனைவருக்கும் முன் இங்குள்ள ஷத்ரிய இளவரசர்களை முற்றாக வெல்லவேண்டும். ருக்மியின் படை துவாரகை நோக்கி வருமெனில் நம் எல்லைக்கு வெளியே அவர் வந்தடையும்போது அவர்களின் குருதியினர் இங்கு சிறைக்குள் இருக்கவேண்டும். அதற்குரிய அனைத்தும் ஒருங்கியிருக்கையில் நீங்கள் அன்னையிடம் சென்று இக்கணையாழியை பெற்று வந்திருக்கிறீர்கள்" என்றார் ஃபானு.

சுஃபானு "செல்க! ருக்மிணியிடம் செல்க! அவர் மைந்தர்கள் இந்நிலத்தை கொள்வதற்கு விழைகிறார்கள் எனில் ஒருபோதும் ருக்மிணி தன் சொல்லை அளிக்கமாட்டார். தந்தை அடைந்தது ஷத்ரியர்கள் மேல் முழு வெற்றி. மீண்டும் ஷத்ரியர்களிடம் இந்நகர் சென்று சேர்வதை அவர் விரும்பமாட்டார். ருக்மிணியிடமிருந்து ஒருபோதும் ஓலை வராது" என்றார். "நான் சென்று வாங்கி வருகிறேன். எட்டு அரசியரும் அவரது எட்டு தோற்றங்களன்றி வேறல்ல என்பதை இளமை முதலே அறிந்து வளர்ந்து வந்தவன் நான். ஷத்ரிய அரசியை நான் அறிவேன். அவரிடமும் சொல் பெற்றுவருகிறேன்" என்று சொல்லி எழுந்துகொண்டேன். "நன்று, அதன்பின் நாம் பேசுவோம்" என்று ஃபானு புன்னகைத்தார். தலைவணங்கி நான் வெளியே சென்றேன்.

# கல்பொருசிறுநுரை - 9

**பகுதி மூன்று : ஒழியா நாற்களம் – 4**

எந்தச் சொல்லுடன் அரசி ருக்மிணியை சென்று பார்ப்பது என்று நான் முடிவு செய்திருக்கவில்லை. அரண்மனையின் இடைநாழியில் தயங்கியபடி நடந்து கொண்டிருக்கும்போது என்னை இரு ஏவலர்கள் வந்து சந்தித்தனர். சொற்களாலும் விழிகளாலும் என்னை பற்றிக்கொண்டனர் என்று சொல்வதே சரி. "துவாரகையின் அரசர் தங்களை அழைக்கிறார்" என்றனர். அச்சொல் என்னை எரிச்சல்படுத்தியது. துவாரகையின் எல்லைக்குள் அரசர் என்ற சொல்லை ஒருவருக்கன்றி பிறருக்கு பயன்படுத்தலாகாதென்று என் அகம் உணர்வதுண்டு. "இங்கே அரசர் ஒருவரே. அவர் இப்போது நகருக்குள் இல்லை. நீங்கள் கூறும் அரசர் எவரையும் எனக்குத் தெரியாது" என்று நான் சொன்னேன்.

காவலர்தலைவன் "தாங்கள் வருவது நன்று. துவாரகைக்கும் யாதவநகரிக்கும் இன்று அரசர் ஒருவரே. அரசர் பிரத்யும்னனின் ஆணை இது. தாங்கள் மறுத்தால் படைக்கலம் நீக்கி சிறைசெய்து அழைத்துச்செல்ல வேண்டியிருக்கும், எங்களுக்கான அரசாணை அது" என்றான். அந்த ஆணையிலிருந்த அறியாமை என்னை புன்னகைக்க வைத்தது. "நன்று!" என்றபின் அவர்களுடன் சென்றேன். அவர்கள் சிறு நிறைவை அடைந்தனர். அவர்களும் பூசலை விரும்பவில்லை. ஏனென்றால் பூசல்கள் ஒவ்வொன்றும் துவாரகையில் உடனடியாக வளர்ந்தன. அதில் ஈடுபட்டவர்கள் பின்னர் நெடுநாட்களுக்கு அதிலிருந்து விடுபட முடியாது.

அரண்மனையின் அப்பகுதி மகரக்கொடிகளுடன் திகழ்ந்தது. பிரத்யும்னன் தனக்கென முதலையை அடையாளமாகக் கொண்டிருப்பதை நான் அறிந்திருந்தேன். ஆனால் அனைத்து நுழைவாயில்களுக்கு மேலும் முதலைமுத்திரை இருப்பதையும், துவாரகையின் கொடி அங்கே தாழ்ந்தே பறப்பதையும் விந்தையாகவே பார்த்தேன். பலமுறை துவாரகையின் அரண்மனைக்குள் வந்து சென்றிருந்தாலும்கூட அவ்வாறு ஒரு அரண்மனையே பல நாடுகளாக பிரிந்திருக்கும் என்பதை என்னால் எண்ணிப்பார்க்க முடியவில்லை. அதற்கும் சேர்த்தே அவ்வரண்மனையை அத்தனை பெரிதாக நீங்கள் படைத்தீர்கள் என்று எண்ணியபோது உண்மையில் சிரிப்புதான் வந்தது. அகன்ற படிகளில் ஏறி மேலே சென்றோம். முதல் மாடத்திற்கு மேலிருந்த இளஞ்சிவப்புப் பளிங்காலான அவைக்கூடத்திற்கு அழைத்துச் சென்றனர். அழைப்பு வந்து நான் உள்ளே சென்றேன். அங்கே பிரத்யும்னனும் தம்பியரும் அமர்ந்திருந்தனர்.

நான் தலைவணங்கி "இளவரசருக்கு வணக்கம். என்னை அழைத்து வரும்படி சொன்னதாக அறிந்தேன்" என்றேன். சுதேஷ்ணன் எரிச்சல் தெரிய "இங்கு அனைவரும் அரசர் என்ற சொல்லையே பயன்படுத்துகிறார்கள்" என்றார். "நானும் பயன்படுத்துகிறேன். முறைப்படி முடிசூடிய பின்னர். இந்நகர் துவாரகையின் அரசருக்குரியது, அவர் தொட்டு எடுத்துச் சூட்டும் மணிமுடியே முறைமைகொண்டது" என்று நான் சொன்னேன். சுதேஷ்ணன் மேலும் ஏதோ சொல்வதற்குள் பிரத்யும்னன் கைநீட்டி அவரைத் தடுத்து "நாம் இப்போது பூசலிட வேண்டியதில்லை. நிகழ்ந்தது அனைத்தையும் நாங்கள் அறிவோம். எங்கள் ஒற்றர்கள் அனைத்து இடங்களிலும் இருக்கிறார்கள்" என்றார். நான் "அறிவேன்" என்றேன். "தாங்கள்

அன்னையை சந்திக்கப் போகிறீர்கள் அல்லவா?" என்றார் பிரத்யும்னன். "ஆம், அதற்கு ஏதும் தடை உண்டா?" என்றேன். "தடையில்லை, தாங்கள் சந்திக்கலாம்" என்றார் பிரத்யும்னன்.

"ஆனால் அன்னையிடம் கூறுக, அரசர் இங்கு வருவதை நாங்கள் விரும்புகிறோம் என்று! அதில் எங்களுக்கு எந்தத் தடையுமில்லை. அதை எங்கள் சொல்லில் இருந்து பெற்று அவரிடம் சொல்லவேண்டும் என்பதற்காகவே தங்களை இங்கு அழைத்தோம்" என்று பிரத்யும்னன் சொன்னார். "நன்று, பிறகென்ன?" என்று நான் சொல்லி எழப் போனேன். இளையவரான சாரகுப்தன் "சற்று பொறுங்கள். ஆனால் அரசியிடம் சொல்லவேண்டியவை மேலும் சில உள்ளன. தந்தை இங்கு வரட்டும், ஆனால் அவர் வருவது ஒரு செயலின் பொருட்டே என்றிருக்கவேண்டும். முறைப்படி துவாரகையின் அரசரென மூத்தவர் பிரத்யும்னன் முடிசூட வேண்டும்" என்றார். நான் புன்னகைத்து "நான் அவருக்கு அந்த ஆணையை முறைப்படி பிறப்பிக்க வேண்டும் அல்லவா?" என்றேன்.

"ஏளனம் புரிகிறது. ஆனால் ஆணைதான் அது. எங்கள் ஆணை அல்ல, வேதமரபின் ஆணை. பாரதவர்ஷத்தின் நெறிகளின் ஆணை. நாங்கள் ஷத்ரிய குடிப்பிறந்தவர்கள், மண்ணாளும் உரிமை ஷத்ரியர்களுக்கு வேதங்களால் வழங்கப்பட்டுள்ளது. தன்னை எதிர்ப்பவர் அனைவரையும் வென்று மண்ணைக் கொள்ளும் உரிமையும் பொறுப்பும் ஷத்ரியனுக்கு உண்டு. அவன் அதில் தவறினால் பழி வந்து சேரும். எங்கள் அன்னை யாதவ அரசரால் மணம்கொள்ளப்பட்டபோது இந்நிலம் அவர் வயிற்றில் பிறந்த மைந்தர்களுக்குரியது என்று இயல்பாகவே முடிவெடுக்கப்பட்டிருந்தது. அன்று அதை எவரும் மறுக்கவில்லை. இங்கு அரசியர் எண்மர் இருந்தபோதிலும்கூட

பெரும்பாலும் அரசர் அமர்ந்த அவைக்கூடங்கள் அனைத்திலும் பட்டத்தரசியென எங்கள் அன்னையே அமர்ந்திருக்கிறார் என்பதே அதற்குச் சான்று. என் அன்னைக்குரியது இந்த நிலம், ஆகவே எங்களுக்குரியது.”

“இதை குருதி உரிமையின் அடிப்படையில் எதிர்க்கிறார்கள் யாதவர்கள். எண்ணிக்கையின் அடிப்படையில் எதிர்க்கிறார்கள் அசுரக்குருதி கொண்டவர்கள். அது எப்போதும் அப்படித்தான், இங்கே ஷத்ரியர்கள் வெல்ல வேண்டியவர்கள் யாதவர்களும் நிஷாதர்களும் அசுரர்களுமாகவே இருந்திருக்கிறார்கள். அவர்களின் மேல் எங்கள் கோல் நின்றாக வேண்டும். அதற்குரிய ஆற்றல் எங்கள் கோலுக்கு இருக்கிறதா என்று அறியும் பொருட்டே இவ்வாறு நிகழ்ந்ததென்று கொள்கிறோம். அன்னையிடம் கூறுக, அவர் தந்தை இங்கு வரவேண்டுமென்று சொல்லளிப்பாரென்றால் எதன்பொருட்டென்றும் ஒரு சொல் அதில் சேர்த்துக்கொள்ளவேண்டும்!” என்றார் பிரத்யும்னன். “இந்த அரசின் பொறுப்பை என்னிடம் பலமுறை அரசர் அளித்ததுண்டு. பல களங்களில் அரசரின் வாள்துணைவனாக நின்றவன் நான். மரபால் மணிமுடியும் வீரத்தால் உடைவாளும் எனக்குரியவை.”

எவ்வுணர்வையும் வெளிக்காட்டாமல் “நான் இவ்வாணையை அரசியிடம் தெரிவிக்கிறேன்” என்றேன். “ஆம், இது ஆணையேதான். துவாரகையின் செங்கோலை நான் கையிலெடுத்துவிட்டேன், மணிமுடி என் அருகேதான் இருக்கிறது. நம்மைச் சூழ்ந்துள்ள இணையரசர்கள் பன்னிருவர் எங்களை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். நக்னஜித்தியின் மைந்தர்கள், மித்ரவிந்தையின் மைந்தர்கள், பத்ரையின் மைந்தர்கள், லக்ஷ்மணையின் மைந்தர்கள் எங்களுடன்தான்

இருக்கிறார்கள். ஆகவே நாங்கள் எவருக்கும் பணியவேண்டிய தேவையில்லை.” நான் “இல்லையே, லக்ஷ்மணையின் மைந்தர்கள் நிலைபாடு கொள்ளவில்லை என்றல்லவா அறிந்தேன்?” என்றேன். “அவர்கள் இங்குதான் வருவார்கள். வேறுவழியில்லை. சிம்மனும் பலனும் பிரபலனும் எங்களுடன்தான் இருக்கிறார்கள். ஊர்த்துவாகனும் ஓஜஸும் மகாசக்தனும் எங்களுடன் பேசிக்கொண்டிருக்கிறார்கள். மூத்தவர் பிரகோஷனுக்கு சில ஐயங்கள் உள்ளன. அவை பேசித் தீர்க்கப்படவேண்டியவை மட்டுமே.”

“ஆகவே சென்று கூறுக, எங்கள் வெற்றி உறுதி என! பெரும்படையுடன் ருக்மி இந்நகருக்குள் புகுந்துகொண்டிருக்கிறார். எத்தருணத்திலும் விதர்ப்பம் துவாரகையுள் நுழைந்து துவாரகையை வென்று மணிமுடியை எனக்கு அளிக்க முடியும். அதை எதிர்க்கும் ஆற்றல் இன்று அஸ்தினபுரிக்கோ பிற நகர்களுக்கோ இல்லை. விருஷ்ணிகள் பெரும்பாலானவர்கள் போரில் அழிந்திருக்கிறார்கள். இங்கு எஞ்சுபவர்களில் பெரும்பாலானோருக்கு படைக்கலப் பயிற்சி கிடையாது. ஆனால் விதர்ப்பம் குருக்ஷேத்ரப் பெரும்போரில் இடம் பெறவில்லை, நடுநிலைகொண்டது. பின்னர் முற்றாக ஒதுங்கிக்கொண்டது. ஆகவே அப்படைகள் அழியாமல் அவ்வண்ணமே எஞ்சியுள்ளன. துவாரகையுடன் கணக்கை முடிக்கும்பொருட்டே மாதுலர் ருக்மி அந்நிலைபாட்டை எடுத்திருக்கிறார். இன்று திரண்டு சென்றால் அஸ்தினபுரியை கைப்பற்றவும் விதர்ப்பத்திற்கு படையாற்றல் உண்டு.”

“மாதுலர் ருக்மி வஞ்சினம் கொண்டிருக்கிறார். அனல்வண்ண மகாருத்ரர் எனத் திகழ்கிறார். அவருடைய படைகள் அவரைப்போலவே வெறிகொண்டிருக்கின்றன. அவரை

இந்நகருக்குள் நுழையவேண்டாம் என்று நான் தடுத்து வைத்திருப்பது ஒன்று கருதி மட்டுமே. என் தந்தை உருவாக்கிய நகரம் இது. அதை அவரது எதிரி வென்றார் என்ற பழி உருவாக நான் வழிவகுக்கக்கூடாது என்பதனால். துவாரகைக்குமேல் விதர்ப்பத்தின் கொடி பறக்கலாகாது என்பதனால். விதர்ப்பத்தின் அளிக்கொடையென துவாரகை என் கைக்கு வந்தால் அது எனக்கும் சிறுமை. ஆனால் இங்குளோர் உண்மையுணராது இவ்வண்ணமே பூசலிட்டுக்கொண்டிருப்பார்கள் எனில் எனக்கு வேறு வழியில்லை என்றாகும்."

"அன்னையிடம் கூறுக, அவருடைய கொழுநர் உருவாக்கிய இப்பெருநகரை அவர் தமையர் வெல்வது அவருக்கு உகந்ததா என்று! அவ்வழிவை கொண்டுவந்தவர் அவர் என்று காலம் சொல்லலாகும். ஷத்ரிய அரசி யாதவரை முற்றழித்தார் என்று சூதர் நாச்சொல் உரைக்கக்கூடும். அவ்வாறு நிகழாமல் தடுக்க வேண்டுமெனில் தந்தை வந்து எங்களுக்கு மணிமுடி சூட்டுவதே வழி என்று அவர் உணரட்டும். யாதவ அரசிபோல முத்திரை மோதிரம் அல்ல, தெளிவாக எழுதப்பட்ட ஓர் ஓலையையும் அவர் அளிக்கட்டும். எங்களை சந்தித்த பிறகே அவரை சந்திக்கச் செல்கிறீர்கள் என்பது அவருக்கு ஏற்கெனவே தெரிந்திருக்கும். நாங்கள் கூறியதென்ன என்று அவர் கேட்பார். நாங்கள் கூறியதை அவரிடம் கூறுக!" என்றார் பிரத்யும்னன். அவருடைய இளையவர்கள் சூழ்ந்து நின்றிருந்தனர். அவை அவர்களின் சொற்கள் என விழிகள் காட்டின. சாருசந்திரன் மெல்லிய உறுமலோசை எழுப்பினார்.

நான் "இவற்றை ஏற்கெனவே நீங்கள் அரசியிடம் பேசியிருக்கிறீர்கள் அல்லவா?" என்றேன். "பலமுறை

பேசியிருக்கிறோம். அவர் எங்கள் சொற்களை செவிகொள்வதாகவே தெரியவில்லை. இப்போதெல்லாம் அரசுசூழ்தல் குறித்து பேசுவதற்கு எங்களுக்கு ஒப்புதலும் கிடைப்பதில்லை. மாதுலர் ருக்மியின் படைகள் வந்து அவந்தியின் எல்லைக்கு மிக அருகே பாலையில் தங்கியிருக்கும் செய்தி அவருக்குத் தெரியுமா என்று எனக்குத் தெரியவில்லை. ஆகவே உங்களை அனுப்புவது இதற்குரிய தருணம். நீங்கள் தந்தையின் பெயரை சொல்லும்போது அவர் உள்ளம் திறக்கலாம். அப்போது இச்செய்தியை அவரிடம் சொல்க, அவர் நிலைமையை புரிந்துகொள்ளட்டும்" என்றார் சுதேஷ்ணன். "உங்களுக்கும் வேறுவழியில்லை, சொல்லியே ஆகவேண்டும்" என்றார் பிரத்யும்னன்.

"வேறேதும் உண்டா?" என்றபடி நான் எழுந்துகொண்டேன். "நீங்கள் எங்களை எளிதாக எண்ணிவிட்டீர்கள். ஐயம் தேவையில்லை, உடன்குருதியினரே ஆயினும் முடிக்கு எதிராக எழுவார்கள் என்றால் கொல்வதற்கு ஷத்ரியர்களுக்கு உரிமை உண்டு. யாதவர்களையும் அசுரக்குருதி கொண்டவர்களையும் முற்றிலும் கொன்றொழித்து முடிசூடுவது என்றாலும் எனக்கு எவ்வகைத் தயக்கமுமில்லை. ஒருகணமும் பிறிதெண்ணாமல் நாங்கள் அதை செய்வோம். எண்ணுக, ஷத்ரியரே அதை செய்யமுடியும், யாதவரால் அவ்வண்ணம் தங்கள் எல்லைகளைக் கடந்து எழமுடியாது! எதற்கும் தயங்காதவர்களுக்குரியது மணிமுடி என்கின்றன நூல்கள். எதற்கும் தயங்காத மாதுலரும் எங்களுடன் உள்ளார்" என்றார் பிரத்யும்னன். நான் புன்னகைத்து "எதற்கும் தயங்காத மாதுலர்கள் எழுந்தபடியே இருக்கிறார்கள்" என்றேன்.

சுதேஷ்ணன் சீற்றத்துடன் "முட்பேச்சுக்கள் தேவையில்லை. எங்கள் மாதுலர் சூழ்ச்சி சொல்பவர் அல்ல, வாள்கொண்டு படைதிரட்டி களமெழ வந்து நிற்பவர்" என்றார். "இந்நகருக்குள் பெரும்புகழ் கொண்ட இளைய யாதவரின் மைந்தர்கள் ஒருவருக்கொருவர் வெட்டி உயிர்துறந்தனர் என்றாகவேண்டாம் என்பது ஒன்றே என்னை கட்டுப்படுத்துகிறது" என்றார். பின்னர் அமர்ந்துகொண்டு "அதற்கப்பால் எனக்கு சொல்வதற்கு ஒன்றுமில்லை" என்றார். நான் "இவ்வனைத்தையும் ஊழ் நிகழ்த்துகிறதென்றால் உங்கள் தந்தை வந்து என்ன செய்யமுடியும்?" என்றேன். "இங்கு சிலரிடம் இன்னமும் திகழ்வது அவரது சொல். அவர்களின் மேல் படைக்கலவெற்றியை நான் ஈட்ட முடியும், ஆனால் அதற்குமுன் அனைத்து வழிகளையும் அரசன் என நான் உசாவவேண்டும்" என்றார் பிரத்யும்னன்.

"இன்று நான் முடிசூட தந்தைசொல் தேவையில்லை. ஆனால் நாளை ஒருநாள் என் கொடிவழியினரை எதிர்ப்பவர்கள் தந்தைசொல் இன்றி சூடப்பட்ட முடி என கூறக்கூடும். என் கொடிவழியினரே அவ்வாறு சொல்லி பூசலிடக்கூடும். ஆகவே அவர் சொல் தேவையாகிறது. அதற்காகவே அவர் வருவதை விழைகிறேன். என்னை அரசமர்த்தும் சொல்லுடன் அவர் வரட்டும்" என்று பிரத்யும்னன் தொடர்ந்தார். எழுந்து என் அருகே வந்தார். அருகே வந்தபோது அவர் தோற்றமளித்த அளவுக்கு உறுதியுடன் இல்லை என்பதை உணர்ந்தேன். அவர் உடலும் அசைவும் உறுதியைத்தான் காட்டின. ஆனால் என் அகம் அவருடைய நிலைகொள்ளாமையை, நடுக்கத்தை உணர்ந்தது. அவர் எப்போதும் அந்நிலையில்தான் இருந்துகொண்டிருக்கிறார் என்று தோன்றியது.

“யாதவர்கள் இங்கே என்னை முதன்மையாக எதிர்க்கிறார்கள். அசுரர்களுக்கும் நிஷாதர்களுக்கும் அவர்கள் அமைக்கும் புறநாடுகளை துவாரகை ஏற்கும் என்னும் சொல்லுறுதியே போதும். யாதவர்களுக்கு இந்நகரமே தேவை. அவர்களை இங்கு நிலைநிறுத்துவது ஒன்றுதான். மதுரையை ஆளும் மூத்தவர் பலராமர் சத்யபாமையின் மைந்தர் ஃபானுவையே முடிசூட்ட விரும்புகிறார். விருஷ்ணிகளும் அந்தகர்களும் போஜர்களும் ஒன்றே என எண்ணிக் கொண்டிருக்கிறார்கள் பலராமரும் அவருடைய அணுக்கர்களும். விருஷ்ணிகளில் ஒருவர் முடிசூடினால் அந்தகர்களுக்கும் போஜர்களுக்கும் அரசுமீது எவ்வுரிமையும் இல்லை என்று சொல்லி பரப்பி அவர்களுக்கிடையே நாங்கள் பூசலை உருவாக்கி வைத்திருக்கிறோம். அப்பூசலே இங்கே ஒரு அசைவின்மையை உருவாக்கியிருக்கிறது.”

“ஆனால் ஒருவேளை பலராமர் இங்கு வருவார் என்றால், ஓர் அவையில் அனைவரையும் அமரச்செய்வார் என்றால், அவரது ஆணையை அவர்கள் தலைக்கொள்ளக்கூடும். அவர்கள் ஒருங்கிணைந்தால் நாங்கள் அஞ்சவேண்டிய ஆற்றல்தான் அது. அப்போது மாதுலர் ருக்மி கோசலநாட்டுப் படையும் அவந்தியின் படையும் துணைக்க நகர்நுழையாமல் இம்முடியை நாங்கள் கொள்ள இயலாது. துவாரகையின் நிலத்தில் அதன் குடிகளாகிய யாதவர்கள் கொன்று ஒழிக்கப்படாமல் இங்கு ஒரு மணிமுடி நிலைகொள்ளவும் இயலாது. யாதவரின் நலம்நாடும் நீங்கள் இதை யாதவர்களிடம் சொல்லுங்கள். இந்நிலைமை இங்கு உருவாகவேண்டாம் என அரசியிடமும் கூறுங்கள்.”

“ஆம், நான் அரசியிடம் அனைத்தையும் சொல்கிறேன்” என்று சொல்லி எழுந்துகொண்டேன். வெளியே செல்கையில் என்னால் சிரிக்காமல் இருக்க இயலவில்லை. என்ன நிகழ்ந்துகொண்டிருக்கிறது என்பதை முன்னரே அறிந்திருந்தாலும்கூட அது அவ்வளவு தெளிவான சொற்களாக எழுந்து வந்து கண்முன் நிற்பதைக் கண்டபோது திகைப்புக்கு மாறாக சலிப்பும் நகைப்புமே தோன்றியது. உண்மையில் சென்று அரசியை பார்க்கவேண்டுமா, அதனால் ஏதேனும் பயனுண்டா என்றே எண்ணினேன். நான் எடுத்த செயல் முறையானதுதானா? ஆனால் இனி அதை தவிர்க்க இயலாது. மேலும் அரசியின் உளநிலை என்னவாக இருக்கும் என்பதை அறிய விரும்பினேன். அரசியை காணவேண்டுமென்று ஏவலனிடம் சொல்லி அனுப்பினேன்.

ஒழிந்து ஆகவே பொடிபடிந்து கிடந்த இடைநாழியினூடாக அரசி ருக்மிணி தங்கியிருந்த மாளிகையை நோக்கி சென்றேன். கிழக்கு நோக்கி அமைந்திருந்த அந்த மாடம் அரண்மனையிலிருந்து தனித்து பிரிந்து சென்ற பாதையால் ஆனது. அதனூடாக நடந்து செல்கையில் பலநூறு விழிகள் என்னை பார்ப்பதை உணர்ந்தேன். துவாரகையின் ஏவலரும் சேடிப்பெண்டிரும் அமைச்சர்களும் அனைவருமே அங்கு என்ன நிகழ்கிறதென்று அறிந்திருந்தனர். குடிகளும் அறிந்திருக்கலாம். முதலில் இவ்வண்ணம் தங்களுக்குள் பூசலிடுவது அவர்களுக்கு அளித்திருந்த பதற்றமும் உளக்குழப்பங்களும் மறைந்து ஒவ்வொருவரும் அந்த நாற்களமாடலில் ஒரு பகுதியை

விரும்பி ஆடத்தொடங்கிவிட்டிருந்தனர். ஒவ்வொருவருக்கும் களத்தில் காய்கள் இருந்தன. ஒவ்வொருவரும் கதைகளை புனைந்து கொண்டிருந்தனர். வென்று தோற்று வெறிகொண்டு எழுந்து ஆடிக்கொண்டிருந்தனர்.

ஒவ்வொருவரும் தங்களுக்குரிய கதை ஒன்றை புனைவது ஏன் என்று எண்ணிப்பார்த்தேன். தங்களுக்கும் வரலாற்றில் ஒரு பங்குண்டு என்று ஒவ்வொருவரும் எண்ண விழைகிறார்கள். அத்தனை பேரும் தங்களுக்கு அணுக்கமான ஒருவர் அரண்மனையின் முக்கியமான பொறுப்பில் இருக்கிறார் என்றும், அவர் தன்னிடம் தனியாக இதை சொன்னார் என்றும் சொல்லிக்கொண்டார்கள். பிற எவருக்கும் தெரியாத மந்தணம் ஒன்று ஒவ்வொருவருக்கும் தெரிந்திருந்தது. எண்ணி நோக்குகையில் சொல்லிச் சொல்லி பெருக்கப்பட்ட பொய்யான அரசியலையே மெய்யான அரசியல் தயங்கித் தயங்கி பின்தொடர்கிறது என்று தோன்றியது. சூழ்ச்சிகள், அடிவெட்டுகள், எண்ணாத திசைக்கு எழுந்து சென்று அமரும் தாவுதல்கள், எண்ணி எண்ணி எழும் அச்சங்கள், பெருக்கிப்பெருக்கி வானில் நிறுத்தும் ஐயங்கள். அவையே வரலாறு. அவை நுரையென அடங்கியபின் எஞ்சும் வண்டலென நாம் அடையும் சென்றகாலத்துச் செய்திகள் அல்ல.

மானுட உள்ளம் இங்கு நிகழும் வாழ்க்கையை நோக்கிக்கொண்டிருக்கிறது. அது பொருட்களால் நிகழ்கிறது, உயிர்களால் இயற்றப்படுகிறது. அவர்களுக்கு அது போதவில்லை. ஒளியாலும் காற்றாலும் காலத்தாலும் அது நிகழவேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். அவை அனைத்தையும் இணைத்து சொல்லால் அவற்றை

நிகழ்த்திக்கொள்கிறார்கள். கற்பனையால் மேலும் பெருக்கிக்கொள்கிறார்கள். அரசே, அரசியலென்பது குடிகளின் கண் முன் நிகழும் மாபெரும் கூத்து, குடிகளின் முன் வெல்ல வேண்டும் என்பதற்காக ஒவ்வொருவரும் அக்கூத்தில் ஈடுபடுகிறார்கள். குறைந்துவிடலாகாது என்று, ஆணவம் தாழ்ந்துவிடலாகாது என்று, நாளை வரலாறு சொல்லும் என்று, இன்று குடிகள் என்ன எண்ணுகிறார்கள் என்று, இழிபெயர் வந்து அமையும் என்று எண்ணிக்கொள்கிறார்கள். அவ்வாறு எண்ணும் ஒவ்வொருவரும் தங்களை நடிகர்கள் என்றே உணர்கிறார்கள்.

நடிகர்கள் அறியாத ஒன்று உண்டு, எந்த நாடகத்தையும் வடிவமைப்பவர்கள் பார்வையாளர்களே. அவர்களின் பாராட்டும் சலிப்பும் எதிர்பார்ப்பும் பெருவிசையென எழுந்துவந்து நடிகனின் கால்களை பற்றிக்கொள்கின்றன. அவனை நடிக்க வைக்கின்றன. சொல் கூட்டச் செய்கின்றன. எழவும் விழவும் ஆணையிடுகின்றன. நானும் நடிகனே என்று உணர்ந்தபோது உண்மையில் என் உளம் அங்கிருந்து விலகி ஓடிவந்துவிட்டது. ஒருகணமும் அங்கு இருக்கலாகாது என்று தோன்றியது. ஆனாலும் நான் அந்த நாடகத்தை நடித்தே ஆகவேண்டும் என்று உணர்ந்தேன்.

அவையிலிருந்து பின்னால் எவரோ என்னைத் தொடர்ந்து வருவதை உணர்ந்தேன். காலடியோசை கேட்டு நின்றேன். என்னைத் தொடர்ந்து வந்த காவலன் மூச்சுவாங்க நின்று "ஒரு சொல் தங்களிடம் பேசவேண்டும் என இளவரசர் விழைகிறார்" என்றான். "யார்?" என்றேன். "இளவரசர் சாருதேஷ்ணன். அவர் உங்களை அழைத்துவரச் சொன்னார்." நான் எதையோ மணம்பெற்றுவிட்டிருந்தேன். ஆகவே உடன் சென்றேன். சிற்றறைக்குள் இளவரசர் சாருதேஷ்ணனும் சாருசந்திரனும்

விசாருவும் இருந்தனர். நான் தலைவணங்கி முகமன் உரைத்தேன். அமர்க என அவர் கைகாட்டினார். நான் அவர் பேசுவதற்காக காத்திருந்தேன்.

அவர் என்னிடம் பேச சொற்கூட்டிக்கொண்டிருந்தார். பின்னர் முதற்சொல்லை எடுத்தார். "மூத்தவர் அங்கே பேசியவற்றை கேட்டேன். நன்று! அங்கே நீங்கள் உரைத்தவையும் நன்றே" என்றார். "ஆம்" என்று பொதுவாக சொன்னேன். "நான் ஒன்றை மட்டும் சொல்ல விழைகிறேன். அங்கே பேசியபோது மூத்தவர் அசுரர்களைப் பற்றி ஒரு நற்சொல் உரைத்ததை கேட்டிருப்பீர்கள்" என்றார் சாருதேஷ்ணன். "ஆம்" என்றேன். "அவர் அவ்வாறுதான் சொல்லமுடியும். ஏனென்றால் இளமையிலேயே அவர் சம்பராசுரரால் கொண்டுசெல்லப்பட்டவர். சம்பராசுரரின் அரண்மனையில் வளர்ந்தவர். இன்றும் சம்பராசுரரை தன் தந்தையின் இடத்திலேயே வைத்திருக்கிறார். அசுரகுலத்தைச் சேர்ந்த வஜ்ரநாபரின் மகள் பிரபாவதியை மணந்தவர். பிரபாவதியின் மைந்தர்கள் வஜ்ரபாகுவும் வஜ்ரகீர்த்தியும் இன்றும் வஜ்ரநாபரின் அரண்மனையிலேயே வளர்கிறார்கள்."

நான் "ஆம்" என்றேன். அவர் செல்லும் திசை எனக்கு புரிந்துவிட்டது. "அவர் மைந்தன் அனிருத்தனோ பாணாசுரரின் மகள் உஷையை மணந்திருக்கிறான். உஷையின் மைந்தன் வஜ்ரநாபனை தன் முதன்மைப் பெயரனாக சடங்குசெய்து அமர்த்தியும் இருக்கிறார்" என்று சாருதேஷ்ணன் சொன்னார். "எண்ணும் திறன்கொண்ட எவரும் உய்த்துணரும் வினா ஒன்று உண்டு. பாரதவர்ஷத்தில் என்றும் ஷத்ரியர்களுக்கு முதன்மை எதிரிகள் அசுரர்களே. ஷத்ரியர்களின் மண்ணையும் முடியையும் கொள்ள நினைப்பவர்கள் அசுரர்கள்.

அசுரக்குருதியுடன் இவ்வண்ணம் இணைந்துள்ள ஒருவர் எப்படி ஷத்ரிய குடியின் அரசர் என்று ஆகமுடியும்? எதை நம்பி அவரை ஏற்கமுடியும்?" என் விழிகளை நோக்கியபோது அவர் விழிகள் சற்று பதறின. "இதை நான் கேட்கவில்லை. இங்குள்ள ஷத்ரியர்கள் கேட்கிறார்கள்."

"இதை நீங்களே உங்கள் மூத்தவரிடம் சொல்லலாமே?" என்றேன். "சொல்லும் காலம் வரவில்லை. இதை முதலில் உணரவேண்டியவர் மாதுலராகிய ருக்மி. அவர் ஷத்ரியப் பெரும்படையுடன் அரசமையச் செய்யவிருப்பது அசுரர்களுக்கு உகந்த ஓர் அரசரை என அவரிடம் சொல்லியாகவேண்டும்" என்று சாருதேஷ்ணன் சொன்னார். "ஆனால் நெடுங்காலம் இவ்வுண்மையை அவரிடமிருந்து மறைக்க முடியாது. இப்போதே ஷத்ரியர்களிடம் பேச்சுக்கள் தொடங்கிவிட்டன." நான் "இதில் நான் செய்வதற்கு என்ன உள்ளது?" என்றேன். "நீங்கள் ஒன்று செய்யலாம். அன்னையிடம் சொல்லுங்கள், அரசர் இங்கே வரும்போது அவர் கையால் முடிசூட்டப்படவேண்டியவர் எவர் என முன்னரே அவர் அறிவிக்கவேண்டியதில்லை என. அவர் தன் விருப்பத்தை அவைகூடி அனைவருடைய ஒப்புதலையும் பெற்றபின் அறிவிக்கட்டும்."

"ஆனால் உங்கள் மூத்தவரின் ஆணை அதுவல்ல" என்றேன். "ஆம், அதை நான் அறிவேன். மைந்தரில் ஒருவருக்கு முடிசூட்ட அரசர் இங்கே வரவேண்டும் என அன்னை சொல்லட்டும். அது மூத்தவர் என்று உட்குறிப்பு உள்ளது என அவர் நினைக்கட்டும். அரசர் வந்தபின் அவையில் ஷத்ரியர் எழுந்து தங்கள் ஐயத்தை சொல்லட்டும். யாதவக்குருதியின் கொடிவழியில் அசுரக்குழவி பிறந்தால் அது யாதவர்கள்

தங்களைத் தாங்களே தோற்கடித்துக்கொள்வது அல்லவா?” என்றார் சாருதேஷ்ணன். “இளவரசே, கார்த்தவீரியர் அசுரக்குருதி கொண்டவர். இளைய யாதவரே லவணகுலத்து மரீஷையின் குருதியிலிருந்து வந்தவர்” என்றேன். “ஆம், ஆகவேதான் தூய ஷத்ரியக்குருதியே அவர்களை மேம்பாடுகொள்ளச் செய்யும் என்கிறேன். வேதத்துணை அவர்களுக்கு அவ்வாறுதான் அமையமுடியும். இங்கே நாற்குலங்களும் ஷத்ரியர்களாக ஆகவே முயல்கின்றன. மேலெழுந்து வந்த யாதவகுலம் ஏன் கீழிறங்கி அசுரர்களாகவேண்டும்?”

“நான் இதை அரசியிடம் சொல்கிறேன்” என்றேன். “அவருக்கும் இது புரியும். அனைத்துக்கும் அடியில் அவரும் ஷத்ரியர்தான்” என்று சாருதேஷ்ணன் சொன்னார். “அவரை எந்தை மணந்ததேகூட யாதவக்குருதிக்கு ஷத்ரியத்தூய்மை அமையட்டும் என்றுதான். கலங்கிய நீரை நன்னீர் கலப்பு தெளியவைக்கும்.” நான் புன்னகைத்தேன். “இன்று என்னுடன் கேகயத்து அரசி பத்ரையின் மைந்தர் சங்க்ரமஜித்தும் அவந்தியின் அரசி மித்ரவிந்தையின் மைந்தர் விருகனும் இணைந்திருக்கிறார்கள். கோசலத்து அரசி நக்னஜித்தியின் மைந்தர்களுடன் பேசிக்கொண்டிருக்கிறோம். இங்கே தூய ஷத்ரியக்குருதி நிலைகொள்வதே உகந்தது என அனைவரும் எண்ணுவார்கள்...” நான் நீள்மூச்சுடன் “இதையும் அரசியிடம் சொல்கிறேன், இளவரசே” என்றேன். “ஆகுக!” என அவர் சொன்னார்.

# கல்பொருசிறுநுரை - 10

**பகுதி மூன்று : ஒழியா நாற்களம் – 5**

அமைச்சவையின் சிறுகூடத்தில் காத்திருந்தபோது அரசி ருக்மிணி என்னை அவைக்கு வரச்சொன்னார் என்று ஏவலன் வந்து சொன்னான். நான் எழுந்து ஒளிபட்டு நீர்மையென மின்னிக்கொண்டிருந்த பளிங்குச்சுவரில் என் ஆடையை பார்த்தேன். ஓர் அரசவையில் புகுவதற்கான ஆடையை நான் அணிந்திருக்கவில்லை. தாடியையும் குழலையும் கைகளால் நீவி முடிச்சிட்டு ஓரளவுக்கு நேர்படுத்திக்கொண்டு கீழே உப்புத்துளி நிறைந்த காற்றில் என் மீது படிந்திருந்த வெண்தடங்களை கைகளால் தட்டிக்கொண்டேன். அந்த ஈரத்தில் குளிரில் மூத்த அரசி இயற்றும் தவம் அப்போது என்னை திகைக்கச் செய்தது. அவர் உயிர்விடவே விழைகிறார் என்று தோன்றியது. உப்பென கரைய விரும்புகிறார். உப்பு எப்போதுமே நீர்மை பரவி உருகுநிலையிலேயே உள்ளது.

அரசி ருக்மிணியின் அவைக்குள் நுழைந்தபோது நான் அதைப்பற்றித்தான் எண்ணிக்கொண்டிருந்தேன். துவாரகையின் ஷத்ரியப் பேரரசியின் விரிந்த அவைக்கூடம் பாரதவர்ஷத்தின் பல அரசுகள் வந்து கொலுவிருந்தது, விருந்துகளும் கொண்டாட்டங்களும் நிகழ்ந்திருந்தது. அன்றும் சிறப்பாக அணி செய்யப்பட்டிருந்தது. அனைத்து இருக்கைகளிலும் செம்பட்டுகள் புதிதென விரிக்கப்பட்டிருந்தன. அரியணை சற்று முன் செய்து கொண்டுவந்து வைத்ததுபோல் பொன் துலங்கி, மணிகள் மின்னியது. நான் அங்கிருந்த பீடத்தில் அமரவைக்கப்பட்டேன். என்னைச் சூழ்ந்து அந்த அவை ஒழிந்து காத்திருந்தது.

நெய்விளக்குகளில் சுடர்கள் எரிந்து நின்றன. இளங்காற்றில் உலைந்தன செம்பட்டுத் திரைச்சீலைகள்.

அங்கு முன்பு நிகழ்ந்தவை ஒவ்வொன்றும் எழுந்து வந்து என்னை அறைந்தன. தாள முடியாத உளஏக்கம் எழ உருகி விழிநீர் மல்குவது போலானேன். கடந்தவை இல்லையோ கனவோ என்று எத்தனை விரைவாக மாறிவிடுகின்றன! துவாரகையில் பிறிதொரு பொலிவு நிகழக்கூடும். ஆனால் சென்ற நாட்களின் ஒரு சாயலேனும் மீண்டெழுமா? இழந்தவை என்ன என்று இக்குடிகளுக்கு சற்றேனும் அறிதல் உள்ளதா? இத்தருணத்தில் கையிலிருக்கும் காய்களை வைத்து களமாடுவதற்கு அப்பால் நினைவென்றும் கனவென்றும் ஏதேனும் அவர்களுக்குள் இருக்கிறதா? எத்தனை சிறியவர்கள் மானுடர்கள்! சிறியவர்கள், மிகச் சிறியவர்கள். தங்கள் சிறுமையை உணரும் அளவுக்குக்கூட அறிவற்றவர்கள்.

சங்கொலி எழுந்து, வாழ்த்துக்களுடன் ஒலித்தது. மங்கலத்தாலங்களுடன் சேடியர் முன்னால் வர, கொடியுடன் ஏவலன் பின்னால் வர, பேரரசி ருக்மிணி அவை நுழைந்தார். அவருடன் அரசியர் பத்ரையும் நக்னஜித்தியும் வந்தனர். அவர்கள் எனது வருகை நோக்கத்தை முன்னரே அறிந்திருந்திருக்கிறார்கள் என்பது முகங்களின் இறுக்கத்திலிருந்து தெரிந்தது. பேரரசி முழுதணிக்கோலத்தில் இருந்தார். ஆனால் களைத்திருந்தார். களைத்து, அதை மறைக்கும்பொருட்டு உடலை எழுப்பி நடக்கும் நடைகளை நான் போர்க்களத்திலேயே கண்டிருக்கிறேன். நான்காம்நாள் போர்க்களத்தில் அர்ஜுனன் அவ்வாறுதான் இருந்தார். கண்களைச் சூழ்ந்த கருவளையங்கள். வாயைச் சுற்றி வரிகள். தடித்த இமைகள். கைவிரல்கள் நிலையில்லாமல் ஆடையை

சுழற்றிக்கொண்டிருந்தன. நக்னஜித்தியின் விழிகளில் கூர்மை இருந்தது. அவருடைய ஆடிப்பாவைபோல் இருந்தார் பத்ரை.

அவைமுறைமைகள் நடைபெற்றன. ஓர் அரசனுக்குரிய அவை ஏற்பை எனக்கு அவர்கள் அளிக்கிறார்கள் என்று உணர்ந்தேன். வெள்ளிக்கோலுடன் வந்த நிமித்திகர் "பேரரசி அவையமர்கிறார்!" என்று அறிவித்தார். மூன்று அந்தணர்கள் வணங்கி அரசியை அழைத்துச் சென்று அரியணைப் பீடத்தில் அமரவைத்தனர். இருபுறமும் பீடங்களில் ஷத்ரிய அரசியர் அமர்ந்துகொண்டனர். நான் எழுந்து தலைவணங்கி முறைமை வாழ்த்துகளை தெரிவித்தேன். என்னை அமரும்படி ஆணையிட்டார். நான் அமர்ந்தபின் இன்நீரும் வாய்மணமும் கொண்டுவரப்பட்டது. இயல்பாகவே அந்தச் செயல்கள் என் செயல்களை வகுத்தன. நான் அரசனுக்குரிய எல்லாவற்றையும் செய்தேன்.

"ரிஷபவனத்தின் அரசரும் சத்யகரின் மைந்தருமான யுயுதானன் அரசியை சந்தித்து முகம்காட்டும் பொருட்டு இங்கு வந்துள்ளார்" என்று நிமித்திகர் அறிவித்தார். அப்போதுதான் நான் துவாரகையின் குடிமகன் அல்ல, தொலைநிலமாகிய ரிஷபவனத்தின் அரசன் என்று அங்கே கருதப்படுகிறேன் என்று புரிந்துகொண்டேன். ஒருகணத்தில் எனது பணி முற்றிலும் மாறிவிட்டது. அயல்நாட்டு அரசன் ஒருவன் துவாரகையை ஆளும் அரசியிடம் பேசும் நிலை அங்கு வகுக்கப்பட்டுவிட்டது. அங்கு நான் பேசுவதற்கு ஓர் எல்லையுண்டு. அறைகூவ இயலாது, மன்றாட இயலாது, அந்தத் திருப்பம் எனக்கு வேடிக்கையாகவே இருந்தது. அனைத்தும் வெறும் நடிப்புகள் என்று எண்ணிக்கொண்டிருந்தேன். அந்நடிப்புகளிலேயே

அத்தனை மடிப்புகளும் சுருக்கங்களும் இயல்வது என்பது விந்தையே.

நான் எண்ணுவதை உணர்ந்து "கூறுக!" என்று ருக்மிணிதேவி சொன்னார். "பேரரசி இன்று துவாரகை இருக்கும் நிலை தங்களுக்கு தெரியும். மூன்று தரப்புகளாக இளைய யாதவரின் மைந்தர்கள் பிரிந்திருக்கிறார்கள். ஷத்ரியர்களும் யாதவர்களும் நிஷாதர்களும் மூன்று கோன்மைகளாக நிலைகொள்கிறார்கள். யாதவர்கள் முக்குலங்களாக திரண்டிருக்கிறார்கள்" என்றேன். நக்னஜித்தி இடைமறித்து "திரளவில்லை, பிரிந்திருக்கிறார்கள். அந்தகர்கள், விருஷ்ணிகள், போஜர்கள் என்று பூசலிட்டுக்கொண்டிருக்கிறார்கள்" என்றார். "ஆம், அது அவர்களுக்குள் உள்ள உட்பிரிவு. ஆனால் நம்மை எதிர்த்து அவர்கள் ஒன்றாகிறார்கள்" என்றேன். "நம்மை என்கிறீர்கள், நன்று!" என்று பத்ரை கூறினார். "ஆம், நம்மை என்று கூறுகையில் பிற அனைவரையுமே எண்ணுகிறேன்" என்றேன். "நம்மை என்ற சொல் நம் அனைவரையும் ஆளும் இளைய யாதவரை மட்டுமே குறிக்கிறது" என்றேன்.

சற்றே ஒவ்வாமையுடன் ருக்மிணிதேவி "கூறுக!" என்றார். "இந்நகர் முன்னரே சாம்பனின் ஆட்சியில் உள்ளது. அரசர் நகர்விட்டுச் செல்லும்போது ஆட்சி அவரிடம் வந்தது" என நான் தொடங்கும்போதே நக்னஜித்தி உரக்க "ஆம், ஏனென்றால் அப்போது மூத்தவராகிய பலராமருடன் பிரத்யும்னன் கானேகியிருந்தார்" என்றார். "ஆம், ஆயினும் நகரை அவர் ஆட்சி செய்தார். அன்றே நகரில் அவருடைய காவலும் கோன்மையும் நிகழ்ந்துவிட்டது. இன்று நகரைச் சூழ்ந்திருக்கும் படைவல்லமை அவர்களிடம் உள்ளது. மேலும் மேலும் அசுரர் இந்நகருக்குள் நுழைந்து அவர் தரப்பை

வலுப்படுத்திக்கொண்டிருக்கிறார்கள்" என்றேன். இடைமறித்த பத்ரை "நமது தரப்பை நாம் மேலும் வலுப்படுத்த முடியும். எல்லைக்கப்பால் விதர்ப்பப் பெரும்படையுடன் ருக்மி காத்திருக்கிறார்" என்றார். "அதை நான் அறிவேன்" என்றேன். "நான் சொல்லவருவது அதைத்தான்." நக்னஜித்தி "பாரதவர்ஷத்தின் கண்ணில் பிரத்யும்னனே அரசரின் மைந்தர்" என்றார்.

"பொறு" என்று அவரிடம் கைகாட்டிவிட்டு ருக்மிணி என்னிடம் "அரசியல் சூழலை விளக்கவேண்டியதில்லை தாங்கள். தூதின் நோக்கம் என்ன என்று மட்டும் சொல்க!" என்றார். "பேரரசி, இங்கே எக்கணமும் பூசல் வெடிக்கும். எளிதில் எவரும் வெல்ல முடியாது. எவர் வென்றாலும் குருதியே பெருகும்... இதோ அஸ்தினபுரியில் நம் கண்ணெதிரே உடன்பிறந்தார் பூசலிட்டு முற்றழிந்த கதை உள்ளது" என்றேன். நக்னஜித்தி மீண்டும் ஊடுருவி "எவர் முற்றழிந்தனர்? எதிரியை அழித்து பெருஞ்சிறப்புடன் நாடாள்கிறார்கள் பாண்டவர்கள். பரிவேள்வியும் அரசவேள்வியும் செய்து பொன்றாப் புகழ் கொண்டிருக்கிறார்கள். தங்கள் கொடிவழியினருக்கு செல்வமும் புகழும் சேர்த்திருக்கிறார்கள்" என்றார்.

நான் மேற்கொண்டு என்ன சொல்வதென்று அறியாமல் சலிப்புற்றேன். ஆயினும் "ஆம், அரசி. அவ்வண்ணமே ஆயினும் அங்கே அழிந்தவர்கள் பல லட்சம்" என்றேன். "அழிவில்லாமல் வெற்றியும் புகழும் இல்லை" என்று நக்னஜித்தி சொன்னார். "குருக்ஷேத்ரப் பெரும்போர் காட்டும் உண்மை அதுவே. வெற்றியும் புகழும் பெரிதாகவேண்டும் என்றால் அழிவும் அதற்கிணையாக இருந்தாகவேண்டும். வென்றவர் பாரதவர்ஷத்தையே ஆள்கிறார் என்றால் பாரதவர்ஷமே

அவரிடம் தோற்றாகவேண்டும். பாரதத்தை ஆளும் அறம் எழவேண்டும் என்றால் பாரதவர்ஷமே குருதி சிந்தியாகவேண்டும். ஆகவேதான் அதை இன்று மாபாரதப்போர் என்று சூதர்கள் பாடத்தொடங்கியிருக்கிறார்கள்." நான் அவரையே நோக்கிக்கொண்டிருந்தேன். அவருடைய முகத்திலெழுந்த அந்த தெய்வம் எனக்கு மிகப் புதியது.

"அரசி, நான் அப்போரில் ஈடுபட்டேன். என் மைந்தர் பதின்மரை இழந்தேன். அப்போருக்கு இப்படியொரு பொருள் அளிக்கப்படும் என இன்றுதான் தெளிவுகொண்டேன்" என்றேன். "ஆம், அப்போரில் இழந்தவர்கள் அவ்விழப்பைக் கொண்டே அதை மதிப்பிடுவார்கள். இழந்தவர்கள் சிலரே, எஞ்சியவர்கள் அனைவருமே எதையேனும் ஈட்டியவர்கள். அவர்கள் தாங்கள் ஈட்டியன கொண்டே அப்போரை மதிப்பிடுவார்கள். இனி அவ்வண்ணமே அது வரலாற்றில் நினைவுகூரப்படும்." நான் பெருமூச்சுவிட்டேன். பின்னர் சிரித்து "ஆம் அரசி, மெய்தான். இப்போது அப்போர் பற்றி பேசுபவர்கள் அதை காணாதவர்கள். இனி பேசவிருப்பவர்கள் அனைவரும் அதை காணாதவர்களே. இனி அப்போர் அதை முற்றிலும் அறியாதவர்களால் வரையப்படும். அவர்கள் தாங்களறிந்த போர்களையே புனைவார்கள்" என்றேன்.

"போரின்றி வெற்றி இல்லை, வெற்றி இன்றி அறமில்லை" என்று பத்ரை சொன்னார். "மாபாரதப்போரின் செய்தி என்பது அதுதான். குருதியால் நிலைநிறுத்தப்படுவது அறம். சிந்தப்பட்ட குருதியால்தான் அது மதிப்பிடப்படவேண்டும்." நான் நம்பிக்கையிழந்தேன். தலையை அசைத்து "இவ்வண்ணமே நிகழும் என அறிந்திருந்தேன், இத்தனை விரைவாக அல்ல" என்றேன். நக்னஜித்தி "இந்தப் போரிலிருந்து ஷத்ரியர்

சிலவற்றை கற்றுக்கொண்டிருக்கிறார்கள். நெறி, மரபு எனுமிரண்டால் அவர்கள் கட்டப்பட்டிருந்தார்கள். நெறியின்பொருட்டும் மரபின்பொருட்டும் பூசலிட்டுப் போரிட்டு ஆற்றலிழந்தார்கள். ஆகவே அவர்கள் குருக்ஷேத்ரப் பெரும்போரில் தோற்கடிக்கப்பட்டார்கள்" என்றார். "ஆனால் அவர்கள் முற்றழியவில்லை. அவ்வாறு அழிபவர்களும் அல்ல. தந்தையரும் மைந்தரும் கொல்லப்படலாம், அன்னையரின் கருவறைகள் எஞ்சியிருக்கின்றன."

"அந்நெறிகளும் மரபுகளும் துவாபர யுகத்திற்குரியவை. கலியுகத்தில் விழைவும், அதன்பொருட்டு கூர்கொண்ட ஒற்றுமையும் மட்டுமே முதன்மையானவை. கலியுகத்தில் கூட்டே ஆற்றல் என சொல்லியிருப்பவர் புதுவேதம் வகுத்த துவாரகையின் அரசரேதான். இனி மூத்தோர் சொல் அல்ல வெற்றியே அறத்தை முடிவுசெய்கிறது. அதை அறிய இத்தனை பெரிய விலையை ஷத்ரியர் கொடுக்க நேர்ந்தது. ஆனால் அதுவும் நன்றே. அத்தகைய பெரிய விலையே அப்பாடத்தை அத்தனை பெரிதாக ஆக்கமுடியும். இனி எழும் தலைமுறைகள் முழுக்க அந்தப் பாடம் நிலைகொள்ளும். கலியுகத்தை ஆள்வதெப்படி என ஷத்ரியர் குருக்ஷேத்ரப் படைநிலத்திலிருந்து கற்றுக்கொண்டுவிட்டார்கள்" என்று நக்னஜித்தி சொன்னார். நான் பெருமூச்சுடன் கைகளைக் கோத்துக்கொண்டேன்.

ருக்மிணிதேவி "அவர் பேசட்டும்" என்றார். அவ்வரசியரின் சொற்களை அவரும் ஏற்கிறார் என்று தெரிந்தது. நான் "அரசியரிடம் நான் கேட்கவிழைவது ஒன்றே. அஸ்தினபுரியில் நிகழ்ந்ததுபோல் ஒரு உடன்பிறந்தார்க்கொலை இங்கே துவாரகையின் முற்றத்தில் நிகழ ஒப்புவீர்களா?" என்றேன்.

“அதை அன்னையர் எவரும் ஒப்பார்” என்று நக்னஜித்தி சொன்னார். “அதை தவிர்க்கவே எண்ணுகிறோம். ஆகவே இங்கே முடிநிலைக்கவேண்டும். அதற்குரியவை என்ன என்பதையே பேசிக்கொண்டிருக்கிறோம். இன்று, ஒரு சிறு கைவீச்சில் ஷத்ரியப் படைகள் நகரில் நுழைந்து யாதவர்களையும் அசுரர்களையும் முற்றழித்துவிடமுடியும். இங்கே முழு வெற்றிகொண்டு அரியணை அமர முடியும். ஷத்ரியர்களுக்கு நெறிகள் ஆணையிடுவதும் அதுவே. எழும்காலங்களில் பிறிதொரு சொல்லின்றி நிறுவப்படும் கோன்மை அவ்வண்ணமே உருவாக இயலும். ஆயினும் நாங்கள் பொறுத்திருப்பது இங்கே குருதி பெருகலாகாதென்பதனாலேயே.”

“ஆனால் அதை எங்களால் முடிவெடுக்க இயலாதென்றே நிகழ்வுகள் காட்டுகின்றன. குருதியின் பாதையை குருதியே வகுத்துக்கொள்கிறது, இம்மண்ணில் குருதி வீழும்” என்று அவர் தொடர்ந்தார். அவருடைய முகத்தைக் கண்டபோது அது நான் எங்கோ கண்ட முகமெனத் தோன்றியது. அத்தனை அனல்கொண்ட முகத்தை பெண்களில் நான் அதற்கு முன் கண்டதுமில்லை. “குருதியின் மேல்தான் உறுதியான முடிவுகள் உருவாகுமென்றால் எழுக குருதி! குருதியே மேலும் குருதியை தடுக்குமென்றால் அது எதிர்க்குருதி என்றே கொள்ளப்படும். இதோ யாதவரும் நிஷாதரும் வந்து வந்து முந்துகிறார்கள். போர் போர் என நின்றிருப்பது அவர்களே. அவர்கள் கொன்றொழிக்கப்பட்டால் அதற்கு அவர்களே முழுப் பொறுப்பு.” நான் “அரசி, சாம்பன் எளிய வீரர் அல்ல. உங்கள் குடியிலும் சாவு நிகழலாம்” என்றேன்.

சீற்றம் மிக்க குரலில் “நிகழ்க! என் மைந்தர் களம்படுவார்கள் என்றால் அதுவும் ஏற்புடையதே. சாவுக்கு அஞ்சினால் வெற்றி இல்லை” என்று அரசி சொன்னார். “அறிக, என்றும் ஷத்ரியர் அசுரரையும் நிஷாதரையும் எதிர்த்து போரிட்டுக்கொண்டேதான் இருக்கிறார்கள்! இன்னும் நெடுங்காலம் இப்புவியில் அது தொடரும்.” எழுந்து என் அருகே வந்து “பகைத்திறன் சொல்லி ஷத்ரியர்களை அச்சுறுத்துகிறீர்களா என்ன? கோசலம் எவரால் புகழ்பெற்ற நாடென்று அறிவீர்களா? அவுணர் குலம் முடித்து இலங்கைச் செருவென்று முடிசூடி அமர்ந்த ராகவராமனின் நிலம் எங்களுடையது. எங்கள் மூதன்னை ஒருத்தி அவனை ஈன்றாள், அந்த வயிறே என்னுடையதும். என் மைந்தரிடம் நான் எப்போதும் சொல்வது அதுவே. அவர்கள் முக்கண்ணனின் வில்லேந்திய ராகவராமனின் கொடிவழியில் வந்தவர்கள். அவன் பெயர் சொல்லி களம்நிற்க வேண்டியவர்கள்” என்றார்.

நான் மேற்கொண்டு ஒன்றும் சொல்லாமல் அமர்ந்திருந்தேன். நக்னஜித்தி சென்று அமர்ந்துகொண்டார். ருக்மிணிதேவி “உங்கள் செய்தியை சொல்லுங்கள், யாதவரே” என்றார். “அரசி, நீங்களே இங்கு கண்டீர்கள். போர் எழும் சூழல் உருவாகியிருக்கிறது. இளைய யாதவரின் குருதியினர் தங்களுக்குள் போரிட்டு அழியலாகாது. அதை தவிர்க்கும் ஆற்றல் கொண்டவர் அவர் மட்டுமே. அவர் படைத்த பெருநகர் இது. இதை காக்கும் பொறுப்பும் அவருக்கே உண்டு. அவரை இங்கு கொண்டுவருவது அவசியம். இளைய யாதவர் நுழைவதொன்றே இன்று நாம் செய்யக்கூடுவது. அவர் வந்து அரியணையில் அமரட்டும். அவர் ஆணைப்படி குடிப்பேரவை கூடட்டும். அங்கு எவர் முடிசூடவேண்டும் எவர் துணைநிற்கவேண்டும் என்று அவர் கூறட்டும். இங்கு யாதவருக்கோ அசுரகுலத்திற்கோ பிறருக்கோ கோரிக்கைகள்

உண்டு என்றால் அதை அவரிடம் அவர்களே கேட்கட்டும். அவர்களுக்குரியதென்ன தகுதியானதென்ன என்று அவர் முடிவு செய்யட்டும். அவர் ஆணையை மீறிச் செல்பவர்கள் அதன் பொறுப்பை ஏற்றுக்கொள்ளட்டும், விளைவுகளை சந்திக்கட்டும். இன்று இப்போது மீறப்படாத ஆணை என எதுவும் எழவில்லை என்பதனாலேயே இத்தனை சிக்கல்கள் எழுந்துள்ளன. அரசர் நகர்புக வேண்டுமெனில் இங்கிருந்து அழைப்பு செல்லவேண்டும்" என்றேன்.

"இது அவர் நகரம். நாம் அழைத்தாலன்றி அவர் நகர்புக மாட்டார் என்று உங்களிடம் யார் சொன்னது?" என்று ருக்மிணிதேவி கேட்டார். "இங்கிருந்து அவர் கிளம்பவேண்டியிருந்தது என்பது உண்மை. இங்குள்ள குடிகள் அனைவரும் சேர்ந்து அவர் நகர்நீங்க வேண்டுமென்று கூறினோம். நம் வெறுப்பே அவரை நீங்கச் செய்தது" என்றேன். "இல்லை, அது அவருடைய மூத்தவரின் ஆணை" என்றார் நக்னஜித்தி. "ஆம், அவரது உடன்பிறந்தாரின் சொல் அவருக்கு இருந்தது. ஆகவே அவர் இங்கு மீண்டும் வரவேண்டும் என்று ஒரு சொல்லேனும் நம்மிடமிருந்து எழவேண்டும். அவரே வந்தால் விழைவுகொண்டு வந்தார் எனப் பொருள்படும். அழைக்காமல் எழுவதில்லை தெய்வங்கள். அரசி, அவ்வழைப்பை எழுப்பும் தகுதி கொண்டவர்கள் அவருடைய துணைவியர் நீங்கள்."

"நீங்கள் எண்மரும் இணைந்து ஒரு சொல்லெடுங்கள். எங்கள் மைந்தருக்கு உரியவற்றை வகுத்தளியுங்கள் என்று கோருங்கள். அச்சொல்லை ஏற்கெனவே யாதவ அரசி அளித்துவிட்டார். தங்களிடம் இருந்தும் தங்கள் உடனிருக்கும் அரசியரிடமிருந்தும் அவ்வழைப்பு எழுமெனில்

ஜாம்பவதியிடமிருந்தும் காளிந்தியன்னையிடமிருந்தும் அழைப்பை பெற்றுக்கொண்டு நான் கிளம்பிச்செல்வேன்" என்றேன். ருக்மிணிதேவி "எங்கள் சொல் எப்போதும் உள்ளது. இங்கு அவர் இல்லை என்பதை கணந்தோறும் உணர்ந்து காத்திருப்பவர்கள் நாங்கள். அவர் வரட்டும், அவரது ஆணை தலைக்கொள்ளப்படும். அதற்கப்பால் ஒரு சொல்லும் எழாது" என்று சொன்னார். "நீங்கள் விழைவது என் ஓலை என்றால் அதை நான் அளிக்கிறேன். இவர்களும் அளிப்பார்கள்."

"தங்கள் மைந்தர்கள் சொல்லி அனுப்பியதென்ன என்பதையும் நான் கூறியாகவேண்டும். இளைய யாதவர் வந்தால் பிரத்யும்னனே முடிசூட்டப்படவேண்டும் என்றும், அதன்பொருட்டு மட்டுமே இளைய யாதவர் நகர்நுழையவேண்டும் என்றும் உங்கள் ஓலையில் சொல்லப்படவேண்டும் என்று என்னிடம் கூறப்பட்டது" என்றேன். ருக்மிணி விழி சுருக்கி "அரசருக்கு ஆணையிட்டானா அவன்?" என்றார். "ஆம்" என்றேன். "அறிவிலி! இப்புவியில் எவரும் அவருக்கு ஆணையிட இயலாது" என்றார் அரசி. "அவர் வரட்டும், வந்து அவர் உகந்த முடிவை எடுக்கட்டும். அவர் சுட்டுவது எவராயினும் அவரே இந்நகரின் அரசர். என் மைந்தருக்கு ஒருதுளி பொன்னும் ஒருபிடி மண்ணும் இல்லையென்று கூறினாலும் அது எனக்கு முழு ஒப்புதலே" என்றார் ருக்மிணி.

"ஆனால் அது இங்குள்ள யாதவர்களுக்கோ அசுரர்களுக்கோ இயல்பான உரிமை இல்லை. அவர்களிடம் தோற்று என் மைந்தர் இந்நகரிலிருந்து செல்லக்கூடாது. அவர்களுக்கு அடங்கி இங்கிருப்பதும் ஒவ்வாது. அது ஷத்ரியர்களுக்குரிய பண்பல்ல" என்றார் ருக்மிணிதேவி. நக்னஜித்தி

“எழுதவேண்டியது அதைத்தான். ஷத்ரியர் ஒருபோதும் பிறருக்குப் பணிந்து வாழமுடியாது” என்றார். “தந்தை அளிப்பதை அவர்கள் மறுக்கப்போவதில்லை, பிறரும் தந்தைசொல்லை மறுக்கக்கூடாது. அது ஒன்றே நான் வேண்டுவது” என்றார் பத்ரை. ருக்மிணிதேவி “ஆம், அவருக்கு முற்றளித்தோர் நாம். நம் மைந்தர் நமக்கு அவர் வடிவே. நம் மைந்தர் பொருட்டு நாம் கவலைகொள்வதும் அவர் புகழுக்கு மாற்றுக் குறையலாகாது, அவர் கொடிவழி சிறக்கவேண்டும் என்பதன் பொருட்டே. நாம் அவருக்கு எதையும் கூற வேண்டியதில்லை, நம் விழைவையோ ஐயங்களையோகூட. அவரே முடிவெடுக்கட்டும். அம்முடிவுக்குப் பின் நம் உணர்ச்சிகளைக்கூட அவரிடம் காட்டலாகாது. அவர் வரட்டும், அதன்பின் இங்கே சிக்கல்களே இல்லை” என்றார்.

“அதில் மாற்றில்லை அரசி, நான் விழைவதும் அதுவே” என்று கூறி “அவ்வண்ணமெனில் தங்கள் ஓலை ஒன்றை தருக! நான் பிற அரசியரை பார்க்கிறேன்” என்றேன். நக்னஜித்தி “எங்கள் ஓலை பிறரிடம் காட்டப்படுமா? சத்யபாமை அளித்த ஓலையின் செய்தி என்ன?” என்றார். “அரசி சத்யபாமை ஓலையென எதையும் அளிக்கவில்லை. அவருடைய கணையாழி ஒன்றே அளிக்கப்பட்டது” என்றேன். பத்ரை “ஒருவேளை ஜாம்பவதி அளிக்கும் ஓலையில் அரசருக்கான கோரிக்கை இருந்தால்?” என்றார். நக்னஜித்தி “ஆம், அதையே நானும் எண்ணினேன்” என்றார். “அதை நாம் எண்ணவேண்டியதில்லை. அவர் வரவேண்டும் என்பது நம் விழைவு. எவ்வண்ணமாயினும், எதற்காகவாயினும். அதுவே நம் ஓலையில் இருக்கட்டும்” என்றார் ருக்மிணி.

“ஆம் அரசி, தங்களிடமிருந்து நான் எதிர்பார்ப்பதும் அது மட்டுமே” என்றேன். பேரரசி எழுந்துகொண்டு என்னிடம் “என்னிடமிருந்து அவருக்குச் செல்லவேண்டியது குலமுத்திரை அல்ல” என்றபின் தன் செவியருகே இருந்து பொன்மலர் ஒன்றை எடுத்து நீட்டி “இதை அவரிடம் கொடுங்கள்” என்றார். அதில் ஒரு மென்மயிர் சுற்றியிருந்தது. நான் அதை எடுக்கப்போனேன். “அது இருக்கட்டும்” என்று ருக்மிணிதேவி சொன்னார். “நானும் நக்னஜித்தியும் பத்ரையும் மித்ரவிந்தையும் சேர்ந்து ஓர் ஓலையை அளிக்கிறோம். அதை கொண்டு செல்க!” நான் தலைவணங்கினேன். நக்னஜித்தி வெறுமனே என்னை நோக்கியபடி நின்றார். “விடைகொள்கிறேன் அரசி, என் பணி எளிதாகிக் கொண்டிருக்கிறது” என்றேன். ருக்மிணிதேவி புன்னகைத்தார். நக்னஜித்தி ஒன்றும் சொல்லவில்லை.

நான் அக்கூடத்தைவிட்டு வெளியே வந்தேன். மீண்டும் ஒரு தனிமை வந்து என்னை சூழ்ந்துகொண்டது. அந்நகரில் எனக்கு எவருமே துணையில்லை என்பதுபோல. அங்கே ஒருகணமும் தங்கலாகாது என்பதுபோல. மெய்யாகவே அங்கிருந்து அப்படியே கிளம்பிச் சென்றுவிடவேண்டும் என்றுதான் எண்ணினேன். அரசியின் முகத்திலும் அந்தச் சலிப்பை பார்த்தேன் என உணர்ந்தேன். அவரும் அவ்வண்ணமே கிளம்பிச் சென்றுவிடவேண்டும் என பலமுறை எண்ணியிருக்கக் கூடும். அரசே, பின்னர் ஒன்று உணர்ந்தேன். கோசல அரசி நக்னஜித்தியின் முகத்தில் நான் கண்டது தங்களை. என்றோ எங்கோ கண்ட ஒரு கணம் அவ்வண்ணம் நினைவில் பதிந்திருக்கிறது. அது உங்கள் முகத்தோற்றமேதான்.

# கல்பொருசிறுநுரை - 11

## பகுதி மூன்று : ஒழியா நாற்களம் – 6

சாத்யகி கூறினான். அரசே, நான் பிற அரசியரை அதன்பின் உடனே சந்திக்க விழையவில்லை. அவர்களின் உள்ளங்கள் எப்படி இருக்கும் என்பதை ஒருவாறாக கருதிவிட்டிருந்தேன். அவர்கள் எவரும் தம்மை உங்களுக்கு அயலானவர்கள் என்று எண்ணவில்லை. உங்களை மீறி ஒரு சொல் உரைக்கும் நிலையிலும் அவர்கள் இல்லை. ஆனால் அவர்கள் ஒவ்வொருவரும் தம்மை உங்களுக்கு முதன்மை அணுக்கர்கள் என்று எண்ணுகிறார்கள். உங்கள் கொடையனைத்தும் தங்களுக்குரியது என்று எண்ணுகிறார்கள். நீங்கள் வரவேண்டும் என்று அவர்கள் விழைவது அவ்வாறு வந்தால் பிறிதொருவருக்கு நீங்கள் அருள மாட்டீர்கள் என்ற அறுதியான நம்பிக்கையால்தான்.

மெய்யாகவே அவ்வெண்ணம் அச்சுறுத்தியது. எண்ணிய ஒவ்வொன்றும் கூர்கொண்டது. ஒவ்வொன்றும் பயின்ற வாளென பிறிதொன்றை தடுத்தது. அன்று என் அறைக்கு மீண்டு தலைநிறையும்வரை மதுவருந்தி தன்னிலை இழந்து துயில்கொள்ளவேண்டும் என்றே விரும்பினேன். ஆயினும் அப்பணியை முடித்துவிடவேண்டும் என்ற எண்ணத்தால் ஏவலனிடம் ஜாம்பவதியையும் காளிந்தியையும் சந்திக்கவேண்டும் என்று செய்தி சொல்லி அனுப்பினேன். உணவுண்டு ஓய்வெடுக்கும் பொருட்டு என்னுடைய அறைக்குத்

திரும்பி அங்கு சோர்ந்து தனித்து அமர்ந்திருந்தேன். ஏவலன் கொண்டுவந்த உணவை சற்றே உண்டேன். மதுவை மிகுதியாக அருந்தினேன். பின்னர் துயின்று உடனே விழித்துக்கொண்டேன்.

மஞ்சத்தில் அமர்ந்து தனித்தலையும் என் எண்ணங்களை நானே நோக்கிக்கொண்டிருந்தேன். எதன் பொருட்டு இதை தொடங்கினேன் என்று வியந்துகொண்டேன். அரசியருக்கும் உங்களுக்குமான உறவு ஒருபோதும் என்னால் புரிந்துகொள்ள முடியாதது. அவர்கள் தாங்கள் மட்டுமே வாழும் ஓர் உலகில் உங்களை வைத்திருந்திருக்கிறார்கள். அங்கு பிற எவருக்கும் இடம் இருந்திருக்கவில்லை. எனில் அவர்களின் மைந்தர்கள் எவர்? எங்கிருந்து ஊடே அவர்கள் எழுந்தனர்? அம்மைந்தர்களே அவர்களை இன்று ஆட்டிவைக்கிறார்கள், தெய்வங்கள் என, இயற்கைப்பெருவிசைகள் என. அவர்களுடன் ஒத்துச்சென்றாலும் முரண்பட்டு விலகிச்சென்றாலும் இன்று மைந்தர்களாலேயே அவர்களின் அனைத்துச் செயல்களும் இயக்கப்படுகின்றன.

அரசே, நான் இவ்வாறு கூறுகிறேன், பிழையென்று இருந்தால் பொறுத்தருள்க! உங்களுடன் இருக்கையில் அவர்கள் முற்றிலும் நிறைகிறார்கள். அக்கணத்தில் அவர்கள் உணரும் ஒருவரை அவர்கள் உடனே இழக்கிறார்கள். உங்களில் ஒரு பகுதியையே அவர்கள் கொள்ள முடியும். அதை அவர்கள் அறிவதே அவர்களின் துயர். துவாரகையில் அத்தனை இல்லங்களிலும் காதலர் என, கணவர் என, தந்தை என நீங்கள் நிறைந்திருக்கிறீர்கள். அத்தனை பெண்டிரில் ஒருவர் என தங்களை உணர உங்கள் துணைவியரால் இயல்வதில்லை. அவர்கள் விழைவது மேலும் ஒரு யாதவரை, தங்களுக்கேயான ஒருவரை. அவ்வண்ணம் ஒருவரை எப்போதும் உடனமைத்துக்

கொண்டிருக்கும் பொருட்டு தங்களுள் திகழும் கனவிலிருந்து உங்கள் உருவொன்றை படைத்துக்கொள்கிறார்கள். அரசே, அவர்களிடமிருக்கும் ஒன்றுதான் அவர்களின் வயிற்றில் மைந்தனாக உருப்பெறுகிறது.

ஒவ்வொன்றும் ஒன்று. உங்கள் எண்பது வடிவங்கள். தயக்கமும் தனிமையும் கொண்ட ஃபானுவும் சீற்றமும் விழைவும் கொண்ட பிரத்யும்னனும் ஆற்றலும் சூழ்ச்சியும் கொண்ட சாம்பனும் நீங்களே. அவர்கள் எண்பதின்மரும் ஒருவரே என்று ஒருகணமும் முற்றிலும் வேறுபட்டோர் என்று பிறிதொரு கணமும் தோன்றுகிறது. அரசே, உங்களில் அவர்கள் காணமுடியாதவைதான் அவர்களினூடாக மைந்தராயிற்றா? அன்றி, காணவிழைந்தவையா? உங்களில் எஞ்சியவையா? மிக அணுக்கமானவருடன் அணுக்கத்தைக் காட்டும்பொருட்டு நாம் அவர்களின் அறியாத் தீமை ஒன்று நமக்குத் தெரியும் என்று சொல்லிக்கொள்கிறோம். ஆற்றலற்ற பகுதி ஒன்றை அறிவோம் என்கிறோம். அவையே அம்மைந்தர்களா? எப்படி எழுந்தனர் அம்மைந்தர் உங்கள் குருதியில்?

இவ்வண்ணம் சொல்வேன். ஆம், பிழையென்றும் அறிவேன். பாமையிலிருந்த அச்சம் அம்மைந்தர்களாகப் பிறந்தது. ஷத்ரியர்களின் விழைவு ருக்மிணியின் மைந்தர்களாகியது. ஜாம்பவதியிடம் இருந்து பிறந்தது அசுரர்களின் அடங்காமை. அரசே, ஒருவேளை அவ்வியல்புகளும் உங்களுடையதுதானோ? இவ்வண்ணம் பரவி இப்புவியில் வளர்கிறீர்களா? நீங்கள் எடுக்கும் எண்பது மாற்றுருக்கள்தானா இவை? இவ்வுருவில் நின்று நீங்கள் ஆடியவை போதா என்று கண்டு அவ்வண்ணம் எண்பதின்மர் என எழுந்தீர்களா? தந்தையிடம் எஞ்சியதும் விஞ்சியதும் மைந்தர்களாகின்றன என்றொரு சொல் உண்டு.

அரசே, உங்களிடம் விஞ்சுவதொன்றில்லை. எஞ்சுவதே இம்மைந்தர்களா?

சாம்பனின் அரண்மனையில் இருந்து அணுக்கஏவலன் என்னை வந்து சந்தித்து அரசி ஜாம்பவதி பொழுது அருளியிருப்பதாக சொன்னான். இம்முறை முறைமையை கைக்கொள்வோம் என்று எண்ணி நான் அவையுடையுடன் அரசியை பார்க்கும்பொருட்டு சென்றேன். ஜாம்பவதி நகரின் மேற்கு எல்லையில் வளைந்தோடும் சிறிய ஓடையின் கரையில் அமைக்கப்பட்டிருந்த புதிய மாளிகையில் தங்கியிருந்தார். அங்குதான் சாம்பனின் அவையும் இருந்தது. அவர்களைச் சுற்றி வலுவான அரண் அமைக்கப்பட்டிருந்தது. அசுரர்கள் காவல் காக்கும் பன்னிரண்டு காவல்மாடங்களும், ஏழு அடுக்கு படைத்திரளும் இருந்தன. என்னை முற்றிலும் உடல் நோக்கி படைக்கலம் நோக்கிய பின்னரே உள்ளே செல்ல ஒப்பினர்.

“என்னை இவ்வண்ணம் எவரும் நோக்குவதில்லை” என்றேன். என்னை அழைத்துச்சென்ற ஏவலன் “இங்குள்ள பூசல்சூழலில் இது இயல்பானதே. ஏனென்றால் இங்குதான் அரசரும் இளையோரும் இருக்கின்றனர்” என்றான். மீண்டும் அச்சொல் இடறவே “அரசர் என்று எவரை கூறுகிறாய்?” என்றேன். அவன் கண்களில் சினம் வந்து மறைந்தது. “இன்று இந்நகரை ஆள்பவர் ஜாம்பவதியின் மைந்தரும் ஜாம்பவானின் கொடிவழிவந்தவருமான சாம்பன். அஸ்தினபுரியின் அரசர் துரியோதனனின் மகள் கிருஷ்ணை அவருடைய பட்டத்தரசியென அமர்ந்திருக்கிறார். அரசர் நகர்நீங்கும்போது பன்னிரு போர்முனைகளில் தன்னுடன் தோளிணை என நின்ற மைந்தர் சாம்பனுக்கே மணிமுடியை அளித்துச் சென்றார். இங்கு பிறிதொருவர் அரசர் என்று இல்லை” என்றான்.

“ஆம், நீங்கள் அவ்வாறு கூறுகிறீர்கள் என்று அறிந்தேன்” என்றேன். “அதை மறுப்பவர்கள் இன்னும் இந்நகரில் உள்ளனர்” என்று அவன் சொன்னான். “அவர்கள் நெடுநாட்கள் அவ்வண்ணம் மறுக்கமாட்டார்கள்.” நான் என்னை முயன்று திரட்டிக்கொண்டேன். அவனிடம் பேசுவது வீண் என்று எண்ணினேன். ஆனால் ஒரு வேறுபாட்டை உணர்ந்தேன். யாதவ வீரர்களுக்கு அரசியலில் ஈடுபாடே இல்லை. அவர்கள் தங்கள் குடிப்பூசலிலேயே மூழ்கியிருக்கிறார்கள். நிகழ்வதென்ன என்றுகூட செவிகொடுப்பதில்லை. ஷத்ரிய வீரர்களுக்கு அரசியலே மூச்சு. ஆனால் அவர்கள் அதை அறிவுசார்ந்தே அணுகுகிறார்கள். ஒவ்வொருவருக்கும் கருத்து என ஒன்று இருக்கிறது. ஆனால் அசுரர்கள் ஒற்றை உள்ளமென, ஒற்றை உணர்வென திரண்டிருக்கிறார்கள். அதுவே அவர்களின் ஆற்றல். ஆனால் அவர்களின் தலைவர் வெல்லப்பட்டால் அக்கணமே அவர்களும் முற்றாக அழிகிறார்கள். ஷத்ரியர்களைப்போல கணுதோறும் முளைத்து மீண்டும் எழுவதில்லை.

ஜாம்பவதியின் அறைக்கு முன் என்னை அரைநாழிகை அமரச்செய்தனர். அவர்கள் எவருக்காக காத்திருக்கின்றனர் என்று எனக்கு புரியவில்லை. சற்று நேரம் கழித்து இயல்பாக திரும்பி சாளரத்தினூடாக பார்த்தபோது கீழே அரவக்கொடி கொண்ட பல்லக்கு ஒன்று நின்றிருப்பதை கண்டேன். அதன் பின்னரே கிருஷ்ணை அங்கு வந்து அமர்ந்திருக்கிறார் என்றும், அவர் வரும்பொருட்டே ஜாம்பவதி காத்திருந்தார் என்றும் புரிந்துகொண்டேன். கிருஷ்ணையின் வரவு என்னை அமைதியிழக்கச் செய்தது. நான் பேச விழைவது அரசரின் துணைவியரிடம். அவர்களின் மைந்தர்களைக்கூட என்னால் ஏற்கமுடியும், கிருஷ்ணை துரியோதனனின் மகள்.

துவாரகையின் அரசியென்றே அவர் கருதப்பட்டாலும் அந்நிலத்திற்கு உரியவர் அல்ல. ஆனால் நான் ஒன்றும் செய்ய இயலாது, அதை எதிர்கொண்டே ஆகவேண்டும்.

கதவைத் திறந்து ஏவலன் வெளிவந்து என்னை உள்ளே அழைத்தான். நான் உள்ளே செல்லும்போது ஜாம்பவதியும் கிருஷ்ணையும் அருகருகே இணையான பீடங்களில் அமர்ந்திருந்தனர். ஏனோ அங்கு காளிந்திதேவி இருப்பார் என்று எண்ணினேன். பின்னர் அவ்வாறு எதிர்பார்த்தது பிழை என்று தெரிந்தது. அவர் பிறிதொரு உளநிலையில் இருக்கிறார் என்பதை முன்னரே செய்திகளினூடாக அறிந்திருந்தேன். அரசியர் இருவருமே முறைமைசார் ஆடை அணிந்திருக்கவில்லை. கிருஷ்ணை பட்டுமேலாடை ஒன்றை அள்ளி தோளில் இட்டிருந்தார். நீண்ட துயில்நீப்பு கொண்டவை போலிருந்தன ஜாம்பவதியின் கண்கள். கிருஷ்ணை என்னை அறிந்தவர் என்றே விழிகாட்டவில்லை. என் வணக்கத்தைக்கூட அவர் பெற்றுக்கொள்ளவில்லை.

நான் வணங்கி முகமன் உரைத்தேன். என்னை அமரச்சொன்ன ஜாம்பவதி புன்னகைத்து "முழுதணிக்கோலத்தில் வந்திருக்கிறீர்கள், நன்று" என்றார். நான் "ஆம் அரசி, அரசியை அவைநின்று பார்க்கும்பொருட்டு இவ்வாறு வரவேண்டும் என்பது முறைமை" என்றேன். "அந்த முறைமையை நீங்கள் சத்யபாமையையும் ருக்மிணியையும் சந்திக்கச் செல்லும்போது பேணவில்லை அல்லவா?" என்றார் ஜாம்பவதி. அவ்வினாவால் நான் திகைத்துவிட்டேன். "ஆம், ஆனால்..." என்று சொல்வதற்குள் கைநீட்டித் தடுத்து "புரிகிறது. அவர்கள் உங்களுக்கு அரசியர் அல்ல, அணுக்கமான அன்னையர். இங்கு நீங்கள் வந்திருப்பதென்பது அவர்களின் அணுக்கர் என்னும்

நிலையில்தான். நாங்கள் அயலவர், எனவே அரசியர் அல்லவா?" என்றார்.

நான் முற்றிலும் சொல்லிழந்தேன். ஆகவே எரிச்சல்கொண்டேன். "அவ்வாறு அல்ல... அவர்களை நான் முன்பு எண்ணாமல் இயல்பாக சந்திக்கச் சென்றேன்..." என்றேன் "இயல்பாகச் சென்று சந்திக்கும் நிலையில் தாங்கள் இருக்கிறீர்கள்" என்று ஜாம்பவதி கூறினார். நான் சலிப்புடன் தலையை அசைத்து "இதைப்பற்றி மேலும் நான் பேச விழையவில்லை. தூது மட்டும் கூறிச்செல்லவே வந்தேன்" என்றேன். "கூறுக!" என்று அரசி சொன்னார். கிருஷ்ணை என்னை உற்றுநோக்கியபடி அமர்ந்திருந்தார். ஜாம்பவதியின் அசைவுகளிலிருந்து எழுந்த ஒவ்வாமை என்னையும் கசப்படையச் செய்தது. அச்சந்திப்பு சினமின்றி முடியுமென்றால் நல்லூழே என எண்ணிக்கொண்டேன்.

ஜாம்பவதி "கூறுக!" என்றார். அவர்கள் அனைவரிடமும் ஒரே அசைவும் சொல்லும் எழுகின்றன. பின்பு அவற்றிலிருந்து அவர்கள் விலகி விலகிச் சென்று பிறிதொருவர் ஆகிறார்கள். "அரசி, இன்று துவாரகை இருக்கும் நிலையை நீங்கள் அறிவீர்கள். இந்நாடு அழிந்துகொண்டிருக்கிறது. இங்கு குடிப்பூசல் எக்கணமும் வெடிக்கலாம். குருதி சிந்தப்படலாம்" என்று நான் சொன்னேன். "ஆம், அதைத்தான் நானும் இவளும் பேசிக்கொண்டிருந்தோம். நீங்கள் சென்று பாமையிடம் பேச வேண்டியது அதுவே. போஜர்களும் அந்தகர்களும் விருஷ்ணிகளுடன் போர் புரிவார்கள் எனில் இந்நகரம் அழியும்" என்றார் ஜாம்பவதி. "ஆம், அதை நான் அவர்களிடம் சொன்னேன். அதைவிட முடியுரிமைக்காக இளைய யாதவரின்

மைந்தர்கள் போர்புரிவார்கள் என்றால் இந்நகர் பொலிவிழக்கும்" என்றேன்.

"இங்கு போரென எதுவும் நிகழவில்லை, இனி நிகழவும் வாய்ப்பில்லை. இந்நகர் சாம்பனின் ஆட்சியில் முழுதமைந்திருக்கிறது. இளையோருக்கும் மூத்தோருக்கும் சில மாற்றுச் சொல்லிருக்கலாம். அவ்வாறு எதிர்ச்சொல் இல்லாத நாடென எதுவுமில்லை. அவர்கள் கோருவது எதுவோ அதை அளிக்க சாம்பன் சித்தமாகவும் இருக்கிறான். மீறுவார்கள் எனில் இளையோர் தண்டத்தாலும் மூத்தோர் அச்சத்தாலும் அமைதியாக்கப்படுவார்கள். ஒரு மன்னன் முடிகொண்டு கோல்சூடி ஆட்சி செய்யும் நாடு இது. இங்கு குடிகளுக்கு மாற்றுச்சொல் இல்லை. அந்தணரும் அறவோரும் மறுப்புரைக்கவில்லை. அயல்நாட்டு அரசர்களும் அடிபணிந்தே இருக்கிறார்கள். ஏது குறை?" என்றார் ஜாம்பவதி.

அச்சொற்கள் அனைத்தும் முன்னரே திட்டமிடப்பட்டவை என்று எனக்குத் தோன்ற, எழுந்த சினத்தை அடக்கி "அரசி, தாங்கள் அறிந்ததை நான் மீண்டும் சொல்லவேண்டுமென்று விழைகிறீர்கள். ஆகவே சொல்வது என் கடன். இங்கு யாதவர்களும் ஷத்ரியர்களும் அசுரர்களும் மூன்று குழுக்களாக அமைந்திருக்கிறார்கள். ஷத்ரியர்கள் இயல்பாக தங்களுக்குரியதே இந்நாட்டின் உரிமை என்று எண்ணுகிறார்கள். யாதவர்களோ குலவழியில் துவாரகை தங்களுக்குரியது என்று எண்ணுகிறார்கள்" என்று நான் சொன்னதும் ஜாம்பவதி தடுத்து "ஷத்ரியர்கள் அவ்வாறு விரும்பவில்லை. ஷத்ரியர்களுக்கு சாம்பன் அயலான் அல்ல. அவன் மணம்முடித்திருக்கும் பெண் ஷத்ரியகுடிப் பிறந்தவள்,

ஷத்ரியர்கள் தங்கள் தலைவர் என ஏற்ற பேரரசரின் மகள்" என்றார்.

நான் "ஆம், அது உண்மை. ஆனால் மணவுறவுகளை எவர் முதன்மையெனக் கருதுகிறார்கள்? பிரத்யும்னனே அசுரகுடியில் மணம்புரிந்தவர் அல்லவா?" என்றேன். ஜாம்பவதி "அதைத்தான் சொல்லவந்தேன். பிரத்யும்னனின் மைந்தன் அனிருத்தன் மணந்திருப்பது பாணாசுரரின் மகள் உஷையை. இன்று சம்பராசுரரும் பாணாசுரரும் எங்களுடன் இருக்கிறார்கள். ஷத்ரியர்களும் அசுரர்களும் ஒன்று சேர்ந்த பின்னர் எஞ்சியிருப்பவர் எவர்? ஒருவரோடொருவர் பூசலிட்டுக்கொண்டிருக்கும் யாதவர்களா? அந்த யாதவர் தங்கள் பூசலை நிறுத்திவிட்டு ஒன்றெனத் திரண்டு வந்து கோரிக்கை என்ன என்று எனது மைந்தனிடம் சொல்லட்டும். அவன் அதை எண்ணி, அவைசூழ்ந்து உகந்ததை முடிவெடுப்பான்" என்றார்.

நான் கிருஷ்ணையை பார்த்துக்கொண்டிருந்தேன். அச்சொற்களில் அவருக்கு உடன்பாடுள்ளதா என்று நோக்கில் தெரியவில்லை. அங்கிலாததுபோல் சற்றே விழி திருப்பி அமர்ந்திருந்தார். ஒருகணத்திற்குப் பின் நான் நேரடியாக ஜாம்பவதியிடம் "அரசி, இங்கு பூசல் நிகழலாகாது. அதை தவிர்க்கும் பொருட்டே நான் வந்துள்ளேன்" என்றேன் "அசுரர்களிடம் பூசலேதும் இல்லை" என்றார் ஜாம்பவதி. நான் மீண்டும் ஒருகணம் கிருஷ்ணையைப் பார்த்த பின் "அரசி, பூசலிடுவது எவராயினும் நம் மைந்தர். இளைய யாதவரின் கொடிவழியினர். பூசலால் குடியழியுமென்றால் இழப்பவர் நாம்" என்றேன். "தோற்பவர் இழக்கிறார், வெல்பவர் பெறுகிறார்" என்றார் அரசி.

“எவர் இழந்தாலும் இழப்பவர் இளைய யாதவர். என் கவலை அதன்பொருட்டே. அரசி, இங்குள்ள இடரைத் தீர்க்க துவாரகையை சமைத்த அரசர் இங்கு வருவது ஒன்றே வழி. எவர் ஆளவேண்டும் என்று இளைய யாதவர் முடிவுசெய்யட்டும் எட்டு அரசியரும் ஓலை அனுப்பினால் அதை ஆணை என்றுகூடக் கொள்ளலாகும். அவர் வந்து சேர்ந்தால் இங்குள்ள அனைத்தும் முடிவுக்கு வந்துவிடும். அதன் பின் இங்கொரு மாற்றுச் சொல் எழாது என்பதில் ஐயமில்லை” என்றேன். ”அவருடைய நகர் இது, அவர் வரட்டும்” என்றார். “ஆம், ஆனால் அவரை நாம் இங்கிருந்து விலக்கினோம். நம் சொல் எழுந்தாலொழிய அவரை இங்கு வரவழைக்க முடியாது. அதன்பொருட்டே நான் முயல்கிறேன்” என்றேன்.

ஜாம்பவதி “அவர் வரட்டும். சாம்பனை அரசபீடத்தில் அமர்த்தியது அவர், அதை மீண்டும் அவர் சொல்லட்டும். பிறிதொன்று அவர் சொல்ல வாய்ப்பில்லை. அவர் சொல் எழுந்தால் அன்றி இந்த ஷத்ரிய அரசியரும் யாதவ அரசியும் அடங்கமாட்டார்கள்” என்றார். “அவர்களும் அவர் வந்துகூற வேண்டுமென்று விழைகிறார்கள். அவர் வருவார் எனில் அனைத்தும் முடிவுற்றுவிடும் என்று நம்புகிறார்கள். அவர்களிடம் ஓலை பெற்றுவிட்டேன். தாங்களும் ஓலை ஒன்றை அளிப்பதாக இருந்தால்...” என்று நான் சொல்ல “ஓலை அளிக்கிறேன். அவ்வோலையை நீங்கள் சாம்பனிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம்” என்றார் ஜாம்பவதி. நான் “அந்த ஓலையை தங்களிடம் இருந்து பெற்றுக்கொள்ள விழைகிறேன், அரசி” என்றேன்.

“அந்த ஓலையை அளிக்கவேண்டியவள் நான் அல்ல, அவனே. இந்நாட்டை ஆள்பவன் சாம்பன். அவன் மணிமுடிக்குக் கீழ் அமைந்திருக்கும் குடி நான். அவனை மீறி ஒரு சொல்லும் உரைக்க உரிமையற்றவள். என் ஓலையை அவனே எழுதுவான். அவ்வோலை எழுதுவதற்கான ஒப்புதலை மட்டுமே நான் அளிக்கமுடியும்” என்றார் ஜாம்பவதி. “அரசி, இது தங்களுக்கும் தங்கள் கொழுநருக்குமான உறவு குறித்தது” என்றேன். “அரசனே குடிகள் மேல் முற்றுரிமை கொண்டவன்” என்று ஜாம்பவதி சொன்னார். நான் திரும்பி கிருஷ்ணையை பார்த்தேன். “அரசி, அரசரின் சார்பில் தாங்கள்கூட அவ்வண்ணம் ஒரு ஓலை அளிப்பதற்கு ஆணையிடலாம்” என்றேன். அவரை உரையாடலுக்குள் இழுப்பதற்காகவே அதைச் சொன்னேன்.

கிருஷ்ணை புன்னகைத்து “இங்கு பூசல் ஏதோ நிகழ்வதாக நீங்கள் கூறுகிறீர்கள். அதுதான் எனக்குப் புரியவில்லை. நான் அறிந்து பாரதவர்ஷத்தில் பூசல் நிகழாத ஒரே நகர் இதுதான். இன்று வரை இங்குள்ள மைந்தருக்கும், மைந்தர் மைந்தருக்கும் நடுவே எந்த மோதலும் நிகழவில்லை. ஒரு சொல்கூட எதிர்த்து சொல்லப்படவில்லை. ஒருவேளை பூசலை உருவாக்க நீங்கள் எண்ணுகிறீர்களோ என்று ஐயம்கொள்கிறேன்” என்றார். அவர் விழிகளில் நான் முன்பறிந்திருந்த ஒருவரை கண்டேன். உடனே அவர் எவர் என்றும் புரிந்துகொண்டேன். அவை பாஞ்சாலத்து அரசி திரௌபதியின் கண்கள். “ஏனெனில் நீங்கள் விருஷ்ணி குலத்தவர். இந்நகரில் விருஷ்ணிகளுக்கு இருக்கும் முன்தூக்கு சற்றே குறைகிறது என்று எண்ணுகிறீர்கள். ஆகவே இங்கு வந்து இச்சூழ்ச்சியை செய்கிறீர்கள்” என்றார்.

நான் “அவ்வாறல்ல, அரசி...” என்றேன். எழாக் குரலில் கிருஷ்ணை “யாதவரே, அந்த முன்தூக்கம் குறைந்தே ஆகும்.

அதை எவரும் தடுக்கவியலாது. ஏனெனில் இப்போது இந்நகரை ஆள்பவர் சாம்பன். இளைய யாதவரின் ஆட்சி முடிந்துவிட்டது. அன்று விருஷ்ணிகள் தங்கள் தகுதியால் அல்ல, குருதித்தொடர்பால் மட்டுமே இங்கு பெரும் பதவிகளையும் இடங்களையும் நிறைத்திருந்தார்கள். அது இனி நிகழப்போவதில்லை. அதை அவர்கள் உணர்ந்தாகவேண்டும். அதை அவர்களுக்கு உணர்த்துவது உங்கள் பொறுப்பு. அதற்கு மாறாக அவர்களை மேலும் தூண்டிவிடும் பொருட்டு இச்செயலை நீங்கள் செய்கிறீர்கள். அதனூடாக அவர்களை அழிவுக்கு இட்டுச் செல்கிறீர்கள்" என்றார்.

சினத்தை அடக்கி "இந்நகர் வாழ வேண்டும் என்பதற்கப்பால் நான் கூறுவது ஒன்றில்லை" என்று நான் சொன்னேன். குரலெழாமலேயே உறுதியுடன் "ஒன்றுணர்க அரசி, என்றேனும் விருஷ்ணிகளுக்கும் நிஷாத அசுர குடிகளுக்கும் இடையே போர் நிகழுமெனில் விருஷ்ணிகளின் பொருட்டுத்தான் வில்லெடுத்து களம் முன் நிற்பேன். என்னை எதிர்த்து நிற்கும் ஆற்றல் கொண்டவர் இங்கு எவரும் இல்லை. பிரத்யும்னனோ சாம்பனோகூட. எண்ணுக, ரிஷபவனத்தின் படைகளும் என்னுடன் எழும்!" என்றேன். கிருஷ்ணை ஏளனச் சிரிப்புடன் "ஏன் உங்கள் இறைவர் கூடவா உங்களுக்கு நிகரல்ல? அவரது படையாழியை எதிர்த்து நிற்குமா உங்கள் வில்?" என்றார்.

நான் திகைத்து "அவர் வருவாரெனில் இங்கு வேறு பேச்சே இல்லை" என்றேன். "அவர் வந்தாக வேண்டும். ஏனெனில் சாம்பன் முடிசூடியது அவரது காலத்திலேயே. இன்றுவரை சாம்பனின் முடிக்கெதிராக அவர் எதுவும் சொல்லவும் இல்லை. ஆகவே அரசருக்கெதிராக துவாரகையின் குடிகள் எவர் எழுந்தாலும் அரசரின் பொருட்டு படைக்கலத்துடன் வந்து

நிற்பது அவருடைய பொறுப்பு" என்றார் கிருஷ்ணை. "இப்பூசல்களை நாம் மீள மீள ஏன் பேசுகிறோம்? தாங்கள் ஓலை அளிப்பீர்கள் என்றால் நான் கிளம்புகிறேன்" என்றேன். "ஓலை அளிப்பதில் எனக்கு எந்தத் தயக்கமும் இல்லை. சென்று சாம்பனிடம் பெற்றுக்கொள்ளுங்கள் அந்த ஓலையை. பிறிதொன்றும் நான் உரைப்பதற்கில்லை" என்றார் ஜாம்பவதி.

"நன்று!" என்றபடி நான் எழுந்துகொண்டேன். ஜாம்பவதி உதடுகளை இறுக்கியபடி "நோக்குக! அரசியிடம் இருந்து ஆணை பெறாது உரையாடலை முடிக்கும் உரிமை உங்களுக்கில்லை. இதை நீங்கள் உங்கள் அரசியிடம் செய்யமாட்டீர்கள். நிஷாத குலத்து அரசி என்பதனால் இதை செய்கிறீர்கள். இப்போது உங்கள் உள்ளத்தில் இருப்பது என்னைவிட குடியில் முந்தியவர் என்னும் எண்ணம் மட்டுமே" என்று சொன்னார். அதை அவர் ஒரு படைக்கலமாகவே கையாள்கிறார் என்று உணர்ந்தேன். "அல்ல அரசி, தங்கள் அவைமுறைமைகளை பேணவே விழைகிறேன்" என்றேன். "எனில் அதை பேணியிருக்க வேண்டும்" என்றார். "பிழை நிகழ்ந்துவிட்டது, பொறுத்தருள்க!" என்றேன். "அப்பிழையை நிகழ்த்திய உளநிலையையே நான் சுட்டுகிறேன்" என்றார் ஜாம்பவதி.

"நான் எதுவும் சொல்வதற்கில்லை. இந்த உளநிலைகள் எல்லாம் இங்கு இளைய யாதவர் இருந்தபோது எங்கிருந்தன? ஒவ்வொருவரிலும் எழுந்திருக்கும் இந்த தெய்வங்கள் எல்லாம் அன்று எவ்வண்ணம் அடங்கிக்கிடந்தன? புரியவில்லை. மானுடருக்கு மேல் தெய்வங்களின் ஆட்சி என்பது கணந்தோறும் மாறிக்கொண்டிருப்பது என்பார்கள்" என்றபின் தலைவணங்கி கதவைத் திறந்து வெளியே சென்றேன்.

# கல்பொருசிறுநுரை - 12

## பகுதி மூன்று : ஒழியா நாற்களம் – 7

சாத்யகி சொன்னான். அரசே, மீண்டும் நான் என் நம்பிக்கையின்மையுடன் தனித்துவிடப்பட்டேன். சாம்பனை அரசவைக்குச் சென்று சந்திக்கவேண்டும், அவருடன் அவருடைய இளையோர் இருப்பார்கள். அவர்களை நிறைவுபடுத்தி அரசியின் ஓலையை வாங்கவேண்டும். அம்முயற்சியை அவ்வாறே விட்டுவிடலாமா என்று மீண்டும் தோன்றியது. இடைநாழியில் நடந்துகொண்டிருக்கையில் திரும்பிவிடலாம் என்ற எண்ணமே என் மேல் எடையென அழுத்தியது. கடமையுணர்வு பின்சென்றுவிட்டிருந்தது. ஆனால் பின்னர் தோன்றியது, இதை முற்றறிவதே நன்று என்று. எது எவ்வண்ணம் எங்கு முடியும் என்பதை தெரிந்துகொள்ளலாம். அந்த உந்துதல் என்னை சாம்பனின் அவை நோக்கி செல்லச் செய்தது.

நான் அனுப்பிய ஏவலன் சென்று திரும்பிவந்து அரசர் என்னை பார்க்க ஒப்புக்கொண்டதாக சொன்னான். செல்லும் வழியிலேயே அரசர் என்னும் சொல்லைப்பற்றி எண்ணிக்கொண்டிருந்தேன். உள்ளே நுழைகையில் நான் எந்தச் சொல்லை பயன்படுத்த வேண்டும், எம்முறைமையை கையாள வேண்டும் என்று குழம்பினேன். முதல் வணக்கத்திலேயே அவருடன் முரண்பாடு தோன்றிவிடலாகாது. ஆகவே என்னை கட்டுப்படுத்திக்கொண்டு என் செய்கைகளை

வகுத்துக்கொண்டேன். சாம்பனிடம் மிக இயல்பான குறைவான நடைமுறைகளை மேற்கொள்வது, அவருடைய சொல்லையும் செயலையும் கண்டு என்னை அமைத்துக்கொள்வது. அதன்பின் என்னை அங்கே முன்கண்டு நடித்து அதன்படி தொகுத்துக்கொண்டு சீராக நடந்தேன்.

சாம்பன் தன் அவையில் உடன்பிறந்தாருடன் இருந்தார். அவர் பீடத்தில் அமர்ந்திருக்க அருகே இளையவர்களான சுமித்ரனும் புருஜித்தும் அமர்ந்திருந்தனர். சதாஜித்தும் சகஸ்ரஜித்தும் விஜயனும் சித்ரகேதுவும் வசுமானும் திராவிடனும் கிராதுவும் பின்னால் நின்றிருந்தனர். சாம்பன் முந்தைய நாள் இரவெல்லாம் மதுவருந்தியிருந்தார் என்பதை விழிகளின் சோர்வு காட்டியது. அரசருக்குரிய உடைகளை அவர் அணியவில்லை, தோளில் ஒரு பொன்னூல் பின்னலிட்ட மேலாடை மட்டுமே அவரை அரசகுடியினர் எனக் காட்டியது. அருகே நாற்களப் பலகை விரிக்கப்பட்டிருந்தது. அவருடன் ஆடிக்கொண்டிருந்த சூதன் எழுந்து விலகி நின்றிருந்தான். அது ஓர் முறைமையிலா சந்திப்போ என நான் எண்ணியபோதே ஏவலன் "ரிஷபவனத்தின் அரசர், சத்யகரின் மைந்தர், யுயுதானன் வருகை" என அறிவித்தான்.

அச்சொல்லை செவிகொண்டபோது மீண்டும் துணுக்குற்றேன். அது என்னை உந்தி வெளியே தள்ளுவதுபோல. ஆனால் அப்போது அது நன்றென்றும் தோன்றியது. நான் வகுக்கப்பட்டுவிட்டேன், இனி இருநிலைகள் இல்லை. ஆகவே அரசன் என்ற நிலையில் எனது வணக்கத்தை தெரிவித்தேன். "துவாரகையின் பொறுப்பை கைக்கொண்டுள்ள இளைய யாதவரின் மைந்தர் சாம்பனுக்கு ரிஷபவனத்தின் குடிகளும் முடியும் அளிக்கும் நல்வணக்கம்" என்றேன். அவர் விழிகள்

மாறுவதை உண்ர்ந்தேன். "அமர்க!" என்றார். நான் அமர்ந்தேன். அவர்களின் விழிகள் என்மேல் ஊன்றியிருந்தன. அவர்கள் என்னைப்பற்றி நான் வருவதற்கு முன் பேசியிருந்தார்கள். அச்சொற்கள் அனைத்தும் திரண்டு அங்கே ஒளிகொண்டிருந்தன.

நம்மை வருடும் கூர்நோக்குகள் விந்தையான உணர்வுகளை உருவாக்குகின்றன. முதலில் நம்மை அவை எச்சரிக்கை கொள்ளச் செய்கின்றன. ஆனால் விரைவிலேயே அந்த எச்சரிக்கை சலித்து மிகமிக தன்னுணர்வற்றவர்களாக ஆக்கிவிடவும் செய்கின்றன. மேடையில் நடிகர்கள் முதலில் நோக்குகளால் நிலையழிகிறார்கள். பின்னர் நோக்குகளே அவர்களை தனிமைகொள்ளச் செய்கின்றன. நூறு விரல்களால் தூக்கப்படுவதுபோல ஒருவகை மிதத்தல் அது. நாம் அங்கே அப்போதும் சூடும் உருவை நம்பி ஏற்று நடித்து முடிப்போம். முழுமையுடன் அங்கே துலங்குவோம். எவ்வண்ணமாயினும் எதன்பொருட்டாயினும் நம்மை எவரேனும் நோக்குவது நமக்கு மகிழ்வளிக்கிறது. பலர் நோக்குகையில் நாம் உருப்பெருகுகிறோம். நோக்க நோக்க வளர்வதே நாமெனும் உணர்வு. நாம் அந்த மேடையில் ஒருபோதும் நாமென வெளிப்படுவதில்லை, ஆணவமே நம் வடிவைச் சூடி எழுந்து அங்கே நிற்கிறது.

நான் பேசுவதற்காக அவர்கள் காத்திருந்தார்கள். இன்நீர் வந்தது. அவர்கள் ஒவ்வொருவரும் அதை அருந்தினார்கள். நான் கோப்பையை கையிலேயே வைத்திருந்தேன். அவர்கள் பேசட்டும் என்று எதிர்பார்த்தேன். சற்று பொறுமை இழந்தபின் சாம்பன் என்னிடம் "கூறுக!" என்றார். "இளவரசே, நான் வந்திருப்பது தங்கள் அன்னையிடமிருந்து ஒரு ஓலையை

பெற்றுக்கொண்டு இளைய யாதவரிடம் செல்வதற்காக. பிற செய்திகளை அறிந்திருப்பீர்கள்" என்றேன். "ஆம், ஆயினும் நீங்கள் முழுமையாகச் சொல்லலாம், அதுவே முறை" என்றார். "எட்டு அரசியரின் செய்திகளுடன் நான் இளைய யாதவரை பார்க்கலாமென்றிருக்கிறேன். தங்கள் அன்னையும் பிற நான்கு அரசியரும் அளிக்கும் செய்தியை ஒற்றை ஓலையாக அளிப்பதாக சொன்னார்கள். அதை தங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளும்படி ஆணையிட்டார்கள்" என்றேன்.

"ஐவரில் அன்னை லக்ஷ்மணையின் ஒப்புதலை நான் பெற முடியாது. அவர் இப்போது எங்களுடன் இல்லை" என்று சாம்பன் சொன்னார். "அன்னை நக்னஜித்தியும் பத்ரையும் தங்கள் ஒப்புதலை அளிப்பார்கள். மித்ரவிந்தையிடம் ஏதோ சிறு தயக்கம் உள்ளது. அவர் மைந்தர்களின் எண்ணம் என்ன என்று இன்னமும் தெளிவில்லை." நான் "வேண்டுமென்றால் நான் அவர்கள் இருவரையும் தனியாக சந்திக்கிறேன்" என்றேன். "அது தங்கள் விருப்பம். நீங்கள் எண்ணுவதுபோல் இது எளிதான ஒன்றல்ல" என்று சாம்பன் சொன்னார். "நான் முயன்றுபார்க்கலாம் என எண்ணுகிறேன். முயலாமலிருந்தால் என்னால் இங்கு அமைய முடியாது" என்றேன்.

"எந்தை எங்கிருக்கிறார் என அறிவீர்களா?" என்றார் சாம்பன். "அறியேன். ஆனால் கதிரவன் எங்கிருக்கிறான் என்பதை அவனால் மறைத்துவிட முடியாது. எங்கிருந்தாலும் சூதர்கள் அவரை அறிந்திருப்பார்கள். சொல் வழியாக அவரை தேடிச்செல்ல இயலும்" என்றேன். சாம்பன் ஏளனத்துடன் உதடு கோண புன்னகைத்து "பாரதவர்ஷத்தின் ஏதேனும் ஷத்ரிய அரசனின் சிறையில் இருக்கக்கூட வாய்ப்புள்ளது" என்றார். என் உடலெங்கும் பரவிய சினத்தை விரல்களை முறுக்கித் தடுத்து

“அவரைச் சிறையிடும் ஆற்றல் கொண்ட அரசர் எவரும் பாரதவர்ஷத்தில் இல்லை. அவ்வண்ணம் ஒன்று நிகழுமென்றால் ஆழிவண்ணன் மானுடனாக மீண்டும் எழுந்திருக்கிறார் என்றே பொருள்” என்றேன்.

அரசே, சாம்பனின் முகத்தை இன்னமும் நான் நினைவுகூர்கிறேன். அந்த அவையில் அவர் தன்னை அரசர் எனக் காட்ட விழைந்தார். அரசகோலத்தில் அமர்ந்திருந்தால் அது அத்தோற்றத்தைச் சூடுவதாக தோன்றும் என எண்ணியிருக்கலாம். ஆகவே இயல்பாக, மஞ்சத்தறையிலிருந்து அப்படியே எழுந்து வந்த பேரரசராக தோற்றம் காட்ட முயன்றார். எந்நிலையிலும் அரசர் என்றே திகழ்பவராக நடித்தார். பெரும்போக்கும் பொருட்டின்மையும் தோன்றும்படி பேசினார். ஆனால் அனைத்துக்கும் அடியில் அவர் யார் என்பதை மறைக்கமுடியவில்லை. சொல் பெருகுந்தோறும் திரைவிலக்கி வெளியே வந்தார். நீங்கள் சிறையில் இருக்கக்கூடும் என்று சொன்னபோது அவ்விழிகளில் எழுந்தது கீழ்மையின் நகைப்பு. நூறு கதவுகளுக்கு அப்பால் உள்ளே பூட்டப்பட்டிருந்த ஒன்று மீறி எழுந்து சாளரம் வழியே எட்டிப்பார்த்தது. கீழ்மக்களால் இயலாத ஒன்றே உள்ளது, அவர்களால் அக்கீழ்மையை மறைத்துக்கொள்ள முடியாது.

சாம்பன் நகைத்து “அறிக யாதவரே, இன்று ஷத்ரிய நாடுகள் வல்லமை பெற்று வருகின்றன! அவர்கள் புதிய சூழ்ச்சி ஒன்றை கற்றுக்கொண்டிருக்கிறார்கள். அசுரர்களையும் நிஷாதர்களையும் உடன் இணைத்துக்கொண்டு வல்லமைகொள்கிறார்கள். உங்கள் தலைவர் வகுத்த வழியை அவரைவிட சிறப்பாக அவர்கள் கையாளக்கூடும்” என்றார். “எனக்குக் கிடைத்த ஒற்றர் செய்திகள் அவர் எங்கோ சிறையில்

இருப்பதாகவே சொல்கின்றன. கூடிய விரைவிலேயே அவர் தங்களிடம் பணயமென இருக்கிறார் என்பதை ஏதேனும் ஷத்ரிய நாடு அறிவிக்கும்." நான் சீற்றத்துடன் "அவ்வண்ணம் ஓர் எண்ணம் எவருக்கேனும் வருமென்றால் அவர்கள் மீது அஸ்தினபுரியின் தேர்ச்சகடங்கள் ஏறிச்செல்லும்" என்றேன்.

சாம்பன் "நீங்கள் அறிந்தது அவ்வளவுதான். அஸ்தினபுரி இன்று நிஷாதகுடிப் பெண்ணால் ஆளப்படுகிறது. துரியோதனனின் இளைய உடன்பிறந்தவனின் கோல் அங்கு நின்றிருக்கிறது, அதை அவள் சூடியிருக்கிறாள். அங்குள்ளோர் புதிய குடிகள். இளைய யாதவரை நேரில் அறிந்த எவரும் அங்கில்லை" என்றார். "அவரை அறிந்தவர் இல்லாமல் இருக்கலாம். அவரால் அறியப்படாத எவருமில்லை" என்றேன். சாம்பன் ஒருகணத்தில் கடுஞ்சினம் கொண்டார். உரத்த குரலில் "இப்படி கூறிக்கூறி எளிய முதியவரை இறைநிலைக்கு ஏற்றிவிட்டிருக்கிறீர்கள். உங்கள் சொற்களின் சுமையை தாளமுடியாமல் அவர் ஓடி ஒளிந்துகொண்டிருக்கிறார்" என்றார். "அவர் இறைநிலையை அடைந்தவர் அல்ல, இறைவனேதான். எனக்கு அதில் ஐயமில்லை" என்றேன்.

சாம்பன் சினமும் ஏளனமும் கலக்க பற்களை இளித்துக்கொண்டு "இறைவனால் தன் மைந்தரை இருக்கும் இடத்தில் இருந்து ஆள இயலாதா என்ன? இறைவனின் மைந்தர்கள் எதற்கு முடிசூடி அமரும்பொருட்டு பூசலிடவேண்டும்? ஏன் தந்தை சொல்லை எதிர்க்கத் துணியவேண்டும்?" என்றார். அவருடைய இளையோர் நகைத்தனர். அவர் அந்நகைப்பில் கலந்துகொண்டபோது சற்று எளிதானார். "என்னை பண்பறியாதவன், பெருவிழைவு கொண்டவன், அறம்மீறிச் செல்லும் அசுரன் என்கிறார்கள்.

எனில் என்னைப் போன்ற ஒருவனை மைந்தனாகப் பெற்ற அவர் எப்படி இறைவனாக இருக்க இயலும்?" என்றார். "இறைவன் தன் மைந்தரை எண்ணி எண்ணி ஏன் துயருறவேண்டும்? இறைவனிடம் சென்று அவர் மைந்தர்களைப் பற்றி உங்களைப்போன்றோர் ஏன் முறையிடவேண்டும்?"

நான் என் பொறுமையை மீட்டுக்கொண்டேன். உள்ளே ஒரு புன்னகை எழுந்தது. "இறைவடிவங்கள் அனைவருக்கும் எதிர்நிலை கொண்ட மைந்தர்கள் பிறப்பார்கள் என்பது இங்கு ஒவ்வொரு முறையும் எழுதப்பட்ட சொல், கண்கூடான நெறி" என்றேன். "நீங்கள் இவ்வாறு இருப்பதே அவரது இறைநிலைக்கு சான்றென்று கற்றோர் கூறுவர்." சாம்பன் மேலும் சினம்கொள்வது தெரிந்தது. என் புன்னகை பெரிதாகியது. "ஹிரண்யகசிபுவுக்கு பிரஹலாதன் மைந்தர் எனப் பிறப்பார் என்றால் துவாரகையின் அரசருக்கு நீங்கள் பிறப்பதுதானே காவிய நெறி?" என்றேன். அவர் சீற்றத்துடன் ஏதோ சொல்ல நாவெடுத்து என் கண்களின் நகைப்பைக் கண்டு தன்னை கட்டுப்படுத்திக்கொண்டார். பீடத்தின் கைப்பிடிமேல் கைகள் தளர்ந்து அமைந்தன. பெருமூச்சுடன் சாய்ந்துகொண்டார். சலிப்புடன் தலையசைத்து "எதற்கு வீண்பேச்சு?" என்று அவர் சொன்னார்.

"தந்தை வருவதனால் தாங்கள் இவை அனைத்தையும் இழந்துவிடுவீர்கள் என்று அஞ்சுகிறீர்கள் என்றால் அதை நேரடியாகவே கூறலாம். ஓலை தேவையில்லை. தாங்கள் ஓலை தரமறுத்துவிட்டதை பிறரிடம் கூறிவிடுகிறேன்" என்றேன். நான் நினைத்தது போலவே சாம்பன் சீற்றம் கொண்டார். "எவர் வந்தாலும் இந்த மணிமுடியை நான் துறக்கப்போவதில்லை, ஏனெனில் இதை நான் சூடிவிட்டேன்.

இதற்கு எதிராக வரும் எக்குரலும் என் வாளுக்கும் வில்லுக்கும் எதிர்நிற்க வேண்டும். அது தந்தையே ஆயினும், தெய்வமே ஆயினும்" என்று கூவினார். நான் என் குரலில் ஏற்றமில்லாமல் "நன்று, எனில் அவர் வருவதில் உங்களுக்கு மாற்றுச்சொல் இல்லை அல்லவா?" என்றேன்.

"இல்லை. எவர் வந்தாலும் மாற்றுச்சொல் இல்லை. தருகிறேன். அன்னையரின் சொற்களை அவர்கள் அனுப்பியிருக்கிறார்கள். அவற்றுக்குக் கீழே என் சான்றொப்பம் இட்டு தருகிறேன். ஓலைகளுடன் இன்றே நீங்கள் கிளம்பலாம்" என்று சாம்பன் சொன்னார். நான் "மித்ரவிந்தையும் காளிந்திதேவியும் ஓலையை தரவில்லை. அவற்றை பெற்றபின் கிளம்புகிறேன்" என்றேன். "அவர்களின் மைந்தர்களில் பெரும்பாலும் அனைவரும் இங்குதான் இருக்கிறார்கள்" என்று சாம்பன் சொன்னார். "ஆனால், மைந்தர்களின் சொல்லை நான் நாடவில்லை" என்றேன். "மித்ரவிந்தையை நீங்கள் சந்திக்கலாம். காளிந்தி அன்னை எவரிடமும் பேசுவதில்லை என்று அறிந்திருப்பீர்கள். எவரும் அவரை பார்ப்பதுமில்லை. அவர் இருக்கும் ஊழ்கத்தை கடந்து சென்று அவரைக் காண நாங்கள் எவரையும் ஒப்புவதில்லை" என்றார் சாம்பன்.

"நான் செல்வது ராகவராமனின் சொல்லுடன் இலங்கை சென்ற அனுமனைப்போல. எங்கும் நுழைவொப்புதல் எனக்குண்டு" என்றேன். சில கணங்களுக்கு பின் அவர் புன்னகைத்தார். "அவ்வாறென்றால் அதுவும் நன்றே" என்றார். அவருடைய உள்ளம் அனைத்திலிருந்தும் விலகிவிட்டது என்று தெரிந்தது. அது நிஷாதரும் அசுரரும் கொண்டிருக்கும் இயல்புகளில் ஒன்று. எதிலும் நெடும்பொழுது நீடிக்க அவர்களால்

இயல்வதில்லை. பொங்கி எழுந்து கொப்பளித்து அலையடித்து உச்சத்திலிருந்து அப்படியே சரிந்து சுருங்கி அகன்று சென்றுவிடுவார்கள். அவர் அவையிலிருந்தே அகம் நீங்கிவிட்டார் என்று உணர்ந்தேன். அவர் அப்போது விழைந்தது கலம்நிறைய மதுவும் ஊனுணவும்தான். அதுவும் நன்றே என எண்ணிக்கொண்டேன். என் சொற்களே அங்கு அறுதியாக ஒலிக்கும்.

"நான் சென்று அன்னையை பார்க்கிறேன். அவர் சொல் என்னவென்று கேட்கிறேன்" என்றேன். "அவர் சொல் என்னவாக இருக்குமென்று என்னால் உய்த்துணர முடிகிறது. ஏனென்றால் எங்கள் அனைவருக்குள்ளும் ஒரு துளியேனும் அவர் கொண்டுள்ள அந்தத் தவம் எஞ்சியிருக்கிறது. அவர் உங்கள் குடியினர் என நீங்கள் எண்ணலாம். ஆனால் மரத்தின் அடித்தூரும் மலரிதழும் ஒன்றல்ல. மென்மையும் வண்ணமும் தேனும் மணமும் அடித்தூரும் வேரும் அறிவதே இல்லை. அவர் உங்கள் குடியில் தோன்றியதனால் ஷத்ரியர்களும் யாதவர்களும் அடையாத ஒன்றை அடைந்தார். மறு எண்ணமே இல்லாத தற்கொடை. அசுரருக்கே அருந்தவம் கைகூடுகிறது. பண்டு அசுரப்பெருவீரர்கள் தெய்வங்களை எளிதில் சென்றடைந்தனர். காளிந்தி அன்னையும் அவ்வாறே. எங்கள் எவரைவிடவும் அவர் என் இறையை மிக அணுகிச் சென்றார். அவரே என்று ஆனார். எனக்கு அவர் என் தலைவரின் தோற்றமேதான்."

அவர் விழிகளை நோக்கியபடி தணிந்த உறுதியான குரலில் "மெய், அவர் மைந்தர் உங்களுடன் இருக்கிறார்கள். அவர்களின் சொல்லும் செயலும் உங்களுக்கு உகந்தவையாக இருக்கலாம். எண்ணுக, அவர்கள் காளிந்தியின் மைந்தர்கள்! யமுனையின்

தண்மை அவர்களுக்குள் துளியேனும் எஞ்சியிருக்கும்" என்று நான் சொன்னேன். என் சொற்களால் அவர் மிகவும் குழம்பியிருப்பதை உணர்ந்தேன். மேலும் அவரை குழப்பும்பொருட்டு "நீங்களும் அவ்வாறே. இளவரசே, உங்களுக்குள் திரண்டிருக்கும் இந்த எதிர்ப்பின் விசையே ஆழத்தில் இருக்கும் பணிவையும் கனிவையும் காட்டுகிறது. ஒருநாள் நீங்களும் உங்கள் அன்னையரின் தவத்தின் துளிகளை உள்ளே உணர்வீர்கள்" என்றேன்.

சாம்பன் சுமித்ரனை பார்த்தார். அவர் கொண்ட உணர்வுகள் மீண்டும் முற்றடங்கிவிட்டிருந்தன. எண்ணங்கள் திசைகுழம்பி ஓடி பின் சுருண்டுவிட்டிருப்பதை உணர்ந்தேன். தயங்கிய குரலில் "அவ்வாறெனில் அதுவும் நன்று. சென்று அவர் சொல்லை பெற்றுக்கொள்ளுங்கள்" என்றார். "பெற்றே ஆகவேண்டும். அவர் சொல்லை நான் பெறாவிட்டால் அச்சொல் எழக்கூடாது என்று நீங்கள் தடுத்து வைத்திருக்கிறீர்கள் என்றே நான் புரிந்துகொள்வேன்" என்றேன். சாம்பன் அக்கணமே பற்றிக்கொண்டு சினவெறியுடன் எழுந்து இரு கைகளாலும் பீடத்தின் கைகளை அறைந்து உரக்க "சென்று சொல்பெறுங்கள். எனக்கு எந்த இழப்புமில்லை. நான் எவரையும் தடை செய்யப்போவதில்லை. ஆனால் இந்த ஓலைகள் ஒரு சொல்லுடனே இருக்கும், எனது மணிமுடியை உறுதி செய்யும் பொருட்டு அரசர் இங்கு வரவேண்டும் என்று" என்றார்.

நான் "அரசருக்கு ஆணை இடுகிறீர்கள்" என்றேன். "ஆம், ஆணைதான். சில தருணங்களில் ஆணையிட்டே ஆகவேண்டும். தெய்வங்களுக்கே ஆனாலும். அவர் இங்கு வருவதென்றால் எனது மணிமுடியை உறுதி செய்வதன்

பொருட்டே அது நிகழவேண்டும். பிறிது ஒரு சொல்லையும் ஏற்க மாட்டேன். என் அவ்வுறுதி ஓலையில் இருக்கும்" என்றார் சாம்பன். "பிற ஓலைகளில் அவ்வாறு இல்லை" என்றேன். "அது அவர்களின் எண்ணம். அவர்களுக்கு ஒன்று தெரியும், தந்தை வந்தாலும் அவர்களை ஏற்கப் போவதில்லை என்று. ஏனென்றால் இந்நகர் ஷத்ரிய வல்லமையால் உருவாக்கப்படவில்லை. இது யாதவர்களின் ஆற்றலால் அமைந்ததும் அல்ல. இது நிஷாதகுடியின் ஆற்றலால், அசுரக்குருதியின் விசையால் அமைக்கப்பட்டது."

"ஷத்ரியர்களை எதிர்த்து இது இவ்வண்ணம் எழுந்து நிலைகொண்டதே ஷத்ரியர்கள் என்றும் அஞ்சிவந்த அசுரவல்லமையால் இது படைக்கப்பட்டது என்பதனால்" என்று சாம்பன் தொடர்ந்தார். "இந்நகர் இவ்வண்ணம் பொலிந்தெழுந்த விரைவை எண்ணிக்கொள்ளுங்கள். எந்த ஷத்ரிய நகர் இப்படி எழுந்துள்ளது? எந்த யாதவபுரி இப்படி பெருகியிருக்கிறது? இந்தப் பொங்குவிசை அசுரர்களுக்குரியது. விருத்திரனின் புற்றுகளைப் போன்றது இது. இந்நகருக்கு நிகர் சூரபதுமரின் வீரமாகேந்திரம், நரகாசுரரின் பிரக்ஜ்யோதிஷமும் ராவணமகாப்பிரபுவின் இலங்கையும் மட்டுமே. அதை இங்கு வந்து இன்றுவரை சொல்லெடுத்த அத்தனை சூதரும் புலவரும் பாடியிருக்கிறார்கள்."

"யாதவரே, உங்களாலோ கிருதவர்மனாலோ ஏன் இத்தனை பெரிய நகரை உருவாக்க இயலவில்லை? ஏனென்றால் இந்நகர் அசுரவல்லமையின் ஆக்கம். என் தந்தையில் ஓடிய மரீஷையின் குருதியில் இருந்து எழுந்த மாநகர் இது. இது லவணர்களின் கொடிவழியின் படைப்பு. ஆகவேதான் அத்தனை புல்வெளிகளையும் கடந்து உப்பு விளையும் இக்கடல்முனைக்கு

வந்தார் எந்தை. பிற எவரைவிடவும் அதை அவர் அறிவார். இதை யாதவர்களால் ஆளமுடியாது, அவர்களுக்கு அப்பாற்பட்டது இதன் பேருருவம். இதை ஷத்ரியர் பெற்றால் பிற ஷத்ரிய நகர்களில் ஒன்றென்றே ஆகும். இதை இவ்வண்ணம் நிலைநிறுத்தும் ஆற்றல் நிஷாத அசுர குருதிக்கே உண்டு. ஆகவேதான் என்னை இதன் அரசன் என்று ஆக்கினார் எந்தை. இது என் நகர், என் மூதன்னை மரீஷையின் நகர். இதை எவரும் என்னிடமிருந்து கொள்ள இயலாது."

நான் "இந்த உச்சவிசை என்னை கசப்புகொள்ளச் செய்கிறது" என்றேன். சாம்பன் ஏளனமாக "அது உங்கள் உணர்வு. எனக்கு அது ஒரு பொருட்டல்ல. தந்தை வரட்டும், என்னை அரியணை அமர்த்தி முடிசூட்டட்டும்" என்றார். அதுவரை சொல்கொள்ளாமலிருந்த சுமித்ரன் கை நீட்டி "அவர் எழுதிய வேதம் உண்மையென்று அவருக்குத் தோன்றுகிறது என்றால், அது இங்கு நிலைநிற்க வேண்டும் என்றால், அவர் எங்களையே ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்நகருக்கு உரிமைகொண்ட எங்களைத் தவிர்த்து தான் பிறந்த யாதவக் குடியினரை இங்கு மணிமுடி சூட வைத்தால் அதற்கு ஒன்றே பொருள், அவர் குடிவழி முடியுரிமையை மட்டுமே ஏற்கிறார். ஷத்ரியர் என்பதனால் ருக்மிணியின் மைந்தர்கள் முடிசூடவேண்டுமென்றால் அவர் வேதச்சொல்லின்படி மணிமுடி கைமாறப்படவேண்டுமென்று எண்ணுகிறார்" என்றார்.

"தகுதிப்படி மணிமுடி சூடப்படவேண்டும் என்று அவர் எண்ணுவது உண்மை என்றால், மணிமுடியை வெல்லும் திறன்கொண்டவரே சூடும் தகுதிகொண்டவர் என்று அவர் சிசுபாலரின் அவையில் எழுந்து கூறியது அவர் முன்வைக்கும் மெய்மை என்றால், பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்

செய்தொழில் வேற்றுமையால் சிறப்பு அமையும் என்று தன் இறைப்பாடலில் அவர் கூறிய வரி மீண்டும் உறுதி செய்யப்பட வேண்டுமென்றால் நாங்களே இங்கு முடிசூடவேண்டும். எங்கள் மணிமுடியை உறுதி செய்வதனூடாகவே தான் உரைத்த வேதத்தின் சொல்லை தன் வாழ்க்கையால் அவர் நிறுவுகிறார். அவரிடம் கூறுக, நோக்கிக்கொண்டிருக்கிறது பாரதவர்ஷம்! அவர் எடுக்கப்போகும் முடிவென்ன என்று அது காத்திருக்கிறது" என்று சுமித்ரன் கூவினார்.

அவருடைய நடுக்கை, வெறியை நோக்கிக்கொண்டிருந்தேன். "ஒன்று அவரே அம்முடிவை எடுத்து தன் மைந்தருக்கு ஆணையிடவேண்டும். அம்மைந்தர் எதிர்ப்பார்கள் என்றால் எங்கள் பொருட்டு அவர் படையாழி சூடி போர்முகம் நிற்கவேண்டும். இல்லை எனில் தான் இயற்றியதை ஊழுக்கு விட்டுவிட்டு அவர் அகன்றே நிற்கட்டும். இங்கிருக்கும் இயல்பான வல்லமைகளால் அனைத்தும் முடிவாகட்டும் என்று அவர் ஒதுங்கட்டும். இந்த ஷத்ரியர்களையும் யாதவர்களையும் வென்றும் கொன்றும் துவாரகையின் முடியை நாங்கள் சூடுகிறோம். மாறாக எந்த முடிவை அவர் எடுத்தாலும் தன் சொல்லுக்கு அவரே மாறு நிற்கிறார் என்பதே பொருள். அவ்வாறெனில் அதையும் அவர் கூறட்டும். அது உலகுமுன் தெளிவாகட்டும்" என்றார் சுமித்ரன்.

அப்போது ஒன்றை உணர்ந்தேன், அந்த உடன்பிறந்தார் குழுவில் சொல்தேர்பவர் சுமித்ரனே. சாம்பன் கூறுவது அவருடைய சொற்களையே. அவ்வண்ணம் சொல்கூட்டி அளிப்பவர்களில் நா மீது முற்றிலும் கட்டுப்பாடு கொண்டவர்களால் மட்டுமே அவைகளில் தங்கள் சொற்களை பிறர் சொல்லவிட்டு அடங்கியிருக்க முடியும். அவர்கள் விலகி நின்று

நோக்குவார்கள், ஆனால் தங்கள் சொற்கள் அவையிலெழும்போது அதனுடன் உளம்செலுத்திக்கொண்டே இருப்பார்கள். ஏதோ ஒருகணத்தில் அவர்களே பேசத்தொடங்கிவிடுவார்கள். சுமித்ரன் பேசத்தொடங்கியதும் சாம்பன் மீண்டும் உளம் ஒடுங்கி ஆர்வமிழந்தார். "ஓலையை பெற்றுக்கொள்க, யாதவரே!" என்றபின் மேலாடையை எடுத்து மேலே சுற்றிக்கொண்டு கால்களை ஆட்டலானார்.

நான் பெருமூச்சுடன் "உங்கள் சொற்களை நான் அவரிடம் கூறுகிறேன். ஓலை பெறும் வழிகளை ஏவலருக்கு ஆணையிடுங்கள்" என்றேன். "அவ்வாறே ஆகுக!" என்று சாம்பன் கூறினார். "அந்த ஓலை சற்று நேரத்தில் தங்களை வந்தடையும்" என்றார் சுமித்ரன். நான் "விடைகொள்கிறேன்" என்றபடி எழுந்துகொண்டேன். "யாதவரே, உங்கள் நோக்கம் என்னவென்று எனக்குத் தெரியாது. விருஷ்ணி குலத்தின் பொருட்டு அவர்களுடன் படைநின்றீர்கள் என்றால் ஒருநாள் உங்களை களத்தில் சந்திப்பேன். உங்களை கழுத்தறுத்து மண்ணில் வீழ்த்தும் அறைகூவலை விடுப்பேன்" என்றார் சாம்பன்.

ஆனால் அவரிடம் வஞ்சமோ பகையோ வெளிப்படவில்லை. ஒருவகை உவகைதான் கண்களில் தெரிந்தது. சுமித்ரனின் சொல்லெழுந்ததுமே அரசன் என அவையில் இருந்து அகன்று சென்ற சாம்பன் கிராதர் என திரும்பி வந்திருந்தார். நான் புன்னகைத்து "அந்த அறைகூவலை இப்போதே விடுத்ததாக எடுத்துக்கொள்கிறேன்" என்றேன். "ஆம், அவ்வாறெனில் அவ்வாறே" என்று அவர் சொன்னார். நான் புன்னகைத்து தலைவணங்கி அவை நீங்கினேன். அங்கிருந்து வெளியே வந்தபோது சாம்பனின் அந்த இறுதி அறைகூவலின்

பொருளென்ன என்று எண்ணிக்கொண்டேன். அவர் உங்களை என்னுருவில் கண்டாரா என்று ஐயுற்றேன்.

# கல்பொருசிறுநுரை - 13

**பகுதி மூன்று : ஒழியா நாற்களம் – 8**

என்னை மித்ரவிந்தையின் அரண்மனைக்கு கூட்டிச்செல்லும்படி காவலரிடம் சொல்லிவிட்டு காத்திருந்தேன். எண்ணியதுபோலவே பிந்தியது. என்னை வந்து அழைத்துச்சென்ற காவலன் துவாரகைக்கு புதியவன். அரசி மித்ரவிந்தை அவந்தியினருக்குரிய சிறிய அரண்மனையில் குடியிருந்தார். அங்கே அவந்தி நாட்டிலிருந்தே காவலர்கள் வரவழைக்கப்பட்டிருந்தனர். ஒவ்வொருவரும் பிறர் மேல் ஐயம் கொண்டிருந்த துவாரகையில் பெண்கள் தங்கள் பிறந்த நாட்டுக்கு உள்ளத்தால் திரும்பிச் சென்றுவிட்டிருந்தனர். மணத்தன்னேற்பில் உங்களை ஏற்று உடன்வந்த மித்ரவிந்தை ஒவ்வொரு அடியாக பின்வைத்து மீண்டும் அவந்திக்கே சென்றுவிட்டிருந்தார் என்று தோன்றியது.

என்னை அழைப்பதற்குப் பிந்தியமை ஏன் என்று புரிந்துகொண்டிருந்தேன். எண்ணியதுபோலவே விருகனும் கர்ஹனும் அனிலனும் கிருதரனும் வர்தனனும் அங்கிருந்தனர். மைந்தர்கள் வந்து அன்னையிடம் ஓரிரு சொற்கள் பேசி முடிவுகள் எடுத்த பின்னரே என்னை அழைத்திருந்தனர். நான் அறைக்குள் சென்றபோது மித்ரவிந்தையின் அருகே விருகன்

அமர்ந்திருந்தார். கர்ஹன் அப்பால் நின்றிருந்தார். பிறர் சற்று தள்ளி சாளரத்தோரம் நின்றிருந்தனர். நான் தலைவணங்கி அமர்ந்தேன். விருகன் என்னிடம் நேரடியாக "நிகழ்வன அனைத்தையும் அறிந்தோம். எங்கள் அன்னையின் ஓலை அளிக்கப்படுவதில் எந்தத் தடையும் இல்லை. ஆனால் அது ருக்மிணி அன்னையின் ஓலையுடன் சேர்த்து அளிக்கப்படாது. எங்கள் ஓலை தனியாகவே அளிக்கப்படும்" என்றார்.

நான் "நான் உங்கள் ஓலைகளை கோரவில்லை, நான் கோருவது அரசியின் ஓலையை மட்டுமே" என்றேன். "ஆம், அந்த ஓலையை என் அன்னை தனியாகவே தருவார்" என்றார் விருகன். "அதிலென்ன?" என்று நான் இயல்பாக சொன்னேன். "இன்று அவந்தி விதர்ப்பத்துடன் இணைந்திருக்கிறது. பிரத்யும்னனின் அவையிலேயே நாங்கள் இடம்பெறுகிறோம். ஷத்ரியக்கூட்டிலிருந்து நாங்கள் வெளியே செல்லவும் முடியாது. ஆனால் நாங்கள் அவர்களின் அடிமைகள் அல்ல, கூட்டர் மட்டுமே. அதை அவர்கள் உணரவேண்டும். அவர்கள் அனுப்பும் ஓலையில் ஒரு துணைமுத்திரையென எங்கள் அன்னை அமையலாகாது" என்றார் விருகன். "அவ்வாறு நீங்கள் முடிவெடுத்தால் நான் ஏதும் சொல்வதற்கில்லை" என்றேன். "ஓலையை கொடுங்கள், அதற்குமேல் பேச ஏதுமில்லை."

"அந்த ஓலையை உடனே உங்களிடம் அளிக்கச் சொல்கிறேன்" என்று விருகன் தொடர்ந்தார். "அவ்வண்ணம் ஓலை தனியாகவே அளிக்கப்பட்டது என்பதை அவர்கள் உணரவேண்டும். இங்கு நாங்கள் அதைப்பற்றி எண்ணினோம். இது ஒரு நல்ல தருணம், அவர்களுடன் நாங்கள் இருக்கிறோம் என்பதையும் ஆனால் அவர்களுக்கு அடங்கி அல்ல என்பதையும் அவர்களுக்கு உணர்த்துவதற்கு இதை

பயன்படுத்திக்கொள்ளலாம்." நான் சலிப்புடன் "இது ஒரு மிகச் சிறிய செயல். இதனூடாக ஆவதொன்றுமில்லை" என்றேன். "இல்லை, அந்த அவையில் நாங்கள் எப்படி நடத்தப்படுகிறோம் என்பதை நீங்கள் உணர்ந்தால் இதை சொல்லியிருக்கமாட்டீர்கள். எங்களை அவர்களுக்கு கப்பம் கட்டும் சிற்றரசின் இளவரசர்கள் என்றே நடத்துகிறார்கள்" என்றார் விருகன்.

நான் புன்னகைத்தேன். "என்ன புன்னகை?" என்று விருகன் ஐயத்துடன் கேட்டார். "நன்று, யாதவர்கள் மட்டுமல்ல ஷத்ரியர்களும் ஒற்றுமையுடன் இல்லை என்பதை காண்கையில் நிறைவளிக்கிறது" என்றேன். "ஏன்?" என்றார். "அனைத்துத் தரப்பும் நிகர்நிலையில் இருப்பது நன்றல்லவா?" என்றேன். அவர் "எங்கள் இடமென்ன என்று எங்களுக்குத் தெரியும்" என்றார். நான் அவருக்கு அறிவூக்கி எவர் என அறிய விழைந்தேன். "ஆனால் அவந்தி என்றுமே விதர்ப்பத்திற்குக் கீழேதானே இருந்துள்ளது?" என்றேன். அவர் சீற்றத்துடன் "எவர் சொன்னது? அவந்தி தன் தன்னுரிமைக்காக போராடிக்கொண்டே இருந்திருக்கிறது. அதன் வீரவரலாறு அனைவருக்கும் தெரியும்" என்றார்.

எண்ணியதுபோலவே வர்தனன் தணிந்த உறுதியான குரலில் "சிறிய நாடுகளை விழுங்கிவிடலாம் என பெரிய நாடுகள் எண்ணுவது என்றுமுள்ளதே" என்றார். "ஆனால் அவ்வண்ணம் விழுங்கப்படாமல் ஒரு நாடு பல தலைமுறைக்காலம் நீடிக்கிறதென்றாலே அது தன்னுரிமையை முதன்மை கொள்கிறது, அதன்பொருட்டு போரிடச் சித்தமாக உள்ளது என்றே பொருள். அவந்தியின் விந்தனும் அனுவிந்தனும் வாழ்ந்த ஒவ்வொரு கணமும் மாளவத்திற்கும்

விதர்ப்பத்திற்கும் அச்சமூட்டுபவர்களாகவே திகழ்ந்தனர். குருக்ஷேத்ரப் போர்க்களத்தில் அவர்களின் களவீரத்தை இன்றும் சூதர்கள் பாடிப்புகழ்கின்றனர்" என்றார்.

அவர்தான் சுழிமுனை என்று கணித்த என் கூர்மையை நானே வியந்துகொண்டேன். அந்த அவைக்குள் நான் நுழைந்த கணம் அங்கிருந்தவர் அனைவரும் அவரை ஒருகணம் நோக்கி விழிவிலக்கியதை நான் கண்டிருந்தேன். இளையவர் ஆயினும் அவரே அங்கே சூழ்திறன் கொண்டவர். அதனாலேயே அவைமுதன்மை கொண்டவர். ஒவ்வொரு குழுவிலும் அவ்வண்ணம் ஒருவர் எழுவதன் விந்தையை எண்ணிக்கொண்டேன். அவரை மேலும் சீண்ட விழைந்தேன். அவருக்கு தன் நாவின்மேல் எவ்வளவு ஆட்சி என்று அறிய. ஏனென்றால் இந்தக் களமாடலில் தன்னை தான்வென்ற திறனாளரே முதன்மைவிசை என திகழவிருக்கிறார்.

நான் அவரிடம் "மாளவமும் விதர்ப்பமும் போரிட்டுக்கொண்டே இருந்தமையால் இரு தரப்பிலும் மாறி மாறி ஒட்டிக்கொண்டு ஒரு தரப்பை இன்னொரு தரப்புடன் மோதவிட்டு அவந்தி தங்கிவாழ்ந்தது என்பார்கள்" என்றேன். "ஆம், அதை அரசுசூழ் திறன் என்பார்கள்" என்று வர்தனன் சொன்னார். "அதன் பொருட்டு நாங்கள் பெருமிதமே கொள்கிறோம். வில்திறனுடன் சொல்திறனையும் இணைத்துக் கொண்டுள்ளோம்." நான் "இங்கும் உங்கள் வழி அதுதானா?" என்றேன். விருகன் இடைமறித்து "ஆம், அங்கே மோதல்கள் இருக்கின்றன. ருக்மிணியின் மைந்தர்களிலேயே சாருதேஷ்ணனின் குரல் விலகி ஒலிக்கிறது. நக்னஜித்தியின் மைந்தர்களுக்குள்ளும் சில அமைதியின்மைகள் உள்ளன. அனிருத்தனின் தரப்பு என்ன என்பது எவருக்கும் தெரியாததாகவே உள்ளது" என்றார்.

அவரை நோக்கிய வர்தனனிடம் எரிச்சல் தெரிந்தது. மிகைச்சொல் எழுந்துவிட்டது என்பதை உணர்ந்த விருகன் "நாங்கள் எவரிடமும் பிரிவுச்சூழ்ச்சி செய்து விளையாட விழையவில்லை. ஆனால் எங்கள் நலன்களை நாங்கள் விட்டுக்கொடுக்க மாட்டோம்" என்றார். வர்தனன் "நான் தெளிவாக எங்கள் ஐயத்தை சொல்லிவிடுகிறேன், யாதவரே. இங்கு தந்தை வரவேண்டும் என்றே நாங்கள் விழைகிறோம். அவர் சொல்லில் இருந்து ஆணைகொண்டு பிரத்யும்னன் முடிசூடுவது எங்களுக்கு நன்று. ருக்மி இந்நகர்மேல் படைகொண்டுவந்து அதன் விளைவாக பிரத்யும்னன் முடிசூடுவார் என்றால் இங்கே விதர்ப்பத்தின் குரல் ஓங்கிவிடும்... அது அவந்திக்கு நன்று அல்ல" என்றார்.

"ஆனால் இரண்டாமவரான சாருதேஷ்ணனும் விதர்ப்பத்தின் இளவரசியை மணந்தவர் அல்லவா?" என்றேன். வர்தனன் தடுப்பதற்குள் விருகன் சொல்லெடுத்துவிட்டார். "ஆம், ஆகவேதான் நாங்கள் சாரகுப்தனை ஆதரிக்கிறோம்." நான் வியந்து சொல்லவிந்துவிட்டேன். அவ்வண்ணம் ஒன்றை எதிர்பார்க்கவே இல்லை. "சாரகுப்தனா? அவர் முரண்கொண்டிருக்கிறாரா? அவைகளில் அப்படி ஒருவர் இருப்பதே வெளிப்பட்டதில்லை" என்றேன். வர்தனன் "அவரிடம் பேசிவிட்டோம். அவர் எங்கள் ஆதரவுடன் முடியை கைப்பற்றலாம் என்னும் எண்ணம் கொண்டிருக்கிறார்" என்றார். வர்தனனை திரும்பிப்பார்த்தபின் விருகன் திகைத்து என்ன சொல்ல என்று தெரியாமல் தவித்தார். சாரகுப்தனின் பெயரை சொல்லியிருக்கக் கூடாது என்பது அவருக்கும் அங்கிருந்த பிற மைந்தருக்கும் அப்போதுதான் தெரிந்தது.

நான் புன்னகையுடன் “சாரகுப்தன் மிகச் சிறியவர். அவருக்கென இங்கே படையோ ஆதரவோ இல்லை. எந்தப் படைக்களத்திலும் அவர் நின்றதில்லை. அத்தகைய ஒருவருக்கும் இவ்வண்ணம் ஒரு விழைவு இருப்பது விந்தையே” என்றேன். வர்தனன் “அவர் விழைவதில் என்ன பிழை? அவர் மணந்துகொண்டிருப்பது மாளவத்தின் இளவரசியை... அவருடன் பரதசாருவும் விசாருவும் சாருவும் இணைந்திருக்கிறார்கள். பரதசாரு கேகயத்து இளவரசியையும் விசாரு கலிங்க இளவரசியையும் சாரு கூர்ஜரநாட்டு இளவரசியையும் மணந்திருக்கிறார்கள்” என்றார்.

வேறுவழியில்லாமல் பேசத்தொடங்கி விழையாதவற்றை பேசிக்கொண்டிருக்கிறார் என உணர்ந்தேன். நான் அவரை நோக்கி புன்னகைத்து “ஆம். ஆனால் அவர்கள் அனைவருமே கவர்ந்து கொண்டுவரப்பட்டு மணக்கப்பட்டவர்கள்” என்றேன். “கூர்ஜரமும் கலிங்கமும் துவாரகையின் முதன்மை எதிரிகள்.” வர்தனன் “மெய், ஆனால் அதெல்லாம் போருக்கு முன்னர். குருக்ஷேத்ரப் போருக்குப் பின் நிலைமை அதுவல்ல. இன்று ஷத்ரியர் நிலைநிற்புக்காகவே போராடும் நிலையில் இருக்கிறார்கள். பழைய சினங்களும் பகைமைகளும் இன்றில்லை. பழைய அரசர்களே கூட இன்றில்லை. கூர்ஜரத்தில் முந்தைய கூர்ஜர மன்னர் சக்ரதனுஸின் எட்டாவது அரசியின் மைந்தர் சந்திரதனுஸ் இன்று அரசேற்றிருக்கிறார். அவருக்கு பழைய வரலாறுகளுடன் எந்தத் தொடர்ச்சியும் இல்லை. அவருடைய நேர்தங்கையைத்தான் சாரு மணந்திருக்கிறார்” என்றார்.

“இன்று எந்தெந்த வகையில் எல்லாம் படைக்கூட்டுக்களை அமைக்க முடியும், எப்படியெல்லாம் சிறிய அளவிலேனும்

படைகளை தொகுத்துக்கொள்ள முடியும் என்றே ஒவ்வொரு ஷத்ரியநாடும் எண்ணுகிறது. ஆதரிக்கும் எவரையும் வரவேற்கும் நிலையில் உள்ளது. கூர்ஜரமும் கலிங்கமும் மாளவமும் கேகயமும் நம்முடன் இணையக்கூடும். இங்கே வலுவான ஒரு ஷத்ரியப் படைக்கூட்டு அமைக்கமுடியும்." நான் "அதை பிரத்யும்னன் எண்ணியிருக்க மாட்டாரா?" என்றேன். "எண்ணவில்லை. அவர்கள் மிகையான தன்னம்பிக்கையில் திளைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆற்றலால் அச்சுறுத்தி எஞ்சிய நாடுகளை உடன் சேர்த்துக்கொள்ளலாம் என கணக்கிடுகிறார்கள். ஆனால் ஆற்றல் மீதான அச்சமே அவர்களை விலக்கும் என நாங்கள் எண்ணுகிறோம்" என்றார் விருகன்.

வர்தனன் "மேலும் ஒன்றுண்டு, விதர்ப்பம் போருக்கு வராதொழிந்தமையால் இன்று பெரும் படைவல்லமையுடன் உள்ளது. அதை அத்தனை நாடுகளும் அஞ்சிக்கொண்டிருக்கின்றன. அதற்கு எதிராக அனைத்து ஷத்ரியர்களும் அணிசேர்வார்கள்" என்றார். "ருக்மி வரலாற்றை நன்கு கணித்திருக்கிறார். இன்று அவர் விழைந்தால் பாரதவர்ஷத்தில் எவருடனும் போரிடும் நிலையில் இருக்கிறார்" என்று கர்ஹன் சொன்னார். "இல்லை, அவருக்கு ஒரு நல்லூழ் அமைந்தது, அவ்வளவுதான்" என்று வர்தனன் திரும்பி அவரிடம் சொன்னார். "எண்ணாது சொல்லெடுக்கலாகாது அவையில்." அவருடைய அச்சினம் எனக்கு வியப்பூட்டியது.

கர்ஹன் அவரைவிட மூத்தவர். ஆனால் அவர் தணிந்து "நான் எனக்குத் தோன்றியதை சொன்னேன்" என்றார். "தோன்றியதைச் சொல்லும் இடம் அல்ல அவை" என்றபின் என்னிடம் திரும்பிய

வர்தனன் "போரில் அத்தனை ஷத்ரியர்களும் கலந்துகொண்டது ஏன்? ஒருவர் கலந்துகொள்ளாமல் இருந்தால் அவர் தனித்து நிற்க நேரிடும். போருக்குப் பின் ஆற்றல்கொண்டு எழும் தரப்பு அவரை தாக்கி அழிக்கும். போரில் எவர் வென்றாலும் அவரை விலகிநின்றவர் எதிர்கொண்டாகவேண்டும். எந்த அரசுசூழ் நுட்பமும் அறியாமல் வெற்று வெறியாலேயே ருக்மி விலகி நின்றார். போருக்குப் பின் இரு தரப்பும் இவ்வாறு ஆற்றல் அழிந்து சுருங்கி மறையும் என அவர் எதிர்பார்க்கவில்லை. ஆனால் அது நிகழ்ந்தது" என்றார்.

"அத்துடன் அஸ்தினபுரி இன்று பழைய பகைகளை கடக்க நினைக்கிறது. அதுவும் ருக்மிக்கு நலம்பயப்பதாக ஆகிவிட்டிருக்கிறது. இன்றுகூட அஸ்தினபுரி என்ணினால் விதர்ப்பத்தை அழித்துவிட முடியும். அவர்கள் அதை எண்ணவில்லை" என்று வர்தனன் தொடர்ந்தார். நான் "அவந்திநாட்டு அரசர்கள் விந்தனும் அனுவிந்தனும் களத்தில் மடிந்தபின் இன்று அங்கே அவர்களின் அகவைநிறையாத இளமைந்தர் உக்ரசேனன் ஆட்சியிலிருக்கிறார். படைத்தலைவர் சூரனும் அமைச்சர் சத்வரும் சேர்ந்து அரசாள்கிறார்கள் என அறிந்தேன்" என்றேன். "ஆம், இன்று அவந்தி ஒன்றும் செய்ய இயலாத நிலையிலேயே உள்ளது. ஆனால் அவந்தி ஒருபோதும் அடங்கியிருக்கும் நிலம் அல்ல."

நான் சூழ்ந்திருக்கும் முகங்களை நோக்கினேன். அவற்றில் எல்லாம் வர்தனன் மீதான அச்சமோ ஒவ்வாமையோ ஒன்றை கண்டேன். ஆனால் விருகன் "ஆம், நல்லூழ்தான். அது நீடிக்காது" என்றார். நான் "நன்று, உங்கள் தரப்பை அறிந்துகொண்டேன். ஓலையை எதிர்பார்க்கிறேன்" என்றேன். பின்னர் மெல்லிய ஏளனத்துடன் "இப்பூசல்கள் அனைத்தையும்

அந்த ஓலை பேசவேண்டும் என்ற தேவை இல்லை" என்றேன். வர்தனன் சிரித்து "அந்த ஓலை அனைத்தையும் சுட்டும். அறிந்தோருக்குப் புரியும்" என்றார். நான் புன்னகைத்தேன்.

நான் விருகனின் அவையிலிருந்து வெளியே வந்தபோது என்னுடன் இளவரசர் அனிலனும் வந்தார். நான் அவரிடம் "நான் அரசி லக்ஷ்மணையை சந்திக்க விழைகிறேன்" என்றேன். "அவரை இன்னும் சந்திக்கவில்லையா என்ன? இங்கே அருகேதான் அவர்களின் அரண்மனை. நீங்கள் பிரத்யும்னனை சந்தித்த பின் தொடர்ந்து அவரையும் சந்தித்திருப்பீர்கள் என எண்ணினேன்" என்றார். "இல்லை, அவர்கள் இன்னமும் முழுமையாக நிலைபாடு எடுக்கவில்லை. ஆகவே அவர்கள் இப்போது எங்குமில்லை" என்றேன். "அவர்களுக்கு வேறுவழியில்லை. பிரத்யும்னனுடனேயே வந்துசேரவேண்டும். அவர்கள் எதிர்பார்ப்பது சில உறுதிகளை மட்டுமே" என்றார் அனிலன்.

"நீங்கள் என்ன எண்ணுகிறீர்கள்? இங்கே உங்கள் மூத்தவர் செய்யும் அரசாடலைப் பற்றி?" என்றேன். "நான் என்ன சொல்வது? இவை அரசுசூழ்தலை அறிந்தவர்களால் ஆற்றப்படுபவை. நான் எளியவன், இளையவன்" என்றார். "ஆனால் நீங்கள் ஷத்ரியர். உங்களுக்கென ஒரு நிலைபாடு இருக்கத்தான் வேண்டும்." அவர் தயங்கியபின் "மெய் சொல்வதென்றால் வெறுமனே பித்துகொண்டு செயல்படுவது இது என எனக்குப்படுகிறது. இங்கே அறிந்தோ அறியாமலோ அனைத்தும் பிறப்படையாளத்தில் குழுவமைந்துவிட்டன.

எனில் அதைச் சார்ந்தே நாமும் செயல்பட முடியும். அவந்தி ஷத்ரிய நாடு. பிரத்யும்னன் ஷத்ரியர். நாம் உடன் செல்வதொன்றே செய்யக்கூடுவது" என்றார்.

"அதை சொல்லியிருக்கிறீர்களா?" என்றேன்.
"சொல்லியிருக்கிறேன். பலமுறை. என் வாயை மூடிவிடுவார்கள். உண்மையில் அவர்களுக்கே தெரியும், நாம் சென்றுசேரவிருப்பது பிரத்யும்னனின் தரப்புடன்தான் என்று. ஆனால் ஐயம்கொள்கிறார்கள், அரசியலாடுகிறார்கள். நோக்கம், தாங்களும் சளைத்தவர்கள் அல்ல என்று காட்டுவது. அரசியலாட இது ஒரு களம். ஆகவே ஆடிப்பார்க்கிறார்கள். பல்லும் உகிரும் முளைத்த புலிக்குட்டி தன் நிழலை வேட்டையாடிக் களிப்பதுபோல..." என்றார் அனிலன். நான் "லக்ஷ்மணை அன்னையை நான் சந்திக்கவேண்டும்" என்றேன். "வருக, நானே அழைத்துச் செல்கிறேன்! அவர் மைந்தர்கள் அனைவருமே எனக்கு அணுக்கமானவர்கள்தான்" என்றார்.

அவர் என்னை அழைத்துச்செல்கையில் "உண்மையில் லக்ஷ்மணை அன்னையின் மைந்தரின் உளச்சிக்கலும் இதுதான். எங்களை வந்து கெஞ்சி மன்றாடி அழைத்துச்செல்லுங்கள், நாங்களே வரமாட்டோம் என்னும் இயல்பு. அது பெண்களுக்குரிய தன்மை என்பார்கள். அவர்களுக்குப் பிடித்த ஆடையை அவர்கள் அணியவேண்டும் என்றாலும்கூட நாம் அவர்களிடம் கெஞ்சி மன்றாடவேண்டும்" என்றார். நான் சிரித்தேன். அவரும் சிரித்து "இதை நான் பலமுறை அவர்களிடம் சொல்லியிருக்கிறேன். அவர்களால் அதற்கும் சிரிக்கவே முடிகிறது. அங்கு முடிவெடுப்பவர் ஓஜஸ்" என்றார். "அவரா?" என்றேன். அவர் முகம் எனக்கு நினைவுக்கு வரவில்லை.

“நினைவுக்கு வரும் முகம் அல்ல” என்றார் அனிலன். “மிக மெலிந்தவர். ஒடுங்கிய நீண்ட முகம். நடுவே ஒடிந்து கூன்விழுந்த முதுகும் சற்றே வளைந்த கைகளும் கொண்டவர். எந்த அவையிலும் முன்னால் வந்து நின்றிருக்க மாட்டார், எவரிடமும் அவரே பேசமாட்டார். நேருக்குநேர் அவரிடம் நாம் பேசினால் கூச்சம்கொண்டு பதறுவார். சிற்றகவையில் புரவியிலிருந்து விழுந்து முதுகெலும்பு ஒடிந்தமையால் நெடுநாள் படுக்கையில் இருந்தவர். அப்போதுதான் நூல்களைப் பயின்று சூழ்கைவல்லவர் ஆகியிருக்கிறார்.” நான் “ஓஜஸ்” என்று சொல்லிக்கொண்டேன். “ஆம், ஓஜஸ். அவர் பெயரே இங்கு சொல்லப்பட்டதில்லை” என்றார் அனிலன். “ஓஜஸ் நெடுங்காலம் மத்ரநாட்டில்தான் இருந்தார். அவர் புரவியிலிருந்து விழுந்தார், மத்ரநாட்டவருடன் குட்டைப்புரவியில் மலையிலிருந்து பாய்திறங்கியபோது.”

நான் அவர் முகத்தை நினைவில் மீட்டிக்கொள்ள முயன்றேன். “ஒன்று நீங்கள் நோக்கியிருக்கலாம். இந்த அவைகளில் அரசுசூழ்தலை நிகழ்த்துபவர்கள் அனைவருமே உடற்குறை கொண்டவர்கள். அதனால் அவர்கள் இளமையில் தனித்துவிடப்பட்டிருக்கிறார்கள். அந்தப் பொழுதை நூல்பயிலச் செலவிட்டு அதனூடாக அவைமுதன்மையை அடைந்துவிட்டார்கள். அவர்களை இளமையில் பிறர் ஏளனம் செய்திருக்கலாம். இங்கே நாங்கள் எண்பதின்மர். பலர் இணையான அகவைகொண்டவர்கள். ஆகவே ஒருவருக்கொருவர் இரக்கமற்ற இளிவரல் என்றுமிருந்தது. அந்த இளிவரலால் அவர்கள் நெஞ்சு புண்பட்டிருக்கலாம். இன்று சூதுகளம் தேர்ந்தவர்களாகி எங்களை எல்லாம் கடந்து அவையில் இரண்டாமிடத்தவராக அமர்ந்திருக்கிறார்கள்.”

நான் எண்ணியதை உடனே அனிலன் சொன்னார். “வர்தனன் இளமையில் ஒரு காய்ச்சலுக்குப் பின் இடது கால் மெலிவுநோய்க்கு ஆளானான். அவன் நடக்கையில் இடக்கையை இடக்கால் முட்டின்மேல் ஊன்றி எம்பி விழுந்து ஊசலாடித்தான் செல்கிறான். அவனால் புரவியில் கால்களை நாடாவால் கட்டிக்கொண்டு ஒருக்களித்துத்தான் அமரமுடியும். அவன் படைபயின்றதே இல்லை. இளமையிலேயே நாகரூபரின் களத்திற்குச் சென்று நூல்நவின்றான். இளமைக்குப் பின் அவனை நாங்கள் பார்த்ததே குறைவுதான். கல்வி முடித்து திரும்பிவந்தபோது அவன் பிறிதொருவனாக இருந்தான். செல்லும்போது எவரிடமும் பேசாதவனாகவும் எதிலும் கலந்துகொள்ளாதவனாகவும் இருந்தான்.”

“மீண்டுவந்தபோது அவன் விழிகளில் விந்தையானதோர் ஏளனம் இருந்தது. நாங்கள் எதை கேட்டாலும் மெல்லிய குரலில் இளிவரலாகவே மறுமொழி சொன்னான். அந்த நுண்ணிய இளிவரலை எங்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆகவே எப்போதும் தடுமாறினோம். எங்கள் குழப்பத்தைக் கண்டு மெல்லிய புன்னகையுடன் அவன் அப்பால் சென்றான். எங்கள் மேல் இரக்கம் கொண்டவன்போல் இருந்தது அவன் சிரிப்பும் நடிப்பும். அது எங்களை சீற்றம் கொள்ளச் செய்தது. ஆனால் அவனுடைய சொல்திறன் அச்சுறுத்தியது. அவனை முற்றாகத் தவிர்க்கலானோம்.”

“அவன் மூத்தவருக்கு எளிதில் அணுக்கமானவன் ஆனான். அவைகளில் அவருக்கு இரண்டாமிடமாக அமரத் தொடங்கினான். பின்னர் மூத்தவரிடம் ஏதேனும் சொல்லவேண்டும் என்றால் அவனிடம் சொல்லலாம் என்றாயிற்று. அவனால் மூத்தவரிடம் எங்களைப்பற்றி எதை

வேண்டுமென்றாலும் சொல்லமுடியும் என்று நிலை வந்தது. நாங்கள் அவனை அஞ்சவும் பணியவும் தொடங்கினோம். இன்று மூத்தவரைவிட அவனையே அஞ்சுகிறோம்." நான் அனிலனை பார்த்தேன். அவருக்கு ஆறுதல் அளிக்கும்படி எதையாவது சொல்லலாம் என நினைத்தேன். அதற்குள் அவரே தொடர்ந்தார்.

"ஆனால் ஒன்று உறுதி. வர்தனனைப் போன்றவர்கள் என்றும் இரண்டாமிடத்திலேயே இருப்பவர்கள். அவர்களால் முதலிடத்திற்கு செல்லமுடியாது. அனைத்தையும் நிகழ்த்துவோன் என்னும் ஆணவம் தோன்றும்தோறும் அவர்கள் அறியாமலேயே முதலிடத்தை விழைவார்கள். அதை எத்தனை ஆழத்திற்குள் புதைத்தாலும் எப்படியெல்லாம் சொல்லடுக்கி அகற்றினாலும் அவர்களால் கடந்துசெல்ல முடியாது. முதலிடத்தை அவர்கள் அகத்தால் நடிப்பார்கள். அதன் ஒரு கட்டத்தில் முதலிடத்தில் இருப்பவர்கள் மேல் கசப்பு கொள்வார்கள். அவர்களை ஆட்டுவிப்பார்கள். அவர்களின் ஆட்கொள்ளலுக்கு முதலிடத்தில் இருப்பவர்கள் கட்டுப்பட்டாகவேண்டும். ஏனென்றால் அந்நிலை அதற்குள் உருவாகியிருக்கும்."

"அவ்வண்ணம் கட்டுப்படுவதனால் முதலிடத்தில் இருப்போர் இவர்கள்மேல் உள்ளூர எரிச்சலும் சினமும் கொண்டிருப்பார்கள். தங்கள் சொற்படி ஆடுபவர் என்பதனால் இவர்கள் அவர்கள்மேல் பொருட்டின்மை கொண்டிருப்பார்கள். அவைகளில் எப்படியோ அது வெளிப்படும். இருவரும் ஒருவரை ஒருவர் முந்திச்செல்ல முயல்வார்கள். முதலிடத்தில் இருப்போர் அல்ல, தாங்களே மெய்யான கோன்மைகொண்டவர்கள் என்று காட்ட சூழ்வலர்

முயல்வார்கள். அவர்களல்ல, தானே இறுதிச்சொல் உரைப்பவர் என்று காட்ட முதலிடத்தோர் முயல்வார்கள். அந்தப் போட்டியே அவர்களை அழிக்கும். சூழ்வலர் ஒருநாள் முதலிடத்தாரால் அழிக்கப்படுவார்கள். அதைத் தவிர்க்க ஒரே வழிதான், முதலிடத்தாரை அவர்கள் அழிக்கவேண்டும். ஆனால் அதன்பின் அவர்கள் நிலைகொள்ள முடியாது.”

நான் வியப்புடன் அவரை நோக்கியபின் சிரித்தேன். அவரும் நகைத்து “பதின்மரில் ஒருவர் என்பது ஒருவகை சிறுமைநிலை. எங்களை எவரும் நோக்குவதில்லை, எங்கள் குரலை எவரும் கேட்பதுமில்லை. எனவே நாங்களே இவ்வண்ணம் எங்களுக்குள் பேசிப்பேசி தேர்ச்சி கொள்கிறோம்” என்றார். நான் சுமித்ரனின் உடலை நினைவுகொள்ள முயன்றேன். அவர் அமர்ந்திருந்த முறையில் ஒரு கோணல் இருந்தது. ஆனால் இருவருக்குப் பின்னால் அமர்ந்திருந்தார். தன் உடலை திறமையாக மறைத்துக்கொண்டிருந்தார். அக்கணமே சுதேஷ்ணனின் தோற்றமும் நினைவுக்கு வந்தது. அவரும் ஏதோ பிழை கொண்டிருந்தார். விழிகளில், உதடுகளில் ஒரு கோணல். ஆனால் அது ஏன் என எனக்குப் புரியவில்லை.

“லக்ஷ்மணை அன்னையிடம் நீங்கள் நேரில் பேசமுடிந்தால் நன்று. அன்னை எளிமையானவர். அவரால் சூழ்ச்சிகள் செய்ய முடியாது. எதையும் விரித்து எண்ணவும் இயலாது. அவர் அறிந்ததெல்லாம் தன்னை ஆட்கொண்ட தலைவரை மட்டுமே. அவரிடமிருந்து ஓர் ஓலையை வாங்கிக்கொண்டால் அனைத்தும் முடிந்தது.” நான் அவரிடம் “உளமுவந்து கூறுக இளவரசே, இங்கே உங்கள் தந்தை வருவதை விழைகிறீர்களா?” என்றேன். “ஆம், அவர் வந்தாகவேண்டும். இங்கு நிகழ்வன

கண்டு சலித்துவிட்டேன். அவர் வந்தாலொழிய இங்கே ஒன்றும் சீர்படப் போவதில்லை" என்றார்.

# கல்பொருசிறுநுரை - 14

## பகுதி மூன்று : ஒழியா நாற்களம் – 9

லக்ஷ்மணை அன்னையின் அழைப்பு வந்தபோது நான் அனிலனுடன் இடைநாழியின் அருகிருந்த சிறிய பூங்காவின் நடுவே கற்பீடத்தில் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தேன். நான் எழுந்தபோது அனிலனும் எழுந்தார். நான் அவரிடம் "நீங்களும் வரலாம்" என்றேன். "நான் எதற்கு?" என்றார். "இது ஏதோ அரசுசூழ்தல் நிகழ்வு என ஆகிவிட்டிருக்கிறது. இதை தொடங்கும்போது நான் இவ்வண்ணம் எண்ணவில்லை. இப்போது ஒவ்வொருவரும் தங்கள் காய்நகர்வுகளை செய்கிறார்கள். தங்கள் தரப்பை பதிவு செய்தாகவேண்டும் என்றும் இல்லையேல் தங்கள் இருப்பே இல்லாமலாகிவிடும் என்றும் எண்ணுகிறார்கள். இந்த அரசியலாடல் எனக்கு சலிப்பை அளிக்கிறது. நீங்கள் வரக்கூடுமென்றால் ஒருவேளை இதை இம்முறை எளிதாக நான் கடந்துசெல்லமுடியும்" என்றேன்.

அனிலன் சிரித்து "இதை சொல்கிறீர்கள். சில மாதங்களுக்கு முன்பு இங்கே ஒரு சிறுபூசல் எழுந்தது. அரண்மனையிலிருந்த யானை ஒன்று முதுமையால் உயிர்துறந்தது. அதை எம்முறையில் மண்மறைவு செய்வது என்று பேச்செழுந்தது.

யானை மண்மறைவு செய்யப்படவேண்டும் என்றால் மண்ணாளும் அரசரின் செங்கோல் அங்கே வரவேண்டும். அவ்வகைச் சடங்குகளுக்கு கொடுத்தனுப்ப இங்கே ஒரு வெள்ளிச் செங்கோலும் உள்ளது. மூத்தவர் ஃபானு இயல்பாக அதற்கு ஒப்புதல் அளித்தார். செங்கோல் சென்றபோது அதை பிரத்யும்னனின் இளையவர் தடுத்தனர். அரசர் என அந்த எரிநிலையில் பிரத்யும்னனின் பெயரே சொல்லப்படவேண்டும் என்றனர். செங்கோலை பிடுங்கிக்கொண்டு வந்தனர். சாம்பன் தலையிட்டார். ஒவ்வொருவரும் ஒவ்வொன்று சொன்னார்கள். இறுதியில்... என்ன சொல்ல! ஏழு நாட்கள் இங்கே அந்த யானைச்சடலம் கிடந்தது. அதை புதைக்கவும் முடியவில்லை. அழுகி நாற்றமெடுத்தபோது எவரோ அதன்மேல் விறகையும் அரக்கையும் உமியையும் கொட்டி அங்கேயே எரியூட்டினர். அது பாதி வெந்த பின்னரே செய்தி தெரிந்து அனைவரும் ஓடிச்சென்றனர். எரிந்துகொண்டிருந்த யானைக்கு மூன்று தரப்பினரும் தனித்தனியாக மீண்டும் எரியூட்டினர்" என்றார்.

லக்ஷ்மணையின் அரண்மனை முகப்பில் எங்களை எதிர்கொண்டவர் அவர் மைந்தர் சகன். அவர் அனிலனைக் கண்டதும் திடுக்கிட்டதுபோல தெரிந்தது. ஆனால் மறைத்துக்கொண்டு முகமன் உரைத்தார். அவர் உள்ளே சென்றபோது குழப்பத்தில் நடையும் அலைபாய்ந்தது. அவருடன் நாங்கள் அக்கூடத்திற்குள் நுழைந்தபோது எவரும் அனிலனை பார்க்கவில்லை, எதிர்பார்க்காத ஒன்றை நாம் சில கணங்கள் பிந்தியே பார்க்கிறோம். நான் ஓஜஸைத்தான் பார்த்துக்கொண்டிருந்தேன். அவர் முதற்கணமே அனிலனை பார்த்துவிட்டிருந்தார். எங்கள் விழிகள் சந்தித்துக்கொண்டன. அவரை நான் புரிந்துகொண்டதை அவர் புரிந்துகொண்டார். அவரிடம் எழுந்த சீற்றம் எனக்கு வியப்பையும் பின்னர்

சிரிப்பையும் அளித்தது. சூழ்ச்சித்திறன் கொண்டோர் அவைமுன் நிறுத்தப்பட்டால் தோற்றுவிடுகிறார்கள். அவைமுன் நின்று சூழ்ச்சி செய்தவர் அஸ்தினபுரியின் சகுனி மட்டுமே.

பிரகோஷன் அமர்ந்திருக்க அவருடைய இளையவர்களான காத்ரவானும், சிம்மனும், பலனும், பிரபலனும் அருகே அமர்ந்திருந்தனர். சற்று பின்னால் ஓஜஸ் அமர்ந்திருந்தார். ஊர்த்துவாகனும் மகாசக்தனும் சகனும் அபராஜித்தும் பின்னால் நின்றனர். வழக்கம்போல அவர்கள் அனைவரின் விழிகளும் ஒன்றுபோலவே தோன்றின. நான் பிரகோஷனை வணங்கி முகமன் உரைத்தேன். அவரும் என்னை வணங்கி பீடம் அளித்தார். நான் சற்று எரிச்சல்கொண்டிருந்தேன். "இளவரசே, நான் தங்களை அல்ல சந்திக்க விழைந்தது. தங்கள் அன்னையை. தங்கள் அவையில் நான் சொல்வதற்கு ஏதுமில்லை" என்றேன். பிரகோஷன் "என்னிடம் சொல்லாத எதையும் அன்னையிடம் நீங்கள் சொல்ல இயலாது" என்றார். "அன்னையரை ஆளும் மைந்தரை இப்போதுதான் பார்க்கிறேன், நன்று" என்றேன்.

"எங்கள் அன்னையே இந்நகரில் எங்களுக்கு இருக்கும் ஒரே பிடிப்பு" என்றார் பிரகோஷன். "நாங்கள் மலைமக்கள். வாழ்க்கையின் பெரும்பகுதியை மத்ரநாட்டில் கழித்தவர்கள். எங்கள் மலைக்கூட்டமைப்பு சிதறி அழிந்துவிட்டிருக்கிறது இன்று. மீளச் செல்ல நிலமில்லாதவர்கள். இங்கே எங்கள் இடமென்ன என்று இன்னும் முடிவாகவில்லை. எங்கள் அன்னையை இந்நகரின் தலைவர் மணந்தார் என்பதன்றி எங்கள் அடையாளம்தான் என்ன?" என்று பிரகோஷன் சொன்னார். "எங்கள் அன்னை எளிய மலைமகள். அரசியல் சொற்கூட்டல்கள் அவருக்குத் தெரியாது. அவரிடமிருந்து ஒரு

சொல்லைப் பெற்று எங்களை இங்கிருந்து துரத்திவிட்டுவிட முடியும்.”

“தந்தையின் அறச்சொல்லை நீங்கள் நம்பவில்லை அல்லவா?” என்றேன். “இல்லை, நம்பவில்லை” என்றார் பிரகோஷன். “ஏனென்றால் அது இப்போது இங்கே திகழவில்லை. அதன் இடமென்ன என்பதே எவருக்கும் தெரியவில்லை.” நான் பெருமூச்சுவிட்டு “நன்று. நீங்கள் ஐயுற வேண்டியதில்லை. உங்கள் அன்னையிடமிருந்து தன் கொழுநர் இந்நகருக்கு திரும்பிவர அவர் விழைகிறார் என்ற ஒரு சொல்லை மட்டுமே நான் கோருகிறேன்” என்றேன். “அதை அளிப்பதில் எந்தச் சிக்கலும் இல்லை” என்று பிரகோஷன் சொன்னார். “ஆனால் நோக்குக, நீங்கள் சொல் நாடி வருவதிலேயே இங்கிருக்கும் சிக்கலின் வடிவம் உள்ளது! நீங்கள் முதலில் தேடிச்சென்றது யாதவ அரசியை. அதன் பின்னர் ஷத்ரிய அரசியை. அதன்பின் நிஷாத அரசியை. இறுதியாக எங்களை.”

“நான் அவ்வண்ணம் திட்டமிடவில்லை. உங்களை ஷத்ரியக்கூட்டில் ஒரு பகுதி என்றே கருதினேன்” என்றேன். “நாங்கள் அக்கூட்டில் ஒரு பகுதி அல்ல என்று எவருக்கும் தெரியும். அவ்வண்ணம் ஓர் எண்ணம் எங்களுக்கிருந்தது. ஆனால் அவர்கள் எங்களை அவ்வண்ணம் நடத்தவில்லை. அவந்தியில் இருந்து வந்தவர்களுக்கு நிகராகக்கூட நாங்கள் அவையமர்த்தப்படவில்லை. எந்த அரசுசூழ்தல் செய்திகளும் எங்களுக்கு வழங்கப்படவில்லை” என்றார் பிரகோஷன். “அங்கே ஏவலர் என்றே கருதப்பட்டோம். ஏவல்பணிக்கு ஏன் இத்தனை அல்லல்படவேண்டும் என்று எண்ணி அகன்றோம். அகன்றதை அவர்களுக்கு இன்னமும் முறையாக அறிவிக்கவில்லை.”

அனிலன் “அவந்தியினர் அங்கே அவைமதிப்புடனேயே நடத்தப்பட்டனர். அங்கே எங்களுக்கு இருக்கும் இடமல்ல எங்கள் கோரிக்கை. நாளை துவாரகையை பிரத்யும்னன் ஆளும்போது எங்கள் நிலம் எதுவாக இருக்கும் என்பதுதான்” என்றார். அந்த ஊடுபுகல் பிரகோஷனை எரிச்சல்கொள்ளச் செய்தது. நான் ஓஜஸை பார்த்தேன். அவர் ஏதேனும் சொல்வார் என எண்ணினேன். பிரகோஷன் “நான் பேசிக்கொண்டிருப்பது வேறு. இது எளிய அவை மதிப்பைப் பற்றிய பேச்சு அல்ல” என்றார். “நானும் என் கொடிவழியினரும் இங்கே எந்நிலையில் வைக்கப்படுவோம் என்று கவலைப்படுகிறோம். அதற்குரிய சொற்களையே எதிர்பார்க்கிறோம். எங்களுக்கான இடம் வரையறை செய்யப்படவேண்டும். அதுவே எங்கள் கோரிக்கை.”

அனிலன் அந்தக் குறிப்பை புரிந்துகொள்ளவில்லை. “அக்கோரிக்கையை நீங்கள் இன்னமும் பிரத்யும்னனின் அவையில் முன்வைக்கவே இல்லை, மூத்தவரே” என்றார். “அதை முன்வைக்கவேண்டியதில்லை. அவர்களுக்கு இன்று எங்கள் தேவை உள்ளது. விதர்ப்பம் ஒன்றும் தூய ஷத்ரிய நாடு அல்ல. அது நளன் ஆண்ட தொன்மையான நிஷாத நாடுதான். நிஷாதர்களே அங்குள்ள குடிகளில் பெரும்பகுதியினர். ஆகவே அவர்கள் எங்களை ஒதுக்கிவிட முடியாது” என்றார். நான் பேசுவதற்குள் அனிலன் உரக்க “ஆனால் உங்களாலும் பிரத்யும்னனை தவிர்க்கமுடியாது. அவர் உங்களுக்குத் தேவை” என்றார். பிரகோஷன் சீற்றத்தை அடக்குவது தெரிந்தது. “ஏன்? எங்களுக்கு சாம்பனும் நிகர்தான். அங்கே மேலும் இடம் எங்களுக்கு அமையலாம்” என்றார்.

நான் அனிலன் பேசுவதற்குள் முந்திக்கொள்ள முயன்றாலும் அவர் பேசிவிட்டார். உரக்க "அமையக்கூடும். ஆனால் சாம்பனின் கீழே நீங்கள் அவையமர வேண்டியிருக்கும். மலைஷத்ரியர்கள் நிஷாதருக்குப் பணிந்திருப்பதைவிட தூய ஷத்ரியர்களுக்குப் பணிந்திருப்பது மேல்" என்றார். நான் ஓஜஸை பார்த்தேன். அவர் அப்போதும் பேசவில்லை. எப்போது பேசப்போகிறார் என்று நோக்கிக் கொண்டிருந்தேன். பிரகோஷன் "நாங்கள் எங்கும் பணியவேண்டியதில்லை. எங்கள் உதவி தேவைப்படுபவர்கள் பணிந்தால் போதும்" என்றார். அனிலன் நகைத்து "இங்கே சொல்லலாம். ஆனால் பிரத்யும்னனின் அவையிலும் சாம்பனின் அவையிலும் இதை சொல்லமுடியாது" என்றார்.

நான் அனிலனை பார்த்தேன். அவருடைய உணர்வுகள் என்ன என்று என்னால் உணரக்கூடவில்லை. சற்றுமுன் அந்த அவைக்கு வெளியே நின்று பேசிக்கொண்டிருக்கையில் தெரிந்தவர் அல்ல அவர். முற்றிலும் இன்னொருவர். நான் அவைக்கு அழைத்துவந்தது அவரைத்தான். அவைக்குள் நுழைகையிலேயே அவருடைய நடை மாறிவிட்டது. அவைக்கூடுகைகளில் மானுடர் ஏன் மாறுகிறார்கள்? உண்மையில் தங்கள் கற்பனையில் அவைகளில் மானுடர் நடித்துக்கொண்டே இருக்கிறார்கள். மெய்யான அவைகளில் தோன்றும் வாய்ப்பற்றவர்கள் மேலும்மேலும் அகத்தே நடிக்கிறார்கள். அந்நடிப்பு பெருகி வீங்கி பொருளின்மையின் விளிம்பை அடைந்துவிட்டிருக்கும். ஓர் அவையில் வாய்ப்பு கிடைக்கையில் அவர்கள் அந்த விளிம்பிலிருந்தே தொடங்குகிறார்கள். அவர்கள் அகத்தே சென்றுவிட்டிருக்கும் அந்தப் பயணம் என்ன என்று நமக்குத் தெரியாது என்பதனால் அந்தப் புதியவரைக் கண்டு நாம் திடுக்கிடுகிறோம்.

நான் பேச்சை மாற்ற விரும்பினேன். "நாம் இங்கே பேசவேண்டியது இவற்றைப் பற்றி அல்ல. நான் கோருவது அன்னையின் ஓலையை மட்டுமே" என்றேன். "அதை அளிப்பதில் தடையில்லை. அதைத்தான் சொல்லவந்தேன். நீங்கள் இதை இங்குள்ள அரசியலின் ஒரு பகுதியாக ஆக்கிவிட்டீர்கள். ஆகவே எங்கள் தரப்பை நான் முழுமையாகச் சொல்லிவிட வேண்டியிருக்கிறது. நாங்கள் அனுப்பும் ஓலையை எப்படி கொண்டுசெல்வது என்பது உங்கள் தெரிவு. ஆனால் அதை நீங்கள் இங்குள்ள மூன்று குலத்தொகைகளில் எதனுடனும் சேர்க்கலாகாது. அது எங்கள் அன்னையின் செய்தியாக மட்டுமே இருந்தாகவேண்டும்." நான் "அவ்வண்ணமே அது அமையும்" என்றேன்.

அனிலன் "எங்கள் அன்னையின் செய்தியும் அவ்வண்ணமே செல்லவிருக்கிறது. அதுவே நன்று. இங்கே மூன்று குலக்குழுக்கள் உள்ளன என்பதே ஒரு பொய். எங்கள் மூத்தவர் முற்றிலும் வேறு. எங்களிடமும் எண்ணிக்கையில் மிகுதியானோர் உள்ளனர்" என்றார். பிரகோஷன் பேசுவதற்குள் நான் "ஆம், குழுக்களின் எண்ணிக்கையை இப்போதே எவரும் சொல்லிவிடமுடியாது. யாதவர் மூன்று குழுக்கள். ஷத்ரியர்களில் நீங்கள் இருவரும் தனிக் குழுக்கள். அன்னை ருக்மிணியின் மைந்தர்களிலேயே சாருதேஷ்ணன் இன்னொரு குழுவை கொண்டிருக்கிறார்" என்றேன். அனிலன் திகைத்து "சாருதேஷ்ணனா? எவர் சொன்னது?" என்றார். "அவரே என்னிடம் சொன்னார்" என்றேன். "அவரா? அவர் ஒருமுறைகூட..." என்றபின் அனிலன் அமைதியானார்.

அவர் சொல்லடங்கிவிட்டார் என்று உணர்ந்ததும் நான் பிரகோஷனிடம் சொன்னேன் "நான் அன்னை லக்ஷ்மணையை

சந்திக்கலாம் அல்லவா?" பிரகோஷன் "எவர் வேண்டுமென்றாலும் சந்திக்கலாம். தடையென ஏதுமில்லை. அரசுமுறைச் சந்திப்பில் என்ன நிகழ்கிறது என நாங்கள் நுண்ணோக்குகிறோம், அவ்வளவுதான். நீங்கள் சந்திக்கலாம். அன்னை அளிக்கவேண்டிய ஓலையை நாங்களே அமைத்துள்ளோம். அதை உங்களிடம் அளிக்கிறோம். அன்னையிடம் பேசி அதை அவரிடம் அளித்து ஒப்பம் பெறலாம்" என்றார். "அவர் அந்த ஓலையை ஒப்பவேண்டும் என என்னால் சொல்ல முடியாது" என்றேன். "வேண்டியதில்லை, நாங்களே சொல்கிறோம். எங்கள் உடன்பிறந்தவர் ஒருவர் உடன் வருவார்" என்றார் பிரகோஷன்.

"அன்னை அச்சொற்களை மறுத்தால்?" என்றேன். "மறுக்கப்போவதில்லை" என்று பிரகோஷன் சொன்னார். "ஆம், அதை நானும் அறிவேன். ஆனால் ஒருவேளை மறுக்க நேர்ந்தால்... ஆகவேதான் கேட்டேன்" என்றேன். அதுவரை பேசாமலிருந்த ஓஜஸ் "அவர் மறுத்தால் அவரிடமே நீங்கள் ஓலை வாங்கலாம்" என்றார். நான் அவரை பார்த்தேன். முகத்தில் எந்த உணர்ச்சியும் இல்லை. மிக மிக வழக்கமான சொற்கள். அந்த இடத்தில் அவ்வண்ணம் அவர் உள்ளே நுழைவதற்கு எந்தத் தேவையும் இல்லை. நா தவறி பேசிவிட்டாரா? அவ்வண்ணம் நா தவறுவதென்றால்கூட அது இப்படி ஒன்றாக இருக்கவேண்டும் என்பதில்லை. நான் அவருடைய இறந்தவை போன்ற கண்களை பார்த்தபின் "ஆம், எனில் நன்று" என்றேன்.

பிரகோஷன் அவை முடிந்துவிட்டது என்பதற்கு அடையாளமாக தலையசைத்தார். நான் எழுந்து வணங்கினேன். "என் இளையோன் சகன் உங்களை அன்னையிடம்

அழைத்துச்செல்வான்" என்றார். நான் மீண்டும் தலைவணங்கினேன். சகன் எழுந்து அவை வணங்கி என்னுடன் வந்தார். அனிலன் எழுந்து அவைவணக்கம் செய்து தொடர்ந்து வந்தார்.

அவைக்கூடத்தில் இருந்து வெளியே வந்ததும் அனிலன் "நான் எண்ணியதுபோலவேதான். தாங்கள் இருக்கும் நிலை என்ன என்பதை இவர்கள் உணரவே இல்லை" என்றார். நான் "எவர்தான் உணர்ந்திருக்கிறார்கள்?" என்று சொன்னேன். என் சொற்களை அவர் உளம்கொள்ளவில்லை. தன் வாழ்க்கையின் முதல் அவைவெற்றியை அடைந்த திளைப்பில் இருந்தார் என்று தோன்றியது.

"அன்னை லக்ஷ்மணை தனக்கென தனி எண்ணங்கள் அற்றவர். மைந்தர் சொல்லையே அவரும் சொல்வார், ஐயமே இல்லை" என்றபடி அனிலன் என்னுடன் வந்தார். "ஆகவேதான் இவர்கள் இத்தனை துணிவுடன் இருக்கிறார்கள்." நான் ஓஜஸ் ஏன் அதை சொன்னார் என்னும் எண்ணத்தை அடைந்தேன். ஒருவேளை அனிலன் அவரை பிழையாக எண்ணியிருக்கக் கூடுமோ? தோற்றம்கூட அதற்கு அடிப்படையாக இருக்கலாம். ஆனால் அவருடைய கண்களை நான் சந்தித்தேன். அவை கூரியவை, அத்தகைய கூரிய கண்கள் கொண்டவர் பேரறிஞராக, கவிஞராக, கலைஞராக இருக்கலாம். இல்லையேல் அவர் சூதாடியேதான்.

அதை எண்ணிக்கொண்டிருக்கையிலேயே அனிலன் "ஓஜஸ் நம் உரையாடலை முடித்துவைத்தார். ஏனென்றால் அன்னையிடம்

முரண்தென்பட்டால் என்ன செய்வது என்னும் வினா நோக்கி நீங்கள் சென்றீர்கள். அவர்களை நிலைகுலையச் செய்யும் சொல் அது. அந்தச் சொல்லாடல் மேலும் சென்றிருந்தால் பிரகோஷன் மீறி எதையேனும் சொல்லியிருப்பார். அது உங்கள் உள்ளப்பதிவாக எஞ்சியிருக்கும். ஒருவேளை நீங்கள் அதை தந்தையிடம் சொல்லவும்கூடும்" என்றார். அது முற்றிலும் உண்மை என அக்கணம் உணர்ந்தேன். ஓஜஸ்தான் நான் சந்தித்த துவாரகையின் இளவரசர்களிலேயே கூரியவர், நஞ்சுநிறைந்தவர் என்று தெளிவடைந்தேன்.

நான் சகனை பார்த்தேன். அனிலன் அவரை கூடவே அழைத்துச்செல்கையில் அவ்வண்ணம் பேசுவது விந்தையாக இருந்தது. ஆனால் சகன் "ஆம், நீங்கள் வருவதற்கு முன்புகூட மூத்தவரிடம் ஓஜஸ் என்னென்ன பேசலாகாது என்றுதான் சொல்லிக்கொண்டிருந்தார். மூத்தவர்கூட என்ன இது, என்னென்ன பேசலாம் என்று சொல்லாமல் இதை சொல்கிறாய் என்றார். ஓஜஸ் சொல்வதற்கு ஒருசில சொற்றொடர்களே உள்ளன, சொல்லாமல் ஒழிவதற்கு கடலளவு என்றார்" என்றார். சற்று திகைப்புடன் அவர் கணகளை பார்த்தேன். அங்கிருந்தது பிறிதொரு ஒளி. எந்தச் சிக்கல்களுக்குள்ளும் செல்லாத வெள்ளை நெஞ்சுகளுக்குரியது.

அவரை நான் புரிந்துகொண்டதை உணர்ந்த அனிலன் "அவனை அறிந்தே ஓஜஸ் அனுப்பியிருக்கிறார். நாம் சொல்வதையும் அங்கே சென்று சொல்வான்" என்றார். சகன் புன்னகைத்து "ஆம், நான் எங்கே சென்று வந்தாலும் என்னிடம் அங்கே என்ன நடந்தது என்று கேட்பார்கள். நான் எதையுமே மறக்கமாட்டேன். எல்லாவற்றையும் சொல்வேன்" என்றார். நான் புன்னகைத்தது அவருக்கு மேலும் ஊக்கத்தை அளித்தது. "நீங்கள்

விருஷ்ணிகுலத்தவர் என்று ஓஜஸ் சொன்னார். விருஷ்ணிகுலத்தவர்களுக்காகவே நீங்கள் அறுதியில் நிலைகொள்வீர்கள். அவ்வாறல்ல என்று உங்களுக்கு நீங்களே ஆணையிட்டுக்கொள்வீர்கள். ஆனால் வேறுவழியே இருக்காது என்றார். நான் அப்போது அருகே நின்றிருந்தேன்."

அனிலன் சிரித்தார். நானும் சிரித்து "இருக்கலாம்" என்றேன். லக்ஷ்மணையின் அரண்மனை முகப்பை அடைந்தோம். அங்கே நின்றிருந்த ஏவற்பெண்டிடம் நான் அவரைப் பார்க்க வந்திருக்கும் செய்தியை சொல்லிக்கொண்டிருக்கையிலேயே எந்த அறிவிப்பும் இன்றி சகன் உள்ளே சென்றார். நான் என்ன செய்வதென்று திகைத்து நின்றிருந்தேன். சற்றுநேரத்தில் சகன் வெளியே வந்து "அன்னை ஒப்புதல் அளித்துள்ளார், வருக!" என்றார். நான் அனிலனிடம் "நீங்கள் இங்கே நில்லுங்கள். நான் சென்றுவிட்டு உடனே வருகிறேன்" என்றேன். அவர் விழிகள் மாறின. நான் அதை பொருட்படுத்தாமல் சகனுடன் நடந்தேன்.

நாங்கள் உள்ளே நுழைகையில் சகன் "முதலில் சென்று எதன்பொருட்டு என்று சொல்லிவிடும்படி என்னிடம் ஓஜஸ் சொன்னார்" என்றார். நான் ஓஜஸின் நோக்கம் என்ன என்று எண்ணிக்கொண்டேன். இவரை என்னுடன் அனுப்பியதன் வழியாக அவர் எதை நிகழ்த்துகிறார்? அல்லது நான் இவ்வாறு எண்ணிக் குழம்பவேண்டும் என்றுதான் எண்ணுகிறாரா? உள்ளறை முன் ஏவற்பெண்டு என்னை அறிவிக்கும்பொருட்டு நின்றிருக்கையில் ஓர் எண்ணம் வந்தது, அவர் அனுப்பப்பட்டது அன்னை எந்தக் கோரிக்கையையும் முன்வைத்துவிடலாகாது என்பதற்காக. பெரும்பாலும் அவர் மட்டுமே லக்ஷ்மணை அன்னையை சந்திக்கிறார். அவர் வழியாக ஆணைகள்

மட்டுமே அவருக்கு வருகின்றன. அவரிடம் அன்னை எதையும் சொல்லி புரியவைக்க முடியாது.

உள்ளறையில் லக்ஷ்மணை ஒரு சிறுபீடத்தில் அமர்ந்திருந்தார். மிக மெலிந்திருந்தார். தலை நன்கு நரைத்திருந்தது. மலைமகள்களின் வழக்கப்படி ஏழு புரிகளாக குழலை தொங்கவிட்டிருந்தார். நெற்றியில் மலைக்குடிகளுக்குரிய கரிய பொட்டு. கைகளை மடியில் கோத்து உணர்வற்ற கண்களுடன் அமர்ந்திருந்தார். அவரை எவரும் ஓர் அரசியெனச் சொல்லிவிட முடியாது. எளிய மலைமகன் ஒருவனை மணந்து நீடுநாள் வாழ்ந்து பசி, தனிமை, சாவு என அனைத்து துயர்களினூடாகவும் கடந்து முதுமையை அடைந்தவர்போல் தோன்றினார். அவரால் அரசியலை புரிந்துகொள்ள முடியும் என்று தோன்றவில்லை. அவர் என் வருகையை உணர்ந்திருக்கிறாரா என்றே ஐயம் கொண்டேன்.

நான் "அரசி, இன்றைய சூழலை அறிந்திருப்பீர்கள்" என்றேன். அவர் விழிகளில் எந்த மாறுதலும் இல்லை. "அரசி, நான் துவாரகையின் அரசரைத் தேடி செல்லவிருக்கிறேன். எட்டு அரசியரின் அழைப்பையும் ஏந்திச்சென்றால் அவரை அழைத்துவந்துவிடலாமென்று எண்ணுகிறேன். தங்களின் ஓலை தேவை" என்றேன். அவர் விழிகள் தழைந்தன. மடியில் விழிநீர்த்துளிகள் உதிர்ந்தன. "அரசி, ஓலையை தங்கள் மைந்தர்கள் எழுதிவிட்டார்கள். அதில் நீங்கள் ஒப்பு முத்திரை அளித்தால் மட்டும் போதும்" என்றேன். அரசி ஓசையின்றி அழுதுகொண்டிருந்தார். நான் சகனிடம் ஓலையை அளிக்கும்படி சொன்னேன். அரசி அதை வாங்கி நோக்காமலேயே தன் கணையாழியை அழுத்தி திரும்ப அளித்தார்.

நான் மேலும் ஏதேனும் சொல்ல விழைந்தேன். ஆனால் அரசி விழிநீர் பொழித்துக்கொண்டு அசைவிலாது அமர்ந்திருந்தார். அவர் உள்ளத்தில் நிகழ்வதென்ன என்று அறியவே முடியாது என்று தோன்றியது. நான் தலைவணங்கி வெளியே நடந்தேன். சகன் என்னுடன் வந்தபடி "தந்தையைப் பற்றிப் பேசினாலோ தந்தையை நினைவூட்டும் எதையேனும் பார்த்துவிட்டாலோ இதேபோல அழுவார். நெடுநேரம். ஒரு சொல்லும் உரைப்பதில்லை. அழுதழுது அவரே ஓயவேண்டியதுதான். ஏவற்பெண்டுகள் எவரும் அவரிடம் பேசுவதில்லை" என்றார். நான் அவ்வாறன்றி வேறேது இருக்கமுடியும் என எண்ணிக்கொண்டேன்.

வெளியே காத்திருந்த அனிலன் "வாங்கிவிட்டீர்களா?" என்றார். "ஆம்" என்றேன். "நன்று, நான் சொன்னேனே. அன்னை எதையுமே நினைவுகூரவில்லை. அவர் இவர்கள் சொல்வதை செய்வார்" என்றார். சகன் "ஆம், என்னிடம்தான் எல்லாவற்றையும் சொல்லி அனுப்புவார்கள். நான் சொல்வதை அன்னை மறுப்பதே இல்லை" என்றார். "நன்று இளவரசே, நான் இனி ஒரே ஒரு அரசியை மட்டுமே சந்திக்கவேண்டும். ஓலை பெற்றேன் என்னும் செய்தியை என் பொருட்டு தங்கள் மூத்தவரிடம் சொல்லுங்கள்" என்றேன். சகன் "நான் சொல்கிறேன். நானே ஓலையை பெற்றுக்கொடுத்தேன் என்று சொல்கிறேன்" என்றபின் சென்றார்.

அனிலன் "எளிய உள்ளம்" என்றார். "ஆனால் இத்தகையோரை பயன்படுத்தி எந்தத் தீங்கையும் செய்ய முடியும்" என்றார். தன்னை ஒரு சூழ்ச்சிக்காரராக உருவாக்கிக் கொள்ள முடியும் என்னும் நம்பிக்கையை அனிலன் பெற்றுவிட்டார் என்று தோன்றியது. இனி ஒவ்வொன்றையும் நுட்பமாக்கிக் கொள்வார்.

சூழ்ச்சிகளை கண்டடைவார். சூழ்ச்சிகளை உள்ளத்துக்குள் செய்து பார்ப்பார். அரிதாக வெற்றிகளையும் அடைவார். "நன்று, நான் காளிந்தி அன்னையையும் சந்திக்கவேண்டும்" என்றேன். "நான் அதற்கும் ஒருங்கமைக்கிறேன். அவர் இருக்குமிடத்தை அறிவேன்" என்றார் அனிலன். "இல்லை, அவர் சாம்பனின் கூட்டமைவில் இருப்பவர். நீங்கள் வருவதை அவர்கள் விரும்ப வாய்ப்பில்லை" என்றேன். "ஆம், அது உண்மை" என்றார் அனிலன்.

"மீண்டும் சந்திப்போம். தங்கள் மூத்தவரிடம் என் உசாவலை சொல்க!" என்றபடி நான் விடைபெற்றுக்கொண்டேன். "நான் ஒட்டுமொத்தமாக ஒன்று சொல்கிறேன், யாதவரே. இப்பூசல் தந்தை வந்தாலும் முடியாது. ஏனென்றால் இவர்களெல்லாம் இவ்வண்ணம் ஆடியும் எதிர்நின்றாடியும் சுவை கண்டுவிட்டார்கள். உள்ளத்துள் பலநூறுமுறை ஆட்சியை நடித்துவிட்டார்கள். திரும்பச் சென்று மீண்டும் எளிய இளவரசர்களாக அமர எவராலும் முடியாது" என்றார் அனிலன். அது உண்மை என்று தெரிந்தாலும் என் அகம் எரிச்சலுற்றது. "பார்ப்போம். நான் அவர் ஆற்றலை நம்புபவன்" என்றேன்.

"ஆம். தந்தை அளவிலா ஆற்றல் கொண்டவர். ஆனால் நாங்கள் எண்பதின்மரும் அவருடைய வடிவங்களே. இதோ செல்லும் இந்த நுண்ணிலிகூட. அவரால் எங்களை எதிர்கொள்ள முடியாது. எங்களை அஞ்சியே அவர் விலகிச்சென்றார். நாங்கள் எங்கள் அன்னையரை இப்படி கட்டுப்பாட்டில் வைத்திருப்பதேகூட நாங்கள் தந்தையின் மாற்றுருக்கள் என்பதனால்தான்" என்றார் அனிலன். "ஒருவேளை அன்னையரின் ஓலையுடன் செல்கையில் நீங்கள் தந்தையை அறச்சிக்கலுக்குள் இழுத்துவிடுகிறீர்கள்.

அன்னையரின் சொல்லை மறுக்க முடியாமல் வரவும் விரும்பாமல் அவர் துயருறக்கூடும்.”

நான் எரிச்சலை வெளிப்படையாகவே காட்டி “நான் அதை கருதவில்லை. இது என் பணி” என்றேன். “ஆம், கடமையை நாம் செய்யவேண்டியதுதான்” என்றார் அனிலன். அவர் பேசிக்கொண்டே இருக்க விழைபவர்போலத் தோன்றினார். நான் தலையசைத்து விடைபெற்று விலகிநடந்தேன்.

# கல்பொருசிறுநுரை - 15

பகுதி மூன்று : ஒழியா நாற்களம் – 10

அரசே, நான் என்ன நிகழுமென்று எண்ணினேனோ அதுவே ஒவ்வொன்றாக நிகழ்கிறது என்று தெளிந்தேன். அதைத்தான் எதிர்பார்த்திருந்தேன் என்பதை அது நிகழ்ந்த பின்னர்தான் உணர முடிந்தது. அன்னையர் மைந்தரின் ஆளுகையில் இருக்கிறார்கள். மைந்தர் ஓர் அகவைக்கு மேல் அன்னைக்குமேல் கொள்ளும் செல்வாக்கு விந்தையானது. ஒவ்வொரு குடியிலும் ஆண்மகன்கள் அதை நுட்பமாக உணர்ந்துகொண்டிருக்கிறார்கள். மைந்தரின் ஆணியல்பு அதன் இளமை வீச்சுடன் வெளிப்படுகையில் அன்னையரின் பெண்ணியல்பு அவற்றை நோக்கி ஈர்க்கப்படுகிறது போலும். அது கனிவென்றும் பணிவென்றும் வெளிப்படுகிறது. அதனூடாக ஆட்சிசெய்து அடிபணியவும் செய்கிறது.

அன்றி அன்னையரில் அணையாதிருக்கும் காமம் குற்றஉணர்வென மாறி மைந்தருக்கு தங்களை அடிபணிய வைக்கிறதா? பேரன்னையர் பெருங்காமம் கொண்டவர் என்று சொல்லப்படுவதுண்டு. அழகென்றும் அன்பென்றும் மங்கலங்கள் என்றும் வெளிப்படுவதே காமம் என்றும் திகழ்வு கொள்கிறது என்பார்கள். அன்றி, அனைவரும் இயல்பாகக் கூறுவதுபோல் மைந்தர் வளர்ந்து ஆண்களாகிவிட்டார்கள் என்று உணராமல் கைக்குழவியாகவே அவர்களை எண்ணிக்கொண்டிருக்கும் பேதைமையாலா? மானுட இயல்பை நோக்குகையில் பேதைமையால் உலகியல் நிகழ்கிறதென்று தோன்றுவதில்லை. ஏனென்றால் விழைவால், வஞ்சத்தால்தான் ஒவ்வொன்றும் முடிவெடுக்கப்படுகின்றன. பேதைமை இருப்பது விழைவையும் வஞ்சத்தையும் மெய்மையென எண்ணிக்கொள்ளும் இடத்தில் மட்டுமே.

ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையில் அமைவதென்பதே உறவுகளின் இயல்பு. மைந்தரின் விழைவுக்கு அஞ்சி சத்யபாமை நீர் விளிம்பருகே தவம் இருக்கின்றார். மைந்தர் வணங்கும் விழைவின் வடிவென அமைந்திருந்தார் ருக்மிணி. மைந்தரின் விழைவுகளை தானும் ஏற்று தானும் பெருக்கி அமர்ந்திருந்தார் ஜாம்பவதி. மைந்தர்கள் கைக்கருவியென அமர்ந்திருந்தார்கள் பத்ரையும் நக்னஜித்தியும். மைந்தரின் அடிமைகள் என மித்ரவிந்தையும் லக்ஷ்மணையும். இது இவ்வாறுதான் அமையும் என்று யார் கூற முடியும்? எஞ்சியிருப்பவர் காளிந்தி மட்டுமே. அவரோ தங்கள் துணைவியரில் கனிந்தவர். துவாரகையின் ராதை என்று அவரை கூறுகிறார்கள் புலவர்கள். அவரும் அவ்வண்ணம் தன்னை மைந்தர்களுக்கு அளித்துவிட்டிருந்தார் என்றால் நான் இதுகாறும் நம்பியிருந்த ஒன்றின் முழுமையான

தோல்வியைக் காண்பது இப்போதுதான். அதன்பின் எனக்கு பெண்ணென்றும் துணைவியென்றும் எண்ண எக்கருத்தும் எஞ்சாது.

ஆகவே தவிப்பும் ஒவ்வாமையும் கொண்டிருந்தேன். ஒவ்வொரு காலடியும் பின்னெடுத்து வைப்பதுபோல் தயங்கி முன்னெடுத்து வைத்தேன். பின்னர் அமைச்சர் ஸ்ரீகரரின் சிற்றறைக்குள் நுழைந்து அங்கு அமர்ந்துகொண்டேன். அங்கே நெடுங்காலமாக அலுவல்கள் எதுவும் நிகழாததுபோல் தோன்றியது. பீடங்களின்மேல் பொடி படிந்திருந்தது. பீடங்களை நான் நோக்குவதைக் கண்ட ஏவலன் அவற்றை துடைத்து "இங்கே ஒவ்வொன்றும் பெரியவை" என்றான். "ஏன் இங்குள்ள மானுடர் சிறியராகிவிட்டனரா?" என்றேன். "ஒருவகையில் ஆம்" என்றான் ஏவலன். நான் அவனை நிமிர்ந்து நோக்கினேன். முதியவன், அக்கண்களில் நான் நன்கறிந்த ஒன்று இருந்தது. நான் நோக்கை விலக்கிக்கொண்டேன்.

ஏவலனை அழைத்து "காளிந்தி அன்னையை நான் சந்திக்க விழைவதாக கூறுக! இளைய யாதவரின்பொருட்டு ஒரு தூது செல்லவிருக்கிறேன் என்றும் சேர்த்துக்கொள்க!" என்று சொல்லி அனுப்பினேன். மறுமொழி வராதொழிந்தால் நன்று. என் உள்ளத்தில் இருக்கும் கற்பனையை அவ்வண்ணமே நிலைநிறுத்திக்கொள்வேன் என்று எண்ணினேன். கைகளை மார்பில் வைத்து சாய்ந்து சற்றே விழி மூடிவிட்டேன். அத்துயிலில் தங்களை கண்டேன். என்னிடம் எதையோ கேட்டீர்கள். அதற்கு நான் மறுமொழியும் உரைத்தேன். ஆனால் விழித்துக்கொண்டபோது அப்புன்னகை மட்டும் நினைவிருந்தது. நீங்கள் கேட்டதென்ன, நான் கூறியதென்ன என்பதை மறந்துவிட்டிருந்தேன்.

என்னை எழுப்பியவன் அனிருத்தனின் ஏவலன். அனிருத்தன் என்னை பார்க்க விழைவதாக சொன்னான். "அனிருத்தனா?" என்று மீண்டும் கேட்டேன். பிரத்யும்னனின் மைந்தர் அவர் என்ற எண்ணத்திலிருந்து என்னால் விலக இயலவில்லை. பிரத்யும்னனை சற்று முன் சந்தித்தபோது உடன் அனிருத்தன் இல்லையென்பதை நினைத்துக்கொண்டேன். "ஆம், அனிருத்தனேதான். இங்குதான் இருக்கிறார். உஷையுடன் இந்த நகருக்குக் கிழக்கே பாலையொன்றின் விளிம்பில் சிறுசோலை ஒன்றை அமைத்து அங்கு தங்கியிருக்கிறார்" என்றான் ஏவலன். என் உள்ளம் படபடக்கத் தொடங்கியது. ஏன் என்று அறிந்திருந்தேன், எண்ணியிராத ஒன்று நிகழவிருக்கிறது. "செல்வோம்" என்று சொல்லி அவனுடன் தேரில் ஏறிக்கொண்டேன்.

செல்லும் வழியில் அவன் என்னிடம் ஒன்றும் கூறவில்லை. நான் பன்னிரண்டு காவல்மாடங்களைக் கடந்து கோட்டையின் முகப்பை அடைந்தபோது களைத்து மீண்டும் அரைத்துயிலில் ஆழ்ந்தேன். கனவில் எழுந்து நீங்கள் எதையோ சொன்னீர்கள். இம்முறை எதையோ ஆணையிடுவதுபோல். நான் விழித்தெழுந்து "என்ன?" என்றேன். அருகிருந்த ஏவலன் "அரசே?" என்றான். "ஒன்றுமில்லை, கனவு" என்று விழிமூடிக்கொண்டேன். என் கண்களுக்குள் துவாரகை நிகழ்ந்துகொண்டிருந்தது. முன்பிருந்த பொலிவுகொண்ட நகர் அல்ல. இன்றிருக்கும் இருள்படிந்த நகரும் அல்ல. அது பிறிதொன்று. ஒருகணம் அங்கும் மறுகணம் இங்குமென அலைபாய்ந்தது அது. சாலைகள் பொன்னொளி கொண்டிருந்தன. ஆனால் இடுக்குகளுக்குள் எலிகள் விழிமின்ன ஓடின.

கோட்டையை விட்டு வெளியே நெடும்பாதையில் வளைந்து பாலைவெளி நோக்கி செல்லத்தொடங்கியது தேர். அரசே, துவாரகையைச் சூழ்ந்திருந்த பெரும்புல்வெளி இன்று கருகி மண்நிறம் கொண்டு பாலை என்றாகிவிட்டிருக்கிறது. அங்கிருந்த நாட்களில் நீங்கள் விண்மழையை மண்ணுக்கு இறக்கினீர்கள் என்று தோன்றுகிறது. பசும்புல் முற்றாக மறைந்துவிட்டது. அதை நம்பி அங்கு வாழ்ந்திருந்த ஆநிரை மேய்ப்போர் மெல்ல மெல்ல தொழு சுருக்கி நகருள் வந்து சிறு வணிகங்களில் ஈடுபடத் தொடங்கிவிட்டிருந்தனர். பலர் நகர்விட்டு செல்லவும் செய்தனர். யாதவர்களில் பெரும்பகுதியினர் குருக்ஷேத்ரப் போரில் மறைந்துவிட்டிருந்தமையால் எஞ்சிய அனைவரும் சிறு வணிகத்தொழில்களிலேயே அமைய இயல்கிறது.

அரசே, துவாரகை இன்று எஞ்சும் சிறிய கடல் வணிகத்தால் மட்டுமே வாழ்ந்துகொண்டிருக்கிறது. சென்ற சில ஆண்டுகளாகவே பெருங்கலங்கள் அங்கு வருவதில்லை. ஏனெனில் கரைவணிகர்களின் வண்டி நிரைகளும் துவாரகைக்குள் நுழைவதில்லை. நெடுந்தொலைவு பயணம் செய்துவந்து அங்கு கடல் வணிகம் செய்வது ஈட்டு பொருள் அளிப்பதல்ல என்று வணிகர்கள் கருதுகிறார்கள். அதைவிட சிந்துவினூடாகச் சென்று தேவபால துறைநகரில் வணிகம் செய்வது எளிது என எண்ணுகிறார்கள். சிந்துநாடு இன்று அஸ்தினபுரியின் துணையரசு. ஆகவே அங்கே வலுவான காவல் உள்ளது. சுங்கமென்று ஏதும் கொள்ளப்படுவதுமில்லை.

மாளவத்தின் துறைமுகங்களும் வணிகர்களுக்கு மேலும் அணுக்கமானவை. மாளவ மன்னர் இந்திரசேனனின் நான்காவது அரசியின் மைந்தர் சமுத்ரவர்மனின் அமைச்சரான

புஷ்யகீர்த்தி திறன்மிக்கவர் என்கிறார்கள். அரசுகள் வலுவிழந்து படைவல்லமை குறைந்துவிட்டமையால் காவல் நலிந்து நாடெங்கும் உள்வழி வணிகம் சோர்வுற்றிருக்கிறது என்று புரிந்துகொண்டு கடல்வணிகத்தை பெருக்க ஆவன செய்கிறார். அங்கே இன்று நிகுதி இல்லை. பெறுபொருளை முழுக்க செலவிட்டு யவனக்காவலர்களை அமர்த்தி கடலிலும் கரையிலும் காவலை வலுப்படுத்திக்கொண்டே செல்கிறார்கள். காவல் வலுக்கையில் வணிகம் பெருகும். இன்னும் சில ஆண்டுகளில் மாளவம் ஆற்றல்கொண்ட வணிகநாடென்று ஆகும்.

மாறாக இங்கு நிகுதி மிகுந்துகொண்டே இருக்கிறது. நிகுதி வருவாய் குறையுந்தோறும் நிகுதி அளவைக் கூட்டுவது துவாரகையை ஆள்வோரின் இயல்பு. மாறி மாறி நிகுதி அமைப்பதில் போட்டியிடுகிறார்கள். இன்று அங்கே எந்த இளவரசரும் தங்களுக்கென எந்தத் தனி முடிவையும் எடுக்க முடிவதில்லை. ஒருவர் எடுத்த முடிவை பிறர் எடுத்தாகவேண்டும். ஒருவர் நிகுதி கூட்டினால் பிறர் நிகுதி கூட்டாமல் இருக்க இயலாது. எனவே எவரும் பிறரை எண்ணாமல் எம்முடிவையும் எடுப்பதில்லை. பிறர் கூட்டிவிடுவார்கள் என்ற அச்சத்தாலேயே தாங்களும் கூட்டுகிறார்கள். பிறரை சூழ்ந்துநோக்கி தாங்கள் அடையும் ஐயத்தாலும் அச்சத்தாலும் முடிவுகளை எடுக்கிறார்கள்.

ஓர் அரசு மூன்றெனப் பிரிந்து தனக்குள் போரிட்டுக்கொண்டால் அதற்கு மூன்று கருவூலங்கள் தேவையாகின்றன. மூன்று படைகள், மூன்று ஆட்சிமுறைகள், மூன்று நெறிகள். மூன்று அரசுகளை அங்கிருக்கும் சிறு வணிகம் பேணவேண்டியிருக்கிறது. ஆகவே நகர் நலிந்துவிட்டிருக்கிறது.

மாளிகைகள் பசி கொண்ட யானைகள்போல் மெலிந்துவிட்டிருக்கின்றன. ஒரு காலத்தில் இரு விளிம்பும் தொட்டு மக்கள் பெருகி ஓடிக்கொண்டிருந்த துவாரகையின் தெருக்கள் ஒழிந்து மிக அகன்று பெரிய களிக்களங்கள்போல் தென்படுகின்றன. துவாரகையின் வணிகத்தெருவில் தரையில் அமர்ந்து காகங்களும் மைனாக்களும் மேய்வதை பார்க்கிறேன். பகலில் சாலைகளில் பெருச்சாளிகள் ஓடுகின்றன.

எண்ணியதைவிட பலமடங்கு விரைவில் பாலை விளிம்பில் அமைந்திருந்த அனிருத்தனின் சோலையைச்சென்றடைந்தோம். கற்களை அடுக்கி எழுப்பப்பட்டிருந்த தாழ்வான கோட்டைக்கு காவல் நின்றிருந்தவர்கள் அசுரகுலத்து வீரர்கள். எங்களை நன்கு ஆய்ந்த பின்னரே உள்ளே செல்லவொப்பினர். என்னை அழைக்க வந்தவன் யாதவ வீரன் என்பதனால் அந்த ஐயம் என்பதை உணர்ந்தேன். அந்தச் சிறு கோட்டைக்குள் ஓர் அழகிய சோலை உருவாக்கப்பட்டிருந்தது. அங்கு அந்தர்காமினி என்னும் ஆழத்து ஆற்றில் இருந்து எழும் அக்ஷபிந்து என்னும் குன்றா ஊற்று இருக்கிறது, அந்த ஊற்று நீரை மிகக் குறைவாக கொண்டுவந்து செடிகளின் வேருக்கு மட்டுமே அளித்து அச்சோலை பேணப்படுகிறது என்றார்கள்.

நீரை குறைவாகக் கோரும் மரங்களையும் செடிகளையும் மட்டும் அங்கு வளர்த்திருந்தார்கள். அம்மரங்கள் அனைத்துமே ஒருவர் நின்றால் தலைமறையும் அளவுக்கு மட்டுமே உயரம் இருந்தன. குற்றிலைகள் தழைத்து மண்ணோக்கி இறங்கிய கிளைகள் கொண்டவை. பாலை நடுவே அப்படி ஒரு சோலை எழுகையில் பல்லாயிரம் பறவைகள் அங்கு வந்து சேர்ந்துவிடுகின்றன. அங்கு சிறு பறவைகளினால் ஆன ஒரு போர்ப்படை தங்கியிருப்பதாகவே எனக்குத் தோன்றியது.

அத்தனை புதர்களும் சலங்கைகள்போல் குலுங்கிக்கொண்டிருந்தன. அத்தனை மரக்கிளைகளும் பறவைகளின் எடையால் தழைந்திருந்தன. சோலைக்கு மேல் நீராவி எழுந்து அலையடிப்பதுபோல் பறவைக்குலங்கள் எழுந்து அமைந்து சுழன்றன.

சோலை நடுவே முன்பு தங்கள் காலத்தில் கட்டப்பட்டிருந்த கல்லால் ஆன சிறு மாளிகை இருந்தது. தாழ்வான கூரை கொண்டது. எடைமிக்க கற்களை தூண்களென நாட்டி மேலே கற்பாளங்களை வைத்து கட்டப்பட்டது. ஆகவே அங்கு வீசிய காற்றின் விசையை தாங்குவது. அதன் மையத்தில் இருந்த சிறுகூடத்தில் நான் அன்று அனிருத்தனை சந்தித்தேன். நான் செல்வதற்குள்ளாகவே என்னைக் காத்து அங்கு அவருடைய அணுக்கர்களும் அமைச்சர்களும் அமர்ந்திருந்தனர். கோட்டைவாயிலில் என்னை சந்தித்து அழைத்துச் சென்ற சிற்றமைச்சனும் அசுரகுலத்தானே. பாணாசுரரின் நாட்டில் இருந்து வந்தவன் என்பதை அவனுடைய மொழியிலிருந்தே புரிந்துகொண்டேன். துவாரகையின் மொழிக்கு அவன் நா பழகியிருக்கவில்லை.

“நீர் பாணாசுரரின் நாட்டவரா?” என்றேன். “ஆம்” என்றான். “நான் அசுரவேதம் பயின்ற அமைச்சன்.” நான் புன்னகையுடன் “ஐந்தாம் வேதம் அசுரவேதத்தில் இருந்து எழுந்தது என்கிறார்களே?” என்றேன். “பெருமரங்கள் தங்கள் வேர்களால் சூழ இருக்கும் அனைத்தையும் கவ்வி உறிஞ்சி உண்கின்றன. அவற்றில் சாறென ஓடி மலர்களென விரிந்து தேன் என ஊறுவது எந்த நீர் என எவர் சொல்ல முடியும்?” என்றான். அவன் நூல் தேர்ந்தவன் என்று தெரிந்துகொண்டேன். “ஆயினும் நிலம் மரத்தின் சுவையில் உள்ளது அல்லவா?”

என்றேன். "நிலம் நன்றென்றால் மரத்தின் தன்னியல்பை வளர்க்கிறது, மாற்றுவதில்லை" என்று அவன் சொன்னான். "இனிக்கும் நிலத்தில் முளைத்த எட்டி இனிக்குமா என்ன?"

அரண்மனையின் உள்ளே சென்றதும் நான் அறைவாயிலில் அமர்ந்திருக்கும்படி செய்யப்பட்டேன். உள்ளே எனக்காக அவை ஒருங்குகிறது என்று தெரிந்தது. சற்று நேரம் கழித்து சிற்றமைச்சர் ஒருவர் வந்து "வருக!" என்று என்னை அழைத்தார். உள்ளே சென்று அத்தனை பெரிய அவையை பார்த்ததும் திகைத்தேன். அனிருத்தன் எழுந்து அரசருக்குரிய மதிப்பை எனக்களித்து தலைவணங்கி முறைமை கூறினார். நான் அந்த முறைமையை ஏற்று அவரை வாழ்த்தினேன். அரசருக்குரிய பீடம் எனக்கு அளிக்கப்பட்டது. முறைமைகள் நடக்கும்போது நான் அவையை நோக்கிக்கொண்டிருந்தேன். அங்கே உஷை வந்துவிடக்கூடும் என எதிர்பார்த்தேன், ஆனால் அவர் எந்த அரசநிகழ்வுகளிலும் வந்தமர்வதில்லை என்றும் அறிந்திருந்தேன்.

அனிருத்தன் நேரடியாகவே என்னிடம் "அரசே, தாங்கள் துவாரகையிலிருந்து அனைத்து மைந்தரின் செய்தியுடன் தாதையை பார்க்கச் செல்வதாக நான் அறிந்தேன்" என்றார். நான் "அனைத்து மைந்தரின் செய்தியல்ல. அன்னையரின் செய்தி மட்டுமே" என்று சொன்னேன். "ஆம், இங்கு அன்னையர் மைந்தரின் செய்திகளைதானே உரைக்கிறார்கள்?" என்றபின் புன்னகைத்து "என் மூதன்னையின் செய்தியை அன்றி என் மைந்தரின் செய்தியையும் என் செய்தியையும் சேர்த்தே

சென்று உரைக்கும்படி உங்களை கோரும்பொருட்டே உங்களை அழைத்தேன்" என்றார். நான் உணர்வுகளைக் காட்டாமல் "கூறுக!" என்றேன்.

"யாதவ அரசே, இங்கு இப்போது துவாரகையின் அரசகுடி மூன்றெனப் பிரிந்து வாளோங்கி நின்றிருக்கிறது. பிறப்பால் நான் ஷத்ரிய மைந்தனாகிய பிரத்யும்னனின் குருதிகொண்டவன். பிரத்யும்னன் விதர்ப்பத்தின் ருக்மியின் படையை நம்பி இந்நகரை கைப்பற்றி முடிசூடும் விழைவுடன் இருக்கிறார். அவர் முடிசூடினால் அவருடைய முதல் மைந்தனென நான் வழி அமைந்து அரியணை கொள்ளமுடியும். ஆகவே இயல்பாகவே தந்தையுடன் நான் நின்றிருக்க வேண்டும். தந்தை அவ்வாறே எதிர்பார்க்கிறார். ஆனால் இன்றுவரை நான் அந்த முடிவை அறுதியாக எடுக்கவில்லை" என்று அனிருத்தன் பேசத்தொடங்கினார்.

ஏனென்றால் நான் தந்தையின் மைந்தனென அமைந்தேன் என்றால் என்னுடன் படைத்துணையாக இன்று இருக்கும் பாணாசுரரின் அசுரகுடியினர் அனைவரையும் தவிர்க்க வேண்டியிருக்கும். நான் முடிசூட்டிக்கொண்டால் என்னருகே பட்டத்தரசியாக உஷை அமரமுடியுமா என்பதே முதற்கேள்வி. அதை என் தந்தையிடம் கேட்டேன். ஒரு நிலையிலும் அமர இயலாது என்று அவர் கூறினார். ஏற்கெனவே குருதியில் ஒரு குறைவிருக்கிறது, அதை நிகர்செய்யும் பொருட்டு நான் தொன்மையான ஷத்ரிய குடிகளிலிருந்தே மணம்புரியவேண்டும் என்றார். அந்த ஷத்ரிய அரசியில் பெற்றெடுக்கும் மைந்தனே எனக்குப் பின் துவாரகையை ஆளவேண்டும் என்றார். என் மைந்தன் வஜ்ரநாபனுக்கு

மணிமுடி சூடும் உரிமை இல்லை. ஏனென்றால் அவன் அசுரகுடியினன்.

நானும் எந்தையும் சினத்துடன் முட்டிக்கொண்டோம். "குருதியில் குறையென நீங்கள் எண்ணுவது தந்தையின் குருதியையா?" என்று நான் கேட்டேன். "ஆம், அதிலென்ன ஐயம்?" என்றார். "லவண குலத்து மரீஷையின் குருதி அது. யாதவ குலத்திற்கும் ஒரு படி இழிவானது. யாதவ குடியிலிருந்து முளைத்தவன் என்னும் பழியை நான் சூடுவதனாலேயே இன்னும் எனக்கு அரியணை அமையவில்லை. ஷத்ரியர் என்னை முழுதேற்றிருந்தால் இந்த எளிய யாதவக்குடியினர் என்னை மறுத்து ஒரு கணமும் நின்றிருக்கமாட்டார்கள். அந்த யாதவக்குருதியே குறையுடையது என்பது எனக்கு இன்னமும் பெரிய தடை. ஆகவே என் அன்னையின் குருதிவழியையே நான் கொள்ளவிருக்கிறேன். ருக்மியின் குடிவழியன் நான். தாய்மாமனை கொடிவழியென ஏற்க நூல்கள் ஒப்புகின்றன" என்றார்.

"நீங்கள் உங்கள் தந்தையின் மைந்தன் அல்ல ருக்மியின் மருகர் மட்டுமே என்கிறீர்களா?" என்றேன். "ஆம், அவ்வாறே. இனி எந்த அவையிலும் அவ்வாறே கூறவிருக்கிறேன். என் உடலில் இருக்கும் மரீஷையின் குருதியை தவிர்ப்பதே என் இலக்கு" என்றார் எந்தை. நான் சீற்றத்துடன் "எனில் என்னில் இருக்கும் ஷத்ரியக்குருதியை தவிர்ப்பதே எனது இலக்கு. நான் மரீஷையின் கொடிவழி வந்தவன். அவ்வாறே என்னை வைத்துக்கொள்வேன்" என்றேன். அவர் உறுமியபடி எழுந்து "இது உனக்கு அந்த அசுரமகள் கற்றுத் தந்த பாடமா? அவள் பொருட்டே அவள் குரலை இங்கு ஒலிக்கிறாயா?" என்று

கேட்டார். "ஆம், நீங்கள் ஒலித்துக்கொண்டிருப்பது உங்கள் அன்னையின் பெருவிழைவை. அவர் நாவில் எழுந்த தாய்மாமனின் வஞ்சத்தை. அதுபோல் அல்ல இது. இது நெடுநின்ற தொல்குலம் ஒன்றின் குரல்" என்று நான் சொன்னேன்.

குலம் பற்றிய அந்தப் பேச்சு எந்தையை சீற்றம் கொள்ள வைத்தது. தன் தொடையில் ஓங்கி அறைந்தபடி அரியணையிலிருந்து இறங்கி வந்தார். அடிக்கப்போவதுபோல் கைவீசி "எவரிடம் பேசிக் கொண்டிருக்கிறாய் என்று அறிவாயா? அறிவிலி! நீ என் மைந்தன் அல்ல. நீ எனக்குப் பிறந்தவன் அல்ல. உன்னுடலில் ஓடுவதும் அசுரக்குருதிதான்" என்றார். "ஆம், என்னில் சம்பராசுரர் அளித்த அன்னம் குருதியென கலந்திருக்கலாம்" என்றேன். என் சொற்களின் உட்பொருள் அவரைத் தாக்க தளர்ந்து மீண்டும் சென்று அரியணையில் அமர்ந்து "மெய்! எந்தை எனக்கிழைத்த பெரும் பழி என்பது இவ்வண்ணம் அசுரகுலத்தில் என்னை வளரவிட்டது. அசுரகுலத்து மங்கையை எனக்கு மணமுடித்தது" என்றார். தொய்ந்து அரியணையுடன் ஒட்டினார்.

ஒரு துடிப்பு அவரில் உடனே எழுந்தது. வெறிகொண்டவராக எழுந்து "அப்பழி என்னில் முடியட்டும். நீ என் கொடிவழியினன் அல்ல என்று இதோ இன்றே அவையில் அறிவிக்கிறேன். என் குருதி தூய ஷத்ரிய அரசியொன்றில் முளைத்தது. அதுவே என் தகுதி. என்னிடமிருந்து ஷத்ரியக்குருதியில் முளைத்த ஒருவனை என் மணிமுடிக்குரியவன் என்று அறிவிக்கிறேன். இனி எனக்கு நீ மைந்தன் அல்ல, விலகு" என்றார். "அதை உங்கள் நாவிலிருந்து கேட்டுச் செல்லவே நான் வந்தேன். நன்று" என்றபடி எழுந்துகொண்டேன். நாங்கள்

கூச்சலிட்டுக்கொண்டிருந்தபோது அவையில் என் தந்தையின் உடன்பிறந்தார் இருந்தனர். அவர்கள் ஒரு சொல்லும் உரைக்கவில்லை. அவர்கள் எவ்வகையிலோ அந்தப் பிரிவை விரும்பினார்கள் என்று தோன்றியது.

தந்தை "ஒன்று உணர்க!" என்று கூவினார். "ஒன்று உறுதிபட உணர்க! என்றேனும் களத்தில் வாளுடன் நாம் எதிரெதிர் சந்திப்போமெனில் இமையின் அசைவும் இன்றி உன் கழுத்தை அறுத்து தலையை நிலம்தொட வைப்பேன்" என்றார். "நானும் அவ்வாறே. அவ்வண்ணம் களத்தில் சந்திக்க நேர்ந்தால். உங்களை தந்தையென்றல்ல, என் குருதியை என் மூதாதையை பழித்த கீழ்மகன் என்றே எண்ணுவேன்" என்றபின் திரும்பி வந்தேன். அவர் சொல்லின்றி கூச்சலிட்டபடி எனக்குப் பின்னால் ஓடிவந்தார். அவர் உடன்பிறந்தவர்கள் அவரை பிடித்துக்கொண்டார்கள். "இந்த அவையிலிருந்து அவன் வெளியே செல்லக்கூடாது. அவன் தலை என் அவையில் உருண்டிருக்கவேண்டும்" என்று அவர் கூவுவதை பின்னால் கேட்டேன்.

அனிருத்தன் சொல்லிமுடித்தார். நான் அமைதியாக கேட்டு அமர்ந்திருந்தேன். அனிருத்தன் "நான் என் தந்தையை அஞ்சினேன். அவர் என்னை சிறையிடவும் கூடும். எனவே இங்கே தனியிடம் தேடினேன். அசுரகுடியின் வீரர்களை மட்டும் இங்கே காவலுக்கு வைத்திருக்கிறேன்" என்றார். நான் "எனில் நீங்கள் இப்போது எத்தரப்பு? நான்காவது தரப்பா?" என்றேன். "இல்லை இன்று அசுரகுடியின் போரிடும் ஆற்றல் குன்றியிருக்கிறது. நிஷாதருடனும் கிராதருடனும் ஒன்றிணைந்து நின்றால் ஒழிய துவாரகையை ஆளும் ஆற்றல் எங்களுக்கு இல்லை. நாங்கள் யாதவர்களையும்

ஷத்ரியர்களையும் எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. ஒருவேளை அவர்கள் இருவரும் இணைந்தால் அவர்கள் எங்களை வெல்லக்கூடும். ஆகவே சாம்பனுடன் நின்றிருப்பதாக நாங்கள் உறுதிகொண்டிருக்கிறோம்."

நான் "இம்முடிவை உங்கள் தந்தைக்கு தெரிவித்துவிட்டீர்களா?" என்றேன். "இல்லை. இன்று அசுரகுடியின் அனைத்து அமைச்சர்களும் படைத்தலைவர்களும் சேர்ந்து எடுத்த முடிவு இது. உண்மையில் சற்று முன்னர்தான் அறுதிமுடிவு எடுக்கப்பட்டது" என்றார் அனிருத்தன். "எங்கள் அரசர் சாம்பனே. அதை உங்களிடம் சொல்ல விழைந்தேன்." நான் "எனில் உங்கள் நிலம் எது?" என்று கேட்டேன். "துவாரகை எனக்கு வேண்டியதில்லை. துவாரகையின் முடி சாம்பனின் கொடிவழிகளுக்கு செல்லட்டும். நாங்கள் எங்கள் அசுர நிலத்தையே ஆள்கிறோம். அங்கு பேரரசுகளை உருவாக்குகிறோம். எங்கள் அரசுக்கு நிஷாதர்களின் மணிமுடி அமைந்திருக்கும். இந்த துவாரகை உதவி செய்தால் போதுமானது" என்றார் அனிருத்தன்.

நான் புன்னகைத்தேன். "உங்கள் புன்னகை புரிகிறது. ஒரு பேரரசு இன்னொன்று வளர ஒப்பாது என்பீர்கள். எங்களுக்கு மூன்று தெரிவுகளே உள்ளன. ஷத்ரியர்களும் யாதவர்களும் நிஷாதரும். இம்மூவருள் ஓர் அசுரப் பேரரசு உருவாவதை சற்றேனும் ஒப்புக்கொள்பவர்கள் எவர்? நீங்களே கூறுக!" என்றார் அனிருத்தன். "ஆம், அவ்வண்ணமெனில் தெரிவு நிஷாதர்களே" என்றேன். "அந்த முடிவையே நான் எடுத்தேன். இது நன்கு எண்ணிச்சூழ்ந்து எடுத்த முடிவு. பிறிதொரு வழியில்லை. எங்கள் படைத்துணை சாம்பனே" என்று அனிருத்தன் கூறினார்.

நான் பெருமூச்சுவிட்டேன். “சரி, இதில் நான் செய்வதற்கென்ன?” என்றேன்.

“காளிந்தி அன்னையின் ஓலையை பெற்றால் நீங்கள் கிளம்பிச் செல்வீர்கள். அங்கே துவாரகையின் அரசரை சந்தித்தால் இதை சொல்லுங்கள். நான் சாம்பனுடன் நிலைகொள்ளவிருக்கிறேன்.” நான் “இதை ஏன் இப்போது அவரிடம் சொல்லவேண்டும்?” என்றேன். “அவர் அனைத்தையும் உணரவேண்டும்” என்றார். “அவர் வராதொழிவார் என்றே நான் நினைக்கிறேன். இங்குள்ள விசைகள் இயல்பாக மோதிக்கொண்டு தங்கள் நிலைபேற்றை சென்றடையட்டும் என்றே எண்ணுவார். அவ்வண்ணம் அவர் கருதினார் என்றால் இச்செய்தி அவருக்கு உகந்ததே.” நான் “அவ்வண்ணமே அவரிடம் சொல்கிறேன்” என்றேன். அனிருத்தன் எழுந்து எனக்கு வாழ்த்துரைத்து விடை அளித்தார்.

# கல்பொருசிறுநுரை - 16

**பகுதி மூன்று : ஒழியா நாற்களம் – 11**

அரசே, நான் காளிந்தி அன்னையை நேரில் சந்திப்பதற்கு முன்பு இளவரசி கிருஷ்ணையை மீண்டும் சந்திக்க விரும்பினேன். அவையில் அவரை சந்தித்திருந்தபோதிலும்கூட அது அவரல்ல என்று தோன்றிக்கொண்டிருந்தது. அவையில் அவர் வெளிப்படுத்தியது ஒரு பொது உணர்வு, அது தந்தையின் மகள் என அவர் திகழ்ந்தது. அவர் தந்தையின் இறப்பிற்கு தாங்கள் வழி

வகுத்தீர்கள் என்பதை இன்று சூதர்கள் பாடிப் பாடி நிறுவிவிட்ட பின்னர் அவ்வண்ணமன்றி அவர் தோற்றமளிக்க இயலாது. ஆனால் அதற்கப்பால் அவருக்குள் நீங்கள் திகழ முடியும், திகழ்ந்தே ஆகவேண்டும்.

பாரதவர்ஷமெங்கும் கன்னியரின் கனவுப் பருவத்தில் ஒளியுடன் உள்ளே நுழைபவர் நீங்கள். ஒருபுறம் இசையாலும் மறுபுறம் கவிதையாலும் வடிக்கப்பட்டது உங்களுடைய உருவம். பெண்டிர் பின்னர் துணைவியராகி, அன்னையராகி, முதியோராகி உருமாறிக்கொண்டாலும் கன்னியராக இருந்த காலகட்டத்தின் பாவனை ஒன்று அவர்களுள் எப்போதும் இருந்துகொண்டிருக்கிறது. எங்கு வழி பிரிந்து எத்தனை தொலைவு சென்றாலும் தனித்த ஆழத்தில் தன்னுள் தனியாக திரும்பிச்சென்று தன் புதைந்த சிற்றறைக்குள்ளிருந்து அந்தக் காலகட்டத்தின் அணிகளையும் பூண்களையும் எடுத்து நோக்கி மகிழாமல் இருக்க அவர்களால் இயலாது.

பெண்களுக்கு அவர்களின் பெண்ணெழிலும் பெண்ணாற்றலும் பெண்ணுவகையும் முழுதுற அமைவது கன்னிப்பருவத்திலேயே. அவர்கள் தருக்கி நிமிர்வதும், மகிழ்ந்து மெய்மறப்பதும், தன்னை தானே உருவாக்கி தன்னை தான் நுகர்ந்து நிறைவடைவதும் கன்னிப்பருவத்திலேயே. கன்னியென பெண்டிர் அனைவரையும் நூல்கள் சொல்வது அதனால்தான். கன்னியன்னையென புடவிபடைத்த விசையை கல்லில் நிறுத்தியவன் கண்ட மெய்மை அது. முன்பு கேட்டேன், ஒரு சூதன் பாடியதை. அன்னையரின் மைந்தரை எண்ணி சொல்லிவிடலாம், கன்னியரின் மைந்தர் கணக்கற்றவர் என்று. துணைவியரின் ஆண்கள் ஒருசிலரே, கன்னியருக்கு

அவர்கள் ஒற்றைப் பேருரு என்று. ஆகவே நான் அவரை சந்திக்கவேண்டும் என்று செய்தி சொல்லி அனுப்பினேன்.

எவ்வண்ணம் அச்சந்திப்பு நிகழவேண்டும் என்று மீண்டும் மீண்டும் சொல்கோத்துக்கொண்டேன். அவரிடம் சென்று உங்களுக்கென ஒரு செய்தியை கேட்பதல்ல எனது நோக்கம். அவ்வண்ணம் கேட்டால் இச்சூழல் எதை வகுத்திருக்கிறதோ, அவரிடம் எதை எதிர்பார்த்திருக்கிறதோ அதை மட்டுமே கூற இயலும். பிறிதொன்றைச் சொல்லி பழி சூடிக்கொள்ளவோ பிறிதொன்றை எண்ணி தனக்குத்தானே பழி ஏற்றுக்கொள்ளவோ அவர் துணியமாட்டார். இயல்பாக பேசிக்கொண்டிருக்கவேண்டும். அப்பேச்சில் அரசியல் எழலாகாது. நான் அவரிடம் பர்சானபுரியின் ராதையைப்பற்றி பேசலாமா என்று எண்ணினேன். பின்னர் அதையும் தொடக்கூடாது என்று முடிவு செய்தேன்.

இங்குள்ள அத்தனை பெண்டிரிலும் ராதை உறைகிறாள். ஆனால் தங்களை ராதையென உணரும் அக்கணமே விலகி ராதை மேல் காழ்ப்பு கொள்ளாத எவருமில்லை. ராதையை தொட்டெழுப்ப வேண்டும், ராதையைப் பற்றி பேசிவிடலாகாது. ராதை என் பேச்சினூடாக எவ்வண்ணமேனும் என்னையறியாமல் அங்கு நினைவுகூரப்படுவாளெனில் அது நன்று. அவரை தன் கன்னிப்பருவம் நோக்கி கொண்டுசெல்ல வேண்டும். அன்று அவருள் எழுந்த தங்கள் இனிய வடிவை ஒருகணமேனும் நினைத்து முகம் மலர்வார் எனில், விழி கனிவார் எனில், சொல் குளிர்வாரெனில் அதுவே அத்தருணம், அப்போது தங்களைப்பற்றி சொல்லவேண்டும்.

இன்று தாங்களிருக்கும் இத்தனிமை, அனைவரும் உடனிருக்கையிலும் எவருமிலாதிருக்கும் இந்த உச்சம் பற்றி

கூறவேண்டும் என முடிவெடுத்தேன். பெண்டிர் ஆண்கள் துயருற்றிருப்பதை விரும்புகிறார்கள், அது இறுகிய நிலம் மீது பெருமழை பெய்து மண் இளகுவதுபோல் அவர்கள் மேல் தாங்கள் வேர் விடுவதற்கு உகந்தது. தளிர்க்கிளை விரித்து தழைத்தோங்குவதற்குரிய கதுப்பு. பெண்டிர் உள்ளத்தில் தனித்த, நோயுற்றுத் துயரடைந்த ஆண் எப்போதும் எழுகிறான். அப்போது அவர்கள் அவனை மாண்பு நீக்கி, பேருரு அகற்றி, ஆணவம் களைந்து குழவியாக்கிக்கொள்ள முடியும். ஆடைகளைக் களைந்து கையிலெடுத்துக்கொள்ள முடியும்.

நான் என் ஏவலன் செய்தியுடன் மீண்டு வருவதை எதிர்பார்த்து பதற்றத்துடன் காத்திருந்தேன். ஒருவேளை இளவரசி கிருஷ்ணை என்னை சந்திப்பதை முற்றாக தவிர்த்துவிடக்கூடும் என்றும் எண்ணினேன். பலமுறை அவ்வாறே நிகழ்ந்துள்ளது. குருக்ஷேத்ரப் பெரும்போர் அங்கு நிகழ்ந்துகொண்டிருந்தபோது இளவரசி தன் கொழுநர் உட்பட எவரையுமே சந்திக்கவில்லை என்றார்கள். களத்திலிருந்து வந்த செய்திகளை மட்டும் ஒரு சேடிப்பெண் வந்து கேட்டு சென்று அரசியிடம் சொல்லிக்கொண்டிருந்தாள். போர் தொடங்குவதற்குள்ளேயே அப்போரின் முடிவை முற்றுணர்ந்து தன்னுள் தனித்து குளிர்ந்து இறுகிவிட்டார் கிருஷ்ணை. அவருக்குத் தெரியும் நீங்கள் யார் என்று.

அச்சேடியிடம் பின்னர் கேட்டேன் "செய்திகளை நீ சென்று அவரிடம் சொல்வதுண்டா?" என்று. "இல்லை" என்று அவள் சொன்னாள். "கௌரவத் தரப்பின் பெருவீரர்கள் உட்பட எவர் மறைந்தாலும் அதை தன்னிடம் வந்து சொல்ல வேண்டியதில்லை என்றார். போரில் என்ன நிகழ்கிறது என்றும் தன்னிடம் விரித்துரைக்க வேண்டியதில்லை என்று இளவரசி

ஆணையிட்டிருந்தார். களத்தில் என்ன நிகழ்கிறது என்பதை நோக்கி, அங்கே அஸ்தினபுரியின் அரசரோ அவரது இளவல்கள் நூற்றுவரோ அவர் மைந்தரோ களம்படுவார்களெனில் அச்செய்தியை மட்டும் உரைத்தால் போதும். மாண்டோர் பெயர் மட்டும் கூறப்பட்டால் போதும். அச்செய்தியையும் சொல்லென உரைக்க வேண்டியதில்லை. அதை ஓலையில் எழுதி அளித்தால் போதும் என்றார்."

ஒவ்வொரு பெயராக அவர் தன் உள்ளத்திலிருந்து அகற்றிக்கொண்டிருந்தார். இறுதியில் துச்சாதனன் மறைந்தால் இளஞ்சிவப்புப் பட்டாடை அணிந்து வந்து தன் முன் நிற்கவேண்டும் என்றும் லக்ஷ்மணன் மறைந்தால் பச்சை என்றும் துருமசேனனுக்கு மஞ்சள் என்றும் துரியோதனன் மறைந்தால் அடர்சிவப்பு என்றும் அரசி ஆணையிட்டிருந்தார். அவ்வாறு சொல்லின்மையில் இருந்தே அச்செய்தியை அவர் அறிந்திருக்கிறார். தந்தையின் நீப்புச் செய்தியை அறிந்த அக்கணமே உணவொழித்து பன்னிரு நாட்கள் நோன்பு கொண்டார். பின்னர் வெளிவந்தபோது மெலிந்து வாயுலர்ந்து விழி மங்கி பிறிதொருத்தியாக மாறியிருந்தார்.

"அதன்பின் இன்று வரை அவர் புன்னகைக்கவில்லை. விழிகளில்கூட புன்னகை எழவில்லை" என்றாள் சேடி. "ஒவ்வொரு நாளும் அரசுசூழ் பணிகளுக்கு வந்தமர்ந்துவிட்டு தன் சிற்றறைக்கு மீள்கிறார். அணுக்கர் என்று இன்று அவருக்கு எவரும் இல்லை. அரசர்கூட மிக அரிதாகவே அவரிடம் பேசிக்கொண்டிருக்கிறார். இன்று அங்கிருப்பது ஓர் அறியாத் தெய்வம். அவ்வுள்ளத்தில் நிகழ்வதென்ன என்பதை எவரும் அறியார்" என்றாள். நான் அத்தோற்றத்தை என்னுள் முன்னரே எழுப்பிக்கொண்டிருந்தேன். நான் நேரில் கண்ட கிருஷ்ணை

அவ்வாறே தோற்றமளித்தார். ஆயினும் எனக்கு அவரை சந்திக்கமுடியும் என்னும் நம்பிக்கை இருந்தது. அவையில் அவர் பேசியவை குறைவு. எஞ்சிய சொற்கள் அவரிடம் இருக்கும், அவை அவரை என்னை சந்திக்கச்செய்யும். எஞ்சும் சொற்கள் கணமொழியாமல் புழுக்கள் எனத் துடிப்பவை.

பலமுறை பலரும் அவரை தனியாக சந்திக்க முயன்றிருக்கிறார்கள் என்பதை நான் அறிவேன். அஸ்தினபுரியிலிருந்து பெருங்கவிஞர் சாரிகர் இங்கு வந்து 'அருந்ததி வைபவம்', 'துவாரகை வலம்' எனும் இரு காவியங்களை எழுதியதை தாங்கள் அறிந்திருப்பீர்கள். அருந்ததி வைபவம் இன்று உத்தராபரிணயம் என்ற பேரில் சூதர்பாடலாக ஆகி மக்களிடையே புகழ்பெற்றிருக்கிறது. அக்காவியங்களை அவர் சாம்பனின் அவையில் அரங்கேற்றியபோது மேடையில் அரசருக்கருகே கிருஷ்ணை அமர்ந்திருந்தார். அச்சொற்களில் ஒன்றேனும் அவர் செவியில் நுழைந்ததா என்பதற்கு சான்றில்லை என்று அவையோர் உணர்ந்தனர். அவர் விழி கனிந்தது ஒரு சொல்லுக்காக மட்டுமே. உடல் சுருங்கி பிறந்து மெல்ல உருக்கொண்டு வளர்ந்து வந்த பரீக்ஷித்தின் பெயர் கூறப்பட்டபோது.

பரீக்ஷித்தை அவர் பேரன்புடனும் அதற்குரிய பதற்றத்துடனும் பேணினார். அம்மகவை ஏழு நாட்களுக்கு ஒருமுறை அவரே சென்று பார்த்தார். தொட்டிலுக்கு அருகே தன் கைவிரல்களால் அம்மகவின் சிறு தளிர்விரல்களைத் தொட்டு அமர்ந்திருக்கையில் விழி சரித்து ஒரு கனவுநிலைக்குச் சென்றார். பரீக்ஷித் அஸ்தினபுரிக்கு கிளம்பியபோதுதான் நீண்ட நாட்களுக்குப் பின் அரசி கிருஷ்ணை தன் அகத்தளத்திலிருந்து வெளிவந்து துவாரகையின் பெருமுற்றத்தில் நிகழ்ந்த

கொலுஅமர்தலுக்கும் விடைகொடலுக்கும் அமர்ந்தார். அவரை எதிர்பார்த்திருந்த குடிகள் அவருடைய தோற்றம் கண்டு திகைத்து சொல்லவிந்தனர். எனவே வாழ்த்தொலிகள்கூட எழவில்லை. உயிர்நீத்த உடல்போலிருந்தார் அரசி என்று சேடி ஒருத்தி என்னிடம் சொன்னாள்.

அஸ்தினபுரியின் இளவரசரை பட்டு விரித்த பொற்தாலத்தில் ஏந்தி துவாரகையின் குடிமக்களுக்கு காட்டியபோது அரண்மனை முற்றமெங்கும் நிறைந்திருந்த திரள் ஒரு சொல்லையும் உரைக்கவில்லை. ஒரு வாழ்த்தொலிகூட எழவில்லை. திகைத்தவர்கள்போல, அஞ்சியவர்கள்போல அவர்கள் விழி மலைத்து நோக்கி நின்றனர். இரு கைகளையும் கூப்பியபடி எழுந்த கிருஷ்ணை "அஸ்தினபுரியின் இளவரசர் வெல்க! வெல்க குருவின் கொடிவழி வந்த பரீக்ஷித்!" என்று கூவினார். அவர் குரல் முன்னால் நின்ற சிலருக்கே கேட்டது. ஆனால் உதடுகள் அசைவதிலிருந்து புரிந்துகொண்டு துவாரகையின் குடிமக்கள் பேரொலி எழுப்பி அம்மைந்தனை வாழ்த்தினர். முனிவரும் அந்தணரும் புலவரும் சூதரும் குடிமுற்றம் வந்து மைந்தனை மலரிட்டு வாழ்த்தினர்.

அரசி மைந்தனை எடுத்து நெஞ்சோடணைத்து முன்நெற்றியில் முத்தமிட்டு நற்சொல் உரைத்து அஸ்தினபுரியிலிருந்து அவரை கொண்டுசெல்வதற்காக வந்திருந்த தூதுக்குழுவிடம் அளித்தார். சுதமனும் சுரேசரும் அரசியை வணங்கி மைந்தனை பெற்றுக்கொண்டனர். அணிநிரை அரண்மனைமுற்றத்திலிருந்து கிளம்பி அகன்று செல்வதை பார்த்தபடி அரசமேடையில் கைகளைக் கோத்து நெஞ்சில் வைத்து அமர்ந்திருந்தபோது அரசி கிருஷ்ணை விழி நிறைந்து முகம் கனிந்தார். தேர்கள்

சென்று மறைந்த நெடுந்தொலைவு வரை நோக்கிக்கொண்டிருந்தார்.

அதன் பின்னர் அவர் குடிகள் காண எங்கும் கொலுஅமரவில்லை. பின்னர் பல விழவுகள் வந்து சென்றன. ஒவ்வொரு ஆண்டும் துவாரகையில் கூடும் ஆவணிமாத எட்டாம் கருநிலவுநாள் கொண்டாட்டம் இப்போது பொலிவிழந்து பேருக்கென நிகழ்கிறது. அன்று பழைய நினைவை இழக்க விரும்பாத குடிகள் துவாரகையின் அரசமுற்றத்திற்கு வந்து அங்கு கூடிநின்று அரசரையும் அரசியையும் வணங்கிச் செல்வதுண்டு. அவ்விழவுக்கும்கூட அரசகொலுமேடையில் அரசர் சாம்பன் தன்னந்தனியாகவே வீற்றிருந்தார். ஆனால் பரீக்ஷித் அஸ்தினபுரிக்குச் சென்று சேர்ந்ததைப்பற்றி அஸ்தினபுரியின் கவிஞர் ஒருவர் எழுதிய 'சூக்திகம்' என்னும் பாடலை சூதர்கள் பாடிய நிகழ்வில் அரசி கிருஷ்ணை வந்து அமர்ந்திருந்தார். அவர் விழி கனிந்து அதை கேட்டுக்கொண்டிருப்பதை அனைவரும் வியப்புடன் நோக்கினர்.

அரசியின் உள்ளத்தை அறிந்துவிட்டேன் என்று தோன்றியதுமே அவ்வாறு எவர் உள்ளத்தையேனும் அறிய முடியுமா என்றும் ஐயுற்றேன். நான் நம்பியது ஒன்றையே, ஒளி இலாது நீரில்லை. இருண்டிருக்கையில், மண்ணில் ஆழத்தில் உறைகையில் கூட நீர் தன் ஒளியை தக்கவைத்திருக்கிறது.

நான் எண்ணியதுபோலவே எனக்கு அரசியிடமிருந்து அழைப்பு வந்தது. நான் ஏவலனால்

அவருடைய அரண்மனைக்குள் அழைத்துச் செல்லப்பட்டேன். செல்லும் வழியில் எண்ணங்களை தொகுக்க முயன்றேன். ஆனால் என்னால் குவிய இயலவில்லை. உள்ளறைக்குள் சற்றுநேரம் காத்திருந்தபின் அரசியின் சிற்றறைக்குள் செலவொப்புதல் அளிக்கப்பட்டது. உள்ளே கிருஷ்ணை சிறுபீடத்தில் இளநீல ஆடை அணிந்து அமர்ந்திருந்தார். நீலநிற மலர்கள் சூடிய குழல் நீண்டு கிடந்தது. நீலக் கல் பதித்த அட்டிகை. முகமன் உரைத்தபோது அந்த நீல நிறத்தையே நான் நோக்கினேன். என்னை அமரச்சொன்னார்.

"நான் தங்களைப் பார்க்கவந்தது ஒரு கோரிக்கையுடன்தான், அரசி" என்றேன். "அரசர் இங்கு மீளவேண்டும் என்னும் கோரிக்கையை அவருடைய துணைவியர் எழுவரிடமிருந்தும் பெற்றுள்ளேன். காளிந்தி அன்னையை சந்திக்கச் செல்லவிருக்கிறேன். அதற்கு முன் உங்களிடமிருந்து ஒரு சொல் பெற விழைந்தேன். காளிந்தி அன்னைக்குப் பின் எவரையும் சந்திக்க நான் விழையவில்லை" என்றேன். "சொல்க!" என்று அவர் சொன்னார். "தேவி, இங்கே மீண்டுவருவதற்கு துவாரகையின் அரசருக்கு ஏதேனும் உளத்தடை இருக்குமென்றால் அது உங்களை சந்திக்கவேண்டும் என்பதே. உங்கள் தந்தையின் இறப்புக்கு முன்நின்றவர் துவாரகையின் அரசர் என்பதை எவரும் மறுக்க இயலாது. ஆனால் அது போர், அரசர்களின் அறம். இன்று அனைவருமே அதைக் கடந்து உளம் அமைந்துள்ளனர். நீங்களும் அவ்வண்ணமே கடந்துள்ளீர்கள் என்றே எண்ணுகிறேன். அரசர் இங்கே நகர்நுழைகையில் அவரை வரவேற்பவர்களில் தாங்களும் முதன்மைகொள்ளவேண்டும் என்பது என் விழைவு. அவ்வண்ணம் ஒரு சொல்லை தங்களிடம் இருந்து பெற விழைகிறேன்."

அவர் என்னை கூர்ந்து நோக்கி "அவ்வண்ணம் நான் வந்து நிற்கமாட்டேன் என எப்படி நினைக்கிறீர்கள்?" என்றார். "உங்கள் அரசநெறியை கைவிடமாட்டீர்கள் என்று நான் அறிந்திருந்தேன். ஆனால் இன்று ஜாம்பவதி அன்னையின் அவையில் உங்களை சந்தித்தபோது சிறு ஐயம் எழுந்தது, ஆகவே மீளவும் சந்திக்கலாம் என்று தோன்றியது" என்றேன். "அதாவது அவையில் நான் சொன்னவை பொய்யாக இருக்கக்கூடும் என்றும் என் அகத்தே நான் வேறு எண்ணம் கொண்டவளாக இருக்கலாமென்றும் கருதினீர்கள் அல்லவா?" நான் "இல்லை, ஆனால் அரசநெறியை மீண்டும் வலியுறுத்தவும் அப்பால் ஒருசில நடைமுறை நலன்களை சொல்லுறுத்தவும் தனிச்சந்திப்பில் வாய்ப்பு அமையும் என கருதினேன்" என்றேன்.

"சொல்க!" என்றார். "அரசி, ஒன்று உறுதிகொள்க! சாம்பன் இங்கே அரசாள நிஷாதர்களும் அசுரர்களும் அன்றி எவரும் விழையமாட்டார்கள். அறுதியாக யாதவரும் ஷத்ரியர்களும் அவர்களுக்கு எதிராக ஒருங்கிணைவார்கள். அஸ்தினபுரியின் ஆதரவும் அவர்களுக்கே அமையும். எனில் சாம்பனும் பிறரும் துவாரகையிலிருந்து முழுமையாகவே துரத்தப்படலாம். அவ்வாறு நிகழாது காக்கும் அடிப்படைகள் என்பவை இரண்டு. ஒன்று, துவாரகையின் அரசர் உருவாக்கிய ஐந்தாம் வேதம். இன்னொன்று சாம்பன் அவருடைய குருதியிலெழுந்தவர் என்பது. அவ்விரண்டையும் நிலைநாட்ட அவர் நேரில் வருவது இன்றியமையாதது."

"அவர் வந்தால் சாம்பனை அரசர் என ஏற்பாரா?" என்று அவர் கேட்டார். "அதை நான் சொல்லமுடியாது. அது அவருடைய உளத்தில் உறைவது. ஆனால் அவரால் ஒருபோதும் தன் மைந்தரல்ல சாம்பன் என்று கூற இயலாது. நிஷாதரும்

அசுரரும் அரசுகொள்வதற்கு எதிராக நிலைகொள்ளவும் இயலாது" என்றேன். அவர் புன்னகைத்தார். அதிலிருந்த வஞ்சம் என்னை திகைக்கச் செய்தது. "உங்கள் எவரைவிடவும் நான் அவரை அறிவேன்" என்று அவர் சொன்னார். "ஏனென்றால் நான் நினைவறிந்த நாள் முதல் அணுகி நுணுகி அறிந்துகொண்டிருப்பது அவரை மட்டுமே. அவர் விழைவது துவாரகையின் வாழ்வை அல்ல, அழிவை" என்று அவர் சொன்னார். அக்கணம் அதுவே உண்மை என்று என்னுள் ஓர் எண்ணம் எழ கடுங்குளிர்போல் அச்சம் என்னுள் நுழைவதை கண்டேன்.

"அவர் தெய்வப்பேருரு என்பதை நான் நன்கறிவேன். இந்நகர் அவர் ஒரு போருக்கென எடுத்த படைக்கலம். இங்கே அவர் அமர்ந்துசென்ற பீடம் இது. போர்முடிந்துவிட்டது, படைக்கலத்தை அவர் கடலில் வீசிவிடவே விழைகிறார். தெய்வங்கள் மலைநீங்கியபின் பீடத்தை முற்றழிப்பது பூசகர் வழக்கம்" என்றார் கிருஷ்ணை. "இல்லை தேவி, என் தலைவர் பேரளி கொண்டவர்" என்றேன். அவர் சிரித்தபோது மேலும் வஞ்சம் தோன்றியது முகத்தில். "தெய்வங்கள் அளிகொண்டவை என எவர் சொன்னார்கள்? எந்த வேதம் அவ்வண்ணம் உரைக்கிறது? பேரழிவின் வடிவங்களே தெய்வங்கள். அவை புயலென, ஊழியென, எரிமழை என பேருருக் காட்டுபவை. அவ்வண்ணமே இவரும் எழுந்திருக்கிறார். சென்ற வழியெங்கும் குருதியையும் விழிநீரையும் சாம்பலையுமே எஞ்சவைத்திருக்கிறார்."

"எனில் துவாரகை மட்டும் பொலிவுடன் மிஞ்சும் என எப்படி எண்ணமுடியும்? இது இடிமின்னல் இறங்கிய பாறை என நொறுங்கும், வேறுவழியே இல்லை" என்று கிருஷ்ணை

தொடர்ந்தார். "அரசியல் என நோக்கினாலும் இந்நகர் அழிவதே அவருக்கு நன்று. அவர் நிறுவிய வேதம் இங்கு முளைத்தெழவேண்டும் என்றால் அதை எழும் புதிய குடிகள் ஒவ்வொன்றும் தங்களுடையது என்று எண்ணவேண்டும். துவாரகை இங்கே பேரரசு எனத் தொடருமென்றால் அந்த வேதம் அவ்வரசின் முகப்படையாளமாக ஆகும். ஆகவே பிறரால் புறக்கணிக்கப்படும். துவாரகை இங்கே சிறுத்து நீளும் என்றால் அது அவ்வேதத்தின் தோல்வி என்றே கருதப்படும். இந்நகர் அழிந்து சொல்லில் பேருருக் கொள்ளும் என்றால் ஒவ்வொரு சிறுகுடியும் அது அமைக்கவிருக்கும் பெருநகரை துவாரகை என்று எண்ணிக்கொள்ளும். அவர்களின் கனவுகளில் அது நிலைகொள்ளும். அவர் விழைவது அதையே."

"தன்னுடைய பருவுடல் அழிகையில் தனதென்று எதுவும் இங்கு எஞ்சாதொழியவேண்டும் என அவர் விழைகிறார். தன் நிழல் என தான் உருவாக்கிய அனைத்தையும் இழுத்துக்கொண்டு மறைய எண்ணுகிறார். தன் சொல் ஒன்றே இங்கு திகழவேண்டும் என்பதே அவருடைய திட்டம்" என்றார் கிருஷ்ணை. "ஆகவே எனக்கு அவர் இங்கு வந்து இந்நகரை மீட்பார், இது செழிக்க வழியமைப்பார் என்ற நம்பிக்கை எவ்வகையிலும் இல்லை. அவர் வரப்போவதில்லை, வந்தால் இதன் அழிவை விரைவாக்க, முழுமையாக்க செய்யவேண்டியவற்றையே செய்வார்." அவர் மீண்டும் நகைத்து "அதையும் செய்யவேண்டியதில்லை. அடித்தளத்தில் விரிசலை உருவாக்கியபின் அவர் கட்டி எழுப்பிய பெருநகர் இது" என்றார்.

நான் சொல்லிழந்து அமர்ந்திருந்தேன். அரசி "வேறேதேனும் சொல்வதற்குள்ளதா?" என்றார். "எனில் நீங்கள் இங்கு போரிடுவது எவருடன், அரசி?" என்றேன். "அவருடன்தான்.

தெய்வமே என்றாலும் கொல்ல வரும் என்றால் எதிர்த்து நின்றிருப்பதே உயிர்களின் அறம். நான் அவர்மேல் வெறுப்பை உருவாக்கி வளர்த்தெடுத்துக் கொண்டுள்ளேன். சில ஆண்டுகளுக்கு முன் எனில் அது என்னால் இயலுமா என்று எண்ணி திகைத்திருப்பேன். ஆனால் வெறுக்கத் தொடங்கியதும் அது எத்தனை எளிதெனக் கண்டறிந்தேன். என் அன்பையும் அளிப்பையும் முழுமையாகவே கசப்பென்றும் காழ்ப்பென்றும் மாற்றிக்கொண்டேன். இன்று அவர் பெயரே என்னை குமட்டச் செய்கிறது. நேர்முன் அவரை கண்டால் முகத்தில் காறி உமிழக்கூடும். நெஞ்சில் வாளெடுத்துப் பாய்ச்சவும்கூடும்."

"தெய்வம் மானுடருக்கு அருள்கிறது என்பது மானுடர் தங்கள் எளிமையால், சிறுமையால் உருவாக்கிக் கொள்ளும் பொய். தெய்வமென மானுடர்முன் தோன்றுவன அனைத்துமே பேரழிவின் விசைகளே. பெருவெள்ளம், காட்டெரி, புயல், கடல்கோள், கொடுநோய். அவற்றை அஞ்சி அவற்றிடமே மன்றாடி அவற்றை வழிபடுகின்றனர் எளியோர். வழிபடுவதற்காக அவற்றை அளிகொண்டதாக அமைத்துக்கொள்கின்றனர். எறும்புகள் யானையின் கால்கள் இரக்கம் மிக்கவை என எண்ணிக்கொள்ளும் போலும். அவை மிதித்தழிப்பது நன்மைக்காகவே என்று கற்பனை செய்துகொள்ளும். யானை எறும்புகளை அறிவதே இல்லை. அதன் பாதையை எறும்புகள் உணரவும் இயலாது."

"ஆயினும் எறும்புகள் வாழ்ந்தாகவேண்டும். நூறாயிரம்கோடி எறும்புகளில் ஒன்றேனும் திரும்பி யானையை கடித்தாகவேண்டும். கொடுக்கு உடையலாம், உயிர்துறக்கலாம். ஆனாலும் எதிர்த்தாகவேண்டும். நான் இன்று இவரை வெறுப்பதுபோல் எவரும் என்றும் வெறுத்ததில்லை. அந்த

வெறுப்பு என் தந்தையையும் இளையோரையும் இவர் வஞ்சத்தால் களத்தில் வீழ்த்தியதிலிருந்து தொடங்குகிறது. பல லட்சம் மக்களை வெறும் தசைக்குப்பைகளாக அள்ளியிட்டு அழித்ததில் வளர்கிறது. அதன் பின்னரும் அறத்தை நாட்டுகிறேன் என அவர் கொண்டிருக்கும் பாவனை கண்டு பேருருக் கொள்கிறது. தன் சொல் நிலைகொள்ளவேண்டும் என்பதற்காக தன் குருதியினரையும் தன் நகரையும் அழித்துக் கடந்துசெல்லும் ஆணவம் கண்டு அழுகி கெடுநாற்றம் கொள்கிறது.”

அவர் குரல் உடைந்தது. அழுகையில் வெடிக்கப்போகிறார் என எண்ணினேன். ஆனால் மூச்சிழுத்து தன்னை திரட்டிக்கொண்டார். “அனைத்துக்கும் அப்பால் என் சிற்றிளமைப் பருவத்தில் நெஞ்சில் நுழைந்து இசையென்றும் அழகென்றும் நிறைந்தமைக்காக, தெய்வமென்றால் இனிதென்று என்னை நம்பவைத்தமைக்காக அவரை வெறுக்கிறேன். இக்கசப்புடன்தான் என் உடல் சிதைநின்று எரியவேண்டும். இதுவே இங்கே நான் ஈட்டிய மெய்யறிதல்” என்றார். நான் பெருமூச்சுடன் உடல் தளர்ந்தேன். “இதை நீங்கள் அவரிடம் சொல்லலாம்” என்றார்.

“சொல்கிறேன், அரசி” என்றேன். “வாழ்நாளெல்லாம் உளம்கனிந்த மகளிர்ச்சொல்லையே கேட்டு வந்தவர். கௌரவ மகளிரும் பாண்டவ மகளிரும் சேர்ந்து அளித்த பழிச்சொற்களை கைகூப்பி அவர் பெற்றுக்கொண்டு நின்றிருப்பதையும் கண்டேன். அவற்றையும் அவர் மலர்மாலையெனவே சூடிக்கொண்டார். இச்சொற்களும் அவர் நெஞ்சுக்கு அணிகலன் என்றாகலாம்” என்றேன். அரசி இறுகிய முகத்துடன் அமர்ந்திருக்க நான் எழுந்து வணங்கி விடைகொண்டேன்.

# கல்பொருசிறுநுரை - 17

## பகுதி மூன்று : ஒழியா நாற்களம் – 12

அரசே, நான் காளிந்தியன்னையை சந்திக்கச் சென்றபோது முற்றிலும் உளம் ஓய்ந்திருந்தேன். எண்ணுவதற்கு ஒன்றுமில்லை என்னும் நிலை. குருக்ஷேத்ரப் போருக்குப் பின் பல நாட்கள் அந்நிலையில் இருந்திருக்கிறேன். அன்னை தங்கியிருந்த தவச்சாலை நகரில் இருந்து தொலைவில் பாலைநிலத்திற்கு நடுவே இருந்தது. அங்கே அவருக்குத் துணையாக ஒரு சேடிப்பெண் மட்டுமே இருந்தாள் என்று என்னிடம் தேரோட்டி சொன்னான். அவள் அன்னை பிறந்த யமுனைக்கரை படகோட்டிக் குலத்திலிருந்து வந்தவள். அவளுக்கும் துவாரகையின் மொழி நாப்படவில்லை. என்னை பெரும்பாலும் கையசைவினாலேயே ஆற்றுப்படுத்தினாள்.

உள்ளே அவள் அழைத்துச் சென்றபோது அங்கே ஓர் அமைதியின்மையை உணர்ந்தேன். சேடி உள்ளே சென்றபின் மீண்டு வந்து "செல்க!" என சொன்னபோது நான் கதவைக் கடந்து அப்பால் சென்றேன். அது ஓர் அறையாக இருக்கும் என எண்ணியிருந்தேன். ஆனால் வெளியே திறக்கும் வாயில் அது. அப்பால் திறந்த மண்வெளி அலையலையாகப் பெருகி வான் நோக்கி சென்றிருந்தது. வானம் முகிலற்ற நீலமென இறங்கி மண்ணில் படிந்திருந்தது. ஒரு மரம்கூட இல்லை, புதர்கள்கூட தொலைவில் சிறு கருந்துளிகள் எனத் தெரிந்தன. காற்று அங்கே அலைகொண்டிருந்தது. வலப்பக்கம் ஒரு கதவு சற்றே

திறந்திருந்தது. ஏனென்றறியாமல் அப்பாலிருந்து எவரோ என்னை நோக்கிக்கொண்டிருந்தார்கள் என்னும் பொய்யுணர்வு உருவாகியது, அதுவே அந்த அமைதியின்மையை உருவாக்கியது என உணர்ந்தேன்.

அன்னை ஒரு சிறு கல்பீடத்தில் அமர்ந்திருந்தார். அவர் அருகே இன்னொரு கல்பீடத்தில் சிறுகலத்தில் நீர். அவர் எளிய மரவுரி ஆடை அணிந்திருந்தார். தன் குடிக்குரிய கல்மணி மாலை, சங்கு வளையல்கள். அவருக்கு அகவையே மிகவில்லை என்று என் உள்ளம் மயங்கியது. நான் நெடுங்காலம் முன்பு கண்ட அதே தோற்றம். யமுனைக்கரையிலிருந்து உங்கள் கைபற்றி இந்நகரில் நுழைந்தபோதிருந்த அதே இளமை. அவர் சிறுமியுடையவை என மெலிந்த கைகளைக் கோத்து மடியில் வைத்துக்கொண்டார். நான் கண்ட எட்டு அரசியரில் அவரே பொலிவும் அழகும் கொண்டிருந்தார். முகத்தில் இளம்புன்னகை இருந்தது. விழிகள் நீண்டு கனவில் எனத் தோன்றின. காதல்கொண்ட கன்னியரில் தோன்றும் மிதப்பும் சோர்வும் அவரிடம் இருந்தது. பிறர் விழிகளை உணரும் நுண்ணுணர்வும் எவரையும் பொருட்படுத்தாத தனிமையும் கொண்டவர் போலிருந்தார்.

நான் வணங்கினேன். ஆனால் முகமன் என எச்சொல்லும் உரைக்கத் தோன்றவில்லை. அன்னை விழிகளால் அமரும்படி சொன்னார். நான் அமர்ந்தேன். அன்னையிடம் எவ்வண்ணம் எதை பேசுவதென்று தெரியவில்லை. என் உள்ளம் வெவ்வேறு சொற்களை எடுத்து நோக்கி சலித்து உதிர்த்துக்கொண்டிருந்தது. அவர் என்னிடம் ஒன்றும் சொல்லவில்லை. நான் அவரை நோக்கியபடி அமர்ந்திருந்தேன். பொழுது சென்றுகொண்டிருந்தது. அவர் என்னை மறந்துவிட்டவர்

போலிருந்தார். எத்தனை பொழுதானாலும் நாட்களோ ஆண்டுகளோ கடந்தாலும் அவ்வண்ணம் அங்கே இருக்க அவரால் இயலும் என்பதுபோல. நான் காலத்தை உணர்ந்தேன். உணரத்தொடங்கிய கணமே ஒன்று ஆயிரம் லட்சம் கோடி மடங்கென எடைமிகும் தன்மைகொண்டது காலம். எதிரே காலமேயான வெட்டவெளி.

நான் என் உடலை அசைத்து உள்ளத்தை மீட்டுக்கொண்டேன். "அரசி, நான் துவாரகையின் அரசரை சந்திக்கச் சென்றுகொண்டிருக்கிறேன்" என்றேன். அன்னை என்னை திகைப்புடன் ஏறிட்டுப் பார்த்தார். இளநங்கையின் விழிகள் என நான் மீண்டும் எண்ணிக்கொண்டேன். "இங்கிருக்கும் அத்தனை சிக்கல்களுக்கும் தீர்வு அரசர் இங்கே வருவதுதான் என்று தோன்றுகிறது. ஆகவே எட்டு அரசியரின் அழைப்புடன் அவரைத் தேடிக் கிளம்பலாம் என நினைக்கிறேன். ஏழு அரசியரும் ஓலை அளித்துள்ளனர். உங்கள் ஒப்புதலை நாடி வந்தேன்." அவர் விழிகளில் "என்ன?" என்பதுபோல் ஒரு மெல்லிய பதைப்பு. நான் "உங்கள் ஓலை ஒன்று தேவை, அரசி" என்றேன்.

அவர் "என்ன?" என்றார். இளநங்கையின் இனிய குரல். "நான் தொலைவில் எங்கோ இருக்கும் துவாரகையின் அரசரை தேடிச்செல்கிறேன். அவருக்கு உங்கள் செய்தி என ஏதேனும் தேவை" என்றேன். "செய்தியா?" என்று இழுத்தார். சிறுமியைப்போல என்று என் அகம் சொல்லிக்கொண்டது. "ஆம், அவர் இருக்குமிடம் எனக்கு தெரிந்துவிட்டது." அதை எண்ணிச் சொல்லவில்லை. ஆனால் அதுவே அவரை தொட்டெழுப்ப உகந்த சொல் என உடனே உணர்ந்தேன். அவர் எந்த வியப்பையும் உவகையையும் காட்டவில்லை. என்

சொல்லை அவர் உணர்ந்ததாகவே தெரியவில்லை. "அரசி, துவாரகையின் அரசர் கீழ்த்திசை நாடுகளில் ஒன்றில் இருக்கிறார். மேருமலையின் அடியில். இடம் தெரிந்துவிட்டது. நான் கிளம்பிக்கொண்டிருக்கிறேன்" என்று மீண்டும் சொன்னேன்.

அச்சொற்களும் அவரிடம் எந்த உணர்ச்சியையும் உருவாக்கவில்லை. அவர் புன்னகைத்தார். அதன் பொருள் எனக்கு புரியவில்லை. "தங்கள் சொற்களை நாடி வந்தேன். துவாரகையின் தலைவரிடம் நீங்கள் கூற விழைவது என்ன?" அவர் "என்ன?" என்றார். என்னுள் எரிச்சல் எழுந்தது. "அவரை நீங்கள் இங்கு வரும்படி அழைக்கலாம்" என்றேன். அவர் "ஏன்?" என்றார். அவர் என்ன எண்ணுகிறார் என்று தெரியாமல் திகைத்தேன். அவர் எழுந்துகொண்டு "இதோ வருகிறேன்" என்று உள்ளே சென்றார். நான் அமர்ந்திருந்தேன். அவர் திரும்ப வருவார் என்று எதிர்பார்த்தேன். நெடுநேரமாயிற்று. வெளியே காலமே இல்லாமல் கிடந்த வெறுநிலம் என்னை பொறுமையிழக்கச் செய்தது.

மேலும் சற்றுநேரம் நோக்கிவிட்டு எழுந்து வெளியே சென்றேன். அங்கே சேடி நின்றிருந்தாள். "அரசி உள்ளே சென்றார். நெடுநேரமாயிற்று" என்றேன். அவளால் நான் சொல்வதை புரிந்துகொள்ள முடியவில்லை. "அவரிடம் நான் பேசியது முழுமை பெறவில்லை. என் தூது முடியவில்லை. அவர் மீண்டும் வந்தாலொழிய என்னால் இங்கிருந்து செல்லமுடியாது" என்றேன். "ஆம்" என்றாள். நான் சினத்துடன் "சென்று அவர் அங்கே என்ன செய்கிறார் என்று பார். அவரை நான் எதிர்பார்த்திருக்கிறேன் என்று சொல். முடிந்தால் கூடவே

அழைத்து வா... புரிகிறதா?" என்றேன். "ஆணை" என்று சொல்லி உள்ளே சென்றாள்.

ஆனால் அவளும் நீண்டநேரம் வெளியே வரவில்லை. என்னால் அங்கே நிற்கமுடியவில்லை. முதுகை கூரிய ஈட்டி ஒன்று தொட்டுக்கொண்டிருப்பதுபோல அமைதியின்மை. திரும்பிச்சென்றுவிடலாமா என்று எண்ணிக்கொண்டிருந்தபோது வெளியே வந்தாள். என்னை அணுகி தயக்கத்துடன் "அரசிக்கு உங்களை சந்தித்த நினைவே இல்லை... அவர் அங்கே தன் பாவைகளுடன் விளையாடிக்கொண்டிருக்கிறார்" என்றாள். "பாவைகளுடனா?" என்றேன். "ஆம், பாவைகள் அல்ல, பூசனைச் சிலைகள்" என்றாள் சேடி. "எவருடைய சிலைகள்?" என்றேன். "அரசருடையவைதான். அவருடைய வெவ்வேறு அகவையைச் சேர்ந்த சிலைகள். மரப்பாவைகள், மண்பாவைகள், ஓவியத்திரைச்சீலைகள். அவர் அவற்றுடன் பேசி சிரித்து மகிழ்ந்திருக்கிறார்."

நான் ஒருகணம் எண்ணிய பின் "நன்று, நான் கிளம்புகிறேன்" என்றேன். "அவரை மீண்டும் அழைக்கமுடியும். இப்போது அவர் ஒரு பாவைக்கு அன்னமிட்டுக்கொண்டிருக்கிறார். அதை துயிலச்செய்துவிட்டார் என்றால் அவர் மீண்டுவிடுவார்" என்றாள். "வேண்டியதில்லை" என்று நான் சொன்னேன். "நான் வந்ததை அவர் மைந்தர்கள் கேட்டால் சொல்க!" என்றபின் வெளியேறினேன். திரும்பும் வழியில் மெல்ல மெல்ல நிலைமீண்டேன். அங்கே எழுந்த ஒவ்வா உணர்வு என்ன என்று தெளிவாகியபடியே வந்தது. அங்கே எவரோ இருக்கிறார்கள் என்னும் உணர்வை எனக்கு அளித்தவை காளிந்தியன்னையின் விழியசைவுகளும் மெய்ப்பாடுகளும். அங்கே அவரன்றி எவருமில்லை என்பதை நான் நன்கறிந்தும் இருந்தேன். அந்த

முரண்பாட்டில் திகைத்து நின்ற என் நுண்ணுணர்வு அளித்த ஒவ்வாமை அது.

நான் வெளியே வந்தபோது அங்கே காளிந்தியன்னையின் மைந்தர்களான சோமகனும் பத்ரனும் களிந்தவீரனும் நின்றிருந்தனர். நான் அவர்களை வணங்கினேன். பத்ரன் என்னிடம் "மூத்தவர் தங்களை சந்திக்க விழைந்தார்" என்றார். "நான் எவரையும் சந்திக்கும் நிலையில் இல்லை" என்றேன். "சுருதனிடம் கூறுக, நான் அன்னையிடமிருந்து ஓலை எதையும் பெறவில்லை, ஏழு ஓலைகளுடன்தான் கிளம்பவிருக்கிறேன் என்று!" அதை அவர்கள் எதிர்பார்த்திருந்தனர். சோமகன் என்னிடம் "அன்னை என்ன சொன்னார்?" என்றார். "எதையும் சொல்லும் நிலையில் இல்லை" என்றேன். "ஆம், அவர் அவ்வண்ணம்தான் இருக்கிறார். தந்தை இங்கில்லை என்பதுகூட அவருக்குத் தெரியவில்லை" என்றார் சோமகன்.

சுபாகுவும் சாந்தனும் அப்பாலிருந்து அருகணைந்தனர். "என்ன நடந்தது?" என்று சுபாகு கேட்டார். பத்ரன் "வழக்கம்போலத்தான்" என்றார். சுபாகு என்னிடம் "ஏழு அன்னையரும் முனைப்புடன் உள்ளனர், ஒவ்வொருவருக்கும் முதன்மைப் படைக்கலமும் ஊர்தியும் அவர்களின் அன்னையரே. நாங்கள் மட்டும் அன்னையிருந்தும் இல்லாதவர்களாக உணர்கிறோம். அங்கே அகத்தளத்தில் இருப்பவர் அன்னை அல்ல, வெறும் ஒரு பாவை" என்றார். பூர்ணநமாம்ஷுவும் விருஷனும் இடைநாழி வழியாக வந்தனர். "ஒருவேளை உங்களிடம் அன்னை பேசக்கூடும் என எண்ணினோம்" என்றார் சுபாகு. நான் "அவர் ஒருவரிடம் மட்டுமே பேசுகிறார்" என்றேன்.

சாத்யகி சொன்னான் "அரசே, இதோ ஏழு அன்னையரின் ஓலையுடன் வந்துள்ளேன். இவற்றை உங்கள் முன் படைக்கிறேன். இவை ஏழு மன்றாட்டுகள். இவற்றை நீங்கள் புறக்கணித்துவிடக்கூடாது. என்னுடன் எழுக! உங்கள் நகர்காக்க வருக!" இளைய யாதவர் அவனை நோக்கியபடி அமர்ந்திருந்தார். "உங்கள் முடிவை நீங்கள் உரைத்தாக வேண்டும், அரசே" என்றான் சாத்யகி. அவர் முகத்தில் எந்த மெய்ப்பாடும் இல்லை. வேறெதையோ எண்ணி மகிழ்ந்திருப்பவர் போலிருந்தார். அப்புன்னகை அவனை நிலைகுலையச் செய்தது. அவன் சொல்லிக்கொண்டிருந்த போதெல்லாம் அவர் அப்புன்னகையுடன்தான் இருந்தாரா? மெய்யாகவே அவன் அவற்றை அவரிடம் சொன்னானா? இல்லை, அவை அவனுள் எழுந்து ஒழுகிச் சென்று ஓய்ந்த சொற்பெருக்கு மட்டும்தானா?

தயை வந்து "வடநிலத்தாரே, வருகிறீர்களா?" என்று கூவினாள். அவளருகே நின்றிருந்த சிறுவன் "வடநிலத்தாரே!" என்று திருந்தாச் சொல்லில் அழைத்தான். மேலும் குழந்தைகள் சிரித்தபடி ஓடிவந்தன. அவை வடநிலத்தாரே என அழைப்பதையே ஒரு விளையாட்டு எனக் கொண்டன. அவர் எழுந்து அவர்களை நோக்கி சென்றார். தயை அவரைத் தொட்டுவிட்டு "நான்தான் தொட்டேன்" என்று கூவியபடி ஓடினாள். அவர் அவளைத் தொடர்ந்து ஓட மற்ற குழந்தைகள் கூச்சலிட்டு நகைத்தபடி சிதறி ஓடின. இயல்பாக அங்கே ஒரு விளையாட்டு தொடங்கிவிட்டது. அவர் அவர்களுடன் ஓடி கூச்சலிட்டு நகைத்து ஆடிக்கொண்டிருந்தார்.

சாத்யகி அந்தத் திண்ணையில் அமர்ந்தபடி அவரை பார்த்துக்கொண்டிருந்தான். அவர் அவன் அறிந்த இளைய யாதவர் அல்ல. முற்றிலும் வேறொருவர். அவரை அங்கிருந்து அழைத்துச் சென்று அவன் அடையப்போவதுதான் என்ன? துவாரகையில் தன் மைந்தர் மைந்தருடன் அவர் இதைப்போல விளையாடிக்கொண்டிருக்கக் கூடும். அவரிடமிருந்து விடைபெற்றுக் கிளம்புவதே உகந்தது என எண்ணினான். ஆனால் அவரிடமிருந்து ஒரு சொல்லேனும் பெற்றாகவேண்டும். துவாரகையில் அவனை எதிர்பார்த்திருகும் அரசியருக்கு சொல்வதற்காக. அவர்களை அவர் முற்றிலும் துறந்துவிட்டார் என்று அறிவது அவர்களின் நிகர்ச்சாவு.

அவர் விளையாடி முடித்து வருவார் என அவன் எதிர்பார்த்தான். ஆனால் குழந்தைகள் விளையாடிச் சலிக்கவே இல்லை. இயல்பாக அவை ஒரு விளையாட்டிலிருந்து இன்னொன்றுக்கு சென்றுகொண்டிருந்தன. பின்னர் அவன் அந்தத் திண்ணையிலேயே படுத்துக்கொண்டான். முந்தையநாள் முதல் தொடர்ச்சியாக அவன் பேசிக்கொண்டிருந்தவற்றை மீண்டும் எண்ணிக்கொண்டான். அவை எங்கோ எனத் தெரிந்தன. அவன் விழித்துக்கொண்டபோது அந்தியாகிவிட்டிருந்தது. அவன் வெளியே வந்து அங்கே நின்றிருந்த முதுமகளிடம் "வடவர் எங்கே?" என்றான். "குழந்தைகளுடன் ஓடையில் நீராடுகிறார்" என்று அவள் சொன்னாள். "சற்று நேரத்தில் உணவருந்த வந்துவிடுவார்."

இருண்டபின் கூச்சலிட்டபடி குழந்தைகளும் இளைய யாதவரும் வந்தார்கள். இளைய யாதவர் கையில் தாமரை மலர்களை வைத்திருந்தார். அவர்கள் கூவியபடியே முற்றத்தைக் கடந்து சென்றார்கள். அங்கே தென்மேற்கு

மூலையில் ஏழன்னையரின் ஆலயப்பதிட்டை இருந்தது. ஏழு சிறு உருளைக்கற்களாக அன்னையர் நிறுவப்பட்டிருந்தார்கள். சிற்றகல் ஒன்று மணிச்சுடர் கொண்டிருந்தது. குழந்தைகள் மலர்களை அங்கே வைத்து வணங்கின. அப்போதும் அவை ஒன்றோடொன்று பூசலிட்டுக்கொண்டும் சிரித்துக்கொண்டும் இருந்தன.

அன்னையொருத்தி குழந்தைகளை உணவுக்கு அழைத்தாள். அவர்கள் உணவுண்ணும்பொருட்டு சென்று அமர்ந்தனர். ஈர உடையுடன் இளைய யாதவரும் உண்பதற்காக அமர்ந்தார். அந்திக்குப் பின் உணவுண்பதில்லை, ஈர ஆடையுடன் உண்ண அமர்வதில்லை என ஊர்களில் கொண்டிருந்த அத்தனை நெறிகளும் அங்கே எவராலும் கடைபிடிக்கப்படவில்லை. திண்ணையில் மணையில்லாமல் அமர்ந்து கொப்பரைகளிலும் தொன்னைகளிலும் தேன் சேர்த்து சமைக்கப்பட்ட பழக்கஞ்சியை அவர்கள் அருந்தினர். பேசிக்கொண்டும் சிரித்துக்கொண்டும் உண்டு முடித்தனர். குழந்தைகள் கலங்களை வழித்து நக்கின. இளைய யாதவரும் குழந்தைபோல நக்குவதை அவன் பார்த்தான்.

ஒரு குடுவையில் சாத்யகிக்கும் உணவு கொண்டுவரப்பட்டது. அவன் இளைய யாதவரை பார்த்தபடியே அதை உண்டான். அவர் அவனை மறந்ததுபோல் தெரிந்தார். உண்டபின் அன்னையர் குழந்தைகளை உள்ளே கொண்டுசென்றனர். சிறுகுழந்தைகள் உண்ணும்போதே சரிந்து துயில்கொள்ளத் தொடங்கிவிட்டிருந்தன. இளைய யாதவர் எழுந்து கைகழுவிவிட்டு வந்தார். அவன் அவரை நோக்க அவர் புன்னகைத்தபடி “நல்ல விளையாட்டு... இன்று நிலவில்லை. இருந்திருந்தால் இரவிலும் விளையாடியிருக்கலாம்” என்றபடி

மேலிருந்து பாயை எடுத்துப் போட்டார். அதில் மல்லாந்து படுத்துக்கொண்டார். அவன் அருகே அமர்ந்திருந்தான். அவர் அவனிடம் ஒன்றும் பேசவில்லை.

"அரசே" என அவன் அழைத்தான். அவர் ஒருக்களித்து "சொல்" என்றார். "நான் கோரியவற்றுக்கு நீங்கள் மறுமொழி உரைக்கவில்லை" என்று அவன் சொன்னான். அவர் "எவற்றுக்கு?" என்றார். "நான் கொண்டுவந்த ஓலைகளுக்கு..." என்றான் சாத்யகி. "ஆம், ஆனால் அவற்றை என்னால் உளம்வாங்கவே முடியவில்லை. உகந்ததை நீயே செய்துகொள்" என்றார் இளைய யாதவர். "நீங்கள் என்னுடன் வரவேண்டும், அரசே" என்றான் சாத்யகி. அவர் ஒன்றும் சொல்லவில்லை. முகத்தில் அந்த இளமைந்தருக்குரிய புன்னகையே இருந்தது. துயிலில் இமைசரிவதை காணமுடிந்தது. "உங்கள் குடி காக்க, கொடிவழியினர் அழியாமல் தடுக்க, நகரை மீட்க நீங்கள் வந்தாகவேண்டும், அரசே" என்றான் சாத்யகி. அவர் இமைகள் மூடிக்கொண்டன. மூச்சின் ஓசை கேட்டது.

"அரசே" என்று அவன் அழைத்தான். மீண்டும் உரக்க "அரசே" என்றான். இளைய யாதவர் திடுக்கிட்டு விழிதிறந்து "சொல்க!" என்றார். "நான் கிளம்பவேண்டும்" என்றான். "ஆகுக!" என்றார் இளைய யாதவர். "எனக்கு நீங்கள் அளிக்கும் மறுமொழி என்ன?" அவர் புன்னகையுடன் "நான் எதையுமே உளம்கொள்ளவில்லை. ஆகவே எனக்கு சொல்வதற்கும் ஏதுமில்லை..." என்றார். "உங்களை எண்ணி தவமிருக்கும் அரசியருக்கு நீங்கள் உரைப்பதென்ன? ஒரு சொல்லேனும் கூறுக!" என்று சாத்யகி சொன்னான். அப்போது அவன் குரல் உடைந்ததைக் கேட்டு அவனே உளமுருகினான். "அவர்களை

நீங்கள் முற்றாகக் கைவிடலாகாது, அரசே. அவர்கள் அத்தகு பிழை என எதையும் செய்ததில்லை.”

“நான் எவரையும் கைவிடவில்லை” என்றார் இளைய யாதவர். “ஆனால் அவர்களிடம் சொல்வதற்கு என்னிடம் ஒரு சொல்லும் இல்லை.” சாத்யகி “அரசே” என்றான். அவர் “நான் இங்கே வந்தபின்னர்தான் பொருளை ஒளித்து வைத்து மீண்டும் கண்டுபிடிக்கும் விளையாட்டை ஆடத்தொடங்கினேன். ஒரு பொருளை இந்தப் படுகையில் எங்கேனும் ஒளித்துவைக்கவேண்டும். அதை தேடிக் கண்டுபிடிப்பவர் வென்றார். காலடிகளைக்கொண்டு கண்டுபிடிக்கலாம். ஆனால் சித்ரன் பின்னோக்கி நடந்துசென்று ஒளித்துவைத்தான் ஒருமுறை... சில குழந்தைகள் மரம் வழியாகவே செல்கின்றன. மிகக் கடினம். ஒன்றை ஒளித்துவைத்தவர் அதை நினைவில் வைத்திருப்பார் என்றால் எப்படியும் கண்டுபிடிக்கலாம். தேடும்போது அவர் முகத்தை நோக்கிக் கொண்டிருந்தாலே போதும். சிறுகுழந்தைகள் உடனே மறந்துவிடுவதுண்டு. அவர்களே மறந்த இடத்தை நாம் சென்றடையவே முடியாது” என்றார்.

சாத்யகி தலையசைத்தான். “இன்னொரு நல்ல விளையாட்டு இங்கே உள்ளது. சிறுகுச்சிகளை அள்ளி கொட்டவேண்டும். பிற குச்சிகள் அசையாமல் ஒவ்வொரு குச்சியாக எடுக்கவேண்டும். என்னால் எடுக்க முடிந்ததே இல்லை. அவ்விளையாட்டில் எந்த ஆணும் வென்று நான் பார்த்ததே இல்லை. ஆனால் பெண்குழந்தைகள் மிகப் பொறுமையாக அவற்றை எடுத்துவிடுகின்றன. தயை மிக எளிதாக எடுப்பாள். அவளிடம் அவள் எப்படி எடுக்கிறாள் என்று கேட்டேன். மற்ற குச்சிகளிடம் உங்களை தொடவில்லை, தூங்குங்கள் தூங்குங்கள் என்று

சொல்லிக்கொண்டே எடுப்பேன் என்றாள். நாம் சொன்னால் குச்சிகள் கேட்குமா என்றேன். நான் சொன்னால் அவற்றுக்குக் கேட்கிறதே என்றாள்" என்றார் இளைய யாதவர்.

"இங்கே அவ்வளவு விளையாட்டுக்கள் உள்ளன... விளையாடி முடிப்பதற்குள் இளமை கடந்துவிடும். இளமை முடியாமல் இங்கே வாழமுடிந்தால் அதுவே இன்பம்." அவர் காலை ஆட்டியபடி புன்னகையுடன் கூரையை பார்த்துக்கொண்டிருந்தார். உடலெங்கும் உவகை நிறைந்திருந்தது. "இன்னொரு விளையாட்டு உண்டு. ஒரு கூழாங்கல்லை நம்மிடம் தருவார்கள். அதில் ஒரு சிறிய அடையாளம் வைக்கப்பட்டிருக்கும். அதே போன்ற அடையாளம் பொறித்த இன்னொரு கூழாங்கல்லை காட்டுக்குள் வீசிவிடுவார்கள். அதை நாம் கண்டடைய வேண்டும். விதைகள், இறகுகள் அனைத்தும் ஒன்றே எனத் தோன்றும். கூழாங்கல் மட்டும் ஒன்று பிறிதுபோல் இல்லை. அந்தக் கூழாங்கல்லைக் கண்டடைகையில் நாம் அடையும் உவகை..."

அவர் புரண்டுபடுத்து அவனிடம் "நாம் இதையெல்லாம் துவாரகையிலோ மதுராவிலோ மதுவனத்திலோ விளையாடுவதுண்டா?" என்றார். "இல்லை" என்று சாத்யகி சொன்னான். "ஏன்?" என்று அவர் கேட்டார். "அங்கே நாம் ஆடும் விளையாட்டுக்களெல்லாம் சற்று முதிர்ந்தால் போர் என ஆகக்கூடியவை." அவர் புன்னகையுடன் காலை ஆட்டியபடி "ஆம், போர். அதுகூட நல்ல விளையாட்டுத்தான்" என்றார். அவன் அவரையே பார்த்துக்கொண்டிருந்தான். காலில் ஆட்டம் நின்றது. இமைகள் சரிந்து மூடிக்கொண்டன. அவர் துயில்கொள்ளலானார். மூச்சொலியை அவன் கேட்டுக்கொண்டிருந்தான். நெடும்பொழுது. வெளியே இருள்

செறிந்துகொண்டிருந்தது. ஊர் முற்றிலும் இருளுக்குள் ஆழ்ந்து மறைந்திருந்தது.

சாத்யகி எழுந்து சென்று எண்ணை விளக்கை திரியிழுத்து தாழ்த்தினான். இருட்டில் அக்குடிலும் இல்லையென்றானது. வெட்டவெளியில் படுத்திருப்பது போன்ற உணர்வு. ஆனால் வெளியே ஒளித்துளிகள் அலைந்தன. அங்கே நிறைந்திருந்த ஈரம் மின்மினிகளுக்கு மிக உகந்தது என அவன் கண்டிருந்தான். அவை கூட்டம் கூட்டமாக கிளம்பி இருளை ஊடுருவிக் கிழித்து சுழன்று பறந்து ஒளிக்கோடிகளாகி வலையென்றாகி விழிநிறைப்பதை முந்தைய நாளும் கண்டிருந்தான். கதவினூடாக ஒரு மின்மினி உள்ளே வந்தது. எங்கே அமர்வதென்று எண்ணுவதுபோல சுழன்றது. பிறிதொன்று, மேலும் ஒன்று. மின்மினிகள் அறைக்குள்ளும் பரவின. மின்மினிகளின் ஒளியாலான மெல்லிய மிளிர்வு. நீலமா சிவப்பா என மாறிமாறி மாயம் காட்டுபவை.

அவன் திரும்பியபோது ஒருகணம் உளம் அதிர்ந்தான். அவனருகே படுத்திருந்த இளைய யாதவரின் முகம் சிறுவனுடையது. அது கனவா உளமயக்கா என ஐயம்கொண்டு அவன் விழிமூடி திறந்து நோக்கினான். அவர் முகம் ஏழு அகவைகொண்ட சிறுவனின் முகமாகவே தோன்றியது. விரிந்த மென்சிரிப்பு அவ்வண்ணமே நிலைத்திருந்தது. அவன் நோக்கிக்கொண்டே அமர்ந்திருந்தான். பின்னர் எழுந்து மெல்ல வெளியே வந்தான். தான் கொண்டுவந்த ஓலைகளையும் கணையாழியையும் திண்ணையில் பார்த்தான். அவற்றை மீண்டும் எடுத்துக்கொண்டான். முற்றத்தில் இறங்கி காட்டை நோக்கி நடந்தான்.

நீரோடைகளின் ஓசையும் காட்டில் காற்று பெருகிச்செல்லும் முழக்கமும் கேட்டுக்கொண்டிருந்தன. வானம் விண்மீன்கள் நிறைந்து பொலிந்தது. கீழே மின்மினிகளின் ஒளி விழியை கூசச்செய்யும் அளவுக்கு நிறைந்திருந்தது. அனல்பொறிகள் என, கண்கள் என. மின்மினிகளுக்கு அத்தனை ஒளி உண்டு என அவன் முன்பு அறிந்ததே இல்லை. அவன் ஓடையைக் கடந்து காட்டை வகுந்துசென்ற பாதையை அடைந்தான். அவனுடைய மணம் உணர்ந்து அவன் புரவி குரல் கொடுத்தது. அவன் சீழ்க்கை அடித்து அதை அழைத்தான். இரு மின்மினிகள் புரவியின் விழிகளாயின. அது காலடியோசை வேறெங்கோ கேட்க அவனை நோக்கி வந்தது. அவன் அதன் கழுத்தை தடவினான். அதை அழைத்துக்கொண்டு தன் சேணம் மாட்டப்பட்டிருந்த மரத்தை நோக்கி நடந்தான்.

# கல்பொருசிறுநுரை - 18

**பகுதி நான்கு : அலைமீள்கை – 1**

எந்தையே, மானுடர் ஒவ்வொருவரும் தங்கள் கனவுகளில் எந்த அளவு தனித்தவர்கள் என்பதைப்போல் எண்ணுந்தோறும் பெருகும் விந்தை எதுவுமில்லை. என் கனவுகளில் எப்போதும் மானுடர் நிறைந்திருக்கிறார்கள். பிறந்தது முதல் துவாரகையிலேயே இருந்தவன் நான். போருக்கென கூட அந்நகரின் எல்லை கடந்து சென்றதில்லை. துவாரகையில் தோள்முட்டி உடல்தடுக்கி குரல்பின்னி வாழும் நெரிசல்களிலேயே இயல்பாக என்னை உணர்ந்திருக்கிறேன்.

சூழ்ந்திருக்கும் பெரும்பாலைநிலங்களில் வேட்டைக்கோ விளையாட்டிற்கோ செல்லும்போதுகூட உடன்பிறந்தார், ஏவலர், காவலர்கள், வழிகாட்டிகள் என்னை சூழ்ந்திருந்தார்கள். ஆகவே என் கனவுகளில் எப்போதும் நூறு முகங்கள், ஆயிரம் விழிகள் உடனிருந்தன. ஆயினும் ஒவ்வொரு முறையும் நான் தன்னந்தனியனாக என்னை உணர்ந்தேன்.

எத்தனை பேசினாலும் என் சொற்களை எவரும் செவிகொள்ளவில்லை என்றும், எங்கு இருந்தாலும் என்னை எவருமே பார்க்கவில்லை என்றும் தோன்றியது. நான் இங்கிருக்கிறேன், இவ்வண்ணம் இருக்கிறேன் என்பதை கூவி அறிவிப்பதே எனது கனவுகளில் எப்போதும் நான் செய்துகொண்டிருந்தது. கனவுகளில் அனைவருக்கும் அத்தனை தனிமை ஏன் வருகிறது? மெய்யாகவே அத்தனை பேரும் ஆழத்தில் தனித்தவர்கள்தானா? உறவுகள் என்பவை அனைத்துமே ஜாக்ரத்தில் மட்டும் நிறைந்திருக்கின்றனவா? நீர்ப்பாவைகள் நீரின் மேற்பரப்பை மட்டுமே சென்றடைகின்றன என்று ஒரு சூதர்சொல் உண்டு. ஆழம் அவற்றை அறிவதில்லையா? அன்றி பிறருடன் உறவாடி நாம் இயற்றுவன அனைத்தும் ஜாக்ரத்திலேயே முடிந்து, எஞ்சுவன மட்டுமே கனவிலும் ஊழ்கத்திலும் துரியத்திலும் எழுகின்றனவா?

தன்னந்தனியறையில் தானென்று மட்டுமே உணர்ந்திருக்கும் ஆத்மா தன்னை தான் காண்பதே கனவு நிலை என்பார்கள். எந்தையே, என் கனவில் எழுந்து என்னுடன் உரையாடி உடனிருந்த ஒருவர் தாங்கள் மட்டுமே. அதுவும் நினைவறிந்த முதல் இரண்டே தருணங்கள்தான். அறியாச் சிற்றிளமையில் ஒருமுறை நான் துவாரகையில் கற்பாலம் ஒன்றிலிருந்து நீருக்குள் தவறி விழுந்தேன். அன்று தாங்கள் ஒரு நீண்ட

பயணத்தில் இருந்து மீண்டுவந்து அதை கொண்டாடும்பொருட்டு எண்பது மைந்தரையும் திரட்டி கடலாட அழைத்துச்சென்று கொண்டிருந்தீர்கள். மைந்தரும் தாங்களும் மட்டுமே இருந்தமையால் எவரும் எவரையும் தனித்தறியவில்லை. நீங்களே எண்பது வடிவு கொண்டுவிட்டதுபோல் நாங்கள் இருந்தோம்.

நாங்கள் களியாடி, கூச்சலிட்டு, ஒருவரையொருவர் துரத்தியும் தள்ளியும் விளையாடியபடி உங்களுக்குப் பின்னால் வந்தோம். நான் கால் வைத்த கற்படி வழுக்கி என்னை சரித்து பின்னால் தள்ளியது. கொந்தளித்து எழுந்த அலை ஒன்றின்மீது நான் விழுந்தேன். மாபெரும் நாவென அது என்னைச் சுருட்டி உள்ளே எடுத்துச்சென்றது. எடைமிக்க நீர் வந்து என்னை சூழ்ந்துகொண்டது. என் மேல் அடுக்குகளாக ஏறி ஏறி அமைந்தது. என் உடலை எட்டுத் திசையிலிருந்தும் கவ்வி அழுத்திச் சுருக்கி சிறு விதை என ஆக்கியது. நீரை தண்மை என்று, ஒளி என்று, அலை என்று அறிந்திருக்கிறேன். அது கல்லென்று, இரும்பென்று எடை கொண்டது என்பதை அப்போதுதான் உணர்ந்தேன்.

அது என்னை நெரித்து அழுத்தியது. என் உடலுக்கு உள்ளே இருந்த அனைத்தும் பிதுங்கி வெளிவந்துவிடுவதைப்போல. என் கால்கள் துழாவித் துழாவி தவிக்க ஆழத்திற்குள், மேலும் ஆழத்திற்குள் சென்றுகொண்டிருந்தேன். நான் அறிந்த அனைத்தும் தனித்து பிரிந்து குமிழிகளாகி விரிந்து மேலே சென்றன. நான் அறிந்து என்னுள் நுரைத்துக்கொண்டிருந்த ஒவ்வொன்றும் கொப்பளித்து மேலெழுந்து வந்தன. அன்னை முகம் தெளிந்தது. “அன்னையே!” என்று நான் அலறிய இறுதிச்சொல் அவ்வெடையில் நசுங்கி உடைந்தது.

அப்போது மேலிருந்து ஒரு கை நீண்டு வந்து என் குழலைப் பற்றியது. உந்தி என்னை மேலே தூக்கினீர்கள். நான் நீர்ப்பரப்பைப் பிளந்து எழுந்து வந்து வாய் திறந்து வெறிகொண்டு மூச்சை அள்ளி இழுத்து நெஞ்சில் நிரப்பிக்கொண்டேன். என் நெஞ்சிலும் வயிற்றிலும் நிறைந்திருந்த நீரை குமட்டி இருமுறை உமிழ்ந்தேன். முதல்முறை அது குருதிபோல் சுவைத்தது. பின் உப்பென்றாயிற்று. கைகளையும் கால்களையும் வீசி உந்தி எழுந்து கரையோரப்பாறை ஒன்றை பிடித்தேன். அதன் விளிம்பை காலால் உதைத்து என்னை பாலம் நோக்கி தூக்கிக்கொண்டு வருவதற்குள் என் உடன்பிறந்தார் என்னை மேலே தூக்கினார்கள்.

உடன் நீந்தி வந்து மேலேறி அருகமைந்து நகைத்து "நன்று, இப்போது கடலையே அறிந்துவிட்டாய்" என்று என்னிடம் சொன்னீர்கள். நான் தங்களை நோக்கிக்கொண்டிருந்தேன். தங்கள் முகம் அந்த ஆழத்தில் என்னை நோக்கி வந்த கணம் அப்போதுதான் எனக்கு நினைவில் எழுந்தது. தந்தையே, அக்கடலின் முகமாக இருந்தீர்கள். நீலப் பேருரு போன்று இருந்தீர்கள். உங்கள் தலையில் அந்தப் பீலி விழி திறந்திருந்தது. விழிகள் இரு மலர்களென விரிந்திருந்தன. அனைத்தையும் உண்ணத் திறந்தது போலவோ அனைத்தையும் உண்டு புன்னகைகொண்டது போலவோ உங்கள் செவ்விதழ் வாய்.

நான் உங்களை ஒரு நடுக்குடன் நோக்கிக்கொண்டிருந்தேன். "தந்தையே, நீங்கள் யார்?" என்று கேட்க விழைந்தேன். "ஏன் இங்கு இவ்வண்ணம் விளையாடிக்கொண்டிருக்கிறீர்கள்?" ஆனால் எனக்கு உங்களை விழி தூக்கி பார்க்க அச்சம்

எழுந்தது. தலை தாழ்த்தி அமர்ந்திருந்தபோது உடல் நடுக்கு கொண்டது. என்னை தூக்கி அமரச்செய்தனர். தலைதுவட்டினர். கைகளை உரசினர். இல்லம் திரும்பலாம் என்று மூத்தவர் சொன்னார். "இல்லை, இன்றே அவன் கடலாடவேண்டும். இல்லையேல் இனி ஒருபோதும் அவனால் கடலை தொடமுடியாது" என்றீர்கள்.

"கடலில் இறங்கு" என்றீர்கள். நான் நடுநடுங்கி அமர்ந்திருந்தேன். கடலில் பாய்ந்து நீந்தியபடி "வா" என்று கைவிரித்தீர்கள். நான் உங்களையே பார்த்துக்கொண்டிருந்தேன். "வா! வா!" என்றீர்கள். நான் உங்களை நோக்கி பாய்ந்தேன். நீங்கள் சிரித்தபடி விலகிச் சென்றீர்கள். என்னை அலை ஒன்று தூக்கி மேலெழுப்பியபோது அப்பால் இன்னொரு அலைமேல் உங்களை கண்டேன். அந்த அலையில் இருந்து பாய்ந்து உங்களை நோக்கி நீந்தி வந்தேன். உங்கள் சிரிப்பை பார்த்துக்கொண்டிருந்தேன். அலைகளை தாவிக்கடந்து உங்களை நோக்கி நீந்தினேன். அருகணைந்தும் விலகியும் என்னுடன் அலையாடினீர்கள்.

அன்று அரண்மனைக்கு மீண்ட பின்னர் நீரில் விழுந்ததை மட்டும் அன்னையிடம் சொன்னேன். "அவர் உடனிருக்க உனக்கென்ன ஆகும்?" என்றார். நான் நீரில் விழுந்தது அவருக்கு எந்த அச்சத்தையும் அளிக்கவில்லை. மேலும் நீர் அருகே செல்லலாகாதென்றோ, எண்ணம் சூழ்ந்தே எதுவும் இயற்றவேண்டும் என்றோ அன்னையர் சொல்லும் எந்த எச்சரிக்கையும் அவர் சொல்லவில்லை. நான் அதை விந்தையாகவே உணர்ந்தேன். தங்களை ஆழத்தில் பார்த்த அக்காட்சியை எவரிடமும் கூறவில்லை. அதை எனக்குள் நானே வளர்த்துக்கொண்டேன்.

பின்னர் அது மறைந்தது. நான் எண்ணி மீட்டு எடுக்க முயலும்தோறும் அக்காட்சி மறைந்து அதை நான் மாற்றியமைத்துக்கொண்ட ஒரு வடிவமே என்னில் எழுந்தது. அது முற்றிலும் செயற்கையானது என அறிந்திருந்தேன் என்பதனால் உளக்கிளர்ச்சியையும் அளிக்கவில்லை. ஆனால் அவ்வண்ணம் ஒன்றை உருவாக்காமலிருக்கவும் என்னால் இயலவில்லை. பிறிதொரு நாள் எனக்கு காய்ச்சல் வந்தது. என் உடலில் அனல்பரவ மூச்சு எடைகொண்டு நீண்ட திரிகளாக மாறி மூக்கையும் நெஞ்சையும் அடைத்து இழுத்துக்கொண்டு அதிர்ந்தது. அந்த இரவில் அரைத்துயில் இருளில் என் நெஞ்சில் மேல் ஏறி அழுத்தியது. என் உடல் திறந்து இருளில் கரைந்து மறைந்துவிடுமென நான் உணர்ந்த கணத்தில் என் அருகிலிருந்து நீங்கள் கைபற்றி மேலே தூக்கினீர்கள்.

அதே தருணம் மீண்டும் நிகழ்ந்தது. அன்று கண்ட உங்கள் முகத்தை மீண்டும் நான் கண்டேன். அக்கனவு என்றும் என்னுடன் இருந்தது. எவருடனும் நான் பகிர்ந்துகொண்டதில்லை. தன்னந்தனியாக அமர்ந்து நான் கண்ட கனவு. நீண்ட நாட்களுக்குப் பின் மீண்டும் ஒருமுறை உங்களை கனவில் கண்டேன். இம்முறை கனவு கண்டு எழுந்தமர்ந்தபோது நான் எதையும் அறிந்திருக்கவில்லை. எனினும் அனைத்தையும் உணர்ந்துகொண்டிருந்தேன். அதன்பின் கிளம்பி இங்கே தங்களை பார்க்கவந்தேன்.

சத்யபாமையின் பத்து மைந்தர்களில் எட்டாமவனாகிய பிரதிபானு இளைய யாதவரை வணங்கி சொன்னான். “நீண்ட அலைவுக்குப் பின் வழிகண்டேன். நெடும் பயணம் முடிந்து வந்துள்ளேன். தந்தையே, என் சொற்களை உங்களிடம் சொல்வதனூடாகவே நான் என்னை

வகுத்துக்கொள்ளவேண்டும்." மந்தரத்தின் நடுவே அமைந்த சிறுகுடிலில் முகப்புத் திண்ணையில் இளைய யாதவர் மென்கை குடிகொண்ட உதடுகளுடன் அவன் சொற்களை கேட்காதவர் போலவும், அவனை நன்கறிந்தவர் போலவும் அமர்ந்திருந்தார்.

தந்தையே, சில நாட்களுக்கு முன் அங்கே துவாரகையில் மூத்தவர் பானு தன் இளையவர் அனைவரையும் அவைக்கு அழைத்திருந்தார். மத்ரநாட்டு அரசி மைந்தர்கள் யாதவர்களுடன் சேர்ந்து செயல்பட முடிவெடுத்திருக்கும் செய்தியை முன்னரே அறிந்திருந்தேன். எச்செய்தியும் எங்களுக்கு உடனடியாக வந்துசேரும், எச்செய்தியும் எவராலும் உறுதிப்படுத்தப்படாது. அதன் பொருட்டு ஓர் உண்டாட்டு என்று எனக்கு சொல்லப்பட்டது. அவ்வண்ணம் ஒரு உண்டாட்டு நிகழ்த்துவது யாதவர்கள் வல்லமை கொண்டிருக்கிறார்கள் என்னும் செய்தியை பிறருக்கு உணர்த்துவதற்கு இன்றியமையாதது என்று மூத்தவருக்கு எவரோ சொல்லியிருந்தார்கள். எங்களுக்கான அழைப்பு மூத்தவர் சுபானுவிடமிருந்து வந்திருந்தது.

துவாரகையின் அரண்மனையில் நாங்கள் காத்திருந்தோம். பெரிய கூடத்தில் அமர்ந்திருக்கையில் நிகழப்போவதென்ன என்று ஒருவரோடொருவர் தாழ்ந்த குரலில் பேசிக்கொண்டோம். ஒவ்வொருவரும் அறிய விரும்பினோம், அறிந்திருக்கிறோம் என்று காட்டவும் விரும்பினோம். அப்போது சிற்றமைச்சர்கள் வந்து வரவறிவித்தனர். நாங்கள் எழுந்து

நின்றோம். லக்ஷ்மணையின் மைந்தர்கள் எண்மர் அங்கு வந்தனர். நாங்கள் முகமன் உரைத்து வரவேற்று அமரச்செய்தோம். அவர்களைப் பார்த்து நெடுங்காலமாயிற்று என எண்ணிக்கொண்டோம். நெடுங்காலமொன்றும் ஆகவில்லை, மிக அண்மையில்தான் கண்டோம் என்று நினைவுகூர்ந்தேன். ஆனால் உள்ளத்தால் அகன்றுவிட்டிருந்தனர். எல்லா அகல்வையும் நம் அகம் காலமென்றும் தொலைவென்றும் ஆக்கிக்கொள்கிறது.

காத்ரவான், பலன், பிரபலன், ஊர்த்துவாகன், மகாசக்தன், சகன், சிம்மன், அபராஜித் ஆகியோர். அவர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியான உடல்மொழியும் முகமெய்ப்பாடும் கொண்டிருந்தனர். ஒற்றை உணர்வையும் வெளிப்படுத்திக்கொண்டிருந்தனர். அவர்களின் மூத்தவர் பிரகோஷனும் அவருடைய மதிசூழாளரான ஓஜஸும் மட்டும் வரவில்லை. எண்மரும் அங்கு வரும் வரை தங்கள் பணிகள் குறித்து ஐயம் கொண்டிருந்தனர். மூத்தவர் செய்வதென்ன என்று அறியாமலும் இருந்தனர். பிரகோஷன் அம்முடிவை எடுத்திருந்தார். ஆனால் அதை அவர்களுக்கு விளக்கியிருக்கவில்லை. அவ்வழக்கமே அவர்களிடம் இல்லை. உண்மையில் சற்றேனும் சூழ்நிலையை விளக்கும் வழக்கம் பிரத்யும்னனின் அவையில் மட்டுமே இருந்தது.

மத்ரநாட்டரசி லக்ஷ்மணையின் மைந்தர் முதலில் ருக்மிணியின் மைந்தர் பிரத்யும்னனுடன் இணைந்திருந்தனர். பின்னர் அங்கிருந்து சாம்பனுடன் இணைந்தனர். தங்களை ஷத்ரியர்கள் என முன்னிறுத்தும் பொருட்டு அவர்கள் பிரத்யும்னனை நாடினர். ஆனால் பிரத்யும்னனின் அவையில் அவர்கள் சிறுமை அடைந்தே இருந்தனர். அவர்கள்

வரவேற்கப்பட்டனர், கொண்டாடப்பட்டனர். ஆனால் அவர்கள் கூறும் கருத்துக்களை எவரும் செவி கொள்ளவில்லை. அவர்கள் கூறும் கருத்துக்களை சொல்லி முடிப்பதற்குள்ளாகவே "அவற்றை ஏன் இங்கு பேசிக்கொண்டிருக்கிறோம்? அவற்றை இன்னும் விரிவாக பேசிவிட்டோமே" என்றனர். "நீங்கள் சிலவற்றை செவிகொள்ள வேண்டும்" என்று சொல்லத்தொடங்கினர். அவ்வப்போது "எதையும் புரிந்துகொள்ளாமல் இக்கருத்துக்களை சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள்" என்றனர். "முதலில் சூழலை புரிந்துகொள்ளுங்கள். அதன்பின் கருத்துக்களை முன் வையுங்கள்" என்று அறிவுறுத்தினர்.

ஷத்ரிய மைந்தர்களில் மிக இளையவராகிய விசாருவோ சாருவோ பேசிக்கொண்டிருக்கையில்கூட மத்ரநாட்டு இளவரசர்களில் மிக மூத்தவரான பிரகோஷன் எழுந்து ஒரு சொல் ஊடுசொல்வது ஒப்புக்கொள்ளப்படவில்லை. ஆனால் பிரகோஷன் பேசும்போது அவர்கள் அனைவருமே விழிகள் அலைபாய வேறெங்கோ சித்தம் செலுத்தினர். கையணிகளை சரிசெய்துகொண்டனர். ஏவலரை அழைத்து ஏதேனும் செய்கை காட்டி ஆணையிட்டனர். ஒருவரோடொருவர் விழிதொட்டு உரையாடினர். இதழ்களில் மெல்லிய புன்னகை காட்டினர். அவர் சொல்லி முடித்ததும் மென்மையான குரலில் "அது நல்ல கருத்து, எண்ணவேண்டியது" என்று சொல்லி அப்படியே கடந்து சென்றனர். அல்லது அவரால் எரிச்சலூட்டப்பட்டு, ஆனால் மதிப்பின்பொருட்டு தாங்கிக்கொண்டதுபோன்ற பாவனையில் புன்னகைத்து ஏதேனும் சொன்னார்கள்.

உண்மையில் அது சொல்லமைவில் உள்ள வேறுபாடு. லக்ஷ்மணையின் மைந்தர் இளமையிலிருந்தே மத்ரநாட்டில்

வளர்ந்தவர்கள், அங்கேயே கற்றவர்கள். அங்கே எதையும் நேரடியாக, மிக விரிவாக சொல்வது வழக்கம். அங்குள்ள அவைகளில் வந்தமரும் மலைப்பழங்குடித்தலைவர்கள் மிக விரிவாக பேசுபவர்கள். ஒவ்வொருமுறையும் எல்லா குலமுறை கிளத்தல்களும் மரபுமுறை வழுத்தல்களும் கூறப்படவேண்டும் என்றும் முறைமைகள் முற்றாகவே கடைப்பிடிக்கப்படவேண்டும் என்றும் விழைபவர்கள். அவர்களிடம் பேசுவதற்குரிய மொழியையே லக்ஷ்மணையின் மைந்தர்கள் அறிந்திருந்தனர்.

மாறாக ஷத்ரிய மைந்தர் ஷத்ரிய ஆசிரியர்களிடம் அரசுசூழ்கை பயின்றவர்கள். அதே கல்விபெற்ற பிறரிடம் பேசிப் பழகியவர்கள். ஆகவே அவர்களிடம் பலவற்றுக்கு சுருக்கமான சொல்லாட்சிகள் இருந்தன. உவமைகளும் உருவகங்களும் அவர்களின் எண்ணங்களை சுருங்க உரைத்தன. ஆகவே அவைகளில் அவர்கள் சீரிய முறையில் வெளிப்பட்டனர். அவ்வெளிப்பாடு பழகியிராத மத்ரநாட்டவர்களுக்கு அவர்களின் பேச்சு புரியவில்லை. ஆகவே அவர்கள் அவையில் ஏற்கெனவே பேசியவற்றையே மீண்டும் பேசினார்கள். சுருக்கமான அணிப்பேச்சுக்குப் பழகிய ஷத்ரியர்களுக்கு மத்ரர்களின் நீண்ட நேர்ப்பேச்சு உகக்கவில்லை. ஆகவே அவர்கள் பேச்சில் ஊடுருவினார்கள். பிரகோஷன் அவைப்பொழுதை வீணடிப்பதாக எண்ணினார்கள். அதை தாங்கள் ஏற்கெனவே பேசிவிட்டோம் என்றோ முன்னரே புரிந்துகொண்டோம் என்றோ சொல்லும்பொருட்டு இடைமறித்தனர்.

ஆனால் இடைமறிப்பதென்பது மத்ரநாட்டில் பெரும் முறைமீறல். சிறுமைப்படுத்தல். அது மத்ரர்களை

கொதிக்கச்செய்தது. ஒருமுறை பிரகோஷன் சீற்றத்துடன் தன் பேச்சு இடைமறிக்கப்பட்டதை சுட்டிக்காட்டியபோது பிரத்யும்னனின் அமைச்சர்களில் ஒருவர் "இந்த அவையில் இளவரசர்கள் காட்டும் பெருந்தன்மையை சற்றேனும் புரிந்துகொள்ளுங்கள். வேறெந்த அவையிலாவது நீங்கள் ஷத்ரிய இளவரசர்களை எதிர்த்து பேசியிருக்க முடியுமா? மலைமகன்களின் இடம் இங்கு உங்களுக்கு அளிக்கப்படவில்லை. முற்றிலும் இளவரசர்களுக்கு நிகராகவே நீங்கள் கருதப்படுகிறீர்கள்" என்றார். திடுக்கிட்டு அவையினரை நோக்கிய பிரகோஷன் அவர்கள் அனைவரும் அந்தச் சொற்களுக்குரிய முகம் கொண்டிருப்பதை கண்டார்.

அன்றுதான் அந்த அவையில் தங்கள் இடமென்ன என்பதை அவர்கள் உணர்ந்தனர். அன்றே அவர்கள் அங்கிருந்து சாம்பனின் அவைக்கு சென்றனர். சாம்பனின் அவை அவர்களின் வருகையை கொண்டாடியது. அவர்களை தூய ஷத்ரியர்கள் என்று முன் நிறுத்தியது. அவர்களின் வருகையால் ஷத்ரியர்களின் தரப்பொன்று தங்களுக்கு வந்துவிட்டதாக பறைச்சாற்றிக்கொண்டது. ஒவ்வொருமுறையும் "தங்களைப் போன்ற ஷத்ரியர்களின் வருகை இங்கு அவைநிறைவை உருவாக்குகிறது" என்று சாம்பன் சொன்னார். ஷத்ரியர்களுக்குரிய அனைத்து அவை முறைமைகளும் அவர்களுக்கு செய்யப்பட்டன. அவர்களின் சொற்கள் அரசியல்சூழ்கைகளில் தலைக்கொள்ளப்பட்டன. அசுரர்களும் நிஷாதர்களும் அவைகளில் பெரும்பாலும் பேசுவதே இல்லை. ஆகவே பிரகோஷன் அங்கே விரிவாகப் பேசுவது ஏற்கப்பட்டது. அவரும் அவையையே அவர்தான் நடத்துவதாக எண்ணிக்கொண்டார்.

பின்னர் நிஷாதர்களின் படைகளும் அசுரர்களின் படைகளும் நகருக்குள் வரத்தொடங்கின. அவற்றைக் கொண்டு சாம்பனின் படையணிகள் அமைக்கப்பட்டன. ஒவ்வொன்றுக்கும் அசுர, நிஷாத குடியினரே படைத்தலைவர்களாக அமைக்கப்பட்டனர். நிஷாத குடியினருக்கு நிஷாத குடியினர் படைத்தலைமை கொண்டனர். அசுர குடியினருக்கு அசுரர். அரசகுடியினர் என முதற்தலைமை கொண்டவர்கள் அனைவரும் சாம்பனின் குடியைச் சார்ந்தவர்களோ அன்றி அவர் மணஉறவு கொண்ட குடியைச் சேர்ந்தவர்களே. ஒருமுறை கூட, ஒரு படைத்தலைமைக்குக் கூட, லக்ஷ்மணையின் மைந்தர் எவரும் அழைக்கப்படவில்லை.

லக்ஷ்மணையின் மைந்தர்கள் அதை பிரகோஷனிடம் சொன்னார்கள். இறுதியில் பிரகோஷன் அதை நேரடியாகவே சாம்பனிடம் கேட்டார். சாம்பன் சிரித்தபடி "அவைப்பொறுப்புகளில் நீங்கள் சிறந்தவர்கள். ஆனால் படைப்பொறுப்பை தங்களுக்கு அளிப்பதில் இடருண்டு, புரிந்துகொள்ளுங்கள். மலைமக்கள் எங்குமே படைநின்று போரிட்டு வென்றதாக வரலாறில்லை. சிறு குழுக்களாகச் சென்று களவுத்தொழில் செய்வது போன்றதல்ல போர். அதில் எழுவதல்ல, விரிவதல்ல, நின்றிருப்பதே முதன்மை. அதற்கு போராற்றலைவிட திரளாற்றல் தேவை. அது மலைமக்களுக்கு இல்லை என்பதை நீங்கள் அறிவீர்கள்" என்றார்.

உளம் புண்பட்டு அந்த அவையிலிருந்து பிரகோஷன் திரும்பி வந்தார். "நாம் இங்கு இவர்களுக்கு அடிமைகளாக இருக்கிறோம்" என்று கூவினர் இளையோர். "போரில் நில்லாதோர் எந்தச் செல்வத்தையும் அவைமுதன்மையையும் அடையமுடியாது. அவ்வாறு அளிக்கப்படுவதெல்லாம் வெறும்

நடிப்புகளே" என்றார்கள். நடந்ததை அவர்கள் தங்கள் அன்னையிடம் சொல்லி குமுறினார்கள். அன்னை அதற்கு மறுமொழி ஒன்றும் கூறவில்லை. மறுநாள் அவைக்குச் செல்லாமல் தனித்திருந்தார்கள். தங்களைத் தேடி சாம்பனே வரட்டும், அவரிடம் பேசவேண்டுவதை பேசலாம் என்று காத்திருந்தார்கள். ஆனால் அங்கே படைத்திரள்வு நடந்துகொண்டிருந்தது. எவரும் அவர்களை ஒரு பொருட்டாக நினைக்கவில்லை.

ஏழு நாட்கள் அவ்வாறு அவைக்குச் செல்லாது ஒழிந்தபோது சாம்பனின் இளையோன் வசுமான் அவர்களை நாடி வந்தான். "மூத்தவரே, தாங்கள் அவைக்கு வரவில்லை என்பதை மூத்தவர் கண்டார். அவைக்கு வந்து முறைமைகளை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று ஆணையிட்டார்" என்றான். அச்சொல்லால் சீண்டப்பட்டு எழுந்த காத்ரவான் "எங்களுக்கு ஆணையிடுவதற்கு அவர் யார்?" என்று கூவினார். "யாரா? அரசர், ஆணையிடும்பொருட்டு அங்கு அமர்ந்திருப்பவர். இது ஆணை. வராதொழிந்தால் சிறைசெய்து அழைத்துவரவும் அவரால் ஆணையிட முடியும்" என்றான் வசுமான். கொதித்த உடன்பிறந்தோரை ஆறுதல் சொல்லி அமையச்செய்து "நன்று, வருகிறோம். செல்க!" என்றான் ஓஜஸ்.

அன்று அவன் சென்ற பின்னர் அவர்கள் செயலற்று அமர்ந்திருந்தனர். பொழுது சென்றுகொண்டிருந்தது. அவர்கள் உணர்ந்தனர் தனித்திருக்க இயலாது என்பதை. மூன்று தரப்புகளில் ஒரு தரப்பில் நிலைகொண்டேயாக வேண்டும் என்பதை ஓஜஸ் சொன்னான். உடனே அன்றே கிளம்பி யாதவகுல மூத்தவர் பானுவிடம் வந்து தாங்கள் யாதவரிடம்

சேர்ந்துகொள்வதை அறிவித்தனர். அவ்வாறுதான் இக்கூட்டு அமைந்தது.

அவர்களை வரச்சொல்லிவிட்டு ஓஜஸும் பிரகோஷனும் வந்துகொண்டிருந்தனர். தங்கள் மூத்தவரை பானு எப்படி வரவேற்பார் என்பது அவர்களை குழப்பிக்கொண்டிருந்தது. வரும் வழியிலேயே சாம்பனின் படைகள் அவர்களை சிறைசெய்யவும்கூடும் என்ற அச்சமும் இருந்தது. நாங்கள் அவர்களிடம் இயல்பாக பேச முயன்றோம். அவர்கள் நிலைகொள்ளாமலேயே இருந்தார்கள். வெளியே சங்கொலி எழுந்தது. அவர்கள் சற்று ஆறுதல்கொண்டார்கள். ஏவலன் வந்து "இளவரசர் பிரகோஷன்" என்று அறிவித்ததும் மூத்தவர் பானு பக்கத்து அறையிலிருந்து வெளிவந்து நின்றார். அவர் அருகே சுபானுவும் நின்றார். லக்ஷ்மணையின் மைந்தர்களின் முகம் மலர்ந்தது.

பிரகோஷன் ஓஜஸுடன் உள்ளே வந்ததும் பானு முன்னால் சென்று அவரை கட்டித்தழுவி "வருக, இளையோனே!" என அழைத்தார். "உங்களை வருபவர்கள் என நான் கருதவில்லை. செல்லவில்லை என்றே என் உள்ளம் கருதுகிறது" என்றார். பிரகோஷன் விழிநீர் மல்கிவிட்டார். அவரால் பேச முடியவில்லை. "வருக!" என அவரை பானு உள்ளே அழைத்துச் சென்றார். அனைவரும் ஒருவரை ஒருவர் தழுவியபடி அவைக்குள் நுழைந்தோம். அதுவரை இருந்த எல்லா தயக்கங்களும் அகல சிரித்து நகையாடி கொண்டாடத் தொடங்கினோம்.

# கல்பொருசிறுநுரை - 19

## பகுதி நான்கு : அலைமீள்கை – 2

அந்தச் சந்திப்பு அதற்குள் ஒற்றர்கள் வழியாக துவாரகையின் பிற மைந்தர்கள் அனைவருக்கும் சென்றுவிட்டிருக்கும் என அறிந்திருந்தேன். அரண்மனை ஒரு கலம் என அதிர்ந்துகொண்டிருக்கும். அங்கே நிகழும் ஒவ்வொன்றையும் செவிகளும் விழிகளும் நோக்கிக்கொண்டிருக்கும். ஆனால் அது எங்களுக்கு எச்சரிக்கையை அளிக்கவில்லை. ஏனென்றால் நாங்கள் இளைய மைந்தர்கள். எங்களுக்கு வரலாற்றில் ஆற்றுவதற்கொரு பணியில்லை, வரலாற்றெழுத்தில் இடமும் இல்லை. எங்களுக்கு அளிக்கப்பட்டிருந்த ஒரே இன்பம் என்பது வரலாற்றிற்கு மிக அருகே அமர்ந்திருக்கும் வாய்ப்பு மட்டுமே. அதை கொண்டாடிக் கொண்டிருந்தோம்.

என்னைச் சூழ்ந்திருந்த யாதவ மைந்தர்கள் கிசுகிசுவென்று பேசிக்கொண்டே இருந்தனர். அவர்கள் அனைவருமே லக்ஷ்மணையின் மைந்தர்களை நன்கறிந்திருந்தனர். ஆனாலும் அப்போது புதிதாக சந்திப்பவர்கள்போல பேசிக்கொண்டனர். "அதோ அவன் பெயர் ஓஜஸ். அவன் நஞ்சே உருவானவன். பிரகோஷனை கழுதை என்றால் அவனை அதன் குதச்சதையில் கொட்டி ஓடவைக்கும் வண்டு என்று சொல்லலாம்" என்றான் ஃபானுமான். "பிரகோஷன் அறிவற்றவன். எப்போதுமே மூத்தவர்கள் அவர்கள் மூத்தவர்கள் என்பதனாலேயே அறிவில்லாதவர்களாக ஆகிவிடுகிறார்கள்" என்று அதிஃபானு சொன்னான். "ஏன்?" என்று நான் கேட்டேன்.

“இளமையில் விளையாடி கற்றுக்கொள்ளவேண்டிய எதையும் அவர்கள் கற்றுக்கொள்வதில்லை. அவர்கள் கட்டுமீறுவதே இல்லை, ஏனென்றால் பிறரை கட்டுப்படுத்தும் பொறுப்பை அவர்கள் இளமையிலேயே அடைந்துவிடுகிறார்கள்.”

பிரகோஷனும் அவருடைய தம்பியரும் எங்களை திகைப்புடன் பார்த்துக்கொண்டிருந்தார்கள். நாங்கள் அவர்களை மதிக்கிறோமா என்பதுதான் அவர்களின் பார்வையின் பொருள் என அறிந்திருந்தோம். ஆனால் மதிப்பு என்பது என்ன? எளிய மக்கள் உண்மையான மதிப்பை அறிவதே இல்லை. அவர்கள் அஞ்சுவதையே மதிக்கிறார்கள். நாங்கள் அஞ்சுவது பிரத்யும்னனை மட்டுமே. அவரை மட்டுமே உண்மையில் மதிக்கவும் செய்தோம். அவர்களின் விழிகள் எங்கள் விழிகளை சந்திக்கும்போதெல்லாம் சிரித்தும் தலைவணங்கியும் முறைமைசெய்தாலும் எங்கள் உடல்கள் உள்ளங்களை காட்டிக்கொண்டிருந்தன.

உணவறைக்குள் சென்று அமர்ந்தபோது அதுவரை இருந்த ஒழுங்கு கலைந்து இன்னொரு ஒழுங்கு உருவாகியது. உடனே பேச்சுமுறையும் உடல்மொழியும் மாறுபடலாயின. தந்தையே, அன்னை சத்யபாமையின் மைந்தர்களான யாதவர்கள் தங்களுக்கு பிற மைந்தர் எவரிடமும் இயல்பான கூட்டு அமைவதில்லை என்பதை கண்டுகொண்டிருந்தனர். யாதவர்களிடம் இருந்த ஓர் இயல்பு அதற்கு தடையாக இருந்தது. அவர்கள் மொத்த துவாரகையும் தங்கள் உடைமை என நினைப்பதிலிருந்து விலகவே இயலவில்லை. யாதவர்கள் அல்லாதவர்கள் அனைவரும் தங்களிடமிருந்து அந்நகரை பறித்துக்கொள்ளும்பொருட்டு முயல்பவர்களாக, அயல்குருதி கொண்டவர்களாக அவர்களுக்கு தோன்றினர். அத்துடன் அதை

சொல்லாமல், வெளிப்படுத்தாமல் இருக்கும் நாவடக்கமும் அவர்களுக்கு அமையவில்லை.

ஆகவே லக்ஷ்மணையின் மைந்தரின் ஆதரவை தங்கள் தரப்பு பெருகுவது என்று அவர்கள் மெய்யாகவே எண்ணவில்லை. தங்களை அயலவர் ஒருவர் ஆதரிக்கிறார் என்றே அவர்கள் உண்மையில் எடுத்துக்கொண்டார்கள். அவர்களின் ஆதரவால் மகிழ்வடைந்தபோதுகூட மெய்யாகவே அவர்களை அகற்றி நிறுத்தவேண்டும் என்றும் அவர்களை எப்போதும் கண்காணிக்கவேண்டும் என்றும் எண்ணிக்கொண்டனர். யாதவர்களுக்கு ஷத்ரியர்களிடம் தாழ்வுணர்ச்சி இருந்தது. அது இயல்பு. மலைமக்களாகிய மத்ரர்களிடம் தாழ்வுணர்ச்சி இருந்ததைக்கூட புரிந்துகொள்ளலாம், அவர்களும் சற்று நிலைதாழ்ந்த ஷத்ரியர்களே. ஆனால் அவர்கள் நிஷாதர்களையும் அசுரர்களையும்கூட தாழ்வுணர்ச்சியுடனேயே பார்த்தனர்.

ஏனென்றால் அசுரர்களுக்கும் நிஷாதர்களுக்கும் களவீரம் இருந்தது என அவர்கள் நம்பினர். அவர்கள் சொல்லிக்கொள்ள பேரரசர்கள் இருந்தனர் என்று கருதினர். அது யாதவர்களின் பேச்சுக்களில் வந்தபடியே இருக்கும். யாதவர்கள் கொண்டாடிய தலைவர்களான கார்த்தவீரியரும் கம்சரும் அசுரக்குருதி கொண்டவர்கள். தந்தையே, தங்களையும் லவணர்களின் குருதிகொண்டவர், லவணாசுரரின் மரபில் வந்தவர் என்று சொல்லிக்கொள்ளவே யாதவர்கள் முயன்றனர். என்றோ ஒருநாள் ஷத்ரியர்களைப்போல ஆகிவிடுவோம் என்றும் அதுவரை அசுரர்களாக ஆக முயல்வோம் என்றும் நம்பியவர்கள் அவர்கள். ஆகவே மத்ரர்களின் வரவை அவர்கள்

கொண்டாடவில்லை. மகிழ்ந்தனர், எப்படி அந்த மகிழ்வை வெளிப்படுத்துவது என்று அறியாமலும் இருந்தனர்.

அத்துடன் விருஷ்ணிகளுக்கும் அந்தகர்களுக்கும் நடுவே நடந்த பூசலில் அந்தகர்களின் குடித்தலைவராக உள்ளூர தன்னை உணர்ந்து கொண்டிருந்த மூத்தவர் ஃபானுவுக்கு அவர்களின் ஆதரவு அந்தகர்களுக்கு அளிக்கப்பட்ட ஆதரவென்று தோன்றியது. அதை அவர் வெளிப்படுத்தவில்லை, ஆனால் அவருடைய அணுக்கரான சுஃபானு அதை பேச்சுவாக்கில் குறிப்பிட்டார். ஆனால் இளையவரான ஸ்வரஃபானு தன்னை விருஷ்ணிகுலத்தார் என்று உணர்ந்துகொண்டிருப்பவர். அந்த அவையில் அவர் தன்னை வெளிக்காட்டிக்கொள்ளாமல் இருந்தார். அங்கே அப்படி பத்து மைந்தர் இருந்தால் பத்து உள்ளோட்டங்கள் இருந்தன. ஆயினும் எதையும் காட்டிக்கொள்ளாமல் அங்கு அந்த விருந்து நிகழ்ந்தது.

விருந்துக்கூடத்தில் ஒவ்வொருவரும் ஒருவரை ஒருவர் பொருளுடனும் பொருளின்றியும் சொல்லாடிக்கொண்டபடி தழுவினர். புன்சொற்கள் கூவி நகைத்தனர், களியாடினர். உண்டும் குடித்தும் கூச்சலிட்டும் கொண்டாடினர். எள்ளலும் களிவசையும் வரையின்றி நடந்தன. உளஅழுத்தம் கொண்டவர்கள் மிகையாக சிரிப்பார்கள், மிகையாக கொண்டாடுவார்கள். சிலர் அழுவது போன்ற விழிகளுடன் வெறிகொண்டு நகைப்பதைக் கண்டு நான் வியந்துகொண்டிருந்தேன். அரசியலே பேசப்படவில்லை. ஏனென்றால் நேரடியாக அங்கே செல்ல அனைவரும் அஞ்சிக்கொண்டிருந்தார்கள். அரசியல் என்றால் பங்கிடுதல்தானே, பங்கிடுதல் என்றால் பூசல்.

ஆனால் பேசாமலிருக்கவும் இயலாது. குடி மேலெழ மேலெழ எச்சரிக்கைகள் அகன்றன. இயல்பாகவே "இந்தக் கூட்டை தந்தை ஏற்பாரா?" என்று ஃபானுமான் கேட்டான். உங்கள் பெயர் முதல் முறையாக அங்கே சொல்லப்பட்டது. ஆனால் அனைவர் நெஞ்சிலும் அதுவே திகழ்ந்துகொண்டிருந்தது. "ஏற்காவிட்டால் என்ன?" என்று எவரோ மறுமொழி கூறினர். ஃபானு "தந்தை பெரியவர், எந்த வினாக்களுக்கும் அப்பாற்பட்டவர். ஆனால் எந்தை பிறந்து அருளியிருப்பது யாதவ குலத்தில். யாதவக் குருதியில் ஒரு துளி அவர். எந்நிலையிலும் அலை கடலைவிட பெரிதாவதில்லை. அவர் யாதவ நெறிகளுக்கு கட்டுப்பட்டாகவேண்டும்" என்றார்.

சந்திரஃபானு "ஆனால் இங்கே அவரை தெய்வம் என்று கொள்கிறார்கள்" என்றார். அதற்கு சுஃபானு மறுமொழி சொன்னார். "ஆம், ஆனால் அவர் வெறும் தெய்வம் என்றாக வேண்டும் எனில் அவர் யாதவராக பிறந்திருக்கக் கூடாது. யாதவராகப் பிறந்தமையாலேயே அவர் யாதவ தெய்வம் என்றே கருதப்படுவார். யாதவர்களின் தெய்வங்கள் யாதவர்கள் பலிக்கும் கொடைக்கும் நுண்சொல்லுக்கும் கட்டுப்பட்டவை." லக்ஷ்மணையின் மைந்தர் காத்ரவான் "ஆம், அது நல்ல மறுமொழி" என்று சொன்னார். "மெய்யாகவே அது நல்ல மறுமொழி. அவர் யாதவர்களில் பிறந்தார். ஆனால் அது அவர் தெரிவு அல்ல. அவர் மத்ரநாட்டு அரசியை மணந்தார். அது அவருடைய தெரிவு. ஆகவே அது தெய்வத்தின் ஆணை. அனைத்து யாதவர்களுக்கும் மேல் நின்றிருக்கும் மாறாத ஆணை அது!"

"எந்த ஆணையும் எங்கள்மேல் இல்லை. நாங்கள் தொல்குடியினர். இந்நிலத்திலுள்ள புல் போன்றவர்கள்.

புல்லின்றி உயிரில்லை" என்றார் ஃபானு. அது யாதவர் வழக்கமாகப் பேசும் பெரும்பேச்சு. தங்கள் அவைகளில் தங்களைத் தாங்களே புகழ்ந்து கொள்வது அவர்களின் வழக்கம். அந்த அவையில் செய்யக்கூடாதது அது. யாதவர்கள் தங்கள் அவைகளில் எப்படி பேசுவார்களோ அப்படி அனைத்துக் குடிகளின் கூட்டங்களிலும் பேசுவார்கள். அதனூடாக அனைவரையும் அயன்மைப்படுத்திக்கொள்வார்கள். அந்த நுட்பத்தை கற்ற யாதவர் தாங்கள் ஒருவரே. சூரசேனரும் பலராமரும்கூட அதை கற்றுக்கொள்ளவில்லை.

"ஆலமரங்கள் சரியும். புல் நீடுழி வாழும்" என்று ஃபானு சொன்னார். "ஒன்று அறிக, புல்லை எந்தப் புயலும் அழிக்கமுடியாது! காட்டெரி அழிக்கமுடியாது. புல் அன்னை. அனைத்து உயிருக்கும் அமுதூட்டுவது. மண்ணின் கருவில் நீடுவாழும் கலை அறிந்தது. ஆழ வேரூன்றும் அருகும் புல்லே. மிதந்தலையும் நீர்ப்புல்லும் உண்டு. புல்லை வணங்குகின்றன வேதங்கள்" என்று அவர் தொடர்ந்தார். அதை அவர் ஏன் பேசுகிறார் என்றே எவருக்கும் புரியவில்லை. அவரை சுஃபானு தடுத்து "நாம் இங்கே புல்லை உண்ணும் விலங்குகளை உண்ண வந்திருக்கிறோம்" என்றார். அனைவரும் நகைத்து அத்தருணத்தை கடத்தி கொண்டுசென்றார்கள்.

அவ்வாறு தொடங்கியது அந்தச் சொல்லாடல். ஃபானு பேசிக்கொண்டே சென்றார். தந்தையே, அது சுஃபானு அவரில் ஓதிச்செலுத்திய சொற்கள். நீங்கள் எதற்கெல்லாம் கட்டுப்பட்டவர் என்று மூத்தவர் சொல்லத்தொடங்கினார். பின்னர் எவரெல்லாம் உங்களை கட்டுப்படுத்துவர் என்று சொன்னார். பின்னர் எப்படியெல்லாம் உங்களை கட்டுப்படுத்துவது என்று பேசத்தொடங்கினார். இறுதியில்

உங்களை அனைத்துச் சரடுகளாலும் கட்டி அசைவிலாது நிறுத்தினார். உங்கள் மேல் தங்கள் வெற்றியை அவ்வண்ணம் நிறுவிய பின்னர் உங்களை மெல்ல களியாடத் தொடங்கினார். "அவர் கட்டற்றவர், ஆனால் காற்று எங்கும் நிலைகொள்வதில்லை, எதையும் கட்டுவதில்லை. நிலைகொள்வது மலை, நகர்களென கோட்டைகளென ஆவதும் மலையே. மலை கட்டுகளுக்கு உட்பட்டது. கட்டுவதே கட்டடம் என்று அறிக!"

லக்ஷ்மணையின் மைந்தர் ஊர்த்துவாகன் கேட்டார் "அறியாது கேட்கிறேன். இளைய யாதவர் மாவீரர் என்று கொண்டாடுகிறார்கள். எந்தக் களங்களில் அவர் பெருவெற்றி கொண்டிருக்கிறார்? அஸ்தினபுரியின் துணை கொண்டு மதுராவை வென்றார். பீமனைக் கொண்டு மகதத்தை அழித்தார். அபிமன்யுவை துணைகொண்டு பாணாசுரரை வென்றார். அஸ்தினபுரியைச் சுட்டி அச்சுறுத்தி அருகமைந்த நாடுகளை அடக்கினார். தன் படைகொண்டு சென்று அவர் வென்ற களங்கள் என்ன?" எவரோ நகைத்தனர். பலன் "அவர் வென்றதெல்லாம் சொற்களங்களிலேயே" என்று சொன்னான். "அவர் புரியாத சொற்களின் தலைவர்" என்று ஃபானு சொன்னார். சிரிப்புகள் உணவுக்கூடமெங்கும் நிறைந்தன.

பிரகோஷன் சிரித்தபடி "அவ்வெற்றி உண்மையில் நன்று. அவர் உரைக்கும் சொற்களில் ஒன்றுகூட புரியாதவர்களை பிறர் வெல்வது எளிதல்ல. எனென்றால் அறியாச் சொல் வேதம் என்று நம்புபவர் எளியோர்" என்றார். அனைவரும் வெடித்து நகைத்தனர். அவர்களில் பலர் ஏன் நகைக்கிறார்கள் என்றே அறிந்திருக்கவில்லை. "அவர் வெற்றிகொள் பெருவீரர்! சூதர்களின் பாடல்கள் அவ்வாறு உரைக்கின்றன" என்று

அபராஜித் சொன்னான். "அவர் எட்டு பெண்களை வென்றார்" என்று எங்கோ ஒரு குரல். அது அதி꞉பானுவின் குரலெனத் தோன்றியது. மீண்டும் சிரிப்பு.

"ஆம், சூதர்களின் பாடல்களில் வென்று அவர் காலத்தை கடந்து செல்வார். அதற்குப் பின் இங்கே மெய்யாகவே அவர் எவரையும் வென்றது இல்லை என்று ஒருவர் சொன்னால் பித்தனென்றே ஆவார்" என்றார் சு꞉பானு. "வெல்லவேண்டியது சூதர்களையே என்று அறிந்தவர்" என்றார் மத்ரரான மகாசக்தன். "இந்தச் சூதர்களின் நாவை முதலில் அடக்கவேண்டும்" என்றார் மத்ரரான சகன். "பூசணிக்கொடியின் வேரை வெட்டுவதே எளிது. அது படர்ந்து செல்லும் திசைகள் அனைத்தையும் சென்று நோக்கி வெட்ட எவரால் இயலும்?" என்றார் சு꞉பானு. "ஆம், வேரை வெட்டவேண்டும். வேரில் வெந்நீர் விடவேண்டும்" என்று ஒரு குரல்.

நகைப்புகள், இளிவரல்கள், ஒவ்வொருவராக மேலும் மேலும் கள் போதை கொண்டனர், ஒவ்வொருவரும் தங்கள் எல்லைகளை முற்றழித்துக்கொண்டனர். ஒவ்வொருவரும் தங்களுக்குள்ளிருந்து பிறிதொருவரை வெளியே எடுத்தனர். பிறதொருவர் அறியாது கரந்தவை, ஒவ்வொரு கணத்திலிருந்தும் ஊறிச் சொட்டி எஞ்சிய நஞ்சின் திரள். அவர்கள் அனைவரையும் இணைத்தது உங்கள் மீதான காழ்ப்பும் விலக்கமும். அதை அவர்கள் வெளிப்படுத்தியதிலுள்ள சிறுமையும். தீமையையும் சிறுமையையும் பங்கிட்டுக்கொள்பவர்களிடையே உருவாகும் ஒற்றுமை வியப்பூட்டுவது.

꞉பானு "என் புகழ் என்பது ஒருநாளேனும் களத்தில் எந்தையை வெல்லும்போதுதான் நிறைவுறும்" என்றார். "கொல்லும்போது

என்று சொல்லுங்கள், மூத்தவரே. கொல்வதும் உகந்ததே" என்று பிர꞉பானு சொன்னார். "ஏனெனில் தந்தையாயினும் பிதாமகரே ஆயினும் மண்ணின் பொருட்டு கொல்லலும் ஆகும் என்ற நெறியை வகுத்து உலகுக்கு அளித்தவர் அவர்." ஊட்டறை பேரொலி எழுப்பியது. ஓரிருவர் கையில் கோப்பையுடன் எழுந்துவிட்டனர். "எனில் சொல்க. எந்நெறியின் பொருட்டு அவரை கொல்லலாம்?" என்றார் ஃபானு. "தந்தையையும் கொல்லலாம் என்னும் நெறியின் பொருட்டு. அவர் தந்தையின் இடத்தில் இருந்த கம்சரை கொன்றார் என்பதன் பொருட்டு" என்று சு꞉பானு சொன்னார்.

பிரகோஷன் "அறமென ஒன்றைச் சொல்லி அதன் பொருட்டு களம் நின்றால் நாம் இயற்றுவது அனைத்திற்கும் பொறுப்பை அறமே ஏற்றுக்கொள்ளும் என்று அவர் சொன்னார். அறம் என்ற சொல்லை ஆணித்தரமாக சொன்னால் அது நம்மை சூதர்சொற்களில் கொண்டு அமரச்செய்யும். நாம் அறத்தோடு நின்றோம் என்று சூதர் நிறுவினால் அந்த அறமே எழுந்து வந்தாலும் அதை மறுக்கமுடியாது" என்றார். சு꞉பானு "ஆம் மூத்தவரே, ஒருமுறையேனும் தந்தையை வெல்ல வேண்டும்" என்றார். "எனில் எண்பது முறை தந்தையை கொல்ல வேண்டியிருக்கும்" என்று பிரகோஷன் சொன்னார்.

"எண்பது முறை கொல்லப்பட்ட பின்னர் அவரில் எஞ்சுவது ஒன்றுண்டு. அதை அவரே கொல்ல வேண்டும்" என்றான் ஃபானுமான். அந்தச் சொல் அனைவரையும் எவ்வகையிலோ கவர்ந்தது. "ஆம், எண்பது முறை கொல்லப்படுதல்! நன்று! எண்பது முறை கொல்லப்படுதல்!" என்று கள்மயக்கில் அதி꞉பானு கூவினான். "எண்பது முறை!" என்று பலர் கூவினார்கள். "அதெப்படி எண்பது முறை? எண்பது

உறுப்புகளா?" என்றான் ஸ்ரீஃபானு. "எண்பது பெயர்கள் அவருக்கு... எண்பது முகங்கள்" என்றான் பிரபலன். மதுக்கோப்பைகளை உயர்த்தியபடியும் கைகளை தூக்கியபடியும் "எண்பது முறை கொல்லுவோம்!" என்று கூவினர். கூச்சலிட்டு கைகளை வீசினர். ஆர்ப்பரித்தனர். எங்கும் வெறிகொண்ட முகங்கள். சிரிக்கும் பற்கள்.

எந்தையே, அன்று எண்பது முறை என்னும் சொல்லை நானும் பலநூறு முறை என் நாவால் சொன்னேன். எண்பது பேரும் ஒருவராதல், ஒவ்வொருவரும் எண்பது முறை உங்களை வெல்லுதல். எண்பது எத்தனை அழகிய எண்! எண்பது வஞ்சங்கள், எண்பது தயக்கங்கள், எண்பது விந்தையான தனிமைகள். ஒவ்வொருவர் உள்ளத்திலும் எண்பது வடிவில் எழுந்தருளியிருக்கிறீர்கள் என்று எனக்கு ஓர் எண்ணம் எழுந்தது. எண்பது தோற்றங்களா அன்றி எண்பது பிறழ்வுகளா? எண்பது மீறல்கள் போலும். எண்பது விடுபடல்களோ ஒருவேளை? தந்தையே, மைந்தர் என தந்தையில் எழுவதுதான் என்ன? மீள நிகழ்த்துவதில்லை இயற்கை. எனில் எஞ்சுவதோ விஞ்சுவதோ உண்மையில் என்ன?

அம்மதுக்களியாட்டு முடிந்து நான் கிளம்பும்போது என் தலை வீங்கி பெருத்திருந்தது. சேற்றில் சிக்கிக்கொண்ட யானைபோல் தம் எடையில் தாமே தடுமாறிக்கொண்டிருந்தன என் கால்கள். என்னை ஏவலர்கள் கைத்தாங்கலாக பற்றி என் அறைக்கு கொண்டுசென்றனர். "போர் அறிவிக்கப்பட்டுவிட்டது!" என்று எனக்குப் பின்னால் ஒருவன் சொன்னான். "இனி எவரும் எதையும் அஞ்சி தயங்கவேண்டியதில்லை. எதன் பொருட்டும் ஐயம் கொள்ளவும் வேண்டியதில்லை. ஒவ்வொன்றும் முடிவு செய்யப்பட்டுவிட்டது. ஒவ்வொன்றுக்கும் பொழுது

குறிக்கப்பட்டுவிட்டது. நாம் வென்றாகவேண்டியது அவரைத்தான்."

"ஆம், எங்கு இருந்தாலும் தேடி அவரை இங்கு வரச்சொல்வோம். இங்கு வந்து அவர் அறிவிக்கட்டும் எது முதன்மையானதென்று. எது அழிவற்றதென்று!" எவர் குரல் என அறியேன். குரல் மட்டும் கேட்டால் அது எண்பதில் எவராகவும் இருக்கலாம். எங்களை எங்கள் அறைகளில் ஒவ்வொருவராக கொண்டுசென்று படுக்க வைத்தனர் ஏவலர். என் அறை மஞ்சத்தில் படுத்தபோது நீர்ப்பரப்பின் மீது நீர்த்தாவி பூச்சியைப்போல் நான் பறந்துகொண்டிருப்பதாக உணர்ந்தேன். என் கைகால்கள் எடை மிகுந்து விழுந்தன. என் நா குழைந்த சொற்களாக இருந்தது. எதை எதையோ எண்ணிக்கொண்டிருந்தேன். பின்னர் ஓர் உலுக்கலில் உணர்ந்தேன், என் அருகே தாங்கள் அமர்ந்திருந்தீர்கள். என் அருகே, தலைக்கு அருகே!

நான் படுத்தபடி "எந்தையே!" என்றேன். நீங்கள் ஒளி மிக்க சிறிய வாளொன்றை என்னிடம் அளித்தீர்கள். "எதன் பொருட்டு, தந்தையே?" என்றேன். "நீ விழைந்தது" என்று சொன்னீர்கள். "இல்லை" என்று நான் சொன்னேன். "நீ விழைந்தாயெனில்..." என்று நீங்கள் கூறினீர்கள். "இல்லை இல்லை" என்றேன். "நீ விழைந்தது" என்று மீண்டும் கூறினீர்கள். "இல்லை தந்தையே, நான் விழையவில்லை. மெய்யாகவே விழையவில்லை" என்று நான் கூறினேன். நீங்கள் அந்தக் குறுவாளை நீட்டியபடி புன்னகைத்துக்கொண்டே இருந்தீர்கள். எண்ணியிராக் கணம் ஒன்றில் நான் எழுந்து அக்குறுவாளை வாங்கி தங்கள் நெஞ்சில் பாய்ச்சினேன்.

குறுவாள் பாய்ந்து நீங்கள் நீர்ப்பாவை என கலைந்து மறைந்தீர்கள். நான் எழுந்து நின்றுகொண்டிருந்தேன். என் காலடியில் ஓர் உடல் கிடந்தது. தந்தையே, குனிந்து நான் அதை பார்த்தேன். என் உடல் விதிர்ப்படைந்தது, தள்ளாடி நடந்து அறைக்கதவைத் திறந்து வெளியே பாய்ந்தேன். உடனே அங்கிருந்து கிளம்பிச்சென்றுவிடவேண்டும் என்னும் விசை மட்டுமே என்னுள் எஞ்சியிருந்தது. கதவைத் திறந்து வெளியே பாய்ந்தபோது வெற்றிடத்தில் சுழன்ற விசைகொண்ட காற்றை உணர்ந்தேன். என் புரவியை அடைந்து அதை அவிழ்த்து ஏறி அதை குதிமுள்ளால் ஊக்கி விசையூட்டி காற்றில் பாய்ந்தேன். ஒழிந்த நகரினூடாக வெறிகொண்டு விரைந்தேன்.

எத்தனை தொலைவு, எத்தனை பொழுது என்று அறிந்திருக்கவில்லை. சென்று நின்றபின்னரும் அது எந்த இடம் என்று தெரியவில்லை. துவாரகையின் மேற்கே விரிந்திருந்த வறுநிலங்களின் ஒரு பகுதி என்று பின்னர் கணித்துக்கொண்டேன். அங்கு நான் உணர்ந்தது ஒரு தனிமை. ஆனால் முற்றிலும் விடுபட்டிருந்தேன். பேருருக் கொண்டிருந்தேன். நான் என்னை வெல்ல முடியாதவனாக, துயரற்றவனாக உணர்ந்தேன். அப்போதும் தனிமை கொண்டிருந்தேன். ஆனால் அத்தனிமை பெருங்கொண்டாட்டத்தை பேருவகையை அப்போது அளித்தது. தந்தையே, அப்போது நான் தாங்களாக இருந்தேன்.

விடியும்வரை அங்கே நின்றிருந்தேன். பாலையில் வானம் மிக விரைவாகவே ஒளிகொண்டுவிடுகிறது. மிளிரொளி. எதுவும் சுடர்விடுவதில்லை, எல்லாம் தங்கள் உள்ளொளியை உமிழ்கின்றனவோ என்று தோன்றும். என் கண்கள் துலங்கிவிட்டிருப்பதை அறிந்து, காலம் உணர்ந்து திரும்பிச்

செல்லும்பொருட்டு புரவியை நோக்கினேன். நான் நின்றிருந்த இடம் ஒரு மணல்மேடு. துவாரகையை ஒட்டிய மணற்பரப்பின் மிக உயரமான இடம் அதுவே. அங்கிருந்து ஒற்றை நோக்கில் துவாரகையை கண்டேன். இரு குன்றுகளில் ஒன்றின்மேல் அந்த மாபெரும் நுழைவாயிலுக்கு அப்பால் நீலக்கடல் மேல் வானம் படிந்திருந்தது. துறைமுகத்தில் ஒரு பீதர்நாட்டுக் கப்பல் அலைகளில் ஆடி நின்றது. சுழன்று சுழன்றேறும் துவராகையின் தெருக்கள். கீழே வைக்கப்பட்ட ஒரு மாபெரும் படையாழி போன்ற அதன் வடிவம்.

சிறிய செப்புபோலிருந்தது. தெய்வங்கள் விட்டுச்சென்ற களிப்பாவை போலிருந்தது. குனிந்து எடுத்து கையில் வைத்துக்கொள்ளலாம்போல. நான் அங்கு நின்று அதை பார்த்துக்கொண்டிருந்தேன். நெடுநேரம்.

# கல்பொருசிறுநுரை - 20

**பகுதி நான்கு : அலைமீள்கை – 3**

தந்தையே, நான் திரும்பி துவாரகைக்கு வந்தபோது முற்றிலும் மாறிவிட்டிருந்தேன். ஆனால் அதை நான் மட்டுமே அறிந்திருந்தேன். பெருவாயிலுக்குள் நுழைகையிலேயே நகரின் உளநிலை மாறிவிட்டிருப்பதை உணர்ந்தேன். ஒருநாள் மட்டுமே ஆகியிருந்தது. சொல்லப்போனால் ஓர் இரவு. அதற்குள் அனைவருக்கும் அனைத்தும் தெரிந்துவிட்டிருந்தது. ஏனென்றால் அனைவரும் அரண்மனையையே கூர்ந்து

நோக்கிக்கொண்டிருந்தனர். அத்தனை கூர்ந்து நோக்குபவர்களிடமிருந்து எவரும் எதையும் மறைத்துவிடமுடியாது.

ஏன் அந்த கூர்நோக்கு? ஏனென்றால் அவர்கள் எதிர்நோக்கியிருக்க வேறேதும் எஞ்சியிருக்கவில்லை. மானுடவாழ்க்கை என்பது எழும் நல்லநாள் என்னும் கனவிலேயே சென்றுகொண்டிருக்கிறது. அதைப்பற்றி பேசி, புனைந்து வாழ்கிறார்கள். மகிழ்ந்தும் ஐயுற்றும் நாளெண்ணியும் பதற்றம்கொண்டும் அன்றாடத்தை கடந்துசெல்கிறார்கள். நாளை பறிக்கப்பட்ட மனிதர்கள் தீயூழ் கொண்டவர்கள். அவர்கள் உடனடியாக தங்கள் இன்றை சிதைக்கத் தொடங்குகிறார்கள். அதிலிருந்து துண்டுகளை எடுத்து தங்கள் நாளைகளை கற்பனை செய்வார்கள்.

என் மாற்றத்தை எவரும் அறியலாகாது என்று நான் எனக்கே ஆணையிட்டுக்கொண்டேன். ஆகவே என் அறைக்குச் சென்று ஓய்வெடுத்தேன். துயிலெழுந்தபோது அரண்மனையிலிருந்து அடுத்த செய்தி வந்திருந்தது. மத்ரநாட்டு படைத்தலைவர்களும் குடித்தலைவர்களும் யாதவர்களின் படைத்தலைவர்களுடனும் குடித்தலைவர்களுடனும் இணைந்து கொண்டாடும் ஒரு பெருவிருந்து அரண்மனையில் ஒருக்கப்பட்டிருந்தது. வியப்பாக இருந்தது, அது ஓர் அறிவிப்பு. போருக்கான அறைகூவலென்றே சொல்லலாம். அத்தனை விரைவாக அதைச் செய்ய மூத்தவர் ஃபானு துணிவார் என நான் நினைத்திருக்கவில்லை.

ஆனால் மூத்தவர் சுஃபானு என்ன எண்ணியிருக்கிறார் என்று என்னால் புரிந்துகொள்ள முடிந்தது. வெல்லும்தரப்பு என்னும் சித்திரத்தை உருவாக்கிக்கொள்ள முயல்கிறார். அது எஞ்சியிருக்கும் ஆறு அன்னையரின் மைந்தர்களில்

சிலரையேனும் ஈர்க்கும் என்று கருதுகிறார். நான் உடனே எண்ணியது அவருடைய இலக்கு காளிந்தியின் மைந்தர்களாகவே இருக்கும் என்றுதான். அதன்பின் தோன்றியது அவருடைய உடனடி இலக்கு யாதவக் குடித்தலைவர்களிடம் அவர் குடிமுதன்மை பெற்று முடிசூடுபவராகிவிட்டார் என்பதை அறிவிப்பதே என்று தோன்றியது. மத்ரர்களின் ஆதரவு அவருக்கே என்றால் விருஷ்ணிகளும் அந்தகர்களும் போஜர்களும் அவரை ஏற்றேயாகவேண்டும். எண்ணியபோது அது சரியே என்று தோன்றியது. எனில் ஓர் ஐயமும் என்னை குடைந்துகொண்டிருந்தது.

அந்தப் பெருவிருந்து எதன் பொருட்டு தொடங்குகிறது என்று இளையோராகிய எங்களுக்கு சொல்லப்படவில்லை. மூத்தவரிடமிருந்து அன்று மாலை ஓர் உண்டாட்டு நிகழ்வு இருக்கிறது என்று மட்டுமே செய்தி வந்தது. அதன் பின்னரே அது குடியுண்டாட்டு என்ற செய்தி வந்தது. அப்போது நான் என் இளையவன் அதிஃபானுவுடன் களிப்படகில் கடலில் சென்று அலையாடி கரை வந்திருந்தேன். எனக்காகக் காத்திருந்த ஏவலன் அச்செய்தியை சொன்னான். "இன்று மாலையா?" என்று நான் கேட்டேன். "ஆம்" என்றான். "மாலைக்கு இன்னும் பொழுது அதிகம் இல்லையே?" என்றேன். அவன் மறுமொழி சொல்லவில்லை.

அதிஃபானு "ஏதேனும் மந்தணச் செய்திகள் உண்டா?" என்றான். "இல்லை" என்று அவன் சொன்னான். "மூத்தவர் வெறுமனே கொண்டாட விழைகிறார் போலும்" என்றான் அதிஃபானு. ஏனெனில் அதுதான் அப்போது வழக்கமாக இருந்தது. பொதுஉண்டாட்டு நிகழ்வதற்கு துவாரகையில் முதன்மையான

எந்த அடிப்படையும் தேவையில்லை என்றாகிவிட்டிருந்தது. பொதுஉண்டாட்டு என்பது மிகமிக அரசியல்முதன்மை கொண்ட செயலாக ஒருகாலத்தில் இருந்தது. அத்தனை குடித்தலைவர்களும் வருவார்கள். அவர்கள் அனைவரையும் அவர்களின் குடிமுதன்மை நோக்கி அவையமரச் செய்வதென்பது சிலந்தி வலையைப் பிரித்து நூலென நீட்டுவதுபோல என்பார்கள்.

என்னதான் செய்தாலும் ஏதேனும் முரண்பாடு எழும். பூசல் நிகழும். உளக்கசப்பு எழும். ஒவ்வொரு பொதுஉண்டாட்டும் கசப்புகளை உருவாக்குவது என்பதனால், முந்தைய உண்டாட்டின் கசப்புகள் எஞ்சியிருக்கையில் அடுத்த உண்டாட்டை நிகழ்த்தலாகாது என்பதனால் ஆண்டுக்கு ஒருமுறைகூட குடிசூழ் உண்டாட்டுகள் நிகழ்வது யாதவர்களிடம் இருக்கவில்லை. ஆனால் நீங்கள் இருந்தபோது துவாரகையில் குடியுண்டாட்டுகள் இயல்பாக அடிக்கடி நிகழ்ந்தன. அன்று அந்நகரில் இரவும் களியாட்டு நிறைந்திருந்தது. அதன் பகுதியாக உண்டாட்டுகள் எங்கும் நடந்தன. துவாரகையில் என்றும் திருவிழா என்று சூதர்கள் பாடிய காலம் அது.

அவற்றுக்கும் இப்போது நடைபெறுவனவற்றுக்கும் பெரிய வேறுபாடு இருந்தது. அன்றெல்லாம் உண்டாட்டென்பது குலம் என்றும், குடி என்றும், தொழில் என்றும், வாழ்விடம் என்றும் பிரிந்து கிடக்கும் மக்கள் ஒருவரோடொருவர் கலந்து உரையாடி புரிந்து ஒன்றாவதற்கான வழிமுறை. நீங்கள் குடியுண்டாட்டில் எல்லாக் குடியும் பங்குகொள்ளச் செய்தீர்கள். யவனரும் பீதரும் காப்பிரிகளும் சோனகர்களும் பங்குகொள்ளும் பெருவிழவுகள் அவை. என் இளமையிலேயே

அரண்மனையிலும் களியாட்டரங்குகளிலும் ஒருமுறை விழி சுழற்றிப் பார்த்தாலே துவாரகையில் வாழும் அனைத்துத் தரப்பு மக்களையும் பார்க்க முடியும்.

இன்று அவ்வாறல்ல. இன்று ஒவ்வொருவரும் தங்களை தாங்களே தொகுத்துக்கொள்ள, அதனூடாக பிறரிடமிருந்து பிரித்துக்கொள்ள உண்டாட்டுகளை அமைக்கிறார்கள். இன்று நிகழும் உண்டாட்டுகளில் மிகமிக நம்பிக்கையான உள்வட்டத்தினர் மட்டுமே பங்கு கொள்கிறார்கள். யாதவர்களின் உண்டாட்டுகளில் பிறர் ஒருவர் கூட இருப்பதில்லை. யாதவர்களுக்குள்ளேயே விருஷ்ணிகளும் போஜர்களும் அந்தகர்களும் தனித்தனியான உண்டாட்டுகளை ஒருங்கிணைக்கிறார்கள். அவர்களுக்குள்ளேயே குடித்தொடர்புடையவர்கள் வேறு உண்டாட்டுகளை அமைக்கிறார்கள்.

உண்டாட்டு என்பது முன்பு வெற்றிக்களியாட்டு, தெய்வவழிபாடு, மூதாதை வணக்கம் என்னும் அடிப்படைகள் கொண்டதாக இருந்தது. இன்று அங்கே மிக எளிய ஒன்றை அறிவித்துக்கொண்டதாக இருக்கிறது. மைந்தர் ஒருவரின் பிறந்தநாள், தொலைவிலிருந்து ஒருவர் பயணம் முடித்து வந்த நாள், பயணம் தொடங்கும் நாள், ஏதேனும் சிறுதெய்வம் ஒன்றுக்கு பூசனை என்று. ஆனால் நோக்கம் அதுவாக இருக்காது. அது அனைவருக்கும் தெரியும். உண்டாட்டு தொடங்கிய சற்று நேரத்திலேயே அங்கு அனைவரும் ஏன் கூடியிருக்கிறார்கள் என்பதை உணரமுடியும். அவ்வாறு ஏதோ புதிய செய்தி வந்துள்ளதென்று நான் புரிந்துகொண்டேன்.

அன்று சலிப்புற்றிருந்தேன். முன்பெல்லாம் பதற்றமும் ஆவலும் கொண்டிருப்பேன். அங்கு செல்வதற்கு முன்னரே அது

என்ன செய்தி என்று அறிந்துகொள்ள முயல்வேன். உடன்பிறந்தாரிடம் அதைப்பற்றி உசாவுவேன். அவர்களும் அதே ஆர்வம் கொண்டிருப்பதனால் என்னிடம் தங்களுக்குத் தெரிந்தவற்றை புனைந்துரைப்பார்கள். அவர்கள் எண்ணுவது அச்செய்தியின் நுனி பற்றி நான் எனக்குத் தெரிந்த எதையேனும் சொல்வேன் என்று. அவ்வாறு சொல்லாதொழிந்தால் எனக்கு ஒன்றுமே தெரியாதாகும் என்பதனால் நானும் எதையேனும் புனைந்துரைப்பேன். அவ்வண்ணம் புனைந்து புனைந்து மிகப் பெரிதாக ஒன்றை எதிர்பார்த்துக்கொண்டு அங்கு சென்று அமர்ந்திருப்போம்.

முதலில் உண்டாட்டுச் சடங்குகள் நிகழும். எளிய முகமன்கள் உரைக்கப்படும். அவைமுறைமைப் பேச்சுகள் எழும். மெல்ல மெல்ல பேச்சு வளர்ந்து ஓர் இலக்கை அடைந்து சொல்லவிந்து நின்றிருக்கும். அந்த அமைதியில் அங்கு அச்செய்தியை சொல்லக் கடமைப்பட்டவர் சூழநோக்கி தன்னை ஒருக்கிக்கொண்டு மெல்ல கூறுவார். அது கூறப்படும்போதுகூட கூறப்படும் முறையால் அது சிறிதாக இருக்கிறது என்றும், மேலும் பெரிதாக ஒன்று எழுந்து வரும் என்றும் எதிர்பார்த்து காத்திருப்போம். ஆனால் அது நிகழ்வதில்லை. மெல்ல மெல்ல அச்செய்தி அவ்வளவுதான் என்று புரியும். அப்போது அவையில் ஏற்படும் தளர்வை உடலசைவாக விழிகளாலேயே காணமுடியும்.

அதற்காகவா என்று ஏமாற்றம் எழுந்தாலும் அதன் பொருட்டு அங்கு கூடிவிட்டோம் என்பதனாலேயே அதை பேசி பெருக்கிக்கொள்ளவேண்டிய நிலையை அடைவோம். ஒவ்வொருவரும் அதை விரித்தெடுப்போம். இல்லாத நுட்பங்களை கண்டடைவோம். சூழ்ச்சிகளை முன் வைப்போம்,

தீர்வுகளை சென்றடைவோம். பேசிப் பேசி உடன் மதுவும் அருந்தி தளர்ந்து நாகுழைந்து எவர் எங்கு சென்றால் எங்களுக்கென்ன என்ற நிலையை ஒவ்வொருவரும் சென்று அடைவோம். மது விசைகொண்ட நீர்ப்பெருக்கென ஒவ்வொருவரையும் அள்ளிச் சுழற்றி கொண்டுசென்று அவரவருக்கான மணல் திட்டுகளில் அமரவைக்கும். அங்கே அமர்ந்து புலம்பிக்கொண்டிருப்போம்.

நெடுநாள் இதுவே நிகழ்ந்தது. மறுநாள் அவ்வுண்டாட்டு எதன்பொருட்டு என்று கேட்டால் எவராலும் மறுமொழி சொல்ல இயலாது. எனினும் உண்டாட்டுகள் எதற்கு நிகழ்கின்றன என்றால் அதனூடாக எங்கள் அனைவருக்கும் செய்தி அறிவிக்கப்பட்டுவிட்டதென்றும், அச்செய்தியினூடாக பொதுக்கருத்து எட்டப்பட்டுவிட்டதென்றும் நாங்களே நம்புவதற்காகத்தான். உண்மையில் அவ்வுண்டாட்டின்போது சில முடிவுகள் எடுக்கப்பட்டதாக தோன்றும். ஆனால் அம்முடிவுகள் முன்னரே சூ◌ஃபானு முதலிய சூழ்வலரால் எடுக்கப்பட்டுவிட்டிருக்கும். அம்முடிவுகள் அங்கு அறிவிக்கப்படவும் வாய்ப்பில்லை. ஏனெனில் அங்கிருப்பவரில் எவர் எங்கே எதை சொல்வார்கள் என்று நம்ப முடியாது. ஆகவே பின்னர் அம்முடிவு அந்த உண்டாட்டுச் சந்திப்பில்தான் எடுக்கப்பட்டது என்று சொல்லும்போது எவராலும் மறுக்க முடியாது. எடுக்கப்பட்ட முடிவுடன் அனைவரும் ஒத்து சென்று சேர்ந்தே ஆகவேண்டும். ஏனெனில் அது அனைவரும் சேர்ந்து எடுத்த முடிவு.

அவ்வாறாக உண்டாட்டுகள் விந்தையான இளிவரல் நாடகமென ஆகிவிட்டிருந்தன. ஆயினும் அவை தேவையாயின. அதற்கும் அப்பால் அவற்றை

ஒருங்கிணைக்கும் தலைவர்களுக்கு எவர் எவர் உடன் நிற்கிறார்கள் என்று அறிவதற்கான வாய்ப்பு. உடன் நிற்கிறவர்கள் உளத்திரிபு கொண்டிருக்கிறார்களா என்பதற்கான உசாவல். தங்களுடன் அத்தனை பேர் இருக்கிறார்கள் என்பதை தங்களுக்குத் தாங்களே சொல்லிக்கொள்ளும் முனைப்பு. சூழ்ச்சிகள் நிறைந்த சூழலில் ஆள்வோருக்கு அவ்வப்போது ஓர் அலையென தனிமை வந்து தாக்குகிறது போலும். கைவிடப்பட்டிருக்கிறோமோ என்னும் ஐயம் எழுகிறது. அதற்கு மறுமொழி என நாங்கள் இணைந்து பின்குரல் எழுப்ப வேண்டியிருக்கிறது.

உண்டாட்டின்போது ஏதோ ஒரு கணத்தில் தன்னைச் சூழ்ந்திருக்கும் இளையோரையும் உற்றாரையும் கண்டு அவர்கள் நிறைவுறுகிறார்கள். ஆம், இவர்கள் என்னவர் என எண்ணுகிறார்கள். தாங்களே கைபெருகி கண்பெருகி நின்றிருப்பதுபோல் கருதிக்கொள்கிறார்கள். அதன் பொருட்டு நிகழும் ஒரு பொய்யான பயிற்சி அது. போருக்குப் பிந்தைய உண்டாட்டுகளைப்பற்றி கேட்டிருக்கிறேன். போர்களே பலநூறு உண்டாட்டுகளின் வழியாகத்தான் ஒருங்கிணைக்கப்படுகின்றன என்று தோன்றுகிறது. போருக்குப் பிந்தைய உண்டாட்டு அதன் தொடர்ச்சி மட்டுமே.

அரண்மனையின் யாதவர்களுக்குரிய பகுதியில் அமைந்த மையப்பெருங்கூடத்தில் அந்த உண்டாட்டு நிகழ்ந்தது. தந்தையே, அங்கு தங்கள் காலகட்டத்தில் பல பெருவிருந்துகள் ஒருக்கப்பட்டிருந்தன. பல அயல்நாட்டு அரசர்கள் இங்கு வந்து

விருந்தோம்பலை பெற்றிருக்கிறார்கள். என் அகவைநிறைவுக்காக அளிக்கப்பட்ட உண்டாட்டில் மையத்தில் பொன்னாலான பீடத்தில் நான் அமர்த்தப்பட்டதும், என் இரு பக்கமும் தாங்களும் மூத்த தந்தையும் அமர்ந்திருந்ததும், அன்று வந்திருந்த அரசர்கள் ஒவ்வொருவராக வந்து எனக்கு பெருமைமிக்க பரிசுகளை தந்ததும் என் நினைவில் இன்றும் நீடிக்கின்றன. அந்நினைவை சற்றேனும் தொடாமல் என்னால் அந்த அறைக்குள் நுழைய முடிந்ததே இல்லை.

நான் உள்ளே செல்லும்போது ஏற்கெனவே என் உடன்பிறந்தாரில் பலர் அங்கு வந்துவிட்டிருந்தனர். ஒவ்வொருவரும் குழம்பிய, கவலையுற்ற உளநிலையிலேயே இருந்தனர். என்னைப் போலவே அவர்களும் சலிப்பு அடைந்திருந்தனர். ஆனால் முற்றிலும் விட்டொழிக்க முடியாத சிறு ஆர்வத்தையும் தக்க வைத்துக்கொண்டிருந்தனர். என்னை நோக்கி எழுந்து வந்த அதி꞉பானு "இந்த விருந்தில் யாதவ குலங்கள் அனைத்தும் பங்கு பெறுகின்றன என்றார்கள்" என்றான். நான் "ஆம், அவ்வாறுதான் அறிந்திருந்தேன்" என்றேன். "அன்னை லக்ஷ்மணையின் மைந்தர்கள் நம்முடன் சேர்ந்தது ஒரு நல்ல அறிகுறி. அவர்களை இங்கே வென்றெடுத்து கொண்டுவந்தவர் சு꞉பானு. இன்று அவருக்கு அவையில் மூத்தவர் ஒரு பரிசை அளிக்கக்கூடும்" என்றான்.

"நன்று. நாம் பெருகுகிறோம்" என்று நான் சொன்னேன். ஊண்அறை ஒருங்கிக்கொண்டிருப்பதை அங்கு கேட்டுக்கொண்டிருந்த கலங்களின் ஓசையிலிருந்து புரிந்துகொண்டேன். நான் அதை செவிகூர்வதைக் கண்ட ꞉பானுமான் "இங்கு நிகழும் சொல்லாடலை திசைதிருப்புவது அங்கு கேட்கும் ஒலிகளே. உண்மையில் அங்கு சென்று உண்டு

முடித்து அங்கு அமர்ந்து பேசத்தொடங்கினால் மேலும் சிறப்பாக இருக்கும்" என்றான். "ஆம், சொல்லில் ஆர்வம் உடையவர்கள் மட்டுமே செவி கொடுப்பார்கள். எஞ்சியோர் கள்ளும் ஊனும் உண்டு மயங்கிவிட்டிருப்பார்கள்" என்றேன். ஒவ்வொருவரும் பொய்யாக சிரித்துக்கொண்டோம். இளிவரலினூடாக, ஏளனத்தினூடாக ஒவ்வொருவரும் அணுக்கத்தை நடித்துக்கொண்டோம்.

உண்மையில் உடன்பிறந்தாரிடம் ஒருவரோடொருவர் அணுக்கமிருந்ததா? இல்லை என்றே என் அகம் சொல்கிறது. ஏனெனில் அடிப்படையில் ஓர் ஐயம் தோன்றிவிட்டிருந்தது. மூத்தவர் எங்கள் அனைவரையுமே ஒற்று அறிகிறார் என்று எங்களுக்கு தெரியும். எங்களை எவரேனும் ஒற்றறிந்தால் நாமும் பிறரை ஒற்றறியத் தொடங்கிவிடுகிறோம். ஒற்றறிதல் நமது உள்ளத்தை கூர் கொள்ளச்செய்கிறது. நமது அனைத்து ஆற்றல்களும் அங்கு திரள்கின்றன. நாம் மகிழ்வு கொள்ளும் தருணம் என்பது நமது ஆற்றல்கள் திரளும்போதுதான். ஆகவே உளவறியப்படுபவரும் உளவு செய்பவரும் தங்கள் வாழ்வின் மகிழ்ச்சி மிகுந்த தருணங்களை அடைகிறார்கள். எனவே அதிலிருந்து அவர்களால் விடுதலை கொள்ள இயல்வதில்லை.

இடைவிடாது செய்யப்படும் ஒன்று நம்மை முற்றாக மாற்றிவிடுகிறது. உளவறியத் தொடங்கும் நாம் மிகச் சில நாட்களிலேயே ஒற்றர்களாக மாறிவிடுகிறோம். ஒற்றர்கள் எவரையும் நம்புவதில்லை. ஒற்றர்கள் முற்றிலும் தனித்தவர்கள். தந்தையே, யாதவ மைந்தர்களாகிய நாங்கள் அனைவருமே முற்றிலும் தனித்தவர்களாக ஆகிவிட்டிருக்கிறோம். எப்போதும் என்னுடன் இருந்துகொண்டிருக்கும் இளவலாகிய அதி꞉பானுவைக்கூட

நான் மாறாத ஐயத்துடனேயே அணுகினேன். அவன் என்னைக் கடந்துசென்று வேறெவருடனாவது உளத்தொடர்புடன் இருக்கிறானா என்பதை எப்போதும் கண்காணித்துக்கொண்டிருக்கிறேன்.

எங்களை அவைக்குள் கொண்டுசென்று ஒவ்வொருவராக அமரவைத்தனர் சிற்றமைச்சர்கள். குடித்தலைவர்கள் ஒவ்வொருவருக்கும் அவருடைய இடம் வகுக்கப்பட்டிருந்தது. எனினும் அதில் ஒவ்வொருவரையும் எவரேனும் கூட்டிச்சென்று அமர்த்த வேண்டியிருந்தது. அனைவரும் அமர்ந்து முடித்து ஆழ்ந்த அமைதி நிலவியது. ஒருவரை ஒருவர் ஐயத்துடன் பார்த்துக்கொண்டனர். தங்கள் இடம் மாறிவிடவில்லையே என்று. தங்களைவிட எவரும் அவைமுதன்மையும் அரசரின் அணுக்கமும் பெற்றுவிடவில்லையே என்று. கண்கள் ஒன்றையொன்று சந்தித்தபோது திகைத்தன. பொய்முறுவல் காட்டின. யாதவர்கள் இன்னும்கூட அவையில் புழங்கக் கற்றுக்கொள்ளவில்லை என்று தெரிந்தது.

வெள்ளிக்கோலுடன் நிமித்திகன் மேடைக்கு வந்து துவாரகையின் அரசர் ஃபானு அவை நுழைய இருப்பதாக அறிவித்தான். ஒவ்வொரு முறை அந்த அறிவிப்பு எழுகையிலும் அவையில் ஒரு சிறு விழிப்பரிமாற்றம் நிகழ்வதை நான் பார்த்திருக்கிறேன். எவர் முகத்திலும் இளிவரல் தோன்றுவதில்லை. எனினும் விழிகளில் விந்தையானதோர் மின்னொளி தோன்றி மறையும். மூன்று பகுதிகளாக அமைந்திருந்தது அந்த அறிவிப்பு. தொல்புகழ் கொண்ட யாதவ குலத்தில் சூரசேனரின் கொடிவழியில் பிறந்த மைந்தராகிய ஃபானு என்பது முதல் வரி. அந்தகக் குடியில்

பிறந்த அன்னை சத்யபாமையின் மைந்தரென எழுந்தவர் என்பது பிறிதொரு வரி. பாரதவர்ஷத்தின் கலைநிலமாகிய துவாரகையை முற்றிலும் வென்று கோல்கொண்டு அமர்ந்த பேரரசர் என்பது மூன்றாவது வரி.

மூன்று வரிகளுமே ஒன்றுடன் ஒன்று தொடர்பற்றவை. விருஷ்ணி குலத்தவன் என்றும் அந்தக குலத்தவன் என்றும் தன்னை அறிவித்துக்கொள்ளவேண்டிய நிலை எப்போதும் இருந்தது அவருக்கு. முன்பு ஒரு முறை பேசிக்கொண்டிருந்தபோது மூத்தவர் பிரஃபானு சிரித்தபடி "போஜர் குலத்தில் ஒரு பெண்ணை மணந்து போஜர் குலத்து அரசியின் தலைவருமாகிய என்று அறிவித்தால் என்ன?" என்று சொன்னார். ஆனால் மெய்யாகவே சில நாட்களுக்குப் பின்னால் அது நடந்தது. போஜர் குலத்து சுதீரரின் மகள் பௌமையை ஃபானு மணந்துகொண்டார். சுதீரையின் கொழுநர் என்று அவையில் அறிவிப்பது அத்தனை முறையானதல்ல என்பதனால் ஒவ்வொரு முறையும் அறிவிப்புகள் முடிந்த பின்னர் சுதீரர் எழுந்து கோல் தூக்கி மூத்தவரை வாழ்த்தும் மரபொன்று உருவாக்கப்பட்டது.

துவாரகையின் தலைவர் என்று அவரை அறிவிக்கையில் ஒவ்வொருவருக்குள்ளும் எழுந்த இளிவரலுக்கான அடிப்படை ஒன்றே. கசந்து சிரித்தும் வஞ்சம் கூர்கொண்டும் நாங்கள் பல முறை சொல்லிக்கொண்டது அது. ஒவ்வொருவரும் துவாரகையின் அரசர், ஆகவே எவரும் துவாரகையின் அரசர்களாக திகழ முடியாது. எண்பதின்மரில் ஒன்று குறைவோர் எவரேனும் இருக்கக்கூடுமென நான் எண்ணவில்லை. மூப்பு இளமை, வீரம், திறன் என பகுப்புகள் எல்லாம் அவைப்பாவனைகள். அனைத்திற்கும் அப்பால்

அனைவரும் இணையானவர்களே. தந்தையே, அங்கிருந்த அனைவருமே தந்தையைக் கொன்று தானென்று எழுந்தவர்களே. அங்கிருந்த அனைவர் விழிகளையும் நோக்கிக்கொண்டிருந்தேன். ஒன்றுபோலிருந்தன அவை. அனைத்து முகங்களும் ஒன்றுபோலத் தோன்றச்செய்தன விழிகள்.

நான் என் உடன்பிறந்தார் இருவருக்கு அருகே அமர்ந்திருந்தேன். அவர்கள் இருவரும் அங்கு நிகழவிருக்கும் அவை கூடலில் எந்த ஆர்வமும் இன்றி தங்களுக்குள் எதையோ மெல்ல பேசி சிரித்துக்கொண்டிருந்தார்கள். கொம்பொலி எழுந்ததும் ஒவ்வொருவரும் எழுந்து முறைப்படி வணங்கினோம். மூத்தவர் ஃபானுவும் மத்ரநாட்டு மூத்தவர் பிரகோஷனும் இணையாக அவைநுழைந்தனர். ஃபானு அவருக்கு இடப்பட்ட அரியணைபோன்ற பீடத்தில் அமர்ந்தார். சுஃபானு அவருக்குப் பின்னால் நடந்து வந்து இணையான பீடத்தில் அமர்ந்தார். அவையிலிருந்து எழுந்த அனைத்து வணக்கங்களையும் தானே பெற்றுக்கொள்வதுபோல் முகமும் தலையசைவுகளும் சுஃபானுவில் வெளிப்பட்டன. பிரகோஷன் இன்னொரு இணையான பீடத்தில் அமர்ந்தார். அவர் அருகே ஓஜஸ் அமர்ந்தான்.

நிமித்திகன் அவை தொடங்கவிருப்பதை அறிவித்து கோல் தாழ்த்தி வணங்கி அகன்றான். தன் கையிலிருந்த வெண் செங்கோலை ஏவலனிடம் அளித்துவிட்டு கைகளை மடித்து விரல்களை நெரித்து எளிதாக்கிக்கொண்ட பின் ஃபானு அவையினரிடம் "நன்று. மீண்டும் உண்ணப்போகிறோம்" என்றார். அந்த அவையை எளிதாக்கும்பொருட்டு அந்த வரியை சொன்னார். அது ஒரு முதிரா நகைச்சொல். ஆயினும் அவை

நகைத்தது. "இங்கே நிகழ்ந்துகொண்டிருப்பதை சுஃபானு அறிவிப்பார்" என்றார் ஃபானு. சுஃபானு தலைவணங்கிவிட்டு "அனைவரும் ஓரளவு அறிந்திருப்பீர்கள். எனினும் இந்த அவையில் முறையாக அறிவித்தாகவேண்டும். ஏனென்றால் யாதவ குடியின் தலைவர்கள் அனைவரும் இங்கே வந்திருக்கிறீர்கள். இங்கே நாம் முடிவெடுத்த பின்னரே அதை மதுராவுக்கும் மதுவனத்திற்கும் முறைப்படி தெரிவிக்கவேண்டும்" என்றார்.

அதன்பின் அவர் லக்ஷ்மணையின் மைந்தர் வந்து எங்களுடன் சேர்ந்துகொண்டதை அறிவித்தார். அவர்கள் எப்படியெல்லாம் எங்கெல்லாம் சிறுமைப்படுத்தப்பட்டனர் என்றும் எப்படி அவர்கள் முறையான இடத்திற்கு அறுதியில் வந்துசேர்ந்துள்ளனர் என்றும் சொன்னார். அவர்களை வாழ்த்தி குரலெழுப்பும்படி அவர் கோர யாதவ குடித்தலைவர்கள் கைதூக்கி வாழ்த்தொலி எழுப்பினார்கள். பிரகோஷன் தலைவணங்கி அவ்வாழ்த்துக்களை ஏற்றுக்கொண்டார். யாதவ குடித்தலைவர்களில் மூத்தவரான கன்மாஷர் எழுந்து வந்து தன் வளைதடியை பிரகோஷனிடம் கொடுத்தார். அந்த அவை வணக்கத்தை ஏற்று பிரகோஷன் அதை வாங்கி தலைமேல் தூக்கினார். யாதவர்களின் குடித்தலைவர்களில் ஒருவராக பிரகோஷன் மாறிவிட்டதான அறிவிப்பு அது. யாதவர்கள் களிவெறிக்கூச்சல் எழுப்பினர்.

அதன்பின் ஃபானு மத்ரர்கள் பேசும்படி கோரினார். பிரகோஷன் யாதவர்களிடம் அவர் மீண்டுவந்ததே தெய்வங்களின் ஆணை என்றும், மூதாதையரை மகிழ்விப்பது என்றும் சொன்னார். மத்ரர்களும் பிறரும் மகிழ்ச்சிக் கூச்சலிட்டனர். ஒவ்வொன்றும் முறையாக நிகழ்ந்துகொண்டிருப்பதை மூத்தவர் ஃபானுவின்

முகக்குறியில் கண்டேன். அவர் அஞ்சிக்கொண்டுதான் இருந்திருப்பார். ஏனென்றால் மங்கல நிகழ்வுகளை சிதைப்பதில் யாதவர்களுக்கென்றே ஒரு பயிற்சி உண்டு. அவர்கள் அவைமுதன்மை கொள்வதே அவ்வாறுதான். நான் முகங்களை ஒவ்வொன்றாக நோக்கிக்கொண்டிருந்தேன். எண்ணியிராதபோது ஒன்று தோன்றியது, வேறு எவருமே வேண்டியதில்லை, மூத்தவர் ஃபானுவே அதை செய்யக்கூடும். நான் புன்னகைத்துக்கொண்டேன்.

# கல்பொருசிறுநுரை - 21

**பகுதி நான்கு : அலைமீள்கை – 4**

அவைக்கூடல் முறையாக முடிந்ததும் ஒவ்வொருவரும் இயல்பானார்கள். எல்லாம் நிறைவாகவே நடந்துவிட்டது என்னும் எண்ணம் மூத்தவர் ஃபானுவுக்கு உருவானதை உணரமுடிந்தது. ஒவ்வொருவரும் அருகிருந்தவர்களிடம் எளிமையாக உரையாடலாயினர். அரங்கே வெற்றுப்பேச்சுகளின் கூட்டு முழக்கமாக ஆகியது. மூத்தவர் சுஃபானு என்னை நோக்கி "இன்று கடலாடச் சென்றிருந்தீர்கள் அல்லவா?" என்றார். அதை ஏன் அவர் கேட்கிறார் என்பதை உடனே நான் புரிந்துகொண்டேன். அங்கிருந்த அனைவருக்கும் அவர்கள் எங்கு செல்கிறார்கள் எவரை சந்திக்கிறார்கள் என்பது அவருக்குத் தெரியும் என்பதை காட்ட விரும்புகிறார்.

“ஆம், இன்று நான் சற்று ஓய்வாக உணர்ந்தேன்” என்றேன். சுஃபானு சிரித்து “ஆம், இங்கு நாம் நெடுநாட்களாக ஓய்வு நிலையிலேயே இருக்கிறோம். போர் வருகிறது என்ற எண்ணத்தால் ஓய்வை குற்றவுணர்வின்றியே நுகர்ந்தோம். ஆனால் இப்போதைய நிலையில் பெரும்பாலும் நாம் வாள்களை உருவ வாய்ப்பின்றியே வெற்றியை அடைந்துவிடுவோம் என்று படுகிறது. வென்றபின் அதன்பொருட்டு குற்றவுணர்ச்சியை நாம் அடையக்கூடும்” என்றார். அனைவரும் நகைத்தனர். அத்தருணத்தில் உவகை ஒலி எழுப்ப வேண்டுமென்பது அனைவருக்கும் தெரிந்திருந்தது. நான் சிரித்து “வெற்றிக்குப் பின் இங்கு வாழ்வது எப்படி என்பதை ஒத்திகை பார்த்துக்கொண்டிருக்கிறேன்” என்றேன். சுஃபானு மேலும் செயற்கையாக சிரித்து “நாம் அனைவரும் அதை நன்கு பயின்றிருக்கிறோம்” என்றார்.

அப்போது ஓர் எண்ணம் எனக்கு வந்தது. அது இயல்பான ஒரு செயல் அல்ல, சுஃபானு என்னை உளம்கொண்டிருக்கிறார். எவ்வகையிலோ என்னை அவர் வேறிட்டறிகிறார். அவ்வண்ணம் ஓர் அவையில் எவரும் என்னை நோக்குவதில்லை. அது எனக்கு அமைதியின்மையை உருவாக்கியது. சுஃபானு அப்பாலிருந்த யாதவ குடித்தலைவர் முக்தரிடம் “ஷத்ரியர் தரப்பிலிருந்து நம்மை நோக்கி வருவதற்கு அன்னை லக்ஷ்மணையின் மைந்தர் முன்னரே ஒருக்கமாக இருந்தனர். அவர்களுக்கு சில பொய்யான சொல்லுறுதிகளை அளித்து பிரத்யும்னனின் தரப்பு தங்களிடம் இழுத்தது. ஆனால் ஷத்ரியர்களின் ஆணவத்தின் முன் அடிமையென்று இருக்க இயலாது என்று உணர்ந்த அவர்கள் விலகினார்கள். அச்சினத்தை பயன்படுத்திக்கொண்டு அவரை தங்கள்பால் அழைத்தனர் சாம்பனின் தரப்பினர். அங்கு சென்ற

பின்னர்தான் தொல்குடியினராகிய மலைமக்கள் ஒருபோதும் இழிகுலத்தாராகிய அசுரருடன் இணைந்து இருக்க இயலாதென்பதை அவர்கள் புரிந்துகொண்டார்கள். அதன் விளைவாகவே இன்று நம்மை நோக்கி வந்திருக்கிறார்கள்" என்றார்.

மிக மரபான ஒரு பேச்சு அது. ஆனால் ஒருகணம் என்னை வந்து தொட்டுச் சென்ற சுஃபானுவின் கண்கள் வேறுவகை உணர்வு ஒன்றை காட்டின. "இந்த அவை அவர்கள் இயல்பாக இருக்குமிடம். அவர்களுக்குரிய பீடம் இங்குதான் முன்னரே போடப்பட்டிருக்கிறது. அவர்கள் இங்கு வருவதன் வழியாக நமக்கு ஆற்றல் சேர்த்திருக்கிறார்கள். உண்மையில் அவர்கள் இங்கு வருவதுடன் இங்கே போர் முடிந்துவிட்டதென்றே பொருள். இனி பூசலிடுபவர்கள் ஒன்றுக்கு மூன்று முறை எண்ணவேண்டும். நம்மிடம் படை வல்லமை இருக்கிறது. போர் வல்லமை சற்றே குறைவு, அதை அவர்கள் ஈடுகட்டுகிறார்கள். அவர்களை வரவேற்கும் முகமாக இந்த உண்டாட்டை ஒருக்கியிருக்கிறோம்" என்றார்.

அப்பால் ஃபானு ஏதோ சொல்ல அனைவரும் கைகளைத் தூக்கி வாழ்த்தினர். ஃபானு திரும்பி "உண்டாட்டு தொடங்குக..." என்றார். அரசரின் ஆணையை ஏற்று அவைநிமித்திகன் கொம்பொலி எழுப்பினான். ஊட்டறை நோக்கி அனைவரும் நிரைவகுத்துச் சென்றனர். இரு குலங்களையும் அவையில் பிரித்து அமரச்செய்திருந்தனர். ஆகவே உண்டாட்டு அறையில் அனைவரும் கலந்து அமரும்படி ஒருக்கியிருந்தனர். குடிமுறைமை இல்லாமல் தன்னியல்பான அமர்வு என்றால் அரசருக்கு என அரியணை நிகர்த்த பீடம் போடப்படாது. அவரும் பிறரைப்போல இயல்பாக ஏதேனும் ஒரு பீடத்தில்

சென்று அமர்வார். அங்கே குலங்கள் கலக்கும் அமர்வுக்கு அதுவே உகந்தது என சுஃபானு முடிவு செய்திருந்தார்.

மூத்தவர் ஃபானுவுக்கு தனி இருக்கை போடப்படவில்லை. அவர் சென்று இயல்பாக அமர்ந்தார். அவரிடம் சிரித்துப் பேசியபடி சென்ற பிரகோஷன் அங்கே முறைமை ஏதுமில்லை என்பதை ஓரக்கண்ணால் பார்த்த பின் அவர் அருகே சென்று இன்னொரு இருக்கையில் அமர்ந்தார். ஒவ்வொருவரும் சென்று அமர்ந்தனர். அனைவர் முன்னிலும் பீதர்நாட்டு வெண்ணைக்களிமண் தாலங்கள் வைக்கப்பட்டன. பளிங்குக் குடுவைகளில் யவனமதுவும் பீதர்நாட்டு எரிமதுவும் வந்தன. தொடர்ந்து அன்னமும் ஊனும் வந்தன. மூத்தவர் ஃபானு முதல் அப்பத்தை எடுத்து யாதவ முறைப்படி அதை இரண்டாகக் கிழித்து பாதியை பிரகோஷனின் தட்டில் வைத்து "தங்கள் நலனுக்காக" என்றார். "அன்னம் பெருகுக! உயிர் பெருகுக! புகழும் வெற்றியும் செல்வமும் நிலைகொள்க!" என்றார்.

ஃபானு அதைச் செய்வது எப்போதுமுள்ள வழக்கம், ஆனால் அன்று ஒருகணம் அவர் விழிகள் நிலை தடுமாறுவதை கண்டேன். அது ஏன் என்று எனக்கு புரியவில்லை. தாங்கள் இருந்த நாள் முதலே துவாரகையில் கடைபிடிக்கப்படும் அம்மரபு எங்களை ஒரு குடியென நிலைநிறுத்துவது. யாதவ குடிகள் காடுகளில் தங்கி அந்தியுணவு அருந்துகையில் ஒவ்வொரு முறையும் கிடைத்தலைவர் அவ்வகையில் அன்னம் பகுப்பதுண்டு. பகுக்கப்பட்ட அன்னமே பெருகும் என்பது யாதவர்களின் நம்பிக்கை. அன்னம் தன்னை நிலையமைத்துக்கொள்ளும் விழைவு கொண்டது. உயிர்க்குலங்களின் வேண்டுதலே அதை பெருக்குகிறது

என்பார்கள். "பெருகுக!" என்ற சொல்லுடன் அன்னத்தை பகுப்பதும் "உடலென்று அமைக" என்று சொல்லி உண்பதும் தொல்வழக்கம்.

நாங்கள் உண்ணத்தொடங்கினோம். "நமது படைகளை ஒருங்கிணைக்க வேண்டும்" என்று ஃபானு சொன்னார். "இன்று நமது படைகள் தனித்தனியே குலங்களாகவே பிரிந்துள்ளன. அது நன்றல்ல. அவ்வாறு குலங்களாக பிரிகையில் பூசல்களும் பெருகுகின்றன. வெற்றிகளை ஒப்பிட்டுக்கொள்ளத் தொடங்குகிறார்கள். நமது ஒவ்வொரு படைக்குழுவிலும் அந்தகர்கள் விருஷ்ணிகள் போஜர்கள் அனைவரும் இருக்கவேண்டும். மத்ரர்கள் அத்தனை படைப்பிரிவுகளிலும் பங்குகொள்ள வேண்டும்." மீண்டும் அவர் முகம் மாறுவதை கண்டேன். அதை அருகிருந்து கூர்ந்து பார்த்துக்கொண்டிருந்தேன். "ஆம், அதை நாம் பேசி முடிவெடுப்போம்" என்றார் பிரகோஷன். அப்போதுதான் மூத்தவர் ஃபானுவின் விழிகள் மாறியது பிரகோஷனின் விழிகளை அருகிருந்து கண்டமையால் என புரிந்துகொண்டேன்.

தன் கலத்திலிருந்த மதுவை பிரகோஷனின் கலத்தில் ஊற்றியபடி ஃபானு சொன்னார் "ஒன்றெனப் பெருகுவோம். இந்தப் பெருநகர் நமக்கு நமது தந்தையால் அளிக்கப்பட்டது. இங்கு நாம் செழிப்போம்." அனைவரும் கை தூக்கி பேரொலி எழுப்பி வாழ்த்துரைத்தனர். நான் பிரகோஷனை நோக்கிக்கொண்டிருந்தேன். நெடும்பொழுதுக்குப் பின்னரே ஒன்றை உணர்ந்தேன், ஃபானு கிழித்துக்கொடுத்த அந்த அப்பத்தை அவர் தன் தட்டின் ஒரு ஓரமாக தனியாக வைத்திருந்தார். அதை உண்ணவில்லை. பலமுறை இயல்பாக கை அங்கு சென்றபோதும் கூட அதை தொடாமல் தவிர்த்தார்.

பிறர் உண்டுகொண்டிருந்த போது மிக இயல்பாக அதை எடுத்து ஏவலர் எடுத்துகொண்டு சென்ற ஒழிந்த தட்டொன்றில் போட்டு அகற்றினார்.

அவர் விழிகளில் ஃபானு கண்டது என்ன என்று எனக்குத் தெரிந்தது. அதை அவர் எச்சில் என்று எண்ணுகிறார். அவருடைய மிச்சிலை உண்டு வாழும் நிலைக்கு தன்னை கொண்டுவந்து விட்டோமோ என்று ஐயுறுகிறார். எனில் படைக்கலப்பை அவர் எவ்வாறு எடுத்துக்கொள்வார்? மத்ரநாட்டுக்கு என்று துவாரகையில் அவர் சேர்த்து வைத்திருக்கும் படையை துண்டுகளாக உடைத்து செயலற்றதாக்கும் திட்டம் என்று அவர் புரிந்துகொள்ள வாய்ப்புண்டு. அங்கு இருந்து எழுந்து செல்கையில் அவர் அவ்வாறே கருதுவார் என நான் உறுதிகொண்டேன். நான் விழியோட்டி பார்த்தேன், மத்ரநாட்டார் பிறருடைய விழிகளை சந்தித்தபோதும் அவ்வாறே தோன்றியது. சலிப்புற்று என் கையிலிருந்த ஊன்துண்டை கீழே வைத்துவிட்டு சாய்ந்து அமர்ந்து நெளியும் திரைச்சீலைகளை பார்த்துக்கொண்டிருந்தேன்.

உண்டாட்டுகளின் முடிவில், தலையை நனைத்து எடைகொள்ளச் செய்துவிட்ட மதுவின் மயக்கில் எவரும் எவரையும் நோக்காமல் ஆவார்கள். ஒவ்வொருவரும் அங்குள்ள அனைவரையும் நோக்கி எதையேனும் சொல்லிக்கொண்டிருப்பார்கள். நான் மது அருந்தவில்லை. காலையிலிருந்து தொடர்ந்த பலவகையான உள அலைவுகளால் எனக்கு மது அருந்தத் தோன்றவில்லை. இனி எந்த உண்டாட்டிலும் மது அருந்துவதில்லை என எனக்கே ஆணையிட்டுக்கொண்டிருந்தேன். ஆகவே எனக்கு மதுவை

எவரும் ஊற்றித் தரவில்லை. நான் அருந்தினேனா என்று நோக்கவுமில்லை.

நான் உண்டாட்டுகளில் மதுவை விரும்பி அருந்துபவன். மது அருந்துவதனூடாக ஒவ்வாமைகளையும் சலிப்புகளையும் கடந்து சென்றுவிடலாம் என்று அறிந்திருந்தேன். ஓர் அவை என்னை அழுத்திச் சிறியவனாக்குகையில் மதுவினூடாக நான் விரிந்து எழுவேன். அங்கே என்னை காட்டிக்கொள்வேன். மது என்னை மிகைக்களி கொண்டவனாக்குகிறது என அனைவரும் அறிந்திருந்தனர். எழுந்து சென்று ஒவ்வொருவரையும் தழுவிக்கொள்வேன். ஒவ்வொருவரையும் முத்தமிடுவேன். தோளில் அறைந்தும் கைபிடித்து உலுக்கியும் உரக்க பேசுவேன். அனைவரையும் உறவுமுறை வைத்து அழைப்பேன். மதுமயக்கு அளிக்கும் எல்லா வாய்ப்புகளையும் பயன்படுத்திக்கொள்வேன்.

ஆனால் ஒவ்வொருமுறையும் அது எல்லைமீறிச் செல்லும். எங்கே அது என் கையை விட்டுச் செல்கிறது என்று என்னால் உணரமுடியாது. என்னை எவரேனும் சிறுமைசெய்வார்கள். சினம்கொண்டு கண்டிப்பார்கள். அது என்னை சீற்றம்கொண்டவனாக ஆக்கும். சில தருணங்களில் நானே எதையேனும் சொல்லி பூசலிடத் தொடங்குவேன். அது முதிர்ந்து அழுகையும் குமுறலும் என்று ஆகும். வசைபாடுவதும் நெஞ்சில் அறைந்து எழுந்து நின்று அறைகூவுவதும்கூட உண்டு. பின்னர் சோர்ந்து அறைமூலையில் விழுந்து சுருண்டு துயில்கொள்வேன். காலையில் எழும்போது நிகழ்ந்ததென்ன என்பது பொதுவாக நினைவில் இருக்காது. ஆனால் ஒட்டுமொத்தமாக பெரிய அளவில் ஏதோ நிகழ்ந்துவிட்டதென்று தோன்றும்.

ஒன்றுமே செய்யாமல், குறிப்பிடும்படி எதுவுமே நிகழாமல், வெல்லாமல் இழக்காமல் சென்றுவிட்ட வாழ்க்கையை அந்தச் சிறுபொழுது பலமடங்கு செறிவும் இசைவும் கொண்டதாக ஆக்கிவிடுகிறது என்றே என் அகத்தில் தோன்றும். அது உண்மையில் ஒரு நிறைவையே அளிக்கும். நான் வாழ்விலிருந்து உதிரவில்லை, எட்டுக் கைகளையும் கொக்கியாக்கி வாழ்வின்மேல் தொங்கிக்கொண்டிருக்கிறேன் என்ற நிறைவு அது. நான் மது அருந்திவிட்டு செய்த பூசல்களைக் குறித்து எவரேனும் என்னிடம் சொன்னார்கள் என்றால் அதன் பொருட்டு பொறுத்தருளும்படி கோரி கைகள் கூப்பி வணங்கி மீளமீள பிழைகூறி நின்றிருப்பேன். அப்போதுகூட என்னுள்ளத்தில் ஏதோ ஒன்று மகிழ்ந்துகொண்டிருக்கும். நான் ஒன்றும் இல்லாமலாகிவிடவில்லை, இதோ எல்லாக் கீழ்மைகளுடனும் சிறுமைகளுடனும் நானும் இருந்துகொண்டுதான் இருக்கிறேன்.

ஆனால் அன்று அவர்களிடமிருந்து பிரித்துக்கொள்ளவும் பிறிதொருவனாக ஆக்கிக்கொள்ளவும் விழைந்தேன். அவர்கள் அனைவரும் அடியிலாத சேற்றுப்பரப்பில் மெல்ல மெல்ல தாழ்ந்து சென்றுகொண்டிருப்பதாகவும் எனக்கு மட்டும் ஒரு மெல்லிய கொடி பிடிகிடைத்துவிட்டதாகவும் தோன்றியது. அவர்களை அணுகிப் பார்க்க வேண்டும் என்றும், அவர்கள் ஒவ்வொருவரும் பேசிக்கொண்டிருப்பதை கூர்ந்து அறிய வேண்டும் என்றும் எண்ணம் எழுந்தது. அதற்கு என் உள்ளத்தின் மீது மதுவை ஊற்றி நனைத்துக்கொள்ளக் கூடாது.

மூத்தவர் குழறிய குரலில் "இத்தனை பேர் வந்தபிறகு நான் இனி எதைப்பற்றி எண்ண வேண்டும்?" என்றார். "போர்! ஆம், நாளை காலையே போர்." சுஃபானு "ஆம், நாம் நாளை

அதைப்பற்றி பேசுவோம்" என்றார். "நாளையா? நாம் இப்போதே கிளம்பிச்செல்வோம். பிரத்யும்னன் வரட்டும். அனிருத்தன் வரட்டும். அல்லது நகர் நீங்கி ஓடிப்போன யாதவ அரசரே வரட்டும். யார் வந்தாலும் போராடிப் பார்ப்போம்" என்றார் ஃபானு. "நாம் போராடுவோம்!" என்று சொன்னார் சுஃபானு. அவரும் குழறிக்கொண்டிருந்தார். "படைகளை எழச்சொல்... என் ஆணை இது." சுஃபானு "ஆம், ஆணை! ஆணையிட வேண்டியதுதான்!" என்றார். "நாம் வென்றுவிட்டோம்" என்றார் ஃபானு.

அங்கு நின்று ஒற்றைப்பார்வையிலேயே ஒரு வேறுபாட்டை உணர முடிந்தது. ஒருவகையான வெற்றிக்களிப்பிலும் என்ன செய்வதென்றறியாத குழப்பத்திலும் உள்ளாழத்திலிருந்து எழுந்த அச்சத்திலும் ததும்பிக்கொண்டிருந்தனர் யாதவ மைந்தர். ஆனால் லக்ஷ்மணையின் மைந்தர்கள் அங்கு வரும்போதே சிறு ஒவ்வாமை கொண்டிருந்தனர். அதை மறைக்கும்பொருட்டு மிகையாக மது அருந்தினர். மேலும் மேலும் ஒவ்வாமை கொண்டனர். ஆகவே குடிக்கும்தோறும் சொல்லவிந்தனர். பெரும்பாலும் பிறர் சொல்வதை ஆம் என்றோ உண்மை என்றோ சொன்னார்கள். கை நீட்டி சுட்டிக்காட்டி எதையோ சொல்ல வந்து அச்சொல் உள்ளத்தில் எழாமல் வாயை மட்டும் அசைத்து விழிவிரித்து நோக்கினர்.

அந்த இளிவரல் நாடகம் நடந்துகொண்டிருந்தபோது ஏவலர் அருகிருந்த சிற்றறையின் கதவை சற்றே திறந்து உள்ளே ஒருவரை கொண்டு வந்தார்கள். உண்மையில் அது ஒரு பொருள் என்றுதான் நான் எண்ணினேன். சற்று பெரிதாக சமைக்கப்பட்ட ஏதோ உணவு. உணவுப்பொருட்களை வெண்பட்டால் போர்த்திக்கொண்டு வருவது துவாரகையில்

பழக்கம். அது யவனர்களிடமிருந்து வந்தது. அவர்கள் உண்ணுங்கலத்தில் அன்றி வேறெங்கும் உணவு திறந்திருப்பதை விரும்பாதவர்கள். ஆனால் மெல்லிய வெண்பட்டு அணிந்து மரத்தாலம் போன்ற ஒன்றில் உடல் சுருக்கி அமர்ந்திருந்தவர் ஒரு முதியவர் என்பதை உணர்ந்து நான் அப்போது இருந்த உளநிலையில் அவரை கைசுட்டி நகைத்தேன். "என்ன இது? இது சமைக்கப்பட்ட உணவா என்ன?" என்றேன்.

பிறர் என்னைப் பார்த்தபின் அவரை பார்த்தனர். "விந்தையான மனிதர்" என்று ஒரு யாதவ குடித்தலைவர் சொன்னார். "ஆம், இரண்டாக ஒடிந்து இருக்கிறார்" என்றார் இன்னொருவர். அப்பால் இருந்த இன்னொருவர் "அவரை ஏதோ சிறு பேழையில் வைக்க முயன்றிருக்கிறார்கள்" என்றார். அனைவரும் அவரை நோக்கி சிரித்தனர். "அஷ்டவக்ரர்!" என்றார் ஒருவர். "தசவக்ரர்." இன்னொரு குரல் "சதவக்ரர்" என்றது. "அதற்கு இந்த உடலில் இடமேது? இவர் வக்ரர்! ஒற்றை வளைவுதான்..." ஒருவர் எழுந்து அவர் அருகே வந்து "நான் சொல்கிறேன், இவரை வில் என நினைத்து எவனோ நாணேற்ற முயன்றிருக்கிறான்" என்றார். பெருஞ்சிரிப்புகள், கூச்சல்கள்.

அவருடைய கண்கள் ஆழத்தில் வளைக்குள் தெரியும் பெருச்சாளியின் கண்கள்போல் மின்னிக்கொண்டிருந்தன. அவரை அவர்கள் தாழ்ந்த பீடத்தில் அமர்த்தினர். அவரை கொண்டு வந்த ஏவலன் தலைவணங்கி என்னிடம் "இங்கே இவரை கொண்டு வரும்படி சொன்னார்கள். அழைப்பு வரும் என்று நெடும்பொழுதாக எதிர்பார்த்து பக்கத்து தனியறையில் காத்திருந்தோம். அதன் பின் அனைவரும் மறந்துவிட்டார்கள்

என்று உணர்ந்து இவரை திரும்ப கொண்டு செல்லலாம் என்று இவரிடமே ஒப்புதல் கேட்டேன். ஆனால் இவர் அவைக்கு வர விரும்பினார்" என்றான்.

அவர் அவனை கையசைத்து செல்லும்படி பணித்துவிட்டு என்னை நோக்கி "அந்தணனாகிய என் பெயர் கணிகன்" என்றார். எனக்கு அவரை பார்த்தபோது அப்போதும் அது ஒரு மானுடத்தோற்றம் என்று தோன்றவில்லை. ஆகவே அக்குரல் அவரிடமிருந்து எழுந்தது விலங்கொன்று பேசத்தொடங்கியதுபோல வியப்பை அளித்தது. "நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்?" என்று நான் கேட்டேன். "இறுதியாக நான் அஸ்தினபுரியில் இருந்தேன். மண்மறைந்த மாவீரர் துரியோதனனும் அவர் மாதுலர் சகுனியும் என் புரவலர்களாக இருந்தனர். அவர்கள் களம்பட்ட பின் அங்கிருந்து கிளம்பி சில குருநிலைகளில் தங்கினேன்" என்றார்.

என் அருகே நின்றிருந்த யாதவர் ஒருவர் கை நீட்டி "பேசுகிறது! அது பேசுகிறது!" என்றார். "வாயை மூடுங்கள்" என்று அவரிடம் சொல்லிவிட்டு நான் மீண்டும் "இப்போது எங்கிருந்து வருகிறீர்கள்?" என்று கேட்டேன். "நான் சாந்தீபனி தவச்சாலைக்கு சென்றேன். இளைய யாதவரை சந்திக்க விழைந்தேன். அங்கே அவர் இல்லை. இங்கு இருப்பார் என்றார்கள். அவரை பார்த்துவிட்டுச் செல்லலாம் என்று வந்தேன். அவர் முன்பு என்னை இங்கு வரும்படி ஆணையிட்டிருந்தார்" என்றார். "இங்கிருந்து அவர் நீங்கி நெடுநாட்களாகின்றன. மாபாரதப் போர் தொடங்குவதற்கு நெடுநாட்களுக்கு முன்னரே அவர் இங்கிருந்து சென்றுவிட்டார்" என்றேன்.

என் பின் நின்றிருந்த ஒரு யாதவ முதியவர் "உண்மையில் இந்நகருக்கும் அவருக்கும் இன்று தொடர்பில்லை" என்றார். "இப்போது இந்நகரின் அரசர் சத்யபாமையின் மைந்தரும் அந்தகக் குடித்தலைவருமான ஃபானு" என்றார். பின்னிருந்து ஒருவர் "அவர் விருஷ்ணிகளின் தலைவர்" என்றார். "ஆம், விருஷ்ணிகளின் தலைவரும்கூட" என்று இவர் சொன்னார். "ஆனாலும் அந்தகர்களின் குடியில் பிறந்தவர். குடிப்பிறப்பு அன்னைமுறை என அமைவது அந்தகர்களின் மரபு" என்றார். அவர்கள் தங்களுக்குள் பேசிக்கொள்ள நான் அவரிடம் "அவர்கள் சொல்வது உண்மை. இங்கு என் தந்தை இப்போது எவ்வகையிலும் இல்லை. நகரமே அவரை மறந்துவிட்டிருக்கிறது. அவர் எப்போது வருவார் என்று இப்போது கூறவும் முடியாது" என்றேன்.

"ஆம், இங்கு வந்ததுமே நான் நிலைமையை அறிந்துகொண்டேன். அது இயல்பானதுதான்" என்று அவர் சொன்னார். "அவர் இங்கிருக்க வாய்ப்பில்லை என்று இந்நகரத்தில் நுழைந்ததுமே நான் அறிந்தேன்." நான் "நீங்கள் இந்நகருக்கு முன்பு வந்திருக்கிறீர்களா?" என்றேன். "உண்மையில் நான் பாலைநிலத்தில் வாழ்ந்தவன். அஸ்தினபுரியில் சில காலம் இருந்தேன் என்பதைத் தவிர்த்து நான் எந்த ஊருக்கும் சென்றதில்லை. ஆனால் ஒவ்வொரு ஊரைப்பற்றியும் அறிந்துகொண்டிருக்கிறேன். அகன்றிருப்பவர்கள் மேலும் அணுகி அறிகிறார்கள், நெடுந்தொலைவில் இருக்கும் கணவன் மனைவியையும் குழந்தைகளையும் எண்ணிக்கொண்டிருப்பதுபோல."

"ஆகவே இந்நகரின் ஒவ்வொரு அடையாளமும் எனக்கு தெரியும். இதன் எல்லை கடந்து உள்ளே வந்ததுமே இங்கு

ஒவ்வொன்றும் மாறியிருப்பதைக் கண்டே. ஏன் என்று உடனே புரிந்துகொண்டேன். ஆனால் நான் நெடுந்தொலைவு வந்துவிட்டேன். என் உடல்நிலை இவ்வண்ணம் இருக்கையில் இத்தனை தொலைவு கடந்து வருவது எனக்கு எளிதல்ல. மீள்வதற்கு சற்றே நான் தேறியாக வேண்டும். ஆகவே இங்கு சில காலம் இருந்தே ஆகவேண்டும்" என்றார். "இங்கு நீங்கள் இருக்கலாம். இங்கு அந்தணர்கள் எப்போதுமே விரும்பப்படுகிறார்கள்" என்றேன்.

"நான் நூல்நவின்றவன். நாட்கோன்மையில் மிகவும் உதவியானவன், அமைச்சு அறிந்த அந்தணன்" என்று அவர் சொன்னார். "எனது இடம் நெறிநூல் ஆய்வு. முப்பதாண்டுகளுக்கும் மேலாக அதிலேயே வாழ்ந்திருக்கிறேன். நான் கற்ற அத்தனை நெறிநூல்களையும் நினைவுகூரவும், தருணத்திற்கு உகக்க அவற்றை தொகுக்கவும், உரிய முறையில் பயன்படுத்தவும் என்னால் இயலும்" என்றார். "பயன்படுத்துவது என்றால்?" என்றேன். "உருமாற்றுவது" என்றார். நான் வியப்புடன் "நெறிகளை உருமாற்றுவதா?" என்றேன். "உருமாற்றுவதனால் என்ன பயன்? நெறிகள் என்பவை எங்கோ எவருக்கோ என சொல்லப்பட்டவை. எங்கும் எவருக்கும் என நிலைகொள்பவை. நம் தேவைக்கேற்ப அவற்றை மாற்றிக்கொள்வதனால் என்ன பயன்?"

அவர் "கடல் அங்கிருக்கிறது, அலைகொண்டிருக்கிறது, முடிவிலியாக தோற்றம் அளிக்கிறது. நமக்குரியவற்றை நமக்குரிய கலத்தில் மொண்டால் மட்டுமே அதனால் நமக்குப் பயன்" என்றார். "ஆம், ஆனால் அது கடல் அல்ல" என்றேன். "இல்லை, கடலின் எவ்வியல்பையும் கலத்தில் அள்ளிய நீரில் நாம் பார்க்க இயலாது, அதை கடலென்று சொல்லலாம்" என்றார்

அவர். "ஆனால் நமக்கு கடல் எவ்வகையிலேனும் பயன்படும் என்றால் அவ்வாறுதான்." நான் "விந்தையானது" என்றேன்.

அவர் "அவ்வாறு இடமும் காலமும் கருதி பிரித்தெடுக்கப்பட்ட ஒரு நெறி, தனி ஒரு மனிதரால் முன்வைக்கப்படும் நெறி, எந்நிலையிலும் பொதுவான நெறி அல்ல. பொதுநெறியிலிருந்து பிரிந்தது அது. ஆனால் அதற்கு பொதுநெறியின் நோக்கம் இல்லை. ஆகவே பொதுநெறியின் இயல்புகளும் எதுவுமில்லை" என்றார். "நெறியின் மாறாத இடர் என்பது இதுதான். அது பொதுநெறியாகவே நிலைகொள்ள இயலும், அந்நிலையில் அதற்கு எந்தப் பயனும் இல்லை. பயன்படுகையில் அது தனிநெறி. பொதுநெறிக்குள்ள எந்த இயல்புகளும் அதில் இல்லை."

அவர் கண்களைச் சிமிட்டி புன்னகைத்து "ஆனால் ஒவ்வொரு தனிநெறியும் அப்பெரும் பொதுநெறியின் இன்னொரு வடிவென்றே தன்னை முன் நிறுத்துகிறது. பொதுநெறிக்கு வேதங்களின் சான்றொப்புதல் உள்ளது. மூதாதையரின் ஏற்பு உள்ளது. வழிவழி வந்த அனைத்து நம்பிக்கைகளும் அதில் உள்ளன. தெய்வங்கள் அதை சூழ்ந்து அமைந்துள்ளன. அது அடையும் அனைத்து ஆற்றலையும் இச்சிறு தனிநெறி தானும் அடைகையிலேயே அது பயனுள்ளதாகிறது. அரசன் தன் இயல்புக்கும் தேவைக்கும் உகந்த தனிநெறிக்கு தெய்வங்களின் பொதுநெறி என்னும் அடையாளத்தை அளிக்கும் பொருட்டே அமைச்சென்றும், அந்தணர் என்றும், முனிவர் என்றும், தெய்வங்கள் என்றும் நான்கு வகை அவைகளை அமைத்திருக்கிறான்" என்றார்.

நான் "விந்தை! இப்படி ஒரு எண்ணத்தை நான் அறிந்ததே இல்லை" என்றேன். "நான் அவற்றை உரைக்கவே இங்கு

வந்தேன். எனது உதவி இங்கு அரசருக்கு தேவைப்படுகிறது" என்றார்.

# கல்பொருசிறுநுரை - 22

**பகுதி நான்கு : அலைமீள்கை – 5**

தந்தையே, கணிகர் மிகத் தாழ்ந்த குரலில் பேசினார். பேசும்போது விழிகள் அச்சொற்களுக்கு தொடர்பே அற்றவைபோல மின்னிக்கொண்டிருக்கும். அவர் நகையாட்டு உரைப்பதில்லை. ஆனால் நகையாடுவதுபோலத் தோன்றும். ஏனென்றால் அவர் விழிகளில் ஒரு சிறு புன்னகைபோல் ஓர் ஒளி இருக்கும். அவர் பேசுவதை நாம் செவிகொடுக்காமல் இருக்க முடியாது. ஒவ்வொரு சொல்லையும் உளம்பதிக்காமல் அகலவே இயலாது. அது ஏன் என்று அன்றே எண்ணிக்கொண்டேன், இன்றும் எண்ணுகிறேன். அவர் முற்றிலும் புதியவர், அவைக்கு அப்போதுதான் வந்திருந்தார். ஆனால் நான் அவர் சொற்களில் என்னை மூழ்கடித்தவன்போல் அவர் முன் அமர்ந்திருந்தேன்.

கணிகர் "நான் இங்கு வரும்போது இளைய யாதவரைப் பார்த்து உசாவி திரும்பிப்போகும் எண்ணத்திலிருந்தேன். வந்தபின்னரே யாதவக் குடியின் முதன்மை அரசராகிய ஃபானுவை முறைமீறி நிலம்விழையும் ஷத்ரியர்களும் கட்டுகளற்ற அசுரர்களும் எதிர்ப்பதை கண்டுகொண்டேன்" என்றார். "என் பணி யாதவர்களுக்கு உதவியாக இங்கே களம்நிற்பதே என

உணர்ந்தேன். ஆகவே நேராக வந்து அரசரை பார்த்தேன். நல்லவேளையாக நான் வந்தநாளில் இங்கே லக்ஷ்மணையின் மைந்தர் யாதவர்களுடன் கைகோக்கும் நிகழ்வு உருவானது. அரசர் உளம் மகிழ்ந்த நிலையில் இருந்தார். என்னை இந்த அவைக்கு வரும்படி சொன்னார்."

நான் "இயல்பாக நீங்கள் ஷத்ரியர்களை ஆதரிக்க வேண்டியவர் அல்லவா? அந்தணர்கள் எப்போதும் ஷத்ரியர்களுடன்தானே நிலைகொள்வார்கள்?" என்றேன். "ஆம், அது மெய். ஆனால் அந்தணர்கள் ஷத்ரியர்களால் முறையாக அழைக்கப்பட வேண்டும். அவர்கள் என்னை அழைக்கவில்லை. அவர்கள் அவையில் இன்று என்னைப்போல் ஆற்றல் மிக்க அந்தணர்கள் எவருமில்லை. ஏனெனில் பிரத்யும்னன் தன்னை ஷத்ரியரென்று எண்ணவில்லை. அங்கே அந்தணர் செல்வதில்லை. ஏனென்றால் பிரத்யும்னன் தன்னை அசுரக்குருதி சார்ந்தவர் என்றுதான் உள்ளாழத்தில் எண்ணிக்கொண்டிருக்கிறார்" என்றார். நான் "எவ்வண்ணம்?" என்றேன். "அன்னம்போல ஒருவரை அடிமைப்படுத்துவது பிறிதொன்றில்லை. சுகவனத்தின் கிளிகள் வேதம் ஓதுகின்றன என்கிறார்கள். எனில் அது அங்கு பழுக்கும் கனிகளின் சுவையாலேயே. பிறிதொரு காட்டில் அவை வளர்ந்தால் அவற்றின் நாக்கில் வேதம் எழுவதில்லை" என்றார்.

"அது எவ்வண்ணம்?" என்று கேட்டேன். "அவ்வண்ணமே" என்று அவர் என்னை கூர்ந்து நோக்கியபடி சொன்னார். "எண்ணி நோக்குக!" என்று அவர் மேலும் சொன்னார். "உண்ணும் உணவுபோல் உயிரை நேரடியாக சென்று தொடும் பிறிதொன்றுண்டா? எண்ணங்களும் கனவுகளும் உணர்வுகளும் உயிரின் வெளிப்பாடுகளல்லவா? சுடரிலிருந்து ஒளியும்

புகையும் வெப்பமும் எழுவதுபோல அல்லவா அவை எழுகின்றன?" நான் "ஆம்" என்றேன். "அவ்வுயிரைப் பேணும் உணவு அம்மூன்றையும் ஆளுவதில்லையா என்ன?" என்றார். "ஆம், ஆள்கிறது" என்றேன். "யாதவ இளவரசே, சம்பராசுரரின் உணவை பன்னிரண்டு ஆண்டுகளாக உண்ட பிரத்யும்னன் எச்சிந்தனைகளால் ஆளப்படுகிறார்?" என்றார்.

"நான் அதை எண்ணியதில்லை" என்றேன். "எண்ணுக, அவர் ஒருவகையில் அசுரமைந்தன்!" நான் திகைப்புடன் "என்ன சொல்கிறீர்கள்?" என்றேன். "இளவரசே, இதுவல்லவா நிகழ்ந்தது? விதர்ப்பினியாகிய ருக்மிணி தன் முதல் மைந்தனை நகருக்கு வெளியே இருந்த பேற்றரண்மனையில் ஈன்றார். மைந்தனுக்கு இருபத்தெட்டாம் நாள் இடைநூல் அணிவிக்கும் விழா ஒருக்கப்பட்டிருந்தது. அதற்கு முந்தைய நாள் அவர் தன் தோழியருடன், இளமைந்தனுடன் நகர்நுழைந்தார். அன்று அரசி தேரில் கொலுவிருந்து மக்களுக்கு காட்சியளித்தார். மைந்தனை மக்கள் மறுநாள்தான் காணமுடியும், விழிக்கோள் ஒழிய இடைக்காப்பு அணிவித்தபின். ஆகவே அருகே வந்த பல்லக்கில் இளஞ்சேடியர் இருவர் மைந்தனுடன் வந்தனர்" என்றார் கணிகர்.

"அணியூர்வலம் அரண்மனையை அடைந்ததும் பல்லக்கும் உடன்வந்து நின்றது. ஏவற்பெண்டுகள் அதற்குள் ஏறிப் பார்த்தபோது இரு சேடியரும் நஞ்சூட்டப்பட்டு இறந்துகிடந்தனர். அவர்களிடம் இருந்த மைந்தனை காணவில்லை. அச்சேடியரை மயக்கியது எந்த நஞ்சு என்று கண்டுபிடிக்க இயலவில்லை. மைந்தன் எங்கு சென்றார் என்றும் அறியமுடியவில்லை. இளைய யாதவர் அன்று நகரில் இல்லை. அவர் அன்று இரவுதான் வந்துசேர்வதாக இருந்தது.

நகரை ஆண்டுகொண்டிருந்தவர் அவருடைய சாலை மாணாக்கரான ஸ்ரீதமர். உடனடியாக நகரின் அனைத்து வாயில்களும் மூடப்பட்டன. கலங்கள் எவையும் கடல் நீங்கலாகாதென்று ஆணையிடப்பட்டன. நகர் எங்கும் வீரர்கள் சென்று ஒரு சிறு இடுக்கு கூட எஞ்சாமல் உசாவி நோக்கினர். எங்கும் அவர் இல்லை."

"மைந்தன் முற்றாகவே மறைந்துவிட்டிருந்தார். பின்னர் இறந்துகிடந்த இரு சேடியரையும் ஆராய்ந்த மருத்துவர்கள் அவர்களுக்கு நஞ்சூட்டப்பட்டிருக்கிறது என்றும், அந்த நஞ்சு மண்ணில் இருந்து எடுக்கப்படும் ஒரு வகை நச்சுக்கல்லின் புகையால் ஆனது என்றும், அவ்வகை நச்சு அசுரர்களுக்கு மட்டுமே உரியவை என்றும் கூறினார்கள். அசுரர்களின் சிறைகளில் எங்கேனும் இளமைந்தன் இருக்கிறாரா என்று பார்ப்பதற்காக ஒற்றர்கள் அனுப்பப்பட்டனர். எச்செய்தியும் வரவில்லை. இளைய யாதவர் தன் ஒற்றர்களின் நுண்ணுணர்வால் அசுரர் வந்த வழியை கண்டடைந்தார். அவர்களின் அடையாளங்களைக் கொண்டு மைந்தனை இங்கு வந்து தூக்கிச்சென்றவர்கள் சம்பராசுரரின் ஒற்றர்கள் என்று கண்டடைந்தார்."

"ஆனால் சம்பராசுரரின் அரண்மனையிலோ அகத்தளத்திலோ அம்மைந்தன் வளர்க்கப்படவில்லை. சம்பராசுரரின் அவையிலிருந்த சேடியொருத்தி பல நாட்கள் முன்னரே தனக்கு வயிற்றில் கரு தங்கியிருப்பதாக நடித்துக்கொண்டிருந்தாள். கையில் குழந்தையுடன் அவள் மீண்டும் பணிக்கு வந்தபோது அது அவள் குழந்தை என்று நம்பப்பட்டது. அவ்வாறு அகத்தளத்தில் அக்குழவி வளர்ந்தது. பதினாறாண்டுகள் அம்மைந்தன் இல்லாமையினால்

அவருடைய இளவலாகிய சாருதேஷ்ணனை இளவரசர் என்று பட்டம் கட்டினார்கள். அவர் இளவல் என அரியணை அமர்ந்து ஆட்சி செய்தார், அனைத்துச் சடங்குகளிலும் அவரே அமர்ந்தார்."

"அந்நிலையில் ஒருநாள் கடலாடச் சென்ற பிரத்யும்னன் எண்ணியிராது எழுந்த அலைக்கொந்தளிப்பால் நிலையழிந்த படகிலிருந்து நீரில் விழுந்தார். அசுரர்கள் கடலில் பாய்ந்தும் வலைவீசியும் அவரை தேடினர். அலைகளில் அவர் மறைந்துவிட்டார். அசுரர்களின் படகுகளை அலைகள் அறைந்து வேறு திசைக்கு கொண்டுசென்றன. மைந்தனை இழந்து திரும்பி வந்த அசுரர்களைக் கண்டு சம்பராசுரர் கடுமையாக சினம்கொண்டார். வாளை உருவி அவர்களின் தலைகளை வெட்டி வீழ்த்தினார். மீண்டும் பல நாட்கள் மைந்தனுக்காக தேடினார்கள். அவர் உடல் கிடைக்கிறதா என்று கடலோரங்கள் முழுக்க அலைந்து நோக்கினார்கள். மைந்தன் மறைந்துவிட்டிருந்தார்."

"ஆனால் அவர் சாகவில்லை. அவரை கடல்வாழ் முதலைமீன் ஒன்று நீரிலிருந்து தூக்கி வானில் வீசி மூழ்காது காப்பாறியது. அவரை அது தன் வாலாலும் மூக்காலும் தட்டி உந்தி அங்கிருந்த பாறை ஒன்றுக்கு கொண்டுசென்றது. பாறையில் தொற்றி ஏறி மயங்கிக் கிடந்த அவரை மீனவர் சிலர் கண்டடைந்தனர். அவர்கள் தெற்கே நெடுந்தொலைவிலிருந்து வந்தவர்கள். வீசிய புயலால் நிலையழிந்து திசைமாறி அலைந்தவர்கள். அவர்கள் அவரை கொண்டுசென்றனர். தங்கள் குடிலில் மருத்துவம் செய்து உயிர்மீட்டனர்."

"ஆனால் மைந்தன் மொழியை மறந்திருந்தார். நினைவுகளை இழந்திருந்தார். அவர் எவர் என அவர்களால் கண்டறிய

முடியவில்லை. அவர் அவர்களிடம் மேலும் சில ஆண்டுகள் வாழ்ந்தார். ஒருநாள் அவர் உடல் அடையாளங்களைக் கண்ட ஒற்றர்கள் சிலர் சம்பராசுரரிடம் சென்று மைந்தனை மீன்குடியினர் சிறைப்பிடித்து வைத்திருப்பதாக சொன்னார்கள். படைகளுடன் சம்பராசுரரே மீன்குடிகளை வெல்லும்பொருட்டு வந்தார். மீன்குடியினர் கரைப்போர் அறியாதவர் என எண்ணி அவர் வெறும் எழுபது படைவீரர்களுடன் வந்தார். அவர்கள் மீன்குடியினரின் ஊரை தாக்கினார்கள்.”

“நாணொலி கேட்டதும் இயல்பாகவே பிரத்யும்னனின் தோள்கள் எழுந்தன. வெளியே ஓடிச்சென்று தங்களை தாக்கவந்த இருவரை தூண்டில்வேல் எறிந்து வீழ்த்தி அவர்களில் ஒருவரின் வில்லையும் அம்புகளையும் எடுத்துக்கொண்டார். அவருடைய வில்திறனுக்கு முன் சம்பராசுரரால் நிற்க முடியவில்லை. போர்க்களத்திலேயே பிரத்யும்னனின் அம்பேற்று சம்பராசுரர் மண்படிந்தார். அசுரப்படை தோற்று ஓடியது. அவர்கள் மேலும் படைகளுடன் வருவதற்குள் மீன்குடியினர் தங்கள் படகுகளில் ஏறி கடலுக்குள் சென்றுவிட்டனர்.”

“சம்பராசுரர் கொல்லப்பட்ட செய்தியை அறிந்ததுமே அது தன் மைந்தன் பிரத்யும்னன்தான் என இளைய யாதவர் உய்த்தறிந்தார். உடனே துவாரகையின் படைகள் கடற்கரை நோக்கி சென்றன. கலங்களும் கடல்வழியே சென்றடைந்தன. அசுரர்கள் அஞ்சி பின்னடைந்தனர். பிரத்யும்னன் இளைய யாதவரின் மைந்தனே என்று அவர் உடலில் இருந்த எட்டு அடையாளங்களைக் கண்டு உறுதிசெய்தனர். அதை அவருக்கும் கூறி ஏற்கச் செய்தனர். அவர் துவாரகைக்கு மீண்டார். தனக்கு வாழ்வளித்த மீனவர்களுக்கு நன்றிசொல்லும் பொருட்டு தன்

கொடியில் முதலைமீன் அடையாளத்தையும் பொறித்துக்கொண்டார்.”

மெய்யாகவே நான் அக்கதையை அறிந்திருக்கவில்லை. நான் அறிந்தது வேறொரு கதை, குழந்தைகளுக்குச் சொல்வதற்கு ஏற்றது. நான் “இந்தக் கதை எனக்கு வேறுவகையில் சொல்லப்பட்டிருக்கிறது” என்றேன். “ஆம், கதைகளை சொல்லிச் சொல்லி பயனற்றவையாக ஆக்கி நிலைநிறுத்துவதே சூதர்களின் தொழில்” என்று கணிகர் சொன்னார். நான் சிரித்தேன். “கதைகளினூடாக அரசியல் உருவாகிவிடக்கூடாது என்பதை அரசர்களும் விரும்புகிறார்கள்” என்றார் கணிகர். “உங்கள் அரசியல்கதையை சொல்லுங்கள்” என்றேன்.

“துவாரகைக்கு வந்தபின் பிரத்யும்னன் சம்பராசுரரின் குடிகளுடன் இசைவுகொண்டார். அவர்களும் அவரை தங்கள் இளவரசராக ஏற்றுக்கொண்டார்கள். சம்பாசுரரின் குடியிலேயே மணம்கொண்டார்மாயாவதி, சாருமதியும் அவருடைய முதல் மனைவியர்.,தன் அன்னை ருக்மிணியின் மூத்தவர் ருக்மியின்மகள் ருக்மவதியையும் மணந்துகொண்டார். அவ்வாறாக மைந்தனை மீட்டெடுத்தனர் துவாரகையினர். அவரை மீண்டும் ஷத்ரியகுடியுடன் குருதியால் இணைத்தனர். ஆனால் துவாரகையினர் ஒன்றை நோக்க விட்டுவிட்டிருந்தனர். அசுரர்கள் அன்னத்தை வழிபடுபவர்கள். அன்ன வடிவிலேயே இங்கு தெய்வம் எழுந்தருள முடியும் என்று தொல்நம்பிக்கையாக சாங்கியம் கூறுகிறது. ஆகவே அவர்கள் தங்கள் அன்னத்தில் ஒரு பகுதியை முறைப்படி நுண்சொல் உரைத்து அளித்து அவரை வளர்த்திருக்கிறார்கள்.”

“அன்னத்தால் அவரை தொடர்பு கொண்டிருக்கிறார்கள்” என்றபோது கணிகரின் விழிகள் மேலும் கூர்மைகொண்டன.

“அவரில் ஓடும் குருதி அசுரர்களுடன் தொடர்புடையது. இனி அதை அவரிடமிருந்து நீக்கவே முடியாது. ஆகவேதான் ஷத்ரியகுடியில் மூன்று இளவரசியரை மணந்த பின்னரும் அவர் அசுரப்பெண்ணைக் கண்டு காதல்கொண்டார். அசுரகுலச் சக்கரவர்த்தியான ஹிரண்யாக்ஷரின் குடியில் வந்த வஜ்ரநாபரின் மகள் பிரபாவதியை அவர் மணந்தது அவ்வாறுதான். தன் மைந்தன் அனிருத்தன் பாணாசுரரின் மகள் உஷையை விழைந்தபோது படைகொண்டு சென்று அப்பெண்ணைக் கவர்ந்து அவருக்கு மணமுடித்தார். அப்பெண்ணின் குருதியில் பிறந்த மைந்தனுக்கு வஜ்ரநாபன் என்றே பெயரிட்டார்.”

“அம்மைந்தன் நாளை துவாரகையை ஆளவேண்டும் என்று கனவு காண்கிறார் அவர்” என்று கணிகர் தொடர்ந்தார். “வஜ்ரநாபன் அசுரரேதான். நஞ்சு கலந்த பால் பாலே அல்ல, நஞ்சுதான். அந்தணனாகிய நான் ஒருபோதும் அசுரர்களை அரசர் என ஏற்க இயலாது. கறைபட்ட ஷத்ரியர், அசுரர், நிஷாதர் என்னும் மூன்று தரப்புகளுக்கு எதிராக யாதவர்களை வலுப்படுத்துவது என் கடன்.” நான் “ஆனால் அவரை ஷத்ரியர் என்கிறார்கள்” என்றேன். அவர் சீற்றத்துடன் “ஷத்ரியர்க்ள் என்பவர்கள் யார்? ஆற்றல்கொண்டு நிலம்வென்றபின் வேதவழிநின்ற அந்தணர்கள் சொல்கேட்டு நடக்கும் அனைவரும் ஷத்ரியரே. அவ்வண்ணமென்றால் யாதவரும் ஷத்ரியரே” என்றார்.

“அறிக! தொன்மையான சேதிநாட்டு அரச குலமும், விதர்ப்ப அரசகுலமும் யாதவக் குடியிலிருந்து எழுந்தவையே. அஸ்தினபுரியின் பாண்டவர் யாதவஅன்னையின் மைந்தர் அல்லவா? இன்று பாரதவர்ஷம் எங்கும் பரவிக்கொண்டிருப்பது

யாதவக் குருதி. அதை மேம்படுத்தி ஷத்ரியர் என்றாக்கி நிலைநிறுத்துவது அந்தணர்களின் பொறுப்பு" என்றார். "நான்கு எனத் திரண்ட தொல்வேதம் ஷத்ரியர்களை முற்றாக வகுக்கிறது. அவர்களுக்குரிய நெறிகளை வகுத்து அந்நெறிகொண்டோர் அனைவரும் ஷத்ரியரே என்கிறது ஐந்தாம் வேதம். நான் இளைய யாதவர் அருளிய ஐந்தாம் வேதத்தை ஏந்தியே இந்நகருள் புகுந்தேன்" என்றார் கணிகர்.

"இங்கு தங்கள் வரவு நலம் தருக!" என்றேன். "ஆனால் தாங்கள் நுழைந்த தருணம் நன்றல்ல என்று தோன்றுகிறது. இப்போது தங்கள் செவிகளில் எதையும் ஏற்றுக்கொள்ளும் நிலையில் எவரும் இல்லை" என்றேன். "ஆம், அதை அறிவேன். ஆனால் மிக மெல்ல எவரும் அறியாது உள்நுழைவதே என் வழக்கமாக இருந்திருக்கிறது. இன்று இவர்கள் அனைவரிடமும் ஒரு சொல்லேனும் நான் உரைத்து அது இவர்கள் உள்ளத்தில் நிற்கச் செய்துவிடுவேன். என்னைப்பற்றிய நினைவென ஒன்றை இவர்களுக்குள் பதித்துவிடுவேன், அதன்பின் இவர்கள் அவையில் இயல்பாக நான் வந்து அமர்வேன்."

"இவர்கள் அவைசூழ்ந்திருக்கையில், அகம் முழு விழிப்பு கொண்டிருக்கையில் நான் வந்தால் என்னை ஏற்கையிலே ஒரு சிறு ஐயத்தையும் அடைவார்கள். என் நினைவு எழும்போதும், என் முகம் காணும்போதும் அந்த ஐயமும் உடன்வந்து அமையும். இப்போது சித்தம் மயங்கி தெளிவற்றிருக்கையில் விழிப்பறியாமல் நான் அகத்தே கடக்கின்றேன். கூடத்தில் நுழையாமல் அகத்தளத்தில் தோன்றுவதே நாகங்களின் வழி என்பார்கள். நஞ்சுள்ள அனைத்துக்கும் அதுவே இயல்பு" என்றார்.

நான் "நீங்கள் நஞ்சு கொண்டவரா?" என்றேன். அவர் இரு கைகளையும் ஊன்றி எழுந்து என்னை கண்களுள்

உற்றுப்பார்த்து “என்னைப் பார்த்தால் என்ன தோன்றுகிறது?” என்றார். நான் ஒருகணம் அகநடுக்கை அடைந்தேன். என் கைகள் அதிரத்தொடங்கின. “ஆம்” என்றேன். “ஆம். நான் நஞ்சு கொண்டவனே. வெல்லப்பட முடியாத நஞ்சு. அந்நஞ்சுடன்தான் அஸ்தினபுரிக்குள் சென்றேன். அக்குடியை முற்றழித்தேன். குருக்ஷேத்ரம் மேல் என் கொடியை பறக்கவிட்டேன். இங்கு வந்துள்ளேன். இங்கும் அதை நிகழ்த்துவேன்” என்றார்.

நான் அது கனவா என்று எண்ணினேன். மெய்யாகவே அவ்வண்ணம் ஒருவர் வந்தாரா? எனில் சூழ்ந்திருந்த எவரும் ஏன் அவர் சொல்வதை கேட்கவில்லை? ஒவ்வொருவரும் ஏதேதோ பேசிக்கொண்டிருந்தார்கள். அப்பெருந்திரளில் முற்றிலும் தன்னந்தனியராக அவர் அமர்ந்திருந்தார். பத்தி விரித்து எழுந்து நின்றிருக்கும் அரவரசனாக. அவர் முன் சிறு தவளைக் குஞ்சென நான் இருந்தேன். அவர் புன்னகைத்து “எனது நஞ்சு வெல்லப்பட இயலாதது. ஏனெனில் இது நேர்நஞ்சல்ல, எதிர்நஞ்சு. எதிரி இருக்கையில் மட்டும் எழுவது, எதிரிக்கு இணையாகவே வளர்வது. இதை வெல்ல ஒரே வழியே உள்ளது, எதிரியிலாதிருத்தல். எதிரியில்லா மானுடர் ஒருவர் உண்டேல் அங்கே இது பொருளிழக்கும்” என்றார்.

“நான் எவரிடமும் நஞ்சைச்செலுத்துவதில்லை. ஒருதுளி கூட. அவர்களிடம் முன்னரே இருந்த நஞ்சைத் தொட்டு உயிர்ப்பித்துப் பெருக்கும் ஒன்றையே கொடுக்கிறேன். அதன் பிறகு ஒவ்வொருவரும் தங்கள் நஞ்சை தாங்களே பெருக்கிக்கொள்கிறார்கள். தாங்களே நச்சுரு ஆகிறார்கள். பிறரை அழிக்கிறார்கள். தாங்களும் அழிகிறார்கள். எனது நஞ்சு என்னுள்ளிருந்து ஒரு துளியும் வெளியே செல்வதில்லை. அது தோன்றிய நாளிலிருந்து குன்றாது குறையாது அவ்வண்ணமே

இருந்துள்ளது. ஐயம் தேவையில்லை, இந்நகர் என்னால் அழியும். இக்குடி என்னால் முற்றழியும்" என்றார் அவர்.

நான் "இதை ஏன் என்னிடம் கூறுகிறீர்கள்? நானும் இவர்களில் ஒருவன்" என்றேன். "ஆம், நீங்களும் இவர்களில் ஒருவர்தான். ஆனால் எனக்கு எப்போதுமே உங்களைப்போன்று ஒருவர் தேவை. நெடுங்காலத்திற்கு முன் பிறிதொரு வடிவில் என் மூதாதை இலங்கையை ஆண்ட ராவண மகாபிரபுவின் அவையிலிருந்தார். அங்கே அவர் விபீஷணனிடத்தில் நஞ்சை எழுப்பினார். அவரே கிஷ்கிந்தையின் சுக்ரீவனை எழுப்பியவர். ஹிரண்யகசிபுவின் அவையில் பிரஹலாதனைத் தொட்டு மூட்டியவர் அவர். துரியோதனன் அவையில் நான் சகுனியை எழுப்பினேன். விகர்ணனை எழுப்பியதும் நானே. ஒவ்வொரு அவையிலும் எங்களுக்கு உங்களைப்போல் ஒருவர் தேவை. இன்று நீங்கள்."

"நான் இங்கே என்ன செய்யப்போகிறேன்?" என்றேன். "நீங்கள் செய்வதற்கு இரண்டே உள்ளது. உடனே எழுந்து என்னை இந்த அவைக்கு அறிவிக்கலாம். அல்லது உங்கள் மூத்தவர்களை தனியிடத்தில் சந்தித்து இங்கு நான் சொன்னவற்றை அவர்களிடம் சொல்லலாம். அவர்கள் என்மேல் ஐயமும் வெறுப்பும் கொள்ளச்செய்யலாம். அவர்கள் நம்பமாட்டார்கள், உங்கள் முழு ஆற்றலையும் அதற்கு பயன்படுத்த வேண்டியிருக்கும்" என்றார். "இன்னொன்று என்னை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். மிகையாற்றல் கொண்ட படைக்கலம் நான். என்னை கையாளும் திறன் உங்களுக்கிருந்தால் நீங்கள் இந்நகரை வெல்லலாம். பாரதவர்ஷத்தை வெல்லலாம்."

“ஆனால் இந்நகரை நீங்கள் அழிப்பீர்கள்” என்றேன். “ஆம், ஆனால் கூட்டை உடைத்துத் திறக்காமல் எந்தப் பட்டாம்பூச்சி காட்டில் எழமுடியும்? அமைந்த இலையை உண்டு முடிக்காமல் அதற்கு எப்படி வண்ணச்சிறகு முளைக்கக்கூடும்?” என்றார் கணிகர். “எண்ணிப்பாருங்கள், துவாரகை என்ற இந்த இடத்திலிருந்து எழுந்து யாதவக்குடி நெடுந்தொலைவு சென்றாகவேண்டும். அதற்கு இந்த இடம் அழிந்தாகவேண்டும். இந்த அடையாளங்கள் அனைத்திலிருந்தும் அது விடுபட்டாகவேண்டும்.” அவர் என்ன சொல்கிறார் என்றே எனக்கு புரியவில்லை. தான் சொன்னவற்றையே மறுத்து மாற்றிச்சொல்கிறார் என்று மட்டும் புரிந்தது.

“எண்ணி நோக்குக, இன்று ஏன் இத்தனை பூசல்? தந்தை பரிசென தன் கையில் வைத்துத் தந்த இந்நகரை முழுதாளக்கூட ஏன் ஃபானுவால் முடியவில்லை?” என்று கணிகர் கேட்டார். “ஏனென்றால் யாதவர்களின் பூசல். பூசலிட வைப்பது அவர்களின் குடியடையாளம். அவை முற்றழிய வேண்டும். இளைய யாதவர் முயன்றதேகூட அதற்காகத்தான், அவரால் அது இயலவில்லை. யாதவக்குருதி பாரதவர்ஷம் முழுக்க பரவவேண்டும். யாதவக்கொடி பறக்கவேண்டும். அது நிகழவேண்டும் என்றால் யாதவக்குடி முற்றழியவும் வேண்டும். விதை அழியாமல் செடி முளைக்கவியலாது.”

“இதை இந்த அவையில் வைத்து இப்படி சொல்கிறீர்கள்” என்றேன். “இங்கே கள்ளில் மூழ்காமல் எஞ்சுபவர் நீங்கள் மட்டுமே...” என்றார். “நான் இதை என் மூத்தவரிடம் சொன்னால் என்ன ஆகும்?” என்றேன். “சொல்க, அதுவும் நன்றே!” என்றார். “எனில் இதை நீங்கள் ஏன் செய்யவேண்டும்? அதுவே என்னை குழப்புகிறது” என்றேன். “நீங்கள் இதை

அவர்களிடம் கூறக்கூற அவர்கள் என் மேல் ஆர்வம் கொள்வார்கள். எளிதாக நான் அவைக்கு வந்திருந்தால் அவர்கள் என்மேல் விழிதிருப்பவே வாய்ப்பில்லாது போய்விடக்கூடும். உங்கள் சொற்கள் அவர்கள் என்னை கூர்ந்து நோக்க வைக்கும். நோக்க நோக்க வளர்வது காமம், நோக்கினால் அணைவது வஞ்சம். நான் காமம் என உள்நுழைந்து அறியாமல் வஞ்சமென வளர்பவன். என்னை கூர்ந்து நோக்காதவர்களிடம் என்னால் செயல்பட இயலாது. இங்குள்ள அத்தனை யாதவர்களும் இரவு பகல் ஒழியாது என்னைப்பற்றி எண்ணிக்கொண்டிருக்க வேண்டுமெனில் ஒருவன் என்னை எதிர்த்து என்னை வெறுத்து கூச்சலிட்டுக் கொண்டிருக்கவேண்டும். அது நீங்கள்தான்" என்று கணிகர் என்னிடம் சொன்னார்.

நான் அவருடைய புன்னகையை பார்த்தேன். மிகமிக தெரிந்த புன்னகை அது. தந்தையே, அவருடைய முகம் ஒடுங்கியது. குழிந்த கண்கள். தொய்ந்த மூக்கு. அவர் இதழ்கள் முதுமையால் சுருங்கியவை. ஆனால் புன்னகைக்கும்போது மட்டும் அவர் பேரழகு கொண்டவரானார். நான் தெய்வத்தின் முன் என நிலைமறந்து சொல்லிழந்து நின்றேன். பின்னர் அக்கனவிலிருந்து என்னை பிடுங்கி எடுத்துக்கொண்டேன். அந்த ஒரு .கணத்தில் உண்மையில் என்ன நிகழ்ந்தது என்று இன்னமும் நான் அறியேன். நான் முறிந்தேன். முற்றாக அனைத்தையும் இழந்தேன். பல்லாயிரம் காதம் கடந்தேன். கைகூப்பி "இல்லை அந்தணரே, நீங்கள் என் ஆசிரியர். நான் உங்கள் அடியவன். எந்நிலையிலும் நான் உங்களைவிட்டு அகலப்போவதில்லை. உங்களுடன் சொல்லாலும் எண்ணத்தாலும் முரண்கொள்ளப் போவதுமில்லை. என்னை ஆள்க!" என்றேன்.

அவர் புன்னகைத்து “ஆகுக!” என்றார். நான் ஓர் அலை என சூழ இருந்த ஒலிகள் வந்து செவிகளை அறைவதை உணர்ந்தேன். துயிலில் இருந்தேனா அப்போது? கனவிலிருந்து மீண்டேனா? அவரை நோக்கினேன். அவர் மீண்டும் புன்னகைத்து “நன்று, இன்று நாம் இவ்வண்ணம் சந்திக்கவேண்டும் என்று இருந்திருக்கிறது” என்றார். நான் “நீங்கள் என்னை நோக்கி நேராக வந்தீர்கள்... என்னை முன்னரே அறிவீர்களா?” என்றேன். “இல்லை, ஆனால் முன்னரே கண்டிருந்தேன்” என்றார். “எங்கே?” என்று நான் நெஞ்சு துடிக்க கேட்டேன்.

“நான் இந்நகருக்குள் நுழைந்தது நேற்று” என்று அவர் சொன்னார். “வரும்வழியில் சாலையின் வலப்பக்கம் எழுந்த மணல்மேட்டின் மீது நீங்கள் நின்றிருப்பதைக் கண்டேன். தொலைவில், ஒரு சிற்றுருவெனத் தெரிந்தீர்கள். ஆனால், நீங்கள் என்னை அழைப்பதுபோலத் தோன்றியது.” நான் திகைப்புடன் “நானா?” என்றேன். “ஆம், நீங்கள்தான் என்னை அழைத்தீர்கள். நகருக்குள் நுழைந்ததுமே நீங்கள் எவர் என உசாவி அறிந்தேன்...” நான் திகைத்து அவரையே நோக்கிக்கொண்டிருந்தேன். “நான் தேடிவந்ததே உங்களைத்தான்” என்று அவர் சொன்னார்.

# கல்பொருசிறுநுரை - 23

**பகுதி நான்கு : அலைமீள்கை – 6**

தந்தையே, விருந்து முடிந்து வெளிவந்த கணம் அனைத்தும் ஒரு இளிவரல் நாடகமென எனக்குத் தோன்றியது. நான் அந்நிகழ்வை ஒரு ஏமாற்றுவித்தை என்று எனக்கு நானே சொல்லிக்கொண்டேன். கணிகரை நான் முன்னரே செவிச்செய்தியென அறிந்திருந்தேன். அஸ்தினபுரியில் சகுனியின் அணுக்கராக இருந்தவர். அங்கு அனைவராலும் வெறுக்கப்பட்டவர். தீங்கே உருவானவர் என்று அவரை சூதர்கள் பாடி கேட்டிருக்கிறேன். ஆயினும் அத்தனை தொலைவு கடந்து அவர் வந்தது வெறுமனே அடைக்கலம் தேடித்தான் என்று அப்போது நம்பினேன்.

இன்று அறிகிறேன், அவர் இத்தில் செடிகளைப்போல ஒட்டி உயிர்வாழ்பவர். பூசல்களில் மட்டுமே அத்தகையோரை மனிதர்கள் விரும்புகிறார்கள். அமைதிக் காலங்களில் அத்தகையோரின் இடம் குறுகிக் குறுகி சிறிதாகிறது. ஆகவே நோயுற்ற உடலை தேடிச்செல்லும் ஊனுண்ணிப் பறவைகள்போல் அவர்கள் உளமுறிவுகளும் பூசல்களும் நிறைந்த நாட்டை நண்ணுகிறார்கள். ஆயினும் அவரால் என்ன செய்துவிட முடியுமென்று அப்போது தோன்றியது. அவர் தன் திறனால் ஏற்கெனவே அங்கு உருவாகியிருக்கும் உட்பூசல்களிலும் சிடுக்குகளிலும் ஒருவருக்கொருவர் மிகைகூறி, புறம்கூறி, உணர்வுகளை எழுப்பிவிட்டு, சற்றே சீண்ட முடியும். ஒருவேளை மேலும் சற்று பூசல்களை நிகழ்த்திக் காட்ட முடியும். ஆனால் அரசாடலில் அதற்கு பெரிய இடமில்லை என நினைத்தேன்.

அஸ்தினபுரியில் அவர் வென்றதென்பது அது அரசாடல் என்பதைக் காட்டிலும் ஒரு சிறு குடிக்குள் நிகழ்ந்த பூசல் என்பதனால்தான். அங்கே அனைத்து எதிரெதிர் முகங்களும் தெளிவாகி நின்றிருந்தன. துவாரகையில் எழுந்து நின்ற பூசல் குருக்ஷேத்ரப் பெரும்போருக்குப் பின் பாரதவர்ஷம் முழுக்க முளைத்து முனைகொண்ட உண்மையான கோன்மைப் பூசலின் துளிவடிவு என்றனர் அரசறிந்தோர். ஷத்ரியரும், அசுரரும், அவர்களுக்கு நடுவே புத்தரசுகள் நிறுவிக்கொண்ட பிற குடியினருமாக மூன்று அணிகள் ஒவ்வொரு நிலத்திலும் இருந்தன. திருவிடத்திலும், தெற்கிலும், புதிதாக உருவாகி வந்த கிழக்கு நிலங்களிலும் எங்கும் நிகழ்ந்துகொண்டிருந்த பூசல் அதுவே. ஆகவே கணிகருக்கு இங்கு ஆற்றுவதற்கு எதுவுமில்லை என்று எண்ணிக்கொண்டேன்.

அதைவிட ஒன்று இருந்தது என நான் உணர்ந்தது மிகப் பல நாட்கள் கடந்தே. கணிகர் என் ஆணவத்தையே முதலில் சீண்டினார். தன்னை அவ்வண்ணம் அவர் முன்வைத்தமையாலேயே நான் அவரை குறைத்து மதிப்பிட்டேன். என் ஆணவத்தை மிகையாக்கிக்கொண்டேன். நான் நஞ்சு, முடிந்தால் என்னை கையாள்க என்று அவர் அறைகூவினார். அந்த அறைகூவலை இயல்பாகவே நான் ஏற்றுக்கொண்டேன். அவருடைய நஞ்சை என் படைக்கலமாகக் கொள்ளலாம் என்று அவரே சொன்னார். அப்போதே அவரை என் படைக்கலம் என எண்ணத் தலைப்பட்டேன். மிகமிக சொல்சூழ்ந்து அவர் எனக்கு அந்தத் தூண்டிலை போட்டார் என நான் உணர்ந்தது காலம்கடந்த பின்னர். தந்தையே, அவர் நம்மை கொட்டிவிட்டு நாம் துடித்து கதறி ஓடிச்சென்று ஓய்வுகொள்ளும் இடத்திற்கு முன்னரே சென்று நின்றிருக்கிறார்.

என் அறைக்குச் சென்று, களைத்து மஞ்சத்தில் விழுந்து அவ்வண்ணமே துயின்று, புலரியில் எப்போதோ விழித்துக்கொண்டபோது அறைக்குள் கரிய நிழலென கணிகரே இருப்பதுபோல் உணர்ந்தேன். திடுக்கிட்டு எழுந்து அமர்ந்து அவ்வுணர்வை நானே வியப்புடன் பார்த்துக்கொண்டேன். அத்தனை ஆழமாக அவர் எனக்குள் ஊடுருவியிருக்கிறார். நான் அவரை எண்ணிக்கொண்டிருந்திருக்கிறேன். துயிலில் கனவில் கூட அவர் என்னுடன் இருந்திருக்கிறார். மெய்யாகவே! அன்று பகல் முழுக்க நான் அவரையே நினைத்துக்கொண்டிருந்தேன். அன்று மாலை உணர்ந்தேன், ஒருகணம் கூட அவரை எண்ணாமல் நான் இருக்கவில்லை என்று. அந்த ஆட்கொள்ளலை எண்ணி எரிச்சலுற்றேன், சீற்றம்கொண்டேன், பின்னர் அஞ்சினேன். அஞ்சும் எதையும் அகற்ற முனைகிறோம், இல்லையென்று எண்ண விழைகிறோம்.

அவரிலிருந்து அகன்று செல்லும்பொருட்டு அரண்மனையிலிருந்து கிளம்பி இரு தோழர்களுடன் கடலாடச் சென்றேன். உட்கடலில் அலைகளில் எழுந்தமைந்துகொண்டிருந்தபோது கூட அவர் நினைவு என்னுடன் எழுந்தலைந்துகொண்டிருந்தது. தந்தையே, நான் எளிதாக, இயல்பாக இருப்பது கடல் அலைகளின்மேல் நீந்திக்கொண்டிருக்கையிலேயே. அங்கும் அவர் உடனிருந்தார். அவரை என்னால் தவிர்க்க இயலாது என்று அறிந்தேன். எனில் அவரிடமிருந்து முற்றாக விலகிச் செல்வது ஒன்றே வழி. அவர் என்னிலிருந்து எதிர்பார்த்த எதையும் நான் செய்யாமலிருக்கலாம். என்னிலிருந்து அவருக்கு எந்தக் கருவியையும் அளிக்காமலிருக்கலாம். நான் செய்யக்கூடுவது அது ஒன்றே.

அதை எண்ணிச்சூழ்ந்தேன். மூத்தவரின் ஆணையை கேட்டுப்பெற்று எல்லைப்புறக் காவல்நிலை ஒன்றை நோக்கி மறுநாளே கிளம்பினேன். துவாரகையிலிருந்து ஏழு நாட்கள் பயணம் செய்து சிந்துவின் கரையில் அமைந்திருந்த அக்காவல்கோட்டையை சென்று சேர்ந்தேன். முன்பு அது செங்கல்லால் கட்டப்பட்ட எட்டடுக்குக் காவல்மாடம் மட்டுமாக இருந்தது. பின்னர் அதை ஒட்டி இல்லங்கள் அமைந்தன. காவலர் தங்குமிடங்களும், ஒரு சிறு சந்தையும் படகுத்துறையும் உருவாயின. அங்கே சிறுவணிகர்கள் வந்து செல்லத்தொடங்கினர். சூழ்ந்திருக்கும் பாலைநிலத்து மக்கள் அங்கே வணிகம் செய்ய வந்தனர். அவர்களில் சிலர் அங்கே குடியேறினர். அது ஒரு சிறு ஊராக மாறியது. மணற்காற்று சூழ்ந்து வீசும் தனிச்சிற்றூர். உலகுடன் தொடர்பில்லாது நுனிக்கிளையில் காய்த்துத் தொங்கும் காய்போல துவாரகையில் இணைந்திருந்தது.

ஊர்த்தலைவன் மூர்த்தன் என்னை வரவேற்று அங்குள்ள சிறுமாளிகையில் தங்க வைத்தான். அங்கு நான் பன்னிரண்டு நாட்கள் தங்கியிருந்தேன். அங்கு செல்லும்போது உள்ளம் கொந்தளித்துக்கொண்டிருந்தது. மூன்றாவது நாள் அக்கொந்தளிப்பு அடங்கியபோது ‘என்ன மூட எண்ணம் இது!’ என்று எனக்கு நானே வியந்துகொண்டேன். உண்மையில் அப்படி என்ன நிகழ்ந்தது? உடலொடிந்த முதியவர், அந்தணர், என்னிடம் சில சொற்களை சொல்லியிருக்கிறார். அதை அப்படியே நம்பி சொற்பொருளென எடுத்துக்கொண்டு நான் உளம் குழம்பி இருக்கிறேன். அதை என் அச்சத்தால் பேருருவாக்கிக்கொண்டிருக்கிறேன். அவரை அஞ்சி வந்திருக்கிறேன் எனில் அவர் நோக்கத்தை அவர் வென்றுவிட்டார் என்றே பொருள்.

அவர் என்னை அவ்வண்ணம் உளம் குழம்ப வைப்பதையே அந்த உரையாடலின்போது தன்நோக்கமாகக் கொண்டிருக்கிறார். அந்த இடத்தில் அவருக்கு அவ்வாறு தோன்றியிருக்கலாம். அவர் அந்த அவைக்கு வந்தபோது அவரை எவரும் எதிர்கொள்ளவில்லை. அவரை மறந்துவிட்டிருந்தனர். அரசவரவேற்பென ஒரு சொல்கூட கூறப்படவில்லை. தெளிந்த போதத்துடன் அவருடன் சொல்லாடும் நிலையில் அங்கு இருந்தது நான் மட்டுமே. எனவே அவர் என்னிடம் பேசினார். என்னிடம் ஒரு ஆழ்ந்த பதிவை உருவாக்க நினைத்தார், அதை உருவாக்கியிருக்கிறார். சிறுமைசெய்யப்பட்டதாக உணர்பவர்கள் தங்களைத் தாங்களே பெருக்கிக் கொள்வார்கள். தங்களுக்குள்ளேயே அறைகூவல் விடுப்பார்கள், பெருமிதம் கொள்வார்கள், வஞ்சினம் பூணுவார்கள். அரிதாக எதிரில் ஒருவன் சிக்கிவிட்டால் அவனிடமே அதை சொல்வார்கள்.

அது இயல்பே. பெருவிருந்துகளில் தங்களை பொருட்படுத்தும்படியானவர்களாக உணராதவர்கள் இவ்வண்ணம் சிலவற்றை செய்வதை நான் கண்டிருக்கிறேன். அங்குள்ள எவரேனும் ஒருவரை பற்றிக்கொண்டு அவரிடம் மிக எடைமிக்க சிலவற்றை சொல்வார்கள். ஆழ்ந்த மந்தணங்களையோ வஞ்சகங்களையோ சூழ்ச்சிகளையோ பற்றி விவரிப்பார்கள். சில தருணங்களில் நோயுற்றவர்கள்போல் நடிப்பதுண்டு. கீழே விழுந்து வலிப்பு வந்து எழுந்து துடித்த ஒருவரை நான் கண்டிருக்கிறேன். உணவுத்தட்டுகளை கீழே போடுவது, மங்கலமின்மையைக் காட்டும் சொற்களை கூறுவது, தன்னைத்தானே இளிவரலாக்கிக் கொள்வது எல்லாம் வழக்கம்தான்.

விருந்துகள் ஒவ்வொருவரையும் ஒவ்வொரு இடத்தில் நிறுத்துகின்றன. தங்கள் இடம் எது என்று ஒவ்வொருவரும் விருந்தில் நோக்கிக்கொண்டே இருக்கிறார்கள். ஒரு விருந்தில் எவராலும் கவனிக்கப்படாதிருப்பது என்பது சாவுக்கு நிகரானது. அவ்வண்ணம் சிலர் விருந்துகள் முடிந்து உளம் அழிந்து பிணங்கள்போல் துயில்வதை பார்த்திருக்கிறேன். சிலர் அங்கிருந்து எழுந்துசெல்கையில் பெருவஞ்சமும் நஞ்சும் நிறைந்தவர்களாக ஆவதைக்கூட கண்டிருக்கிறேன். அன்று அவரில் எழுந்த ஒரு துளி நஞ்சை எனக்கு காட்டினார். அதன் பொருட்டு நான் துயர் கொள்ளலாகாது.

நான் என்னை மெல்ல மெல்ல அடங்கச் செய்தேன். என்ன செய்வதென்பதை எண்ணி அடுக்கத் தொடங்கினேன். என்னை நோக்கி நானே சிரித்தேன். எவரோ ஓர் அந்தணன் எங்கோ சொன்ன ஒற்றை வரிக்காக அனல்பட்ட பூனையென அஞ்சி பதறி வந்து ஒளிந்து உலகை நோக்கிக்கொண்டிருக்கும் சிற்றுயிர். என் ஆற்றல் கூர்மை எல்லாம் அவ்வளவுதானா? மெய்யாகவே என்னைப்பற்றி என்ன எண்ணிக்கொண்டிருந்திருக்கிறேன்?

இத்தனை நாள் அரசகுடிப் பிறப்பின் அடுக்கில் உடன்பிறந்தார் நிரையில் மிகக் கீழென அடுக்கப்பட்டவன். மேலுள்ள எடையனைத்தாலும் எடையென அழுத்தி வைக்கப்பட்டவன். எழ வாய்ப்பே அற்றவன். ஆனால் எவரை விடவும் திறமைகள் கொண்டவன். கடலாடுபவன், சுழற்பாதையில் விசைப்புரவி ஓட்டுபவன், இவர்கள் அனைவரும் எண்ணிக்கூட இருக்காத நூல்களை எழுத்தெண்ணிப் பயின்றவன், சொல்சூழத் தெரிந்தவன். ஆனால் எந்த அவையிலும் என் சொல் எழுந்ததில்லை. எனினும் அங்கு எவர் பேசும்

சொற்களைவிடவும் கூரிய சொற்கள் என்னுள் ஒலித்துக்கொண்டுதான் இருந்திருக்கின்றன.

என்றோ ஒருநாள் எழுவேன் என்னும் கனவே அதுவரை என்னை கொண்டுசென்று நிறுத்தியது. எட்டாவது மைந்தராகிய என் தந்தை எழவில்லையா எனும் சொல்லே எனக்கு ஊக்கமளித்தது. ஒருநாள் ஒருநாள் என்று ஒவ்வொரு தருணத்திலும் வஞ்சினம் உரைத்து அதை கடந்து வந்திருக்கிறேன். இங்கிருக்கிறேன், அறிக உலகே என்று நெஞ்சு வெடிக்க இவ்வுலகை நோக்கி கூவிக்கொண்டிருந்தவன். உண்மையில் துவாரகையை முழுதாளும் தகைமை கொண்டவன் நான் ஒருவனே என்று எனக்கு நானே சொல்லிக்கொண்டேன். ஒருநாள் என் சொல்லை, என் ஆற்றலை இந்நகர் அறியும். இக்குடிகள் திரண்டு வந்து தன் தலைவனென என்னை ஏற்றுக்கொள்வார்கள். என்னை இவர்களே அரியணையில் அமரவைப்பார்கள். என் குலமும் எனக்கு அடிபணியும். என் கோல் இங்கு நிற்கும்.

உண்மையில் அங்கும் என் கனவுகள் நின்றுவிடவில்லை. நான் அஸ்தினபுரியை வெல்வேன். பாரதவர்ஷத்தை வெல்வேன். மும்முடி சூடி இப்பெருநிலம் மீது விண்ணவனுக்கு நிகராக அமர்ந்திருப்பேன். இக்குடிவழிகளின் குருதியில் அழிவின்மை கொள்வேன். சூதர்கள் சொல்லில் விண்ணவன் என எழுவேன். எழும் தலைமுறைகளில் ஆலயங்களில் தெய்வமென அமர்ந்திருப்பேன். எத்தனை ஆணவம்! நுரைத்து நுரைத்து புளித்தெழும் ஆணவம்போல் இனிய மது மனிதனுக்கு பிறிதொன்றில்லை. அத்தகைய நான் இதோ அஞ்சி அமர்ந்திருக்கிறேன்.

எவரென்றே அறியாத முதியவர் அரை நாழிகைப்பொழுது பேசியபோது நான் அஞ்சியது எதை? நான் அஞ்சியது ஒன்றைத்தான். அத்தனை பெருந்திரளில் ஒருவராலும் தனித்தறியப்படாதவனாகிய என்னிடம் மிகச் சரியாக சொல்லெடுத்த கூர்மையில் அவர் எளியவரல்ல என்று கண்டுகொண்டேன். என் உடன்பிறந்தார் அனைவரும் என்மேல் அடுக்கப்பட்ட போர்வைகள்போல. அடியில் ஒளிந்திருந்து வேவு பார்த்துக்கொண்டிருந்தேன். இளிவரலுடன், வஞ்சத்துடன், விழைவுகளுடன். ஆனால் எந்தத் தடையும் பொருட்டின்றி நேராக வந்து என்னைத் தொட்டு எழுப்பி என் விழிநோக்கி அவர் பேசத்தொடங்கினார். தன் மேலிருந்த மறைப்பு விலக்கப்பட்டு பகல் வெளிச்சத்தில் வந்து நின்ற சிற்றெலிபோல் நான் ஆனேன்.

என்னை அவர் கண்டடைந்தது என்னை அச்சுறுத்தியது. அவர் என்னிடம் பேசிய ஒவ்வொரு சொல்லும் என்னை மீறியே வளர்ந்தது. அங்கு அந்த ஒவ்வாமையுடன் என்னால் வெறுமனே அமர்ந்திருக்க இயலவில்லை. புரவியில் சென்று சிந்துவின் கரையினூடாக நீள்பயணங்கள் செய்தேன். பாலையில் நெடுந்தொலைவு சென்று நீரின்றி தவித்து இறப்புக்கு முந்தையகணம் என இடர்கொண்டு மீண்டு வந்தேன். என் உடலிலுள்ள ஆற்றல் அனைத்தையும் அள்ளி அள்ளி வெளியே இறைத்தேன். என் இறுதி எல்லைகளை கண்டபின்பே திரும்பினேன். அவ்வாறு என்னை நானே தேற்றிக்கொண்டேன். உடல் ஆற்றலை அள்ளி வீசுந்தோறும் உள்ளத்தின் ஆற்றல் மேலும் ஊறுகிறது என்பதை நான் முன்னரே அறிந்திருந்தேன்.

பின்னர் அக்கோட்டைமேல் அமர்ந்து தொலைவு வரை செந்நிற அலைகளாக எழுந்து சென்று வானைத் தொட்ட பாலை நில

விரிவை பார்த்துக்கொண்டிருந்தபோது எண்ணிக்கொண்டேன், என் அல்லல்களில் இருந்து தப்ப ஒரே வழிதான் உள்ளது. ஆம் எனும் ஒரே சொல். ஆம், நான் இவ்வண்ணம் இங்கிருக்கிறேன். நான் வஞ்சமும் விழைவும் கொண்டவன். நான் காத்திருக்கும் ஒரு கரவுப்படைக்கலம். அதை இந்த நாள் வரை எவரும் அறியாமல் காத்துக்கொண்டிருந்தேன். ஆனால் எவரேனும் ஒருவர் அறிந்தாகவேண்டும். அதை நானே அறிவிப்பதைவிட மிகச் சரியாக இன்னொருவர் அறிந்துகொண்டது நன்று. அவ்வண்ணம் ஒருவர் சொல்லாமலே அறிந்துகொள்வாரெனில் அதன் பொருள் நான் முற்றாக திரண்டுவிட்டேன் என்பதுதான்.

படைக்கலம் முற்றாக கூர்கொண்டுவிட்டது. அது உண்மையில் எனக்கு நம்பிக்கையை அல்லவா அளிக்கவேண்டும்? நான் யாரென்று எனக்கு அது காட்டவேண்டுமல்லவா? இனி முற்றாக மறைத்துக்கொள்ள வேண்டியதில்லை. குறைந்தது கணிகரிடமாவது நான் யாரென்பதை காட்டலாம். அது அளித்த விடுதலையை எண்ணிப்பார்த்தபோது உள்ளம் ஆறுதல் கொண்டது. எரியும் வெயிலில் ஒன்றுக்கு மேல் ஒன்றென அணிந்த ஆடைகளனைத்தையும் களைந்து இளங்காற்றில் நின்றதுபோல. அந்தத் தருணத்திலிருந்து மிக எளிதாக முடிவெடுத்தேன். ஒன்றுக்கு மேல் ஒன்றென தொட்டுத் தொட்டுச் சென்று 'ஆம், இதுவொன்றே வழி' என்று என்னிடம் சொல்லிக்கொண்டேன்.

கணிகரிடமே திரும்பிச்செல்வதுதான் செய்யவேண்டியது. ஆம் கணிகரே, நீங்கள் எண்ணியது சரிதான். என் நோக்கம் அதுதான். எனக்கு உதவுங்கள். நீங்கள் யாரென்று நானும் கண்டுகொண்டுவிட்டேன். உங்களுக்கு என்னை அளிக்கிறேன். எனக்கு உங்களை அளியுங்கள். நான் உங்கள் படைக்கலம்

என்று கண்டதனால்தான் என்னை அணுகி வந்திருக்கிறீர்கள். இத்தருணம் இருவருக்கும் உகந்ததே.

மூன்று மாதம் கழித்து அங்கிருந்து கிளம்பி துவாரகைக்கு வந்தேன். துவாரகையில் அதற்குள் கணிகர் முதன்மை பெற்றவராக மாறிவிட்டிருந்தார். எவ்வண்ணம் அவர் அப்படி ஆனார் என்பதை என்னால் எண்ணி எடுக்க இயன்றது. ஒரு இந்திர மாயக்காரனின் விழிதொடு வளையத்திற்கு வெளியே இருந்து அவனுடைய ஆடலை பார்ப்பதுபோல. அவருடைய அசைவுகள் அனைத்தும் பொருளற்றவையாக இருந்தன. அவற்றுக்கு ஏன் ஒவ்வொருவரும் அவ்வண்ணம் எதிர்வினையாற்றுகிறார்கள் என்பது திகைப்பூட்டுவதாக இருந்தது. சிலபோது வேடிக்கையாக. சிலபோது அச்சமூட்டுவதாக. அடிக்கடி மானுடர் உண்மையில் அறிவுடையவர்கள்தானா என ஐயமெழுப்புவதாக.

அமைச்சரும் அவையினரும் அரசரும் அரசகுடியினரும் மீள மீள அமர்ந்து சொல்லெடுக்கிறார்கள். பேசிப்பேசி பாதை படிந்து அறியாதொழுகத் தொடங்கும்போது தங்களை அறியாமல் ஒன்றுக்கு ஒற்றைச்சொல்லையே கையாள்கிறார்கள். ஒன்றை சுட்ட ஒற்றைச்சொல்லை அனைவரும் கையாளத் தொடங்குகையிலேயே ஒன்று நிகழ்கிறது, அனைவரும் ஒன்றையே எண்ணத்தொடங்குகிறார்கள். உள்ளங்களுக்கு அவ்வியல்பு உண்டு. நீர்த்துளிகளைப்போல அவை ஒன்றோடொன்று இணைந்து ஒற்றை நீர்ப்படலமென ஆக விழைகின்றன. ஒரு சிறு கூட்டம் ஓரிடத்தில் அமர்ந்து எப்படி

பூசலிட்டாலும், எதை சொன்னாலும் மெல்ல மெல்ல அவர்களின் உள்ளங்கள் ஒன்றாகிவிடுகின்றன. அவர்கள் பூசலிடும் தரப்புகளாக நீடித்தாலும்கூட ஒவ்வொன்றையும் ஒன்று போலவே எண்ணுவார்கள். ஆகவேதான் எதிரிகளின் எண்ணங்கள்கூட ஒன்று போலிருக்கின்றன. சொற்கள் ஒன்று போலிருக்கின்றன. அவர்கள் கண்டடையும் வழிமுறைகளும் ஒன்றே.

அஸ்தினபுரியில் நடந்ததும் அதுவே. காலத்தின் நீண்ட இடைவெளிக்குப்பின் நின்று நோக்குகையில் அஸ்தினபுரியில் கௌரவரும் பாண்டவரும் ஒன்றையே சொல்லி, ஒன்றையே எண்ணி, ஒன்றையே செய்து, ஒற்றைத் திரளென்றே திகழ்ந்திருக்கிறார்கள் எனத் தெரிகிறது. தன் வாலை தான் விழுங்கும் பாம்பென அவர்கள் குருக்ஷேத்ரத்தில் போரிட்டிருக்கிறார்கள். துவாரகையில் நிகழ்வதும் அதுவே. துவாரகையின் மூன்று எதிரித் தரப்புகளில் எவருக்கும் மாற்று என எண்ண ஓட்டம் இல்லை என நான் முன்னரே கண்டிருந்தேன். அவர்கள் ஒன்றின் மூன்று முகங்கள். ஆகவேதான் ஒரு தரப்பிலிருந்து இன்னொன்றுக்குச் செல்பவர் பெரிய மாறுதல் எதையும் காண்பதில்லை.

அவைக்கூடல்களில் ஒன்றை நானே எனக்குள் உணர்ந்திருக்கிறேன். பிரத்யும்னனோ சாம்பனோ என்ன முடிவெடுப்பார் என்பதை என்னால் முன்னால் சொல்ல முடிந்தது. பிறர் எண்ணி எண்ணித் தவிக்கும் இடங்களுக்கு நான் எளிதாகச் சென்று மீண்டுவந்தேன். பிறர் அறியாதனவற்றை அறிந்தேன். அது ஏன் என்று அப்போது தெரிந்தது. ஏனெனில் எந்த அவையிலும் நான் பேசியதில்லை. ஒவ்வொரு உரையாடலிலும் பிற அனைவரும் சொல்லும்

எந்தச் சொல்லையும் நான் எடுப்பதில்லை. நான் வேறு சொற்களால் ஒவ்வொன்றையும் குறிப்பிட்டேன். வேறு வகையில் சொல்லாட்சிகளை அமைத்தேன். ஆகவே என் எண்ணங்கள் வேறாக இருந்தன. ஆயினும், நான் அக்குருதிக்குள் இருந்தவன். அந்தச் சூழலில் வளர்ந்தவன். எத்தனை விலகினாலும் கிளை மரத்திலிருந்து இணைப்பை வெட்டிக்கொள்ள இயலாது.

ஆனால் கணிகர் அவ்வாறல்ல. அவருடைய உடல் அமைப்பினாலேயே அவர் எந்த அவையிலும் அமர முடியவில்லை. அவைகளில் அவரை மிக விலக்கி கீழே அமரச்செய்கிறார்கள். அதுவும் ஒரு கூரிய உண்மை. அவரது உடல் ஒன்றுடன் ஒன்று சற்றே மடிந்த இரு தகடுகள்போல. மானுடர் எந்த அவையிலும் நின்றோ அமர்ந்தோ பேசுகையில் அனைவருக்கும் பொதுவான உயரத்தை விழிகளால் வகுத்துக்கொள்கிறார்கள். அந்த உயரத்திற்குள் மட்டும்தான் நோக்குகள் இருக்கின்றன. அவ்வெல்லைக்குள் வருபவர்களைப்பற்றி மட்டும்தான் அவர்கள் எண்ணுகிறார்கள். அவர்களுடனே உரையாடுகிறார்கள். எந்த அவையிலும் ஒருவர் அமர்ந்துகொண்டு பேசினால் திடுக்கிட்டு அவரை நோக்கி நோக்குகள் கீழிறங்குகின்றன. ஒரு சிறு குழந்தை அவைக்கு வந்தால் அவையின் நோக்கை வலிந்து கீழிறக்க வேண்டியிருக்கிறது.

அவைகளில் நிலத்திலிட்ட புலித்தோலில் படிந்ததுபோல் கிடக்கும் கணிகர் அங்கிருக்கிறார் என அனைவருக்கும் தெரிந்தாலும் மிகச்சிறு பொழுதிலேயே அங்கிலாதவராக ஆகிவிடுவார். அவர் குரலெழுப்புவது வரை அவரை எவரும் பார்ப்பதில்லை. அவர் பேசும்போது அனைத்து நோக்குகளும்

தழைந்து கீழிறங்கி அவர் மேல் படிகின்றன. அவர் பேசி முடித்த சில கணங்களிலேயே அவை இயல்புநிலைக்கு திரும்பிவிடுகின்றன. விழிகள் மூங்கில்களைப்போல, வளைத்துக்கட்டி நிறுத்தினாலும் கைவிட்ட கணமே அவை இயல்புநிலை மீள்கின்றன. அதை அவர் எப்போதும் பயன்படுத்திக்கொண்டிருக்கிறார். எந்த அவையிலும் அந்த அவையின் ஒரு பகுதியாக இருந்து அனைத்தையும் அறிகையிலேயே அந்த அவையின் சொற்களங்களுக்குள் செல்லாமல் அகன்றிருக்கிறார். அகன்றிருக்கும் ஒருவரால் அனைவரையும் துணுக்குற வைக்கும் பார்வைகளை கூற முடியும். ஒவ்வொருவரும் சென்று முட்டிக்கொண்டிருக்கும் வாயிலுக்கு அப்பால் மூடப்படாத வழியொன்றிருப்பதை சுட்டிக்காட்ட முடியும்.

மிகச்சில நாட்களிலேயே கணிகர் என் மூத்தவரின் அவையில் ஒவ்வொரு முறையும் தவறாது புதிய வழியைக் காட்டும் பேரறிஞராகவும், மதிசூழ் திறனாளராகவும் அடையாளம் காணப்பட்டிருந்தார். நான் மூத்தவரின் அவைக்குச் சென்றபோது முதலில் அவரைத்தான் பார்த்தேன். அவர் விழிகளை சந்தித்தபோது அவர் முன்னர் என்னை அறிந்திருப்பதைப்போலவே தெரியவில்லை. மெய்யாகவே அன்றிரவு நான் கொண்ட உளமயக்குதானா என்ற ஐயத்தையே அப்போது அடைந்தேன்.

அந்த அவையில் ஒன்றை நான் உணர்ந்தேன், அவையை கணிகர் தன் முழு ஆட்சியில் வைத்திருக்கிறார். நான் வெளியே இருந்தபோது துவாரகையில் போர் தொடங்கிவிடும் என ஒவ்வொரு நாளும் எதிர்பார்த்தேன். இதோ இதோ என்று என் புலன்கள் துடித்து நின்றன சிலநாட்கள். நான் கிளம்பிய

அன்று இரவு மறுநாளே போர் அறைகூவப்படும் என்று மூத்தவர் ஃபானு சொல்லியிருந்தார். நாள் செல்லச்செல்ல அந்தப் பதற்றம் குறைந்தாலும் போர் நிகழக்கூடும் என்றே எண்ணினேன். உண்மையில் நான் இல்லாமல் அப்போர் முடிந்து அனைத்தும் எவ்வகையிலேனும் ஒருங்கமைந்துவிட்டால் நன்று என்று கருதினேன். என் சுமைகள் குறையும், நான் அஞ்சும் பாதைகளில் செல்லவேண்டியிருக்காது. ஆகவே ஒவ்வொருநாளும் மெல்லிய எதிர்பார்ப்பு எனக்கிருந்தது.

அவையைக் கண்டதும் புரிந்துகொண்டேன், போர் நிகழவில்லை என்றால் அதற்கு கணிகரே முதல் ஏது. போர் நிகழுமென்றால் அதை அவரே நடத்துவார். அவர் காத்திருக்கிறார். மேலும் திரள்வதற்காக, மேலும் கூர்கொள்வதற்காக. அவையை தொலைவிலிருந்து ஒருகணம் பார்த்தபோது எழுந்த கொந்தளிப்பு உடனே அடங்கி மெல்லிய இளிவரலும் கசப்பும் எஞ்சியது. நான் முகமன் உரைத்து மூத்தவரை வணங்கி அவைக்குள் சென்று அமர்ந்துகொண்டேன்.

# கல்பொருசிறுநுரை - 24

**பகுதி நான்கு : அலைமீள்கை – 7**

நான் அவைக்குள் நுழைந்தபோது மூத்தவரின் குரல் உரத்து ஒலித்துக்கொண்டிருந்தது. வழக்கமாக அவ்வாறு உரத்துப் பேசுபவர் அல்ல அவர். இளமை நாளிலேயே

துவாரகையில் எப்போதுமே குரல் தணிந்தவராகவும் விழி தழைந்தவராகவுமே அவர் இருந்திருக்கிறார். அவரே யாதவ இளவரசர்களில் மூத்தவர். ஆனால் குடிநிகழ்வுகளன்றி பிறிதெங்கும் அவரை இளவரசராக அமரச்செய்ததில்லை. ஷத்ரிய அவைகளில் அவர் பெரும்பாலும் அழைக்கப்பட்டதில்லை. வீரரல்ல என்று இளமையிலேயே அவர் அடையாளம் காணப்பட்டுவிட்டார். நூல் நவில்தலும் அவருக்கு இயலவில்லை. எங்கோ எவரோ 'நீ ஆநிரை மேய்ப்பதற்குரியவன், பிறிதொன்றல்ல' என்று கூறிய சொல் அவர் உள்ளத்தில் ஆழத்தில் பதிந்தது. ஆழத்தில் ஆநிரை மேய்ப்பவராக தன்னை எண்ணிக்கொண்டிருந்தார். அவ்வாறல்ல என்று அவைகளில் நடித்தார்.

அவர் தன் தனித்த கனவுகளில் அந்நகரிலிருந்து கிளம்பிச்சென்று பசும்புல்வெளிகளில் ஆநிரைகளுடன் அமர்ந்திருப்பவராகவே தன்னை எண்ணிக்கொண்டார் என நான் அறிவேன். தங்கள் மைந்தர்களில் வேய்குழல் மீட்டும் திறன்கொண்டவர் அவர் மட்டுமே. தங்கள் வேய்குழலுக்கு நிகரானது அவரது இசைத்திறன் என்று குடிமூத்தவர்கள் கூறுவதுண்டு. தன் வேய்குழலுடன் எங்கோ குயில்கள் பாடும் பசுவெளியில் அமர்ந்திருப்பவர் என அகத்தே திகழ்ந்தார். அவர் குழலிசைக்கையில் முகத்திலிருக்கும் கனவை கூர்ந்து பார்த்திருக்கிறேன். அதோடு நானே அவரென்றாகி அவ்வண்ணம் இசைத்து அந்த உளநிலையை உணர்ந்திருக்கிறேன். அன்னை அவர் இளமையில் குழலிசைத்தபோது அதை விரும்பியிருந்தார்.

தங்கள் இளமைக்காலத் தோழர் ஸ்ரீதமர் அவருக்கு குழல் கற்பித்தார். ஆனால் அவருடைய துணைவியர் அவர்

குழலிசைப்பதை தடுத்தனர். அவருடைய மைந்தர்கள் அதை வெறுத்தனர். அவருடைய நான்கு துணைவியருமே யாதவக்குடியை சேர்ந்தவர்கள்தான். இருவர் அந்தகர், போஜர் குலத்தை சேர்ந்தவர்கள். இருவர் விருஷ்ணிகுலத்தை சேர்ந்தவர்கள். அவர்களும் இளமையில் குழல்கேட்டு வளர்ந்தவர்களே. ஆனால் அவர்கள் குழலோசையை வெறுத்தனர். தங்கள் மைந்தர்கள் அதை கேட்காமலேயே வளர்த்தனர். குழல் என்பது யாதவர்களின் இழிவின் அடையாளம் என்னும் உளநிலை அவர்களிடமிருந்தது. எந்த அவையிலும் அவர்கள் குழலிசை ஒலிக்க விடுவதில்லை.

மூத்தவர் குழலிசைப்பதையே விட்டுவிட்டார். மிக அரிதாக நாங்கள் மட்டுமே அமர்ந்திருக்கையில் சில மெட்டுகளை வாசிப்பார். அதை அரசியிடம் ஒருமுறை நான் சொன்னபோது அரசி சீற்றத்துடன் எழுந்துவிட்டார். முகம் சிவந்துவிட்டது. கண்களில் நீர் கோத்தது. மறுநாள் என்னிடம் மூத்தவர் "ஏன் நீ அதை அவளிடம் சொன்னாய்?" என்று கேட்டார். "அவள் அன்னமும் நீரும் மறுத்து படுத்திருக்கிறாள். அழுதுகொண்டே இருக்கிறாள். அவளை அமைதியடையச் செய்யவே முடியவில்லை. நீங்கள் என்னை இழிவுசெய்யும்பொருட்டே குழலிசைக்கிறீர்கள் என்கிறாள்" என்றார். நான் பல மாதங்கள் அரசியிடம் பேசவே முடியவில்லை.

உண்மையிலேயே குழல் அவ்வாறு குலஇழிவின் அடையாளமாக ஆகிறது என்பதை நான் பின்னரே அவைகளில் உணர்ந்தேன். பிரத்யும்னனின் அவையில் ஒருமுறை ஷத்ரியப் படைத்தலைவர் ஒருவர் எல்லையை ஊடுருவிய கூர்ஜரர்களைப் பற்றி சொல்கையில் "அவர்கள் குழலோசைக்கெல்லாம் கட்டுப்படுபவர்கள் அல்ல, வாள் தேவை

அவர்களை எதிர்கொள்ள" என்றார். பிரத்யும்னன் சிரித்தார். அச்சிரிப்பை அதற்கு முன் எங்கெல்லாம் கண்டிருக்கிறேன் என்று எண்ணி திகைத்தேன். இளமையில் பிரத்யும்னன் எங்களுடன் விளையாடும்போது உடைவாள்போல இடையில் குழலை அணிந்துகொண்டிருப்பார். குழலைக் கொண்டு வாட்போரிடுவார். அவையெல்லாம் எளிய நகையாட்டுகள் அல்ல குலஇளிவரல்கள் என அப்போதுதான் உணர்ந்தேன்.

இருமுனைகள் நடுவே ஆடிக்கொண்டிருந்தார் மூத்தவர். ஒவ்வொரு அவையிலும் மேலும் மேலும் சீண்டப்பட்டு தன்னை உறுதியானவராக காட்டிக்கொண்டார். ஷத்ரிய அவைகளில் தனக்கு இடம் வேண்டுமென்று வீம்பு கொண்டார். அவ்வாறு ஷத்ரிய அவைகளில் இடம்பெற்ற போதெல்லாம் அவைமுறைமைகளிலும் அவைச்சொற்களிலும் பிழைகள் இயற்றி இளிவரலுக்கு ஆளானார். ஒவ்வொரு முறையும் அவைகளில் இருந்து நாணி முகம் சிவந்து, தன்னை எண்ணியே சீற்றம் கொண்டு, பற்களைக் கடித்து, கைகளைச்சுருட்டி, விழிநீர் மல்க, நடுங்கும் உடலுடனே திரும்பிச் சென்றார். இனியில்லை என உளம்சோர்ந்து அமைந்து தன்னைத்தானே தூண்டிக்கொண்டு மீண்டும் எழுந்தார்.

"நோக்கு, ஒருநாள் இத்துவாரகையை பொசுக்கி அழித்துவிடுவேன்" என்று ஒருமுறை சொன்னார். "இந்நகரை வெல்லவேண்டும். இதன் மேல் மணிமுடி சூடி அமரவேண்டும். அதன் பின் தீய வேள்வி ஒன்றினூடாக இதன்மீது விண்ணின் இடிமின்னல்கள் அனைத்தும் இறங்கச்செய்யவேண்டும். இதன் மாட மாளிகைகள் அனைத்தும் சரியவேண்டும். இது ஒரு இடிபாடுக்குவை என்றாகி கடலில் மறையவேண்டும்.

அதன்பின் இங்கிருந்து சென்று எனக்குரிய புல்வெளியை கண்டடைவேன். அங்கு அமர்ந்து என் குழலை வெளியே எடுப்பேன்" என்றார்.

அப்போது நாங்கள் ஒன்பது உடன்பிறந்தாரும் இருந்தோம். அச்சொற்களால் திகைத்து அவரை நோக்கினோம். "இந்தப் பெருநகர் எனக்குரியதல்ல. ஆனால் இங்கிருந்து ஒருபோதும் தோற்று பின்மாறப்போவதில்லை. யாதவ குலத்துப் பிறந்த எந்தையின் நகரல்ல இது. அவர் தன்னுள் இருந்த ஆணவத்தை பெருக்கிப் பெருக்கி அமைத்தது. அவ்வாணவத்தை வென்று அவர் கடந்தார். நானும் கடந்தால் மட்டுமே எந்தை இனிதிருக்கும் அந்தப் புல்வெளிக்கு செல்லமுடியும்" என்றார்.

அவை விழவென்றால் எந்த அவையிலும் மிக விரைவிலேயே அவர் சலிப்புறுவார். மிக விரைவிலேயே எச்சொல்லையும் செவிமடுக்காமலாவார். பிறரைப் பேசவிட்டு முற்றொதுங்கி முகவாயைத் தடவியபடி கண்கள் விலகிச்சரிந்திருக்க அமர்ந்திருப்பார். அவர் குரல் ஒலிக்க வேண்டுமெனில் சீற்றம் எழவேண்டும். அன்றி அவர் உவகை கொண்டெழ வேண்டும். அவர் இயல்பாக ஓய்வு கொள்வது மிக மிக அரிது. எப்போதும் பதற்றத்தில் இருந்தார். உவகை என அவரில் எழுவது ஒரு கொந்தளிப்பு மட்டுமே. அணுக்கமான உடன்பிறந்தாருடன் ஏதேனும் தனி அறையில் அமர்ந்திருக்கையிலோ எங்கேனும் ஆநிரை மேய்க்கச் செல்கையிலோ மட்டுமே அவர் மகிழ்ச்சியாக இருந்தார்.

ஆநிரைப் பட்டிகளில் அவற்றுடன் அமர்ந்திருக்கையில் சொல்லடங்கிய ஆழ்ந்த மகிழ்வை அடைந்தார். கன்றுகளின் அருகே அமர்ந்து அவற்றைத் தொட்டும் தடவியும் மகிழ்ந்திருக்கும் மூத்தவரை தொலைவிலிருந்து பார்க்கையில்

அவர் அவ்வாநிரைகளுடன் கிளம்பி எங்கேனும் சென்றுவிட்டால் தன் வாழ்வை முற்றே அடைந்து நிறைவுறுவார் என்று தோன்றியிருக்கிறது. அவருடைய கால்கள் மாட்டிக்கொண்டிருக்கும் பொறி இந்தப் பெருநகர். ஆனாலும் நகர் அவரை கவ்விப்பிடித்திருக்கவில்லை. அவர்தான் அதை பிடித்திருக்கிறார். இதோ விடுகிறேன் என்று மூன்று முறை சொல்லி காலை எடுத்துக்கொண்டு அவரால் செல்ல இயலும். ஆனால் மானுடர் எவரேனும் அவ்வண்ணம் தங்களை பொறிகளிலிருந்து விடுவித்துக் கொண்டிருக்கிறார்களா? மானுடர் சிக்கி அழியும் அனைத்துப் பொறிகளும் அவர்களே சென்று சிக்கிக்கொண்டவைதான் அல்லவா?

மூத்தவர் சிரித்துக் களித்துக் கொண்டிருந்த அந்த அவையில் விழிமுன் தெரியாது பதிந்து அமர்ந்தேன். அவர் "இளையோனே, அந்தணராகிய கணிகரை அறிமுகம் செய்துகொள். நீ இங்கிருக்கையிலேயே அவர் இங்கு வந்துவிட்டார். அப்போது இவரை எவரும் தெரிந்துகொள்ளவில்லை. பின்னர் நாள்தோறும் அவைக்கு வந்திருக்கிறார். அவருடைய வெளித்தோற்றம் அவர் மேல் நம் விழிநிலைக்காமல் செய்தது. சில நாட்களுக்கு முன் அவையில் ஒரு இடர் பற்றி பேசியபோது முற்றிலும் புதிய ஒரு பார்வையை முன்வைத்தார். முற்றிலும் புதிய பார்வை எனில் அது எந்தையிடமிருந்து மட்டுமே எழமுடியும் என்று நான் எண்ணியிருந்தேன். பிறிதொருவர் நாவில் அவ்வாறு ஒரு பார்வை எழுந்ததை முதன்முறையாக பார்க்கிறேன்" என்றார்.

நான் ஆர்வம்கொண்டேன். "லக்ஷ்மணை அன்னையின் மைந்தர் நம்முடன் அவைமுரண் கொள்ள வாய்ப்புள்ளதென்று நாம்

அறிவோம். அவர் நம்மிடம் நாடுவது அவைமுதன்மையை. அம்முதன்மையை நாம் அவர்களுக்கு அளித்தால் எதிர்காலத்தில் அவர்களுக்கு மேல் நாம் கோன்மை கொள்ள இயலாது. நாம் வெல்லும் மணிமுடியில் அவர்களுக்கு பங்கு கொடுப்பதுபோல் ஆகிவிடும். எனில் அவர்களை எங்கு நிறுத்துவது என்ற ஐயம் எனக்கு ஏற்பட்டது. அவர்கள் இங்கு நமக்கு இரண்டாம் குடியாக அமைய விரும்பமாட்டார்கள். இது இன்று உடனே நாம் தீர்த்தாகவேண்டிய இடர்."

"இங்கே அதைப்பற்றி பேசிக்கொண்டிருந்தபோது மத்ரநாட்டின் இளவரசனாக லக்ஷ்மணை அன்னையின் மைந்தனை முடிசூட்டலாம் என்றார் கணிகர். ஒருகணத்தில் அவர் உரைப்பதென்ன என்று எங்கள் அனைவருக்கும் புரிந்தது. அவ்வாறென்றால் அவர்கள் தனிநாடு கொள்ள முடியும். எதிர்காலத்தில் விழைந்தால் துவாரகைக்கும் எதிராகக்கூட எழும் வாய்ப்புள்ள பேரரசொன்றை அமைக்க இயலும். அந்தச் சொல்லுறுதியை அவர்களுக்கு அளிப்போம் என்றுதான் அவர் சொல்கிறார் என்று புரிந்தது. நன்று என்று அவ்வண்ணமே செய்தோம். அம்முடிவை அவர்களுக்கு அறிவித்ததும் அனைத்து இறுக்கங்களும் அவிழ அவர்கள் அடைந்த இயல்பு நிலையை கண்டு நான் திகைத்தேன். கணிகர் நம் அவையில் முதன்மையான ஒருவராக ஆனது அவ்வாறுதான். நீ அவரை சந்தித்ததில் எனக்கு மகிழ்ச்சி" என்றார். நான் கணிகரை நோக்கி தலைவணங்கினேன். அவர் புன்னகைத்தார்.

மூத்தவர் என்னிடம் உரத்த குரலில் "நாம் இயற்றவேண்டியதென்ன என்பதை கணிகர் முன்வரைவு அளித்துக் காட்டிவிட்டார். இனி குலக்குழுத் தலைவர்களையும் படைத்தலைவர்களையும் கூட்டி செயல்திட்டம் வகுத்துவிட

வேண்டியதுதான். இத்தனை நாட்கள் எதன்பொருட்டு அஞ்சிக்கொண்டிருந்தோமோ அதை கடந்துவிட்டோம். உடனடியாக நடவடிக்கைகளை தொடங்கவிருக்கிறோம். போரெனில் போர். சூழ்ச்சி எனில் சூழ்ச்சி" என்றார். நான் என் உள்ளத்துள் புன்னகைத்தேன். என்ன திட்டம் வகுக்கப்பட்டுள்ளது என்று எனக்கு புரியவில்லை. ஆனால் கணிகர் உடனடியாக எதையும் தொடங்கமாட்டார் என அறிந்திருந்தேன். தொடங்கிவிடும் என்னும் உச்சநிலை சில நாட்கள் நீடிக்கும்.

நான் அவர்கள் ஒவ்வொருவர் முகத்தையாக பார்த்தேன். "நீ கணிகருடன் இதைப்பற்றி பேசவேண்டும்... அதைத்தான் நான் சொல்லவிழைகிறேன்" என்றார் மூத்தவர். நான் அச்சொற்களை ஒரு அச்சத்தொடுகையுடன் எடுத்துக்கொண்டேன். சென்ற சில நாட்களாகவே அவையில் நான் நோக்கப்படுகிறேன். மூத்தவர் இருவரும் என்னைப் பார்த்தே பேசுகிறார்கள். இயல்பாக அது நிகழ்ந்தாலும் அது அவர்கள் என்னைப்பற்றி பேசிக்கொண்டிருக்கிறார்கள் என்பதையே காட்டுகிறது. எதனால் எனக்கு அந்த அவையில் முதன்மை உருவானது என்பதே அப்போது என் அகவினாவாக இருந்தது. அவையில் எவரும் என்னை இருப்புணர்வதே இல்லை. அவ்வாறு உணர்கிறார்களா என்று அறிய நான் இன்மையை உருவாக்கிப் பார்த்திருக்கிறேன். அப்போதும் நான் உணரப்பட்டதில்லை.

ஏதோ ஒன்று நிகழ்ந்திருக்கிறது என்று எனக்குத் தெரிந்தது. அது கணிகரிடமிருந்து கிளம்பியிருக்கிறது. அக்கூடத்தில் பின் நிரையில் நான் அமர்ந்திருந்தேன். தலை திருப்பினாலன்றி மூத்தவர் என்னை பார்க்கமுடியாது. ஒருவனுக்கு ஒரு அவையில் இடம் அமைவதுகூட இயல்பாக அன்று. எடையின்

அடிப்படையில் பொருள் மிதப்பதுபோல அங்குள்ள இயங்கும் நெறிகளின் விசையால் அது அவனுக்கு அளிக்கப்படுகிறது. என்னருகே இருந்தவர்கள் என்னைப்போன்ற இளைய மைந்தர்கள். அவர்கள் அங்கிருந்து கிளம்பி கடலாடவோ, வேட்டைக்குச் செல்லவோ, குடிக்களியாட்டுக்கு கிளம்பவோ உளம் கொண்டிருந்தனர் என்று தெரிந்தது. அவ்வண்ணம் நான் பின்நிரையில் அமர்ந்திருக்கையில் மூத்தவர் தலைதிருப்பி என்னை பார்த்தமை அவர்கள் அனைவரையும் நிலைகுலையச் செய்தது, வெளிச்சம் பட்ட எலிகளைப்போல அவர்கள் கூசிச் சுருங்கி விழிமின்னினர்.

கணிகரை அங்கிருந்து நான் பார்க்க இயலவில்லை. எங்கிருந்து பார்த்தாலும் எழுந்து நின்று கூர்ந்து நோக்கினாலொழிய கண்ணுக்குப்படாத ஓர் இடத்தை தெரிவு செய்வதில் அவர் திறன் கொண்டவராக இருந்தார். அதையும் நான் எண்ணிக்கொண்டேன். தன் இடத்தை மிகமிக கீழாக அமைத்துக்கொள்பவர் அந்த அவையையே கையிலிட்டு விளையாடுபவர். தன்னை தானே வகுத்துக்கொள்பவனே பிறரை ஆள்கிறான், பிறரால் வகுக்கப்படுபவன் எப்போதுமே நாற்களத்தின் காய் மட்டுமே. நான் கணிகரை அவ்வப்போது நோக்கிக்கொண்டிருந்தேன். அவர் தன்னை ஒரு பொருள் என, துணிச்சுருள்போல ஆக்கிக்கொண்டிருந்தார்.

மூத்தவர் அவையை நோக்கி "நேற்று பேசிக்கொண்டிருக்கையில் இங்கே கணிகர் ஒன்றை சொன்னார். நாம் காளிந்தி அன்னையின் மைந்தரை நம்முடன் சேர்த்துக்கொள்ள முழுமையாக முயலவில்லை என்று" என்றார். அவையில் ஒரு கலைவோசை எழுந்தது. மூத்தவர் கை அசைத்து அவர்களை அமையச்செய்து "ஆம், நீங்கள்

எண்ணுவது புரிகிறது, அவர்கள் நிஷாதர்கள். ஆகவே இயல்பாகவே சாம்பனுடன் நின்றிருக்க வேண்டியவர்கள். ஆனால் எண்ணுக, நாம் முயற்சி செய்தோமா?" என்றார். குடித்தலைவரான குமுதர் "அவர்களை நம்மால் அழைக்கவே முடியாது, ஒரே குருதி என்பது பெரும் வல்லமை" என்றார். "ஆம், அவர்கள் ஏன் நிஷாதர்களை விட்டுவிட்டு நம்முடன் வரவேண்டும்?" என்றார் சப்தகர் என்னும் குடித்தலைவர்.

கணிகர் மிக மெல்ல கனைக்க அனைவரும் அவரை பார்த்தனர். "அவர்கள் ஒரே குடி என்பதனாலேயே பூசல் இருக்கலாம் அல்லவா?" என்றார் கணிகர். அரசரை நோக்கி "சாம்பன் என்ன இருந்தாலும் மலைக்குடியினர். காளிந்தியின் மைந்தர்கள் நீர்மேல் வாழ்பவர்கள். அடிப்படையில் அந்த வேறுபாடு இருந்துகொண்டே இருக்கும். இந்நாளுக்குள் ஏதேனும் சிறு பூசல்கள் அவர்களிடையே எழுந்திருக்க வாய்ப்பிருக்கும்" என்றார். "ஆம், அவ்வாறு செய்திகளும் உள்ளன" என்றார் மூத்தவர். நான் "ஆனால் குருதி என்பது பெரிய இணைப்பு, குடிப்பெரியவர்களால் அவை இணைக்கப்பட்டுவிடும். நம்மால் காளிந்தி அன்னையின் மைந்தர்களை இங்கே கொண்டுவர முடியாது" என்றேன்.

"அதற்கு நாம் வாய்ப்பு அளித்தோமா?" என்றார் கணிகர். "ஒரு வாய்ப்பு அளித்துப்பார்ப்போம். சில தருணங்களில் மிகப் பெரிய வெடிப்புகள் எளிய விரிசல்களாகவே தென்படும். செல்ல ஒரு வழி இல்லை என்பதனாலேயே அவர்கள் அங்கே இருக்கவும் வாய்ப்புண்டு. மாற்றுவழி உண்டு என்னும்போதே உளக்கசப்புகள் பிரிவுகளாக மாறுகின்றன." நான் "ஆம், அதை செய்யலாம்" என்றேன். "நீங்கள் சொல்வது உண்மை. அவர்கள் மொத்தமாக இங்கே வருவதற்கான வாய்ப்புகள் மிகக் குறைவு.

ஆனால் அவர்களில் ஒருவர் பிரிந்து இங்கே வந்தால்கூட அது நமக்கு நன்மையே" என்றார் கணிகர். நான் "ஆம்" என்றேன்.

"நாம் அவர்களிடம் பேசுகிறோம் என்பதே சாம்பனின் உள்ளத்தை நிலைகுலையச் செய்யும். அவர்களை உளவறியத் தொடங்குவார். ஒருவரை நாம் எதன்பொருட்டு உளவறிந்தாலும் உளவறியும்போதே நாம் ஐயம்கொள்ளத் தொடங்குகிறோம். நாம் ஐயம் கொண்டிருந்தால் நம் கேள்விகள் ஐயத்தையே முன்வைக்கும். ஒற்றர்கள் அந்த ஐயத்தை வளர்க்கும் செய்திகளையே நம்மிடம் அளிப்பார்கள். வேண்டுமென்றே சிலர் அளிப்பார்கள், நற்பெயர் பெறும்பொருட்டு. அதை நாம் சற்று உணர்ந்துவிடமுடியும். நம்முடைய ஐயத்தை நாம் நம்மையறியாமலேயே ஒற்றனுக்கு அளித்து அவன் ஐயம்கொண்டு அந்த ஐயத்தைப் பெருக்கி நமக்கு அளிப்பான்."

"எண்ணவே வேண்டியதில்லை, நாம் காளிந்தியின் மைந்தர்களிடம் பேசினாலே அவர்களுக்குள் நம்பிக்கையின்மையை உருவாக்கிவிடுவோம்" என்று கணிகர் தொடர்ந்தார். "நம்பிக்கையின்மை என்பது ஐயத்திற்கு ஆளாகிறவர்களின் ஆணவத்தை சீண்டுகிறது. அவர்கள் பூசலிடுவார்கள். பூசல் ஐயத்தை வலுப்படுத்தும். ஐயம்போல் வளர்வது பிறிதொன்றில்லை. ஆகவே அரசியலாடுபவனின் முதல் பெரும் கருவி ஐயமே என்று அறிக!" என்று கணிகர் தொடர்ந்தார். எனக்கு ஆழ்ந்த அச்சமொன்று உருவானது. என்னால் அவர் முகத்திலிருந்து விழிகளை எடுக்க முடியவில்லை. அவர் சொற்களைக் கேட்காதவர்கள் அம்முகத்தை மட்டும் கண்டால் அவர் அமுதென இனிக்கும் மெய்யறிவையே புகட்டிக்கொண்டிருப்பதாக எண்ணக்கூடும்.

“ஐயம் பிளவுபடுத்துகிறது. ஐயப்படுபவர்களே பலவாக பிளவுபடுகிறார்கள். பொதுவாக பூசல் நிகழும் சூழலில் அனைவருமே பூசலுக்குரிய உளநிலையில் இருக்கிறார்கள். பூசலுக்கான உளநிலை என்பது ஒருவகை நோய். அது அருகிருப்போரையே மிகுதியாகத் தாக்கும். நாம் நம் எதிரியிடம் பூசலிட்டால் நம் உடனிருப்பவர்களையே வசைபாடுவோம். ஆகவே அவர்களிடம் பூசலை வளர்ப்போம். உளந்திரிந்து விலகுபவர்களை இங்கே இழுப்போம். எண்பதின்மரில் எத்தனைபேர் நம்மிடம் இருக்கிறார்கள் என்பது மக்கள் முன் எப்போதும் இருந்துகொண்டிருக்கும் கணக்கு என்பதை மறக்கவேண்டியதில்லை” என்றார் கணிகர்.

“நாம் செய்யவேண்டியது என்ன?” என்று ஒரு குடித்தலைவர் கேட்டார். அவர் முற்றிலும் சொல்லிழந்துவிட்டார் என்று தெரிந்தது. “நம் தூதர் காளிந்தியன்னையின் மைந்தரை அணுகட்டும்” என்று சுஃபானு சொன்னார். “தூதர் எனச் செல்லவேண்டியவர் நம் குடிமைந்தர்களில் ஒருவராகவே இருக்கவேண்டும். ஆனால் அவைமுதன்மை கொண்டவராக இருக்கக்கூடாது. முயற்சி தோற்றால் அது அவருக்கு இழிவு. மேலும் நாம் காளிந்தியின் மைந்தர்களை மிகைப்படுத்திக் கொள்கிறோம் என்றும் தோன்றலாகும். ஆகவே இளையவர்களில் ஒருவர் செல்லட்டும்.” நான் நெஞ்சு படபடக்க அமர்ந்திருந்தேன். எனக்கு புரிந்துவிட்டது.

ஆனால் யாதவ மைந்தர்கள் அதை புரிந்துகொள்ளவில்லை. அவர்கள் ஒவ்வொருவரும் அந்த வாய்ப்பை விரும்பினர், கூடவே அந்தச் செயலை அஞ்சினர். எனவே இரு நிலைகளில் ஊசலாடினர். சுஃபானு “நம் இளையோரில் சொற்திறன் கொண்டவன் இளையவனாகிய பிரதிபானு... அவன்

செல்லட்டும்" என்றார். அவையிலிருந்த பிற மைந்தர் நீள்மூச்செறிந்து உடல் எளிதாவதை கண்டேன். அவர்கள் ஆறுதல்தான் கொள்கிறார்கள் என்ற எண்ணம் என்னை அச்சத்தை நோக்கி தள்ளியது. "மூத்தவரின் ஆணை என் கடமை" என எழுந்து தலைவணங்கினேன். "ஆனால் என்ன பேசுவது, எப்படித் தொடங்குவது என்பது எனக்கு இன்னமும் புரியாததாகவே உள்ளது."

சுஃபானு "அதை கணிகர் உனக்கு கற்பிப்பார்" என்றார். "அவரிடம் சொல்தேர்க..." என்றார் ஃபானு. கணிகர் "காளிந்தியின் மைந்தர்களில் இளையவரான சோமகன் உங்களுக்கு சற்று அணுக்கமானவர் என அறிந்துள்ளேன், அரசே" என்றார். "ஆம், அவன் கடலாட விழைபவன்... அவர்கள் அனைவருமே நீர்விளையாட்டில் ஆர்வம் கொண்டவர்கள்" என்றேன். "எனில் அதுவே உள்ளே நுழையும் வழி எனக் கொள்க. அதனூடாக அன்னையை நேரில் சென்று சந்தித்துப் பாருங்கள்" என்றார் கணிகர். "அவர் இருக்கும் நிலையை ஊர் அறியும். அவர் உளநிலை குலைந்திருக்கிறார். தந்தை இன்னும் தன்னைவிட்டு நீங்கவில்லை என்றே எண்ணிக்கொண்டிருக்கிறார்" என்றேன்.

"அது நன்று. அவரை சந்தியுங்கள், எப்படியாவது அவர் நாவிலிருந்து அரசர் ஃபானுவுக்கு ஒரு வாழ்த்தை பெற முயல்க! அந்த வாழ்த்தில் இளைய யாதவரின் முதல் மைந்தர் ஃபானு என்னும் ஒரு வரி இருக்குமென்றால் போதும், எஞ்சியதை நான் பார்த்துக்கொள்கிறேன்" என்றார் கணிகர். "அது இயலுமென்றே தோன்றுகிறது. முன்பு நான் காளிந்தியன்னைக்கு அணுக்கமான மைந்தனாக இருந்தேன்" என்றேன். "அன்பினூடாகச் செல்க! ஒற்றறியவும் அரசாடவும்

மிகச் சிறந்த வழி அதுவே" என்றார் கணிகர். "ஆணை" என நான் தலைவணங்கினேன்.

அவை முடிந்து நான் வெளியே வந்தேன். என்னை வழக்கமாகச் சூழ்ந்து வரும் இளையோர் அனைவரும் விலகிச்சென்றுவிட்டிருந்தனர். நான் தனியாக இடைநாழியில் நடந்தேன். என்னைவிட்டு ஏன் இளையோர் அகல்கிறார்கள் என்று எனக்கு தெரியவில்லை. பின்னால் வந்த ஏவலன் என்னை அழைத்து "கணிகர் தங்களை பார்க்கவிழைகிறார், இளவரசே" என்றான். நான் ஒன்றும் சொல்லாமல் அவனுடன் சென்றேன். அவைக்கு அருகிலிருந்த சிற்றறையில் கணிகர் இருந்தார். தரையில் விரிக்கப்பட்டிருந்த கம்பளத்தில் அவர் உடல் கிடந்தது. ஏவலன் ஒருவன் அவர் அணிந்திருந்த பட்டாடையைக் கழற்றி அவருக்கு பருத்தியாடைகளை அணிவித்துக்கொண்டிருந்தான்.

அவர் ஒரு தவளைபோலிருந்தார். அவ்வுடலின் சிதைவு என்னை விழிவிலக்கச் செய்தது. "பெரும்பொறுப்பு இளவரசே, ஆனால் வென்றால் நீங்கள் தலைமை கொள்வீர்கள்" என்றார். "நானா?" என்றேன். சிரித்து "தலைமையா?" என்று சொன்னேன். கணிகர் "ஆம், பத்துபேரில் இன்றிருப்பவர்கள் இருவரே தலைவர்கள். ஃபானுவும் அவரை எதிர்க்கும் ஸ்வரஃபானுவும். மூன்றாவதாக நீங்கள் எழவேண்டும்..." என்றார். நான் "அவர்கள் அனைவரும் என்னை அஞ்சி விலகிச் செல்கிறார்கள்" என்றேன். "ஆம், அதுவே முதல் எதிர்வினையாக இருக்கும். அது நன்று. நீங்கள் அவர்களில் ஒருவரல்ல என்று அவர்கள் புரிந்துகொண்டிருக்கிறார்கள்" என்றார் கணிகர். "வென்றால் அவர்களைவிட நீங்கள் மேல் என்று எண்ணுவார்கள்."

நான் தலையசைத்தேன். "வெல்வது எளிது" என்று அவர் சொன்னார். "காளிந்தியிடமிருந்து அவ்வண்ணம் ஒரு சொல்லை நீங்கள் பெற முடியாது. ஆனால் பெறும் எச்சொல்லையும் நாம் விழைந்ததுபோல் விளக்கிக்கொள்ளலாம். வெற்றி ஒன்றே நம் இலக்கு. உலகியலுக்கு அப்பால் நிற்பவர்கள் உலகியலில் சரியாகப் பொருள்படும்படி பேச முடியாது. ஆகவேதான் அவர்களை உலகியலார் எளிதாக பயன்படுத்திக்கொள்கிறார்கள்." நான் "ஆம்" என்றேன். "அவர் சொன்னதை என்னிடம் வந்து சொல்லுங்கள், நான் அதை விளக்குகிறேன்" என்றார் கணிகர். "அவரை நீங்கள் சந்திக்கும்போது உங்கள் மூத்தவர் ஃபானு துவாரகையின் மன்னராக முடிசூடவிருக்கிறார் என்று சொல்லுங்கள். வாழ்த்தி ஏதேனும் பொருளை வாங்குங்கள். பொருள் சொல்லைவிட பொருட்செறிவு மிக்கது. அதை ஒரு விதை என நட்டு நாம் மரமாக்கி காடாகவே ஆக்கிக்கொள்ளமுடியும்."

"ஆம்" என்று நான் சொன்னேன். "அவர்கள் வாழ்த்துவார்கள். இங்குள்ள அரசியல்பூசல் அவர்களுக்கு புரிந்திருக்காது. தன் கொழுநரின் மைந்தன் என்றே அவர்கள் ஃபானுவை கருதுவார்கள். வாழ்த்தை ஒரு பொருள் என பெற்றால் நாம் வென்றோம்" என்றார் கணிகர். நான் "ஆம்" என்றேன். ஏவலர் அவரை புரட்டிப்புரட்டி ஆடை அணிவிப்பதை நோக்கி நின்றேன். அப்போது என்னுள் தோன்றிய எண்ணம் அக்கணமே அந்தப் புழுவை நசுக்கி அழித்துவிடவேண்டும் என்பதே. என்றாவது என் கையில் செங்கோல் வருமென்றால் அதையே முதல் ஆணையாக பிறப்பிப்பேன்.

ஏவலன் கணிகரை திருப்பியபோது அவர் என்னை நோக்கி புன்னகைத்தார். அந்தப் பேரழகுப் புன்னகை. தந்தையே, நான் கால்தளர்ந்துவிட்டேன். என் எண்ணங்களை அறிந்தா அவர் புன்னகைக்கிறார்? அல்லது அது அறியாமையின் புன்னகையா? அல்ல, அவர் அறியாத ஒன்றில்லை. அவர் அவ்வண்ணம் பழகிவிட்டிருக்கிறார். வெயிலில் மலர்கள் அழகுகொள்வதுபோல அவர் வெறுப்பு பொழியப்படும்போதே உள்ளம் மலர்கிறார். நான் தலைவணங்கி வெளியேறினேன்.

# கல்பொருசிறுநுரை - 25

**பகுதி நான்கு : அலைமீள்கை – 8**

நான் காளிந்தி அன்னையை சந்திக்கச் சென்றபோது என் நெஞ்சு ஒழிந்து கிடந்தது. ஒரு சொல் எஞ்சியிருக்கவில்லை. நீள்மூச்செறிந்தபடி, தன்னந்தனியனாக உணர்ந்தபடி நடந்தேன். கணிகர் என்னிடம் சொன்ன அனைத்தையும் மறந்துவிட்டேன். நான் உணர்ந்தது ஒன்றையே. தந்தையே, பாலைநிலங்களில் ஆழ்ந்த மண்வெடிப்புகளுக்குள் மிகமிகத் தூய்மையான நீர் தேங்கியிருக்கும். புறவுலகிலிருந்து ஒளி மட்டுமே அங்கே சென்று அதை தொடும். அத்தகைய நீர்ச்சுனை ஒன்றில் என் கைகளை கழுவப் போகிறேன்.

ஆனால் அது என் பணி, நான் செய்தே ஆகவேண்டியது. ஏனென்றால் நான் இந்த ஆடலில் இருந்துகொண்டிருக்கிறேன்.

இந்தக் களத்தில் நான் வென்றாகவேண்டியிருக்கிறது. காளிந்தியன்னையை சந்திக்கவேண்டும் என்று நான் செய்தி அனுப்பினேன். ஆனால் அச்செய்திக்கு எனக்கு மறுமொழி வந்தது இளவரசி கிருஷ்ணையிடமிருந்து. கிருஷ்ணையின் ஆட்சியில் காளிந்தியன்னை இருக்கிறார் என அறிந்திருந்தேன். ஆனால் அவ்வண்ணம் ஒரு நேரடியான கட்டுப்பாடு இருக்கும் என நான் எண்ணியிருக்கவே இல்லை.

எதன்பொருட்டு நான் அன்னையை சந்திக்கவேண்டும் என்று கிருஷ்ணை கேட்டிருந்தார். என் அன்னையை சந்திக்க எனக்கு தனியான நோக்கங்கள் தேவையில்லை, அவர்களை சந்தித்தாலே போதும் என்று சொல்லி அனுப்பினேன். எனில் இளவரசி கிருஷ்ணையை சந்தித்தபின் நான் அரசியை சந்திக்கலாம் என்று செய்தி வந்தது. வேறுவழியில்லை. ஆகவே நான் கிருஷ்ணையை சந்திக்கச் சென்றேன்.

இளவரசியின் அரண்மனை மைய அரண்மனையிலிருந்து சற்றே விலகி இருந்தது. அங்கே துரியோதனனின் அரவக்கொடி பறப்பதை கண்டேன். அங்கு முன்பு அஸ்தினபுரியின் அமுதகலக்கொடி பறந்துகொண்டிருந்ததை நினைவுகூர்ந்தேன். என்னை உள்ளே அழைத்துச்சென்ற ஏவலன் அங்கே சிறுகூடத்தில் அமர்த்திவிட்டுச் சென்றான். அந்த அறையிலிருந்த முழுமையும் தூய்மையும் என்னை திகைக்கச் செய்தன. தந்தையே, மொத்த துவாரகையிலும் ஓர் அரசியின் அவை என தோன்றியது அதுவே.

இளவரசி கிருஷ்ணை என்னை உள்ளே அழைப்பதாகச் சொன்னார்கள். நான் உள்ளே நுழைந்து அங்கே பீடத்தில் அமர்ந்திருந்த இளவரசி கிருஷ்ணையை வணங்கினேன். அவர் முகமன் உரைத்து பீடம் அளித்தார். "கூறுக!" என்று கூரிய

சொல்லால் ஆணையிட்டார். அவர் களைத்துப்போயிருந்தார். கண்களைச் சூழ்ந்து கருவளையங்கள். அகவை முதிர்ந்தவர்போல, நோயுற்றவர்போல தோன்றினார். முன்பு சாம்பனின் துணைவியாக அவர் துவாரகையில் நுழைந்தபோது இருந்த தோற்றத்தை நினைவுகூர்ந்தேன். அவரை பேரரசி திரௌபதியின் இளைய வடிவம் என்றனர். நகரே சாலைகளில் கூடி அவரை வரவேற்றது. 'கன்னங்கரிய முத்து' என்றனர் சூதர்.

"இளவரசி, நான் என் அன்னை காளிந்தியை சந்திக்கவேண்டும்" என்றேன். "என் தனிப்பட்ட நோக்கத்துக்காக அன்னையை சந்திக்க விழைகிறேன். அவருடைய நற்சொல் என்னை நிறைவுறச் செய்யும் என எண்ணுகிறேன். அதன்பொருட்டு நான் எவருடைய ஆணையையும் பெறவேண்டியதில்லை என அறிவேன். ஆனால் தாங்கள் என் அன்னையை பேணி பணிவிடைசெய்து வருவதனால் என் வணக்கத்தையும் நன்றியையும் சொல்லும்பொருட்டு வந்தேன்" என்றேன்.

"அவர் தன் விருப்பத்தால் என் ஆணைக்குள் இருக்கிறார்" என்று இளவரசி கிருஷ்ணை சொன்னார். அவரின் விழியை என்னால் நோக்கமுடியவில்லை. வஞ்சமா சினமா வெறுப்பா எனத் தெரியாத அனல் ஒன்று அங்கே நிறைந்திருந்தது. "நான் ஒப்பாமல் எவரும் அவரை சந்திக்கமுடியாது" என்றார். "ஆனால் எவ்வண்ணம் நீங்கள் எனக்கு ஒப்புதல் மறுக்கமுடியும்?" என்றேன். "முடியும், அவர் என்னை அதன்பொருட்டு அமர்த்தியிருப்பதனால். அதை மறுக்கவேண்டும் என்றால் நீங்கள் யாதவர்கள் படைகொண்டு வந்து என்னை வெல்லுங்கள்" என்றார்.

நான் அவரை நேருக்குநேர் பார்த்தேன். அவரிடம் எளிதில் சொல்லாட முடியாது என்று புரிந்துகொண்டேன். ஆகவே

பணிவுடன் சொல்லெடுத்தேன். "இளவரசி, நான் பூசலுக்கு வரவில்லை. என் அன்னையை சந்திக்க எனக்கு ஒப்புதல் அளிக்கவேண்டும்" என்றேன். அவர் என்னை சில கணங்கள் கூர்ந்து நோக்கிவிட்டு "அன்னை அரசியலுக்கு அப்பால் இருக்கிறார். அவர்மேல் உங்கள் அழுக்குகளை கொண்டுவந்து கொட்டவேண்டியதில்லை" என்றார். "ஆம், அறிவேன். நான் வந்தது அவருடைய வாழ்த்தை நாடித்தான்" என்றேன்.

இளவரசி கிருஷ்ணை "எதன்பொருட்டு?" என்றார். அக்கணம் என்னுள் ஒரு கூர் எழுந்தது. "அன்னை முன்னர் என்னிடம் ஒருமுறை சொன்னார், நான் என் தந்தையின் தோற்றம் கொண்டவன் என்று. அதை நினைவுகூர்கிறேன். துவாரகையின் யாதவர்குடியின் அரசனாக நான் முடிசூடிக்கொள்ளவேண்டும் என்றால் எட்டு அன்னையரில் காளிந்தியன்னையின் வாழ்த்தே முதலில் அமைவது என்று தோன்றியது" என்றேன். இளவரசி கிருஷ்ணையின் கண்கள் சுருங்கின. "நீங்களா, முடிசூடுவதா?" என்றார். "ஆம், ஏன் நான் முடிசூடக்கூடாது? யாதவக்குடிகளில் விருஷ்ணிகளின் ஆதரவு என்னிடமே" என்றேன்.

"மூத்தவர் ஃபானுவின் அவைமுதல்வர்களில் ஒருவர் நீங்கள். அவருடைய தூது என வந்தவர்" என்றார். "இன்று ஒவ்வொருவரும் அவ்வண்ணம் ஒவ்வொரு தோற்றத்தில் இருக்கிறார்கள். நான் என் இலக்கை நன்கறிந்தவன்" என்றேன். "ஏனென்றால் நானே யாதவ மைந்தர் பதின்மரில் தகுதி கொண்டவன்." அவர் விழிகளில் ஐயம் அலையடிப்பதை கண்டேன். "கணிகர் என்னிடம் சொன்னார், என் வழிகள் சிக்கலானவை, ஆனால் அவை என்னை தகுதிப்படுத்தி இலக்கடையச் செய்யும் என்று" என்றேன்.

அவர் உள்ளத்தின் ஆழத்தில் ஒரு புன்னகை மலர்வதை விழிகளில் முழுக்க மறைக்க முடியவில்லை. "கணிகர் இங்கிருக்கிறார் என அறிவேன்" என்றார். "அவர் என்னுடன் இருக்கிறார்" என்றேன். "அவரிடமிருந்து ஆணைபெற்றே அன்னையை சந்திக்கச் செல்கிறேன்." இளவரசி கிருஷ்ணை உள்ளூர புன்னகைத்துக்கொண்டே இருப்பதை என்னால் காணமுடிந்தது. என்னுள் கணிகர் ஒவ்வா விழைவொன்றை தூண்டிவிட்டு அது பெருகிய களிமயக்கினால் நான் அங்கே வந்திருக்கிறேன் என்று அவர் எண்ணுவதை புரிந்துகொண்டேன். ஆனால் என் விழிகளில் என் எண்ணங்கள் தெரியாதவாறு என்னை மறைத்துக்கொண்டேன்.

"நீங்கள் அன்னையின் வாழ்த்தைக் கொண்டு என்ன செய்யமுடியும்?" என்று இளவரசி கிருஷ்ணை கேட்டார். "இளவரசி, நீங்களே அறிவீர்கள். லக்ஷ்மணையன்னையின் மைந்தரை பேசி நம்பவைத்து யாதவர் தரப்புக்கு கொண்டுவந்தவர்களில் நானும் ஒருவன். அவர்களில் மூவர் என்னை ஆதரிக்கிறார்கள். என் இளையோர் இருவர் என்னுடன் இருக்கிறார்கள். காளிந்தியன்னை என்னை ஆதரிக்கிறார் என்ற ஒரு சொல்போதும், விருஷ்ணிகளில் ஒருசாரார் எனக்கு ஆதரவு தெரிவிப்பார்கள்" என்றேன்.

"அதை வைத்து நீங்கள் எதிர்த்து எழுவீர்களா என்ன?" என்றார். மிகமிக சொல்தேர்ந்து கூறப்பட்டது அந்தக் கேள்வி. நான் "ஆம், அரசி" என்றேன். "கிளர்ந்தெழவேண்டியதில்லை. கிளர்ந்தெழக்கூடும் என்ற வாய்ப்பு இருந்தாலே போதுமானது... அவ்வண்ணம் ஒரு வாய்ப்பு கண்ணுக்குப்பட்டாலே என்னை நோக்கி ஆதரவு வரத்தொடங்கும். என்ன இருந்தாலும் ஃபானு

அந்தகர்களின் தலைவர். விருஷ்ணிகள் அவரை இன்னும் முற்றேற்கவில்லை.”

“விருஷ்ணிகளின் ஆதரவுக்கும் காளிந்தியன்னையின் ஆதரவுக்கும் என்ன தொடர்பு?” என்று இளவரசி கிருஷ்ணை கேட்டார். “ஓர் உணர்வுத்தொடர்பு உள்ளது. விருஷ்ணிகளில் பலர் அன்னை காளிந்தியை பர்சானபுரியின் ராதையின் வடிவமாகவே எண்ணுகிறார்கள். பர்சானபுரியின் கோபிகை இன்று விருஷ்ணிகளின் இல்லந்தோறும் அமைந்திருக்கும் தெய்வம்” என்றேன். இளவரசி கிருஷ்ணையின் விழிகளை நோக்கியபோது அவர் நிறைவுற்றுவிட்டிருப்பதை உணர்ந்தேன்.

என்னால் அத்தனை கூர்மையாக அத்தருணத்தை உருவாக்க முடிந்ததை எண்ணி நானே வியந்தேன். “இளவரசி, மூத்தவர் சாம்பன் துவாரகையை முழுதாள்வதை நான் அறிவேன். அவரை வென்று இந்நகரை யாதவர் கைப்பற்றமுடியாதென்பதை என் மூத்தவர் உணரவில்லை. ஷத்ரியரும் விலகி நின்றிருக்கையில் யாதவர் ஒருபோதும் அசுரர்களையும் நிஷாதர்களையும் போரில் வெல்லமுடியாது. நான் நிலைமையை நன்குணர்ந்தவன். அதை என் மூத்தவரின் அவையில் என்னால் சொல்லமுடியாது. ஆகவே எனக்கான கனவுகளை நானே உருவாக்கிக்கொண்டிருக்கிறேன்.”

சொல்க என்பதுபோல அவர் பார்த்தார். “இளவரசி, நான் விழைவது ஒரு யாதவநிலம். மதுராவையும் மதுவனத்தையும் இணைத்து ஓர் அரசு. இங்கல்ல, யாதவக்குடிகள் வாழும் கங்கையமுனை சமவெளியில். இங்கே இப்படி ஒரு மாபெரும் வணிகநகரை ஆட்சிசெய்யும் ஆற்றல் யாதவர்களிடமில்லை. அதை கணிகரும் என்னிடம் சொன்னார்” என்றேன். அவர் “ஆம்” என்றார். “ஒருவேளை என் கணக்குகள் நிறைவேறும் என்றால்

நான் சாம்பனிடம் அதைப்பற்றி நேரில் பேசவே விழைகிறேன். அதில் இருசாராருக்கும் நன்மையே விளையும்" என்றேன்.

"சாம்பன் விழைந்தால் நீங்கள் இங்கு வந்து இணையக்கூடுமா?" என்றார் இளவரசி கிருஷ்ணை. "ஆம், ஆனால் வெறுமனே இளையோனாக வரமாட்டேன். என்னுடன் விருஷ்ணிகளின் குடித்தலைவர்கள் பலர் வந்தாகவேண்டும். என் இளையோர் சிலரும் உடனிருக்கவேண்டும். யாதவர்களின் தலைவன் என சாம்பன் என்னை ஏற்பார் என்றால், எனக்கான நிலத்தை வாக்களிப்பார் என்றால் வருவேன். அதற்கு இன்னும் பொழுதும் நாளும் உள்ளது" என்றேன். இளவரசி கிருஷ்ணை "ஆம், அதையே நானும் எண்ணினேன். உங்கள் தரப்பை திரட்டிக்கொள்க. கணிகரிடம் எண்ணிச் சொல்சூழ்க. உரிய தருணத்தில் சாம்பனிடம் பேச நானே உங்களுக்கு அவையமைக்கிறேன்" என்றார்.

"இளவரசி, மெய்யாகவே நான் உங்களை சந்திக்க வந்ததே இதன்பொருட்டுத்தான்" என்று நான் சொன்னேன். "இந்தப் பேச்சு எல்லா வகையிலும் எனக்கு உதவுவது." இளவரசி கிருஷ்ணை என்னிடம் "கணிகரின் நோக்கம் என்ன?" என்றார். "உரிய முறையில் விருஷ்ணிகளை கோல்கொள்ளச் செய்வது என்று அவர் என்னிடம் சொன்னார். விருஷ்ணிகளின் தலைவனாக நானே உகந்தவன் என்பதனால் அவர் என்னை ஆதரிக்கிறார்." இளவரசி கிருஷ்ணை உள்ளே வாய்விட்டு சிரிப்பதை கண்கள் காட்டின. அவர் என்னை அறிவிலா தன்விரும்பி என நினைக்கிறார். அவ்வெண்ணமே நீடிக்கட்டும். என்னை இளையோன், அறிவிலி என்று பிறர் எண்ணுவதுபோல எனக்கான கவசம் வேறில்லை.

“நன்று, நான் உங்களுக்கான சந்திப்பை ஒருக்குகிறேன்” என்று இளவரசி கிருஷ்ணை சொன்னார். அவருடைய ஏவலன் சென்று காளிந்தி அன்னையின் அணுக்கியிடம் பேசிவிட்டு வந்து அவர் சித்தமாக இருப்பதாக சொன்னான். “நான் தங்களுக்கு இதன்பொருட்டு கடமைப்பட்டிருக்கிறேன், இளவரசி” என்றேன். “நம் அணுக்கம் நீடிக்கட்டும்” என்று அவர் சொன்னார். “நான் தங்களை சந்திக்கவேண்டும் என்று கணிகர் சொன்னார். அவ்வாறு சந்திப்பதை இங்கே எவரிடமிருந்தும் மறைக்கவும் முடியாது. ஆகவே இந்த முறையான சந்திப்பு நிகழ்வது நன்று என்றார்” என்றேன்.

இளவரசி கிருஷ்ணை வாய்விட்டு நகைத்து “கணிகர் அறியாத ஒன்றில்லை” என்றார். “அவரை நான் சந்திக்க விழைகிறேன். அவர் எந்தைக்கு அணுக்கமானவராக இருந்தார்” என்றார். “ஆம், அதை சொல்லிக்கொண்டே இருந்தார்...” என்றேன்.

காளிந்தி அன்னையின் தவக்குடிலுக்கு நான் கிளம்பியபோது என்னுடன் தானும் வருவதாக கிருஷ்ணையும் கிளம்பினார். நான் அதை எதிர்பார்த்திருக்கவில்லை. இளவரசி வெளியே சென்றபின் நான் கூடத்தில் காத்திருந்தேன். என்னை அழைத்துச்செல்லவிருந்த ஏவலன் “சற்றே பொறுங்கள், அரசியும் உடன் வருகிறார்” என்றான். நான் “யார்?” என்றேன். “அரசி கிருஷ்ணை, தானும் உடன் வருவதாகச் சொன்னார்” என்றான்.

நான் திகைத்துவிட்டேன். அது எவ்வகையிலும் முறையானது அல்ல. அதுவரை மிக நுட்பமாக அத்தருணத்தை நான் கையாண்டதாக எண்ணிக்கொண்டிருந்தேன். முறைமைகளை மீறிய ஒரு முரட்டுச் செயல்பாடு வழியாக என்னை அவர் வென்றுவிட்டார் என்று தோன்றியதும் சினம் எழுந்தது. என் உடலெங்கும் அது படபடத்தது. அவ்வண்ணமென்றால் என் மாற்றுருவை அவர் ஏற்கவில்லை. அந்த அறையிலிருந்து விலகியதுமே அதன் மேல் ஐயம் கொள்கிறார். அல்லது அந்த மாற்றுருவை முழுமையாக நம்பி என்னை ஓர் அறிவிலி என்றே எண்ணுகிறார்.

ஆனால் என்னை கட்டுப்படுத்திக்கொள்ள வேண்டும் என்று என்னை நானே ஆணையிட்டுக்கொண்டேன். நான் அதுவரை உருவாக்கிய அனைத்தையும் அந்தப் பொறுமையிழப்பால் இழந்துவிடலாகாது. சற்றுநேரத்திலேயே மேலாடை அணிந்தபடி இளவரசி கிருஷ்ணை வந்தார். "செல்வோம், நானும் உடன் வருகிறேன். நான் அன்னையைப் பார்த்து இரு நாட்களாகின்றன" என்றார். நான் "அரசி, இது தனிப்பட்ட முறையில் நான் அன்னையை சந்திக்கும் நிகழ்வு. அவர்கள் என்னிடம் ஏதேனும் தனிச்செய்தி சொல்ல விரும்பினால் சொல்லலாம் என்றே அவரை பார்க்கச் செல்கிறேன்" என்றேன்.

"அவ்வண்ணம் ஒரு தனிச்செய்தி இன்று அவருக்கு இருக்கும் என்று நான் எண்ணவில்லை. அப்படி இருப்பினும் கூட அதை நான் அறியாது கூற வேண்டியதில்லை" என்று கிருஷ்ணை கூறினார். சினம் மேலெழ நான் ஒருகணம் நடுங்கினேன். பின்னர் "என் அன்னையிடமிருந்து ஒரு வாழ்த்தை நான் பெற்றுக்கொள்ள நீங்கள் உடனிருந்தாக வேண்டுமா?" என்றேன். "ஆம், என் ஆணையில்லாமல் இங்கே எதுவும் நிகழாது"

என்றார். என் அத்தனை கட்டுப்பாடுகளும் சிதறின. "இளவரசி, இந்த அரசில் அல்ல எந்த அரசிலும் என் மூத்தவரின் ஆணைக்கப்பால் பிறிதொரு ஆணையை நான் ஏற்றுக்கொள்வதில்லை" என்றேன்.

அவர் சினத்தில் முகம் சுருங்க பற்கள் தெரிய என்னைப் பார்த்து "யாதவபுரிக்குள் எனது ஆணையே செல்லும். என் கோல் இங்கு நிலைகொள்கிறது" என்றார். "இல்லை, அது என்னிடம் செல்லாது, இளவரசி" என்றபடி நான் திரும்பிக்கொண்டேன். "நான் சென்று அன்னையை சந்திக்கப் போகிறேன். நீங்கள் ஒன்று செய்யலாம். உங்கள் படைகளை அனுப்பி என்னை சிறைப்படுத்திவிடலாம். தலை கொய்யலாம். ஆனால் என் விருப்பின்றி ஒரு ஆணையை என் மீது செலுத்தமுடியாது" என்றேன். அவர் நடுங்குவதை கண்டேன். என்னுடைய அந்த முகத்தை அவர் எதிர்பார்க்கவில்லை. அவர் நினைத்தவன் அல்ல நான் என்று அக்கணத்தில் உணர்ந்துகொண்டிருந்தார்.

நான் தலைவணங்கி அறையைவிட்டு வெளியே கிளம்பும்போது அவர் என் பின்னால் வந்தார். "என்னால் உங்கள் தலை கொய்ய முடியாது என்று எண்ணுகிறீர்களா?" என்றார். "முடியும். ஏனெனில் முன்பின் எண்ணாது வெறும் விழைவையும் ஆணவத்தையும் மட்டுமே நம்பிச்சென்ற ஒருவரின் மகள் நீங்கள். என் தலை கொய்யலாம். ஆனால் யாதவநிலத்தில் உங்கள் அசுரகுடியினரைவிட மிகுதியான படைவீரர்கள் இருக்கிறார்கள் என்பதை எண்ணுங்கள். நாங்கள் திரண்டெழுந்து வந்து உங்களை வென்று உங்கள் மைந்தர்களின் தலைகொண்டு போவது நிகழக்கூடாதது அல்ல. என் தலையை உங்கள் மைந்தர்களின் தலையை வைத்து ஆடுங்கள்" என்றேன்.

அவர் உடல் நடுங்க முகமெங்கும் சினம் கொதிக்க நின்றார். கைகளை முறுக்கி பற்களை இறுகக் கடித்து என்னை நோக்கி வந்து "அங்கு நீங்கள் என்ன பேசினாலும் எனக்கு தெரியும். நான் அறியாது எதையும் இந்நகரில் எவரும் உரைக்க இயலாது" என்றார். "அது உங்கள் திறன். அதைப்பற்றி எனக்கு ஒரு பொருட்டும் இல்லை. ஆனால் என் மீது பிறர் ஆணை எழாது என்பதை மீண்டும் சொல்ல விழைகிறேன்" என்றேன். தளர்ந்து அவர் கையை தொங்கவிட்டபோது வளையல்கள் ஒன்றின் மேல் ஒன்று அமைந்து ஓசையெழுந்தது. "நன்று, செல்க!" என்றார். நான் மீண்டும் தலைவணங்கினேன்.

"ஆனால் அரசியென நான் அமர்ந்திருக்கையில் என் முன் நின்று நீங்கள் சொன்ன இச்சொற்களுக்காக தாங்கள் வருந்தவேண்டியிருக்கும். துவாரகை பேரரசென எழும். மணிமுடி சூடி சாம்பன் இதில் அமர்ந்திருப்பார். ஒருநாள் இங்கிருந்து படைகொண்டு சென்று அஸ்தினபுரியை அழிப்பேன். அங்கு வஞ்சத்தில் வென்று அமர்ந்திருக்கும் அவ்வீணர்களை சிதைப்பேன். அவர்களின் கொடிவழியில் ஒருதுளிக் குருதியும் எஞ்சாமலாக்குவேன். அன்று ஒருவேளை விருஷ்ணி குலமும் முற்றழிக்கப்பட்டிருக்குமெனில் அது இப்போது நீங்கள் உரைத்த இச்சொற்களுக்காகவே" என்றார்.

நான் உரக்க நகைத்து "எது அழியும் எது வாழும் என்பதை மானுடரின் ஆணவம் முடிவெடுப்பதில்லை என்பதை தங்கள் தந்தையின் வரலாற்றைக்கொண்டு குருக்ஷேத்ரத்தில் அறிந்தேன். இனி இத்தகைய சொற்கள் எதையும் செவிகொள்வதில்லை என்று சொல்லிக்கொண்டேன்" என்றேன். "என் தந்தை வஞ்சத்தால் தோற்கடிக்கப்பட்டார். அரசனுக்குரிய பேரியல்புகளுள் தந்தைக்குரிய நல்லியல்புகளும் கொண்டவர்.

அவரை வென்றது அச்சிறப்புகளே" என்றார் கிருஷ்ணை. "நான் அத்தகைய புறவாயில்கள் எதையும் திறந்துபோட்டு அமர்ந்திருக்கவில்லை. எனக்கு அரச முறைமைக்கு அப்பாற்பட்ட நெறியென ஏதுமில்லை. எந்த எல்லைக்கும் சென்று எதையும் இயற்றி வெல்லலாம், வெற்றியே அறமென்றாகும் என்று சொன்னவர் உங்கள் தந்தை. இதோ அதை தலைமேற்கொண்டு அமர்ந்திருக்கிறேன்" என்றார்.

"எந்தை வென்றவர் அல்ல" என்று நான் சொன்னேன். "அவர் சொல் முழுமையானதும் அல்ல." அவர் ஏளனத்துடன் "இல்லை, என் நோக்கில் அவரே வென்றவர். கலியுகத்தின் இறைவன் அவரே. முழுமையாகவே அவரை ஏற்று ஒழுகவிருப்பவள் நான். ஆகவே இங்கு, இந்த துவாரகையில் என் தந்தை கனவுகண்ட அரசொன்றை நிறுவுவதும் அதன் மேல் அமர்ந்து எந்தை பெயர் சொல்லி ஒரு மைந்தனை ஈன்று அரியணை அமர்த்திச் செல்வதும் மட்டுமே நான் கொண்டிருக்கும் இலக்கு. அது நிகழும். நோக்குக!" என்றார்.

நான் "இது தங்கள் தந்தையின் குரல் அல்ல, இளவரசி. இது அஸ்தினபுரியின் அரசி திரௌபதியின் குரல்" என்றேன். "இதுவல்லவா சத்யவதியின் குரல்? தேவயானியின் குரல், தமயந்தியின் குரல்? காலந்தோறும் இவ்வண்ணம் பெண்டிர் அலையலையென எழுந்து வருகிறீர்கள் போலும். நன்று, இதை வைத்து ஆடுவது ஊழ் எனில் அதுவே முடிவெடுக்கட்டும்" என்று சொல்லி நான் திரும்பிச்சென்றேன். என் பின் உருகும் இரும்புப் பதுமை என அரசி கிருஷ்ணை நின்றுகொண்டிருப்பதை நோக்காமலே நடந்தேன். இரும்பு இரும்பையே ஈனுகின்றது. எரிகொண்டுருகி அனல்கொண்டு

நிற்கையிலும் இரும்பு இரும்பின் இயல்புகளையே வெளிப்படுத்துகிறது.

நான் எண்ணிக்கொண்டேன் இரும்பு இங்கு ஆற்றும் பணிதான் என்ன? வெட்டுவது, துளைப்பது, முறுக்குவது, பற்றி இறுக்குவது. இரும்பு உலோகங்களின் அரசன். கொதிநிலையில் இரும்பு பொன்னென்று தன்னை காட்டுகிறது. ஒருவேளை பொன்னென்று அது தன்னை எண்ணிக்கொண்டிருக்கவும் கூடும். ஆயினும் இரும்பு இரும்பேதான். அதன் ஆற்றல்கள் எல்லையற்றவை. ஆனால் அதைக்கொண்டு ஓர் ஆலயச்சிலையை எவரும் வடிப்பதில்லை. அதன் உறுதி இணையற்றது ஆயினும் காலத்தில் துருவேறி மண்ணென்றும் புழுதியென்றும் ஆகி அது மறைந்தே ஆகவேண்டும். உருகி எழுந்து பொன் பொன்னென்று தருக்கும் இரும்பிடம் நீ துரு மட்டுமே என்று சொல்வதற்குரிய நாவுகள் என்றும் சூழ்ந்திருக்கவேண்டுமல்லவா?

அறியேன், இது நான் என்னிடமே சொல்லிக்கொண்டதாக இருக்கலாம். ஏவலனுடன் நடக்கையில் நான் அங்கே நிகழ்ந்த அந்நாடகத்தின் பொருளென்ன என்று எண்ணிக்கொண்டேன். முதலில் ஒருமுகம், பின்னர் இன்னொரு முகம். இரு முகம் காட்டி ஒரே அவையில் நின்றிருக்கிறேன். இரண்டுமே என் முகங்கள் அல்ல. ஒன்று நான் அவர்களுக்காகக் காட்டியது. ஒன்று எனக்கென சமைத்துக்கொண்டது. இத்தருண வெளிப்பாடுகளுக்கு அப்பால் நான் யார்? வெறும் விழைவும் ஆணவமும் என நிறைந்திருக்கும் என் அகத்துக்கும் அப்பால் நான் யார்?

அப்போது ஒன்று தோன்றியது, அங்கு நான் கண்ட கிருஷ்ணையின் மெய்யுருவும் அதுவல்ல என்று. அவர்

தன்னை அவ்வண்ணம் சமைத்துக்கொள்கிறார். அதற்கப்பால் ஆழத்தில் பிறிதொருவராக நின்றிருக்கிறாரா? எந்தையே, அவர் உங்களை தெய்வமென்று ஏற்றவர் அல்லவா? அவ்வண்ணம் தெய்வங்களை மானுடர் உதறிவிட முடியுமா? தெய்வங்கள் மேல் கசப்பு கொள்வதும் வஞ்சம் கொள்வதும்கூட இறைவழிபாடே அல்லவா?

# கல்பொருசிறுநுரை - 26

**பகுதி நான்கு : அலைமீள்கை – 9**

தந்தையே, நான் காளிந்தியன்னையின் அரண்மனையைச் சென்றடைந்தபோது அங்கே அவர் மைந்தர்கள் நால்வர் முன்னரே வந்து எனக்காகக் காத்துநின்றிருந்தனர். அவர்கள் பெரும்பாலும் துவாரகைக்கு வெளியே அவர்களின் அன்னையின் ஊரில் வளர்ந்தவர்கள். இளமையில் விழவுகள், அரசச்சடங்குகளில் மட்டுமே அவர்களை நான் பெரும்பாலும் கண்டிருக்கிறேன். அவர்கள் சற்று வளர்ந்த பின்னரே துவாரகைக்கு வந்தனர். அதன் பின்னரே அவர் மைந்தர்களில் பத்ரனும் பூர்ணநமாம்ஷுவும் சோமகனும் எனக்கு நெருக்கமானார்கள். அவர்கள் நீர்விளையாட்டை விழைபவர்கள். ஆனால் கடல் அவர்களுக்கு பழக்கமில்லை. நான் அவர்களுக்கு கடலாடக் கற்றுக்கொடுத்தேன்.

ஆனால் அவர்களால் இறுதிவரை கடலை புரிந்துகொள்ளவே முடியவில்லை. அவர்கள் இளமை முதலே யமுனையில் நீராடி வளர்ந்தவர்கள். ஒரு திசை நோக்கி ஒழுகும் நீர் அவர்களின் தோள்களின் நினைவாக இருந்தது. எல்லாத் திசைக்கும் செல்வதும், எங்கும் செல்லாததுமான கடல் அவர்களுக்கு பழகவே இல்லை. "இது தனக்கென உள்ளம் கொண்டிருக்கிறது. இது நம்முடன் விளையாடுகிறது" என்று சோமகன் ஒருமுறை சொன்னான். "நான் என்ன நினைத்தாலும் அதை அது முன்னரே அறிந்து என்னை தோற்கடிக்கிறது. இதில் நீந்திக்கொண்டிருக்கையில் இதை மீறி எண்ணம்சூழ்வதும் இயல்வது அல்ல." நான் அவனுடைய எண்ணங்களை புரிந்துகொள்ளாமல் "முயல்க, வெல்லமுடியும்!" என்று சொன்னேன்.

ஆனால் அவர்கள் மிக விரைவிலேயே நம்பிக்கை இழந்தனர். "கடல் எங்களை ஏற்றுக்கொள்ளவில்லை. எங்களால் கடலை புரிந்துகொள்ளவும் முடியாது" என்று பத்ரன் சொன்னான். "நம்மை முற்றிலும் ஏற்றுக்கொள்ளாத ஒன்றை நம்மால் புரிந்துகொள்ளவே முடியாது." நான் அவனுடைய உளநிலையை அப்போதும் சென்றடையவில்லை. "நீங்கள் அஞ்சுகிறீர்கள். தொடக்கத்திலேயே நீங்கள் அயலார் என எண்ணிக்கொள்கிறீர்கள். அந்த விலகல் உங்கள் ஒவ்வொரு அசைவிலும் உள்ளது. அதுவே உங்களை தோற்கடிக்கிறது" என்றேன். அவர்கள் அதை செவிகொள்ளவே இல்லை.

ஆனாலும் அவர்கள் கடலாட வந்துகொண்டிருந்தனர். ஏனென்றால் துவாரகையில் நெடுநீர் என இருந்தது கடல் மட்டுமே. அதை அவர்களால் தவிர்க்கமுடியாது. அவர்களுக்காக நான் கடல்தெப்பங்களை உருவாக்கினேன்.

அதை அவர்கள் பற்றிக்கொண்டனர். பின்னர் தெப்பங்களில்லாது கடலாட முடியாதவர்களாக ஆனார்கள். அவர்கள் தெப்பங்களுடன் கடலில் நீந்துவதை பலர் இளிவரல் செய்தனர். அது அவர்களை சீற்றமுறச் செய்தது. ஆனாலும் அவர்கள் தெப்பங்களுடனேயே நீந்த வந்தனர். நீந்தும்போது அவர்கள் தெப்பங்களை பற்றிக்கொண்டிருக்கும் வெறியைக் கண்டால் அன்னையை தழுவியிருக்கும் மகவுகள் எனத் தோன்றும்.

பின்னர் ஒரு சூதன் அவர்களுக்கான கதையை உருவாக்கி அளித்தான். அவர்களின் குடித்தெய்வமான யமுனைஅன்னை கடல்நீராடுவதை விரும்பவில்லை. அவர்களுக்கு தெப்பம் என வந்திருப்பது அவளுடைய ஊர்தியான ஆமையே. தெப்பத்தை அவர்கள் ஆமை என்றே சொல்லத் தொடங்கினர். ஆமை வடிவில் அதை அமைத்துக்கொண்டனர். "கூர்மர்" என்று தங்களை சொல்லிக்கொள்ளவும் தொடங்கினர். கடலுக்குள் இருந்து மாபெரும் ஆமைகள் தங்களை பாதுகாப்பதாக அவர்கள் நம்பினர். மெல்லமெல்ல கடல்மேல் அச்சத்தைக் களைந்து கடலுக்குரியவர்களாக எண்ணிக்கொள்ளத் தலைப்பட்டனர்.

அந்நிலையில் ஒருமுறை கடலாமை ஒன்று அவர்களுக்கு கிடைத்தது. அது பீதர்களின் தூண்டிலில் மாட்டி அவர்களால் கப்பலுக்கு எடுக்கப்பட்டது. மிகப் பெரியது, ஒரு மனிதர் அதன்மேல் ஏறி பயணம் செய்யமுடியும். காளிந்தியன்னையின் மைந்தர்களில் மூத்தவரான சுருதன் அதை விலைகொடுத்து வாங்கினார். அதை தன் அரண்மனையருகே ஒரு சிறுகுளத்தை உருவாக்கி அங்கே கொண்டுசென்று வைத்துக்கொண்டார். ஒவ்வொரு நாளும் அவர்கள் அந்த ஆமையை வழிபட்டனர். அதற்கு பூசையும் படையலும் செய்தனர்.

அதை வாரம் ஒருமுறை கடலுக்கு கொண்டுசென்றனர். முதலில் அது சென்றுவிடும் என அஞ்சி காலுக்கு தளையிட்டிருந்தனர். ஆனால் அது திரும்பிவந்தது. ஆகவே அதை கடலில் விட்டு கூட்டிவர வண்டி ஒன்றையும் அவர்கள் அமைத்துக்கொண்டனர். இளவரசர்கள் அதைச் சூழ்ந்து கூச்சலிட்டபடி, வாழ்த்துக்கள் சூழ கடலாட வருவார்கள். இளவரசர்கள் சாந்தனும் தர்ஷனும் அதன் மேல் ஏறி நீந்தி விளையாடுவதைக் கண்டு ஒருமுறை நான் அதைப் பிடித்து மேலேற முயன்றேன். அவர்கள் அதில் தங்கள் குடியல்லாது எவரும் ஏறக்கூடாது என்று கூறிவிட்டனர்.

இப்புவியைத் தாங்கும் ஆமையின் வழிவந்தவர்கள் அவர்கள் என்று தங்களை சொல்லிக்கொண்டார்கள். அதன்படி அந்த ஆமைக்கு அவர்கள் 'பூதலன்' என்று பெயரிட்டனர். விண்ணளந்தோன் எடுத்த தொல்வடிவங்களாகிய மீனும் ஆமையும் தங்கள் குடிக்குரிய அடையாளங்கள் என்று கருதினர். அவர்கள் அவையிலிருந்த பாவலன் ஒருவன் பாடிய கூர்மவிலாசம் என்னும் காவியம் சூதர்கள் நடுவே புகழ்பெற்றது. அவர்களின் அத்தனை நிகழ்வுகளிலும் அந்தக் காவியத்தின் ஓரிரு பாடல்களையேனும் எவரேனும் பாடுவதுண்டு.

காளிந்தியன்னையின் அரண்மனையின் முகப்பில் ஆமை அடையாளம் பொறிக்கப்பட்டிருந்தது. ஆமை அடையாளம் கொண்ட கச்சைகளுடன் அவர்கள் அங்கே நின்றனர். சாந்தனும் தர்ஷனும் பூர்ணநமாம்ஷுவும் சோமகனும் என்னை வரவேற்றபோது ஒரே முகம் கொண்டிருந்தனர். நான் அவர்களை அணுகி முகமன் உரைத்தபோது அவர்கள் மிக மிக வறண்ட சொற்களால் எதிர்முகமன் சொன்னார்கள். "வருக!" என

அழைத்துச்சென்றனர். “நான் காளிந்தியன்னையை சந்திக்க வந்துள்ளேன். அவர்களின் ஒப்புதல் பெற்றுள்ளேன்” என்றேன். “அவ்வொப்புதலை அளித்தவர் நாங்கள். நாங்கள் உடனிருப்போம்” என்று சோமகன் சொன்னான்.

நான் மீண்டும் எரிச்சல்கொண்டேன். “ஏன் நீங்கள் உடனிருக்கவேண்டும்? மெய்யாகவே கேட்கிறேன், அன்னை இங்கே சிறையிலிருக்கிறாரா என்ன? சாம்பனின் துணைவி என்னுடன் வருவதாகச் சொன்னார். அவரைக் கடந்து இங்கே வந்துள்ளேன்” என்றேன். “நாங்கள் உடனிருக்கவேண்டும்” என்று சாந்தன் சொன்னான். “அன்னையின் சொற்கள் இங்குள்ள அரசியலில் இருந்து எழுவன அல்ல. ஆனால் அவற்றை இங்குள்ள அரசியலைச் சார்ந்தவை என எவரேனும் விளக்கிக்கொண்டால் அது தீங்கென முடியலாம். ஆகவே அவர் சொல்லும் எச்சொல்லும் எங்கள் முன்னால் மட்டுமே எழும்.”

“அதற்கு மாறாக நீங்களே அச்சொல்லை சொல்லிவிடலாமே?” என்று நான் கேட்டேன். “நான் வந்திருப்பது அவர்களிடமிருந்து ஒரு வாழ்த்துச்சொல் பெறுவதற்காக மட்டுமே. மூத்தவர் ஃபானு துவாரகையில் முடிசூடவிருக்கிறார். அன்னையின் வாழ்த்தை அவர் விழைகிறார்.” தர்ஷன் “அதைத்தான் நாங்களும் எண்ணினோம். அன்னை இங்கே சாம்பனின் ஆட்சிக்கு வாழ்த்து அளித்துள்ளார். அவருடைய அரசர் என அமர்ந்திருப்பவர் அவரே. இன்னொருவரை அவர் வாழ்த்த வாய்ப்பில்லை” என்றான். “அவர் அன்னை, ஆகவே அனைவரையும் வாழ்த்துபவர். அவருடைய வாழ்த்தை தேடிவந்திருக்கிறேன். வாழ்த்து வரவில்லை என்றால் அவ்வண்ணமே கொள்கிறேன். வாழ்த்துரைக்க வாய்ப்பில்லை என நீங்கள் முடிவுசொல்ல வேண்டியதில்லை” என்றேன்.

“ஆம், நீங்கள் வாழ்த்து கோரலாம், அவர் மறுமொழி உரைக்கலாம். நாங்கள் உடனிருக்கையிலேயே அது நிகழும்” என்றான் சோமகன். “இளையோனே, நீயே எண்ணிப்பார். நான் வந்திருப்பது மைந்தன் என அன்னையை சந்திக்க. ஒரு சொல் தனியாக அவரிடம் பேச எனக்கு உரிமை இல்லையா?” என்றேன். “உரிமை உண்டு. ஆனால் இப்போது அல்ல. இன்றுள்ள அரசியல் சூழலை சிடுக்காக்கிக்கொள்ள எங்களுக்கு விருப்பம் இல்லை” என்றான் சோமகன்.

“நன்று, நான் மீறிச்சென்று அன்னையை சந்தித்தால் என்ன செய்வீர்கள்?” என்றேன். “சிறையிடுவோம். அல்லது எங்களைக் கொன்று வென்று நீங்கள் செல்லவேண்டும்...” நான் அவர்களின் விழிகளை பார்த்தேன். செய்வதற்கொன்றும் இல்லை என்று தெரிந்தது. அவர்கள் உறுதிகொண்டிருந்தனர். கிருஷ்ணையின் ஆணவத்தைச் சீண்டி அவரை அகற்றியதுபோல இவர்களை அகற்ற முடியாது. “நன்று, எனில் உடன்வருக... அவ்வண்ணமே அன்னையை சந்திக்கிறேன்” என்றேன். அவர்கள் சற்று ஆறுதல் கொள்வது தெரிந்தது.

என்னுடன் வந்தபோது அவர்களில் சோமகனின் தோள் என்மேல் மெல்ல உரசிச் சென்றது. நான் அதை உடனே உணர்ந்துகொண்டேன். அது தற்செயலாக நடந்ததுதான். ஆனால் அந்தத் தற்செயல்களை உருவாக்குவது ஆழுள்ளம். அங்கிருக்கும் ஒரு விழைவு அல்லது தவிப்பு. நீச்சலில் உடல்கள் மெல்ல தொட்டுச்செல்லுதல் ஒரு சொல் போன்றது. அவன் முகத்தில் எந்த உணர்வும் இல்லை. அவர்கள் அனைவருமே இறுகித்தானிருந்தனர். மீண்டும் ஒருமுறை அவன் என்மேல் படுவான் என நான் எதிர்பார்த்தேன்.

அவ்வண்ணமே வாயில் கடக்கையில் அவன் புறங்கை என் கைமேல் தொட்டுச் சென்றது. நான் புன்னகைத்துக்கொண்டேன்.

காளிந்தி அன்னையின் வருகைக்காக நாங்கள் காத்திருந்தோம். ஒருவர் விழிகளை ஒருவர் சந்திக்கவில்லை. அப்போது எவர் என்னிடம் பேசினாலும் அது பிழையாக ஆகும் என்று அவர்கள் நினைத்தார்கள். அவர்கள் ஒருவரை ஒருவர் வேவுபார்க்கிறார்களா என்று நான் நோக்கிக்கொண்டிருந்தேன். ஆகவே மெல்ல ஓர் அசைவொலியை எழுப்பினேன். அவர்களில் இருவர் அனிச்சையாக சோமகனை பார்த்தனர். ஆக அவன்தான் அவர்களின் ஐயத்தில் இருக்கிறான். என் புன்னகை பெரிதாகியது. அங்கே கணிகர் அமர்ந்திருப்பதாக நினைத்துக்கொண்டேன். அவரிடம் நான் புன்னகை செய்தேன். அப்புன்னகை என் முகத்தில் எழ அவர்கள் குழம்பி ஒருவரை ஒருவர் நோக்கிக்கொண்டார்கள்.

ஏவலன் வந்து வணங்கி "அன்னை எழுந்தருள்கிறார்" என்றான். சற்றுநேரத்திலேயே ஏவற்பெண்டு ஒருத்தி மங்கலத்தாலத்துடன் வந்தாள். அவள்தான் அங்கே அன்னையை பார்த்துக்கொள்பவள் என்று தெரிந்தது. அவள் "அரசியை இங்கே அழைத்துவரும்படி ஆணை... அவரை அழைத்துவருவது சற்று கடினம். அவர் இடைவிடாத விளையாட்டில் இருப்பவர். இங்கே யாதவர்கோன் இருப்பதாகவே எண்ணிக்கொண்டிருக்கிறார். இங்கே ஒரு களிப்பாவை உள்ளது என்று சொல்லியே அவரை

அழைத்துவருகிறேன். அவர் நீங்கள் விரும்பியபடி நடக்க வாய்ப்பில்லை" என்றாள். நான் "அறிவேன்" என்றேன்.

நாங்கள் அமர்ந்திருந்த இடத்திற்கு அப்பால் ஒரு திறந்த மண்வெளி அலையலையாகப் பெருகி வான் வரை சென்று வளைவாக நின்றிருந்தது. முற்றிலும் முகிலற்ற நீலவானம் வளைந்து மண்ணில் படிந்திருந்தது. அங்கே ஒரு மரம்கூட இல்லை, மிகச் சிறிய புதர்கள் தொலைவில் சிறு விலங்குகள் எனத் தெரிந்தன. முள்ளம்பன்றிகள் என முள்சிலிர்த்தவை. காற்று அங்கே அலைகொண்டிருந்தது. நான் அமைதியின்மையை உணர்ந்தேன். அதை என்னவென்று விளக்கிக்கொள்ள முடியவில்லை. ஆனால் நான் நம்பிக்கொண்டிருப்பவை, இயற்றுபவை அனைத்தும் பித்தென்றாகி பொருளற்றவையாகி முன்னால் விரிந்துகிடக்கும் உணர்வு அது என பின்னர் விளக்கிக்கொண்டேன்.

அன்னையை ஏவற்பெண்டு கைபற்றி அழைத்துவந்தாள். அவர் மண்நிறமான மரவுரி ஆடை மட்டும் அணிந்திருந்தார். களிந்த குடிக்குரிய கல்மணி மாலை, சங்கு வளையல்கள். அவர் ஓர் இளங்கன்னி என்று என் உள்ளம் எண்ணியது. என் நெஞ்சில் பதிந்திருக்கும் அதே தோற்றம். சிறுமியுடையவை என மெலிந்த கைகளைக் கோத்து மடியில் வைத்துக்கொண்டார். அவர் எங்கிருக்கிறார், எங்கு வந்துள்ளார் எதையும் உணர்ந்திருப்பதாகத் தெரியவில்லை. முகத்தில் இளம்புன்னகை இருந்தது. விழிகள் நீண்டு கனவில் எனத் தோன்றின. அவர் ஏதோ இசையில் மயங்கி அங்கிருப்பவராகத் தோன்றினார். எதையோ மறுகணம் எதிர்பார்ப்பவர்போல, பிறர் அறியாத இன்பநினைவொன்றை தன்னுள் அடக்கிக்கொண்டு தவிப்பவர்போல.

நான் “அன்னையே, தங்கள் வாழ்த்தை பெற்றுக்கொள்ள வந்துள்ளேன்” என்றேன். அன்னை என்னை நோக்கி புன்னகை புரிந்தார். என் சொற்கள் அவரை சென்றடையவில்லை. “அன்னையே, உங்கள் மைந்தர் ஃபானு இந்நகரின் அரசர் என முடிசூட்டிக்கொள்ளவிருக்கிறார். அவரே இந்நகரின் முழுதுரிமைகொண்ட அரசர் என்று நீங்கள் எண்ணுகிறீர்கள் என்று தெரியும். அதை ஏற்று நீங்கள் ஒரு வாழ்த்துச்சொல் அளிக்கவேண்டும்” என்றேன். பூர்ணநமாம்ஷு “இது அத்துமீறல். அன்னையின் எண்ணத்தை நீங்கள் சொல்லவேண்டியதில்லை” என்றான். “நான் என் எதிர்பார்ப்பை சொன்னேன்” என்றேன். “வாழ்த்துக்களை மட்டும் கோருக! நீங்கள் சொல்லும் சொற்களுக்கு அன்னை பொறுப்பல்ல” என்றான் பூர்ணநமாம்ஷு.

“அன்னையே, உங்கள் ஒரு சொல்லுக்காக யாதவபுரி காத்திருக்கிறது” என்றேன். அவர் மீண்டும் என்னை நோக்கி புன்னகை செய்தார். எனக்கும் அவருக்கும் மட்டும் தெரிந்த ஒன்றை நினைவுகூர்பவர்போல. அவரிடம் என் சொற்கள் சென்று சேர்கின்றனவா என்று தெரியவில்லை. மீண்டும் “அன்னையே, தங்களிடமிருந்து வாழ்த்துச்சொல் ஒன்றைப் பெறவே வந்தேன்” என்றேன். அவர் அதே புன்னகையுடன் அமர்ந்திருந்தார். நான் எழுந்துசென்று அவர் காலடிகளைப் பணிந்து “என் தமையனின் பொருட்டு என்னை வாழ்த்துக, அன்னையே!” என்றேன். அவர் என் தலைமேல் கைவைத்து சொல்லின்றி வாழ்த்தினார்.

பூர்ணநமாம்ஷு “வாழ்த்து பெற்றுவிட்டீர்கள் மூத்தவரே, இதற்குமேல் ஏதும் எதிர்பார்ப்பதற்கில்லை” என்றான். தர்ஷனும் “ஆம், இவ்வளவே அவரால் இயற்றக்கூடுவது” என்றான். நான் எழுந்துகொண்டு “ஆம், இதுவே அன்னையின் சொல் என

நீடிக்கட்டும்" என்றேன். அவர்கள் அமைதிகொள்வதை, நீள்மூச்செறிவதை கண்டேன். ஏவற்பெண்டு "அன்னை அறைநீங்குகிறார்" என்று அறிவித்தாள். அவள் அன்னையை தொட்டதும் அவர் எழுந்து இனிய புன்னகையுடன் அனைவரையும் பார்த்தபின் அறைநீங்கினார்.

அவர் தன் மைந்தரை நோக்கவில்லை, ஒரு சொல்லும் உரைக்கவில்லை என்பதை நான் கண்டேன். நாங்கள் எழுந்துகொண்டோம். தர்ஷன் என்னிடம் "ஆறு மாதங்களுக்கு முன்பு யாதவர் சாத்யகி இங்கே வந்து அன்னையை கண்டார். அன்றும் அன்னை ஒருசொல்லும் உரைக்கவில்லை. ஆனால் அன்னையின் சொல்லை பெற்றுவிட்டார் என்று அவர் சொல்லிக்கொண்டதாகவும் தந்தையைக் கண்டு அதை சொன்னதாகவும் அறிந்தேன்" என்றான். "அவ்வண்ணம் ஒரு பொய்ச்சொல் திகழக்கூடாது என்பதனாலேயே உடனிருந்தோம். அன்று அவரை தனியாக சந்திக்கவிட்டு வெளியே நின்றிருந்தோம். அது பிழை என உணர்ந்தோம்."

"அவர் தந்தையை சந்தித்ததாகச் சொன்னதே பொய். தந்தை இப்போது உயிருடன் இல்லை, அதனை நாங்கள் அறிவோம்" என்றான் பூர்ணநமாம்ஷு. நான் சற்று திகைப்புடன் "எவர் சொன்னார்கள்?" என்றேன். "எவர் சொல்லவேண்டும்? இந்நகர் இப்படி சிக்கல்களில் உழல்கையில் அவர் இருந்தால் இங்கு வந்திருக்க மாட்டாரா? இது அவர் உருவாக்கிய அரசு, அவர் சமைத்த நகர்" என்றான். நான் "அவர் மறைந்த செய்தியை உன்னிடம் எவரேனும் சொன்னார்களா? உன் தமையன்கள்?" என்றேன்.

"இல்லை, ஆனால் அவ்வண்ணமே அனைவரும் எண்ணுகிறார்கள் என்று தோன்றுகிறது. சாத்யகி இங்கிருந்து

செல்லும்போது ஒருவேளை அவர் உடன்வந்துவிடக்கூடும் என்னும் எதிர்பார்ப்பு இருந்தது. அவர் மட்டும் திரும்பி வந்ததுமே அனைவரும் அறிந்துகொண்டனர், அவர் வரப்போவதில்லை என்று. சாத்யகி அங்கே என்ன நிகழ்ந்தது என்று எவரிடமும் சொல்லவில்லை. அவர் நாவிலிருந்து அவர் அரசரைக் கண்டாரா இல்லையா என்பதை வரவழைக்க மூன்று தரப்பினருமே முயன்றனர். அவர் ஒருசொல் கூறாமல் தன் பாடிவீட்டுக்குச் சென்று முழுத் தனிமையில் ஒடுங்கிவிட்டிருக்கிறார். கானாடுவதும் கடலாடுவதும் அன்றி எதையும் செய்வதில்லை."

"பல நாட்கள் அவரை கூர்நோக்கிய பின் அவையில் மூத்தவர் சாம்பன் சொன்னார், சாத்யகியின் சொல்லின்மை அரசரை அவர் கண்டதனால் உருவானது அல்ல, அவர் அரசரை காணவில்லை, அதை மறைக்கவிரும்புகிறார், ஆகவேதான் இச்சொல்லின்மை என்று" என அவன் தொடர்ந்தான். "ஒருவேளை அரசர் மறைந்திருக்கலாம் என்று சகஸ்ரஜித் சொன்னபோது சாம்பன் இருக்கலாம் என்றார். ஆனால் சுமித்ரன் அதை ஏற்கவில்லை. அவர்கள் பதின்மரில் அவரே கூர்மதியாளர் என்பதனால் அவையும் ஏற்கவில்லை. ஆனால் எனக்கும் அதுவே மெய்யாக இருக்கும் என்ற எண்ணம் வந்தது."

"உன் விழைவோ அது?" என்றேன். அவன் சீற்றம்கொள்ளவில்லை, நிலைகுலைந்து "நானா? நான் ஏன் தந்தையின் சாவை விழையவேண்டும்?" என்றான். "இந்நகரில் இன்று தந்தையின் சாவை விழையாத எவரேனும் உள்ளனரா? எண்பது மைந்தரும் விழைவது அதுவல்லவா?" என்றேன். "என்ன சொல்கிறீர்கள்?" என்று அவன் கூச்சலிட்டான். "மிகைநாடகம் வேண்டாம். நாம் ஒருவருக்கொருவர் எதையும்

நிறுவிக்கொள்ள வேண்டியதில்லை" என்றேன். "தந்தை இந்நகரின் இயல்பான விசைகளை கட்டுப்படுத்தி வைத்திருந்த மைய முடிச்சு. அவர் இல்லாமலானாலொழிய நம்மால் இங்கே இயல்பான விசைமையங்களை உருவாக்கிக்கொள்ள முடியாது. இந்த ஆட்டத்தில் அவர் இல்லை என்பதே உகந்தது."

"ஆகவே அவர் இல்லை என்று நாம் எண்ணிக்கொள்கிறோம்" என்று நான் தொடர்ந்தேன். "இல்லை என்னும் சொல் இறப்பு என்னும் சொல்லாக நம்முள் இடமாற்றம் ஆகிறது. முதலில் அதிர்ச்சி பின் குற்றவுணர்வு பின் அது பழகி ஒருவகை சலிப்பு இறுதியாக மெல்லிய இன்பம் என அது வளர்கிறது. இன்று நம் அனைவர் அகத்திலும் தந்தை உயிரிழந்து மறைந்துவிட்டிருக்கிறார். எண்பது கைகளால் எண்பதாயிரம் முறை அவருக்கு ஈமக்கடன்களை செய்துவிட்டிருக்கிறோம்."

"இது என்ன பேச்சு?" என்றான் தர்ஷன். "இதை பேசவேண்டிய இடம் இது அல்ல. ஆனால் பேசவேண்டியிருக்கிறது" என்றேன். "இனி இங்கே தந்தை வரமாட்டார் என்றே நினைக்கிறேன். இனிமேல் வந்தால் அவர் இங்கிருந்து சென்றதுபோல, நாம் அறிந்திருப்பதுபோல வரமுடியாது. வைரமுடி சூடி, ஒளிரும் படைக்கலத்துடன் அனலெழும் தேரில் பெரும்படை பின்தொடரவே நகர்மேல் எழுந்தருளமுடியும். அது நிகழ வாய்ப்பில்லை. அவ்வகையில் நோக்கினால் தந்தை இறந்திருக்கிறார் என்றே கொள்ளலாம். இறப்பு என்பது மீண்டெழல் இல்லாமை. திரும்பி வராத பயணங்களும் மீட்சியில்லாத உளவீழ்ச்சிகளும் சாவே."

"ஆனால் அவர் வேறுவகையில் வேறு முகங்களுடன் வரக்கூடும்" என்றேன். "அவருடைய முகங்கள் எண்ணிறந்தவை. குழவி, காதலன், முனிவர் என அவர்

அடைந்த வளர்நிலைகள் பல. இசைஞர், கவிஞர், மெய்யறிஞர், படிவர் என அவர் சென்ற இடங்களும் பல. தன்னைச் சூழ்ந்திருப்பவர்களில் ஊடுருவி தான் என அவர் வெளிப்படுவதுண்டு. அனைத்திற்கும் மேலாக அவரை எண்ணி தங்களுக்குள் அவரை வளர்த்துக்கொள்வோரின் அகத்திருந்து அவர் உருத்திரண்டு வருவதும் உண்டு." அவர்கள் முற்றிலும் குழம்பியிருந்தனர். விழிகள் வெறித்திருந்தன.

"இதோ அவர்மேல் பெருங்காதல்கொண்டு அக்காதலன்றி பிறிதொன்றிலாது வாழும் காளிந்தியன்னையை கண்டோம்" என்று தொடர்ந்தேன். "ஆனால் இங்கு வருவதற்கு முன் அதே பெருங்காதலால் பிறிதொன்றிலாதாகி எல்லையற்ற காழ்ப்பும் வெறுப்பும் கொண்டு நின்றிருக்கும் ஒருவரை கண்டேன். கிருஷ்ணையில் எழுவதும் அவரே. அவ்வண்ணமும் அவர் இந்நகர்மேல் எழக்கூடும். பேருருக்கொண்டு." பூர்ணநமாம்ஷு "அவ்வண்ணம் எவர்?" என்றான். "ஏன், இப்போது எங்கள் அவையில் அமர்ந்து சொல்கோக்கும் கணிகர் அவருடைய ஒரு வடிவே என்றிருக்கக்கூடாதா?" என்றேன்.

அவர்கள் திகைத்துவிட்டனர். "அவர் தந்தைக்கு நிகராக நின்று களமாடியவர். தந்தையை பல களங்களில் வென்றவர். அறுதியாக தந்தையால் வெல்லப்பட்டு அவ்வஞ்சத்தை திரட்டிக்கொண்டு மேலெழுந்தவர். நிழலும் நாமே என்றால் அவர் தந்தையே" என்றேன். பூர்ணநமாம்ஷு "கணிகர் நம் தந்தையால் வெல்லப்படவில்லை. அவருடைய நோக்கம் அஸ்தினபுரியின் அரசகுடியை அழிப்பது. அதை அவர் இயற்றினார். வென்று அந்நகரிலிருந்து நீங்கினார். இங்கு அவர் நோக்கம் எதுவென்று யார் அறிவார்?" என்றான். "ஆம், ஊழ் அவரை கருவியாகக் கொள்கிறது" என்றேன்.

அவர்களை முழுமையாக நிலைகுலைய வைத்துவிட்டேன் என்று உணர்ந்ததும் நான் புன்னகைத்தேன். "வருகிறேன்" என்றேன். தர்ஷன் என் பின்னால் வந்து "அவர்கள் பொதுவான ஒரு வாழ்த்தை மட்டுமே சொன்னார்கள். அவ்வாறன்றி ஒன்றை நீங்களும் சொல்லமாட்டீர்கள் என நம்புகிறேன்" என்றான். "அவர்கள் வாழ்த்தினார்கள். எங்களுக்கு அதுவே நிறைவு. அதில் அரசியலேதும் இல்லை. உங்களுக்கு அவர் அரசியல் கருவி, எங்களுக்கு அப்படி அல்ல, அன்னையேதான்" என்றேன். தர்ஷன் "இங்கே இன்று அரசியல் கருவி அல்லாத எவரேனும் உளரா?" என்றான்.

"நீ குழம்பியிருக்கிறாய்" என அவன் தோளை தொட்டேன். பின்னர் சோமகனை நோக்கி புன்னகைத்து "பார்ப்போம்" என்றேன். அவன் திகைப்பதை உணர்ந்த கணமே விழிகளைத் திருப்பி அவன் சொல்வதென்ன என்பதற்கு செவியோ விழியோ கொடுக்காமல் முன்னால் நடந்தேன். முதுகெல்லாம் காதுகளாகவும் கண்களாகவும் அங்கே நிகழ்வதென்ன என்பதை உணர்ந்தேன். அவர்கள் நடுவே சோமகனை தனித்து நிறுத்திவிட்டேன். அவனுள் ஒரு சிறு விதை, அவனை அறியாமலேயே விழுந்து கிடப்பது. அது இருந்தமையாலேயே அவன் சற்று கலங்கியே எதிர்வினையாற்றுவான், அதுவே போதும்.

நான் திரும்பி நடந்தபோது இயற்றியவை பயனுள்ளவையா என்று எண்ணிக்கொண்டேன். என் தேரை அணுகி அதில் ஏறி அமர்ந்து "அரண்மனைக்கு" என்றேன். நகருள் தேர் நுழைவது வரை குழம்பிய உளநிலையிலேயே இருந்தேன். கிருஷ்ணையின் முன் இறுதியில் நான் என் சூழ்திறனின் எல்லையை கடந்தேன். பிற அனைத்து நிலைகளிலும்

சொல்லெண்ணி செயல்பட்டிருக்கிறேன். விரும்பியதை இயற்றியிருக்கிறேன். கணிகர் என்னைப் பற்றி என்ன நினைப்பார்? அப்போது நான் விழைந்த ஒன்று இருந்தது, கணிகர் முன் அவ்வாறு என் கூர்மையை காட்டி நின்றிருக்கவேண்டும். அவர் விழிகளை நோக்கி அப்போது புன்னகை செய்யவேண்டும்.

# கல்பொருசிறுநுரை - 27

**பகுதி நான்கு : அலைமீள்கை – 10**

நான் அவைக்குள் நுழையும்போது சு◌ுபானு பேசிக்கொண்டிருந்தார். குடித்தலைவர் இருவரும் யாதவ மைந்தர்களும் மட்டுமே அவர்முன் இருந்தனர். அறைக்குள் கடற்காற்று சுழன்றுகொண்டிருந்தது. மூத்தவர் ◌ுபானு கைகளை மார்பில் கட்டி அமர்ந்திருந்தார். அங்கு பேசப்படுவனவற்றை அவர் முன்னரே அறிந்திருப்பதுபோல முகம் காட்டினார். அவ்வப்போது ஏற்று தலையை அசைத்தார். நான் நுழையும் அசைவைக் கண்டு சு◌ுபானு திரும்பிப்பார்த்தார். நான் தலைவணங்கி பின்னிருக்கையில் அமர்ந்தேன்.

இருக்கையில் கால்நீட்டி சாய்ந்தபின் அப்பால் அமர்ந்திருந்த கணிகரை பார்த்தேன். அவர் விழிதாழ்த்தி எதையோ ஆழ்ந்து எண்ணுபவர்போல் இருந்தார். அவையில் இருந்தவர்கள் ஆழ்ந்த செவிக்கூர் இல்லாமலேயே அமர்ந்திருந்தனர். பேசிக்கொண்டிருந்தது என்ன என்பதைப்போல சு◌ுபானு

அனைவரையும் ஒருமுறை பார்த்தார். நான் வந்து அமர்ந்து ஓரிரு கணங்களே ஆகிவிட்டிருந்தன. ஆனால் அங்கே முன்னரே அவ்வண்ணமே அமர்ந்திருக்கிறேன் என்னும் உணர்வை அடைந்தேன். சுஃபானு என்னை நோக்கி "கிருதவர்மனை எவ்வண்ணமேனும் அழைத்துவரவேண்டும் என்று கணிகர் கூறுகிறார், இளையோனே" என்றார். அனைவரும் என்னை திரும்பி நோக்கினர். கணிகர் அப்போதுதான் என்னைப் பார்ப்பவர்போல புன்னகை செய்தார்.

"கிருதவர்மன் இங்கு வந்துசேராமல் போர் தொடங்காது என்கிறார் கணிகர். அது உண்மை என்றே தோன்றுகிறது. அவர் இங்கு வந்தால் அனைத்தும் முழுமையாக மாறிவிடும். தந்தை வரக்கூடும் என்ற எண்ணத்தில் இதுவரை இங்கே ஒவ்வொன்றும் ஒத்திப்போடப்பட்டன. இப்போது அவர் வரப்போவதில்லை என்பது உறுதியாகியிருக்கிறது. இனி வரவேண்டியவர் கிருதவர்மன். அவர் வருவது நம்மை வலுவாக்கும். வராவிட்டால்கூட நாம் நம்மைச் சார்ந்திருக்கும் ஓர் உறுதிப்பாட்டை அடைவோம். ஆனால் அதற்கு முன் கிருதவர்மன் நம் தரப்பில் இருக்கிறார், நமக்கென எழவிருக்கிறார் என நாம் அவர்களை நம்பச்செய்யவேண்டும். நம் குடிகளும் படைகளும் அவ்வாறே எண்ணவேண்டும். நாமே அப்படி சில நாட்கள் கருதவேண்டும்" என்றார் சுஃபானு.

"அது நம்மை ஊக்கம் கொண்டவர்களாக ஆக்கும். நம் எதிரிகள் அஞ்சுவர். நம்மவர் இணைந்து உடன்நிற்பர். நம் ஆற்றல் பெருகும்... இன்று நம்மை நாமே திரட்டிக்கொள்ள மிகச் சிறந்த வழி என்பது கிருதவர்மனின் பெயரை தலைக்கொள்வதே" என்று சுஃபானு தொடர்ந்தார். "ஆகவே இன்று நாம் செய்யவேண்டியது கிருதவர்மன் இருக்கிறார் என்று முடிவு

செய்வது. அவர் இருந்தால் என்ன செய்வோம் என்பதை நாமே வகுத்துக்கொண்டு அவ்வண்ணம் முன்னேறுவது. அவர் இருக்கிறார் என்ற செய்தியே நம் குடிப்பூசலை முற்றாக ஒழித்துவிடும். நம்மை போரில் வழிநடத்த மாபெரும் குருக்ஷேத்ரப் போரில் களம்நின்று வென்ற இருவர் இருக்கிறார்கள். அவர்கள் ஒருவரை ஒருவர் எதிர்த்திருக்கலாம். ஆனால் அவ்வண்ணம் அவர்களை எதிர்த்தரப்பினர் ஆக்கிய தந்தை இன்று களத்தில் இல்லை. இருவருமே யாதவர் என்பதனால் நம்மை அவர்கள் ஆதரித்தே ஆகவேண்டும்."

"அவர்களில் ரிஷபவனத்தின் சாத்யகி ஒருவேளை நம்மை வழி நடத்த ஒப்பமாட்டார் என்ற ஐயம் நமக்கிருந்தது. ஆகவேதான் இதுவரை தயங்கிக்கொண்டிருந்தோம். நம் படைவீரர்களுக்கும் அந்த ஐயம் இருக்கிறது. அதை களைவோம். நாம் படை ஒருமை கொள்ளத்தொடங்கியதுமே ஒவ்வொன்றும் மாறிவிடும்" என்றார் சுஃபானு. பிரஃபானு "மெய்யாகவே அவர் இருக்கிறார் என்பதை நாம் இப்போது உறுதிசெய்ய இயலாது" என்றார். "அதைத்தான் இவ்வளவு நேரம் மீள மீள சொல்லிக்கொண்டிருந்தோம், அறிவிலி" என்று சுஃபானு சொன்னார். "அமர்க! அவர் இருக்கிறார். அதில் ஐயமே இல்லை. குருக்ஷேத்ரப் படைக்களத்தை கடந்து வந்தவர் அவ்வண்ணம் இல்லாமல் ஆக இயலாது."

பின்னர் தன்னை அமைதிப்படுத்தி குரல் தணிய "ஆம் இருக்கிறார், நமக்குத் தெரியும். ஒன்று, உளம் சோர்ந்து எங்கோ அமர்ந்திருக்கிறார். அல்லது போரில் உளம்தேறி இங்குள்ளவற்றைத் துறந்து அகன்று எங்கோ மெய்மைத்தவம் ஒன்றில் ஈடுபட்டிருக்கிறார். இரண்டாயினும் அவர் இங்கு வருவதற்கான களம் அமைக்கவேண்டும். தெய்வங்கள் வந்து

இறங்குவதற்கு முதலில் பீடம் அமைக்கவேண்டும் என்று கணிகர் கூறியது அதனால்தான். முறையான இலக்கணப்படி அமைந்த பீடம் ஒருங்குகையில் தெய்வம் இறங்கி வந்தாகவேண்டும் என்பது வழிபாட்டுநெறிநூல்களின் கூற்று. தெய்வம் வந்திறங்கும், ஐயமே தேவையில்லை. இங்கு கிருதவர்மனுக்கான அனைத்தும் ஒருங்குக! அவருக்கான எதிர்பார்ப்பும் கூர்கொள்ளுகையில் அச்செய்தி அவரை சென்றடையும்" என்றார்.

"நம்மைப்பற்றி ஏதேனும் ஐயம் அவருக்கு இருக்கலாம். நாம் பிரிந்து பூசலிட்டுக்கொண்டிருக்கிறோம். நமது ஒருங்கிணைவு தந்தைக்கெதிரானது என்றோ, நம் பூசல் துவாரகையின் அழிவுக்கு வழி வகுக்கும் என்றோ இங்கு பேசப்படும் அனைத்தும் அவர் செவிகளுக்கு சென்றிருக்கலாம். நாம் ஒருங்கிணைந்து பேரரசின் அடித்தளத்தை அமைத்துவிட்டோம் என்று தெரிந்தால் அவர் வருவது எளிதாகிவிடும்" என்றார் பிர꞉பானு. "ஆம், அதற்கு வாய்ப்புள்ளது. இங்கே நாம் எண்ணுவது எவ்வண்ணமோ அங்கே சென்று அவருக்குச் சேரும் என எண்ணுவோம்" என்றார் சு꞉பானு. "நம் ஆற்றலும் நேர்மையும் அவரை வரவழைக்கலாம். நம் அச்சமும் சிறுமையும்கூட அவரை எரிச்சலூட்டி இங்கு வரவழைக்கலாம். நாம் அவருக்காக ஒருங்குவதே தேவையானது."

மூத்தவர் ꞉பானு முன்னால் அசைந்து "அதைவிட ஒன்று உண்டு, அவர் வருகிறார் என்று கூறி நாம் ஒருங்கிணைந்தால் நம் எதிரிகளும் தங்களை ஒருங்கிணைத்துக்கொண்டாக வேண்டும். அவர்களின் மெய்யான ஆற்றல் என்ன என்பது நமக்கு தெரியும். அவர்கள் ஒருங்கிணைகிறார்கள் என்பது நமது தரப்புக்கு மேலும் அச்சத்தை கொடுக்கும். நமது தரப்பினரிடம்

இன்று இருக்கும் அனைத்துப் பூசல்களும் அழிந்து நாம் ஒற்றைப் பெரும்படையாக திரள்வதற்கு அது ஒரு வழிவகுக்கும். அறிக, வலுவான எதிரியே வலுவான ஒற்றுமையை உருவாக்குகிறான், நாம் நமது எதிரிகள் இருவரையுமே அச்சுறுத்தி ஒருங்கிணையச்செய்து நம்மை ஒருங்கிணைய வைப்போம்" என்றார்.

"வீட்டைக் கொளுத்தி பிள்ளைகளை சுறுசுறுப்பாக்குவோம் என்று ஒரு பழமொழி உண்டு" என்று முதிய குடித்தலைவரான ஊர்மிளர் சொன்னார். சீற்றத்துடன் அவரை திரும்பி நோக்கிய ஃபானு "சொல்வதற்கு தரப்பிருந்தால் கூறலாம். வெறும் நம்பிக்கையின்மைகளையோ உளச்சோர்வுகளையோ அவைமுன் வைக்கவேண்டியதில்லை" என்றார். "அவ்வண்ணமென்றால் நன்றே நிகழ்க!" என்று சொல்லி அவர் கையை வீசிவிட்டு தலையை அசைத்தார். ஃபானு "நான் கூறுவது இதுதான். இன்னும் இவ்வண்ணம் வாளாவிருந்தால் நாம் இங்கு ஆள்வது அரிது. இப்போது மூவரும் இணை ஆற்றல் கொண்டவர்கள்போல் ஒருவரை ஒருவர் கவ்விக்கொண்டிருக்கிறோம். ஒருவர் இன்னொருவரை அசைவிலாது செய்துகொண்டிருக்கிறோம்" என்றார்.

"இவ்வண்ணம் சென்றால் மூவருமே சோர்வுறுவோம், சலிப்புறுவோம். ஒவ்வொரு நாளும் நமது படைகளிலும் குடிகளிலும் சலிப்பும் ஆர்வமின்மையும் எழுவதை பார்த்திருப்பீர்கள். இவ்வண்ணம் செல்லுகையில் எவர் மிகையாக சலிப்புறுகிறார்கள் என்பதே ஒரு போர்முறையாக ஆகிவிடுகிறது. சற்றே சலிப்பு குறைந்தவர் மற்றவர்களை வென்று ஆட்சியை அமைக்கும் வாய்ப்பு அமைகிறது. சூதர்களிடையே தங்கள் கழிக்கோல்களை முன்னால் பரப்பி

வைத்து அவற்றில் எவருடையதில் ஈ வந்தமர்கிறதோ அவர் வென்றவர் என்று ஒரு விளையாட்டு உண்டு, அதைப்போல! அரசு என்பது அத்தகைய செயலின்மைகளின் போட்டியல்ல" என்றார் சு.ஃபானு.

"அத்துடன் ஒன்றுண்டு, அது நேற்றிரவெல்லாம் நான் எண்ண எண்ண என்னுள் பெருகியது. கணிகர் அதற்கு தொடக்கம் அமைத்தார். அது கரையுடைந்து புதிய நதிவழி உருவாவதுபோல் முற்றிலும் புதிய வாய்ப்புகளை எனக்கு காட்டித் தந்தது. நாம் கிருதவர்மன் வருவது நமக்குத் தெரியும் என்று அறிவித்தோம் எனில், விளைவாக நமது படைகளும் குடிகளும் ஊக்கம் கொண்டு எழுவார்களெனில், அவர்களை அது அச்சுறுத்துமெனில், அவரை அவர்களும் தேடத்தொடங்குவார்கள். அவர்களின் ஒற்றர்களும் கிருதவர்மன் எங்கிருக்கிறார் என்பதைத் தேடி நாடெங்கும் அலைவார்கள். நமது ஒற்றர்களும் அலையட்டும். நமது ஒற்றர்கள் கிருதவர்மனையும் தேடட்டும், கிருதவர்மனைத் தேடும் அவர்களையும் தொடரட்டும். அவ்வண்ணம் நம் தேடல் மும்மடங்கு பெருகும். அவர் எங்கிருக்கிறார் என்பதை மிக விரைவிலேயே கண்டடைவோம்."

அவையை ஒரு முறை நோக்கிவிட்டு சு.ஃபானு தொடர்ந்தார் "நாம் அவரை தேடுவதும் அச்செய்திகள் பரிமாறப்படுவதும் ஒவ்வொரு நாளும் அவர் இங்கு பேசப்படுவதும் மெல்ல மெல்ல அவரை பேருருவாக்கும். ஒரு கட்டத்தில் வந்து அருளப்போகும் பெருந்தெய்வம் என்றே கிருதவர்மன் கருதப்படுவார். இதுவரை எந்நிலையிலும் தந்தை இங்கு வந்துவிடுவாரென்ற ஐயமும் அச்சமும் நம் அனைவருக்கும் இருந்தது. அவர்களுக்கும் இருந்தது. ஆகவேதான் நாம்

தயங்கிக்கொண்டிருந்தோம். எத்தனை படைகூட்டினாலும், எத்தனை சொல் சேர்த்துவைத்தாலும், இறுதியில் அவர் வந்து சொல்கையில் குடிகளும் படைகளும் அவர் சார்ந்தே எண்ணக்கூடும் என்றும் அதுவே முடிவாக அமையக்கூடும் என்றும் எண்ணினோம். இன்று அவ்வாறு அல்ல. தந்தை இங்கு எழுந்தருளப் போவதில்லை என்பது உறுதியாகிவிட்டது.”

“அவையோரே, இங்கு என்ன நடக்கிறது என்பதை தந்தை அறிந்துகொள்ளவே மாதங்கள் பிந்துகின்றன. ஆகவே வந்து தோன்றவிருக்கும் ஒரு தெய்வம் ஒன்றுக்காக காத்திருக்கிறது துவாரகை. இதுவரை எதிர்பார்த்திருந்த தெய்வமோ மூன்று தரப்பினருக்கும் இணையான முதன்மை அளித்தது. அதன் கோல் மூன்றில் எவருடையதைச் சுட்டவும் இணையான வாய்ப்பிருந்தது. இன்று அவ்வாறல்ல, இனி எழுந்தருளவிருக்கும் தெய்வம் யாதவர்களுக்கு மட்டுமே உரியது. யாதவர்களின் படைநடத்தி போர்முகம் செல்லக்கூடியது. கனிந்த தந்தை அல்ல, வஞ்சமும் காழ்ப்பும் கொண்ட இருள் தெய்வம் அது. அத்தெய்வத்தை பெரிதாக்குவோம். போற்றல்களினூடாக தெய்வங்கள் பெரிதாகின்றன. சடங்குகளினூடாக மேலும் பெரிதாகின்றன. அச்சத்தினூடாக ஆற்றல் கொள்கின்றன. நாம் கிருதவர்மனை இங்கு எழவிருக்கும் தெய்வமாக நிறுத்துவோம். தெய்வம் என்று அவர் எழுந்தாகவேண்டும்!”

நான் அவையை பார்த்தேன். அங்கு அனைத்தும் முடிவு செய்யப்பட்டுவிட்டது என்று தோன்றியது. அதில் எவருக்கும் ஐயமிருக்கிறதென்று தோன்றவில்லை. அல்லது அனைவருக்கும் சற்று ஐயமிருந்தது. ஆகவேதான் ஓங்கி அதை சொல்லிச் சொல்லி அந்த ஐயத்தை

கரைத்துக்கொண்டிருந்தார்கள். "கிருதவர்மனின் தலைமையில் நாம் இங்கு நம்மை நிலைநிறுத்திக்கொள்ளப் போகிறோம். ஆனால் நாம் ஒரு படைநகர்வை நிகழ்த்த இயலாது. நாம் துவாரகைக்கு வெளியில் இருந்தால் துவாரகையை நோக்கி ஒரு படைகுவிப்பு செய்யலாம். நாமோ துவாரகையிலேயே இருக்கிறோம். துவாரகையின் பிற பகுதிகள் மேல் நாம் படைகொண்டு செல்ல இயலாது, தன் நாட்டுக்குள் ஒரு பகுதியை நோக்கி அரசன் தன் படைகளை செலுத்தினான் என்றால் தன் நாடெங்கும் அவன் ஆளுகை இல்லையென்பதை அவனே அறிவித்துக்கொண்டதாகும்" என்றார் சுஃபானு.

"ஆகவே கணிகர் இங்கு ஒரு எண்ணத்தை கூறினார். மூத்தவர் ஃபானுவின் மைந்தர் சந்திரஃபானுவை இங்கு துவாரகையின் பட்டத்து இளவரசாக அறிவிப்போம்" என்றார் சுஃபானு. "பட்டத்து இளவரசர் என்றால்?" என்று ஒருவர் கேட்க "ஆம், ஃபானு ஏற்கெனவே அரசர் என்ற நிலையில் துவாரகையின் பட்டத்து இளவரசராக நாம் அவர் மைந்தரை நியமிப்போம். அவ்விழாவிற்கு அனைவரையும் அழைப்போம். பிற நாட்டினர் ஷத்ரியர்கள் அழைக்கப்படட்டும். ஏன் ருக்மியையே அழைப்போம். இங்கு விழா நிகழட்டும். அதில் எவர் பங்கெடுக்கிறார்கள் எவர் ஒளிந்திருக்கிறார்கள் என்று பார்ப்போம். நம் எதிரிகள் என்ன செய்கிறார்கள் என்று கணிப்போம். அவர்களுக்கு ஓர் அழுத்தத்தை கொடுப்போம். அதற்கெதிராக அவர்கள் எதையாவது செய்தே ஆகவேண்டும். அச்செயலினூடாக அவர்கள் மீது ஐயத்தையும் கசப்பையும் மக்களிடையே வளர்க்க முடியும்."

"இன்று கண்ணுக்குத் தெரியாத அரசியலாடலாக இருக்கும் உளப்பிரிவு அதன்பின் கண்ணுக்குத் தெரியும் படைநிலைகளாக

மாறும். நோய் தோள் மேல் கொப்புளமாக வெடிப்பதுபோல" என்றார் சுஃபானு. "மருந்து என்ன என்று அதற்கு முன்னரே வகுக்கவேண்டும். நோயை படைக்கலமாகக் கொள்ள அது ஒரு நெறி" என்றார் பிரஃபானு. "அதை நோயின் இயல்புகளைக் கொண்டு முடிவுசெய்வோம். இதை முதலில் செய்வோம்" என்றார் சுஃபானு. "ஆம், இன்று மாலையே உரிய அரசாணைகளை பிறப்பிக்கிறேன்" என்று ஃபானு சொன்னார். அவையினர் வாழ்த்தொலி எழுப்பி அச்சொற்களை ஏற்றார்கள்.

அவர்கள் என்னை முற்றாக மறந்துவிட்டார்கள் என்று எனக்குத் தோன்றியது. ஆனால் கணிகர் விடப்போவதில்லை. மீண்டும் மீண்டும் என் பெயரை அங்கே கூறி என்னை முன்னகர்த்திவிடுவார். நான் முற்றொழிந்து, அங்கு இல்லாதவனாக இனிமேல் பொழுது கழிக்க இயலாது. இவ்வாடலில் நான் இறங்கியே ஆகவேண்டும். இத்தகைய ஆடல்களின் நெறிகளில் ஒன்று வெல்க அன்றி அழிக என்பது. வென்று நிலைகொள்க, வெல்பவரோடு நிலைகொள்க. நான் அப்போதும் முடிவெடுக்கவில்லை. ஃபானு அந்த அவையில் அப்போது ஆற்றல் மிக்கவராகத் தோன்றினார். ஆனால் அப்போதும் அவர் மேல் ஐயங்கள் எஞ்சியிருந்தன.

அங்கு அறிவிக்கப்பட்டதிலேயே ஒரு கூரிய இடர் இருந்தது. ஃபானு அந்தகக் குடியை சேர்ந்தவர் என்றே கருதப்பட்டார். யாதவர்களில் அன்னையின் முதல் மைந்தரே குடித்தலைவர், அன்னை அந்தகக் குடியினர். அவருடைய முதல் துணைவியும் அந்தகக் குடியை சேர்ந்தவர். அவர் விருஷ்ணி குலத்துப் பெண்ணை மணந்து பெற்ற மைந்தரை அவை நிற்கச் செய்திருந்தால் அது ஏற்புக்குரியதாக இருந்திருக்கும். ஆனால் அவர் மணந்ததும் அந்தகக் குடியின் தலைவர் சுகதரின் மகள்

சபரியை. அவர் மைந்தர் சந்திரஃபானு முழுக்க முழுக்க அந்தகக் குடியினர் என்றே கருதப்படுவார். இளைய மூத்தவர் ஸ்வரஃபானு மணந்திருப்பது விருஷ்ணி குலத்திலிருந்து. அவர் அந்தகராக கருதப்படவில்லை. அவர் மகன் தூய விருஷ்ணி என கருதப்பட்டான். ஆகவே விருஷ்ணி குலத்தின் ஐயம் பெருகவே வாய்ப்பு. இந்த அறைகூவலுக்கு உள்ளே ஒருங்கிணையும் விசை எழும்போது அதற்கு நிகரான எதிர்விசையாக ஐயங்களும் விலகல்களும் எழும். அரசியல் ஆடல்கள் மேலும் விசை கொள்ளும்.

ஃபானு மகிழ்ச்சியுடன் கைவீசி "ஆகவே இன்று நாம் படைப்புறப்பாட்டை நமக்கு நாமே அறிவித்துக்கொள்கிறோம். இன்னும் சில நாட்களில் உலகுக்கு அது அறிவிக்கப்படும். அவ்வாறே ஆகுக!" என்றார். "வெற்றிவேல்! வீரவேல்!" என்று அவையினர் கூவினர். தலைமை நிமித்திகன் எழுந்து தலைவணங்கி அனைவரும் அன்னக்கூடத்திற்குச் செல்லலாம் என்று அறிவித்தான். ஆடைகளும் படைக்கலங்களும் அணிகளும் ஒலிக்க ஒவ்வொருவராக எழுந்து அன்னக்கூடத்திற்கு செல்லத்தொடங்கினர்.

அன்னநிலையில் அவையில் இருந்த படிநிலையே நீடிக்கவேண்டும் என்பது நெறியாயினும் மிக இயல்பாக அது நிலைமாறுவதையும் எப்போதும் கண்டிருக்கிறேன். அது பல தருணங்களில் அவைநிகழ்வுகளின் நீட்சியாக அன்றி அங்கு நிகழ்ந்தவற்றின் மாற்றாக அமைவதுண்டு. அவைநிலையில் அமர்ந்திருக்கையில் அங்கு சிலரை நோக்கி சில

சொல்லப்படாமல் விட்டுவிடப்படுவதை ஒவ்வொருவரும் உணர்ந்திருப்பார்கள். அரசரே அங்கு சிலரிடம் சிலவற்றை பின்னர் சொல்லவேண்டும் என்று குறித்திருப்பார். அமர்ந்த பின்னர் இயல்பாக நகையாட்டு என அவர்களை அழைத்து தன்னருகே அமரச்செய்வார். ஒவ்வொருவரும் அவ்வாறு முன்பிலாத ஒருவரை நோக்கி நகர கண்ணுக்கு முன் ஒரு சுழிப்பு நடக்கும். அவையின் வண்ணம் மாறுபடும்.

சற்று நேரத்திற்குப் பின் பார்த்தால் ஒவ்வொருவரும் அவர்கள் எவருடன் பேசுவார்கள் என்று முன்பு கணித்திருக்காத ஒருவரிடம் பேசிக்கொண்டிருப்பார்கள். அது உண்டாட்டுக்கே உரிய நகையாடலும் எளிய உடலசைவுகளும் கொண்டதாக இருப்பினும் விழிகளை நோக்கினால் அது மேலும் கூரியதென்று தெரியும். அவையில் யாரிடம் எது சொன்னாலும் பிறர் அதை நோக்குகிறார்கள் என்ற தன்னுணர்வு இருக்கும். ஆகவே அது சொல்லெண்ணிச் சுருக்கப்பட்டதாகவோ வேண்டுமென்றே மிகையாக்கப்பட்டதாகவோதான் வெளிப்படும். உண்டாட்டில் ஒவ்வொருவரும் பேசும் பேரோசையே ஒவ்வொருவருக்கும் திரை என்றாகிறது. உண்டாட்டின் கூச்சலுக்கு நடுவே ஒருவர் இன்னொருவரிடம் மிகத் தனியாக பேசமுடியும். மிக நுண்ணிய சூழ்ச்சிகளைக்கூட அங்கு வகுத்துவிடமுடியும்.

நான் தயங்கிய காலடிகளுடன் உண்டாட்டு அறைக்கு சென்றேன். இப்படி ஒரு வாரத்தில் நிகழும் மூன்றாவது உண்டாட்டு இது. உண்டு குடித்து களித்துக்கொண்டிருப்பதாகவே பிறர் எண்ணுவார்கள். அல்லது மெய்யாகவே அதைத்தான் செய்கிறோமா? நான் அமர்வதற்காக இளையோன் ஸ்ரீ꞉பானுவின் அருகிருந்த பீடத்தை நோக்கி

சென்றேன். அவன் என்னிடம் "ஒருவழியாக போர் தொடங்கிவிட்டது" என்றான். "இன்னும் இல்லை" என்று நான் சொன்னேன். "தந்தை வரவில்லை என்று சாத்யகி திரும்பிவந்து கூறியபோதே போர் தொடங்கிய செய்தியை நான் உணர்ந்துவிட்டேன். எப்போதென்ற வினாவே எஞ்சியிருந்தது" என்றான் ஸ்ரீஃபானு. "இந்தப் போர்ச்சூழ்ச்சிகளையும் உண்டாட்டையும் கேட்டுக்கேட்டு சலித்துவிட்டேன்." நான் சிரித்துக்கொண்டு "ஆம்" என்று சொன்னேன்.

எனக்கு வலப்பக்கம் இருந்த இருக்கையில் இருந்த குடித்தலைவர் எழுந்து அப்பால் செல்ல அங்கே ஒரு புலித்தோல் கொண்டுவந்து விரிக்கப்பட்டது. என் அகத்தே மெல்லிய திடுக்கிடலை உணர்ந்தேன். ஒரு மரத்தாலத்தில் கணிகரை இரு ஏவலர் கொண்டுவந்து அங்கே அமரச்செய்தனர். என் அருகே இருந்த ஸ்ரீஃபானு "கணிகர் இவ்வண்ணம் ஊண்மேடையில் அமர்ந்து உண்பார் என்பதே விந்தையானது. ஊண் மேடைக்குமேல் பார்த்தால் அவர் இருப்பதே தெரியாது. நீங்கள் அவரிடம் ஏதாவது பேசிக்கொண்டிருந்தால் வெற்றிடத்திடம் உரையாடுவதாக பிறருக்குத் தோன்றலாம்" என்றான். நான் புன்னகைத்தேன். இவன் உடனிருக்கையில் கணிகர் என்னிடம் எவ்வகையிலும் ஆழ்ந்து உரையாட முடியாது என்று உணர்ந்தேன். அது எனக்கு ஆறுதலையே அளித்தது.

நான் அன்று கணிகரிடம் பேசுவதை உண்மையில் விரும்பியிருந்தேன். அங்கு பேசுவதற்காக சில சொற்களை உளம் கருதியும் இருந்தேன். சாம்பனின் துணைவியிடமும் காளிந்தியன்னையின் மைந்தரிடமும் அடைந்த வெற்றியை நான் சரியாகச் சொல்லி உணர்த்தக்கூடிய இடம் அவரே.

ஆனால் அப்போது அதற்கான தருணம் வந்தபோது நான் ஐயுற்றேன், அச்சம் கொண்டேன். அனைத்திலிருந்தும் விலகிவிடவேண்டும் என்றும் விந்தையானதோர் இருள் எனக்காக தொலைவில் காத்திருப்பது போலும் தோன்றியது. ஸ்ஃபானுவுக்கு மறுபக்கம் படைத்தலைவராகிய சுபூர்ணர் வந்தமர்ந்தார்.

நான் அகத்தே சற்று திடுக்கிட்டேன். அங்கு அமரச்செய்வதற்கு அவரைப்போல உகந்தவர் பிறிதில்லை. ஏனெனில் படை எழுச்சியை ஒவ்வொரு நாளும் அவையில் சொல்லிக்கொண்டிருந்தவர் அவர். படைக்கலன்கள் துருப்பிடிக்கின்றன என்பதே அவருடைய மாறாச் சொல்லாக இருந்தது. இளையோனை தன் சொற்களால் முழுதாக இழுத்துக்கொள்வார். இயல்பாக அது நடக்கவில்லை, அவரை அங்கு அமரச்செய்வதற்காக கணிகர் எதையோ செய்திருக்கக்கூடும் என்று எண்ணினேன். எனில் அவர் என்னிடம் மிகக் கூர்மையாக, மிகத் தனிமையாக எதையோ சொல்ல விரும்புகிறார் என்று பொருள்.

கணிகருக்கு நான் தலைவணங்கி முகமன் உரைத்தேன். “நல்லுணவு! நன்று!” என்று அவர் சொன்னார். “நான் ஊனுணவு அருந்துவதில்லை. ஆனால் ஊனுணவின் மணமும் அதை உண்ணும் ஷத்ரியர்களின் சுவைமெய்ப்பாடுகளும் எனக்கு பிடிக்கும்” என்றார். “ஷத்ரியர்களுடன் அமர்ந்து உணவுண்பது அந்தணருக்கு உகந்ததல்ல அல்லவா?” என்று நான் சொன்னேன். “ஆம், ஆனால் அரசுசூழ் அந்தணர்கள் அதை செய்யலாம். நான் வேள்வியில் அமர்வதில்லை, இறைபூசனை செய்வதுடன் நின்றுவிடுவேன்” என்றார். நான் புன்னகைத்தேன்.

அவர் சூழ நோக்கி “இங்கு எங்கும் ஊனுணவு நிறைந்திருக்கிறது. அன்னம் நன்று, அது அன்னத்தை வளர்ப்பது. அத்தனை விலங்குகளும் ஏதேனும் ஒரு அனலுக்கு அவியாகின்றன. விலங்குகளின் வயிற்றில் எரியும் அனல். வைஸ்வாநரன்! அன்ன வடிவானவன், அன்னத்தை உண்பவன்!” என்றார். அவர் எங்கு பேசிச்செல்கிறார் என்று எனக்குப் புரியவில்லை. அவர் தன் சொற்களை வந்தடைவதற்காக காத்திருந்தேன். ஆனால் அவர் தனக்கு உணவு கொண்டுவரும்படி கைகாட்டினார். தனது உணவை தானே தெரிவுசெய்தார். எளிய அப்பங்கள் இரண்டு. ஒரு கோப்பை பால். பழத்துண்டுகள். அவற்றை அவர் மிகமிக கூர்ந்து நோக்கி தெரிவுசெய்தார். நான் அவரை நோக்கிக்கொண்டிருந்தேன்.

# கல்பொருசிறுநுரை - 28

**பகுதி நான்கு : அலைமீள்கை – 11**

கணிகர் அத்தனை எளிதாக பேசத்தொடங்கிவிடமாட்டார் என்று நான் எண்ணினேன். நிறைய சொல்கூட்டி சுற்றி அங்கே செல்வதே அவர் வழக்கம். என் அருகே இருந்த ஸ்ரீபானுவிடம் சுபூர்ணர் உரத்த குரலில் தன்னிடம் இருக்கும் படைப்பிரிவுகளையும் அவை ஒவ்வொன்றின் திறமைகளையும் சொல்லத்தொடங்கியிருந்தார். அவன் முற்றாகவே மறுபக்கம் திரும்பிவிட்டிருந்தான். ஒவ்வொருவரும் தங்கள் பேச்சில் மூழ்கினர்.

மூத்தவர் ஃபானு எழுந்து சென்று ஸ்வரஃபானுவின் அருகே அமர்ந்து அவர் தோளைத்தொட்டபடி பேசத்தொடங்கியிருப்பதை பார்த்தேன். மூத்தவர் ஃபானுவுக்கு எப்போதுமே ஸ்வரஃபானு மேல் ஐயமும் அதன் விளைவான அச்சமும் இருந்தது. அதற்கான வாய்ப்பும் இருந்தது. ஏனென்றால் விருஷ்ணிகளின் தலைவர் என தன்னை முன்னிறுத்திக்கொள்ளும் ஒரு தருணத்தையும் ஸ்வரஃபானு தவறவிட்டதில்லை. அன்று மூத்தவர் அஞ்சுவதற்கு எஞ்சியிருந்தது விருஷ்ணிகளின் ஐயம்தான்.

நான் அதை பார்ப்பதைக் கண்ட கணிகர் என்னிடம் "அவர் விருஷ்ணிகளை அஞ்சுகிறார்" என்றார். நான் அவரை திரும்பிப் பார்த்து "ஆம்" என்றேன். "இயல்பானதுதான் அது. விருஷ்ணிகளே இந்நகரத்தை அமைத்தவர்கள். ஆனால் அவர்கள் போர்வீரர்கள் அல்ல" என்று நான் சொன்னேன். "அது வேறு. ஆனால் இன்று நம்முடைய துணையரசுகளாக இருக்கும் இரு நாடுகளும் விருஷ்ணிகளுக்குரியவை. மதுவனமும் மதுராவும் இன்றி இங்கே துவாரகை நிலைகொள்ள இயலாது. போஜர்களுக்கு மார்த்திகாவதியும் அந்தகர்களுக்கு ஹரிணபதமும்தான் எஞ்சியிருக்கின்றன. அவை இரண்டும் இன்று ஆற்றல் உள்ள நகரங்களே அல்ல" என்றார் கணிகர்.

"அந்தகக் குலத்து நிம்னரின் மைந்தரும் ஹரிணபதத்தின் அரசருமான சத்ராஜித்தின் கொடிவழியினர் இன்று பெயரறியாதவர்களாக சுருங்கிவிட்டனர். சத்ராஜித்தின் தங்கைமைந்தர் விஸ்வஜித் அங்கே ஆட்சி செய்வதை அவர் மட்டுமே அறிவார். குந்திபோஜருக்குப்பின் ஆட்சிக்கு வந்த அவர் இறுதி அரசியின் மைந்தன் விரோசனன் ஆற்றல்

அற்றவன். குந்திதேவி அஸ்தினபுரியிலிருந்து மிக விலகி எங்கோ சென்றுவிட்டபிறகு விருஷ்ணிகள் எவ்வகையிலும் அஸ்தினபுரியின் உதவியை தேடவும் முடியாது. இன்றிருக்கும் நிஷாத அரசியான சம்வகை துவாரகை அழியுமென்றால் நன்று என்று எண்ணுபவராக இருக்கிறார்" என்று கணிகர் சொன்னார்.

"விருஷ்ணிகள் ஆற்றல் இழந்திருக்கிறார்கள். ஆனால் விருஷ்ணிகள் இந்நகரை உருவாக்கியிருக்கிறார்கள். அந்தத் தன்னுணர்வு இருக்கிறது. அந்தத் தன்னுணர்வு ஒரு பெரும் படைக்கலம். இதை விட்டுவிடலாகாது, இது தங்களுடையது என்று அவர்கள் எண்ணுகிறார்கள். பிறருக்கு மோதிப் பார்ப்போம், இயன்றால் வெல்வோம், இல்லையென்றால் சென்று தங்கள் இடத்தை தேர்வோம் என்ற எண்ணம் இருக்கும். தன் மனைவிக்காக போரிடுவதைவிட மைந்தனுக்காக மேலும் போரிடுவார்கள் மானுடர்கள்" என்றார். "ஆம்" என்று நான் சொன்னேன். "ஆகவே விருஷ்ணிகளின் தலைவராக ஸ்வர꞉பானு தன்னை நிறுத்திக்கொள்வதென்பது அந்தகர்களுக்கு அறைகூவலே. அவரை உடன் நிறுத்தியாகவேண்டும்" என்றார் கணிகர்.

"அதைத்தான் மூத்தவர் செய்கிறார்" என்றேன். "இல்லை இல்லை. அதன் பொருட்டு அவர் பிழை செய்கிறார். விருஷ்ணிகளை தன்னுடன் நிறுத்துவதற்காக விருஷ்ணிகளின் தலைவர்களை அவர் மதிக்கிறார். அவையமர்வு கொடுக்கிறார். அவர்களிடம் இன்சொல்லாடுகிறார். விளைவாக அவர்கள் அவைமுதன்மை பெறுவார்கள். அவர்களின் குடிக்கு அவர்கள் மறுப்பில்லா தலைவராவார்கள். நம் எதிரியை நாமே ஆற்றல்மிக்கவராக ஆக்கிக்கொள்வதுதான் அது. எப்போதும் நாம் அதை செய்கிறோம், நம் எதிரிகளை நம்முடன் நிறுத்தும்

பொருட்டு அவர்களை மதிக்கிறோம். அம்மதிப்பினூடாக அவர்களை ஆற்றல்மிக்கவர்களாக ஆக்குகிறோம்" என்றார்.

"பிறகென்ன செய்யவேண்டும்?" என்று நான் எரிச்சலுடன் கேட்டேன். "ஒன்றுக்கு மேற்பட்ட தலைவர்களை விருஷ்ணிகளுக்கு உருவாக்கவேண்டும். அவர்கள் தங்களுக்குள் பூசலிட்டுக்கொள்ளவேண்டும். அப்போதுதான் ஃபானு ஆற்றல்மிக்கவராக ஆகமுடியும்" என்றார் கணிகர். "இன்று இளைய யாதவரின் மைந்தரில் விருஷ்ணிகளின் தலைவராக ஸ்வரஃபானு மட்டுமே இருக்கிறார். இன்னொரு தலைவர் நமக்கு தேவை." நான் "யார்?" என்றேன். "தெரியாது. ஆனால் இன்னொருவரை உருவாக்கியே ஆகவேண்டும். அவர் பாமையின் மைந்தர்களில் ஒருவராக இருக்க முடியும்" என்றார் கணிகர்.

"எனில் நாங்கள் பத்து உடன்பிறப்புகளும் ஒருவருடன் ஒருவர் போரிட்டுக்கொள்ள வேண்டும் என்று அல்லவா ஆகிறது?" என்றேன். "ஆம், அதற்கு மாற்று வழியே இல்லை. எப்படி இருந்தாலும் இந்தப் பத்து பேரில் ஓரிருவரே எஞ்சமுடியும். ஃபானுவும் அவருடன் உறுதியாக நின்றிருக்கும் மைந்தர்களும். அவருடன் சிறு உளவேறுபாடு கொண்டவர்கள்கூட கொல்லப்படுவார்கள். அதை தவிர்க்கவே முடியாது" என்றார் கணிகர். "கொல்லப்படுவார்களா?" என்று நான் கேட்டேன். "அழிக்கப்படுவார்கள். எச்சமின்றி. வேறெந்த நஞ்சை எஞ்சவிட்டாலும் உடன்பிறந்த நஞ்சு ஒரு துளிகூட எஞ்சலாகாது" என்றார் கணிகர்.

நான் அவரையே பார்த்துக்கொண்டிருந்தேன். "ஆனால் அது அத்தனை எளிதல்ல" என்று அவர் மேலும் சொன்னார். நான் அவர் கண்களை பார்த்தேன். "இங்கு நான் பார்த்தவரை

துலாவின் தட்டுகள் மேலும் மேலும் இணையாகிக்கொண்டே செல்கின்றன. யாதவருக்குள் ஃபானு ஆற்றல்மிக்கவர். ஏனெனில் அவர் முதன்மையானவர். இயல்பான தலைமை கொண்டவர். ஆனால் படைநடத்தத் தெரியாதவர். அந்தகர்களின் தலைவர் என்னும் அடையாளமும் கொண்டவர். ஸ்வரஃபானு விருஷ்ணிகளின் தலைவர் என அறியப்படுபவர், படைநடத்தத் தெரிந்தவர். அவருக்கு விருஷ்ணிகளின் தலைவர் என இங்கே வரவிருக்கும் கிருதவர்மனின் வாழ்த்தும் இருக்குமெனில் இணையான தலைவராகிவிடுவார்" என்றார் கணிகர்.

"கிருதவர்மன் அவ்வண்ணம் ஒரு தரப்பெடுப்பாரா?" என்றேன். "வேறு வழியில்லை. கிருதவர்மன் எக்குலத்தைச் சார்ந்தவரோ அக்குலத்திற்கு கட்டுப்பட்டே ஆகவேண்டும். தன் குலத்திற்குமேல் எழும் தகைமைகள் கொண்டவர்கள் சிலரே. குலத்தையும் குடியையும் விட்டு மேலெழுவதற்கு அற உணர்ச்சி வழிவகுப்பதில்லை. தத்துவக்கல்வியே வழிவகுக்கும். மானுடன் என நின்றிருக்கும் தன்னிலையை அது அளிக்கும். ஆனால் தீயூழ் என்னவென்றால் கிருதவர்மன் தத்துவம் பயின்றவர் அல்ல." நான் "எனில் என்ன நிகழும்?" என கேட்டேன்.

"சிம்மமும் சிம்மமும் போரிட நேரும். இணையான போர்" என்றார் கணிகர். நான் அவரை பார்த்துக்கொண்டிருந்தேன். "இரு சிம்மங்களும் அழியலாம். நோக்கி நின்றிருக்கும் சிறு நரிகளில் ஒன்று மணிமுடி கொள்ளலாம்" என்றார். ஒருகணத்தில் என்னுள் எழுந்த எண்ணத்தை உடனடியாக தன் கண்களால் தொட்டெடுத்தார். "ஆம், அதையே நான் சொன்னேன். சிறுநரிகளில் ஒன்று வெல்லலாம் என்று" என்றார்.

நான் மேலே பேசுவதற்குள் "நிகர் ஆற்றல்கள் ஒன்றையொன்று வென்றதே இல்லை. நிகர் ஆற்றல்கள் மோதும் இடங்கள் அனைத்திலும் மூன்றாவது தரப்பே வென்றுள்ளது. நான் மூன்றாவது தரப்பு இங்கு எது என்றுதான் தேடிக்கொண்டிருக்கிறேன்" என்றார்.

நான் விழிகளை விலக்கிக்கொண்டேன். அவர் மெல்ல கனைக்க திரும்பி அவரை பார்த்தேன். அவர் புன்னகைத்து "மூன்றாவது தரப்பாக அமைவதற்கு இன்று தேவை விழைவு. விசைகொண்ட, கூர்கொண்ட, நஞ்சும் கொண்ட விழைவு. விழைவென்பது ஊசிமுனையில் நிறுத்தப்பட்ட உருள்மணி போன்றது. ஒவ்வொரு கணமும் இடைவிடாது நிகழும் நிகர்ப்படுத்தலினூடாகவே அது அங்கு நின்றிருக்கும். ஒருகணத்தில் உதிரவும் கூடும். அவ்வண்ணம் ஒரு விழைவை நெடுங்காலம் நிலைநிறுத்தி நின்ற ஒருவர் இன்று இங்கே தேவை. அவருடைய முதன்மை விசை ஆழத்து விழைவுதான்" என்றார் கணிகர்.

"விழைவு அனைவரிடமும் இருக்குமல்லவா?" என்றேன். "ஆம், ஆனால் தகுதியும் விழைவும் கொண்டவர்கள் அரிது. தகுதியற்றவர்களுக்கு தங்கள் விழைவு வெறும் பகற்கனவு என தெரிந்திருக்கும். அவர்கள் அதை சொல்லிச் சொல்லி பெருக்குவார்கள். ஆணவமும் கழிவிரக்கமும் இரு எல்லைகளாக அமைந்து அவர்களை அலைக்கழிக்கும். ஆனால் மிகைவிழைவு என்னும் ஆற்றலைக் கொண்டவர்கள் அவைகளில் முற்றமைந்திருப்பார்கள். அனைத்தையும் அறிந்தும் இருப்பார்கள், அறியப்படாதவர்களாகவே எஞ்சுவார்கள்" என்று கணிகர் சொன்னார்.

நான் படபடப்புடன் அவரை பார்த்துவிட்டு மீண்டும் விழியை விலக்கிக்கொண்டேன். அதன் பின் உண்டாட்டில் அவர் என்னிடம் ஒன்றும் சொல்லவில்லை. அவரருகே சுஃபானு வந்து அமர்ந்தார். அவரிடம் புதிய சொற்களை பேசத்தொடங்கினார். நான் அவரை அதன்பின் ஒருமுறைகூட திரும்பிப்பார்க்கவில்லை. ஆனால் என் உடம்பில் அப்பக்கம் முழுக்க ஒரு தொடுஉணர்வுபோல, இளவெம்மைபோல, அல்லது ஒரு குளிர் நடுக்குபோல ஏதோ ஒன்று இருந்துகொண்டிருந்தது.

அன்று நான் என் அறைக்குச் சென்றதும் பெரும் சோர்வை உணர்ந்தேன். ஆடைகளை மாற்றாமலேயே படுக்கையில் அமர்ந்திருந்தேன். என் ஏவலன் வந்து பணிந்து "செய்தி உள்ளது, இளவரசே" என்றான். "சொல்" என்றேன். "மதுவனத்திலிருந்து இளவரசியும் மைந்தரும் வந்துள்ளனர். நகர்ப்புறத்து அரண்மனையில் தங்கியிருக்கிறார்கள்" என்றான். நான் திகைப்புடன் எழுந்துகொண்டு "இங்கா? ஏன் இங்கு வந்தனர்?" என்றேன். அவன் ஒன்றும் சொல்லவில்லை. "தங்களை சந்திக்க பொழுது கோரினர்" என்றான். "நான் கிளம்புகிறேன், தேர் ஒருங்குக!" என்றேன்.

தேரில் நகரினூடாகச் செல்கையில் அவர்கள் ஏன் வந்தார்கள் என்று எண்ணிக்கொண்டிருந்தேன். மதுவனத்தின் யாதவ குடித்தலைவர் சீர்ஷரின் மகள் சுப்ரபையை உங்கள் ஆணைப்படித்தான் நான் மணந்துகொண்டேன். ஆனால் அவளுடன் என் வாழ்க்கை இனிதானது அல்ல. அவள் துவாரகையை வெறுத்தாள். "வெறுநிலம்" என்றுதான் அவள்

இந்நகரை சொன்னாள். “வெறுநிலம் அல்ல இது, செல்வக்களஞ்சியம்” என்று நான் அவளிடம் சொன்னேன். “ஆம், பாலைவனத்தில் கள்வர்கள் அவ்வண்ணம் பொன்புதைத்து வைப்பதுண்டு என்பார்கள். நீர் விழைந்து மண்ணை அகழ்கையில் பொன் கிடைத்து சிரித்தும் அழுதும் உயிர்விட்ட பாலைப்பயணிகளைப் பற்றிய கதைகளை நான் கேட்டதுண்டு” என்றாள்.

அவளிடம் பேசமுடியாது. இரண்டாவது மைந்தன் பிறந்தபின் அவளை மதுவனத்துக்கே அனுப்பிவிட்டேன். அங்கே கன்றுமேய்த்து காடுகளில் மகிழ்ந்து வாழ்ந்தாள். ஆண்டுக்கு ஒருமுறை அங்கே சென்று சின்னாட்கள் தங்கி மீள்வேன். அதுவன்றி எனக்கும் அவளுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. என் மைந்தர் என்னைப்போன்றே இருந்தனர், தோற்றத்தால் விழிகளால். ஆனால் அவர்களுக்குள் இருந்தவர்களை நான் அறியவே இல்லை. அவர்களுக்கு அரச சூழ்ச்சிகள் தெரிந்திருக்கவில்லை. அரசமுறைமைகளோ சொற்களோ தெரிந்திருக்கவில்லை. அவர்கள் அயலாரை அஞ்சும் எளிய யாதவர்களாகவே இருந்தார்கள்.

அவர்கள் செல்வத்தையே அஞ்சினார்கள். பொன்னின் மதிப்பை அவர்கள் அறிந்திருக்கவில்லை. பசுவையே செல்வம் என்று சொல்வது அவர்களின் வழக்கம். அது வாழும் செல்வம், பிற அனைத்தும் இறந்த செல்வங்கள். பிற செல்வங்கள் அனைத்துடனும் எவருடைய கண்ணீரோ குருதியோ இணைந்துள்ளது, பசு அளிக்கும் செல்வம் மட்டுமே பழியற்றது. உழவரும் சிற்றுயிரின் பழிகொண்டவர்களே என்று அவர்கள் சொன்னார்கள். வேட்டைச்செல்வம் குருதிப்பழிகொண்டது என்றார்கள். துவாரகையின் செல்வத்தை அவர்கள் அஞ்சி

அருவருத்தனர். அந்த எண்ணத்தை அவர்கள் வாழ்ந்த சூழல் உருவாக்கி நிலைநிறுத்தியது.

அவர்களுடன் என்னால் உரையாடவே இயலவில்லை. மதுவனத்திற்குச் செல்கையில் அவர்களுடன் இருப்பேன். அவர்களின் உடலில் இருந்து எப்போதுமே சாணிவாடை எழுகிறது என்று தோன்றும். அவள் உடலிலேயே அந்த வாசனை உண்டு. முதல் ஆண்டுகளில் அது என்னை காமம் கொள்ளச்செய்தது. பின்னர் ஒவ்வாமையை உருவாக்கியது. துவாரகையில் நான் எப்போதுமே அயல்நிலத்துப் பெண்டிரையே நாடினேன். அவள் முகம் என்றோ எப்போதோ நினைவிலெழுந்தது, அன்றி அவளை நான் மறந்தே வாழ்ந்தேன்.

புறக்கோட்டத்தின் அரண்மனையில் அவர்கள் இருந்தனர். அவர்களே தெரிவுசெய்துகொண்ட இடம் அது. முன்பு, துவாரகையைச் சுற்றி புல்வெளிகள் இருந்த காலகட்டத்தில், அங்கே ஆநிலைகள் இருந்தன. அங்கே பசுக்களின் ஓசை கேட்டுக்கொண்டிருந்தது. நான் தேரை நிறுத்தி மாளிகைக்குள் சென்றேன். என்னை எதிர்கொண்ட ஏவலனிடம் நான் அரசியை சந்திக்க விழைவதாகச் சொன்னேன். அவன் தலைவணங்கி சென்றான். நான் உள்ளறைக் கூடத்தில் அமர்ந்தேன். இனம்புரியா எரிச்சலுடன்தான் அங்கே வந்தேன். அந்த மாளிகைக்கு முன் தேர் நின்றதுமே இன்பமான எதிர்பார்ப்பை அடைந்து உள்ளம் இனிமையாகியது.

அவர்களை அங்கே நான் விரும்பவில்லை. நகரம் அரசியல்சூழ்ச்சிகளால் சிக்கலாகிக்கொண்டே செல்லும் பொழுது. எக்கணமும் போர் நிகழலாம். போர் நகருக்குள்ளேயே நிகழவும்கூடும். அவர்கள் அங்கிருப்பதைப்போல இடர் ஏதுமில்லை. ஆனால் அவர்கள் அப்போது அங்கிருப்பதை என்

அகம் விரும்பவும் செய்தது என்பதை நான் அங்கே வந்த பின்னரே உணர்ந்தேன். என் மைந்தர் எனக்கு எத்தனை முதன்மையானவர்கள் என்பதை ஆழத்தில் அறிந்திருந்தேன். அவர்களின் காலடியோசைக்காக என் செவிகள் கூர்கொண்டன.

முதலில் வந்தவன் இளையவனாகிய தனகன். அவனைத் தொடர்ந்து ஜயத்வஜனும் ரிஷபனும் மதுவும் ஊர்ஜிதனும் சூரசேனனும் வந்தனர். கார்த்தவீரியரின் மைந்தர்களின் பெயர்களை நான் என் மைந்தர்களுக்கு இட்டிருந்தேன் என நீங்கள் நினைவுகூர்வீர்கள், தந்தையே. தனகன் "தந்தையே!" என்று உரக்கக் கூவியபடி பாய்ந்தோடி வந்து என்னைக் கண்டதும் திகைத்து நின்றான். அவனுக்குப் பின்னால் வந்த ஜயத்வஜன் "தந்தையை வணங்குக!" என்றான். ஆனால் தனகன் அவ்வகை முறைமைகளை அறிந்தவன் அல்ல. அவன் மூக்கில் சுட்டுவிரலை நுழைத்து உடலை நெளித்து என்னை நோக்கியபடி நின்றான்.

நான் புன்னகையுடன் அவனை அருகே அழைத்தேன். அவன் மெல்ல அருகே வந்தான். அவன் இடையைச் சுற்றி இழுத்து அருகே சேர்த்துப் பிடித்து "எப்போது வந்தீர்கள்?" என்றேன். "நாங்கள் தேரில்... அதற்கு முன் படகில்... ஆனால் பெரிய படகு அது" என்று அவன் சொன்னான். "அதை துடுப்பு போட்டு... பெரிய பாய் கட்டி... ஓட்டி..." அவன் துவாரகைக்கு வருவது அதுவே முதல்முறை என்று நினைவுகூர்ந்தேன். அவனுக்கு மூத்தவனாகிய சூரசேனன் குழவியாக இருக்கையில் அவர்கள் நகருக்குள் வந்திருக்கிறார்கள். சூரசேனனுக்கும் நகரம் நினைவில் இருக்க வாய்ப்பில்லை.

"நாங்கள் இன்று புலரியில் நகர்புகுந்தோம்" என்று ஜயத்வஜன் சொன்னான். நான் புன்னகைத்து "இது நகரம் அல்ல. இன்னும்

துவாரகை தொடங்கவே இல்லை. நெடுந்தொலைவுக்கு அப்பாலுள்ளது அதன் தோரணவாயில். அதற்கப்பால் பெருமாளிகை நிரை" என்றேன். ரிஷபன் "நான் பார்த்திருக்கிறேன். சென்றமுறை வந்தபோது... மிகப் பெரிய மலைகளை வீடுகளாக ஆக்கியிருப்பார்கள். மலைகளுக்குமேல் உப்பரிகைகள்... அதில் மனிதர்கள்" என்றான். "அங்கிருந்து பார்த்தால் கடல் தெரியும்... அதில் மிகப் பெரிய படகுகள்... வீடுகள் போன்ற படகுகள்" என்றான். நான் "அவை மரக்கலங்கள், படகுகள் அல்ல. மதுவனத்திலுள்ள அத்தனை இல்லங்களையும் அவற்றுக்குள் வைக்கமுடியும்" என்றேன்.

ஜயத்வஜன் "துவாரகைக்குள் நாளை செல்லலாம் என்று அமைச்சர் அஸ்வகர் சொன்னார்" என்றான். "ஆம், நானே அதற்கு ஆணையிடுகிறேன்" என்றேன். மதுவையும் ஊர்ஜிதனையும் பார்த்து "வருக!" என்றேன். அவர்கள் வந்து என்னருகே நின்றனர். அவர்களிடம் புழுதியின் மணமும் வியர்வையின் மணமும் வந்தது. அவர்களை தோள்தழுவி சிறுசொல்லாடி அங்கே அமர்ந்திருக்கையில் மானுடனெனப் பிறப்பதன் பேருவகைகளில் ஒன்றை அடைந்து அதில் திளைத்தேன். அவர்களை தொட்டுக்கொண்டே இருந்தேன். விலங்கெனப் பிறந்திருந்தால் நாவால் நக்கியிருப்பேன். என் உடலெங்கும் நிறைத்துக்கொண்டிருப்பேன்.

என் துணைவி வந்து அப்பால் நின்றாள். அவளைக் கண்டதும் ஜயத்வஜன் "அன்னை" என்றான். மைந்தர்கள் என் பேச்சுக்கு சிரித்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் முதற்கட்ட தயக்கம் விலகியதும் கூச்சலிட்டுப் பேசத்தொடங்கினர். பேசப்பேச குரல் ஓங்கியது. திறந்த வெளியில் வாழும் யாதவர்கள் எப்போதுமே உரக்கப்பேசுபவர்கள். அவர்கள் ஒவ்வொருவருக்கும்

சொல்வதற்கு பல இருந்தன. அவர்கள் ஊரிலிருந்து கிளம்பியதுமுதலே விந்தைகளைக் கண்டுவந்தனர். சிந்துவில் மீன் துள்ளுவதுகூட அவர்களுக்கு செய்தியாக இருந்தது. ஜயத்வஜன் "அன்னை வந்துள்ளர்" என்று சொல்லி மைந்தர்களைப் பிடித்து இழுத்து விலக்கினான்.

சுப்ரபை வந்து "செல்க!" என்று அவர்களிடம் சொன்னாள். அவர்கள் என்னை வணங்கி வாழ்த்து பெற்று விலகிச் சென்றனர். அவள் என்னருகே வந்து இயல்பாக தலைவணங்கி எதிரே அமர்ந்தாள். அதுவும் யாதவர்களின் வழக்கம். அவர்களின் மகளிர் ஆண்களின் கால்தொட்டு வணங்குவதில்லை. நான் அவளை உளம் மலர்ந்து நோக்கினேன். மைந்தருடன் விளையாடி என் உள்ளம் களிப்படைந்திருந்தது. "அங்கே வந்த செய்திகள் என்னை வரச்செய்தன" என்று அவள் சொன்னாள். எந்த முகமனும் இல்லாமல், அன்புச்சொற்கள் இல்லாமல் அவள் வந்த நோக்கத்தை சொல்லத் தொடங்கினாள். அவள் அவ்வாறுதான் எப்போதுமே. "என்ன?" என்று நான் கேட்டேன்.

"இங்கே ஓர் அரசியல்பூசல் நிகழவிருக்கிறது என்று அறிந்தேன். அது குருதிப்பூசலாக ஆகும் என்றார்கள். துவாரகையின் அரசர் வந்து பூசல்களை தீர்த்துவைப்பார் என்று எண்ணியிருந்தோம். அவர் வரப்போவதில்லை என்றும் சாத்யகி திரும்பி வந்துவிட்டார் என்றும் சொன்னார்கள். ஆகவேதான் நானே கிளம்பிவந்தேன். தூதனுப்புவதைவிட மைந்தருடன் வந்து பேசுவதே உகந்தது என்று தோன்றியது" என்றாள். "நீ வந்திருக்கக்கூடாது" என்றேன். "நான் இங்கே தங்கப்போவதில்லை. என்னுடன் உங்களை

அழைத்துச்செல்லவே வந்துள்ளேன்" என்றாள். "எங்கு?" என்றேன்.

"மதுவனத்திற்கு. உங்களுக்கு என்று அங்கே உறவும் குடியும் நிலமும் உள்ளது. இங்குள்ள பூசல்களில் நீங்கள் ஈடுபட வேண்டியதில்லை. அதனால் உங்களுக்கு எந்த நன்மையும் இல்லை. எண்பதின்மரில் ஒருவராக இந்த அவையில் இருந்து இங்குள்ள பூசல்களில் ஏன் உழலவேண்டும்? என்னுடன் வருக... என் மைந்தரை எண்ணுக! என்னை எண்ணுக... எங்களுடன் வாருங்கள்" என்றாள். இறுதிச் சொற்களில் உளமுடைந்து விழிநீர் மல்கினாள்.

"நீ புரிந்துகொள்ளவில்லை" என்றேன். "நான் இங்கே இளையோன் என ஒரு கடமையில் இருக்கிறேன். அதை உதறிவிட்டு வரமுடியாது. அவ்வாறு வந்தால் கோழை என்றே என்னை கொள்வார்கள்" என்றேன். "இல்லை, இப்போது எங்களுடன் கிளம்பினால் அவ்வாறு பேச்செழாது. போர் தொடங்கிய பின்னர்தான் உங்களால் கிளம்ப முடியாது. இப்போது நான் வந்து அழைத்தமையால் எங்கள் குடியின் பூசலொன்றை சீரமைக்க வருகிறீர்கள் என்று சொன்னால் மறுசொல் எழாது. நான் அறிவேன்" என்றாள். "ஆகவேதான் நானே வந்தேன். நீங்கள் அங்கே வந்தாகவேண்டிய பெருஞ்சிக்கல் ஒன்று எங்கள் குடியில் இருந்தமையால்தான் நான் மைந்தருடன் வந்தேன் என்று துவாரகையினருக்கு சொல்லிவிடலாம்."

நான் "இல்லை, என் கடமையைவிட்டு வர நானும் விரும்பவில்லை" என்றேன். "என்ன கடமை? இந்த அவையில் நீங்கள் இருந்தால் என்ன செய்யப்போகிறீர்கள்?" என்றாள். "மூத்தவருடன் இருப்பீர்கள், அவ்வளவுதானே? அதனால் என்ன

ஆகப்போகிறது? மூத்தவரிடம் ஆணைபெறுக! நானே வந்து அவரிடம் பேசுகிறேன்." அவள் முகத்தை சீற்றத்துடன் நோக்கி "வீண்பேச்சு வேண்டாம். நான் அவருடன் இருந்தாகவேண்டும். அவர் என் குடிமூத்தவர். என் மூத்தவர், நான் உடனிருந்தாகவேண்டும். அவருக்காக குருதிசிந்தவேண்டுமென்றால் அதற்கும் துணியவேண்டும். அதுவே குடிநெறி. ஆணின் வழி அது" என்றேன்.

அவள் உதடுகள் ஏளனத்துடன் வளைந்தன. "நீங்கள் எண்ணுவது என்ன என்று எனக்குத் தெரியும்" என்றாள். "என்ன தெரியும்?" என்று நான் கூவினேன். "சொல், என்ன தெரியும் உனக்கு?" அவள் "எது தெரியவேண்டுமோ அது தெரியும். நீங்கள் விழைவதை அடையமாட்டீர்கள்" என்றாள். நான் அயர்ந்துவிட்டேன். என்னுடன் அவள் வாழ்ந்ததே குறைவு. ஆனால் என் ஆழத்தை அறிந்திருக்கிறாள். "என்ன சொல்கிறாய்?" என்றேன். "அதை அடைய நீங்கள் களத்தில் வைத்தாடுவது எங்களை... என்னையும் உங்கள் மைந்தரையும்... அதை உளம்கொள்க!" என்றாள்.

நான் சீற்றத்துடன் எழுந்துவிட்டேன். "என்ன சொல்கிறாய்? என்னை கோழையாக்கவா வந்தாய்? விழைவை தலைக்கொள்பவன், அதன்பொருட்டு குருதிசிந்துபவனே ஷத்ரியன். நான் ஷத்ரிய அறம் கைக்கொண்ட யாதவன். என் இலக்கு என்ன என்று எனக்குத் தெரியும். அதிலேயே என் வெற்றியும் புகழும் நிறைவும் உள்ளது. அதைத் துறந்து உன்னுடன் வந்து பசுக்களுக்கு சாணிவழிக்க மாட்டேன்" என்றேன். அவள் என் கைகளை பற்றிக்கொண்டு "சொல்வதை கேளுங்கள்... நீங்கள் செல்லும் பாதை குருதியாலானது. நம் மைந்தரின் குருதி" என்றாள்.

“நான் அவர்களுக்கு தேடியளிப்பது மணிமுடியும், குடிச்சிறப்பும், பெரும்புகழும்... அதற்காக அவர்கள் அந்த இடர்களை கடந்தே ஆகவேண்டும். துணிந்தவர்களுக்கே வெற்றி அமைகிறது...” என்றபின் எழுந்து என் மேலாடையை சீரமைத்தேன். “இனி இதன்பொருட்டு நாம் ஒரு சொல்லும் பேசவேண்டியதில்லை” என்று சொல்லி வெளியே நடந்தேன்.

# கல்பொருசிறுநுரை - 29

**பகுதி நான்கு : அலைமீள்கை – 12**

தந்தையே, தீப்பிடித்து எரிவதற்கான வாய்ப்பு பல நூறாண்டுகள்கூட அவ்வண்ணமே நிகழாது தொடரக்கூடும். தீப்பிடித்துவிட்டால் கணங்கள் கணங்கள் என எரிதல் விரைவு கொள்ளும். கணங்களை அச்சுறுத்தி பறக்கச்செய்யும். துவாரகையில் ஒவ்வொன்றும் அத்தனை விசை கொள்ளும் என்று சில நாட்களுக்கு முன் கூறியிருந்தால் திகைத்திருப்பேன். நான் நகரத்தில் இறங்கும்போது ஒவ்வொருவரும் மாறியிருப்பதை கண்டேன். அத்தனை விழிகளும் பற்றி எரியத்தொடங்கியிருந்தன. உடலசைவுகளில் விரைவு கூடியிருந்தது. பதற்றமும் கொந்தளிப்புமாக மக்கள் கூடிக் கூடி நின்று பேசிக்கொண்டார்கள். ஒருவரை ஒருவர் கூவி அழைத்தனர். கூச்சலிட்டு சொல்லாடினர். அவ்வப்போது பூசலிட்டனர். அனைவருமே களிவெறிகொண்டிருந்தனர்.

நான் புரவியிலிருந்து இறங்கி, என் தலைப்பாகையைக் கழற்றி அணிந்திருந்த பட்டு மேலாடைக்கு மேல் அதைச் சுற்றிக்கொண்டு, அத்திரளில் இறங்கி அவர்கள் பேசிக்கொள்வதென்ன என்பதை செவிமடுத்தேன். அத்தனை பேரும் கிருதவர்மனை பற்றித்தான் பேசிக்கொண்டிருந்தார்கள். "கிருதவர்மன் கிளம்பிவிட்டார்! அவர் இருக்குமிடத்திற்கு ஃபானுவின் தூது சென்றுவிட்டது!" என்று ஒருவர் சொன்னார். "அவருடைய தூது ஃபானுவின் அவைக்கு வந்துவிட்டது! பெரும்படையுடன் அவர் வருகிறார். அவர் வஞ்சம் கொண்டிருக்கிறார். அஸ்தினபுரியின் மீதான வஞ்சத்தை துவாரகையின் ஷத்ரியர் மீது கொள்ளவிருக்கிறார்" என்றார் இன்னொருவர்.

ஒவ்வொருவரும் இன்னொருவரைவிட மேலும் சற்று அறிய விரும்பினர். "பிரத்யும்னனை நகர்நடுவே கழுவேற்றுவேன் என்று சூளுரைத்திருக்கிறார் கிருதவர்மன். சாம்பனையும் அவர் துணைவியையும் வெல்வார். ஆனால் துணைவியின் பொருட்டு ஒருவேளை சாம்பனை நகரிலிருந்து உயிருடன் விடவும் கூடும்" என்றார் ஒருவர். அப்பால் ஒருவர் "துவாரகையில் விருஷ்ணிகளின் கொடி பறக்கப்போகிறது. அந்தகர்கள் விருஷ்ணிகளுடன் இணைந்து நின்றிருந்தால் இந்நகரில் இனி வாழ முடியும்" என்றார். "விருஷ்ணிகள் ஒருங்கிணைந்து அந்தகர்களுடன் நின்றிருக்கவேண்டும், ஆள்பவர் அந்தகர்களே!" என்றார் இன்னொருவர். "அந்தகர்கள் நகரில் வாழலாம். ஆனால் அவர்கள் தலைமையேற்றுக்கொள்ளக் கூடாது" என்றது ஒரு குரல்.

ஒவ்வொருவருக்கும் சொல்வதற்கு ஏதோ இருந்தது. ஒவ்வொருவரும் பிறிதொருவரை மறுப்பதற்கு அதை

பயன்படுத்தினார்கள். அம்மறுப்பினூடாக தங்கள் தரப்பை தங்களுக்கே சொல்லி வலியுறுத்திக்கொண்டார்கள். மிக விசையுடன் ஒன்றை மறுக்கையிலேயே எளிய மக்கள் தங்கள் இருப்பை நிறுவிக்கொள்கிறார்கள். அரசை மறுக்கவேண்டும், மாற்றுக்குடியை வெறுக்கவேண்டும். எளிய மானுடருக்கு நெறியென்றும் அறமென்றும் ஏதுமில்லை. சொல்லொழுங்கென்றும் நிறுவுமுறை என்றும் ஏதுமில்லை. அவர்கள் சார்புநிலைகளை மட்டுமே கருத்தெனக் கொண்டவர்கள். அதன் நிறுவுநிலை அல்ல அதன் விசையே அவர்களை அதை நாடச் செய்கிறது.

விசை எப்போதும் வெறுப்பிலிருந்துதான் எளிதில் உருவாகிறது. ஆகவே வெறுக்கிறார்கள். வெறுப்பை தனிப்பட்ட காழ்ப்பென ஆக்கிக்கொள்கிறார்கள். தன்னுடன் அவ்வெறுப்பை பகிர்ந்துகொள்பவர்களை சேர்த்துக்கொள்கிறார்கள். அதை மறுப்பவர்களைக் கண்டடைந்து ஓயாது பூசலிடுகிறார்கள். எளிய மனிதர்கள் இரக்கத்திற்குரியவர்கள், வெறுப்பில் திளைத்து அதையே தன்னுணர்வென்றும் ஆணவநிலை என்றும் மகிழ்வென்றும் வெற்றி என்றும் கொள்பவர்கள். மலத்தை உண்டுதான் வாழ்ந்தாகவேண்டும் என ஒரு புழுவுக்கு வாழ்க்கையை வகுத்த பிரம்மனே பழிக்குரியவர். ஆனால் அவர்கள் புறக்கணிப்புக்குரியவர்கள் அல்ல. தனிக்குரல் என அவர்கள் சிற்றொலியே. ஆனால் திரள் என அவர்கள் பேருருக்கொள்பவர்கள். மலையிறங்கும் பெருநதி என ஆற்றல்கொள்பவர்கள்.

நான் களைத்துப்போய் என் குடில் அறைக்கு மீண்டேன். இளையோன் ஃபானுமான் அங்கு வந்திருந்தான். “மூத்தவரே, நகர் முழுக்க பற்றிக்கொண்டுவிட்டது!” என்றான். “ஆம்”

என்றேன். "அது நன்று என்று மூத்தவர் நினைக்கிறார். நமது குடியினர் அனைவரும் ஒருங்கிணைந்துவிட்டார்கள், இப்போது போரெழுந்தால் ஷத்ரியர்களை நம்மால் வென்றுவிட முடியும்" என்றான். "அவர்கள் எவ்வண்ணம் இருக்கிறார்கள் என்று எனக்கு தெரியவில்லை" என்று நான் சொன்னேன். "அவைச்செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. அங்கு நான் இத்தனை பொழுது இருந்தேன்" என்று அவன் சொன்னான்.

"விதர்ப்பநாட்டு அரசர் ருக்மியின் படைகளையும் அவந்தியின் படைகளையும் இரு பிரிவுகளாகப் பிரித்து பாலைநிலத்தினூடாக துவாரகை நோக்கி வரச்சொல்லியிருக்கிறார்கள். தொலைவில் படைகள் நகர்ந்துவரும் புழுதியை பார்த்ததாக நம் எல்லைக்காவலர்த்தலைவன் மிருண்மயன் செய்தி அனுப்பினான். கூர்ஜரத்திற்கும் சிந்துவுக்கும் ருக்மியின் தூதர்கள் சென்றிருக்கிறார்கள். இத்தருணத்தில் ஷத்ரியர்களுடன் நிற்கவில்லை என்றால் எதிரியுடன் நின்றதாகவே காட்டப்படுவார்கள் என்றும், பிறிதொரு தருணத்தில் அதற்கான விலையை அவர்கள் கொடுக்கவேண்டும் என்றும் எச்சரிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் சிறிதளவேனும் படையை ருக்மிக்காகவும் பிரத்யும்னனுக்காகவும் அளித்தாகவேண்டும். தங்களுடைய எல்லைகளை மூடி நமது படைநகர்வுகளுடன் பொருள் வருகைகளும் அவர்கள் நிலத்தினூடாக நிகழாது தடுத்தாக வேண்டும்."

"சாம்பன் என்ன செய்கிறார்?" என்று கேட்டேன். "அவருடைய தூதர்கள் அத்தனை நிஷாத நாடுகளுக்கும் கிளம்பிச் சென்றிருக்கிறார்கள். அசுர நிலங்களுக்கு பறவைத்தூது

சென்றிருக்கிறது. அசுர நிலத்திலிருந்து பறவைச் செய்திகள் இன்னும் சற்று நேரத்தில் வரத்தொடங்கும். ஓரிரு நாட்களுக்குள் அவர்கள் ஒருங்கிவிடுவார்கள். நாம் அவர்களை படைமுகம் கொள்ள தூண்டிவிட்டோம்" என்றான் ஃபானுமான். "மெய்யாகவே நம்மிடம் படைமுகம் கொள்ளும் ஆற்றல் இருக்கிறதா? கிருதவர்மன் பற்றி ஏதேனும் செய்தி தெரியுமா?" என்றேன்.

"இல்லை, அதுதான் மூத்தவர் சற்று பதற்றத்தில் இருக்கிறார். சிரித்துக்கொண்டிருக்கிறார் என்றாலும் அவருக்குள் அச்சம் இருப்பதை அவர் முகம் காட்டுகிறது. பல முறை கணிகரை அவைக்கு வரவழைத்து அதைத்தான் கேட்டுக்கொண்டிருக்கிறார். ஒருவேளை கிருதவர்மன் எழவில்லை எனில் நம் தரப்பினர் ஊக்கம் எழுந்தவண்ணமே பின்னடைந்து அணைந்துவிடக்கூடும். எதிரி இருமடங்கு வல்லமையுடன் நம்மைத் தாக்கி அழிக்க நாமே வாய்ப்பளித்ததாகக்கூடும். நம்மைத் தாக்குவதற்கு எதிரிக்கு இருந்த தயக்கம் என்பது நாம் பூர்வ குடிகள், இந்நகரை உருவாக்கியவர்கள் என்பது. கிருதவர்மன் இந்நகரின் எதிரி. அவரை இந்நகருக்குள் வரவழைத்து தந்தைக்கு எதிராக நிறுத்துகிறோம் என்பதே பிரத்யும்னனோ சாம்பனோ நம்மை எதிர்ப்பதற்கு போதுமான அடிப்படையை அளிக்கிறது."

"இப்போதே அவையில் பிரத்யும்னன் உரத்த குரலில் கூவியிருக்கிறார். 'இந்நகரிலிருந்து துரத்தப்பட்டவன், இதை அழிப்பேன் என்று வஞ்சினம் உரைத்தவன், கிருதவர்மன். நம் தந்தையால் குருக்ஷேத்ரத்தில் முற்றாக அழிக்கப்பட்ட தரப்பை சார்ந்தவன். அங்கிருந்து மேலும் வஞ்சினம் கொண்டு கிளம்பிச்சென்றவன். அவன் இங்கு வருவது இந்நிலத்தை

வாழவைப்பதற்காக அல்ல, அழிப்பதற்காகத்தான். அதை எவ்வண்ணம் ஒப்பமுடியும்?' என்று கூவியிருக்கிறார். சாம்பனும் அதையே சொல்லியிருக்கிறார்" என்றான் ஃபானுமான்.

நான் படபடப்புடன் அவன் மேலே பேசுவதற்கு காத்திருந்தேன். "என்ன செய்வதென்று தெரியவில்லை. ஏதேனும் ஒன்று நிகழவேண்டும். கிருதவர்மன் எழவேண்டும். அவருடைய செய்தி வரவேண்டும்" என்றான். "வரும் என்று கணிகர் சொல்கிறாரா?" என்றேன். "பொறுத்திருப்போம் பொறுத்திருப்போம் என்கிறார். தீயை மூட்டிவிடுவதே நம் பணி, அதன் பிறகு எங்கு எவ்வண்ணம் எரியவேண்டும் என்பதை அதுவே காற்றுடன் கூடி கலந்து முடிவெடுக்கும் என்றார்" என்றான் ஃபானுமான். "அது நம்மை அழித்தால்?" என்றேன்.

"நம்மை அது தொடாதபடி விலகி நாம் காட்டிற்கு தீ மூட்டியிருக்கிறோம், நாம் நின்றிருக்கும் இப்பாறையில் அனல் எழாது என்று எண்ணுக என்று கணிகர் சொன்னார்" என்றான் ஃபானுமான். "ஆனால் 'இந்த அணிச்சொற்கள் என்னை மேலும் அச்சுறுத்துகின்றன. எனக்குத் தேவை ஒரு உறுதி' என்று மூத்தவர் ஃபானு கூறினார். இன்று காலை அவையில் மிக மகிழ்ச்சியும் சிரிப்புமாக தொடங்கி சலிப்பும் ஒவ்வாமையுமாக முடிந்தது." நான் நீள்மூச்செறிந்தேன். "தன் தனியறைக்குள் மூத்தவர் சினம்கொண்டிருப்பார். எவரென்றில்லாமல் வசைபாடி கொந்தளித்துக் கொண்டிருப்பார்" என்று அவன் சொன்னான்.

என் காவலன் வந்து வணங்கி அரசதூதன் வந்திருப்பதாக கூறினான். வந்தவன் மூத்தவரின் மெய்த்தூதன் சரிதன். தலைவணங்கி "அரசர் தன் தனியறைக்குள் ஒரு சந்திப்பை அமைத்திருக்கிறார். தங்களுக்கு அழைப்பு. வருக!" என்றான்.

நான் ஆடையை எடுத்து அணிந்துகொண்டு ஃபானுமானிடம் "சென்றுவருகிறேன். நான் அங்கு சென்று வந்தபிறகு மறுபடியும் சந்திப்போம்" என்று கூறிவிட்டு அரண்மனைக்கு சென்றேன்.

இடைநாழியினூடாக நடக்கையில் என்ன நடந்துகொண்டிருக்கிறது என்று என்னால் மொத்தமாக தொகுத்துக்கொள்ள முடிகிறதா என்று பார்த்தேன். ஒவ்வொரு பகுதியும் கிழிந்து பறந்துகொண்டிருந்தது. முகிலை வடிவம் கொள்ளச் செய்வதுபோல ஒரு பகுதியை வடிவமாக்கும்போது பிறிதொரு பகுதியை கரைத்துக் கொள்கிறது. துவாரகையின் அரசியலை எவராலும் ஒருநோக்கில் பார்த்துவிடமுடியாது என்று தோன்றியது. அப்படிப் பார்ப்பவர் மிகமிக சிக்கலான ஒரு சித்திரத்தை அடைவார். ஆனால் ஒவ்வொரு பகுதியும் மிக மிக எளிய நெறிகளின்படி இயங்கிக்கொண்டிருந்தது.

நான் சென்றபோது மூத்தவர் ஃபானுவின் அறையில் அவரும் சுஃபானுவும் மட்டுமே இருந்தனர். என்னை அமரச்சொன்னார்கள். நான் அமர்ந்ததும் மூத்தவர் "இளையோனே, நீ சென்று ரிஷபவனத்தின் அரசர் சாத்யகியை சந்திக்கவேண்டும். அவர் உள்ளமென்ன என்று அறியவேண்டும்" என்றார். "நானா?" என்றேன். "உன்னை அனுப்பலாம் என்று கணிகர் சொன்னார்" என்றார் ஃபானு. "மூத்தவரே, அவர் ஏன் என்னை சொல்கிறார் என்று தெரியவில்லை. இத்தனை பெரிய பொறுப்பை நான் நிறைவேற்றியதில்லை" என்றேன்.

“இன்று அத்தனை பேருக்கும் இணையான பொறுப்பு வந்துவிட்டிருக்கிறது. செல்க! இன்று சாத்யகியை சென்று சந்தித்து கிருதவர்மன் வரும்போது அவருடன் இணைந்து அவர் போரிட சித்தமாக இருப்பாரா என்று கேட்டு வருக!” என்றார் மூத்தவர். “இங்கு நிகழவிருப்பது யாதவரின் தொல்குடி உரிமைக்கும் துவாரகைக்குமேல் அவர்களின் முடியுரிமைக்குமான போர். அதில் சாத்யகி நம்முடன் இணைந்தாகவேண்டும். இல்லையெனில் அவரது குடி யாதவர் நடுவே தீராப் பழி கொள்ளும். என்றேனும் அதன் பொருட்டு அவருடைய கொடிவழிகள் நாணுவார்கள். அதை அவரிடம் கூறுக!”

“அவர் நம்முடன் நின்றாகவேண்டும்” என்றார் சுஃபானு. “எவருக்கெதிராக?” என்று நான் கேட்டேன். “நீ என்ன கேட்கிறாய்?” என்று சுஃபானு கேட்டார். “அவர் அவ்வாறு கேட்பார். எவருக்கெதிராக என்றுதான் கேட்பார். யாதவரின் கொடிவழியினராகவே அவர் பிரத்யும்னனையும் சாம்பனையும் பார்க்கிறார். அவர்கள் இருவரையும் எதிர்த்து போர்செய்வதற்கு பெயர் அரசியல் அல்ல என்பார்” என்றேன். “மூத்தவரே, யாதவக் குடிகள் போரிட்டு அழியக்கூடாது என்பதற்காகவே பல முயற்சிகளை எடுத்து அவர் நெடுந்தூரம் பயணம் செய்து தந்தையை பார்த்து வந்தார்.”

“அவர் தந்தையை பார்த்துவரவில்லை, அது பொய்” என்று ஃபானு சொன்னார். “ஒற்றர்கள் வழியாக அதை நன்கு உசாவினேன். அவரால் என் தந்தையை கண்டுபிடிக்க இயலவில்லை. தந்தைக்கு இங்கு நிகழ்வதென்ன என்ற செய்தி சென்று சேரவே இல்லை” என்றார். நான் ஒன்றும் சொல்லவில்லை. “ஆகவே அவர் என்ன சொன்னாலும் அதை

பொருட்படுத்த வேண்டியதில்லை. அவர் இன்று நிகழவிருக்கும் இந்தப் பூசலில் எந்தத் தரப்பென்றுமட்டும் கேட்டு வருக!" என்றார். சுஃபானு "அவர் முற்றாக ஒதுங்கி நின்றிருப்பாரெனில் அதுவும் நன்றே. ஏதேனும் ஒரு தரப்பை அவர் எடுத்துவிடக்கூடாது" என்றார்.

"ஏன்?" என்று நான் கேட்டேன். "அவர் எதிரியாவார் என ஏன் எண்ணுகிறீர்கள்?" ஃபானு "மூடா, அவர்கள் இருவரும் கொண்டிருக்கும் பகைமையை எவர் அறியமாட்டார்? சாத்யகியின் பத்து மைந்தர்களையும் கிருதவர்மனே கொன்றார் என்று சூதர்கள் பாடுகிறார்கள். நம் தரப்பில் கிருதவர்மன் நின்றால் அது நமக்கு பெருவல்லமை. அதற்கெதிராக மறுதரப்பில் அவர் நின்றாரென்றால் இருவருக்குமிடையே நிகரான போரே மீண்டும் நிகழும். அதன் வழியாக இழப்பவர்கள் நாமே. அவர்களிருவரும் நம் தரப்பில் நின்றிருக்கிறார்கள் எனில் அதுவே முழு வெற்றி" என்றார்.

"அவர்கள் இருவரும் ஒரு தரப்பில் நின்றிருக்க வாய்ப்பே இல்லை" என்று நான் சொன்னேன். "வாய்ப்புள்ளது. தயக்கம் இருந்தால் இருவரும் சேர்ந்து ஒரே தரப்பில் நின்றிருக்க வேண்டியதில்லை. கிருதவர்மன் நம் தரப்பை தலைமை தாங்கட்டும். சாத்யகி நடுநிலைமையோ செயலின்மையோ கொள்வதாக அறிவிக்கட்டும்" என்றார் ஃபானு. "ஆனால் பிறருக்கு அவர் எந்நேரமும் நம் தரப்பில் எழக்கூடும் என்ற ஐயம் இருக்கும். அது இன்னும் ஆற்றல் மிக்கது." இளையவர் சுஃபானு "அவர் நம் தரப்பில் நின்றிருப்பார், ஐயம் வேண்டாம்" என்றார். நான் "தங்கள் ஆணை என்றால் நான் அவரிடம் பேசுகிறேன்" என்று எழுந்துகொண்டேன்.

அன்று மாலையே நான் சாத்யகியை சென்று சந்தித்தேன். துவாரகையிலிருந்து அப்பால் ரிஷபவனத்திலிருந்து வந்த சிறு படை ஒன்று பாலைவனத்திற்குள் தங்கியிருந்தது. அங்கே வழிவணிகர்களுக்காக அமைக்கப்பட்ட சிறு ஊற்றும், அதைச் சுற்றி முள்மரங்களாலான சோலையும் இருந்தன. அச்சோலைக்குள் சாத்யகியின் தாழ்வான பாடிவீடு இருந்தது. அதைச் சூழ்ந்து அவருடைய படைகள் உயரமற்ற கூடாரங்களைக் கட்டி குடியிருந்தார்கள். அங்கு புழுதிக்காற்று அலையலையென அடித்துக்கொண்டிருந்தது. பாலைவனம் நாவென எழுந்து அப்பாடிவீடுகளை உண்ணுவதுபோல என்று தொலைவில் எண்ணிக்கொண்டேன்.

அருகே சென்றபோது அனைத்து குடில்களும் ஒருபக்கம் சாய்வான கூரையைக் கொண்டிருந்ததை கண்டேன். அக்கூரையிலிருந்து மழைநீரென புழுதி வழிந்துகொண்டிருந்தது. என்னை எதிர்கொண்ட காவலனிடம் அறிமுகம் செய்துகொண்டேன். சாத்யகியை சந்திக்க என்னை அழைத்துச் சென்றார்கள். தன் குடில் வாசலில் படர்ந்து பச்சைக் குவை என நின்ற ஸாமி மரத்தடியில் அவர் அமர்ந்திருந்தார். என்னைப் பார்த்ததும் எழுந்து கைவிரித்து வரவேற்றார். நான் முகமனுரைத்து அருகே சென்று அமர்ந்தேன்.

அவர் "மூத்தவர் ஃபானுவால் அனுப்பப்பட்டுள்ளீர் அல்லவா?" என்றார். "ஆம், நான் வந்தது தங்களிடம்..." என நான் தொடங்க

“எதற்கென்று தெரியும். கிருதவர்மன் கிளம்பிவிட்டிருக்கிறார் அல்லவா?” என்றார். நான் அதற்கு என்ன மறுமொழி சொல்வதென்று தெரியாமல் ஒருகணம் தத்தளித்து “உண்மையை சொல்வதென்றால் அவர் எங்கோ இருக்கிறார் என்று எண்ணி அதை சொன்னோம். அவர் வந்தால் என்ன செய்வதென்று எண்ணி அதற்கான ஒருக்கங்களை தொடங்கினோம். அவர் வந்துவிட்டார் என்ற எண்ணம் பரவிவிட்டது. அதிலிருந்து எங்களால் வெளியே செல்ல இயலவில்லை” என்றேன்.

அவர் வாய்விட்டு நகைத்து “நன்று, அதை நான் எதிர்பார்த்திருந்தேன்” என்றார். “அவர் இங்கு வருகிறார் என்றால் துவாரகை ஆற்றல் மிக்கதாகிறது” என்று நான் சொன்னேன். “துவாரகை அல்ல, யாதவர்கள்” என்று அவர் சொன்னார். “ஆம்” என்று நான் சொன்னேன். “ஆனால் நாம் எதிர்பார்த்திருப்பது அதுதானே? இந்நகரம் யாதவர்களால் ஆளப்படவேண்டும் என்று அல்லவா எவரும் விழைவர்? யாதவராகிய தாங்களும் மற்றொன்றை விரும்பமாட்டீர்கள்” என்றேன். “நான் விரும்புவது இந்நகரம் ஒருங்கிணைந்த வல்லமையுடன் முன்புபோல் திகழவேண்டும் என்பதை மட்டுமே” என்றார்.

“அதையே நான் சொல்ல வந்தேன். ஒரு வலுவான தலைமையின் கீழேதான் ஒரு ஒற்றுமை திகழமுடியும் என்பதை தாங்கள் அறிந்திருப்பீர்கள்” என்றேன். “வலுவான தலைமை என்பது குடிவழி வந்த தொல்நெறிகளாலேயே அமையமுடியும். மக்களாலோ அரசாலோ அந்த நெறிகள் மாற்றமுடிவன அல்ல. தெய்வங்களால் ஆணையிடப்பட்டதே நிலையான அரசென்று அமையக்கூடும்” என்றேன். அவர்

புன்னகையில் இதழ்கள் கோண "அந்நெறியை அழிக்கவே உங்கள் தந்தை போரிட்டார். புதிய வேதம் யாத்தார்" என்று சொன்னார்.

"ஆம், நான் அதை அறிவேன். தொல்நெறிகள் விலங்கென மாறி இந்நிலத்தை கட்டியிருக்கையில் அதை மீறி எழும் விசைகளை அவர் சுட்டிக்காட்டினார். ஆனால் குலங்கள் கட்டவிழவேண்டும் என அவர் சொல்லவில்லை. தன் தொல்குலம் முற்றழியவேண்டும் என்று அவர் எண்ணியிருக்க வாய்ப்பே இல்லை" என்றேன். "அரசே, இந்நகரில் இப்போது யாதவக் கொடிவழியினர் தங்கள் இயல்பான முடியுரிமையை கொள்ளவேண்டும் என்பதே எவரும் உகக்கும் ஒன்றாக இருக்கிறது. அதுவே இயல்பான நெறி" என்றேன்.

"இதில் என் தரப்பென்ன என்று அறிந்துபோக வந்தீர் அல்லவா?" என்றார். "மெய்யாகவே அதற்குத்தான் வந்தேன். உங்கள் தரப்பென்ன?" என்றேன். "என் தரப்பு இங்கு இளைய யாதவரின் கொடிவழியினர் ஆளவேண்டும், அவர்களுக்குள் பூசல் நிகழக்கூடாது என்பதுதான்" என்றார் சாத்யகி. "பூசல் நிகழும். பூசல் நிகழாதிருக்க வாய்ப்பே இல்லை. பூசல் நிகழ்ந்தால் தாங்கள் எங்கு நின்றிருப்பீர்கள் என்று அறிய மூத்தவர் விழைகிறார்" என்றேன்.

"பூசல் நிகழ்ந்தால் என் தரப்பு இங்கிருந்து கிளம்பிச்சென்றுவிடுவதுதான். நீங்கள் உங்களுக்குள் போரிட்டால் எவரும் வெல்லப்போவதில்லை. எண்பதின்மரும் அழிவீர்கள். ஒருவர்கூட எஞ்சமாட்டீர்கள்" என்றார் சாத்யகி. "நீங்கள் எண்பதின்மரும் இளைய யாதவரின் வடிவங்கள். அவர் தன்னைத்தானே அழித்துக்கொள்கிறார். காற்றில் பறந்து விரிந்த ஆடைகளை தன்னை நோக்கி இழுத்துக்கொள்வதுபோல

எண்திசையிலும் இருந்து ஒவ்வொன்றையும் தன்னை நோக்கி மீண்டும் இழுத்து மையத்தை நோக்கி கொண்டுசெல்கிறார். நீங்கள் ஒவ்வொருவரும் சுழி நோக்கி செல்லும் நீரலைகள்போல அவரை நோக்கி சென்று மறைவதை பார்க்கிறேன். அவர் தன்னைத் தானே சுழித்து சுழியம் நோக்கி சென்று கொண்டிருக்கிறார்" என்றார்.

எனக்கு ஒருகணம் உளம் நடுங்கியது. பின்னர் "நான் கேட்க வந்தது ஒன்றே" என்றேன். "கூறுக!" என்றார். "அவ்வண்ணம் இணையான ஆற்றல்களால் இங்கு அழிவு ஏற்படுமெனில், பூசல்முற்றி ஒரு நிகர்நிலையால் அசைவின்மை உருவாகுமென்றால் பொது ஏற்புக்குரிய ஓர் அரசரை தேர்ந்தெடுக்க வாய்ப்புண்டா?" என்றேன். "சொல்க!" என்றார். "அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படும் ஒருவர்? ஒவ்வொருவரும் தங்கள் எதிரி அல்ல என்று எண்ணும் அளவுக்கு அவர் சிறியவராக இருப்பார். ஆனால் ஒவ்வொருவரையும் கையாளும் அறிவுக்கூர்மை கொண்டவராக இருப்பார்" என்றேன்.

சாத்யகியின் விழிகளில் சிறு புன்னகை விரிந்தது. "அதாவது நீர்?" என்றார். "இல்லை, நான் என்னை சொல்லவில்லை. நாங்கள் எண்பது பேரில் எவராக வேண்டுமானாலும் இருக்கலாம்" என்றேன். "இன்னொருவருக்காக எவரும் அரசு பேசமாட்டார்கள்" என்றார். நான் சீற்றத்துடன் "அவ்வாறே எடுத்துக்கொள்ளுங்கள். நான் அவர்கள் அனைவரையும் ஒருங்கிணைக்க முடிந்தால், அவர்கள் அனைவருக்குமிடையே ஒரு நிகர்நிலையை உருவாக்கி எவருமே முன்னகர முடியாத நிலையை ஏற்படுத்தினால், என்னை நீங்கள் ஆதரிப்பீர்களா?" என்றேன்.

“அவ்வாறு ஒரு நிலையை நீர் ஏற்படுத்தினால் நான் உம்மை ஆதரித்தாகவேண்டும் அல்லவா?” என்றார். “ஆம், அதைத்தான் நான் கேட்கவந்தேன். நீங்கள் ஆதரிப்பீர்களா?” என்றேன். “நீர் எதிர்பார்ப்பதென்ன?” என்றார். “அவ்வண்ணம் ஒரு நிகர்நிலை அரசு அமைவதற்கு முதற்தடையாக அமையக்கூடியவர் கிருதவர்மன். ஏனென்றால் அவர் விருஷ்ணிகளின் வெற்றிக்காக மட்டுமே நிலைகொள்பவர். கிருதவர்மன் அவ்வாறு எதிர்ப்பார் என்றால் அதற்கிணையான எதிர்வல்லமையாக நீங்கள் நிலைகொள்ள வேண்டும். அது உடன்பிறந்தாரிடையே பூசல் நிகழாமல் தடுக்கும்” என்றேன்.

சாத்யகி எண்ணம் சூழ்ந்து தாடியை அளைந்துகொண்டிருந்தார். “மூன்று தரப்பினரும் நிகர் வல்லமையுடன் நின்றிருக்கையில் நான்காவது தரப்பாக மூவரையும் நிலை நிறுத்தும் துலாவின் முள்ளாக நான் நிலைகொள்ள முடியும்” என்றேன். “எத்தனை காலம்?” என்று கேட்டார். “அவ்வண்ணம் ஒரு நிகர்நிலை அரசை தற்காலிகமாக ஏற்கலாம். ஆனால் எவ்வகையிலேனும் உருவாக்கப்பட்ட ஓர் அரசு அந்நிலையிலேயே அரசெனும் ஆற்றலை அடைந்துவிடுகிறது. அதன்பிறகு பிற அனைத்து முடிநாடும் தரப்புகளை விடவும் அதுவே ஆற்றல் மிக்கது. ஒருமுறை ஒருநாள் துவாரகையின் அரசனென நான் அமர்ந்துவிட்டேன் எனில் பிறகு எவரும் என்னை என் அரியணையிலிருந்து எழுப்ப இயலாது” என்றேன்.

“ஒருவரை எங்கு வைக்கவேண்டும் என்று எனக்கு தெரியும். அளிப்பதை அளித்தோ எடுப்பதை எடுத்தோ அவர்களை ஆங்காங்கே நிலைகொள்ளச் செய்வேன். துவாரகை ஒருபோதும் உடையாது. என்னால் துவாரகை பெருமையுறும், ஐயம் வேண்டாம்” என்றேன். நான் கூறி முடிக்கும்வரை அவர்

என்னை கூர்ந்து நோக்கிக்கொண்டிருந்தார். பின்னர் "இவ்வெண்ணம் உமக்கு முன்னரே இருந்ததா?" என்றார். நான் "அவ்வண்ணம் அல்ல. இச்சூழ்நிலையை நான் பார்க்கிறேன். எந்தையின் பெருமைமிகுந்த அரசு இல்லாமல் ஆகக்கூடாது என்பதனாலேயே இந்நிலைபாட்டை எடுத்து தங்களிடம் அதை கூறுகிறேன்" என்றேன்.

"அல்ல, இது மிக அண்மையில் உம் உள்ளத்தில் நுழைந்த எண்ணம்" என்றார். தழைந்த குரலில் "அவ்வண்ணம் அல்ல" என்று நான் சொன்னேன். "அல்ல" என்று சாத்யகி சொன்னார். நான் சீற்றத்துடன் "சரி, அரசுசூழவேண்டும் என்று விழைவில்லாத, முடிசூடவேண்டும் என்று கனவில்லாத ஒருவரேனும் எண்பது மைந்தர்களில் இருக்கக்கூடுமா?" என்றேன். "ஆம், அதுதான் இடர்" என்றார். "நானோ எல்லா அவைகளிலும் அமைதியானவனாக இருந்திருக்கிறேன். என்னால் ஒவ்வொருவரையும் கணிக்க முடிகிறது. ஒவ்வொருவரையும் எங்கு நிறுத்தவேண்டும் என்று புரிந்துகொள்ளும் ஆற்றல் எனக்கிருக்கிறது. ஆகவே நான் இந்நகரை ஆளமுடியும். நீங்கள் என்பொருட்டு நிலைகொள்வீர்கள் என ஒரு சொல் எனக்கு கிடைத்தால் போதும்" என்றேன்.

"நான் இதை உம் மூத்தவரிடம் கூறலாமா?" என்று அவர் கேட்டார். அப்போது கண்களில் ஒரு குறுஞ்சிரிப்பு இருந்தது. "நீங்கள் கூறமாட்டீர்கள். கூறினீர்கள் என்றால் யாதவக் குடிகளுக்குள்ளேயே பூசலை உருவாக்கிய பழியை சூடுவீர்கள்" என்றேன். "யாதவக் குடிகளுக்குள் இனி என்ன பூசல் எஞ்சியுள்ளது?" என்று அவர் கேட்டார். "பிறிதொரு பூசல் எழலாம். இவ்வண்ணம் ஒரு செய்தியை மூத்தவரிடம்

தெரிவித்தால் அக்கணமே அவர் என்னை கொல்ல ஆணையிடுவார். இளைய யாதவரின் மைந்தரில் ஒருவர் ஒருவரைக் கொல்வது அங்கு தொடங்கும், அது இதுவரை நிகழவில்லை" என்றேன்.

சாத்யகி சலித்து சாய்ந்துகொண்டு "நான் என்ன செய்யவேண்டும் என்று மட்டும் சொல்க!" என்றார். "நீங்கள் விலகி இருங்கள். உங்கள் பெயரை கிருதவர்மனுக்கு எதிராக நான் பயன்படுத்திக்கொள்ள ஒப்புங்கள். அவ்வளவுதான்" என்றேன். "நன்று, அவ்வண்ணமே" என்றார். நான் எழுந்துகொண்டு தலைவணங்கி "தங்களை நான் நினைவுகூர்வேன். ஐயம் வேண்டாம். எந்தப் படைக்கலமும் எழாமல் துவாரகையின் அரியணையில் நான் அமரக்கூடும். எந்தை சூடிய மணிமுடியையும் கோலையும் நானும் பெற்றுக்கொண்டு அரியணையில் அமரக்கூடும். என்னால் துவாரகை தன் பழம்பெருமையை மீட்டுக்கொள்ளும். உறுதி" என்றேன்.

சாத்யகி புன்னகைத்தார். "அரசே, ஒவ்வொருவரும் தங்கள் மணிமுடியை வெல்வதைப்பற்றி மட்டுமே எண்ணியிருக்கிறார்கள். வென்றபின் ஆற்றுவதைப் பற்றிய கனவு எவருக்குமில்லை. எனக்கு இருக்கிறது. இங்கு வணிகம் பெருகவேண்டும், குடி செழிக்கவேண்டும். அதற்கான எல்லா திட்டங்களும் என்னிடம் உள்ளன" என்றேன். "இந்த நகரத்தை புதிய வேதம் திகழ்வது என்று அறிவிக்க வேண்டும். புதிய வேதம் திகழும் நிலத்திற்கு புது மக்கள் வந்து குழுமுகிறார்கள். பாரதவர்ஷம் முழுக்க நிலவிக்கொண்டிருக்கும் சூழல் இது" என்றேன்.

அவர் விழிகளில் ஆர்வம் தெரிந்தது. "அரசே, நான் யாதவக் குடிகளுக்கு தலைமை தாங்கினேன் என்றால் ஒரு தலைமுறைக்குள் இங்கு யாதவக் குடியினர் மிகச் சிறுபான்மையினராக ஆகும்படி செய்வேன். நாநிலத்திலிருந்தும் குடிகள் இங்கு வந்து கூடி அஸ்தினபுரிபோல் பொலியும்படி செய்வேன்" என்றேன். அவர் "ஏன் யாதவர்கள்தானே உம் அடித்தளம்?" என்றார். "இல்லை, யாதவர்கள் என்னை முழுமையாக ஏற்கமாட்டார்கள். யாதவர்கள் ஒருவரை ஏற்றதுமே அவர்மேல் ஐயம் கொள்வார்கள். அவர்கள் என் தந்தையையே முழுமையாக ஏற்றவர்கள் அல்ல. ஒருவரோடு ஒருவர் பூசலிடுவதிலிருந்து யாதவர்களால் விலக முடியாது. அவர்களை நான் நம்பியிருக்க முடியாது. அது உளைநிலத்தின்மேல் கோட்டை கட்டுவதுபோல."

"ஆம், இங்கு யாதவர்களின் ஆற்றல் இருப்பதனால்தான் நான் ஆட்சிக்கு வரமுடிகிறது. ஆனால் ஆட்சிக்கு வந்தபிறகு யாதவர்களின் ஆற்றலை குறைத்தால்தான் அங்கு நீடிக்க முடியும். எனக்கு மட்டுமே கட்டுப்பட்ட பெருந்திரள் ஒன்றை சில ஆண்டுகளுக்குள் இங்கு உருவாக்குவேன். எனக்கு மட்டுமே கட்டுப்பட்ட வணிகத்தை உருவாக்குவேன். என் கருவூலம் நிறையும். அது என் கட்டுப்பாட்டில் இருக்கும். என்னால் துவாரகையை பெருவணிக நகராக மறுபடியும் உருவாக்கி அளிக்க முடியும்" என்றேன். சாத்யகி "கனவுகள் கொண்டிருக்கிறீர்" என்றார். "இருபதாண்டுகளுக்கும் மேலாக இக்கனவுகளில்தான் வாழ்ந்துகொண்டிருக்கிறேன்" என்றேன். "நன்று, அவ்வண்ணமே ஆகுக!" என்று அவர் சொன்னார்.

எவ்வுணர்வும் இல்லாமல் சொன்னபோதும்கூட அதில் சற்று இளிவரல் இருப்பதாக எனக்கு தோன்றியது. அது என்னை

எரிச்சலடையச் செய்தது. ஆனால் அத்தகைய இளிவரலை நான் சந்திப்பது முதன்முறையல்ல. இவ்வெண்ணங்கள் முதலில் என்னில் தோன்றியபோதே அவ்விளிவரலை நானே அடைந்தேன். அதைக் கடந்துதான் அந்த உறுதியை பெற்றிருக்கிறேன். முதல் முறையாக என் விழிகளை நோக்கி என் கனவுகளை மதித்து பேசியவர் கணிகர். அதிலிருந்தே நான் இந்த ஆற்றலை பெற்றேன். இனி என் ஆழத்துப் படைக்கலங்களை வெளியே எடுக்க முடியும். அவை புகையாக, நீராக மாறிவிடாதென்று உறுதிகொண்டேன். இனி ஒவ்வொரு கணமும் எனக்கு வெற்றிதான் என எண்ணிக்கொண்டு நான் தலைவணங்கினேன்.

# ல்பொருசிறுநுரை - 30

**பகுதி நான்கு : அலைமீள்கை – 13**

நான் சாத்யகியை சந்தித்துவிட்டு துவாரகையின் கோட்டைமுகப்பிற்கு திரும்பி வருவதற்குள்ளாகவே எனக்கு செய்தி வந்துவிட்டிருந்தது, கிருதவர்மன் இருக்குமிடம் தெரிந்துவிட்டது. என்னை கோட்டைவாயிலில் எதிர்கொண்ட ஃபானுமான் புரவியில் விரைந்து என் தேரை நோக்கி வந்தான். அவன் அத்தனை வெறிகொண்டு புரவிக்கால்களில் செம்முகில் எழ வந்தது என்னை திகைப்படையச் செய்தது. "தேரை நிறுத்து!" என்று நான் ஆணையிட்டேன். அவன் வந்து என்னருகே புரவியை இழுத்து மூச்சிரைத்து "தெரிந்துவிட்டது! கிருதவர்மன் இருக்குமிடம் தெரிந்துவிட்டது!" என்றான்.

நான் சரியாகக் கேட்காமல் "இங்கு வந்திருக்கிறாரா?" என்றேன். "இல்லை, இங்கில்லை. அவர் இருக்குமிடத்தை நமது ஒற்றர்கள் தெரிந்துகொண்டுவிட்டார்கள்" என்றான். "நமது ஒற்றர்களா?" என்றேன். அவன் என் குரலில் ஒலித்த நம்பிக்கையின்மையை புரிந்துகொள்ளவில்லை. "நமது ஒற்றர்கள் அல்ல, அவர்களுடைய ஒற்றர்கள். பிரத்யும்னனின் ஒற்றர்கள் நாடெங்கும் அவரைத் தேடி அலைந்துகொண்டிருந்திருக்கிறார்கள். அவர்களில் ஒருவர் வடக்கே குருநிலையில் அவர் இருப்பதை கண்டறிந்தார். அவர் உடலெங்கும் அனல் பட்டு வெந்திருப்பதால் அங்கு காட்டுக்குள் அமைக்கப்பட்ட தனிமைக்குடிலொன்றில் பிற எவரும் அறியாது தங்கியிருந்திருக்கிறார்" என்றான்.

அவனுக்கு மூச்சிரைத்தது. "நாம் அவர் எங்கோ படைக்களத்திலோ, பாடிவீடுகளிலோ இருப்பார் என்று எண்ணி தேடிக்கொண்டிருந்தோம், பிரத்யும்னனின் ஒற்றர்கள் அவரைப் பற்றிய செய்திகள் அனைத்தையும் தொகுத்து அவர் தன்னந்தனிமையில்தான் இருப்பார் என்பதை உய்த்துணர்ந்தனர், தன்னந்தனிமையில் தங்கியிருப்பதற்கான இடங்கள் ஒவ்வொன்றையாக அவர்கள் தேடிக்கொண்டிருந்தனர். சென்ற சில நாட்களாக அவர்கள் நூறு மடங்கு ஒற்றர்களை இதன்பொருட்டு அனுப்பியிருக்கிறார்கள். சாம்பனும் அதே அளவு ஒற்றர்களை அனுப்பியிருக்கிறார். இரு தரப்பினரின் ஒற்றர்களும் ஒருவருக்கொருவர் செய்திகளையும் பகிர்ந்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே இதுவரை விரிக்கப்படாத மிகப் பெரிய வலை விரிக்கப்பட்டது."

"இறுதியாக கிருதவர்மனை அடையாளம் கண்டுகொண்டார்கள். அங்கு அவரிடம் பேசும்பொருட்டு எவரையேனும்

அனுப்பவேண்டுமென்று நேற்று பிரத்யும்னன் அவையில் பேசப்பட்டிருக்கிறது. பிரத்யும்னன் கவலையுடன் இருக்கிறார். கிருதவர்மன் இங்கு வரும் உளநிலையில் இல்லை என்று அவர் ஒற்றர்கள் அவரிடம் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அவர் அதை நம்பவில்லை. அவர் இங்கு வருவார் என்று எண்ணிக்கொண்டிருக்கிறார். அதைப் பற்றிய பேச்சு அங்கு நிகழ்ந்திருக்கிறது. அதை உடனடியாக அங்குள்ள ஒருவர் நமக்கு தெரிவித்திருக்கிறார். அவர் நமக்கு நெருக்கமானவர்" என்றான்.

"அங்கு அத்தகைய பேச்சு எழுந்தால் மிக அணுக்கமான உடன்பிறந்தார் நடுவேதான் நடந்திருக்கும்" என்றேன். "ஆம், அதில் ஒருவர் நம்மவர் என்றார்கள். ஆனால் அவர் யாரென்று எனக்குத் தெரியவில்லை" என்றான். "எனக்குத் தெரியும்" என்று நான் சொன்னேன். "எவ்வண்ணமாயினும் அது நன்று. நமக்குத் தெரிந்துவிட்டது. மூத்தவர் உங்களை சந்திக்க விரும்புகிறார்" என்றான் ஃபானுமான். "என்னையா?" என்றேன். "ஆம், சாத்யகியை நீங்கள் சந்தித்துவிட்டீர்களா என்று பார்க்கும்படி மூத்தவர் சொன்னார். நீங்கள் வந்தவுடனே அழைத்துவரும்படி ஆணை" என்றான்.

அவனை தேரிலேற்றிக்கொண்டு நான் துவாரகையின் அரண்மனைக்கு சென்றேன். துவாரகையின் நகர் முற்றாக மாறிவிட்டிருப்பதை கண்டேன். ஒவ்வொருவரும் ஊக்கம் கொண்டிருந்தனர். அனைவரும் மகிழ்ச்சியாக இருப்பதுபோல தோன்றியது. ஏதேனும் நிகழும்போது மக்கள் மகிழ்வு கொள்கிறார்கள். திரள் என்ற வகையில் மக்களின் அன்றாடம் என்பது சலிப்பில் ஊறியது. விழவுகள் அவர்களை ஊக்கப்படுத்துவது போலவே போர்களும் பிற அழிவுகளும்

கொடுநோய்களும்கூட பரபரப்படையச் செய்கின்றன. எந்தப் பரபரப்பையும் அவர்கள் ஒருவகை மகிழ்ச்சியாக எடுத்துக்கொள்கிறார்கள். எல்லாவற்றையுமே கொண்டாடுகிறார்கள்.

எதுவோ ஒன்று அணுகப்போகிறது என்று அனைவரும் அறிந்திருக்கிறார்கள் என அனைவர் முகங்களும் காட்டின. சாலையில் செல்லும் வண்டியை பேச்சை நிறுத்திவிட்டு பலநூறு பேர் நின்று கூர்ந்து பார்த்தார்கள். ஒவ்வொருவரும் அதை எப்படி ஏற்கெனவே சொல்லிக்கொண்டிருந்த ஒரு செய்திக் கதையின் ஒட்டுமொத்த விரிவில் கொண்டுசென்று பொருத்தலாம் என்று எண்ணுவதாக எனக்குத் தோன்றியது. துவாரகையின் அரண்மனை முன் தேரிலிருந்து இறங்கினேன். அங்கு மேலும் இரு உடன்பிறந்தார் எனக்காக காத்து நின்றிருந்தனர். அவர்களும் பரபரப்படைந்திருந்தனர்.

“மூத்தவர் உன்னை அழைக்கிறார்” என்றார் சந்திரஃபானு. நான் “என் அறைக்குச் சென்று ஓய்வெடுத்து உடைமாற்றி மூத்தவரை சந்திக்கச் செல்லலாமே” என்றேன். “இல்லை, உன்னை உடனடியாக சந்திக்கவேண்டுமென்று விரும்புகிறார்” என்றார் சந்திரஃபானு. நான் சலிப்புடன் “நான் நீண்ட பயணம் முடித்து வந்திருக்கிறேன். பொறுத்திருக்கச் சொல்க! அரைநாழிகைக்குள் அரண்மனை அறைக்கு சென்றுவிடுகிறேன்” என்றேன். எப்படியாயினும் நான் பொழுது எடுத்துக்கொண்டுதான் எதையும் செய்ய இயலும். ஆனால் மூத்தவர் உளம் பொறுக்காமல் என்னை பல முறை தேடிக்கொண்டிருக்கிறார் என்பதை உணர்ந்தேன்.

அதுவே அவருடைய தகுதிக்குறைவு. ஓர் அரசன் தனக்கு எத்தனை பதற்றம் இருந்தாலும், எத்தனை உளஎழுச்சி

இருந்தாலும் எதையும் பொருட்படுத்தாதவனாகவே காட்டிக்கொள்ளவேண்டும். அது அளிக்கும் ஆற்றல் அளப்பரியது. தன்னியல்பிலேயே தொய்ந்த உளநிலை கொண்டவர்கள், எந்தப் பேச்சையும் மெதுவாகவே பேசுபவர்கள், உயர்குடியில் பிறந்த பழக்கத்தினாலேயே எந்த அவையிலும் பொருட்படுத்தாமல் இயல்பாக இருப்பவர்கள் அவ்வியல்பினாலேயே பேரரசர்களாக தோற்றமளிப்பதும் பேரரசர்களாகவே வாழ்ந்து மறைவதும் இயல்வதே. ஆனால் பரபரப்பு கொள்பவனும், கிளர்பவனும், குரல் எழுப்புபவனும், நிலைகொள்ளாதவனும் எத்துணை வீரர்கள் ஆயினும் மதியூகிகளே ஆயினும் அவையில் ஒருகணத்தில் தங்கள் மீதான நம்பிக்கையை இழந்துவிடுகிறார்கள்.

நான் துவாரகையின் அரண்மனையின் படிகளில் ஏறி இடைநாழிகளினூடாக நடக்கையிலேயே மேலும் இரு உடன்பிறந்தார் என்னை நோக்கி வந்தனர். "மூத்தவர் உங்களை தேடிக்கொண்டிருக்கிறார். மிக முதன்மையான செய்தி. உடனடியாக தங்களை பார்க்கவேண்டுமென்றார்" என்று ஸ்ரீஃபானு கூவினான். "அதற்குத்தான் சென்றுகொண்டிருக்கிறேன். அரைநாழிகையில் செல்வேன்" என்றேன். மூத்தவரான பிரஃபானு என்னிடம் "என்ன, உனக்கு அவையில் முதன்மை இடம் அமைகிறதுபோல தோன்றுகிறதே?" என்றார். அவர் கண்களில் இருந்த பொறாமையை கண்டேன். அதற்கு என்ன மறுமொழி சொல்லவேண்டும் என்று அறிந்திருந்தேன். "நான் முதன்மை பெறுவதென்றால் அது தாங்கள் வெற்றி பெறுவதுபோல அல்லவா?" என்றேன்.

அது மிக நேரடியான ஒன்றுதான், அத்தகைய நேரடிக் கூற்றுகளை நோக்கி நம்பிக்கைக் குறைவை வெளிப்படுத்துவது மானுட இயல்பு. ஆனால் அது நான் அறிந்தவரை காதலிலும் அரசுப்போட்டியிலும் மட்டும் அவ்வாறல்ல. நேரடியான பற்றை வெளிப்படுத்துவதும், வஞ்சினத்தை உரைப்பதும், வெற்று முகமன்களும்கூட இங்கு முகம்மலரச் செய்கின்றன. பொருளாழம் கொண்டவைபோல் தோன்றுகின்றன. பெரும்பாலான தருணங்களில் அனைத்து வழமைச்சொற்களுக்கும் நேரடிப்பொருளே கொள்ளப்படுகிறது. பிரஃபானு மலர்ந்து "பேச்சு மட்டும் குறைவில்லை. நன்று, உடனே ஒருங்கி வா. உனக்காக அவை காத்திருக்கிறது" என்றார்.

நான் மூத்தவர் அறைக்குள் நுழைந்தபோது அங்கே கணிகர் இருந்தார். பிற உடன்பிறந்தவர்களும் கொந்தளிப்புடன் பேசிக்கொண்டிருந்தனர். நான் உள்ளே நுழைந்து தலைவணங்கி முகமன் உரைத்ததும் மூத்தவர் எழுந்து என்னை நோக்கி வந்து "என்ன நிகழ்ந்ததென்று சொல்... அவைக்கு சொல்" என்றார். "நான் ரிஷபவனத்தின் அரசர் சாத்யகியை பார்த்தேன். அவரிடம் தங்கள் ஆணையை உரைத்தேன். அவர் இங்கு நம் குடித்தலைவர்களிடையே நிகழும் பூசலைக் கண்டு கவலை கொண்டிருக்கிறார். இளைய யாதவரின் குடிகளிடையே பூசல் நிகழ்வதை எவ்வகையிலும் தான் ஏற்க இயலாது என்றும் அதில் எந்த ஒரு தரப்பையும் தான் எடுக்க இயலாது என்றும் சொன்னார்" என்றேன்.

“கிருதவர்மனைப் பற்றி சொன்னாயா?” என்றார் ஃபானு. “ஆம், கிருதவர்மன் படைமுகம் நிற்பாரெனில் உடன் நிற்பதற்கு அவருக்கு தயக்கமுண்டா என்று கேட்டேன். இல்லை, எவராயினும் தான் படைமுகம் வரப்போவதில்லை என்று அவர் சொன்னார்” என்றேன். சுஃபானு “நீ என்ன சொன்னாய்?” என்றார். “படைமுகம் வரப்போவதில்லை என்ற நிலைபாட்டையாவது அவர் உறுதியாக எடுக்கவேண்டுமென்று விரும்பினேன். அதை ஓரிருமுறை வலியுறுத்தினேன். அவர் அதையும் அறுதியாகச் சொல்லவில்லை” என்றேன். சுஃபானுவும் மதிசூழ்திறன் கொண்டிருந்தாலும் அரசருக்குரிய உணர்வடக்கம் அற்றவர் என்று எண்ணிக்கொண்டேன்.

“அவர் படைமுகம் வராமலிருக்க இயலாது. வந்தே தீரவேண்டும்” என்று ஃபானு சொன்னார். “ஏனென்றால் கிருதவர்மன் அந்தகக் குடியைச் சேர்ந்தவர். அவர் வந்து நம் படைத்தலைமையை அடைவாரென்றால் விருஷ்ணிகளின் இடம் இல்லாமலாகும். ஏற்கெனவே நம் அன்னை அந்தகர் என்பதனால் அந்தகர்களின் கை ஓங்கியிருக்கிறது என்னும் பேச்சு உள்ளது. அவர் வந்தாலொழிய விருஷ்ணிகளின் இடம் இணைநிலை பெறாது.” ஃபானுமான் “அவர் வருவது நமக்கும் நல்லது. விருஷ்ணிகள் அவர் வந்தால் தங்கள் இடம் ஒன்றும் குறைந்துவிடவில்லை என்ற நம்பிக்கையை அடைவார்கள்” என்றான்.

“ஆம்” என்று நான் சொன்னேன். “நாம் முதலில் சாத்யகியைத்தான் அழைக்கச் சென்றோம் என்பது இப்போது துவாரகையில் அனைவருக்கும் தெரிந்துவிட்டது. விருஷ்ணிகள் இனி குறை சொல்லமுடியாது.” சுஃபானு “என்ன சிக்கல் என்றால் அந்தகரோ விருஷ்ணிகளோ எவர்

உளக்குறையுடன் விலகி நிற்கிறாரோ அவர் தரப்புக்கு போஜர்களும் குக்குரர்களும் சென்று சேர்ந்துகொள்கிறார்கள். உடனே அத்தரப்பு பெரிதாகிவிடுகிறது. அக்கணமே எதிர்த்தரப்புக்கு உளக்குறை எழுகிறது. அந்தகர்களும் குக்குரர்களும் இப்பக்கம் வந்துவிடுகின்றனர். சென்ற சில மாதங்களுக்கு முன்புவரை உளக்குறைகொண்டவர்களாக இங்கிருந்தவர்கள் அந்தகர்கள். இன்று விருஷ்ணிகள். இந்த ஊசல் நிலைகொள்ளவே இல்லை" என்றார்.

"அவர் வந்தாகவேண்டும்" என்று ஃபானு மீண்டும் சொன்னார். "வருவார் என்றுதான் எனக்கும் தோன்றியது. ஆனால் மிகவும் தயங்கிக்கொண்டிருக்கிறார்" என்றேன். "அவரை தயக்கம் அழித்து படைமுகம் வரச்செய்யும் செய்தியைத்தான் நாம் இப்போது பெற்றிருக்கிறோம். கிருதவர்மன் இருக்குமிடம் தெரிந்துவிட்டது" என்றார் ஃபானு. "ஆம், சற்றுமுன் சொன்னார்கள்" என்றேன். ஃபானு சலிப்புடன் "எவரிடமும் சொல்லலாகாது என்று சொல்லிக்கொண்டிருக்கும்போதே இவர்கள் ஊரெல்லாம் பரப்பிக்கொண்டிருக்கிறார்கள், வீணர்கள்" என்றார். "என்னிடம் மட்டும்தான் சொன்னார்கள்" என்றேன்.

"உன்னிடம் மட்டும் சொல்லியிருக்க மாட்டார்கள், செல்லும் வழியெங்கும் அனைவரிடமும் சொல்லியிருப்பார்கள், தங்களுக்குள்ளே பேசிக்கொண்டிருப்பார்கள். நூறு செவிகளுக்கு இதற்குள் சென்று சேர்ந்திருக்கும். இது தைலம் நனைந்த காடு போலிருக்கிறது. எக்கணமும் மொத்த நகரமும் ஏதேனும் ஒன்றால் பற்றிக்கொள்ளும்" என்றார் சுஃபானு. நான் ஒன்றும் சொல்லவில்லை. "கிருதவர்மன் தனிமையில் இருக்கிறார். அவரை பிரத்யும்னனின் ஒற்றர்கள் கண்டடைந்துவிட்டார்கள். அச்செய்தியை அவர் தரப்பில் இருந்து நமக்கு சொன்னார்கள்.

அவர் இருக்கும் இடம் தெரிந்துவிட்டது. நாம் அவரை சென்று சந்தித்து இங்கு அழைத்து வரவேண்டும். உரிய முறையில் அதற்குரிய தூதை அனுப்பவேண்டும்" என்றார் ஃபானு.

நான் என்னை அழைத்தது அதற்கே என்று ஏற்கெனவே முடிவு செய்திருந்தேன். ஆனால் எனது நிலையில் உள்ள ஒருவரை அத்தனை தொலைவு அத்தனை பெரிய பணிக்கு அனுப்புவார்களா என்ற ஐயமும் இருந்தது. ஆகவே குழப்பமாக அவர்களை பார்த்தேன். "கணிகரிடம் அதைப்பற்றித்தான் பேசிக்கொண்டிருந்தேன். உண்மையில் நான் சுஃபானுவை அனுப்பலாம் என்ற எண்ணத்தில்தான் இருந்தேன். அத்தனை அவைமுதன்மை கொண்டவரை தொடக்கத்திலேயே அனுப்பவேண்டாம் என்றார் கணிகர். ஏனென்றால் ஒருவேளை நாம் பலமுறை வலியுறுத்த வேண்டியிருக்கும். அரசக்குருதியில் ஒருவரே செல்ல வேண்டும். ஆனால் அது படிநிலையில் இறுதியில் இருப்பவராக இருக்கவேண்டும். அவர் சென்று மன்றாட வேண்டும். அம்மன்றாட்டு அரசரின் மன்றாட்டாகவும் இருக்கவேண்டும், அரசருக்கு சிறுமையாகவும் அமையக்கூடாது."

"மேலும் அது வெல்லவேண்டுமென்றால் மறுபடியும் இன்னொருவர் செல்ல வேண்டும். நாலைந்து பேர் தொடர்ந்து சென்று அவர் உளம் கரைக்கவேண்டும். எப்படியிருந்தாலும் வந்துகொண்டே இருப்பார்கள் என்ற எண்ணம் எழவேண்டும். ஒருவேளை அரசராகிய நானே சென்று மன்றாடக்கூடும் என்று கிருதவர்மன் ஐயுற வேண்டும் என்றார் கணிகர். அது நல்ல எண்ணம் என்று தோன்றியது. ஆகவேதான் உன்னை வரவழைத்தேன்" என்றார் ஃபானு. "ஆகவே நீயே செல்லலாம்.

உன் சொற்களில் எங்களுக்கு நம்பிக்கை உள்ளது. உன்னை சொல்பயிற்றுவித்து அனுப்ப கணிகரும் முன்வந்திருக்கிறார்."

சுஃபானு "மேலும் ஏற்கெனவே நீ சாத்யகியை சந்தித்துவிட்டாய். நீ சாத்யகியை கண்டாய் என்பது கிருதவர்மனுடனான பேச்சில் மிக முதன்மையான ஒரு செய்தி. அதை நீ குறிப்பிட்டாகவேண்டும்" என்றார். "நான் எவ்வகையில் அதை குறிப்பிடவேண்டும்?" என்றேன். "சாத்யகி விருஷ்ணிகளின் படைத்தலைமை கொள்ளபோகிறார் என்று கூறு. அதற்கு நிகராக அவர் அறுதியாக துவாரகையின் அரசில் ரிஷபவனத்திற்கு முதன்மையை கோருகிறார் என்று கூறு. நான் அதற்கு ஏறத்தாழ ஒப்புக்கொண்டுவிட்டதாகவும் எனக்கு வேறு வழியில்லை என்றும் சொல்" என்றார் ஃபானு.

நான் "பொய் கூறவேண்டுமா?" என்றேன். "பொய்யல்ல அரசுசூழ்தல்" என்றார் மூத்தவர். "அவர் வந்தாகவேண்டும். அதற்குத்தான் உன்னை அனுப்புகிறேன்." நான் தலைவணங்கினேன். "இங்கிருந்து நீ செல்ல இரண்டு நாட்களாகும். அங்கு செல்வதற்குள் நீ செல்லும் செய்தி இங்கு பரவிவிடும். அதை அத்தனை ஒற்றர்களாலும் எளிதாக கண்டுபிடிக்க முடியும். இங்குள்ள எந்த அமைப்பும் அதை மறைக்கவும் இயலாது" என்று சுஃபானு சொன்னார். "நீ செல்வதற்குள் இவர்கள் இங்கே தங்களை பெருக்கிக்கொள்வார்கள். ஒருவேளை படைமுகம் கொண்டு துவாரகையை தாக்கவும் கூடும். நமது முழுப் படைகளையும் ருக்மியையும் அவந்தியையும் எதிர்கொள்ளும்பொருட்டு ஒருக்கி நிறுத்திய பிறகே உன்னை அனுப்புகிறோம்."

"நீ முடிந்தவரை விரைவாக செல்லவேண்டும். நீ சென்று அவர் காலடியில் விழுந்து மன்றாடி அவரை அழைத்து வரவேண்டும்.

இங்கு அவரை அழைத்துவரும் முதன்மை விசை ஒன்றே. இங்கு சாத்யகி முதன்மை பெற்றுவிடக்கூடும் என்பது. சாத்யகியை அவர் பொறுத்துக்கொள்ளமாட்டார். சாத்யகியின் மைந்தரை அவர் கொன்றிருக்கிறார். அவரது மைந்தர்கள் சாத்யகியால் கொல்லப்பட்டிருக்கிறார்கள். இருவரும் ஒருவரை ஒருவர் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். நிமித்திகர்களின் கூற்று நிகழுமெனில் அவர்கள் ஒருவரை ஒருவர் கொன்றொழிப்பார்கள்" என்று ஃபானு சொன்னார்.

"அத்தகைய முற்கூற்றுள்ள இருவரை ஒரே படையில் வைக்கவிருக்கிறோம்" என்று நான் சொன்னேன். "ஆம், ஆனால் அதுவும் ஒருவகையில் நன்று. நாம் இந்த நிலத்தை வென்று நகர்கொண்ட பிறகு முடிசூடும்போது அவர்கள் இருவரும் இருப்பார்கள் என்றால் அவர்களுக்கு உகந்த இடத்தை அளித்தாகவேண்டும். என்ன இருந்தாலும் அவர்கள் வேற்றுநாட்டு அரசர்கள்" என்று சுஃபானு சொன்னார். "ஆம், முடி வென்று நமக்கு அதை அளித்தவர்கள் நமது கீழே அடங்கியிருக்கும் நாடுகளாக அமையமாட்டார்கள். நம்மை ஆள விரும்புவார்கள். அரசனுக்கு அரசர்களாக இங்கு அவை நிகர்க்க எண்ணுவார்கள். அவர்கள் ஒருவரை ஒருவர் கொன்றொழிப்பார்கள் என்றால் அதுவும் நன்றே. அவர்களின் மைந்தர்களும் இன்றில்லை. அவர்களின் குடி அயலாகும். அவர்களின் நிலங்களும் துவாரகையின் ஆட்சிக்கு கீழ் வரும்" என்று ஃபானு சொன்னார்.

அக்கணம் எனக்குத் தோன்றியது அவர் அதை அந்த அவையில் சொல்லியிருக்கக்கூடாது என்று. எப்படி பிரத்யும்னனின் அவையிலிருந்து செய்திகள் இங்கு வருகிறதோ அதுபோல இங்கிருந்து செய்திகள் அங்கும் செல்லும். சாத்யகியிடம் இந்தச்

சொல் ஓரிரு நாட்களுக்குள் சென்று சேரும் என்று எனக்கு நன்றாகவே தெரிந்திருந்தது. ஆனால் எங்கு எவர் என்று விழிகளிலிருந்து கருத முடியவில்லை. நான் ஒவ்வொரு கண்களையாக பார்த்துக்கொண்டு கணிகரின் கண்களை வந்தடைந்தேன். கணிகரின் கண்கள் புன்னகைப்பதுபோல் மின்னிக்கொண்டிருந்தன. நான் தலைவணங்கி "அரசரின் ஆணையை தலைக்கொள்கிறேன்" என்றேன்.

அரசரின் ஆணையைப் பெற்று அன்றே ஓரிரு நாழிகைக்குள் நான் வடதிசை நோக்கி கிளம்பினேன். எனக்குரிய பயண ஒருக்கங்கள் நடந்துகொண்டிருந்தபோது என் அறையில் மஞ்சத்தில் படுத்து கண்களை மூடி இரண்டு நாழிகை துயில்கொண்டேன். என் உடல் களைத்திருந்தது. அதைவிட உள்ளம் களைத்திருந்தது. உள்ளம் சலிக்குமளவு ஏதும் நிகழவில்லைதான். உண்மையில் நான் எண்ணியது மேலும் மேலும் கூர்கொண்டு நடந்துகொண்டிருந்தது. எனது இடம் வலுப்பெற்றுக்கொண்டு வருவது எனக்குத் தெரிந்தது. ஒவ்வொருவரும் என்னை நோக்கும் பார்வை மாறிவிட்டிருக்கிறது. அதுவரை நோக்கு படாதவனாக இருந்தவன் ஒவ்வொரு நோக்குக்கும் மையமாக ஆகிறேன்.

ஓர் அவையில் நுழைகையில் அத்தனை விழிகளும் என்னை நோக்கி திரும்புவதும், நான் பேசுகையில் ஒவ்வொருவரும் என் கண்களையும் உதடுகளையும் பார்த்துக்கொண்டிருப்பதும் எனக்கு புதியது. ஆனால் அவை என்னை மேலும் மேலும் தன்மையம் கொண்டவனாக ஆக்கின. மேலும் ஆற்றல்

கொண்டவனாக ஆக்கின. நோக்குகளே மானுடரை ஆற்றல்மிகச் செய்கின்றன என்று அப்போது எனக்குத் தெரிந்தது. அரசர்கள் என்பவர்கள் பிறரால் கூர்ந்து நோக்கப்படுபவர்களாகவே இருக்கிறார்கள். சுழலும் வட்டத்தின் மையம் என்று ஒருவர் ஆவது அவ்வாறுதான். நோக்கப்படுகையில் அவர் சொற்கள் அழுத்தம் கொள்கின்றன. அவரது கையில் இருக்கும் ஒவ்வொரு படைக்கலமும் பலமடங்கு விசையும் எடையும் கொள்கிறது.

நான் மூத்தவர் ஃபானுவை எண்ணும்போது ஒவ்வொரு முறையும் மிகக் கீழ்நிலையிலிருந்து பணிவுடன் அண்ணாந்து நோக்கியிருந்தேன். அன்று அவர்களை எனக்கு இணையாக வைத்துப் பேசிய குரலில் இருந்த நம்பிக்கையும் கூர்மையும் அவர்களுக்கும் விந்தையாக இருந்திருக்கக் கூடும். எவ்வகையிலும் அதில் தயக்கமில்லை. என் எண்ணங்களை பற்றிய ஐயமும் எனக்கில்லை. பேசப்பேச அவர்கள் ஒவ்வொருவரைவிடவும் கூர்மை கொண்டவனாகவும், அவர்கள் ஒவ்வொருவரும் காணாதவற்றை காண்பவனாகவும் மாறினேன். மிக எளிதாக அவர்களை விலக்கி அந்த அரியணையில் அமரக்கூடியவன் என்று எனக்குத் தோன்றியது. அந்த எண்ணம் முன்பு ஒரு விழைவாக இருந்தது. பின்பு ஒரு நம்பிக்கையாயிற்று. இறுதியாக இயல்பான முடிவாக, பிறிதொன்றாக நிகழ முடியாத ஊழ்நெறியாக எனக்கு தோன்றத் தொடங்கியது.

தந்தையே, நான் துயிலில் உங்களை கண்டேன். நீங்கள் ஒரு காட்டுக்குள் கல்லாலான பீடம் ஒன்றில் கண்மூடி அமர்ந்திருந்தீர்கள். புன்னகைத்துக்கொண்டிருந்தீர்கள். ஆனால் துயருறுகிறீர்கள் என்று உங்களை நோக்கி வந்தேன். நீங்கள்

அழுது கொண்டிருக்கிறீர்கள் என்றும் பெருமூச்சு விட்டுக்கொண்டிருக்கிறீர்கள் என்றும் எனக்குத் தோன்றியது. ஆனால் அணுக அணுக உங்கள் முகத்திலிருப்பது புன்னகைதான் என்று கண்டேன். அந்தப் புன்னகை என்னை எரிச்சலுறச் செய்தது. சினத்துடன் உங்களை நோக்கி நான் வந்துகொண்டிருக்கும்போதே விழித்துக்கொண்டேன். என்னைக் காத்து ஏவலன் நின்றிருந்தான். நீராடி ஆடைமாற்றி கிளம்பியபோது தேர் ஒருங்கியிருந்தது.

தேரிலேறிக்கொண்டு "செல்க!" என்றேன். தேர் துவாரகையின் எல்லையைக் கடந்து பெரும்பாலை நிலத்திற்குள் சென்றபோது மீண்டும் துயில்கொண்டேன். மீண்டும் உங்களை கண்டேன். மீண்டும் அதே பீடத்தில் நீங்கள் புன்னகையுடன் அமர்ந்திருப்பதை கண்டேன். இம்முறை அப்புன்னகை என்னை குழப்பியது. நான் எண்ணுவது அனைத்தும் உங்களுக்கு தெரிந்திருக்கிறது என்று தோன்றியது. அல்லது நான் எண்ணுவதற்கு அப்பால் உங்களுக்கு தெரிந்திருக்கிறது. நிகழவிருப்பதை அறிந்துகொண்டிருக்கிறீர்கள். அவற்றிலிருந்து விலகியிருக்கிறீர்கள்.

எப்பொழுதும் அந்தப் புன்னகை உங்களிடம் இருக்கிறது என்பதை நான் விழித்த பிறகுதான் என்னால் உணர முடிந்தது. நான் நினைவறிந்த நாளிலிருந்தே அனைத்தும் அறிந்தவர்போல் ஒரு புன்னகையை நீங்கள் சூடிக்கொண்டிருந்திருக்கிறீர்கள். அது உங்களை பிறர் ஐயம் கொள்ள வைத்தது. உங்களுடன் பேசும்போது குழம்ப வைத்தது. உங்களை ஆற்றல் கொண்டவராக்கியது அந்தப் புன்னகையே. அதை அரசுசூழ்வோர் பலர் உங்களுடைய படைக்கலம் என்று

சொல்வதையே கேள்விப்பட்டிருக்கிறேன். அப்புன்னகையை நானும் பயிலவேண்டும் என்று எண்ணிக்கொண்டேன்.

அனைத்தும் அறிந்தவனுடைய புன்னகை. ஆனால் அது மிகவும் எடைகொண்ட படைக்கலம். அனைத்தும் அறிந்தவன் என தன்னை காட்டுபவன் சற்றேனும் அறிந்தவனாக இருக்கவேண்டும். எங்கும் எதன்முன்னும் சற்றும் பதறாதவனாக இருக்கவேண்டும். அப்புன்னகையைக் காட்டி அவ்வப்போது அச்சத்தையோ ஐயத்தையோ காட்டுவேன் என்றால் அறிவிலி என்றே தோற்றமளிப்பேன். ஆனால் நான் உங்களைப்போல் ஆகிவிடவேண்டும் என்று எண்ணினேன். உங்கள் அரியணையில் அமர்கையில், உங்களை தொடர்பவன் என்று வரலாறு என்னைப்பற்றி கூறுகையில், நான் உங்களைவிட ஒரு படி மேலென எழவேண்டும்.

ஆம் தந்தையே, அவ்வாறே எண்ணினேன். அதை ஏன் எண்ணினேன் என்று இன்று எண்ணுகையில் நகைப்பே எழுகிறது. ஆனால் அவ்வாறு எண்ணினேன். அவ்வாறு எண்ணாமல் இருக்க இயலாது என்று தோன்றியது. மாமானுடரின் மைந்தராயினும் மைந்தர்கள் தந்தையை வெல்ல எண்ணுகிறார்கள். வென்றுவிடக்கூடுமென்று கனவு காண்கிறார்கள். அக்கனவில்லையேல் அவர்கள் வாழ இயலாது. அவர்களுடைய ஒவ்வொரு நாளும் சொல்லும் செயலும் பொருளற்றுப் போகிறது. நான் உங்களுக்கு நிகராக வேண்டுமென்று கனவு காண்பது மிகையென்று எண்ணிய ஒரு காலம் இருந்தது. உங்களுக்கு நிகரென்றாகக் கூடுமென்று எண்ணியது அதன் பெரும் பாய்ச்சல். உங்களுக்கு நிகரென்று அமர்ந்திருப்பேன் என்று நம்பத்தொடங்கியது என் வாழ்வின்

ஆணவத்தின் உச்சம். ஆனால் அதுவே என் இருப்பின் உயர்நிலை.

தந்தையே, மிக எளிதாக உங்களை கடந்து செல்வேன் என்றும், வரலாறு என் தந்தையென்றே உங்களை சொல்லும் என்றும், எண்ணிக்கொள்ளும் அளவுக்கு ஆணவம் என் உள்ளே கூர்கொண்டு பேருருக்கொண்டு நின்றிருந்தது என்பதை எண்ணுகையில் தெய்வங்கள் மானுடரை எவ்வண்ணம் படைத்திருக்கின்றன என்ற விந்தையுணர்வையே அடைகிறேன். மானுடரை தெய்வங்கள் வைத்து விளையாடுகின்றன. அவர்களை நோக்கி சிரிக்கின்றன. எளிய களிப்பாவைகளன்றி வேறல்ல நாம். தந்தையே, நீங்களும்கூட. நீங்கள் தெய்வமாகவே இருக்கலாம். உங்களுள் உள்ள தெய்வத்தின் கைப்படைக்கலம் நீங்கள்.

# கல்பொருசிறுநுரை - 31

**பகுதி நான்கு : அலைமீள்கை – 14**

நான் சிந்துவின் வழியாக வடபுலம் சென்று இமையமலையின் அடிவாரத்தில் பருஷ்னி நிகர்நிலத்தை தொடும் இடத்தில் அமைந்திருந்த காட்டில் கிருதவர்மன் தங்கியிருந்த குருநிலைக்கு ஏழு நாட்களுக்குப் பின் சென்றுசேர்ந்தேன். அங்கே இருந்த முனிவர்கள் எவரென்று கிளம்பும்போது நான் அறிந்திருக்கவில்லை. எங்களுக்குக் கிடைத்த செய்திகள் அனைத்தும் குழப்பமாகவே இருந்தன.

அது விஸ்வாமித்ரரின் குருநிலை என்று அங்கு சென்ற பின்னரே அறிந்தேன். விஸ்வாமித்ரர் குறித்து துவாரகையில் அச்சமும் குழப்பங்களும் இருந்தன. அவர் ஷத்ரியர்களின் தலைமுனிவர், அந்தணர்களுக்கு எதிரானவர். யாதவர் முதலியவர்களுக்கும் உகந்தவர் அல்ல.

ஆனால் அங்கே சென்ற என்னை அவர்கள் வரவேற்று அமரச்செய்தனர். அங்கிருந்த விஸ்வாமித்ரரின் முதன்மைக்குடிலுக்குச் சென்று அவரை சந்தித்தேன். அவர் சடைமகுடமும் நீண்ட தாடியும் மணிக்குண்டலங்கள் ஒளிரும் காதுகளும் கொண்டிருந்தார். அவர்களுக்கு படைக்கலம் ஏந்தும் நெறி உண்டு. அந்தக் குடிலுக்குள் சுவர்களில் வாள்களும் வேல்களும் மழுக்களும் விற்களும் தொங்கின. அவர் புலித்தோல் விரிக்கப்பட்ட பீடத்தில் அமர்ந்திருந்தார். புலித்தோல் ஆடை அணிந்திருந்தார். நான் அவரை வணங்கி கிருதவர்மனை சந்திக்கும்பொருட்டு வந்திருப்பதாக சொன்னேன்.

அவர் எவ்வுணர்வையும் காட்டவில்லை. "யாதவரே, ஓராண்டுக்கு முன்பு இங்கு வந்தவர் கிருதவர்மன் என நான் அறிந்திருக்கவில்லை. வெந்து உருகிய உடலுடன் வந்துநின்று இங்கே தங்கவிழைவதாகச் சொன்னார். இது குருநிலை, இங்கு நீங்கள் தங்குவதற்கான தகுதி என்ன என்று கேட்டேன். நான் மகாருத்ரனுக்கு அணுக்கமானவன், அதை நீங்கள் உசாவி அறிந்துகொள்ளலாம் என்றார். எனில் இங்கிருக்கும் மகாருத்ரரின் ஆலயத்தின் தீப்பந்தத்தை தொடுக என்றேன். மகாருத்ர உபாசனை கொண்டவர்களின் வெறுங்கையில் பந்தத்தின் தழல் எரியும். அவர் அந்தத் தழலை தன் கையில்

நீர் என அள்ளி எடுத்தார். மலரிதழ் என கைகளில் நிறுத்திக் காட்டினார். மகாருத்ரரே, இங்கு தங்குக என்று அழைத்தோம்.”

“அவருக்கு தனிக்குடில் வேண்டும் என்றும், எந்த மானுடரும் அவரை காணலாகாது என்றும் சொன்னார். ஆகவே இங்குள்ள புறங்காட்டில் ஓடையருகே சிறுகுடில் ஒன்றை அவருக்கு அமைத்துக்கொடுத்தோம். அங்கு சென்றவர் இன்றுவரை தன்னை வெளிக்காட்டவில்லை. அவருக்கான உணவு நாளுக்கு ஒருமுறை அந்த ஓடைக்கரையில் கொண்டுசென்று வைக்கப்படுகிறது. அதை வைக்கும் இளைய மாணவர்கூட அவரை பார்த்ததில்லை. சில நாட்களுக்கு முன்புதான் துவாரகையில் இருந்து வந்த ஓர் ஒற்றனிடமிருந்து என் மாணவர்கள் அவர் கிருதவர்மன் என்று அறிந்தனர். என்னிடம் அவர்கள் அதை சொன்னபோது நான் அடையாளங்களைக் கொண்டு அதை உறுதிசெய்துகொண்டேன். அவர் உருத்திரவழி தேர்ந்தவர் என அறியேன்” என்றார்.

“ஆம், அவரும் அவர் நண்பரும் ஆசிரியருமான அஸ்வத்தாமனும் மகாருத்ர உபாசனையை மேற்கொண்டவர்கள் என்று நான் கேட்டிருக்கிறேன். அவர்களுக்கு எரிவிழி அண்ணல் எழுந்த குரலுக்கு அணைவார் என்று சூதர்கள் சொல்லி அறிந்திருக்கிறேன்” என்று நான் சொன்னேன். “குருக்ஷேத்ரப் போர்க்களத்தில் துரோணரின் மைந்தர் மகாருத்ரனாகவே எழுந்தார். அவரை வெல்ல அர்ஜுனனால் இயலவில்லை. ஏழுநிலை எரி எழுந்து சூழ்ந்த பின்னரும் கிருதவர்மனை அழிக்க முடியவில்லை. அவருள் எரிந்த ருத்ரனின் அனல் அனலுக்கு அனல்நின்று அவரைக் காத்தது என்கிறார்கள்” என்றேன்.

“அவரை நாங்கள் சந்திப்பதில்லை. அவர் எங்களிடம் கோரியது அது. ஆகவே அவரை நீர் சந்திக்க எந்த ஒருக்கத்தையும் நாங்கள் செய்ய முடியாது. நீர் உமது விழைவுப்படி சென்று அவரை சந்திக்க முடியுமென்றால் சந்திக்கலாம்” என்றார் விஸ்வாமித்ரர். “ஆனால் கருதுக, சிவருத்ர நோன்பு கொண்டவர்கள் முக்கண் திறக்கும் ஆற்றல் கொண்டவர்கள்! முனிந்தால் அழித்து நீறாக்க அவர்களால் இயலும்.” நான் “நான் அவர் குடியில் பிறந்தவன். அவருடைய குருதி. அதை நம்பி அவர் முன் செல்கிறேன்” என்றேன். “அன்றி அவரால் அழிக்கப்படுவேன் என்றால் அதை என் நல்லூழ் என்றே கருதுவேன்.” விஸ்வாமித்ரர் “ஆகுக!” என என்னை வாழ்த்தி ஒப்புதல் அளித்தார்.

நான் புறக்காட்டுக்குள் நுழைந்தேன். என்னை அழைத்துச்சென்ற மாணவன் அந்த ஓடைக்கரை வந்ததும் நின்று “நீங்களே இனிமேல் செல்லவேண்டியதுதான், யாதவரே” என்றான். அவனை “செல்க!” என்று அனுப்பிவிட்டு நான் ஓடையை கடந்தேன். நான் அச்சம்கொள்ளவில்லை. ஏன் என்று இப்போது எண்ணினாலும் என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. குட்டி நாய் பெரிய நாயை நம்பிக்கையுடன் அணுகுவதுபோல அவரை நோக்கி சென்றேன். அவர் பகல் முழுக்க தன் குடிலின் இருளுக்குள் இருப்பது வழக்கம். இரவில்தான் வெளியே சென்று காட்டில் உலாவினார். ஆகவே நான் குடில்நோக்கி கூப்பிய கைகளுடன் மெல்லடி எடுத்துவைத்து சென்றேன்.

குடில்முற்றத்தை நான் அடைந்தபோது “அங்கேயே நில்” என்று குடிலுக்குள்ளிருந்து அவர் குரல் கொடுத்தார். என்னை அவர் தொலைவிலேயே பார்த்துவிட்டிருந்தார், நான் யாதவன் என்றும் அறிந்துவிட்டார் என்று தோன்றியது. நான் குடிலுக்கு வெளியே

முற்றத்தில் நின்றேன். அரையிருள் படிந்த குடிலுக்குள் அமர்ந்து கதவின் விளிம்பினூடாக என்னை நோக்கியபடி அவர் "எதன் பொருட்டு வந்தாய்?" என்றார். நான் யார் என்று கேட்கவில்லை. எனில் நான் எவர் என அவர் அறிவார். அது எனக்கு நம்பிக்கை அளித்தது. தலைதாழ்த்தி வணங்கி "அருள்க, மூதாதையே!" என்றேன். அவர் உறுமலோசை எழுப்பினார்.

நான் அவர் முகத்தை பார்க்க முயன்றேன். அது என் பார்வை வட்டத்திற்கு அப்பால் இருந்தது. இருளில் ஒரு மெல்லிய நிழல் தீற்றலென தெரிந்தது அவர் முகத்தின் ஒரு கீற்று. ஒரு விழி. அந்தத் துளிக் காட்சியிலிருந்து ஒரு முழு வடிவை உருவாக்கிக்கொள்ள முயன்றேன். எவ்வண்ணமேனும் மானுடரின் உடல் போன்ற ஒன்றை அங்கு உருவாக்கிக்கொள்ளாமல் என்னால் உரையாட முடியாது. நான் நெடுநாட்களுக்கு முன் அவரை பார்த்திருந்தேன். அன்று உளம்தெளியாச் சிறுவன். அதன்பின் சூதர்கள் அவரைப்பற்றி பாடியதைத்தான் கேட்டிருக்கிறேன். பதினெட்டு வீரகதைப் பாடல்களின் பாட்டுடைத்தலைவன் அவரே. துவாரகையில் அவரைப்பற்றிய பாடல்கள் விருஷ்ணிகளின் அவைகளில் இருந்து விலக்கப்படவில்லை. யாதவப் பெருவீரர் எழுவர் எனும்போது அவரும் எப்போதுமே சொல்லப்பட்டார்.

அப்பாடல்களில் அவருடைய தோற்றம் பற்றி அவர்கள் ஒரு சொல்லுருவை அளித்திருந்தார்கள். ஆனால் அது சூதர்கள் அனைத்து வீரர்களுக்கும் அளிக்கும் ஒரு பொதுச்சித்திரம் மட்டுமே. உயர்ந்த தோள்கள், விரிந்த நெஞ்சு, நீண்ட கைகள், ஒளிமிக்க கண்கள். மூத்த யானை என தலை உயர்ந்தவர். அச்சொற்களால் எப்பயனும் இல்லை. ஏனெனில் அவை மீள மீளச் சொல்லப்பட்டும் கேட்கப்பட்டும் வெறும் சொற்களென

மாறிவிட்டிருந்தன. அவற்றைக்கொண்டு கற்பனையை எழுப்பியபோது அர்ஜுனனும், கர்ணனும், அபிமன்யுவுமெல்லாம்தான் தோன்றினார்கள். அவர்கள் அல்ல இவர் என்று அறிந்திருந்ததனால் அந்த உளச்சித்திரம் உடனே அழிந்தது. நான் அவருக்கு ஒரு முகம் கொடுக்க முயன்றேன். ஆனால் அப்போது எழுந்த முகம் அர்ஜுனனும் கர்ணனும் அபிமன்யுவும் கலந்து உருவான ஒன்றே என்று கண்டேன்.

அப்போது எனக்கு தேவையாக இருந்தது சற்றேனும் கிருதவர்மன் என்று நான் எண்ணிக்கொள்ள வேண்டிய ஒரு முகம். நான் அவருடைய முந்தைய பழைய முகத்தை நினைவுகூர முயன்றேன். அது சற்றும் நினைவில் எழவில்லை. அப்போது நான் சிறுவனாக இருந்தேன். அவரை ஒரு தேரில் கட்டி தெருவினூடாக இழுத்து வந்ததை நான் பார்த்ததாகவே என்றும் உணர்ந்திருந்தேன். அவர் அடைந்த வஞ்சம் அவர் உரைத்த சூளுரை அனைத்தும் அருகிருந்து கண்டதுபோல. ஆனால் உண்மையில் நான் காணவில்லை. ஒரு மாளிகை முகப்பில் நின்று அந்தத் தேர் வருவதை நான் கண்டது உண்மை. அதில் அவர் முகம் தெளிந்ததும் உண்மை. ஆனால் அது அக்கணமே என்னுள்ளிருந்து மறைந்தும்விட்டது. பின்னர் சூதர்களின் பாடல்களினூடாக, வெவ்வேறு கதைகளினூடாக அது எனக்கு அளிக்கப்பட்டு என்னால் கற்பனையில் நிலைநிறுத்தப்பட்டது.

நான் அவரை எவ்வண்ணம் பார்ப்பது என்று எண்ணினேன். எங்கிருக்கிறார்? அவரை அந்த சிறுதீற்றலிலிருந்து எப்படி உருவாக்கிக்கொள்வது? இருண்ட சுனையின் கரிய நீருக்குள் அசையாமல் நின்றிருக்கும் ஒரு மீன்போல அவருடைய ஒரு கண் மட்டும் அங்கே தெரிந்துகொண்டிருந்தது. நான் அதை

பார்க்க முயலும்தோறும் எனது சித்தம் மயங்கியது. அந்த அலைக்கழிவிலேயே அவரை சந்தித்தபோது எழுந்த அனைத்து ஊக்கத்தையும் இழந்தேன். அவரிடம் சொல்ல வேண்டிய சொற்கள் அனைத்தையும் மறந்தேன். "சொல்க, எதன் பொருட்டு என்னை பார்க்க வந்தாய்?" என்று அவர் என்னை கேட்டார். அந்த ஒற்றைவிழியிலிருந்து என் விழியை விலக்கினேன். சுவரில் படிந்திருந்த ஒரு விரிசலை நோக்கினேன். அதில் ஒரு முகம் எழுந்தது. திடுக்கிட வைப்பதுபோல. மெய்யாகவே அங்கு ஒருவர் தோன்றியதுபோல. மேலும் சில கணங்களில் அவ்வுரு நன்கு தெளிந்தது. கூரிய கண்கள் கொண்ட முனிவரின் உருவம் அது.

அது உருவழிந்த உரு கொண்டிருந்தாலும் தன் உணர்வெழுச்சியாலேயே மானுடத்தன்மையை திரட்டிக்கொண்டது. அதை என்னால் பார்க்க முடிந்தது. அதிலிருந்து என் நோக்கை விலக்க முயன்றேன். பின்னர் அவ்வண்ணம் ஒரு நோக்கு இருப்பது நன்று, அதனுடன் என்னால் உரையாட முடியும் என்று கண்டுகொண்டேன். "தங்களை நேரில் கண்டு துவாரகைக்கு அழைக்க வந்தேன், மூதாதையே" என்றேன். "நான் இளைய யாதவராகிய கிருஷ்ணனின் மைந்தன். சத்யபாமையில் பிறந்த எட்டாமவனாகிய பிரதிபானு. குருதிவழி உடன்பிறப்பின் மைந்தன் நான் என்பதனால் தங்கள் மைந்தன் என என்னை கொள்க! தங்கள் அந்தகக் குடிபிறந்த சத்யபாமையின் மைந்தன் என்பதனால் என்னை உங்கள் கொடிவழி எனக் கொள்க!" என்றேன்.

அவர் முகம் மாறுவதை கண்டேன். "துவாரகையை விட்டு நெடுநாட்களாகிறது" என்றபோது குரலும்

மென்மையாகிவிட்டிருந்தது. "ஆம், தாங்கள் தங்களை துவாரகையின் முதன்மை எதிரியென அறிவித்துவிட்டுச் சென்றவர். துவாரகையை அழிப்பது தாங்கள் கொண்ட வஞ்சம் என்றும் அறிவேன். தாங்கள் என் தந்தையை தோல்வியுறச் செய்வதை வாழ்வின் இறுதி இலக்கெனக் கொண்டவர். இன்றும் அவ்விலக்கை உள்ளே வைத்திருப்பவர்" என்றேன். "ஆம், அது என் வாழ்வு" என்றார் . "இத்தருணத்தில் நீங்கள் உணர்ந்திருப்பீர்கள், தந்தை அங்கில்லை, நகரம் முற்றாக கைவிடப்பட்டிருக்கிறது, அவர் முன்னரே மும்முறை தோற்கடிக்கப்பட்டிருக்கிறார். தன் மூத்தவரால், தன் மைந்தரால், தன் குடியால். மீண்டும் அவரை நீங்கள் வெல்ல வேண்டியிருக்கும்" என்றேன்.

"ஆம், அவர் தன்னைத்தானே தோற்கடித்திருக்கிறார்" என்று கூறி மெல்ல நகைத்தார். "அவர் தன்னெதிரே அவர் நம்பிய அனைத்தும் வீழ்ந்து அழிவதை பார்த்துக்கொண்டிருக்கிறார். அவர் இயற்றிய அனைத்திற்கும் ஈடென அவர் அளித்துக்கொண்டிருப்பது அது. அவ்வண்ணம் அளிக்காது எவரும் இங்கிருந்து செல்ல இயலாது. மண்ணில் மானுட வடிவென தெய்வம் எழுந்தாலும் அதுவே நெறி." அவரது உள்ளம் என்ன என்பதை உணர்ந்துகொண்டேன். அந்தச் சிரிப்பில் இருந்தது சற்றும் குறையாத யாதவ வஞ்சம். "அரசே, தாங்கள் என்னுடன் துவாரகைக்கு எழுந்தருள வேண்டும். எந்தையின் தோல்வியை முழுமைப்படுத்தும் பொறுப்பு தங்களுக்கு உள்ளது" என்றேன்.

குரல் கூர்கொள்ள "அங்கு வந்து உங்கள் மூன்று தரப்பையும் முற்றழித்தால்தான் அத்தோல்வி முழுமையடையும்" என்று அவர் கூறினார். "ஆம், நீங்கள் வராவிடில் அதில் ஒரு தரப்பு

வெல்லும். அது ஷத்ரியர்கள் தரப்பு" என்றேன். அவர் அமைதியாக இருந்தார். என் சொல் சென்று தைத்துள்ளது என உணர்ந்தேன். "அதை பாரதவர்ஷம் முழுதிலுமிருந்து பிற ஷத்ரியர்கள் அங்கு நிலைநிறுத்துவார்கள்" என்றேன். "அது நன்று. ஷத்ரியர்கள் நிலைகொள்வது என்பது இளைய யாதவரின் தோல்விதான்" என்றார். நான் மிகமிக நுட்பமாக சொல்லெடுத்தேன். "நான் கூற் விழைவதை என்னால் சரியாக சொல்ல இயலவில்லை, தந்தையே. நான் மிக இளையோன். இவ்விதம் எண்ணி நோக்குக!" என்றேன்.

அச்சொற்களை சொல்லும்போதே என்னுள் சொல் கோத்துக்கொண்டிருந்தேன். உண்மையில் அத்தருணம் வரை அங்கு எதை சொல்லவேண்டும் என்று எனக்கு தெரிந்திருக்கவில்லை. எவ்வாறு உரைப்பதென்றும் தெரியவில்லை. விழுந்துகொண்டிருப்பவன் கைகளால் துழாவி அகப்பட்ட அனைத்தையும் பற்றிக்கொள்வதுபோல் பற்றிக்கொண்டேன். எப்போதும் உயிரின் பதைப்பு உளம் அறிந்ததைவிட, அறிவு அறிந்ததைவிட மேலும் அறிந்திருக்கிறது. வலுவாக ஒன்றை பற்றிக்கொண்டேன். "நீங்கள் வந்தால் யாதவர்களின் ஆற்றல் நிகர்நிலை அடையும். நிகர்நிலையடைந்த ஆற்றலே துவாரகையை அழிக்கும்" என்றேன்.

"நீங்கள் வராவிடில் ஷத்ரியர்கள் போர்முகம் கொள்வார்கள். இன்னும் சில நாட்களில் ருக்மி தன் பெரும்படையுடன் துவாரகைக்குள் நுழைவார். மலர் கொய்வதுபோல் துவாரகையை எடுத்து தன் மருகருக்கு அளிப்பார். பிரத்யும்னனை முடிசூட்டிவிட்டு அவர் செல்வார்" என்றேன். "பிரத்யும்னனை எண்ணுக, அவர் ருக்மிணியின் மைந்தர்!

ஷத்ரியக் குருதி கொண்டவர். ருக்மியின் மருகர். ஆகவே ஷத்ரியர்கள் அவரை கொண்டாடுவார்கள். அவரை நிலைநிறுத்துவார்கள்." அவர் "ஆம்" என்றார். நான் தொடர்ந்தேன். "ஆனால் பிரத்யும்னன் அசுரர்களுக்கும் நிஷாதர்களுக்கும் அணுக்கமானவரும்கூட. சம்பராசுரரின், வஜ்ரநாபரின் மகள்களை மணந்தவர். தன் மகனுக்கு பாணாசுரரின் மகளை மணம்முடித்தவர்."

"இன்று அவர்கள் எதிர்தரப்பில் இருக்கலாம், முரண் கொண்டிருக்கலாம். ஆனால் அவர்களின் தேவை என்ன, அதை எவ்வண்ணம் அவர்களுக்கு அளிப்பது என்பதை அவர் கற்றுக்கொண்டாரென்றால் மிக விரைவிலேயே அவர்களை தன்னுடன் சேர்த்துக்கொள்வார். அவ்வண்ணம் நிகழ்ந்திருக்கிறது. அரசுசூழ்தலென்பது அறுதியாக எவருக்கு என்ன அளிக்கப்படுகிறது, நிகராக என்ன பெறப்படுகிறது என்பதை சார்ந்தது. அசுரர்கள் அவரை ஆதரிப்பார்கள். அவரை ஆற்றல் மிக்க மன்னராக அரியணையில் அமரச்செய்வார்கள். ஐயமே வேண்டியதில்லை" என்றேன். "பிரத்யும்னன் துவாரகையின் அரசர் ஆனார் என்றால் ஆயிரம் ஆண்டுக்காலம் அங்கே அவருடைய கோல் நின்றிருக்கும்." கிருதவர்மன் ஒருகணம் கழித்து "மெய்" என்றார்.

"மூதாதையே, எண்ணிப்பாருங்கள்! அவ்வாறு அசுரர்கள் பிரத்யும்னனுடன் ஒத்துப் போகும்போது சாம்பனுக்கு வேறு வழியில்லை. அசுரர்கள் ஷத்ரியர்களை முரண்பட்டு எதிர்த்து நின்றிருக்கும் வரை மட்டுமே தனிக்கோல் கொண்டு சாம்பன் அங்கே அமர்ந்திருக்க இயலும். ஆகவே ஒத்திசைவு நிகழுமென்றால் சாம்பன் பிரத்யும்னனின் கீழ் படைகொண்டு நிற்பார். அவருக்கும் ஏதேனும் அளிக்கப்படும். பெரும்பாலும்

இணை அரசொன்று சற்று அப்பால் அளிக்கப்பட வாய்ப்புண்டு. அவ்வண்ணம் அவர்கள் ஒருங்கிணைந்தால் அதன் பிறகு யாதவர்களின் இடமென்ன?" என்றேன். "ஒவ்வொன்றும் அதை நோக்கியே சென்றுகொண்டிருக்கிறது. ஒவ்வொருநாளும் அதற்கான வாய்ப்புகள் பெருகிக்கொண்டிருக்கின்றன."

"நீங்கள் வந்துவிடுவீர்கள் என்ற ஐயம் எழுந்ததுமே இருதரப்பும் பதற்றம் கொண்டுவிட்டனர். உங்களை தேடிக்கொண்டிருக்கின்றனர். உண்மையில் உங்களை கண்டடைந்தவர்கள் அவர்களே. அவர்கள் ஒருங்கிணைந்தால் யாதவர்கள் அங்கே இல்லை என்றுதான் பொருள். அவர்கள் யானை முன் சிறு முயலென்றாகிவிடுவார்கள்" என்றேன். "இன்றுவரை அங்கே ஆற்றலில் முத்தரப்பிற்கும் நிகர்நிலை இருப்பதனால்தான் போர் எழாமல் இருக்கிறது. அழிவு நிகழாமல் இருக்கிறது. எங்கும் ஒரு தரப்பு மிகச் சிறிதாகுமெனில் அதன் பிறகு அங்கு தோல்விதான் நிகழும், அழிவு அல்ல. வென்ற தரப்பு தன்னை மேலும் திரட்டிக்கொள்ள முடியும். வெற்றி அவர்களுக்கு என அறிந்தபின் தோற்பவர்கள் தங்களை காத்துக்கொள்ளும்பொருட்டு அடங்கி அவர்கள் அளிப்பதை பெற்றுக்கொள்வார்கள்."

"எனினும் அது ஷத்ரியர்களின் வெற்றி அல்ல" என்றேன். அவர் அடைந்த எண்ணத்தை உடனே அடையாளம் கண்டு அதை தொட்டு தொடர்ந்தேன். "அது ஷத்ரியர்களின் வெற்றிதான், அதை நான் மறுக்கவில்லை. பிரத்யும்னன் தான் ஷத்ரியக்குருதி கொண்டவர் என்பதையே பிற ஷத்ரியர்களிடம் காட்டுவார். அவரை ஆதரித்தெழுபவர்கள் அனைவருமே இளைய யாதவர் மேல் வஞ்சம் கொண்ட ஷத்ரியர்களாகவே இருப்பார்கள். இன்று பாரதவர்ஷத்தில் ஷத்ரிய அரசுகள்

அனைத்தும் ஆற்றல் இழந்துள்ளன. அதனால் எழுந்து நிலைகொள்ள இயல்பவர் எவரோ அவர் அனைத்து ஷத்ரிய அரசுகளையும் இணைக்கவேண்டும் என அனைவரும் விழைகிறார்கள். அவருடன் ஒத்துழைத்து எவ்வண்ணமேனும் ஷத்ரிய அரசு ஒன்றை எழுப்பி நிறுத்திவிடவேண்டும் என்று அனைவரும் விரும்புகிறார்கள். மகதத்தை, கலிங்கத்தை, வங்கத்தை, காமரூபத்தை இன்று எழுப்பிக்கொண்டிருக்கிறார்கள். முளைக்க வாய்ப்புள்ள ஒவ்வொரு விதைக்கும் நீரூற்றப்படுகிறது. அவ்வாறே துவாரகைக்கும் ஊற்றப்படும். துவாரகை எழும், பிரத்யும்னன் வெல்ல முடியாதவர் ஆவார். அசுரரும் நிஷாதரும் ஆதரிக்கும் ஒரு ஷத்ரியரை எவராலும் வெல்ல இயலாது."

"ஆனால் அவர் இளைய யாதவருக்கு எதிரான ஷத்ரிய அரசர் என்ற தோற்றத்தை அவர் ஷத்ரியர்கள் நடுவே மட்டும் கொடுப்பார். இல்லையேல் அவரால் அரசமைக்க இயலாது. ஆனால் ஓர் அரசர் என்ற நிலையில் எண்ணிப்பாருங்கள், இளைய யாதவரை அவர் துறப்பாரா? அவருக்கு படை வல்லமையை வெளியிலிருந்து ஷத்ரியர்கள் அளிக்கலாம். அரியணையை வென்று அவருக்கு அளிக்கலாம். ஆனால் இன்றும் நாளையும் எந்நாளும் குடிகளென அவருக்கு அமையப்போகிறவர்கள் எவர்? அவர்கள் யாதவர்களே. யாதவ நிலத்தை அவர் ஆளப்போகிறார். ஷத்ரியராக அரசர்களுக்கு தன்னை காட்டிக்கொள்ளும் அவர் குடியினராக தன்னை யாதவர் முன் காட்டியே ஆகவேண்டும். அவருடைய அன்னை யாதவப்பெண் அல்ல என்பது அவருக்கு எவ்வளவு பெரிய இழப்பு! அதை எவ்வண்ணம் ஈடுகட்டுவார்?"

“தன் தந்தை யாதவர் என்பதைக்கொண்டு!” என்று தொடர்ந்தேன். “ஆகவே தன் குருதிவழி இளைய யாதவருடையது என்பதை அவர் வலியுறுத்தியே தீரவேண்டும். தன் அரியணையில் ஆழ அமர்வது வரை அவர் அதை செய்யாமலிருக்கலாம். அதன் பின் தன்னை இளைய யாதவரின் மைந்தர் என்றே குடிகள் முன் முன்வைப்பார். ஏற்கெனவே எங்கள் மைந்தர் எண்பதின்மரில் இளைய யாதவரின் தோற்றம் மிக அணுக்கமாக இருப்பது அவரிடம் மட்டுமே” என்றேன். “ஆம்” என்று கிருதவர்மன் சொன்னார். அந்த ஒரு முனகலிலேயே நான் அவர் உள்ளத்தை புரிந்துகொண்டேன். பிரத்யும்னனிடம் எழும் தந்தையின் தோற்றம் அவரை ஒவ்வாமையை நோக்கி செலுத்துகிறது.

“பிரத்யும்னன் ஷத்ரியர் என்பது ஒன்றுதான் ஷத்ரியர்கள் அவரை ஏற்றுக்கொள்ள வைக்கிறது. ஆனால் கண் தெரியும் தோற்றம் என்பது எளிதாக மறுக்கக்கூடியதல்ல. அது மீள மீள அவர் எவர் என்பதை வலியுறுத்திக்கொண்டே இருக்கிறது. ஆகவே ஷத்ரியர் அவர்மேல் ஐயம் கொள்வார்கள். அந்த ஐயத்தை எதிர்கொள்ள தன் குடிகள் மேல் முழு செல்வாக்கை அடைவதே பிரத்யும்னன் செய்யவேண்டியது. அதற்குரிய சிறந்த கருவி அவருடைய உடல். தந்தையை விழிக்குமுன் நிறுத்தும் தன் தோற்றம்.” நான் எனக்குள் புன்னகைத்தேன். “அத்தோற்றத்தை அவர் குடிகள் முன் முன்னிறுத்துவார். அதை முன்னிறுத்துவதற்கு எளிய வழி என்ன என்பதை எண்ணிப்பாருங்கள்.”

அவர் எண்ண சற்று இடம் கொடுத்து நான் மீண்டும் தொடர்ந்தேன். “அவர் தந்தையின் தெய்வத்தோற்றத்தை உருவாக்குவார். இன்றுள்ள முதிய தோற்றத்தை அல்ல,

முடிசூடி துவாரகையை உருவாக்கியபோது இருந்த அந்த இளம் தோற்றத்தை. ஏனெனில் அத்தோற்றத்திற்கு இணையானது பிரத்யும்னனின் தோற்றம். எந்த அரசரும் தெய்வத்தின் தோற்றத்தில் தன்னை அமைத்துக்கொள்வார். தனக்குரிய தெய்வத்தை படைத்துக்கொள்வார். நாளடைவில் தன்னை தெய்வம் என்றாக்கிகொள்வார். இளைய யாதவரை தெய்வம் என்று நிலைநிறுத்தினால் பிரத்யும்னன் தெய்வவடிவம் கொண்ட அரசர். அதை எந்நிலையிலும் பிரத்யும்னன் தவிர்க்க முடியாது. அது மிகச்சிறந்த அரசியல் சூழ்ச்சி.”

“ஆகவே துவாரகையில் பிரத்யும்னன் அமர்ந்தால் இளைய யாதவருக்கு எங்கும் சிலைகள் அமையும். ஆலயங்களில் அவர் வழிபடப்படுவார். அவருடைய பிறந்த நாளும் முடிசூட்டு நாளும் பெருவிழவென கொண்டாடப்படும். அவரைப் பற்றிய காவியங்கள் எழுதப்படும். பாடல்கள் புனைந்து பாடப்படும். கூத்துகள் நடக்கும். அவ்வண்ணம் இளைய யாதவரை தெய்வமெனக்கொண்டு நிலைநிறுத்தி அதன் நீட்சியென தன்னை காட்டிக்கொள்வார். தன் மைந்தரையும் அவ்வண்ணமே நிலைநிறுத்துவார். அவ்வாறுதான் துவாரகையில் எந்தை மீண்டும் பேருருக்கொண்டு எழப்போகிறார். இதுவே நடக்கும், ஐயம் வேண்டியதில்லை” என்றேன். “நீங்கள் இங்கு அமர்ந்து செயலொழிந்தால் எந்தையை அவருடைய காலத்திரையிலிருந்து மீட்டு தெய்வமென்றாக்கி நிலைநிறுத்தும் அரசியல்சூழ்ச்சியொன்றுக்கு வழிகோலுகிறீர்கள் என்றே பொருள்.”

# கல்பொருசிறுநுரை - 32

**பகுதி நான்கு : அலைமீள்கை – 15**

கிருதவர்மனின் உள்ளத்துள் என் சொற்களை செலுத்திவிட்டேன் என்றே உணர்ந்தேன். “தந்தையே, நீங்கள் எங்கள் குலமூதாதை ஹ்ருதீகரின் மைந்தர். ஒவ்வொரு நாளும் பொழுதிணைவு வணக்கங்களில் நாங்கள் சொல்லும் பெயர்களில் ஒன்று அது. ஒவ்வொருநாளும் அவருக்கு நீர் அளிக்கும் நிலங்களில் ஒன்று துவாரகை” என்றேன். அவர் என்னை வெறித்து நோக்கிக்கொண்டிருந்தார். “களம்பட்ட உங்கள் மைந்தர் பாலிக்காக நீர் அளித்தவர்களில் ஒருவன் என நின்று இதை உங்களிடம் சொல்லிக்கொண்டிருக்கிறேன்” என்றேன். “என்றும் அது அவ்வண்ணமே நீடிக்கும். நாம் முரண்படலாம், போரிடலாம், அழியலாம், குலம் நம்மைக் கடந்து என்றுமிருப்பது.”

“நீ சொல்வது இயல்வதே, பிரத்யும்னன் தன் கோல் நிலைகொள்ள உன் தந்தையை தெய்வமாக்கலாம்” என்றார் கிருதவர்மன். “ஆனால் நீங்கள் முடிசூடினாலும் அதுதானே நடக்கும்? உங்கள் தந்தையின் அடையாளமின்றி எதன் பொருட்டு நீங்கள் அரசமைக்க முடியும்?” என்றார். “மெய், எங்கள் தந்தையின் அடையாளத்தை நாங்கள் விடமாட்டோம். அதை கூறுவோம். ஆனால் அதை முதன்மைப்படுத்த மாட்டோம். முதன்மைப்படுத்தவும் இயலாது. எங்கள் செயல்பாடு அவர்களுக்கு நேர் எதிரானது. நாங்கள் முடிசூடும்போது தந்தை எங்களுக்கு தேவைப்படுகிறார், சூடியபின் தேவைப்படமாட்டார். அதன் பின் நாங்கள் எங்களை யாதவர் என்றே முன் வைப்போம். எங்களை தூய யாதவர் என்றும், தொன்மையான யாதவர் என்றும் முன் வைப்பதற்கு

தடையாக இருப்பது எந்தை இளைய யாதவரின் அடையாளமல்லவா?" என்றேன்.

"நாங்கள் எங்களை கார்த்தவீரியரின் குடி என்போம். சூரசேனரின் குருதி என்போம். பலராமர் வரை ஒரு கொடிவழியை உருவாக்குவோம். அதில் ஒரு பெயராக மட்டும் இளைய யாதவரை நிலைநிறுத்துவோம். அரசே, பெருவீரர்களின் இயல்பு ஒன்றுண்டு, அவர்கள் தங்கள் வீரத்தால் வெல்வது எதிரிகளை மட்டுமல்ல, தங்கள் முன்னோடிகளையும் கூடத்தான். என்று இளைய யாதவர் எங்கள் குடியில் எழுந்தாரோ அன்றே கார்த்தவீரியரின் புகழ் மங்கிவிட்டது. இனி நாங்கள் எங்கள் குடிமூதாதையரின் பெயரை முன் நிறுத்தவேண்டுமெனில் மாவீரர் கம்சரின் பெயரையும் சொல்லித்தான் ஆகவேண்டும். கம்சரின் பெயரை சொல்லவேண்டுமெனில் இளைய யாதவரின் பெயரை சற்றே குறைத்தாக வேண்டும்."

"எண்ணி நோக்குக, நாங்கள் வென்றால் தந்தை உரு சிறுத்து மூதாதை நிரையில் நூற்றில் ஒருவர் என்றே அமைவார்! அவருக்கு இடப்பக்கம் சூரசேனரும் வலப்பக்கம் பலராமரும் அமர்ந்திருப்பார்கள். அவரை தனிப் பெருவீரராக காட்ட வேண்டிய தேவை எங்களுக்கு இல்லை. அது எங்களுக்கு இடரும்கூட. எங்கள் மாவீரர் நிரையில் நீங்களும் இருப்பீர்கள். அந்தகக் குடியின் அனைத்துப் பெருவீரர்களும் இருப்பார்கள். போஜர்களும் குக்குரர்களும் இடம்பெறுவார்கள். அவ்வண்ணம்தான் நாங்கள் யாதவர்களின் குடியொற்றுமையை பேணிக்கொள்ள முடியும்" என்றேன்.

"ஆனால் பிரத்யும்னன் அதை செய்யமாட்டார். பிரத்யும்னன் யாதவர்களை தன்னுடன் நிறுத்திக்கொள்ள தந்தையுடனான

தனது குருதிஉறவை மேலும் மேலும் நிறுவிக்கொள்ளவேண்டும். அதற்கு எந்தையை மேலும் மேலும் புகழ்ந்து தெய்வமாக்கி நிலைநிறுத்தவேண்டும். அதனூடாக எந்தை யாதவ குடித்தலைவர் அல்ல என்பதையும் அவர் எவ்வண்ணமோ நிலைநிறுத்துவார். ஏனென்றால் தந்தையை யாதவ குடிமூத்தவராக நிலைநிறுத்துகையில் மறைமுகமாக யாதவ ஆற்றலை அவர் சொல்வதாக ஆகிவிடும். யாதவர்களே துவாரகையில் இயல்பான குடிகள் என்று சொல்வதுபோல் அது தோன்றும். அது எந்நிலையிலும் அவருடைய கோன்மைக்கு எதிரானதே. அவர் யாதவர்களை குடிகளாக நிறுத்த விழைவார், அவர்கள் கோன்மைகொண்டு எழ ஒப்பமாட்டார்."

"தந்தையே, கோல்கொண்டு அமர்ந்தால் பிரத்யும்னன் சில ஆண்டுகளில் அஸ்தினபுரிபோல வரவுக்குடிகளைக்கொண்டு துவாரகையை நிறைப்பார். அவ்வண்ணம் வருபவர்கள் எந்தை இளைய யாதவரை தெய்வம் என்று வழிபடவேண்டும். அப்போதுதான் அவர்கள் பிரத்யும்னனையும் தெய்வநிரையினர் என ஏற்றுக்கொள்வார்கள். அவ்வாறு எந்தை இளைய யாதவரை வழிபடவேண்டுமென்றால் இளைய யாதவர் அவருடைய யாதவ அடையாளத்தையும் மீறிய தெய்வமாகவேண்டும். அதற்கு அவரை யாதவர் அல்லாதாக்குவது ஒன்றே வழி. அதற்கு அவரை யாதவ அடையாளத்தை மீறிய தெய்வமாக்கியாகவேண்டும். யாதவக் குடியில் தோன்றிய விண்ணவனாக அவரை காட்டவேண்டும்."

"அதன்பொருட்டு அவரை தெய்வத்தின் மானுடப்பிறப்பு என்பார்கள். அவருடைய இளமைக்கால கதைகளை விதந்து பெருக்குவார்கள். அவர் யாதவர் என்பது ஒரு தற்செயல் நிகழ்வே என்பார்கள். யாதவர் என்பது அவருடைய

அடையாளம் அல்ல, அந்த தெய்வம் வந்தெழுந்த பீடம் மட்டுமே எனக் காட்டுவார்கள். ஐயம் தேவையில்லை, பிரத்யும்னன் அதையே செய்வார்" என்றேன். "அது மிகச் சிறந்த உத்தி. எந்த விருஷ்ணியும் எந்த யாதவரும் இளைய யாதவர் என்ற பெருவீரரை, முனிவரை புகழ்வதை மறுக்க முடியாது. புகழப்புகழ அவர் தெய்வமாகி யாதவரல்லாமலாகி அகல்கிறார் என்பதை அவர்களில் எளியோர் உணரவே போவதில்லை. உணர்ந்தோர் அதை சொன்னால் அவர்களை இளைய யாதவரின் புகழை விரும்பாதோர், யாதவக் குடிமேன்மையை கருதாதோர் என்று பழி சுமத்தி அழித்தும்விடலாம்."

"பிரத்யும்னன் முடிசூடினால் அவர் சில பத்தாண்டுகளுக்குள்ளேயே மதுராவையும் மதுவனத்தையும் வென்றாகவேண்டும். யாதவ நாடுகள் அனைத்தையும் தன்னுடன் சேர்த்தாகவேண்டும். யாதவ நிலத்தை ஒருங்கிணைக்க வாளேந்திய இளைய யாதவராக தன்னை அவர் காட்டிக்கொண்டாரென்றால் மட்டுமே அதை செய்ய முடியும். எங்களுக்கு அப்படி அல்ல. நாங்கள் எந்நிலையிலும் குலத்தின் அமைப்பை அழிக்க இயலாது. ஏனெனில் அதுவே எங்கள் ஆற்றல். குலத்தின் அமைப்பு நீடிக்க நீடிக்க விருஷ்ணிகள் மட்டும் பேருருக்கொள்ளவும் இயலாது. போஜர்களிலும் அந்தகர்களிலும் உள்ள பெருவீரர்களையும் நாங்கள் முன்னிறுத்தியாகவேண்டும்."

"ஆகவே இளைய யாதவரை வரலாற்றின் ஒரு பெயரென குறுக்கவேண்டுமெனில் நீங்கள் எங்களுடன் நின்றாகவேண்டும். நாங்கள் வென்றாகவேண்டும். இளைய யாதவர் பேருருக்கொண்டு அங்கு நிலைநிற்கவேண்டுமெனில் நீங்கள் இங்கேயே இருங்கள். உங்கள் விலக்கத்தால் பிரத்யும்னன்

முடிசூடட்டும், அநிருத்தன் முடி தொடரட்டும்" என்றேன். என் தரப்பை வலுவாகச் சொல்லிவிட்டேன் என்று உணர்ந்தேன். இந்த மூதாதையரின் அவைத்திறனை மெய்யாகவே நான் அறியேன். அவர்கள் தங்கள் மைந்தரின் உள்ளத்தை நன்கு அறிவார்கள். ஆகவே சொல்கடந்து வந்து எங்கள் அகத்தை நுண்ணிதின் உணர்வார்கள். தந்தையர் உள்ளங்களை மைந்தர் அறிய இரண்டு வழிகளே உள்ளன. அவர்களின் குருதிப்பற்றை தூண்டுதல், அவர்களின் ஆணவத்தை வளர்த்தல். நான் இரண்டையும் இணைத்துச் செய்துவிட்டேன் என்று எண்ணிக்கொண்டேன்.

கிருதவர்மன் மெல்ல சிரிப்பதை கேட்டேன். அவர் உள்ளம் செல்வதெங்கே என எனக்கு புரிந்தது. என் சொற்கள் அவரை நகர்த்திவிட்டன. ஆனால் அவ்வண்ணம் நகர்ந்தது குறித்து அவர் நாணுகிறார். "அதாவது, எனக்கு ஒரு வாய்ப்பு கொடுக்கிறீர்கள். பிரத்யும்னன் இளைய யாதவரை தெய்வமாக்குவான், நீங்கள் தந்தையென நிலைநிறுத்துவீர்கள். இரண்டில் ஒன்றை நான் தெரிவுசெய்யவேண்டும், இல்லையா?" என்று கிருதவர்மன் சொன்னார். அவருடைய அந்தச் சொற்களுக்காகவே நான் காத்திருந்தேன். "இல்லை, நான் இங்கு வந்தது மூன்றாவது ஒரு வாய்ப்பை தங்களுக்கு அளிப்பதற்காக" என்றேன். அவர் அதை எதிர்பார்க்கவில்லை. குழம்பி "கூறுக!" என்றார்.

"தந்தையே, நான் வந்தது மேலும் ஒன்றை உங்களுக்கு உரைப்பதற்காக. அங்கு மூன்று தரப்புகள் இருப்பது புறத்தோற்றம். ஒரு தரப்புக்குள்ளும் பல்வேறு துணைத்தரப்புகள் உண்டு. எண்பது பேரில் என்றேனும் ஒரு நாள் துவாரகையின் மணிமுடியை சூடலாம் என்று எண்ணாத

ஒருவரேனும் உளரா என்று கேட்டால் இல்லை என்றே மறுமொழி கூற இயலும்" என்றேன். அவர் "நீ உட்பட?" என்றார். "ஆம், இத்தனை தொலைவு வந்து இத்தனை உணர்வெழுச்சியுடன் நான் பேசிக்கொண்டிருப்பது என் தமையனுக்காகவோ யாதவ குலத்திற்காகவோ அல்ல என்பதை தாங்களும் உணர்ந்திருப்பீர்கள். ஏனென்றால் நாம் யாதவராயினும் உணர்வால் ஷத்ரியர்கள்" என்றேன். அவர் ஒன்றும் கூறவில்லை.

"நான் இம்மூன்று தரப்பிலும் எதையும் வென்றெடுத்து அமர்ந்து ஆட்சி செய்ய இயலாது. மூவரும் என்னை ஏற்றுக்கொள்ளப்போவதில்லை" என்றேன். "ஆம்" என்று அவர் சொன்னார். "ஆனால் மூன்று தரப்புகளுக்கிடையே நிகர்வல்லமையுடன் போர் நிகழுமெனில், அதில் மூன்று தரப்பினருமே மாறி மாறி முழுமையாக தோற்கடித்துக்கொள்வார்கள் எனில், எஞ்சியோருக்கு நான் தலைமை தாங்க முடியும். அவர்களுக்கு வேறு வழியில்லை. நான் அவர்களை அழைத்துக்கொண்டு துவாரகையிலிருந்து வேறெங்கேனும் சென்று ஒரு அரசை உருவாக்க முடியும். அல்லது உடைந்து சிதைந்தழிந்த துவாரகையை பிறிதொரு பெயரில் கட்டி எழுப்பி அங்கு முடிசூட முடியும்" என்றேன்.

அவர் "இடிபாடுகளில் இருந்து முளைத்தெழுதல்" என்றார். "ஆம், அவ்வண்ணம் மீண்டும் முளைத்தெழும்போது அதில் இளைய யாதவரின் பெயர் இல்லாமல் நான் பார்த்துக்கொள்கிறேன் என்ற சொல்லை நான் உங்களுக்கு அளிப்பேன் எனில் நீங்கள் என்னுடன் வர இயலுமா?" என்றேன். "உன்னுடன் நான் வரவேண்டுமா?" என்றார். "இப்போது என்னுடன் வந்து யாதவ தரப்பிற்கு படைத்தலைமை கொண்டு நில்லுங்கள். அவர்கள்

எண்ணுவதுபோல் எளிதில் யாதவர்களை வென்றுவிடமுடியாது என்ற எண்ணத்தை அவர்களுக்கு அளியுங்கள். அசுரரும் ஷத்ரியரும் ஒன்று திரண்டால்கூட யாதவர்கள் வென்று நிற்பார்கள் என்பது நீங்கள் வரும்போதே தெரிந்துவிடும். ஒவ்வொன்றும் மாறத்தொடங்கிவிடும்... ஷத்ரியப் படைகள் துவாரகைக்குள் நுழைவதை பத்துமுறை எண்ணிச்சூழ்வார்கள்" என்றேன்.

"நீங்கள் வந்தால் சாத்யகியும் களம் வராமல் இருக்கமாட்டார். உங்கள் கையில் யாதவர்களின் முழுத் தலைமையையும் கொடுத்துவிட்டு நிற்க அவரால் இயலாது. ஆம், உறுதியாக அவரும் வருவார். நீங்கள் இருவரும் சேர்ந்து படைமுகம் நின்றீர்கள் என்றால் யாதவர்களை வெல்ல அவர்களால் இயலாது. இணையான போர்த்தரப்புகள் ஏற்படும், முனைகள் கூர்கொள்ளும். மேலும் இறுக்கம் நீடிக்கும். ஏதோ ஒரு இடத்தில் வெடிக்கும். போரென்றாகும். போரில் யாதவர்களும் பெருமளவுக்கு அழிவார்கள். நீங்கள் ஷத்ரியர்களை முற்றழிப்பீர்கள், அசுரர்களை அகற்றுவீர்கள். தந்தையே, அந்தப் போரில் அந்தகர்கள் குறைந்த அளவே மடியும்படி நான் சூழ்கை வகுக்கிறேன். அந்தச் சொல்லை நான் உங்களுக்கு அளிக்கிறேன்."

"நீ சாத்யகியை சந்தித்தாயா?" என்றார் கிருதவர்மன். "ஆம்" என்றேன். "அவனிடமும் இதையே பேசினாயா?" என்றார். "ஆம்" என்றேன். "நீங்கள் மூதாதை, உங்களிடம் எதையும் மறைக்க நான் விழையவில்லை. இதே சொல்லுறுதியை அவரிடமும் பெற்றேன்." கிருதவர்மன் "அவனிடம் என்ன சொன்னாய், விருஷ்ணிகளின் சாவை குறைக்க முயல்வதாக, அல்லவா?" என்றார். "அல்ல, அவர் வருவதாக ஒப்பவில்லை. ஆகவே

இப்பேச்சு எழவில்லை" என்றேன். "தந்தையே, நான் அந்தகக் குலத்து அன்னையின் மைந்தன். அந்தகர்களின் அரண்மனையில் வளர்ந்தவன். நீங்கள் என்னை அந்தகனாக அன்றி எவ்வகையிலும் சேர்க்கக்கூடாது." கிருதவர்மன் "எனில் நன்று!" என்றார்.

அதை மேலே வளர்க்கக்கூடாது என எண்ணி நான் தொடர்ந்தேன் "என் கணிப்பு இது. பிழை எனில் கூறுக! போருக்குப் பின் எஞ்சும் யாதவர்கள் வல்லமை அற்றவர்களாகவும், துயருற்று தனித்தவர்களாகவும் இருப்பார்கள். அவர்களுக்கு நான் அரசனாகிறேன். அவர்களைக் கொண்டு ஓர் அரசை அமைக்கிறேன். ஆற்றலற்ற அரசு. ஆகவே கப்பம் கட்டி ஒளிந்திருக்கும் எளிய அரசு. அது எனக்கு போதும்." அவர் சில கணங்களுக்குப் பின் "உன் உள்ளத்தை ஊடுருவிப் பார்க்க என்னால் இயலாது என்று எண்ணுகிறாயா?" என்றபின் உரக்க நகைத்து "ஒவ்வொரு படைவீரனின் உள்ளத்தையும் இன்னொரு படைவீரன் எண்ணி எண்ணி சொல் சொல் என எடுக்க முடியும். ஏனெனில் படைவீரர்கள் ஒன்றே போன்றவர்கள்" என்றார்.

நான் அவர் சொற்களுக்காக காத்திருந்தேன். "நீ இப்போது எண்ணுவது என்னவென்றால் அவ்வண்ணம் மூன்று தரப்பினரும் முற்றழிந்தபின் எஞ்சிய யாதவக் குடியில் இருந்து நீ அரசன் என எழுந்தால் முடிசூடும் வரைக்கும் மட்டுமே நீ அனைவருக்கும் கட்டுப்பட்டவன். அதன் பிறகு நீ ஒரு தனி மன்னனென எழுவாய். துவாரகையை இளைய யாதவர் உருவாக்கியதுபோல நீ அதை மீட்டெழுப்புவாய். அவர் கொடிவழியென அங்கு அமர்ந்திருப்பாய்." அவர் குரல் மேலும் சிரிப்பை கொண்டது. "அப்போது நான் சாத்யகியால்

கொல்லப்பட்டிருப்பேன், அவன் என்னால் கொல்லப்பட்டிருப்பான். அப்படி கணித்துள்ளனர் நிமித்திகர், இல்லையா?"

நான் உறுதியாக "அல்ல" என்றேன். "இளம் அகவையிலிருந்தே நான் எண்ணியது எந்தையைப்போல் ஆகவேண்டும் என்றுதான். அதை மறுக்கவில்லை. ஆனால் கடந்த சில நாட்களாக எந்தையைக் கடந்துசெல்ல வேண்டும் என்ற கனவு என்னுள் இருக்கிறது. அரசே, இந்த நீண்ட பாலைவனத்தைக் கடந்து வந்த இந்த நாட்களில் எந்தை இல்லாது நான் மட்டும் நின்றிருக்கவேண்டும் என்ற எண்ணத்தை அடைந்தேன். எந்தையை நான் ஒருபோதும் சென்றடைய இயலாது. அவருடைய புகழும் பெருமையும் என்னை சிறியவன் என்றே ஆக்கும். போருக்குப் பின் எப்படி நான் முடிசூடினாலும் என் மேல் பழியே குவியும். போரில் எஞ்சியிருப்பதே பழி என எண்ணுவர் வீரர்."

"அத்துடன் சூதர்களை எவரும் ஏமாற்ற இயலாது. பிறர் இல்லாமையால் வேறு வழியின்றி நான் அரசனானேன் என்று கூறுவார்கள். பின்னர் மெல்லமெல்ல மூவரையுமே நான் அழித்தேன் என்பார்கள். எவ்வண்ணம் அழித்தேன் என கதைகளை உருவாக்குவார்கள். மூன்று பேரின் போருக்குப் பின் சூழ்ச்சி செய்து குருதியுண்டு எழுந்த நரி எனும் பழி என்மேல் இருக்கும். ஒருவேளை எந்தையையே நான்தான் துவாரகையை விட்டு விரட்டினேன் என்றுகூட புனைந்துகொள்வார்கள்" என்றேன். "எந்தையின் மைந்தன் என என்னை முன்னிறுத்தும் தோறும் அப்பழி பெருகும். எந்தையை அவர்கள் மறந்தால் மட்டுமே நான் எழ முடியும். எந்தை இயல்பாக காலத்தில் மறையவேண்டும்."

“மாவீரர்களை அழிக்க முடியாது. கதைகளாக்கி விலக்க முடியும். கதைகளை பெருக்கி மேலும் பெருக்கி அவரை தொலைவுக்கு கொண்டுசெல்வேன். யதுவும் மைந்தர்களும் கார்த்தவீரியரும் வாழும் உலகுக்கு. அங்கிருந்து அவர்கள் வாழும் உலகுக்கு வரமுடியாது. என்னைப் பற்றிய கதைகளை என் முதுமையில் நான் உருவாக்கிக்கொள்வேன். அவை முற்றிலும் வேறு கதையாக இருக்கவேண்டும். முந்தைய கதைகளின் நீட்சியாகவும் அவற்றிலிருந்து வேறுபட்டவையாகவும் ஆகும் கதைகள்” என்றேன். “அவற்றை உருவாக்குவது மிக எளிது. கதைகளின் ஆற்றல் அவை சுவையானவை என்பது. கதைகளின் நோய் என்பதும் அவை சுவையானவை என்பதே. எந்தப் பொய்யையும் சுவையானதாக சமைத்தால் எந்த மெய் மேலும் ஏற்றிவிடலாம் என்பதே கதைகளின் சிறுமை.”

“மூதாதையே, இங்கு வரும் வழியில் எண்ணினேன், எந்தையை மறக்கச் செய்ய என்னால் இயலாது. பாரதவர்ஷத்தின் நினைவில் அவர் பதிந்துவிட்டார். அப்பெரும்போரை அவர் இயற்றியமையாலேயே இனி ஆயிரமாயிரம் ஆண்டுகள் அவரை எவரும் மானுட நினைவிலிருந்தே அகற்ற இயலாது. ஆனால் ஒன்று செய்யலாம், அவரை அவர் அல்லாமல் ஆக்கலாம். அவர் பலமுகம் கொண்டவர். அதில் ஒன்றை மேலெழச் செய்யலாம். அவர் மேல் எதையும் புதிதாக ஏற்ற இயலாது. ஆனால் அவரில் இருக்கும் ஒன்றை மிகையாக்கி பெருக்கிக்கொள்ளலாம். கோகுலத்தில் பெண்களுடன் ஆடும் எளிய களியாட்டுச் சிறுவனாக அவரை காட்டலாம். குழலூதி உளம் மயக்கும் குறும்பனாக விரிக்கலாம். அதைப் பற்றிய பாடல்களை உருவாக்கலாம். அதைப் பற்றி கதைகளை உருவாக்கலாம்.”

“அவ்வாறாக இப்போர்ச்செய்திகள், வீரகதைகள், அரசியலாடல்கள், குலவரலாறுகள் அனைத்திலிருந்தும் அவர் விலக்கப்படுவார். பெண்களுடன் ஆடி மகிழ்ந்திருக்கும் சிறுவன், அதற்கு மேல் ஒன்றுமில்லை என்று ஆவார்” என்றேன். கிருதவர்மன் எண்ணுவது எனக்குத் தெரிந்தது. “நீங்கள் எண்ணுவது எனக்கு புரிகிறது. ஏன் அதை தெரிவுசெய்கிறேன் என்று. மூதாதையே, அவரது புகழை அழிப்பதற்கு ஒரு எதிர்ப் பெயரை உருவாக்குவதல்ல உகந்த வழி. அவருடைய நற்பெயர்களில் ஒன்றை பெரிதுபடுத்துவது. தன்போக்கில் பெருகி வளரும் இயல்புகொண்ட ஒன்றையே அவ்வாறு சொல்லமுடியும். இப்போதே அவருடைய மூன்று அடையாளங்களில் ஒன்று அது.”

“அவர் பெருவீரர், பேரறிஞர், பெருங்களியாட்டர். சூதர்கள் அவ்வண்ணமே அவரை பாடுகின்றனர். அவரை நான் களியாட்டர் என்று முன் வைக்கிறேன். அது புதிய சித்திரம் அல்ல. இங்கே அவர் இந்திரவழிபாட்டை நிறுத்தியதும் அவரை இந்திரன் என்றே வழிபடத் தொடங்கினர். அவருக்கு பதினாறாயிரத்து எட்டு மனைவியர் இருப்பதாக சூதர் கதைகள் பாடுகின்றன. நான் ஒருவகையான இந்திரன் என்றே காட்டுகிறேன். பெண்களுடன் ஆடுபவர். இல்லங்களுக்குள் அறியாது காற்றென புகுந்து கன்னியரை கவர்பவர். கனவுகளில் நுழைந்து அவர்களை காமம் கொள்ளச் செய்பவர். இந்திரனின் எல்லா கதைகளையும் அவர்மேல் ஏற்றிவிடுகிறேன். அது வளரும் சித்திரம். அதை பெண்கள் வளர்ப்பார்கள்.”

“அதுவே அம்மூன்று சித்திரங்களில் அந்தக் கதைக்கு மிக உகந்தது. அறிஞரென அவரை முன்வைத்தால் புலவர்களே ஏற்பார்கள். ஆட்சியாளர் என மாவீரர் என முன்வைத்தால்

அவரைப்பற்றி பாடாண் திணை மட்டுமே எழ இயலும். அகத்துறையின் அனைத்துத் திணைகளையும் அவர் நிரப்பி அமர்வார். முல்லையும் குறிஞ்சியும் மருதமும் பாலையும் நெய்தலும் ஆவார். அச்சித்திரமே இசைக்கு உகந்தது. ஆடலுக்கு இயைவது. காவியச்சுவை கொண்டது. கன்னியருக்கு அவர் அகக்காதலர். அன்னையருக்கு அவர் இளமைந்தர். ஆண்களுக்கு அவர் தங்களுள் வாழும் அழியா இளைஞன். அவர் களியாட்டர் என்று ஆகும்போது அவர் பேருருக்கொண்டு எங்கோ இருப்பார். நாம் அவருக்கான எளிய பூசனைகள் வழியாக அவரை மேலும் ஆழப் புதைப்போம்."

"இச்சொல்லை நான் உங்களுக்கு அளிக்கிறேன். நான் வென்றால் மக்கள் நினைவில் அவ்வாறே அவரை எழுப்புகிறேன். அதைக்கொண்டே பிற அனைத்தையும் மறைக்கிறேன். நூறாண்டுகளுக்குப் பின் அவர் போர் புரிந்தாரா என்ன, நூல் நவின்றாரா என்ன என்று அவருடைய கதையை நாளெல்லாம் கேட்டு வளர்ந்தவர்களே வியக்கும் வண்ணம் ஆக்கிவிடுகிறேன். அவ்வாறு அவரையே மறைக்கிறேன். தோகையைக்கொண்டு மயிலை மூடுகிறேன். அவரை மறைத்தபின் அந்த இடத்தில் என்னை நிறுத்துகிறேன். என்னை களியாட்டற்றவன் என்றும் கலைகளில் ஆர்வமற்றவன் என்றும் காட்டுகிறேன். அரசுசூழ்தலும் ஆட்சியும் மட்டுமே அறிந்த முடிமன்னனாக நிலைநிறுத்துகிறேன்."

"அவ்வுரு மெல்ல மெல்ல அவருக்கு மேலெழும். அவர் தன் களியாட்டால் அழியவிட்ட துவாரகையை, யாதவப் பெருங்குலத்தை தன் கனவுகளையும் சிரிப்பையும் படையலிட்டு காத்தவன் என்று என்னை காட்டுகிறேன். அவரில் இல்லாதிருந்த ஒன்று என்னில் பேருருக்கொண்டதென்றும்

என்னில் அது பேருருக்கொண்டதனாலேயே துவாரகை நிலைநின்றதென்றும் அவருடைய தோல்விகள் அனைத்திலிருந்தும் நான் வென்று எழுந்தேன் என்றும் நிறுவுகிறேன். அதுவே அவரை அழிக்கும் வழி" என்று நான் சொன்னேன். "மூதாதையே, ஒன்றை உணர்க! நீங்கள் இனி களத்தில் அவரை வெல்ல இயலாது. ஏனென்றால் அவர் எந்தக் களத்திலும் இல்லை. உலகக் களங்கள் அனைத்தையும் அவர் கடந்துவிட்டார். அவர் இன்றிருப்பது புகழின் களத்தில். அதில் அவரை வெல்ல வேண்டும். அதற்கு ஒரே வழி இதுதான்" என்றேன்.

"அனைத்துக்கும் மேலாக ஒன்று உண்டு மூதாதையே, பெருந்தந்தையரை மைந்தர் அன்றி எவரும் வெல்லமுடியாது. இது மீள மீள நிறுவப்பட்ட உலகியல் உண்மை. நீங்கள் அவரை என் வழியாகவே வெல்லமுடியும் என்று உணர்க! எந்தையின் மைந்தர்கள் எண்பதின்மர். அவர்களில் ஒவ்வொருவரும் அவருடைய ஒவ்வொரு இயல்பை கொண்டிருக்கிறார்கள். அவருடைய சொல்சூழ் திறனின் நீட்சி என்னிடமே. அதை இப்போதே உணர்ந்திருப்பீர்கள். அவரை எந்த மைந்தனாவது வெல்லமுடியும் என்றால் அது நானே" என்றேன்.

கிருதவர்மன் "உன் சொற்களை நான் செவிகொள்வது அதனாலேயே" என்றார். "நீ அங்கே தோன்றிய முதற்கணம் இளமைத் தோற்றத்துடன் உன் தந்தை எழுந்ததாகவே எண்ணினேன். என் அகம் நடுங்கியது. உன்னில் எந்த உடற்சாயலும் இல்லை. அசைவுகளும் வேறு. குரலும் வேறே. ஆனால் நீ அவரென்று ஒரு கணம் தோன்றினாய். பின்

மறைந்தாய். ஆனால் பேசப்பேச உன்னில் அவர் தோன்றித்தோன்றி மறைகிறார்.”

“ஆம், அவர் நானே” என்று நான் சொன்னேன். “என்னில் என்றும் எழும் கனவு அவரை நான் கொல்வதாகத்தான். அதைப் பற்றிய பதற்றம் எனக்கு இருந்தது. பின்னர் தெளிந்தேன். அது ஊழ் என்று. எந்தையும் தந்தைக்கொலை செய்தவரே. தாய்மாமன் கம்சரைக் கொன்ற பழி அவர்மேல் என்றும் இருக்கும். அது உருத்துவந்து ஊட்டும். அதுவே என்னில் எழுகிறது” என்றேன்.

# கல்பொருசிறுநுரை - 33

**பகுதி நான்கு : அலைமீள்கை – 16**

நீண்டநேரம் கிருதவர்மன் அமைதியாக இருந்தார். பின்பு “நான் அவரை சந்திக்கும் களங்கள் முடியப்போவதே இல்லை என்றே எப்போதும் உணர்கிறேன். என் இருப்பு என்பதே அக்களங்களில் எதிர்நிலையாக உருவாவதுதான். அந்தக் களங்கள் இல்லையேல் நான் இல்லை” என்றார். “மூதாதையே, உங்கள் களங்கள் பிறவிபிறவியென நீள்வனவாக இருக்கலாம். ஆனால் நீங்கள் ஒருபோதும் இனி அவரை இங்குள்ள களத்தில் சந்திக்கப்போவதில்லை” என்று நான் சொன்னேன்.

“அவர் முற்றாக விலகிவிட்டார். சாத்யகி சென்று அவரை சந்தித்து மீண்டதை விரிவாக சொல்கிறேன். அவர் எந்தையின்

காலடியில் விழுந்து மன்றாடினார். அன்னையர் எண்மரின் கண்ணீருடன் சென்றிருந்தார். அவரை எந்தை திருப்பி அனுப்பினார். ஆனால் சாத்யகி செல்லும்போதே நான் அறிந்திருந்தேன், அவர் வரப்போவதில்லை என்று. சாத்யகி திரும்பிவந்தபோது மைந்தர் எண்பதின்மரில் எவரும் மெய்யான ஏமாற்றம் அடையவில்லை. அப்போது அறிந்தேன், எவருக்குமே அந்த எதிர்பார்ப்பு இருக்கவில்லை என்று. மைந்தர் அவரை அறிந்திருக்கிறோம்" என்றேன். "இக்களம்போல் அவர் எழுந்தாகவேண்டிய பிறிதொன்று இல்லை. இங்கே அவர் விலகி நிற்கிறார் என்றால் இனி எங்குமில்லை என்றே பொருள்."

"நீங்கள் அவரை களத்தில் சந்தித்ததாக எண்ணிக்கொள்வதுகூட மாயையே" என்று நான் தொடர்ந்தேன். "இங்கு வாழும் எவரும் அவரை களத்தில் சந்தித்ததில்லை. ஏனெனில் எந்தக் களத்திலும் அவர் நின்றதில்லை. இங்கு இத்தனை காலம் அவர் திகழ்ந்திருந்தாரென எண்ணிக்கொள்வதைப்போல் மாயை பிறிதில்லை. அவர் இங்கில்லை, ஒவ்வொரு இடத்திற்கும் ஒவ்வொரு தருணத்திற்கும் உரிய தன் உருவொன்றை அவர் படைத்தார். அதனுடன் உங்களை விளையாடவிட்டார். எட்டு அன்னையர் அவருடைய உருவொன்றுடன் முயங்கி எங்களை பெற்றனர். நாங்கள் எண்பதின்மரும் எங்களுக்குரிய உருவொன்றை படைத்து அதனுடன் உறவாடினோம். விரும்பியும் வெறுத்தும் முயங்கியும் விலக்கியும்."

"நீங்கள் அவர் எதிரிகள், உங்களுக்குரிய உருவை நீங்கள் படைத்துக்கொண்டீர்கள். அவற்றுடன் போராடும்போது நீங்கள் ஒருபோதும் வெல்ல இயலாது. ஏனெனில் அது உங்களுக்குள்ளிருந்து நீங்கள் படைத்துக்கொண்டது.

அவற்றுடன் போராடுகையில் நீங்கள் உங்களுடன் போராடுகிறீர்கள். தன்னை தான் வெல்லுதல் எளிதா? யோகிகளுக்கும் அரிய செயல் அல்லவா அது? எவருடன் நீங்கள் போரிட்டீர்கள் கூறுக?" என்றேன். சொல்லிச்சொல்லி நான் உருவாக்கிய சித்திரத்தை முழுமை செய்துவிட்டிருந்தேன். அதை தொட்டுத்தொட்டு பெரிதாக்க என் அகம் துள்ளியது.

கிருதவர்மன் வெறுமனே முனகினார். "இளமையில் இளைய யாதவரென்று உங்களுக்கு வந்து சேர்ந்த ஒரு வடிவின் மேல் பெருங்காதல் கொண்டிருந்தீர்கள். கோகுலத்தில் ஆடியவன், பெண்டிருக்கு இனியவன். பேராற்றல் கொண்டு எழுந்து கம்சனை வென்றவன். மதுராபுரியின் புகழ்மிக்க அரசன். யாதவ குலத்தலைவன். இந்த யுகத்தின் வெற்றிக்கொடி. நீங்கள் அவன் மேல் மோகம் கொண்டீர்கள். அவனை வழிபட்டீர்கள். ஒவ்வொரு நாளுமென நீங்களும் உளத்தில் அவனை பெருக்கினீர்கள். பேருரு அடையச்செய்தீர்கள். அதன் காலடியில் அமர்ந்திருந்தீர்கள். யாதவரே, அவ்வுருவுடன் நீங்கள் துவாரகைக்கு வந்தீர்கள். அங்கிருந்த அரசரைக் கண்டு மேலும் விம்மிதம் கொண்டீர்கள்."

"மேலும் மேலும் அவரை வளர்த்தீர்கள். பாரதவர்ஷத்தைவிட பெரிய ஒருவராக ஆக்கினீர்கள். நீங்கள் அறியாமலேயே உங்களை அதற்கிணையாக பெருக்கிக்கொண்டிருந்தீர்கள் என்று உணர்ந்தீர்களா? ஒன்றை பெருக்கி கனவு காண்பவன் தன் சிறுமை உணர்வால் அதை செய்யவில்லை. தன் பெருமையுணர்வால் அதை செய்கிறான். ஒவ்வொரு கணமும் அதற்கிணையாக தன்னையும் பெருக்கிக்கொள்கிறான். தெய்வத்திற்கு இணையானது பக்தனெனும் ஆளுமை.

தெய்வத்தை அள்ளுவது பக்தனெனும் ஆணவம். நீங்கள் உங்களுக்குள் பெருக்கி வைத்திருந்த அவர் உருவுக்கு நிகராக அதன் ஆடிப்பாவையென நீங்கள் உருவாக்கி நிறுத்தியிருந்தது உங்கள் பேருரு.”

“எங்கோ ஒரு கணத்தில் நீங்கள் உணர்ந்தீர்கள், அப்பேருருவை அவர் அடையாளம் காட்டவில்லை என. அவர் அதை பொருட்டெனக் கருதவில்லை. அத்தருணத்தில் அனைத்தும் நஞ்சாகியது. நீங்கள் கசந்தெழுந்தீர்கள். காழ்ப்பும் பகைமையும் கொண்டவரானீர்கள். எரிந்து எரிந்து எரிந்து இதுநாள் வரை வந்திருக்கிறீர்கள். உங்களுக்கு ஒரு களம் கிடைத்திருக்கலாம், அவருடன் எதிர் நின்று சமராடுவதற்கு. ஓர் அம்பையேனும் அவர் உங்கள் மேல் எய்திருக்கலாம், அது நிகழவில்லை. குருக்ஷேத்ரப் போர்க்களத்தில் நீங்கள் எதிர்நின்று போரிட்டது அவருடன்தான். படைத்திரள் என விற்பெருவீரர் என அரசர் என பிதாமகர் என பெருகி உங்கள் முன் வந்த அனைவரும் அவர்தான். ஆனால் அவர் அப்பால் எதையும் ஆற்றாமல் அமைந்திருந்தார்.”

“அங்கே வென்றீர்கள், தோற்கடிக்கப்பட்டீர்கள், எரிந்தழிந்து உடலுருகி இங்கு வந்து அமர்ந்திருக்கின்றீர்கள். உங்கள் படைக்கலன்கள் அனைத்தும் தொடப்படாது துருப்பிடிக்கின்றன. உங்கள் உளஆற்றல் இலக்கின்றி அலைமோதுகிறது. எண்ணுக, நீங்கள் அவரை வெல்லாது இறக்க இயலாது! உடல் அழியலாம், உடலாகி வந்தது, உடலை இயக்கியது, உடல் கடந்து தருக்கியது, உடலில் அனலென இயல்வது ஒருபோதும் இறக்க இயலாது. அழிவின்மை கொண்டு இங்கு நின்றிருக்கும் உங்கள் பெருவஞ்சம். ஏனெனில் இது இங்கு ஊதி எழுப்பப்பட்ட ஓர் அனல். தன் பணி முடித்து தானே தன்னை அது

அணைத்துக்கொள்ள வேண்டும். இல்லையெனில் மேலும் மேலும் பெருகுவதே அதன் இயல்பு.”

“அனலுக்கு ஓர் பிறவிப்பண்பு உண்டு என்பதை அறிந்திருப்பீர்கள். பெருகிக்கொண்டிருக்கும் வரைதான் அதனால் திகழவே முடியும். வஞ்சமும் பகைமையும் அவ்வாறுதான். நீங்கள் உங்கள் வஞ்சத்தையும் பகைமையையும் பெருக்கி நிலைநிறுத்தும்போது மட்டுமே இங்கிருக்கிறீர்கள். அவை அழிகையில் நீங்களும் அழிவீர்கள். எனில் உங்களை ஒருபோதும் எதிர்கொள்ளாத ஒருவரை எவ்வண்ணம் வெல்வீர்கள்? அவரிடம் எவ்வண்ணம் போரிடுவீர்கள்? வெல்லலாம் தோற்கலாம், போரிடவே இயலாதென்றால் உங்களுக்கு எஞ்சுவதென்ன?”

“இங்கு நீங்கள் அமர்ந்திருக்கையில் அடைந்திருக்கும் பெருவெறுமை எதுவென்று உணர்கிறீர்களா என்ன? நீங்கள் கொண்டிருப்பது ஒரு பொருளின்மை. உங்கள் வஞ்சத்தை என்ன செய்வதென்றறியாது அமர்ந்திருக்கிறீர்கள். பேருருக்கொண்ட வளர்ப்பு விலங்கொன்றை கொஞ்சுவதுபோல அருகே வைத்துக்கொண்டு இங்கே ஒடுங்கியிருக்கிறீர்கள். மூதாதையே, ஒரு வழியே உள்ளது. எழுக! அவருடன் போர்புரிக! போர் ஒன்றே உங்களை நிலைநிறுத்துவது. போர் ஒன்றே உங்களுக்கு புகழ் அளிப்பது. போர் ஒன்றே உங்களுக்கு வீடுபேறளிப்பது.”

மானுடர் எவ்வண்ணம் பழைய உடைகள் களைந்து புத்தாடை அணிகிறார்களோ அவ்வண்ணமே உடல்கொண்டு வந்து உள்ளிருப்பது நலிந்த உடல்களை உதறி புதியவற்றை கொள்கிறது. வஞ்சம் ஆற்றல் அளிப்பது, வஞ்சம் நிலைபேறளிப்பது, வஞ்சம்கொண்டோர் வெல்கிறார்கள். ஆனால்

அவ்வஞ்சம் செயலாக ஆகும்போது உணர்வுநிலைகளை கடந்தாகவேண்டும். இருத்தல் இல்லை என்னும் இருநிலை கடந்து ஒன்றாகவேண்டும். உள்ளத்தால் அல்ல தன்னுணர்வால் போர்புரிக! உள்ளத்தை அடக்காதவருக்கு ஆழ்ந்த அறிவு இல்லை. அவருக்கு தன்னிறைவும் இல்லை. தன்னிறைவற்றவருக்கு அமைதி இல்லை. அமைதியற்றவருக்கு வெற்றியின் இன்பங்களும் இல்லை.

போரின்றி வெற்றிச் சிறப்பில்லை என்பதை அறிக! செயல்களை செய்யாதொழிவதனால் எவரும் செயலற்ற நிலையை அடைவதில்லை. செயலை நாம் ஒழியலாகாது, செயல் நம்மை ஒழியவேண்டும். நிறைவடைந்த செயலே செய்பவனை விடுவிக்கிறது. செயலால் கைவிடப்படாதவர் துறவை அடைவதில்லை. புலன்களை வலிந்து அடக்கிக்கொண்டு ஆழத்தில் அப்புலன்களை ஆளும் அனலை ஓம்பியபடி இருக்கையில் எப்படி விடுதலை நிகழ முடியும்? அது தன்னைத்தானே ஏய்த்தலன்றி வேறென்ன? புலன்களை ஆள்பவர், தனக்குரிய செயலை தன்னை அளித்துச் செய்பவரே செயல்நிறைவடைந்து வீடுபேறடைகிறார். இங்கு உங்களுக்கென அமைந்த தன்னறத்தை செய்க! செயலின்மையைவிட மேலானது செயல். செயலின்றி இருந்தால் நீங்கள் இவ்வுடலையே சுமையென உணரலாகும், ஆகவே எழுக, போர்புரிக!

எண்ணுக மூதாதையே, இங்கிருந்து அனைத்தையும் தனக்குள் திருப்பி எடுத்தபடி அவர் எங்கோ சென்று ஒடுங்கிவிட்டார்! இனி அவருடன் நீங்கள் போரிட இயலாது. அவருடையதென்று ஒரு துளி இனி எங்கும் எஞ்சாது. ஐயமே தேவையில்லை, இனி எந்தக் களத்திலும் அவர் தோன்றப்போவதில்லை. நீங்கள்

அவரை இனி ஒருபோதும் முகத்தோடு முகம் நோக்கப்போவதுமில்லை. இங்கிருந்து அவ்வண்ணம் ஒரு வாய்ப்பை எண்ணி நீங்கள் பொழுது கழித்தீர்கள் எனில் முடிவிலிக்கணம் வரை எரிந்தெரிந்து அழிவின்மை கொள்ளும் பெருந்துயரொன்றை உங்களுக்கென ஈட்டிக்கொள்வீர்கள்.

அரசே, நீங்கள் வெல்ல வேண்டிய எதிரி ஒருவர் பேருருக்கொண்டு இங்கு நின்றிருப்பதை நீங்கள் உணரவில்லையா? தன் உருவங்களை ஆயிரம் பல்லாயிரம் என பெருக்கி இந்நிலத்தில் நிறைந்தவன் அவற்றை எல்லாம் இங்கு விட்டுச் சென்றிருக்கிறான். அம்முகங்கள் இங்கு வாழும். நிலங்கள்தோறும் தெய்வங்கள் என அமர்ந்து வெண்ணையும் இனிப்பும் கொள்ளும். பீலி சூடி, விழி மலர்ந்து விளையாடும். குழலூதி கனவுகளுக்குள் வந்து அமரும். இனி நீங்கள் போரிட வேண்டியது அப்பேருருவுடன்தான்.

ஒவ்வொன்றாக அவ்வுருவங்களை நீங்கள் அழிக்கலாம். அது கடல்நுரையை ஒவ்வொரு குமிழியாக உடைப்பதற்கு நிகர். நீங்கள் போரிடுவதற்கு அலையலையென எழுந்து வந்துகொண்டிருக்கும் ஆயிரம் பல்லாயிரம் இளைய யாதவர்களை பாருங்கள். ஒருகணம்கூட இங்கு நீங்கள் ஓய்ந்திருக்க பொழுதில்லை என்று உணருங்கள். எழுக, உங்கள் இறுதிக்களம் ஒருங்கியிருக்கிறது! இதை தவறவிட்டால் இங்கு நீங்கள் அமைதிகொள்ள இயலாது. அமர்ந்திருக்கும் இடத்திலேயே ஆயிரம் பல்லாயிரம் காதம் அலைவீர்கள். உங்களை நோக்கி அறைகூவுவது காலவடிவம் கொண்ட பரம்பொருளே என்றுணர்க! எழுக! போர்புரிக!

கிருதவர்மன் விழிகள் முற்றிலும் மாறிவிட்டிருந்தன. அவர் நெடுநேரம் கழித்து தணிந்த குரலில் “உண்மை” என்றார். “நான்

இங்கு இருக்கையில், வெளியிலிருந்து வரும் ஒவ்வொரு சொல்லையும் நூறு முறை தடுக்கும் கதவுகள் என்னை சூழ்ந்திருக்கையில்கூட எவ்வண்ணமும் சில நாட்களுக்கு ஒருமுறை அவர் பெயர் என்னை நோக்கி வந்தபடி இருக்கிறது. வெளியே சிறுபனித்துளி உதிர்வதென ஒலிக்கும் அவர் பெயர் என்னுள் இடியோசையாகிறது." நான் "அப்பெயரை நீங்கள் அழிக்க இயலாது. ஒன்றை அழிப்பதற்கு மிகச் சிறந்த வழி அதை திரிப்பதே. அதனுடன் பிறிதொன்றை இணைத்துவிடுதல். முதல் வடிவை சுமைகொள்ளச் செய்வது அது. நோயுறச் செய்வது. அறுதியாக வீழ்த்துவது" என்றேன்.

"நமது படைக்கலங்கள் நமது உயிராற்றலால் இயங்குவன. நோயை அவ்வுயிர் தனது உயிராற்றலால் இயக்கிக்கொள்கிறது. எதிரியை நோயுறச்செய்க! ஒவ்வொரு உயிருக்கும் நோயை பெருக்கிக்கொள்ளும் விழைவும் உண்டு. அது ஒவ்வொன்றையும் உடைத்து அழிக்கும் காலத்தின் ஆணை. உடல் தன் உயிருடன் நோயையும் கலந்துவிடும். உயிர் எவ்வளவு பெருகுகிறதோ அவ்வளவு நோயும் பெருகும்" என்றேன். "பெருமானுடரின் புகழை, மாபெரும் கருத்துக்களை, யுகக்கனவுகளை வெல்ல எளிய வழி அவற்றை திரிப்பதே. அவற்றின் எல்லையற்ற உயிராற்றலால் அவை நம் எதிர்ப்புக்கு அப்பாற்பட்டவையாகின்றன. நாம் அவற்றை திரித்தால் தங்கள் உயிராற்றலாலேயே அவை தங்களை மேலும் மேலும் திரித்துக்கொள்கின்றன. திரிபால் பிரிவினை அடைகின்றன. பிரிவுகள் மோதிக்கொள்கின்றன. ஒவ்வொன்றையும் வீழ்த்த விழையும் காலத்தை நாம் துணைகொள்வோம்."

"நாம் இளைய யாதவரை திரிப்போம். அவர் எங்கெங்கு செல்கிறாரோ அங்கெல்லாம் அத்திரிவுகளும் சென்றமையும்.

அவற்றை உருவாக்குவதற்கு நமக்கு ஓர் அரசு தேவை. அரசே, துவாரகையில் இன்று அரசு சூடி அமர்ந்திருப்பவர்களில் நான் மட்டுமே அவருடைய பாவையை பெரிதாக்க வேண்டியதில்லை என்ற தெளிவை அடைந்திருக்கிறேன். அந்தப் பாவையை பெரிதாக்குவதைவிட அழிப்பதே உதவுவது என்றும் எண்ணுகிறேன். வெவ்வேறு வகையில் அங்கிருக்கும் அனைத்துத் தரப்பினரும் அவரது உருவைப் பெரிதாக்கி அதை தன் பீடமாகக் கொள்ளவேண்டும் என்னும் தேவை உடையவர்கள். அங்கு வந்து என்னுடன் நின்று எனக்கு மணிமுடியை அளித்தீர்கள் எனில் அவருக்கு எதிரான போரில் மிகப் பெரிய தேர் ஒன்றை நீங்கள் அடைவீர்கள்."

"என் மேல் ஏறி நில்லுங்கள். என்னை கருவியாக்கிக் கொள்ளுங்கள்" என்று நான் சொன்னேன். "அவர் புகழை அழிப்பதற்கான வழிகளில் முதன்மையானது அவர் மைந்தர் தங்களுக்குள் போரிட்டு அழிய வேண்டும் என்பது. உலகைக் காக்க வேதம் உரைத்தவன் தன் குடி காக்க இயலாது ஒழிந்தான் என்னும் அவப்பெயர் நிலைகொள்ள வேண்டும். தன் கண்முன் மைந்தர்கள் போரிட்டு அழிவதைக் கண்டு நெஞ்சு பதைத்து துடித்து விழிநீர் சிந்தினான் என்று உலகு எண்ண வேண்டும். குருக்ஷேத்ரத்தில் அவன் இழைத்த அனைத்திற்கும் துவாரகைக் களத்தில் நிகர்வைத்தான் என்று சொல் எழவேண்டும். உளமுடைந்து அவன் அழுதான் என்றும் பெரும்பழிகொண்டு அகன்றான் என்றும் வீணில் இறந்தான் என்றும் கதை நிலைகொள்ளவேண்டும்."

"அதன்பின் குருக்ஷேத்ரத்தை நாம் மாற்றி வனைய இயலும். அங்கு வீழ்ந்தவர் அனைவரையுமே நாம் சொல்லில் மீட்டெடுக்கலாம். ஒளியுடன் பீஷ்மர் எழவேண்டும். ஏழு புரவித்

தேரில் கர்ணன் எழவேண்டும். நூறு தோள்களுடன் துரியோதனன் தம்பியருடன் எழவேண்டும். அஸ்வத்தாமன் அழிவற்ற அறச்சீற்றத்துடன் நிலைகொள்ள வேண்டும். நிஷாதர்களின் முகமென கடோத்கஜன் இல்லந்தோறும் நிலைகொள்ள வேண்டும். அவர்கள் அனைவரும் தெய்வங்களென இங்கு நிலைகொள்கையில் அவர் சுருங்கிச் சிறுப்பார். அதை செய்வதற்கு நமக்கு அரசு தேவை."

"அரசே, துவாரகை அவர் விட்டுச்செல்லும் தடம். நம் கோல் கீழ் அந்நகர் பிறிதொன்றாகவேண்டும். அது அவரின்றி நிலைகொள்ள இயலாது. எனில் அவ்வாறு நிலைகொள்ளும் அவர் எவ்வகையிலும் அவரன்று என்றிருந்தால் அதுவே அவரை மறைக்கும் ஒன்றாகும். முற்றிலும் புதிய ஒரு இளைய யாதவரை அங்கு நிறுவுவோம். துயர்கொண்டு தனித்து கைவிடப்பட்டு தன் ஒவ்வொரு சொல்லையும் எண்ணி வருந்தி வாழ்ந்தவர். தன் சொற்கள் அனைத்தையும் தானே மறுத்து, தான் கொண்டு வந்த அனைத்தையும் திரும்ப எடுத்துக்கொண்டு இங்கிருந்து மறையும் ஒருவர். அத்தகைய இளைய யாதவரை உருவாக்குவோம். அரசே, அதன் பொருட்டு எழுக!"

கிருதவர்மன் "மைந்தா, உனது சொல்வலிமை ஆற்றல் மிக்கதாக இருக்கிறது. இதுவரை துவாரகையில் யாதவரில் எவரும் இவ்வாறு பேசியதில்லை. அதற்கான ஆற்றல் உன்னிடம் உள்ளது என்பதை எவரும் சொன்னதில்லை. மெய்யாகவே இது நீதானா? ஏதேனும் மாய உருவா என்று ஐயுறுகிறேன்" என்றார். "ஒவ்வொரு தருணத்திற்கும் ஏற்ப நாம் நம் ஆற்றலை கண்டடைகிறோம். ஒருபோதும் நாம் நம்மை மாற்றிக்கொள்ள வேண்டியதில்லை" என்று நான் சொன்னேன்.

“நன்று! உன்னுடன் இருக்கிறேன், உனக்கென எழுகிறேன்” என்றார் கிருதவர்மன். “வருக! என்னுடன் வந்து யாதவர்களுக்கு தலைமைகொள்க! தாங்கள் அங்கு இயற்றவேண்டியது என்ன என்பது இப்போது சொல்லற்கரியது. அங்குள்ள ஒவ்வொரு தருணத்திலும் அதற்கான தேவையும் வாய்ப்பும் மீண்டும் மீண்டும் தோன்றுகிறது. அதை நாம் அடைவோம்” என்று நான் சொன்னேன்.

விஸ்வாமித்ரரின் தவக்குடிலில் இருந்து கிளம்புகையில் என்னை எண்ணி நானே தருக்கிக்கொண்டேன். ஒவ்வொரு தருணத்திற்கும் என்னுள்ளிருந்து புதிய ஒருவனை நான் வெளியே எடுக்க இயல்கிறது. மானுடர் இரு வகை. மாறாத உருக்கொண்டவர்கள். கல்லிலும் இரும்பிலும் சமைக்கப்பட்டவர்கள் போன்றவர்கள். அவர்கள் அமரும் பீடங்கள் முன்னரே ஒருங்கிவிட்டிருக்கின்றன. ஆற்ற வேண்டிய பணி வகுக்கப்பட்டிருக்கிறது. இங்கு வந்து திகழ்ந்து மறைபவர்கள் அவர்கள். துரியோதனனைப்போல, கர்ணனைப்போல. ஆனால் அவர்கள் வெல்வதில்லை. எத்தனை எடைகொண்டவர்கள் எனினும் விசைகொண்டவர்கள் எனினும் இரும்பாலும் கல்லாலும் ஆனவர்கள் பிளந்தே ஆகவேண்டும். ஏனெனில் காலம் என்றும் வெளி என்றும் இங்கு திகழ்வது ஒரு முடிவிலி. முடிவிலிக்கு முன் எதுவும் இன்மையே.

ஒவ்வொரு கணமும் தன்னை மாற்றிக்கொள்பவன், அத்தருணத்திற்கென புதிதாக எழுபவன் மட்டுமே வெல்பவன். கணந்தோறும் மாறிக்கொண்டிருந்தார் என் தந்தை, அவருடன்

மாறிக்கொண்டிருந்தனர் பாண்டவர்கள். வென்றது அம்மாற்றமே. நானும் அவ்வாறே. என் நத்தைச் சிறு கூட்டிலிருந்து வெளிவந்திருக்கிறேன். வீசப்பட்ட விதைகளென ஒவ்வொரு நிலத்திற்கும் ஒவ்வொரு வடிவு கொண்டு வளர்ந்துகொண்டிருக்கிறேன். 'கிருதவர்மனை வென்றுவிட்டேன். அவரை அழைத்துவருகிறேன்' என்று செய்தி ஒன்றை அனுப்பினேன். பின்னர் என் சிறு குடிலுக்குள் சென்று ஓய்வெடுத்தேன்.

மறுநாள் என்னுடன் கிருதவர்மன் கிளம்பிவருகிறார் என்று முடிவு செய்யப்பட்டது. அச்செய்தியை குருகுலத்தின் தலைவரிடம் சென்று சொல்லும்படி ஏவலனை அனுப்பினேன். அவர் என்னை பார்க்க விழைவதாக சொன்னார். நான் சென்று அவரை வணங்கி அமர்ந்தேன். விஸ்வாமித்ரர் அவருடைய வழக்கமான நிகர்நிலையில் அன்று இல்லை. முகமன்களுக்குப் பின்னர் "நீங்கள் அவரை சந்தித்ததை அறிந்ததேன். உங்களுடன் அவரை அழைத்துச் செல்லவிருப்பதை ஏவலன் சொன்னான். நன்று, இங்கிருந்து அவர் செல்வது எங்கள் அனைவருக்குமே மகிழ்வளிக்கிறது" என்று அவர் சொன்னார்.

என்னிடம் சொல்ல அவரிடம் ஏதோ இருக்கிறது என்பதை புரிந்துகொண்டேன். "யாதவரே, இங்கு அவர் வந்தபோது தவக்கோலத்தில் இருந்தார். எங்களுடன் இருக்க விழைவதாகவும், எஞ்சியிருப்பதென்ன என்று கணிக்கவிருப்பதாகவும் சொன்னார். குருக்ஷேத்ரப் பெருநிலத்திலிருந்து அவ்வண்ணம் பல்லாயிரம்பேர் வீடுபேறு நோக்கி சென்றிருக்கிறார்கள் என்று நீங்கள் அறிந்திருப்பீர்கள். அந்நிலத்தை நேரில் கண்டவர்கள், சொல்லில் கேட்டவர்கள், உணர்ந்தவர்கள் துறந்து குருநிலைகளுக்கு

சென்றுகொண்டிருக்கிறார்கள். பாரதவர்ஷமே அவர்களால் நிறைந்திருக்கிறது, பால் நிறைந்த கலம் நுரைப்பதுபோல் குருக்ஷேத்ரம் மெய்யறிவர்களை உருவாக்கிக்கொண்டிருக்கிறது என்று இங்கு ஒரு சொல் உண்டு."

"இங்கு வந்தபோது அவர் எவர் என அறிந்திருக்கவில்லை. ஆயினும் அவர் குருக்ஷேத்ரத்திலிருந்து வந்தார் என்று அறிந்திருந்தேன். மெய்மை நாடி துறந்தெழுந்தவர் என்று எண்ணினேன். அவ்வாறே ஆகுக என்று நிறைவுற்றேன். அவர் தனி தவக்குடிலமைத்து தனித்து தங்கினார். எங்கிருக்கிறார் என்ன செய்கிறார் என்று எவரும் அறியவில்லை. தன்னை தான் கடந்து ஒவ்வொன்றாக எடுத்து அவர் பார்க்கட்டும், தன்னை மீண்டும் இங்கு கட்டி அமைத்துக்கொள்ளட்டும், எழுந்து வரட்டும் என்று கருதினேன்."

"அவர் எவரென்று அறிந்திராவிட்டாலும்கூட என் மாணவர் ஒருவர் அவர் வஞ்சம் கொண்டிருக்கிறார். தனிமையில் வஞ்சம் பெருகவே செய்யும் என்றார். ஆம், ஆனால் வஞ்சத்தைவிட பெரியது தனிமை. சிறு தனிமை வஞ்சத்தை பெருக்குகிறது. பெருந்தனிமை அழிக்கும். தனிமை பேருருக் கொள்ளுமெனில், நெடுநாள் நீளுமெனில் அது அனைத்தையும் சிறிதாக்கி தான் மட்டுமே எஞ்சும், தனிமைக்கு மறுபெயரே மெய்மை என்று நான் சொன்னேன்."

"முற்றிலும் தனிமையில் அவர் அங்கிருந்தார். அவருடன் ஒருபோதும் எவரும் விழியாலோ ஓசையாலோ உடனிருக்கலாகாதென்று ஆணையிட்டிருந்தேன். அத்தனிமை நீடிக்குமெனில் அவர் விடுபட்டிருக்கக்கூடும். அவர் பற்றியிருக்கும் சிலவற்றிலிருந்து விடுபட்டால் இங்கிருந்து அவருக்கு ஒரு நற்செலவும் அமையக்கூடும். ஆனால் அது

நிகழவில்லை" என்றார் விஸ்வாமித்ரர். "அவருடைய ஊழ் அதுவல்ல. அவர் செல்லவிருக்கும் திசை முன்னரே வகுக்கப்பட்டுவிட்டிருக்கிறது."

"ஒருமுறை தொலைவில் அவர் மிகத் தனிமையில் அமர்ந்திருப்பதை பார்த்தேன். அவருடைய முகத்தின் தசையசைவு அவருக்குள் எதையோ பேசிக்கொண்டிருக்கிறார் என்று காட்டியது. அவர் இங்கு வந்து ஓரிரு மாதங்கள் கடந்துவிட்டிருந்தன. அத்தனை காலம் தனித்திருந்த ஒருவர் தனக்குள் பேசிக்கொள்வது அரிது. தனிமை கொள்பவரின் அகம் கூச்சலாகிறது. குரல் பெருக்குகிறது. தனக்குள் தான் பிரிந்து பேசிப் பேசி சொல்லிழந்து சொல்லிழந்து பேச்சவிந்து முகம் சிலை என்றாவதே வழக்கம். தனிமையின் விளைவு உறைவுதான். ஏனென்றால் தனிமை என்பது ஓர் அகஅமைவு. அவர் கொந்தளித்துக்கொண்டிருந்தார்.
விரைந்துகொண்டிருந்தார்."

"அத்தனை காலம் அவர் எவருடன் பேசிக்கொண்டிருக்கிறார்? அதை எண்ணி எண்ணி வியந்தேன். அத்தனை தூரம் தன்னைப் பிளந்து தன் எதிரியை உருவாக்கிக் கொள்வதற்கு அத்தனை பெரிதென்று தன்னை கற்பனை செய்துகொண்டிருந்தாரா? நான் அதையே எண்ணிக்கொண்டிருந்தேன். பின்னர் வெவ்வேறு இடங்களில் அவர் முகத்தை கூர்ந்து பார்த்தேன். ஏன் அவர் அத்தனை உரையாடுகிறார்? எவருடன்? தன்னுள் இருந்து மொண்டு அவர் உருவாக்கிக்கொண்டிருக்கும் பிறிதொருவர் எவர்? உச்சிப்பொழுதில் அவர் நிழல் விழுந்திருப்பதை கண்டேன். நீர் அள்ள சுனையை நோக்கி குனியும்போது தன் ஆடிப்பாவையை நோக்கி நெடுநேரம் நின்றிருப்பதை கண்டேன். என்னில் ஆவல் பெருகியது. அவ்வண்ணம்

பெருந்தனிமையிலும் விடாது உடனிருக்கும் ஒருவரை அவர் எவ்வண்ணம் தனக்கென உருவாக்கிக்கொண்டார்?"

"ஒருநாள் அதை அறியும்பொருட்டு தனிமையில் அவரை பார்க்கச் சென்றேன். அவர் குடிலுக்குள் துயின்றுகொண்டிருந்தார். அவர் அருகே எவரோ இருப்பதை கண்டேன். அணுகிச் சென்றேன். அவருடைய எதிரி அது என்று எனக்கு தோன்றியது. ஏனெனில் என் மாணவர்கள் திரும்பத் திரும்ப அதை சொல்லியிருந்தார்கள். தன் வாழ்நாள் எல்லாம் எதிரியை சொல்லிலும் கற்பனையிலும் நிரப்பிக்கொண்டவர் அவர் என்று. ஆனால் அருகணைந்து குடில்முற்றத்தை அடைந்தபோது அங்கிருந்தவர் எவரென்று கண்டேன். அங்கிருந்தவர் பீலி சூடியிருந்தார். உதடுகளில் குழல் சேர்த்து மீட்டிக்கொண்டிருந்தார்."

"அது என் உளமயக்கென்று சற்று நேரத்திலேயே தெரிந்தது. ஆனால் உளமயக்கின் வடிவிலேயே எனக்கு மெய்மைகள் அமைகின்றன. அங்கு நான் கேட்ட அவ்விசையை என் ஊழ்கங்களின் உயர்நிலையிலேயே அறிந்திருக்கிறேன். மலைகளை முகில்களென எழுந்து பறக்கச்செய்வது அது. அத்தகைய பேரிசை. அதன் மடியிலென கிருதவர்மன் படுத்திருந்தார். அவர் முகத்திலிருந்தது குழந்தை அன்னையின் மடியில் படுத்திருக்கையில் எழும் கனவு. பெருங்கனவின் இனிமை நிறைந்த புன்னகை."

"அன்று உளம் பதைத்து நான் திரும்பி வந்தேன். இங்கு அமர்ந்து ஒவ்வொன்றாக அணைத்து ஊழ்கத்தினூடாக நாம் சென்றடைந்த ஒரு துளியை தூய வஞ்சத்தினூடாக அடைந்து அவர் அமர்ந்திருக்கிறாரா? அதுவும் வழிதானா? இப்புடவிப் பெருவெளியில் எங்கும் எதுவும் செல்லும் வழிகள்தானா?

அவரை அவ்வஞ்சத்திலிருந்து மீட்கவேண்டுமென்று நான் எண்ணியது எனது வீழ்ச்சியா? ஒவ்வொருவருக்கும் அவரவர்களுக்கான விதைகள் அளிக்கப்பட்டுள்ளன. அவை அவர்களின் அகத்தெழும் விண்நீரால் முளைக்கின்றன.”

“யாதவரே, அவர் யோகி, முனிவர். வஞ்சம் அவர் தவம். தவம் தெய்வங்களுக்கு இனியது” என்றார் விஸ்வாமித்ரர். “அழைத்துச்செல்க! உங்களுடன் வருபவர் ஒரு வெறும் போராளி அல்ல, தவமுனிவர் என்றுணர்க! ஆம், அவ்வாறே ஆகுக!” நான் அவரை வணங்கினேன். அன்று மாலை நாங்கள் பருஷ்னி வழியாக துவாரகைக்கு கிளம்பினோம்.

# கல்பொருசிறுநுரை - 34

**பகுதி நான்கு : அலைமீள்கை – 17**

துவாரகைக்கு நான் கிருதவர்மனுடன் வந்துகொண்டிருக்கிறேன் என்ற செய்தியை முன்னரே மூத்தவரிடம் தெரிவித்திருந்தமையால் நகருக்கு நெடுந்தொலைவிலேயே எங்களை வரவேற்கும் பொருட்டு சுஃபானுவும் மூன்று உடன்பிறந்தாரும் அணிப்படையினருடன் வந்திருந்தார்கள். அவர்கள் பாலை நிலத்தில் துவாரகையின் செம்பருந்துக்கொடி உயர்ந்து பறக்கும் மூங்கிலுடன் நின்றிருப்பதை தொலைவிலேயே நாங்கள் கண்டோம். இணையாக யாதவக்குடியின் பசுக்கொடியும் பறந்தது. என்னுடன் வந்திருந்த சிறிய காவல்படையினர் கொம்பொலி

எழுப்பி எங்கள் வருகையை அறிவித்தனர். அங்கிருந்து முரசுகளும் முழவுகளும் சங்கும் மணியும் ஒலித்தன. கிருதவர்மனுக்கான வாழ்த்தொலிகள் எழுந்தன.

கிருதவர்மன் அந்த வாழ்த்துகளை எப்படி எடுத்துக்கொள்கிறார் என்று பார்ப்பதற்காக நான் திரும்பி அவர் முகத்தை பார்த்தேன். அவர் முகம் இறுகியிருந்தது. எந்த உவகையும் அதில் தெரியவில்லை. அது அவ்வாறே இருக்கும் என்று எனக்கு தெரிந்திருந்தது. அவர் உணர்வுகளை வெளிக்காட்டுபவர் அல்ல. நான் அவருடைய கண்களை நோக்கிக்கொண்டிருந்தேன். நான் அவருக்கு இணையாக வந்துகொண்டிருந்தமையால் என்னால் அவர் விழிகளை சற்று அப்பாலிருந்தே பார்க்க இயன்றது. உணர்வுகளுக்கு அப்பால் ஒன்று மானுடரின் கண்களில் எழுவதுண்டு. தன்னிலை என்று அதை சொல்லலாம். தன்னை அவ்வண்ணம் அக்கணத்தில் அந்த ஆத்மா வைத்துக்கொள்ளும் நிலை அது. கண்களை ஆத்மாவை நோக்கி போடப்பட்ட சிறுதுளைகள் என்று என் ஆசிரியர் ஸ்ரீகரர் கூறுவதுண்டு. கூர்ந்து நோக்கினால் எவரும் அதை பார்த்துவிடமுடியும்.

நான் அவருடைய விழிகளை முதல்முறையாகக் கண்டது அந்தச் சிறுகுடிலில் இருந்து அவர் வெளியே வந்தபோதுதான். அதுவரை அவர் என நினைத்திருந்த சுவரிலிருந்து எழுந்தவர் போலிருந்தார். உண்மையில் அங்கே தோன்றிய உரு போலவே அவர் இருந்தது என்னை திகைப்புறச் செய்தது. நான் அவரை நடுக்குடன் நோக்கிக்கொண்டிருந்தேன். அது ஒரு மானுட உடலென்றே தோன்றவில்லை. வெந்து உருகிய தசைகள் உறைந்த மெழுகுருவென்றாகியிருந்தன. இழுபட்டு கோணலாகத் திறந்த வாயில் பற்கள் புடைத்திருந்தன. செந்நிறத் தோல் மூடிய தலையில் ஒரு பகுதியில் மட்டும்

சற்றே முடியிருந்தது. ஒரு செவியும் கழுத்தும் தோளும் உருவழிந்து ஒற்றைச் சதைக்குழைவெனத் தெரிந்தன.

ஆனால் அவர் விழிகள் உயிருடனிருந்தன. அவர் என்னை கூர்ந்து நோக்கினார். "செல்வோம்" என்று அவர் சொன்னபோது அவை ஒரு கணம் புன்னகைத்தன. பின்னர் கண்டுகொண்டேன், அவருடைய முகத்தில் உணர்ச்சிகளைக் காட்டுவது விழிகள் மட்டுமே. முகம் என்பது நாம் அறிந்த பொது அமைப்பு ஒன்றை கொண்டது. அதில் மிகச் சிறிய மாறுதல் ஏற்பட்டால்கூட உணர்ச்சிகளை அது தொடர்புறுத்துவதில்லை, பிழையாக உணர்ச்சிகளை காட்டிவிடுகிறது. விழித்தசை சற்று கீழிறங்கியமையால் ஒருவர் சோர்வும் சலிப்பும் உற்றவராகத் தெரிகிறார். வாய் சற்று கோணலாகிவிட்டமையால் ஒருவர் ஏளனம் மிக்கவராகத் தெரிகிறார். கிருதவர்மனின் முகம் உணர்வுகளுக்கு அப்பால் சென்றுவிட்டது. ஆனால் விழிகள் அந்தத் திரைக்கு அப்பாலிருந்து எழுந்து வந்தன.

மூத்தவர் சுஃபானுவும் இளையவர்களும் கைகூப்பியபடி வந்தனர். தேரிலிருந்து இறங்கிய கிருதவர்மன் நிமிர்ந்த தலையுடன் என்ன நிகழ்கிறது என்ற அறிதல் இல்லாதவர்போல் அங்கு நிற்க அவர்கள் அருகணைந்து கால்தொட்டு வணங்கி "வாழ்த்துக, தந்தையே!" என முகமன் உரைத்தனர். அச்சொற்களைக் கேட்டு அவருடைய உடல் சற்றே மாறுகிறதோ என்று நான் ஐயுற்றேன். ஒரு மெல்லிய குறுகல், அல்லது விதிர்ப்பு. அவர் சற்று கம்மிய குரலில் "நன்று! நலம் சூழ்க!" என்று சொல்லி சுஃபானுவின் தோளில் தட்டினார். அக்கணம் அவர் கண்களை நான் நேருக்கு நேர் பார்த்தேன். எந்த மறைவுமின்றி அவர் ஆத்மாவை சென்று சுட்டின அவை.

அவர் தன்னை ஒரு பிதாமகர் என்று எண்ணிக்கொள்கிறார் என்று அறிந்தேன்.

ஆனால் அது நான் எண்ணியதே என்று அப்போது உணர்ந்தேன். எனினும் அது ஏமாற்றத்தை அளித்தது. தந்தையே, அங்கு அவர் உங்கள் இடத்தில் தன்னை வைத்துக்கொண்டார். தன்னை எங்கள் அனைவருக்கும் தந்தையென நிறுத்தினார். அக்கணம் அவரில் வந்த கனிவு அவர் ஒருபோதும் துவாரகையின் முற்றழிவை, உங்கள் மைந்தர்களின் சாவை விரும்பமாட்டார் என்று எனக்குக் காட்டியது. இத்தனைக்கும் சு᳡பானுவும் இளையவர்களும் மிகமிக வழக்கமான சொற்களை, பெரிய உணர்வெழுச்சி ஏதுமின்றித்தான் சொல்லியிருந்தார்கள். அவர் அதை எதிர்பாராதவர்போல தோன்றினார். அல்லது அதை எதிர்பார்த்துக்கொண்டிருந்தாரா?

எனில் துவாரகையின் முற்றழிவைப்பற்றி நான் கூறுகையில் எல்லாம் அவர் அதை பிறிதொரு பொருளில்தான் எடுத்துக்கொண்டிருக்கிறாரா? அப்போது அறிந்தேன் தந்தையே, ஒருபோதும் அவர் உங்கள் எதிரி அல்ல. உங்கள் அணைப்பை, வெறும் தொடுகையை எதிர்பார்த்திருக்கும் உடன்பிறந்தான். இந்த நாடகத்தில் ஒருபோதும் அது நிகழப்போவதில்லை என்று அறிந்து அதே விசையில் மறுமுனை கொள்பவர். நான் அவரை அதன் பின்பு பார்க்கவில்லை. அந்த ஒரு கணநேர கண்ணையே என்னுள் விரித்து விரித்துப் பெருக்கி அவரென்று ஆக்கிக்கொண்டேன்.

அவர் அங்கு வந்திருப்பது உங்கள் உருவில். அங்கு உங்கள் மைந்தர்களுக்கு நடுவே ஒற்றுமையை உருவாக்கவே அவர் முயல்வார். அனைவருக்கும் முதன்மைத் தந்தையென அங்கு அமர்ந்திருப்பார். துவாரகை முந்தைய பொலிவைவிட

மிகுந்தெழுவதையே அவர் விழைகிறார். அவ்வண்ணம் ஒன்றை நிகழ்த்தவும் அவரால் இயலும். அவர் உங்களை வெல்வது துவாரகையை உங்கள் காலத்தைவிட பொலிவுற்றதாக ஆக்கும்போது மட்டும்தான். உங்களைக் கடந்து செல்வது உங்களின் புகழையும் நிலைநிறுத்தும் ஒருவனாக தன்னை ஆக்கிக்கொள்வதனூடாக. உங்களுக்கு புகழ் அளித்து உங்களை சிறிதாக்குவதனூடாக அவரது ஆணவம் நிறைவுறும்போது. தந்தையே, நீங்கள் வேறெங்கு எவ்வண்ணம் பேருருக்கொண்டிருந்தாலும் அவர் அகத்தில் சிறுத்து அவர் அளிக்கும் அன்னத்தை உண்ணும் இளம்சிறுவன்போல் அமர்ந்திருப்பீர்கள். அதைத்தான் அவர் விரும்புகிறார்.

அதற்கப்பால் ஒன்று, தந்தையே. அவர் என் அன்னைமேல் கொண்ட வெற்றி அது. கிருதவர்மனை அந்நாள் வரை இயக்கியது உங்கள்மேல் கொண்ட வஞ்சம் என்று எண்ணியிருந்தேன். அந்த வஞ்சத்தின் உள்ளென அமைந்திருந்தது எங்கள் அன்னைமேல் கொண்ட காதல். அவ்வஞ்சம் மிக உயரிய ஒன்றின் கருநிழல். இன்று மைந்தர் வந்து அடிபணிகையில் அவர் காண்பது அன்னையை, இம்மைந்தர் அவர் மைந்தரும் என ஆகும் தருணம் அமைவது அவ்வண்ணம்தான். தந்தையே, மெய்க்காதலில் இருந்து வஞ்சமும் கசப்பும் காழ்ப்பும் எழக்கூடும். ஆனால் அவை அனைத்தும் காதலின் வடிவாகவே ஆழத்தில் திகழும். தன் முதன்மை இனிமையை ஒருபோதும் காதல் இழந்துவிடுவதில்லை.

நான் என்னுள் ஏமாற்றம் இருக்கிறதா என்று பார்த்தேன். ஏமாற்றம் என்றும் அதை கூற இயலாது. ஒன்று ஊகிக்கலாம். அது ஒரு சிறு உவகையால் ஈடுகட்டப்பட்ட ஏமாற்றம். அவரை

நான் வகுத்துவிட்டேன். இனி அதைக்கொண்டு நான் அவரை ஆள இயலும். அதுவரை அவர் எவர் என என் அகம் பதைத்துக்கொண்டிருந்தது, அதை கடந்துவிட்டேன். விஸ்வாமித்ரரின் குடிலில் இருந்து கிளம்பியது முதல் நான் அகம் பதறிக்கொண்டுதான் இருந்தேன். என்னிடம் விஸ்வாமித்ரர் சொன்ன சொற்கள் நான் கொண்ட அனைத்து உருவகங்களையும் சிதைத்துவிட்டன. பிறிதொன்றை என்னால் உருவாக்கிக்கொள்ள முடியவுமில்லை.

ஏனென்றால் அவை உண்மை என நான் அறிந்திருந்தேன். விஸ்வாமித்ரர் பேசப்பேச நான் அகநடுக்குடன் அதை உணர்ந்துகொண்டிருந்தேன். தந்தையே, கிருதவர்மனுடன் குடிலுக்கு வெளியே நின்று உரையாடுகையில் நான் உணர்ந்தது உங்கள் இருப்பைத்தான். ஆனால் அங்கிருந்து கிளம்பியதுமே அது மறைந்துவிட்டது. அதன்பின் நாங்கள் ஒரு சொல்லும் பேசிக்கொள்ளவில்லை. அவர் முற்றாக தன்னில் ஆழ்ந்திருந்தார், அவர் அருகே நான் இருக்கையில்கூட அங்கே எவருமில்லை என்னும் உடலுணர்வையே அடைந்தேன். அது என்னுள் இருந்து புலன்களை ஆளும் விலங்கை பதற்றம் கொள்ளச் செய்தது. அப்பதற்றம் அடங்கிவிட்டது.

துவாரகையின் முகப்பில் யாதவர்கள் அத்தனை பெருங்கூட்டமாக வந்து நின்றிருப்பார்கள் என்று கிருதவர்மன் எதிர்பார்த்திருக்க முடியாது. அவர் முதலில் அதை உணரவில்லை. தொலைவிலேயே முழவுகளும் கொம்புகளும் ஒலிப்பதை கேட்டோம். அவர் அத்தகைய ஓசைகளுக்கு

அயலாகிவிட்டிருந்தார். ஆகவே அதை உணரவில்லை. சுஃபானுதான் “தங்களுக்காக காத்திருக்கிறார்கள், தந்தையே” என்றார். அதன் பின்னரே அவர் அதை உணர்ந்தார். ஏதோ சொல்லவருபவர்போல கைகளை உயர்த்தினார். எண்ணம் நிலைக்க அந்தக் கை அப்படியே நின்றது. அவர் கனவுகாண்பவர்போல துவாரகையின் தோரணவாயில் நோக்கி சென்றார்.

துவாரகையின் தோரணவாயிலின் நிழல் பாலை மணலில் பெரிய வில்போல விழுந்துகிடந்தது. மாந்தளிர் என மின்னிய உடல்களுடன் தேர்ப்புரவிகள் ஒவ்வொன்றாக அந்நிழலை தம் உடலில் வாங்கி இருண்டு பின் கடந்து ஒளிர்ந்து மறுபக்கம் சென்றன. தோரணவாயிலில் இருந்த சிற்பங்களின் நிழல்வடிவங்கள் குளம்புச்சுவடுகளும் கால்சுவடுகளும் கலந்து அசைவற்ற அலைப்பரப்பு என கிடந்த மென்மணலில் விழுந்திருந்தன. சிறகுவிரித்த கருடனின் மேல் புரவி ஒன்று நடந்து செல்ல அதன் முதுகில் கருடனின் சிறகு வருடிச் சென்றது.

தேர்கள் அருகே சென்றதும் தோரணவாயிலின் தூண்முகப்பில் இருந்த வாயிற்காவலர் சிற்பங்களின் கால்கள் பேருருக்கொண்டு தலைக்கு மேல் எழுந்தன. அவற்றிலணிந்திருந்த கழல்கள் மட்டுமே விழிகளுக்குத் தெரிந்தன. அண்ணாந்து நோக்கியபோது வளைவின் நடுவே கட்டப்பட்டிருந்த பெரிய கண்டாமணியின் நாக்கின் இரும்பு உருளை கோபுரக் கலசமெனத் தெரிந்தது. அங்கே குளவிக்கூடுகள் அன்னைப்பன்றியின் அகிடுகள்போல தொங்கின. நான் விந்தையானதொரு உளத்துடிப்பை

உணர்ந்தேன். தந்தையே, எங்களுடன் இன்னொருவரும் விழிக்குத் தெரியாமல் இருந்துகொண்டிருப்பதுபோல.

எவர்? எவர்? நான் தொட்டுத் தொட்டுச் சென்று அதை தெளிவுடன் அறிந்தேன். எங்களுடன் வந்துகொண்டிருந்தவர் திருஷ்டத்யும்னன். என்னருகே, அல்லது என் உடலுக்குள்ளா? அருகே திறந்த தேரின் தட்டில் இடத்தூணில் கைகள் சேர்த்து பின்னால் கட்டப்பட்டு இடையில் ஒற்றை ஆடையுடன், கலைந்த குழலுடன், உடலெங்கும் புழுதியும் உலர்ந்த குருதியும் வியர்வையில் கலந்து கரைந்து வழிய, தலை குனிந்து நின்றிருக்கிறாரா கிருதவர்மன்? அத்தருணத்தின் எடை எண்ணமுடியாத அளவு மிகுதியானது. அது அத்தருணத்தை நசுக்கிப் பரப்பிச் சிதைக்கிறது. எந்தச் சொல்லொழுங்கும் அற்றதாக்குகிறது. ஒவ்வொரு எண்ணத்தையும் அத்துமீறச் செய்கிறது.

யாதவர்கள் நெடுங்காலத்திற்குப் பின்னர்தான் அத்தனை பெரிய கேளிக்கை ஒன்றை அடைகிறார்கள் என்று தோன்றியது. முன்பு இந்நகரில் அவ்வப்போது நகர்நுழைவு நடந்துகொண்டிருக்கும். நீங்கள் இந்நகரிலிருந்து பிரிந்து செல்வீர்கள். இங்கிருந்து உங்களைத் தேடி பல்லாயிரம் உள்ளங்கள் அலைந்து கொண்டிருக்கும். நீங்கள் எவ்வண்ணம் எங்கிருக்கிறீர்கள் என்பதை கற்பனை செய்துகொள்வார்கள். சிறு தகவல்கள், செய்திகள் வந்துகொண்டிருக்கும். பின்னர் நீங்கள் வரும் செய்தி வரும். அணுகிக் கொண்டிருக்கிறீர்கள் என்ற செய்தி வரும். நாள் நாளாக துளித்துளியாக நகர் ஒருங்கும். முரசில் கோல் விழுந்ததென ஒருகணத்தில் பொங்கி எழும். பின்னர் நீங்கள் நகர்நுழைவது வரை இந்நகர் திருவிழா கொண்டாடிக்கொண்டிருக்கும். நீங்கள் நகர் நுழையும் கணம்

பித்தெடுத்துத் துள்ளி அலைப்புறும். அந்நாட்களை அவர்கள் நினைவிலிருந்து மீட்டுக்கொண்டிருந்தார்கள்.

நீங்கள் துவாரகையின் தெருக்களினூடாக அரண்மனை நோக்கி செல்லும் காட்சியை பலநூறு முறை கண்டதுபோல் உள்ளது. ஒன்று கண்டால் பலநூறை எண்ணிக்கொள்வதுபோல. நகரின் இருபுறங்களிலும் களிவெறிகொண்ட மக்கள் ஆர்ப்பாட்டமிடுவார்கள். அழுது, சிரித்து, கூவி, நெஞ்சில் அறைந்து மகிழ்வு கொண்டாடுவார்கள். விலங்குகள்போல, பறவைக்கூட்டம்போல. தந்தையே, அன்று அதற்கும் மேலாக அவருக்கு வரவேற்பிருந்தது. நீங்களே திரும்பிவந்திருந்தால்கூட அந்த வரவேற்பு இருந்திருக்காது. இருபுறமும் யாதவக் குடிகள் அவரது தேரை தொடுவதற்கு முண்டியடித்தனர். மண்ணில் விழுந்து அவருடைய தேர் சென்ற மண்ணை முத்தமிட்டனர். அவரது தேர்த்தடம் பல்லாயிரம் கைகளால் மூச்சால் அக்கணமே கலைந்தது. அழுகையும் விம்மலும் ஏக்கமும் என துவாரகை அவர் சென்ற வழியெங்கும் உணர்வழிந்து கொந்தளித்துக் கொண்டிருந்தது.

அத்தகைய களியாட்டை முன்பு நான் கண்டதில்லை. அவர்கள் மெய்யாகவே உங்களை அவர் வடிவில் காண்கிறார்களா? ஆனால் ஒருபோதும் உங்களுக்கு அத்தனை வரவேற்பு கிடைத்ததில்லை. அவர்கள் காத்திருந்த மீட்கும் தெய்வம் யார்? நீங்களா இல்லை கிருதவர்மனேதானா? எவ்வகையிலேனும் ஒரு வடிவில் தாங்கள் எழுந்தருளவேண்டும் என்று எண்ணினார்கள் போலும். அவ்வாறு வந்தவரை தாங்கள் என்று எண்ணிக்கொண்டார்களா? நான் அவர் அருகே தேரில் நின்றிருந்தேன். அவர் என்ன எண்ணுகிறார்? அதே தெருக்களினூடாக அவர் இழுத்துச் செல்லப்பட்டார்.

அன்னைமுன் சென்று நிற்பதை அவர் சாவென உணர்ந்தார். அப்போது எவ்வகையில் உணர்கிறார்? வென்று எழுந்துவிட்டாரா?

இரட்டைத்தூண்களின் அருகே இருந்த தேர்நிலையை அடைந்தோம். அவர் இயல்பாக மேலே நோக்கினார். அங்கே அன்னை நின்று நோக்கிக்கொண்டிருப்பதாக ஒருகணம் என் அகம் திடுக்கிட்டது. அரண்மனை முகப்பில் அவரை வரவேற்பதற்காக மூத்தவர் ஃபானுவும் பிறரும் காத்திருந்தனர். அந்தணர் வேதம் ஓதி அவரை வாழ்த்தினர். மங்கலச்சேடியரும் இசைச்சூதரும் முறைமை செய்தனர். ஃபானு கிருதவர்மன் தேரிலிருந்து இறங்கியதும் அவரை வரவேற்பதற்காக கைநீட்டியபடி வந்தார். கிருதவர்மனின் கால்தொட்டு சென்னி சூடும்போது அறியாமல் விம்மி அழுதுவிட்டார். கிருதவர்மன் அவரை இரு கைகளாலும் அள்ளி தன் தோளோடு அணைத்தார். "நன்று! சூழ்க நலம்!" என்றார்.

"இனி நான் எதுவும் துயரடைவதற்கில்லை. இனி என் கொடிவழிகள் சிறப்புறும். நான் மாண்புறுவேன்" என்று ஃபானு சொன்னார். "துவாரகை மாண்புறும்" என்று கிருதவர்மன் கூறினார். அவரை அரண்மனைக்கு அழைத்துச் சென்றோம். செல்லும் வழியிலேயே அவர் திரும்பி என்னிடம் "பிற மைந்தர்கள் இந்த அரண்மனையில்தான் இருக்கிறார்கள் அல்லவா?" என்றார். நான் "ஆம்" என்றேன். "அவர்கள் ஏன் என்னை வரவேற்க வரவில்லை?" என்றார். நான் ஃபானுவை பார்க்க அவர் ஒன்றும் சொல்லாமல் நின்றார். "இந்நகருக்கு நான் யாதவனாக வரவில்லை" என்றார். பின்னர் "எனில் நான் சென்று அவர்களை பார்க்கிறேன்" என்றார்.

ஃபானு "அல்ல, அது முறையல்ல" என்றார். "தாங்கள் எங்கள் தந்தையின் இடத்தில் இருப்பவர்." நான் ஃபானுவிடம் "அல்ல, மூத்தவரே. அவர் விரும்பியதை செய்யட்டும். தந்தையருக்கு அறிவுரை கூறவும் வழிநடத்தவும் நாம் இங்கு அழைத்து வரவில்லை. தந்தையரின் பாதையை நாம் தொடர்வோம்" என்று சொன்னேன். ஃபானு பல்லைக் கடித்து "என்ன சொல்கிறாய்?" என்றார். நான் விழிகளால் நிகழட்டும் என்று காட்டினேன். அவர் அடங்கினார். கிருதவர்மன் அண்ணாந்து அரண்மனையை நோக்கினார். "நெடுங்காலம்" என்றார். "ஆம்" என்று அவரே சொல்லிக்கொண்டார். திரும்பி என்னிடம் "சததன்வாவை அறிந்திருக்கிறீர்களா?" என்றார். "ஆம்" என்றேன். "தந்தையால் கொல்லப்பட்டவர்." அவர் "ஆம்" என்றார். நீண்ட பெருமூச்சுடன் "இன்று நகர்நுழைகையில் அவரும் என்னுடன் இருந்ததாகவே உணர்ந்தேன்" என்றார்.

எங்கள் விழிகள் மாறிவிட்டிருந்தன. கிருதவர்மன் என்னிடம் "என்னை பிரத்யும்னனிடம் அழைத்துச் செல்க!" என்று சொன்னார். "தாங்கள் சற்று ஓய்வெடுக்கலாம்" என்று சுஃபானு சொன்னார். "இல்லை, ஓய்வெடுத்தபின் நான் சென்று சந்திப்பது வேறு. நகரணைந்ததும் முதலில் உங்களை சந்தித்ததுமே அவர்களை சந்திக்கிறேன் என்பது வேறு. என் எண்ணமென்ன என்று அவர்கள் தெளிவுறுவதற்கு ஒரு வாய்ப்பு" என்று கிருதவர்மன் கூறினார். சுஃபானு "அவர்கள் எவ்வகையில் அதை எதிர்கொள்வார்கள் என்பது..." என்றார். "அதை எண்ணாமலேயே அவனை சந்திக்கச் செல்கையிலேயே என் நோக்கம் கூர்கொள்கிறது" என்றார் கிருதவர்மன். "ஆனால்..." என்று ஃபானு சொன்னார். "என் விழைவு இது" என்று கிருதவர்மன் சொல்ல ஃபானு தலைவணங்கினார்.

நான் அமைச்சரிடம் “தந்தையை அங்கே அழைத்துச் செல்க!” என்றேன். இன்னொரு அமைச்சரிடம் “முன்னால் சென்று கிருதவர்மன் வந்துகொண்டிருப்பதை பிரத்யும்னனுக்கு அறிவியுங்கள்” என்று ஆணையிட்டேன். என்னருகே ஓடிவந்த சுஃபானு “என்ன எண்ணுகிறாய் நீ? அவர் தந்தைக்கு நிகரான இடத்திலிருக்கும் யாதவ மூதாதை. அவரே சென்று பிரத்யும்னனை சந்திப்பதென்றால் தலைவணங்குவதுபோல் அல்லவா?” என்றார். “அல்ல, அவர் செல்லட்டும். பிரத்யும்னனை சந்திக்க அவர் இரு கைகளையும் விரித்துக்கொண்டு தானே தேடிச்சென்றார் என்பது இன்று துவாரகையில் அவரைப்பற்றி எழுந்திருக்கும் எண்ணத்தை மேலும் பெரிதுபடுத்தும். அவர் பேருருக்கொள்வது நமக்கே நல்லது” என்றேன்.

“அவரை வாழ்த்தி வரவேற்பதென்றால் பிரத்யும்னன் அரியணையிலிருந்து எழுந்து வந்து கால்தொட்டு சென்னி சூடியாகவேண்டும். அவரை அவர் அவைச்சிறுமை செய்வாரெனில் துவாரகையில் அதன்பொருட்டே பெரும் பழியை ஏற்றுக்கொள்பவர் ஆவார். இரண்டுமே அவரை படியிறக்கம் செய்வதுதான். ஷத்ரியர் நோக்கில் அவரை யாதவ மைந்தராக நிறுத்துவதுதான். இரண்டில் ஒன்றை தெரிவு செய்யும் நிலையை அவருக்கு நான் அளித்துவிட்டேன்” என்றேன்.

இடைநாழியினூடாக கிருதவர்மன் செல்கையில் அரண்மனையின் ஏவலர்கள் அனைவரும் கைகூப்பி வணங்கியபடி வந்து நின்றிருப்பதை கண்டேன். ஒவ்வொருவரும் கண்கனிந்து மெய்ப்புகொண்டவர்கள்போல் இருந்தார்கள். உடல் ஒடுங்கி கைகூப்பியிருந்தார்கள். அவர் எவரையும் பார்க்கவில்லை. அவர் சென்ற வழியில் காலடியில்

அத்தனை உள்ளங்களும் சென்று படிகின்றன என்று கண்டேன். தலைவரில்லாது செயல்பட்டவர்கள் அவர்கள். தந்தையே, தலைவரென்று ஒருவர் இலாது செயல்படும் திறன் கொண்டவர்கள் இப்புவியில் சிலரே. அவர்கள் தந்தையென்றும் தலைவரென்றும் ஆகிறவர்கள். எஞ்சியோர் தந்தையும் தலைவரும் இல்லாத நிலையில் கைவிடப்படுகிறார்கள். தந்தையென்றும் தலைவன் என்றும் தெய்வ வடிவென்றும் ஒன்றை உருவாக்கி அதன் நிழலில் இளைப்பாறுகிறார்கள். துவாரகை எப்படி கைவிடப்பட்டிருந்தது என்பது அப்போது தெரிந்தது. எத்தனை ஏக்கத்துடன், துயருடன் அது தங்களை எதிர்ப்பார்த்துக்கொண்டிருந்தது என.

எத்தனை விரைவாக கிருதவர்மன் தங்கள் வடிவென மாறிக்கொண்டிருக்கிறார் என்பதைக் கண்டு நான் வியந்தேன். அவர் ஒன்றும் செய்யவில்லை, அவரை அவ்வண்ணம் ஆக்கியது அச்சூழல். கிருதவர்மனின் முகம் தங்களுடையது அல்ல. நடை தங்களுடையதல்ல. ஆனால் நான் ஓரக்கண்ணால் கண்ட அசைவு தங்களுடையது. ஒருகணத்தில் அவரை நிழலென தரையிலோ சுவரிலோ கண்டால் அது நீங்களே என்று தோன்றியது. தந்தையே, பீலித் திருமுடி சூடிய குழல்கொண்டிருப்பதைப் போலவே!

கிருதவர்மன் அங்கு செல்வதற்குள்ளாகவே அரண்மனையில் தங்கள் பகுதியிலிருந்து பிரத்யும்னனும் அவர் மைந்தர் அநிருத்தனும் இளையோரும் பெருங்கூட்டமாக கைகூப்பியபடி இடைநாழியில் எதிரே வந்தார்கள். பிரத்யும்னன் அருகணைந்து வந்த விசையிலேயே குனிந்து கிருதவர்மனின் கால் தொட்டு சென்னி சூடினார். உடைந்த குரலில் “தந்தையே, தங்கள் வருகைக்காக நான் நல்லூழ் கொண்டிருக்கிறேன்” என்று அவர்

சொன்னார். "உன்னை அங்கு எதிர்பார்த்தேன்" என்று கிருதவர்மன் சொன்னார். "நான் வந்திருக்கலாம். அதை யாதவர்கள் விரும்புவார்களா என்று ஐயுற்றேன். தங்களுக்கு மட்டுமே உரியவர் நீங்கள் என்று அவர்கள் எண்ணுகிறார்கள். அவ்வெண்ணத்தால் அங்கு பூசல் உருவானால் அந்நிலையின் மங்கலத்தன்மை குறைந்துவிடுமென்று ஐயுற்றேன். ஆகவேதான் நான் ஒழிந்தேன்" என்றார்.

"நான் அனைவருக்கும் உரியவன், இக்குடியின் மூதாதை" என்று அவர் சொன்னார். "ஆம், ஆகவேதான் தங்கள் வருகை என்பது எங்கள் குடிக்கு பேரருள்" என்றார் பிரத்யும்னன். "மைந்தா, வணங்குக!" அநிருத்தன் அவரை வணங்க அவர் அள்ளி எடுத்து நெஞ்சோடு சேர்த்துக்கொண்டார். அவர்கள் ஒவ்வொருவரையாக தழுவினார். ஒவ்வொரு தோளையும் தலையையும் அவர் தொட்டார். கனிந்த குரலில் ஒவ்வொருவரிடமும் நலம் உசாவினார். ஒவ்வொருவரும் கண்கள் கனிந்தனர். அவர் தொடுகையில் உடல் உருகினர்.

"வருக தந்தையே, தங்களை எங்கள் அரண்மனைக்கு அழைத்துசெல்கிறேன்" என்று பிரத்யும்னன் சொன்னார். "இல்லை, என்னை சாம்பனிடம் அழைத்துச் செல்" என்று அவர் சொன்னார். பிரத்யும்னன் "ஆம், அதுவே முறை" என்று கூறி "வருக, நானே அழைத்துச்செல்கிறேன்" என்றார். பிரத்யும்னனும் இளையோரும் சூழ அவர் சாம்பனின் அரண்மனைப் பகுதி நோக்கி நடந்தார். அவர்கள் செல்லச் செல்ல சாம்பனின் அரண்மனைக்கு அச்செய்தி சென்றிருக்கலாம். அங்கிருந்து சாம்பனும் இளையோரும் கிளம்பி எதிரே வந்தனர். சாம்பன் அங்கிருந்து வருகையிலேயே இரு கைகளையும் தலைக்கு மேல் கூப்பிக்கொண்டிருந்தார். அருகணைந்து கால் தொட்டு

வணங்குகையில் கிருதவர்மன் அவர் தோளைத் தொட்டு தன் நெஞ்சுடன் அணைத்துக்கொண்டார்.

கிருதவர்மன் ஏதேனும் சொல்வதற்குள்ளாகவே சாம்பன் விம்மி அழத்தொடங்கினார். அவரது இளையோரும் அழத்தொடங்கினர். அவரது கைகளைப் பற்றியபடி "என்ன இது? நீங்கள் இளையோர். ஒற்றைக் குருதியினர். பெருமானுடன் ஒருவனின் மைந்தர். அந்நிலையிலிருந்து சிறு வழுவல் இருந்திருக்கலாம், அது இல்லை என்றாவதில்லை" என்று கிருதவர்மன் கூறினார். சாம்பன் "தாங்கள் வந்துவிட்டீர்கள். இனி தங்கள் காலடியில் அமர்ந்திருப்போம்" என்றார். பிரத்யும்னனை நோக்கி "இளையோனை தழுவிக்கொள்க, மைந்தா!" என்றார் கிருதவர்மன். பிரத்யும்னன் இரு கைகளையும் விரிக்க சாம்பன் பாய்ந்துசென்று தழுவிக்கொண்டார். அவர்கள் கண்ணீருடன் ஒருவரை ஒருவர் இறுக்கிக்கொண்டார்கள்.

இளையோர்கள் ஒருவரை ஒருவர் தழுவிக்கொண்டனர். அங்கு நின்றிருந்த என் உள்ளம்கூட அனைத்தையும் மறந்து உவகை கொண்டது. என் கண்களிலிருந்தும் நீர் வழிந்துகொண்டிருந்தது. "வருக! நாம் சென்று ஃபானுவை பார்ப்போம்" என்றார் கிருதவர்மன். "ஆம், அவர் மூத்தவர். நாம் சென்று பார்த்தாகவேண்டும்" என்று பிரத்யும்னன் சொன்னார். சாம்பனையும், பிரத்யும்னனையும், அனைத்து இளையோரையும் அழைத்துக்கொண்டு கிருதவர்மன் திரும்பி யாதவப் பகுதிக்கு வந்தார். அவரது வருகையைக் கண்டதும் யாதவர்கள் அரண்மனையின் பல பகுதிகளிலிருந்தும் ஓடிவந்து இடைநாழியின் இரு பகுதிகளிலும் செறிந்தனர். அவர்கள் செல்லச்செல்ல வாழ்த்தொலி எழுந்தது.

தன் அவைமுகப்பில் கைகூப்பி உடல் நடுங்கியபடி நின்றிருந்தார் ஃபானு. கிருதவர்மன் சாம்பனின் தோளிலும் பிரத்யும்னனின் தோளிலும் இரு கைகளை போட்டபடி நடந்து வருவதைக் கண்டு கைகூப்பி நின்றார். அருகணைந்த கிருதவர்மன் "இளையோரே, உங்கள் மூத்தவரை வணங்குக!" என்றார். சாம்பனும் பிரத்யும்னனும் வந்து ஃபானுவை கால் தொட்டு வணங்கினர். அவர் இரு கைகளையும் தூக்கி அவர்களை அணைத்துக்கொண்டார். மூவரும் ஒன்றாக தழுவிக்கொண்டனர்.

எங்கிருந்தோ முதிய யாதவ வீரன் ஒருவன் "எழுக மாமன்னர்! எழுக துவாரகை! எழுக பெரும்புகழ்! எழுக பேரறம்! திகழ்க தெய்வங்கள்! நிறைவுறுக மூதாதையர்!" என்று கூவினான். அங்கிருந்த அத்தனை வீரர்களும் பெருங்குரலெடுத்து வாழ்த்தொலி எழுப்பினர். அரண்மனையிலிருந்து அக்குரல் எழுந்து பரவி முற்றத்தை அடைந்து நகரமெங்கும் நிறைந்தது. நகர் கடலோசை என வாழ்த்தொலி எழுப்பியது. மெல்லிய ஆடைபோல் அரண்மனை அதிர்ந்துகொண்டிருந்தது. அத்தனை அறைகளுக்குள்ளும் அவ்வுணர்வு சென்று நிறைந்தது. ஒலியே ஒளியென்றாக முடியும் என்று அன்று கண்டேன்.

# கல்பொருசிறுநுரை - 35

**பகுதி நான்கு : அலைமீள்கை – 18**

கிருதவர்மன் அமர்ந்திருக்க அவரைச் சூழ்ந்து நாங்கள் எண்பதின்மரும் ஒருவர் குறையாது அமர்ந்து பேசிக்கொண்டிருந்தோம். ஒவ்வொருவரும் ஏனென்றறியாமலேயே நகைத்தோம். ஒருவரை ஒருவர் களியாடினோம். உண்மையில் பின்னர் எண்ணியபோது வியப்பாக இருந்தது. ஒவ்வொருவரும் அன்று பேசிய ஒவ்வொரு சொல்லும் உண்மையின் ஒளிகொண்டிருந்தது. ஒவ்வொருவரும் தங்கள் ஐயங்களையும் அச்சங்களையுமே சொன்னார்கள். எவரை வெறுக்கிறார்களோ அவரை நோக்கி சென்று அருகே அமர்ந்துகொண்டார்கள். எவரை அஞ்சுகிறார்களோ அவர்கள் கைகளை பற்றிக்கொண்டார்கள். அனைத்து வெறுப்புகளையும் நகையாட்டென மாற்றிக்கொண்டார்கள். அனைத்து அச்சங்களையும் இன்சொல்லென மாற்றிக்கொண்டார்கள்.

பிரத்யும்னனை நோக்கி மூத்தவர் ஃபானு "இவர் கையால் ஒருநாள் களத்தில் நான் கழுத்தறுபட்டு விழுவேன் என எண்ணினேன். அப்போது இவர் என் தலையைப் பற்றி தூக்குவார் என்று கற்பனை செய்தேன். அதன்பொருட்டே இந்நீள்குழல் வளர்த்தேன்" என்றார். "நன்று, இருவருக்கும் முடி இருக்கிறது. இரு தலைமுடிகளையும் சேர்த்து கட்டினால் தேங்காய்போல கையிலே தூக்கமுடியும்" என்று கிருதவர்மன் சொன்னார். இருவரும் வெடித்து நகைத்தனர். விழிநீர் துளிக்கும் அளவு நகைப்பு. சாம்பனிடம் சுதேஷ்ணன் "அசுரர் அவைகளில் ஷத்ரியர்களுக்கு வெறுங்கைகளில்தான் உணவு அளிக்கப்படும் என்று ஒரு சூதன் பாடினான். மெய்யாகவே

அன்று எங்கள் இளையோர் பலர் வெறுங்கையில் உணவுண்பது எப்படி என்று எண்ணிக்கொண்டனர்" என்றார். தொடையில் அறைந்து சாம்பன் நகைத்தார். நகைத்து நகைத்தே உடல் சோர்ந்து தளர்ந்து விழமுடியும் என்று அன்று கண்டேன்.

இனி ஒன்றுமில்லை. அனைத்தும் முடிந்துவிட்டன என்று ஒவ்வொருவருக்குள்ளும் ஒரு குரல் எழுந்ததுபோல. ஒவ்வொருவரும் அஞ்சிக்கொண்டிருந்த எதுவோ ஒன்று. அந்தப் பேருரு கொண்ட அச்சத்திலிருந்து தப்பவே சிறிய அச்சங்களையும் ஐயங்களையும் உருவாக்கிக்கொண்டோம் என்றும் அப்போது உணர்ந்தேன். ஒருநாளில் அச்சம் விலகியதுபோல. கொலை விழியுடன் எழுந்த தெய்வம் புன்னகைத்து அருட்கை காட்டியதுபோல. பின்னர் மெல்லமெல்ல ஓய்ந்தோம். பேச்சு குறைந்தது. சிரிப்பும் குறைந்தது. ஒருவரை ஒருவர் பார்த்தபடி ஒருவரை ஒருவர் உடலால் தொட்டபடி அமர்ந்திருந்தோம். ஒவ்வொரு கையும் வேறு எவர் மேலோ இயல்பாக அமைந்திருந்தது. ஒருவர் மேல் ஒருவரென சாய்ந்திருந்தோம்.

நடுவில் அமர்ந்திருந்த கிருதவர்மன் கண்கள் கலங்கி முகம் உணர்ச்சிகளால் சுருங்கி விரிய அழுபவர் என தோன்றினார். "நன்று. இவ்வண்ணம் நிகழவேண்டும் என்று இருக்கிறது" என்றார். "நன்று, இளைய யாதவர் இங்கு இப்போது வந்தாரென்றால் மிக நன்று" என்றார். ஃபானு "தந்தையை அழைக்கச்செல்வோம். எண்பதின்மரும் இணைந்து செல்வோம்" என்றார். "ஆம், ஒருவர்கூட எஞ்சாது கிளம்பிச்செல்வோம். சாத்யகிக்கு தெரியும் அவர் எங்கிருக்கிறார் என்று. அவரை அழைத்துக்கொண்டு செல்வோம்" என்றார். "அவர் வராவிட்டால் இழுத்து வருவோம். இங்கே மைந்தர் மகிழ்ந்து பொலிவதை

அவர் காணவேண்டும். அவருக்கு என்றும் எங்கள் மேல் நம்பிக்கையின்மை இருந்தது. இந்நகரை விட்டு அவர் விலகிச்சென்றதே அதனால்தான்" என்றார் சுஃபானு.

ஃபானு "அந்நம்பிக்கையை நாம் பேணிக்கொள்ளவில்லை" என்றார். அப்போது அவர் குரல் உடைந்தது. விழிநீர் வழியலாயிற்று. "நாம் நம் சிறுமையையே வெளிக்காட்டினோம்... இல்லை என்று சொல்லுங்கள் பார்ப்போம். நாம் அவர் நம்மைவிட மிகப் பெரியவர் என்பதனால் அவரை அஞ்சினோம். அவரை விலக்கினாலொழிய நாம் பெரியவர்களாக தெரிய முடியாது என்பதனால் அவரை வெறுக்க எண்ணினோம். ஒருவரை வெல்ல விழைந்தால் அவரை வெறுப்போம். அது மானுட உளப்போக்கு. அவ்வெறுப்பால் அவர்களை வெல்வதற்கு எதையும் செய்யலாமென்னும் நிலையை அடைவோம்." சுதேஷ்ணன் "ஆம், மெய்... அவருக்கு நாம் பெரும்பிழையை இழைத்தோம். அவர் உருவாக்கிய இந்நகரிலிருந்து அவரை அகற்றினோம்" என்றார்.

"இது அவருடைய நகர். நாம் இதில் வெறும் ஒட்டுண்ணிகள்" என்று ஃபானுமான் சொன்னான். "சொல்லுங்கள். நாம் யார்? நாம் வெறும் யாதவர். இந்தக் கடலோர பாலைநிலத்து நகரில் நம் இடமென்ன? ஏன் இங்கே அமர்ந்திருக்கிறோம்? நம் மூதாதையரா இதை ஈட்டினார்கள்? அல்ல, இது முழுக்கமுழுக்க நம் தந்தை இளைய யாதவரின் கொடை. ஆனால் அவர் நமக்கு அளித்ததை முற்றும் பிடுங்க முனைந்தோம். அது முதலைகளின் இயல்பு. அவை உணவிடும் கைகளை அள்ளிக்கவ்வ முயலும். உணவிடுபவர்களையே உண்ணவும் முனையும்... நாம் வெறும் முதலைகள். எண்ணமோ நெறியோ

இல்லாதவர்கள்." அச்சொற்கள் ஒவ்வொருவரையும் உணர்வழியச் செய்தன. மூத்தவர் ஃபானு விசும்பி அழலானார். அதுவே தொடக்கம். பலரும் விழிநீர்விட்டனர்.

அப்போது அமைச்சர் மெல்ல வந்து "அரசர் கிருதவர்மன் நேரடியாக நீண்ட பயணத்திலிருந்து வந்திருக்கிறார். அவர் உடல் சோர்ந்திருக்கக்கூடும். அவரை உணவுண்ண அனுப்ப வேண்டும், அவர் சற்று ஓய்வெடுக்கவேண்டும்" என்றார். "ஆம் தந்தையே, தாங்கள் ஓய்வெடுங்கள்" என்றபடி ஃபானு எழுந்தார். "தந்தையே, நானும் அதை மறந்துவிட்டேன். தாங்கள் ஓய்வெடுக்கவேண்டும்" என்றார் பிரத்யும்னன். "இல்லை, இதற்கு மேல் ஓர் இளைப்பாறலோ அன்னம்கொள்ளலோ உண்டா என்ன?" என்றார் கிருதவர்மன். முகம் மலர்ந்து கைவிரித்து "இந்நாளில் நான் பெருந்தந்தையென ஆனேன். ஆண் நிறைவுகொள்வது பெருந்தந்தை என்னும் நிலையிலேயே" என்றார்.

ஃபானு "மீண்டும் சந்திப்போம். மாலை தங்களுக்கென ஒரு விருந்து ஏற்பாடு செய்கிறோம்" என்றார். "களியாட்டும் இசையும் இருக்கட்டும் அதில்" என்று பிரத்யும்னன் சொன்னார். "ஆம், இங்கேயே பேரவைகூடத்திலேயே ஏற்பாடு செய்வோம்" என்றார் ஃபானு. "நெடுங்காலமாக அது பூட்டியே கிடக்கிறது. உண்மையில் எந்தை இங்கிருந்து சென்றபின்னர் களியாட்டு அறைகள் எல்லாமே ஓய்ந்துவிட்டன. பெரும்பாலானவை அன்று பூட்டப்பட்டவை. அதன் பிறகு தூய்மை செய்யப்படவில்லை." ஃபானுமான் "ஆம், களியாட்டறைகள் ஓய்ந்தமையால்தான் நகர் இருண்டது. துவாரகை களியாட்டின் நகரம். களியாட்டுக்குரிய தேவதைகளை சிறைவைத்துவிட்டோம்!" என்றான்.

சுஃபானு கைதூக்கி "அத்தனை களியாட்டறைகளும் ஒருங்கட்டும். அத்தனை விருந்தறைகளும் ஒருங்கட்டும். நகர்மக்கள் அனைவருக்கும் நாளை பெருவிழவொன்றை அறிவிப்போம். யானை மீதேறி கிருதவர்மன் நகர் மீது செல்லட்டும். எந்தையே அவர் வடிவில் எழுந்திருக்கிறார் என்பதை நகர் மக்கள் அறியட்டும். இங்கு இனி அவர் சொல்லுக்கு மறுசொல்லென ஒன்றில்லை என்று குடிகள் தெளியட்டும்" என்றார். ஃபானு "ஆம்! அது குடியின் மூத்த மைந்தன் என என் சொல்" என்றார். பிரத்யும்னன் "அறியட்டும் உலகு! அது என் குடியின் சொல்" என்றார். "ஆம், அவ்வாறே" என்றார் சாம்பன். மைந்தர் அனைவரும் கைதூக்கி "ஆணை! ஆணை! ஆணை!" என்று கூவினர். கிருதவர்மன் கைதூக்கி "வெல்க யாதவப்பெருங்குலம்! வெல்க துவாரகை!" என்றார்.

நான் கிருதவர்மனிடம் "மாலை விருந்தில் மீண்டும் சந்திப்போம். அதுவரை தாங்கள் நீராடி ஓய்வெடுக்கலாம்" என்றேன். கிருதவர்மன் "ஆம், ஓய்வைப்பற்றிப் பேசியதுமே களைப்பு எழுகிறது. என் உடல் இத்தனை வெம்மையை தாங்காது" என்றார். எழுந்து ஃபானுவின் தோளில் தட்டி "மைந்தா, வருகிறேன்" என்றார். பிரத்யும்னனின் வயிற்றில் கையால் விளையாட்டாகக் குத்தி "நெடுநாட்களாக படைக்கலம் பயிலவில்லை நீ. அரியணை அமர்ந்து சொல்சூழ்ந்துகொண்டிருக்கிறாய். தசை திரண்டிருக்கிறது வயிற்றில்" என்றபின் சாம்பனின் தலைமேல் கைவைத்து சற்றே உலுக்கிவிட்டு என்னுடன் வந்தார்.

இடைநாழியினூடாகச் செல்கையில் என்னிடம் "நன்றி, மைந்தா. நான் இதை எதிர்பார்க்கவில்லை. இங்கு இவ்வண்ணம் நிகழும் என்று எண்ணியிருக்கவும் இல்லை. அதைவிட என்னுள்

இருந்து இவ்வண்ணம் ஒருவன் எழுவான் என்றும் கருதவில்லை" என்றார். "வரும் வழியெல்லாம் அச்சமும் ஐயமுமாக அலைக்கழிக்கப்பட்டேன். இங்கு சிறுமைகொண்டு விழிநீர்விட்டே நின்றிருப்பேன் என்றும், ஒருவேளை மேலும் சிறுமையென இங்கு களம்படுவேன் என்றும் எண்ணிக்கொண்டேன். மைந்தரால் கொல்லப்படுபவன் விண்ணுலகை எய்துவதில்லை. ஏனெனில் தனக்கும் தனது ஏழு மூதாதையருக்குமான அன்னத்தையே அவன் நிறுத்திவிடுகிறான்" என்றார்.

"அவ்வாறு நிகழும் என்று தாங்கள் எதிர்பார்த்திருக்கக்கூடாது" என்றேன். "அது எங்கள் குடிமேல் சொல்லும் பழி. ஒருபோதும் அவ்வண்ணம் நிகழ்ந்திருக்காது." கிருதவர்மன் "நிகழும்" என்றார். "யாதவக் குடியில் அவ்வாறெல்லாம் நிகழும் என்ற குறிப்பு நெடுங்காலமாகவே உள்ளது. ஒவ்வொரு முறை யாதவர்களுக்குள் பூசல் எழுகையிலும் மூத்தவர்கள் பதறுவது ஒரு குலப்பேரழிவு இங்கு நிகழும் என்ற தொன்மையான ஐயத்தால்தான்" என்று அவர் சொன்னார். "யாதவக் குடி தன்னுள் போரிட்டு முற்றழியும் என்றும் பின்னர் பிற குருதிக்கலப்புடன் பிறந்தெழும் என்றும் நிமித்தச்சொல் எழுந்து பதினெட்டு தலைமுறை ஆகிறது. பதினெட்டு தலைமுறைக்குப் பின் அவ்வண்ணம் நிகழும் என்பதே சொல் என்கிறார்கள் பூசகர்கள்."

"ஆனால் இன்று நிகழ்ந்தவற்றை பார்க்கையில் ஒருபோதும் அதற்கு வாய்ப்பில்லை என்று தோன்றுகிறது" என கிருதவர்மன் தொடர்ந்தார். "அகத்தில் நாம் அனைவரும் மிக எளியவர்கள். ஒருவரோடொருவர் மெய்யான அன்பு கொண்டிருக்கிறோம். தந்தையர் மேல் மாறாத மதிப்பும் கொண்டிருக்கிறோம்." அவர்

முகம் கனிந்தது. வெந்து கரைந்த முகத்தில்கூட கனிவு பேரழகுடனேயே வெளிப்படுகிறது என்று கண்டேன். நான் புன்னகைத்து "நாம் தீயவர்களல்ல என்று நாமே உணர்வதைப்போல் மகிழ்வும் நிறைவும் அளிப்பது பிறிதொன்றில்லை. நாம் நம்மை நாமே தழுவிக்கொள்கிறோம். நம்மை நாமே கொஞ்சி குலாவிக்கொள்கிறோம்" என்றேன்.

"உண்மைதான்" என்று அவர் கூறினார். "இன்று நான் நிறைவுற்றிருக்கிறேன். தெய்வங்கள் என்மேல் கருணைகொண்டவை என்றால் இன்றே துயிலில் இப்புன்னகை என் முகத்தில் திகழ்ந்திருக்க என்னை உயிர்நீக்கச் செய்யும். எனில் அங்கு ஒளிமிக்க விண்ணுலகு எனக்காக ஒருங்கியிருப்பதை சென்று காண்பேன்" என்றார். நான் "விழைந்த சாவை யோகியருக்கு அன்றி பிறருக்கு தெய்வங்கள் அளிப்பதில்லை என்பார்கள். விழைந்த மரணம் என்பது ஊழல்ல, பரிசும் அல்ல, அது நாம் ஈட்டும் செல்வம்" என்றேன். "ஆம்" என்று அவர் சொல்லி புன்னகைத்து "ஒருவேளை விரும்பிய வாழ்வை விலையெனக் கொடுத்து இதை ஈட்டியிருக்கிறேனோ என்னவோ?" என்றார்.

நான் "அவ்வண்ணமல்ல. தாங்கள் வாழ்ந்த வாழ்வும் பொருள் உள்ளதே" என்றேன். கிருதவர்மன் "வஞ்சத்தை மட்டுமே ஈட்டிக்கொண்டிருந்தேன். வஞ்சத்தை பீடமெனக் கொண்டு அமர்ந்து வஞ்சத்தை மணிமுடியென சூடி அமர்ந்திருப்பவன் என்று என்னைப்பற்றி ஒரு சூதன் பாடியபோது நான் அகம் மகிழ்ந்ததை நினைவுகூர்கிறேன். வஞ்சமகன் என்று சொல்லை எனக்கென சிறப்பு மொழியாகவே எண்ணியிருந்தேன்" என்றார். "ஆனால் அதை எண்ணி இப்போது உளம் கூசுகிறேன். இவ்வாழ்வு வஞ்சத்தில் வீணடிக்கப்படுவதற்குரியதல்ல.

எண்ணி இன்புறுவதற்குள்ள எல்லாம் இங்குள்ளன. மகிழ்விக்கக்கூடியவை. விழிநீர் சிந்தி நின்று வழிபடுவதற்குரியவை. உளம் விரிந்து தழுவுதற்குரியவை."

நான் அவரிடம் "ஆனால் நீங்கள் இப்புவியில் எதையும் விழைந்து வஞ்சம் கொள்ளவில்லை. தந்தையே, நீங்கள் உங்கள் பொருட்டு கூட வஞ்சம் கொள்ளவில்லை. உங்கள் வஞ்சம் உங்கள் தோழனின் பொருட்டு, அவர் இறப்பின் பொருட்டு. இப்புவியில் எதற்காகவும் உங்கள் தோழரை விட்டுக்கொடுக்கவில்லை. இப்புவியில் அனைத்தையும் ஒரு தோழனின், அதுவும் இறந்த தோழனின் நட்பின் பொருட்டு ஈடுவைத்தீர்கள். சததன்வாவின் வஞ்சத்தை இத்தனை ஆண்டுகள் இங்கு நிலைநிறுத்தினீர்கள். அது அத்தனை சிறிய விழுமியம் ஒன்றும் அல்ல. மானுடர் எண்ணி பயில வேண்டியது, ஊழ்கத்திலமர்ந்து உணரவேண்டியது" என்றேன்.

"இச்சொற்களை நீ என்னிடம் கூறியதே நிறைவளிக்கிறது. ஆனால் அது உண்மையல்ல. அவ்வாறுதான் நானும் எண்ணிக்கொண்டிருந்தேன்" என்றார் கிருதவர்மன். "ஆனால் இன்று தோன்றுகிறது, இங்கே இதுவரை பெருவஞ்சமும் காழ்ப்பும் கொண்டவர் எவராவது சிறுமையின் பொருட்டு, எளிமையின் பொருட்டு அந்த விழைவை கொண்டிருக்கிறார்களா என்று." அவர் கண்கள் கனவிலெனத் தெரிந்தன. "பெருவஞ்சம் ஒரு களியாட்டு. அக்களியாட்டை அடைய விரும்புபவர் அதற்கென எல்லா முறையான சொற்களையும் தானே உருவாக்கிக்கொண்டிருப்பார். தன் பொருட்டல்ல, தன் குடியின் பொருட்டு என்பார். தன் தோழமையின் பொருட்டு என்பார். தன் தெய்வங்களின்

பொருட்டு, பேரறத்தின் பொருட்டு என்பார். உயரிய விழுமியங்களை உரைப்பார்.”

“மாபெரும் நெறியொன்றின் பொருட்டே தான் அவ்விருளை சூடிக்கொண்டிருப்பதாக தன்னை தானே நம்ப வைத்துக்கொள்வார். தன்னை தானே நம்ப வைத்துக்கொள்பவர் பிறரையும் அவ்வாறே நம்பவைப்பதில் வெற்றி பெறுவார்” என்றார் கிருதவர்மன். “ஆனால் உண்மையில் அவருடைய விழைவென்பது வஞ்சத்தின் பொருட்டே. அவருடைய நெறிகள் அனைத்தும் வஞ்சம் கொள்வதற்காகவே. வஞ்சம் ஒரு நோய். ஒருவன் நோயுறும்போது நோய் தோன்றுவதற்கு நெடுநாட்களுக்கு முன்னாலேயே அவன் நோயுறுவதற்கான அனைத்து உளநிலைகளையும் தெய்வங்கள் அவனிடம் உருவாக்கிவிடுகின்றன. அத்தனை சொற்களையும் கொண்டுவந்து சமைத்து அகத்தே பரிமாறிவிடுகின்றன. வஞ்சமும் அவ்வாறே.”

நான் அவரிடம் பேச விரும்பவில்லை. அவர் “நன்று. எவ்வாறாயினும் நோய் மட்டுப்பட்டுள்ளது. என் இருளிலிருந்து என்னால் வெளியே வரமுடியுமென்று இப்போது உணர்கிறேன். இருளில் இருக்கிறேன் என்று உணர்வதே ஒரு விடுதலை. அதிலிருந்து வெளிவரக்கூடுமென்ற நம்பிக்கையை பெறுவது பிறிதொரு விடுதலை. ஓர் அடியேனும் வெளியே வைத்துவிடுவது என்பது அதைவிடவும் பெரிய விடுதலை” என்றார்.

கிருதவர்மனின் அறையை அடைந்ததும் நான் தலைவணங்கி “தந்தையே, இது தங்களுக்குரிய அரண்மனை. எந்தை இங்கிருந்தபோது கோடைகாலத்தில் அவர் தங்குமிடம் இது. இது தெற்கிலிருந்து வரும் விசைகொண்ட காற்றால்

உலைக்கப்படும் மாளிகை. ஆகவே தென்றல்மாளிகை என்று இதற்கு பெயர். இதன் அனைத்துச் சாளரங்களினூடாகவும் தெற்குக்காற்று உள்ளே பெருகி வரும். கடற்காற்று தங்களுக்கு உகந்ததென்றால் இங்கு தாங்கள் மகிழ்ந்திருக்கலாம்" என்றேன்.

"ஆம், காற்று எனக்கு எப்போதும் தேவைப்படுகிறது" என்றபின் உரக்க நகைத்து "நெடுங்காலமாக நான் காற்றில்லாத அறைகளையே விரும்பியிருக்கிறேன் என்று உனக்குத் தெரியுமா?" என்றார். நான் "மெய்யாகவா?" என்றேன். "ஆம். என்னால் பெரிய அகன்ற அறைகளில் அந்தியுறங்க முடிந்ததில்லை. மிகச் சிறிய அறைகள், காற்றோட்டமில்லாத அறைகள், எப்போதும் அரையிருள் நிறைந்த அறைகள் எனக்கு உகந்தவையாக இருந்தன. அவ்வறைக்குள் என் உடலின் வெம்மையும் என் உடலின் மணமும் நிறைந்திருக்கவேண்டும்" என்றார்.

நான் நகைத்து "புலிக்குகைகள்போல" என்றேன். "ஆம், மிகச் சரியாக புலிக்குகைகள்போல. புலியால் குகையில்தான் தங்க முடியும். வெட்டவெளி அதை அலைவுறச் செய்கிறது. அங்கு அதனால் துயில்கொள்ள இயலாது. மிகச் சிறிய அறைகளுக்குள் ஏன் துயில்கொண்டேன் என்று இப்போது எண்ணிப்பார்க்கிறேன். அங்கு நான் மேலும் தனித்திருக்கிறேன் என்பதனாலாக இருக்கலாம். கற்பனையில்கூட அங்கு இன்னொருவர் இருப்பதை விரும்பாததனாலாக இருக்கலாம். எப்போதும் என்னுடன் இன்னொருவரை துயில்கொள்ள விட்டதில்லை. அஸ்வத்தாமனும் நானும் உளத்தால் நெருங்கி இருந்த காலத்தில்கூட நான் தனியாக சிற்றறைகளுக்குள் அல்லது குகைப்பொந்துகளுக்குள் நுழைந்து தனித்தே துயில்கொண்டிருக்கிறேன்."

“குருக்ஷேத்ரப் போர் முடிந்ததும் மேலும் தனிமைப்பட்டேன். தவக்குடில் என்று நான் சென்று அமைந்தது கால் நீட்டினால் தலை இடிக்கும் சிறிய குடிலில்” என்றார் கிருதவர்மன். “நெடுங்காலத்திற்குப் பின்னர் முதன்முறையாக இத்தனை பெரிய அறையில் துயில்கொள்ளவிருக்கிறேன். நன்று, ஏவலனை அழைத்து இச்சாளரங்கள் அனைத்தையும் திறக்கச் சொல்.” நான் “அனைத்தையும் திறந்தால் உள்ளே அனைத்துத் துணிகளும் சிறகுகளாகி படபடக்கும். காற்றில் அவை சுழன்று சுழன்று அடிக்கும்” என்றேன். “எனக்கு காற்று சுழன்று அடிக்கவேண்டும். கடல்மேல் படுத்திருக்கிறேன் என்று நான் உணரவேண்டும். உண்மையில் இந்த அறையை காற்று பறக்கடிக்கவேண்டும். நான் வெட்டவெளியையே விரும்புகிறேன்” என்றார் கிருதவர்மன்.

நான் ஏவலர்களை அழைத்து சாளரங்களின் கதவுகளை திறக்கச் சொன்னேன். அவற்றின் கதவுகள் நெடுங்காலமாக திறக்காததனால் இறுகியிருந்தன. பித்தளைக் கீல்கள் என்பதனால் அவை அத்தனை நாட்களுக்குப் பிறகும் ஓசையின்றி திறந்தன. அவர்கள் அனைத்தையும் துடைத்தனர். பட்டு விரிக்கப்பட்ட மஞ்சத்தில் அவர் அமர்ந்தார். நான் எதிரே நின்று தலைவணங்கி “அனைத்தும் இங்கு ஒருக்கப்பட்டுள்ளன. தாங்கள் ஓய்வெடுங்கள்” என்றேன். அவர் என்னிடம் “சாத்யகி எங்கிருக்கிறார்?” என்றார். என் உள்ளம் திடுக்கிட்டது. “அவர் இங்குதான் இருக்கிறார். அவரது குடிகள் இங்கு சிறிய தங்குமிடம் ஒன்றை உருவாக்கியுள்ளனர். அங்கிருக்கிறார். தங்களை இன்று மாலை அவர் சந்திக்க வருவார். விருந்திற்கு அவரை அழைக்க ஏவலர் சென்றிருக்கிறார்கள்” என்றேன்.

“நன்று. அவரை நான் சந்திக்கவேண்டும்” என்றார். நான் தலைவணங்கி வெளியே வந்தேன்.

இடைநாழியில் நடந்தபோது என் கால் தளர்ந்திருந்தது. உள்ளம் எடைகொண்டு ஒரு பொருள் என உள்ளே அமர்ந்திருந்தது. பின்னர் நீண்ட இடைநாழியில் நின்றேன். என் உள்ளம் அடைந்த சோர்வென்ன என்று எனக்கு புரியவில்லை. தவறான எதையோ கண்டுவிட்டிருக்கிறேன். தவறானது அல்ல, பிழையானது, ஒவ்வாதது. எதை? எதை? அல்லது அச்சுறுத்தும் எதையோ. எதை? எதை?

நான் அப்போது என் அறைக்குள் சென்று கதவை மூடிக்கொள்ள விரும்பினேன். என் அறையும் சற்று பெரியதுதான். துவாரகையில் அனைத்து அறைகளும் சற்று பெரியவைதான். எனக்கு அப்போது மிகச் சிறிய அறை ஒன்று தேவையாக இருந்தது. நான் மட்டுமே இருக்கும் அறை. இருண்ட சிறிய பொந்து போன்ற அறை. அப்போது தோன்றியது அது கணிகரின் அறை என்று. அவர் எங்கு தங்கியிருக்கிறார் என்று எனக்கு தெரியாது. ஆனால் அத்தகைய அறை ஒன்றிலேயே அவர் தங்கியிருக்கக் கூடும். அதற்குள் சென்று அவருடன் அமர்ந்திருக்கவேண்டும் என்று தோன்றியது.

ஏன் அவ்வாறு தோன்றியது என்று எண்ணி எண்ணி வியந்திருக்கிறேன். நமது உள்ளம் நமக்கு சற்று முன்னால் பறந்துகொண்டிருக்கிறது. பெரும்பாலான தருணங்களில் நமது உள்ளமே நம்மை அறியாமல் முடிவுகள் எடுத்த பிறகு

அதற்கான அனைத்து சொற்கூட்டல்களினூடாக அம்முடிவையே சென்றடைகிறோம். தந்தையே, வானில் கண்ணுக்குத் தெரியாத ஓட்டங்கள் உள்ளன. அவையே பறவைகளை புவி முழுக்க கொண்டுசெல்கின்றன. ஆனால் பறவைகள் தாங்கள் சிறகடித்து நீந்திச் சென்றுகொண்டிருப்பதாக எண்ணிக்கொண்டிருக்கின்றன என்பார்கள்.

நான் ஏவலனிடம் என்னை அழைத்துச் செல்லும்படி ஆணையிட்டேன். அரண்மனைக்குப் பின்னால் யாதவர் குடிகளுக்கு அருகே ஒரு சிறு மாளிகையில் கணிகர் தங்கியிருக்கிறார் என எண்ணியிருந்தேன். ஆனால் மாளிகை நெருங்கியதும் ஏவலன் பக்கவாட்டில் திரும்பிச்செல்வதை கண்டேன். "எங்கு செல்கிறாய்?" என்று கேட்டேன். "கணிகரின் ஆணை. அவர் தனக்கு மாளிகையில் தங்கி பழக்கமில்லை என்று உரைத்தார். தனக்கென ஒரு சிறு குடிலை அமைக்கவேண்டுமென கோரினார். அவ்வாறே மாளிகைக்கு பின்பக்கம் சிறு தோட்டத்தில் அவருக்கான குடில் அமைக்கப்பட்டுள்ளது" என்றான்.

அக்குடில் தொலைவில் பார்த்தபோது ஒரு சிறு குருவிக்கூடென்றே தோன்றியது. கையில் கிடைத்த அனைத்தையும் கொண்டு பறவைகள் உருவாக்கும் சிறு தங்குமிடம். அங்கு சென்று வெளியே நின்றபோது அதற்குள் இன்னொருவர் செல்லக்கூடும் என்று தோன்றவில்லை. மரக்கிளைகளில் செய்யப்பட்ட கூடல்ல அது. சுற்றியிருக்கும் இலைகளையும் சருகுகளையும் இழுத்தெடுத்து அமைக்கப்பட்ட ஒரு பதுங்குமிடம். புதர்ப்பறவைகளின் கூடுபோல. "உத்தமரே!" என்று நான் அழைத்தேன். கணிகர் உள்ளிருந்து அமர்ந்தவாறே

எட்டிப்பார்த்தார். தரையிலிட்ட தர்ப்பைப் புல்லில் அமர்ந்து சுவடி ஒன்றை பார்த்துக்கொண்டிருந்தவர் "வருக!" என்றார்.

நான் உள்ளே நுழைந்தேன். "அமர்க!" என்றார். நானும் அவரும் அமர்ந்துகொண்டபோது அக்குடிலின் சிறுவெளி நிறைந்தது. உண்மையில் என் உடலின் ஒரு சிறுபகுதி வெளியே கூட இருந்தது. "கூறுக!" என்றார். "கிருதவர்மன் வந்திருக்கிறார். இன்று மாலை ஒரு விருந்து ஒருக்கப்பட்டுள்ளது. அதற்கு தங்களையும் அழைக்கும்பொருட்டே வந்தேன்" என்றேன். அதை கூறிய பின்னரே அங்கு வந்ததற்கு மிகப் பொருத்தமான ஏது அது என்று எனக்கு தெரிந்தது. என்னை அறியாமலேயே மிகச் சரியான சொல்சூழ்கைகளை நான் எடுக்கத் தொடங்கியிருந்தேன். முன்பென்றால் அப்படி ஒரு சொல்லை எடுத்து முறைப்படி உரைக்கும்பொருட்டு நான் மிகவும் போராடியிருப்பேன்.

அவர் என்னிடம் "நன்று" என்றார். அவரது புன்னகை இனிதாக இருப்பதை நான் பார்த்தேன். அவரை நெடுங்காலமாக பார்த்துக்கொண்டிருக்கிறேன். அழகென்றும் நலமென்றும் எதுவுமே தெரியாத முகம் கொண்டவர். ஆனால் மிக அரிதாக புன்னகைக்கும்போது மட்டும் அவர் பேரழகுடன் இருந்தார். அத்தனை அழகுகொண்ட புன்னகையை அதற்கு முன் தங்கள் முகத்தில் மட்டும் பார்த்திருக்கிறேன். "தாங்கள் அவ்விருந்தில் பங்குகொள்ள வேண்டும், அந்தணரே. எங்கள் எண்பதின்மருக்கும் நடந்த பூசல்களையும் அதன் விளைவாக நடந்த காழ்ப்புகளையும் தாங்கள் அறிவீர்கள். கிருதவர்மன் வந்து அனைத்தையும் இனிதாக மாற்றிவிட்டார். ஒரே கணத்தில், ஒரே சொல்லில். சொல்கூட இல்லை, ஒரு நோக்கில்" என்றேன்.

“ஆம், அது நன்று. தெய்வங்கள் துவாரகையிடம் கனிவுடன் இருக்கின்றன” என்று அவர் சொன்னார். “இன்று தெய்வங்கள் நிறைக! மூதாதையர் பொலிவுறுக! இது ஒரு இனிய நாள். நான் இனிப்பென எதையாவது அருந்தியாகவேண்டும்” என்றார். ஏவலனை அழைத்து “இனிப்பு ஏதேனும் கொண்டு வா” என்றார். பின்னர் என்னிடம் “சாத்யகி எங்கிருக்கிறார்?” என்றார். அக்கணம் நான் மீண்டும் அந்த உளஅதிர்வை உணர்ந்தேன். உடனே எனக்கு ஒன்று தெரிந்தது. அந்த முதல் உடல் அதிர்வு ஏன் ஏற்பட்டது என்று. சாத்யகியைக் குறித்து கேட்டபோது கிருதவர்மனின் கண்களில் எழுந்தது ஒரு சிறு நஞ்சு. துளியிலும் துளி. ஊசிநுனியால் தொட்டு எடுப்பதற்குரியது. சிறிய நஞ்சு மேலும் வீரியம் கொள்ளும். ஏனென்றால் தன் தொடுகைக்குரிய நரம்புமுடிச்சை தேடி கண்டடையும் கூர் கொண்டது அது. கணிகர் அதை அறிந்திருக்கிறார் என்று உணர்ந்தேன்.

# கல்பொருசிறுநுரை - 36

**பகுதி நான்கு : அலைமீள்கை – 19**

அன்று என் அறைக்கு திரும்புகையில் கணிகருடனான உரையாடலையே எண்ணிக்கொண்டிருந்தேன். என்னை மீறிய ஒன்று, நான் முற்றிலும் விரும்பாத ஒன்றுக்கு இட்டுச்செல்வது, என்னை முற்றழிக்கக்கூடியது அவரிடமிருந்தது. அதிலிருந்து முழுமையாக விலகிவிடவேண்டுமென்று விரும்பினேன். நான் என்றும்

எதிர்த்து வெல்ல முயலும் ஒன்றை பற்றிக்கொண்டு தொற்றி அதன் மேல் ஏறி என் உயிராற்றல் அனைத்தையும் குவிக்கச்செய்து வளர்த்து பேருருக்கொள்ளச் செய்துவிடுகிறது அது.

ஆலமரங்கள் வளர்ந்தெழுகையில் அவற்றின் மேல் அவற்றின் அடியிலிருந்த சிற்றாலயங்கள் சென்று அமர்ந்திருப்பதை நான் பார்த்திருக்கிறேன். இந்த விழைவில், வஞ்சத்தில் நான் சென்று அமர்ந்திருக்கக்கூடும். ஆனால் எவ்வண்ணம் அதை வெல்வது என்று எனக்கு தெரியவில்லை. அதுநாள் வரை நான் அவற்றை வென்றிருந்த வழி என்பது என்னை சிறியவனாக எண்ணிக்கொள்வது. அத்தனை பெரியவற்றை தாங்கும் கலமல்ல நான் என்றாக்கிக்கொள்வது. என்னை ஒரு பெருந்திரளில் பிறரால் அறியப்படாதவனாக அமர்த்திக்கொள்கையில் அப்பெருந்திரளில் ஒருவனாக என்னை நான் பார்க்கும் விழியும் அமைகிறது. நான் எவருமல்ல என்று எனக்கு சொல்லிக்கொள்கிறேன். அதுவே எனக்கு காப்பு.

அது முதலில் உடைந்தபோதே எனது அனைத்துத் தளைகளும் சிதைந்தன. வெட்டவெளியில் நின்றிருந்தேன். தந்தையே, நான் பிறிதொருவன், அறியப்படாதவன், கணிக்கப்படாதவன், எனது எல்லைகள் முடிவற்றவை என்று எண்ணிக்கொண்டேன். என்னுள் ஓடிக்கொண்டிருந்த அவ்வெண்ணங்கள் என்னை பேருருக்கொள்ளச் செய்கின்றன. என் காலடியில் சிற்றுருவாக அனைவரையும் பார்க்கத்தொடங்கினேன். மூத்தவரை, துவாரகையை, ஏன் தங்களைக் கூட. அதை பிறிதொரு மானுடர் அப்போது பார்க்க நேர்ந்தால் இளிவரல் செய்து சிரிக்கக்கூடும். ஆனால் நான் அவற்றை சிறுகுழவியென பேணிக்கொண்டிருந்தேன்.

தந்தையே, ஒவ்வொரு மானுடனுக்குள்ளும் ஆணவமென்னும் சிறுமை தேங்கிக்கிடக்கிறது. எல்லையற்ற ஆணவம். தன்னையே உலகமுதல்வன் என, இறைநிகர்த்தோன் என எண்ணிக்கொள்ளாத எளிய மானுடர் எவரேனும் இப்புவியில் வாழ்கின்றனரா? பிறர்மேல் உண்மையான மதிப்புள்ள பாமரன் என ஒருவன் உண்டா? உண்மையில் எவரும் அதை ஏற்றுக்கொள்வதில்லை என்பதனாலேயே அவன் அதை ஆழப் புதைத்துக்கொள்கிறான். தன் ஆழ்ந்த தனிமையில் மட்டும் அதை எடுத்துப் பார்க்கிறான். அந்தத் தனிமையாலேயே அது இனிமைகொள்கிறது. அவனுடைய அனைத்து துயர்களுக்கும் மருந்தாகிறது. அவனை தன் கைகளில் ஏந்திக்கொள்கிறது.

எவரோ ஒருவர் அதை ஏற்றுக்கொள்கிறார். மிச்சமின்றி வாங்கிக்கொள்கிறார். அவர்மேல் அவன் அப்படியே கவிந்துவிடுகிறான். அவரை தன்னை அறிந்தவர் என்றும் தன்மேல் பெருமதிப்பும் அன்பும் கொண்டவர் என்றும் எண்ணிக்கொள்கிறான். கணிகையர் இந்த வாயிலை திறந்தே உள் நுழைந்து ஆட்கொள்கின்றனர். அரசியல்சூழ்ச்சி அறிந்த அந்தணர் இதைக் கொண்டே மாமன்னர்களுக்கு கடிவாளமிடுகின்றனர். அதை அறிந்து ஏற்றுக்கொண்ட ஒருவன், ஏற்றுக்கொண்டதாக நடித்தாலே போதும் அவ்வாணவத்திற்குரியவனை தன் அடிமையென்றே ஆக்கிவிடமுடியும்.

கணிகரோ அதை அவ்வண்ணமே பெற்றுக்கொண்டார். 'ஆம், அதனால் என்ன? அது மெய்தானே?' என்னும் அவருடைய பாவனை எனக்கு முதலில் திகைப்பை ஊட்டியது. பிறிதொரு மானுடர் என்னை அவ்வாறு பார்க்க முடியும் என்று தோன்றவில்லை. ஆனால் மிக விரைவிலேயே 'ஆம், அது

அவ்வாறுதானே?' என்று நானும் எண்ணத் தலைப்பட்டேன். நானும் அவருடன் இணைநின்று உரையாடலானேன். அவரை நான் கையாள முயன்றேன், அவர் என்னை கையாள்வதை ஆழ உணர்ந்திருந்தேன்.

நான் அவரை அஞ்சியது அதனால்தான். ஆகவே உறுதிகொண்டேன், இனி அவருடன் தொடர்பில்லை. இனி அவரை எவ்வகையிலும் என்னுடன் உரையாட நான் ஒப்புக்கொள்ளப் போவதில்லை. அவைகளில் அவர் இருக்கட்டும், என் அருகே வந்து அமர வேண்டியதில்லை. அவர் ஒன்றும் சொல்வதில்லை. அரசுசூழ் அவையில் கூட மிகக் குறைவாகவே அவர் பேசினார். ஆனால் என்னை பார்க்கையில் எல்லாம் விழிகளால் அவர் ஒன்று காட்டினார். மணிமுடி சூடி பாரதவர்ஷத்தை ஆண்டுகொண்டிருக்கும் பேரரசன் ஒருவன் முன் அமைச்சர் ஒருவர் பணிவது போன்ற புன்னகையும் தணிதலும். அதனூடாக என் ஆணவத்தை அனலோம்பினார்.

இனி அவர் பார்வையை நோக்குவதில்லை என்று எண்ணிக்கொண்டேன். எவ்வண்ணம் அவரிடம் இருந்து தப்பலாமென்று கணித்தேன். அவரை எதிர்கொள்வது அரிது. அவரை வகுத்துக் கொள்வது அதனிலும் அரிது. அவரை ஒழிவது ஒன்றே வழி. படிப்படியாக அல்ல, அறுத்துக்கொண்டு முற்றொழிதலாக. மறு எண்ணமில்லாததாக. தந்தையே, உயிர் கொல்லும் ஒவ்வொன்றுக்கும் இருக்கும் பெரும் கவர்ச்சி என்ன என்று எண்ண எண்ண வியப்பு ஏற்படுகிறது. அகிபீனா உண்டு இறந்தவர்கள் உண்டு. அரிதொன்றை விழைந்து இறந்தவர்கள் அதனினும் உண்டு. தீங்கில் திளைத்தவர்கள் அத்தீங்குகளை அமுதென உண்டு திளைத்திருக்கிறார்கள்.

நஞ்சென வருவன அனைத்தும் இனியவை. அவை ஒவ்வொன்றும் நாம் கொல்ல முனைகையில் அணுக்கமாகின்றன. விலக்க முயல்கையில் மேலும் இனிதாகின்றன. ஒற்றைக்கணத்தில் வெட்டிச் செல்பவர்கள் தப்பித்துக்கொள்கிறார்கள். அம்முடிச்சுகளை மெல்ல அவிழ்க்க முயல்பவர்கள் மேலும் மேலும் முடிச்சுகளையே போடுகிறார்கள். இனி அவரில்லை என்று நான் எண்ணிக்கொண்டேன். அதை ஆயிரம் முறை என்னுள் அமைந்த அந்த துடிக்கும் குழந்தையிடம் சொல்லிக்கொண்டேன்.

ஆனால் என் ஊழ் பிறிதொன்றாக இருந்தது. அன்று மூத்தவர் அவையில் ஒரு சிறு நிகழ்வு. நான் சற்று பிந்தியே அங்கு சென்றேன். கிருதவர்மன் அங்கு வந்திருந்தார். அவைமையமென அவரே திகழ்ந்தார். அனைவரும் மகிழ்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள். பிரத்யும்னன் கிருதவர்மனுக்கு நேர் முன்னால் அமர்ந்திருக்க சற்று அப்பால் சாய்வான மஞ்சத்தில் கால் நீட்டி ஃபானு அமர்ந்திருந்தார். சாம்பன் சாளரத்தோரம் கைகளைக் கட்டி நின்றார். வெவ்வேறு நிலைகளில் தம்பியர் அனைவரும் அங்கு இருந்தனர். உரத்த குரல்கள், சிரிப்புகள்.

அவர்கள் சாம்பனின் போர் வெற்றிகள் அசுர குலத்திற்கே உரிய கண்மூடித்தனத்தால் எவ்வண்ணம் வெல்லப்பட்டன என்பதை பகடியாக்கிக் கொண்டிருந்தார்கள். "அவருடைய பெருவெற்றிகள் அனைத்தும் கோட்டைகளை உடைத்துச் சென்று அடையப்பட்டவை, கோட்டைவாயில் திறந்திருப்பது அவருக்கு ஒரு பொருட்டே அல்ல!" சென்ற சில நாட்களாகவே அந்தப் பகடிகளை பார்த்துக்கொண்டிருந்தேன். எவையெல்லாம் மெய்யான ஏளனங்களாக, வசைகளாக, காழ்ப்புகளாக

திகழ்ந்தனவோ அவைதான் அவைகளில் நட்பான பகடியாகிக்கொண்டிருந்தன. பகடியாகி தங்களை பெருக்கிக்கொள்கின்றனவா அன்றி தங்களை வலுவிழக்க வைத்துக்கொள்கின்றனவா என்பது எப்போதும் ஐயமாகவே உள்ளது.

நான் உள்ளே நுழைந்தபோது கிருதவர்மன் என்னை நோக்கி புன்னகைத்து கை நீட்டி "இவன் சொல்வலன். இவனில்லையேல் நான் இங்கு வந்திருக்கமாட்டேன்" என்றார். ஒருகணம், அதனினும் குறைவான ஒரு கணத்தில் உடன்பிறந்தார் அனைவருமே அமைதியாகி விழிகூர்ந்து பின் செயற்கையாக தங்களை மீட்டுக்கொள்வதை நான் கண்டேன். என் உள்ளம் திக் என்றது. நெய் தொட்ட அனலென. மேலும் கிருதவர்மன் என்னைப்பற்றி எதுவும் சொல்லக்கூடாதென்று நான் எண்ணினேன். அவர் விழிகளில் இருந்து ஒழிவதுபோல் அவரது வலப்பக்கமாக சென்று உடன்பிறந்தாருக்குப் பின்னால் சென்றேன்.

ஆனால் அவர் திரும்பி "வா! வா! எங்கு சென்று ஒளிகிறாய்?" என்றார். "இவ்வாறு ஒளிந்துகொள்ளும் ஒருவனையே நாம் ஐயப்பட வேண்டும். அவர்களுக்குள் என்ன இருக்கிறதென்றே தெரியாது. எண்ணுக, இவன் ஒருவேளை துவாரகையில் இருந்து கிளைத்து ஒரு நாட்டை உருவாக்கக்கூடும், அங்கு தனிமுடி சூடி அமர்ந்து நம் குடிக்கு மேலும் பெருமை சேர்க்கக் கூடும்!" என்றார். நான் அவரிடம் தனியாகச் சொன்ன சொற்களை அவையில் பகடியாக சொல்லப்போகிறார் என்று நான் அஞ்சினேன். இறந்தவன்போல் உள்ளும் புறமும் அசைவிழந்தேன்.

அவர் கை நீட்டி என்னை அருகணைத்து, என் தோளை வளைத்து தன் உடலுடன் சேர்த்துக்கொண்டு "பிறர் உள்ளத்தை கூர்ந்து அறிந்திருக்கிறான். எங்கு எச்சொல்லை எடுக்கவேண்டுமென்றும், அச்சொல் வளரத்தொடங்க வேண்டும் என்றும், அச்சொல் வளரத்தொடங்குகையில் எவ்வாறு அதிலிருந்து முற்றிலும் விலகி நின்றிருக்க வேண்டும் என்றும் அறிந்திருக்கிறான். தந்தையிடமிருந்து கற்றிருக்கிறான். ஆனால் இவன் தந்தையை மிகுதியாக பார்த்திருக்க வாய்ப்பில்லை. குருதியினூடாக பெற்றிருக்கிறான்" என்றார். நான் ஆறுதல் அடைந்து மீண்டேன். என் நெஞ்சு படபடத்துக்கொண்டிருந்தது.

மூத்தவர் ஃபானு என்னை பெருமிதத்துடன் நோக்கி "இவனை நாங்கள் சற்று பிந்தியே அடையாளம் கண்டுகொண்டோம். நாங்கள் ஒவ்வொருவரும் பதின்மர் என்பதனால் எவ்வண்ணமோ அவையில் ஓரிருவர் பிறர் அறியாமல் இருந்துவிட நேர்கிறது" என்றார். "கருவூலத்தில் மறந்துவிட்ட அறைகளில் சில சமயங்களில் பழம்பொன் கிடைக்கும். அப்போது எழும் உவகைக்கு அளவே இல்லை" என்று பிரத்யும்னன் சொன்னார். "உரிய படைக்கலம் உரிய பொழுதில் வந்து நம் கைகளை அடையும் என்பார்கள்" என்று சாம்பன் சொன்னார்.

ஆனால் அச்சொற்கள் அனைத்துமே சற்று பொய்யானவை என்று எனக்கு தோன்றியது. அவை அப்போது உண்மையான உணர்ச்சியுடன் சொல்லப்பட்டன, நம்பி முன்வைக்கப்பட்டன என்றாலும் அச்சொற்களுக்குள்ளேயே என்னை வேவு பார்க்கும் ஒன்று இருந்தது. அது என்னை பிறிதொரு இடத்தில் வந்து தொட்டு நோக்குகிறது. பதற்றத்துடன் ஆராய்கிறது. இனி எந்த அவையிலும் எனது விழியை எவரும் கவனிக்காமல்

இருக்கமாட்டார்கள். எங்கிருந்தாலும் ஒன்று வந்து என்னை தொடாதிருக்காது.

நான் மேலும் என்னை குறுக்கிக்கொள்ள முயன்றேன். அப்போது எனது உடலசைவுகள் அனைத்தும் மேலும் செயற்கையாயின. எவ்வண்ணம் கணிகர் உடல் மடிந்தவரானார்? இத்தகைய அவைகளில் தன்னை குறுக்கிக் குறுக்கி அவ்வாறு ஆனாரா? அவ்வாறு அறிந்ததனால் தன்னை குறுக்கிக்கொண்டிருக்கிறாரா? அல்லது நேர்மாறாக இருக்கக்கூடுமா? பூனை சிறுதுளைகளுக்குள் தன்னை நீட்டி இழுத்து மடித்து உள்நுழைகிறது. குறுகியோர் வெல்கிறார்கள் என்பதனால் வெல்வோர் குறுகுகிறார்களா என்ன?

மீண்டும் இளிவரல்கள், ஏளனங்களுக்கு சென்றன அவை நிகழ்வுகள். இம்முறை இயல்பாக பிரத்யும்னனுக்கும் ருக்மிக்குமான உறவு நோக்கி சென்றது பேச்சு. தன் மாமனைக் கொன்ற தந்தையின் மைந்தனை ருக்மி எப்படி பார்ப்பார்? ஒரு மற்போருக்கு பிரத்யும்னன் ருக்மியை அழைக்க ருக்மி அஞ்சுவதைப்பற்றி ஃபானுமான் நடித்தான். விழிநீர் வார விழுந்து புரண்டு நகைத்தனர். பிரத்யும்னன் அந்த நகையாடலை விரும்பி தானும் நிலத்தில் கையால் அறைந்து நகைத்தார்.

அப்போது மூத்தவர் ஃபானு என்னிடம் திரும்பி "இளையவனே, சென்று நமக்கு ஊண் ஒருங்கிவிட்டதா என்று பார். சூதர்களிடம் எல்லா உணவுப்பொருட்களுக்கும் ஆணையிடப்பட்டுள்ளதா என்பதை இன்னொரு முறை பார்த்து சொல்" என்றார். மிக இயல்பாக வந்த ஆணை. மெய்யாகவே அதைத்தான் நான் அங்கு பெரும்பாலும் செய்துகொண்டிருந்தேன். அவர் அவ்வாறே சொல்லியிருக்கலாம், என் நிலை சற்றே

மேம்பட்டுவிட்டதை அவரது நா உணராமலிருந்திருக்கலாம். ஆனால் அத்தருணத்தில் அவையில் அச்சொல் எழுந்தது என்னை நடுக்குறச் செய்தது.

ஒருகணத்தில் நான் பல விழிகளைத் தொட்டு மீண்டு வந்தேன். அத்தனை விழிகளிலும் ஒரு நிறைவை கண்டேன். அவை ஒருகணத்திலும் குறைவான அளவில் ஏளனத்தை கைக்கொள்வதை கண்டேன். என் உளமயக்காக இருக்கலாம். கண்ணுடன் உள்ளத்தின் ஆழத்தில் இருக்கும் சுஷுப்தி மேலும் தொடர்பு கொண்டிருக்கிறது. கண்மூடாமல் சுஷுப்தியோ ஸ்வப்னமோ எழுவதில்லை. கண்டவை சுஷுப்தியாகின்றன. காணாதவை ஸ்வப்னம் ஆகின்றன. காணமுடியாதவை துரியத்தில் எழுகின்றன.

நான் தனித்துச் சோர்ந்து அவை நீங்கினேன். என்னுள் அத்தனை விழிகளும் நிலைத்திருப்பதாக உணர்ந்தேன். உணவறைக்குச் சென்று சூதர்களுக்கு அங்கு நிகழவிருந்த விருந்துகளுக்கான அனைத்தையும் ஒவ்வொன்றாக நோக்கி ஆணையிட்டுக்கொண்டிருந்தேன். அப்போதெல்லாம் என் உள்ளம் எரிந்துகொண்டிருந்தது. முதன்முறையாக ஒன்றை உணர்ந்தேன். இனி அவைச்சிறுமைகளை என்னால் தாங்க இயலாது. இனி என் முன் பணியாத ஒவ்வொரு விழியும் என்னை சீற்றம்கொள்ளச் செய்யும். இனி ஒருபோதும் பிறரிடம் என்னால் முழுமையுடன் தலைவணங்க இயலாது. எழுந்துவிட்ட பின் மடிவது இயல்வதல்ல.

இனி எங்கும் நான் என்னை மறைத்துக்கொள்ள இயலாது. ஆகவே இனி தயங்குவதிலும் பொருளில்லை. அவ்வெண்ணம் எழுந்ததுமே கணிகர்தான் என் முன்னில் முதலில் தோன்றினார். அவரை பார்க்கவேண்டும் என்று

எண்ணமெழுந்ததும் இயல்பாக அதை திமிறும் குதிரையென கடிவாளம் பற்றி இழுத்து அடக்கினேன். பின்பு இதை ஏன் செய்கிறேன் என்று எண்ணிக்கொண்டேன். இந்த எண்பதின்மரில் எவரையும் அஞ்சாத நான் ஏன் அவரை அஞ்சவேண்டும்? அவரை என்னால் ஆள முடியாதா என்ன? அவரை ஆள்வது கடினம், ஆனால் என்னை நானே ஆள்வதுதான் அது.

எனது ஆற்றல்களுடன் அவர் ஆடுவதில்லை. எனது ஐயங்களுடன், விழைவுகளுடன், அச்சங்களுடன் ஆடுகிறார். ஒவ்வொரு மானுடருக்குள்ளும் வாழும் இருளுடன் உறவாடுகிறார். அவரை எதிர்கொள்ள மிகச் சிறந்த வழி நம் இருள்மேல் நாம் ஆள்கை கொள்வது. நம்மை நாம் அறிந்திருப்பது. ஆனல் அது எளிதல்ல. ஆணவமும் விழைவும் யோகியருக்கு மட்டுமே கட்டுப்படுபவை. என் ஆணவத்தின், விழைவின் விசையை பிற எவரை விடவும் நானே அறிவேன்.

ஆனாலும் அவரை சந்தித்தே ஆகவேண்டும் என்று எனக்கு தோன்றியது. அவரிடம் இருந்துதான் அனைத்தையும் தொடங்க முடியும். எனது விழைவுக்கு மிகப்பெரும் கருவி அவரே. அவரை எனது கருவியாக்க வேண்டுமெனில் நான் அவரது கருவியாக வேண்டும். ஒருவருக்கொருவர் கொண்டும் கொடுத்தும் மட்டுமே இத்தருணத்தை பெரிதாக்கிக்கொள்ள முடியும். உணவகத்தில் அனைத்தையும் ஒருக்கச் சொல்லிவிட்டு நான் அவைக்கூடத்தில் நின்றிருந்தேன். உணவு ஒருங்கியதும் நானே மணியோசையை எழுப்பினேன்.

உடன்பிறந்தார் அனைவரும் உரக்க பேசிச் சிரித்தபடி வந்து உணவுண்டனர். அவர்களுக்கு ஆகவேண்டிய ஒவ்வொன்றையும் நோக்கி நோக்கி செய்தேன். சூதர்களுக்கு ஆணையிட்டேன். சில

தருணங்களில் உணவுக்கலத்தை நானே எடுத்து வைத்தேன். அவர்கள் உண்ணுகையில் எது குறைகிறதோ அதை நோக்கி பரிமாறினேன். அங்கு ஒரு ஏவலனைப் போலிருந்தேன். அப்போது அது எவ்வகையிலும் உளம்குன்றச் செய்யவில்லை. ஏனெனில் நான் அறிந்திருந்தேன், நான் எவரென்று. அவர்களுக்கு அதை அறிவிக்கும் பொழுதுக்காக காத்திருந்தேன். அந்த எண்ணத்தினூடாக அத்தருணத்தை கடந்துவிட்டிருந்தேன்.

பெரும்படைக்கலம் ஒன்றை கரந்து வைத்திருக்கிறேன். ஓர் இமை கூட அசைக்காமல் இந்த எண்பதின்மரிலும் எஞ்சிய அனைவரையும் சங்கறுத்துக் கொல்ல என்னால் இயலும். எனில் நான் எதை அஞ்சவேண்டும்? எங்கும் குன்ற வேண்டியதில்லை. அவர்களை இரக்கத்துடன் பார்த்தேன். ஏளனத்துடன் அவர்களின் சிரிப்புகளை நோக்கினேன். அவர்கள் உணவுண்டு மயங்கி குழறி சரிந்தபோது ஏவலரைக்கொண்டு ஒவ்வொருவரையாக அவரவர்களின் அறைகளுக்கு அழைத்துச்செல்லச் செய்தேன்.

உணவறை ஒழிந்தது. கலங்கள் ஒவ்வொன்றையாக கொண்டுசென்றனர். அறையெங்கும் எஞ்சியிருந்த உணவின் மணம் அகலும் பொருட்டு அங்கு குந்திரிக்கமும் சாம்பிராணியும் இட்டனர். சாளரங்களினூடாக காற்றை திறந்துவிட்டு அந்த அறையை புகையால் கழுவினர். நான் என் அறைக்கு சென்றேன். என் உடலிலும் உணவும் மதுவும் மணத்தது. ஆடை மாற்றி நீராடி பிறிதொரு ஆடை

அணிந்தேன். சற்றுநேரம் கண்மூடி ஓய்வெடுத்தேன். என் உள்ளம் தெளிவாக இருந்தது.

நான் கணிகரைப் பார்க்கச் சென்றேன். தன் குடிலில் அவர் அப்போதும் தனித்திருந்தார். "உள்ளே வருக!" என்று என்னை அழைத்தார். நான் உள்ளே சென்று அவருடன் அமர்ந்துகொண்டேன். இம்முறை அந்தச் சிறுகுடிலில் உடலுடன் உடல் ஒட்டி அவருடன் அமர்ந்திருப்பது மிக அணுக்கத்தை உருவாக்கியது. ஒரு சிறு கோழிமுட்டைக்குள் இரண்டு கருவுயிரிகளாக உயிருடன் அமர்ந்திருப்பதுபோல. எழும் இரு கோழிகுஞ்சுகள். "சொல்க!" என்று அவர் என்னிடம் சொன்னார்.

நான் என் உள்ளத்தை அவரிடம் சொல்லத் தொடங்கினேன். என் கனவை மட்டுமே சொல்லவேண்டும் என நினைத்தேன். ஆனால் சொல்லிச்சொல்லி என் ஐயங்களையும், கசப்புகளையும், காழ்ப்புகளையும் சொன்னேன். "ஆம், அதைத்தான் சொல்லிக்கொண்டிருக்கிறேன்" என்றார். "நீங்கள் முழுமையாக வெல்லவேண்டும். மும்முடி சூடி இந்த துவாரகையில் அமரவேண்டும்." நான் "நான் ஆற்றல்கொண்டவன். இச்சிறு எல்லைக்குள் என்னை சுருட்டிக்கொள்ள என்னால் இயலவில்லை. கணிகரே, எனக்கு துவாரகை வேண்டும். அதைவிடக் குறைவான ஒன்று எனக்கு தேவையில்லை. நீங்கள் உடன் நிற்பீர்கள் எனில் நான் வெல்வேன்" என்றேன்.

"எனில் நீங்கள் எனக்கு அளிப்பதென்ன?" என்றார். "எதையும்... அந்தணரே, எதையும்" என்றேன். "நான் முடிசூடினால் இந்நகரின் முதன்மை அமாத்யர் எனும் பொறுப்பை அடையுங்கள்." அவர் நகைத்து "பொறுப்பை நாடியிருந்தால் பாரதவர்ஷத்தில்

மும்முடி சூடி அமரும் இடத்தையே நான் அடையமுடியும்" என்றார். என்னுள் எரிச்சல் எழுந்தது. இந்த அந்தணனுக்குரிய பாடத்தை பிறிதொருநாள் புகட்டுவேன் என்று எண்ணிக்கொண்டேன். "பிறகென்ன?" என்றேன். என் கண்களையே பார்த்துக்கொண்டிருந்தார். "கூறுக! பிறகென்ன?" என்றேன்.

"யாதவரே, உங்களை இப்பெருநகரின் தலைவரென அமரச்செய்கிறேன். ஐயம் தேவையில்லை, மும்முடி சூடி நீங்கள் அமர்வீர்கள்" என்றார் கணிகர். என் உள்ளம் படபடத்தது. அதை கூறுபவர் எளிய மானுடர் அல்ல என்று எனக்கு நன்கு தெரிந்தது. சுட்டுவிரல் அசைவால் பாரதவர்ஷத்தை நடுங்கச் செய்பவர்களில் ஒருவர். தந்தையே, அவர் உங்களுக்கு இணையானவர். ஒருவேளை நீங்கள் உங்களுக்கு இணையானவர் என்று இப்புவியில் கண்ட ஒரே மானுடர் அவர். அதை அன்று அத்தனை தெளிவாக உணர்ந்தேன். அந்த மின்னும் கண்கள் பிறிதொருவருக்கு உரியவை. அப்பேரழகுப் புன்னகை உங்களுக்குரியது.

"கூறுக! தாங்கள் எதை கோரினாலும் அளிக்கிறேன். இம்மணிமுடியைச் சூடி அமர்ந்த மறுகணம் சிரமறுத்து அரியணையில் விழவேண்டுமெனிலும் கூட" என்றேன். "வேண்டியதில்லை" என்றார். "தாங்கள் தங்கள் தந்தையை துறந்தாக வேண்டும்." அது எனக்கு சிறு அதிர்ச்சியையே அளித்தது. அவரிடம் நான் அதை எதிர்பார்த்திருக்கவில்லை. "நான் இப்போதே அவரை துறந்திருக்கிறேன்" என்றேன். "இவ்வண்ணமல்ல. பெயரிலிருந்து, உள்ளத்திலிருந்து, உள்ளாழத்திலிருந்து" என்றார்.

நான் அசையாமல் அமர்ந்திருந்தேன். அவர் என்னை நோக்கி "இன்று உங்களுடையதென்று நீங்கள் வைத்திருக்கும் அனைத்தையும் துறப்பது அது. மணிமுடி சூடி துவாரகையில் அமர்ந்திருக்க வேண்டுமென்று எண்ணுகையில்கூட எதன்பொருட்டாக அதை எண்ணுகிறீர்கள்? தந்தையைக் கடந்து செல்லவேண்டும் என்பதுதானே?" என்றார் கணிகர். "மைந்தன் தந்தையைக் கடந்து செல்வதே தந்தைக்குச் செய்யும் பெரும்புகழ் என்பதை அறிந்திருக்கிறீர்கள். ஆகவே தந்தையைக் கடந்து செல்லல் அல்ல. துறந்து செல்வதே தேவை என்று கோருகிறேன்."

"இங்கு அவர் ஒரு துளிகூட எஞ்சலாகாது. ஒருதுளி கூட. எஞ்சுவது அனைத்தும் அவருடைய எதிர்புகழாக இருக்கவேண்டும். அல்லது அதுகூட எஞ்சவேண்டியதில்லை. அவரை முற்றாகச் சரித்து கீழ் நோக்கி செலுத்தவேண்டும்" என்றார் கணிகர். நான் முனகலாக "இந்நகர் இருக்கும் வரை அவர் இருப்பார்" என்றேன். "ஆம், அவர் இருப்பார். அது எவ்வண்ணம் இருக்கவேண்டுமென்று நான் முடிவெடுப்பேன். முற்றாக இந்நகரை அழித்துவிடவேண்டும்" என்றார்.

நான் திகைப்புடன் "கணிகரே" என்றேன். "இந்நகர் அழியட்டும். யாதவக் குடி இந்நகர் இல்லாமலும் சிறக்கக்கூடும். நீங்கள் யாதவக் குடிக்கு அரசராகுக! உங்கள் பெயரால் நகர் ஒன்றை உருவாக்குக! ஃபானுபுரம்..." என்றார். "அவ்வாறே" என்றேன். அச்சொல் என்னை கிளரச் செய்தது. "அதை சொல்வது எளிது. நகரிலிருந்து அவரை எடுக்கலாம், உங்கள் ஆழத்திலிருந்து எடுப்பது ஒரு பெரும் தவம்" என்றார் கணிகர். "அதை இயற்றுகிறேன். எனக்கு வழி காட்டுங்கள், முற்றாக அவரை என்னில் இருந்து அகற்றுகிறேன்" என்று நான் கூறினேன்.

“இந்நகரை அழிக்கவேண்டும். அதற்கான வழியை நான் கூறுகிறேன்” என்று கணிகர் சொன்னார். “அழிப்பதென்றால்?” என்றேன். “இந்நகரின் ஒவ்வொரு அடித்தளமும் நொறுங்கவேண்டும். ஒவ்வொரு மாளிகையும் சரியவேண்டும். இந்நகர் கடல்கொண்டு மறையவேண்டும்.” நான் மூச்சு இறுக அவரையே பார்த்துக்கொண்டிருந்தேன். அவருடைய இனிய புன்னகை விரிந்தது. “ஒரு குமிழியென இது மறையவேண்டும். கல்பொருசிறுநுரை என” என்றார்.

# கல்பொருசிறுநுரை - 37

**பகுதி நான்கு : அலைமீள்கை – 20**

தந்தையே, அதன் பின்னர் துவாரகையில் நாளும் உண்டாட்டுகள் நிகழ்ந்தன. யாதவ மைந்தர் எண்பதின்மரும் கூடுவதென்றால் உண்டாட்டு தேவையாக இருந்தது. யாதவ மைந்தரின் மூன்று பெருங்குழுக்களையும் ஆதரித்துவந்த குடித்தலைவர்களை ஒருங்கிணைக்க வேண்டியிருந்தது. ஆகவே அவர்களை அழைத்துவந்து உண்டாட்டில் அமரச்செய்தனர். அவர்களின் முன் யாதவ மைந்தரின் முழுதொற்றுமையை நடித்தனர். முதலில் உணர்வெழுச்சியுடன் நிகழ்ந்த தழுவல்களும் கேலிப்பேச்சுகளும் பின்னர் சடங்காக மாறின. ஆயினும் அவை விரும்பப்பட்டன. சடங்குகளே ஆயினும் அவை இனிய முதற்சந்திப்பை நினைவூட்டின. அதனுடன் இணைந்த உணர்வுகளை எழுப்பின. அதைவிட

உண்டாட்டுக்கு வந்தமரும் குடித்தலைவர்களை அவை மகிழ்வித்தன.

குடித்தலைவர்கள் உண்டாட்டில் தடுமாறினார்கள், சொல்திணறினார்கள். அவர்கள் ஏற்கெனவே ஒருவரை ஒருவர் எதிர்க்கவும் ஒருவரோடொருவர் மோதவும் உளம் பயின்றவர்கள். அவர்களில் பெரும்பாலானவர்கள் ஒரு தரப்பில் இணைந்ததே அவர்கள் அஞ்சி வெறுத்த எவரோ மறுதரப்பில் சேர்ந்தமையால்தான். அல்லது சேரக்கூடும் என்னும் ஐயத்தால். நான் ஒன்றை கண்டிருக்கிறேன், ஆட்சியின் மையத்தில் நிகழும் சிறு முரண்பாடுகூட ஆதரவாளர்களிடம் பெருகி எழுகிறது. சிற்பியின் கோலில் எழும் துளிக்கோணல் மாளிகையில் நூறென ஆயிரமென பெருகுவதைப்போல. எளிய படைவீரர்கள்கூட கடுமையான காழ்ப்புகளை வளர்த்துக்கொள்வதுண்டு. ஒருவரை ஒருவர் கண்டாலே கொல்ல முயல்வதுண்டு. பல்லாண்டுகளாக துவாரகையில் உருவாகிவிட்டிருந்த பகைமை நகரை கீழே விழுந்த பளிங்கு என ஒற்றை அமைப்புக்குள் பல துண்டுகளாக உடைத்துவிட்டிருந்தது. அதன் வடிவமே விரிசல்களாகத் தெரிந்தது.

சபைகளில் தங்கள் மறுகுலத்தவரை, குடியெதிரிகளை சந்தித்தவர்கள் எப்படி எதை பேசுவதென்று அறியாமல் திகைத்தனர். அவர்கள் அதை அஞ்சி பலமுறை அழைத்த பின்னரே உண்டாட்டுகளுக்கு வந்தனர். ஆனால் மிக எளிதாக அச்சிக்கலை அவை கடந்துசென்றது. முன்னரே அவ்வண்ணம் முரண்கொண்டு, அவைக்கு வந்து, தழுவிக்கொண்டு பகைமீண்டவர்கள் அவர்களை வரவேற்று அவர்களின் பகைமையை நகையாட்டாக மாற்றி ஒருவரோடொருவர்

இணைத்து வைத்தார்கள். அதற்கேற்ப அனைத்தையும் இளிவரலாக ஆக்கி நகைத்துக்கொண்டிருந்தனர் யாதவ மைந்தர். சிரிக்கத் தொடங்கினால் அனைத்தையும் கடக்கமுடியும். ஒருவர் தன் அச்சத்தையும் பகைமையையுமே சிரிப்பாக ஆக்கிக்கொள்ள முடியும்.

ஒரு கட்டத்தில் குடித்தலைவர்கள் அனைவருமே உண்டாட்டில் அமரத்தொடங்கினர். வணிகர்கள், படைத்தலைவர்கள் என அனைவரும் வந்தமைய அவை துவாரகையின் பொலிவுக் காலகட்டத்தில் உங்கள் அவை இருந்தவண்ணமே ஆகியது. முழுதமைந்த அவை. மகிழ்வே உருவான முகங்கள். ஒவ்வொருவருக்கும் அத்தகைய எதிர்பார்ப்பும் கனவும் இருந்திருக்கும். அதை மீண்டும் நடிக்கையிலேயே அதுவாக ஆகிவிட்டிருந்தனர். ஆனால் தந்தையே, அது வெறும் கானல். கொடுநோயாளி எண்ணியிராதபோது நோய் நீங்கி நலம் பெற்று எழுந்துவிட்டதாக கனவு காண்பார். முதுமையில் சாவை நெருங்குபவர் குழந்தைப்பருவத்திற்கு ஒரு மெய்வெளித் தோற்றத்தினூடாக திரும்பிச் செல்வார். எரியறையில் சிக்கிக்கொண்டவர் உடல் உருகி மறைந்துகொண்டிருக்கையில் அரைக்கணம் தண்மை வந்து தழுவிக்கொள்வதைப்போல் உணர்வார். அதுதான், பிறிதொன்றுமில்லை. மிகக் குறுகிய கூரிய அலை அது.

எஞ்சியிருந்தவர் சாத்யகி மட்டுமே. கிருதவர்மன் வந்துள்ள செய்தி அவருக்கு முன்னரே முறைப்படி அறிவிக்கப்பட்டது. அவர் மறுமொழி எதையும் அளிக்கவில்லை. துவாரகைக்கு வெளியே அமைந்த தன் படையுறைவில் தனித்து அமைந்திருந்தார். அவரையும் அவைக்கு கொண்டுவரவேண்டும் என்று ஃபானு எண்ணினார். ஆனால் அது இயல்வதா என்று

தெரியவில்லை. “அவரும் அவையமர்ந்துவிட்டார் என்றால் துவாரகை முற்றாக மீண்டுவிட்டது என்று பொருள்” என்று ஃபானு சொன்னார். “நான் சென்று அழைத்துவருகிறேன். நான் அழைத்தால் அவர் வராமலிருக்கப்போவதில்லை” என்றார் பிரத்யும்னன். ஆனால் அவரை அழைக்க மூத்தவர் மூவரும் செல்வதை அறுதியாக வைத்துக்கொள்வோம், முத்தரப்பு இளையோரும் முதலில் சென்று அழைக்கட்டும் என்று கணிகர் சொன்னபோது அதுவே சிறந்த வழி என ஏற்கப்பட்டது.

யாதவ மைந்தர்களில் ஃபானுமானும் ருக்மிணியன்னையின் மைந்தர்களில் விசாருவும் ஜாம்பவதியன்னையின் மைந்தர்களில் புருஜித்தும் செல்வதென அவை முடிவெடுத்தது. “அவையில் நிகழ்வன அனைத்தையும் அவருக்கு எடுத்துக் கூறுக! யாதவ மைந்தர் அனைவரும் இணைந்துவிட்ட பின்னர் அவர் தனித்திருப்பதென்பது இவ்வொற்றுமைக்கு எதிரானவராக அவர் திகழ்கிறார் என்றுதான் பொருள்படும். குடிகள் அனைவரையும் கூர்ந்து நோக்கிகொண்டிருக்கிறார்கள். பகைவர்கள் நோக்கிக்கொண்டிருக்கிறார்கள், பாரதவர்ஷமே நோக்கிக்கொண்டிருக்கிறது என்று கூறுக!” என்றார் சுஃபானு. அவர்கள் சொல்லவேண்டியவை வகுத்து அளிக்கப்பட்டன. அவர் வருவார் என்று ஓர் எண்ணமும், அவரிடம் தன் மைந்தரின் சாவு குறித்த வஞ்சம் எஞ்சியிருக்கும் என்று மறு எண்ணமும் திகழ்ந்தது.

ஆனால் அவர்கள் அரண்மனை முகப்பிலிருந்து கிளம்பவிருக்கையில் அங்கே கிருதவர்மன் வந்தார். அது முழுக்க முழுக்க தற்செயல்தான். அவர் காலையில் கடலோரமாக உலா சென்றிருந்தார். மித்ரவிந்தையன்னையின் மைந்தனான வஹ்னி அவரிடம் அவர்கள் செல்லவிருப்பதை

சொன்னான். அவர் உடனே திரும்பி புரவியில் விரைந்து வந்தார். அவர்கள் கிளம்பவிருக்கையில் முற்றத்தில் புரவி வந்து நின்று அவர் கால் சுழற்றி இறங்கினார். "செய்தி அறிந்தேன், இது அரசமுறைச் செலவாக இருக்கவேண்டியதில்லை. அவர் என் குருதியினர். நானே உடன் வருகிறேன்" என்றார். இளையோர் என்ன செய்வதென்று அறியாமல் திகைத்தனர்.

ஃபானுமான் "தந்தையே, தாங்கள் வரலாமா என்று தெரியவில்லை. அது அரசியலில் எவ்விளைவை உருவாக்கும் என உய்த்துணரக் கூடவில்லை" என்றான். "அரசியலை ஆராய்ந்து முடிவெடுக்கும் நிலையை நான் கடந்துவிட்டேன். நான் இன்று வேறு ஓர் உலகில் இருக்கிறேன்" என்று கிருதவர்மன் சொன்னார். "நான் எவருக்கும் சொல்லளிக்க வேண்டியதில்லை. கிளம்புக!" ஃபானுமான் "நான் மூத்தவர் ஃபானுவிடம் சொல்லுசாவாமல் எழவியலாது" என்றான். ஃபானு அப்போது துயிலறையில் இருந்தார். முந்தையநாள் இரவு நீண்டநேரம் உண்டாட்டில் களித்திருந்தார். ஃபானுமானின் தூதன் அவரை அழைக்க வந்தபோது நான் எதிரே சென்றேன். அவன் என்னிடம் செய்தி சொன்னான். கிருதவர்மனை அழைத்துக்கொண்டு செல்லும்படி நான் ஃபானுமானுக்கு ஆணையிட்டேன்.

செல்லும் வழியெங்கும் ஃபானுமான் தவித்துக்கொண்டுதான் இருந்தான். சாத்யகி எவ்வகையிலேனும் கிருதவர்மனை சிறுமைசெய்துவிட்டால் துவாரகையில் சற்றே அடங்கியிருந்த விருஷ்ணிகளுக்கும் அந்தகர்களுக்குமான போர் மீண்டும் தொடங்கிவிடக்கூடும். அதற்கான எல்லா வாய்ப்புகளும் இருந்தன. செல்லும் வழியிலேயே அவர் வந்துகொண்டிருக்கும்

செய்தி சாத்யகிக்கு தெரிந்துவிடும். அச்சந்திப்பை ஒழியும்பொருட்டு அவர் எங்கேனும் கிளம்பிச் சென்றுவிடக்கூடும். வேட்டைக்குச் செல்லலாம். ஆனால் கிருதவர்மன் அவர் வேட்டையாடும் இடத்திற்கே சென்று அவரை சந்திக்கத் துணிபவராகவே தோன்றினார்.

அவர்கள் சாத்யகியின் படையிருப்பை நோக்கி செல்கையிலேயே தொலைவில் புழுதிபறக்க புரவிகள் வருவதை கண்டார்கள். ரிஷபவனத்தின் கொடி தெரிந்தது. அது அரசமுறை வரவேற்பாக இருக்கலாம், அல்லது படையெதிர்ப்பாகவும் இருக்கலாம். ஃபானுமான் நின்று அவர்களுக்காக காத்திருந்தான். வந்தவர் சாத்யகி. இரு கைகளையும் விரித்தபடி வந்தவர் கிருதவர்மனை புரவியிலிருந்தபடியே தழுவிக்கொண்டார். இருவரும் விழிநீர் உகுத்தனர். தோள்களில் அறைந்துகொண்டார்கள். பின்னர் பொருளில்லா பெருநகைப்பை எழுப்பினர்.

புரவியிலிருந்து இறங்கி இருவரும் மீண்டும் தழுவிக்கொண்டனர். சாத்யகி மீண்டும் விழிநீர் எழ "இளைய யாதவருக்காக!" என்றார். "ஆம், அவருக்காக" என்று கிருதவர்மன் சொன்னார். "இத்தருணத்தில் அவர் இங்கே இருந்திருக்கவேண்டும்" என்றார் சாத்யகி. "அவர் இருப்பதை உணர்கிறேன்" என்று கிருதவர்மன் சொன்னார். "வருக, இன்று நான் ஒரு பெருமுடிவை அவையில் அறிவிக்கவிருக்கிறேன்! நீங்களும் அவையில் இருக்கவேண்டும். காலைமுதல் அதை எண்ணிக்கொண்டிருந்தேன்." சாத்யகி "நானும் அதையே எண்ணினேன். தங்கள் உளநிலை என்ன என்னும் எண்ணமே தடையாகியது" என்றார். "என் உளநிலையா? மைந்தரால்

பொலிந்த தந்தையுடையது" என்று சொல்லி கிருதவர்மன் நகைத்தார்.

"வருக, நாம் ஆடைமாற்றி உணவருந்தி மீள்வோம்!" என்றார் சாத்யகி. "எதற்கு? இப்புழுதிபடிந்த ஆடைகளுடன் நகரினூடாகச் செல்வோம். மக்கள் நம்மை காணட்டும்..." என்று கிருதவர்மன் சொன்னார். அங்கிருந்தே அவர்கள் துவாரகை நோக்கி திரும்பினர். பேசியபடி செல்கையில் சாத்யகி "அவர் இங்கே இருந்ததுதான் உங்கள் பகைமையை உருவாக்கியதா? நகர்த்தெருக்களினூடாக குடிகளால் போற்றி அழைக்கப்பட்டு கொண்டுசெல்லப்பட்டதும் பகை மறந்தீர்களா?" என்றார். "அறியேன். ஆனால் குடிகள் என்னை வாழ்த்தியபோது நான் அரசன் என்று உணரவில்லை, அனைவருக்கும் தந்தையென்றே உணர்ந்தேன். என்னை நோக்கி நீண்ட கைகளில் இருந்த தவிப்பையும் விழிகளில் எழுந்த கண்ணீரையும் என்னால் கடந்துசெல்ல முடியவில்லை" என்றார்.

"தந்தையாதலே ஆண்மையின் நிறைவு என்பார்கள்" என்று சாத்யகி சொன்னார். "ஆம், தந்தையெனும் நிலையில் நம்மை இயக்கிய அனைத்தையும் நாம் கடந்துவிடுகிறோம். பண்டு யயாதியும் ஜனகராஜரும் எவ்வண்ணம் உணர்ந்தனர் என்று என்னால் அறிந்துகொள்ள முடிகிறது" என்றார் கிருதவர்மன். அவர்கள் இருவரும் நகரில் நுழைந்தபோது ஒரு சுழலிக்காற்று வீசியது போலிருந்தது. மக்கள் கலைந்து கூச்சலிட்டு அவர்களை சூழ்ந்தனர். சாலையோரங்கள், மாளிகைமுகடுகள், அங்காடிமுகப்புகள் எங்கும் முகங்கள். கண்ணீருடன் அவர்கள் வாழ்த்துக்கூச்சலிட்டனர். அவர்களின் புரவிகள் மேல் மலர் அள்ளி வீசினர். அவர்களின் புரவித்தடம் பதிந்த மண்ணைத் தொட்டு தொட்டு விழிகளில் ஒற்றிக்கொண்டனர்.

அரண்மனை முகப்பில் அதற்குள் ஃபானுவும் பிரத்யும்னனும் சாம்பனும் வந்து நின்றிருந்தனர். புரவிகள் முற்றத்தை நெருங்கியதும் பெருமுரசுகள் முழங்கி வாழ்த்தொலி எழுப்பின. மங்கலச்சூதர் இசை முழக்கினர். அணிச்சேடியர் ஐம்மங்கலம் காட்டி எதிரேற்றனர். ஃபானு வந்து இருவர் கால்களையும் சேர்ந்தே பணிந்தார். இருவரும் சேர்ந்து அவருக்கு வாழ்த்து சொன்னார்கள். சாம்பனும் பிரத்யும்னனும் வந்து வணங்கினர். மூவரையும் அவர்கள் இருவரும் நான்கு கைகளால் அணைத்துக்கொண்டார்கள். இளையவர்கள் ஒவ்வொருவராக வந்து அவர்களை வணங்கினர். அரண்மனையின் அனைத்துச் சாளரங்களில் இருந்தும் பெண்டிர் குரவையொலி எழுப்பி மலர் பொழிந்தனர்.

அன்றைய உண்டாட்டில் யாதவ மைந்தர் அனைவரும் அமர்ந்து உணவுண்டுகொண்டிருந்த பெருங்கூடத்தில் கைதட்டியபடி எழுந்த கிருதவர்மன் "அனைவரும் செவி கொள்க, துவாரகையின் வரலாற்றில் மிகப் பெரிய அறிவிப்பொன்றை விடுக்கவிருக்கிறேன்!" என்றார். அதை ஓரளவு எதிர்பார்த்திருந்தாலும்கூட அத்தருணம் ஒரு திகைப்பை அளித்தது. அனைவரும் நிமிர்ந்து அவரை பார்த்தனர். புன்னகையுடன் "இங்கு யாதவ மைந்தர் எண்பதின்மரும் கூடியிருக்கிறோம். குடித்தலைவர் எழுபத்தெட்டு பேரும் இங்கு அமர்ந்திருக்கிறோம். யாதவக் குடிமூத்தவராகிய சாத்யகி இருக்கிறார், நானும் இருக்கிறேன். கணிகர் முதலாய அமைச்சர்கள் உள்ளனர். இத்தருணமே

உகந்தது. இதில் முறையாக இவ்வறிவிப்பை வெளியிடுகிறேன்" என்றார்.

அவர் சொற்களை உணர்ந்துகொண்டு அனைவரும் கைதூக்கி வாழ்த்தொலி எழுப்பினர். "துவாரகை இன்று முறையான அரசர் இன்றி திகழ்கிறது. இந்நகரைச் சமைத்து காத்து புகழ்பெறச் செய்த விருஷ்ணி குலத்து இளைய யாதவர் கிருஷ்ணன் நகர் நீத்தபின் அவருடைய ஆணைப்படி நகரை அவர் மைந்தன் சாம்பன் புரந்துவருகிறார். அவர் மைந்தர்கள் ஃபானுவும் பிரத்யும்னனும் உடன் நின்றிருக்கிறார்கள். ஆனால் இந்நகர் முன்பெனப் பொலிவுகொள்ள இங்கே உறுதியான கோல் நிலைகொள்ளவேண்டும். அரசவை அன்றாடம் என நிகழவேண்டும். ஒற்றைப்பெரும்படையாக நாம் திரளவேண்டும். அதற்கு அரசர் ஒருவரை முறையாக அரியணை அமர்த்தியாக வேண்டும். அதற்கான தருணம் இது" என்றார் கிருதவர்மன்.

"எல்லா நெறிகளின்படியும் மூத்த அரசியின் மூத்த மைந்தரே முடிக்குரியவர். ஆகவே இளைய யாதவர் கிருஷ்ணனின் முதல் மைந்தனும், அவர் முதல் துணைவி சத்யபாமையின் மைந்தனுமான ஃபானுவை நாம் இங்கே அரசர் என முடிகொண்டு நிலைநிறுத்துவதே உகந்தது. யாதவ மைந்தர் எண்பதின்மரும் ஒருங்கிணைந்து மறுசொல்லின்றி இவ்வறிப்பை வெளியிடுவார்கள். இளையோர் பிரத்யும்னனும் சாம்பனும் இருபுறம் நின்று கரம் பற்றி அழைத்துச்சென்று ஃபானுவை மேடையில் அமர்த்துவார்கள். இது என் விழைவு. இதை நிகழ்வாக்கவேண்டும் இந்த அவை" என்றார் கிருதவர்மன். கைகூப்பி நின்றபோது அவர் முகம் தெய்வச்சிலைகள்போல கனிந்திருந்தது.

ஒருகணம் அந்த அவையிலிருந்தது அமைதியா பலமடங்கு அழுத்தப்பட்ட ஒலியா என எனக்கு ஐயமாக இருந்தது. கிருதவர்மன் "இதை சாம்பனிடமும் பிரத்யும்னனிடமும் நான் முன்னரே பேசிவிட்டேன். இருவருக்கும் மாற்றுக்கருத்தென ஏதுமில்லை. இதுவே உகந்த தருணம். ஒருங்கிணைந்த துவாரகை பாரதவர்ஷத்தின் மணிமுடியென திகழும். இதைப்போல ஒரு வரலாற்று வாய்ப்பு யாதவர்க்கு இனி வருவதற்கில்லை என்பதை உணர்க! உங்கள் பெருந்தந்தை யானை சென்ற வழியென ஒன்றை காட்டினூடாக உருவாக்கி அளித்திருக்கிறார். அதனூடாக ச்சென்று பாரதவர்ஷத்தை முழுமையாக வெற்றிகொள்ளும் நல்வாய்ப்பு உங்களுக்கு அமைந்திருக்கிறது. அதைக் கண்டு உங்களை வாழ்த்தும் பொருட்டு நாங்கள் உயிர் எஞ்சியிருக்கிறோம்" என்றார்.

அவர் குரல் சற்றே உடைந்தது. "தந்தையரின் வடிவென நின்று இந்த அவையில் நான் உங்களிடம் கோருவது ஒன்றை மட்டுமே. ஒற்றுமையை எங்களுக்கு பரிசளியுங்கள். எங்கள் மைந்தர்கள் வெல்வார்கள் என்னும் நம்பிக்கையை பரிசளியுங்கள். வாழ்க!" கைகூப்பி கிருதவர்மன் வணங்கியபோது அருகமர்ந்திருந்த சாத்யகியும் எழுந்து கைகூப்பினார். அவையினர் வாழ்த்தொலி எழுப்பி கைகளை தூக்கினர். வாழ்த்தொலிகள் தங்கள் செவிகளில் விழுந்தோறும் ஒவ்வொருவரும் மேலும் மேலுமென களிவெறிகொண்டனர். கூவி ஆர்ப்பரித்தனர்.

சாம்பனும் பிரத்யும்னனும் எழுந்து ஃபானுவை அணுகி அவர் இரு கைகளையும் பற்றி மேலே உயர்த்தினர். மைந்தர் எண்பதின்மரும் எழுந்து கைதூக்கி "துவாரகை வெல்க! வெல்க இளைய யாதவர் பெரும்புகழ்! வெல்க ஐந்தாம்

வேதப்பெருநெறி! வெல்க யாதவ பெருங்குடி! வெல்க பேரறம்!" என்று வாழ்த்து கூவினர். அலையலையாக வாழ்த்தொலி எழுந்துகொண்டே இருந்தது. அதை நிறுத்தினால் அத்தருணத்திலிருந்து இறங்கிவிடுவோம் என அஞ்சியவர்கள்போல அவர்கள் மீண்டும் வாழ்த்தொலியை எழுப்பினர். காற்றில் பறந்து தாழும் பந்தை உதைத்து உதைத்து விண்ணில் நிறுத்தியிருப்பதைப்போல குறையக்குறைய வாழ்த்தொலி பெருக்கி அத்தருணத்தை நீட்டி நீட்டிச் சென்றனர்.

பின்னர் கிருதவர்மன் கைதூக்கி அனைவரையும் அடக்கி சொன்னார் "ஆகவே, நாளையே நிமித்திகர்களை வரச்சொல்வோம். அவர்கள் ஃபானு முடிசூடுவதற்குரிய நன்னாளை குறித்து நமக்கு அளிக்கட்டும். அதை முடிவுசெய்து பாரதவர்ஷத்திற்கு அறிவிப்போம். முடிமன்னர் புடைசூழ நம் மைந்தர் அரியணை அமரட்டும். அந்நாளிலேயே துவாரகை தன் பூசலை மறந்து ஒருங்கிணைந்துவிட்டது என்னும் செய்தியை உலகம் அறியட்டும்" என்றார். "ஆம்! ஆம்! இனி வெற்றி ஒன்றே நமக்கான சொல்!" என்றார் பிரத்யும்னன். மீண்டும் வாழ்த்துக்கூச்சல்கள். வெறியசைவுகள். களிச்சிரிப்புகள்.

நான் அந்த முகங்கள் ஒவ்வொன்றையும் பார்த்தேன். ஒவ்வொருவரும் உண்மையாகவே மகிழ்ச்சிகொண்டிருப்பதை கண்டேன். அவர்கள் தங்கள் விழைவால், கசப்பால், ஐயங்களால் எதிலோ கட்டுண்டிருந்தாலும்கூட எதிலும் கட்டுண்டிருப்பதை ஆத்மா விரும்புவதில்லை. அது விடுதலைக்காகவே ஏங்கிக்கொண்டிருக்கிறது. விடுதலையின் சுவையை சற்று அறிந்தால் ஆத்மா பின்பு கட்டுகளை நாடுவதில்லை, அது ஆத்மா தன்னுள் இருந்து உருவாக்கிக்கொள்ளும் விழைவுகளாலும் ஆணவத்தாலும் ஆனதாக இருந்தாலும் கூட.

ஒவ்வொருவரும் மதுவெறி கொண்டவர் போலிருந்தனர். ஒவ்வொருவரும் உவகை அடைந்திருந்தனர். நான் அரைவிழியால் கணிகரை பார்த்தேன். அவர் முகம் மலர்ந்திருந்தது. பற்கள் தெரிய சிறுகுழந்தைபோல் புன்னகைத்துக்கொண்டிருந்தார். அப்பேரழகுப் புன்னகை அக்கணத்தில் என்னை அச்சுறுத்தியது. ஆம், என்னுள்ளில் மிக நுணுக்கமாக ஒரு நடுக்கு ஏற்பட்டது. அந்நடுக்கு ஏன் என்று என்னால் உணரக்கூடவில்லை. தென்னைக்குள் இளநீர் நலுங்குவதுபோல என்றொரு சூதர் சொல் உண்டு. அத்தகைய உணர்வொன்றை நான் அடைந்தேன்.

கிருதவர்மன் அனைவரையும் அமைதியுறச் செய்தபின் "மைந்தர்களே, இன்றைய சூழல் அனைத்தும் நமக்குரியவை. பாரதவர்ஷத்தின் முதன்மைப் பெருநகரென்று விளங்கும் அஸ்தினபுரி வெல்லும் விரைவின்றி உள்ளது. யுதிஷ்டிரனும் இளையோரும் நகர் நீங்கியுள்ளனர். அந்நகரை ஆளும் சூதர்குலப் பெண் சம்வகைக்கு ஷத்ரியர்களைப்போல் வென்றெழும் விழைவோ, கோன்மை கொள்ளும் ஆணவமோ இல்லை. அன்னைபோல் அணைத்துக் காத்து அவ்வண்ணமே கொண்டுசெல்லும் தன்மை கொண்டிருக்கிறார். அதுவும் நன்றே" என்றார். "அது யாதவர்களுக்கு ஒரு வாய்ப்பை வழங்குகிறது. நாம் படைகொண்டுசென்று நாடுகளை வெல்லலாம். நம்மை அஸ்தினபுரி ஒருபோதும் எதிர்க்காது. அவர்கள் எதிர்க்கவில்லை என்பதை நமக்கான ஆதரவென்றே பிறர் எண்ணிக்கொள்வார்கள்."

"மைந்தர்களே, யாதவர்கள் இதுகாறும் முறையான போர்வெற்றிகள் இல்லாதவர்கள். நாம் நிலங்கள்தோறும் பரவி, அந்நிலத்தை நாடென்றாக்கி, அந்நாட்டை பிறரிடமிருந்து

காத்துக்கொள்ளும் பொருட்டு மட்டும் போரிடுபவர்கள். கன்றுகள் கொண்டவர்கள் என்பதனால் நாம் நிலத்தை அழிப்பதை விரும்புவதில்லை. போரில் ஒரு பசு இறப்பதைக்கூட ஏற்பதில்லை. அவ்வண்ணம் நிகழக்கூடும் என்றால் உடனே நிலத்தை கைவிட்டு திசைவிளிம்பு நோக்கி செல்லவே நாம் துணிந்திருக்கிறோம். யாதவர்களுக்கு செல்லுமிடமே நாடு, கன்றுக் கால்பட்ட இடமெல்லாம் வீடு என்று ஒரு சொல் உண்டு" என்றார் கிருதவர்மன்.

"நாம் நமக்குள் முரண்பட்டும் இணைந்தும் நிலைகொண்டு இதுவரை வரலாற்றில் தங்கி வாழ்ந்திருக்கிறோமே ஒழிய எந்நிலையிலும் வென்றவர்களாக, பிறரால் அஞ்சப்படுபவர்களாக இருந்தது இல்லை. விலக்காக அமைவது கார்த்தவீரியரின் ஆட்சிச் சிறுபொழுது மட்டுமே. அதன்பின் கம்சரின் ஆட்சிக்காலத்தில் மகதத்துடன் இணைந்து மட்டுமே மதுரா சற்றேனும் நிலைகொள்ள இயன்றது. மகதத்தின் படைத்தலைவர்களில் ஒருவர் என்ற தகுதியே கம்சருக்கு இருந்தது. தன் தனித்தகுதியால் இளைய யாதவர் படிவர் என்றும் அறிஞர் என்றும் புகழ்பெற்றிருந்தபோதிலும் கூட அஸ்தினபுரியின் படைத்துணை கொண்டு நிலைகொள்வதாகவே துவாரகை அறியப்பட்டது என நாம் அறிவோம்."

"துவாரகையின் வெற்றி என்பது அது பிற நாடுகளில் இருந்து நெடுந்தொலைவில் இருப்பதனால், கடல் வணிகத்தை சிறப்புறச் செய்ததனால் அமைந்தது. ஆம், அது இந்த இடத்தை தெரிவுசெய்த இளைய யாதவரின் மதிநுட்பத்தால் வாய்த்தது. அவ்வாய்ப்பை நாம் கடந்து செல்ல வேண்டியிருக்கிறோம். இங்கு இன்னமும் துவாரகையின் கருவூலம்

நிறைந்திருக்கிறதென்பதை நாம் மறக்கவேண்டாம். நம்மால் பெரும்படையொன்றை மிக எளிதாக திரட்டிக்கொள்ள முடியும். வலுவான கடற்படை ஒன்றை அமைத்துக்கொள்ள முடியும். கடல்வழிகளினூடாகச் சென்று பாரதவர்ஷத்தின் பெரும்பாலான பெருநகரங்களை நம்மால் தாக்க முடியும். கடல்வல்லமை கொண்ட நிலம் என்பது இன்று சிலவே. அவற்றில் கலிங்கமும் வங்கமும் சோர்ந்து வலுவிழந்து கிடக்கின்றன."

"நாம் படைகொண்டு சென்றாகவேண்டும், நம்மை அனைவரும் அஞ்சியாக வேண்டும். அனைத்து நாடுகளிலிருந்தும் கப்பம் இந்நாட்டுக்கு வந்தாகவேண்டும். யாதவக்குடி குருக்ஷேத்ரத்தில் அதன் தலைவராலேயே தோற்கடிக்கப்பட்டது என்ற கதை இன்று உள்ளது. இக்கதை இவ்வண்ணமே நீடிக்குமெனில் இன்னும் ஒரு தலைமுறைக்கு மேல் யாதவர்கள் எவராலும் மதிக்கப்படமாட்டார்கள். மதிப்பற்றவர்கள் அழிவார்கள் என்பது அரசியலின் நெறிகளில் ஒன்று. எண்ணுக! நாம் வென்றேயாக வேண்டும். வெல்வதற்கான வழிகளில் முதன்மையானது ஒருங்கிணைந்து பிறருக்கு அச்சமூட்டும் அளவுக்கு எழுந்து நின்றிருப்பது. இத்தருணத்தில் நாம் காட்டவேண்டியது இதையே!"

கிருதவர்மன் சொன்னார் "வாலில் கோல் கொண்ட நாகமென தலை தூக்கி நின்று சீறவேண்டிய தருணம் இது! உலகு அறியட்டும் நாம் பத்தி விரித்துவிட்டோம் என. இது எண்பது தலைகொண்ட அரசப் பெருநாகம்!" அனைவரும் மீண்டும் வெறிகொண்டு கூச்சலிடத் தொடங்கினார்கள். நான் அறியாமல் கணிகரை பார்த்துவிட்டு நோக்கை விலக்கிக்கொண்டேன்.

# கல்பொருசிறுநுரை - 38

## பகுதி நான்கு : அலைமீள்கை – 21

தந்தையே, எந்த ஒரு அவையிலும் நான் பார்க்கும் ஒன்றுண்டு, அது கூடி சற்றுநேரம் கலைவுகொண்டிருக்கும். அதன் மையம் நோக்கி செல்வதற்கான தயக்கம் அனைவரிலும் வெளிப்படும். எவரோ ஒருவர் அந்த மெல்லிய படலத்தை கிழித்து எழுந்து அந்த மையத்தை நோக்கி செல்லவேண்டியிருக்கிறது. மெல்லமெல்ல அவை குவியும். உச்சம்கொள்ளும். ஆர்ப்பரிக்கும். அழுது சிரித்து கொந்தளித்து எங்கோ வானிலென இருக்கும். அங்கிருப்போர் தேவரோ அசுரரோ என தெரிவர். பின்னர் மெல்ல மெல்ல அந்த அலை வளைந்து பின்னடைகிறது. ஒவ்வொருவரும் மண்ணில் இறங்குகிறார்கள். தங்களுக்கு உரியதென்ன, தங்கள் நலன்கள் என்ன என்று கணிக்கத் தொடங்குகிறார்கள். அதன்பின் அங்கே திரள் என்பது இல்லை. ஒவ்வொருவரும் தனியர். ஒவ்வொருவரும் ஒவ்வொரு விசை.

அவையில் அந்த தரைபரவல் நிகழலாயிற்று. அவர்களின் உடல்நெகிழ்வுகள் அதையே காட்டின. இயல்பாக பின்சரிந்து அமர்ந்து கைகளை கட்டிக்கொண்டும் தாடியை வருடிக்கொண்டும் அவர்கள் கிருதவர்மனின் பேச்சை கேட்டுக்கொண்டிருந்தார்கள். “மைந்தர்களே, யாதவர்களாகிய நாம் குருக்ஷேத்ரத்தில் நம் நற்பெயரை இழந்தோம். குருக்ஷேத்ரத்தில் நானும் சாத்யகியும் பெரும்புகழ் ஈட்டிக்கொண்டோம் என்பதில் ஐயமில்லை. ஆனால் யாதவர்கள் அழிந்தார்கள், புகழ்மறைந்தார்கள் என்பதே

உண்மை. அதை நாம் ஈடுகட்டியாகவேண்டும். அந்தச் சிறுமையிலிருந்து கடந்துசென்றாகவேண்டும்.”

அப்போரில் பிரத்யும்னனும் சாம்பனும் தந்தையின் ஆணைக்கேற்ப விலகி நின்றார்கள் என்பது உண்மை. போரில் பலராமரும் பங்குகொள்ளவில்லை என்பதும் உண்மை. ஆனால் அது நாம் கூறும் ஒரு மாற்றுரை என்ற அளவிலேயே வரலாற்றில் நிற்கும். நாம் அஞ்சினோம், தன்னலம் கணித்து விலகினோம் என்றே அது வரலாற்றில் பதிவாகும். ஆகவே நாம் படைவல்லமையுடன் எழுந்தாகவேண்டும். இன்று நம்மிடம் குருக்ஷேத்ரப் போரில் வென்று மீண்ட இரு போர்வீரர்கள் இருக்கிறோம். நானும் சாத்யகியும் படைமுகம் நிற்கிறோம் என்பதே ஓர் ஆற்றல்தான். இளைய யாதவரின் ஆற்றலையும் மதிநுட்பத்தையும் கொண்டவர் என்று அறியப்படும் பலராமர் இருக்கிறார். படைத்தலைமைக்கு நம்மிடம் குறைவில்லை. யாதவர்கள் ஒருங்கிணைந்தால் படை எண்ணிக்கைக்கும் குறைவிருக்காது.

நாம் நிலம் வெல்வோம். முடிசூடுவோம், முழுதாள்வோம். இங்கு இதுவரை நிகழ்ந்த பூசல்கள் அனைத்திலும் இருந்த இடர் என்ன? நீங்கள் அனைவரும் துவாரகைக்காக விழைவுகொண்டீர்கள், இந்த மணிமுடிக்காக கனவு கண்டீர்கள். மைந்தரே, அது பிழை. துவாரகை கைப்பிடியளவு நிலம். இது ஒரு தொடக்கம். இந்நிலத்தை அல்ல, நீங்கள் பங்குபோட்டுக்கொள்ளவேண்டியது விரிந்து பரந்திருக்கும் பாரதவர்ஷத்தைத்தான். அங்கு உங்கள் ஒவ்வொருவருக்கும் நிலங்கள் அமையும். ஐயம் வேண்டியதில்லை, நீங்கள் எண்பதின்மரும் தனித்தனியாக முடிசூடி அமையும் நாடுகள் அமையும். உங்கள் கொடிவழிகள் முடிசூடி பாரதநிலத்தில்

நீண்டு வளரும் உங்கள் புகழ் என்றுமிருக்கும். மரம் விதைகளை உருவாக்குவது தன் காலடியில் உதிர்ப்பதற்காக அல்ல, வெடித்துச் சிதறி நிலமெங்கும் பரவுவதற்காக. எண்பதின்மரின் தோற்றத்தில் இளைய யாதவர் எழுந்தது பாரதநிலத்தை வெல்வதற்காக என்றே உணர்க!

இளைய யாதவரின் மைந்தர் என்னும் அடையாளம் உங்கள் பெரும் படைக்கலம். வெல்லற்கரியவர் என அவர் இன்னமும் பாரதவர்ஷத்தால் நம்பப்படுகிறார். நீங்கள் இயற்றுவதனைத்திற்கும் அவரது சொற்களின் துணை உண்டு. பாரதவர்ஷம் முழுக்க இன்று ஐந்தாவது வேதம் என்று அவர் சொற்கள் ஏற்கப்படுகின்றன. பல்லாயிரம் பல்லாயிரம் மாந்தர் அச்சொற்களை நோக்கி வந்து குழுமுகிறார்கள். ஒரு நிலத்தில் ஐந்தாம் வேதம் ஏற்கப்பட்டுவிட்டது என்று அரசர் அறிவிப்பாரெனில் சில நாட்களுக்குள்ளேயே எட்டு பெருங்குடிகளும் திரண்டு அங்கு சென்று அந்நிலம் பொலிவு கொள்வதை காண்கிறோம். இன்று ஷத்ரியர்கள் அல்லாத அத்தனை அரசர்களுக்கும் இருக்கும் நல்வாய்ப்பு அது.

ஷத்ரியர்களால் ஐந்தாவது வேதத்தை ஏற்றுக்கொள்ள இயலாது. பாஞ்சாலம் தவிர எந்நிலமும் ஐந்தாம் வேதத்தை முழுமையாக ஏற்றதென்று இன்றும் அறிவிக்கப்படவில்லை. எனில் அவ்வாறு அறிவித்தால் வேதம் அளிக்கும் இயல்பான முடியுரிமையை அவர்கள் இழந்தவர்கள் ஆவார்கள். ஐந்தாம் வேதத்தை மறுக்கவில்லை என்ற நிலைபாட்டை அன்றி வேறு எதையும் இன்று ஷத்ரியர்கள் ஏற்க இயலாது. ஐந்தாம் வேதத்தை ஏற்றுகொண்ட நாடுகள் தவிர வேறெந்த நாடும் ஓங்கவும் இயலாது. ஆகவே நாம் ஷத்ரிய அடையாளத்துடன்

இல்லை என்பதும், நமது கோன்மை தொல்வேத நெறியால் அமைக்கப்பட்டதல்ல என்பதும் நமக்கு மிகப் பெரிய வாய்ப்பு.

நாம் செல்லுமிடமெல்லாம் உங்கள் தந்தையின் ஐந்தாம் வேதத்தை கையில் ஏந்திச் செல்வோம். படைகொண்டு செல்லும் எவரும் ஒரு கையில் வாளும் மறுகையில் சொல்லும் கொண்டிருக்கவேண்டும் என்பதை அறிக! ஐந்தாம் வேதத்தின் பொருட்டு படையெழுகை நடக்கும் என்றால் நமது நில விழைவையோ கோன்மை விழைவையோ குடி ஆணவத்தையோ முற்றாக மறைத்துவிட முடியும். அறத்தின் பொருட்டே, அழியாச் சொல்லின் பொருட்டே நாம் படைகொண்டெழுகிறோம் என்று வரலாற்றில் நிலைநிறுத்த முடியும். ஆம், நாம் இளைய யாதவரின் நகரை சேர்ந்தவர், அவர் மைந்தர் என்ற வகையில் அவர் சொல்லுக்காக திரள்வோம். அவர் சொல்வதை பாரதவர்ஷம் முழுக்க நிலைநிறுத்தும் பொறுப்பை அஸ்தினபுரியிடமிருந்து நாம் ஏற்றுக்கொள்வோம். அதன்பொருட்டு படைகொண்டு செல்வோம். அதன்பொருட்டு பாரதவர்ஷத்தை முற்றாக வெல்வோம்.

மைந்தரே, அதன் பின் உங்களுக்கு இந்த துவாரகை ஒரு பொருட்டா என்ன? இன்று இந்த அவையில் அறிவிக்கிறேன். தந்தையென, பாரதவர்ஷத்தின் பெரும்போர்வீரன் என நின்று இதை உங்களுக்கு சொல்கிறேன். நான் பாரதவர்ஷத்தை வென்று உங்களுக்கு அளிக்கும்வரை ஓயமாட்டேன். வென்றபின் வெல்லும் தென்னிலத்தை முழுக்க பிரத்யும்னன் ஆள்வான். வடபுலம் முழுக்கவே சாம்பனுக்கு உரியது. கிழக்கும் மேற்கும் அவ்வாறே இளைய யாதவரின் மைந்தரால் பங்கிடப்படும். இந்தத் தலைமுறை முடிவதற்குள் எண்பது

பேரரசுகள் பாரதவர்ஷத்தில் உருவாகும். அவையனைத்தும் இளைய யாதவரின் ஐந்தாவது வேதத்தை நிலைநிறுத்துவதாக இங்கு அமையும். ஆம், எண்பது அரசுகள். எண்பது அரசக்கொடிவழிகள்! யயாதிக்குப் பின் மாபெரும் பிரஜாபதியென உங்கள் தந்தையே அறியப்படுவார்.

இந்த எண்பது அரசுகளில் எதுவும் வீழ்ச்சியடைய முடியாது. எண்பதும் தனித்தனியாக வளரும். ஆனால் ஒன்று தாக்கப்பட்டால் எண்பதில் பிற நாடுகள் வந்து உதவி செய்யும். இதற்கு இணையான அரசியல் கூட்டு இதற்கு முன்பு இங்கு உருவானதில்லை. இதற்கு இணையான ஒரு கோன்மை இங்கு நிலைபெற்றதில்லை. ஒருவேளை இவ்வண்ணம் நிலைபெற வேண்டும் என்பதற்காகவே ஐந்தாவது வேதம் இங்கு எழுந்ததோ என்று ஐயுறுகிறேன். நாம் இளைய யாதவரின் பெருங்கனவை நனவாக்கும் தருணம். அவரது சொல்லை நிலைநிறுத்தும் தருணம். நமது குடி பாரதவர்ஷம் முழுக்க நிறைந்து இது நம் நிலமென்று ஆகும் தருணம்.

மைந்தர்ளே, பாரதவர்ஷம் முழுக்க நிறைந்து பெருகவேண்டும் என்று விழையாத ஒரு குடியும் இங்கு இல்லை. ஒவ்வொரு குடி வேண்டுதலின் போதும் பூசகர் சொல்லும் வரிகளில் “எங்கும் நிறைக! பாரதவர்ஷமே ஆகுக!” என்னும் சொல் இல்லாமல் இருந்ததில்லை. அச்சொல்லை மெய்யாக்கும் வாய்ப்பு நமக்கு மட்டுமே கிடைக்கிறது. இத்தருணத்தில் உறுதி கொள்வோம். நாம் பாரதவர்ஷத்தை வெல்வோம். நம் மூதாதையர் அனைவருக்கும் இச்சொல்லை அளிப்போம். இங்கு நம்மிடம் இருக்கும் அனைத்து சொல் வேறுபாடுகளையும் மறப்போம், ஒருங்கிணைந்து எழுவோம். நமக்கு இளைய

யாதவர் அளித்த அறைகூவல் இது. அவரே எண்ணி வியக்கும் அளவுக்கு அதை மேற்கொள்வோம். ஆம், அவ்வாறே ஆகுக!

தலைகுனிந்து வணங்கிய கிருதவர்மனை நோக்கி அனைவரும் திகைத்தவர்கள் என அமர்ந்திருந்தனர். சாத்யகி எழுந்து கிருதவர்மனை தழுவிக்கொண்டதும் வாழ்த்தொலிகள் பொங்கி எழுந்தன.

தந்தையே, அதன் பின்பு உணவுக்கலங்கள் வரத்தொடங்கின. ஒவ்வொருவரும் கலைந்து அவரவர்களுக்கு உரியவர்களுடன் உரையாடத்தொடங்கினார்கள். கூச்சலும் சிரிப்பும் அவையை நிறைத்திருந்தன. என் அருகே அமர்ந்திருந்த கணிகர் மெல்லிய குரலில் "எனக்கொரு ஐயம். இந்த அவையில் அதை எழுப்பலாமா என்று எனக்கு தெரியவில்லை. எவரேனும் அதை எழுப்பலாம்" என்றார். "என்ன?" என்று நான் கேட்டேன். "இல்லை, இந்த அரங்கின் உவகைக் கொண்டாட்டத்தை சற்று குறைக்கக் கூடியதாக அது இருக்கலாம். பிறிதொருமுறை கூட அதை பேசலாம்" என்றார்.

அவருடைய சூழ்ச்சியை நான் புரிந்துகொண்டேன். அத்தகைய ஒரு பெருங்கூச்சல் அரங்கில் கூச்சலிடும் சொற்களை எவரும் செவிகொள்வதில்லை. மெல்ல சொல்லும் சொற்களை நோக்கி செவிகள் வரும். அவர் எனக்காக அதை சொல்லவில்லை. அவர் அங்கே எதையும் சொல்லவேண்டியதில்லை என்று எனக்கு தோன்றியது. அவரை தவிர்க்க நான் விழைந்தேன். ஆனால் எனக்கு அப்பால் அமர்ந்திருந்த பிரஃபானு "என்ன அது?

சொல்லுங்கள் கணிகரே, என்ன?" என்றார். நான் "இதை நாம் பிறகு பேசிக்கொள்வோம். இத்தருணத்தில் அல்ல" என்றேன்.

பிரஃபானு நான் தடுத்தமையாலேயே ஆர்வம் கொண்டார். மிக நுண்ணிய ஒன்று அங்கே எழுகிறது என எண்ணினார். எழுந்து கணிகர் அருகே வந்து "கூறுக, தங்கள் ஐயம் என்ன?" என்றார். "ஐயம் அல்ல. என்ன செய்வது என்பதைப்பற்றிய பேச்சு மட்டுமே" என்றார் கணிகர். "கூறுக!" என்று பிரஃபானு கேட்டார். கணிகர் அவரையே இலக்காக்கினார் என்று உணர்ந்தேன். அந்த அவையில் அவர் சொன்னதை கூறுவதினூடாக தனக்கு கிடைக்கவிருக்கும் ஒரு சிறு முதன்மையை ஒருபோதும் அவர் இழக்கப்போவதில்லை. சலிப்புடன் பீடத்தில் சாய்ந்துகொண்டு என்ன நிகழ்கிறது என்று பார்ப்போம் என்று நான் என்னை விடுவித்துக்கொண்டேன்.

கணிகர் அவரிடம் மெதுவாக பேச அவர் தலையசைத்தார். அவர் முகம் மாறியது. அவர் தலைவணங்கியபின் திரும்பி உணவுப்பீடத்தை கையால் தட்டினார். அனைவரும் திரும்பி அவரை பார்த்தனர். எழுந்து கைதூக்கி உரத்த குரலில் "அவையீரே, ஒரு சொல்! இளைய யாதவரின் மகனாக ஒரு சொல்! நான் இந்த அவையில் ஒரு சொல் உரைக்கவிருக்கிறேன்" என்றார். ஃபானு எரிச்சலுடன் "என்ன அது?" என்றார். அந்த எரிச்சலால் அவர் மேலும் கூர்கொண்டார். தான் சொல்வதை கேட்ட பின் ஃபானு நிறைவுறுவார் என எண்ணினார். "அதை இங்கு உரைக்கலாமா என்று எனக்கு தெரியவில்லை. ஆனால் இங்கே அதற்கு ஒரு முடிவு கண்டுவிட்டால் மேற்கொண்டு செல்லலாம் என்று தோன்றுகிறது" என்றார்.

ஃபானு "கூறுக!" என்றார். அவை சொல்லவிந்து செவிகூர்ந்தது. ஆனால் கிருதவர்மன் அது ஒவ்வாத சொல்லின் தொடக்கம் என உள்ளுணர்ந்தார். எரிச்சல் வெளிப்படையாகவே தெரிய "மைந்தா, இங்கு ஒரு முடிவு எடுத்திருக்கிறோம். அம்முடிவை எவ்வண்ணம் நிலைநிறுத்தப் போகிறோம் என்பது குறித்த சூழ்ச்சியை தனி அவையில் பிறகு நடத்தலாம். இம்முடிவு மட்டுமே பொது அவைக்குரியது" என்றார். "ஆம், ஆனால்..." என்று அவர் தொடங்க "நீ கூறவிருப்பது அம்முடிவில் ஏதேனும் மாற்றோ விலக்கோ எனில் மட்டும் கூறுக! அதை நடைமுறைப்படுத்துவதன் இடர்களைக் குறித்தோ வாய்ப்புகளைக் குறித்தோ எனில் தனி அவையில் ஆகுக!" என்று கிருதவர்மன் மீண்டும் கூறினார்.

கிருதவர்மனின் கண்களில் இருந்த உணர்விலிருந்து அவர் கணிகரின் உள்ளத்தை தெரிந்துகொண்டார் என்று எனக்கு தோன்றியது. கணிகரை அவர் மதிக்கிறார். கூடவே அஞ்சுகிறார். ஓரளவு தெரிந்தும் இருக்கிறார். ஆனால் எவரும் அவரை முழுமையாக தெரிந்துகொள்ள இயலாது என நான் எண்ணிக்கொண்டேன். பிரஃபானு "நான் எண்ணுவதை இங்கு கூறியாகவேண்டும். இங்கேயே முடிவெடுக்கப்படவேண்டும். ஏனெனில் இங்கு முடிவெடுத்தால் மட்டுமே சில தெளிவுகள் கிடைக்கும். வேறு எங்காயினும் இந்தச் சொல்லாடல் நின்று நின்று செல்லும். எண்ணியிராத உணர்வுகளும் கருத்துகளும் எழுந்து வரும். இங்கெனில் அது மிக எளிதில் முடிந்துவிடும்" என்றார்.

"கூறுக!" என்று ஃபானு சொன்னார். நான் மூத்தவர் ஃபானுவின் முகத்தை பார்த்தேன். புன்னகைக்கவேண்டும்போல் இருந்தது. அது எளியோரின் உளப்பாங்கு, ஓர் ஆவல் எழுந்துவிட்டால்

என்னதான் இழப்பு என்றாலும் அதை அறிந்தே ஆகவேண்டும் என விழைவார்கள். அரசர்கள் ஒன்றை செவிகொள்வதோ தவிர்ப்பதோ கூட தங்கள் அரசுசூழ்தலின் தேவைக்கேற்பவே. பிரஃபானு "நாம் விதர்ப்ப நாட்டு அரசர் ருக்மியை எப்போது எதிர்கொள்ளப்போகிறோம்?" என்றார். "இங்கு யாதவக் கூட்டமைப்பை குறித்தும் பாரதவர்ஷத்தை யாதவர்கள் வெல்வதைக் குறித்தும் பேசினோம். ருக்மி தன்னை ஷத்ரியர் என்று எண்ணிக்கொள்கிறார். ஷத்ரிய மேன்மைக்காக துவாரகை மேல் படைகொண்டு வந்து நம் எல்லைக்கப்பால் நின்றிருக்கிறார். அவரை எங்கு நிறுத்துவோம்?"

"அவர் நமது நட்பு நாடு" என்று கிருதவர்மன் கூறினார். "ஆம், ஆனால் அவர் நட்புகொண்டு வருவது தனது குருதியைச் சேர்ந்த பிரத்யும்னனிடமே ஒழிய அந்தகக் குருதி கொண்ட ஃபானுவிடம் அல்ல. மூத்தவர் ஃபானுவை அவர் ஏற்கிறாரா இல்லையா என்பதை நான் அறிந்தாகவேண்டும். ஃபானுவின் தலைமை கொள்ளும் இந்நிலத்திற்கு துணையரசாக அவர் திகழமுடியுமா என்று அறியவேண்டும். அதன் பின்னரே நாம் இந்த முடிவை எடுக்கமுடியும்" என்றார் பிரஃபானு. "அதற்கும் நம் முடிவுக்கும் என்ன தொடர்பு?" என்று கிருதவர்மன் கேட்டார். "அவரை பிரத்யும்னனால் மீறமுடியுமா? அவர் சொல்லை ஏற்று அன்னை ருக்மிணி ஆணையிட்டால் அவர் மைந்தர்கள் என்ன செய்வார்கள்? அவர்கள் முதலில் இந்த அவையில் அதை அறிவிக்கட்டும்" என்று பிரஃபானு சொன்னார்.

"முதலில் நாம் ஃபானு நமது தலைவர் என்று அறிவிப்போம். அதன் பின்னர் முறையாக அவருக்கு முடிசூட்டு விழாவுக்கு அழைப்பு தெரிவிப்போம்" என்று கிருதவர்மன் கூறினார். "அதுவே முறை. ஆனால் அதற்கு அப்பால் ஒன்றிருக்கிறது,

நமது எல்லையில் அவரது படைகள் இருக்கின்றன. நாம் முடிசூட்டுவிழா முடிவை எடுத்திருப்பதை அவருக்கு தெரிவிக்க வேண்டும். அவருக்கு அதற்கு உடன்பாடுள்ளதா என்று கேட்கவேண்டும்" என்றார் பிரஃபானு. "அவர் எளியவரல்ல. எண்பதின்மரும் சேர்ந்து ஃபானுவை அரசராக்கினால் முதல் எதிர்ப்பு தனக்கே வரும் என்று அவர் அறிந்திருப்பார். பாரதவர்ஷம் எங்கும் யாதவர்கள் எழுந்தால் விதர்ப்பமும் பிற ஷத்ரிய நாடுகளும் ஆற்றல் குன்றும் என்றும் யாதவர்களின் காலடியில் ஷத்ரியர்கள் அமர்ந்திருக்கும் காலம் வரும் என்றும் அவர் அறிந்திருப்பார்."

"இதை ஏன் இங்கு பேசுகிறோம்? பேசிப் பேசி இதை ஏன் இங்கு வளர்க்கிறோம்?" என்று கிருதவர்மன் எரிச்சலுடன் சொன்னார். "எதையும் சழக்குப்பேச்சாக, பூசலாக ஆக்கும் பழக்கத்தை யாதவர்களாகிய நாம் என்று கைவிடப்போகிறோம்?" பிரஃபானு "நான் பேசுவது அரசுசூழ்கை" என்றார். கிருதவர்மன் "நோக்குக, அவருடைய குருதிமைந்தன் பிரத்யும்னன் இங்கிருக்கிறான். அவன்தான் தென்பாரதத்தை முழுவதும் ஆட்சி செய்யவிருக்கிறான்" என்றார். "ஆம். ஆனால் அவர் யாதவக்குருதியின் ஒரு பகுதியாக ஆட்சி செய்யவிருக்கிறார். ஷத்ரிய அரசராக அல்ல" என்று பிரஃபானு சொன்னார். "அதை அவர் ஏற்பாரா? நான் கேட்கவிழைவது அதையே."

அவையில் ஒவ்வொருவரும் ஒருவரையொருவர் பார்த்தனர். சிறுகுரல்களில் பேசத்தொடங்கினர். தான் ஒரு ஆழ்விளைவை உருவாக்கிவிட்டோம் என்னும் நிறைவை அடைந்த பிரஃபானு தன்னைத்தானே வியந்து மகிழ்ந்து புன்னகைத்து "ஒரு முடிவை எடுக்கவேண்டியது இன்றியமையாதது. இந்த அவையில் இந்த முடிவை நான் கூறுவதற்கு முதன்மையான

அடிப்படை ஒன்றுள்ளது. இங்கு பிரத்யும்னன் இருக்கிறார். இங்கு யாதவ மைந்தர் நடுவே அவர் தன்னுடைய நிலைபாட்டை அறிவிக்கட்டும். அவர் ருக்மியை எவ்வாறு எதிர்கொள்வார்? ருக்மி ஷத்ரியர் என நிலைபாடு எடுத்து துவாரகைக்கு எதிராக நிலைகொள்வாரெனில் பிரத்யும்னன் ருக்மிக்கு எதிராக நம்முடன் நிற்பாரா? பிரத்யும்னன் நம்முடன் சேர்ந்து ருக்மிக்கு எதிராக என்றேனும் போர்புரிய ஒருக்கமாக இருப்பாரா?" என்றார்.

"ஆம், அது உண்மை" என்றார் குடித்தலைவரான கூர்மர். பிரஃபானு "அவ்வாறெனில் மட்டுமே நாம் ருக்மியுடன் பேசமுடியும். அவரை நமக்கு அடிபணிந்திருக்கச் செய்யமுடியும். அவருடைய படைகளை நமது எல்லையிலிருந்து அகற்றும்படி கோரமுடியும். எல்லையில் அவர் படை இருக்கும் வரை நாம் இங்கு முடிசூடுவது பொய்யாகவே ஆகும்" என்றார். கிருதவர்மன் "நாம் ஓர் அறிவிப்பை பாரதவர்ஷத்துக்கு வெளியிடுகிறோம். அதில் உடன்பாடும் எதிர்ப்பும் இருக்கும். உடன்பாடுகளை உரக்க சொல்ல சிலர் இருப்பார்கள். எதிர்ப்புகளை எவரும் உரக்க சொல்லமாட்டார்கள். எதிர்ப்புகள் புகைந்துகொண்டுதான் இருக்கும். நமது வெற்றியால் அவ்வெதிர்ப்புகளை இல்லாமல் ஆக்க முடியும். அதற்குமேல் எழும் எதிர்ப்புகளை மட்டுமே நாம் படைபலம் கொண்டு வெல்ல வேண்டியதிருக்கும்" என்றார்.

சாத்யகி "இன்றிருக்கும் சூழலில் ருக்மி நம்மை எதிர்க்கமாட்டார். ஒருங்கிணைந்த துவாரகையை எதிர்க்கும் ஆற்றல் அவருக்கு இல்லை. ஏனெனில் தேவையெனில் அஸ்தினபுரியின் படையை நாம் சேர்த்துகொள்ள முடியும்

எனும்போது மொத்த பாரதவர்ஷமும் நம்முடன் இருப்பதாகவே பொருள். ருக்மி அதற்கு மாறாக எதுவும் செய்ய இன்று வாய்ப்பில்லை" என்றார். பிரஃபானு அது தன் நாள் என எண்ணிக்கொண்டார். உரக்க "வாய்ப்புகளைக்கொண்டு எண்ணவேண்டியதில்லை. நான் கோருவது ஒன்றே. இந்த அவையில் பிரத்யும்னன் கூறட்டும், அவர் எண்பதின்மருள் ஒருவராகவே நிலைகொள்வார் என்று. எந்நிலையிலும் அதுவே அவர் நிலை என்று. அதன் பிறகே அவருக்கு தன் மாதுலர் என்று. அதை கூறுவதற்கான ஒரு நல்வாய்ப்பல்லவா இந்த உண்டாட்டு? அதன் பிறகு ருக்மியை என்ன செய்வதென்று முடிவு செய்வோம்" என்றார்.

அதன்பின் ஒருவரும் ஒன்றும் சொல்ல இயலவில்லை. சில கணங்களில் அனைத்து ஓசைகளும் அடங்கி உண்டாட்டறை அமைதிகொண்டது. அனைவரும் பிரத்யும்னனை நோக்க, பிரத்யும்னன் தன் இளையவர்களை நோக்கினார். அவர் எழுவதற்குள் அநிருத்தன் எழுந்தான். அவன் எழுந்த அணியொலிகளும் ஆடையொலிகளும் கேட்டன. "இதில் எந்த ஐயமும் வேண்டியதில்லை. எந்தையின் பொருட்டு நான் இந்த அவையில் கூறுகிறேன், யாதவக் கூட்டமைப்பே எங்கள் முதன்மைத் தெரிவு. இளைய யாதவரின் மைந்தர், பெயர்மைந்தர் என்னும் நிலையிலேயே எப்போதும் நிலைகொள்வோம்" என்றான். அவையெங்கும் பெருமூச்சொலிகள் எழுந்தன. யாதவர்களை நன்கறிந்த நான் அவர்கள் ஏமாற்றம் அடைகிறார்கள் என்பதை புரிந்துகொண்டேன். அவர்கள் பூசலிட விழைகிறார்கள். தங்கள் காலடி நிலம் பற்றி எரிந்தாலும் பூசலைப்போல அவர்கள் களிப்பது பிறிதொன்றிலில்லை.

“பிதாமகர் ருக்மி நமக்கு முதன்மையானவரே. அவரிடம் நானே பேசுகிறேன், அவர் புரிந்துகொள்வார். எனக்கும் அவருக்கும் எப்போதும் நல்லுறவே இருந்துள்ளது” என்றான் அநிருத்தன். பிரஃபானு யாதவர்களின் உளநிலையில் தானும் இருந்தார். அது கீழிறங்கி அமைய அவர் விரும்பவில்லை. “நல்லுறவைப்பற்றி பிறகு பேசுவோம். இப்போது அறுதியாகக் கேட்கவிருக்கும் வினா இதுவே. முதன்மையாக எவரை கொள்வீர்கள்? ஷத்ரிய மைந்தர்கள் கூறுக!” என்றார். அநிருத்தன் “நாங்கள் முதன்மையாக யாதவர்கள்” என்றான். “இதை எந்தையின் மைந்தர், அன்னை ருக்மிணியின் மைந்தர் அனைவர் பொருட்டும் சொல்கிறேன்.” பிரத்யும்னனும் இளையோரும் கைதூக்கி அதை ஏற்றுக்கொண்டனர்.

அநிருத்தன் “நான் கிருதவர்மனின் சொற்களுடன் முழுமையாக உடன்படுகிறேன். யாதவக் கூட்டை ஏற்கிறேன். எந்நிலையிலும் அதற்கு நிலைகொள்வேன் என்றும், அதன்பொருட்டு எவரிடமும் போர்புரிவேன் என்றும், தேவையெனில் அதற்காக உயிர்கொடுப்பேன் என்றும், எனது தனி விழைவுகளையும் ஆணவத்தையும் ஒருபோதும் அந்தப் பொதுநோக்கத்திற்கு எதிராக வைக்கமாட்டேன் என்றும் ஆணைகூறுகிறேன்” என்றான். “ஆனால்...” என்று பிரஃபானு மீண்டும் தொடங்க “அறுதிச்சொல்லை அவன் கூறிவிட்டான். அதை திரித்து ஐயுற்று விவாதிக்க வேண்டியதில்லை” என்றார் கிருதவர்மன்.

“நன்று, என் ஐயம் என்னவென்றால்...” என அவர் மீண்டும் தொடங்க “அறிவிலி, இக்கணம் நீ அமரவில்லை என்றால் என் கையால் உன் தலையை துண்டிப்பேன்” என்று சாத்யகி வாளை உருவியபடி எழுந்தார். பிரஃபானு அதை எதிர்பார்க்கவில்லை. அவர் முகம் குழம்பிச்சுருங்கியது. உடல் நடுங்கத்

தொடங்கியது. அவர் தன் உடன்பிறந்தார் அனைவரின் முன்னும் பேருருவாக எழுந்துவிட்டதாக எண்ணிக்கொண்டிருந்தார். எங்கே பிழை செய்தோம் என்று அவருக்கு புரியவில்லை. கால் தளர்ந்து அமர்ந்தார். நான் அவரிடம் "சொல்லை எடுப்பதில் அல்ல, நிறுத்துவதில்தான் நுண்ணறிவு உள்ளது" என்றேன். அவர் உதடுகளை அழுத்திக்கொண்டார். விழிகளில் நீர் நிறைந்திருந்தது.

ஃபானு "இது நம் அவைமுடிவு எனில் இச்செய்தியை நாம் முறையாக அவருக்கு அறிவிக்க வேண்டும். ருக்மிக்கு இங்கிருந்து ஒரு தூது செல்லட்டும்" என்றார். "அநிருத்தன் செல்லட்டும். அதுவே நன்று" என்று கிருதவர்மன் சொன்னார். கணிகர் "அவரும் அவருடைய குருதியை சார்ந்தவர். ஆகவே அணுக்கம் கூடும். அது நன்று" என்றார். "ஆனால் அணுக்கம் கூடுவதனால் சொல் பெருகும், சொல் பெருகும்போது முரண்பாடு பெருகும். குருதியைச் சேராத ஒருவர் செல்வதே முறையானது" என்றபோது அவர் ஒருகணம் என்னை பார்த்தார். "என் தெரிவு பிரதிபானு செல்லலாம் என்பது."

"ஏன்?" என்று சுஃபானு கேட்டார். "எற்கெனவே சாத்யகியை சந்திக்கவும் கிருதவர்மனை சந்திக்கவும் அவரே சென்றிருக்கிறார். வென்று வந்திருக்கிறார். அவர் இப்பொறுப்பையும் சிறப்பாக நிறைவேற்றுவார். அத்துடன் அவர்கள் இருவரையும் சந்திக்கச் சென்றவரே இவரையும் சந்திக்கச் சென்றார் என்பது அவருக்கும் மதிப்பை அளிப்பதாக அமையும். மூவரையும் இணையான இடத்தில் வைக்கிறோம் என்று காட்டும்" என்றார் கணிகர். ஃபானு "ஆம், அவ்வண்ணமே அவரிடம் தெரிவிக்கலாம்" என்றார். கணிகர் "சாத்யகிக்கும் கிருதவர்மனுக்கும் நிகராக ருக்மி நின்றிருப்பார் எனில் அவர்

பெருவீரராகவும் வரலாற்றில் அறியப்படுவார். துவாரகை என்னும் பெருவிசை எழும்போது அவரது இடமென்ன என்பது அவ்வாறாக வகுக்கப்படுகிறது" என்றார்.

"சாத்யகிக்கும் கிருதவர்மனுக்கும் நிகராக குல மூதாதையின் இடம்" என்றார் கணிகர். "அவர் இங்கு துணையரசராக அல்ல, மூதாதையாகவே கணிக்கப்படுவார் என்பதை அதனூடாக அவருக்கு நாம் உணர்த்த முடியும். ஆகவே இளையவர் பிரதிபானு செல்வதே உகந்ததாக இருக்கும் என்று எண்ணுகிறேன்" என்றார். ஃபானு "ஆம், அவ்வாறே நானும் எண்ணுகிறேன்" என்றார். சுஃபானு என்னையே பார்த்துக்கொண்டிருந்தார். அவர் விழிகள் மாறுபட்டிருந்தன. முதன்முறையாக என்னை அவர் அஞ்சத் தொடங்கியிருக்கிறார் என்பதை அறிந்து நான் புன்னகையை உள்ளடக்கி முகத்தை இறுக வைத்துக்கொண்டேன்.

சுஃபானு "ஆம், ஆனால் ஒருவேளை கிருதவர்மனிடமும் சாத்யகியிடமும் இளையவன் என்னென்ன பேசினான் என்பதை அறிவதற்கு ருக்மி முயல்வாரெனில் அந்த முயற்சி வீணாகிவிடக்கூடும். பிறிதொரு இளையவனை அனுப்பலாம். சாம்பனின் இளையோரோ லக்ஷ்மணையன்னையின் மைந்தர்களோ யாராவது ஒருவர்" என்றார். "அல்ல, அவர்களின் சொல்திறன் இன்னும் நிறுவப்படவில்லை. பிரதிபானு நிகரற்ற சொல்வீரர் என்பது முற்றாக நிறுவப்பட்டு நாமனைவரும் அறிந்ததாக உள்ளது" என்றார் கணிகர். "ஆம், அவனே செல்லட்டும்" என்று ஃபானு சொன்னார். கிருதவர்மன் "ஆம், எனில் அவ்வாறே. அவரிடம் கூறுவதென்ன என்பது தெளிவாக அமைந்துவிட்டபிறகு சென்று பேசுபவர் தனியாகச்

சொல்லாடுவதற்கு ஒன்றுமில்லை. பிரதிபானு சென்று அவரை சந்திக்கட்டும்" என்றார்.

# கல்பொருசிறுநுரை - 39

**பகுதி நான்கு : அலைமீள்கை – 22**

ருக்மியை சந்திக்கக் கிளம்புவதற்கு முன்பு நான் கணிகரை சந்திக்க விரும்பினேன். அவரை சந்திக்க விழைகிறேன் என்று செய்தி அனுப்பினேன். கணிகர் உடல்நலமின்றி படுத்திருப்பதாகவும் உடனடியாக அவரை சந்திப்பது இயலாதென்றும் தூதன் வந்து சொன்னான். என்ன செய்கிறது அவருக்கு என்று கேட்டேன். நேற்றைய விருந்தில் அவர் உண்டது ஒவ்வாமையை உருவாக்கியிருக்கிறது. ஆகவே தன் குடிலில் உணவொழிந்து உப்பிட்ட நீர் மட்டும் அருந்தி படுத்திருக்கிறார் என்றான். மருத்துவர்கள்? என்றேன். மருத்துவர்களை அவர் சந்திப்பதில்லை. மருந்துகள் எதையும் உண்பதுமில்லை என்றபின் அவர் உண்பது வலி போக்குவதற்கான அகிபீனா மட்டுமே என்றான் ஏவலன்.

எனக்கு அது விந்தையாக இருந்தது. ஆனால் அகிபீனா களியுருளைகளை உண்பவர்களுக்கு தொடர்ந்து வயிற்றுக்கடுப்பு நோய்கள் வருமென்பதை நான் முன்னரே அறிந்திருந்தேன். "நன்று, நான் சென்றுவந்தபின் அவரை சந்திக்கிறேன் என்று கூறுக!" என்றேன். ஒருவகையில் அதுவும் நன்றே என்று எண்ணிக்கொண்டேன். நான் அவரை

சந்திக்காமலேயே சென்று ருக்மியை வென்று மீண்டேன் என்றால் அது என் தனிப்பட்ட சொல்வன்மைக்கான இன்னொரு சான்றாகவே அமையும். இதுவரை வென்றவர்கள் இருவரும் அணுக்கமானவர்கள், இவர் முற்றெதிரி.

ருக்மியை சந்திப்பதற்கான பயணம் தொடங்குவதற்கு முன் துவாரகையிலிருந்து முறையான அழைப்பு ஒன்றை நான் ருக்மிக்காக எழுதி வாங்கிக்கொண்டேன். உண்மையில் துவாரகையில் அப்போது மூத்தவர் ஃபானுவின் முடிசூட்டு விழா விருந்தறைப் பேச்சாகவே எஞ்சியிருந்தது. அரசாணை வெளியிடப்படவில்லை. அரசவை அறிவிப்பும் நிகழவில்லை. ஒற்றர்களினூடாக அப்பேச்சின் ஒரு பகுதி ருக்மியை சென்றடைந்திருக்க வாய்ப்பிருந்தது. அது அவரில் பலவகையான உளக்குழப்பங்களை உருவாக்கியிருக்கும். அச்செய்தியை எந்த அளவுக்கு ஏற்பது என்ற ஐயம் இருக்கும். அவருக்குத் தேவை ஓர் உறுதிப்பாடு, அதை என் செய்தி அளிக்கவேண்டும்.

துவாரகையின் முடியுரிமை குறித்து இறுதி முடிவு எடுக்கப்பட்டுவிட்டது என்ற செய்தியை அறிவிக்கும் ஓர் ஓலையே நான் விழைந்தது. ஆனால் மூத்தவர் ஃபானு அதில் கைச்சாத்திட இயலாது. துவாரகையின் மைந்தர் அனைவரும் பங்கெடுக்கும் ஒரு அவையாணை வேண்டும். அல்லது அந்த அவையில் பொறுப்பளிக்கப்பட்ட ஓர் அமைச்சரின் முத்திரை அதற்கு வேண்டும். என்னிடம் உண்டாட்டு அறையில் பொறுப்பு அளிக்கப்பட்டுவிட்டது, நானும் ஏற்றுக்கொண்டுவிட்டேன். உண்டாட்டு அறைக்கு வெளியே யாதவ மைந்தர் என்ன எண்ணுகிறார்கள்? பிரத்யும்னனும் சாம்பனும் அங்கிருந்து சென்றபின்னர் உளம் மாறிவிட்டிருக்கிறார்களா?

ஆனால் நான் மீண்டும் ஃபானுவை சந்தித்து எனக்கு முறையான ஓலை வேண்டும் என்று கோரமுடியாது. அவ்வண்ணம் ஓர் ஓலையை இன்று அவரோ பிறரோ அளிக்கமுடியாது. அதற்கு மைந்தர் அனைவரின் ஒப்புதலை தனித்தனியாக பெறவேண்டும். அல்லது முறையான அரசவை கூடவேண்டும். அதற்கு இனி பொழுதில்லை. காலம் பிந்தும்தோறும் ருக்மி அறுதி முடிவுகளை எடுக்கக்கூடும். நான் செல்வதற்குள் அவர் பாறைபோல் இறுகிவிட்டிருக்கக்கூடும். அவர் குழம்பி நிலையழிந்திருக்கையிலேயே என் தூது வெல்லமுடியும். அப்போதே கிளம்பியாகவேண்டும்.

என்ன செய்வது என்று அறியாமல் நான் குழம்பினேன். ஆனால் அனைத்தையும் நானே செய்தாகவேண்டும் என்றும் எண்ணினேன். அவையாள்கை அமைச்சர் சுஃப்ரரிடம் "யாதவ மைந்தர் கருத்தொருமித்து முடிவெடுத்துவிட்டார்கள் என ருக்மியை அறிவிக்கச் செல்லவிருக்கிறேன். அவ்வண்ணம் ஓர் ஓலை எனக்கு உடனடியாக தேவையாகிறது" என்றேன். "ஆனால் அம்முடிவு இன்னும் எட்டப்படவில்லை" என்று அவர் தயங்கினார். நான் சீற்றத்துடன் "முடிவு எட்டப்பட்டுவிட்டது. எனக்குத் தேவை ஓலை. இல்லையேல் எதன்பொருட்டு நான் சென்று அவரை சந்திக்க முடியும்? எப்படி அவை நின்று முறைமைச்சொல் பேசி தொடங்கலாகும்?" என்றேன்.

என் சினம் அமைச்சரை மேலும் பின்வாங்கச் செய்தது. "நான் இதில் செய்வதற்கு ஒன்றுமில்லை. நீங்கள் மூத்தவரிடமிருந்து அல்லது இளையவர் சுஃபானுவிடமிருந்து ஓர் ஓலை பெற்றுக்கொண்டு செல்வதே நன்று. அல்லது அவர்களே என்னை அழைத்து ஆணையிடவேண்டும்" என்றார். நான் "இத்தருணத்தில்..." என்று தொடங்க அவர் "அல்லது

பிரத்யும்னனின் ஓலையே போதுமானது" என்றார். அப்போது என்னில் எழுந்த சினத்தை முழுமையாகவே அடக்கி "நோக்குகிறேன்" என்றேன். ஓலை பெறுவது இயல்வதல்ல. வேறேதேனும் வேண்டும்.

எண்ணியபடி என் அறைக்கு திரும்பினேன். எனது பழைய பேழையில் இருந்த ஒரு கணையாழியை நினைவுகூர்ந்தேன். அது மிக இயல்பாக அத்தருணத்தில் நினைவில் எழுந்தது. அது நெடுங்காலம் முன்னர் நாங்கள் களத்தில் பந்து விளையாடிக்கொண்டிருந்தபோது சுதேஷ்ணனின் கையிலிருந்து உதிர்ந்தது. அனைவரும் சென்றபின் நாங்கள் விளையாடிய இடத்தில் அந்தக் கணையாழி கிடந்ததை கண்டேன். அதை எடுத்து வந்து என் தனியறைப் பேழைக்குள் போட்டுவைத்தேன். ஏன் அப்படி செய்தேன் என்று அப்போது எனக்கு தெரியவில்லை. அவ்வண்ணம் பொருட்களை காத்து வைப்பவன் அல்ல. பிறர் பொருட்கள் மேல் விருப்பம் கொண்டவனும் அல்ல. ஆயினும் அதை செய்தேன். உரிய தருணத்தில் அது நினைவுக்கும் வந்தது.

இவ்வாறு எண்ணுகையில்தான் இவ்வனைத்தும் முற்றிலும் முன்னொருங்கிவிட்டவையோ என்ற எண்ணம் எழுகிறது. வாழ்வின் ஏதோ ஒரு தருணத்தில் ஏதோ ஒரு எண்ணத்தை அடையாத எவரும் இருக்கமாட்டார்கள். ஆனால், அவ்வெண்ணம் மனிதர்களை செயலின்மை நோக்கி செலுத்துகிறது. தானே இயற்றினேன் என்னும், தன் வலிமையால் வென்றேன் என்னும் ஆணவங்களை இல்லாமலாக்குகிறது. ஆகவே அதை உணர்ந்தாலும் தனக்குத்தானே என ஏற்றுக்கொள்ளாமலிருப்பதே மானுட இயல்பு. சுதேஷ்ணனின் கணையாழியை எடுத்ததுமே

அதைக்கொண்டு நான் இயற்றக்கூடும் அனைத்தும் என் நினைவில் எழுந்தன. ஏற்கெனவே எங்கோ முறையாக வகுக்கப்பட்டு முழுமையாக எழுதிப் பதிவு செய்யப்பட்டு, என்னால் அப்போது ஓர் ஏட்டிலிருந்து படிக்கப்படுவதைப்போல.

சுதேஷ்ணனின் கணையாழியுடன் என் புரவியில் நான் துவாரகையிலிருந்து எல்லை நோக்கி கிளம்பினேன். என்னுடன் எட்டு காவலர்கள் வந்தனர். ஒருவன் கொம்பூதி முன்னால் செல்ல இன்னொருவன் துவாரகையின் கொடியுடன் தொடர்ந்தான். பிறர் வில்லேந்தி காத்து வந்தனர். துவாரகையிலிருந்து அவந்தி செல்லும் வழி ஒரு காலத்தில் வணிக வண்டிநிரைகளால் நிறைந்திருக்கும். அன்று வருவதற்கும் போவதற்கும் வெவ்வேறு வழிகள் ஒருக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு வழியிலும் அப்பால் வருபவர்களை காணமுடியும். மேலிருந்து பார்க்கையில் இரு எறும்புநிரைகள்போல் தெரியும். அந்தப் பாதையில் நாங்கள் ஒரு சிறு வண்டுக்கூட்டம்போல சென்றோம்.

பாலைநிலம் எடைவண்டிகள் வருவதற்குரியதல்ல. அகலமான சகடங்கள் கொண்ட தாழ்வான வண்டிகளில்தான் பாலையில் பொருட்களை கொண்டுவர முடியும். அவற்றையும் பரைக்கால் ஒட்டகைகளே இழுக்க முடியும். தொடக்கத்தில் ஒட்டகைகள் இழுக்கும் மென்மரச் சகடங்கள் கொண்ட வண்டிகளே வந்துகொண்டிருந்தன. அவை சகடங்களே அல்ல, உருளும் மரத்தடிகள் சகடங்களாக பொருத்தப்பட்டிருக்கும். ஒவ்வொரு வண்டிக்கும் பன்னிரண்டு உருளைகள். ஆயிரங்காலட்டை செல்வதைப்போல் அவை மணல்மேல் உருளும். அவை சென்ற வழியே ஒரு பாதையென தெரியும்.

பின்னர் வண்டிநிரை பெருகியபோது அவந்தியிலிருந்து துவாரகை வரைக்கும் பலகைகள் பதிக்கப்பட்ட உறுதியான சாலை தங்களால் உருவாக்கப்பட்டது. அதன் பிறகு எடைமிகுந்த வண்டிகள்கூட வரலாம் என்று ஆயிற்று. புரவிப்பாதை ஒன்று குறுக்காக இருந்தாலும் பெரும்பாலும் அனைவரும் அந்த மரம் பதிக்கப்பட்ட வண்டிப்பாதையையே விரும்பினர். முன்பு அந்தப் பாதையில் வண்டிகள் மணிகோத்த மாலை என அவந்திமுதல் துவாரகை வரை நிரைகொண்டிருக்கும். அப்போது அப்பாதை கைவிடப்பட்டு மணலில் புதைந்து முற்றிலும் தடமில்லாததாக மாறிவிட்டிருந்தது. நான் புரவியில் சென்றபோது பல இடங்களில் அந்தப் பாதையை புரவிக்குளம்படிகள் உணர்ந்தன. மீண்டும் விலகி பாலையின் புதையும் மணலுக்குள் சென்று மீண்டும் வழி கண்டு அப்பால் ஏறின. தந்தையே, என் உள்ளமும் அவ்வாறே தடம் விலகி தடம் கண்டு அலைக்கழிந்துகொண்டிருந்தது.

அன்று மாலை பாலைநிலச் சோலை ஒன்றில் தங்கினேன். தந்தையே, உங்கள் காலகட்டத்தில் ஒரு அழகிய விடுதியாக பேணப்பட்ட சோலை அது. ஐநூறு வணிகர்களும் அவர்களின் வண்டிகளும் தங்குவதற்கு உகந்தது. முன்பு அங்கிருந்த ஊற்று ஆழப்படுத்தப்பட்டு கரைகட்டப்பட்டு காவலுடன் முறையாக பேணப்பட்டிருந்தது. நான் அங்கு சென்றபோது அச்சோலையையே மணல் மூடியிருந்தது. ஊற்றின் ஒரு பகுதி மணலால் மூடப்பட்டிருந்தது. மானுடர் வருவது குறைந்ததுமே பாலை விலங்குகள் அச்சோலையை கையில் எடுத்துக்கொண்டுவிட்டிருந்தன. மணலெங்கும் ஓநாயின் காலடித்தடங்களை பார்த்தேன். என்னுடன் வந்த காவலர்கள்

ஓநாய்கள் அணுகாமல் இருப்பதற்காக பந்தங்கள் கொளுத்திவைத்து எனக்கு காவலிருந்தனர்.

விண்மீன்களைப் பார்த்தபடி பாலையில் அமர்ந்திருந்தபோது ஒரு சிறு தொடுகையென அந்த எண்ணம் வந்து எனக்கு அதிர்வளித்தது. என்னை பார்ப்பதை கணிகர் வேண்டுமென்றே ஒழிந்தார். அவருக்குத் தெரியும், நான் ருக்மியை பார்க்கச் செல்வது. அங்கு என்ன பேசவேண்டுமென்பதை அவர் நன்கு உணர்ந்திருக்கிறார். அதை எனக்கு அவர் கூறியாகவேண்டும் என்று மூத்தவர் ஆணையும் இட்டிருக்கிறார். ஆனால் அவர் என்னை சந்திக்கவில்லை. ஏன்? என்னை அவர் கையொழிகிறாரா? அன்றி நான் செல்லுமிடத்தில் ஏதேனும் பிழையாக நிகழும் என்று எண்ணுகிறாரா? அதற்கு தானும் பொறுப்பேற்றுக்கொள்ள முடியாதென்று கருதுகிறாரா?

என் உள்ளம் பதறிக்கொண்டிருந்தது. எண்ணங்கள் கிளம்பி வெவ்வேறு திசைகளில் வெடித்துச் சென்று வெட்டவெளியில் முட்டி திரும்பி வந்தன. அன்றுபோல் அத்தனை குழம்பி பதறி நிலையழிந்து ஒருபோதும் இருந்ததில்லை. இத்தனைக்கும் அத்தனை பதற்றம் கொள்வதற்கு அன்று எதுவும் நிகழவும் இல்லை. கணிகர் என்னை காண மறுத்தமைக்கு அவர் உடல்நலமில்லை என்பதேகூட உண்மையான ஏதுவாக இருக்க அனைத்து வாய்ப்புகளும் இருந்தன. நான் மிகைப்படுத்திக் கொண்டிருக்கலாம். எனது அச்சங்களால் தடம் மாறி அவ்வெண்ணத்தை சென்றடைந்திருக்கலாம். ஆனாலும் எனக்கு தோன்றிக்கொண்டிருந்தது, அது இயல்பானது அல்ல என்று.

அவர் என்னை வரவழைத்து ஓரிரு சொல் பேசி வாழ்த்தி அனுப்பியிருக்கலாம். அதையும் செய்யவில்லை. என்னுள் எழுந்த அமைதியின்மை என்னை அங்கே அமரவிடவில்லை.

எழுந்து பாலைநிலத்தில் கால் புதைய நடந்தேன். எவரோ என்னை பார்க்கும் உணர்வு இருந்துகொண்டே இருந்தது. விந்தையானதோர் அச்சம் உடனே அங்கிருந்து செல் என்று சொன்னது. நான் கண்களை மூடிக்கொண்டு எனது எண்ணங்களை தொகுக்க முயன்றேன். பின்னர் ஒன்று உணர்ந்தேன். ஒருவேளை எனது நன்மைக்காகவே கணிகர் அதை செய்திருக்கலாம். நானே வெற்றியை முழுமையாக அடையவேண்டும் என்றும் அதற்கான தகுதி உடையவன் என்றும் அவையில் என்னை நிறுத்த அவர் எண்ணியிருக்கலாம்.

நான் அடையும் சொல்வெற்றிகள் அனைத்துமே கணிகரால் எனக்கு அளிக்கப்படுபவை என்று பல்வேறு சொற்களில் சுஃபானு அவைதோறும் நிறுவ முயன்றுகொண்டிருந்தார். அவரை நான் சந்திக்காமலேயே சென்றேன் வென்றேன் என்று வரும்போது என்னை மேலும் அழுந்தச்செய்யும் என்று அவர் எண்ணியிருக்கலாம். ஆம், என் நலன் நாடும்பொருட்டே அதை செய்கிறார். அவரை நான் வீணாக ஐயுறுகிறேன். என் நலன் நாடும் பொருட்டேதான். ஐயமே இல்லை என் நலன் நாடும் பொருட்டேதான்.

அவ்வெண்ணம் என்னை விடுதலை செய்தது. என்னை இயல்பு நிலைக்கு மீட்டது. எழுந்து சென்று மீண்டும் மணலில் விரித்த தோல் படுக்கையில் படுத்துக்கொண்டேன். என் உடலை மென்மையாக உள்வாங்கிக்கொண்டது மணல்படுக்கை. ஆழ்ந்து துயின்று எப்பொழுதோ விழித்துக்கொண்டபோது என் மேல் ஒரு நோக்கு பதிந்திருப்பதை உணர்ந்தேன். விழி திறக்காமலே அது எவருடைய நோக்கு என்று அறிந்தேன். கணிகர் என் அருகே அமர்ந்து என்னை பார்த்துக்கொண்டிருந்தார்.

“கணிகரே, தாங்களா?” என்றேன். அவர் புன்னகைத்தார். மிக மிக அழகிய புன்னகை. “கணிகரே, தாங்கள் என்னை தொடர்ந்து வந்தீர்களா? இங்குதான் இருக்கிறீர்களா?” திடுக்கிட்டு கண்விழித்தேன். மிக அருகே ஒரு ஓநாய் அமர்ந்திருந்தது. நான் எழுந்து அதை பார்த்தேன். அதை விரட்டும்பொருட்டு கையை வீசினேன். அது அசைவிலாது என்னை பார்த்துக்கொண்டிருந்தது. பின்னர் எழுந்து விலகிச்சென்றது. சிறுத்தையாலோ வேறு விலங்குகளாலோ தாக்கப்பட்டமையால் அதன் பின்னங்கால்கள் இரண்டு பழுதடைந்திருந்தன. முன்கால்களால் தன் உடலை உந்தி அதை முன்னெடுத்துச் சென்றது.

அது இச்சோலைக்குள்ளேயே வந்து இங்கேயே ஒளிந்திருந்து வாழ்கிறது என்று தெரிந்தது. அதனால் ஓடவோ வேட்டையாடவோ இயலாது. சிற்றுயிர்களைப் பிடித்து உண்டு இங்கு மறைந்திருக்கிறது. என் காவலர்கள் இச்சோலைக்கு காவலிடும்போது முன்னரே வந்து இந்த ஓநாய் சோலைக்குள் ஒளிந்திருக்கக்கூடும் என்று எண்ணியிருக்கவில்லை. அதன் நோக்கைத்தான் அங்கு வந்த கணம் முதல் நான் உணர்ந்துகொண்டிருந்தேன். அதுதான் என்னை அத்தனை அமைதியிழக்கச் செய்தது. நான் மணலில் கையால் தட்டினேன். நின்று பசி வெறித்த விழிகளால் என்னை பார்த்தது. பின்னர் வாய் திறந்து மெல்ல சீறி உடலை உந்தி இழுத்துக்கொண்டு மணல் சரிவில் இறங்கி ஊற்றை நோக்கி சென்றது.

பெருமூச்சுடன் இயல்பு நிலையை அடைந்து மீண்டும் மணல்பரப்பில் அமர்ந்தபோது நான் ஒன்றை உணர்ந்தேன். மிகத் தெளிவாக. கண்முன் எழுந்த பாலைவெளியென

பருவடிவாக. என்னை கணிகர் மாபெரும் சூழ்ச்சி ஒன்றுக்குள் இறக்கிவிட்டிருக்கிறார். என்னை கைவிட்டுவிட்டார். அல்லது என் கதையை முடிக்க முடிவு செய்துவிட்டார். இந்தச் சந்திப்பிலிருந்து நான் மீளப்போவதில்லை. ஏற்கெனவே அடைந்த இரு வெற்றிகளால் என்னை நானே மிகையாக எண்ணிக்கொண்டேன். இதையும் மிக எளிதாக வென்றுவிடுவேன் என்று கருதினேன். அந்த நம்பிக்கையே என் புதைகுழி. அதை மிகத் தெளிவாக உணர்ந்து கணிகர் என்னை இந்தப் புதைமணலுக்குள் அனுப்புகிறார். இதில் தனக்குப் பங்கில்லை என்று முன்னரே கைகழுவிக்கொள்கிறார்.

என்ன நிகழும்? எங்கு சிக்கிக்கொள்வேன்? சிக்கிக்கொள்வேன் என்று அத்தனை உறுதியாகத் தெரிந்தது. தந்தையே, ஒரு மாற்றெண்ணம்கூட இல்லை. கண் முன் நின்றிருந்தது. ஆயினும் நான் அதை தவிர்க்கவில்லை. அச்சந்திப்பை ஒழிந்து நான் திரும்பி துவாரகைக்கு சென்றிருக்கலாம். ஏதேனும் ஒரு ஒழிவுச் சொல் உரைத்திருக்கலாம். ஆனால் அவ்வாறு தோன்றவில்லை. மேலே செல்க என்றே தோன்றியது. அதிலிருந்து எழுந்த ஆணவம். அதைவிட அறியும் விழைவு. என்னை விட பெரிதாக அங்கு என்ன இருக்கப்போகிறது? அவ்வாறு ஒன்று அங்கு என்னை காத்திருக்கையில் அதை ஒழிந்து என்னால் திரும்ப முடியாது. ஆகவே நான் செல்லவே முடிவெடுத்தேன்.

மறுநாள் முதற்காலையில் கிளம்பினோம். செல்லும் வழியெங்கும் என்ன நிகழும் என்று என்னால் எண்ணக்கூடும்

அனைத்து தடங்களிலும் எண்ணங்களை ஓடவிட்டுக்கொண்டிருந்தேன். எதுவும் பிடி கிடைக்கவில்லை. அத்தனை வாயில்களும் மூடியிருப்பது மேலும் மேலும் வெறி கிளப்பியது. சென்று முட்டித்திறந்தே ஆகவேண்டும் என்று என் உள்ளம் எழுந்தது. செல்க செல்க என்று என் புரவியை துரத்தினேன். தந்தையே, தன் புதைகுழியை தானே தேடிச்செல்பவனின் விரைவைப்போல விந்தை வேறில்லை இப்புவியில்.

நான் துவாரகையின் எல்லைக்கு அப்பால், அவந்தி நாட்டின் முகப்பில் அமைந்திருந்த பாலைநிலப் பகுதிக்கு சென்றேன். நெடுந்தொலைவிலேயே அங்கே ஒரு படை இருப்பது வானில் பறந்த பல்லாயிரம் பறவைகளில் இருந்து தெரிந்தது. பாலைநிலப் பறவைகள் அனைத்தும் அங்கு உணவு கிடைக்கும் என்பதை அறிந்து அங்கு சென்றுவிட்டிருந்தன. கூடாரங்களிலிருந்து மிஞ்சியவற்றை உண்டு பழகிய காகங்களும் மைனாக்களும். மிக உயரத்தில் வட்டமிட்ட பருந்துகள். அவந்தியின் அரைப்பாலை நிலமும் புல்வெளியும் அங்கிருந்துதான் தொடங்குகின்றன. ஆகவே அது ஒரு படை தங்குவதற்கு மிகவும் உகந்த நிலம். பாலை நிலம் என்பதனால் மரங்களை வெட்டத் தேவையில்லை. கூடாரங்களை எளிதில் அமைத்துக்கொள்ளலாம். ஆனால் அருகில் புல்வெளி இருப்பதனால் விலங்குகளுக்குரிய புல்லும் நீரும் அங்கு கிடைக்கும்.

நான் வருவதை தொலைவிலேயே அவர்களின் காவல்மாடத்திலிருந்து பார்த்துவிட்டார்கள். அங்கே ஒரு கொம்பொலி எழுவது மிகச் சிறிய ஒலித்தீற்றலென என் காதில் கேட்டது. என்னை வரவேற்க வருபவர்களுக்காக நான்

மெதுவாக புரவியில் சென்றுகொண்டிருந்தேன். விதர்ப்ப நாட்டுக் கொடியுடன் தொலைவில் மூன்று வீரர்கள் என்னை நோக்கி வந்தனர். முதலில் வந்தவன் விரைவழிந்து கொம்பொலி எழுப்பினான். எனது காவல்வீரனும் கொம்பொலி எழுப்பி துவாரகையின் கொடியை ஆட்டினான். இருவரும் கொடி தாழ்த்தி வணங்கிய பிறகு காவலன் என்னை அணுகி "துவாரகையின் இளவரசர் அவந்தி நாட்டு எல்லைக்குள் வருக! மாமன்னர் ருக்மி தங்களை வரவேற்கிறார்" என்றான்.

"எனது வரவு அறிவிக்கப்பட்டுள்ளதா?" என்று நான் கேட்டேன். "இல்லை, முறையான அறிவிப்புகள் இல்லை. ஆனால் ஒற்றுச்செய்திகளின் மூலம் தாங்கள் வந்துகொண்டிருப்பது தெரிந்தது. தாங்கள் வந்ததும் நேராக அழைத்து வரும்படி ஆணை" என்றான் காவலன். அவனுடன் செல்கையில் அங்கு சென்று சற்றே ஓய்வெடுத்து சொல்கோத்து அதன் பிறகு ருக்மியை சந்திக்கலாம் என்று எண்ணியிருந்தேன். இப்பொழுது இந்த அகப்பதற்றத்துடனேயே அவரை சந்திக்கவேண்டியிருந்தது இடரே என்று எனக்கு தெரிந்தது. என்ன நிகழ்கிறது என்று எனக்கு தெரியவில்லை. நிகழ்வுகளின் சுழல் என்னை இழுத்துச் செல்லத் தொடங்கிவிட்டது. முற்றாக ஒன்றுமே தெரியாமல் சுழன்று அடித்து மோதி மூழ்கவேண்டியதுதான், வேறுவழியில்லை.

உண்மையில் அந்தத் தருணத்தில் மெல்லிய உவகை ஒன்று எனக்கு ஏற்பட்டது. என்னைவிடப் பெரிதான ஒன்றை சந்திப்பது அது. ஒருவேளை அதை நான் கடந்துவந்தேன் எனில் வாழ்வின் மிகப் பெரிய அறிதல் ஒன்றை பெற்றவன் ஆவேன். தெய்வத்தை நேரில் கண்டவன் போலாவேன். என்ன நிகழவிருக்கிறது என்று ஒரு கதை கேட்கும் குழந்தையின்

ஆர்வத்துடன் என் அகம் விழித்து பதற்றம் அடைந்திருந்தது. ஆனால் என் இடத்தொடை நடுங்கிக்கொண்டே இருந்தது. என்னுள்ளிருந்த பதற்றம் விரல்களை முறுக்கி கைகளை அழுத்தி வைத்திருக்கச் செய்தது.

நேராகவே ருக்மியின் குடில் நோக்கி கொண்டுசெல்லப்பட்டேன். அங்கே என்னை எதிர்கொண்ட சிற்றமைச்சர் "தாங்கள் இச்சிற்றறையில் ஆடை திருத்தி முகம் கழுவலாம். அரசர் கூடாரத்தில் தங்களுக்காக காத்திருக்கிறார்" என்றார். நான் அந்தச் சிறு குடிலுக்குள் சென்று அங்கிருந்த அகன்ற மண்கலத்தில் முகம் கழுவினேன். என் தலைப்பாகையை அவிழ்த்து திருப்பிக்கட்டி மேலாடையை உதறி அணிந்துகொண்டேன். எனக்காக வாயிலில் ஏவலன் காத்திருந்தான். என்னை அவன் தனியாக விடவே இல்லை.

எதன்பொருட்டு என்னை வந்த பொழுதிலேயே சந்திக்கவேண்டும் என்று ருக்மி விரும்புகிறார் என்று என்னால் எண்ண முடியவில்லை. துவாரகையின் கொடியுடன் வருவதனால் இது ஒரு முறையான அரசத்தூதென்றே கொள்ளப்படவேண்டும். ஆகவே என்னை தன் அவையில் வரவழைத்து சொல்எடுக்கச் சொல்வதே முறையானது. அன்றி ஏதேனும் ஐயம் இருந்தால் தனியறைக்கு வரச்சொல்லலாம். பாலையிலிருந்து நேராக வரவழைத்திருக்க வேண்டியதில்லை. நான் நிலைகுலைந்திருப்பேன் என்றும், அறியாச் சொல்லெடுத்து என்னை காட்டிக்கொடுப்பேன் என்றும் அவர் எண்ணியிருந்திருக்கலாம்.

ஆனால் அதற்கு வாய்ப்பில்லை. என்னை அவருக்கு தெரியாது. மெய்யாக அவர் பதறிக்கொண்டிருக்கலாம். நான் நீராடி உடைமாற்றி வரும்வரை பொறுத்திருக்க அவரால் இயலாமல்

இருக்கலாம். ஆம், விதர்ப்பத்தின் அரசர் ருக்மியைப்பற்றி அறிந்தவர்கள் அவ்வாறே முடிவெடுப்பார்கள். ருக்மி அஞ்சுபவர், விரைவாக நிலையழிபவர், உறுதியாக முடிவெடுக்க இயலாது ஊசலாடுபவர். குருக்ஷேத்ரத்தில் இருபுறமும் அலைபாய்ந்து தன்னை பாரதவர்ஷத்திற்கே காட்டிக்கொண்டவர். ஆகவே அவர் ஒரு போரினூடாக தன்னை நிறுவிக்கொள்ள விழைகிறார்.

நான் அவர் கூடார வாயிலில் நின்றேன். என்னை உள்ளே அழைத்தனர். கூடாரத்திற்குள் மண்ணில் விரிக்கப்பட்ட தோல் இருக்கையின் மீது ருக்மி அமர்ந்திருந்தார். செந்தழல்போல் தாடி மார்பில் விழுந்திருந்தது. குழலைச் சுருட்டி தலைக்கு மேல் கட்டி அதில் ஒரு எலும்பு குத்தியிருந்தார். கழுத்தில் விழிமணி மாலை. எரியும் செந்நிற ஆடை. தழலெழுந்த மகாருத்ரன் போன்ற வடிவம். அவர் ருத்ரஉபாசனை கொண்டவர் என்று முன்னரே அறிந்திருந்தேன். உபாசனை கொண்டவர்கள் தங்கள் தெய்வம்போல தாங்களும் ஆகும் விந்தையை பலமுறை கண்டிருந்தேன்.

தலைவணங்கி "அனல் வடிவமான அரசருக்கு வணக்கம். நான் துவாரகையின் இளைய யாதவர் கிருஷ்ணனின் மைந்தன். துணைவி சத்யபாமையின் எட்டாவது சிறுவன். மூத்தவர் ஃபானுவின் இளையோன். அரச முறைப்படி ஒரு தூதுச்செய்தியுடன் தங்களை பார்க்க வந்திருக்கிறேன்" என்றேன். அவர் சிவந்த விழிகளால் என்னை நோக்கி "கூறுக!" என்றார்.

"அரசே, துவாரகையில் எண்பதின்மரும் இணைந்து ஒன்றாக ஆகியிருக்கிறார்கள் என்பதை அறிந்திருப்பீர்கள்" என்றேன். "ஆம்" என்று அவர் சொன்னார். "தந்தை கிருதவர்மன் வந்ததுமே எங்கள் பூசல் முடிவுக்கு வந்துவிட்டது. அந்தகக்

குலத்து மூத்தவரும் எந்தை இளைய யாதவருக்கு நிகரானவருமான அவருடைய சொல்லை எண்பதின்மரும் தலைக்கொண்டிருக்கிறோம். இன்று மூத்தவர் ஃபானு முடிசூடுவதற்கு பிரத்யும்னனுக்கோ சாம்பனுக்கோ பிற அன்னையர் மைந்தருக்கோ மாற்றுச்சொல் எதுவும் இல்லை. எண்பதின்மரிடையே கருத்துப்பிரிவென்று எதுவும் இல்லை" என்றேன்.

அவர் அதை அறிந்திருக்கிறார் என விழிகள் காட்டின. "இன்னும் ஓரிரு நாட்களில் மைந்தர் அனைவரும் கூடி மூத்தவர் ஃபானுவை முடிசூட வைப்பதென்றும், அதை அனைத்து அரசர்களும் பங்குபெறும் பெருவிழவென நிகழ்த்துவதென்றும் முடிவெடுக்கப்பட்டுள்ளது. அம்முடிவு அரசவையில் அறிவிக்கப்பட்டு ஆணையாக வெளியிடுவதற்கு முன்னரே தங்களிடம் தெரிவிக்கப்படவேண்டும் என்று மூத்தவர் ஃபானு விரும்பினார். ஆகவேதான் என்னை தங்களிடம் அனுப்பினார்" என்றேன்.

கண்கள் உறுத்து என்னை பார்க்க கைகள் தாடியை அளைந்துகொண்டிருக்க ருக்மி தலையாட்டினார். "தாங்கள் இதில் என்ன நிலைப்பாடு எடுப்பீர்கள் என்பதைப்பற்றி மூத்தவருக்கு ஐயம் எதுவும் இல்லை. தாங்கள் என்றும் துவாரகையின் நலம் நாடுபவராகவே இருந்திருக்கிறீர்கள். குருதி வழியாக தாங்கள் பிரத்யும்னனுக்கு அணுக்கமானவர். ஆகவே பிரத்யும்னன் முடிசூடவேண்டும் என்று விழைந்தது இயல்பானது. அது தங்கள் மகள் பட்டத்தரசியாகக்கூடும் என்பதனாலாக இருக்கலாம். அதுவும் இயல்பானதே. ஷத்ரியர் நிலம் விழைவதும் குடிபெருக எண்ணுவதும் அவர்களுக்கு தெய்வங்கள் இட்ட ஆணை. ஆனால் இன்று பிரத்யும்னன்

ஃபானு முடிசூட வேண்டும் என்று ஒப்புக்கொண்டிருக்கும் நிலையில் தாங்கள் பிரத்யும்னனை ஆதரித்து ஃபானுவின் அவைக்கு வந்து முடிசூட்டுவிழாவை சிறப்பிக்க வேண்டுமென்பது அனைவரின் கோரிக்கை" என்றேன்.

என் சொற்களை நானே எண்ணி மகிழ்ந்தேன். "மூத்தவரே, இச்செய்தியை நான் அரசமுறைப்படி அறிவிக்க வரவில்லை. அதற்கு இன்னும் சில நாட்களாகும். ஆனால் குடிமூத்தவர்களுக்கு முடிவெடுப்பதற்கு முன்னரே சொல்லவேண்டும் என்பதனால் உங்களிடம் கூறவந்தேன். உங்கள் வாழ்த்தே மூத்தவர் ஃபானுவை அரசமையச் செய்யும். எண்பதின்மரையும் வாழவைக்கும். கிருதவர்மனும் சாத்யகியும் நீங்களும் பிதாமகர்களாக நின்று எடுத்துக்கொடுக்கும் மணிமுடியைச் சூட மூத்தவர் ஃபானு விழைகிறார்" என்றேன்.

# கல்பொருசிறுநுரை - 40

**பகுதி நான்கு : அலைமீள்கை – 23**

தந்தையே, ஒவ்வொருவரும் நம்முள் ஒவ்வொன்றாக பதிந்திருக்கிறார்கள். நாம் அதை நம் எல்லைகளைக் கொண்டே மதிப்பிட்டிருக்கிறோம், அவர்களின் எல்லைகளைக் கொண்டு அல்ல. நம் எல்லைகளை வகுப்பவை நம் விழைவுகள், அச்சங்கள், சினங்கள். அதற்கும் அப்பால் நம் ஆணவம். நாம் ஒவ்வொருவரையும் நம் ஆணவத்தை அளவுகோலாகக் கொண்டே மதிப்பிடுகிறோம். நான் ருக்மியை

அவ்வண்ணம் மிகக் கீழே மதிப்பிட்டிருந்தேன். அது அவர் பேசத்தொடங்கியதுமே தெளிவடைந்தது.

ருக்மி அரசர் என்பதை நான் மறந்துவிட்டேன். அரசர்களை ஒருபோதும் தனிமனிதர்களாக எண்ணலாகாது. அவர்கள் அமைச்சர்களும் ஒற்றர்களும் இணைந்து உருவான பேருரு ஒன்றின் கண்திகழ் வடிவங்கள். பலநூறு விழிகளும் பல்லாயிரம் கைகளும் கொண்டவர்கள். பெருந்திரளெனப் பெருகிய ஓருருவர். நான் அன்று அறிந்தேன், ஆளும் பொறுப்பில் இருக்கும் எவரையும் மனிதராக எண்ணி மதிப்பிடலாகாது, அவர்களின் அரசநிலையையும் கருதியாகவேண்டும். ருக்மி என்னிடம் "நான் உங்களிடம் அறியவிழைவது ஒன்று உண்டு, இளையவரே" என்றார். "கூறுக!" என்றேன். "கிருதவர்மன் துவாரகைக்கு வந்தபின் சந்தித்த அரசகுடியினர் எவர்?" என்றார். நான் "யாதவ மைந்தர் அனைவரையும் சந்தித்தார்" என்றேன். "அதை அறிவேன். அதற்கும் மேல்" என்றார்.

அவர் சொல்வதென்ன என்று உடனே புரிந்துகொண்டேன். அவர் அதை அறிந்திருப்பார் என்று நான் எண்ணவே இல்லை. ஏனென்றால் மிகமிக மந்தணமாக அது நிகழ்ந்தது. என் உடன்பிறந்தாரிலும் எவரும் அதை அறிந்திருக்கமாட்டார்கள் என எண்ணியிருந்தேன். தந்தையே, கிருதவர்மன் துவாரகைக்கு வந்தபின், நான் சாத்யகியை கூட்டிவந்த மறுநாள் காலை அன்னையிடமிருந்து ஒரு அழைப்பை பெற்றேன். அன்னை என்னை அழைத்து உரையாடி நெடுநாட்களாகிவிட்டிருந்தது. அவர்களை நான் நேரில் பார்த்தது தாங்கள் நகரிலிருந்து கிளம்பிய அன்று. அதன்பின் ஒருமுறை அவைக்கு வந்து அன்றைய யாதவ குடித்தலைவர்களை நோக்கி நகர்

பொறுப்பிலிருந்து அவர் விடுபடுவதாக அறிவித்தார். அதன் பிறகு நோன்புகள், விழவுகள் எதிலும் அவர் தென்படவில்லை.

அவர் அங்கு இருக்கிறார் எனும் உணர்வு மட்டுமே எஞ்சியிருந்தது. முதலில் அவரைப் பற்றிய செய்திகள் வந்துகொண்டிருந்தன. பின்பு அவையும் வராமலாயின. எட்டு அரசியரில் ருக்மிணிதேவியையும் ஜாம்பவதியன்னையையும் அன்றி பிறரை எவரும் பார்க்க இயலாமலாயிற்று. அரசு அமர்வதற்கோ பிற சடங்குகளுக்கோ அரிதாக ருக்மிணிதேவி வந்தார். ஜாம்பவதியன்னையும் அவ்வாறே அரிதாகத்தான் தோன்றினார். அரசியென நகரை ஆண்டது சாம்பனின் துணைவியும் அஸ்தினபுரியின் இளவரசியுமான கிருஷ்ணை மட்டுமே.

ஆகவே காலையில் என்னைத் தேடி முகமறியாத சேடி ஒருத்தி வந்து நின்றபோது நான் முதலில் அவளை அடையாளம் கண்டுகொள்ளவில்லை. அவளே தன் கணையாழியைக் காட்டி "மூத்த அரசி சத்யபாமையின் தூதுப்பெண் நான்" என்று அறிவித்துக்கொண்டாள். அப்போது அவளை எவ்வாறு எதிர்கொள்வதென்றும் எவ்வகையில் முகமன் உரைப்பதென்றும் எனக்கு தெரியவில்லை. திகைத்த வண்ணம் பேசாமல் நின்றேன். "மூத்த அரசி தங்களை சந்திக்க விழைகிறார்" என்று அவள் சொன்னாள். "எப்போது?" என்று நான் கேட்டேன். "முடிந்தவரை விரைவில்" என்றாள். "நன்று, நான் உடனே வருகிறேன்" என்றேன்.

அவள் சென்ற பிறகு மூத்த அரசியிடமிருந்து வந்த அழைப்பை மூத்தவரிடமும் அமைச்சர்களிடமும் பகிர்ந்துகொண்டு அவர்களின் கருத்தை கேட்டபிறகு முடிவெடுக்கலாமா வேண்டாமா என்ற எண்ணம் எனக்கு ஏற்பட்டது. உண்மையில்

அது எளிய சந்திப்பாக இருக்கப்போவதில்லை. எளிய சந்திப்பாயினும் அதற்கு அரசியல் முதன்மை உண்டு. நானும் அரசியும் என்ன பேசிக்கொண்டோம் என்பதை அறிவதற்கு யாதவ மைந்தர்கள் அனைவருமே விழைவு கொண்டிருப்பார்கள். அங்கு நான் பேசியதன் பொருட்டு அரசியல் தொடர் விளைவுகள் எழக்கூடும். ஆகவே நான் குறைந்தது மூத்தவர் சுஃபானுவிடமாவது கலந்துகொண்ட பின்னரே அங்கு செல்லவேண்டும் என்று விழைந்தேன்.

ஆனால் அவ்வாறு எண்ணியபோது முதலில் என்னுள் எழுந்தது ஒரு வீம்பு. என் ஆணவத்தின் கூர்முனை அது. நான் என்னை மேலெழுப்பி நின்று அதை நோக்கினேன். இத்தருணத்தில் அவர்களுக்கு மேல் நான் நின்றிருப்பவன். அவர்களுக்கு இயலாத ஒன்றை நான் செய்வதை அவர்களுக்கு காட்டியாக வேண்டும். முன்பொரு நாள் உணவறைக்கூடத்திற்கு அனுப்பப்பட்டதற்கு எதிர்வினையாக அதை செய்தேனா என்று இப்போதும் சொல்ல முடியவில்லை. அவ்வாறும் இருக்கலாம். மானுட உணர்வுகள் எங்கிருந்து எங்கு செல்கின்றன என்றும் எதை நிகர்க்க எது செய்யப்படுகிறது என்றும் எவராலும் முன்னரே சொல்லிவிட இயலாது.

ஆனால் அத்தருணத்தில் அன்னையை தனியாகச் சென்று பார்ப்பதினூடாக நான் ஈட்டுவது ஒன்று உண்டு என்று எனக்குத் தோன்றியது. ஆகவே நான் அரசியை சந்திப்பதற்குரிய முறையான ஆடைகளுடன் எவருக்கும் அறிவிக்காமல் கிளம்பி அன்னையை பார்க்கச் சென்றேன். கடலோரமாக அமைந்த அவருடைய தவக்கோட்டத்திற்கு உப்பு உருகி வழிந்துகொண்டிருந்த கற்பாதையினூடாக நடந்தேன். அன்னையின் சிற்றறை உப்பரித்திருந்தது. அங்கு

அமர்ந்திருந்தபோது சுவர்கள் உயிருள்ள தசைப்பரப்புகள்போல ஈரமும் வெம்மையும் கொண்டிருப்பதாகத் தோன்றியது. அங்கு எவ்வண்ணம் வாழ முடியும் என்று வியந்தேன். அங்கு வாழ்வதென்பது தன் உடலை தானே நலிய வைத்துக்கொள்வது, ஒருவகையில் படிப்படியாக இற்று உயிர்விடுவது. அன்னை நோன்பென்ற பெயரில் அதைத்தான் செய்துகொண்டிருக்கிறார்.

முதிய சேடி வந்து "அன்னை வருகிறார்" என்று அறிவித்தாள். அரசி என்று அல்ல. சற்று நேரத்தில் அன்னை வந்து என் முன் அமர்ந்தார். நான் முன்பு கண்டிருந்த அன்னை அல்ல. அன்னையிடம் எப்போதும் ஒரு நிமிர்வு இருந்தது, காலடிகள் அனைத்திலும் ஒரு உறுதி இருந்தது. கண்களில் ஆணை கூர்ந்திருக்கும். நேர் நோக்கும் குரலில் நடுக்கிலாத ஒருமையும் இருக்கும். அவையனைத்தையும் இழந்து முற்றாகவே பிறிதொருத்தியாகிவிட்டிருந்தார். நான் அங்கு கண்டது வற்றி ஒடுங்கிய முதுமகளை. முற்றிலும் உள்வாங்கிவிட்டிருந்த விழிகள். பதறி நடுங்கிக்கொண்டிருந்த குரல்.

அவர் உள்ளே வரும்போது முதலில் அது என் அன்னை என்று எனக்கு தோன்றவில்லை. ஆகவே எழுந்து தலைவணங்காமல் திகைத்து அமர்ந்திருந்தேன். நாம் நமக்கு அணுக்கமானவர்களை உடலசைவுகளினூடாகவே அடையாளம் காண்கிறோம் என்பது வியப்பூட்டுவது. உடலசைவு மாறிவிட்டிருந்தால் கண்ணெதிரே ஒருவர் வந்தால்கூட அவர்தான் என்று நம் அகம் எண்ணிக்கொள்வதற்கு நெடுநேரம் பிடிக்கும்.

அன்னை வந்து என்னை வணங்கிய பின்னரே நான் பாய்ந்தெழுந்து வணங்கினேன். "வணங்குகிறேன் அன்னையே, தங்கள் தாள் பணிகிறேன்" என்று கூறினேன். அப்போதும்

சென்று அவர் கால் பணிந்து சென்னி சூடுவதற்கு தோன்றவில்லை. அன்னை "அமர்க!" என்று கை காட்டி தன் பீடத்தில் அமர்ந்தார். அதன் பிறகு நான் விழிப்பு கொண்டு மூன்றடி எடுத்துவைத்து குனிந்து அவர் காலடியைத் தொட்டு தலைசூடி மீண்டும் "வணங்குகிறேன், அன்னையே" என்றேன். என் தலைமேல் கைவைத்து வாழ்த்தி அமர்க என்று கைகாட்டினார்.

நான் அமர்ந்ததும் "கிருதவர்மன் வந்ததை அறிந்தேன்" என்றார். முகமன்களோ பிற சொற்களோ இல்லை. ஆகவே அதை எவ்வாறு எதிர்கொள்வது என்று தெரியாமல் தத்தளித்து "ஆம், அவர் இங்குதான் இருக்கிறார்" என்று சொன்னேன். "அவரை நான் சந்திக்கவேண்டும்" என்று அன்னை சொன்னார். "நான் ஒருக்குகிறேன்" என்றேன். "இங்கு வேண்டியதில்லை. அங்கு கரையில் ஏதேனும் ஒரு சிறு மண்டபத்திற்கு அவரை வரச்சொல். அவரிடம் நான் ஒரு சொல் உரைக்கவேண்டும்" என்றார். "ஆணை" என்றேன். "நன்று, இது மந்தணமாக அமைக!" என்றபின் அவர் எழுந்துகொண்டார்.

நான் "அன்னையே" என்றேன். அவர் துவாரகையின் நிலைமை பற்றி ஏதாவது பேசுவார் என்று எதிர்பார்த்தேன். மைந்தர்களைப்பற்றி உசாவுவார் என்றும் மைந்தர் மைந்தர்களைப்பற்றி ஏதேனும் அவர் கேட்பார் என்றுகூட எண்ணினேன். அவர் கேட்கும் வினாக்களுக்குரிய விடைகளை நான் முன்னரே ஒருக்கியிருந்தேன். ஒரு சில சொற்களில் அவ்வுரையாடல் முடிந்தது எனக்கு ஏமாற்றமாக இருந்தது. ஆனால் அன்னை அதற்கு அப்பாற்பட்டவராக இருந்தார். நான் "மைந்தர் எண்பதின்மரும் இப்போது ஒன்றாக இருக்கிறோம். அனைவரும் இணைந்து மூத்தவர் ஃபானுவுக்கு முடிசூட்ட

முடிவெடுத்திருக்கிறோம். அதற்கு அனைவரையும் அழைப்பதற்காக சென்று கொண்டிருக்கிறோம்" என்றேன்.

அன்னையின் முகத்தில் எந்த உணர்வு மாறுபாடும் தெரியவில்லை. தலையை அசைக்கவோ அச்சொற்களை உள்வாங்கியதாகக் காட்டவோ கூட இல்லை. மீண்டும் நான் "மூத்தவர் ஃபானு முடிசூட இருக்கிறார். அஸ்தினபுரியின் ஆதரவு நமக்கிருக்கிறது. எண்பதின்மரும் ஒற்றுமையுடன் நின்றால் துவாரகை பெருவல்லமையுடன் எழும் என்கிறார்கள். கிருதவர்மனும் சாத்யகியும் இணைந்து நம்முடன் இருக்கிறார்கள். அன்னையே, நாம் எண்ணியதனைத்தும் நிறைவேறவிருக்கிறது" என்றேன். அன்னை அதற்கும் எந்த எதிர்வினையும் காட்டவில்லை. அவர் விலகிச்சென்ற பின்னரும் பார்த்தது அன்னையைத்தானா என்ன நிகழ்ந்தது என்று தெரியாமல் நான் அங்கே அமர்ந்திருந்தேன்.

கிருதவர்மனிடம் நானே சென்று அன்னையின் அழைப்பைப் பற்றி சொன்னேன். கிருதவர்மன் புலரியில் எழுந்து கதிர் நோக்கி அமர்ந்திருந்தபொழுது நான் அவரை காணச் சென்றேன். என் வருகையை அறிவித்த ஏவலன் உள்ளே செல்லும்படி கைகாட்டினான். உப்பரிகையில் கால் மடித்து கண்மூடி ஊழ்கத்திலென இளவெயிலில் அவர் அமர்ந்திருந்தார். தொலைவில் கடல்அலைகள் வெயிலொளியில் கொப்பளித்துக்கொண்டிருந்தன. அதன் ஒளியலைகள் உப்பரிகையின் பளிங்குச் சுவர்களில் நெளிந்தன. அங்கு அமர்ந்திருந்த கிருதவர்மன் ஓர் ஓவியம்போல் ஆகிவிட்டிருந்தார். தொன்மையான ஓர் ஓவியம் காலத்தால் பெரும்பகுதி உதிர்ந்து உருவழிந்துவிட்டிருந்தது.

நான் தலைவணங்கி "வணங்குகிறேன், தந்தையே" என்றேன். அவர் விழி திறந்து அமர்க என்று கைகாட்டி "கூறுக!" என்றார். "அன்னை தங்களை சந்திக்க விழைகிறார்" என்றேன். அவர் அதை முதலில் உள்வாங்கிக்கொள்ளவில்லை. ஒருகணத்திற்குப் பின் "யார்?" என்று கேட்டார். "அன்னை சத்யபாமை" என்றேன். "அவர் நோன்பில் இருப்பதாக அல்லவா கேள்விப்பட்டேன்?" என்றார். "ஆம், ஆனால் இன்று புலரியில் அவர் தன்னை வந்து சந்திக்கும்படி என்னை அழைத்திருந்தார். ஆகவே நான் கிளம்பிச்சென்றேன்" என்றேன். ஏன் அத்தனை கூர்மையாக, முகமன்கள் இல்லாமல் சொல்கிறேன்? ஏனென்றால் அவ்வண்ணம் அன்னை என்னிடம் அதைப்பற்றி சொல்லியிருந்தார். அந்த உணர்வு என்னையறியாமலேயே நீடிக்கிறது.

கிருதவர்மன் "என்ன கூறினார்?" என்று கேட்டார். "அவர் எதையும் உசாவவில்லை. என்ன நிகழ்கிறது என்று கேட்பாரென்றும் குறைந்தது மைந்தரின் நலம் உசாவுவார் என்றும் நான் எதிர்பார்த்தேன். அவர் தங்களை பார்க்கவேண்டும் என்பதற்கப்பால் எதுவும் கூறவில்லை." கிருதவர்மன் "எதற்கென்று கூறினாரா?" என்று கேட்டார். "இல்லை. தன் நோன்பிடத்திற்கு வெளியே ஓர் இடம் ஒருக்கும்படியும், தங்களை அங்கு அழைத்துவரும்படியும் மட்டும்தான் கூறினார்" என்றேன். கிருதவர்மன் "நன்று" என்றார். பிறகு நீள்மூச்செறிந்து "நெடுநாட்களாகிறது" என்றார். "ஆம்" என்றேன்.

சட்டென்று அவர் உரக்க நகைத்து "அறுதியாகப் பார்த்தது இந்நகரின் தெருக்களூடாக கைகள் கட்டப்பட்டு நான் இழுத்துவரப்படுகையில். இந்த உப்பரிகை மேடையிலிருந்து

அவள் என்னை பார்த்தாள்" என்றார். ஒருமையில் அவர் அவ்வாறு சொன்னது என் உள்ளத்தை திடுக்கிடச் செய்தது. முதன்முறையாக என் அன்னைமேல் பெருங்காதல் கொண்டிருந்த ஒருவர், அதை அப்போதும் பேணி வந்த ஒருவர் என்ற எண்ணம் எனக்கு ஏற்பட்டது. அவருடைய வஞ்சம் அனைத்திற்கும் அடியில் வேரென்றிருப்பது அந்தக் காதல். அக்காதல் துவாரகை அரண்மனை முற்றத்தில் சிறுமைப்பட்ட தருணமே அவரை கசப்புநிறைந்தவராக ஆக்கியது. துவாரகையின் அரண்மனை முற்றத்தை மீண்டும் வந்தடைந்த கணமே அவர் அதிலிருந்து விடுபட்டுவிட்டார் என அறிந்தேன்.

தந்தையே, முதற்கணம் ஒரு பெரிய அலையென கசப்பு எழுந்து என்னை அறைந்தது. என் கைகால்களை நடுங்கச்செய்தது. விரல்களை மடித்து முறுக்கி உள்ளத்தை கட்டுப்படுத்திக்கொண்டேன். அவர் "அந்த இறுதிக் கணத்து முகத்தோற்றம் இத்தனை ஆண்டுகளில் என் முன் அவ்வண்ணமே நீடிக்கிறது. அது ஒரு தெய்வ உருபோல என்னை ஆள்கிறது. இவ்வண்ணம் செலுத்துகிறது" என்றார். எத்தனை நெடுங்காலம் என்ற எண்ணம் எனக்கு ஏற்பட்டது. அத்தனை காலம் ஒரு பெண்ணின் முகத்தை மட்டும் உளம்தேக்கி ஒருவர் வாழமுடியுமா? கதைகளில் அவ்வாறு கேள்விப்பட்டிருக்கிறோம். அவ்வண்ணம் இயல்வதென்றால் அது ஒரு தெய்வ வெளிப்பாடா என்ன?

நான் அவரை நோக்கிக்கொண்டிருந்தேன். என்னை அறியாமலேயே அவராக நான் உருமாறிக்கொண்டிருந்தேன். அங்கிருந்த அனைத்தையும் நோக்கியபோது அதுவரை இருந்த அனைத்தும் உருமாற ஒருகணத்தில் என் அகம் இனிமை கொண்டது. அவரையும் அன்னையையும் நான் விரும்பினேன்.

அத்தருணத்திற்காக நான் உளநிறைவு கொண்டேன். ஆம், பெருங்காதல் அரிதாக ஏதோ புவியில் நிகழ்கிறது. ஆணும் பெண்ணும் அறிவதும் இணைவதும் நிகழ்ந்துகொண்டேதான் இருக்கிறது. ஒருவர் ஒரு பெண்ணை விரும்பக்கூடும். இழந்தபின் மேலும் விரும்பக்கூடும். அவள் முன் சிறுமை கொண்டபின் மேலும் மேலும் விரும்பக்கூடும். ஆனால் அவள் பொருட்டு பெருவஞ்சம் கொண்டு, வாழ்வை அனலாக்குவது ஒரு தவம். தவம் தெய்வங்களை படைக்கிறது.

கிருதவர்மன் எழுந்து கொண்டு "செல்வோம்" என்றார். "இல்லை, தாங்கள் ஒருங்கி..." என்று நான் சொல்ல "ஒருங்கவேண்டியதில்லை. இவ்வண்ணமே செல்வோம். இது முறைசார் சந்திப்பு அல்ல அல்லவா?" என்றார். "ஆம்" என்றேன். அவரை அழைத்தபடி அரண்மனையின் இடைநாழியினூடாகச் சென்றேன். அன்னையின் நோன்புமாடத்திலிருந்து சற்று தள்ளி கடலோரமாக அமைந்திருந்தது காவலர்தலைவனின் சிறு கல்மாளிகை. அங்கு சென்றபின் அன்னையை அழைத்துவரும்படி ஏவலனிடம் ஆணையிட்டேன்.

நாங்கள் அந்தக் கல்மண்டபத்திற்குச் சென்று அமர்ந்திருந்தோம். கீழே நெடுந்தொலைவில் துவாரகையின் துறைமுகம் தெரிந்தது. அங்கே மூன்று கலங்கள் கடலில் மெல்ல உலைந்துகொண்டிருந்தன. அவற்றின் கொடிகள் சிறகுகள் என பறந்துகொண்டிருந்தன. விழி தொடும் தொலைவு வரை மிக மெல்ல அசைந்துகொண்டிருந்தது கடல். கடலை அவ்வண்ணம் மெல்ல நெளியச் செய்யும் அதே காற்று கொடியை கிழிந்துவிடும்போல் துடிக்கச்செய்கிறது என்று எண்ணிக்கொண்டேன். கடலலைகளை நெடுந்தொலைவில் இருந்து பார்க்கையில் அவை எழுவது போலும் அணுகுவது

போலும் தோன்றுவதில்லை. அவை சற்றே உருகி நெளியும் கற்பரப்புபோல தோன்றுகின்றன. மெல்ல உருமாறிக்கொண்டே இருக்கின்றன. அவற்றின்மேல் வெண்நுரை வளையங்கள் மட்டும் தோன்றித் தோன்றி மறைகின்றன.

கடலை நெடுந்தொலைவிலிருந்து நோக்கிக்கொண்டிருப்பது உள்ளத்தை விரியச் செய்வது, தன்னிலையை சிறுமையாக்குவது. இந்திரப்பிரஸ்தத்திலோ அஸ்தினபுரியிலோ இல்லாத ஒன்று கடல். துவாரகையில் ஒவ்வொரு நாளும் குடிகளில் அனைவருமே கடலை பார்க்க முடியும். ஆனால் கடல் எவருக்கும் அவர்களின் தன்னிலையை உணர்த்தவில்லை. எவரையும் உள்ளத்தால் எளியவராக்கவில்லை. நானே கடலை அரிதாகத்தான் அப்படி பார்த்திருக்கிறேன்.

அன்னை வருகிறார் என்று ஏவலன் அறிவித்தபோது நான் எழுந்து தலைவணங்கி "நான் இங்கு இருப்பது உகந்ததல்ல. தங்கள் சந்திப்பு நிகழட்டும்" என்றேன். கிருதவர்மன் கைகாட்டி "அல்ல, நீ இருந்தாகவேண்டும்" என்றார். "இல்லை" என்று நான் சொல்ல "அல்ல. இத்தருணத்தில் மைந்தன் உடன் இருந்தாகவேண்டும்" என்றார். அவர் என்ன கூறுகிறார் என்று எனக்கு புரிந்தது. "மைந்தர்கள் உடனின்றி சந்திக்கலாகாது" என்று அவர் மீண்டும் கூறினார். நான் தலைவணங்கி "ஆம்" என்றேன். பின்னர் அந்த அறையிலிருந்து வெளிவந்து அன்னை வருவதற்காக காத்து நின்றேன்.

ஏவலன் ஒருவனும் ஏவற்பெண்டும் தொலைவில் வந்தனர். ஏவலன் கையில் கொம்புடன் முன்னால் வந்தான். ஏவற்பெண்டு கையில் மங்கலத்தாலமொன்றை வைத்திருந்தாள். அதில் சிற்றகல் சுடர் எரிந்தது. புது

மரங்களின் கனிகளும் இருந்தன. அவளுக்குப் பின்னால் அன்னை பெரிய வெண்ணிற ஆடையால் முற்றிலும் உடல் மறைத்து முகம் தாழ்த்தி நடந்து வந்தார். அருகணைந்ததும் ஏவலன் கொம்பை எடுத்து ஊதி "துவாரகையின் பேரரசி சத்யபாமை எழுந்தருள்கை!" என்றான். நான் தலைவணங்கி நின்றேன். மங்கலத்தாலமேந்திய சேடி அறைக்குள் புகுந்து அதை வைத்துவிட்டு வெளியேற ஏவலன் வெளியே நின்றான்.

அன்னை அருகணைந்து என் அருகே வந்து நின்றார். "வருக அன்னையே, தங்களுக்காக காத்திருக்கிறார்!" என்றபடி உள்ளே சென்றேன். அன்னை என்னைத் தொடர்ந்து உள்ளே வந்தார். அன்னை அறைக்குள் நுழைந்ததும் அவர் அன்னை என்றே உணராதவராக திகைத்துப் பார்த்தபடி அமர்ந்திருந்தார் கிருதவர்மன். நான் அவ்விருவரையும் மாறி மாறி பார்த்தபடி அறையில் சாளரத்தோரமாக விலகி நின்றேன். அன்னை தனது வெண்ணிற ஆடையை விலக்கி கைகளில் சரியவிட்டு பீடத்திலிட்டார். அவரது உரு தெரிந்தவுடன் கிருதவர்மன் திடுக்கிட்டு இரு கைகளையும் விரித்தபடி பீடத்திலிருந்து எழுந்தார். அவ்வுடல் நடுங்கத் தொடங்கியது. அன்னையும் கிருதவர்மனின் தோற்றத்தைக் கண்டு உடல் நடுங்கினார்.

இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்தபடி கைகள் அதிர முகம் இழுபட்டு கண்கள் நீர்மை கொண்டு பற்கள் கிட்டித்து அத்தருணத்தில் ஒன்றின் இரு முனைகளென நின்றனர். அத்தருணத்தை அப்போதுதான் முற்றுணர்ந்தேன். இருவரும் உடல் சிதைந்து உருமாறியிருந்தனர். இருவரும் ஒருவரை ஒருவர் இளமைக்குப் பின் கண்டதில்லை. அவர்களுக்குள் வாழ்ந்தவர்கள்தான் இளமைத்தோற்றம் கொண்டிருந்தனர். உடல்கள் பொருளிழந்துவிட்டன, ஆனால்

அவ்வுடல்களினூடாகவே அவர்கள் ஒருவரோடொருவர் பேசிக்கொள்ளவேண்டியிருந்தது.

கிருதவர்மன்தான் முதலில் தன்னுணர்வு கொண்டார். "அரசி" என்றார். அன்னை "ஆம்" என்றார். "தாங்கள்... தங்கள் உரு..." என்றார். அன்னை "மறையும் நேரம்" என்றார். பின்னர் "போரில் அனல்பட்டதாக அறிந்தேன். ஆனால்..." என்றார். அப்போதுதான் தன்னை உணர்ந்து "ஆம், நானும் உதிரும் பொழுது" என்றார் கிருதவர்மன். அன்னை மெல்ல பீடத்தில் அமர அவரும் அமர்ந்துகொண்டார். கிருதவர்மன் "அரசன் என நகர் நுழைந்தேன். என்னை யாதவப் பெருங்குடியே திரண்டு வரவேற்றது" என்றார். சிரிப்பில் உதடு வளைய "ஆனால் இவ்வண்ணமல்ல நான் நகர் நுழையவேண்டும் என்று எண்ணியிருந்தது" என்றார்.

"எண்ணியது நிகழ்வதில்லை" என்று அன்னை சொன்னார். "ஆம், எண்ணியது நிகழ்வதில்லை. எண்ணாதது நிகழ்ந்தாலும் நன்றே நிகழ்ந்தது. மைந்தரை ஒருங்கிணைத்திருக்கிறேன்" என்றார் கிருதவர்மன். "அறிந்தேன்" என்று அன்னை சொன்னார். ஆனால் அவரிடம் எந்த உவகையும் நிறைவும் வெளிப்படவில்லை. கிருதவர்மன் அதை உணரவில்லை. அவர் தன்னுள் ததும்பிக்கொண்டிருந்தார். "எவ்வகையிலோ இங்கு இளைய யாதவரை நான் நடிக்கிறேன். அது அளிக்கும் நிறைவும் பேரின்பமும் என்னை பேருருக்கொள்ளச் செய்கின்றன" என்றார்.

அன்னை நிமிர்ந்து பார்த்தார். இருவரும் பார்த்தனர். அன்னை விழிநீர் உகுத்து அழத்தொடங்கினார். அவரை நோக்கிக்கொண்டிருந்த கிருதவர்மனும் அழுதார். இருவரும் அங்கு அமர்ந்து அவ்வாறு சொல்லின்றி விழிநீர் உகுத்துக்கொண்டிருப்பதை பார்த்துக்கொண்டு நான்

நின்றிருந்தேன். அவர்களுக்கு இடையே கூறுவதற்கு எதுவும் இருக்கவில்லை. இணைந்து அமர்ந்து அவ்வாறு அழுவதற்கு ஒரு தருணம் மட்டுமே அவர்கள் எதிர்பார்த்திருந்தது. அது அவர்களை நிறைவுறச் செய்தது. நெடுந்தொலைவு அலைந்து சென்ற ஒரு கோடு வட்டமென திரும்பி வந்து சந்திப்பதுபோல. நெடுங்காலம் பல ஊர்கள் பல நிலங்கள் சென்ற ஒரு கோடு. விலகிச்செல்கிறது என்றும் ஒருபோதும் மீண்டு வராதென்றும் எண்ண வைத்த ஒரு கோடு.

அவர்கள் அழுதுகொண்டிருக்கும்போது அங்கிருப்பது ஒரு ஒவ்வாமையை அளித்தது. ஆனால் அங்கிருந்து நான் விலகவேண்டும் என்றும் தோன்றவில்லை. உடலில் சிறு அசைவு எழுந்தாலும் அது அவர்களை கலைத்துவிடுமென்று தோன்றியது. அவர்கள் முற்றும் அழுது ஓயவேண்டும். ஒரு துளி எஞ்சினாலும் அது மீண்டும் வளரும். இத்தருணத்துடன் அவர்கள் ஒருவரை ஒருவர் நிறைவு செய்யவேண்டும். ஒருவரிலிருந்து ஒருவர் முற்றாக அகலவேண்டும். அந்த எடை எவ்வாறிருக்கும்? வளர்ந்து வளர்ந்து ஒருவரை நசுக்கி கீழே வீழ்த்தும் அளவுக்கு பெரிதாகும். வேரொடு மரத்தை சாய்க்கும் பெருங்கனிபோல் என்று சூதர்கள் பாடுவார்களே அதுவா? அன்றி சுருங்கிச் சுருங்கி பொருளற்றதாகி மிகச் சிறு துளியென எஞ்சியிருக்கிறதா? அது உதிர்ந்தபின் எஞ்சிய விடுதலையை அவர்கள் நாடுகிறார்கள்.

அத்தருணத்தை என்னால் புரிந்துகொள்ளவே முடியவில்லை. இருவரும் ஒருவரை ஒருவர் பார்க்கவில்லை. அன்னை தலைகுனிந்து அமர்ந்திருந்தார். கிருதவர்மன் சாளரத்தினூடாக கடலை நோக்கிக்கொண்டிருந்தார். இருவர் கண்களிலும் நீர் வழிந்து மடியிலும் மார்பிலும் சொட்டிக்கொண்டிருந்தது.

நெடுநேரத்திற்குப் பின் ஒரு விசும்பலோசையுடன் அன்னை மேலாடையால் முகத்தை அழுத்தித் துடைத்தார். அவ்வோசை கேட்டு கிருதவர்மனும் திடுக்கிட்டு விழித்துக்கொண்டார். அன்னை எழுந்து தலைவணங்கி "நன்று, நலம் சூழ்க!" என்றார். கிருதவர்மன் "ஆம்" என்றார். அன்னை மறுமொழி கூறாமல் அறையைவிட்டு வெளியேறினார். வெளியே காத்து நின்றிருந்த சேடியுடன் அவர் நடந்து செல்லும் காலடி ஓசை கேட்டது.

அன்னை அகன்றபின் கிருதவர்மன் மார்பில் கைகளைக் கட்டியபடி கடலைப் பார்த்து ஆழ்ந்திருந்தார். அவர் முகம் மலர்ந்திருந்தது. இனிய நினைவில் ஆழ்ந்திருப்பவர்போல. எதையோ எண்ணி எண்ணி உவகை கொள்பவர்போல. தசையுருகி தோல்வெந்து வழண்டிருந்த அந்த முகம் அவ்வினிமையில் அழகாகத் தோன்றியது. கண்களில் இருந்தது முதிரா இளஞ்சிறுவர்களுக்குரிய கனவு. காதல் கொண்ட ஓர் இளைஞன் அங்கு அமர்ந்திருந்தான். தன்னுள் எழும் இனிமையை பல்லாயிரம் நாவுகள் எழுந்து சுவைத்து தான் மகிழ்ந்து அதை சொல்லென்றும் ஆக்காமல் மூழ்கியிருப்பதுபோல.

நான் அவரைப் பார்த்தபடி அமர்ந்திருந்தேன். கலைக்கலாகாது என்ற தன்னுணர்வு இருந்தது. நெடுநேரம் கழித்து அவர் விழிப்பு கொண்டு என்னைப் பார்த்து "கிளம்புவோம்" என்றார். பெருமூச்சுடன் மேலாடையை எடுத்துக்கொண்டு நடந்தார். நான் அவருடன் நடந்தேன். இருவரும் ஒரு சொல்லும் உரையாடிக்கொள்ளவில்லை. கிருதவர்மன் மிக அப்பால் வேறொருவர் போலிருந்தார். வேறொரு காலத்தில் அவர் வாழ அவரது பாவை ஒன்று என்னுடன் இருப்பதாகத் தோன்றியது.

தந்தையே, நான் அந்தத் தருணத்தை மிகமிக ஆழமாக உணர்ந்தேன். அரிதாகவே நாம் நம் முந்தைய தலைமுறையினரின் வாழ்வுக்குள் அத்தனை ஆழமாக செல்லமுடிகிறது. அன்று நிகழ்ந்தது என்ன என்று நான் எவரிடமும் சொல்லவில்லை. எவரும் என்னிடம் கேட்கவுமில்லை, எனவே எவரும் அறிந்திருக்கவில்லை என்றே எண்ணினேன். முற்றிலும் எதிர்பாராத இடத்திலிருந்து அந்தச் சொல் எழுந்தபோது நான் திகைத்துவிட்டேன். ருக்மி என்னை நோக்கி புன்னகைத்து "அத்தருணத்தில் நீங்கள் உடனிருந்தீர்கள்" என்றார். நான் "ஆம்" என்றேன். "அங்கே ஒரு சொல்லும் உரையாடப்படாவிட்டாலும் அது அந்தகர் குலத்து வீரர் ஒருவர் அந்தகக் குலத்து அரசிக்கு அளித்த சொல்லுறுதி" என்றார் ருக்மி.

# கல்பொருசிறுநுரை - 41

**பகுதி நான்கு : அலைமீள்கை – 24**

தந்தையே, நான் அந்தத் தருணத்திற்காக எவ்வகையிலும் ஒருங்கியிருக்கவில்லை. நுண்ணிய சூழ்ச்சிகளை ஒருக்கி, சொல்தொகுத்துக் கொண்டிருப்பவர்கள் அதைப்போன்ற நேரடியான அடியை எதிர்கொள்ள முடியாது. என்ன மறுமொழி சொல்வதென்று தெரியாமல் தத்தளித்தபோது தோன்றியது, அதை நேரடியாகவே எதிர்கொள்ளவேண்டும் என்று. "எதுவானாலும் அதைப்பற்றி கவலைகொள்ளவேண்டியவர்கள் நாங்கள் எண்பதின்மர்.

எங்களுக்குள் வேறுபாடென ஏதுமில்லை. இப்போது அவ்வேறுபாட்டைச் சொல்ல முற்படுபவர் எங்களுக்குள் பிரிவை உருவாக்க எண்ணுபவர் என்றே பொருள்படுவர்" என்றேன்.

"நான் என் மகள்களை அங்கே அரசியராக அனுப்பியிருக்கிறேன்" என்று ருக்மி சொன்னார். "அவர்களின் நலனை நான் நோக்கவேண்டும். அத்துடன் என் மருகர்களின் நலனையும் நாடவேண்டும். அனைத்திற்கும் மேலாக என் நாட்டுநலனையும் கருத்தில் கொள்ளவேண்டும்." அவரால் எளிய நேரடித்தாக்குதல்களை எளிதாக எதிர்கொள்ளமுடியும் என்று தெரிந்தது. ஆகவே எதிரியை எளிய நேரடிச் சொல்லாடலுக்கு இழுக்கிறார். அவரை நான் என் வழக்கமான சொற்பெருக்கால் திணறச் செய்திருக்கவேண்டும். ஆனால் நெடுந்தொலைவு வந்துவிட்டேன். மேலும் செய்வதற்கொன்றும் இல்லை.

"நான் கூறுவது இதுதான், ருக்மிணியின் மைந்தர்களுக்கு, குறிப்பாக பிரத்யும்னனுக்கு, அவர்களுக்கென தனி நிலமோ பிறிதொன்றோ சொல்லுறுதி அளிக்கப்பட்டுள்ளதா?" என்றார் ருக்மி. "அளிக்கப்பட்டுள்ளது. ஆனால் அது நாங்கள் எண்பதின்மரும் எங்களுக்குள் முடிவெடுத்து பகிர்ந்துகொள்வது, அதில் பிறர் இடம்பெற வேண்டியதில்லை" என்றேன். சில கணங்களுக்குப் பின் "இது பிரத்யும்னனின் சொல்லும்கூட என்று என்னால் எப்படி நம்ப முடியும்?" என்றார். நான் மறுமொழி சொல்வதற்குள் "பிரத்யும்னனிடமிருந்து எனக்கு ஒரு நேரடிச்சொல் வேண்டும்" என்றார்.

அதை நான் முன்னரே கணித்திருந்தேன் என்பது எனக்கே என்னைப்பற்றிய நிறைவை அளித்தது. "விதர்ப்பரே, நான் பிரத்யும்னனின் சொல்லுடன்தான் இங்கு வந்திருக்கிறேன்"

என்றபின் எனது கணையாழியை எடுத்துக் காட்டினேன். அவர் அதை வாங்கி பார்த்தார். "ஆம், இது ருக்மிணியின் கணையாழி" என்றார். "சுதேஷ்ணனிடமிருந்து எனக்கு கிடைத்தது, அவருக்கான தனிமுத்திரை அந்த வைரத்திற்குள்ளேயே பொறிக்கப்பட்டுள்ளது. சுதேஷ்ணன் இச்சொல்லை உரைக்கும் உரிமையை அளித்து என்னை அனுப்பியிருக்கிறார். முடிசூட்டிக்கொண்ட பின்னர் பிரத்யும்னனுக்கு தென்னிலத்தை முழுதாக அளிப்பதாக ஃபானு உறுதி அளித்திருக்கிறார். ஆகவே ஃபானுவுக்கு தன் முற்றாதரவை பிரத்யும்னன் அளிக்கிறார்" என்றேன். "தென்னிலமெனில்?" என்றார். "விதர்ப்பமும் அவந்தியும் உட்பட அனைத்து நிலங்களையும் ஆள்பவராக பிரத்யும்னன் மாறவிருக்கிறார்" என்று நான் சொன்னேன்.

ருக்மி திகைத்தவர் போலிருந்தார். என்னிடம் எதையோ பேச விரும்புபவர்போல. அவருடைய முகம் பதற்றத்தை காட்டிக்கொண்டிருந்தது. குழம்பியவர்போல தத்தளிப்பவர்போல. கூரிய அறிவுத்திறன் கொண்டவரல்ல என்று நான் முன்னரே அறிந்திருந்தேன். ஆகவே அவருடைய அந்தத் தத்தளிப்பு அரசியல் சூழ்ச்சியினால் அல்ல, அவரால் ஆளமுடியாத ஒன்றை தொட்டுவிட்டதனால் என்று தோன்றியது. கண்கள் சுருக்கி தாடியில் விரலோட்டியபடி "இந்தக் கணையாழி தங்களுக்கு எப்போது தரப்பட்டது?" என்றார். நான் ஒருகணம் தயங்கி "கிளம்பும்போது" என்றேன். "கிளம்பும்போதென்றால்?" என்றார்.

"துவாரகையிலிருந்து இங்கு வருவதற்காக நான் கிளம்பிக்கொண்டிருந்தேன். அப்போது பிரத்யும்னன் என்னை சந்திப்பதற்காக தன் ஏவலனை அனுப்பியிருந்தார். ஏவலனுடன் நான் சென்றபோது அங்கு தனியறையில் இருந்தவர்

சுதேஷ்ணன். அவரிடம் தலைவணங்கி இப்பயணத்தை நான் செய்யவிருப்பதாக சொன்னேன். அவர் மாதுலர் ருக்மி நேரில் கேட்கக்கூடும், மூத்தவர் ஃபானுவை அரசுசூட முடிவெடுத்திருப்பது உண்மையா என்று. அவரிடம் நாங்கள் ஏற்கெனவே விரிவாக பேசியிருப்பதனால் அத்தனை எளிதாக இச்செய்தியை அவர் நம்பியிருக்க வாய்ப்பில்லை என்றார். குழம்பிய நிலையில் இருப்பார். பொதுவாக உச்சகணங்களில் திரிபுகளும் மிகும் என்பதனால் எதையும் ஏற்றுக்கொள்ளாதிருப்பதே நன்று என்று ஷத்ரியர் எண்ணுவதுண்டு என்றார்" என்று நான் சொன்னேன்.

சுதேஷ்ணன் கூறும் நிலையை நான் புரிந்துகொண்டேன். "ஆனால் நாம் அவையில் பேசியதும் எண்பதின்மரும் கூடி முடிவெடுத்ததும் எவ்வண்ணமோ ஒற்றர்களினூடாக அவருக்கு தெரிந்திருக்க வாய்ப்புள்ளது" என்றேன். "ஆனால் அப்போதுகூட அது நாங்கள் ஏதேனும் அரசியல் சூழ்ச்சி கருதி அவ்வாறு நடித்துக்கொண்டிருக்கலாம் என்றே அவர் எண்ணுவார். ஏனெனில் நாங்கள் விரிவான படைநகர்வையே திட்டமிட்டிருந்தோம். ஓரிரு நாட்களுக்குள் அவந்தியின் படைகளுடன் துவாரகைக்குள் வந்து முடிகொண்டு மூத்தவர் பிரத்யும்னனை அரசணையச் செய்ய வாய்ப்புண்டென்றே எண்ணியிருந்தோம்" என்றார் சுதேஷ்ணன்.

அவர் என்ன சொல்ல வருகிறார் என்று எனக்குத் தெரியவில்லை. நான் அவர் முகத்தை பார்த்துக்கொண்டிருந்தேன். "ஆகவே இது அறுதி முடிவுதான் என்பதை மாதுலர் ருக்மிக்கு உறுதியாக சொல்ல வேண்டியிருக்கிறது. அவர் உன்னிடம் கேட்கக்கூடியது ஒன்றாகவே இருக்கும். படைகள் இங்கு இதற்கு மேலே

இருக்கவேண்டுமா திரும்பிச்செல்ல வேண்டுமா என்று. நாம் அதற்கான சொல்லையே அவருக்கு உரைக்கவேண்டும்" என்றார் சுதேஷ்ணன். "நான் என்ன சொல்லவேண்டும், மூத்தவரே?" என்று அவரிடம் கேட்டேன்.

"விதர்ப்பத்தின் படைகளுடன் உடனடியாக திரும்பிச்செல்லவேண்டும் என்று அவரிடம் சொன்னால் அது ஏதோ சூழ்ச்சி என்றே கருதப்படும். படைகள் அங்கிருக்கட்டும். ஃபானு துவாரகையில் முடிசூட்டிக்கொண்ட பின்னர் படிப்படியாக படைகள் அங்கிருந்து தெற்கு நோக்கி நகர்ந்தால் போதும். அங்கு படைகள் இருப்பது ஒருவகையில் துவாரகைக்கு நன்றும் கூட. ஃபானு முடிசூட்டிக்கொண்டதை ஒவ்வாத பிற ஷத்ரியர்கள் எவரும் துவாரகைமேல் படைகொண்டு வருவதைப்பற்றி எண்ணாமலிருக்கக் கூடும்" என்றார் சுதேஷ்ணன்.

"ஆம்" என்று நான் சொன்னேன். சுதேஷ்ணன் "மாதுலர் ருக்மி உன்னிடம் ஏதேனும் சான்று கேட்கக்கூடும்" என்றார். "ஆம், அதற்காகவே நான் முயன்றேன். ஓர் ஓலை எனக்குக் கிடைத்தால் நன்று" என்று நான் சொன்னேன். சுதேஷ்ணன் "ஓலை அரசாணைப்படி எழுதப்படுவது. முறையான அரசாணை பிறப்பிக்கப்படும் வரை ஃபானு அன்றி வேறொருவர் ஓலை எழுதுவதில் பொருளில்லை. பிரத்யும்னனிடம் ஓலை வாங்கலாம். ஆனால் அது தனிப்பட்ட ஓலையாக அமையும். எதன்பொருட்டு என்றாலும் ஃபானுவை அரசராக்க முடிவெடுத்த பின்னர் அவரை கலந்துகொள்ளாமல் பிரத்யும்னன் தன்னுடைய மாதுலருக்கு அவ்வாறு ஒரு ஓலை அனுப்புவது முறையா என்றும் தெரியவில்லை" என்றார்.

அதன் பின்னர் இந்த கணையாழியை நீட்டினார். "ஆகவே இந்தக் கணையாழியை உனக்கு அளிக்கிறேன். இதை மாதுலரிடம் காட்டுக! இது நெடுங்காலம் முன் அவரால் எனக்கு அளிக்கப்பட்டது. இதைப் பார்த்ததும் அவர் என்னை அடையாளம் கண்டுகொள்வார். உன் சொற்களுக்கு மதிப்பு வரும். என் சொற்களே உன்னுடையவை என்று அவர் நம்ப ஏதுவாகும்" என்றார். அவ்வாறுதான் இதை பெற்றேன் என்றேன். சீராக சொல்லிவிட்டேன், ஆனால் மிக எளிமையான ஒரு காட்சியாக அதை சொன்னேன். ருக்மியைப் போன்றவர்களுக்கு விரிவாக ஆனால் எளிமையாக சொல்லவேண்டும். நாம் பேசும்போதே அவர்கள் தங்களுக்குள் எண்ணம் சூழ்ந்துகொண்டும் இருப்பார்கள்.

பெருமூச்சுடன் "உங்களிடம் எப்படி கூறுவதென்று தெரியவில்லை. ஆனால் இந்தக் கணையாழிக்குப் பிறகு நம்பாமல் தயங்குவதிலும் பொருளில்லை. எதையாவது முடிவுசெய்தாக வேண்டும்" என்று ருக்மி சொன்னார். "யாதவ மைந்தரே, பிரத்யும்னனின் தூதரென ஒருவர் முன்னரே இங்கு வந்திருக்கிறார்." என் உள்ளம் அதிர்ந்தாலும் நான் அதை அடக்கிக்கொண்டேன். "எவர்?" என்று நான் கேட்டேன். என் உள்ளம் படபடப்பதை விழிகள் காட்டின. ஆனால் அதை காணும் அளவுக்கு ருக்மி கூரியவர் அல்ல. "ருக்மிணியின் மைந்தரில் இளையவர், என் மகளை மணந்தவர்" என்றபின் "அவரை தாங்கள் சந்திக்கலாம்" என்று திரும்பி அப்பால் நின்ற ஏவலனை நோக்கி தாழ்ந்த குரலில் ஆணையிட்டார்.

அவன் தலைவணங்கி வெளியே சென்றான். அத்தருணத்தில் நான் என்னை மீண்டும் தொகுத்துக்கொள்ளத் தொடங்கினேன். பிரத்யும்னனிடமிருந்து எவ்வாறு ஒரு தூது வரமுடியும்?

இரண்டு வாய்ப்புதான் உள்ளது. ஒன்று பிரத்யும்னனே ஃபானுவின் தலைமையை உள்ளூர ஏற்காமல் அன்று உண்டாட்டு அவையில் நடித்திருக்கலாம். அச்செய்தியை ருக்மியிடம் கூறுவதற்காக தன் இளையோரில் எவரையாவது எவருக்கும் தெரியாமல் இங்கு அனுப்பியிருக்கலாம். அல்லது பிரத்யும்னனின் தம்பிகளில் ஒருவர் தானாக முடிவெடுத்து இங்கு வந்திருக்கலாம். அன்றி பிரத்யும்னனின் தம்பியரில் ஒருசிலர் கூட்டமைவாக முடிவெடுத்து முரண்கொண்டிருக்கலாம். ஆம், அவ்வாறுதான் வாய்ப்பு.

ஆனால் எவருடைய கூட்டமைப்பு அது? எதன் பொருட்டு அங்கு வந்திருக்கிறார்கள்? என் உள்ளம் தொட்டுத் தொட்டுத் தவித்து இறுதி முடிவுக்கே வந்தது. அது பிரத்யும்னனுக்கு எதிரான ஒரு சூழ்ச்சிதான். அவர் என்ன சொல்லியிருக்கக் கூடும் என்பதை மீண்டும் தொகுத்துக்கொண்டேன். 'பிரத்யும்னன் ஃபானுவை ஏற்றுக்கொண்டால்கூட நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. நாங்கள் ஃபானுவுக்கு எதிராக முடிசூடி அமர விழைகிறோம். அதற்கு ருக்மியின் உதவி கிடைத்தால் நன்று.' ஆம், அதைத்தான் கூறவிருக்கிறார்கள், பிறிதொன்றல்ல. அது ஒரு சூழ்ச்சி. அதில் நான் எடுக்கவேண்டிய நிலையே இப்போது முன் நிற்கிறது.

நான் உறுதி கொண்டபோது அவைக்குள் இளையவன் விசாரு வந்தான். என்னைப் பார்த்ததும் குழம்பியபடி ருக்மிக்கும் எனக்கும் தலைவணங்கினான். "அமர்க!" என்று அவர் கூறியதும் என் முன்னால் இருந்த பீடத்தில் அமர்ந்துகொண்டான். ருக்மி "இப்போது இரண்டு தூதுகள் வந்துள்ளன. ஒருவர் வந்தது பிறிதொருவருக்கு தெரியவில்லை என்று எண்ணுகின்றேன்" என்றார். "ஆம், நான் வருவது அவனுக்கு தெரியும். எவர்

சொல்லுடன் என்று தெரியாது" என்றேன். "நேற்று உண்டாட்டறையில் எடுக்கப்பட்ட முடிவின்படி நான் வந்தேன். ஆனால் என் நோக்கம் வேறு. இவர் பிறிதொரு தனி முடிவின்படி வந்திருக்கிறார் போலும்" என்றேன். அவன் ஒன்றும் சொல்லவில்லை. அவன் உடல் பதறிக்கொண்டிருந்தது.

"உங்கள் தூதுகள் முரண்படுகின்றன. என்னை குழப்புவது அதுதான்" என்றார் ருக்மி. அத்தருணத்தில் அதை கடப்பதற்கான சூழ்ச்சியை என் உள்ளம் சென்றடைந்தது. ஒரு தெய்வம்போல எழுந்து என் முன் நின்றது. முன்னர் நான் எண்ணியிராதது. அக்கணத்தில் அது தோன்றியமையாலேயே நான் அதற்கு முற்றாக ஆட்பட்டேன். மற்றொன்று எண்ணாதவன் ஆனேன். ஆனால் அது அத்தருணத்தை கடப்பதற்கான எளிய சூழ்ச்சி மட்டுமே. மிகமிக எளியது, சிறுமைகொண்டது. ஆனால் அப்போது அது தெரியவில்லை. அவ்வண்ணம் ஓர் எண்ணம் எழுந்ததே ஊழ் என இப்போது எண்ணுகிறேன்.

"விதர்ப்பத்தின் அரசே, இளையோன் வந்ததும் நான் வந்ததும் ஒன்றை சொல்வதற்காகவே. நான் இதுவரை சொன்னது எதன்பொருட்டு நான் முறைமைசார்ந்து அனுப்பப்பட்டுள்ளேனோ அதற்கு. இனிமேல் சொல்லப்போவதே இக்கணையாழியை அளித்தவர் மெய்யாக எனக்கு சொன்னது. அதனால்தான் கணையாழியை அவர் எனக்கு அளித்தார்" என்று நான் சொன்னேன். "துவாரகையின் மணிமுடியை ஷத்ரியர்கள் சூடவேண்டும், அதற்கு தாங்கள் உதவ வேண்டும். ஃபானுவின் முடிசூடுகையை தூய ஷத்ரியக் குருதி கொண்டவர்களாகிய ருக்மிணியின் மைந்தர் ஏற்கவில்லை என்று கூறுவதற்காகவே நான் வந்துள்ளேன். அவனும் அதற்காகவே வந்துள்ளான்."

“அரசே, பிரத்யும்னன் மிகையுணர்வுகளுக்கு ஆட்பட்டு ஃபானுவின் முடிகொள்கையை ஆதரித்திருக்கிறார். அதை அந்த அவையில் பிற மைந்தர் எதிர்க்க முடியவில்லை. ஆனால் அவர்களால் அதை ஏற்க முடியாது. விதர்ப்பம் ஷத்ரியர்களே துவாரகையின் அரியணையில் அமரவேண்டும் என்று எண்ணுமென்றால் சுதேஷ்ணன் அதை ஆதரிப்பார். அவர் தலைமையில் இளையோர் பலர் இருக்கிறார்கள். அவர்களும் தங்களுடன் இருப்பார்கள். அச்செய்தியுடன்தான் இளையோன் இங்கு வந்திருக்க வேண்டும். அச்செய்தியை மறுபடியும் உறுதிப்படுத்தும் கணையாழியை நான் கொண்டு வந்தேன். இருமுனை செய்தி என்று இதை கொள்க! இதற்குள் முரண்பாடு ஏதுமில்லை” என்றேன்.

அத்தருணத்தை மிகச் சிறப்பாகக் கடந்துவிட்டேன் என்ற எண்ணம் எனக்கு ஏற்பட்டது. நானே எனக்குள் புன்னகைத்துக்கொண்டேன். தந்தையே, மதிசூழ்கையில் ஈடுபடுபவர்கள் தங்கள் மதிசூழ்கையைப்பற்றி மகிழத்தொடங்கும்போது பிழை செய்யத் தொடங்குகிறார்கள். ஒவ்வொரு மதிசூழ்கைக்குப் பின்னரும் ஐயமும் குழப்பமும் கொண்டு அவர்கள் பிழைகளை எண்ணி எண்ணி நோக்கி அடையும் ஐயமும் பதற்றமும் பிழைநோக்கும் எஞ்சும் வரை மட்டுமே மதிசூழ்கையாளர்களாக திகழக்கூடும். சற்றே மகிழ்பவர்கள் வைக்கும் அடி பிழைக்கும். அத்தருணத்தில் அவ்வாறு நிகழ்ந்தது.

ருக்மி எழுந்து “ஆனால் இவ்விரு தூதுகளும் மாறுபடுகின்றன. மருகன் விசாரு வந்து என்னிடம் கூறியது எண்பதின்மரும் ஒரே முகம்கொண்டு ஃபானுவை ஆதரிக்கிறார்கள் என்றுதான். ஃபானுவின் தூதராக தாங்கள் வருவீர்கள் என்று அவர்களுக்கு

தெரிந்திருக்கிறது. என் மருகன் வந்து என்னிடம் பேசினாலொழிய ஏற்கமாட்டேன் என்பதற்காக அவனை அனுப்பியிருக்கிறார்கள். எவ்வண்ணம் பிறிதொரு எண்ணத்தை சுதேஷ்ணன் தங்களிடம் சொல்லி அனுப்பியிருக்கிறான்?" என்றார்.

என்னால் ஒருகணம் எதையுமே எண்ண முடியவில்லை. என்ன நிகழ்கிறது என்று தெரியவில்லை. "அந்தத் தூதின் பொருள் எனக்கு புரியவில்லை" என்றேன். அக்கணம் முழுமையாகவே தோற்றேன். ருக்மி "தெளிவாகவே கூறிவிடுகிறேன். துவாரகையின் கருவூலத்திலிருந்து செல்வத்தை என்னிடம் கொண்டு வந்து அளித்திருந்தார்கள் பிரத்யும்னனும் சுதேஷ்ணனும். அப்பொருளைக்கொண்டே நான் படை திரட்டினேன். அப்பொருளுக்கு இணையான பொருளையோ அல்லது அப்பொருளுக்கு இணையான படையையோ துவாரகைக்கு திருப்பி அளித்துவிடவேண்டும் என்று கூறவே விசாரு வந்தான். அது பிறிதொருவர் அறியாத மந்தணம் என்பதனால்தான் இவனை அனுப்பியிருக்கிறார்கள்" என்றார்.

நான் கைகள் தளர்ந்து தொங்க அங்கே நின்றேன். நான் அடைந்த அவை வெற்றிகள் அனைத்தும் அந்த முனைநோக்கி என்னை கொண்டுவந்து சேர்க்கவே என்று அப்போது உணர்ந்தேன். என்னை மீறிய பெருவிசை ஒன்றின் ஆணை அது. என்னை வெல்லச்செய்து, ஆணவம் கொள்ளச்செய்து, மேலும் மேலும் நுண்மை கொள்ள வைத்து அறுதிப்புள்ளியில் சிறு பிழை ஒன்றினூடாக கீழே வீழ்த்தியது அது. மேலே தூக்கி கீழே வீழ்த்த தெய்வங்களுக்கு இருக்கும் விழைவு வியப்பூட்டுவது. அவை மானுடரை வைத்து

விளையாடவில்லை. அவை மானுடர்மேல் வஞ்சம் கொண்டிருக்கின்றன.

அத்தருணத்தில் நான் இயற்றிய பிழை என்ன என்று பின்னர் பலமுறை என் நெஞ்சில் ஓட்டிக்கொண்டே இருந்தேன். ஒவ்வொரு முறையும் ஒன்று தோன்றுகிறது. இன்று இவ்வண்ணம் உணர்கிறேன், என் நாவன்மையில் நான் கொண்ட நம்பிக்கைதான். இப்போது இத்தருணத்தை கடப்போம், இனி எழுவதை எவ்வண்ணமேனும் பேசி வெல்வோம் என்று எண்ணிக்கொண்டேன். மேலும் சில செய்திகளை தெரிந்துகொள்ளவும் பேச்சை தொகுத்துக்கொள்ளவும் எனக்கு பொழுது தேவை, அவ்வளவுதான்.

அந்த எண்ணம்போல் ஆணவம் பிறிதில்லை. நாம் எல்லாவற்றையும் பேசிக்கடந்துவிடலாம் என்று எண்ணுவது மாயை. பேசப்பேச உருமாறாமல் நின்றுகொண்டிருக்கும் சில உண்டு. மலையென எழுந்த மிகப் பெரியவற்றை வென்றிருப்போம். தொடப்படாமல் அணு ஒன்று நம் முன் நின்றிருக்கும். அத்துடன் நாம் ஒரு தருணத்தை கடந்துசெல்ல சொன்ன சொற்கள் முளைத்துப் பெருகி ஒன்று பிறிதொன்றை வளர்த்து பேருருக்கொண்டு பிறிதொரு இடத்தில் நம்மை வழிமறிக்கும். தந்தையே, ருக்மியின் அவையில் நான் அடைந்தது ஊழின் தருணம்.

“பிரத்யும்னனின் இளையோரிடையே ஒரு சாரார் ஃபானுவுக்கு எதிராக கிளம்புகிறார்கள் என்பதை என்னால் நம்ப இயலவில்லை. அவர்கள் பதின்மரும் ஒற்றைக்குரல் என்றுதான் எண்ணிக்கொண்டிருந்தேன்” என்றார் ருக்மி. அப்போது அந்த அவையிலிருந்து வெளியே செல்வதன்றி நான் செய்வதற்கு ஒன்றுமில்லை. நான் “தெளிவாக உரைக்கிறேன்,

அரசே. ஒருவேளை இளையோனுக்கு புரியாமல் இருக்கலாம். மூத்தவர் சுதேஷ்ணன் தான் அரியணை அமரவேண்டும் என்று எண்ணுகிறார். இப்போதல்ல, நெடுங்காலமாகவே அந்த எண்ணம் அவருக்கு உண்டு" என்றேன்.

"அவர் ஃபானுவின் இளையோராகிய எங்களிடம் அதைப்பற்றி பேசியிருக்கிறார். ஃபானுவின் இளையோர்களில் ஒரு சாரார் சுதேஷ்ணன் முடிசூடுவதற்கு ஆதரவாக இருக்கிறார்கள். சுதேஷ்ணன் முடிசூடுவதென்றால் இரண்டாம் பொறுப்பில் என்னை அமர்த்துவதாக எனக்கு சொல்லுறுதி அளித்திருந்தார், ஆகவே நான் அவரை ஆதரித்தேன். நான் சுதேஷ்ணன் தலைமையில் முடிவிழைபவர்களில் ஒருவன். நான் இங்கு வந்தது சுதேஷ்ணனின் தனிப்பட்ட தூதுடன்தான். அரசே, ஷத்ரியர்கள் துவாரகையில் மணிமுடி சூடி அமரவேண்டுமெனில் அதற்கு ஒற்றை வழிதான் உள்ளது, தாங்கள் சுதேஷ்ணனை ஆதரிக்க வேண்டும்" என்று கூறினேன்.

ருக்மி அதை ஏற்பார் என்று எனக்கு தோன்றவில்லை. அவர் இயல்புப்படி மேலும் குழப்பத்தை அடைவார். எவரிடமேனும் மேலும் உசாவி மேலும் குழம்பி எவரேனும் சொல்லும் ஒரு முடிவைத்தான் அவர் எடுப்பார். ஆனால் அந்தத் தருணத்தில் அனைத்தையும் ஒருங்குபடுத்தி ஒரு தரப்பாக மாற்றி கடந்துவர என்னால் இயன்றது. கடந்துவிட்டேன் என்றுதான் எண்ணினேன். ருக்மி "நான் சுதேஷ்ணனின் தூதை கருத்தில் கொள்கிறேன். அவந்தியின் அரசனிடம் பேசுகிறேன். முடிந்தால் சுதேஷ்ணனிடம் பிறிதொருமுறை சென்று உசாவுகிறேன். எளிதில் நான் முடிவெடுக்க இயலாது. ஏனென்றால் பிரத்யும்னனும் எனது மகளை மணந்தவனே" என்றார்.

“ஆம், ஆனால் பிரத்யும்னனுக்குப் பிறகு முடிசூடவிருப்பவர் தங்கள் மகளின் வயிற்றில் உதித்தவர் அல்ல. சம்பராசுரரின் மகளின் வயிற்றில் உதித்த அநிருத்தன் என்பதை மறக்கவேண்டியதில்லை என்று உணர்க!” என்றேன். ருக்மியின் விழிகள் மாறின. அவர் தாடியை உருவியபடி “ஆம், அவ்வெண்ணம் எனக்கும் உண்டு” என்றார். “நீங்கள் அதை எண்ணியே ஆகவேண்டும். பிரத்யும்னன் முடிசூடுவது ஷத்ரியர்கள் தலைமை கொள்வது அல்ல. ஷத்ரியர்களினூடாக அசுரர்கள் குருதி தலைமை கொள்வதுதான்” என்றேன். ருக்மி “ஆம், அதை எண்ணி முடிவெடுப்போம். இத்தூது நிறைவடைந்தது என்று கொள்க!” என்றார்.

அவர் எழுந்து செல்வதை பார்த்தபடி நான் நின்றிருந்தேன். என் உள்ளம் ஓய்ந்து கிடந்தது. ஒரு முடிவை கண்ணருகே கண்டேன். அங்கே நிகழ்ந்த அனைத்தையும் ஒவ்வொன்றாக என்னுள் தொட்டு எடுத்தேன். ஒரு கூரிய குளிர்போல அச்சம் என்னுள் எழுந்தது. என்னை சந்திக்க கணிகர் ஏன் மறுத்தார் என்று உணர்ந்தேன்.

# கல்பொருசிறுநுரை - 42

**பகுதி நான்கு : அலைமீள்கை – 25**

ருக்மியின் அறையிலிருந்து வெளிவந்தோம். இளையவன் விசாரு என்னை தொடர்ந்து வந்தான். அவன் மிகவும் குழம்பிப்போய் இருப்பதை அவன்

உடலசைவுகளிலேயே உணர்ந்தேன். என்னையே நான் வெறுத்து கசந்துகொண்டேன். அவன் மிக மிக எளிமையானவன். ஒரு பெரிய சூழ்ச்சியை அறிவிக்க அவனை அனுப்பமாட்டார்கள். அவனாகவே ஏதும் சொல்லத்தேவையில்லாத, ஆனால் ஓர் ஓலையிலோ ஒற்றனிடமோ அனுப்பமுடியாத ஒரு செய்திக்காகவே அனுப்பியிருப்பார்கள். அதை நான் உணர்ந்திருக்கவேண்டும்.

ஆனால் அத்தருணத்தில் என் உள்ளம் எழுந்து தாவியது. அது ஏன் என்று எண்ணி எண்ணி நானே வகுத்துக்கொண்டிருக்கிறேன். தந்தையே, அது முதன்மையாக அச்சூழலினால் என்று எனக்கு பட்டது. நான் அங்கே களைப்புடன் சென்றேன். முன்னரே எதையும் வகுத்து தொகுத்துக்கொள்ளவில்லை. புதியதாக எழுந்த சூழ்நிலையை என்னால் முழுக்க உணர முடியவில்லை. ஆனால் அது எளிதான ஒன்று, அதை நான் கடந்திருப்பேன். அத்தகைய தருணங்களை கடப்பதற்குரிய தற்கோப்புநிலை என்னுள் எப்போதும் உண்டு.

அதைவிட சிக்கலானது ருக்மியின் இயல்பு. அவர் எளியவர், நேரடியானவர். ஆகவே அச்சூழலை அவர் நான் எண்ணியிராதபடி கொண்டுசென்றார். சற்றேனும் அரசுசூழ்தலை அறிந்த ஒருவர் அவனையும் அவைக்கு அழைத்து இருவரையும் அருகருகே நிறுத்தி எவர் சொன்னது உண்மை என உசாவிக்கொண்டிருக்கமாட்டார். அது ஒரு தந்தை தன் இரு மைந்தரை நிறுத்தி அவர்களில் எவர் பொய்சொன்னார் என ஆராய்வதுபோல் இருந்தது. அதிலிருந்த அப்பட்டமான தன்மையை என்னால் கையாள முடியவில்லை. தந்தையே,

ஆழ்கடலில் நீந்துபவர்கள் முழங்காலளவு நீரில் தடுமாறிவிடக்கூடும்.

ஆனால் அனைத்தையும்விட முதன்மையானது நான் அச்சூழலை மதிப்பிட்டது. பெரிய மருத்துவர்கள் இந்தப் பிழையை செய்வதை கண்டிருக்கிறேன். அவர்கள் மாபெரும் மருத்துவர்கள், இடர்மிகு நோய்களை கையாள்பவர்கள். ஆகவே எளிய நோய்களை அவர்கள் மிகைப்படுத்திக்கொள்வார்கள். எதிரி தனக்கு இணையானவனாக இருக்கவேண்டும் என்ற விழைவால் எளிய எதிரியை தனக்கு இணையான பேருருவனாக எண்ணுவதுபோல. அவ்வண்ணம் அச்சூழலை நான் மதிப்பிட்டேன். என் மதிநுட்பத்தால் கையாளவேண்டிய ஆழ்ந்த தருணமாக.

வெளியே செல்லும்போது நான் கசந்திருந்தேன். என்னையே வெறுத்துக்கொண்டிருந்தேன். அதைவிட கண்ணுக்குத் தெரியாத பெரிய எதிரி ஒன்றை எங்கோ கண்டு அஞ்சிவிட்டிருந்தேன். அது என்னை வெற்றிகள் வழியாக கொண்டுசென்றது. என்னை வீங்க வைத்தது. இத்தருணத்தை உருவாக்கி நொறுங்க வைத்தது. எதையோ அது திட்டமிட்டிருக்கிறது. அது பேரழிவேதான். ஆக்கம் துளித்துளியாக நிகழ்கிறது. ஆக்கத்தில் மானுட ஆற்றலே துலங்கித்தெரிகிறது. வீழ்ச்சியில்தான் ஊழின் பேராற்றல் வெளிப்படுகிறது. ஊழ்தான் தவிர்க்கமுடியாததாக, வெல்லமுடியாததாக, புடவிப்பெருநெறிகளால் இயக்கப்படுவதாக தோன்றுகிறது.

விசாரு என்னிடம் "மூத்தவரே, தாங்கள் தூது வரும் செய்தியை அறிந்தேன். ஆனால் மூத்தவர் சுதேஷ்ணனுக்கும் தங்களுக்குமான உறவை இதுவரை நான் கேள்விப்பட்டதில்லை" என்றான். "உண்மையில் அவையில்

அதை கேள்விப்பட்டபோது நான் திகைத்துவிட்டேன். ஆகவே என்னால் எதுவுமே சொல்ல முடியவில்லை" என்றான். நான் அவனிடம் "உனக்கு அது தெரிந்திருக்க வாய்ப்பில்லை. இது மிக தற்செயலாக இந்த அவையில் வெளிவந்தது. இங்கு நீ இருப்பாய் என்று நான் எதிர்பார்க்கவில்லை. எவ்வகையிலாயினும் இதை நீ அறிந்தது நன்று" என்றேன். "நான் சுதேஷ்ணனிடம் இதை எதிர்பார்க்கவில்லை, நிலைகுலைந்துள்ளேன், மூத்தவரே" என்று அவன் சொன்னான். "இதில் குழம்ப ஏதுமில்லை. நன்றே நிகழும்" என்றேன்.

"அனைத்தும் நன்றாக முடியவிருக்கிறது என எண்ணினேன். ஒவ்வொன்றும் சிக்கலாகப்போவதாக இப்போது தோன்றுகிறது. சுதேஷ்ணன் இவ்வண்ணம் எண்ணுபவரா?" என்றான் விசாரு. "இது அரசுசூழ்தலில் இயல்பான ஒன்று. உகந்த ஒன்றும்கூட. இன்று நாம் இருவருமே சுதேஷ்ணனின் செய்தியுடன் வந்துள்ளோம். விதர்ப்பத்தின் அரசர் நம்மை ஆதரிப்பார் என்றால் சுதேஷ்ணன் வென்று அரியணை அமர்வார். அது எனக்கும் நலம் பயப்பதே" என்றேன். "ஒருவகையில் இயல்பாக நீயும் உள்ளே வந்திருக்கிறாய். சுதேஷ்ணன் உனக்கும் உகந்ததை செய்தாகவேண்டும். அதன்பொருட்டு நீ மகிழ்ச்சி அடையலாம்."

"இல்லை. எவ்வகையிலும் நான் என் மூத்தவர் பிரத்யும்னனுக்கு எதிராக திரும்ப இயலாது. நான் அவருக்கு அணுக்கமான இளையோன். அவரை வழிபடுபவன்" என்றான் விசாரு. "ஆனால் என்னால் நம்பவே முடியவில்லை. என்னைப் போலவே மூத்தவரை வழிபடுபவர் என்றே சுதேஷ்ணனை பற்றி எண்ணியிருந்தேன்." அவன் நிலையழிந்து தலையை அசைத்தான். "ஆனால் உண்மையில் இந்த உளப்பதிவு எனக்கு

இருந்திருக்கிறது என இப்போது உணர்கிறேன். சென்ற சற்றுநேரத்தில் என்னுள் ஏற்கெனவே நிகழ்ந்த நூற்றுக்கணக்கான தருணங்கள் ஓடின. சுதேஷ்ணனின் விழைவையும் ஏமாற்றத்தையும் உண்மை என்று என் அகம் சொல்கிறது."

அது எனக்கு நம்பிக்கையை அளித்தது. அவனுள் துளி ஐயமிருந்தால் போதும், அதை பெருந்தழலாக ஆக்கமுடியும். "சுதேஷ்ணன் தனக்காக இதை செய்யவில்லை. அவருடைய எண்ணம் துவாரகையில் அசுரர் நிலைகொள்ளக்கூடாது என்பதே" என்றேன். "ஆனால் ஃபானு முடிசூட்டிக்கொண்டால் அசுரர் எவ்வண்ணம் ஆளமுடியும்?" என்றான் விசாரு. "பிரத்யும்னனுக்கு தென்னகம் சொல்லளிக்கப்பட்டுள்ளது. ஷத்ரியர் மேல் ஏறி அசுரர் முடிகொள்வதல்லவா அது?" என்றேன். "ஆனால் பிரத்யும்னன் எந்தையின் மைந்தர்" என்று விசாரு சொன்னான். "தன் வடிவாகவே அவர் முன்நிறுத்திய மைந்தர் அவரே."

"ஆம், ஆனால் ஷத்ரியக்குருதி..." என்று நான் தொடங்க "எவருடைய குருதி என்று முடிவெடுக்கும் இடத்தில் நாம் இல்லை. மூத்தவர்கள் எடுக்கும் முடிவுகளை பின்தொடர்பவர்களே நாம். தந்தையின் முடிவை மூத்தவர் எடுக்கிறார். மூத்தவரை தந்தை என எண்ணுபவன் நான்" என்றான். "ஆம், நாம் இதைப்பற்றி பிறகு பேசலாம்" என்று நான் கூறினேன். பிறகு இருவரும் பேசவில்லை. தங்களுக்குள் ஆழ்ந்து நடந்தோம். எங்கள் காலடிகள் ஒலித்து உடன் வந்தன. நம் காலடிகளைக் கேட்கும் தருணங்கள் நம் வாழ்க்கையில் அரிதானவை. அப்போது நாம் அகம் குவிந்திருக்கிறோம்.

என் உள்ளத்தின் விரைவை நானே எண்ணி வியந்துகொண்டிருந்தேன். உள்ளம் விரைவு கொள்கையில் ஆற்றல் குவிகிறது. ஆற்றல் குவிகையில் மேலும் விசை கொள்கிறது. விரைந்து செயல்படுகையிலேயே உள்ளத்தின் அனைத்து கற்பனைத் திறன்களும், சொல்லடுக்குத் திறன்களும் நினைவுத் தொகையும், கனவு ஆழமும் திரள்கின்றன. உருக்கொண்டு எழுந்து கையருகே வருகின்றன, கருவிகளாகின்றன. ஓய்ந்திருக்கையிலேயே உள்ளம் தன் அனைத்துத் திறன்களையும் இழந்து சிதறி திரிகிறது. சரிந்த நிலத்தில் செல்கையில் நதி ஆற்றல் கொள்வதைப்போல.

நான் அவனை ஓரவிழியால் நோக்கிக்கொண்டிருந்தேன். அவனை முன்னரே எனக்கு தெரியும். இளையவன், ஆகையால் எந்த அவையிலும் இல்லாதவன் போலிருப்பவன். உண்மையில் அவன் அவனுக்கு நேர்மூத்தவன் சாருசந்திரனின் நிழலென வாழ்பவன். சாருசந்திரனும் எவ்வகையிலும் அவை முதன்மை கொள்பவன் அல்ல. விளையாட்டுகளில்கூட அவர்களின் குரலை நான் கேட்டதில்லை. அவ்வண்ணம் ஒருவன் இருப்பதே அப்பதின்மருக்கு அப்பால் எவருக்கும் தெரியாது. ஆகவேதான் அவனை தூதனுப்பியிருக்கிறார்கள். அவன் வந்த செய்தி எவருக்கும் தெரியாது.

அவன் அரசு சூழ்ச்சி அறியாதவன். ஆகவேதான் அவையில் நான் உரைத்த சூழ்ச்சிச் சொற்களைக் கேட்டு திகைத்து உளம் அழிந்திருக்கிறான். சற்றேனும் அரசியல் சூழ்ச்சியை அறிந்தவன் ஒருபோதும் என்னிடம் அதைப் பற்றி நேரடியாக பேசியிருக்க மாட்டான். தனக்கு அதைப்பற்றி ஒன்றும் தெரியாது என்று என்னிடம் காட்டியிருக்கவும் மாட்டான். ஆனாலும் இந்த நிலத்திலிருந்து இவன் கிளம்பும்போது

எனக்கான இடர் தொடங்குகிறது. இங்கு நான் சொன்னவை எவ்வகையிலேனும் பிரத்யும்னனை சென்றடைந்தால் அவரிலிருந்து ஃபானுவை சென்றடைந்தால் நான் உயிர் வாழ இயலாது.

இதை நான் கடந்தாக வேண்டும். அதற்கு ஒருவழியே உள்ளது. இவனை அழைத்துக்கொண்டு சேர்ந்து திரும்பிச்செல்லலாம். செல்லும் வழியில் இவன் உளம் நம்பும்படியான ஒரு கதையை சொல்லலாம். மெல்லமெல்ல கரைத்து இங்கு நிகழ்ந்தவற்றை சுதேஷ்ணனிடமும் கூறாமல் ஆக்கிவிடலாம். அது எனக்கு ஓர் அறைகூவல். அத்தருணத்தில் அத்தனை தோல்விகளுக்குப் பின்னரும் நான் என் ஆற்றலை நம்பி மேலும் ஊக்கம் கொண்டேன். இந்த எளியவனை நம்பவைக்க என்வயமாக்க என்னால் இயலும். அதையே ஓர் ஆடலெனக் கொள்ளலாம். என் திறனை நானே மதிப்பிட்டுக்கொள்ளும் ஒரு தருணம்.

அதை எவ்வண்ணம் செய்வது என்று எண்ணி நான் சொல் தொகுக்கத் தொடங்கினேன். இவனை நம்பச் செய்வது எளிது. அதற்கான சொற்களை உரிய முறைப்படி அமைக்கவேண்டும். இளையோனே, இங்கு ருக்மியின் அவையில் நான் சொன்னது சுதேஷ்ணனின் எண்ணம், ஆனால் சுதேஷ்ணன் அதை அவரே பிறஇளையோரிடம் கூறவில்லை. ஆகவே தங்களுக்கு அது தெரியும் என்று பிற இளையோர் அவரிடம் காட்டாமலிருப்பதே முறை. அவரே கூறும்வரை காத்திருக்கலாம். தனக்கு தேவையில்லாத இடங்களில் சென்றதையோ சொல்லறிந்ததையோ வெளிக்காட்டாமலிருப்பதுதான் அரசுசூழ்தலின் நெறி. அவ்வண்ணமே இங்கே நிகழ்ந்தவற்றை

மறந்துவிடு. நினைவுகூரும் தருணம் வரும், அப்போது நினைவுகூர்.

பிரத்யும்னனிடம் அவன் இதை சென்று கூறலாம். உண்மையில் அது அவனுடைய கடமை. ஆனால் அதன் விளைவாக எழுவது பிரத்யும்னனுக்கும் சுதேஷ்ணனுக்குமான பூசல். பிரத்யும்னன் சினந்தெழுந்து சுதேஷ்ணனை கொன்றால் அதன் முழுப்பொறுப்பும் விசாருவுக்கே. இத்தருணத்தில் அப்படி உடனடியாக எதையும் செய்யக்கூடாது. சுதேஷ்ணனை பிரத்யும்னனிடம் அடையாளம் காட்டுவதென்றால்கூட அதற்கான தருணம் அமையவேண்டும். ஆகவே இப்போது அதை கூறாமலிருப்பதே முறை.

அதற்கு பிறிதொரு தருணம் வரும். அப்போது முறையாக அறிவிக்கலாம். ஃபானு முடிசூட்டிக்கொண்ட பிறகு, எண்பதின்மரும் ஒன்றாக நின்று அந்நிகழ்வை நிறைவடையச் செய்த பின்னர், அனைவரும் ஓய்ந்திருக்கையில் இவ்வண்ணம் ஒன்று நிகழ்ந்ததென்று பிரத்யும்னனிடம் கூறினால் அவர் சுதேஷ்ணனிடம் காட்டக்கூடிய சினம் சற்று குறைந்திருக்கும். இச்சிக்கல் மிக எளிதாக அவிழும். அன்றி இயல்பாக இச்செய்தியை அவன் எவரிடம் கூறினாலும் இடரே நிகழும்.

அத்துடன் ஒன்று, அவன் சுதேஷ்ணனின் சூழ்ச்சியை அறிந்திருந்தான் என சுதேஷ்ணன் அறிந்தால் அவர் அவனை கொல்லவும்கூடும். அவன் அறிந்துவிட்டான் என்பது என் வழியாக சுதேஷ்ணனை உடனடியாக சென்று சேரும். அச்சூழலை எதிர்கொள்ளும் ஆற்றல் கொண்டவன் அல்ல அவன். இப்படி ஒரு சூழ்ச்சி ருக்மியின் அவையில் தனக்கு தெரிந்தது என்று எந்நிலையிலும் அவன் நாவிலிருந்து எழவேண்டியதில்லை. அதை நாவிலிருந்தே அழித்துவிடுக!

எல்லைகள் எதையும் கடந்ததாக எண்ணிக்கொள்ளாதொழிக! அதுவே இத்தருணத்தில் உகந்தது.

அவ்வாறு சொல்லடுக்கிக்கொண்டதும் நான் நிறைவடைந்தேன். அதை என்னால் உரிய சொற்களில் சொல்லி அவனை நம்பவைத்துவிட முடியும். அங்கிருந்து துவாரகை வரை செல்வதற்கு ஓரிரவும் இரண்டு பகல்களும் இருக்கின்றன. நெடுநேரம் நான் சொல்லவேண்டியதை பலமுறை திருப்பித் திருப்பி சொல்லி நிறுவலாம். அத்துடன் மேலும் கூடுதலாக அவனை கட்டும் ஒரு தளையும் தேவை. தான் அறிந்ததை அவன் சுதேஷ்ணனிடமோ பிறரிடமோ கூறினால் அவனுக்கு தனிப்பட்ட முறையில் ஓர் இடர் வருமென்பதையும் உறுதியாக்க வேண்டும்.

அதற்கான வழியை நான் எண்ணி கண்டடைந்தேன். சுதேஷ்ணன் ருக்மியின் மகள் ஊஷ்மளையை மணந்தவர். சுதேஷ்ணன் மணிமுடி சூடினால் பட்டத்தரசியாக அமரவிருப்பவர் ஊஷ்மளையே. ஊஷ்மளையின் வயிற்றில் பிறந்த மைந்தன் சந்தீபன் துவாரகையின் முடிகொள்வான். ஆகவே ருக்மி பிரத்யும்னனுக்கு மேலாக சுதேஷ்ணனை ஆதரிக்கவே வாய்ப்பு. விசாருவும் ருக்மியின் மகள் காத்யாயினியை மணந்தவன். அவனை சுதேஷ்ணனின் அணுக்கனாக, ருக்மியின் மருகனாகவே பிரத்யும்னன் எண்ணுவார்.

ஆகவே அவன் இவ்வாறு நடந்ததென்று பிரத்யும்னனிடம் கூறினால்கூட அது சுதேஷ்ணனின் சூழ்ச்சியாக பிரத்யும்னன் எடுத்துக்கொள்ளக்கூடும். அவனை சுதேஷ்ணனின் தரப்பை சார்ந்தவன் என்று ஐயுறுவதற்கான எல்லா வாய்ப்புகளும் இயல்பாகவே உள்ளன. அவ்வாறு ஒரு வாய்ப்பை

உருவாக்குவதற்கு நான் தயங்கப்போவதுமில்லை. பிரத்யும்னனிடம் விசாரு சுதேஷ்ணனுடன் இணைந்து பிரத்யும்னனுக்கு எதிராக சூழ்ச்சி செய்ததை நேரில் கேட்டதாகவே நான் சொல்வேன், ஏனென்றால் அது எனக்கு என்னை காப்பதற்கான வழி. அவன் சுதேஷ்ணனிடம் சென்று நிகழ்ந்ததை சொன்னால் அச்செய்தியால் பிரத்யும்னனின் பகை எழும். பிரத்யும்னனிடம் சொன்னால் சுதேஷ்ணனின் பகை மிகும். ஆனால் அவ்வாறொன்று உண்மையில் தனக்கு தெரியாதென்று சொல்லுகையிலேயே இந்த இடர்கள் அனைத்திலிருந்து அவன் முழுமையாக வெளியேறலாம்.

இவ்விரு சொற்கோட்டைகளுக்கும் அப்பால் அவன் செல்வதற்கு எந்த வாய்ப்பும் இல்லை. நான் நிறைவடைந்தேன். என் உள்ளம் மெல்லமெல்ல அமைதி கொண்டது. கடந்துவிடலாம். மிக எளிதுதான். அஞ்சி குழம்பி இதை பெரிதுபடுத்திக்கொள்ள வேண்டியதில்லை. "இளையோனே, நான் இன்றே கிளம்பலாமென எண்ணுகிறேன். இங்கே நாம் நீடு தங்குதல் நன்றல்ல. நம் தூது முடிந்தது. நீ என்னுடன் வருகிறாயா?" என்றேன். "ஆம், நானும் உடன் வருகிறேன்" என்று அவன் சொன்னான். "நன்று, சற்று ஓய்வுகொள்க! நானும் ஓய்வெடுக்கிறேன். மாலையிலேயே ருக்மியிடம் விடைசொல்லிவிட்டுக் கிளம்புவோம்" என்று நான் சொன்னேன். "அவரை மீண்டும் சந்திக்கவேண்டியதில்லை. நம் வணக்கத்தை அவர் அமைச்சரிடமே தெரிவித்துவிடுவோம்." அவன் "ஆம்" என்றான்.

எங்கள் இருவருக்கும் ஒரு கூடாரம் ஒதுக்கப்பட்டிருந்தது. அங்கு சென்று நான் ஆடை மாற்றிக்கொண்டேன். முகம் கழுவி உணவு உண்டு கூடாரத்தில் மூங்கில்கள் நடுவே இழுத்துக் கட்டப்பட்டிருந்த தூளியில் படுத்து கண்மூடி ஓய்வு கொண்டேன். கண்களை மூடியதுமே புலன்களை விழித்துக்கொள்ள வைப்பது என் வழக்கம். நான் கண்களை மூடிக்கொண்டிருப்பதனாலேயே எதையும் அறியாமலிருக்கிறேன் என்று அவன் எண்ணுவான். ஆனால் ஓசைகளினூடாக அவனுடைய நடத்தையை, பதற்றத்தை நான் அறிந்துகொண்டிருந்தேன். அவன் குழம்பியிருக்கிறான் என்று தெரிந்தது.

அவன் நிலைகொள்ளாமல் கூடாரத்தை விட்டு வெளியே சென்றான் மீண்டும் உள்ளே வந்தான். அவன் என்னிடம் பேச விழைகிறான். ஆனால் இப்போது நான் பேசலாகாது. உடனடியாக அவனை கூட்டிக்கொண்டு துவாரகை கிளம்பலாம். ஆனால் உடனே சென்றால் அது ருக்மியிடம் ஐயத்தை உருவாக்கும். எனக்கும் சற்று ஓய்வு தேவைப்பட்டது. ஆகவே துயின்று எழுந்து அந்தியில் கிளம்பலாம் என்று நான் முடிவெடுத்தேன். உடனடியாக கிளம்புவதற்கான எல்லா சூழ்நிலையும் துவாரகையில் இருந்தன. இங்கு பேசப்பட்டதை உடனடியாகச் சென்று சொல்லியாகவேண்டும்.

நான் கண்களைத் திறந்து "இளையோனே, நான் செல்கையில் நீயும் உடன் வருகிறாய், ஓய்வெடு" என்றேன். "நான் அதைப்பற்றியே எண்ணிக்கொண்டிருக்கிறேன். நாம் இருவரும்

தனித்தனியாக அல்லவா வந்தோம்" என்றான். "ஆம், தூது முடிந்த பிறகு சேர்ந்து செல்லலாம். அதிலொன்றும் பிழையில்லை. இங்கே இயல்பாக சந்தித்துக்கொண்டோம், அதிலென்ன பிழை?" என்றேன். "ஆம், நான் வருகிறேன்" என்று அவன் சொன்னான். ஆனால் அவன் முகத்தில் மேலும் குழப்பம் இருந்தது. "நன்று" என்றபின் புன்னகையுடன் நான் ஒருக்களித்தேன்.

கண்மூடிய பின் அவன் காட்டிய அந்த முகபாவனையை என்னுள் அசையாமல் பெரு ஓவியமெனத் தீட்டி அவன் விழிகளை பார்த்துக்கொண்டிருந்தேன். அதில் ஒரு சிறு அசைவை கண்டேன். அவன் எதையோ ஒளிக்கிறான் என்று தெரிந்தது. எதை? அவன் என்னிடமிருந்து எதையோ அப்பால் கொண்டு செல்கிறான். எதை? என் உள்ளம் கூர்கொண்டு தேடியது. சற்றுநேரம் கழித்துத்தான் அவன் குடிலுக்குள் இல்லை என்பதை உணர்ந்தேன். ஓசையின்றி எழுந்து நின்றபோது கால்கள் மரத்தரையை தொட்டதுமே என்னவென்று தெரிந்துவிட்டது. அவனிடம் புறா ஒன்று இருக்கிறது. அவன் அதை அனுப்பவிருக்கிறான். இங்கு நிகழ்ந்த செய்தியை இதற்குள் அவன் மந்தணச் சொற்களில் எழுதிக்கொண்டிருப்பான். இன்னும் சற்று நேரத்தில் புறா இங்கிருந்து கிளம்பும். சிறகடித்து அது எழுந்துவிட்டதென்றால் எதுவும் செய்ய இயலாது.

நான் உடைவாளை எடுத்து உடைக்குள் வைத்தபடி ஓசையிலாது வெளியே சென்றேன். இரு கூடாரங்களுக்கு நடுவே இருந்த சிறு இடைவெளியில் மணலில் அமர்ந்து தொடையில் ஓலையை வைத்து எழுத்தாணியால் அவன் மந்தணச் சொற்களை விரைவாக எழுதிக்கொண்டிருப்பதை

பார்த்தேன். உடைவாளை உருவி கையில் வைத்துக்கொண்டு அவனை பார்த்தபடி நின்றேன். அவனால் விரைவாக எழுத முடியவில்லை. அவன் உள்ளத்தை நான் நன்கறிந்தேன். அவன் குழம்பிக்கொண்டிருந்தான். ஆனால் எழுதத் தொடங்கியதுமே அவன் உள்ளம் கூர்கொண்டது. அவனுக்கு எல்லாமே தெரிந்துவிட்டது.

அவன் கைகள் நடுங்கிக்கொண்டிருந்தன. முகம் உணர்வுகளால் மாறிக்கொண்டிருந்தது. இளையோர் தங்கள் வாழ்வில் முதல் முறையாக மிகக் கூர்கொண்ட செயலொன்றை செய்யும்போது எழும் பதற்றம். அவ்வுணர்வுகளை அவ்வுடல் தாங்கவில்லை. என்ன செய்வது என்று எனக்கு தெரியவில்லை. அத்தருணத்தில் நான் செய்யக்கூடுவது ஒன்றே. அந்த ஓலை அங்கிருந்து செல்லலாகாது. அந்த ஓலையை பிடுங்கிவிடவேண்டும். அதை உடனே செய்ய முடியும். ஆனால் அது போதாது. அந்த ஓலையை அவன் எழுதிவிட்டான். ஆகவே இனி எந்நிலையிலும் அவன் அதை சொல்லாமல் இருக்கமாட்டான்.

அக்கணம் என்ன நிகழ்ந்தது என பலமுறை எண்ணி எண்ணி வியந்துள்ளேன். அத்தகைய தருணங்களில் மானுடர் பிறிதொரு உடலின் உறுப்பாக ஆகிவிடுகிறார்கள். விரல் செய்வதற்கு விரல் பொறுப்பல்ல அல்லவா? நான் பிறிதொன்று எண்ணாமல் மூன்றடி முன்வைத்து வாளை ஓங்கி அவன் தலையை வெட்டினேன். வாளின் வீச்சொலி எழுந்த கணம் அவன் திடுக்கிட்டுத் திரும்பி என்னை பார்த்தான். அந்தப் பார்வையையே என் வாள் இரண்டாக வெட்டியது. அவ்வுணர்வு அவ்வண்ணமே மலைத்து உறைந்து நின்ற விழிகளுடன்

அவனுடைய துண்டுபட்ட தலை கழுத்தில் இருந்து சரிந்து தசைத் தொடர்பொன்றால் தொங்கியது.

குருதிக்கொப்பளிப்பின் ஒலி எழுந்தது. குருதியின் கனவுத்தன்மைகொண்ட மணம். அவன் பக்கவாட்டில் விழுந்து கால்களும் கைகளும் மணலில் துழாவித் துழாவி தவிக்க உடல் துடிக்கத் தொடங்கியது. குருதி கொப்பளித்து கொழும்சரடுகளென மணலில் இறங்கி வற்றி மறைந்தது. அவன் துடித்துக்கொண்டிருந்த மெல்லிய ஓசை என் உடலை கிளரச் செய்தது. மெய்ப்புகொண்டு என் கண்களில் நீர் நிறைந்தது. என் பற்கள் கிட்டித்திருந்தன. தந்தையே, என் உடல் காமம் கொண்டதுபோல் கிளர்ந்திருந்தது.

நான் அவன் கையிலிருந்த ஓலையை எடுத்துக்கொண்டேன். அவனை கூர்ந்து பார்த்தபின் சுருட்டி என் இடைக்கச்சையில் வைத்தேன். எவரேனும் பார்க்கிறார்களா என்று பார்த்தேன். பின் சிற்றடி வைத்து மெல்ல கூடாரத்திற்குள் நுழைந்து என் பயணப்பையை எடுத்தேன். பொருட்கள் அனைத்தையும் எடுத்துக்கொண்டு மெல்ல வெளியே வந்தேன். என் புரவி அருகேதான் நின்றிருந்தது. அதன் கழுத்தில் கொள்ளு போடப்பட்ட பை தொங்கியது. அதில் ஏறிக்கொண்டேன். அதை தட்டி மெல்ல நடக்கச்செய்து கூடாரங்களின் நடுவிலூடாக எல்லை நோக்கி சென்றேன். என் முகத்திலும் முழங்கையிலும் குருதி தெறித்திருந்தது. மேலாடையால் அதை துடைத்துக்கொண்டேன்.

# கல்பொருசிறுநுரை - 43

**பகுதி நான்கு : அலைமீள்கை – 26**

துவாரகைக்கு நான் தன்னந்தனியாகவே கிளம்பினேன். பிறரை அழைத்துக்கொள்ளத் தோன்றவில்லை. எனது காவலர்களும் பயணத்துணைவர்களும் என் குடிலைச்சுற்றித்தான் தங்கியிருந்தனர். அவர்களை அழைத்திருக்க இயலும். ஆனால் அவர்களால் ஓசையின்றி கிளம்ப இயலாது. கவச உடைகளை அணிவது, காலணிகளை போட்டுக்கொள்வது, படைக்கலன்களை எடுத்துக்கொள்வது அனைத்தையுமே ஒருவகையான அலுவல் நடவடிக்கையாக அவர்கள் மாற்றிவைத்திருக்கிறார்கள். அதற்கான ஆணைகள் கூச்சல்கள் உடல்மொழிகள் அவர்களிடம் கூடிவிடும். வழக்கமான காவல்வீரர்களை மந்தணப்பயணத்திற்கு அழைத்துச்செல்லவே முடியாது.

ஏனெனில் பெரும்பாலான படைவீரர்கள் பணி என்று எதையும் ஆற்றுவதில்லை. வெறுமனே இருக்கிறோம் என்னும் உணர்வு அவர்களுக்கு எழுமெனில் அவர்கள் தங்கள் தொழிலில் சலிப்படையக்கூடும். ஆகவே படைநிரைகளை காலை எழுவதிலிருந்து ஆடைகளை அணிந்து கொள்வது, உணவருந்துவது, ஓய்வெடுப்பது, அந்தியில் துயில்வது அனைத்தையுமே ஒருவகையான படை நடவடிக்கைகளாக மாற்றி அதற்கான ஆணைகளையும் கூச்சல்களையும் உருவாக்கி வைத்திருக்கிறார்கள். நாங்கள் கிளம்ப இருப்பது உடனடியாக தெரிந்துவிடும். எனக்கு அங்கு பொழுதில்லை. நான் உடனே கிளம்பியாகவேண்டும். குருதிமணத்தை படைவீரர்கள் நன்கறிவார்கள். மிக எளிதாக அடையாளம் கண்டுகொள்வார்கள். அதைவிட புரவிகள் குருதிவீச்சத்தை

அறியும். அப்போதே பல குதிரைகள் பல இடங்களில் கனைப்பொலி எழுப்பத் தொடங்கிவிட்டிருந்தன.

நான் புரவியை விரைவாகச் செலுத்தி படையின் எல்லையென அமைந்த காவல்நிலையை அடைந்து அங்கு என்னை மறித்த காவலனிடம் கணையாழியைக் காட்டி "நான் விரைந்து முன் செல்கிறேன், என் படைவீரர்கள் தொடர்ந்து வருவார்கள். அவர்களை பின்னால் வரச்சொல்க!" என்றபடி புரவியை முழுவிசையில் செலுத்தி பாலை நிலத்திற்குள் சென்றேன். என் சொற்கள் விசையுடன் எழுந்தமையால் அவர்களால் மேற்கொண்டு எண்ணம் சூழ இயலவில்லை. அதற்குள் நான் புழுதி பரவி அலையடித்த பாலைநிலத்தினுள் நெடுந்தொலைவுக்கு சென்றுவிட்டிருந்தேன். என்னைச் சூழ்ந்திருந்த செம்புழுதியை திரையென உணர்ந்தேன். அது எனக்கு ஆறுதலை, தனிமையை, தன்னம்பிக்கையை அளித்தது.

பாலைநிலத்திற்கு புரவி பழகிவிட்டிருந்தது. ஆகவே பலகை பதிக்கப்பட்ட பாதையினூடாகவே விரைந்தது. அங்கே வரும்போது அது மணலில் புதைந்திருந்த அந்தப் பாதையை கண்டுபிடித்திருந்தது. செல்லும்போது அதற்கு எதையும் சொல்ல வேண்டியிருக்கவில்லை. நான் எங்குமே நிற்கவில்லை. சீரான விசையில் சென்றுகொண்டே இருந்தேன். என் பின்னால் சூரியன் இருந்தது. என் நிழல் எனக்கு முன்னால் நீண்டு சென்றது. பின் குறுகியது. பின்னர் என் உடலைக் கடந்து பின்னால் சென்றது. நான் வெம்மைகொண்டு செம்புழுதியால் ஆனதுபோல் வானில் திகழ்ந்த சூரியனை நோக்கி சென்றுகொண்டிருந்தேன்.

முதல் தங்குமிடத்திலேயே இன்னொரு பயணக்குழுவை கண்டடைந்தேன். அவந்தியிலிருந்து துவாரகைக்கு

சென்றுகொண்டிருந்த சிறிய வணிகக்குழு அவர்கள். அவர்களை வணிகர்குழு என்று சொல்லமுடியாது, ஒரு நாடோடிக்குழு. சில பொருட்களை வாங்கி விற்று வாழ்க்கையை ஈட்டிக்கொள்பவர்கள். ஆகவே அவர்களுக்கு பெரிய வணிகப் பொருட்கள் ஏதுமில்லை. எனவே சென்றாகவேண்டிய பதற்றமும் இல்லை. இயல்பாக ஓய்வெடுத்துக்கொண்டிருந்தார்கள். நான் வந்திருந்த புரவி களைத்திருந்தது. அதை அவர்களிடம் கொடுத்துவிட்டு அங்கு நின்றிருந்த புரவி ஒன்றை பெற்றுக்கொண்டு மேற்கொண்டு சிறிது பணமும் அவர்களுக்கு அளித்தேன். அந்தப் புரவியில் ஏறி ஓய்வெடுக்காமலேயே துவாரகை நோக்கி சென்றேன்.

பிறிதொரு புரவி அவ்வாறு வழியில் கிடைக்குமெனில் துவாரகையை மறுநாள் புலரிக்குள் சென்றடைந்துவிட முடியும். நாடோடிகளின் புரவி பாலைக்கு மேலும் பழகியது. எனவே சீரான விசையில் சென்றுகொண்டிருந்தது. எப்படி ஒவ்வொன்றையும் வகுத்துக்கொள்வது என்று செல்லும் வழியிலேயே நான் எண்ணம் சூழ்ந்தேன். அந்தச் சாவுக்குரிய பொறுப்பை ருக்மி மேல் போடுவதே சிறந்த வழி. விசாரு அங்கு சென்றதற்கு துவாரகையில் சான்றுகள் ஏதுமில்லை. தாங்களேதான் அவனை அனுப்பினேன் என்று பிரத்யும்னனோ சுதேஷ்ணனோ பொதுஅவையில் கூற இயலாது. அவனே தன் முயற்சியில் ருக்மியை பார்க்கச் சென்றதாகவும் அவர்களுக்குள் பிறர் அறியாத ஏதோ உறவாடல் இருந்ததாகவும் எவரும் இயல்பாக எண்ணக்கூடும்.

அதையே நானும் சொல்லவேண்டும். அக்கொலைக்கு நான் சான்றாகவில்லை என்றே கூறவேண்டும். அவையில் விசாருவை பார்த்தேன். ருக்மிக்கும் அவனுக்கும் இடையே

ஏதோ அறியா ஆடல் இருந்தது என்றும், அது மோதலாக மாறிவிட்டிருப்பதை நான் உணர்ந்தேன் என்றும், ருக்மி என்னை சிறைபிடிக்க முயன்றதால் குடிலிலிருந்து தப்பி துவாரகைக்கு விரைந்து வந்தேன் என்றும் கூறுவதே உகந்ததென்று முடிவு செய்தேன் என்றும் கூறுவதாக வகுத்துக்கொண்டேன். சொல் சொல்லாக அம்முடிவை என்னுள் எழுப்பிக்கொண்டேன்.

அம்முடிவை எடுத்த பின்னர் என் உள்ளம் நிலைகொண்டது. என் முகத்தில் புன்னகை எழுந்தது. மீண்டும் நான் தன்னம்பிக்கையை அடைந்தேன். எத்தருணத்தையும் எதிர்கொள்ள என்னால் இயலும். எங்கும் என்னை நிறம் மாற்றிக்கொள்ள இயலும். என் தந்தையின் சூழ்ச்சிகளில் முதலானது அவர் தானிருக்கும் இடத்திற்கேற்ப முழுமையாக மாறிக்கொள்பவர் என்பது. அங்கு பிறந்து அங்கு வளர்ந்தவர்களைவிட அவ்விடத்திற்கு உரியவராக அவரால் ஆகிவிட முடியும். நானும் அவ்வண்ணமே. அவருடைய பிற திறன்களை நான் ஈட்டிக்கொள்ள இயலும். நானும் நூல் நவில்வேன். படைநின்று பொருதி வெல்வேன். ஆனால் இத்தருணத்தில் நிலைகொள்ளவும் வென்றெழவும் இத்திறனே முதன்மையானது.

அந்தி இறங்கியது. கதிரவன் செம்புழுதியில் கலங்கி இருண்டு மறைந்தான். பாலைமணல்வெளியில் மட்டும் மென்வெளிச்சம். வானில் விண்மீன்கள் தோன்றிக்கொண்டிருந்தன. புரவியை சற்று ஓய்வெடுக்கவிடலாம் என்று வழியில் கண்ட ஒரு சிறு சோலை அருகே சென்றேன். அது வழக்கம்போல கைவிடப்பட்ட சோலை. அதற்குள் பேணப்படாத கலங்கிய ஊற்று ஒன்று இருக்கும் என்று எண்ணினேன். புரவியிலிருந்து இறங்கி அதைப் பிடித்து அழைத்தபடி சோலையை நோக்கி

சென்றேன். இரவின் நிலவொளியில் பாலைநிலம் காற்றில் அதிரும் மெல்லிய திரைச்சீலைபோல என்னைச் சுற்றி அலைவு கொண்டிருந்தது. அதை நோக்கலாகாது. விழிக்குள் வெளிச்சத்தை நிறைத்து பிறிதொன்றை நோக்க முடியாது. உள்ளிருளச் செய்துவிடும் தன்மை அதற்குண்டு.

நான் நிலத்தைப் பார்த்து குனிந்து நடந்து சோலைக்குள் சென்றேன். உள்ளே எவரோ இருப்பதை என் உணர்வு சொன்னது. வாளில் கைவைத்தபடி "எவர்?" என்று உரக்க குரல் எழுப்பினேன். அங்கே எவரோ இருப்பதைப்போல செவியறியா ஒலியை கேட்டேன். "யார்? யாரது?" அங்கிருந்து ஒரு சிரிப்பொலி மறுமொழியாக எழுந்ததும் "நன்று" என்றேன். மீண்டும் உரத்த குரலில் "எவர்?" என்றேன். மீண்டும் நகைப்பொலி கேட்டது. நான் உடைவாளில் கைவைத்து அசைவிலாமல் நின்றேன்.

சாமி மரத்தின் முட்புதருக்குள்ளிருந்து ஒருவன் தோன்றினான். உடலெங்கும் மட்கிய ஆடைகள் தொங்கின. சடைத்திரிகள் என மீசையும் தாடியும் தலைமயிரும். பாலைகளில் அலையும் பேய்களில் ஒன்றென்று என் மனம் சொல்லியது. ஆனால் புலன்கள் அவன் மனிதன் என்பதை உறுத்துக் காட்டின. நகைத்தபடி என்னருகே வந்து "ஒவ்வொன்றும் அதனிடத்திலிருந்து நழுவுகின்றன" என்றான். "என்ன சொல்கிறீர்கள்?" என்று நான் கேட்டேன். "உணவு எங்குமிருக்கிறது. உணவுக்காக எதையும் செய்யவேண்டியதில்லை. நீர் இங்கிருக்கிறது. மனிதன் வாழ்வதற்கு விரிந்த வெளி தேவையில்லை. இதோ இந்தச் சிறுவட்டம் போதும். ஆனால் உளம் எழுந்து பறப்பதற்கு

பெருவெளி தேவை. அது இங்கே சூழ்ந்திருக்கிறது. ஆனால்...” என்றான்.

திகைப்புடன் அவன் கண்களை பார்த்துக்கொண்டிருந்தேன். அவை அவன் எவர் என்று எனக்கு காட்டியது. பாலையில் வழி தவறிய பித்தர்களில் ஒருவன். இந்தச் சோலையை கண்டடைந்ததனால் இங்கு வாழ்கிறான். தனிமையில் நோயுற்று இங்கு இறந்து மட்கி மண்டை ஓடென எஞ்சுவான். அதுவரை இவ்வாறு உள்ளம் அலைந்து கொண்டிருக்கும். பாலை மானுடரை பித்தராக்குவது. மனிதர்கள் எட்டு திசைகளாலும் அழுத்திக் கவ்வி நிறுத்தப்படவேண்டியவர்கள். அப்போதுதான் அவர்களுக்கு வடிவம் அமைகிறது. உளவடிவம், உடல்வடிவம். ஒருதிசை சற்றே திறந்தால் ட அவ்வழியே அவர்கள் உள்ளம் பீறிட்டு விலகுகிறது. உடல் உடைந்து பீறிடுகிறது. எண் திசையும் நிறைந்துகிடக்கும் பாலையில் அவர்கள் சிதறிப் பரவிவிடுகிறார்கள். இந்தப் பாலையில் திறந்து வைத்த ஒரு குடம் நீர் ஆவியாகி காற்றெங்கும் நிறைந்து இன்மையென்றாகி முற்றிலும் மறைவதைப்போல.

“விலகு” என்று அவனை தள்ளிவிட்டு நான் சோலைக்குள் சென்றேன். அங்கு அந்த ஊற்று நன்றாகவே பேணப்பட்டிருந்தது. அதன் கரைகளுக்கு கற்கள் அடுக்கப்பட்டு விளிம்பு அமைக்கப்பட்டிருந்தமையால் மணல் சரிந்து உள்ளே இறங்கவில்லை. ஒவ்வொரு நாளும் அதிலிருந்த தண்ணீர் இறைத்து வெளியே கொட்டப்பட்டிருந்தமையால் குப்பைகளும் சருகுகளும் இன்றி நீர் கண்ணாடித் துண்டென தெளிந்து கிடந்தது. சூழ்ந்திருந்த மரங்களின் இலைநிழல்களை அலைகள் நெளியச் செய்துகொண்டிருந்தன. அருகே இருந்த கொப்பரையால் நீரள்ளி அருந்தினேன். தலையிலும் உடலிலும்

நீரை விட்டுக்கொண்டேன். புரவியை நீர் குடிக்க கொண்டு சென்றேன்.

இந்தப் பாலைவனப் புரவிகள் குளம்பு தொட்டு நீரை கலங்கடிக்காமல், முகத்தை மூழ்க வைக்காமல், எந்த வகையிலும் நீரை தூய்மையிழக்கச் செய்யாமல் உதடுநுனிகளை மட்டுமே வைத்து அருந்துவதற்குப் பயின்றவை. புரவி நீரை உறிஞ்சிக் குடித்ததும் தலையை சற்றே வெளியே எடுத்து அண்ணாந்து வாயின் மயிர்களில் இருந்த நீர் சொட்டச்சொட்ட ஆழ உறிஞ்சிய பின் மீண்டும் கழுத்தை நீட்டியது. நீர் அருந்தியதுமே அதன் உடல் இளைப்பாறல் கொண்டது. பல இடங்களில் தசை விதிர்க்கத் தொடங்கியது. நிறைந்த வயிற்றுடன் செவிகளை அடித்த பின் அதன் தலையை என் தோளில் வைத்து உரசி தன் அன்பை தெரிவித்தது. நான் அதை கழுத்தைத் தட்டி ஆறுதல்படுத்தியபடி வெளியே வந்தேன்.

எனக்குப் பின்னால் வந்த பித்தன் அங்கு நின்று இடையில் கைவைத்து மிகுந்த பதற்றம் கொண்டவன்போல் என்னை பார்த்துக்கொண்டிருந்தான். நான் திரும்பிச்சென்றதும் என் பின்னால் வந்து "அதாவது நான் என்ன சொல்கிறேன் எனில் ஒவ்வொன்றும் நிலையழிந்துகொண்டிருக்கிறது. இடிந்துகொண்டிருக்கிறது. ஏன் இடிகிறது என்றால் அவை இடிவதற்காகவே அவ்வாறு உருவாக்கப்பட்டன என்பதனால்தான்" என்றான். கைதூக்கி "நோக்குக! மனிதர்கள் கட்டும் ஒவ்வொன்றும் இடிகின்றன. ஒன்றை புதிதாக கட்டுபவனிடம் சென்று கேட்டுப்பாருங்கள், அது எவ்வாறு இடியுமென்று. அவனுக்கு அது தெரிந்திருக்கும். மனிதன் படைத்த ஒரு கட்டடம் எவ்வாறு இடியுமென்பதை அதை

பார்க்கும் எவரும் சொல்லிவிடமுடியும். ஒரு மரத்தை அவ்வாறு சொல்ல முடியாது" என்றான்.

"இது ஆழமானது. இதை நான் சொல்லும்போதே என்னை பலர் வணிகத்திற்கு வராதே என்கிறார்கள். ஆனால் நிலவில் ஒரு வணிகன் தனியாக இருக்கக்கூடாது. ஏனெனில் நிலவு வணிகனை அவனுடைய கையிலிருக்கும் அத்தனை பொருட்களுக்கும் மதிப்பில்லாமல் செய்துவிடுகிறது. பொன் வெள்ளியாகிறது. வெள்ளி மண் ஓடாகிறது. நிலவில் தனித்திருக்கும் வணிகன் அனைத்தையும் இழந்துவிடுகிறான். அவன் கையிலிருக்கும் அத்தனை பொருட்களும் பயனற்றவையாகிவிடுகின்றன. அவன் கண்ட சொற்கள் அனைத்தும் ஒன்றோடொன்று கலந்துவிடுகின்றன. மணலும் கூலமும் கலப்பதுபோல. ஒவ்வொன்றாக பொறுக்கி எடுத்து பிரிக்கப் பிரிக்க மீண்டும் அவன் கலந்துகொண்டே ஒருக்கிறான். இந்தப் பாலைமணல் முழுக்க இங்குள்ள கூலங்கள் கலந்துவிட்டால் எவரால் பிரித்தெடுக்க முடியும்?"

அவன் என் தோளைப் பிடித்து உலுக்கி பதறும் கண்களுடன் "கூலங்கள் மட்டுமல்ல அருமணிகளும் பாலை நிலத்தில் அவ்வாறுதான் தொலைந்து போகின்றன" என்றான். அவன் சொற்களுக்கு செவி கொடுக்காமல் புரவியைத் தட்டி ஆறுதல்படுத்தியபின் நான் ஏறி அமர்ந்தேன். அதன் கடிவாளத்தை இழுத்து அதன் செவியருகே சற்றே தட்டி "செல்க!" என்றேன். அது செருக்கடித்து காலெடுத்ததும் அவன் பின்னால் ஓடிவந்து "முதற்கொலை! முதற்குருதி!" என்றான். என் உடல் விதிர்த்தது. நான் இறந்தவனைப்போல் அதன்மேல் இருந்தேன். அவன் மேலும் என் அருகே ஓடிவந்து "முதற்குருதி!" என்றான். "முதற்குருதி... அது முதற்குருதி."

பதறும் குரலில் “என்ன?” என்று நான் கேட்டேன்.
“உடன்பிறந்தான் குருதி! அது புனிதமானது! தெய்வங்கள் விரும்புவது. நமது உடன்பிறந்தான் சங்கை அறுத்து பலி கொடுத்தால் எந்த தெய்வமும் நமக்கு கனியும். தெய்வங்கள் நமக்கு அள்ளி அள்ளிக் கொடுக்கும். மணிமுடிகளை, பேரரசுகளை, பெரும் கருவூலங்களை, நிகரற்ற வெற்றியை, நிலைத்து வாழும் புகழை. நாம் செய்யவேண்டுவது ஒன்றே. உடன்பிறந்தானை கொல்வது” என்று அவன் சொன்னான். நான் அவனை நோக்கி நெஞ்சின் ஒலி முழக்கமிடக் கேட்டு அமர்ந்திருந்தேன். “ஆனால் ஒன்று! ஆனால் ஒன்று!” என்றான். “ஆனால் ஒன்று உண்டு. துலாவின் மறு எடை... மறுஎடை இல்லா துலா இல்லை! மறு எடை இல்லாத எதுவுமே இல்லை!”

அங்கு நின்றால் நானும் பித்தனாகிவிடுவேன் என்று எனக்குத் தோன்றியது. புரவியை தட்டினேன். ஆனால் என் உள்ளத்தை அப்புரவி அறிந்திருந்தது. அது அவனுடைய சொற்களுக்கு செவிகொடுக்க விரும்பியது. ஆகவே அது மிக மெல்ல காலெடுத்து வைத்து முன்னகர்ந்தது. அவன் ஓடி பின்னால் வந்து “ஆனால் ஒன்று, நாம் நம் உடன்பிறந்தானைக் கொன்று தெய்வங்களுக்கு பலியிட்டு அரியணையை அடையலாம். ஆனால் ஒன்று!” என்றான். எரிச்சலுடன் “செல்க!” என்றேன். அவன் அதை கேட்கவில்லை. “நாம் நம் மைந்தரை பலியிட்டு அந்தக் கொடையை நிகர்செய்ய வேண்டியிருக்கும்!” என்றான்.

என் உடலெங்கும் ஒரு துடிப்பு ஓடியது. “தெய்வங்களை இறக்கிக் கொண்டுவருவது எளிது. வந்த தெய்வத்தை இங்கிருந்து அனுப்ப வேண்டுமென்றால் நாம் மீண்டும் பலிகொடுக்க வேண்டியிருக்கும். முதற்பலியை சிறிதாக்கும்

மேலும் பெரிய பலியை. அத்தனை பேரும் அதை செய்திருக்கிறார்கள். தன் மைந்தரை, தன் கைகளாலேயே கொன்றிருக்கிறார்கள்" என்றான். சிரித்தபடி தொடர்ந்தான் "அல்லது நம் மைந்தர் நம்மை பலிகொடுக்க வேண்டும். பலி பலியால் ஈடு செய்யப்படுகிறது. ஆகவே..."

நான் குதிமுள்ளை ஓங்கி புரவியின் விலாவில் அடித்தேன். செல்க என்று கூவினேன் அது கனைத்தபடி கால் தூக்கி சற்றே சுழன்று முழு விசையில் பாலைவனம் நோக்கி வால் சுழற்றி புழுதி கிளப்பி பாய்ந்தது. நிலவில் புழுதி பின்னால் செல்வதை அப்பித்தனாக அங்கு நின்று நான் பார்த்துக்கொண்டிருந்தேன்.

நான் துவாரகையை அடைந்து நேராக கணிகரை பார்க்கத்தான் சென்றேன். துவாரகைக்குள் நான் நுழைவதை பிறர் அறியாமல் இருப்பது நன்று என்று எனக்குத் தோன்றியது. ஆகவே முடிந்தவரை புரவியைச் செலுத்தி புலரியிலேயே தோரணவாயிலை கடந்தேன். அங்கு காவல்மாடத்தில் களைத்த புரவியை விட்டுவிட்டு புதிய புரவியை பெற்றுக்கொண்டு முழு விசையில் அதை ஓட்டி துவாரகையின் தெருக்களினூடாக விரைந்து அரண்மனையை அடைந்து கணிகரின் சிறுகுடிலை நோக்கி சென்றேன்.

கணிகர் அவ்வேளையில் விழித்திருப்பார் என்று எனக்கு தெரிந்திருந்தது. அவர் மிகக் குறைவாகவே துயில்பவர். அதிலும் முன்னிரவில் ஓரிரு நாழிகைப்பொழுது. எஞ்சிய பொழுதெல்லாம் விழித்திருக்கிறார். பெரும்பாலும்

விண்மீன்களைப் பார்த்தபடி இருட்டில் தனித்திருக்கிறார். அவர் விண்மீன்களை எண்ணி கணக்கிடுபவர் என்று ஏவலர்கள் ஏளனமாக சொன்னார்கள்.

நான் அவர் குடில் வாயிலில் சென்று நின்று "அந்தணரே, நான் பிரதிபானு" என்றேன். கணிகர் மெல்லிய குரலில் "வருக!" என்றார். நான் உள்ளே சென்று அமர்ந்தேன். என் கண்களை ஒருகணம் பார்த்துவிட்டு "கூறுக!" என்றார். நான் நிகழ்ந்ததை கூறினேன். பதறும் சொற்களுடன். சொல்லச்சொல்லத்தான் என்ன செய்துவிட்டேன் என்று எனக்கு புரிந்தது. அதுவரை அதை நிகழ்த்துகையில் நிகழ்காலத்திலும் அதன் விளைவுகளை எண்ணுகையில் எதிர்காலத்திலுமாக பிளந்து நின்றிருந்தேன். ஆகவே அதனை முழுமையாக உணராமலிருந்தேன். அப்போது முழுமையாக அக்கணத்தில் குவிந்தேன். அதை முழுதுற உணர்ந்தேன்.

"ஒவ்வாப் பிழை செய்துவிட்டேனா என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால் வேறு வழியில்லை" என்றேன். அவர் புன்னகைத்தார். அப்பேரழகுப் புன்னகை அத்தருணத்தில் என் மேல் நெய்யூற்றி தீ வைத்ததுபோல் உணரச்செய்தது. "என்ன?" என்றேன். அவர் "நன்று!" என்றார். "ஏன்?" என்றேன். "இவ்வண்ணமே இது நிகழும். எண்பதின்மரில் ஒரு பகுதியினர் கொல்லப்படுவார்கள். கொல்பவர்களே இங்கு முடிகொள்ள இயலும்" என்றார். நான் அவரை அச்சமும் பதற்றமுமாக நோக்கிக்கொண்டிருந்தேன். "ஆம், அது அவ்வாறுதான்" என்றார். "முன்பும் அவ்வாறுதான் நிகழ்ந்துள்ளது. எண்பதின்மரில் பெரும்பாலானவர்கள் கொல்லப்படுவார்கள்."

"அவர்களைக் கொல்லும் துணிவு எவருக்கும் இல்லையென்பதனால்தான் இதுநாள் வரை இங்கே எதுவும்

நிகழாமல் ஒருவருக்கொருவர் முட்டிக்கொண்டிருந்தீர்கள். ஏனெனில் நீங்கள் எல்லோரும் இளைய யாதவரின் மைந்தர்கள். இளைய யாதவரை வெறுப்பவர்கள்கூட உள்ளூர அவரை வழிபடுபவர்களே. அவரை பேருருவாக்கி அதனூடாக தங்களை பேருருவாக்கிக்கொண்டவர்கள் அவர்கள். அவரை வெறுப்பதனூடாக அவரை கூர்ந்து அறிபவர்கள். ஒருகணமேனும் அவராக நின்று உலகனைத்தையும் உணர்ந்தவர்கள். ஆகவே இளைய யாதவரின் எதிரிகளால் நீங்கள் கொல்லப்படமாட்டீர்கள். ஆனால் உடன்பிறந்தாரால் ஒருவருக்கொருவர் கொல்லப்படுவீர்கள்."

"ஏனெனில் நீங்கள் எவரும் அவரை உணர்ந்ததில்லை. தந்தையென அவரை நிறுத்திவிட்டமையாலேயே அவரென்றாக இயலாதவர்களாகிவிட்டீர்கள். பிறர் உங்களை தந்தையின் சிறு வடிவம் என்று பார்ப்பதனாலேயே அதிலிருந்து வேறுபடுத்திக் காட்டவேண்டிய பொறுப்பை இளவயதிலேயே ஏற்றுக்கொண்டவர்கள் ஆகிவிட்டீர்கள். உங்களால் இயலாதது அதுவே, நீங்கள் உங்கள் தந்தையென்றாகி அவர் கண்டதை காணவே முடியாது" என்றார் கணிகர். "ஆகவே நீங்கள் ஒருவரை ஒருவர் கொல்வீர்கள். இது முதற்கொலை, நன்று. இவ்வண்ணம் தொடங்கியது மிகவும் நன்று."

"அக்கொலை முன்னரே நிகழ்ந்திருக்கவேண்டும். இத்தனை நாள் இங்கு ஒன்றும் நிகழாமல் நாகங்கள் ஒன்றையொன்று கவ்வி ஒரு திரளென்றாகி நெளிந்துகொண்டிருப்பதுபோல் நீங்கள் இருந்தமைக்கான ஏது ஒன்றே. ஒருவரை ஒருவர் கொல்ல அஞ்சினீர்கள். இதோ முதல் தடையை கடந்துவிட்டீர்கள். இனி கொலைகள் நிகழும். நிகழ்ந்தபடியே இருக்கும்" என்றார். நான் "அச்சமூட்டாதீர்கள், ஆசிரியரே"

என்றேன். “அஞ்சுவதா?” என்று அவர் சிரித்தார். “அது மானுடருக்கு தெய்வங்கள் வகுத்த எல்லை. முதலில் அவ்வெல்லையை எவர் கடக்கிறார்களோ அவர்களே மானுடர் அல்லாமலாகிறார்கள். தெய்வங்களின் ஆற்றல் கொண்டவர்கள் ஆகிறார்கள்.”

“நீ கடந்துவிட்டாய். நீ ஆற்றல் கொண்டவனாகிவிட்டாய்” என்றார். அப்போது மைந்தனிடம் பேசும் கனிந்த தந்தையென அணுக்கம் கொண்டிருந்தார். “இனி உன்னால் இயலும். எஞ்சிய அனைவரையும் கொன்று துவாரகையின் மணிமுடியை சூடவேண்டும் என்றால்கூட உன்னால் இயலும். அரசன் மானுடனல்ல, ஒரு வகையான தெய்வம். மானுடனை கட்டுப்படுத்தும் குருதியும் அளியும் அறமும் அவனை கட்டுப்படுத்துவதில்லை. மானுடரை ஆட்டுவிக்கும் சாவு அவனை அச்சுறுத்துவதில்லை. மானுடருக்கு அப்பால் எழுபவனே மானுடனை ஆளமுடியும். மானுடர் தயங்கும் இடங்களில் விழியிமை சலிக்காது கடந்து செல்பவன் அரசன். மானுடர் தலைக்கு மேல் எழுந்து நின்று அவர்களை நோக்கி பேசுபவன்.”

“இங்கு மானுடரின் கால்கள் தயங்கும் இறுதி எல்லைகள் மூன்று. உற்றார் குருதி காண்டல், நம்பிக்கை வஞ்சம், எளியோரை கொல்லுதல். அம்மூன்றையுமே செய்பவர்களே இதுவரை மன்னர்களாக இருந்திருக்கிறார்கள். பல்லாயிரம் படைவீரர்களை அவர்கள் கொலைக்களத்திற்கு அனுப்பினார்கள். அவர்கள் அனைவரும் தந்தையர், கணவர், உடன்பிறந்தார், மைந்தர் என்பதை அவர்கள் அறிவார்களாயினும் கருத்தில்கொள்வதில்லை. குடிப்பேரவையில் குலமூதாதையரைத் தொட்டு ஆணையிட்டு எடுத்த

வஞ்சினத்தையும் அளித்த சொல்லுறுதியையும் கைவீசி இல்லையென்றாக்கி கடந்து செல்பவனே பாரதவர்ஷத்தின்மேல் கோல்கொள்ள முடியும்."

"தன் மைந்தனை, தன் தந்தையை கொல்லும் திறன்கொண்டவன்தான் பிறரில் அச்சத்தை நிறைக்கிறான்" என்று கணிகர் தொடர்ந்தார். "மானுடன் தெய்வமாகும் தருணம் இது. மானுடரை ஆளும் அனைத்து விசைகளையும் எல்லைகளையும் கடந்து செல்பவன் மாவீரன். நீ முதல் கட்டை அவிழ்த்துவிட்டாய். வென்று மேல்மேலே செல்லவிருக்கிறாய்." விழிதாழ்த்தி "நான் பதறிக்கொண்டிருக்கிறேன், கணிகரே" என்றேன். "எண்ணுக, நீ சந்தித்த அந்த முடிச்சை எவராலும் அறுக்க இயலாது!" என்றார் கணிகர்.

"ஒரு யவனநாட்டுக் கதை உண்டு. வருவதுரைக்கும் தெய்வங்கள் வகுத்திருந்தன, மிகச் சிக்கலாக கட்டப்பட்ட பன்னிரு அடுக்காலான முடிச்சொன்றை அவிழ்த்தால் அவன் அரசனாகலாம் என்று. அம்முடிச்சு ஒன்றை அவிழ்த்தால் பிறிதொன்று தானாக விழும் தன்மை கொண்டது. ஆகவே அதை எவராலும் அவிழ்க்க இயலவில்லை. பெரும்தத்துவ ஞானியரே அதை அவிழ்க்க முடியும், அவர்கள் முடிசூட விரும்புவதில்லை. அதை அவிழ்ப்பதற்கான கணக்குநூல்கள் பல இயற்றப்பட்டிருந்தன. அவற்றைப் பயின்று அவற்றை அவிழ்க்க முயலும் பல இளைஞர்கள் அங்கிருந்தனர். அப்போது அங்கு ஒருவன் வந்தான். துணிவுள்ளவன், எல்லைகளை கடப்பவன், தெய்வமாகும் தகுதி கொண்டவன். தன் உடைவாளை உருவி அம்முடிச்சை துண்டுகளாக வெட்டி

வீழ்த்தினான். அவனை தெய்வமென்று தெய்வங்கள் ஏற்றுக்கொண்டன. அவன் அரசனானான்.”

“யவனத்தில் முடிசூடும் ஒவ்வொரு அரசனைப் பற்றியும் இந்தக் கதை சொல்லப்படுகிறது” என்றார் கணிகர். “நீ முதல் முடிச்சை அறுத்துவிட்டிருக்கிறாய். நீ வெல்வாய். இன்னும் அறுக்க வேண்டிய முடிச்சுகளை காண்பாய். இதுவே வழி என்று உணர்க!” நான் அச்சொற்களால் மெல்ல மெல்ல மீண்டு வந்தேன். “அவன் கழுத்தை அறுக்கையில் என் கை நடுங்கவில்லை” என்று நான் சொன்னேன். “அத்தருணத்தில் அதை கடந்து செல்லவேண்டும் என்பதே என் எண்ணமாக இருந்தது, அதனாலாக இருக்கலாம். ஆனால் என் கை நடுங்கவில்லை என்பது எனக்கு பேரச்சத்தையே இப்போது அளிக்கிறது. என்னை எண்ணியே நான் பதற்றம் கொள்கிறேன்” என்றேன்.

“நீ உன்னை எண்ணி பெருமிதம் கொள்ளவேண்டிய தருணம் இது. மகிழ்க! அனைத்தும் தொடங்கிவிட்டன. அனைத்தும் விசை கொண்டுவிட்டன. இந்த ஆடலில் முதல் கருவை நீக்கி முதல் வெற்றியை நீ அடைந்திருக்கிறாய்” என்று கணிகர் கூறினார்.

# கல்பொருசிறுநுரை - 44

**பகுதி நான்கு : அலைமீள்கை – 27**

மூத்தவர் ஃபானுவை சந்திக்கச் செல்வதற்கு முன்னர் அங்கு என்ன சொல்லவேண்டும் என்பதை ஒருமுறை கணிகரிடம் சொல்லி நா பழகிக்கொண்டேன். ஒரு செயலை செய்வதற்கு முன்னர் அதை உள்ளத்தில் ஒருமுறை செய்து பார்ப்பது நன்று என்று பலமுறை கணிகர் என்னிடம் கூறியிருக்கிறார். ஒன்றை சொல்வதற்கு முன் ஒருமுறை அதை நாவால் சொல்லிப்பார்க்க வேண்டும் என்று அவர் கூறியபோது "நான் அதை உள்ளத்தில் சொல்லிப்பார்ப்பதுண்டு" என்றேன்.

"அல்ல. உள்ளம் வேறு, நா வேறு. உள்ளத்தில் நூறு சொற்கள் ஓடுமென்றால் அதில் இரண்டு சொற்களே நாவிலெழும். நா பருப்பொருளால் ஆனது, உள்ளம் அவ்வாறல்ல" என்று கணிகர் சொன்னார். "ஒன்றை நாவால் உரைக்கப் போகிறீர்கள் என்றால் அதை முன்னரே ஒரு முறை நாவால் கூறிவிடுங்கள். நாவிற்கு உள்ளத்திலிருந்து சொற்கள் எழும்போது பல சொற்கள் நாவுக்கு எத்தனை அரியவை என்று தெரியும். பல சொற்களை நா சொல்லத் தயங்குவது தெரியும். குறிப்பாக நாவால் பொய்யுரைக்கப் போகிறோம் எனில் அப்பொய்யை உரக்க ஓரிரு முறை ஏற்கெனவே நாவால் உரைத்திருக்கவேண்டும்."

"முதன்முறையாக நாவில் பொய் எழும்போது உள்ளத்தின் விசையை சென்று தொட இயலாமல் நா வளைந்து தயங்குவதை அறிந்த கண்கள் உடனே தொட்டெடுத்துவிட முடியும்." கணிகர் புன்னகைத்து "அத்துடன் ஒன்று, நாவால் உரைக்கப்படுமெனில் அது வெளியே பருப்பொருளில்

நிகழ்ந்துவிடுகிறது, பருப்பொருளைப் பார்த்து அதை பின்தொடர்வது உள்ளத்தின் இயல்பு. நாவால் உரைத்த ஒன்றை உள்ளம் தானும் நம்பும். ஒரு பொய்யை நாவால் பலமுறை உரையுங்கள், அதன் பின் உங்கள் உள்ளம் அதை மெய்யென்று நம்ப ஆரம்பிப்பதை பார்ப்பீர்கள்" என்றார்.

நான் "எவரிடம் உரைப்பது?" என்றேன். "மிகச் சிறந்த எதிர்முனை என்பது ஆடிப்பாவையே. ஆடியில்லையெனில் நிழல். நமக்கு நாமே சொல்லும் பொய்கள் அளவுக்கு தூய்மையானவை இவ்வுலகில் வேறேதும் இல்லை. நமக்கு நாமே சொல்லும் பொய்கள் உண்மையில் பொய்களே அல்ல. இங்கு நம்மை சூழ்ந்திருக்கும் இப்புவி என்பது உண்மையில் நமக்கு நாமே சொல்லிக்கொண்டிருக்கும் ஒரு மாபெரும் பொய் அல்லவா? அப்பொய்யில் பிறிதொரு பொய்யை கலக்கிறோம். அப்பொய்யை சற்று நீட்டிக்கொள்கிறோம். எனவே அது மெய்யென்று எப்பொருளில் பொதுவுலகில் புழங்குகிறோமோ அதுவே ஆகும், கூறுக!" என்றார்.

"இங்கு ஆடிப்பாவை நோக்கி கூறுவதா?" என்று நான் புன்னகையுடன் கேட்டேன். "என்னிடம் கூறுக! இப்போது உங்கள் ஆடிப்பாவையென நான் அமைகிறேன்" என்றார். எனது தரப்பை மிக விரிவாக அவரிடம் கூறினேன். அவர் கூறியது போலவே நாவால் அதை உரைக்கும்போதுதான் அதுவரை பலமுறை உள்ளத்தில் எண்ணி வந்த அந்த நடப்போவியம் எத்தனை பிழைகள் கொண்டது என்று தெரிந்தது. அதை ஒவ்வொன்றையும் முழுமைப்படுத்திக்கொண்டேன். எவ்வண்ணம் அது நிகழ்ந்தது, அப்போது எப்படி நான் உணர்ந்தேன், அந்தத் தருணக்காட்சியின் ஒவ்வொரு சிறு நுட்பங்கள், ஒவ்வொரு முகங்களின் எதிர்வினைகள். அது

மெய்யாகவே நடந்தது என்பதைப்போல் அதன் மீது எனது உளப்பதிவு.

நான் பேசி முடித்ததும் கணிகர் தன் மின்னும் கண்களால் என்னைப் பார்த்தபடி அமர்ந்திருந்தார். பின்னர் "என்னை பிறிதொருவராக எண்ணுங்கள். மீண்டும் ஒருமுறை கூறுங்கள்" என்றார். "பிறிதொரு முறையா?" என்று நான் சொல்ல "கூறிப் பாருங்கள், ஏன் என்று தெரியும்" என்றார். அவரை முதலில் என் ஆடிப்பாவை என்று நினைத்து சொல்லிக்கொண்டிருந்தேன். இம்முறை மூத்தவர் ஃபானு என்று நினைத்து சொன்னேன். சொல்லச் சொல்ல முன்னர் நான் சொல்வது மேலும் குறுகுவதை, கூர்கொள்வதை, சரியான சொல் சேர்வதை கண்டேன். "ஆம், பாதியளவாகிவிட்டது" என்றேன்.

"பொய் சொல்பவர் இயற்றும் பிழைகளில் முதன்மையானது ஒன்றுண்டு. ஒன்றை சொல்லி வருகையிலேயே அது சொல்லொழுங்கின்படி அமைகிறதா என்று அவர் உள்ளம் பார்த்துக்கொண்டிருக்கும். ஒரு பிழையை கண்டுபிடிப்பார். அவ் இடைவெளியில் ஒரு புதிய செய்தியை கொண்டு வந்து அமைப்பார். ஒரு கதைக்குள் துணைக்கதைகளை ஒருவர் அமைக்கிறார் என்றாலே அது பெரும்பாலும் பொய்தான்" என்று கணிகர் சொன்னார். பிறகு "மீண்டும் ஒருமுறை சொல்க! முற்றிலும் புதிய ஒருவரிடம்" என்றார். நான் புன்னகைத்து "இம்முறை மூத்தவர் பிரத்யும்னனிடம்" என்றேன். "வேண்டாம். உங்கள் கதையை கேட்கப்போகிறவர் சுஃபானு, அவரிடம் கூறுக!" என்றார்.

நான் மீண்டும் கூறியபோது அந்தக் கதை கூர்மையை இழந்து இயல்பான அலைவுகொண்டு எளிய அன்றாடச் சொற்களுடன் மெய்யென்றே ஆகிவிட்டிருந்தது. சொல்லி முடித்தவுடன்

நானே மெய்யான உணர்வுகளுக்கு ஆளாகி முகம் குழைந்து, விழிகள் நனைந்து, உடலெங்கும் பரவிய மென்துடிப்புடன் அமர்ந்திருந்தேன். என் உணர்வுகளை வென்று இயல்புநிலைக்கு நான் மீள சற்று நேரமாகியது. கணிகர் "ஒன்றை திரும்பத் திரும்பச் சொல்லுகையில் அதிலிருந்து நீங்கள் விலகியாகவேண்டுமல்லவா? ஒன்றை ஒப்பிக்கத் தொடங்கவேண்டுமல்லவா?" என்றார். "ஆம், அவ்வாறுதான் நான் எண்ணியிருந்தேன். ஆனால் என் உணர்வுகள் மிகுந்தபடியே செல்கின்றன" என்றேன்.

"யாதவரே, காட்சிகளும் பொருட்களும் சொற்களாகின்றன. எனில் சொற்களும் திரும்ப அவ்வாறே ஆகக்கூடும் அல்லவா?" என்றார். "நீங்கள் இந்நிகழ்வுகளை உள்ளத்தில் மெய்யென நிகழ்த்திக்கொண்டு அதை சொல்கிறீர்கள். மீள மீள நிகழ்வது மெய்யென்றே ஆகும். இம்முறை அதை அரசவையில் கூறினால் உங்கள் உணர்வுகள் மெய்யாக இருக்கும். உங்கள் நா தயங்காது. ஏனெனில் உங்கள் ஆழம் இதை மெய்யென்று நம்பிக்கொண்டிருக்கும். மிகச் சிறந்த பொய்யென்பது சொல்பவனால் நம்பி கூறப்படுவது" என்று உரைத்து "நலம் சூழ்க!" என்றார்.

நான் எழுந்துகொண்டு தலைவணங்கி "பயிற்சிக்கு நன்றி, ஆசிரியரே. ஆனால் என்றேனும் இந்தத் திறனை நான் உங்களிடம் பயன்படுத்தினால் எளிதில் கண்டடைவதற்கு ஒரு வழிமுறையை நீங்கள் வைத்திருப்பீர்களல்லவா?" என்றேன். அவர் நகைத்து "ஆம், அவ்வண்ணம் ஒரு முறை இருந்தால் அதை உங்களிடம் கூறமாட்டேன் என்றும் தெரிந்திருக்குமே" என்றார். நான் நகைத்து "மெய்" என்றேன்.

மூத்தவர் ஃபானுவின் அவையில் அப்போது சுஃபானுவும் ஸ்வரஃபானுவும் பிரஃபானுவும் ஃபானுமானும் சந்திரஃபானுவும் இருந்தனர். நான் உள்ளே நுழைந்து தலைவணங்கினேன். அவர் என்னை அமரும்படி சொன்னார். நான் செல்லும் வழியிலேயே அச்சொற்களை சொல்லத் தொடங்கிவிட்டிருந்தமையால் மெய்யான உணர்வுகளுக்கு ஆளாகி என் உடல் பதறிக்கொண்டிருந்தது. அமர்ந்து பின்னர் மீண்டும் எழுந்து கைகள் அலைபாய உடைந்த குரலில் கண்ணீருடன் "தீதொன்று நடந்துவிட்டது மூத்தவரே, அதை தங்களிடம் அவ்வாறே சொல்ல வேண்டுமா அன்றி வேறெவ்வகையிலும் அதை உரைப்பதா என்று எனக்கு தெரியவில்லை. அதன் அரசியல் விளைவுகளைக் குறித்து கணிகரிடம் பேசிவிட்டுதான் இங்கு வருகிறேன். ஏனெனில் நிகழ்ந்தது எளிய ஒன்றல்ல" என்றேன்.

"கூறுக!" என்றார் ஃபானு. ஆனால் தன் பதற்றத்தை அவரால் மறைக்கமுடியவில்லை. நான் என்னை சொல்லடக்கி, உணர்வுகளை வெல்ல சற்று நேரம் இறுகி உடல் குறுகி அமர்ந்திருந்தேன். பின்னர் "மூத்தவரே, பிரத்யும்னனின் இளையோன் விசாரு கொல்லப்பட்டான், ருக்மியின் படைநிலையில்" என்றேன். ஃபானு "என்ன!" என்றார். அவர் அதை எதிர்பார்க்கவில்லை. அவருக்கு அங்கிருந்து பறவைத்தூது வரவில்லை என்று கண்டுகொண்டேன். "கூறுக!" என்றபடி சுஃபானு எழுந்தார். "நான் அவனை ருக்மியின் அவையில் பார்த்தேன்" என்றேன். "எனக்கு முன்னரே அவன் அங்கே சென்று சேர்ந்திருக்கிறான். இங்கிருந்து ஒரு தூது என

அவனை அனுப்பியிருக்கிறார்கள்.” ஃபானு “யார்?” என்றார். “அறியேன், பிரத்யும்னன் என எண்ணினேன், பின்னர் சுதேஷ்ணன் என கண்டடைந்தேன்” என்றேன்.

“கூறுக!” என்றார் சுஃபானு. “நான் செல்லும்போது ருக்மியின் அவையில் அவன் இருந்தான். ருக்மியிடம் யாதவ மைந்தர் அனைவரும் சேர்ந்து தங்களுக்கு முடிசூட்டுவது என எடுத்த முடிவை நான் சொல்லிக்கொண்டிருக்கும்போது அவன் பேச்சுக்குள் நுழைந்தான். அம்முடிவை பிரத்யும்னன் ஏற்க இயலாது என்றான். பிரத்யும்னன் அவனிடம் தனியாக வேறொரு செய்தியை அனுப்பியிருப்பதாக அப்போதுதான் அறிந்தேன். ‘மாதுலரே, நான் ஏற்கெனவே சொன்னேன். இது எண்பதின்மரும் ஏற்றுக்கொண்ட முடிவு அல்ல’ என்றான். ‘அவ்வண்ணம் வரும் தூதுகளை ஏற்கவேண்டாம்’ என்றான். ருக்மி எளியவர் என அறிந்திருப்பீர்கள். அவர் குழம்பி என்னை பார்த்தார்.”

“நான் அந்த சூழ்ச்சி எனக்குத் தெரியாது என்றேன். எண்பதின்மரும் இருந்த அவையில் எடுத்த முடிவு நான் உரைப்பது. அரசுமுறையாக எனக்கு அறிவிக்கப்பட்டதை இங்கு அறிவிக்கிறேன். முடிவெடுப்பது தங்கள் உரிமை. நான் அதில் தலையிடப்போவதில்லை என்றேன். சுதேஷ்ணனின் செய்தியுடன் தான் வந்திருப்பதாக அவன் மீண்டும் கூறினான். ருக்மி அவனிடம் ‘சற்று பொறு, நான் இப்பேச்சை முடித்துவிட்டு வருகிறேன்’ என்றார். அவன் சிற்றறைக்கு அனுப்பப்பட்டான். அதன்பின் என்னிடம் ‘அங்கு நடந்தது என்ன என்பதை கூறுக!’ என்றார். நான் மிக விரிவாக விளக்கினேன். ருக்மி கூர்ந்து அவற்றை கேட்டார்.”

“சாத்யகியும் கிருதவர்மனும் ஒருங்கிணைந்து நம் தரப்பில் நின்றிருந்ததை நான் சொன்னதுமே அவர் விழிகள் மாறிவிட்டன. பிரத்யும்னனும் அநிருத்தனும் இணைந்து நமக்கு ஆதரவு தெரிவிப்பதையும் சொன்னேன். அனைத்து யாதவ மைந்தரும் ஒருங்கிணைந்திருப்பதை கூறினேன். அவர் தளர்ந்து ‘ஆம், இனி ஒன்றும் செய்வதற்கில்லை. ஒருவேளை உளவிலக்கம் கொண்டு பிரத்யும்னன் மட்டும் தனித்திருந்தால்கூட பிற ஏழு பேருக்கு எதிராக எதுவும் செய்துவிட இயலாது’ என்றார். ‘ஆம், அதுவே அரசியல்நிலைமை. வேறு சொற்களுக்கு செவியளிக்கவேண்டாம்’ என்று நான் சொன்னேன்.”

“ருக்மியால் சொல்கோத்துக்கொள்ள இயலவில்லை. அவர் என்னிடம் ‘நேரடியாக ஒன்று கேட்கிறேன். நான் இதில் எதை பெறுவேன்?’ என்றார். ‘பிரத்யும்னன் தென்திசையை ஆள்வதற்கு அனுப்பப்படுவார். அவர் தங்கள் மருகர்’ என்றேன். ‘ஆம், ஆனால் பிரத்யும்னனை நான் ஆதரிக்காமல் இருந்தால் ஃபானுவுக்கு ஆதரவளித்தால் விதர்ப்பத்திற்கு எவை அளிக்கப்படும்?’ என்றார். அத்தருணத்தில் நான் தங்கள் குரலாக மாறினேன். ‘விதர்ப்பத்திற்கு தனியுரிமை அளிக்கப்படும். ஒரு தருணத்திலும் விதர்ப்பம் நேரடியாக துவாரகைக்கு கப்பம் கட்ட வேண்டியிருக்காது. வருங்காலத்திலும் விதர்ப்பத்தின் இளவரசியர் துவாரகையின் அரசியராவார்கள்’ என்றேன்.”

“ருக்மி எதிர்பார்த்திருந்தது அதுவே. அவர் மகிழ்ந்து ‘அது போதும். நான் இம்முடிவை ஆதரிக்கிறேன். மணிசூட்டு விழாவுக்கு நான் வந்து கலந்துகொள்கிறேன்’ என்று சொன்னார். ‘என் மூத்தவரின் பொருட்டு உங்களை வணங்குகிறேன். விதர்ப்பம் துவாரகையுடன் அணுக்கமாக என்றும்

இருக்கவேண்டும்' என்று சொல்லி நான் வெளிவந்தேன். என் அறைக்கு சென்றேன். அங்கு துயின்றுகொண்டிருக்கையில் என்னைச் சூழ்ந்து படைகள் நிலைகொள்வதன் ஓசையை கேட்டேன். எழுந்து பாடிவீட்டின் சிறு விலக்கினூடாக வெளியே பார்த்தபோது என் குடிலைச் சுற்றி காவலர்கள் நின்றிருந்தனர்."

"என்ன நிகழ்கிறது என்று எனக்கு புரிந்தது. என்னை காவலில் வைத்திருக்கிறார்கள். நான் அங்கிருந்து எப்படியாவது தப்பிவிடவேண்டும் என்று எண்ணிக்கொண்டிருந்தேன். அப்போது காவல்வீரர்களில் ஒருவன் என் குடிலுக்குள்ளே வந்தான். 'தாங்கள் காவல் வைக்கப்பட்டிருக்கிறீர்கள். இந்தக் குடிலைவிட்டு அரசாணை வரும்வரை வெளியே செல்ல தங்களுக்கு உரிமையில்லை. அவ்வாறு வெளியே சென்றால் தங்களைத் தாக்கும் ஆணை எங்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது' என்றான். 'ஆம், புரிகிறது' என்று நான் சொன்னேன். அவன் குரல் மாறுபட்டு 'தாங்கள் உண்மையில் சிறைவைக்கப்படவில்லை. அரசர் சில முடிவுகளை எடுக்கிறார். அம்முடிவுகளை எடுக்கும் வரை அவரவர் அவரவர் இடத்திலேயே இருக்கும்படி ஆணையிடப்பட்டிருக்கிறார்கள்' என்றான்."

"அவன் பார்வையில் வேறொன்றை நான் கண்டேன். ஆகவே நான் அவனிடம் 'அரசர் எனக்கு சாதகமான முடிவை எடுத்தார். ஆகவே நான் இதை எதிர்பார்க்கவில்லை' என்றேன். 'தங்களுக்கு சாதகமான முடிவுதான் எடுக்கப்பட்டுள்ளது' என்று கூறிய அவன் விழிமாறி சற்று அருகே வந்து 'சற்று முன் பிரத்யும்னனின் இளையவர் கொல்லப்பட்டார்' என்றான். நான் திகைத்து 'கொல்லப்பட்டாரா? எவ்வண்ணம்?' என்றேன். 'அவரைக் கொன்றவன் நான்' என்று அவன் சொன்னான்.

‘அவரை சிறை வைக்கும்போது அவர் தப்ப முயன்றார் என்று சொல்லி கொன்றுவிடும்படி சொல்லப்பட்டது. ஆகவே சிறை வைப்பதற்கு முன்பே அவர் தலையை வெட்டிவிட்டோம். அச்செய்தியை நான் அரசரிடம் சொல்லபோகிறேன். இளவரசே, நான் தங்களுக்கு அணுக்கமானவனாகும் பொருட்டு இதை சொன்னேன். துவாரகையில் தாங்கள் செல்வாக்கு பெறும்போது எனக்குரிய இடத்தை தாங்கள் அளிப்பீர்கள் என்று நம்புகிறேன்’ என்றான்.

‘ஆம், இச்சொல் மதிப்புக்குரியது. நான் உன்னை எண்ணியிருப்பேன், ஆவன செய்வேன்’ என்றேன். பின்னர் ‘என்னை எவ்வகையிலேனும் வெளியே கொண்டுவிட முடியுமா?’ என்றேன். ‘நான் கொல்லப்படுவேன்’ என்றான். ‘நீ கொல்லப்படமாட்டாய். அதற்கான வழியை நான் சொல்கிறேன்’ என்றேன். ‘என்னுடன் வருக! என்னை பாலைவனத்தில் கொண்டுவந்து விடு. அங்கிருந்து நீயும் தப்பி அவந்திக்கு செல். உரிய பொழுதில் நீ துவாரகைக்கு வா’ என்றேன். அவன் என்னை அவர்களுடைய படைவீரன் உடையில் வெளியே அழைத்துவந்தான். அவனும் என்னுடன் வந்தான். என்னை கடத்திவிட்ட பின் அவன் அவந்திக்கு திரும்பிச்சென்றான். நான் தன்னந்தனியாக பாலையினூடாக பயணம் செய்து இங்கு வந்தேன்.”

மூத்தவர் ஃபானு பெருமூச்சுவிட்டார். நான் கூறிய முறைமையை நானே திருப்பி பார்த்தேன். ஏற்கெனவே சொன்னதுபோல ஒழுங்கான சொல்லடுக்காக அதை நான் சொல்லவில்லை. அங்கிங்காக தொட்டுத் தொட்டு சொன்னேன். ஆனால் உண்மையில் நிகழ்ந்தவற்றை திரும்பச் சொல்பவர்கள் அவ்வாறுதான் கூறுவார்கள். ஒன்றை கற்பனை செய்து

சொல்பவர்கள்தான் ஒழுங்கான போக்கில் சொல்வார்கள். பலமுறை கூறிவிட்டிருந்ததனால் அது மெய்யென்றாகிவிட்டது. மெய்யென்ற ஒன்றை சொல்லும்போது அவற்றின் உணர்வு சார்ந்தும், செய்திமையம் சார்ந்தும் அரிதென தோன்றுமிடங்களைத்தான் முதலில் தொட்டுச் சொல்வது நம் வழக்கம். ஆகவே நான் கூறியது உண்மையாக இருந்தது.

மூத்தவர் ஃபானு பதற்றம் அடைந்தார். கைகள் அலைபாய்ந்தன. "எனில் விசாரு எவருடைய தூதன்? சுதேஷ்ணனுடைய தூதனா?" என்றார். "ஆம்" என்றேன். "எதுவானாலும் எண்பதின்மரில் ஒருவனை அயலான் கொன்றிருக்கிறான், இதற்கு நாம் என்ன செய்யப்போகிறோம்?" என்று ஃபானு கேட்டார். "அதுதான் எனக்கு தெரியவில்லை. அந்த முடிவை தாங்கள் எடுக்கவேண்டும். ஆகவேதான் அதை முன்னரே சென்று கணிகரிடம் சொன்னேன். அவர் எண்ணிப்பார்த்து தங்களிடம் சொல்லச் சொன்னார். எம்முடிவையும் ஓராண்டில் அதன் விளைவென்ன என்று எண்ணி எடுக்கவேண்டும் என்றார்" என்றேன். "அவரிடம் எண்ணிச்சூழ்வதே உகந்தது என்பது என் கருத்து."

ஃபானு எழுந்து நிலைகொள்ளாமல் நடந்தார். "அனைத்தும் முறையாக நடந்துவிட்டன என்று எண்ணிக்கொண்டிருந்தேன். இவ்வாறு ஒன்று ஊடே வருகிறது. தொடக்கம் முதலே சுதேஷ்ணனுக்கு என் மேல் நம்பிக்கையின்மை இருந்தது. அதை நான் அறிவேன்" என்றார். சுஃபானு "அவ்வண்ணம் உள்ளோட்டங்கள் எட்டு அன்னையரின் மைந்தர்குழுக்களிலும் உள்ளன. அவற்றை எல்லாம் நாம் கருத்தில் கொள்ளமுடியாது. நாம் முடிசூட்டிக்கொண்ட பின் பேசி முடிக்கவேண்டியவை

அவை" என்றார். "நான் புரிந்துகொள்ள முடியாமலிருப்பது ஏன் ருக்மி விசாருவை கொல்ல ஆணையிட்டார் என்பதுதான்."

சற்று நேரத்திலேயே கணிகர் அவைக்கு கொண்டுவரப்பட்டார். மூத்தவர் ஃபானு அவரிடம் "அமைச்சரே, இங்கு நிகழ்ந்ததனைத்தையும் இளையவன் உங்களிடம் சொல்லியிருப்பான்" என்றார். "ஆம்" என்று அவர் சொன்னார். "சொல்லுங்கள், நாம் என்ன செய்வது? இத்தருணத்தில் எதைச் செய்தாலும் பிழையென்றாகும் என்று தோன்றுகிறது. இச்செய்தியை நாம் அவர்களிடம் தெரிவிக்க வேண்டுமா?" என்றார். கணிகர் "இல்லை, பிரத்யும்னனிடம் தெரிவிப்பதற்கு முன்பு நாம் தெளிவடைய வேண்டிய சில உண்டு" என்றார். "இந்த அவையில் நாம் அதை முடிவு செய்யவேண்டும்."

"கூறுக!" என்றார் ஃபானு. "தங்களுக்கு எதிராக சுதேஷ்ணனோ அல்லது பிறரோ சூழ்ச்சி செய்தால் அதை பொறுத்துக்கொள்ளப்போவதில்லை என முடிவெடுங்கள். அதை நீங்களே உறுதிகொள்ளுங்கள். அதன்பின் பிரத்யும்னனை இங்கு வரவழையுங்கள். அவரிடம் தனிப்பட்ட முறையில் இதை சொல்லுங்கள். ஏனெனில் அவருக்கு அணுக்கமான இளையோனாகிய சுதேஷ்ணனால் இந்தச் செயல் இயற்றப்பட்டிருக்கிறது. இளையவர் ருக்மியின் அவைக்குச் சென்றது பிரத்யும்னனின் அறிதலின்படியா இல்லையா என்று நமக்கு தெரியவேண்டும்" என்றார். ஃபானு "பிரத்யும்னனுக்கு தெரிந்திருக்க வாய்ப்பில்லை" என்றார்.

கணிகர் "இல்லை, பிரத்யும்னனுக்கு தெரிந்திருக்கும். பிரத்யும்னனுக்குத் தெரியாமல் அவ்வாறு ஓர் இளையவரை அனுப்ப இயலாது. ஆனால் பிரத்யும்னன் எதன்பொருட்டு அனுப்பினாரோ அதன்பொருட்டு அவர் அங்கு செல்லவில்லை.

பிரத்யும்னனிடம் ஒன்று சொல்லியிருக்கலாம், பிறிதொரு செய்தியை உண்மையில் அவர் கொண்டுசென்றிருப்பார்" என்றார். "ஆம், அதற்கே வாய்ப்புள்ளது. அவ்வாறே நிகழ்ந்திருக்கும்" என்றார் சுஃபானு. "ஆகவே பிரத்யும்னனை இங்கே வரவழைத்து பேசுவதே நன்று" என்றார் கணிகர். "அப்போது நான் உடனிருப்பது உகந்ததல்ல. நான் தனியறையில் இருக்கிறேன். நீங்கள் கேட்டதை அதே உணர்வுடனும் எண்ண அலைவுடனும் அவருக்கு கூறுங்கள். அவர் முடிவெடுக்கட்டும்."

"அவர் முடிவெடுப்பதென்றால்?" என்றார் ஃபானு. "சுதேஷ்ணனை என்ன செய்வதென்ற முடிவை பிரத்யும்னன்தான் எடுக்கவேண்டும்" என்று கணிகர் சொன்னார். "நன்று" என்றார் ஃபானு. ஏவலனை பிரத்யும்னனை வரவழைக்க அனுப்பிவிட்டு நிலைகொள்ளாமல் அறைக்குள் நடந்தார். ஏவலர் கணிகரை அணுக்கத்து அறைக்கு தூக்கிக்கொண்டு சென்றார்கள். நான் மூத்தவருக்குத் தலைவணங்கி விடைபெற்று கணிகருடன் சென்றேன். கணிகர் என்னிடம் புன்னகைத்து "அங்கிருந்து பறவைத்தூது ஏதேனும் பிரத்யும்னனுக்கு வந்திருக்குமென்றால் பிரத்யும்னன் இங்கு வருவதற்குள்ளாகவே செய்தியை அறிந்து முடிவெடுத்திருப்பார்" என்றார்.

நான் பதறி "பறவைத்தூதா?" என்றேன். "பறவைத்தூது வந்திருக்கவே வாய்ப்பு மிகுதி. அது வராமல் தடுப்பதற்கான வாய்ப்பனைத்தையும் நான் செய்திருந்தேன். பிரத்யும்னனின் அறையில் நமது ஒற்றர்கள் மூவர் இருக்கிறார்கள். பிரத்யும்னனுக்கு எந்தப் பறவைத்தூதும் இப்போது செல்லக்கூடாதென்று அவர்களுக்கு சொல்லி அனுப்பியிருந்தேன். அந்த வலை மிக உறுதியானது,

பறவைத்தூது வந்தால் அவர்களிடம் சிக்கிக்கொள்ளும்" என்றார். "ஆனால் ஒருவேளை அவ்வாறு சிக்கிக்கொள்ளவில்லை எனில் நாம் திட்டமிட்டது எதுவும் நிகழாது. நாம் பிறிதொன்றை எண்ணவேண்டியிருக்கும்" என்றார்.

"என்ன சொல்கிறீர்கள், கணிகரே?" என்று நான் பதறினேன். "அச்சம் வேண்டாம். ஏதாவது ஒரு வாய்ப்பு அமையும்" என்று அவர் சொன்னார். என்னால் அமர்ந்திருக்க இயலவில்லை. கைகள் நடுங்கிக்கொண்டிருந்தன. கண்ணீர் வரப்போவதுபோல் இருந்தது. தொண்டை அடைத்து எங்கிருக்கிறேன் என்று தெரியாத நிலையில் இருந்தேன். கைகளைக் கோத்து பீடத்தில் அமர்ந்து என் உடலுக்குள் குருதி ஓடிக்கொண்டிருந்த ஓசையை கேட்டுக்கொண்டிருந்தேன். மெல்லிய குறட்டையோசை கேட்டது. கணிகர் துயின்றுகொண்டிருப்பதை கண்டேன்.

அணுக்கத்து அறையில் பிரத்யும்னன் வரும் ஓசைகள் கேட்டன. மூத்தவர் ஃபானு அவரை வரவேற்பதும் பீடமளிப்பதும் ஓசைகளினூடாகவே காட்சியாகியது. கதவு திறந்து உள்ளே வந்த ஃபானுமான் "வருக, உங்களை அழைக்கிறார்!" என்று என்னை நோக்கி சொன்னான். நான் எழுந்து அவ்வறைக்குச் சென்று பிரத்யும்னனை பார்த்தேன். அவர் முகத்திலிருந்து எனக்கு எதையும் உய்த்துணர முடியவில்லை. ஆனால் ஒருகணத்தில் என்ன நிகழ்ந்தது என்று தெரியவில்லை. நான் நெஞ்சுடைய அழுதபடி நிலத்தில் அமர்ந்தேன். தலையில் ஓங்கி அறைந்துகொண்டு அழத்தொடங்கினேன்.

பிரத்யும்னன் பாய்ந்து வந்து என் கைகளைப்பற்றி "என்ன? என்ன?" என்றார். "இளையவன்! இளையவன்!" என்று நான் சொன்னேன். "நம் இளையவன் ருக்மியின் படைவீரர்களால்

கொல்லப்பட்டான். அவனைக் கொன்றவனே என்னிடம் சொன்னான். என்னையும் சிறைவைத்திருந்தார்கள். நான் தப்பிவந்தேன்." என்னால் எதையும் கோவையாக சொல்ல இயலவில்லை. "யார் கொன்றது?" என்றார் பிரத்யும்னன். "ருக்மியின் ஆணைப்படி அவருடைய படைவீரன்!" என்றேன். "எதன் பொருட்டு?" என்றார். "அவன் அவருடைய மருகன், அவர் மகளை மணந்தவன்."

"மூத்தவரே, அவன் தங்களிடமிருந்து ஒரு செய்தியுடன் சென்றிருக்கிறான். அதற்கு மாறான செய்தியுடன் நான் சென்றேன். ஆகவே இது நடந்தது" என்றேன். "தவறுதலாகவா?" என்று அவர் கேட்டார். "அறியேன். முழுச் செய்தியும் எனக்கு தெரியவில்லை. ஏன் இதை செய்தார்கள் என்று என்னால் உணரக்கூடவில்லை. நான் உயிருடன் தப்பியதே மிக அரிதான ஒன்றென்று எனக்கு தோன்றுகிறது" என்றபின் நான் தளர்ந்து தரையிலேயே படுத்துவிட்டேன். "இளையவனை கொண்டு செல்க" என்று ஃபானு சொன்னார். என்னை இருவர் தூக்கி அறைக்கு கொண்டு சென்றனர்.

கணிகர் முன் நான் அமர்ந்து மீண்டும் அழுதுகொண்டிருந்தேன். மெல்லிய குரலில் "நல்ல அழுகை!" என்று அவர் சொன்னார். நான் பெருமூச்சுடன் "ஏன் அழுதேன் என்றே தெரியவில்லை. இங்கிருக்கையில் அஞ்சி நடுங்கிவிட்டேன். பிரத்யும்னன் அனைத்தையும் அறிந்து வந்திருந்தாரெனில் என் வாழ்வு இந்த அவையிலேயே முடியும். அதை எண்ணியபோது என் அகம் உடைந்துவிட்டது" என்றேன். "ஆகவே அதற்காகத்தான் அழுகை?" என்றார் கணிகர். "இல்லை, அந்த அழுகை அப்போது உண்மையானது. உடன் வந்த சொற்கள் உண்மையானவை"

என்றேன். "ஆம், அதை பிரித்தறிய மனிதர்களால் இயலாது" என்று கணிகர் சொன்னார்.

நான் திடுக்கிடலுடன் கணிகரை பார்த்தேன். இத்தகைய கூர்மைகொண்ட ஒரு மனிதரை தெய்வங்கள் அன்றி எவரும் எதிர்கொள்ள முடியுமா என்ற திகைப்பு எனக்கு ஏற்பட்டது. அக்கணமே வாளை உருவி அவர் கழுத்தை வெட்டி வீசிவிடவேண்டும் என்றும் தோன்றியது. மனிதர்களை முற்றழிக்கக் கூடிய ஒருவர் அவர். தெய்வங்களுக்கு நிகரான அழிவை நிகழ்த்த வல்லவர். கணிகர் "என்னிடம் ஏதேனும் ஒரு தருணத்தில் என் கழுத்தை வெட்டவேண்டும் என்று எண்ணாதவர்கள் மிகக் குறைவு" என்றார். நான் திகைக்க "நீங்கள் அவ்வாறு எண்ணினீர்கள், நன்று. அவ்வாறு எண்ணுபவர்களை நான் வெறுப்பதில்லை. அவர்களுக்கும் உதவுவேன்" என்றார்.

புன்னகையுடன் "ஏனென்றால் அவர்கள் என்னை அணுகி அறிவதனால்தான் அவ்வாறு எண்ணுகிறார்கள். எனது வழிகளை முற்றுணர்ந்த பின்னர் அவ்வாறு எண்ணுவதில்லை. நான் யார் என்று அறிந்தவர்களுக்கு வழிபடு தெய்வமாகவே நான் ஆவேன்" என்றார். நான் பெருமூச்சுடன் "மெய்யாகவே உங்களை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. நீங்கள் யார்?" என்றேன். கணிகர் புன்னகைத்தார். கதவு திறந்து ஃபானுமான் வந்து "மூத்தவர் தங்களை அழைக்கிறார்" என்றான். நான் எழுந்து பக்கத்து அறைக்கு சென்றேன்.

அங்கு ஃபானு அழுதுகொண்டு நின்றிருந்தார். தலையை கையில் தாங்கி பிரத்யும்னன் அமர்ந்திருந்தார். பிரத்யும்னன் என்னிடம் "நீ கேட்டவற்றை மீண்டும் கூறுக! சுதேஷ்ணனின் தூதுடன் அவன் வந்ததாகவா அவன் சொன்னான்?" என்றார்.

“ஆம், அவன் நிலைகுலைந்திருந்தான். உடைந்த குரலில் கூவினான். ‘அப்படியென்றால் சுதேஷ்ணனின் சொல்லுக்கு என்ன பொருள்? அவருக்கு நீங்கள் அளித்த சொல்லுறுதிக்கு என்ன பொருள்?’ என்றான்” என்றேன். “சுதேஷ்ணனின் சொல் என்றா?” என்றார் பிரத்யும்னன். “ஆம், தான் சுதேஷ்ணனின் தூதனென்றே அவன் சொன்னான்” என்றேன். பிரத்யும்னன் பெருமூச்சுடன் எழுந்து கொண்டார். “நன்று, இதை நான் எண்ணி முடிவெடுக்கிறேன்” என்றார்.

# ல்பொருசிறுநுரை - 45

## பகுதி நான்கு : அலைமீள்கை – 28

பிரத்யும்னன் கிளம்புவதற்கு முன்பு சுஃபானு "நாம் இங்கே பேசி முடிவெடுப்போம், மூத்தவரே. அதன்பொருட்டே நாம் இங்கே வந்தோம்" என்றார். பிரத்யும்னன் "ஆம், ஆனால் நான் சிலவற்றை சுதேஷ்ணனிடம் பேசவேண்டியிருக்கிறது" என்றார். "அதற்கும் முன்பு நீங்கள் இருவரும் மட்டும் அத்தனியறைக்குள் செல்லுங்கள். நீங்கள் மட்டும் பேசிக்கொள்ளுங்கள்" என்றார் சுஃபானு. "உங்களுக்குள் ஒருவருக்கொருவர் பிறிதெவரும் நுழைய முடியாத அணுக்கம் இருக்கவேண்டும்."

பிரத்யும்னன் ஒருகணம் எண்ணியபின் "ஆம்" என்றார். "வருக, மூத்தவரே!" என்றார். ஃபானு தயங்கியபடி எழுந்துகொண்டார். அவர்கள் அருகிருந்த சிற்றறைக்குள் சென்றனர். வெளியே அனைவரும் பதற்றத்துடன் காத்திருந்தனர். நான் அந்த எண்ணம் கணிகருடையது என்பதை உணர்ந்தேன். அதனால் என்ன பயன்? பிரத்யும்னனிடம் தனக்கு அணுக்கம் உள்ளது என்று ஃபானு நம்புவதற்கு மட்டுமே அது வழிவகுக்கும். எவ்வகையிலும் அது பயனளிக்காது. அரசர்கள் தனியுணர்வுகளால் கட்டப்பட்டவர்கள் அல்ல. அவர்களை கட்டுப்படுத்தும் தனியுணர்வு என்றால் அவர்களின் ஆணவம் மட்டுமே. அதை ஃபானு தொட்டுப் பேசப்போவதில்லை.

தனியறையிலிருந்து பிரத்யும்னன்தான் முதலில் வெளிவந்தார். கதவு திறந்து அவர் உள்ளே வந்த ஓசையிலேயே உள்ளிருந்த அனைவரும் அவரை பார்த்தனர். அக்கணத்திலேயே அனைத்தும் முடிவாகிவிட்டன. அனைத்து முகங்களும் கூர்கொண்டன. பிரத்யும்னன் "மாதுலர் ருக்மி இதற்கு மறுமொழி கூறவேண்டும்" என்றார். நான் என்னுள் ஒரு குளிர்ந்த தொடுகையை உணர்ந்தேன். அவையிலிருந்த அனைவருமே ஓசையற்றிருந்தனர். "அவரை நாம் பிடித்து வருவோம். இந்த அவையில் நிறுத்துவோம். நிகழ்ந்தவற்றுக்கு அவரிடம் விளக்கம் கேட்போம்" என்று பிரத்யும்னன் கூறினார்.

ஃபானு "உடனே ஒரு போர் தேவையில்லை. நமது தூதுக்குழு ஒன்று செல்லட்டும். அங்கு நிகழ்ந்தது என்ன என்று அவரிடம் கேட்டு அறியட்டும்" என்றார். "இல்லை. இது நாங்கள் தீர்த்துக்கொள்ளவேண்டிய கணக்கு. மூத்தவரே, என் இளையோரில் ஒருவன் இவ்வண்ணம் ஒரு செய்தியுடன் அங்கு சென்றதென்பது எனக்கு திகைப்பளிக்கிறது. இது நானறிந்து நிகழ்ந்ததல்ல. சுதேஷ்ணன் விசாருவை அனுப்பியதை நான் அறிவேன். ஆனால் அது வேறொன்றுக்காக."

"முன்பு எங்களுக்கான படை ஒன்றை திரட்டும் பொருட்டு நாங்கள் மாதுலர் ருக்மிக்கு ஒரு செல்வத்தை அளித்தோம். இப்போது அது தேவையில்லை என்ற நிலை வந்துள்ளமையால் அச்செல்வத்தை திரும்பப் பெறும்பொருட்டு உரிய கணக்கை உரைப்பதற்காக இளையவனை அனுப்பியிருக்கிறான் சுதேஷ்ணன். அவ்வண்ணமே எனக்கு சொல்லப்பட்டது. அவன் கொல்லப்பட்ட செய்தி எனக்கு உரைக்கப்படவில்லை. பெரும்பாலும் அச்செல்வத்தை திரும்பக்

கேட்டதன் பொருட்டான பூசலில் இளையோன் கொல்லப்பட்டிருக்கலாம்.”

“ஆனால் அதற்கான வாய்ப்புகள் மிகக் குறைவு. அவன் மாதுலர் ருக்மியின் மகளை மணந்தவன். அல்லது அவருக்கு அங்கே உள் எதிரிகள் இருக்கலாம். அவரை நம்மிடம் சிக்கவிடுவதற்காக எவராவது இதை செய்திருக்கலாம். எதுவாயினும் ஒரு பொதுஅவையில் வைத்து இது உசாவப்படவேண்டும். உரிய முறையில் குற்றமிழைத்தோர் தண்டிக்கப்படவேண்டும்” என்றார். மூத்தவர் ஃபானு அமைதி இழந்தவர்போல “இதை நாம் நமது மூத்தவருக்கு விட்டுவிடுவோம். கிருதவர்மனும் சாத்யகியும் இணைந்து இதை உசாவட்டும். ருக்மிக்கும் அவர்களுக்கும் இடையே ஒரு சொல்லாடல் நிகழட்டும். என்ன நிகழ்ந்ததென்று பார்ப்போம்” என்றார்.

பிரத்யும்னன் உரக்க “இறந்தவன் என் இளையோன். ஆகவே நான் வெறும் ஒரு சொல்லாடலில் இங்கு நிறுத்தினேன் என்றால் அவனுக்கு இயற்றவேண்டிய கடமையை ஒழிந்தவனாவேன். அனைத்துக்கும் மேலாக அவன் எனது ஆணையில்லாமல் அவரை பார்க்கச்சென்று கொல்லப்பட்டிருக்கிறான். அதை முழுதாக உசாவாமல் அப்படியே விடுவேனாயின் அதில் நானும் பங்கெடுத்துள்ளேன் என்றுதான் மக்கள் உள்ளத்தில் பதியும். இதை முழுக்க உசாவித் தீர்க்கவேண்டியது எனது பொறுப்பு” என்றார். ஃபானு “எதுவாயினும் எண்பதின்மரும் சேர்ந்து செய்வதே முறையாகும். நீ தனித்து செய்வது...” என்றார்.

“இல்லை, இதை நானே தனித்துச் செய்யவேண்டும், அதுவே முறை. எண்பதின்மரில் பிற அன்னையரின் மைந்தர் எவர்

இதற்குள் வந்தாலும் அதுவே ஷத்ரியரிடையே பிளவை உருவாக்கலாம். இறந்தவன் ஷத்ரிய அன்னையின் மைந்தன். ஷத்ரியர்கள் இதற்கு கணக்கு தீர்ப்பார்கள்" என்று சொல்லி தலைவணங்கி அவையிலிருந்து வெளியே சென்றார்.

அவருடன் சாருவும் சாரகுப்தனும் வந்து அப்பால் நின்றிருந்தனர். அவர்களும் அவருடன் சென்றனர். மூத்தவர் ஃபானுவும் சுஃபானுவும் ஸ்வரஃபானுவும் பிரஃபானுவும் ஃபானுமானும் சந்திரஃபானுவும் அவர்கள் வெளியே செல்வதை பார்த்தபடி அமர்ந்திருந்தனர். பின்னர் சுஃபானு "நாம் அறியவேண்டியது ஒன்றே. எண்பதின்மரும் அமர்ந்திருந்த ஒரு அவையில் எடுத்த ஒரு முடிவுக்கு எதிராக தன் மாதுலருக்கு ஒருவன் தூதனுப்பியிருக்கிறான் என்றால் அவன் யார்? பிரத்யும்னனை மீறி அதை அனுப்பியவர் சுதேஷ்ணன் எனில் அங்கே பிரத்யும்னனுக்கு நிகரான விசையாக சுதேஷ்ணன் இருக்கிறாரா?" என்றார்.

"அவர் இங்கு அவையில் ஒரு சொல்லும் உரைக்கவில்லை. ஆனால் அங்கு அனைத்து முடிவுகளையும் அவர் எடுக்கிறார். இவ்வண்ணம் ஒருவரை வைத்துக்கொண்டு நாம் எவ்வாறு எண்பதின்மரின் ஒற்றுமையைப்பற்றி பேசுவது?" என்று ஃபானுமான் சொன்னான். "நீங்கள் முடிசூட்டப்பட்ட பின்னர் இதேபோல மறுசொல் எழுமென்றால் எவர் அதை ஆளமுடியும்? மீண்டும் குடிப்பூசலே எழும்" என்றார் பிரஃபானு. "முடிவுகளை நோக்கி உடனே நாம் தாவவேண்டியதில்லை" என்று சந்திரஃபானு கூறினார்.

"உண்மையில் இந்த அவையில் தன் குடியுணர்ச்சியை பிரத்யும்னன் வெளிப்படுத்தியது பிழை..." "இல்லை அது இயல்பானது" என்றான் ஃபானுமான். "அவர் சொல்லெண்ணிப்

பேசியிருந்தால் நான் ஐயுற்றிருப்பேன்." ஃபானு சலிப்புடன் "நான் மீண்டும் பிரத்யும்னனிடம் பேசுகிறேன். எதுவாயினும் எண்ணிச் செய்வோம்" என்றார். நீள்மூச்சுடன் "நேற்று இந்த அவையில் ஒரு முழுமை எட்டப்பட்டது. அனைத்து எதிர்த்தரப்புகளும் ஒருங்கிணைக்கப்பட்டன. விழைந்தன அனைத்தும் கையெட்டும் தொலைவிலிருந்தன. இன்று அகன்றுவிட்டிருக்கின்றன. இந்தப் பூசலை நான் வளர்த்தால் இதுவே நம்மை முற்றாகப் பிளந்து தோற்கடிக்கும். நமது விசையை விதர்ப்பத்தையும் அவந்தியையும் பகையாக்கி அவர்களிடம் போர்புரிய இன்று செலவிட இயலாது" என்றார்.

"அவ்வாறல்ல" என்று சுஃபானு சொன்னார். "நம்மை எதிர்த்த முதல் எதிரியையே பிறர் எண்ணி அஞ்சும்படியாக நசுக்குவதென்பது ஒரு போர்முறை. அவர்களை நாம் நயந்து அஞ்சி உடன் வைத்துக்கொண்டோம் எனில் இனி இவ்வாறே பிறரும் நடந்துகொள்வார்கள். இரண்டு செய்யவேண்டியுள்ளன. நம் இளையோரில் ஒருவன் கொலைக்கு நாம் ருக்மியை பழிவாங்க வேண்டும். அவர் நிகர்க்குருதி கொடுத்தேயாகவேண்டும். அதற்கப்பால் ஒன்றுண்டு. இந்த உள்ளிருந்து பிளக்கும் சூழ்ச்சியை செய்தவர் எவர் என்பதை கண்டுபிடித்து அவர் நமது எண்பதின்மரில் ஒருவராயினும் களையெடுக்கப்படவேண்டும்."

"களையெடுத்தலைப் பற்றி இப்போது பேசவேண்டாம். மீண்டும் மீண்டும் பிளவையும் பிழைகளையும் பற்றி பேசவேண்டாம்" என்று ஃபானு சொன்னார். சுஃபானு "இல்லை மூத்தவரே, சில தருணங்கள் தேவைப்படும். இனி சூழ்ச்சிகள் ஏற்கப்படமாட்டாது என்று எண்பதின்மர் ஒவ்வொருவருக்கும் சொல்லியாகவேண்டும்" என்றார். ஃபானு "எண்பதின்மர் என்ற

சொல்லை சொல்லிச் சொல்லி பழகிவிட்டோம். இன்று இதோ ஒருவன் இல்லை" என்றார். "தீங்கிழைப்போர், விலகி நிற்போர் அனைவருமே இல்லாமலாகட்டும். எஞ்சியோர் காத்து நிற்கட்டும் இந்த முடியை" என்று சுஃபானு சொன்னார்.

"நாம் சுதேஷ்ணனை அழைத்து இந்த அவையில் நிறுத்தி அந்தத் தூதன் எவ்வாறு சென்றான் என்று உசாவியாகவேண்டும்" என்று ஃபானுமான் சொன்னான். "ஆம், சுதேஷ்ணன் மறுமொழி கூறியாகவேண்டும்" என்று ஸ்வரஃபானுவும் பிரஃபானுவும் சந்திரஃபானுவும் கூறினார்கள். "பொறுங்கள். அம்முடிவை எடுத்தது சுதேஷ்ணனா என்று இன்னும் நமக்கு தெரியாது. அதற்குள் நாம் முடிவுகளை எட்ட வேண்டியதில்லை. சுதேஷ்ணனை இந்த அவையில் அமர்த்தி உசாவச்செய்வதற்கு நாம் இன்னும் முடிசூடிக்கொள்ளவும் இல்லை" என்று ஃபானு கூறினார். "முடிசூடும் முடிவை எடுத்தாகிவிட்டது. எவரும் முடிசூடவில்லை எனில் எவர் உசாவுவது?" என்றார் சுஃபானு.

"அது அவர்களின் தரப்பும் நமது தரப்பும் இணைந்து செய்யவேண்டியது. நமது நம்பிக்கையை பெறவேண்டியது அவர்களின் பொறுப்பு" என்றார் ஃபானு. "அவர்கள் உசாவப்போவதில்லை. இந்த அவையில் பிரத்யும்னன் பேசியதிலிருந்து ஒன்று தெரிகிறது. அவர் அனைத்தையும் அறிந்திருக்கிறார். இந்த அவையில் அனைத்தும் வெளிப்படும்போது அவர் திகைத்து ஒரு நிலைப்பாடு எடுக்கிறார். அவருக்கு தெரியாமல் இல்லை" என்றார் சந்திரஃபானு. "இல்லை, அவருடைய விழிநீர் உண்மையானது" என்றார் பிரஃபானு. "அவர் அரசியல்சூழக் கற்றவர்" என்றான்

ஃபானுமான். “நாம் எப்படி அனைவரையும் ஐயுறத் தொடங்கினோம்?” என்றார் ஸ்வரஃபானு.

ஒவ்வொருவரும் மாறி மாறி பேசிக்கொண்டிருந்தார்கள் சீற்றமும் பதற்றமுமாக. பின்னர் ஒன்றை கண்டுகொண்டேன். ஒவ்வொருவரிலும் ஒரு சிறு வஞ்சம் இருக்கிறது. எண்பதின்மரின் ஒற்றுமைக்கு எதிராக சற்றேனும் உளம் கூட்டாத ஒருவரும் இல்லை. ஆகவே அந்த அவையில் ஒவ்வொருவரும் மிகையாக தங்களை வெளிப்படுத்தினர். தங்களை நோக்கி வந்த ஐயங்களுக்கு மறுமொழி என்பது சீற்றத்துடன், காழ்ப்புடன் பிறரை சுட்டுவது என்று புரிந்துகொண்டனர். அனைத்து வெறுப்புகளுக்கும் இலக்காக அங்கு சுதேஷ்ணன் நின்றிருந்தார்.

நான் எண்ணி வியந்தது என்னவென்றால் நான் அந்த கொலையைச் செய்தவன் என்னும் நிலையில் இருந்து முற்றாக விலகிவிட்டேன். அதை வேறெவரோ செய்தார்கள் என ஆழமாக நம்பிவிட்டிருந்தேன். அதை செய்தவர்கள்மேல் வஞ்சம்கூட கொள்ளத் தொடங்கியிருந்தேன்.

அவையை விட்டு வெளியே செல்கையில் நான் கணிகருடன் செல்ல விரும்பினேன். ஏவலனிடம் “கணிகர் எங்கே?” என்றேன். கணிகர் மூத்தவர் ஃபானுவுடன் தனியறையிலிருந்து சொல்லாடிக்கொண்டிருப்பதாக அவன் கூறினான். அச்செய்தி என்னை திடுக்கிடச் செய்தது. கணிகர் ஃபானுவுடன் உரையாடிக்கொண்டிருக்கையில் நான் அங்கு

இருந்திருக்க வேண்டும் என்று தோன்றியது. ஆனால் மறுகணம் அவ்வாறு செல்லுமிடமெல்லாம் நான் உடனிருக்க இயலாது என்று தெரிந்துகொண்டேன். என்னை தவிர்ப்பது எப்படி என்றும் அவருக்கு தெரிந்திருக்கும்.

இப்போது அவர் எதை பேசிக்கொண்டிருப்பார்? உண்மையில் என்ன நிகழ்ந்தது என்று ஒரு குறிப்பை அவர் ஃபானுவுக்கு வழங்கக்கூடும். அவ்வாறு நிகழ வாய்ப்பில்லை என்று உடனே தோன்றியது. மூத்தவர் ஃபானு எளிமையானவர். எண்பதின்மரில் ஒருவரை நான் என் கையால் கொன்றேன் என்று அவருக்குத் தெரிந்தால் மறுகணமே எழுந்தோடி வந்து அவையைக் கூட்டி என்னை நடுவே நிறுத்தி தலைகொய்யவே ஆணையிடுவார். அல்லது துயரடைந்து நிலத்தில் விழுந்து கதறி அழுது அனைவருக்கும் என் பழி தெரியும்படி செய்வார். அதை உறுதியாக அறிந்திருப்பார் கணிகர். அவர் அங்கு என்ன சொல்லிக்கொண்டிருக்கிறார் என்பதை என்னால் ஒருபோதும் உணர இயலாது. ஆகவே அதைப் பற்றி எண்ணுவதில் பயனில்லை. கணிகருக்கு மேலும் அணுக்கமானவனாக, ஒருபோதும் அவரால் கைவிடப்படாதவனாக மாறுவதே நான் செய்யக்கூடுவது.

நான் என் அறைக்குச் சென்று பதற்றத்துடன் நிலைகொள்ளாமல் சுற்றிக்கொண்டிருந்தேன். பின்னர் புரவியை எடுத்து என் மைந்தரை பார்க்கும்பொருட்டு சென்றேன். துவாரகையின் தெருக்களில் பதற்றம் நிறைந்திருப்பதை கண்டேன். பல ஆலயங்களுக்கு முன் மக்கள் கூட்டம் கூட்டமாக செறிந்து நின்றனர். கடந்து செல்லும் புரவி ஒவ்வொன்றையும் அவர்கள் கூர்ந்து பார்த்தனர். நான் சென்றபோது அனைத்து விழிகளும் என்மேல் பதிந்திருந்தன.

இளையோன் இறந்த செய்தி வந்தடைந்துவிட்டது, நகரில் பரவிவிட்டது என்று தெரிந்தது. அதை ஒரு பிழையான நிமித்தமாகவே அங்குள்ளவர் கொள்வார்கள். வரக்கூடுமென அவர்கள் அஞ்சிக்கொண்டிருக்கும் ஒன்றின் முதல் காலடியோசை.

எண்பதின்மரில் ஒருவர் இறப்பது எவ்வளவு பெரிய நிகழ்வென்று எனக்கு அப்போதுதான் புரிந்தது. எண்பதின்மரும் ஓர் உடல். ஓர் உறுப்பு குறைபட்டிருக்கிறது எனில் அவ்வுடல் முடமாகிவிட்டதென்றே பொருள். அது ஒரு தொடக்கம் என்று அறியாத எவரும் இங்கில்லை. நான் ஏன் அத்தருணத்தில் அதை செய்தேன். எண்ணி எண்ணி என்னால் எடுக்க இயலவில்லை. நான் செய்தது என் உயிரை காப்பாற்றிக்கொள்வதற்காக. வஞ்சமகன் என அவைமுன் நின்றிருக்கும் இழிவிலிருந்து தப்புவதற்காக.

ஆனால் அந்த நிலைக்கு நான் ஏன் சென்றேன்? அதற்கு என் ஆணவமே அடிப்படை விசை. எந்த அவையையும் சொல்லால் தாண்டிவிட முடியுமென்று எண்ணினேன். சொல்கோத்து சொல்கோத்து அனைத்தையும் அமைத்துவிட முடியும் என்று கனவு கண்டேன். எங்கு அந்த ஆணவம் தூண்டப்பட்டது? முதல்முறை அவையில் எழுந்து ஒரு சொல்லை உரைத்தபோது நான் எத்தனை தணிவும் பதற்றமும் கொண்டவனாக இருந்தேன்! எவராயினும் தன்னை உணர்ந்து தருக்கும் சிறுமைக்கு சென்ற பின்னர் பிழைகளை இயற்றாமலிருக்க இயலாது. தோள்வலியில் தருக்குபவன் பழி செய்கிறான். நாவலியில் தருக்குபவன் மும்மடங்கு பழி செய்கிறான்.

என்னால் புரவியில் அமர்ந்திருக்க முடியவில்லை. விழுந்துவிடுவேன் என்று தோன்றியது. மாலை ஒளி மங்கிக்கொண்டிருந்தபோது என் மைந்தர் வாழ்ந்த அரண்மனைக்கு சென்றேன். களைத்து சலித்துச் சென்று என் அறையில் அமர்ந்திருந்தேன். மைந்தர் என்னை பார்க்க வரும்படி சொல்லியனுப்பினேன். அவர்கள் பாலையில் பந்து விளையாடச் சென்றிருப்பதாக ஏவலன் சொன்னான். சற்று நேரம் ஓய்வெடுத்துவிட்டு நீராடி ஆடை மாற்றி அங்கு அமர்ந்திருந்தபோது அவர்கள் ஒவ்வொருவராக வந்தனர். அவர்கள் வரும் ஓசையே சிரிப்பும் கூச்சலுமாக எழுந்தது. மூத்தவன் இளையோரை அதட்டி அமைதியடையச் செய்தான்.

அவர்கள் விளையாடி முடித்து நீராடி வந்திருந்தாலும்கூட உடலெங்கும் இளம் புழுதியின் மணம் இருந்தது. சிறியவன் என்னை ஓடிவந்து அணைத்துக்கொண்டு "தந்தையே, இன்று நான் மும்முறை மூத்தவரை வென்றேன்" என்றான். அவன் தலையின் புன்மயிரை வருடியபடி "ஆம், நீ வெல்வாய். நீ அனைவரையும் வெல்வாய்" என்று நான் சொன்னேன். "அவன் வெல்லவில்லை. அவன் இளையவன் என்பதனால் நான் விட்டுக்கொடுத்தேன்" என்றான் மூத்தவன். "ஆம், இளையோருக்கு விட்டுக்கொடுத்துதானே ஆகவேண்டும்" என்றேன். "நான்தான் விட்டுக்கொடுத்தேன்" என்று இன்னொருவன் சொன்னான். "சரி, இரண்டுபேருமே விட்டுக்கொடுத்தீர்கள்" என்று நான் சொன்னேன். "நானும் விட்டுக்கொடுத்தேன்" என்று அவனுக்கு இளையவன் சொன்னான். "அப்போது யார்தான் வென்றார்கள்?" என்று நான் நகைத்தேன்.

மிக சில கணங்களிலேயே அவர்களுடன் விளையாடத் தொடங்கிவிட்டேன். என் அருகே இருந்த பித்தளை செம்பொன்றை எடுத்து "இந்தப் பந்தை யார் பிடிக்கிறீர்கள் பார்ப்போம்" என்றேன். மூத்தவன் அதை தாவிப்பற்றி பிடித்துக்கொண்டான். "பந்தை பிடிக்கக் கூடாது, தட்டவேண்டும். எவர் கையிலிருந்து நிலம் படுகிறதோ அவர்கள் வெளியேறவேண்டும்" என்று சொல்லி அதை ஒரு ஆடலாக மாற்றிக்கொண்டேன். அறையெங்கும் அந்தச் செம்பு ஒரு சிறு பறவைபோல வெண்கல ஒளியுடன் சுழன்று அலைந்தது. எழுந்து எழுந்து பறந்து சிறியவன் கையிலிருந்து ஓசையுடன் தரையில் விழுந்தது.

"தோற்றுவிட்டான்! தோற்றுவிட்டான்!" என்று மூத்தவன் கூறினான். "இல்லை, அதுவே விழுந்தது!" என்று அவன் சொன்னான். "ஆமாம், அது விழ விரும்பினால் எவரால் தடுக்க முடியும்?" என்று சொல்லி அவனை அருகணைத்தேன். "இல்லை. அவன் தோற்றுவிட்டான், அவன் விலகவேண்டும்" என்றான் மூத்தவன். "அவன் ஏன் விலகவேண்டும்? அவன் இவ்வளவு நேரம் நன்றாக விளையாடினான் அல்லவா?" என்று நான் சொன்னேன். "தந்தையே, நீங்கள் அவனுக்கு ஓரம் சாய்கிறீர்கள். இது முறையல்ல" என்றான் மூத்தவன். "அவன் இளையவன், உங்கள் அனைவராலும் கனிந்து பேணப்படவேண்டியவன்" என்றேன்.

"இளையவனாக இருக்கலாம், ஆனால் ஆட்டத்தின் நெறிகள் அனைவருக்கும் ஒன்றே" என்றான். "உங்களுக்குள் பூசல் வேண்டியதில்லை. பூசலிடாமல் விளையாட முடியாதா என்ன?" என்றேன். "அனைத்து விளையாடல்களிலும் அவனே வெல்ல வேண்டுமென்று நினைக்கிறான். அவன் இளையவன்

என்பதனால் ஒவ்வொரு முறையும் விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கிறது. இனி விட்டுக்கொடுக்க முடியாது" என்றான் மூத்தவன். "இளையோர்களுக்கு விட்டுக்கொடுத்துதான் ஆகவேண்டும்" என்றேன். "பிறகு எப்போதுதான் நாங்கள் வெல்வது?" என்றான் மூத்தவன்.

"சரி விடு... நாம் மீண்டும் ஒருமுறை விளையாடலாம்" என்று நான் சொன்னேன். மீண்டும் கலம் அறையெங்கும் பறந்தது. வேண்டுமென்றே சற்றே சுழற்றி தவறாக மூத்தவனை நோக்கி அனுப்பினேன். அவன் அதை பிடிப்பதற்குள் அவன் கையிலிருந்து சுழன்று நிலத்தில் விழுந்தது. "வெளியேறுங்கள், மூத்தவரே! வெளியேறுங்கள்!" என்று சிறியவன் சொன்னான். "இல்லை, அது சுழன்றது" என்று அவன் சொன்னான். "இல்லை, வெளியேறித்தான் ஆகவேண்டும்" என்று இளையவன் சொன்னான். "கையிலிருந்து விழுந்தது! கையிலிருந்து விழுந்தது!" என்று அவன் கூவினான்.

"உன் கையிலிருந்து விழுந்தது அல்லவா?" என்றான். "என் கையிலிருந்து விழவில்லை. உங்கள் கையிலிருந்துதான் விழுந்தது. நீங்கள் வெளியேறுங்கள்" என்றான் இளையவன். எண்ணியிராக் கணத்தில் மூத்தவன் வந்து இளையவன் கன்னத்தில் ஓங்கி அறைந்தான். இளையவன் அலறி கீழே விழுந்தான். நான் பாய்ந்து எழுந்து அவன் கையை பற்றிக்கொண்டேன். "என்ன செய்கிறாய், அறிவிலி?" என்றேன். அவன் வஞ்சத்துடன் "அவன் ஒவ்வொரு முறையும் பிழையாக ஆடுகிறான்" என்றான். "அதற்காக?" என்று கூவினேன். அவன் மேலும் வஞ்சத்துடன் "அவனை நான் கொல்வேன்!" என்றான்.

நான் ஓங்கி மூத்தவனை அறைந்தேன். அவன் வளைந்து நிலத்தில் அமர்ந்து சினம்கொண்ட கண்களால் என்னை

பார்த்தான். ஒருகணம் என்ன நிகழ்ந்தது என்று தெரியாமல் நான் நிலைமறந்தேன். ஓங்கி ஓங்கி அவனை அறைந்து கழுத்தைப் பிடித்து சுவரோடு சேர்த்து "உடன்பிறந்தான் மேல் கைவைப்பாயா நீ? என் முன் அதை செய்யும் அளவிற்கு துணிந்துவிட்டாயா?" என்றேன். அவன் பல்லைக் கடித்து கைகளை முறுக்கி அசையாமல் நின்றான். ஒருகணத்திற்குப் பின் மூச்சை நிறுத்தி கைகளை விட்டேன். "வெளியே செல்லுங்கள்! செல்க வெளியே!" என்று கூவினேன். அவர்கள் பற்களைக் கடித்து சினம்கொண்ட கண்களால் ஒருவரை ஒருவர் பார்த்தபடி வெளியே சென்றனர்.

தளர்ந்து மஞ்சத்தில் அமர்ந்து தலையை பற்றிக்கொண்டேன். தலையணையில் முகத்தைப் பதித்து உடல் குறுக்கி படுத்தேன். என்ன நிகழ்ந்துகொண்டிருக்கிறது? ஏதோ என்னைச் சூழ்ந்து வந்தடைகிறது. நான் விழையாத ஒன்று. என்ன நிகழ்கிறது? இங்கு இருக்க இயலாது என்னால். வெளியே வந்து ஏவலனிடம் "புரவி ஒருக்குக, நான் மீண்டும் துவாரகைக்கே செல்கிறேன்!" என்றேன். புரவிகளை ஓய்வுக்கு அனுப்பியிருந்த ஏவலன் திகைத்து "இளவரசே!" என்றான். "ஒருங்குக புரவி! நான் கிளம்ப வேண்டும்" என்றேன். ஓய்வுக்கான ஆடைகளை அணிந்திருந்தேன். மேலாடையை எடுத்து இறுக்கி கச்சையால் சுற்றிக்கொண்டு இறங்கி ஓடிவந்து ஒருங்கி நின்றிருந்த ஒரு புரவியிலேறி அதைத் தட்டி துவாரகையை நோக்கி விரைந்தேன்.

துவாரகையை நான் அடையும்போது நகரம் கொந்தளித்துக்கொண்டிருந்தது. நான் அறியாமலேயே கடிவாளத்தைப் பிடித்து புரவியை நிறுத்தினேன். நெடுந்தொலைவிலேயே நகரமெங்கும் எழுந்துகொண்டிருந்த

ஓசையை கேட்டேன். ஒரு திருவிழாபோல. அல்லது படையெழுச்சியா? பிரத்யும்னன் அதற்குள் கிளம்பிவிட்டாரா என்ன? நான் புரவியைத் தட்டி மேலும் விசைகொண்டு தோரணவாயிலைக் கடந்து நகருக்குள் நுழைந்தேன். என்னை நோக்கி புரவியில் வந்த காவலர்தலைவனை நோக்கி நானும் விரைந்து சென்று "என்ன நிகழ்கிறது? படையெழுச்சியா?" என்றேன்.

"இல்லை, நகரம் கலைந்திருக்கிறது. மக்கள் ஆங்காங்கே கிளர்ந்தெழுந்திருக்கிறார்கள். பல இடங்களில் மாளிகைகளை நோக்கி கற்களையும் தடிகளையும் வீசுகிறார்கள். அரசகுடியினர் பலர் தாக்கப்பட்டிருக்கிறார்கள்" என்றான். "என்ன நிகழ்ந்தது?" என்றேன். "இளவரசே, சற்றுமுன் பிரத்யும்னனால் சுதேஷ்ணன் கொல்லப்பட்டார்" என்றான். "எப்போது?" என்றபடி நான் கீழிறங்கினேன்.

"என்ன நிகழ்ந்தது என்று எனக்கு தெரியாது. நான் கேட்டு அறிந்தது இது. அவர்கள் தங்கள் சிற்றவையில் ஒருவரை ஒருவர் சந்தித்து உசாவிக்கொண்டு இருந்திருக்கிறார்கள். இளையவர் விசாருவின் சாவுக்கு எவர் வழிவகுத்தது என்ற அளவில் சொல்லாடல் நிகழ்ந்திருக்கிறது. ஒருவரை ஒருவர் குற்றம்சாட்டிக் கொண்டிருந்திருக்கிறார்கள். அப்போது சுதேஷ்ணன் பிரத்யும்னனுக்கு எதிராக நெடுங்காலமாக செய்துவந்த பல சூழ்ச்சிகள் வெளிப்பட்டிருக்கின்றன. சீற்றம்கொண்டு சுதேஷ்ணனை நோக்கி பிரத்யும்னன் வாளை உருவியிருக்கிறார். பிரத்யும்னனைக் கொல்ல சுதேஷ்ணன் வாளுடன் பாய்ந்திருக்கிறார். அத்தருணத்தில் அருகே நின்றிருந்த எவரோ சுதேஷ்ணனை பற்றிக்கொண்டிருக்கிறார். பிரத்யும்னன் அவர் தலையை வெட்டி வீழ்த்தியிருக்கிறார்."

“இது அரசமுறையாக இன்னும் அறிவிக்கப்படவில்லை” என்றான் காவலர்தலைவன். நான் பதற்றம் மெல்ல வடிய களைப்பு கொண்டவனாக புரவியின் சேணத்தை பற்றிக்கொண்டு நின்றேன். “ஆனால் செய்தி நகருக்குள் பரவிவிட்டிருக்கிறது. நகர மக்கள் கிளர்ந்தெழுந்திருக்கிறார்கள். நல்லவேளையாக ஷத்ரியர் ஒருவரை ஒருவர் கொல்கிறார்கள். கொல்லப்பட்டவர் விசாரு என்றதுமே கொன்றவர் யாதவரா என்றுதான் கேட்டனர் இங்குள்ள ஷத்ரியர். யாதவர் கையால் ஷத்ரிய மைந்தர் கொல்லப்பட்டிருந்தால் நகரம் இதற்குள் போர்வெறி கொண்டிருக்கும்.” நான் தளர்ந்தவனாக புரவியில் ஏறி அமர்ந்தேன். பின்னர் அதைத் தட்டி “செல்க!” என்று நகரினூடாக அரண்மனை நோக்கி சென்றேன்.

# ல்பொருசிறுநுரை - 46

**பகுதி நான்கு : அலைமீள்கை – 29**

நான் துவாரகையின் தெருக்களினூடாக எனது புரவியை வெறிகொண்ட விரைவில் செலுத்தி அரண்மனையை சென்றடைந்தேன். நகரம் கலைந்த பூச்சித்திரள்போல் ஆகியிருந்தது. குறுக்கும் நெடுக்கும் பொருளற்ற விசையுடன் மக்கள் ஓடினர். என் புரவிக்கு முன்னால் பலர் பாய்ந்து விழுந்தார்கள். எங்கும் பதற்றமும் அழுகையொலியும் வசைகளும் கூச்சல்களும் நிறைந்திருந்தன. ஒவ்வொருவரும் முந்தையநாள் வரை அவர்கள் கொண்டிருந்த நம்பிக்கைகளையும் மகிழ்ச்சியையும் முற்றாக இழந்து, தீ பற்றி

எரியும் கிளையில் இருக்கும் எறும்புகளைப்போல் ஆகிவிட்டிருந்தனர்.

அவர்கள் அனைவருக்கும் அவ்வண்ணம் ஒன்று நிகழும் என்று தெரிந்திருந்ததுபோல. எவ்வண்ணமோ அது நிகழும் என்று எதிர்பார்த்ததுபோல. தெய்வங்கள் அவர்களுக்கு முன்னுணர்த்தியிருக்கும். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு தெய்வங்கள். உழவர்களுக்கு மேழியிலும் ஆயர்களுக்கு வளைகோலிலும் சிற்பிகளுக்கு உளியிலும் எழும் தெய்வங்கள். பாணர்களுக்கு நாவில் பூசகர்களுக்கு நீரில் அவை எழுந்திருக்கும். அவை உரைத்திருக்கும். அதை அறியாத ஒருவர்கூட இந்நகரில் இன்று இருக்க வாய்ப்பில்லை.

நான் முதலில் மூத்தவர் ஃபானுவை சென்று பார்க்கத்தான் விரும்பினேன். பின்னர் தோன்றியது, அதற்கு முன் பிரத்யும்னனைச் சென்று பார்க்கலாம் என்று. அங்கே என்ன நிகழ்ந்தது என்று உணரக்கூடவில்லை. நான் அங்கே இருந்தாகவேண்டும் என்று மட்டும் தோன்றியது. நான் தொடங்கிவைத்த ஒன்று என்ற குற்றவுணர்வு உருவாகவில்லை. அந்தச் சுழலில் இருந்து தப்புவது எப்படி என்று மட்டுமே உள்ளம் தவித்தது. எங்கே சுழிமையம் உள்ளதோ அங்குதான் நான் இருக்கவேண்டும். உண்மையில் என்ன நிகழ்கிறது என்பது அங்கு சென்றால் மட்டுமே தெரியவரும்.

நடுவே கணிகரை பார்க்கவேண்டும் என்ற எண்ணம் என்னுள் ஓடியது. ஆனால் என்ன நடந்தது என்று பார்த்துவிட்டு கணிகரை பார்க்கச் செல்வதே முறையானது என்றும் தோன்றியது. அத்தருணத்தில் பிரத்யும்னனின் அரண்மனைக்குச் செல்வது உகந்ததா என்ற ஐயமும் அலைக்கழித்தது.

ஒருவேளை அந்நிகழ்வுகள் அனைத்தும் மூத்தவர் ஃபானுவுக்கு எதிரான கிளர்ச்சியாக இருக்குமெனில் அங்கு நான் செல்வதே என்னை பணயப் பொருளாக அளிப்பது. அல்லது அவர்களை இளிவரல் செய்ய நேரில் செல்வதுபோல. ஆனால் அவ்வண்ணம் செல்லவேண்டும் என்ற எண்ணத்தை என்னால் தவிர்க்க முடியவில்லை.

என் ஆழத்தில் இருக்கும் ஒன்று அதில் எனக்கிருக்கும் பங்கையே சுட்டிக்காட்டிக்கொண்டிருந்தது. நான் பிழையுணர்ச்சி அடையவில்லை, நான் அடைந்தது தன்மைய உணர்ச்சி. என் கையிலிருந்து இறங்கி நெருப்பு எழுந்து தொலைவில் பேருருவென நின்றிருப்பதை பார்த்துக்கொண்டிருந்தேன். அது என்னையும் முற்றாக அழிக்கும் என்று ஒரு உள்ளுணர்வு அப்போது முற்றாக சொல்லத்தொடங்கிவிட்டிருந்தது. ஆயினும் அதை அப்போது பார்க்க விழைந்தேன். தன்னுள் இருந்து எழுந்த ஒன்றை மானுடர்கள் எப்போதும் திரும்பிப் பார்க்கிறார்கள். மலமோ சீழோவாக இருப்பினும்கூட.

நான் பிரத்யும்னனின் அரண்மனை முன் இறங்கி மேலே சென்றேன். எதிரே வந்த பிரத்யும்னனின் இளைய மைந்தன் சுஜனனிடன் "நான் அரசரை பார்க்க வேண்டும்" என்றேன். "அரசரைப் பார்க்க இப்போது பொழுதில்லை. ஒவ்வொருவரும் பிரிந்து வெவ்வேறு அறைகளில் அமர்ந்து பேசிக்கொண்டிருக்கிறார்கள்" என்றான். "என்ன நிகழ்ந்தது?" என்று கேட்டேன். "என்ன நிகழ்ந்தது என்று சொல்லும் அளவுக்கு எனக்கு ஒன்றும் தெரியாது. ஒவ்வொருவரும் ஒன்று சொல்கிறார்கள். ஆனால் குருதி விழுந்துவிட்டது. துவாரகையில் இளைய யாதவரின் மைந்தர் ஒருவர் கொல்லப்படுவார், அக்குருதியிலிருந்து இந்நகர் அழியும்

தருணம் தொடங்கும் என்று சூதர்சொல் இருந்தது, அது நிகழ்ந்துவிட்டது" என்றான்.

நான் "இந்தத் தருணத்தில் நிமித்திகர் கூற்றுகளையும் சோர்வுறுத்தும் எண்ணங்களையும் மிகைப்படுத்திக்கொள்ள வேண்டியதில்லை. நாம் செய்வதற்கு பலது உண்டு. இப்போது என்ன நிகழ்ந்தது என்று நான் அறியவேண்டும். என் மூத்தவரின் பொருட்டு. மிகச் சரியாக என்ன நிகழ்ந்தது என்று மூத்தவரிடம் நான் சொல்லவேண்டியிருக்கிறது" என்றேன். "தந்தை ஓடி தன் தனியறைக்குள் சென்றுவிட்டார். அவருடன் இளையவர்கள் நால்வர் சென்றிருக்கின்றனர். எஞ்சிய மூவரும் வேறு ஒரு அறைக்குள் சென்றுவிட்டனர். அவர்களை மூத்தவரின் படைகள் சூழ்ந்துள்ளன. அவர்கள் சிறைப்படுத்தப்பட்டிருக்கிறார்கள் என்று தோன்றுகிறது" என்றான்.

"நான் அரசரை பார்த்தாகவேண்டும்" என்றேன். "அரசரின் தனியறைக்குள் இப்போது எவருக்கும் நுழைவுஒப்புதல் இல்லை. அவர்கள் பேசி முடிப்பது வரை நீங்கள் காத்திருந்துதான் ஆகவேண்டும்" என்றான். நான் ஒருகணத்திற்குப் பின் "இந்நிகழ்வின்போது உடனிருந்த மைந்தர்கள் எவரேனும் இருக்கிறார்களா?" என்றேன். "எனது மூத்தவர் சுகர்ணன் அக்கணத்தில் அறைக்குள் இருந்தார்" என்று அவன் சொன்னான். "எனில் அவனை நான் சந்திக்கவேண்டும். அங்கு நிகழ்ந்ததென்ன என்று எனக்கு அவன் சொல்லவேண்டும்" என்றேன். ஒருகண தயக்கத்திற்குப் பின் "வருக!" என்று அவன் என்னை அழைத்துச்சென்றான்.

சுகர்ணன் ஓர் அறையில் இருக்க அவனைச் சூழ்ந்து உடன்பிறந்தாரும் சிற்றமைச்சர்களும் ஏவலர்களும் முட்டி

மோதி ஒருவரோடொருவர் பேசி கூச்சலிட்டுக்கொண்டிருந்தனர். சுஜனன் என்னை வெளியே நிறுத்திவிட்டுச் சென்று அவனிடம் பேசிவிட்டு வந்து "அவர் பதறிக்கொண்டிருக்கிறார். அவரால் சொல்லெடுக்க இயலுமென்று தோன்றவில்லை. தாங்கள் மெல்ல பேசவைத்து அவரிடம் எதை வேண்டுமானாலும் தெரிந்துகொள்ளலாம்" என்றான். "அதை நான் பார்த்துக்கொள்கிறேன்" என்றேன். "ஆனால் பிறர் உடன் இருக்கலாகாது. தாங்கள் மட்டும் இருங்கள்" என்றான் சுஜனன்.

அவன் உள்ளே சென்று மூத்தவர் ஃபானுவின் தூதன் என என்னை அறிவித்து பிறரை விலக்கிவிட்டு என்னை உள்ளே அழைத்துச் சென்றான். அவனே கதவை சாத்திவிட்டு வந்து சற்று அப்பால் அமர்ந்துகொண்டான். நான் சுகர்ணனின் கைகளை பற்றிக்கொண்டு "அஞ்சவேண்டியதில்லை. நிகழ்ந்தது ஒரு கொடுநிகழ்வென்று அறிவேன். நாம் அதை எந்த வகையில் எதிர்கொள்ளமுடியும் என்றும் எனக்குத் தெரியவில்லை. எனில் நன்றென ஒன்றுள்ளது. மூத்தவர் கையால் இளையவர் கொல்லப்பட்டிருக்கிறார். ஒருவகையில் அது உகந்தது. எவ்வண்ணமாயினும் மூத்தவருக்கு அவ்வுரிமை உண்டு. அதை துவாரகையின் பிற அரசமைந்தர்கள் ஏற்றுக்கொள்வார்கள். பாரதவர்ஷத்தின் ஷத்ரியர்களும் அதை ஏற்றுக்கொள்வார்கள்" என்றேன்.

"பிறிதொன்று நடந்து பிற அரசியரின் மைந்தர் எவராலோ சுதேஷ்ணன் கொல்லப்பட்டிருந்தால் இப்போது நிகழ்ந்துகொண்டிருப்பது என்ன என்று எண்ணிப்பார். இது ஒரு வகையில் மிக எளிதாக முடியும். முதற்கண பரபரப்புக்குப் பின் ஒவ்வொருவரும் இதை உணர்வார்கள். இதை நம்மால் கடந்து செல்ல இயலும்" என்றேன். என் சொற்கள் அவனுக்கு

நம்பிக்கையளித்தன. என் கைகளை பற்றிக்கொண்டு "கடந்து செல்ல முடியுமல்லவா?" என்றான். நான் எண்ணியது சரிதான், இறந்தவருக்காக அல்ல இப்போது நிகழ்ந்துகொண்டிருக்கும் அந்த இடருக்காகவே இவர்கள் கவலைப்படுகிறார்கள். "உறுதியாக கடந்து செல்ல முடியும். அதற்கான அரசியல் சூழ்ச்சிகள் உள்ளன. என்ன நிகழ்ந்ததென்று மட்டும் கூறு" என்றேன்.

தந்தையே, அங்கே அரசர் ஃபானுவின் அவையிலிருந்து வரும் வழியிலேயே இளைய தந்தை சுதேஷ்ணனிடம் தந்தை பிரத்யும்னன் பூசலிட்டுக்கொண்டு வந்தார். அவர்கள் எதன் பொருட்டு பூசலிடுகிறார்கள் என்று எனக்கு தெரியவில்லை. அவர்கள் தனியறைக்குச் சென்று அமர்ந்துகொண்டனர். ஒருவருக்கொருவர் உரத்த குரலில் பேசிக்கொண்டிருந்தனர். நான் அறைக்கு வெளியே நின்றிருந்தேன். சற்று நேரத்தில் தந்தை என்னை உள்ளே அழைத்தார். "நீ சென்று நமது கருவூலத்திலிருந்து வெளியே சென்ற பொருட்களின் தொகை குறிப்பை எடுத்துக்கொண்டு வா" என்றார்.

நான் விரைந்து கீழே சென்று கருவூலப் பொறுப்பாளரிடம் சுதேஷ்ணன் வழியாக வெளியே சென்ற பொருட்களுக்கான தொகைக்குறிப்பை கேட்டேன். "வெளியேவா?" என்று குழம்பியபின் அவர் புரிந்துகொண்டு "இதோ" என்று எடுத்துத் தந்தார். நான் அந்தத் தோற்சுருளை எடுத்துச் சென்று அறைக்குள் நுழைந்தபோது அவர்கள் இருவரும் மேலும் உரக்க பூசலிட்டுக்கொண்டிருந்தனர். தந்தை அதை வாங்கி பார்த்தார். "இத்தனை பொருட்கள் எப்படி சென்றன?" என்றார். சுதேஷ்ணன் "அவை தேவைப்பட்டன" என்றார். அவர் சீற்றத்தை அடக்கிக்கொண்டிருந்தார். சொல்லிலும் செயலிலும்

பொருட்டின்மையை வெளியிட்டார். "அரசுசூழ்தலில் சில தருணங்களில் அவ்வாறு தேவைப்படும்" என்றார்.

பிரத்யும்னன் "நான் அறியாது என் இளையோன் அங்கு ஏன் சென்றான் என்பதற்கான விடை இதில் உள்ளது. ருக்மியிடம் அளிக்கும்படி நான் ஆணையிட்டது ஒரு படையைத் திரட்டும் செல்வம் மட்டும்தான். நீ இந்நகரின் கருவூலத்தில் பெரும்பகுதியை விதர்ப்பத்திற்கு அனுப்பியிருக்கிறாய்" என்றார். சுதேஷ்ணன் "தங்கள் ஒப்புடன்தான் அனுப்பப்பட்டுள்ளது. அனைத்து ஓலைகளிலும் உங்கள் கைச்சாத்து உள்ளது" என்றார். "அது என் உளம் ஏற்ற கைச்சாத்தல்ல. உன்னை நம்பி இட்டது" என்று பிரத்யும்னன் சொன்னார். "நீங்கள் நம்பி இட்டிருக்கலாம். ஆனால் அது தேவைப்பட்டது" என்றார் சுதேஷ்ணன்.

"எதன் பொருட்டு தேவைப்பட்டது? நான் அறியாது என் செல்வம் எப்படி ருக்மியிடம் சென்றது?" என்று பிரத்யும்னன் கூவினார். "அவர் உங்கள் தாய்மாமன். உங்கள் பொருட்டு படைகொண்டு வந்தவர்" என்றார் சுதேஷ்ணன். "ஆம், என் பொருட்டு படைகொண்டு வந்தார். ஆனால் எனது முழுக் கருவூலம் அவர் கையில் இருக்கும்போது நான் அவருக்கு அடிமையல்லவா?" என்று பிரத்யும்னன் கூறினார். "அவர் கோரினார்" என்று சுதேஷ்ணன் உதட்டைச் சுழித்தபடி சொன்னார். "இத்தனை செல்வம் அவருக்குத் தேவை என்று சொன்னாரா?" என்றார் பிரத்யும்னன். "ஆம், கோரினார்" என்றார் சுதேஷ்ணன்.

"எனில் அவரிடம் கேட்கிறேன். இத்தருணத்தில் உடனே ஒரு ஓலைச்செய்தி அவருக்கு செல்லட்டும். அவர் கூறட்டும் இத்தனை செல்வம் எப்போது வந்தது, எங்கிருக்கிறது என்று"

என்றபடி திரும்பிய பிரத்யும்னன் "அதுவரை நீ சிறை இரு. என் ஆணை வந்த பிறகு நீ விடுதலை அடைந்தால் போதும்" என்றார். சீற்றத்துடன் சுதேஷ்ணன் "என்னை சிறையிடுகிறீர்களா?" என்றார். "ஆம், நான் அறிவேன் நீ அச்செல்வத்தை வேறெங்கோ வைத்திருக்கிறாய். இங்கு இந்நகருக்குள் எங்கோ. முழுச் செல்வமும் ஒருபோதும் உன் கையிலிருந்து விதர்ப்பம் போன்ற பிறிதொரு நாட்டுக்கு செல்லாது. தேவையான சிறுபொருளை அவருக்கு அளிக்கும்பொருட்டு நான் உன்னை ஒப்புவித்ததை பயன்படுத்திக்கொண்டு என் தந்தை என் பொருட்டு சேர்த்து வைத்த முழுச் செல்வத்தையும் நீயே கையில் வைத்திருக்கிறாய்" என்றார் பிரத்யும்னன்.

ஒருகணம் கூர்ந்து நோக்கி அமர்ந்திருந்தபின் சுதேஷ்ணன் எழுந்து "ஆம்" என்றார். பிரத்யும்னன் "இழிமகனே" என்றபடி கையை ஓங்கிக்கொண்டு அடிக்கச் சென்றார். சுதேஷ்ணன் அசையாமல் நின்றார். "ஆம், மிகத் தெளிவாக ஒன்று சொல்லிக்கொள்கிறேன். தங்கள் செல்வத்தின் பெரும்பகுதி என் கையில்தான் இருக்கிறது. பெரும்பகுதி என்ன, தாங்கள் இன்று செல்வமே இல்லாத ஒருவர். ஆகவே நீங்கள் சென்று கீழ்மகனாகிய யாதவருடன் இணைந்துகொள்ளலாம், துவாரகையின் கருவூலத்தை கையில் வைத்திருக்கும் ஷத்ரியனாகிய நான் அதை செய்யவேண்டியதில்லை" என்றார்.

"என்ன சொல்கிறாய்?" என்று பிரத்யும்னன் கடுஞ்சினத்துடன் கைகளைச் சுருட்டியபடி உடல்பதற கேட்டார். "நீங்கள் ஷத்ரியக்குருதிக்குத் தலைமை தாங்கி இந்நகரை முன்னெடுத்துக்கொள்வதற்கான தகுதியை இழந்துவிட்டீர்கள். ஒரு யாதவக் கிழவர் வந்து தோள் தழுவி அழைத்தால்

சென்று விழிநீர் பெருக்கும் கோழைக்கு ஷத்ரியர்களை தலைமை தாங்கி துவாரகையை வென்றெடுக்கும் தகுதியும் வாய்ப்பும் இல்லை. இங்குள்ள ஷத்ரியர் அனைவருக்கும் இன்று இது தெரியும். இத்தனை பெரிய பேரரசு இத்தனை பெரிய நகரம் நம் கைக்கு கனிந்த பழமென வந்து விழுவதற்கான ஒரு தருணத்தை நீங்கள் உங்கள் கோழைத்தனத்தால் இழந்துகொண்டிருக்கிறீர்கள்."

"உங்கள் தகுதியை நான் நன்கறிவேன். எனென்றால் உங்களுக்கு அணுக்கமானவனாக இருந்தேன். ஆகவேதான் இப்பொறுப்பை நான் முன்னர் எடுத்தேன்" என்றபோது சுதேஷ்ணன் உரக்க உறுமினார். "இவ்வண்ணம்தான் உங்கள் உள்ளம் செயல்படமுடியும் என்று எனக்கு முன்னரே தெரிந்திருந்தது. ஏனெனில் இங்குள்ள ஷத்ரியர் உங்களை முழுமையாக ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என அறிந்திருந்தீர்கள். யாதவர்களிடம் இணைந்துசென்று முடியுரிமைக்கு மாற்றாக ஏதேனும் சிறுநலன்களைப் பெற்று அமையவே நீங்கள் உளம்கொள்வீர்கள். நீங்கள் ஷத்ரியர்களின் அரசர் அல்ல. உங்கள் மைந்தர் அசுரக்குருதி கொண்டவர். அவர் மைந்தரோ தூய அசுரக்குருதியினர். அசுரர்களுக்கு நகரை தேடிக்கொடுப்பதற்காக ஷத்ரியர்கள் இங்கு குருதிசிந்த வேண்டியதில்லை."

"எனவே இந்தத் தேரின் கடிவாளத்தை நானே எடுத்துக்கொள்வதென்று முன்னரே முடிவு செய்திருந்தேன். ஆகவேதான் செல்வத்தை என் கையில் வைத்திருக்கிறேன்" என்றார் சுதேஷ்ணன். "காவலர்களே!" என்று கூவியபடி பிரத்யும்னன் கதவை தட்டினார். கதவைத் திறந்து காவலன் வந்து நின்றான். பிரத்யும்னன் "படைத்தலைவர்களை

அழையுங்கள். இக்கீழ்மகனை இப்போதே சிறையிடுங்கள்" என்றார். அந்த ஏவலன் வெற்றுவிழிகளுடன் அசையாமல் நின்றான். சுதேஷ்ணன் ஏளனம் தெரியும் நடையுடன் திரும்பிச் சென்று பீடத்தில் அமர்ந்தபடி "தங்களைச் சூழ்ந்திருக்கும் எந்த ஏவலனும் தங்கள் ஆணையை என் ஒப்புதலின்றி கைக்கொள்ளப் போவதில்லை. ஏனெனில் தங்களைச் சுற்றி இவர்களை அமைத்தது நான்" என்றார்.

ஏளனம் சிரிப்பாக விரிய "முழுமையாக தாங்கள் என்னுடைய ஆணையில் இருக்கிறீர்கள். இன்னும் ஓரிரு நாட்களில் துவாரகை முழுக்க என் ஆணையில் இருக்கும். எனது சொல் இங்கிருந்து சென்று ஷத்ரியப் படைநிரைகளை அடைவது வரை மட்டுமே நீங்கள் ஒரு அரசமைந்தர் என்று அறியப்படுகிறீர்கள். அதற்குப் பிறகு ஒரு ஷத்ரியக் குடிமகனாக மட்டுமே. குருதிக்கலப்பு கொண்ட ஷத்ரியனாக, ஒரு படி கீழோனாக" என்றார். "மூத்தோருக்கெதிராக வாளெடுக்கிறாய் அல்லவா?" என்று பிரத்யும்னன் கேட்டார். "மூத்தவர் தன் கடமையை செய்யவில்லை. தான் இருக்கும் இடமென்ன என்று உணரவில்லை. காலம் தன் மேல் அளிக்கும் பொறுப்பை ஏற்கவுமில்லை. ஷத்ரியர்களின் பொருட்டு நான் இதை செய்தாகவேண்டும்" என்றார் சுதேஷ்ணன்.

பிரத்யும்னன் தன்னை கோத்துக்கொண்டு, உடலசைவுகள் ஒழுங்கமைய நடந்து சென்று தன் இருக்கையில் அமர்ந்து மீசையை வருடியபடி "சரி, இப்போது எல்லாம் தெளிவடைந்துவிட்டது. இனி ஒளித்தல்கள் தேவையில்லை. நான் கேட்கும் இன்னொரு வினாவுக்கு விடை சொல். உன் இளையோன் எதற்காக ருக்மியை பார்க்கச் சென்றான்?" என்றார். "துவாரகையின் முழு ஷத்ரியர்களும் உங்கள் தலைமையில்

கிளர்ந்து எழவிருக்கிறார்கள், நீங்கள் என்னை பொறுப்பேற்கச் செய்திருக்கிறீர்கள், ஆகவே ருக்மியும் அவந்தியும் என்னுடன் நின்றிருக்கவேண்டும் என்று சொல்லத்தான் அவனை அனுப்பினேன். இன்னும் இரு நாட்களில் ஷத்ரியர்கள் கிளர்ந்தெழுந்து துவாரகை நகரை முழுக்க கைப்பற்றுவார்கள். அப்போது ருக்மி கிளம்பி வரவேண்டும் என ஆணையிட்டேன்.”

“அச்செய்தியை அவர் ஏற்றுக்கொண்டாரா?” என்றார். “இல்லை, ஏற்றுக்கொள்ளவில்லை. அவர் மேலும் ஒரு உறுதியை நாடுகிறார். அதன் பொருட்டு நீங்களே உங்கள் ஓலையுடன் இன்னொருவரை அனுப்பவேண்டும் என்று கோரினார். அவருக்கு விதர்ப்பத்தையும் அவந்தி உட்பட பிற நாடுகளுக்கான பொன்னையும் நான் அளித்தால் அவர் என்னுடன் நிற்பார். அவர் இப்போது உங்கள் இடமென்ன என்பதை அறிய விரும்புகிறார். உங்களுக்கு எதிராக நான் எழக்கூடும் என்பதை அவர் உள்ளம் இன்னும் ஏற்றுக்கொள்ளவில்லை. அதற்குத் தகுதியானவரை நான் அனுப்பவிருக்கிறேன்” என்றார் சுதேஷ்ணன்.

நான் சுகர்ணனின் கையை பற்றிக்கொண்டு “எவர் பெயரை சொன்னார் சுதேஷ்ணன்?” என்று கேட்டேன். “அவர் கணிகர் பெயரை சொன்னார்” என்று சுகர்ணன் சொன்னான். “கணிகர் சுதேஷ்ணனுக்கு அவ்வண்ணம் சொல்லளித்திருக்கிறாரா?” என்றேன். “தந்தையே, கணிகரும் சுதேஷ்ணனும் மிக அணுக்கமானவர்கள். ஒவ்வொரு நாளும் முன்னிரவில் கணிகரை சென்று பார்த்து சொல்லுசாவி வருவது சுதேஷ்ணனின் வழக்கம்.” என் கைகள் படபடக்கத் தொடங்கின. என்னால் அங்கு அமர்ந்திருக்க முடியவில்லை. நான் எழுந்து

மீண்டும் அமர்ந்துகொண்டேன். "சொல்க!" என்றேன். "என்ன நடந்ததென்று சொல்க!"

சுதேஷ்ணன் "இத்தூது இன்னும் ஓரிரு நாட்களில் முடியும். ருக்மி என்னை ஆதரிப்பார். அப்போது என் படைகள் எழும். அதுவரை சிறையிருக்கப்போவது நீங்கள், நானல்ல" என்றார். "நன்று, எனில் அதை செய்" என்றார் பிரத்யும்னன். பின்னர் "இளையவர்களில் எவரெவர் உன்னுடன் இருக்கிறார்கள்?" என்றார். "அதை நான் இப்போது கூற இயலாது. ஆனால் ஒன்று உணர்க, இளையவர்களில் மூவர் என்னுடன் இருக்கிறார்கள். உங்களுடன் இருக்கும் இருவருக்கும் நான் கிளர்ந்தெழுந்திருப்பது தெரியாது. அவர்கள் உங்களுடனும் இல்லை, என்னுடனும் இல்லை. நான் கோன்மை கொண்டால் மூத்தவரென என்னை அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள்."

சுதேஷ்ணன் வஞ்சமாகச் சிரித்து "நான் உங்களை கொல்வதையோ சிறையிடுவதையோ அவர்கள் ஏற்றுக்கொள்வார்களா என்பது வேறு. ஆனால் நீங்கள் இயற்கையாக இறப்பீர்கள் என்றால் இயற்கையாகவே நானும் கோன்மை கொள்வேன். மூத்தவரென என் சொல்லை அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள்" என்றார். "எனில் என்னை இயற்கையாக உயிர்துறக்கச் செய்யப்போகிறாய் அல்லவா?" என்றார். "ஆம்" என்றபின் "உடைவாள் கையில் இல்லாத தருணத்தில் உங்களிடம் இதை கூற நேர்ந்ததுகூட இறையருள் என்றே கருதுகிறேன். துவாரகைக்கு மேல் ஷத்ரியர்களின் கொடி பறப்பதற்கான அனைத்து வாய்ப்புகளையும், தெய்வங்கள் அனுப்புகின்றன" என்று சுதேஷ்ணன் சொன்னார்.

சுதேஷ்ணன் காவலனை நோக்கி "நமது படைவீரர்களை உள்ளே வரச்சொல்" என்றார். படைவீரர்கள் வந்து வெளியே

நின்றிருப்பதை அப்போதுதான் நான் உணர்ந்தேன். எதன்பொருட்டு எப்போதும் தந்தையின் பக்கவாட்டு அறைகளிலும் கீழறையிலும் இத்தனை படைவீரர்களை நிறுத்தி வைத்திருக்கிறார்கள் என்பதை நான் முன்னரே ஐயத்துடன் எண்ணியிருக்கிறேன். அதைப்பற்றி ஒரு முறை சுதேஷ்ணனிடம் கேட்டபோது ஃபானுவோ சாம்பனோ சற்றே மிகையாக துணியக்கூடும் என்ற ஐயம் தனக்கிருப்பதாக அவர் கூறினார். ஆனால் ஒரு அரண்மனைக்குள் அத்தனை பேரையும் ஒருகணத்தில் கட்டுப்பாட்டில் கொண்டுவரும் பெரும்படைப்பிரிவு ஒன்று இருப்பது விந்தையானதென்றே தோன்றியது.

கீழிருந்து இரண்டு மரப்படிகளினூடாக படைவீரர்கள் ஏறி வரும் ஓசை எழுந்தது. சிரித்தபடி "நன்று, இதை நான் எதிர்பார்க்கவில்லை. ஆனால் இவ்வண்ணம் நிகழ்ந்தது ஒருவகையில் நன்று. அனைத்தும் முடிவுக்கு வந்துவிட்டதல்லவா?" என்று பிரத்யும்னன் கூறினார். பின் நிகழ்ந்ததை என்னால் சரியாக சொல்ல முடியாது. ஒருகணம், அதிலும் குறைவான ஒரு கணம். சிட்டுக்குருவி அல்லது அரசநாகம் போன்றவற்றுக்கு மட்டுமே அந்த விரைவிருக்கிறது. பிரத்யும்னன் தன் பீடத்தின் பின்னாலிருந்து உடைவாளொன்றை எடுத்து உருவி அதே விசையில் செலுத்தி சுதேஷ்ணனின் தலையை வெட்டினார். என்ன நிகழ்ந்ததென்று தெரிவதற்குள் சுதேஷ்ணனின் தலை துண்டாகி கீழே விழுந்தது.

"மைந்தா, இவ்வறையின் கதவுகளை மூடுக!" என்று அவர் கூவினார். "மூடுக, அனைத்து கதவுகளையும்!" என்றார். நான் ஓடிச்சென்று கதவுகளை மூடினேன். மூன்றாவது கதவை

மூடுவதற்குள் இரண்டு படைவீரர்கள் உந்தி என்னைத் தள்ளி உள்ளே வந்தனர். அவர்களை பிரத்யும்னன் வெட்டி வீழ்த்தினார். நாகமென நெளிந்து அவர்களின் கழுத்து நரம்புகளை வெட்டிச் சரித்தது அவருடைய வாள். காலால் அவர்களை உதைத்து வெளியே தள்ளி கதவுகளை மூடிய பின் "சாளரத்தினூடாக கீழிறங்கு. சென்று என் தம்பியரிடம் இந்த அரண்மனையை முழுப் பொறுப்பில் எடுத்துக்கொள்ளச் சொல்" என்றார். நான் சாளரத்தினூடாக தொற்றி இறங்கினேன். அனைத்துக் கதவுகளையும் படைவீரர்கள் முட்டிக்கொண்டிருக்கும் ஓசையை கேட்டேன்.

கீழிறங்கி வந்து என்னை எதிர்கொண்டு ஓடிவந்த சாருதேஹனிடம் என்ன நிகழ்கிறது என்று கூறினேன். "உந்தி என்னைத் தள்ளி தந்தையை சிறைப்பிடிக்க முயல்கிறார்கள். தந்தை சுதேஷ்ணனை கொன்றுவிட்டார்" என்றேன். சாருதேஹன் வெளியே ஓடி கையசைவாலேயே ஆணையிட்டார். வெளியே காவல்முரசுகள் முழங்கின. கொம்போசைகள் எழுந்தன. அரண்மனைக்கு வெளியே அனிருத்தனின் தலைமையில் பரவியிருந்த படை உடனே ஒருங்கிணைந்து அணிவகுத்து அனைத்து வாயில்களினூடாகவும் அரண்மனைக்குள் நுழைந்தது. தந்தையை பிடிப்பதற்காக முயன்று கொண்டிருந்த படைப்பிரிவை அவர்கள் சூழ்ந்துகொண்டார்கள். அனிருத்தன் முன்னரே தந்தையின் அறையைச் சூழ்ந்து சுதேஷ்ணனின் படை இருப்பதை கண்டிருந்தார். ஆகவே அரண்மனை முற்றத்திலேயே எட்டு பிரிவுகளாக தன் படையை நிறுத்தியிருந்தார்.

சுதேஷ்ணனின் படையினர் தந்தையின் அறையின் ஒரு கதவை உடைத்துத் திறந்து உள்ளே சென்றுகொண்டிருந்தனர். அவர்களை வாளால் தடுத்த தந்தையால் எழுவர் கொல்லப்பட்டனர். எஞ்சிய அனைவரையும் அங்கேயே பிடித்து இழுத்துக்கொண்டு சென்றார்கள். அவர்களை அரண்மனை முற்றத்தில் கழுவேற்றும்படி சாருதேஹன் கூறினார். ஆனால் அவர்களை அரண்மனைக்கு வெளியே எவரும் அறியாமல் கழுவேற்றும்படி அனிருத்தன் ஆணையிட்டார். அனைத்துப் படைவீரர்களும் சேர்ந்து அவர்களை கொண்டுசென்றனர். இப்பொழுதில் அவர்கள் பாலைவனத்தில் தலைகொய்யப்பட்டிருப்பார்கள்.

"சுதேஷ்ணனின் உடலை எந்த இறுதி நெறிகளும் பேணாது எரித்து அழிக்கும்படி தந்தை ஆணையிட்டார். அவ்வுடலை எட்டு துண்டுகளாக வெட்டினார்கள். ஒவ்வொன்றையும் துவாரகையின் வெவ்வேறு தெருக்களில் போடும்படி எடுத்துக்கொண்டு சென்றிருக்கிறார்கள். இவையனைத்தும் இங்கிருந்து பரவிவிட்டன. இவை நிகழ்ந்துகொண்டிருக்கும்போதே நகர் அறிந்துகொண்டிருக்கும்" என்று சுகர்ணன் சொன்னான். "ஆம், நகரம் அத்தனை விரைவாக அறிந்துகொள்ளும்" என்று நான் சொன்னேன்.

என் உடல் சோர்ந்து களைத்திருந்தது. "தந்தையே, என்ன நிகழும் இனி?" என்று அவன் என் கையை பற்றினான். "எதுவும் நிகழும். அவர்கள் முடிவெடுக்கட்டும்" என்றபின் "ஷத்ரிய மைந்தர்கள் அனைவரும் மூத்தவர் பிரத்யும்னனின் தலைமையில் ஒருங்கிணைவார்கள் எனில் இன்று அல்லது நாளையே நாம் இவ்விடரை வென்று கடக்க முடியும். சுதேஷ்ணனை புறந்தள்ளி பிற அனைவரையும்

ஒருங்கிணைத்து பிரத்யும்னன் தன் கோன்மையை உறுதியாக நிலைநாட்டிக்கொள்ள முடியும். உள்ளிருந்த ஒரு சிறு மீறலும் இல்லாமலானது அவரை மேலும் வலிமைப்படுத்தக்கூடும்" என்றேன்.

"ஆனால் ஷத்ரியர்களில் சிலராவது சுதேஷ்ணனின் பொருட்டு கிளர்ந்தெழுவார்களெனில் அவருக்கு வேறு வழியில்லை. ஷத்ரிய மைந்தர் ஒருவருக்கொருவர் போரிட்டுக்கொள்ளத்தான் வேண்டும். எவராவது வென்றாகவேண்டும். வெல்லாதவர்கள் கொல்லப்பட்டாகவேண்டும்" என்றேன். "ஐயோ" என்று அவன் தன் தலையை பற்றிக்கொண்டான். "ஒன்றும் செய்வதற்கில்லை. இவ்வாறு நிகழ வேண்டுமென்றிருந்தால் இது நிகழும்" என்றபின் நான் வெளியே சென்றேன். "தாங்கள் தந்தையை சந்திக்கவில்லையா?" என்றான் சுகர்ணன். "இல்லை, அதற்கு முன் நான் என் மூத்தவரை சந்திக்கவேண்டும். அதற்குமுன்..." என்றபின் நான் கணிகரை நினைவுகூர்ந்தேன். உடனே கணிகரை சென்று பார்க்க வேண்டும் என்று தோன்றியது. சென்றதுமே வாளை உருவி மறுசொல்லின்றி அவர் தலையை துண்டித்துவிடவேண்டும் என்று எண்ணிக்கொண்டேன்.

# கல்பொருசிறுநுரை - 47

**பகுதி நான்கு : அலைமீள்கை – 30**

பிரத்யும்னனின் இளையவர்கள் அமர்ந்திருந்த சிற்றறை நோக்கி நான் ஓடினேன். அதன் வாயிலிலேயே என்னை கைநீட்டி தடுத்தபடி காவலர்கள் வந்தனர். "நான் உடன்பிறந்தாரை சந்திக்கவேண்டும், உடனடியாக இப்போதே" என்றேன். "அவர்கள் சொல்சூழ்ந்துகொண்டிருக்கிறார்கள். இப்போது எவரையும் சந்திப்பதில்லை" என்று காவலர்தலைவன் சொன்னான். "சந்தித்தாகவேண்டும். உடனே இப்போதே" என்று நான் மீண்டும் கூறினேன். "இத்தருணத்திலேயே சந்தித்தாகவேண்டும்" என்று கூவினேன். "இது துவாரகையை ஆளும் மூத்தவர் ஃபானுவின் ஆணை. மீறுவோர் தண்டிக்கப்படுவார்கள்."

இன்னொரு அகவை முதிர்ந்த காவலர் "சற்று பொறுங்கள். நான் சென்று சொல்லிவிட்டு வருகிறேன்" என்றார். அவர் அறைக்கதவை திறந்து உள்ளே செல்வதற்குள் ஒரு கணத்தில் என் முன்னால் நின்றிருந்த காவலனைப் பிடித்து தள்ளிவிட்டு அவரை முன்னால் உந்தித் தள்ளி உள்ளே சென்று நான் கதவை தாழிட்டேன். தள்ளப்பட்ட முதிய காவலர் சென்று நிலத்தில் விழுந்து எழுந்தார். உள்ளிருந்த சாருதேஷ்ணனும் பரதசாருவும் சாருவும் எழுந்து நின்றனர். சாருதேஷ்ணன் வாளை தொட்டார். நான் "பொறுங்கள். ஒருகணம் நான் சொல்லெடுக்கிறேன். அதன்பொருட்டே இங்கு வந்திருக்கிறேன்" என்றேன்.

"நாங்கள் எவரிடமும் பேசுவதற்கு ஒருக்கமில்லை. இத்தருணத்தை நாங்கள் கடந்தாகவேண்டும்" என்றார்

சாருதேஷ்ணன். "நான் இங்கு நிகழ்ந்தது அனைத்தையும் அறிந்தேன். என்ன நிகழ்ந்ததென்று மீண்டும் ஒருமுறை விளக்குகிறேன்" என்றேன். "என்ன நிகழ்ந்தது என்று ஆய்ந்துகொண்டிருக்க இப்போது பொழுதில்லை. சுதேஷ்ணன் தனக்கு எதிரான சூழ்ச்சி ஒன்றை அமைத்திருந்தார் என்பது பிரத்யும்னனுக்கு தெரிந்துவிட்டது. அவருடன் எவரெவர் இருந்தார் என்பதே அவருக்கு தெரியவேண்டியது. நாங்கள் அவருடன் இருந்தோம் என்பதை எங்களால் மறைக்க முடியாது. அவருக்குத் தெரியும் என்பது அவர் அந்தச் சொல்சூழ்கையில் எங்களை சேர்த்துக்கொள்ளவில்லை என்பதிலேயே தெரிகிறது. ஆகவே அவருடைய படைகள் எத்தருணமும் வந்து எங்களை சிறைசெய்யக்கூடும். தலைவெட்டி வீழ்த்தவும் வாய்ப்புண்டு. நாங்கள் என்ன செய்யவேண்டும் என்று பேசிக்கொண்டிருக்கிறோம்" என்றான் சாரு.

"நான் கூறுவதை சற்று கேளுங்கள்" என்றேன். "கூறுக!" என்றார் சாருதேஷ்ணன். அதற்குள் பரதசாரு முந்தி வந்து "எங்களுக்கும் படைவல்லமை இருக்கிறது. எங்களை ஆதரிக்கும் ஷத்ரியர்கள் இருக்கிறார்கள். அவர்களுடன் நாங்கள் பேசுகிறோம். இந்த அசுரக்குடி மைந்தனுக்கு முடிசூட்டும்பொருட்டா ஷத்ரியர்கள் இங்கே படைகொண்டு நின்றிருக்கிறார்கள்? களங்களை வென்று உயிர்கொடுத்து அவர்கள் போரிடுவது ஷத்ரியர்கள்மேல் அசுரக்கோல் நிலைகொள்வதற்கா என்று அவர்களை கேட்கிறேன். ஷத்ரியர்களை மீறி பிரத்யும்னன் எதுவும் செய்துவிடமுடியாது" என்றான்.

"நான் சொல்கிறேன். ஓசையிடவேண்டாம். நான் பேசுகிறேன்" என்றேன். "சொல்" என்று சாருதேஷ்ணன் சொன்னார். அவர்கள்

ஒவ்வொருவரும் கொந்தளித்துக்கொண்டிருந்தனர். எந்தக் கணமும் அவர்களின் அறைக்கதவை உடைத்துக்கொண்டு பிரத்யும்னனின் படைகள் உள்ளே வந்துவிடுமென்று அவர்கள் அஞ்சுவது தெரிந்தது. "இத்தருணத்தில் நீங்கள் அஞ்சுவதுபோல பிரத்யும்னன் நிலையழிந்து நடந்துகொள்ளவே வாய்ப்பு மிகுதி. அவர் சுதேஷ்ணனை கொல்லவில்லை என்றால் இவையனைத்தையும் பிறிதொன்றாக கருதலாம். ஆனால் தன் கையில் குருதிபட்ட பிறகு இனி அவர் தவிர்க்கப் போவதில்லை. உறுதியாக பிரத்யும்னனை நாம் எதிர்கொண்டாகவேண்டும். சுதேஷ்ணனை ஆதரித்த அனைவரையும் அவர் வாழவிடமாட்டார்."

பரதசாரு "அவரிடம் சென்று பேசினாலென்ன என்று எண்ணிக்கொண்டிருந்தோம். எவ்வண்ணம் பேசுவது என்பதைப்பற்றித்தான் இங்கு சொல்சூழ்ந்து கொண்டிருந்தோம்" என்றான். "எதை பேசுவீர்கள்? சுதேஷ்ணனுக்கு நீங்கள் அளித்த ஆதரவு பொய் என்றா? அல்லது அந்த ஆதரவு மெய், இன்று அஞ்சி பிரத்யும்னனுக்கு மீண்டும் ஆதரவு தெரிவிக்கப்போகிறோம் என்றா? அதை அவர் நம்புவாரா? அத்தகைய ஒரு தரப்பை அவர் தன் முடிக்கு கீழே விட்டுவைப்பாரா?" சாரு "நாங்கள் ஒன்றும் தனித்தவர்கள் அல்ல. எங்களுக்கும் படைவல்லமை உள்ளது" என்றான்.

"இது அறிவின்மை. படைவல்லமை இருப்பது உங்களைக் கொல்வதற்கு இன்னும் தெளிவான அடிப்படையை அவருக்கு அளிக்கிறது. நீங்கள் படைவல்லமை அற்றவர்கள், எதுவுமே செய்ய இயலாதவர்கள் என்றால் ஒருவேளை உங்களுக்கு அவர் உயிர்க்கொடை அளிக்கக்கூடும். ஆனால் உங்களால் ஷத்ரியர்களை தூண்டிவிட முடியும் என்றும் ஷத்ரியர்களிடம்

பேசுவதற்கு உங்களிடம் வலுவான குரல் ஒன்றுள்ளது என்றும் உணர்ந்தால் அவர் எவ்வகையிலும் உங்களை ஏற்றுக்கொள்ளமாட்டார். உங்களை அழித்து வென்றுநிற்க வேண்டுமென்றே அவர் விரும்புவார்" என்றேன்.

சாருதேஷ்ணன் தளர்ந்து "நாங்கள் என்ன செய்யவேண்டும்?" என்று கேட்டார். "உங்களுக்கு பிற மைந்தரின் ஆதரவு இருக்கிறதா என்பதுதான் இப்போது உங்களை வாழவைப்பது. உங்கள் ஷத்ரிய குடியின் ஆதரவல்ல நீங்கள் நாடவேண்டியது. நீங்கள் மூத்தவர் ஃபானுவை அடைக்கலம் புகுங்கள்" என்றேன். சாருதேஷ்ணன் "நாங்கள் அங்கு வந்தால்..." என்றபின் "நாங்கள் அங்கு வந்தால் பிரத்யும்னனுக்கும் ஃபானுவுக்கும் பூசல் எழும்" என்றார். "அவ்வாறல்ல, ஃபானுவிடம் மூத்தவர் என்ற நிலையில் வந்து காலில் விழுங்கள். மூத்தவரே, எங்களை காப்பாற்றுங்கள் என்று நீங்கள் பணிந்து சொல்லும்போது ஃபானு உங்கள் பொறுப்பை ஏற்றுக்கொள்ளவேண்டிய நிலையில் இருக்கிறார். அவர் பிரத்யும்னனிடம் பேசுவார்."

"மெய், பிரத்யும்னனின் ஆதரவை அவர் ஒருபோதும் விட்டுக்கொடுக்கமாட்டார். ஆனால் உங்கள் உயிரை காப்பாற்றிக் கொடுப்பார். இங்கிருந்து நீங்கள் உயிருடன் வெளியே செல்வதற்கு ஒரு வழியை அவர் திறந்துகொடுப்பார்" என்றேன். "குறைந்தது இந்நகரில் இருந்து நாங்கள் சென்றுவிட்டால் போதும். நாங்கள் எவ்வகையிலேனும் விதர்ப்பத்திற்கு சென்றுவிட்டால் போதும்" என்றார் சாருதேஷ்ணன். "விதர்ப்பத்திற்கு நீங்கள் செல்ல இயலாது. விதர்ப்பம் பிரத்யும்னனுடன் ஒரு உடன்படிக்கைக்கு வருவதற்கே வாய்ப்பு மிகுதி" என்றேன். பரதசாரு "எப்படி?" என்றான். "அவர் சுதேஷ்ணனுடன் மிக நெருக்கமாக இருந்தார்."

நான் "ஆனால் அவர் கையால் விசாரு கொல்லப்பட்டிருக்கிறான்" என்றேன். "ஆகவே அவர் பிரத்யும்னனை அடைந்தே தீரவேண்டும். பிரத்யும்னனின் ஆதரவு இல்லையென்றால் ருக்மியால் விதர்ப்பத்தை ஷத்ரியர் நடுவே ஒரு தனி நாடென நிலைநிறுத்த இயலாது. ருக்மியின் ஆதரவு இல்லாவிட்டால் பிரத்யும்னன் இந்நகரில் எவ்வகையிலும் பொருட்படுத்தத் தக்கவரல்ல. ஆகவே அரசுசூழ்தல் என்ற முறையில் அவர் ஒருபோதும் ருக்மியை கைவிடப் போவதில்லை. ருக்மியும் அவரை கைவிடப் போவதில்லை." சாருதேஷ்ணன் "ஆம், அதற்கான வாய்ப்புகள் உள்ளன, அனைவரும் நாடுவது அரசையே" என்றார்.

"நீங்கள் ருக்மியை சென்றடைவது இடரை அழைப்பது. பிரத்யும்னன் அவ்வாறு ருக்மியை கைவிடுவார் என்றால் ருக்மி செய்வதற்கு ஒன்றே உள்ளது. உங்களை பிரத்யும்னனிடம் கையளித்து தன் நேர்மையையும் தன் பணிவையும் அறிவித்துக்கொள்வது" என்றேன். "என்ன செய்வதென்றே தெரியவில்லை, என்ன செய்வதென்றே தெரியவில்லை" என்றபடி பரதசாரு எழுந்தான். "இந்த எந்த சூழ்ச்சியிலும் நான் இடம்பெறவில்லை. நான் சூழ்ச்சிகளுக்கு அப்பாற்பட்டவனாக இருந்தேன். நான் பிரத்யும்னனுக்கு அணுக்கமானவனாக இருந்தேன். என்னை பேசிப் பேசி இங்கு இழுத்தார்கள். எனக்குள் விழைவை மூட்டினார்கள். என்னை இவர்கள் தென்திசைக்கு பொறுப்பாக்குவதாக சொன்னார்கள்" என்றான்.

நான் அவனைப் பார்த்து "அதைவிட நீ விழைந்தாய், இளையோனே" என்றேன். "ஒருநாள் துவாரகையின் முழுமுடியையும் நீயே சூடிக்கொள்ள வாய்ப்பு அமையும்

என்றும் அதுவரை சுதேஷ்ணனிடம் அணுக்கமாகி உடன் இருப்பதாக நடிக்கவேண்டும் என்றும் எண்ணினாய்" என்றேன். "இல்லை இல்லை..." என்று அவன் கூவினான். நான் உரக்க "அவ்வண்ணமே நினைத்தாய், அதில் எந்த ஐயமும் இல்லை. சுதேஷ்ணன் முடிசூடட்டும். ஃபானுவையும் பிரத்யும்னனையும் அவர் தோற்கடிக்கட்டும். அதன்பிறகு சுதேஷ்ணனை நீ வெல்லலாம் என்று எண்ணினாய்" என்றேன். "இல்லை" எனும்போது அவன் குரல் தழைந்தது. "ஐயமே இல்லை, நீ அவ்வாறுதான் எண்ணினாய்" என்றேன்.

பரதசாரு "ஆம், அவ்வாறுதான் எண்ணினேன். பித்தன்போல் எண்ணினேன். கீழ்மகன்போல் எண்ணினேன். அதற்காகத்தான் இன்று இதோ பழிசுமத்தப்பட்டு நின்றிருக்கிறேன். என் தலை இந்த மண்ணில் உருளப்போகிறது. என்ன செய்வது என்று எனக்குத் தெரியவில்லை. அழியப்போகிறேன். அழிவதைத் தவிர எனக்கு வேறெந்த முடிவும் கண்ணுக்குத் தெரியவில்லை" என்று கூறிவிட்டு தலையில் ஓங்கி ஓங்கி அறைந்துகொண்டு அழுதபடி நிலத்தில் அமர்ந்தான். பிறர் அவனை வெறித்து நோக்கியபடி நின்றனர்.

நான் அவனை நோக்கி "ஃபானுவை சென்றடைக! ஃபானுவிடம் உதவி கோருக! நாங்கள் இந்நகரத்தைவிட்டு வெளியே செல்கிறோம் என்று அவரிடம் கூறுக! நகரிலிருந்து வடபுலம் நோக்கி செல்க! கூர்ஜரமோ அல்லது பிற ஏதேனும் நாடோ. எங்கேனும் உங்களுக்கு அடைக்கலம் அளிக்கும் ஒரு ஷத்ரிய நாட்டுக்கு செல்லுங்கள். அங்கே இருந்துகொண்டு இங்கிருக்கும் ஷத்ரியர்களை சிறிது சிறிதாக அங்கே சேர்த்துக்கொள்ளுங்கள். அங்கே ஒரு படையை திரட்டிக்கொண்டீர்கள் என்றால் பிறகெப்போதேனும் நீங்கள் பிரத்யும்னனிடம் வந்து

பேசமுடியும். உங்களுக்கான உரிமையை எங்கேனும் கேட்டு பெறமுடியும். இத்தருணத்தில் உயிருடன் இருப்பதே உங்களுக்கான அறைகூவல்" என்றேன்.

"ஆம், உயிர்... அதுவன்றி பிறிதெதையும் இப்போது நாங்கள் நாடவில்லை" என்றார் சாருதேஷ்ணன். "எனில் வருக! உடனடியாக நாம் சென்று ஃபானுவை பார்ப்போம். என்னுடன் எழுக!" என்றேன். சாரு "ஆனால் நாங்கள் இந்த அரண்மனை விட்டு வெளியே செல்ல முடியாது. இந்த அரண்மனை முற்றாகவே பிரத்யும்னனின் படைகளால் சூழப்பட்டிருக்கிறது" என்றான். "ஆம், நான் அதை அறிவேன். ஆனால் நான் ஃபானுவின் தூதன். அவர் அளித்த அரசமுத்திரை மோதிரத்துடன் இங்கு வந்திருக்கிறேன். என்னை இங்கு சிறையிட அவர்களால் முடியாது. அது ஃபானுவின் எதிர்ப்பை ஈட்டிக்கொள்வதாகும். நான் அன்றி நீங்கள் இந்த வளையத்திலிருந்து வெளியே செல்லமுடியாது என்பதை உணருங்கள்" என்றேன்.

"ஆம், உணர்கிறோம். வருகிறோம்" என்றார் சாருதேஷ்ணன். நான் அவர்களை அழைத்துக்கொண்டு வெளியே வந்தேன். இடைநாழியினூடாக நடக்கையில் நான் ஐயம் கொண்டிருந்தேன். இத்தருணத்தில் பிரத்யும்னன் செய்வதற்கு ஒன்றே உள்ளது. அவர் கையில் குருதி படிந்துவிட்டது. அக்குருதிக்கு அவர் தெய்வங்களிடம், குடிகளிடம், உடன்பிறந்தாரிடம் ஈடு சொல்லியே ஆகவேண்டும். அதை ஈடுகட்டுவதற்கு ஒரே வழி சுதேஷ்ணன் இயற்றியது என்ன என்பதை மேலும் மேலும் பெரிதாக்குவது. பொறுத்துக்கொள்ள இயலாத ஒன்றாக மாற்றுவது. அதை செய்ய வேண்டுமெனில் முதலில் சுதேஷ்ணனையும் சுதேஷ்ணனுடன் இணைந்த

இவர்களையும் கொன்றுவிடவேண்டும். எவ்வகையிலும் இப்பகையை எஞ்சவிடலாகாது.

இங்கிருந்து வெளியே சென்றால் இவர்கள் மக்களிடம் இரக்கத்தை ஈட்டிக்கொள்வார்கள். பிரத்யும்னனுக்கு பெரும்பழியையே திரட்டி வைப்பார்கள். சுதேஷ்ணனின் கொலையை பயன்படுத்திக்கொண்டு பிரத்யும்னனுக்கு எதிராக குடிகளின் பகையையும் அச்சத்தையும் பெருக்கிக்கொள்வதே இவர்கள் தங்கள் இடத்தை ஈட்டிக்கொள்வதற்கான வழியாக அமையும். ஆகவே அரசுசூழ்தலின் நெறிகளின்படி அவர் இவர்களை எந்நிலையிலும் வாழ விடமாட்டார். இந்த அரண்மனை இதற்குள் முற்றாக சூழப்பட்டிருக்கும். இங்கிருந்து வெளியே செல்ல எவரையும் விடப்போவதில்லை.

நான் அத்தருணத்தில் முற்றிலும் நம்பிக்கையிழந்திருந்தேன். ஆயினும் அனைத்து முடிவுகளையும் எடுத்துவிட்டவன் போலவும் மிகுந்த நம்பிக்கை கொண்டவன் போலவும் உறுதியாக அடிகள் வைத்து சென்றேன். எனது தோற்றத்தை நம்பி அவர்கள் பதறியபடியும் விம்மியபடியும் எனக்குப் பின்னால் வந்தனர். இடைநாழியினூடாக நடந்து படிகளினூடாக இறங்கி கூடத்திற்கு வந்தபோது அங்கே நின்றிருந்த காவல்வீரர்கள் வாட்களை உருவியபடி எங்களை தடுத்தனர். அவர்கள் தலைவன் முன்னால் வந்து "நில்லுங்கள், இங்கிருந்து எவரும் வெளியே செல்ல முடியாது. பிரத்யும்னனின் ஆணை" என்றான்.

நான் எனது முத்திரை மோதிரத்தை தூக்கிக்காட்டி உரக்க "நான் இந்நகரை ஆளும் ஃபானுவின் இளையோன். இந்நகரை ஆளும் தலைவன் ஆணைப்படி இவர்களை அழைத்துச்செல்கிறேன். என்னை தடுப்பவர் எவர்?" என்றேன். "இந்நகரில் இன்று எவரும்

முழுதாக முடிசூட்டிக்கொள்ளவில்லை. எங்கள் அரசர் இப்போதும் பிரத்யும்னன்தான். அவருடைய ஆணையையே நான் நிறைவேற்ற முடியும்" என்று காவலர்தலைவன் சொன்னான். "எந்நிலையிலும் இங்கிருந்து எவரையும் நான் வெளியே செல்ல ஒப்ப இயலாது. படைக்கலங்களை கீழே வீழ்த்தி கைகளைத் தூக்கி முழந்தாளிடுக! சிறைப்படுக!"

"என்னை தடுப்பவர் எவர்? பேரரசர் ஃபானுவின் ஆணையை மீறுபவர் எவர்? எனில் மீறுங்கள் பார்க்கலாம்" என்றபடி அந்த முத்திரை மோதிரத்தை தூக்கிக்காட்டியபடி நான் முன்னால் நகர்ந்தேன். "இவர்களை அழைத்து வரும்படி ஃபானுவின் ஆணை. அந்த ஆணையை மறுப்பது தங்கள் தலைகளை பலிபீடத்தில் வைப்பதேதான். உணர்க, இத்தருணம் ஒரு போருக்குரியது என்று உணர்க! போரில் ஒவ்வொருவரும் தங்கள் தலையைத்தான் முன் வைக்கிறார்கள்" என்றேன்.

"இளவரசே, எந்நிலையிலும் என் அரசர் பிரத்யும்னனின் ஆணையை நான் மீறப்போவதில்லை. தாங்கள் எவரும் இங்கிருந்து வெளியே செல்லமுடியாது" என்று கூறி அவன் வாளை உருவினான். நான் "என் தலையை வெட்டு. நான் இங்கிருந்து செல்லாமல் இருக்கபோவதில்லை. ஏனெனில் இது எனது மூத்தவரின் ஆணை" என்றபடி என் வாளை உருவி முன்னால் சென்றேன். "வேண்டாம் நில்லுங்கள் பொறுங்கள்" என்று அவன் கூவினான். இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்தபடி நின்றோம். பிறகு நான் ஓங்கி வெட்டியபடி முன்னால் சென்றேன். அவன் ஒருகணம் தயங்கி பின்னடைந்தான்.

சிறுவழி உருவானால் கூட அதனூடாக அவர்களை இட்டுச்செல்ல முடியுமென்று எண்ணினேன். அத்தருணத்தில்

என் கால் சற்றே வழுக்கியது. என் தலை சுழன்றது. காட்சிகள் அனைத்தும் அதிர்ந்து சற்றே நெளிந்தன. நான் வாளை உருவி ஊன்றி தயங்கி நின்றேன். என்னுள் உடல்நீரில் ஓர் அலை எழுந்தடங்கியது. என் அகத்தே ஓடிய எண்ணப்பெருக்கும் சொல்கலங்கி சுழிப்பு கொண்டது. தன்னுணர்வு அடைந்தபோது என் உடலெங்கும் வியர்வை எழுந்திருந்தது. நான் களைத்திருந்தேன். என் உள்ளம் அதன் தாங்கெல்லையை கடந்திருக்கலாம்.

ஆனால் என்னைச் சுற்றி அத்தனை பேருமே கூச்சலிட்டுக்கொண்டிருப்பதை கண்டேன். நகருக்குள்ளிருந்து பெரும் ஓசை எழுந்து சாளரங்களினூடாக உள்ளே வந்தடைந்தது. எங்கும் ஓலங்கள். பலர் ஓடும் ஓசைகள். மரப்படிகளிலும் பளிங்குப்படிகளிலும் காலடிகள் விழும் முழக்கங்கள். வெளியிலிருந்து ஒரு வீரன் உள்ளே ஓடிவந்து "நிலநடுக்கம். நிலம் நடுங்கியிருக்கிறது" என்றான். "எங்கு? யார்?" என்று கேட்டபடி என்னைத் தடுத்த காவலர்தலைவன் வெளியே ஓடிப்போனான். "வருக! வருக!" என்று நான் சாருதேஷ்ணனையும் இளையவர்களையும் நோக்கி சொல்லிவிட்டு ஓடினேன்.

"வெளியே வருக! என்னை தொடர்ந்து வருக!" என்று கூறியபடியே வெளியே ஓடினேன். உள்ளிருந்தும் ஏராளமான படைவீரர்கள் படிகளிலிருந்தும் இறங்கி ஓடி வந்தனர். "நிலநடுக்கம்! நிலம் நடுங்கியிருக்கிறது!" என்று ஒருவன் கூவினான். என்னைத் தொடர்ந்து வந்த சாரு "நான் குமட்டலெடுத்தேன், தலைசுழன்றது. என்ன நிகழ்ந்ததென்றே தெரியவில்லை" என்றான். பரதசாரு "சுவர்களில் மாட்டப்பட்டிருந்த படைக்கலங்களும் பொருட்களும்

அசைந்துவிட்டிருந்தன" என்று சொன்னான். "நிலம் நடுங்கியிருப்பது உண்மைதான்" என்று நான் சொன்னேன். "அது நன்று, நாம் தப்ப வாய்ப்பு கிடைத்தது."

"என்ன நிகழ்ந்ததென்றே தெரியவில்லை. இங்கிருந்து தெய்வங்கள் கிளம்பிச்செல்கின்றன. தெய்வங்கள் இந்நகரை கைவிடுகின்றன" என்று அப்பால் ஒரு காவலன் கூவினான். "பேரழிவு அணுகியிருக்கிறது. இந்நகர் கடலின் இரு உள்ளங்கைமேல் அமைந்துள்ளது என்பதை மறக்காதீர்கள். இதை ஏந்தியிருக்கும் பெரும்பாறைகளில் ஒன்று அசைகிறது" என்று வேறு ஒருவன் கூறினான். "இந்நகரமே உடைந்து விழப்போகிறது. கட்டடங்கள் ஒன்றின்மேல் ஒன்று விழப்போகின்றன" என்று இன்னொருவன் கூவினான்.

"இது நகரா என்ன? ஒன்றுக்குமேல் ஒன்றென கட்டடங்களை கட்டியிருக்கிறார்கள். உச்சியிலிருக்கும் ஒரு மாளிகை இடிந்துவிழுந்தால் அனைத்துக்கும் மேலே அது விழுந்துவிடும். வானிலிருந்து விழுவதுபோல" என்று ஒரு குரல். "ஒவ்வொரு மாளிகையும் இன்னொரு மாளிகையின் தலைமேல் அமர்ந்திருக்கும் இது போன்ற ஒரு நகரம் நிலநடுக்கத்தில் மிக மிக அழிவை அளிப்பது" என்று இன்னொரு குரல். அந்தப் பதற்றத்திலும், அவ்வாறு ஓடிக்கொண்டிருக்கையிலும் எத்தனை தெளிவாக சொற்களை கேட்கிறேன்! இடர்களில் புலன்கள் பல மடங்கு கூர்கொள்கின்றன.

"வெளியேறுங்கள்! கட்டடங்களை விட்டு வெளியேறுங்கள்!" என்று யாரோ எங்கோ கூவிக்கொண்டிருந்தார்கள். மேலிருந்து ஏவலர்கள் பெருந்திரளாக வந்து எங்களைக் கடந்து சென்றனர். ஒவ்வொருவரும் மிரண்ட கன்றுக்கூட்டங்களை போலிருந்தனர். நான் திரும்பி "இவர்கள் நடுவே நாம் செல்வோம். இவர்களைத்

தடுக்க எவராலும் இயலாது. நாம் வெளியே சென்றுவிடுவோம். இப்போது நாம் முற்றத்தை சென்றடைந்தாக வேண்டும்" என்று கூறியபடி அவர்கள் நடுவே ஓடி வாயிலினூடாக பிதுங்கி வெளியே முற்றம் நோக்கி பாய்ந்தேன்.

"புரவிகளை நோக்கி செல்லுங்கள். இத்தருணத்தில் எவரும் புரவிகளை நாடமாட்டார்கள், ஏனென்றால் புரவிகள் அஞ்சிவிட்டிருக்கின்றன. நமது புரவிகளை நாடிச் செல்லுங்கள். ஒவ்வொருவரும் ஒரு புரவியை எடுத்துக் கொள்ளுங்கள்" என்று கூவியபடி நான் ஓடிச்சென்று என்னுடைய புரவியில் தாவி ஏறிக்கொண்டேன். அதைத் தட்டி முற்றத்தைக் கடந்து பக்கவாட்டுப் பாதையில் ஏறினேன். என்னைத் தொடர்ந்து மூவரும் வந்தனர். ஒவ்வொருவரும் எங்கு செல்வது என்று தெரியாமல் திசையறியாது தத்தளித்துக்கொண்டிருந்ததனால் திசையறிந்த நாங்கள் சரியாக வழி கண்டுபிடித்து செல்ல இயன்றது.

நகரமே தெருக்களில் நின்று கூச்சலிட்டுக்கொண்டிருப்பதை கண்டேன். "என்ன நிகழ்கிறது?" என்று எதிரே வந்த ஒருவனிடம் கேட்டேன். "நிலம் நடுங்கியிருக்கிறது. பல கட்டடங்கள் விரிசல் விட்டிருக்கின்றன. ஒவ்வொன்றும் இடிந்து சரிந்துகொண்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். அத்தனை பேரும் இல்லங்களிலிருந்து வெளியே வந்து கூச்சலிடுகிறார்கள்" என்றான். இன்னொருவன் "அனைத்து ஒழுங்குகளும் சிதறிவிட்டன. எவரும் எந்தச் சொல்லையும் செவிகொடுக்க சித்தமாக இல்லை" என்றான்.

"செல்க! செல்க!" என்று புரவியைத் தட்டி நான் அவர்களை அழைத்துக்கொண்டு அரண்மனையை சுற்றிக்கொண்டு சென்றேன். பிரத்யும்னனின் படைகள் சிதறிவிட்டிருந்தன.

எவருக்கும் எவரும் ஆணையிட முடியாத நிலை. எவரும் எங்களைத் தொடர்ந்து வர இயலாது என்று எனக்கு தெரிந்திருந்தது. ஆனால் நான் திரும்பிப் பார்த்தபோது புரவியில் வாளுடன் என்னைத் தொடர்ந்து வந்த அந்த படைத்தலைவனை கண்டேன். அவன் தன் கடமையிலிருந்து ஒருகணமும் விலகவில்லை என்று எனக்கு தெரிந்தது.

"நில்லுங்கள்! நீங்கள் செல்ல நான் ஒப்பமுடியாது" என்று கூவியபடி அவன் வந்தான். நான் மாற்று எண்ணவில்லை. திரும்பி என் இடையில் இருந்த குத்துவாளை எடுத்து அவனை நோக்கி வீசினேன். அவன் எதிர்பாராமல் திகைக்க அவன் கழுத்தில் பாய்ந்த கத்தி ஆழ இறங்க அதை பிடித்துக்கொண்டு பக்கவாட்டில் சரிந்து கீழே விழுந்தான். "வருக!" என்று கூறியபடி நான் புரவியில் விரைந்து யாதவர்களின் அரண்மனைப் பகுதியை அடைந்து அங்கு முற்றத்தில் புரவியை நிறுத்திவிட்டு இறங்கினேன். "வருக!" என்று அழைத்தபடி மேலே சென்றேன். அங்கு முற்றம் முழுக்க யாதவப் படைவீரர்களும் ஏவலர்களும் நின்று கொந்தளித்துக்கொண்டிருந்தனர். கூட்டத்தில் எவரும் எங்களை அறியவில்லை. நீர்ப்பரப்புபோல மானுடத்திரள் அலையடித்தது. சுவர்களில் சென்று மோதிச் சுழன்றது. அதில் சுழிகள் எழுந்தன.

நான் படிகளில் ஏறுகையில் இயல்பாக திரும்பிப்பார்த்தபோது எதிரே நின்ற மாபெரும் மாளிகை விரிசல்விட்டிருப்பதை கண்டேன். நான் எதை பார்க்கிறேன் என்பது தெரியாமல் "என்ன? என்ன?" என்று கேட்டார் சாருதேஷ்ணன். "அங்கு பாருங்கள்" என்றேன். "என்ன?" என்று பரதசாரு கேட்டான். அது கீழிருந்து மேலே சென்று மேலே கிளைவிரித்து நின்ற மாபெரும் மரம் போலிருந்தது. அல்லது மேலிருந்து கீழிறங்கும்

கரிய மின்னல். "விரிசல்விட்டிருக்கிறது" என்று சாரு சொன்னான். "சேர்த்து நிறுத்தியாக வேண்டும். இல்லையெனில் விழுந்துவிடும்" என்று பரதசாரு சொன்னான்.

"விரிசல்விட்ட கட்டடத்தை எவரும் சேர்த்துவிட முடியாது. விரிசல் என்பது ஏற்கெனவே அதற்குள் இருந்து கொண்டிருக்கும் ஒன்று. அது வெளிப்பட்டிருக்கிறது. தானே அது கீழே விழ முடிவெடுத்த பிறகுதான் முதல் விரிசல் வருகிறது. அம்மாளிகை விழுந்தால் அதன் கீழிருக்கும் மாளிகைகள் ஒவ்வொன்றாக சரியும்" என்றேன். "இப்போது அதைப் பற்றி பேச நேரமில்லை. வருக!" என்றபடி படிகளில் ஏறி எதிர்ப்பட்டவர்களை முட்டி முட்டி விலக்கிக்கொண்டு மேலே சென்றேன்.

மேலிருந்து ஏவலர்களும் படைவீரர்களும் கொந்தளித்து கீழிறங்கிக்கொண்டிருந்தார்கள். அதே எண்ணிக்கையில் சிலர் மேலே செல்ல முண்டியடித்துக் கொண்டிருந்தனர். "வருக வருக" என்று கூறி நான் இடைநாழியினூடாக அவர்களை அழைத்துச் சென்றேன். "மூத்தவர் எங்கே?" என்றேன். காவலன் "அவர்கள் சொல்சூழ்ந்து கொண்டிருந்தார்கள். அப்போதுதான் இந்த நிலநடுக்கம். அவர்கள் அந்த அறையில் இருக்கிறார்கள்" என்று சொன்னான். "என்னை அழைத்துச் செல்க! அழைத்துச் செல்" என்று கூவினேன். "வருக!" என்று அவன் என்னை கைபற்றி கூட்டிச்சென்றான். அவர்கள் மூவரும் என்னைத் தொடர்ந்து வந்துகொண்டிருந்தனர்.

பிரத்யும்னனின் இளையவர்களை வியப்புடன் திரும்பிப் பார்த்தனர். "வருக வருக" என்று அழைத்துக்கொண்டு நான் முன்னால் சென்றேன். அங்கு ஃபானுவின் அறைவாயிலில் இருந்த காவலனை "என்னை அழைத்துச் செல்க, உள்ளே

செல்க!" என்றேன். அவன் கதவைத் திறந்து உள்ளே செல்வதற்குள் இளையவன் வெளியே வந்து "தாங்கள் வருவதை சாளரத்தினுடாக பார்த்தேன். பிரத்யும்னனின் ஆணை பறவைத்தூதாக வந்துவிட்டது. இளையவர்கள் இங்கு வந்திருக்கிறார்களா?" என்றான். "ஆம், வந்திருக்கிறார்கள்" என்றேன். "அவர்களை உடனடியாக திருப்பி அனுப்ப பிரத்யும்னன் கோருகிறார்" என்றான்.

நான் திரும்பி மூவரிடமும் "உள்ளே சென்று மூத்தவர் ஃபானுவின் கால்களில் விழுங்கள்" என்றேன். அவர்கள் ஒரு கணத்தில் புரிந்துகொண்டு எங்களைக் கடந்துசென்று அவையில் அமர்ந்திருந்த மூத்தவர் ஃபானுவின் காலடியில் குப்புற விழுந்தனர். "மூத்தவரே, எங்களை காப்பாற்றுங்கள். எங்கள் உயிருக்கு நீங்களே காப்பு" என்று கூவினார்கள். "நான் என்ன செய்வது இப்போது..." என்று சொல்லியபடி அவர் எழுந்தார். நான் "மூத்தவரே, தங்களிடம் அடைக்கலம் கோரி அவர்கள் வந்திருக்கிறார்கள். இந்நகரைக் காப்பவர், இந்தக் குடிக்கு மூத்தவர் என்ற வகையில் தாங்கள் இதற்கு பொறுப்பேற்றுக் கொள்ளத்தான் வேண்டும்" என்றேன்.

# கல்பொருசிறுநுரை - 48

**பகுதி நான்கு : அலைமீள்கை – 31**

அந்த அறையிலிருந்த உடன்பிறந்தார் அனைவரும் பதறி எழுந்துவிட்டனர். மூத்தவர் ஃபானு நிலையழிந்து கைகள்

அலைபாய அங்குமிங்கும் நோக்கினார். ஃபானுமான் “மூத்தவரே, பிரத்யும்னனின் ஓலையை நினைவுறுக! நம்மால் அவர்களை எளிதில் மீறமுடியாது இப்போது” என்றான். அவரால் முடிவெடுக்க இயலவில்லை. வெளியே அலையலையாக நகரின் ஓசைகள் கேட்டுக்கொண்டிருந்தன. “நாம் என்ன செய்வது? நம் நகர் இடிந்துகொண்டிருக்கிறது. உடனே நான் மக்கள்முன் தோன்றியாகவேண்டும். இந்நகரை ஒழுங்கு செய்தாகவேண்டும்” என்றார்.

“எங்களை காப்பாற்றுக, மூத்தவரே!” என்று பரதசாரு கூவினான். சாருதேஷ்ணன் “எங்களுக்கு எவருமில்லை” என்றார். ஃபானு “நான் என்ன செய்வது, இளையோனே?” என்று சுஃபானுவிடம் கேட்டார். பின்னர் திரும்பி என்னிடம் “கணிகர் எங்கே? கணிகரை அழைத்து வருக!” என்றார். ஃபானுமான் “கணிகர் அருகே சிற்றறையில்தான் இருக்கிறார்” என்றான். “அழைத்து வருக... உடனே இங்கே கொண்டு வருக!” என்றார் ஃபானு. கணிகரை அணுக்க அறையிலிருந்து மரத்தாலத்தில் தூக்கிக்கொண்டு வந்து வைத்தனர். அவர் இரு கைகளையும் கூப்பி கண்மூடி ஊழ்கத்தில் இருப்பவர் எனத் தோன்றினார்.

ஃபானு கணிகரை நோக்கி “அந்தணரே, நிகழ்ந்தவை என்ன என்று சுருக்கமாக சுஃபானு சொல்வான்” என்றார். சுஃபானு ஓரிரு வரிகளில் சொல்லி முடித்ததும் “சொல்க, இத்தருணத்தில் நான் செய்யக்கூடுவதென்ன? உங்கள் சொற்களை நாடுகிறேன்” என்றார். “உடனடியாக நான் முடிவெடுத்தாக வேண்டும். இந்நகர் கலைந்து கொந்தளிக்கிறது. என் படைத்தலைவர்களை அனுப்பி நகரை ஒழுங்கு செய்துகொண்டிருக்கிறேன். இப்போது யாதவ மைந்தர்

அனைவரும் ஒன்றாக நின்றாகவேண்டும். பிரத்யும்னனுடன் ஒரு பூசலை இப்போது துவாரகை தாங்காது.”

கணிகர் “இத்தருணத்தில் இவ்விளையோரை பிரத்யும்னனிடமிருந்து காப்பது நமது கடமை. அதை எவ்வண்ணமும் தவிர்க்க இயலாது. இவர்கள் பிரத்யும்னனால் கொல்லப்படுவார்களென்றால் எவ்வகையிலோ குடிப்போரை தவிர்க்க இயலாதவர்கள் ஆவீர்கள். முடிசூடுவதற்கு முன்பே ஒருவரைப்பற்றி அவ்வாறு ஒரு எண்ணம் வருவது நன்றல்ல. அடைக்கலம் என வந்தவரை கைவிட்டுவிட்டீர்கள் என்ற சொல்லை அடைந்தால் ஒருபோதும் உங்களை யாதவ உள்ளம் அரசரென ஏற்காது. ஒருவகையில் இது நல்லூழ்தான். இவ்விளைஞர்கள் தங்கள் மூத்தவரிடமிருந்து உங்களை நாடி வந்தது நீங்களே அரசர் என்பதை பிரத்யும்னன் முன் மறுபடியும் நிறுவுகிறது. இவர்களுக்கு அடைக்கலம் கொடுங்கள். உங்களுடன் வைத்துக்கொள்ளுங்கள்” என்றார்.

“ஆனால் பிரத்யும்னன் இதை எவ்வாறு எடுத்துக்கொள்வார் என்று தெரியவில்லை. அவர்களும் எளிய தரப்பல்ல. அவர்களிடம் மிகப் பெரிய படை இருக்கிறது. இப்போதுதான் நாம் ஒத்திசைவுக்கு வந்திருக்கிறோம்” என்றார். “அவர்கள் கிளர்ந்தெழுந்தால் இப்போது ஒரு போர்கூட நிகழலாம்...” அதற்குள் கதவு வெடித்து திறந்து அதி᳀பானு உள்ளே வந்து “மூத்தவரே, என்ன செய்கிறீர்கள் இங்கே? நகரில் நூறு மாளிகைகளுக்குமேல் விரிசல்விட்டிருக்கின்றன. ஆயிரம் வீடுகளேனும் இடிந்துள்ளன என்கிறார்கள். மக்கள் திரண்டு நகரைவிட்டு வெளியே செல்கிறார்கள்” என்றான்.

“பொறு...” என்ற ᳀பானு “கூறுக, அமைச்சரே!” என்றார். கணிகர் புன்னகையுடன் “நம் தரப்பில் எப்போதும் தெய்வத்தின் குரல்

உள்ளது. அதை கருத்தில் கொள்க!" என்றார். "இதோ நிலம் நடுங்கி துவாரகை அலைவுகொண்டிருக்கிறது. ஏன் இது நடக்கிறது? சுதேஷ்ணன் பிரத்யும்னன் கையால் கொல்லப்பட்டார். துவாரகையில் உடன்பிறந்தார் கொலை நடந்திருக்கிறது. யாதவ மைந்தரின் குருதி இங்கு விழுந்திருக்கிறது. இதுநாள் வரை இந்நகரை கட்டிய தெய்வங்கள் இதை கைவிடுகின்றன. ஆகவேதான் இவ்வண்ணம் நிகழ்கிறது. இதையே கூறுக! இவ்வண்ணமே இங்கு முரசறைக!"

"இந்தக் கொந்தளிப்பு நன்று. மக்கள் எதையும் எண்ணி முடிவெடுக்கும் நிலையில் இல்லை. இப்போது நாம் ஓங்கிச் சொல்வதே நிலைகொள்ளும். இதை பயன்படுத்தி மாற்றிலாத கோன்மையை இந்நகர்மேல் நிறுவுக! துவாரகையின் குடிகள் பிரத்யும்னனின் செயலை ஏற்கமாட்டார்கள். உண்மையில் இது இரு தெய்வங்களுக்கு ஒரே படையலை இடும் முயற்சி" என்று கணிகர் சொன்னார். "ஒன்று இம்மைந்தரை காப்பாற்றுவதற்கு ஒருபோதும் பிரத்யும்னன் மறுக்க முடியாத தடை ஒன்றை போடுகிறோம். துவாரகையின் மக்கள் நடுவே பிரத்யும்னனே இப்பேரழிவுக்கு வழிவகுத்தவர் என்னும் உளப்பதிவை உருவாக்குகிறோம். இன்று நாம் வெல்ல வேண்டிய எதிரி பிரத்யும்னனே."

"ஆம், அவர் உங்களை ஏற்றுக்கொண்டார், உங்களுடன் நின்றிருக்கிறார் என்பது மெய். ஆயினும் என்றேனும் உங்களுக்கு எதிராக எழமுடியுமென்றால் அது அவருடைய கைதான். அதை இன்றே இல்லாமல் செய்துவிடுவது உங்களுக்கு எவ்வகையிலும் நன்று" என்றார். ஃபானு "என்ன செய்வது?" என்றார். கதவு மீண்டும் திறந்து உள்ளே வந்த

ஸ்ரீஃபானு "மூத்தவரே, நகரமே சிதைந்து பரந்துவிட்டது. உங்கள் அரசாணையை அத்தனை காவல்மாடங்களிலிருந்தும் ஒலிக்கவைக்கவேண்டும் என்று படைத்தலைவர்கள் சொல்கிறார்கள்" என்றான்.

"இரு" என்று கைகாட்டிய ஃபானு "தெய்வங்களே" என்றார். கணிகர் அவருடைய கொந்தளிப்பை அறியாதவர்போல "ஆம், இவர்களை இவ்வண்ணம் விட்டுவைப்பது தனக்கெதிரென்று எண்ணுவார். இவர்கள் உங்களுடன் சேர்ந்துகொண்டதினூடாக அவரை சிறுமை செய்திருக்கிறார்கள். அனைத்தும் உண்மை. ஆனால் அவர்களுக்கு வேறு வழியில்லை. இத்தருணத்திலேனும் அவர் இவர்களை பொறுத்தருளவேண்டும்" என்றபின் நகைத்து "துவாரகை மேலும் உடைந்தழிவதை அவர் ஏற்றுக்கொள்ள முடியாதல்லவா?" என்றார்.

தந்தையே, நான் அந்த அவையில் என்ன நிகழ்கிறது என்பதை அத்தனை தெளிவாக பார்த்துக்கொண்டிருந்தேன். கணிகரின் செயல் தங்கள் மைந்தர்கள் நடுவே ஒருபோதும் அணையாத பெரும் விரிசலை உருவாக்குவது. அதை எத்தனை சொற்களாலும் நிரப்பிவிட இயலாது. ஆனால் என்னால் ஒன்றும் செய்ய இயலவில்லை. அவர்களை வெறுமனே நோக்கியபடி நின்றிருந்தேன். கணிகரின் உள்ளம் எனக்கு தெரிந்தது. மூத்தவர் ஃபானு உள்ளம் குழம்பி பின் எரிச்சல்கொண்டு முடிவுக்குச் செல்வது தெரிந்தது.

ஆனால் என் உள்ளம் அனைத்துச் செயல்களிலும் நம்பிக்கை இழந்துவிட்டிருந்தது. செய்வதற்கு ஒன்றுமில்லை. என்ன செய்தாலும் தெய்வங்கள் தங்கள் ஆடலை நிகழ்த்திவிடும். எங்கேனும் செயலிழந்து கைகால் தளர்ந்து படுத்திருக்கவே

நான் விரும்பினேன். சில தருணங்களில் நாம் வேட்டையாடும் விலங்குகள் அவ்வாறு நடந்துகொள்கின்றன. துரத்திச்சென்று அவற்றை மடக்குவோம். தப்பி ஓடி வழிமுட்டி நின்று சிலிர்த்து திரும்பிச் சீறி எதிர்த்து நின்றிருக்கையில் ஒரு கணத்தில் அவை நம்பிக்கை இழந்து ஓய்ந்து மல்லாந்து படுத்து கண்களை மூடி தங்கள் உடலை நமக்கு ஒப்படைக்கின்றன. அவ்வாறு விழுந்துவிட்ட விலங்குகளை வேட்டையாடக்கூடாதென்று நெறி உள்ளது. ஆனால் அது கொலை விலங்கென்றால் எவரும் அதை கடைபிடிப்பதில்லை.

மூத்தவர் ஃபானு "உண்மைதான். நான் இதை இவ்வகையில் விடமுடியாது. பிரத்யும்னனிடம் இவர்கள் இங்கிருக்கிறார்கள் என்றும் இவர்களுக்கு நான் அடைக்கலம் கொடுத்திருக்கிறேன் என்றும் செய்தி கூறி அனுப்புக!" என்றார். கணிகர் "அச்செய்தியை ஓலையினூடாக அனுப்புங்கள். அந்த ஓலையில் எழுதப்பட்ட செய்தி பிரத்யும்னனை அடைவதற்குள் அரண்மனை ஊழியர்கள் அறிந்திருக்கவேண்டும். இந்நகரில் பரவியிருக்க வேண்டும்" என்றார். ஃபானு ஒரு கணம் எண்ணி "ஆம், அவ்வாறே செய்கிறேன்" என்றார்.

"பிரத்யும்னனுக்காக ஓலையை எழுதும் பொறுப்பை தாங்கள் ஏற்றுக்கொள்ளுங்கள்" என்று சுஃபானு சொன்னார். "இல்லை, அத்தகைய ஓலைகளை அந்தணர் எழுதலாகாது. இளையவர் எழுதட்டும்" என்று என்னை நோக்கி கைகாட்டினார் கணிகர். சுஃபானு "ஆம், இவன் சொல்வலன். இவனால் எழுதமுடியும்" என்றார். நான் அதை எதிர்க்க முயலவில்லை. அத்தருணத்தில் எதிர்த்து குரல் எழுப்புவதில் எந்தப் பொருளும் இல்லை என்று உணர்ந்திருந்தேன். "ஆம், எழுதுகிறேன்" என்றேன். கணிகர்

“எழுதவேண்டிய சொற்றொடர்களை நான் கூறுகிறேன்” என்றார். நான் தலையசைத்தேன்.

ஃபானு குழம்பி திகைத்து நின்றிருந்த ருக்மிணியன்னையின் மைந்தர்களை தோள்தொட்டு அணைத்து “வருக, ஆறுதல் கொள்க, உங்கள் உயிருக்கு எதுவும் ஆகப்போவதில்லை!” என்றார். கணிகரும் நானும் அடுத்த அறைக்கு சென்றோம். நான் கணிகர் முன் அமர்ந்தேன். ஏவலனிடம் ஓலையையும் எழுத்தாணியையும் கொண்டுவரச் சொன்னேன். கணிகர் என்னிடம் “எழுதுக!” என்றார். நான் எழுத்தாணியின் கூரை நோக்கியபடி அமர்ந்திருந்தேன். “முறைமைச் சொற்கள்” என்றார். நான் ஓலையில் முறைமைச்சொற்களை எழுதி முடித்து காத்திருந்தேன்.

அந்தத் தருணத்தின் பொருளின்மையின் பேருரு என் மேல் எழுந்தது. அங்கே நகரம் இடிந்து சரிந்துகொண்டிருக்கிறது. இங்கே உடன்பிறந்தார் ஒருவரை ஒருவர் அழிக்க முயல்கிறார்கள். எண்ணி எண்ணி சொல்சூழ்கிறார்கள். சிரிக்கவேண்டும் போலிருந்தது. தந்தையே, வாழ்க்கையின் மிகமிக உச்ச கணங்கள் சிரிப்பால் மட்டுமே கடத்தற்குரியவை.

கணிகர் ஓலைக்கான சொற்களை சொன்னார். “உன் இளையவர்கள் மூவர் இங்கே வந்து துவாரகையின் அரசனென முடிசூட்டிக்கொண்ட என் முன் அடிபணிந்திருக்கிறார்கள். அவர்களுக்கு மூத்தவன் என்ற வகையிலும், அடைக்கலம் என வந்தவர்களை காக்கும் அரசன் என்ற வகையிலும் இந்த ஓலை எழுதப்படுகிறது. அவர்கள் என்னால் காக்கப்படுகிறார்கள். அவர்கள் மீது எவ்வகையிலேனும் தாக்குதல் நிகழுமெனில் அது எனக்கெதிரானதென்றே கொள்ளப்படும். எனது படையினர் அதன்பொருட்டு உன்னை சிறைப்பிடிப்பதோ கொன்றழிப்பதோ

இயல்பான கடமை என்றாகிவிடும். ஆகவே அத்தகைய செயல்களிலிருந்து ஒழிய வேண்டுமென்று கோருகிறேன்.”

நான் எழுதிக்கொண்டிருந்தேன். கணிகர் சொன்னார் “துவாரகையின் மீது குருதிப்பழி விழ வழிவகுத்த செயல்கள் நிகழ்ந்ததை நான் அறிவேன். இந்நகரைக் காத்திருந்த தெய்வங்கள் கைவிட்டதையும் இங்கு நிகழ்கின்ற இயற்கை இடர்களினூடாக அறிந்திருப்பாய். அவ்விடர்கள் பெருகலாகாது. எஞ்சிய தெய்வங்கள் காக்கப்படவேண்டும். ஆகவே இயற்றியதற்கு பழிநிகர் செய்யவும் பிறிதொன்று இயற்றாமலிருக்கவும் உறுதி கொள்வோம். அரசரென உடனடியாக நீ உன் இளையவர்களுடன் வந்து என்னை சந்திக்க வேண்டுமென்று ஆணையிடுகிறேன்.”

அதிலிருந்த அந்த ஓங்கிய குரல் எனக்கு திகைப்பை அளித்தது. அவ்வண்ணம் ஓர் ஓலையை பிரத்யும்னனுக்கு அதற்கு முன் ஃபானு எழுதியதில்லை. ஆனால் அவ்வண்ணம் ஓர் ஓலையை எழுதவேண்டுமென்றுதான் எனக்கும் தோன்றியது. ஒவ்வொரு பொருளும் கூச்சலிட்டுக்கொண்டிருக்கும் அத்தருணத்தில் எல்லா சொல்லும் ஓலமாகவே எழ முடியும். அல்லது அதற்கப்பால் சென்று எண்ணம் கூடுவதற்கு என் உள்ளம் எவ்வகையிலும் ஒருங்கவில்லை. நான் அதில் முத்திரை பதித்து திறந்த குழலில் இட்டு ஏவலன் ஒருவனை அழைத்து பிரத்யும்னனிடம் கொண்டு கொடுக்கச் சொன்னேன்.

ஏவலன் “இங்கிருந்து பறவைத்தூதொன்றை அனுப்பவுதே உகந்தது. நகரில் பல இடங்களில் மண்ணிலும் விரிசல்கள் விழுந்திருக்கின்றன. அவற்றினூடாக கடல்நீர் உள்ளே புகக்கூடும் என்ற ஐயம் எழுந்திருக்கிறது. மக்கள் கதறி அழுது நகரெங்கும் பரவியிருக்கிறார்கள். அரண்மனையின் ஏவலர்

அனைவரும் நிலையழிந்து
கொந்தளித்துக்கொண்டிருக்கிறார்கள். இத்தருணத்தில் நான்
அங்கு சென்றுசேர்வதே கடினம்" என்றான்.

"ஆகவேதான் இந்த ஓலையை அனுப்பியிருக்கிறேன். இந்த
ஓலையின் உள்ளடக்கத்தை ஒருமுறை படித்துவிடு. இந்த
ஓலை அரசரான ஃபானுவால் பிரத்யும்னனுக்கு அனுப்பப்பட்டது
என்பதைக் கூறி வழி கேள். பறவைத்தூது அனுப்பலாம்.
ஆனால் அந்தப் பறவைத்தூது தங்களிடம் வந்து சேரவில்லை
என்று எவரும் கூறிவிடமுடியும். இது அரசாணை. சான்றுடன்
அளிக்கப்படவேண்டியது. ஆகவேதான் உன்னை தூதனுப்ப
தெரிவு செய்தேன். நீ சென்று சேரவேண்டும் அல்லது உனது
சொற்களுடனும் கணையாழியுடனும் பிறிதொருவர் சென்று
சேரவேண்டும். செல்க!" என்றேன். அவன் தலைவணங்கி அந்த
ஓலையுடன் வெளியே சென்றான்.

மேலும் ஒரு சொல்கூட உள்ளத்தில் எழாவண்ணம்
நான் களைத்திருந்தேன். என் அறைக்குச் சென்று ஓய்வெடுக்க
விரும்பினேன். மேலாடையை எடுத்துக்கொண்டு
கிளம்பியபோது இரு ஏவலர்கள் கணிகரை ஒரு தாலத்தில்
வைத்து தூக்கிச் செல்வதை கண்டேன். கணிகர் என்னைப்
பார்த்து புன்னகைத்து "உங்கள் நல்லூழ். தெய்வங்கள்
உங்களுடன் இருக்கின்றன" என்றார். நான் ஒன்றும்
சொல்லவில்லை. "இத்தருணத்தில் இவ்வண்ணம் ஒரு நிகழ்வு
பிற அனைத்திலிருந்தும் நோக்குகளை விலக்கிவிடுகிறது"
என்றார்.

“என்ன?” என்று நான் கேட்டேன். “ருக்மியிடமிருந்து ஃபானுவுக்கு ஓலை வந்துள்ளது. நீங்கள் அங்கு சொன்னதே அதில் எழுதப்பட்டுள்ளது என்பதில் ஐயமில்லை. ஆனால் ஃபானு இன்னும் அதை படிக்கவில்லை” என்றார். நான் நின்றுவிட்டேன். “அந்த ஓலையை எவ்வண்ணமேனும் கைப்பற்ற முடிந்தால் நன்று” என்று கணிகர் கூறினார். “அது எவரிடம் உள்ளது?” என்று நான் கேட்டேன். “அது சுஃபானுவிடம் அளிக்கப்பட்டது. சுஃபானு அது ருக்மியிடமிருந்து வந்தது என்பதை பார்த்துவிட்டு மீண்டும் மூங்கில் குழலுக்குள் போட்டு தன் இடையில் வைத்துக்கொண்டார்” என்றார்.

நான் படபடப்புடன் “அதை எவ்வண்ணமேனும் எடுத்துவிட முடியாதா?” என்றேன். “சுஃபானுவை சென்று சந்தியுங்கள். அவரது எண்ணத்தை திசைதிருப்ப எதையாவது கூறுங்கள். அவர் உளம்விலகியிருக்கும் நேரத்தில் அந்த ஓலையை எடுத்துவிடமுடியுமா என்று பாருங்கள். அந்த ஓலை அவரிடமோ பிற யாதவ மைந்தரிடமோ இருப்பது எந்நிலையிலும் தங்களுக்கு எதிரான ஒன்றே. கரந்த நஞ்சு கணந்தோறும் வளர்வது என்பதை மறக்கவேண்டியதில்லை” என்றார்.

நான் ஆமென்று தலையசைத்தேன். நான் அங்கேயே நின்றுவிட்டேன். என் கால்கள் மிகத் தளர்ந்திருந்தன. வெளியே யானையின் உறுமல்போல ஓர் ஓசை கேட்டது. கணிகர் “பொறுங்கள்” என்று தன்னை தூக்கிச்சென்ற ஏவலரிடம் சொன்னார். பின்னர் தன்னை சாளரத்தின் அருகே கொண்டு செல்லும்படி கைகளால் ஆணையிட்டார். சாளரத்தின் அருகே அவரை தாலத்துடன் மெல்ல தூக்கினர். அவர் கைகளை சாளரத்தின் விளிம்பில் வைத்து வெளியே பார்த்தார்.

அவர் முகம் புன்னகையில் மலர்ந்திருப்பதை கண்டேன். அங்கிருந்து பார்த்தபோது வெளியிலிருந்து வந்த வெளிச்சத்தில் அப்புன்னகை பேரழகு கொண்டிருந்தது. கண்கள் இளங்குழவியின் நோக்கென ஒளிகொண்டிருந்தன. அந்த முகத்தை விந்தையான ஒரு தெய்வ ஓவியத்தை பார்ப்பவன்போல் நோக்கி நின்றேன்.

அவர் என்ன பார்க்கிறார் என்ற ஆர்வம் எனக்கெழுந்தது. அருகிருந்த சாளரம் ஒன்றை அணுகி நான் வெளியே பார்த்தேன். உள்ளே வரும்போது விரிசல் விட்டிருந்த பெரிய மாளிகையின் அடியிலிருந்த மக்கள் அலறி விலகி ஓடிக்கொண்டிருந்தனர். அதன் மேல் விளிம்பில் விரிசல் ஒரு கைநுழைக்கும் அளவுக்கு பெரிதாக அகன்றிருந்தது. ஆனால் அவ்விரிசலை அது மேலும் பல்லாண்டுகாலம் தாங்குமென்றே தோன்றியது.

பெரிய பளிங்குக்கற்களைக் கொண்டு கட்டப்பட்ட மாளிகை அது. ஏழடுக்கு கொண்டது. அதன் அடிப்பகுதியில் பெரிய சுண்ணக்கற்களை வளையங்களாகச் செதுக்கி பள்ளங்களின் மேல் முழைகள் அமையும் படி செதுக்கி கோத்து அம்மாளிகையை எழுப்பியிருந்தார்கள். மேலே அடுக்கப்பட்ட கற்களின் எடையில் கீழே இருந்த தூண்கள் மேலும் இறுகி ஒற்றை உடலென மாறிவிட்டிருந்தன. தன் எடையால் தன்னை கோத்துக்கொண்டு தரையோடு அழுந்தி அமர்ந்திருந்தது அது. அப்பேரெடையை அசைக்க தெய்வங்களால் இயலாது என்று எனக்கு தோன்றியிருந்தது. சில பெரும் கட்டமைவுகள் விழிநோக்கிலேயே அவ்வெடையை நமக்கு அறிவிப்பவை. அத்தகைய மாளிகை அது.

தாங்கள் அங்கு இருந்தபோது பிற நாட்டு அரசர்கள் வருகையில் அவர்களை தங்கவைக்கவும், அவர்களுக்கான களியாட்டுகள் நிகழவும், அவர்களுடனான தனியவைகள் நிகழ்வதற்கும் கட்டப்பட்டது. மூன்று வெவ்வேறு தங்கும் பகுதிகளும் அவற்றை இணைக்கும் கூடங்களும் அகன்ற நடுமுற்றமும் ஏழு தேர்முற்றங்களும் கொண்டது. நான் அந்த மாளிகையை பார்த்துக்கொண்டிருந்தேன். அந்த விரிசலை கணிகர் ஏன் அவ்வாறு பார்க்கிறார் என்று புரியவில்லை. பின்னர்தான் அந்த உறுமல் அதிலிருந்து எழுந்தது என்று தெரிந்தது.

நான் நோக்கிக்கொண்டிருக்கையிலேயே வலியுடன் அம்மாளிகை மீண்டும் முனகியது. வெறும் ஒலியாகக் கேட்கையில் உறுமல்போல் ஒலித்தது. உயிர்விடும் விலங்கின் குரலென மாறியது. அதன் விரிசலின் மேற்பகுதியில் எந்த மாறுதலும் ஏற்படவில்லை. எங்கோ ஒன்று நிகழ்ந்திருக்கிறது என்பது கண்களுக்கு தெரிந்தது. என்ன என்று நான் பார்த்தேன். கீழே அதன் தூண்களிலொன்று சற்றே நிலைமாறியிருப்பது தெரிந்தது.

கணிகர் செல்லலாம் என்று கைகாட்டினார். அவர்கள் அவரை தூக்கிக்கொண்டு சென்றனர். நான் அந்த மாளிகையை பார்த்துக்கொண்டு நின்றேன். அதன் எடை அதை தாங்கி நிறுத்தும் என்றே தோன்றியது. அதை திருப்பி கட்டி எழுப்ப முடியாது. ஆனால் சிற்பிகளைக் கொண்டு அதன் மேலிருந்த எடையை அகற்றி அதன் தூண்களை ஒவ்வொன்றாக கழற்றி எடுத்துவிட முடியும். அதன் அடித்தளத்தில் உருவான விரிசலை சீர் செய்த பின்னர் அம்மாளிகையை அவ்வாறே உறுதியாக கட்டி எழுப்பிவிடமுடியும்.

துவாரகையின் மாளிகைகள் அனைத்துமே அவ்வாறுதான் அடுக்கி கட்டப்பட்டிருந்தன. ஒன்றுடன் ஒன்று தங்களைத்தாங்களே பொருத்திக் கொண்ட கற்களாலானவை அவை. அவற்றைக் கட்டிய சிற்பியின் மைந்தரை ஒருமுறை நான் சந்தித்திருக்கிறேன். "இப்படிப்பட்ட கட்டடங்கள் பெரும்பாலும் காப்திக நாட்டில் கட்டப்பட்டிருந்தன. அங்குள்ள மென்மணல் பாறைகளை வெட்டி இவ்வாறு அடுக்கி கட்டுகிறார்கள். அங்கே நிலம் மணலால் ஆனது. ஆகவே கட்டடங்கள் அங்கே மிதந்து நின்றிருக்கின்றன. இங்கு ஏன் அவ்வாறு கட்டுகிறீர்கள் என்று என் தந்தையிடம் கேட்டேன். இங்கு எல்லாமே பாறையால் ஆனது தானே என்று ஐயம் எழுப்பினேன்" என்று அவர் சொன்னார்.

"இந்நகரம் பெரும்பாறைகளின்மேல் அமைந்துள்ளது. அந்தப் பாறைகள் கடல்மணலின் மேல் மிதந்துதான் நின்றுள்ளன. ஆகவே சற்றே நகர்ந்துகொண்டுதான் இருக்கின்றன. இந்தக் கட்டட அமைப்பு சிறிய அசைவுகளை தானே தாங்கிக்கொண்டு தன்னைத்தானே தகவமைத்துக்கொண்டு நின்றிருக்கும் என்று தந்தை சொன்னார்" என்றார். நான் அவரிடம் "என்றேனும் இவை சரியக்கூடுமா?" என்றேன். "என்றேனும் அப்பெரும்பாறைகளே அசையும் என்றால் அவ்வாறு நிகழலாம்" என்று அவர் சொன்னார்.

அங்கே நின்றிருந்தபோது என் அகம் பதற்றம்கொண்டிருந்தது. அப்பெரும்பாறைகள் அசைவுகொண்டுவிட்டனவா? நகரம் சரிந்து விழவிருக்கிறதா? அந்தக் கட்டடத்தை நோக்கிக்கொண்டிருந்தபோது அது உடைந்து சரியவேண்டும் என்று ஓர் ஆழம் எதிர்பார்ப்பதை உணர்ந்தேன். அது எப்படியாவது அங்கே நிலைகொள்ளவேண்டும் என இன்னொரு

ஆழம் தவித்தது. என் அகமே அந்தக் கட்டடத்தைப்போல இரண்டு பகுதிகளாக பிளவுண்டுகொண்டிருந்தது. ஆகவே அதிலிருந்து என்னால் கண்களை விலக்க முடியவில்லை.

நகரத்தின் ஓசைகளை கேட்டுக்கொண்டிருந்தேன். முரசுகள் எங்கும் முழங்கிக்கொண்டிருந்தன. ஆனால் அவ்வொலிகள் மக்களின் கூச்சல்களுக்குமேல் தனியாக மிதந்து அலைவுகொண்டன. இரண்டு தலைமுறைகளாக அந்நகரை ஆணையிட்டு கட்டுப்படுத்திய முரசுகள் தங்கள் சொற்களை இழந்துவிட்டிருந்தன. அந்நகரம் எவ்வண்ணம் அமைதிகொள்ளப்போகிறது? அதை ஆணைகளால் அடக்க இயலாது. தானாகவே தணியவேண்டும். இந்நகர் மக்கள் இதற்குள் சிறைப்பட்டவர்கள். அவர்கள் இதைச் சூழ்ந்திருக்கும் பெரும்பாலையை எளிதில் கடக்கவியலாது. அதை உணர்ந்ததும் அவர்கள் மெல்ல அமைதியடைவார்கள்.

அதுவரை அவர்களை கொந்தளிக்க விடுவதே ஒரே வழி. அவர்கள் அஞ்சி கூவி அழுது அரற்றியபின் செய்வதற்கொன்றுமில்லாமல் மண்ணோடு மண்ணாக படிவார்கள். வெளியே இருந்து ஏதேனும் சொல் வரவேண்டும் என எதிர்பார்ப்பார்கள். அரசனோ, தெய்வமோ. அப்போது மட்டுமே அவர்களிடம் பேசமுடியும். அதுவரை காத்திருக்க வேண்டியதுதான். ஆனால் ஃபானுவோ பிரத்யும்னனோ ஒன்றும் செய்யாமல் காத்திருக்கவும் முடியாது. அவர்களும் தங்கள் கொந்தளிப்பை, அலைக்கழிதலை வெளிப்படுத்தியாக வேண்டும். எதையேனும் செய்து களைத்துச் சலித்த பின்னரே மெய்யாகவே என்ன செய்யமுடியும் என்பதை அவர்கள் உணர்வார்கள்.

நான் சுஃபானுவின் அவைக்கு சென்றாகவேண்டும் என்பதை நினைவுகூர்ந்தேன். அங்கே என்ன நிகழ்ந்துகொண்டிருக்கும் என்று உய்த்துணரக்கூடவில்லை. அந்த ஓலை படிக்கப்பட்டிருக்காது. அங்கே சுஃபானு ஆணைகளை பிறப்பித்தபடி, செய்திகளை கேட்டபடி கொந்தளித்துக்கொண்டிருப்பார். அவரிடம் முதன்மைச் செய்தி என எதையேனும் சொல்லும் நடிப்புடன் நான் அணுகமுடியும். அந்த ஓலையை அவர் படித்திருந்தார் என்றால் இந்நேரம் என்னைத் தேடி படைவீரர்கள் வந்திருப்பார்கள்.

# கல்பொருசிறுநுரை - 49

**பகுதி நான்கு : அலைமீள்கை – 32**

நான் தயங்கிய காலடிகளுடன் சுஃபானுவின் அறை நோக்கி சென்றேன். செல்லச்செல்ல நடைவிரைவு கொண்டேன். அறைக்கு வெளியே காவலர்கள் எவருமில்லை. உள்ளே யாதவ மைந்தர்கள் பலர் இருந்தனர். அவர்கள் ஒருவரோடொருவர் பதற்றத்துடன் கூச்சலிட்டு பேசிக்கொண்டிருந்தனர். உள்ளிருந்து படைத்தலைவன் ஒருவன் கூச்சலிட்டுப் பேசியபடி வெளியே ஓடினான். இன்னொருவன் கையில் ஓர் ஓலையுடன் உள்ளே சென்றான்.

நான் அறைக்குள் நுழைந்தேன். அங்கே நக்னஜித்தி அன்னையின் மைந்தர்களான வீரா, சந்திரா, அஸ்வசேனன் ஆகியோருடன் அன்னை மித்ரவிந்தையின் மைந்தர்களான

விருகன், கர்ஹன், அனிலன், கிருதரன் ஆகியோர் இருந்தனர். ஃபானுமானும் சந்திரஃபானுவும் ஸ்ரீஃபானுவும் அவர்களிடம் பேசிக்கொண்டிருந்தனர். அப்பால் சிற்றறைக் கதவு திறந்தது. உள்ளிருந்து வெளியே வந்த சுஃபானு "ஒவ்வொருவருக்குமான ஆணைகள் ஓலைகளில் தனித்தனியாக எழுதப்பட்டுள்ளன. செல்க, உங்கள் அனைவருக்கும் பணி உள்ளது! இன்னும் இரண்டு நாழிகைப் பொழுதில் இந்நகர் முழுதமைமைய வேண்டும். ஒரு சிறு ஓசைகூட எழாமல் உறங்கவேண்டும். இன்று இந்நகரை அடங்கச்செய்வதில் வென்றோம் என்றால் நாம் இந்நகரை முழுமையாக அடைந்தோம் என்று பொருள்" என்றார்.

"இத்தருணத்தில் இந்நகர் மேல் நமது ஆணை நிலைநாட்டப்படுமெனில் இதை ஆள்வது யார் என்ற ஐயமே பிறகு எழாது. ஒருவகையில் இது நன்று. இந்நகரை நாம் மீண்டும் கட்டி எழுப்புகையில் இதை மீட்டெடுத்தவர் என்றும் இதை புதிதென உருவாக்கியவர் என்றும் மூத்தவர் புகழ் பெறுவார். ஒரு யுகம் முடிந்து பிறிதொன்று பிறப்பதற்கான அடையாளம் இது என்று குடிகளிடம் நாம் கூறுவோம்" என்று சுஃபானு சொன்னார். "இன்று நாம் அச்சத்தை கடக்கவேண்டும். குடிகளிடம் இருக்கும் நம்பிக்கையின்மையையும் பதற்றத்தையும் அகற்ற வேண்டும். உங்கள் ஒவ்வொருவருக்குமான இடங்களும் பணிகளும் ஓலைகளில் வகுக்கப்பட்டுள்ளன. கிளம்புக!"

பிரஃபானு அவரைத் தொடர்ந்து வெளியே வந்து யாதவ மைந்தர் ஒவ்வொருவர் பெயரையாக சொல்லி ஓலைகளை அளித்தார். "விருகனும் கர்ஹனும் தென்னெல்லைக்கு செல்லட்டும். அனிலனும் கிருதரனும் வர்தனனும்

தென்எல்லை முதல் அரண்மனை வரையிலான சாலைகளை காக்கட்டும். இளையோர் உடன் உதவவேண்டும். வீராவும் சந்திராவும் அஸ்வசேனனும் வடஎல்லைக்கு செல்லவேண்டும். அங்கிருந்து வரும் சாலைகளை சித்ராகுவும் வேகவானும் விருஷனும் காக்கட்டும். உடன்பிறந்தார் கூடச்செல்லவேண்டும். பிரகோஷனுக்கும் இளையோருக்குமான ஓலைகள் இங்குள்ளன. அவர்கள் எங்கே?" ஃபானுமான் "அவர்கள் பக்கத்து அறையில் இருக்கிறார்கள். சாம்பனின் இளையோர் வந்திருக்கிறார்கள்" என்றான். "அவர்களுக்கான ஆணைகளும் உள்ளன" என்று பிரஃபானு வெளியே சென்றார்.

சுஃபானுவை இளையோர் சிலர் சூழ்ந்துகொண்டனர். நான் அவர்களைக் கடந்து சென்று சுஃபானுவிடம் "மூத்தவரே, நான் தங்களை பார்க்கும்பொருட்டு வந்தேன்" என்றேன். "வருக! உன்னைத்தான் எதிர்பார்த்துக்கொண்டிருந்தேன்" என்று அவர் கூறினார். எனது நெஞ்சு நடுங்கியது. அவ்வண்ணமே திரும்பிச்சென்றுவிடலாம் என்று தோன்றியது ஆயினும் அது இயலாதென்று அறிந்து அவர் அருகே சென்று நின்றேன். அவர் அருகே பிரகத்ஃபானுவும் ஸ்ரீபானுவும் நின்றனர். "அமர்க!" என்று சுஃபானு கூறினார்.

நான் அமர்ந்ததும் அவர் அமர்ந்துகொண்டு "இந்நிலநடுக்கம் எவ்வாறு நடந்ததென்று எனக்கு தெரியவில்லை. சிற்பிகளை வரவழைத்து இந்நகர் இதை வெல்லுமா என்று அறிந்துகொள்ளவேண்டும். ஆனால் சென்ற சில மாதங்களாக நாம் சிற்பிகளை பேணவில்லை. அவர்கள் ஒவ்வொருநாளும் வந்து அவையில் அமரவேண்டும் என இங்கே முன்பு நெறி இருந்தது. சென்ற ஆண்டு மூத்தவரால் இந்நகரில் புதிதாக எந்த

கட்டடங்களும் கட்டப்படவில்லை, பழைய கட்டடங்களும் பழுதுபார்க்கப்படவில்லை. ஆகவே சிற்பிகளுக்கு அளிக்கப்படும் பொருள் தேவையற்றதென்று சொன்னார். அக்கொடைகள் நிறுத்தப்பட்டன" என்றார்.

அதை சொன்னவர், அந்தக் கொடைகளை நிறுத்தியவர் சுஃபானு என்பதை நான் நன்றாகவே நினைவுகூர்ந்தேன். ஆனால் அவர் அப்போது மெய்யாகவே அதை மறந்தவர்போலத் தோன்றினார். "சிற்பிகள் ஒவ்வொருவராக கிளம்பிச்சென்றுவிட்டனர். இன்று இந்நகரைக் கட்டிய சிற்பிகளில் சிலரே இங்கே உயிருடன் இருக்கிறார்கள். அவர்களை வரச்சொல்லும்படி ஆணையிட்டிருக்கிறேன்" என்றார். "ஆம், சிற்பிகளின் சொற்களையே மக்கள் நம்புவார்கள். சிற்பிகளை அழைத்து இங்கு ஒரு அவை கூட்டவேண்டும். அவையில் சிற்பிகள் சொன்னதென்ன என்பதை மக்கள் உடனடியாக உணரும்படி செய்யவேண்டும். அதுவே உகந்த வழி" என்றேன்.

"முதன்மைச் சிற்பிகள் இங்கில்லை என்றால் இருப்பவர்களை சிற்பிகள் என்று சொல்லிவிடவேண்டியதுதான்" என்றார் சுஃபானு. நான் புன்னகைத்தேன். "என்ன நிகழ்ந்தது அங்கே? ஏன் சுதேஷ்ணன் கொல்லப்பட்டார்?" என்றார். "சுதேஷ்ணன் மூத்தவருக்கு எதிராக சூழ்ச்சி செய்தது உண்மை. ருக்மியின் உதவியை நாடியது உண்மை. அச்செய்தியை அறிந்ததும் பிரத்யும்னன் தன் நிலைவிட்டு மிகைச்செயல் ஆற்றிவிட்டார்" என்றேன். "ஆனால் இங்கு ருக்மியின் ஓலை ஒன்று வந்துள்ளது. அதை இங்குதான் எங்கோ வைத்தேன்" என்று சுஃபானு கூறினார்.

என் குரலில் பதற்றத்தை காட்டாமல் "நான் தேடி எடுக்கிறேன்" என்றேன். "இல்லை, நீ அமர்க!" என்று சொல்லி "விதர்ப்பத்தின்

முத்திரையிட்ட குழல் ஒன்றை என் ஆடையில் வைத்திருந்தேன். ஆடை மாற்றும்போது எங்கோ வைத்தேன். தேடிப் பார்" என்று ஸ்ரீஃபானுவிடம் சொன்னார். "மூத்தவரே, நான் தேடி எடுக்கிறேன்" என்று நான் சொன்னேன். "இருக்கட்டும். அவன் தேடி எடுப்பான்" என்றபின் "நீ கூறுக, இத்தருணத்தில் சிற்பிகளின் ஆணைக்கப்பால் நாம் செய்யக்கூடியதென்ன?" என்றார்.

"எவ்வகையிலும் இது நமக்கு பொருட்டல்ல என்று காட்டுவோம். இங்கிருந்து நகரை மாற்றுவதென்றால்கூட அரசர் சித்தமாக இருக்கிறார் என்று குடிகளுக்கு அறிவிப்போம். நாம் கலங்கவில்லை என்று அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும்" என்று நான் சொன்னேன். பின்னர் "சிற்பிகளில் ஒரு சிலரேனும் உயிரோடு இருக்கக்கூடும். அவர்களை அழைத்து இந்நகரை உருவாக்கிய சிற்பிகளில் எவரேனும் எஞ்சியிருக்கிறார்களா என்று உசாவக் கோருக!" என்றேன். "அதைத்தான் நானும் எண்ணுகிறேன்" என்றார் சுஃபானு.

அருகே ஏவலரும் இளையோரும் அந்த ஓலைக்காக தேடிக்கொண்டிருந்தனர். என் கைகள் பரபரத்தன. எழுந்து தலையில் அறைந்துகொண்டு கூச்சலிட்டுவிடுவேன் என்று தோன்றியது. "மூத்தவரை மக்கள் முன் கொண்டுசென்று நிறுத்தவேண்டும். ஆனால் அவர் பதறிக்கொண்டிருக்கிறார். பேசச் சொன்னால் அவர் அழுதுவிடுவார். மக்களோ கொந்தளித்துக்கொண்டிருக்கிறார்கள். இது ஒருவர் பேரரசர் என எழவேண்டிய தருணம். இத்தகைய தருணங்களை பெரும் தெய்வக்கொடை என்றே எண்ணுவர் அரசியல் அறிந்தோர். ஆனால் ஒருவரின் தகுதி மெய்யாகவே வெளிப்படும் இடம் என்பது இத்தகைய சூழலே" என்றார்.

ஸ்ரீ:பானு "மூத்தவரே, இதுவா?" என்றான். பறவைக்கால்களில் கட்டப்படும் மிக மெல்லிய ஆட்டுத்தோலால் ஆன சுருள். "ஆம், இந்த ஓலைதான்" என்றார். எழுந்து அதை கையில் வாங்கியபடி "இவ்வண்ணம் ஒன்று இங்கே வந்தது நன்று. அவரிடமிருந்தே நேரடியாக சொல்பெறுவது பல சிக்கல்களை தீர்க்கும். ருக்மி அரசுசூழ்தல் அறியாதவர், ஆகவே அவர் பொய்சொல்ல வாய்ப்பே இல்லை" என்றார். நான் நீரில் சிலையென குளிர்ந்து அமர்ந்திருந்தேன். என் செவிகளில் சொற்களே மழுங்கலாகத்தான் விழுந்தன.

அத்தருணத்தில் கதவு திறந்து :பானுமான் உள்ளே வந்தான். "மூத்தவரே, இங்கிருந்து தென்எல்லைக்குச் சென்ற விருகனும் கர்ஹனும் வழியில் வெறிகொண்ட கூட்டம் ஒன்றால் சூழப்பட்டுள்ளனர். அவர்கள் மூத்தவர்களை கொல்ல முயல்கின்றனர். சுதேஷ்ணனை கொன்றுவிட்டு தப்பி ஓடுபவர்கள் அவர்கள் என்று எவரோ கூறிவிட்டனர்." சு:பானு "என்ன சொல்கிறாய்?" என்று கூவியபடி முன்னால் சென்றார். ஓலையை தன் முன் இருந்த பீடத்திலேயே போட்டுவிட்டார். "அவர்கள் இப்போது எங்கே?"

"சரிந்திருக்கும் மாளிகை ஒன்றுக்குள் நுழைந்துவிட்டனர். அங்கே ஒளிந்திருக்கிறார்கள். பெரும்கூட்டம் சூழ்ந்து நின்று தடிகளாலும் தேர்களாலும் அக்கட்டடத்தைத் தாக்கி சரிக்க முயல்கிறது. துணிகளைக் கொளுத்தி உள்ளே வீசி புகையிட்டு அவர்களை வெளிக்கொணரவும் முயல்கிறார்கள்." சு:பானு "நம் படைகள் உடனே செல்லட்டும். எத்தனை பேர் இறந்தாலும் சரி அக்கூட்டத்தை கலைக்கவேண்டும். நம் குருதியினர் உயிரிழக்கலாகாது" என்றார். "ஆம்" என்று :பானுமான் சொன்னான்.

“அவர்களுக்கு ஏதேனும் நிகழ்ந்தால் துவாரகையில் அரசக்குருதி விழத் தொடங்கிவிட்டது என்னும் சொல் நிறுவப்படும். பிறகு நாம் என்ன சொன்னாலும் நிலைகொள்ளாது” என்று சுஃபானு சொன்னார். “நம் இளையோர் இருவர் உடனே படையுடன் கிளம்பட்டும். நீயும் சந்திரஃபானுவும் செல்லுங்கள். நாம் நேரில் சென்றாலொழிய இத்தருணத்தில் படைகளை ஆள முடியாது.” ஃபானுமான் தலைவணங்கி “ஆணை” என்றான். “நம் அரண்மனைக் காவலுக்கு நின்றிருக்கும் படைகளை கலைக்கவேண்டாம். முரசறைந்து நம் படைவீரர்களை அங்கே வரச் சொல்லுங்கள். இந்த தலைக்கொந்தளிப்பில் அவர்கள் ஆங்காங்கே சிதறியிருப்பார்கள். அவர்களை திரட்டுங்கள்.”

என் கண்முன் அந்த ஓலை கிடந்தது. நான் சட்டென்று அதை எடுத்துக்கொண்டேன். என் கையில் இருந்து அது ஒரு சிறு பூச்சி என சிறகதிர்வுகொண்டது. என் உடல் வியர்த்துவிட்டது. சூழ நோக்கினேன். மறுபக்க கதவு திறந்திருந்தது. எழுந்து அதனூடாக வெளியே சென்றேன். மறு வாயிலில் சுஃபானுவின் குரல் ஒலித்துக்கொண்டிருந்தது. படைநகர்வுக்கான ஆணைகள். நான் விரைந்து இடைநாழியினூடாக ஓடினேன். என் கால்கள் வியர்வையில் வழுக்க விழுந்துவிடுவேன் என்று தோன்றியது.

ஓலையுடன் வெளியே வந்தபோது புழுங்கி எரியும் அனற்சூளையிலிருந்து குளிர்காற்று மேவும் வெளிக்கு வந்ததுபோல் உணர்ந்தேன். என் உடலும் உள்ளமும் தளர்ந்திருந்தன. எங்காவது சென்று விழுந்துவிடவேண்டும்

என்று தோன்றியது. எதையும் எண்ணக்கூடாது. எங்கும் எதையும் இலக்காக்கக் கூடாது. இப்புவியில் துயர்களில் பெரும்பகுதி நாம் வாழ்க்கையை எங்கோ செல்லும் பயணமாக ஆக்கிக்கொள்வதற்காக நாமே உருவாக்கிக்கொள்பவை. இருந்த இடத்தில் இருப்பவன், சூழ இருக்கும் திருவில் மகிழ்பவன் நிறைவடைகிறான்.

ஆனால் இருந்த இடத்தில் மகிழ்வடையாமல் எங்கோ இருக்கும் எதன்பொருட்டோ ஏங்கவும் தன்னை செலுத்திக்கொள்ளவும் மானுடனைத் தூண்டும் பெருவல்லமை ஒன்று அவனுக்குள் உள்ளது. அது ஆணவம். தந்தையே, கருவுக்குள் பார்த்திவப் பரமாணுவை வந்து தொடும் முதல் விசை அது. வளர்க, விழைக, செல்க என்று அதற்கு தெய்வம் ஆணையிடுகிறது. மண்ணில் பிறந்து போரிட்டு வளர்ந்து நிலைகொள்ள ஆற்றல் அளிப்பது அதுவே.

ஆனால் அவ்வியற்கைப் பெருவிசையை ஏதேனும் ஒரு கணத்தில் வென்றாகவேண்டும். முலைகுடி நிறுத்துவதுபோல் ஆணவத்தை சப்புவதை நிறுத்தியாகவேண்டும். உடல் வளர்ச்சி நிற்பதுபோல் அதுவும் நின்றுவிட வேண்டும். அவ்வாறன்றி வாழ்நாள் முழுக்க வளர்பவர்கள், சென்று கொண்டிருப்பவர்கள் பிறருடைய இடத்தை எடுக்காமல் பிறரை துன்புறுத்தாமல் இருக்க இயலாது. ஆகவே பிறரால் துன்புறுத்தப்படாமல், அழிக்கப்படாமல் இருப்பது இயல்வதல்ல.

நான் செய்வதற்கு ஒன்றுமில்லை. அந்த ஓலையுடன் என் அறைக்குச் சென்று அதை எரித்தழித்துவிட வேண்டும். ஆனால் நான் அதை கவர்ந்ததை சுஃபானு மிக விரைவிலேயே உணர்ந்துகொள்ளக்கூடும். என் கண்களை நினைவுகூர அவரால் முடிந்தால் ஒவ்வொரு எண்ணமாக தொட்டு எடுத்துவிடுவார்.

அவ்வாறு உணர்ந்துவிட்டாரென்றால் அவர் எனக்கெதிராக திரும்புவார். என்னைத் தேடி வருவார். அல்லது குறைந்தது அந்த ஓலை தொலைந்துவிட்டது என்றும் அதில் எழுந்தியிருந்தது என்ன என்பதை எழுதி அனுப்பும்படியும் பிறிதொரு பறவைத்தூதினூடாக ருக்மியிடம் கேட்கலாம். என் மேல் கூர்வாள் எழுந்துவிட்டது.

நான் மூத்தவர் ஃபானுவிடம் சென்று அடிபணிவதே உகந்தது என்ற எண்ணம் எனக்கு ஏற்பட்டது. எப்படியாயினும் ஓரிரு நாட்களுக்குள் அந்த ஓலையிலிருக்கும் உள்ளடக்கத்தை சுஃபானு மூத்தவர் ஃபானுவிடம் கூறத்தான் போகிறார். அதற்குள் நானே அதற்கொரு தடையை உருவாக்கியாக வேண்டும். அத்தடையே இப்போதைக்கு என்னுடைய காப்பாக அமையும். பெருவெள்ளம் வரும் வழியில் பாறைகளை போட்டுவைப்பதுபோல. வெள்ளத்தை நிறுத்தமுடியாது, சிதறடிக்கமுடியும். மடைமாற்றமுடியும்.

செல்லும் வழியில் எண்ணம் கோத்தேன். மூத்தவர் ஃபானுவின் தனியறை முன் சென்று அவரை உடனே சந்திக்கவேண்டும் என்று காவலனிடம் கூறினேன். அமைச்சர்களும் படைத்தலைவர்களும் வந்து பேசிக்கொண்டிருப்பதாக அவன் சொன்னான். "ஒருகணம் நான் அவரை தனியாக சந்திக்கவேண்டும், இது அரச மந்தணம்" என்றேன். என்னை தனியொரு அறையில் அமரச்செய்தான். நான் நிலைகொள்ளாமல் அமர்ந்திருந்தேன். கதவு திறந்து உள்ளே வந்த ஃபானு "என்ன சொல்கிறாய்? தனியாக பேசுவதற்கென்ன உள்ளது? நகர் இப்போது நிலைகுலைந்திருக்கிறது. நான் அமைச்சர்ளையும் தளபதிகளையும் அழைத்து பேசிக்கொண்டிருக்கிறேன். தெரியுமல்லவா?" என்றார்.

“ஆம், மூத்தவரே. அதற்கு முன் நான் கூறவேண்டிய ஒன்றுண்டு. அதை கூறவே வந்தேன்” என்றேன். “விரைந்து கூறுக!” என்றபடி அவர் என்னை கூர்ந்து பார்த்தார். “மூத்தவரே, சுஃபானு தங்களுக்கு எதிராக ருக்மிக்கு செய்தி அனுப்பியிருக்கிறார்” என்றேன். “எனக்கெதிராகவா, யார்?” என்றார். “மூத்தவர் சுஃபானு” என்றேன். ஃபானு அதன் பின்னரே நான் சொல்வது அனைத்தையும் புரிந்துகொண்டு என்னை கூர்ந்து பார்த்தார். “சுதேஷ்ணனின் சூழ்ச்சியில் மூத்தவர் சுஃபானுவும் ஒரு பகுதி” என்றேன். அவர் என் அருகே வந்து “அவனா? எனக்கெதிராகவா?” என்றார்.

அவருடைய அந்தக் கள்ளமின்மை என்னை உறுத்தியது. அவ்வண்ணம் ஒரு செய்தி சொன்ன உடனே தனக்கு அதில் ஆர்வமில்லை என்றோ, ஒருபோதும் தான் அதை செவிகொள்ளப்போவதில்லை என்றோ காட்டுவதே அரசர் செய்யவேண்டியது. அச்செய்தியை கேட்டுக்கொள்ளவேண்டும். ஆனால் ஒருபோதும் செய்தியை சொல்பவனை ஊக்குவிக்கக் கூடாது. ஆனால் எளிய யாதவர்களின் வழக்கமான பூசல் உளநிலையே அவரை ஆட்டுவித்தது. “கூறுக, என்ன நடந்தது?” என்றார். “எப்படி அதை அறிந்தாய்?”

“நான் மூத்தவர் சுஃபானுவின் தூதனாகவே ருக்மியை பார்க்கச் சென்றேன். ருக்மி என்னை அவ்வாறே அணுகினார். ஆனால் அவர் பேசத்தொடங்குகையில்தான் ஒன்று தெரிந்தது. ருக்மியிடம் சுஃபானுவுக்கு நீண்ட தனித்தொடர்பு இருந்திருக்கிறது. துவாரகையை தாங்கள் மணிமுடி சூடி ஆண்ட பிறகு சில நாட்களில் தங்களை அகற்றிவிட்டு தான் முடிசூடும் எண்ணம் அவருக்கு இருந்திருக்கிறது. அதன் பொருட்டு விதர்ப்பத்திற்கு அவந்தியையும் அப்பால்

கலிங்கத்தையும் ஆளும் முற்றுரிமை அளிப்பதாக சொல் ஒன்றை சுஃபானு அளித்திருக்கிறார்" என்றேன்.

ஃபானு உறுமினார். "தாங்கள் அறிவீர்கள். ருக்மி நாவின் மேல் கட்டுப்பாடு கொண்டவரல்ல. அவையிலிருந்தபடி என்னையே சுஃபானு என்று நினைத்து சொற்களை பொழிந்துகொண்டே சென்றார். நான் எந்த உணர்வையும் காட்டவில்லை. முகத்தை இறுக்கிக்கொண்டு அவர் சொல்வன அனைத்தையும் கேட்டேன். அப்போதுதான் விசாரு அங்கு வந்தான். ருக்மியின் சொற்களைக் கேட்டு விசாரு அதிர்வதை நான் கண்டேன். சுதேஷ்ணனுடன் சுஃபானுவும் இணைந்து கூட்டொன்றை அமைத்திருக்கிறார்கள் என்பதை விசாருவும் அப்போதுதான் புரிந்துகொண்டான்."

"அவன் என்னைவிட இளையவன். என்னளவுக்கு அரசுசூழ்தல் அறியாதவன். அவையிலேயே அவன் கூச்சலிடத் தொடங்கினான். யாதவ மைந்தர்கள் ஒருங்கிணந்துவிட்டார்கள், மாதுலரே. நீங்கள் ஏன் அவர்களிடையே ஒற்றுமையின்மையை உருவாக்குகிறீர்கள் என்றான். அவன் கூச்சலிடத் தொடங்கியதும்தான் நாப் பிழையாகப் பேசிவிட்டோம் என்பதை ருக்மி உணர்ந்தார். ஆனால் அவர் அத்தருணத்தை வெல்ல முயலாமல் அமைச்சர்களையும் படைவீரர்களையும் அழைத்து கூச்சலிட்டார்.

அவருடைய அமைச்சர்கள் உள்ளே வந்தனர். அவர்கள் எங்களை சொல்லால் திசை திருப்ப முயன்றனர். ஆனால் என்ன நிகழ்கிறது என்பது எங்கள் இருவருக்குமே தெரிந்துவிட்டது. விசாரு மேலும் கூவிக்கொண்டே இருந்தான். நான் குரலைத் தணித்து 'இங்கே பேசப்பட்டவை எங்களுக்கு சற்று புதியவை. நாங்கள் சுதேஷ்ணனிடமும் சுஃபானுவிடமும்

பேசிவிட்டு எங்கள் எண்ணத்தை சொல்கிறோம்' என்றேன். 'நான் எந்நிலையிலும் சுஃபானுவின் அணுக்கன். எனக்கு அவரிடமிருந்து ஒரு சொல் தேவை, அவ்வளவுதான்' என்றேன். அவர்கள் சற்று அமைதி அடைந்தார்கள். 'ஆமாம். எண்ணம் சூழ்க, இளவரசர்களே! உறுதிச்சொல் வருவது வரை காத்திருங்கள்' என்றார் அமைச்சர். 'உங்கள் உடன்பிறந்தாரிடமிருந்து ஓலைச்செய்தி வரவழைத்து அளிக்கிறோம். ஒருநாள் பொறுத்திருங்கள்' என்றனர்.

நங்கள் இருவரும் வெளியே வந்து எங்கள் குடிலை நோக்கி சென்றோம். விசாரு என்னிடம் கொந்தளித்துக்கொண்டே இருந்தான். 'இவ்வண்ணம் ஒரு சூழ்ச்சியை ஒருபோதும் ஒத்துக்கொள்ளக்கூடாது. பிரத்யும்னனிடமும் அனிருத்தனிடமும் சென்று சொல்லவேண்டும்' என்றான். 'ஆம், ஆனால் இப்போது நாம் உடனடியாக அதை சொல்ல இயலாது. இங்கிருந்து கிளம்புவது உகந்ததல்ல' என்றேன். 'உடனடியாக ஒளிந்து கிளம்பிவிடலாம்' என்று அவன் சொன்னான். அதுவே உகந்ததென்று உணர்ந்தேன். 'இவர்கள் யாதவ நிலத்திற்குள் நுழையமாட்டார்கள். நாம் பாலையில் நுழைந்தாலே தப்பிவிட்டவர்கள் ஆவோம்' என்று அவன் சொன்னான்.

"அவன் தன் மூட்டையை எடுக்க வெளியே சென்றான். நான் கிளம்புவதற்கான மூட்டைகளை கட்டிக்கொண்டிருக்கையில் வெளியே புரவிக்காலடிகளை கேட்டேன். என்ன நிகழ்கிறது என்று குடிலின் இடைவெளியினூடாக பார்த்தபோது ருக்மியின் படைகள் விசாருவை வளைத்துக்கொள்வதை, அவன் திகைத்து நிற்கையில் அப்படையின் தலைவன் விசாருவை வெட்டிக்கொல்வதை கண்டேன். அக்கணமே மற்றொரு வழியினூடாக வந்து புரவியிலேறி தப்பி ஓடி இங்கு வந்தேன்.

அங்கு என்ன நிகழ்ந்தது என்று தெரியவில்லை. அவர்களுக்கு இடையே இருக்கும் அவ்வுறவு துவாரகையை அழிப்பது" என்றேன்.

ஃபானு சொல்லிழந்துவிட்டார். தாடியை நீவியபடி நெடுநேரம் அமர்ந்திருந்தார். பின் "நன்று, இவ்வண்ணமேனும் தெரிந்ததே" என்றார். "அதை கணக்கிட்டே பிரத்யும்னன் தன் இளையோனை கொன்றிருக்கிறான்" என்றார். "ஆம், பிரத்யும்னன் தன் இளையோன் சுதேஷ்ணனை கொன்றது இச்செய்தியை அறிந்த பின்னரே" என்றேன். "அது எவ்வாறு அவருக்கு தெரிந்தது என்று எனக்கு தெரியவில்லை. நான் எண்ணுவது என்னவென்றால் நான் கிளம்புவதற்கு சற்று நேரம் முன்னால் விசாரு அவருக்கு ஏதேனும் ஓலை அனுப்பியிருக்கலாம். பறவைத்தூதாக அது பிரத்யும்னனிடம் வந்து சேர்ந்திருக்கலாம்."

"ஆம், அவ்வாறே நிகழ்ந்திருக்கும். இப்போது எல்லாமே தெளிவாக இருக்கிறது" என்றார் ஃபானு. "மூத்தவரே, எனக்கு அச்சமாக இருக்கிறது. இன்று சுஃபானுவால் கொல்லப்படுவதற்கான வாய்ப்புடன் இருப்பவன் நான். அவரைப் பற்றிய உறுதியான செய்தி எனக்கு தெரிந்துவிட்டது என்பதை அவர் இப்போது ருக்மியிடமிருந்து அறிந்துகொண்டிருப்பார். சுஃபானுவின் கொலைப்படை என்னைத் தேடி வருவதற்கான எல்லா வாய்ப்புகளும் உள்ளன. ஆகவே நான் உங்களிடம் அடைக்கலம் கோருகிறேன். எனக்கு நீங்களே பாதுகாப்பு அளிக்கவேண்டும்" என்றேன்.

"ஆம், என்னுடைய பாதுகாப்பு உனக்கு உண்டு. எப்போதும் என்னுடைய படைவீரர்கள் உன்னுடன் இருப்பார்கள்" என்றார் ஃபானு. "அவர் வந்து தங்கள் உள்ளத்தை திரிக்கக் கூடும். என்மேல் பழியை சுமத்தலாம். பொய்யான ஓலைகள்

கொண்டுவந்து கொடுக்கலாம். நீங்கள் உளம் மாறக்கூடாது" என்றேன். "நீ கூறும்போதே அந்த எண்ணத்தை நான் அடைந்தேன். நான் பார்த்துக்கொள்கிறேன்" என்று ஃபானு சொன்னார். "அது போதும். நான் தங்களை நம்புகிறேன்" என்றபின் தலைவணங்கி நான் அறைவிட்டு வெளியே வந்தேன்.

அது பெரிய கோட்டை அல்ல என்று நன்கறிந்திருந்தேன். அது என்னை காக்காது, ஆனால் சற்று பொழுதை ஈட்டித்தரும். நான் என்னை காக்கும் அனைத்தையும் செய்தாகவேண்டும். எங்கிருந்தோ தீய தெய்வம் ஒன்றை திறந்துவிட்டுவிட்டேன். அது நிழல்நிழலென உருப்பெருக்கி என்னை சூழ்ந்துகொண்டிருக்கிறது.

# கல்பொருசிறுநுரை - 50

**பகுதி நான்கு : அலைமீள்கை – 33**

தாளவொண்ணா உளத்தளர்வு எடையென்றே உடலால் உணரப்படுகிறது. அதை சுமக்க முடியாமல் இடைநாழியிலேயே நின்றேன். மறுபடி என்ன நிகழப்போகிறது? ஏதோ ஒன்று நிகழவிருக்கிறது. பேருருக்கொண்டு அது எழுந்து வருகிறது. அதை அஞ்சி வேறேதோ செய்துகொண்டிருக்கிறேன். அதை தடுப்பதற்கான சிறுசிறு முயற்சிகள். உருண்டுவரும் ஒரு பெரும்பாறைக்குக் கீழே சிறுசிறு பாறைகளை எடுத்துக்கொடுப்பதுபோல. அதனால் அதை தடுக்க இயலாது.

அதன் எடையே அதன் ஆற்றல். அதன் ஊழ் முன்னரே வகுக்கப்பட்டுவிட்டது.

அது மிக அருகே வந்துகொண்டிருக்கிறது என்பதை உணர்ந்தேன். என் புலன்கள் அனைத்தும் இழுபட்டு நின்றிருந்தன. நான் அரசுசூழ்தல் பணிகள் அனைத்திலும் இறங்கியது என் சலிப்பான அன்றாடத்தை விசைப்படுத்திக் கொள்வதற்காக. ஆனால் அத்தருணத்தில் எளிய மாற்றமில்லாத அமைதியான அன்றாடத்திற்கு ஏங்கினேன். சற்றே சலிப்பு வருகிறது என்பதற்காக இல்லத்தில் தீ வைத்துவிட்ட வீணன் நான் என்று உணர்ந்தேன். நான் உணர்ந்ததெல்லாம் உடனடியாகக் கிளம்பி என் மைந்தர்களுடன் சென்று அமரவேண்டும் என்னும் விழைவை மட்டுமே. அனைத்தையும் அகற்றிவிட்டு அவர்களுடன் கூவி ஆர்ப்பரித்து விளையாடவேண்டும்.

படியிறங்கி கீழே வந்தேன். என்னை அணுகிய வீரனொருவன் தலைவணங்கி "கணிகர் தங்களை சந்திக்க விழைந்தார். தங்களை நான் தேடிக்கொண்டிருந்தேன்" என்றான். "இப்போதா?" என்றேன். "ஆம்" என்றான். "இப்போதுதானே சந்தித்தேன் அவரை?" என்றேன். "அவர் இப்போது தன் குடிலுக்கு சென்றுவிட்டார். தாங்கள் அங்கு செல்ல வேண்டுமென்று விழைகிறார்" என்றான். "அவர் எந்நிலையில் இருக்கிறார்?" என்றேன். "வழக்கம்போலத்தான்" என்றான். "அவர் என்ன உசாவினார்?" என்றேன். அவன் சற்று எண்ணிநோக்கி "நகரின் அழிவுகளைப்பற்றி பொதுவாக" என்றான்.

நான் "நன்று" என்ற பின்னர் என் ஆடையை அள்ளி சுற்றிக்கொண்டு இடைநாழியினூடாக விரைந்து அரண்மனை முற்றத்திற்குச் சென்று புரவியில் ஏறி அரண்மனை

வளாகத்தை சுற்றிக்கொண்டு கணிகரின் குடிலை அடைந்தேன். கணிகர் வழக்கம்போல் தன் குடிலுக்குள் தர்ப்பை மேல் தன் ஒடிந்த உடலைக் கிடத்தி அமர்ந்திருந்தார். இனிய புன்னகையுடன் என்னை அருகணைந்து அமரும்படி சொன்னார். நான் பதறிக்கொண்டிருந்தேன். அமர்ந்ததும் என் உள்ளம் அடைந்த சிறு ஆறுதல் வியப்பூட்டியது. நான் அமர்ந்ததும் "நன்று" என்று அவரே தொடங்கினார். நான் அவர் எதை எண்ணுகிறார் என்று எண்ணிக்கொண்டிருக்கையிலேயே "நன்று, அவ்வாறுதான் அதை செய்யவேண்டும்" என்றார்.

அவர் எதை கூறுகிறார் என்று எனக்கு தெரியவில்லை. என் நாவை பிடுங்க முயற்சிக்கிறாரா? எனில் அவரே கூறட்டும் என்று நான் காத்திருந்தேன். "சுஃபானுவுக்கும் ஃபானுவுக்கும் ஒரு முரண்பாட்டை உருவாக்காமல் இது முன்னகராது. ஃபானு இன்றி சுஃபானு ஆற்றலற்றவர். சுஃபானுவின் சொல்லின்றி ஃபானுவால் செயல்பட இயலாது. அவர்கள் பிரிக்கப்பட்டாக வேண்டும். ஐயத்தின் விதை ஒன்று முன்னரே இருக்கும். ஏனெனில் சுஃபானு இன்றி தன்னால் செயல்பட இயலாது என்று ஃபானு அறிந்திருக்கிறார். அந்த ஐயத்தின் விதையை சற்றே தூண்டிவிடுவதே நீ செய்தது. நன்று" என்றார்.

நான் அக்கணம் என்னை மிகமிகக் கசந்தேன். என் முகத்திலும் ஒரு கோணலாக அந்தக் கசப்பு வெளிப்பட்டது. "இப்பொழுதில் அங்கு என்ன நிகழ்ந்துகொண்டிருக்கிறது என்று எனக்கு தெரியவில்லை. ஆனால் நிகழ்வது எதுவும் உகந்ததாக இருக்காது" என்றார் கணிகர். "அந்தணரே, நான் குழம்பியிருக்கிறேன். என்ன செய்வதென்றே தெரியவில்லை. அச்சத்தில், பதற்றத்தில் என்ன செய்ய இயலுமோ அதை செய்துகொண்டிருக்கிறேன்" என்றேன். "இனி எவ்வாறாயினும்

நாம் செயல்புரிந்தே ஆகவேண்டும். ஒவ்வொன்றும் முழு விசையுடன் தொடங்கிவிட்டது. இனி வினையில்லாமல் இருப்பது நம்மை ஒப்புக்கொடுப்பதே. நாம் செய்யக்கூடுவனவற்றின் உச்சத்தை பிறிதொன்று கருதாமல் செய்தாகவேண்டும்" என்றார் கணிகர்.

"நோக்குக, எரிந்துகொண்டிருக்கும் கட்டடத்தில் அனைத்தும் உடைந்து கரிந்து விழுந்து நிலையழிவதுபோல தோன்றும்! ஆனால் தீயை மட்டும் கூர்ந்து பார்த்தால் தீயின் விழைவுக்கேற்ப ஒவ்வொன்றும் தன்னை அளித்துக்கொண்டிருப்பதை பார்க்கலாம். ஒரு யானை மரத்தை கிளையொடித்து உண்கிறது, யானையை நம்மால் பார்க்க இயலாது என்றால் அந்த மரம் எப்படி தெரியும்? நெருப்பு எழும் கட்டடம் அவ்வாறுதான். அதில் ஒவ்வொன்றும் உடைந்து சரிந்து விழுவதனூடாக தீ மேலும் ஓங்கியே எரியும். தீக்கு படியமைக்கின்றன பொருட்கள். மடிந்து நொறுங்கி தீக்கு உணவாகின்றன. அதுதான் இங்கு நிகழ்ந்திருக்கிறது. நீ இயற்றுவது தீயின் விழைவை" என்றார் கணிகர்.

"அங்கு என்ன நிகழ்கிறது?" என்று நான் கேட்டேன். "அங்கு நிகழ்வதனைத்தையும் நான் அறிந்துகொண்டிருக்கிறேன். துவாரகை அச்சத்திலும் பதற்றத்திலும் உழன்றுகொண்டிருக்கிறது. சிற்பிகள் எவரையேனும் அழைத்துவர ஒரு குழு சென்றிருக்கிறது. ஆனால் இந்நகரை உருவாக்கிய சிற்பிகளில் எவரும் இந்நகரத்திற்குள் இல்லை" என்றார் கணிகர். "சுதேஷ்ணனை ஆதரிக்கும் தன் இளையோரை உடனடியாக தேடிப்பிடித்து கொன்றுவிடும்படி பிரத்யும்னன் ஆணையிட்டிருக்கிறார். ருக்மிணி தேவிக்கு

இதுவரை செய்தி சொல்லப்படவில்லை. அன்னை என்ன கூறப்போகிறார் என்று தெரியவில்லை.”

“அநிருத்தன் பிரத்யும்னனின் செயல்களை ஏற்கவில்லை. அவ்வாறு தந்தை தன் உடன்பிறந்தவரை கொல்வது பெரும்பிழை என்று அவர் கூறுகிறார். தந்தைக்கும் மைந்தனுக்குமிடையே கடும்பூசல் ஒன்று இப்போது நிகழ்ந்துகொண்டிருக்கிறது. பிரத்யும்னனின் செயலை அநிருத்தன் ஏற்கவில்லை என்பதே ஷத்ரியர்களின் விசையை குறைத்துவிட்டது. நான் கூறியதுபோல துவாரகையில் இந்தப் பேரழிவு நிகழ்ந்ததே உடன்பிறந்தார் கொலை நிகழ்ந்து, அக்குருதி நகரில் விழுந்தமையால்தான் என்ற செய்தி நகர் முழுக்க பரவிவிட்டிருக்கிறது. இன்று பல இடங்களில் இறந்த மைந்தருக்காக யாதவர்கள் கதறி அழுகிறார்கள்.”

“ஷத்ரியர்களில் ஒரு சாரார் பிரிந்திருக்கிறார்கள். அவர்கள் ருக்மியிடமிருந்து ஏதேனும் செய்தி வரும் என்று எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்” என்றார் கணிகர். “இதைப்போல துவாரகை எப்போதும் இருந்ததில்லை. இது கொந்தளிப்பு அல்ல, உழுதிட்ட புது மண்ணின் கிளர்வு. இது விதை ஊன்றுவதற்கு உகந்தது.” நான் “மற்ற மைந்தர்கள் என்ன செய்கிறார்கள்?” என்றேன். “நான் அறிந்தவரை சாம்பனும் தன் படைகளை தொகுத்துக்கொண்டு நிகழ்வன என்ன என்று பார்க்கலாம் என்று காத்திருக்கிறார். இப்போதைக்கு எதுவும் செய்யவேண்டியதில்லை. இந்த மோதல்களினூடாக ஏதேனும் ஒன்று திரண்டு வரட்டும் என்றே அவர் நினைக்கிறார்” என்றார் கணிகர்.

“அவர்களின் அரசியின் ஆணையே அங்கே முதன்மையானது. அவர் முன்னரே சொல்லியிருந்தார், இது ஒருபோதும்

ஒருங்கிணையாத ஒரு கூட்டு என்று. ஃபானு முடிசூடப்போவதில்லை, அவ்வாறு நிமித்திகர் கூற்றே இல்லை, ஆகவே சாம்பன் இன்று எதுவும் செய்யாமல் காத்திருப்பது ஒன்றே இயற்றக்கூடுவது என்று அவர் கருதுகிறார். சாம்பனும் அதன்பொருட்டே இப்போது காத்திருக்கிறார்" என்றார். "பிற மைந்தர்கள் இப்போது தங்கள் நிலைபாடுகளை அறிவித்து எவரேனும் ஒரு தரப்பினருடன் சென்று சேர்ந்துகொள்ள வேண்டியதில்லை. முழுக்க முழுக்க இது பிரத்யும்னனுக்கும் ஃபானுவுக்குமான போராக முடியட்டும் என்று எதிர்பார்க்கிறார்கள்."

நான் பெருமூச்சுவிட்டேன். புன்னகைத்து கணிகர் சொன்னார் "சுதேஷ்ணனுக்கும் சுஃபானுவுக்கும் நல்லுறவு இருந்ததாக நீ சொன்னது நன்று. ஃபானுவின் ஐயம் தன் மேல் திரும்புவதை உணர்ந்து சுஃபானு செய்யக்கூடுவது நேராகச் சென்று பிரத்யும்னனிடம் சேர்ந்துகொள்வதுதான். ஆனால் பிரத்யும்னன் இந்நேரம் சுஃபானு சுதேஷ்ணனுடன் சேர்ந்து தனக்கெதிராக சூழ்ச்சி செய்தார் என்ற செய்தியை அறிந்திருப்பார். ஆகவே அவர் அங்கு செல்ல இயலாது." நான் "எனில் அவர் என்ன செய்யக்கூடும்?" என்று கேட்டேன்.

"அவர் செய்யக்கூடுவது ஒன்றே. உன்னை சிறைபிடிக்கலாம். உன்னை கொண்டுசென்று மூத்தவர் முன் நிறுத்தி உன் நாவிலேயே நீ செய்ததென்ன என்று சொல்லச் செய்யலாம்" என்றார் கணிகர். "அது எப்படி?" என்று நான் பதறினேன். "முடியும். உனது மிகமிக நொய்மையான ஓர் இடம் அவர் கையில் இருக்கிறது. உனது மைந்தரும் துணைவியும் இங்கு இருக்கிறார்கள்." பதறிப்போனவனாக நான் எழுந்துவிட்டேன். அலறலாக "கணிகரே!" என்றேன். "இங்கு அவர்களை

வைத்திருந்திருக்கக் கூடாது. அப்போதே அதை நான் சொல்லவேண்டும் என்று நினைத்தேன். ஆனால் உனக்கு அவர்கள் தேவைப்படுகிறார்களோ என்று தோன்றியது."

"என் மைந்தர்கள்!" என்று நாம் விம்மிவிட்டேன். "பிற யாதவ மைந்தர்களின் அரசியரும் மைந்தர் ஒவ்வொருவரும் அவர்களின் தந்தையர் ஊர்களில் பாதுகாப்பாக இருக்கிறார்கள். உனது மைந்தர்களும் அரசியும் அவ்வாறல்ல. நான் சுஃபானுவின் இடத்திலிருந்தால் இந்நேரம் ஒரு படைப்பிரிவை அனுப்பி உன் மைந்தரையும் அரசியையும் சிறைபிடிப்பேன். உன்னை என்னை வந்து பார்க்கச் சொல்வேன். நீ எங்கு ஒளிந்தாலும் வேட்டையாடி கைப்பற்றுவேன்."

நான் "கணிகரே" என்று கூவினேன். "என் மைந்தர், கணிகரே. என் மைந்தர்." "இப்போதே அவர்களின் சூழ்கை என்னவாக இருக்கும் என்று கணிக்க முடிந்தது நன்று. உன் மைந்தர் இப்போது நலமாகவே இருக்கிறார்கள். உடனே அவர்களை காக்கும் செயல்களை செய்யமுடியும். அஞ்சவேண்டாம். ஆனால் அஞ்சவேண்டியது ருக்மியை. இங்கே நிகழ்வனவற்றுக்கான தொடக்கம் அவர் அறிந்தது. அவர் பொய் சொல்லாதவர் என்ற எண்ணம் இங்கே அனைவருக்கும் உள்ளது. நான் ஃபானுவாகவோ பிரத்யும்னனாகவோ இருந்தால் உடனடியாக ருக்மிக்கு ஓலை ஒன்றை அனுப்பி என்ன நிகழ்ந்தது என்ற விளக்கத்தை பெறுவேன்" என்றார் கணிகர்.

"ருக்மி அவ்விளக்கத்துடன் முன் வருவாரா?" என்றேன். "சுதேஷ்ணன் கொல்லப்பட்டார் என்ற செய்தியை அறிந்ததுமே ருக்மி நிலையழிந்திருப்பார். ஷத்ரியர்கள் தங்களுக்குள் பூசலிடுகிறார்கள் என்று தெரிந்ததும் அவரால் அங்கு அமைந்திருக்க இயலாது. அவர் இங்கு கிளம்பி வருவதற்கான

வாய்ப்புகள் உள்ளன. கிளம்பி வருக என்று ஒருவர் அழைத்தால் கிளம்பி வருவார்." நான் கைகளை கூப்பி நெஞ்சில் வைத்திருந்தேன். இறந்தவன் போன்ற குரலில் "படையுடனா?" என்றேன். "படையுடன் வரமாட்டார். அதற்கான பொழுதில்லை. நேரடியாக வருவார். பிரத்யும்னனிடம் தானே பேசுவதற்காக வருவார். பிரத்யும்னன் அவரிடம் பேசுவார்."

கணிகர் புன்னகைத்து "இத்தருணத்தில் சுஃபானுவைப் போன்ற ஒருவர் செய்யக்கூடுவது பிரத்யும்னனின் அழைப்பு என்ற பெயரில் ஒரு செய்தியை ருக்மிக்கு அனுப்புவதல்லவா?" என்றார். "ஆம்" என்றேன். உடனே உரத்த குரலில் "கணிகரே, அதை செய்துவிட்டீரா? அந்த எண்ணத்தை சுஃபானுவுக்கு அளித்துவிட்டீரா?" என்றேன். "இல்லை. அவருடைய தூதன் என்னிடம் வருவான். நான் அதை சொல்லாமலிருக்க முடியாது. ஏனென்றால் அது என் கடமை. ஆனால் உன் மேல் உள்ள பற்றினால் உடனே உன்னை வரச்சொன்னேன்."

"அவ்வண்ணம் ஓர் ஓலை சென்றால் அதை ருக்மி தட்டமாட்டார்" என்றார் கணிகர். "உண்மையில் ருக்மி கிளம்பி வந்துகொண்டிருக்கிறார். அச்செய்தியை நீ அறிந்தாகவேண்டும்." நான் "ருக்மியா? இங்கு வருகிறாரா?" என்றேன். "ஆம்" என்றார். "ஏற்கெனவே பிரத்யும்னனின் தரப்பில் இருந்தும் அநிருத்தனின் தரப்பில் இருந்தும் ருக்மி இங்கு வந்தாகவேண்டும் என்ற செய்தியை அங்கு அனுப்பியிருக்கிறார்கள்." நான் "ருக்மி இங்கு வந்துவிட்டால் என்ன நிகழும்?" என்று கேட்டேன். "நிகழ்வதற்கு எல்லையே இல்லை. ருக்மி வந்து அவை நின்று பேசத்தொடங்கினால் முதலில் கழுவேறப் போவது நீயாகவே இருப்பாய்" என்றார் கணிகர்.

என் உடல் நடுங்கத்தொடங்கியது தலையை பற்றிக்கொண்டு அமர்ந்தேன். "ருக்மி இங்கு வருவதை தடுப்பதற்கு ஒரு வழியுண்டு. நான் கூறாமல் உனக்கு இது தோன்றப்போவதில்லை" என்றார் கணிகர். "கூறுக!" என்றேன். சலிப்புடன் "இப்போது யார் என்னிடம் என்ன கூறினாலும் செய்யும் நிலையிலிருக்கிறேன்" என்றேன். "பதற்றம் வேண்டாம். நீ கிட்டத்தட்ட பிரத்யும்னனின் படையினரிடம் சிக்கிக்கொண்ட ஒரு தருணம் நிகழ்ந்ததே, அப்போது எவ்வாறு தப்பினாய்?" என்றார் கணிகர். "இந்த நிலநடுக்க நிகழ்வால்" என்றேன். "ஆம், தெய்வத்தின் ஒரு கை உள்ளே வந்தது. மீண்டும் தெய்வத்தின் கை உள்ளே வரட்டும்" என்றார்.

"என்ன சொல்கிறீர்கள்?" என்றேன். "ருக்மி நகருக்குள் நுழைகையில் இங்கு ஒவ்வொன்றும் அமைந்துவிட்டிருக்கும். இப்போதே படைத்தலைவர்களை நகர் முனைகளுக்கு அனுப்பி ஒவ்வொரு சந்தியிலும் படைகளை நிறுத்தி துவாரகையின் கொந்தளிப்பை அடக்கத் தொடங்கிவிட்டார்கள். சிற்பிகள் வந்து நகர் ஒழுங்காக இருக்கிறது என்று அறிக்கையிட்டு அது முச்சந்திகள் ஒவ்வொன்றிலும் படிக்கப்படுமென்றால் நாளை புலரிக்குள் நகர் அடங்கிவிடும். ஒவ்வொருவரும் தங்கள் அறைகளுக்குள் இருக்கையில் பூசல் நிகழாது."

"பிரத்யும்னனும் சாம்பனும் ஃபானுவும் சுஃபானுவும் காத்திருப்பார்கள். ருக்மி நகர்நுழைந்தார் என்றால் அவரை அவைக்கு கூட்டிக்கொண்டு வருவார்கள். அவையில் ஒரு சொல்லாடல் நிகழும். ருக்மி நிகழ்ந்ததென்ன என்று கூறினால் அதன் பிறகு..." என்று கணிகர் சொல்ல நான் இடைமறித்து "அவ்வாறு அவர் கூறினால் அதை ஏற்றுக்கொள்ள வேண்டியதில்லை" என்று நான் நலிந்த குரலில் சொன்னேன்.

“ஒன்று அவர் விழிகளில் ஒரு நேர்மை இருக்கும். அவர் சொல்சூழ்பவர் அல்ல, அரசுசூழ்தலை அறிந்தவரும் அல்ல என்பதை அனைவரும் அறிவார்கள். ஆகவே அவர் சொல் ஏற்றுக்கொள்ளப்படும்” என்றார் கணிகர்.

“இன்னொன்றும் உண்டு. நிகழ்ந்தது கடந்துசெல்லட்டும், ஒவ்வொன்றையும் மீண்டும் தொடங்குவோம் என்றே உள்ளத்தின் ஆழத்தில் அனைவரும் எண்ணுகிறார்கள். ஆகவே அனைவரும் தாங்கள் நம்ப விரும்புவதையே நம்புவார்கள். அதற்குமேல் ஒருவேளை நிகழ்ந்ததென்ன என்பதற்கான சில சான்றுகளை ருக்மி கொண்டுவரக்கூடும். அவரும் தன் சொல்லை மட்டுமே நம்பி இங்கு வருவதற்கு வாய்ப்பில்லை. அமைச்சர்களை உடனழைத்து வரலாம். அந்தணர் ஒருவர் வந்து தன் நா தொட்டு உரைத்தாரென்றால் பிறகென்ன?”

நான் திகைத்து அமர்ந்திருந்தேன். “நீ அங்கு பேசும்போது அவையில் அந்தணர் எவர் இருந்தார்கள்?” என்றார் கணிகர். “இருந்தார்கள். ஆனால் அவர்கள் எதுவும் சொல்லவில்லை” என்றேன். “அந்தணர் ஒருவர் இருந்தாரல்லவா? உன் சொற்களை தன் காதால் கேட்டாரல்லவா?” என்றார் கணிகர். “ஆம்” என்றேன். “அந்த அந்தணருடன்தான் ருக்மி இங்கு வருவார். அவர் சொல்லுக்கு மேல் ஐயம் எழாது.” நான் விம்மிவிட்டேன். என் முகத்தை கைகளில் வைத்து குனிந்து அமர்ந்திருந்தேன்.

கணிகர் “ஒவ்வொரு பாறையிலும் உள்நுழைய வழியிருக்கும். நாகங்கள் அதை அறியும்” என்றார். “நான் என்ன செய்யவேண்டும், கணிகரே? கூறுக!” என்றேன். “ஒன்று செய்யலாம். ருக்மி நகர்நுழைவதற்குள் இந்நகர் இரண்டாவது நிலப்பிளவை அடையலாம். இங்குள்ள அனைத்து

கட்டடங்களும் உலுக்கப்படவேண்டும். நகருக்குள் கடல்நீர் நுழையுமெனில் அதுவும் நன்று. இங்குள்ள குடிகள் அனைவரும் தெருவில் இறங்கி கூச்சலிட்டுக் கொண்டிருக்கவேண்டும். நகரை இவ்வண்ணமே கைவிட்டுவிட்டுச் செல்வதா இங்கு தொடரமுடியுமா என்ற ஐயம் ஒவ்வொருவருக்கும் எழவேண்டும். அப்போது எவர் எவருக்கு வஞ்சம் இழைத்தார் என்பது ஒரு பொருட்டாக இருக்காது. அரச மைந்தரைக்கூட எவரும் நோக்கப்போவதில்லை" என்றர் கணிகர்.

"அத்தகைய பெரும் அழிவொன்றில் நீ எளிதில் தப்ப முடியும்... அது ஒன்றே இன்று உன்னை காப்பது" என்று கணிகர் சொன்னார். "அவ்வாறு ஒரு அழிவு இங்கே நிகழ்ந்தாக வேண்டும்." நான் "அது எவ்வண்ணம்..." என்றேன். "அதை நான் சொல்கிறேன்" என்றார் கணிகர். நான் உடைந்து அழுதபடி "எனது மைந்தர், எனது துணைவி!" என்றேன். "ஆம், உடனடியாக செய்யவேண்டியது உன் பாதுகாவலரில் ஒரு சிலரை அழைத்து உன் மனைவியையும் குழந்தைகளையும் கிளம்பி கடல் வழியாக சிந்துவிற்குச் சென்று அங்கிருந்து தங்கள் ஊருக்கு அனுப்பிவிடுவது. அதை முதலில் செய்க! அவர்கள் எங்கிருக்கிறார்கள் என்பதை இவர்கள் அறியக்கூடாது."

"அவர்களை துவாரகையினர் துரத்திச் சென்று பிடித்துவிடலாம். அது மிக எளிதானது. பெண்களும் குழந்தைகளும் அத்தனை விரைவாக செல்லமுடியாது. துவாரகையின் உளவு அமைப்பும் மிக விரிவானது. செல்லும் இடம் அனைத்தும் காவல்படைகள் இருக்கின்றன" என்றார் கணிகர். "ஆனால் அவர்கள் கிளம்பியபிறகு இங்கு பெரும் உடைவொன்று நிகழ்ந்து ஒவ்வொன்றும் நிலையழியுமெனில் அவர்களை துரத்தவோ

பிடிக்கவோ இங்கு எவருக்கும் வாய்ப்பிருக்காது. துவாரகை நிலைமீள நெடுங்காலமாகும். அனைவரும் உன்னை மறந்துவிடுவார்கள்" என்றார்.

நான் நீள்மூச்சுடன் "இவை எப்படி நிகழும்? நான் என்ன செய்வது அதற்கு?" என்றேன். "தெய்வங்களை கட்டவிழ்த்து விடுக!" என்றார். "தெய்வங்களை..." என்று சொல்லி நான் அவரை பார்க்க "இந்நகரின் அமைப்பில் பெரிய பிழையொன்று உள்ளது. இந்த கருடனின் நீள் அலகு என அங்கிருக்கும் மாபெரும் துறைமேடை துவாரகை அமைந்ததுள்ள இரு பெரும் அடித்தளப் பாறைகளுக்கு நடுவே ஓர் இணைப்பாக அமைக்கப்பட்டுள்ளது. கடல் அலைகளின் அனைத்து அடிகளையும் அந்தத் துறைமேடை வாங்கிக்கொள்வதால்தான் துவாரகை வலுவாக அமைந்திருக்கிறது" என்றார்.

"அந்தத் துறைமேடை உடையவேண்டும். அதன் விரிசலினூடாக கடல்நீர் இரு பாறைகளுக்கு நடுவே வந்தால் துவாரகை இரண்டாக பிளக்கும்" என்றார் கணிகர். "அது எப்படி வரமுடியும்?" என்றேன். "சென்று பார் அங்கே. இப்போது ஒரு பீதர் நாட்டு மரக்கலம் நின்றிருக்கிறது. அதன் அனைத்துப் பாய்களையும் விரியச் செய்யவேண்டும். அது தன் முழு விசையுடன் வந்து மோதுமெனில் அந்தத் துறைமேடை விரிசல்விடும்" என்றார். அப்போதும் நான் புரிந்துகொள்ளவில்லை. "நின்றிருக்கும் கலத்தில் பாய்கள் எவ்வாறு விரியும்?" என்றேன். "அந்தக் கலத்தை எவரேனும் கைப்பற்றவேண்டும். கரையிலிருந்து சில நாழிகைப்பொழுது கடலுள் கொண்டுசெல்ல வேண்டும். அப்பொழுது பெரும்புயலொன்று அடிக்கும்" என்றார் கணிகர்.

“புயலா?” என்றேன். “நோக்குக, இங்கு காற்று அசைவின்றி இருக்கிறது! ஒரு புழுதித்துளிகூட இடம்பெயராமல் இருக்கிறது” கணிகர் சொன்னார். “ஆம்” என்றேன். “அவ்வாறு முற்றிலும் அசைவற்ற நிலை கடலோரமாக அமைவதென்பது பெரும்புயலுக்கான சான்று. கடல்நீர் உள்ளே செல்லத் தொடங்கும். இன்னும் சற்று நேரத்தில் துறைமேடை முற்றாக வெளித்தெரியும். கீழிருக்கும் பெரும்பாலான பாறையடுக்குகள் வெளியே வரும். கடல் உள்வாங்கத் தொடங்கும்போது கப்பல் கடலுக்குள் செல்ல வேண்டும். பல நாழிகைதொலைவு விலகிச் செல்லவேண்டும்.”

“முழு விசையுடன் காற்று துவாரகை நோக்கி வருகையில் அனைத்துப் பாய்களையும் விரித்து ஒரு கப்பல் அந்த அலையில் இருக்குமென்றால் பேரலை வந்து துவாரகையை அறையும்போது அந்தக் கலமும் வந்து படித்துறையை அறையும். படித்துறை விரிசல்விடுமெனில் அப்பேரலையின் நீர் நகருக்குள் புகும்” என்று கணிகர் சொன்னார். “துவாரகை அழியுமா?” என்று நான் கேட்டேன். “அழியக்கூடும். ஆனால் இங்கு மானுடர் தொடர்ந்து வாழமுடியாத நிலை வரும். ஒவ்வொன்றும் சிதறும் என்பதில் ஐயமில்லை.”

“அதை நான் செய்யவேண்டுமா, கணிகரே?” என்றேன். “நீயும் துணைவியும் மைந்தரும் தப்புவதற்கு வேறு வழியில்லை” என்றார் கணிகர். “துவாரகை எந்தை உருவாக்கிய நகர்” என்று நான் துயருடன் சொன்னேன். “அதனாலென்ன? எப்படியும் இந்த நகர் ஆழிப்பேரலையின் அறைதலை தாங்காது. நாம் இதை கைவிடலாம். இதற்கு நிகராக பிறிதொரு நகரை உருவாக்கலாம். அதற்கு துவாரகை என்று பெயரிடலாம்” என்று கணிகர் புன்னகைத்தார். நான் துயருடன் அமர்ந்திருந்தேன்.

"இங்கு நிகழும் அனைத்துப் பூசல்களும் நன்மைக்கே என்று கருதுக!" என்று கணிகர் கூறினார்.

# கல்பொருசிறுநுரை - 51

**பகுதி நான்கு : அலைமீள்கை – 34**

நான் செல்லும் வழி முழுக்க கணிகரைப் பற்றியே எண்ணிக்கொண்டிருந்தேன். அவர் வந்த முதல் நாள் என்னிடம் அவர் வந்தது இந்நகரை அழிக்கும்பொருட்டே என்று கூறியது துணுக்குறும்படி நினைவுக்கு வந்தது. அவ்வாறு எண்ணும்போது ஒன்று தெரிந்தது, அவர் தனது எந்தச் செயலையும் ஒளித்ததில்லை. தான் செய்யப்போவது அனைத்தையும் பலமுறை கூறவும் செய்கிறார். ஆனால் எவ்வண்ணமோ அது நம்மில் பதிவதில்லை. நம்மிடம் இருக்கும் ஆணவம் கேடயம்போல் அதை தடுத்து வெளியே தள்ளிவிடுகிறது.

மீள மீள அவரைப்பற்றியே எண்ணிக்கொண்டிருக்கிறேன். மதிப்பிடுகிறேன், வகுத்துக்கொள்கிறேன், நுண்மையாக்கிக்கொள்கிறேன். உணர்வுகளால் அலைக்கழிகிறேன். அச்சூழலில் வைத்தும் ஒட்டுமொத்தமாகவும் புரிந்துகொள்ள முயல்கிறேன். நான் அவரைப்பற்றி மீண்டும் மீண்டும் ஒன்றையே எண்ணிக்கொண்டிருக்கிறேனா? ஒரே சொல்லையே சொல்லிக்கொண்டிருக்கிறேனா? ஆனாலும் அவரை என்னால்

கடந்துசெல்ல முடியவில்லை. அவர் சொன்னவற்றை அணுகவே முடியவில்லை.

எவருமே அவரை புரிந்துகொள்ளமுடியாது. ஏனென்றால் நமது எளிய ஆணவத்தால் அவர் முன் நின்று அவரை நமக்கு கருவியாக பயன்படுத்திக் கொள்வோம் என எண்ணுகிறோம். அவர் மட்டும் நமக்கு கருவியாக வருவாரெனில் உலகையே நொறுக்கும் பெரும் படைக்கலமொன்றை கொண்டவராவோம் என்று எண்ணிக்கொள்கிறோம். அந்த பெரும்படைக்கலம் நம்மை தன் ஊர்தியாக பயன்படுத்திக்கொள்ளுமோ என்று ஐயம் கொள்ளாதபடி ஆணவம் கொண்டிருக்கிறோம். அவருக்கு மிக நன்றாகவே தெரியும், எவரும் அவரை அணுகமுடியாது. எவரும் அவரை கடக்கவும் முடியாது. அவர் அனைவர் மேலும் ஆட்சி கொண்டிருக்கிறார். அவர் ஆடுவதே மானுடரின் ஆணவத்துடன்தான்.

துவாரகையின் களமுற்றத்தை நோக்கி
சென்றுகொண்டிருக்கையில் என் அகம்
கொந்தளித்துக்கொண்டிருந்தது. இதை செய்யலாகாது,
இக்கணமே இங்கிருந்து விலகிவிட வேண்டும் என்றுதான்
எண்ணிக்கொண்டிருந்தேன். திரும்பி ஓடவேண்டும், என்
துணைவியையும் மைந்தரையும் அழைத்துக்கொண்டு
கிளம்பிவிட வேண்டும். ஆனால் நான் அவர் கூறியவாறே
துறைமேடைக்குத்தான் சென்றுகொண்டிருந்தேன். என்னை
அப்போது வெளியே இருந்து பார்ப்பவர் எவரும் மிகமிக
உறுதியுடன் ஏவப்பட்ட இலக்கு நோக்கி செல்லும் செயல்வீரன்
என்றே எண்ணக்கூடும்.

துவாரகையின் அரண்மனை முற்றத்தில் எனது அணுக்கனாகிய படைத்தலைவன் உக்ரனும் அவன் துணைவர்களும்

நின்றிருந்தார்கள். அவர்களுக்கு அரண்மனை முகப்பின் தேர்களை ஒருங்கு செய்யும் பணி அளிக்கப்பட்டிருந்தது. அரண்மனை முகப்பிலிருந்த தேர்கள் அனைத்தும் நிலைகுலைந்திருந்தன. எவ்வண்ணம் அவை நிலைகுலைந்தன என்று எனக்கு தெரியவில்லை. அவை எப்போதுமே மிகச் சீராக அடுக்கி நிறுத்தப்பட்டிருக்கும். மண் அசைந்தபோது அவை நிலைகுலைந்திருக்க வாய்ப்பில்லை. விலங்குகளும் மனிதர்களும் நிலைகுலைந்து அங்குமிங்கும் ஓடியபோது அவை அசைந்திருக்கக்கூடும். எனில் மண்ணின் மீது வெறும் நுரைபோலத்தான் இந்த உயிர்க்குலங்கள் அமைந்திருக்கின்றன. மண்ணிலிருக்கும் மிகச்சிறு அசைவு மேலே வாழும் வாழ்வு அனைத்தையும் சிதறடித்து கலைத்து கொந்தளிக்க வைத்திருக்கிறது.

நான் உக்ரனை கைவீசி அழைத்தேன். என் கையசைவை அவன் உடனே அடையாளம் கண்டு ஓடிவந்தான். நான் அவனிடம் என் கணையாழியை அளித்தேன். "செல்க, உரிய படைவீரர்களை அழைத்துக்கொள்க! இந்தக் கணையாழியைக் காட்டி இது எனது ஆணை என்று என் துணைவியிடம் சொல்க! எனது மைந்தரையும் துணைவியையும் அழைத்துக்கொண்டு துவாரகையைவிட்டுக் கிளம்பி பாலைவனத்தினூடாக கடலுக்குள் சென்று படகு வழியாக சிந்துவுக்குள் புகுந்துகொள்ளுங்கள். அதில் ஏதேனும் இடர் இருந்தால் தேவபாலபுரத்திலேயே தங்கியிருங்கள். இயன்றால் சிந்துவினூடாக பருஷ்ணி வரைக்கும் செல்க!" என்றேன்.

உரக்க "துவாரகையிலிருந்து எத்தனை முடியுமோ அத்தனை கடந்து செல்லவேண்டும். யாதவ நிலத்திலிருந்து எத்தனை அகன்று செல்ல வேண்டுமோ அத்தனை செல்ல வேண்டும்"

என்றேன். உக்ரன் "இளவரசே!" என்றான். "இது என் ஆணை!" என்றேன். அவன் தலைவணங்கினான். அவனிடம் "செல்க!" என்று கையசைத்து ஆணையிட்டுவிட்டு புரவியை திருப்பினேன். சரிந்து நின்றிருந்த கட்டடங்கள் நடுவே சுழன்று இறங்கிய கல்பரப்பப்பட்ட பாதையில் துறைமேடை நோக்கி சென்றேன்.

துறைமேடை அந்நேரத்தில் முற்றிலும் ஒழிந்திருந்தது. அது எதிர்பார்த்திருக்கக்கூடியதே. முறத்தில் பாற்றுகையில் கூலமணிகள் துள்ளித் துள்ளி ஒரு பகுதியில் ஒதுங்குவதுபோல துவாரகையின் மக்கள் துறைமேடையிலிருந்து விலகி எதிர்ப்புறமாக சென்றுவிட்டிருந்தனர். ஏனெனில் அந்த நிலஅதிர்வின் மையம் துவாரகையின் துறைமேடையாக இருந்தது. அதை எவரும் கணித்துச் சொல்லவில்லை. அதை மதிப்பிடுவதற்கான நிலஅறிஞர்கள் ஃபானுவால் அப்போதும் அவைக்கு கூட்டப்பட்டிருக்கவில்லை. ஆனால் அதற்குள் அனைவருக்கும் தெரிந்திருந்தது.

இத்தருணத்தில் பெரும்பாலானவர்கள் துவாரகையின் மறுஎல்லைகளிலேயே இருப்பார்கள் என்று எனக்கு தெரிந்தது. என் துணைவியுடனும் மைந்தருடனும் உக்ரன் கிளம்பிச்செல்வதற்கு அது தடையாக இருக்கலாம். அவர்களின் விரைவு நெரிசலால் மட்டுப்படும். ஆனால் அது உதவியாகவும் இருக்கலாம். ஒருவேளை அவர்களை எவரும் அடையாளம் காணாமலும் இருக்கக்கூடும். காவல்மாடங்களில் எவரும் தடுக்காமல் இருக்கலாம். ஆணை ஓலைகளோ முத்திரை மோதிரங்களோ கேட்கப்படாமலும் இருக்கக்கூடும். அந்தப் பெருந்திரளுடன் அவர்கள் செல்லும்போது ஒருவேளை நகரில்

எவரும் அறியாமலேயே அவர்கள் துவாரகையின் எல்லையை கடந்துவிடக்கூடும்.

நன்று, அவ்வாறு நிகழவேண்டும். தெய்வங்கள் என் குடியை காக்கவேண்டும். பிரத்யும்னனோ பிறரோ என் குடும்பத்தை சிறைவைப்பார்களென்று கணிகர் கூறியதும் என் உள்ளில் ஒரு நடுக்கம் ஏற்பட்டது. ஏனெனில் அது நிகழும் என்று எனக்கு ஓர் ஐயம் முன்னரே இருந்தது. அவர்கள் அங்கு வந்த நாளிலிருந்தே அந்த ஐயம் என்னுள் துளிர்த்துக்கொண்டிருந்தது. ஏனென்றால் அவ்வாறு ஒன்று நிகழவேண்டும் என்பதற்காகவே அவர்கள் அங்கே அனுப்பப்பட்டார்கள் என்று என் அகம் ஏதோ ஒரு புள்ளியில் எண்ணியது.

தந்தையே, துவாரகையில் தாங்கள் அரசுகொண்டு இருக்கையில் கடலறிஞர்களும் நிலஅறிஞர்களும் கட்டடச்சிற்பிகளும் மற்றும் அடிப்படைத் திறனோர் அனைவரும் ஒவ்வொரு நாளும் அவைக்கு வந்துசெல்ல வேண்டும் என நெறி இருந்தது என்பதை நினைவுகூர்ந்தேன். ஒவ்வொரு நாளும அவர்கள் ஏன் வரவேண்டும் என்று எண்ணியிருந்தேன். ஆனால் ஓர் இடர் வரும்போது அறிஞர்கள் இன்றி எதுவும் நிகழாது என்று அப்போது உணர்ந்தேன். இடர் வரும்போது அவர்களை சென்று கண்டுபிடிப்பதுதான் முதன்மையான சிக்கல்.

துவாரகையில் என்ன நிகழ்ந்திருக்கிறது, என்ன நிகழக்கூடும் என்று அறிந்த ஒரு அறிஞர்கூட அப்போது இல்லை. அவர்கள் துவாரகை முழுக்க கொந்தளித்துக் கொண்டிருந்த மக்கள் திரளுக்குள் முற்றாக மறைந்துவிட்டிருக்கிறார்கள், அவர்களை தேடிக் கண்டடைவதற்கான எந்த அமைப்பும் இல்லை. அப்போது அறிந்தேன், சிறியவர்கள் ஒருபோதும் பெருநகர்களை ஆளமுடியாது. கூடவே ஒன்றை உணர்ந்தேன், துவாரகையை

ஆளும் தகுதி எனக்கும் இல்லை, இத்தகைய இடர்நிலை ஒன்றை நான் ஒருகணம்கூட முன்னர் உணர்ந்ததில்லை.

எனில் என்ன செய்யவிருக்கிறேன்? இந்நகரை இரண்டாக உடைத்து பிளக்கப்போகிறேன்! ஆம், எவ்வண்ணமேனும் அது பிளக்கும். அதை நானே இயற்றுவது முறை. இந்நகர் இனி வாழாது. இத்தனை பெரிய விரிசலுடன் இது இங்கு நீடிக்க இயலாது. இதன் யுகம் முடிந்துவிட்டது. என்று தந்தை இங்கிருந்து கிளம்பிச்சென்றாரோ அப்போதே இது அழியத்தொடங்கிவிட்டது. இது அவருடைய நகரம். அவரில்லாது இது வாழாது.

முற்றழிவு நிகழட்டும். யாதவர்கள் கிளம்பி தங்கள் தொல்நிலங்களுக்கு செல்லட்டும். அவர்களால் கையாள உகந்த சிறிய நிலங்களில் சிறிய அரசுகளை உருவாக்கிக்கொள்ளட்டும். நானும் செல்கிறேன். எனக்கென ஒரு சிறு நிலத்தையும் அரசையும் உருவாக்கிக்கொள்வேன். அங்கு என் மைந்தருடன் குடியேறுவேன். துவாரகை போன்ற பேரரசுகளை விழைந்ததுதான் நான் செய்த தவறு. எனக்கு சிறு நிலம் போதும். ஒருநாள் ஒரு பசு மேயும் நிலம் போதும். அதற்குள் என் மைந்தருடன் வாழ்வேன். என் கொடிவழிகள் அங்கு வாழட்டும். நான் விரும்புவது அது மட்டுமே. தெய்வங்களிடம் நான் கோருவதற்கு அது மட்டுமே உள்ளது.

எனது புரவி கற்பாளங்கள் பதிக்கப்பட்ட பாதையில் குளம்புத் தாளத்துடன் கீழிறங்கி கீழிறங்கி சென்றது. அது

திமிறிக்கொண்டே இருப்பதை உணர்ந்தேன். முன்செல்ல விரும்பாததுபோல. நான் என் குதிமுள்ளால் அதை குத்திக் குத்தி செலுத்தினேன். பலமுறை அது நின்று பின்னடி வைத்து கனைத்தது. செருக்கடித்து செவி பின்விலக்கி விழியுருட்டி நீள்மூச்செறிந்தது. அது எதையோ அஞ்சுகிறது, எதை என்று தெரியவில்லை. கண்முன் வெறுமையே திகழ்ந்தது. ஒருவேளை அந்த இடத்தின் வெறுமையை அது அஞ்சுகிறது போலும்.

துறைமேடை தொலைவில் கடலுக்குள் நகரின் ஒரு கை நீட்சியெனத் தெரிந்தது. கடல் மிகமிக உள்வாங்கியிருந்தது. துறைமேடைக்கு இரு பக்கமும் அலைநுரை நிறைந்திருக்கும் இடமெல்லாம் கரிய ஈரப்பாறைகள் நிறைந்திருந்தன. கடல் உள்வாங்கிய நிலம் முழுக்க கரிய சேறும் சிப்பிகளும் பாறைகளும் தெரிந்தன. கடல் உள்வாங்கி மிகுதிநேரம் ஆகவில்லை. பல பாறைகள் ஈரம் காயாமல் விலாவில் அலைநுரை அடையாளங்களுடன் இருந்தன. சிறுகுழிகளில் நீர் நலுங்கியது.

வழக்கமாக துறைமேடையைச் சுற்றி வானின் வெண்ணுரைபோல கடற்பறவைகள் செறிந்திருக்கும். பல்லாயிரம் பல லட்சம். கோடி என்றுகூட தோன்றும். அவற்றின் எச்சம் விழுந்து கரையோரப் பாறைகள் வெண்மையாக மாறிவிட்டிருக்கும். அப்போது ஒரு பறவைகூட இல்லை. ஒரு சிறகசைவுகூட தென்படவில்லை. முற்றாகவே அகன்றுவிட்டிருந்தன. அவை எங்கே சென்றுவிட்டன என்ற வியப்பு என்னுடன் வந்தது. அங்கே வானிலும் ஏதோ நிகழ்ந்திருக்கிறது.

துறைமேடைக்கு அப்பால் தொடுமுனையில் தனியாக நின்றிருந்த பீதர் பெருங்கலம் மிகமிக மெல்ல அசைந்த நீர்ப்பரப்பின் மேல் மெல்ல ஆடிக்கொண்டிருந்தது. நெளியும் நீலத் திரைச்சீலைமேல் ஒரு சிறு செப்புபோல. நான் கீழிறங்கிச் சென்று முதல் காவல்மாடத்தை அடைந்தேன். அங்கிருந்த காவலர்கள் என்னை நோக்கி வந்து "ஆணை என்ன, இளவரசே?" என்றனர். அவர்கள் ஏதேனும் ஆணை வரும் என எதிர்பார்த்திருந்தனர். அந்த இடத்தை கைவிட்டு விலகிச்செல்லும் விழைவு கொண்டிருந்தனர்.

நான் இறங்கியதுமே என் புரவி கனைத்தபடி திரும்பி குளம்புகள் தாளமிட கற்பரப்பில் ஓடி அகன்றது. வீரர்கள் திகைப்புடன் அதை நோக்கினர். காவலர்தலைவன் "இங்குள்ள அத்தனை புரவிகளும் அறுத்துக்கொண்டு சென்றுவிட்டன. கொடிது ஒன்று நிகழும் என இங்குள்ள மாலுமிகள் அஞ்சுகிறார்கள். பெரும்பாலானவர்கள் தாங்களும் விலகி ஓடிவிட்டனர். நாங்கள் ஆணைக்காக காத்திருந்தோம்" என்றான்.

நான் ஃபானுவின் முத்திரை மோதிரத்தைக் காட்டி "இது அரசரின் ஆணை. உடனடியாக என்னுடன் படைக்கலம் ஏந்திய வீரர்கள் இருநூற்றுவர் அணிகொண்டு வரவேண்டும்" என்றேன். காவலர்தலைவன் "இங்கு அவ்வளவு பேர்தான் மொத்தமாக இருப்பார்கள்" என்றான். "அத்தனை பேரும் வருக!" என்றேன். அவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டனர்.

தலைவன் முடிவெடுத்து தன் இடையிலிருந்த கொம்பை எடுத்து ஊதினான். ஆணை ஒலித்ததும் அங்கிருந்த அத்தனை வீரர்களும் திடுக்கிடுவதை கண்டேன். அத்தகைய ஒரு ஆணையை அவர்கள் எதிர்பார்க்கவில்லை. ஆனால் தங்கள் படைக்கலன்களுடனும் கவசங்களுடனும் குறடுகள் ஒலிக்க

ஓடிவந்து பத்துப் பத்து பேராகக் கூடி இருநூறுபேர் கொண்ட சிறுபடையாக மாறினர்.

“தொடர்க!” என்று ஆணையிட்டுவிட்டு நான் பெருநடையில் துறைமேடையை நோக்கி நடந்தேன். துறைமேடையின் முதன்மைக் காவலன் ஐயத்துடன் வந்து என்னை வழிமறித்தான். அவனிடம் என் கணையாழியைக் காட்டி அரசரின் ஆணை என்றேன். “இளவரசே, இங்கிருப்பது பீதர்களின் கலம் மட்டுமே. அதுவும் வெறும் கலம். அவர்கள் மாளவத்திலிருந்து வரும் வழியில் கடலில் ஏதோ அலைமாறுபாட்டை உணர்ந்து ஐயம்கொண்டு அது தெளியும்வரை இங்கு கரை சேர்ந்திருக்கிறார்கள்” என்றான்.

“ஆம், அந்தக் கலத்தை நாம் கைப்பற்ற வேண்டும் என்பது அரசரின் ஆணை” என்றேன். “அது நமது கலம் அல்ல” என்றான் படைத்தலைவன். “நமக்கு இப்போது பெரும்கலமொன்று தேவை. நமது ஆணையில் அக்கலம் இருக்கவேண்டும். இங்கிருக்கும் கலம் அது மட்டும்தான்” என்றேன். அவன் புரியாமல் தலையசைத்தான். நான் முன்னேற அவன் திகைப்புடன் நோக்கி நின்றான். அவன் புரிந்துகொள்ளாமலிருப்பதே நன்று என்று தோன்றியது.

செல்லச் செல்ல கடல் எங்களைச் சூழ்ந்து அசைவற்று நின்றதை கண்டேன். அலைகள் வந்தறைந்து நுரை கொப்பளிக்கும் துறைமேடையின் பாறைவிளிம்புகள் ஈரக்கறையுடன் ஓய்ந்து நின்றிருந்தன. பிளந்த முதலைவாயின் பற்கள்போல அவை தோன்றின. ஒவ்வொன்றும் எதற்காகவோ காத்திருந்தன.

படை துறைமேடை அணைந்து சீர்நடையிட்டு பீதர் பெருங்கலம் நோக்கி சென்றது. நான் அதன் முகப்பில் சென்றேன். அணுக அணுக துறைமேடையின் நீண்ட கற்பாதைக்கு அப்பால் பத்தடுக்கு மாளிகைபோல பீதர்கலத்தின் மரக்கட்டமைப்பு எழுந்து நின்றிருப்பதை கண்டேன். அது எத்தனை பெரிய கலம் என்பதை அப்போதுதான் உணர்ந்தேன். மீனெண்ணைப் பிசின் பூசப்பட்ட அதன் விலா எழுந்து எழுந்து கரிய மரத்தாலான கோட்டைபோல் திசையை மூடி இருட்டாக்கிவிட்டதோ என்ற ஐயத்தை எழுப்பியது.

நான் துறைமேடைக்கு வந்து கலங்களை அணுகுவது அரிதாகத்தான். பெருங்கலங்கள் செல்லாத சிறு படகுத்துறைமேடையில் இருந்தே கடலாடச் செல்வேன். கலங்கள் கடலில் இருப்பதாலேயே சிறு பாவைகள் என்று எப்போதும் தோன்றச்செய்கின்றன. துவாரகை கரைக்கு மேல் இரு மலைகளில் அமைந்திருப்பதனால் எப்போதும் மேலிருந்து பார்க்கும் கோணத்திலேயே கடலையும் கலங்களையும் பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

துறைமேடையின் எல்லையை அணுகியதும் நான் படைமுறைமைப்படி கைவீசி ஆணைகளை பிறப்பித்தேன். அதன்படி என்னைத் தொடர்ந்து வந்த இருநூறு பேரும் இரண்டு நிரைகளாக பிரிந்தனர். முகப்பில் வேலேந்தியவர்களும் பின்னிரையில் வாளேந்தியவர்களும் அமைந்தனர். நாகமுத்திரை காட்டி "தொடர்க!" என்று ஆணையிட்ட பிறகு வேங்கை முத்திரைகாட்டி "ஓசையின்றி" என்று அறிவுறுத்தி நான் முன்னால் சென்றேன். என்னைத் தொடர்ந்து வானில் பறக்கும் நாரைக்கூட்டமென விசைகொண்டு வந்தது துவாரகையின் சிறுபடை.

எங்கள் வருகையையும் அவ்விசையையும் பீதர்கலத்தில் இருந்தவர்கள் உணரவில்லை. நான் பீதர்கலத்தின் திறந்திருந்த வாயிலை அடைந்து கலத்திற்கும் துறைமேடைக்கும் நடுவே போடப்பட்டிருந்த மரப்பாலத்தினூடாக குறடுகள் ஓசையிட்டு முழங்க கலத்திற்குள் நுழைந்தேன். உள்ளே இருந்த பீதர்கள் வெளிவந்து தலைவணங்கி முகமன் உரைப்பதற்குள்ளாகவே அவர்களை வெட்டி வீழ்த்தினேன். "கொல்லுங்கள்! அனைத்து பீதர்களையும் கொல்லுங்கள்! கலமாலுமிகள் மட்டும் எஞ்சட்டும்!" என்று ஆணையிட்டேன்.

அங்கிருந்த காவலர்கள் எங்களை நோக்கி வருவதற்குள்ளாகவே பெரும்பாலானவர்களை கொன்றுவிட்டோம். அவர்கள் எவரும் படைக்கலம் எடுத்திருக்கவில்லை. கவசங்களோ ஆடைகளோ அணிந்திருக்கவும் இல்லை. ஓய்வு எடுத்துக்கொண்டும் மது அருந்தி படுத்துக்கொண்டும் இருந்தார்கள். அக்கலத்திற்குள்ளே ஐநூறுக்கும் மேற்பட்ட பீதர்கள் இருந்தார்கள். அத்தனை பேருக்கும் இடமளிக்கும் ஒரு பெரும் மாளிகை அல்லது ஒரு சிறு நகரம் அது என்று அப்போதுதான் எனக்கு தெரிந்தது.

அனைத்து அறைகளிலும் ஓடி ஒளிந்திருந்தவர்களை கொன்றோம். படையுதவி கேட்டு கொம்போசை எழுப்பிய ஒரு மாலுமியை நானே ஓடிச்சென்று வெட்டிக்கொன்றேன். கொம்பொலி எழுந்து துவாரகையை நோக்கி அலைகொண்டது. அது உதவி கோரும் விலங்கொன்றின் ஓசை. ஆனால் துவாரகையில் அதை கேட்பதற்கு எவருமில்லை என்று அறிந்திருந்தேன். மாலுமிகளில் ஒருவன் உரத்த குரலில் "என்ன செய்கிறீர்கள்? எதன்பொருட்டு இதை கைப்பற்றுகிறீர்கள்?" என்றான். "இதற்குள் ஒன்றுமில்லை. செல்வம் என

ஒன்றுமில்லை.” இன்னொருவன் “இக்கலத்தை நீங்கள் ஆளமுடியாது. இது எங்கள் நாட்டு மாலுமிகளால் மட்டுமே ஆளக்கூடிய கலம். இதனால் உங்களுக்கு எந்தப் பயனும் இல்லை” என்றான்.

“இது எனக்கு தேவை” என்று நான் சொன்னேன். கை வெட்டுண்டு கிடந்த முதிய பீதன் “இது வெறும் கலம். மாளவத்திலிருந்து தேவபாலபுரம் நோக்கி சென்றுகொண்டிருந்தோம். கடலுக்குள் மீன்கள் நிலையழிவதை கண்டோம். இதுவரை பார்த்திராத பெருமீன்கள் ஆழ்கடலிலிருந்து மேலே வந்து துடித்தன. அரிதென்று எதுவோ நிகழப்போகிறது என்று உணர்ந்து கரையணைந்தோம். தங்கள் தந்தையின் காலத்திலிருந்து காக்கப்படுபவர்கள் நாங்கள். கடலோடிகளின் மேல் எந்த நகரமும் கைவைப்பதில்லை. பிறகு அவர்கள் அங்கு வாழமுடியாது” என்றான். “இந்நகர் இனி வாழ விரும்பவில்லை” என்று நான் சொன்னேன். “அறிவின்மை! இது முற்றாக அறிவின்மை! இந்தக் கலம் உங்களுக்கு எவ்வகையிலும் பயன்படாது” என்று அவன் சொல்லிக்கொண்டிருக்கும்போதே வாளை உருவி அவன் கழுத்தை வெட்டினேன்.

விரைவிலேயே முழுக் கலத்தையும் எங்கள் ஆளுகைக்கு கொண்டு வந்தேன். “பாய்களை விரியுங்கள்!” என்று ஆணையிட்டேன். பாய்களை விரிக்கும் நுட்பம் தெரிந்த பீதர்களை மட்டும் பிடித்துக்கொண்டு வந்து அதற்கான பொறிகளை இயக்கச்செய்தேன். ஒன்று தொட்டு ஒன்றென அனல்போல் பெருகுவதாக அமைந்திருந்தன அந்தப் பாய்கள். கைகளால் கயிறுகளை இழுத்து விரிய வைக்கவேண்டிய மூன்று ஆள் உயரமான சிறிய பாய்கள் நூற்றுக்கும் மேல்

இருந்தன. சகடங்களை இழுத்து அவற்றை விரித்தோம். அவை மாபெரும் பருந்துகள் வானிலெழ முற்படுபவைபோல ஓசையுடன் விரிந்து விரிந்து பரவின.

அந்தப் பாய்கள் காற்றில் புடைத்து எழுந்த உடனே அவற்றின் இழுவிசையைப் பயன்படுத்தி உள்ளிருக்கும் பற்சகடங்களை இயக்கி இன்னும் பெரிய பாய்களை இழுத்து மேலேற்றினார்கள். அந்தப் பாய்களின் இழுவிசையைப் பயன்படுத்தி மேலும் பெரிய பற்சகடங்களை இயக்கி மாபெரும் பாய்களை இயக்கினார்கள். அப்பாய்களின் தெறிக்கும் இழுவிசையை சகடங்களுக்கு அனுப்பி அவர்கள் எழுப்பிய பாய் துவாரகையின் ஒரு மாளிகையை உள்ளே வைக்கும் அளவுக்கு பெரிதாக இருந்தது. அனைத்து பாய்களும் மேலெழுந்ததுமே கீழிருக்கும் நங்கூரங்களை இழுத்தபடி கலம் துள்ளத்தொடங்கியது.

“நங்கூரங்களை அறுத்து வீசுங்கள்!” என்றேன். “அறுக்கவா?” என்று ஒருவன் கேட்டான். “ஒவ்வொன்றையும் இழுத்து மேலெடுப்பதற்கு ஒரு நாளாகும். நமக்கு பொழுதில்லை. அனைத்து நங்கூரங்களையும் அறுத்துவிடுங்கள்” என்று சொன்னேன். “நம்மால் இந்தக் கலத்தை நிறுத்த முடியாமல் போகும்” என்று ஒருவன் சொன்னான். “அறுத்துவிடுங்கள்” என்று நான் மீண்டும் சொன்னேன். “இது அரசாணை... செல்க! நங்கூரங்களை அறுத்திடுக!”

அவர்கள் தயங்கியபடி அனைத்து நங்கூரங்களையும் அறுத்தனர். ஒவ்வொரு நங்கூரம் அறுபட்டு கீழிறங்கும்போதும் கலம் திடுக்கிட்டு சற்றே திரும்பியது. ஒவ்வொரு அசைவினூடாகவும் அது தன் நிலைமாறிக்கொண்டிருந்தது. சங்கிலிகளில் திமிறிக்கொண்டிருக்கும் பெரும் களிறு என

நிலையழிந்திருந்தது. இறுதி மூன்று நங்கூரங்களையும் கலத்தின் இழுவிசையே அறுத்து வீசியது. பாய்கள் புடைத்தெழ கலம் அலைகளில் ஏறி கடலுக்குள் சென்றது.

அப்போதுதான் கரையிலிருந்து கடலை நோக்கி விசையுடன் காற்று வீசிக்கொண்டிருப்பதை நான் உணர்ந்தேன். அது விந்தையாக இருந்தது. அவ்வண்ணம் கரைக்காற்று கடலுக்குள் செல்லும் என்றே நான் எண்ணியிருக்கவில்லை. கலம் சில கணங்களிலேயே துவாரகையை சிறிதாக்கி அகன்று சென்றது. துவாரகையின் இரு குன்றுகளும் தெள்ளத்தெளிவாகத் தெரிந்தன. ஒன்றின்மேல் அந்த மாபெரும் நுழைவாயில் விண்ணுக்கான பாதையென காட்டி நின்றிருந்தது. பிறிதொன்றில் உச்சியில் எழுந்த ஆலயம் தெரிந்தது.

"செல்க!" என்று நான் ஆணையிட்டேன். "மேலும் செல்க! செல்க!" கலத்தின் முகப்பில் நின்று துவாரகையை பார்த்துக்கொண்டிருந்தேன். துவாரகை மிகச் சிறிதாக ஒரு கணையாழி போலாகி என் கண்ணிலிருந்து மறைந்தது. கலத்தின் விரைவு குறைவதை நான் கண்டேன். அது எதிரிலிருந்தும் அதே அளவு விசைகொண்ட காற்றால் தள்ளப்பட்டதுபோல் சற்றே திரும்பி நிலையழிந்தது. அதன் பாய்கள் அனைத்தும் தொய்வடைந்தன. இழுபட்ட கயிறுகள் வளைந்து தழைந்தன. அவற்றின் இரும்பு வளையங்கள் முனகின.

நான் பார்த்துக்கொண்டிருக்கையிலேயே அத்தனை பாய்களும் புடைப்பை இழந்து துணித்தொங்கல்களாக மாறின. பாய்மர உச்சிகளில் பறந்துகொண்டிருந்த நூற்றுக்கணக்கான கொடிகள் துவண்டு விழுந்தன. அவற்றில் இருந்த மாபெரும் சிம்ம நாகங்களின் முகங்கள் சுளித்து சுருங்கி இல்லாமலாயின.

கலம் அலைகளின் மேல் தள்ளாடியபடி அசைவற்று நின்றது. எதையோ செவிகூர்வதுபோல. சுற்றிலும் கடல் பளிங்குக்கல் பரப்பென அசைவிழந்து நின்றது. துள்ளும் சிறு மீன்கள்கூட இல்லை. வானில் ஒரு பறவைகூட இல்லை.

பின்னர் தொலைவில் ஓர் உறுமல் ஓசையை கேட்டேன். பெரும் பாறை ஒன்று புரண்டு எழுந்து வருவதுபோல் உளமயக்கு எழுந்தது. கலத்தின் மேல் நின்றபடி கடலுக்குள் பார்த்தபோது பல்லாயிரம் மீன்கள் நீர்ப்பரப்புக்கு மேலே வந்து நிலையழிந்து சுழல்வதை கண்டேன். அவை ஒன்றுடன் ஒன்று தொடுத்துக்கொண்டு ஒற்றைப்படலமென்றாகி சுழித்தன. பெரிய வெள்ளித் துணி ஒன்றை எவரோ பற்றி இழுத்து சுழற்றிக்கொள்வதுபோல தோன்றியது. ஒருபோதும் மீன்களை நான் அவ்வாறு பார்த்ததில்லை.

ஏதோ ஓசை கேட்டு திரும்பிப்பார்த்தேன். என் அருகே இருந்த அனைத்து கொடிகளும் உர்ர்ர்ர்ர் என்ற ஓசையுடன் வண்டுச்சிறகுகள்போல துடிதுடித்தன. இத்தனை விசை கொண்ட காற்றா? நான் திரும்பிப்பார்க்கையில் என் அருகே தொய்ந்து நின்ற பாய் ஊதப்பட்டதுபோல் உப்பி எழுந்து புடைத்த வயிறென ஆயிற்று. பலநூறு பெரும்பறவைகள் சிறகுகள் விரித்தெழுந்ததுபோல அத்தனை பாய்களும் புடைத்து மேலெழுந்தன. பெரும்பாய் தலைக்கு மேல் ஒரு செந்நிற முகிலென புடைத்து மேலெழுந்தது.

கலம் திடுக்கிட்டு அலைவுகொண்டது. பின்னிருந்து மாபெரும் கால் ஒன்றால் எற்றி வீசப்பட்டதுபோல விசைகொண்டது. அஞ்சிய புரவியென அலைகளின்மேல் பாய்ந்தது. அலைகளிலிருந்து அலைகளுக்கென எழுந்து அம்பெனப் பாய்ந்து சென்றது. நான் கண்மூடி நின்றிருந்தேன். கலத்தில்

இருந்தவர்களின் அலறல்களையும் பொருட்கள் உருண்டு விழும் ஓசைகளையும் கேட்டேன். அத்தனை கயிறுகளும் இழுபட்டு பேரியாழ் நரம்புகள் என மீட்டப்பட்டு அதிர்ந்தன. அத்தனை மரப்பலகைகளும் தூண்களும் காற்றைக் கிழித்து முழக்கமிட்டன.

முழு விசையுடன் பாய்ந்து சென்ற கலம் விண்ணிலிருந்து எவரோ சுழற்றி அடித்த இரும்புக்கூடமென துவாரகையின் துறைமேடையைச் சென்று அறைந்து அதன் கற்பரப்புகளை உடைத்து மாடங்களின் கற்தூண்கள் செதில்களாகச் சிதறி அழிய நொறுக்கியபடி உள்ளே நுழைந்தது. அந்த அதிர்வில் தொலைவில் துவாரகையின் மாளிகைகள் அனைத்தும் உடைந்து உடைந்து சரிவதை நான் கண்டேன். அவை ஒன்று விழுந்து பிறிதொன்றை உடைத்தன. உடைந்த கற்பாளங்கள் சரிந்து சரிந்து கீழிறங்கின. அதிர்ந்து உலைந்த கலத்தின் முகப்பில் நின்றபடி நான் பிறந்து வளர்ந்த அப்பெருநகரம் தன்னத்தானே நொறுக்கிக்கொண்டிருப்பதை கண்டேன்.

# கல்பொருசிறுநுரை - 52

**பகுதி நான்கு : அலைமீள்கை – 35**

பீதர் நாட்டு மரக்கலம் மிகப் பெரியது. அது தன் கூர்முகப்பை துவாரகையின் துறைமேடையில் சென்று அறையும் பொருட்டு விசைகொண்டு எழுந்து சென்றது. மாபெரும் புரவி ஒன்று தாவித்தாவி ஓட அதன் முதுகின்மேல்

சிற்றெறும்புபோல நின்றிருப்பதாக உணர்ந்தேன். என்ன நிகழ்கிறது என்பதை முன்னரே உணர்ந்து நான் என் காலணிகளையும் கவச உடைகளையும் கழற்றி வீசிவிட்டு மரக்கலத்தின் பின்புறம் நோக்கி ஓடினேன். காற்றால் தூக்கப்பட்டு முழு விசை கொண்டிருந்த கலம் சற்றே முன்புறம் மேலெழுந்திருந்தமையால் நான் பின்புறம் நோக்கி விழுந்தேன்.

ஆனால் காற்றில் எழுந்து பறந்து செல்வதாகவே எனக்கு தோன்றியது. ஓசையில்லாமல் மிதந்து சென்று மரக்கலத்தின் பின்புறம் இருந்த பலகைப்பரப்பில் அறைபட்டு கீழே உதிர்ந்து எழுந்தேன். என்னைச் சூழ்ந்து சிறுவண்டுகள்போல எனது படைவீரர்கள் வந்து பொழிந்தனர். பலர் அச்சத்துடன் அலறிக்கொண்டிருந்தனர். என் மேல் சிலர் விழுந்தனர். குவிந்தவர்களால் மேலும் விழுந்தவர்கள் அடிபடாமல் தப்பினர். அலறல்களும் கூச்சல்களும் எழுந்திருக்கலாம். ஆனால் காற்றின் ஓசையில் எதுவும் காதில் விழவில்லை. அனைவரும் சிலைகளைப்போல திகைத்து விழித்த முகமும் திறந்த வாய்களும் கொண்டிருந்தனர்.

புரண்டெழுந்தவர்கள் ஓடிச்சென்று மரக்கலத்தின் விளிம்பைப் பற்றி ஏறி அப்பால் கடலில் குதித்தனர். அது சாவுக்குச் செல்வதென்பதை நான் அறிந்திருந்தேன். அப்பெரும் மரக்கலம் உடைந்து மூழ்கத்தொடங்கும்போது நீரை சற்றே விலக்கி விரிவட்டநிரையை உருவாக்கும். அதை நம்பலாகாது. கலம் மூழ்கியதுமே விரிவட்டம் பலமடங்கு விசையுடன் சுருங்கும். அது திறந்த வாய் மூடுவதுதான். அடங்காப் பசி கொண்டது ஆழி. அதன் வயிறு காலப் பெரும்பிலம். விசையுடன்

உள்ளிழுக்கும் அப்பெரும் சுழியிலிருந்து நீந்துபவர்கள் எவரும் தப்ப இயலாது.

மரக்கலம் உடைந்து மூழ்கத் தொடங்குகையில் சிறிய விசைப்படகொன்றை எடுத்துக்கொண்டு உரிய முறையில் நீர்ச்சுழிகளை கணித்து கடலில் இறங்கி பாய்விரித்து அகன்று செல்பவர்கள் மட்டுமே தப்ப முடியும். ஆனால் படைவீரர்களில் பெரும்பகுதியினர் அவ்வாறே குதித்து கடலில் மாய்வார்கள் எனில் எஞ்சியவர்கள் படகை எடுத்துக்கொண்டு தப்புவது எளிதாக இருக்கும் என்று நான் எண்ணினேன். அவர்கள் சிற்றுயிர்கள். எவ்வண்ணமேனும் சாகப்போகிறவர்கள். ஆழிச்சாவு போர்ச்சாவைவிட இனியது. ஆழம் இனியது.

நான் விழுந்த இடத்திலிருந்த மரச்சட்டம் ஒன்றை இறுகப்பற்றியபடி, கலத்தின் ஊசலாட்டத்தில் என் உடலை நிலைநிறுத்திக்கொண்டு சூழ நிகழ்வதை பார்த்துக்கொண்டிருந்தேன். ஓரிருவர் கடலில் குதித்து நீந்தத் தொடங்கியதுமே மற்றவர்களும் ஓடிச்சென்று கடலில் பாயத் தொடங்கினர். எவரும் எதையும் எண்ணவில்லை. அத்தருணத்தில் மந்தை விலங்குகள் என்று மானுடர் மாறிவிடுகிறார்கள். எண்ணத்தால் அல்ல உடலாலேயே முடிவுகள் எடுக்கப்பட்டுவிடுகின்றன. சில கணங்களிலேயே என்னைச் சூழ்ந்திருந்தவர்களில் பெரும்பாலானவர்கள் கடலில் பாய்ந்துவிட்டார்கள்.

அப்போது மரக்கலத்தின் முகப்பு துவாரகையின் படித்துறைமேல் அறைந்த ஓசை வானில் இடித்தொடர்கள் என எழுந்தது. நொறுங்கல் ஓசை. அது பல்லாயிரம் கற்பரப்புகள், மரப்பரப்புகள் உடைபடும் ஓசைகளின் தொகுதி. வானம் பிளவுபடுகையில் அவ்வோசை எழக்கூடும். அல்லது இது

வானுக்கு ஒரு சிறு முட்டை ஓடு நெரிபடும் ஓசைமட்டுமே. அந்த ஓசை ஏன் அத்தனை ஆழமானதாக இருக்கிறது? எவ்வெவ்வகையிலோ அந்த ஓசையை நாம் கேட்டுக்கொண்டிருக்கிறோம். மானுடர் தவறவேவிடாத ஓசைகளில் ஒன்று நொறுங்கலோசை.

என்னைச் சூழ்ந்திருந்த அனைத்தும் அதிர்ந்தன. மேலிருந்து ஒரு பாய்மரம் பாயை கட்டிய பெருந்தூணுடன் முறிந்து சரிந்து என் தலைக்குமேல் வந்து அங்கிருந்த மரத்தாலான அறையடுக்குகள் மேல் விழுந்து நொறுங்கி அசைவிழந்தது. அதிலிருந்து பாய் என் தலைக்குமேல் வந்து பொழிந்து அலையலையாக வளைந்து வானம் இறங்கியதுபோல் ஆகி தொங்கி நின்றது. அது நன்று என்று எனக்கு தோன்றியது. அதற்குமேல் விழும் அனைத்தையும் அது தாங்கிக்கொள்ளும். மீண்டும் ஒரு முறிவோசை. நான் பிரித்தறிய முடியாத பேரொலிகளின் நிரை. கண்ணை மூடி அம்மரக்கலம் துறைமேடையை அறைந்த ஒரு கணத்தை நான் பார்த்ததை மீண்டும் ஓட்டிக்கொண்டேன். ஒருகணம் மட்டும்தான் அது. ஆனால் அத்துறைமேடை நொறுங்கி கற்கள் உடைந்து மரக்கலம் உள்ளே நுழைவதை என்னால் காண முடிந்தது.

துவாரகையின் இரு பெரும் குன்றுகளில் எழுந்த அதிர்வை என் கைவிரல்களில் அறிந்தேன். ஒவ்வொரு கட்டடமும் நிலைகுலைந்து சரியத் தொடங்கியதை என் அகத்தே கண்டேன். அதன்பெரும் நுழைவாயில் சற்றே அசைந்து ஒருபுறமாக சரிந்தது. அங்கு கண் மூடி அமர்ந்து அந்நுழைவாயில் வலப்பக்கமாக உடைந்து விழுவதை நேரிலெனக் கண்டேன். என் மேல் மரக்கலத்தின் பாய்மரத்தூண்கள், கூரைப்பலகைகள் ஒன்றன் மேல் ஒன்றென

விழுந்துகொண்டே இருந்தன. ஒன்று விழ அதனிடையில் பிறிதொன்று முறிய இடியோசைகளும் முறியும் ஓசைகளும் தொடர்ந்து எழுந்தன. என் மீது விழுந்த முதல் பெரும் தூண் முறிந்து மேலும் சரிந்தது. ஒருகணம் என்னுள் அகம் திகைத்து அது என்னை அழுத்திவிடக்கூடும் என்று தோன்றியது.

நான் பின்னர் புன்னகையுடன் மரக்கலத்தின் அளவிற்கு நான் எத்தனை சிறியவன் என்று எண்ணிக்கொண்டேன். ஒரு சிற்றெறும்புபோல. அதன் பெரும் தூண்களும் பாய்களும் பலகைகளும் என்னை அறிந்திருக்கவே வாய்ப்பில்லை. முழந்தாளிட்டு தவழ்ந்து எழுந்து முறிந்து சரிந்து கிடந்த படிகளினூடாக சென்றேன். இன்னொரு பெரும் முறிவோசை. மரக்கலம் திடுக்கிட்டது. அதன் தீப உடல் நேர் பாதியாக உடைந்து பின்பகுதி பின்பக்கமாக சாய்ந்தது. ஆகவே நான் எவ்வகையிலும் முன்னகர முடியவில்லை. என் தலைக்கு மேலென உடைந்த மரச்சிம்புகள் நிறைந்திருந்தன. அதில் எதில் தொற்றி ஏறினாலும் தொங்கிக்கிடக்கும் உணர்வையே அடைந்தேன்.

அம்மரக்கலத்தின் அமைப்பை என் உள்ளத்தில் கொண்டுவந்து என்ன நிகழ்கிறது என்று புரிந்துகொண்டேன். அது இரண்டாக பிளந்து பிளந்தபோதிருந்த சிம்புகள் அனைத்தும் கீழே வந்து படிந்து எடைகொண்டு அதன் பின்பகுதி கூர்முனை நீரில் அமிழ்ந்துகொண்டிருக்கிறது. அது கூரென்பதனாலேயே நீரை விலக்கும். எடையென்பதனாலேயே விரைந்து உள்ளே செல்லும். இன்னும் அரைநாழிகை நேரம்கூட அது நீர் மேல் இருக்க வாய்ப்பில்லை. பலகைகளையும் தூண்களையும் பற்றிக்கொண்டு தொங்கி ஆடிச் சென்றுகொண்டிருந்தேன்.

ஓரிருவர் மட்டுமே அங்கு எஞ்சியிருந்தனர். அவர்களும் வெவ்வேறு இடிபாடுகளுக்குள் சிக்கிக்கொண்டிருந்தனர். ஒருவன் "இளவரசே..." என்றபடி என்னை தொட வந்தான். அவன் தோளில் அடிபட்டிருந்தது. அவனை நான் துணை கூட்ட இயலாது. "இளவரசே! இளவரசே!" என்று சொன்னபடி கைநீட்டி என்னை நோக்கி வந்தான். என் உடைவாளை உருவி அவன் கழுத்தை வெட்டினேன். என்னை நோக்கி எழவிருந்த இன்னொருவன் அதைக் கண்டு திகைத்து அசையாமல் அங்கேயே அமர்ந்திருந்தான். குருதி சொட்டிய உடைவாளை ஆடையில் துடைத்தபடி நான் மேலும் நுழைந்து சென்றேன்.

முன்பு நான் சென்ற படிகள், நான் அறிந்த அறைகள் ஒவ்வொன்றும் இடம் மாறியிருந்தன. படிகள் கூரையிலிருந்து தலைகீழாகத் தொங்கின. பொருட்கள் அனைத்தும் மிக ஆழத்தில் கிணற்றுக்குள் என விழுந்துகொண்டிருந்தன. ஆழத்தில் குவிந்து கிடந்த உடைவுகள் மேல் மேலும் மேலும் உடைந்த பலகைப்பொருட்கள் சென்று விழுந்துகொண்டிருந்தன. நான் சரிந்து கிடந்த ஒரு தூணினூடாகச் சென்று பாயொன்றைப் பற்றி முன்னகர்ந்தேன்.

பெருங்கலத்தின் விலாவில் படகு பொருத்தி கட்டப்பட்டிருக்கும், அன்னைச் சிலந்தி மேல் குஞ்சுகள்போல. அம்மரக்கலத்திலேயே ஐநூறு சிறுபடகுகள் இணைக்கப்பட்டிருக்கும். மரக்கலம் எவ்வகையிலேனும் பழுதடையுமெனில் அதிலுள்ள முழுப் படைவீரர்களும் கிளம்பிச்செல்லும் அளவுக்கு பெரியவை அவை. மென்மரத்தாலானவை. எனவே எப்புயலிலும் மூழ்காதவை. மூழ்கினாலும் மிதக்கும் தன்மைகொண்டவை. வடத்தில்

தொங்கி இறங்கி என் கையிலிருந்த வாளால் அவற்றைக் கட்டியிருந்த கயிறுகளை வெட்டினேன்.

ஒரு படகு சரிந்து ஒற்றைக் கயிறில் தொங்கியது. தொற்றி அதிலேறி அமர்ந்த பின் அதன் இறுதிக் கயிறை வெட்டினேன். படகு சரிந்து, பின்னர் காற்றில் நெற்று உதிர்வதுபோல் கீழே மிக ஆழத்தில் நீல அலைகொண்டிருந்த கடலை நோக்கி சென்று, நீரில் அறைந்து அசைவிழந்து, பின்பு அலைகளில் மேலெழுந்து தன் அலைவில் தானே சற்று சுழன்றது. நான் அதன் குறுக்குச்சட்டத்தை இறுகப் பற்றியிருந்ததனால் அவ்விசையில் தூக்கி வீசப்படாமல் இருந்தேன்.

என்னை நிலைநிறுத்திக்கொண்டதும் அதன் விளிம்பில் பொருத்தப்பட்டிருந்த துடுப்புகளை உருவி இரு பக்கமும் வளையங்களில் பொருத்தி நீட்டினேன். எழுந்து காலால் மரக்கலத்தை உந்தி அதிலிருந்து விலக்கி துடுப்பால் பிறிதொருபுறம் தள்ளி மேலும் விலக்கி வெறிகொண்டு துழாவத் தொடங்கினேன். அதில் பாய்மரம் இல்லை என்று முதலில் தோன்றியது. பின்னர் பாய்மரம் அதில் ஒன்றுள் ஒன்று என செருகப்பட்ட மூங்கில்களாக படிந்திருப்பதை கண்டேன். அருகிலிருந்த கயிற்றை இழுத்தபோது பாய்மரம் பாயுடன் மேலெழுந்தது. அக்கணமே பாய் காற்றை ஏற்று உப்பியது. சுக்கானை இழுத்து பாயை உரிய முறையில் திருப்பி காற்றை எனக்கு உகந்த திசையில் விசை அளிப்பதாக ஆக்கினேன்.

மூழ்கிக்கொண்டிருந்த மரக்கலத்தில் இருந்தெழுந்த அலையும் எனக்கு விலகிச்செல்ல உதவியது. எழுந்து பின் அமைந்து மீண்டும் அலைகளில் விழுந்து மீண்டும் ஆழ அமிழ்ந்து சென்றுகொண்டிருந்தேன். அத்தருணத்தில் துவாரகை நோக்கி

செல்லலாகாது என்று அறிந்திருந்தேன். துவாரகைக்கு மரக்கலங்களை அள்ளிக் கொண்டு வரும் கடல் நீரோட்டம் அது. ஆறெனக் கொண்டால் நூறு சிந்துவுக்கு நிகரானது. அது துவாரகையின் துறைமேடையால் தடுக்கப்பட்டு வளைத்து மறுபுறம் செல்லும் நீரோட்டமாக மாற்றப்பட்டிருந்தது. அதிலேறியே பெரும்மரக்கலங்கள் கடலுக்குள் செல்வது வழக்கம்.

அந்த நீரோட்டத்தை நான் அடைந்துவிட்டேன் எனில் பீதர் மரக்கலம் மூழ்கும்போது நான் அதிலிருந்து தப்பிவிடுவேன். நான் கண்ணை மூடிக்கொண்டு பிறிதொரு எண்ணமின்றி கைகள் மட்டுமே சித்தமென செயல்பட துழாவிக்கொண்டிருந்தேன். பின்னர் நெடும்பொழுது ஆயிற்றோ என்று திரும்பிப் பார்த்தபோது அப்பால் உடைந்த மரக்கலத்தின் ஒரு பாதி மெல்ல அமிழ்ந்துகொண்டிருப்பதையே கண்டேன். அதற்குள் நீர் நிரம்ப உள்ளிருந்து சாளரங்களினூடாகவும் விரிசலினூடாகவும் நீர் பீறிட்டு வெளியேவந்து மீண்டும் கடலில் கொட்டிக்கொண்டிருந்தது.

இன்னும் சற்று பொழுதுதான். அது மூழ்கத்தொடங்கிவிட்ட பின்னர் எழும் சுழலிலிருந்து எவரும் தப்ப முடியாது. அப்பகுதியெங்கும் நீரில் பாய்ந்தவர்கள் வெவ்வேறு மரக்கட்டைகளையும் பலகைகளையும் பற்றிக்கொண்டு நீந்திக்கொண்டிருந்தார்கள். அவர்கள் அனைவரையும் உண்ணப்போகும் வாய் இன்னும் சற்று நேரத்தில் திறக்கும். ஆழத்தின் வாய். நீலநிறமான வாய். ஆயிரம் பல்லாயிரம் ஆண்டுகளாக மரக்கலங்களை இழுத்து உண்டுகொண்டிருக்கும் பெரும்பசி. இப்பெருங்கலத்தையும் அள்ளி தன்னுள் வைத்திருக்கும்.

நான் உந்தி உந்தி படகை முன்னெடுத்தேன். பிறகு என் படகுக்குக் கீழே நீரின் ஓட்டம் செயல்படுவதை பார்த்தேன். அத்தருணத்தில் பிறந்த உவகையை எண்ண எண்ண வியப்படைந்தேன். என்ன நிகழ்கிறதென்றே தெரியாதவை மானுடனின் உணர்வுகள். என்னைச் சுற்றி பித்தெழுந்து ஒவ்வொன்றும் நடந்துகொண்டிருந்தன. நானோ ஒரு சிறு தப்பித்தலுக்காக வெறிக்கூச்சலிடும் அளவுக்கு உவகையை அடைகிறேன்.

என் மைந்தர் எங்கிருக்கிறார்கள் என்று தெரியவில்லை. அவர்கள் மூத்தவர் ஃபானுவால் தேடிப் பிடிக்கப்படுவார்கள் என்று என் உள்ளம் பதைத்துக்கொண்டிருந்தது. அவர்களை பிரத்யும்னனும் பிடிக்கக்கூடும். இங்கிருந்து நான் தப்பினாலும் இந்தப் படகில் தேவபாலபுரம் வரை செல்ல இயலாது. துவாரகையின் வலப்பக்கம் விலகி அமைந்திருக்கும் சிறிய படகுத்துறைமேடைகளில் ஒன்றை அணைந்து அங்கிருந்து புரவியில் ஏறி நகரை விட்டு செல்லவேண்டும். அதற்கான வாய்ப்புகள் உண்டா என்றே தெரியவில்லை. ஆயினும் தப்பிவிட்டேன் என்ற உணர்வில் என் உடலெங்கும் திளைப்பு ஏறியது.

கூச்சலிட்டு நகைத்தபடி துடுப்பை போட்டேன். நீரோட்டம் என்னை அள்ளிக்கொண்டதும் படகிலிருந்து கையை எடுத்து துடுப்பை மடிமேல் பிடித்தபடி மல்லாந்து அமர்ந்து கண்மூடி மூச்சுவாங்கத் தொடங்கினேன். என் காதுகளில் காற்று கிழிபட்டோடுவதை உணர்ந்தேன். நீரோட்டம் என் படகை தூண்டிலால் சுண்டி இழுத்து பறக்க வைத்தது. பாய் புடைத்து கிழிபடும்போல் தோன்றியது. கரை உருக்கி நீட்டப்பட்டதுபோல் உருவழிந்த மண்கோடாக அப்பால் தெரிந்தது.

பின்னர் பெருமூச்சுடன் தன்னுணர்வடைந்து எழுந்தமர்ந்து திரும்பிப் பார்த்தபோது பீதர் நாட்டுக் கலம் அங்கில்லை என்பதை கண்டேன். அங்கு மாபெரும் நீர்ச்சுழிப்பொன்று இருந்தது. சுற்றி மிதந்துகொண்டிருந்த அனைத்துப் பொருட்களையும் இழுத்து சரடென்றாக்கி சுருட்டி மையப்புள்ளிக்குள் கொண்டுசென்று கொண்டிருந்ததது. மேலே துவாரகையின் மாளிகைகள் அனைத்தும் சரிந்து கிடந்தன. அதன் பெருவாயில் அங்கில்லை. அங்கே துவாரகை இல்லை என்பது கண்களை திகைக்கச் செய்யவில்லை. ஏனென்றால் அதை பலமுறை கற்பனையில் நிகழ்த்திவிட்டிருந்தேன்.

என் படகை நீரோட்டம் மிக விலக்கி ஆழ்கடல் நோக்கி கொண்டு சென்றது. உடனே நான் திசை மாறவில்லை எனில் அது மையப்பெருக்குக்கு கொண்டு செல்லும். நீரின்றி உணவின்றி பெருங்கடலில் சிக்கிக்கொண்டால் நான் திரும்பி வர முடியாமலாகும். ஆகவே அந்நீரோட்டத்தை கணித்தேன். பக்கவாட்டில் துடுப்பை போட்டு அப்பெருக்கின் விளிம்பை நோக்கி படகை செலுத்தினேன்.

அதன் விளிம்பை அங்கிருந்து ஒரு பளிங்குக்கோடென பார்க்க முடிந்தது. அதற்கப்பால் நீர் எதிர்திசை நோக்கி சென்றது. அவ்விளிம்பை அடைந்ததும் இரு கைகளாலும் துடுப்பை ஓங்கிக் குத்தி படகை சற்றே துள்ள வைத்து அவ்வெதிர் ஓட்டத்தில் என்னை இணைத்துக்கொண்டேன். அதன் பின்னர் அதிலும் சிக்கிக்கொள்ளாமல் பக்கவாட்டில் துழாவி துவாரகையில் இருந்து எட்டு கல் தொலைவிலிருந்த சிறிய படகுத்துறை ஒன்றை நோக்கி செலுத்தினேன்.

ஆனால் அங்கிருந்த படகுகள் அனைத்தும் கடலில் எழுந்த அலைகளால் கொந்தளித்துக் கொண்டிருப்பதை பார்த்தேன்.

அங்கிருந்து நீர் பெருகி வந்து என்னைக் கடந்து ஆழ்கடலுக்குள் சென்று கொண்டிருந்தது. கடல் உள்வாங்குகிறதா? தன்னைத்தானே உள்ளிழுத்துக்கொள்கிறதா? திரும்பிப் பார்த்தபோது நீல நிறத்தில் பளிங்காலான மலை ஒன்றை கண்டேன்.

அது என்னவென்று எனக்கு புரியவில்லை. திகைத்து அதை பார்த்தபடி அமர்ந்திருந்தேன். அது அசையாமல் அங்கு அவ்வண்ணமே நின்றது. வளைந்து வளைந்து வளைந்து அதன் நீர்ச்சுவர் மேலேறியது. மிகமிக அழகான இளநீல பளிங்குப் பரப்பு. அதன் உச்சியில் வானத்தின் கோடு. எப்போது எழுந்தது அது? ஏன் அங்கு அசையாமல் நிற்கிறது? ஆனால் சில கணங்களுக்குப் பின் அது மிக அணுகி வந்துவிட்டதை உணர்ந்தேன். அவ்வுணர்வை நான் மேலும் அறிவதற்குள் நான் நீர்மலையொன்றின் உச்சியிலிருந்தேன். என் படகுக்குக் கீழே மிக ஆழத்தில் துவாரகையின் படித்துறை தெரிந்தது. தொலைவில் துவாரகையின் இரு குன்றுகளும் மிகச் சிறிதாகத் தெரிந்தன. அங்கு கட்டடங்கள் இடிந்துகொண்டிருப்பதும் மக்களின் குரல்களும் வண்டொலி போன்ற முழக்கமும் கேட்டது.

மறுபடியும் தன்னுணர்வடைந்தபோது என் படகு பறந்ததுபோல் வானிலேயே படித்துறை நோக்கி செல்வதை கண்டேன். பிறிதொரு கணத்தில் நான் துவாரகையின் புறநகர்ப் படித்துறையின் அருகே அமைந்த கல்லால் ஆன கட்டடங்களுக்கு மேல் படகில் பறந்துகொண்டிருந்தேன். என் படகு மரக்கூரையொன்றை சென்று அறைந்தது. அதன் மூக்கு மரப்பலகைகளை உடைத்து உள்ளே இறங்கியது. நான் அதிலிருந்து தெறித்து அப்பால் விழுந்து அக்கூரையிலிருந்து

உருண்டு கீழே சரிந்தேன். என் தலைக்கு மேல் நீராலான பெரும் வளைவொன்று மழையென அறைந்து இறங்கியது. மூச்சை நிறுத்தும் மாபெரும் பொழிவு. ஓர் ஏரி அப்படியே கரையுடைந்து சரிந்து மூடுவதுபோல.

பின்வாங்கும் நீரின் நூறுநூறு காட்டாறுகள் சேர்ந்து என்னைப் பற்றி இழுத்து கொண்டுசெல்ல உயிரின் வெறியுடன் நான் அங்கிருந்த மரம் ஒன்றை ஆரப்பற்றிக்கொண்டேன். மரம் வேருடன் பிழுது கொண்டுசெல்லப்பட்டது. பிறிதொரு மரத்தில் சிக்கி அசைவிழந்தது. பிறிதொரு கணத்தில் நான் எழுந்து நின்றபோது என்னைச் சூழ்ந்திருந்த அனைத்து மாளிகைகளும் இடிபட்டுக் கிடப்பதை பார்த்தேன். அனைத்தின் மேலும் மணல் மூடியிருந்தது. நான் வந்த படகு ஆறு அடுக்குகள் கொண்ட மாளிகையின் தலைக்குமேல் கூரையில் பதிந்திருந்தது. கடலில் நின்றிருந்த அனைத்துப் படகுகளும் கரைக்கு வந்து மணலிலும் கூரைகளிலும் பதிந்து கிடந்தன. உடைசல்களும் சிம்புகளும் பரவியிருந்தன. கற்பாளங்களே தூக்கி வீசப்பட்டிருந்தன.

நான் எழுந்து நின்றபோது என் உடைகளெல்லாம் கிழிந்து கிடப்பதை பார்த்தேன். என் வாய்க்குள் மணல் சென்றிருந்தது. கையால் வயிற்றை அமுக்கி உமிழ்ந்தபோது சீழும் மணலுமாக வெளியே கொட்டியது. மூன்று முறை ஓங்கி தும்மியதும் குருதித் துளிகளுடன் மணலும் வெளிவந்தது. குமட்டிக்குமட்டி வாயுமிழ்ந்தேன். மணல் வந்துகொண்டே இருந்தது. உடலுக்குள் அத்தனை மணல் எப்படி சென்றது? எப்படி என் உடைகளை நீர் கிழித்தது? என்னைச் சூழ்ந்து மானுட உடல்கள். நசுங்கியவை, சிதைந்தவை, உடைந்தவை. பெரும்பாலான உடல்களின் வாய்

முழுக்க மணல் நிறைந்திருந்தது. சில உடல்களின் கண்களே மணல் நிறைந்த குழிகளாக தெரிந்தன.

என்ன நிகழ்ந்தது என்று உணராது நான் தடுமாறி ஓடி மேலே சென்றேன். கடல் மிக மிக உள்வாங்கியிருப்பதை கண்டேன். படகுத்துறையிலிருந்து மேலும் ஆழ்ந்திறங்கிச் சென்ற கடல்பரப்பில் நீரில் உருவழிந்த பாறைகளின் உருகிய வடிவங்கள் மணல்பரப்பில் பதிந்து கிடந்தன. நெடுந்தொலைவு கடல் விளிம்பு அலையற்று அசைவற்று நின்றது. என்னால் நிற்க முடியவில்லை. எவரோ பிடித்துத் தள்ளுவதுபோல் பின்னால் விழுந்தேன். மீண்டும் எழுந்து நின்றேன். மீண்டும் சரிந்து விழுந்தேன்.

# கல்பொருசிறுநுரை - 52

**பகுதி நான்கு : அலைமீள்கை – 35**

பீதர் நாட்டு மரக்கலம் மிகப் பெரியது. அது தன் கூர்முகப்பை துவாரகையின் துறைமேடையில் சென்று அறையும் பொருட்டு விசைகொண்டு எழுந்து சென்றது. மாபெரும் புரவி ஒன்று தாவித்தாவி ஓட அதன் முதுகின்மேல் சிற்றெறும்புபோல நின்றிருப்பதாக உணர்ந்தேன். என்ன நிகழ்கிறது என்பதை முன்னரே உணர்ந்து நான் என் காலணிகளையும் கவச உடைகளையும் கழற்றி வீசிவிட்டு மரக்கலத்தின் பின்புறம் நோக்கி ஓடினேன். காற்றால் தூக்கப்பட்டு முழு விசை கொண்டிருந்த கலம் சற்றே

முன்புறம் மேலெழுந்திருந்தமையால் நான் பின்புறம் நோக்கி விழுந்தேன்.

ஆனால் காற்றில் எழுந்து பறந்து செல்வதாகவே எனக்கு தோன்றியது. ஓசையில்லாமல் மிதந்து சென்று மரக்கலத்தின் பின்புறம் இருந்த பலகைப்பரப்பில் அறைபட்டு கீழே உதிர்ந்து எழுந்தேன். என்னைச் சூழ்ந்து சிறுவண்டுகள்போல எனது படைவீரர்கள் வந்து பொழிந்தனர். பலர் அச்சத்துடன் அலறிக்கொண்டிருந்தனர். என் மேல் சிலர் விழுந்தனர். குவிந்தவர்களால் மேலும் விழுந்தவர்கள் அடிபடாமல் தப்பினர். அலறல்களும் கூச்சல்களும் எழுந்திருக்கலாம். ஆனால் காற்றின் ஓசையில் எதுவும் காதில் விழவில்லை. அனைவரும் சிலைகளைப்போல திகைத்து விழித்த முகமும் திறந்த வாய்களும் கொண்டிருந்தனர்.

புரண்டெழுந்தவர்கள் ஓடிச்சென்று மரக்கலத்தின் விளிம்பைப் பற்றி ஏறி அப்பால் கடலில் குதித்தனர். அது சாவுக்குச் செல்வதென்பதை நான் அறிந்திருந்தேன். அப்பெரும் மரக்கலம் உடைந்து மூழ்கத்தொடங்கும்போது நீரை சற்றே விலக்கி விரிவட்டநிரையை உருவாக்கும். அதை நம்பலாகாது. கலம் மூழ்கியதுமே விரிவட்டம் பலமடங்கு விசையுடன் சுருங்கும். அது திறந்த வாய் மூடுவதுதான். அடங்காப் பசி கொண்டது ஆழி. அதன் வயிறு காலப் பெரும்பிலம். விசையுடன் உள்ளிழுக்கும் அப்பெரும் சுழியிலிருந்து நீந்துபவர்கள் எவரும் தப்ப இயலாது.

மரக்கலம் உடைந்து மூழ்கத் தொடங்குகையில் சிறிய விசைப்படகொன்றை எடுத்துக்கொண்டு உரிய முறையில் நீர்ச்சுழிகளை கணித்து கடலில் இறங்கி பாய்விரித்து அகன்று செல்பவர்கள் மட்டுமே தப்ப முடியும். ஆனால் படைவீரர்களில்

பெரும்பகுதியினர் அவ்வாறே குதித்து கடலில் மாய்வார்கள் எனில் எஞ்சியவர்கள் படகை எடுத்துக்கொண்டு தப்புவது எளிதாக இருக்கும் என்று நான் எண்ணினேன். அவர்கள் சிற்றுயிர்கள். எவ்வண்ணமேனும் சாகப்போகிறவர்கள். ஆழிச்சாவு போர்ச்சாவைவிட இனியது. ஆழம் இனியது.

நான் விழுந்த இடத்திலிருந்த மரச்சட்டம் ஒன்றை இறுகப்பற்றியபடி, கலத்தின் ஊசலாட்டத்தில் என் உடலை நிலைநிறுத்திக்கொண்டு சூழ நிகழ்வதை பார்த்துக்கொண்டிருந்தேன். ஓரிருவர் கடலில் குதித்து நீந்தத் தொடங்கியதுமே மற்றவர்களும் ஓடிச்சென்று கடலில் பாயத் தொடங்கினர். எவரும் எதையும் எண்ணவில்லை. அத்தருணத்தில் மந்தை விலங்குகள் என்று மானுடர் மாறிவிடுகிறார்கள். எண்ணத்தால் அல்ல உடலாலேயே முடிவுகள் எடுக்கப்பட்டுவிடுகின்றன. சில கணங்களிலேயே என்னைச் சூழ்ந்திருந்தவர்களில் பெரும்பாலானவர்கள் கடலில் பாய்ந்துவிட்டார்கள்.

அப்போது மரக்கலத்தின் முகப்பு துவாரகையின் படித்துறைமேல் அறைந்த ஓசை வானில் இடித்தொடர்கள் என எழுந்தது. நொறுங்கல் ஓசை. அது பல்லாயிரம் கற்பரப்புகள், மரப்பரப்புகள் உடைபடும் ஓசைகளின் தொகுதி. வானம் பிளவுபடுகையில் அவ்வோசை எழக்கூடும். அல்லது இது வானுக்கு ஒரு சிறு முட்டை ஓடு நெரிபடும் ஓசைமட்டுமே. அந்த ஓசை ஏன் அத்தனை ஆழமானதாக இருக்கிறது? எவ்வெவ்வகையிலோ அந்த ஓசையை நாம் கேட்டுக்கொண்டிருக்கிறோம். மானுடர் தவறவேவிடாத ஓசைகளில் ஒன்று நொறுங்கலோசை.

என்னைச் சூழ்ந்திருந்த அனைத்தும் அதிர்ந்தன. மேலிருந்து ஒரு பாய்மரம் பாயை கட்டிய பெருந்தூணுடன் முறிந்து சரிந்து என் தலைக்குமேல் வந்து அங்கிருந்த மரத்தாலான அறையடுக்குகள் மேல் விழுந்து நொறுங்கி அசைவிழந்தது. அதிலிருந்து பாய் என் தலைக்குமேல் வந்து பொழிந்து அலையலையாக வளைந்து வானம் இறங்கியதுபோல் ஆகி தொங்கி நின்றது. அது நன்று என்று எனக்கு தோன்றியது. அதற்குமேல் விழும் அனைத்தையும் அது தாங்கிக்கொள்ளும். மீண்டும் ஒரு முறிவோசை. நான் பிரித்தறிய முடியாத பேரொலிகளின் நிரை. கண்ணை மூடி அம்மரக்கலம் துறைமேடையை அறைந்த ஒரு கணத்தை நான் பார்த்ததை மீண்டும் ஓட்டிக்கொண்டேன். ஒருகணம் மட்டும்தான் அது. ஆனால் அத்துறைமேடை நொறுங்கி கற்கள் உடைந்து மரக்கலம் உள்ளே நுழைவதை என்னால் காண முடிந்தது.

துவாரகையின் இரு பெரும் குன்றுகளில் எழுந்த அதிர்வை என் கைவிரல்களில் அறிந்தேன். ஒவ்வொரு கட்டடமும் நிலைகுலைந்து சரியத் தொடங்கியதை என் அகத்தே கண்டேன். அதன்பெரும் நுழைவாயில் சற்றே அசைந்து ஒருபுறமாக சரிந்தது. அங்கு கண் மூடி அமர்ந்து அந்நுழைவாயில் வலப்பக்கமாக உடைந்து விழுவதை நேரிலெனக் கண்டேன். என் மேல் மரக்கலத்தின் பாய்மரத்தூண்கள், கூரைப்பலகைகள் ஒன்றன் மேல் ஒன்றென விழுந்துகொண்டே இருந்தன. ஒன்று விழ அதனிடையில் பிறிதொன்று முறிய இடியோசைகளும் முறியும் ஓசைகளும் தொடர்ந்து எழுந்தன. என் மீது விழுந்த முதல் பெரும் தூண் முறிந்து மேலும் சரிந்தது. ஒருகணம் என்னுள் அகம் திகைத்து அது என்னை அழுத்திவிடக்கூடும் என்று தோன்றியது.

நான் பின்னர் புன்னகையுடன் மரக்கலத்தின் அளவிற்கு நான் எத்தனை சிறியவன் என்று எண்ணிக்கொண்டேன். ஒரு சிற்றெறும்புபோல. அதன் பெரும் தூண்களும் பாய்களும் பலகைகளும் என்னை அறிந்திருக்கவே வாய்ப்பில்லை. முழந்தாளிட்டு தவழ்ந்து எழுந்து முறிந்து சரிந்து கிடந்த படிகளினூடாக சென்றேன். இன்னொரு பெரும் முறிவோசை. மரக்கலம் திடுக்கிட்டது. அதன் தீப உடல் நேர் பாதியாக உடைந்து பின்பகுதி பின்பக்கமாக சாய்ந்தது. ஆகவே நான் எவ்வகையிலும் முன்னகர முடியவில்லை. என் தலைக்கு மேலென உடைந்த மரச்சிம்புகள் நிறைந்திருந்தன. அதில் எதில் தொற்றி ஏறினாலும் தொங்கிக்கிடக்கும் உணர்வையே அடைந்தேன்.

அம்மரக்கலத்தின் அமைப்பை என் உள்ளத்தில் கொண்டுவந்து என்ன நிகழ்கிறது என்று புரிந்துகொண்டேன். அது இரண்டாக பிளந்து பிளந்தபோதிருந்த சிம்புகள் அனைத்தும் கீழே வந்து படிந்து எடைகொண்டு அதன் பின்பகுதி கூர்முனை நீரில் அமிழ்ந்துகொண்டிருக்கிறது. அது கூரென்பதனாலேயே நீரை விலக்கும். எடையென்பதனாலேயே விரைந்து உள்ளே செல்லும். இன்னும் அரைநாழிகை நேரம்கூட அது நீர் மேல் இருக்க வாய்ப்பில்லை. பலகைகளையும் தூண்களையும் பற்றிக்கொண்டு தொங்கி ஆடிச் சென்றுகொண்டிருந்தேன்.

ஓரிருவர் மட்டுமே அங்கு எஞ்சியிருந்தனர். அவர்களும் வெவ்வேறு இடிபாடுகளுக்குள் சிக்கிக்கொண்டிருந்தனர். ஒருவன் "இளவரசே..." என்றபடி என்னை தொட வந்தான். அவன் தோளில் அடிபட்டிருந்தது. அவனை நான் துணை கூட்ட இயலாது. "இளவரசே! இளவரசே!" என்று சொன்னபடி கைநீட்டி என்னை நோக்கி வந்தான். என் உடைவாளை உருவி அவன்

கழுத்தை வெட்டினேன். என்னை நோக்கி எழவிருந்த இன்னொருவன் அதைக் கண்டு திகைத்து அசையாமல் அங்கேயே அமர்ந்திருந்தான். குருதி சொட்டிய உடைவாளை ஆடையில் துடைத்தபடி நான் மேலும் நுழைந்து சென்றேன்.

முன்பு நான் சென்ற படிகள், நான் அறிந்த அறைகள் ஒவ்வொன்றும் இடம் மாறியிருந்தன. படிகள் கூரையிலிருந்து தலைகீழாகத் தொங்கின. பொருட்கள் அனைத்தும் மிக ஆழத்தில் கிணற்றுக்குள் என விழுந்துகொண்டிருந்தன. ஆழத்தில் குவிந்து கிடந்த உடைவுகள் மேல் மேலும் மேலும் உடைந்த பலகைப்பொருட்கள் சென்று விழுந்துகொண்டிருந்தன. நான் சரிந்து கிடந்த ஒரு தூணினூடாகச் சென்று பாயொன்றைப் பற்றி முன்னகர்ந்தேன்.

பெருங்கலத்தின் விலாவில் படகு பொருத்தி கட்டப்பட்டிருக்கும், அன்னைச் சிலந்தி மேல் குஞ்சுகள்போல. அம்மரக்கலத்திலேயே ஐநூறு சிறுபடகுகள் இணைக்கப்பட்டிருக்கும். மரக்கலம் எவ்வகையிலேனும் பழுதடையுமெனில் அதிலுள்ள முழுப் படைவீரர்களும் கிளம்பிச்செல்லும் அளவுக்கு பெரியவை அவை. மென்மரத்தாலானவை. எனவே எப்புயலிலும் மூழ்காதவை. மூழ்கினாலும் மிதக்கும் தன்மைகொண்டவை. வடத்தில் தொங்கி இறங்கி என் கையிலிருந்த வாளால் அவற்றைக் கட்டியிருந்த கயிறுகளை வெட்டினேன்.

ஒரு படகு சரிந்து ஒற்றைக் கயிறில் தொங்கியது. தொற்றி அதிலேறி அமர்ந்த பின் அதன் இறுதிக் கயிறை வெட்டினேன். படகு சரிந்து, பின்னர் காற்றில் நெற்று உதிர்வதுபோல் கீழே மிக ஆழத்தில் நீல அலைகொண்டிருந்த கடலை நோக்கி சென்று, நீரில் அறைந்து அசைவிழந்து, பின்பு அலைகளில்

மேலெழுந்து தன் அலைவில் தானே சற்று சுழன்றது. நான் அதன் குறுக்குச்சட்டத்தை இறுகப் பற்றியிருந்ததனால் அவ்விசையில் தூக்கி வீசப்படாமல் இருந்தேன்.

என்னை நிலைநிறுத்திக்கொண்டதும் அதன் விளிம்பில் பொருத்தப்பட்டிருந்த துடுப்புகளை உருவி இரு பக்கமும் வளையங்களில் பொருத்தி நீட்டினேன். எழுந்து காலால் மரக்கலத்தை உந்தி அதிலிருந்து விலக்கி துடுப்பால் பிறிதொருபுறம் தள்ளி மேலும் விலக்கி வெறிகொண்டு துழாவத் தொடங்கினேன். அதில் பாய்மரம் இல்லை என்று முதலில் தோன்றியது. பின்னர் பாய்மரம் அதில் ஒன்றுள் ஒன்று என செருகப்பட்ட மூங்கில்களாக படிந்திருப்பதை கண்டேன். அருகிலிருந்த கயிற்றை இழுத்தபோது பாய்மரம் பாயுடன் மேலெழுந்தது. அக்கணமே பாய் காற்றை ஏற்று உப்பியது. சுக்கானை இழுத்து பாயை உரிய முறையில் திருப்பி காற்றை எனக்கு உகந்த திசையில் விசை அளிப்பதாக ஆக்கினேன்.

மூழ்கிக்கொண்டிருந்த மரக்கலத்தில் இருந்தெழுந்த அலையும் எனக்கு விலகிச்செல்ல உதவியது. எழுந்து பின் அமைந்து மீண்டும் அலைகளில் விழுந்து மீண்டும் ஆழ அமிழ்ந்து சென்றுகொண்டிருந்தேன். அத்தருணத்தில் துவாரகை நோக்கி செல்லலாகாது என்று அறிந்திருந்தேன். துவாரகைக்கு மரக்கலங்களை அள்ளிக் கொண்டு வரும் கடல் நீரோட்டம் அது. ஆறெனக் கொண்டால் நூறு சிந்துவுக்கு நிகரானது. அது துவாரகையின் துறைமேடையால் தடுக்கப்பட்டு வளைத்து மறுபுறம் செல்லும் நீரோட்டமாக மாற்றப்பட்டிருந்தது. அதிலேறியே பெரும்மரக்கலங்கள் கடலுக்குள் செல்வது வழக்கம்.

அந்த நீரோட்டத்தை நான் அடைந்துவிட்டேன் எனில் பீதர் மரக்கலம் மூழ்கும்போது நான் அதிலிருந்து தப்பிவிடுவேன். நான் கண்ணை மூடிக்கொண்டு பிறிதொரு எண்ணமின்றி கைகள் மட்டுமே சித்தமென செயல்பட துழாவிக்கொண்டிருந்தேன். பின்னர் நெடும்பொழுது ஆயிற்றோ என்று திரும்பிப் பார்த்தபோது அப்பால் உடைந்த மரக்கலத்தின் ஒரு பாதி மெல்ல அமிழ்ந்துகொண்டிருப்பதையே கண்டேன். அதற்குள் நீர் நிரம்ப உள்ளிருந்து சாளரங்களினூடாகவும் விரிசலினூடாகவும் நீர் பீறிட்டு வெளியேவந்து மீண்டும் கடலில் கொட்டிக்கொண்டிருந்தது.

இன்னும் சற்று பொழுதுதான். அது மூழ்கத்தொடங்கிவிட்ட பின்னர் எழும் சுழலிலிருந்து எவரும் தப்ப முடியாது. அப்பகுதியெங்கும் நீரில் பாய்ந்தவர்கள் வெவ்வேறு மரக்கட்டைகளையும் பலகைகளையும் பற்றிக்கொண்டு நீந்திக்கொண்டிருந்தார்கள். அவர்கள் அனைவரையும் உண்ணப்போகும் வாய் இன்னும் சற்று நேரத்தில் திறக்கும். ஆழத்தின் வாய். நீலநிறமான வாய். ஆயிரம் பல்லாயிரம் ஆண்டுகளாக மரக்கலங்களை இழுத்து உண்டுகொண்டிருக்கும் பெரும்பசி. இப்பெருங்கலத்தையும் அள்ளி தன்னுள் வைத்திருக்கும்.

நான் உந்தி உந்தி படகை முன்னெடுத்தேன். பிறகு என் படகுக்குக் கீழே நீரின் ஓட்டம் செயல்படுவதை பார்த்தேன். அத்தருணத்தில் பிறந்த உவகையை எண்ண எண்ண வியப்படைந்தேன். என்ன நிகழ்கிறதென்றே தெரியாதவை மானுடனின் உணர்வுகள். என்னைச் சுற்றி பித்தெழுந்து ஒவ்வொன்றும் நடந்துகொண்டிருந்தன. நானோ ஒரு சிறு

தப்பித்தலுக்காக வெறிக்கூச்சலிடும் அளவுக்கு உவகையை அடைகிறேன்.

என் மைந்தர் எங்கிருக்கிறார்கள் என்று தெரியவில்லை. அவர்கள் மூத்தவர் ஃபானுவால் தேடிப் பிடிக்கப்படுவார்கள் என்று என் உள்ளம் பதைத்துக்கொண்டிருந்தது. அவர்களை பிரத்யும்னனும் பிடிக்கக்கூடும். இங்கிருந்து நான் தப்பினாலும் இந்தப் படகில் தேவபாலபுரம் வரை செல்ல இயலாது. துவாரகையின் வலப்பக்கம் விலகி அமைந்திருக்கும் சிறிய படகுத்துறைமேடைகளில் ஒன்றை அணைந்து அங்கிருந்து புரவியில் ஏறி நகரை விட்டு செல்லவேண்டும். அதற்கான வாய்ப்புகள் உண்டா என்றே தெரியவில்லை. ஆயினும் தப்பிவிட்டேன் என்ற உணர்வில் என் உடலெங்கும் திளைப்பு ஏறியது.

கூச்சலிட்டு நகைத்தபடி துடுப்பை போட்டேன். நீரோட்டம் என்னை அள்ளிக்கொண்டதும் படகிலிருந்து கையை எடுத்து துடுப்பை மடிமேல் பிடித்தபடி மல்லாந்து அமர்ந்து கண்மூடி மூச்சுவாங்கத் தொடங்கினேன். என் காதுகளில் காற்று கிழிபட்டோடுவதை உணர்ந்தேன். நீரோட்டம் என் படகை தூண்டிலால் சுண்டி இழுத்து பறக்க வைத்தது. பாய் புடைத்து கிழிபடும்போல் தோன்றியது. கரை உருக்கி நீட்டப்பட்டதுபோல் உருவழிந்த மண்கோடாக அப்பால் தெரிந்தது.

பின்னர் பெருமூச்சுடன் தன்னுணர்வடைந்து எழுந்தமர்ந்து திரும்பிப் பார்த்தபோது பீதர் நாட்டுக் கலம் அங்கில்லை என்பதை கண்டேன். அங்கு மாபெரும் நீர்ச்சுழிப்பொன்று இருந்தது. சுற்றி மிதந்துகொண்டிருந்த அனைத்துப் பொருட்களையும் இழுத்து சரடென்றாக்கி சுருட்டி மையப்புள்ளிக்குள் கொண்டுசென்று கொண்டிருந்ததது. மேலே

துவாரகையின் மாளிகைகள் அனைத்தும் சரிந்து கிடந்தன. அதன் பெருவாயில் அங்கில்லை. அங்கே துவாரகை இல்லை என்பது கண்களை திகைக்கச் செய்யவில்லை. ஏனென்றால் அதை பலமுறை கற்பனையில் நிகழ்த்திவிட்டிருந்தேன்.

என் படகை நீரோட்டம் மிக விலக்கி ஆழ்கடல் நோக்கி கொண்டு சென்றது. உடனே நான் திசை மாறவில்லை எனில் அது மையப்பெருக்குக்கு கொண்டு செல்லும். நீரின்றி உணவின்றி பெருங்கடலில் சிக்கிக்கொண்டால் நான் திரும்பி வர முடியாமலாகும். ஆகவே அந்நீரோட்டத்தை கணித்தேன். பக்கவாட்டில் துடுப்பை போட்டு அப்பெருக்கின் விளிம்பை நோக்கி படகை செலுத்தினேன்.

அதன் விளிம்பை அங்கிருந்து ஒரு பளிங்குக்கோடென பார்க்க முடிந்தது. அதற்கப்பால் நீர் எதிர்திசை நோக்கி சென்றது. அவ்விளிம்பை அடைந்ததும் இரு கைகளாலும் துடுப்பை ஓங்கிக் குத்தி படகை சற்றே துள்ள வைத்து அவ்வெதிர் ஓட்டத்தில் என்னை இணைத்துக்கொண்டேன். அதன் பின்னர் அதிலும் சிக்கிக்கொள்ளாமல் பக்கவாட்டில் துழாவி துவாரகையில் இருந்து எட்டு கல் தொலைவிலிருந்த சிறிய படகுத்துறை ஒன்றை நோக்கி செலுத்தினேன்.

ஆனால் அங்கிருந்த படகுகள் அனைத்தும் கடலில் எழுந்த அலைகளால் கொந்தளித்துக் கொண்டிருப்பதை பார்த்தேன். அங்கிருந்து நீர் பெருகி வந்து என்னைக் கடந்து ஆழ்கடலுக்குள் சென்று கொண்டிருந்தது. கடல் உள்வாங்குகிறதா? தன்னைத்தானே உள்ளிழுத்துக்கொள்கிறதா? திரும்பிப் பார்த்தபோது நீல நிறத்தில் பளிங்காலான மலை ஒன்றை கண்டேன்.

அது என்னவென்று எனக்கு புரியவில்லை. திகைத்து அதை பார்த்தபடி அமர்ந்திருந்தேன். அது அசையாமல் அங்கு அவ்வண்ணமே நின்றது. வளைந்து வளைந்து வளைந்து அதன் நீர்ச்சுவர் மேலேறியது. மிகமிக அழகான இளநீல பளிங்குப் பரப்பு. அதன் உச்சியில் வானத்தின் கோடு. எப்போது எழுந்தது அது? ஏன் அங்கு அசையாமல் நிற்கிறது? ஆனால் சில கணங்களுக்குப் பின் அது மிக அணுகி வந்துவிட்டதை உணர்ந்தேன். அவ்வுணர்வை நான் மேலும் அறிவதற்குள் நான் நீர்மலையொன்றின் உச்சியிலிருந்தேன். என் படகுக்குக் கீழே மிக ஆழத்தில் துவாரகையின் படித்துறை தெரிந்தது. தொலைவில் துவாரகையின் இரு குன்றுகளும் மிகச் சிறிதாகத் தெரிந்தன. அங்கு கட்டடங்கள் இடிந்துகொண்டிருப்பதும் மக்களின் குரல்களும் வண்டொலி போன்ற முழக்கமும் கேட்டது.

மறுபடியும் தன்னுணர்வடைந்தபோது என் படகு பறந்ததுபோல் வானிலேயே படித்துறை நோக்கி செல்வதை கண்டேன். பிறிதொரு கணத்தில் நான் துவாரகையின் புறநகர்ப் படித்துறையின் அருகே அமைந்த கல்லால் ஆன கட்டடங்களுக்கு மேல் படகில் பறந்துகொண்டிருந்தேன். என் படகு மரக்கூரையொன்றை சென்று அறைந்தது. அதன் மூக்கு மரப்பலகைகளை உடைத்து உள்ளே இறங்கியது. நான் அதிலிருந்து தெறித்து அப்பால் விழுந்து அக்கூரையிலிருந்து உருண்டு கீழே சரிந்தேன். என் தலைக்கு மேல் நீராலான பெரும் வளைவொன்று மழையென அறைந்து இறங்கியது. மூச்சை நிறுத்தும் மாபெரும் பொழிவு. ஓர் ஏரி அப்படியே கரையுடைந்து சரிந்து மூடுவதுபோல.

பின்வாங்கும் நீரின் நூறுநூறு காட்டாறுகள் சேர்ந்து என்னைப் பற்றி இழுத்து கொண்டுசெல்ல உயிரின் வெறியுடன் நான் அங்கிருந்த மரம் ஒன்றை ஆரப்பற்றிக்கொண்டேன். மரம் வேருடன் பிழுது கொண்டுசெல்லப்பட்டது. பிறிதொரு மரத்தில் சிக்கி அசைவிழந்தது. பிறிதொரு கணத்தில் நான் எழுந்து நின்றபோது என்னைச் சூழ்ந்திருந்த அனைத்து மாளிகைகளும் இடிபட்டுக் கிடப்பதை பார்த்தேன். அனைத்தின் மேலும் மணல் மூடியிருந்தது. நான் வந்த படகு ஆறு அடுக்குகள் கொண்ட மாளிகையின் தலைக்குமேல் கூரையில் பதிந்திருந்தது. கடலில் நின்றிருந்த அனைத்துப் படகுகளும் கரைக்கு வந்து மணலிலும் கூரைகளிலும் பதிந்து கிடந்தன. உடைசல்களும் சிம்புகளும் பரவியிருந்தன. கற்பாளங்களே தூக்கி வீசப்பட்டிருந்தன.

நான் எழுந்து நின்றபோது என் உடைகளெல்லாம் கிழிந்து கிடப்பதை பார்த்தேன். என் வாய்க்குள் மணல் சென்றிருந்தது. கையால் வயிற்றை அமுக்கி உமிழ்ந்தபோது சீழும் மணலுமாக வெளியே கொட்டியது. மூன்று முறை ஓங்கி தும்மியதும் குருதித் துளிகளுடன் மணலும் வெளிவந்தது. குமட்டிக்குமட்டி வாயுமிழ்ந்தேன். மணல் வந்துகொண்டே இருந்தது. உடலுக்குள் அத்தனை மணல் எப்படி சென்றது? எப்படி என் உடைகளை நீர் கிழித்தது? என்னைச் சூழ்ந்து மானுட உடல்கள். நசுங்கியவை, சிதைந்தவை, உடைந்தவை. பெரும்பாலான உடல்களின் வாய் முழுக்க மணல் நிறைந்திருந்தது. சில உடல்களின் கண்களே மணல் நிறைந்த குழிகளாக தெரிந்தன.

என்ன நிகழ்ந்தது என்று உணராது நான் தடுமாறி ஓடி மேலே சென்றேன். கடல் மிக மிக உள்வாங்கியிருப்பதை கண்டேன். படகுத்துறையிலிருந்து மேலும் ஆழ்ந்திறங்கிச் சென்ற

கடல்பரப்பில் நீரில் உருவழிந்த பாறைகளின் உருகிய வடிவங்கள் மணல்பரப்பில் பதிந்து கிடந்தன. நெடுந்தொலைவு கடல் விளிம்பு அலையற்று அசைவற்று நின்றது. என்னால் நிற்க முடியவில்லை. எவரோ பிடித்துத் தள்ளுவதுபோல் பின்னால் விழுந்தேன். மீண்டும் எழுந்து நின்றேன். மீண்டும் சரிந்து விழுந்தேன்.

# ல்பொருசிறுநுரை - 53

**பகுதி நான்கு : அலைமீள்கை – 36**

பிரதிபானு நடுங்கும் கைகளை தலைக்குமேல் கூப்பி உடைந்த குரலில் கூவினான். தந்தையே, தெய்வங்களுக்கு முன்னர் மட்டுமே மனிதர்கள் இத்தனை ஆழத்தில் தங்களை திறந்து வைக்க முடியும். தங்களுக்குத் தாங்களே பார்த்துக்கொள்ளாத இடங்கள், ஆழ்கனவுகளில் கூட தொட்டறியாத தருணங்கள் அனைத்தும் இங்கே என் நாவால் உரைக்கப்பட்டன. என்னை நீங்கள் காத்தருள வேண்டும் என்பதற்காகவே இவற்றை சொன்னேன்.

தந்தையே, இது எனக்காக அல்ல. என் மைந்தருக்காக, என் துணைவிக்காக. எளியவன் என்று என்னை முன்வைக்கிறேன். தனித்தவன், பொருளற்றவன். அதை அங்கே துவாரகையின் புறநகர் பகுதியில் இடிந்துசரிந்து மணல்மூடிக் கிடந்த பகுதியில் நின்று சூழ நோக்கியபோது நன்குணர்ந்தேன். என்னைச் சுற்றி பலர் கதறிக்கொண்டிருந்தனர். பலர் பித்துப்பிடித்து

சுற்றிக்கொண்டிருந்தனர். ஆனால் நான் முற்றிலும் தனித்து அங்கே நின்றேன். அப்போதுதான் நீண்ட நாட்களுக்குப் பின் நான் உங்களை அவ்வண்ணம் நினைத்துக்கொண்டேன். நெஞ்சில் அறைந்து கண்ணீருடன் "தந்தையே!" என்று வீறிட்டேன். "தந்தையே! தந்தையே!" என்று அலறி அழுதேன்.

அங்கிருந்து திரும்பி ஓடினேன். எங்காவது தப்ப விழைபவனாக. மறுபக்கம் கரை இருக்கிறது என்பதை உள்ளுணர்வால் அறிந்து அத்திசை நோக்கி சென்றேன். மக்கள் பெருந்திரளாகக் கிளம்பி எங்கு செல்வதென்றறியாமல் நகரின் வெளிஎல்லைகளில் நின்று தடுமாறுவதை கண்டேன். நகருக்குள்ளிருந்து கிளம்பியவர்களுக்கு அந்நகரிலிருந்து வெளியே சென்றுவிடவேண்டும் என்ற எண்ணமே இருந்தது. ஆகவே அவர்கள் தங்கள் உள்ளத்திற்குள் அமைந்த வரைபடம் ஒன்றில் முன்னரே முடிவு செய்து வைத்திருந்த வழியொன்றை நோக்கி சென்றார்கள்.

நகரிலிருந்த ஒவ்வொருவருக்கும் அந்நகர் பற்றி ஒரு வரைபடம் இருந்தது. அது அவர்களே நம்ப முடியாத அளவுக்கு தெளிவு கொண்டிருந்தது. கூடவே மெய்யிலிருந்து சற்றே வேறுபட்டதாகவும் இருந்தது. அந்நகரிலிருந்து வெளிவருவதற்கான வழி ஒவ்வொருவருக்கும் தெரிந்திருந்தது. ஏனென்றால் ஏதோ ஆழ்கனவுகளில் அந்த வழிகளில் ஒருமுறையேனும் அந்நகரிலிருந்து தப்பிச் சென்றிருந்தார்கள். ஆனால் அந்த வழியை சென்றடைவதற்கான முயற்சிகளில் பிற வழிகளைத் தேடி ஒருவருடன் ஒருவர் அவர்கள் முட்டிக்கொண்டனர். ஒருவரோடொருவர் பூசலிட்டனர். தங்கள் வழியை பிறர் தடுப்பதாக எண்ணினர். தங்கள் உறவினரையும் உற்றாரையும் இணைத்துக்கொண்டு செல்ல முயன்றனர்.

அவர்கள் தங்கள் உள்ளத்தில் பிற வழிகளை தேர்ந்ததனால் பிற வழிக்கு இழுத்தனர்.

ஆகவே ஒருவருக்கொருவர் பூசலிட்டனர். நெஞ்சில் அறைந்து கதறி அழுதனர். பெருகி வந்து நகரின் எல்லையை அடைந்தவர்கள் அப்போதுதான் அந்நகரம் கோட்டை என்று ஒன்று இல்லாதது என்பதை உளமுணர்ந்து கண்டுகொண்டனர். அதை சூழ்ந்திருந்த பெரும்பாலை நிலமே அதன் கோட்டை. கோட்டையைக் கடந்து செல்வது போலல்ல பாலையைக் கடந்து செல்வது. அதற்கு உணவும் நீரும் கருதியிருக்கவேண்டும். உடைமைகளை கொண்டுசெல்ல விலங்குகள் வேண்டும். பெரும்பாலையில் செல்வதற்கு வழிகளைப் பற்றிய அறிதல் வேண்டும்.

அவர்களில் பெரும்பகுதியினர் அந்நகரிலிருந்து ஒருமுறைகூட வெளியே செல்லாதவர்கள். சிறு தெய்வங்களை வணங்குவதற்கோ களியாடுவதற்கோ நகரைச் சூழ்ந்துள்ள திறந்தவெளிக்கு அவர்கள் வந்திருப்பார்கள். மிக அரிதாக சிலர் வேட்டையின் பொருட்டு பாலை நிலத்திற்குள் சென்றிருப்பார்கள். ஆனால் கடந்து செல்ல வேண்டிய ஒன்றென தங்கள் முன்னால் கண்ட பாலைவெளி திகைக்கவைத்தது. கொலை நகைப்புடன் எழுந்த தெய்வம்போல் அவர்கள் முன்னால் பேருருக்கொண்டு நின்றிருந்தது. அதுநாள் வரை அவர்கள் அந்நகர் என வகுத்துக்கொண்டிருந்தது அப்பாலையின் எல்லையைக் கொண்டே என்று அவர்கள் உணர்ந்தனர். மூன்று திசைகளிலும் அந்நகரை கவ்விப் பற்றி அதற்கு வடிவம் அமைத்தது அந்த வறுநிலமே.

அவர்கள் தயங்கி நிற்க அவர்களுக்குப் பின்னால் தொடர்ந்து வந்துகொண்டிருந்தவர்கள் வந்து மோத முகப்புச் செறிவு உலைந்தது. நீர்விளிம்பு என அலைகொண்டது. பொருக்கோடிய சேற்றுப்பரப்பு பிளந்து மென்சேறு வெளிவருவதுபோல தயங்கியவர்களை உடைத்துக்கொண்டு பின்னிருந்தவர்கள் எழுந்தனர். அவர்கள் தயங்க அவர்கள் மேலும் பின்னிருந்து மேலும் மக்கள் வந்து அவர்களை தள்ளினர். முன்னால் வந்தவர்கள் அவர்களை அறியாமலேயே தள்ளப்பட்டு பாலைக்குள் சென்றுவிட்டனர். பாலையை உணர்ந்ததும் அவர்கள் கூச்சலிட்டனர்.

நான் செய்ததென்ன என்பதன் முழுப் பேருருவை அப்போதுதான் பார்த்தேன். செய்த ஒவ்வொன்றையும் மீள்வு செய்யவேண்டும் என்றும், ஒவ்வொரு அடிவைப்பும் பின்னகர்ந்து ஒன்றுமறியாத எளியோனாக வெறும் பகல் கனவுகளுடன் ஃபானுவின் அரசில் அமைந்திருந்த அந்த பிரதிபானுவாக மாறிவிடவேண்டுமென்றும் அத்தருணத்தில் தோன்றியது. அன்று அறிந்தேன், ஒவ்வொன்றையும் தன்னலம் கருதியே நான் செய்திருக்கிறேன். எவ்வகையிலும் பொதுநலனோ தெய்வங்களுக்கு உகந்ததோ என் எண்ணத்தில் எழுந்ததில்லை. ஆணவம் நான் நான் என எண்ணச் செய்தது. ஆணவ நிறைவை மகிழ்ச்சி என்றும் வெற்றி என்றும் எண்ணிக்கொண்டிருந்தேன்.

அப்போது அந்நகர் நொறுங்கி சிதைந்து கிடப்பது போலவே என் ஆணவம் கிடந்தது. நான் உங்கள் மைந்தன் அல்ல, அரசகுடியினன் அல்ல, மானுடன்கூட அல்ல. கீழ்மகன், எளியோன் பிறிதொன்றும் அல்ல. புழு, கிருமி, அல்லது அணுவுயிரி. அப்போது எஞ்சியிருந்தது ஒன்றே. அது எளிய

விலங்குணர்வு. என் மைந்தர், அவர்கள் எங்கேனும் எவ்வகையிலேனும் உயிருடன் எஞ்சவேண்டும், அவர்களில் ஒரு துளியேனும் அதற்கு அடுத்த தலைமுறைக்கு செல்லவேண்டும். ஓர் உயிரின் முதல் விழைவு. மிக எளியது. ஆனால் இப்புடவியின் அடிப்படை நெறிகளில் ஒன்று. பேராற்றல் கொண்டது.

அத்தருணத்தில் பல்லாயிரம் பேரை கொன்று வீழ்த்தவும், எண்ணிச் சென்றடையாத பெரும்பழியொன்றை இயற்றவும்கூட நான் சித்தமாக இருந்தேன். "என் மைந்தர்! என் மைந்தர்!" என்று ஓசையில்லாமல் வீறிட்டபடி புரவி ஒன்றை கண்டடைந்தேன். அதில் ஊர்ந்து கொந்தளித்துச் சென்று கொண்டிருந்த மக்கள்திரளை நோக்கி "நில்லுங்கள்! நில்லுங்கள்! அணிவகுத்துச் செல்லுங்கள்! ஆணைகளை செவிகூருங்கள்!" என்று கூவி கட்டுப்படுத்த முயன்றுகொண்டிருந்த காவல்வீரனொருவனை எதிர்பாராத தருணத்தில் பாய்ந்து தாக்கி வீழ்த்தி அப்புரவியிலேறி அதை கூட்டத்தினூடாக ஓட்டி மானுடரை பாய்ந்து கடக்கச்செய்து, திரள்களைப் பிளந்து, இடிபாடுகளை ஒழிந்து செல்லவைத்து அகன்றேன்.

புரவி தையல் ஊசி துணியில் செல்வதுபோல அப்பெருங்கொந்தளிப்பினூடாக ஊடுருவிச் சென்றது. கூட்டத்தினூடாக தாவிச் செல்வதற்கு பயின்ற குதிரை அது. நான் துவாரகையின் வெளி எல்லையை அடைந்து பாலைநிலத்தினூடாக சென்றேன். பாலைநிலத்தினூடாக ஓர் உளவிசையில் முன்னால் சென்றவர்கள் தயங்கித் தயங்கி வெவ்வேறு இடங்களில் நின்றிருந்தனர். சிலர் சென்ற திசையிலிருந்து திரும்பி வந்துகொண்டிருந்தனர். "விலகுங்கள்! விலகுங்கள்!" என்று கூவியபடியே அவர்களை கடந்தேன்.

துவாரகைக்குள் நுழையும் தோரணவாயிலை அடைந்தபோது ஒரு திடுக்கிடலை அடைந்தேன். அதைச் சூழ்ந்து மனிதர்கள் நிறைந்திருந்தார்கள். அவர்களுக்கு நடுவே அவர்களுக்கு எவ்வகையிலும் தொடர்பற்றதுபோல அது ஓங்கி எழுந்து நின்றிருந்தது. அதன் பெரும் சிற்பமுகங்கள் கீழ்நோக்கி நகைத்து வாய் திறந்திருந்தன. துவாரகையில் அனைத்துக் கட்டடங்களும் இடிந்து சரிந்து கிடக்க தோரணவாயில் மட்டும் தொடர்பே அற்றதுபோல, பிறிதொரு நகரத்தின் நுழைவாயில்போல் நின்றது.

நான் அதை கடந்துசென்று திரும்பிப் பார்த்தேன். சிறிதாகி பின்னகர்ந்துகொண்டே இருந்தது. மீண்டும் சென்று திரும்பிப் பார்த்தபோது அத்தோரணவாயில் தனித்து எழுந்து நின்றது. அதற்கப்பால் துவாரகை அவ்வண்ணமே எந்த மாற்றமும் இல்லாமலிருக்கும் என்றும், சென்றால் அனைத்தையும் பார்க்கமுடியும் என்றும் உளமயக்கொன்றை உருவாக்கியது அது. ஆனால் ஒரு கணத்தில் அது உடைந்தபோது உருவான ஏக்கம் நெஞ்சை பேரெடையென உணரச்செய்தது. நான் என் உடலைக் குறுக்கி குனிந்து அமர்ந்து விம்மி அழுதேன்.

நான் பாலைநிலத்தினூடாக புரவியில் விரைந்து என் மைந்தர் வாழ்ந்த அரண்மனையை நோக்கி சென்றேன். அங்கு ஏற்கெனவே வீரர்கள் கூடி கூச்சலிட்டுக்கொண்டிருந்தனர். புரவியை நிறுத்திவிட்டு அவர்களை நோக்கி ஓடிச்சென்று "காவலர்தலைவன் எங்கே?" என்றேன். முதிய காவலர்தலைவன் சூர்ணன் அரண்மனைக்குள் பிறருடன் பூசலிட்டுக்கொண்டிருந்தான். அவன் இறங்கி ஓடிவந்து "இளவரசே, துவாரகையில் நிலநடுக்கம் வந்துவிட்டது என்றார்கள். கடல் நகருக்குள் புகுந்துவிட்டதாம். இங்கும்

அதிர்வுகளை உணரமுடிகிறது. இங்கிருந்து கிளம்புவதா வேண்டாமா, எவருடைய ஆணையை ஏற்பது என்று தெரியாமல் நாங்கள் இருக்கிறோம்" என்றான்.

"வா என்னுடன்" என அவனை அப்பால் தனியாக அழைத்துச்சென்றேன். "என் மைந்தர் எங்கே? அரசி எங்கே?" என்றேன். "தங்கள் ஆணைப்படி படைவீரன் ஒருவன் அவர்களை அழைத்துச்சென்றான்" என்றான். "ஆம், அவனை அனுப்பியது நானே. அதை உறுதிப்படுத்திக்கொள்ளவே வந்தேன்" என்றேன். "எப்போது அவர்கள் சென்றனர்?" என்றேன். "இரண்டு நாழிகை, அல்ல மூன்று நாழிகைக்கு முன்பு அவன் இங்கு வந்தான். இங்கிருந்து தேரில் அவர்களை படித்துறை நோக்கி கொண்டுசென்றான். கடலினூடாக தேவபாலபுரத்திற்கோ அன்றி சிந்துவுக்குள் நுழைந்து பருஷ்ணிக்கோ செல்வதாக சொன்னான்" என்றான் சூர்ணன்.

"ஆம், நன்று" என்று திரும்பி ஒரு கணத்துக்குப் பின் இடையிலிருந்த வாளை உருவி அவன் கழுத்தை வெட்டி துண்டாக்கினேன். அவனிடமிருந்து ஒரு சொல்லும் கசியக்கூடாது என்று எனக்கு நானே சொல்லிக்கொண்டேன். எவருக்காகவோ விளக்கம் அளிப்பதுபோல. குருதிபடிந்த வாளை அருகிலிருந்த திரைச்சீலையில் துடைத்தபின் நேராக வெளிவந்து என் புரவியில் ஏறி மீண்டும் துவாரகை நோக்கி விரைந்தேன். துவாரகையின் இறுதிப் படித்துறை அங்கிருந்து மிக அருகே இருந்தது. அதிலிருந்து சிந்துவுக்குச் செல்லும் சிறிய நீரோட்டம் ஒன்றும் உண்டு. அது அப்பேரலைக்குப் பின் அங்கிருக்கிறதா என்று தெரியவில்லை.

படித்துறை நோக்கி செல்லும் கல்வேய்ந்த பாதை ஆளோய்ந்து கிடந்தது. ஒவ்வொருவரும் நகரிலிருந்து வெளியே

வடகிழக்காகச் செல்லவே முயன்றனர். அவர்கள் கிளம்பிவந்த தொல்நிலம் அங்கிருப்பதாக அவர்களின் அகம் பதிவு செய்திருந்தது. அவர்களின் மூதாதையரின் நாடு. புல்வெளிகள், இளமழை, ஒளிரும் சூரியன். ஆநிரைகள் பெருகி நிறையும் திசைகளும் தெய்வங்கள் வாழும் வானும் கொண்டது. அவர்களில் சிலரேனும் படித்துறைகளுக்குச் சென்றிருந்தால் அங்கே இருக்கும் படகினூடாக மிக எளிதாக தப்பிச் சென்றிருக்க முடியும். ஆனால் இயல்பிலேயே அவர்கள் கடலை அஞ்சினார்கள். கோள்கொண்டு எழுந்து நிலத்தை அறைந்த அப்பெருந்திரையைக் கண்ட பிறகு எவரும் கடல் நோக்கி சென்றிருக்க வாய்ப்பில்லை. எரியும் திசையிலிருந்து விலகிச்செல்லும் எறும்புகள்போல் துவாரகையின் மக்கள் அனைவருமே மறு எல்லை நோக்கி சென்றுகொண்டிருந்தனர்.

கடலை நெருங்க நெருங்க எவருமே கண்ணுக்குப்படவில்லை. கைவிடப்பட்ட முதியவர்களும், மிதிபட்டு உயிரிழந்த உடல்களும், சிதைந்து கிடந்த கட்டடங்களும், திசையழிந்து ஊளையிட்டு சுற்றிக்கொண்டிருந்த நாய்களும் என அப்பகுதியே போர் முடிந்த களம்போல் தெரிந்தது. என் புரவிக் குளம்படி கேட்டு விழுந்து கிடந்தவர்களில் சிலர் கைநீட்டி "தண்ணீர்! தண்ணீர்!" என்றோ "உதவுங்கள்! உதவுங்கள்!" என்றோ கூவினர். அவர்களின் உடல்களின் மீதாக புரவியைச் செலுத்தி மேலே சென்றேன்.

படித்துறையை அணுகி அங்கே புரவியை நிறுத்திவிட்டு துறைமேடையின் மேல் ஏறி படகுகளை நோக்கி சென்றேன். சிற்றலைகள் மட்டுமே கடலில் எஞ்சியிருந்தன. ஒரு சிறு குளம்போல் தெரிந்தது கடல். அத்தனை அலையழிந்து அமைதி கொண்ட கடலை நான் பார்த்ததே கிடையாது. கரையிலிருந்து

மிக விலகி சேற்றுப்பரப்பின் மேல் படகு அமர்ந்திருந்தது. படகை காலால் உந்தி உந்தி கடலின் விளிம்பு நோக்கி கொண்டு செல்லவேண்டியிருந்தது. சேற்றில் அது வழுக்கி பாறைகளில் முட்டி ஏறி மடிந்து விழுந்து எழுந்து கடலுக்குள் சென்ற பின்னர் அதில் ஏறி அமர்ந்து துடுப்பை அவிழ்த்து உந்தி கடலில் அலைகளுக்கு மேல் ஏறினேன்.

படகின் மேல் சுற்றிவைக்கப்பட்டிருந்த கயிற்றை அறுத்து பாயை எழச்செய்தேன். கடற்காற்று இல்லாதபோதுகூட பாயை புடைக்கவைக்கும் அளவுக்கு உள்காற்று இருந்தது. மிக மெல்ல செல்வதுபோல் தோன்றினாலும்கூட கரையோர மரங்கள் விரைவதிலிருந்து படகு விசைகொண்டிருப்பதை உணர்ந்தேன். கண்ணிகளை இழுத்து பாயை முழுதாகத் திருப்பி முடிந்தவரை அதை காற்றின் திசையில் செல்லவைத்தேன். பின்னர் ஓய்ந்து படகில் அமர்ந்து கரையோரமாக பார்த்துக்கொண்டிருந்தேன்.

துவாரகையின் மக்கள் கரையோரமாகவே பெருகிச் சென்றுகொண்டிருந்தனர். அவர்கள் அவ்வண்ணம் சிந்துவின் கரைவரை சென்று அடையக்கூடும் என்று தோன்றியது. கடலில் சென்ற எனது மைந்தரும் துணைவியும் அப்போது எங்கிருப்பார்கள் என்று என்னால் உய்த்துணரக் கூடவில்லை. தேவபாலபுரம் சென்று அங்கிருந்து பருஷ்ணி வரைக்கும் செல்வது அவர்களுக்கு நான் இட்ட ஆணை. அவ்வழியில் சென்றால் எங்கேனும் அவர்களை கண்டடைய முடியும் என்று நினைத்தேன். எனக்கு வேறுவழி ஏதும் இருக்கவில்லை.

நீரின்றி உண்ண ஒரு பொருளுமின்றி அப்படகிலேயே அமர்ந்திருந்தேன். முழுப் பகலும் கடந்து அந்தியில் தேவபாலபுரத்தை சென்றடைந்தேன். அந்நகர் முற்றாக அழிந்திருந்தது. பேரலை அறைந்து நகரின் அனைத்து பண்ட

நிலைகளையும் உடைத்துச் சரித்திருந்தது. மாளிகைகள் இடிந்தும் சரிந்தும் நின்றன. நகரில் எவரும் தென்படவில்லை. கடலோரம் ஓய்ந்தே கிடந்தது. நான் அதன் படித்துறையில் படகை நிறுத்திவிட்டு இறங்கி அப்பால் சென்றேன்.

திகைப்பூட்டும் காட்சிகளாக என் முன் விரிந்தது நகர். கடலில் நின்றிருந்த மரக்கலங்கள் அனைத்தும் பேரலையால் தூக்கி நகர் மேல் வீசப்பட்டிருந்தன. கட்டடங்களுக்கு மேலே மரக்கலங்கள் ஏறி கற்சுவர்களை நொறுக்கி அமர்ந்திருப்பதை கண்டேன். நகரெங்கும் உடைந்த மரச்சிம்புகள் குவிந்து கிடந்தன. கடலில் மனிதர்கள் பல ஆண்டுகளாக வீசிய அனைத்துக் குப்பைகளும் பெருகி வந்து நகர் மேல் படிந்திருந்தன. கடல்பாசிகள், மீன்கள், சிப்பிகள், முட்புதர்போன்ற நீருயிரிகள்.

நொறுக்கப்பட்ட ஒரு நகர். வானிலிருந்து ஒரு பெரும் கதாயுதம் வந்து ஒரேயடியாக தட்டி தள்ளப்பட்டது. விழாத ஒரு மாளிகை கூட அங்கில்லை. தேவபாலபுரத்தில் பெரிய மாளிகைகள் இல்லை. மூன்று அல்லது நான்கு அடுக்குகள்தான். பெரும்பாலானவை மரத்தாலானவை. ஆகவே அனைத்துமே விறகுக்குவியல்போல ஆங்காங்கே தென்பட்டன. செல்லும் வழியெங்கும் மனித உடல்கள் உப்பி புடைத்திருப்பதை கண்டேன். பெரும்பாலானோரின் வாய்களிலும் கண்களிலும் மணல் அழுத்திச் செறித்து நிரப்பப்பட்டிருந்தது. அவர்களின் வயிறுகள் உப்பி புடைத்திருந்தன. உள்ளே மணல் நிறைந்திருக்கும் என்று தோன்றியது.

பேரலை அறைந்த உடல்கள் பெரும்பாலும் அனைத்துமே ஆடையற்றவை. அலை எப்படி ஆடைகளை கழற்ற முடியும்

என்று எனக்கு தெரியவில்லை. நெஞ்சுடைந்த உடற்கூடுகள். கைகளும் கால்களும் விந்தையான முறையில் ஒடிந்து மடிந்தவை. செத்துக்கிடந்த பிணங்கள் அனைத்துமே சிறுகுழந்தைகளின் உடல்கள் போன்றே தோன்றின. சாவின் கணத்தில் அனைவருமே குழந்தைகளாக மாறியிருப்பார்கள் போலும்.

தேவபாலபுரத்தில் நான் பதைத்தவனாக சுற்றி அலைந்தேன். மைந்தர் அங்கு வந்திருந்தால் இந்தப் பேரலையில் சிக்கிக்கொண்டிருப்பார்கள். இவ்வலைக்கு முன்பே அவர்கள் சிந்துவில் நுழைந்திருந்தால் உயிர் தப்பியிருப்பார்கள். அங்கு எங்கேனும் அவர்கள் இருக்கிறார்களா? எங்கு அவர்களை தேடுவது என்று தெரியவில்லை. அந்நகர் முழுக்க நான் அலைந்து திரிந்தேன். அந்நகர் விட்டு சென்றவர்களை எங்கேனும் பார்க்க முடியுமா என்று எண்ணி மறுதிசை நோக்கி சென்றேன். மீண்டும் திரும்பி வந்தேன். அந்நகரில் ஒரு கிழிந்த கொடிபோல நான் படபடப்பதாகத் தோன்றியது.

நகர் முழுக்க கூலமூட்டைகள் அடித்துச் சிதறப்பட்டு மாளிகைகளின் சுவர்களை ஒட்டி அரிசியும் கோதுமையும் பிறவும் குவிந்துகிடந்தன. ஆனால் விலங்குகளோ பறவைகளோ ஏதுமில்லை. சில மீன்கள் மட்டும் உயிருடன் இருந்தன. சில முள்ளுயிரிகள் சிலிர்த்தபடி மெல்ல நடந்தன. அவை ஆழ்கடலில் வாழ்பவையாக இருக்கலாம். ஒருகணத்தில் கடல் எவ்வண்ணம் மறைந்தது என அவை திகைக்கக்கூடும். அங்கே குவிந்திருக்கும் சடலங்களில் என் மைந்தர்களை தேடிக்கொண்டிருக்கிறேன் என நானே உணர்ந்ததும் தீச்சுட்ட அதிர்வை அடைந்தேன். ஏன் அவ்வாறு செய்கிறேன்? என் அகத்தில் தீங்கு நிகழுமென

நம்பிக்கொண்டிருக்கிறேனா? அவர்கள் உண்மையில் அங்கே கிடந்தால்கூட நான் செய்வதற்கொன்றும் இல்லை. அவர்கள் எங்கேனும் இருந்து என் உதவியை நாடினால்தான் நான் சென்றடையவேண்டும்.

நான் தேவபாலபுரத்தை கடந்து சென்றேன். பாலையின் தொடக்கத்தில் மக்கள் இருக்கக்கூடும் என்று தோன்றியது. அவர்களை நோக்கி செல்லவேண்டும். தொலைவில் மக்களின் ஓசையை செவிகூர்ந்தேன். அதை எதிர்நோக்கி சென்றுகொண்டிருந்தேன். நெடுந்தொலைவில் அவர்கள் ஓசை கேட்கத் தொடங்கியது. நடந்து அங்கு சென்றபோது நன்றாக இருட்டிவிட்டிருந்தது. நான் கண்ணீர்விட்டபடி, தள்ளாடியபடி, நடைப்பிணம்போல மாறி பின்னிரவில் மக்கள் கூட்டமாக அமர்ந்திருந்த வெட்டவெளிக்கு சென்றேன்.

அங்கு கையில் அகப்பட்ட உடைமைகளுடனும் உற்றாருடனும் மக்கள் கிளம்பிவந்து அமர்ந்திருந்தனர். அங்கு சென்று தொலைவிலேயே இரு கைகளையும் விரித்தபடி நடந்து அவர்களை அணுகி முழந்தாளிட்டு விழுந்தேன். அவர்களில் ஒருவன் வந்து ஒரு தோல் குடுவையிலிருந்த நீரை எனக்கு அளித்தான். அதை வாங்கி இரு கைகளாலும் அண்ணாந்து குடித்து உடலை நிறைத்தேன். நீர் அருந்தியதுமே உடல் சற்று ஓய்வுகொள்ள அவ்வண்ணமே மணலில் குப்புற விழுந்து சற்று நேரம் துயின்றேன். அதில் என் மைந்தரை கண்டேன். அவர்களுடன் இளவெயில் நிறைந்திருந்த பசும்புல்வெளியில் விளையாடினேன்.

பின்னர் எழுந்து அமர்ந்தேன். அங்கிருந்த ஒவ்வொருவரும் அழுதுகொண்டிருந்தனர். பலர் தங்களின் உற்றாரைத் தேடி ஒவ்வொரு முகமாக பார்த்தபடி அவர்களின் பெயர்களை

கூச்சலிட்டபடி சென்றுகொண்டிருந்தனர். பெற்றோரைப் பிரிந்த குழந்தைகள் கதறி அழுதபடி அலைந்தனர். ஒவ்வொரு குழந்தையையும் ஒவ்வொருவரும் முகம் தூக்கிப் பார்த்து அது தங்கள் குழந்தையல்ல என்று விட்டுச்சென்றனர். விட்டுச்செல்லப்பட்ட ஒவ்வொரு குழந்தையும் விட்டுச்செல்பவர்களின் ஆடையை பற்றிக்கொண்டு "தந்தையே!" என்றும் "அன்னையே!" என்றும் கதறி அழுதன. அவர்கள் பிரிந்த பின் நிலத்தில் விழுந்து கைகால்களை உதறி கூச்சலிட்டன.

உளக்கொந்தளிப்பு ஓய்ந்ததனால் சிலர் அவ்வண்ணமே படுத்து ஆழ்ந்து துயின்றுகொண்டிருந்தனர். சிலர் உயிர் துறந்திருக்கவும் கூடும். துஞ்சுவதற்கும் துயில்வதற்கும் அங்கு வேறுபாடு தெரியவில்லை. எவரிடமும் பந்தமோ விளக்கொளியோ இல்லை என்பதனால் முற்றிருள் சூழ்ந்திருந்தது. வானின் ஒளியில் அவர்களின் முகங்கள் பற்களின் வெண்மையும் கண்களின் மினுப்புமாக தெரிந்தன.

நான் அங்கே எதற்கு அமர்ந்திருக்கிறேன் என்று எனக்கு தெரியவில்லை. என் துணைவியை அங்கு தேட முடியுமா? விடிந்த பின்னரே அவர்களை தேடமுடியும். ஆயினும் என்னால் அமர்ந்திருக்க முடியவில்லை. உடல் ஓய்வுகொண்டதும் உள்ளம் விழித்தெழுந்தது. நானும் எழுந்து என் மைந்தரின் பெயர்களை கூவி அழைத்தபடி அத்திரள் முழுக்க அலைந்து திரிந்தேன். என் மனைவியின் பெயரும் மைந்தரின் பெயரும் உள்ள பலர் அங்கிருப்பதை உணர்ந்தேன். நான் அருகணைத்து முகம் தூக்கி நோக்கிய மைந்தர் என் மைந்தரல்ல என்று தெரியும்போது எழும் உளச்சோர்வு நெஞ்சில் ஒரு கத்தி என ஆழப் புகுந்தது.

ஆயினும் அவர்கள் அங்கிருக்கிறார்கள் என்று என் உளம் கற்பனை செய்துகொள்ளும்போது வரும் உவகையின் தொடுகை என்னை சிலிர்க்கச் செய்தது. அவ்வுவகையில் திளைக்கும்பொருட்டே அவர்களை நான் பெயர் சொல்லி தேடிக்கொண்டிருந்தேன். இரவெல்லாம். தந்தையே, முழு இரவும். அத்திரளில் விழுந்து எழுந்து, விழுந்து எழுந்து, தேடிய இடங்களிலேயே மீண்டும் தேடி, தேடியவர்களையே மீண்டும் கண்டு, புலரியில் உணர்ந்தேன் அங்கு அவர்கள் இல்லை.

அத்திரளைப் பார்த்தபடி இளவெயிலில் கண்ணீருடன் நின்றேன். மீண்டும் நகருக்குள் புகுந்து இறந்து கிடக்கும் உடல்களில் அவர்களை தேடுவதா? கிழக்கே சுடர் எழுந்துகொண்டிருந்தது. அங்கிருந்த ஒவ்வொருவரும் கதிரெழும் ஒளியை நோக்கி கண்ணீர்விடுவதை கண்டேன். கதிரொளி அத்தனை துயர் மிக்கதாக, அத்தனை கொடியதாக தோன்றும் தருணத்தை அதற்கு முன் நான் உணர்ந்ததில்லை. அவர்களின் கிழிந்த உடைகளை, கைவிடப்பட்ட நிலையை, சாவை, நோவை ஒவ்வொன்றையும் துலக்கிக்காட்டியது அது. ஒவ்வொருவரும் கதிரிலிருந்து முகத்தை விலக்கிக்கொண்டனர். பெரும்பாலானவர்கள் அதற்கு முதுகு காட்டி அமர்ந்திருந்தனர். சிறுகுழந்தைகள் அன்னையரின் உடல்களுக்குள் புகுந்துகொள்பவைபோல் ஒடுங்கிக்கொண்டிருந்தன.

அங்கிருந்து சிந்துவுக்குள் சென்று என் மைந்தரைப்பற்றி தேடவேண்டும் என்று எண்ணினேன். ஒருவரிடம் நீர் மட்டும் வாங்கி குடித்துவிட்டு மீண்டும் தேவபாலபுரத்தை நோக்கி சென்றேன். நான் நகர் நோக்கி செல்கையில் தொலைவில் ஒருவன் என் பெயர் சொல்லி அழைப்பதை கண்டேன். நின்று திரும்பிப்பார்த்தபோது ஒற்றன் ஒருவன் கைவீசியபடி வந்தான்.

“இளவரசே! இளவரசே!” என்றான். அவன் துவாரகையின் ஒற்றனாகிய சந்திரன் என அறிந்தேன். என் உடல் ஓய்ந்தது. உள்ளம் பாறையென்றாயிற்று. தேடல் முடிந்தது. இனி எதுவானாலும் ஒன்றே. “கூறுக!” என்றேன்.

“இளவரசே, தங்கள் மைந்தரையும் துணைவியையும் சிறைப்பிடித்து துவாரகைக்கு கொண்டுசென்றார்கள்” என்றான் சந்திரன். “யார்?” என்றேன். “இங்கு அவர்கள் படகில் வந்துகொண்டிருக்கையிலேயே துவாரகையிலிருந்து அவர்களை துரத்தி வந்தார்கள். விசைமிக்க படகுகளில் வந்து அவர்களை வழியிலேயே மறித்துக்கொண்டார்கள். அவர்களை பிடித்து இழுத்து அந்தப் படகில் ஏற்றிக்கொண்டு சென்றார்கள். அவர்களை கொண்டுவந்த காவலர்களையும் அப்படகில் ஏற்றிக்கொண்டார்கள்” என்றான்.

“நான் தேவபாலபுரத்தில் துவாரகையின் ஒற்றன். இச்செய்தியை தங்களுக்கு அறிவிக்க வேண்டும் என்று பறவைத்தூது அனுப்பினேன். தாங்கள் எங்கிருக்கிறீர்கள் என்று தெரியவில்லை. தங்களிடம் இதை தெரிவிக்கும்பொருட்டு நான் இங்கிருந்து கிளம்பும் நிலையில்தான் அலையெழுந்தது” என்றான் சந்திரன். “நன்று” என்று நான் சொன்னேன். “இத்தருணத்தில் தங்களைப் பார்க்க என்னால் முடிந்தது நன்று” என்றான். “துவாரகையில் அவர்கள் இருக்கிறார்கள் அல்லவா?” என்றேன். “துவாரகைக்கு அவர்கள் கொண்டுசெல்லப்பட்டார்கள்” என்று அவன் சொன்னான். “கொண்டுசென்றவர்கள் யார்? பிரத்யும்னனின் படைவீரர்களா?” அவன் “இல்லை, மூத்தவர் ஃபானுவின் படையினர்” என்றான்.

தந்தையே, அங்கிருந்து கிளம்பி துவாரகைக்கு நான் சென்றிருக்கவேண்டும். என் உயிரை அளித்து என் மைந்தர்

உயிரை காப்பாற்றி இருக்கவேண்டும். ஆனால் நன்கு அறிந்திருந்தேன் நான் துவாரகைக்கு செல்ல முடியாது. துவாரகையில் அவர்கள் சிறைவைக்கப்பட்டிருப்பார்கள். அந்நகரை இடித்தழித்தவன் நானே என்று அவர்கள் அதற்குள் அறிந்திருப்பார்கள். என்னை அவர்கள் சிறைப்படுத்தினால் தலைகொய்வார்கள். அதன் பின் என் மைந்தர்களை விட்டுவைக்கமாட்டார்கள். ஏனெனில் அது குடிப்பகையை எஞ்சவிடுவது. அவர்களும் இழிவுபடுத்தி கொல்லப்படுவார்கள்.

அவர்கள் உயிரோடிருக்க வேண்டுமெனில் அவர்கள் கையில் நான் சிக்கக்கூடாது. அவர்களின் பொருட்டு எப்போதேனும் நான் வந்துசேர்வேன் என்று நம்பினால் மட்டுமே அவர்கள் அவர்களை உயிருடன் விட்டுவைப்பார்கள். தங்களிடம் அவர்கள் இருப்பதை அறிவிப்பார்கள். அவர்கள் வெளிப்படையாக அவர்களை சிறை செய்து இழுத்துச் சென்றபின், அச்செய்தி எனக்கு வந்து சேரும்படி அனைத்து ஒற்றர்களிடமும் ஆணையிட்டிருப்பதனாலேயே அதுவே அவர்களின் திட்டம். ஆகவே நான் தலைமறைவாக வேண்டும். அவர்களிடம் சிக்கக்கூடாது.

நான் அங்கிருந்து தப்பி சிந்துவை அடைந்தேன். அதன் ஒழுக்கினூடாக மேலே சென்று, வழியிலேயே கரையணைந்து குறுக்குவழியினூடாக மீண்டும் பாலைநிலத்தில் ஏறி, அங்கிருந்து அவந்திக்கு வந்தேன். என் உள்ளுணர்வால் தேடி அலைந்து இங்கு வந்து சேர்ந்திருக்கிறேன். இந்த இடத்தை கண்டடைவதற்கு எனக்கு என் தவிப்பு மட்டுமே வழிகாட்டியிருக்கிறது. பிறிதொரு வழியில்லை. துவாரகை அங்கு இப்போது எவ்வண்ணம் இருக்கிறது என்று எனக்குத் தெரியாது. ஆனால் என் மைந்தரை கொன்றிருக்கமாட்டார்கள்,

எனக்கான பணயப்பொருளாக அவர்களை வைத்திருப்பார்கள் என்று எனக்கு தெரியும்.

“தந்தையே, நீங்கள் மட்டுமே என் மைந்தர் உயிர்காக்க இயலும். எழுக, தந்தையே! என் மைந்தரைக் காக்க எழுக! உங்கள் பெயர்மைந்தர் அவர். உங்கள் குருதியினர்” என்று பிரதிபானு சொன்னான்.

# ல்பொருசிறுநுரை - 54

**பகுதி நான்கு : அலைமீள்கை – 37**

தந்தையே, நீங்கள் என்னை காத்தருள வேண்டும் என்று கோர எனக்கென்ன உரிமை என்று இத்தருணத்தில் எண்ணிக்கொள்கிறேன். பழி சூழ்ந்தவன். இன்னும் அந்தக் கீழ்மைகளிலிருந்து உளம் விலகாதவன். எனினும் எளியோன், இறையருளால் மட்டுமேதான் காக்கப்படவேண்டும் என்று எண்ணுபவன். என்னைப்போல் ஒருவனுக்கு தெய்வங்கள் இறங்கிவந்தாக வேண்டும். கடையனுக்கும் கடையனுக்குக் கூட கையேந்தி பெறமுடியும் என்ற இடத்திலேயே தெய்வங்கள் இருக்கவேண்டும். பழி சூழ்ந்தவனுக்கு இறங்கி வருகையிலேயே தெய்வங்கள் தம் பெருமையை மண்ணில் நிலைநாட்டிக்கொள்கின்றன.

தாங்கள் எனக்கு கனிவதற்கான அனைத்து வழிகளும் அடைத்திருப்பதாகவே இருக்கட்டும். எனினும் ஒன்றின்

பொருட்டு தங்கள் கை நீண்டுவந்து என்னை தொடலாம். நான் இங்கு வந்திருப்பது என் உயிருக்காக அல்ல, என் மைந்தர் உயிருக்காக. என் வாழ்வில் நான் எனக்கன்றி எவருக்காகவேனும் இவ்வுலகையே விழைவு கொண்டேனெனில், என்னை துளிகூட எண்ணாமல் எதன்பொருட்டேனும் போராடுவேன் எனில், எவருக்காவது என்னை முற்றளிப்பேன் எனில் அது என் மைந்தருக்காக மட்டுமே.

மிக மிகத் தொன்மையான உணர்வு அது. மானுடர் வளர்த்துக்கொண்டதல்ல, தெய்வங்கள் மானுடரில் பொறித்து மண்ணுக்கு அனுப்பியது, அனைத்து உயிரிலும் திகழ்வது, அதன் பொருட்டு எனக்கு அதை நீங்கள் அருளலாம். எனக்கு வாழ்க்கையை அளிக்கலாம். தந்தையே, தாங்கள் எண்ணினால் என்னை காப்பாற்ற முடியும், என் மைந்தரையும் மனைவியையும் விடும்படி ஒரு ஆணை பிறப்பியுங்கள். தங்களுடையதென்று ஒரு சொல் எனக்கு அளிக்கப்படட்டும். இங்கிருந்து கிளம்பிச்சென்று என் உடன்பிறந்தார் முன் பணிகிறேன்.

என் குருதியினர் விடுதலை செய்யப்படட்டும். அதற்கு மாற்றாக என் தலையை அளிக்கிறேன். என் மைந்தர் எங்கேனும் சென்று வாழட்டும். யாதவ நிலத்திற்கு அவர்கள் செல்லமாட்டார்கள். ஒருபோதும் என் நினைவை அவர்கள் பேணமாட்டார்கள். யாதவர் என்ற அடையாளத்தையே அவர்கள் சூடிக்கொள்ளமாட்டார்கள். அச்சொல்லுறுதியை அவர்களுக்கும் தங்களுக்கும் நான் அளிக்கிறேன். என் பொருட்டு கனியுங்கள். தந்தையே, யாதவ குலத்தின் அழிவு என்னிலூடாக நிகழ்ந்தது

உண்மை, ஆனால் நான் ஒரு கருவி என்று தாங்கள் அறிவீர்கள்.

தன்னை ஒரு கருவி எனக் கருதி விழைவை நாடி படைக்கலம் ஏந்திச்செல்வதல்லவா ஒரு ஷத்ரியன் கொள்ளவேண்டிய நெறி? தாங்கள் எழுதிய ஐந்தாவது வேதம் உரைப்பது அது அல்லவா? நான் குலமழித்தோன் எனில் தங்கள் சொல்கேட்டு வில்லேந்திய தனஞ்சயனும் குலத்தை அழித்தவன் அல்லவா? எவரை கொல்கிறோம்? எவர் கொல்லப்படுகிறார்? கொல்பவன் நான் கொல்லப்படுபவன் நான் என்று தங்களில் எழுந்த விண்பேருருவன் உரைத்தான் அல்லவா? உற்றார் உறவினர் என்று பார்க்கவேண்டாம், புவியில் ஒருவனுக்கு அளிக்கப்பட்டுள்ள கடமை எதுவோ அதை செய்க என்று சொன்னவர் நீங்கள் அல்லவா?

தந்தையே, உங்கள் ஒவ்வொரு சொல்லையும் இங்கு வரும்போது எண்ணிக்கொண்டிருந்தேன். அதன்பொருட்டே நான் நின்றேன் என்று உணர்ந்தேன். ஏனெனில் நான் ஷத்ரியன் என்று தன்னை அறிந்தவன். ஷத்ரியன் மண் விழைவதும் வெற்றியை நாடுவதும் புகழ் தேடுவதும் இயல்புதானே? இப்புவியில், விழைவுகளுடன் நிற்பவர்களுக்கு அக்களத்திற்குள் அமையும் உண்மையே உகந்ததாகும். அது பசிக்கையில் உணவென்றும், அஞ்சுகையில் அரண் என்றும், போரில் படைக்கலமென்றும், தனிமையில் துணையென்றும், துயரில் உறவென்றும் வந்தமைய வேண்டும் என்ற உங்கள் சொல் அழிவற்றது அல்லவா?

தந்தையே, பறவைச் சிறகெரித்து, புழுக்குலம் அழித்து, மரங்களில் நா சுழற்றி மூண்டு எரிந்தெழும் காட்டுத்தீயைக் கண்டு தொல்முனிவராகிய காசியபர் கூறியதை உங்கள் நூல்

அல்லவா உரைத்தது. அனலவனே, மென்மையான புதிய பசுந்தளிர் புற்களின் காவலனே, உன் அருளுக்கு வணக்கம் என்றார் அவர். இங்கு நிகழும் நன்றுக்கு நீங்களே பொறுப்பென்று எண்ணுவது ஆணவம். தீதுக்கு நீங்களே பொறுப்பென்று எண்ணுவது மேலும் ஆணவம். இங்கு உங்களை எதிர்த்து நின்றிருப்போரின் வாழ்வை நீங்கள் அமைத்தீர்களா என்ன? இங்குவரை அவர்கள் தெரிந்து வந்தமைந்த வழியை வகுத்தீர்களா? முடிவுக்கு மட்டும் நீங்கள் எவ்வண்ணம் பொறுப்பேற்கிறீர்கள் என்ற உங்கள் சொல்லை நான் தலைக்கொண்டவன்.

இங்கனைத்திலும் நிறைந்திருக்கும் அழிவற்ற ஒன்றின் அலைகளே இவையென்று உணர்ந்தவன் துயரோ களிப்போ கொள்வதில்லை. எழுவதே அமையும். எரிவதே அணையும். எனவே இருமைகளற்று துலாமுள் என நிலைகொள்பவனுக்கு சோர்வென்பதில்லை என்றது உங்கள் மெய்வேதம். நிலமறைந்து பாயும் சிம்மத்தில், முகக்கை சுழற்றிப் பாயும் களிற்றில், சீறிப் படமெடுக்கும் நாகத்தில் எழுகிறது இப்புவியாளும் பெருவிசை. புரவியின் கால்களில், கழுகின் சிறகில், தவளையின் நாவில் வெளிப்படுகிறது. அது தெய்வங்களுக்குரியது. அதனால் ஆற்றப்படுகின்றன அனைத்துச் செயல்களும். அனைத்து அறங்களும் அதனால் நிலைநிறுத்தப்படுகின்றன என்னும் உங்கள் சொற்களையே நான் என் வழிகாட்டி என கொள்கிறேன்.

தந்தையே, இன்று என் குடிக்காக நான் வந்து இரந்து நிற்பதுகூட ஷத்ரிய அறத்தின்படிதானே? தந்தையே, நான் கோழை அல்ல. நானும் நின்றிருந்த தேரில் என் உற்றாரைக் கண்டு ஒருகணம் கைதளர்ந்தவன்தான். உங்கள் சொல்லே

என்னை இங்கே கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறது. இவர்கள் ஏற்கெனவே கொல்லப்பட்டவர்கள் என்று நீங்கள் உரைத்தீர்கள். அவர்களை நான் கொல்லவில்லை எனில் எவரேனும் கொல்லப்போகிறார்கள் என்றீர்கள். நான் கொன்றவர்களும் உங்களால் முன்னரே கொல்லப்பட்டவர்கள், அன்றி இனிமேல் கொல்லப்படவிருப்பவர்கள். உங்கள் மைந்தர்களே ஆனாலும்.

விண்ணில் நிறைவையும் மண்ணில் புகழையும் நான் அடைவதற்கான வழி என்பது போரிடுவது. ஆகவே போரிடுக என்ற சொல்லை என் செவியருகே தாங்கள் உரைத்த ஐந்தாவது வேதம் கூறிக்கொண்டே இருந்தது. நான் இயற்றியதெல்லாம் அதன்பொருட்டே. அதன்பொருட்டே அழித்தேன். எனில் அவ் அழிவும் தங்கள் சொல்லிலிருந்து எழுந்தது. இனி நாளை ஒரு ஆக்கம் உருவாகுமெனில் அதுவும் உங்கள் சொல்லிலிருந்தே எழட்டும். என்னிலிருந்து இனி ஒரு ஆக்கம் நிகழாதென்று நான் அறிந்திருக்கிறேன். என் மைந்தர் எங்கேனும் சென்று புகழ்கொண்டு வென்று வந்தார்கள் எனில் அது தங்கள் சொல் முளைத்ததென்றே ஆகுக!

தந்தையே, வேதத்தில் வாழ்பவன், ஐந்தாம் வேதத்தை உரைத்த தலைவன், வாழும் வேதத்தின் விழுப்பொருள் நீங்கள். உங்களால் உரைக்கப்பட்ட அவ்வேதத்தை எண்ணி செயல்சூழ்ந்தவனாகிய நான் உங்களை வணங்கி கோருகிறேன், என்னை காத்தருள்க! எனக்கருள்க! அளிகூர்க!

பிரதிபானு இளைய யாதவரின் குடிலின் வெளியே மண் மெழுகிய சிறு திண்ணையில் கைகூப்பி அமர்ந்து பேசிக்கொண்டிருந்தான். அவன் அச்சொற்களின் ஒரு பகுதியை உரைத்தான் . ஒரு பகுதியை நெஞ்சில் நிகழ்த்தினான். பிறிதொரு பகுதியை எங்கோ கனவில் தொட்டு பெருக்கிக்கொண்டிருந்தான். பிறிதொரு பகுதி மிக ஆழத்தில் சொல் வடிவே அடையாது நின்று தவித்துக்கொண்டிருந்தது. அனைத்துச் சொற்களும் வழிந்து விலக எச்சமிலாது அகம் முற்றும் வழிந்தொழிய அவ்வெறுமையில் திளைத்தபடி அவன் அமைந்திருந்தான்.

அத்தருணத்தில் கொள்வதற்கும் கொடுப்பதற்கும் ஏதுமில்லை என்று தோன்றியது. அத்தருணத்தில் இருத்தலே இன்மை என்று இருந்தது. அங்கு இருந்தது ஒரு பெரும் அடியிலா அகழி. அன்போ கொடையோ அளியோ வந்து பொழிந்தால்கூட அதனூடாக கடுவெளியின் வெறுமை நோக்கியே சென்று சேரும். பின்பு அவன் மீட்டு தன்னை தேற்றிக்கொண்டான். தானென உணர்ந்தான். பெருமூச்சுடன் திரும்பிவந்து தன் உடல் மேல் படிந்து அமர்ந்தான். கண்களிலிருந்து வழிந்து விழிநீர் உலர்ந்து கோடாகியது. நடுங்கிக்கொண்டிருந்த இரு கைகளின் விரல்களையும் கோத்து இறுக்கி அதைத் தூக்கி அதன்மேல் நெற்றியை வைத்து முகம் தழைத்து உடல் குறுக்கி உடல் விதிர்க்க அமர்ந்திருந்தான்.

பின்னர் நெடுமூச்சுடன் நிமிர்ந்து “கூறுங்கள் தந்தையே, ஒரு சொல்லேனும் கூறுங்கள்” என்றான். இளைய யாதவர் அவன்

சொற்களை கேட்டவர் போலவோ, அச்சொற்களுக்கெல்லாம் அப்பாற்பட்டவர் போலவோ, அக்குடிலுக்குள் தர்ப்பைப் புல் விரித்த பாயில் கால் மடித்து அமர்ந்து கைகளை மடிமேல் கோத்து வைத்து விழிகள் தழைந்திருக்க ஊழ்கத்திலென அமர்ந்திருந்தார். "கூறுக தந்தையே, ஒரு சொல்லேனும் கூறுக!" என்று அவன் மீண்டும் கேட்டான்.

"தங்கள் சொல் பெறாது இங்கிருந்து நான் எழப்போவதில்லை, வேண்டுமானால் எழுந்து தங்கள் கைகளால் என்னை கொல்லலாம். என் பிழைகளுக்கு அது பொறுப்பாகும். ஆனால் சொல்லின்றி எனை நீங்கள் இங்கிருந்து அகற்றப்போவதில்லை" என்று அவன் சொன்னான். அவர் அவன் சொற்களால் தொடப்படாதவராக தன்னுள் நிறைந்த புன்னகையின் ஒளியுடன் அசைவின்றி அவ்வாறே அமர்ந்திருந்தார். அவரை நோக்கியபடி அவன் அங்கு அமர்ந்தான். அந்தப் புன்னகை முதலில் அவனை துணுக்குறச் செய்தது.

"இப்புன்னகைக்கு என்ன பொருள்? உங்கள் ஒரு சொல்கூட இப்புவியில் இல்லாமல் அழியவிருக்கிறது. உங்கள் சொல்லை நிலைநிறுத்த வேண்டுமெனில் நீங்கள் உரைத்த சொல்லும் உங்கள் நினைவும் ஒரு அரசமரபால் பேணப்படவேண்டும். உங்கள் கொடிவழியினர் இங்கு வாழவேண்டும். துவாரகை அழிந்தால் என்ன ஆகும்? யாதவ மைந்தர் அனைவருமே போரிட்டு சாவார்கள். உண்மை, ஆனால் அவர்களின் மைந்தராவது எஞ்சவேண்டுமல்லவா?"

"தந்தையே, என் மைந்தர் அவர்களால் கொல்லப்பட்டால் அது ஒரு தொடக்கம். அது ஒரு தடையின்மையை உருவாக்கும். ஒவ்வொருவரும் மாறிமாறி துணைவியரையும் குழந்தைகளையும் கொல்லத் தொடங்குவார்கள். என்

மைந்தரை காப்பாற்றவேண்டுமென்று இங்கு சொல்ல வரவில்லை. அனைத்து மைந்தர்களும் அவர்களால் காப்பாற்றப்பட வேண்டுமென்பதற்காக இங்கு வந்திருக்கிறேன்."

"முற்றழியும், தந்தையே. யாதவ குலத்தின் குருதி ஒரு துளிகூட இல்லாமல் இப்புவியிலிருந்து மறையும். உங்கள் சொற்களை ஒருபோதும் ஷத்ரியர் நினைவுகூரமாட்டார்கள். அசுரர் நிலைநிறுத்தப் போவதில்லை. அதை தங்கள் குலப்பெருமையென்றும் கொடிவழியின் செல்வமென்றும் கொண்டுசெல்ல வேண்டியவர்கள் யாதவர்கள். அவர்கள் எஞ்சவேண்டும். அதன்பொருட்டு நீங்கள் எழவேண்டும்."

"தந்தையே, உங்கள் வாழ்நாள் முழுக்க நீங்கள் செய்ததெல்லாம் அச்சொற்களை திரட்டி எடுப்பதற்காகவே. அச்சொற்களை நிலைநிறுத்தும்பொருட்டே அப்பெரும்போரை ஒருக்கினீர்கள். அச்சொற்களை குருக்ஷேத்ரப் பெருநிலத்தில் விரிந்த குருதிமேல் நிலைநாட்டினீர்கள். அச்சொற்கள் எஞ்சாது அழிந்தால் என்ன பயன்? உங்கள் வாழ்வுக்கு அதன்பின் என்ன பொருள்? உங்கள் சொல்லுக்கு என்ன மதிப்பு? அதை நம்பி அக்குருக்ஷேத்ரத்தில் உயிர்கொடுத்த பல்லாயிரம் பல லட்சம் எளியோருக்கு நீங்கள் உரைக்கும் மறுமொழி என்ன?" என்றான் பிரதிபானு. நெஞ்சில் அறைந்து பெருங்குரலில் "எண்ணுக, தந்தையே! அதன்பொருட்டேனும் எழுக! ஒரு சொல் எனக்கு உரையுங்கள்" என்றான்.

"தந்தையே, சொல் அனைத்திற்கும் அடியில் இருக்க வேண்டியது அளி. உங்கள் மெய்வேதமோ ஏழு முறை கூர் தீட்டிய வாள் போன்றது என்கிறார்கள். அது பேரறத்தின் கையில் அமைந்திருக்கையில் அல்லவா அதற்கு தெய்வத் தகுதி வருகிறது? பேரறம் என்பது நெறிகளால் ஆனது. மாறாத

முறைகளால் ஆனது. அனைத்து நெறிகளும் முறைகளும் அமைந்திருக்க வேண்டியது பேரளி என்னும் பீடத்தின்மேல். தந்தையே, இனி எஞ்சுவது அளி மட்டுமே. இங்கு உங்கள் குருதிமைந்தன் வந்து உயிருக்கு இரக்கையில் அவ்வளியை எதன்பொருட்டேனும் நீங்கள் ஒழிந்தீர்கள் எனில் உங்கள் சொல்லுக்கு அடியில் தெய்வமென அமர்ந்திருக்க வேண்டிய ஒன்றை மறுக்கிறீர்கள். உங்கள் சொல் அதன்பின் வாழ்ந்தாலும் அதனால் எப்பொருளும் இல்லை என்றாகும்."

"தந்தையே, உங்கள் சொல்லின் தகுதியை எண்ணுங்கள். அது இவ்வுலகம் அனைத்தையும் அழிக்கும் கூர் கொண்டது. கருக்குழவியை சென்று தொடும் நஞ்சும் கொண்டது. ஆக்க விசை பொருந்தியது போலவே அழிப்பதற்கும் முந்துவதே வேதம் என்பார்கள். அதிலிருந்து ஆக்கும் விசையை எடுத்து அகற்றுகிறீர்கள். அது அளியற்ற அரசர்கள் தங்கள் ஆட்சிநெறியின் பொருட்டு தன் மைந்தர் கழுத்தறுக்கவும் உற்றார் குருதிபெருக்கவும் உதவும் சொல்நிரையென்று ஆகும். தருக்கி எழும் குடித்தலைவர்களின் கையில் படைக்கலமென சென்று சேருமெனில் இப்புவியில் உங்கள் சொல் எவ்வாறாக பொருள்படும் இனி?"

"ஆயிரம் குருக்ஷேத்ரங்களை இந்த மண்ணில் நிகழ்த்துமல்லவா? பல்லாயிரம் தலைமுறைகளை கொன்றழிக்கும் அல்லவா? விண்ணிலிருந்து விழுந்த தெய்வத்தின் தீச்சொல்லென அது கருதப்படும் அல்லவா? குருதியிலிருந்து குருதிக்குப் பரவி கொன்றழித்துக்கொண்டே இருக்கும் கொடுநோய் என்று அதை மானுடம் கருதும் அல்லவா? இவ்வொரு துளி இரக்கத்தால் நீங்கள் உயிர்க்குலங்களை காக்க முடியும்."

பிரதிபானு அவரை கூர்ந்து நோக்கினான். பின்னர் சீற்றத்துடன் “நீங்கள் கொண்ட இந்த அமைதி தவமென கருதப்படாது. இந்த அமைதி தன்னிறைவென எண்ணப்படாது. இது தோல்வி என்றே நிறுவப்படும். வஞ்சமென்றே கணிக்கப்படும். கனிந்து இறங்கவேண்டிய இடத்தில் கொள்ளும் விலக்கத்தைப்போல இரக்கமற்றது ஒன்றில்லை. தந்தையே, இத்தருணத்தில் இரங்காவிடில் இப்புவியில் ஒரு தருணத்திலும் நீங்கள் இரங்கப்போவதில்லை. தலைமுறை தலைமுறையென எழுந்து வந்து உங்களை நோக்கி கைநீட்டி அருளை இரக்கும் அடியவர்கள் எவர் கையிலும் ஒரு துளி நீரையோ அமுதையோ நீங்கள் அளிக்கப்போவதில்லை.”

“என்னை நீங்கள் கைவிடவில்லை. என் வடிவில் இங்கு வந்து நின்றிருக்கும் மானுட குலத்தையே கைவிடுகிறீர்கள். நான் பழி சூழ்ந்தவன் என்பதை மறக்கவில்லை. ஆனால் இன்றல்ல, என்றும் உங்களை எண்ணி கையெட்டும் எவரும் பழி சூழ்ந்தவர்களே. பழி சூடாத எவர் புவியில் தெய்வத்தை நினைக்கப் போகிறார்கள்? தன் பழியால், தன்னையே செலுத்திக்கொண்டு திரும்பி வர முடியாத திசைகளுக்குச் சென்ற பின்னர் தான் உணரும் வெறுமையால், அச்சத்தால் தெய்வத்தை எண்ணுகிறார்கள் மானுடர். பழியின் பொருட்டு தெய்வங்கள் மனிதர்களுக்கு இரக்கம் காட்டாமல் இருந்தால் இப்புவியில் ஒருதுளி அருள்கூட விழாமல் போகும்.”

“இங்குள மானுடர் அனைவருமே பழி சூழ்ந்தவர்கள் என்பதும், தவிர்க்க முடியாமல் அதை நோக்கி சென்றுகொண்டிருக்கிறார்கள் என்பதும்தான் இங்கு தெய்வங்கள் கனியவேண்டும் என்பதற்கான தேவை. அவர்கள் இல்லையேல் வாழ்வு நிகழாது என்பதற்கான சான்று அவர்கள் எழுவதே.”

“அளி கொள்க, தந்தையே! அடியவன் பேரில் அளி கொள்க! விண்ணில் மிதந்திருக்கும் தேவரும் தெய்வங்களும் கோடி கோடி என்கிறார்கள். மண்ணில் உயிர்க்குலங்கள் அவற்றுடன் ஒப்பிடுகையில் துளியிலும் துளி என்கிறார்கள். பொருளற்ற திறனற்ற துளிகள். துளியிலொரு துளியாகி நின்றிருக்கும் என் மீது பேருருக்கொண்ட தெய்வமாகிய தாங்கள் எவ்வஞ்சத்தையும் கொள்ள இயலாது. அளிகொண்டே ஆகவேண்டும்.”

“ஆம், ஒருவேளை நீங்கள் உணரலாம். உங்கள் சொல் அழியாச் சொல்லென்பதனால், ஆழ்ந்துசெல்லும் கவிதை என்பதனால் நிலைகொள்ளட்டும் என்று. அரசோ குடியோ அதை முன்வைக்கலாகாது என்று. அது ஓர் இனத்தின், குடியின் சொல் என திகழலாகாது என்று. எனில் நான் அச்சொற்கள் அனைத்தையும் மறந்துவிடுகிறேன். இனி உங்கள் பெயரையே சொல்லமாட்டேன் என்று உறுதி அளிக்கிறேன்” என்று பிரதிபானு கைகூப்பி கதறி அழுதான். “ஒருசொல் உரையுங்கள், தந்தையே. ஒற்றைச் சொல் மட்டும் உரையுங்கள்.”

அவர் அங்கிலாததுபோல் இருந்தார். அவன் அம்முகத்தை பார்த்தான். அது அவனுடைய ஒவ்வொரு சொல்லாலும் பல்லாயிரம் காதம் தள்ளி கொண்டுசெல்லப்பட்டு எங்கோ எங்கோ எங்கோ என சென்றுகொண்டிருந்தது. இங்கிருந்து ஒரு சொல்லும் ஒரு உணர்வும் அங்கு சென்று சேரமுடியாதென்று தோன்றியது. அவன் திகைப்புடன், தனிமையுடன், மேலும் தனிமையுடன், மேலும் மேலும் பெருகும் தனிமையுடன் அதை பார்த்துக்கொண்டிருந்தான். அவனை துளியாக்கி, அணுவாக்கி, இன்மையென்றாக்கி நிறுத்திய தனிமையுடன் அங்கிருந்தான்.

ஒரு கட்டத்தில் அவனுள் ஏதோ ஒன்று அறுந்தது. அவன் அனைத்தில் இருந்தும் வெளியேறினான். எழுந்து தன் மூட்டையை தூக்கிக்கொண்டு திரும்பி நடந்து அச்சிற்றூரிலிருந்து வெளியே சென்றான்.

தண்டகாரண்யத்தின் நடுவே பதினெட்டு மலைமுடிகளால் சூழப்பட்ட பள்ளத்தாக்கில் நடுவே அமைந்திருந்த மந்தரம் எனும் அச்சிற்றூரிலிருந்து பிரதிபானு சௌந்தர்யம், சௌம்யம் என அழைக்கப்பட்ட இரு மலைமுகடுகளுக்கு நடுவே மண்மடிந்து மலைச்சரிவு என்றாகி இறங்கி வந்து வளைந்தெழுந்து மேலே செல்லும் கணவாயினூடாக வெளியேறினான். தண்டகாரண்யத்தின் நடுவே நீண்டு அலைகொண்டு மலைகளில் ஏறி இறங்கிச் சென்ற செம்மண் பாதையில் நடந்து கொண்டிருந்தபோது நேர் எதிரில் ஒருவனை பார்த்தான். அக்கணமே அவனுக்கு தெரிந்துவிட்டது. அசைவிலாது நின்றான்.

அவனுக்குப் பின்னால் படைவீரர்கள் திரள்வதை அவன் கண்டான். முன்னும் பின்னும் படைவீரர்கள் அவனை நெருங்கியவுடன் அவன் தன் கையிலிருந்த பொதியை கீழே போட்டான். மூச்சை இழுத்துவிட்டு அசைவிலாது நின்றான். அவர்கள் அணுகிவந்து சூழ்ந்து நின்றனர். அந்தக் காவல்வீரனை அவன் நன்கு அறிந்திருந்தான். அவனுடைய அணுக்கனாக நெடுங்காலம் திகழ்ந்தவன். அவன் பெயர் சிவகன். அவனை ஒரு வேட்டையின்போது கண்டடைந்தான். அவனுடைய அம்புபட்டு முயல் துள்ளி விழுந்தபோது புரவியில்

அணுகிச்சென்று அவன் தோளைத் தொட்டு "என்னுடன் இரு" என்றான். இந்தத் தருணத்திற்காகத்தானா?

சிவகன் "தங்கள் தலைகொய்து வரும்படி ஆணை, யாதவரே. தலைவணங்கி மண்ணில் அமர்க!" என்றான். "என் தலை வணங்காது" என்று பிரதிபானு சொன்னான். "தலைவணங்கினால் தங்களுக்கு இடுகாடு ஒன்று அமையும். இல்லையெனில் ஏழு துண்டுகளாக இக்காட்டில் வீசப்படுவீர்கள். தாங்கள் கொல்லப்பட்ட இடம் எவருக்கும் உரைக்கப்படாது. கொல்லப்பட்ட மண்ணின் புழுதிகூட மறக்கப்படும். நீர்க்கடன் இயற்றப்படாது நீடிருளில் வாழ்வீர்கள்" என்றான் சிவகன்.

பிரதிபானு கண்ணீருடன் கைகூப்பி "ஒன்று கூறுகிறேன்... நான் ஒன்று கேட்கிறேன். அதை உரைத்தால் நான் என் தலைதாழ்த்துவேன்" என்றான். "கூறுக!" என்று சிவகன் சொன்னான். "என் மைந்தர் என்ன ஆனார்கள்? என் துணைவி சிறையில் இருக்கிறாளா?" என்றான் பிரதிபானு. சிவகன் "யாதவரே, நாங்கள் அங்கிருந்து கிளம்பிய அன்றே உங்கள் மைந்தர் அனைவரும் துவாரகையின் தோரணவாயிலுக்கு வெளியே அமைந்த பாடிவீட்டின் முன் முதுகுத்தோல் உரிக்கப்பட்டு எரிவெயிலில் கழுவில் ஏற்றப்பட்டார்கள். உங்கள் துணைவி உயிருடன் நெய்யூற்றி கொளுத்தப்பட்டார். உங்கள் குருதிவழியின் ஒரு துளியும் எஞ்சவில்லை" என்றான்.

பிரதிபானு நடுங்கிக்கொண்டிருந்தான். "மண்டியிடுங்கள், தலைகொடுங்கள். இத்தருணத்தில் இனி நீங்கள் விழையக்கூடுவது ஒன்றே. உங்கள் குருதிவழியில் எவரேனும் எங்கேனும் உங்களை நினைவுகூர்ந்து ஒரு கை நீரள்ளி விடுப்பது. அதனூடாக மூத்தோர் வாழும் விண்ணுலகுக்கு செல்வது" என்றான் சிவகன். "ஆம்!" என்று உரைத்து அவன்

நடுங்கும் கால்களை வளைத்து மண்டியிடப்போனான். அக்கணத்தில் தோன்றிய ஓர் உணர்வால் பொருளில்லாது அலறியபடி பக்கவாட்டில் பாய்ந்து மணற்புழுதிச் சரிவில் இறங்கி ஓடினான்.

அவன் சென்ற பாதையில் புழுதி சரிந்து அவனை மேலும் உருட்டி கீழே கீழே என கொண்டுசென்றது. அவர்கள் அவனை துரத்தி வரவில்லை. அங்கிருந்தே நோக்கி நின்றார்கள். அவர்களில் ஒருவன் தன் நீண்ட வில்லை எடுத்து அம்பு பொருத்தி செவி வரை இழுத்து அவனை நோக்கி எய்தான். அவன் முதுகில் பாய்ந்த அம்பு அவன் நெஞ்சைத் துளைத்து முன்னால் வந்தது. ஒருகணம் மூச்சு திடுக்கிட்டு வலக்கையும் வலது காலும் இழுத்துக்கொண்டது. புழுதி முகத்தில் அறைய பிரதிபானு மண்ணில் விழுந்தான். இரண்டாவது அம்பு வந்து அவன் விலாவில் தைத்து நின்றது. மூன்றாவது அம்பு அவனை புரட்டியது. நான்காவது அம்பு அவன் நெஞ்சில் தைத்தது. ஐந்தாவது அம்பு வயிற்றில் தைத்தது. பிறிதொரு அம்பு அவனை புரட்டி அதற்கப்பால் இருந்த சிறு பள்ளத்திலிட்டது. இறுதித் துடிப்பும் ஓய்ந்து கை தளர்ந்து விண்ணோக்கி விழித்த விழிகளுடன் பிரதிபானு அங்கே கிடந்தான்.

அவர்களில் இருவர் கீழிறங்கி வந்தனர். அவர்களில் ஒருவன் வாளால் அவன் கைகளையும் கால்களையும் வெட்டி வெவ்வேறு திசைகளுக்கு வீசினான். அவன் நெஞ்சைப் பிளந்து குலையை வெட்டி அப்பால் வீசினான். அவன் தலையை வெட்டி தூக்கி மலைச்சரிவில் வீசினான். அவர்கள் மேலே செல்லத் தொடங்கும்போதே கீழே ஓநாய்களின் ஊளை ஒலிக்கத் தொடங்கியது.

# கல்பொருசிறுநுரை - 55

## பகுதி ஐந்து : எரிசொல் – 1

தண்டகாரண்யத்தின் நடுவே பதினெட்டு மலைமுடிகளால் சூழப்பட்ட பள்ளத்தாக்கில் நடுவே அமைந்திருந்த மந்தரம் எனும் ஆயர்சிற்றூரின் காட்டில் மலைப்பாறை ஒன்றின்மேல் நரை எழா குழல்கற்றையில் மயில்பீலி விழி நலுங்கி அசைய மடியில் வேய்குழலுடன் கைகளை மார்பில் கட்டி இளம் புன்னகையுடன் விழி மூடி அமர்ந்திருந்த இளைய யாதவரின் முன் அமர்ந்து முதிய சூதன் தன் இரு விரலால் குறுமுழவை மீட்டி பன்னிருசீர் கழிநெடிலடி ஆசிரியத்தில் அகவை ஒலியில் பாடிக்கொண்டிருந்தான்.

அவன் மலையிறங்கி நெடுந்தொலைவு கடந்து அங்கே வந்து சேர்ந்திருந்தான். வழி தவறி மலையடுக்குகளில் அலைந்து உயிர்பிரியுமோ என்று அஞ்சும் இறுதியில் சௌந்தர்யம், சௌம்யம் என அழைக்கப்பட்ட இரு மலைமுகடுகளுக்கு நடுவே மண்மடிந்து மலைச்சரிவு என்றாகி இறங்கி வந்து வளைந்தெழுந்து மேலே செல்லும் கணவாயின் விளிம்பில் வந்து நின்றான். கீழே பசுமை நிறைந்து பின்மாலை ஒளியில் அலைகொண்டிருந்த அப்பள்ளத்தாக்கை பார்த்தான். அக்கணம் அவன் உள்ளத்தில் எழுந்தது அந்தப் பீலிவிழி. “இசையிறையே, என்னை காத்தருள்க!” என்று கூவி கண்மூடி வேண்டிக்கொண்டபின் அவன் அந்த ஊரை நோக்கி சென்றான்.

அந்த ஊரை அடைந்த பின்னர்தான் அங்கே தங்கியிருந்தவர் எவர் என்று அவன் உணர்ந்தான். இரு கைகளையும் தலைமேல் தூக்கியபடி அலறிக்கொண்டு அவன் அவர் தங்கியிருந்த சிறுகுடில்முன் சென்று முற்றத்தில் முகம் அறைய விழுந்தான். "புவிக்கிறைவா, நீ அமர்ந்திருக்கும் ஆலயம் இதுவா?" என்றான். இளைய யாதவர் புன்னகைத்து "இதுவும்தான்" என்றார். "இது என்ன கோலம்? ஏன் இங்கிருக்கிறீர்கள்? அறிந்தீர்களா, உங்கள் மாநகரை கடல்கொண்டது. உங்கள் மைந்தர் திறமறிந்து நிலம்மாறினர். நீங்கள் விண்புகுந்துவிட்டீர்கள் என்றே பேசிக்கொள்கிறார்கள்" என்றான் முதிய சூதன்.

"இன்னும் விண்புகவில்லை. இன்னுமுள்ளன கடன்கள்" என்றார் இளைய யாதவர். "விண்ணுறைவோனே, உனக்குமா கடன்?" என்று முதிய சூதன் கேட்டான். "மானுடன் செயலாற்றாமல் இருக்கவியலாது. செயல் மறுசெயல்கொண்டது. ஒன்றுதொட்டு ஒன்றென விரிவது. எவரும் அதை கடக்கவியலாது" என்று இளைய யாதவர் சொன்னார். "செயல்கடந்தவர் சிலர். செயலுக்கு மறுசெயலாற்றி திகைந்து மீள்பவர் சிலர். நான் இரண்டாமவன்." முதிய சூதன் "யாதவரே, ஏன் இங்ஙனம் ஆயிற்று?" என்று கண்ணீருடன் கேட்டான். "நான் உம்மிடம் கேட்கவேண்டிய வினா அல்லவா அது? கூறுக, ஏன் இங்ஙனம் ஆகிறது?" என்றார் இளைய யாதவர்.

"நானறிந்ததெல்லாம் கதைகளே. நாவும் செவியும் பரிமாறிக்கொள்ளும் சொற்கள் மட்டுமே" என்றான் முதிய சூதன். "எனில் அதை சொல்லுங்கள்" என்று இளைய யாதவர் சொன்னார். "அவற்றுக்கு என்ன பொருள்?" என்று முதிய சூதன் கேட்டான். "இங்கே பொருளென்று ஏதுமில்லை. பொருளென

எதையேனும் கொள்ளமுடியும் என்றால் அது கதைகளின் உட்பொருளை மட்டுமே" என்றார் இளைய யாதவர். "சொல்லுங்கள், உமது கதைகள் சொல்வதுதான் என்ன?" முதிய சூதன் "அதை நான் பாடுகிறேன். அதற்காகவே இங்கே நான் கொண்டுவரப்பட்டேன் போலும்" என்றான்.

கேளுங்கள். விண்முன் பிறிதொரு விண் என விரிந்த நகர்கள் பல இப்புவியில் இருந்ததுண்டு. சூரபத்மனின் வீரமாகேந்திரம், மகிஷாசுரனின் மாகிஷ்மதி, நரகாசுரனின் பிரக்ஜ்யோதிஷம், ஹிரண்யகசிபுவின் மகாகாசியபபுரி, ஹிரண்யாக்ஷனின் ஹிரண்யபுரி, ராவணனின் இலங்கை... அவ்வண்ணம் எத்தனை! கல்வி பொலிந்தவை, கலை சிறந்தவை, செல்வம் எழுந்தவை, புகழ் பெருகியவை. சொல்லில் மட்டுமே தடம்விட்டு அவை மறைந்தன. அவை எங்ஙனம் அழிந்தன? நான் நான் எனும் ஆணவம் அந்நகரென விரிந்தது. அதை தெய்வங்கள் பொறுப்பதில்லை. ஆணவத்தை வெல்ல எழுகிறது தெய்வம்.

எதன்பொருட்டென்றாலும் ஆணவத்தை தெய்வங்கள் பொறுத்துக்கொள்வதில்லை. சில தருணங்களில் ஆணவம் அறத்தின் படைக்கலமாகிறது. அழியாச் சொல்லொன்றை உருவாக்கும் பொருட்டோ பெருங்கலை ஒன்றை நிகழ்த்தும் பொருட்டோ கூர்கொண்டு வான்தொட எழும் ஆணவங்கள் உண்டு. அவை தெய்வங்களுக்குரியவை. எனினும் அவற்றையும் தெய்வங்கள் விரும்புவதில்லை. தெய்வங்கள் பேராணவங்களை பலிவிலங்குக்கு உணவளிப்பதுபோல் பேணுகின்றன. அவை விளைந்தபின் தங்கள் அவியென கொள்கின்றன.

தெய்வங்கள் என்பவை என்ன? இப்புடவி அவி விறகெனில் இதில் எழும் அனலே தெய்வங்கள். விறகிலுறைகின்றன

மூன்று அனல்கள். நெய்யில் உறைகின்றன மூன்று அனல்கள். கனிகளில், மலர்களில் உறைகின்றன மூன்று அனல்கள். ஆணவம் எழும் அம்மானுடனின் அகத்திலேயே உறைகின்றன அவனைக் கொன்று பலிகொள்ளும் தெய்வங்கள்.

முன்பு மூவுலகையும் வென்று மும்முடி சூடிய நரகாசுரன் தன் பெருநகரை முழுதுற அமைத்த பின்னர் அதன் நடுவில் விண் சுட்டும் விரலென எழுந்த காவல்கோட்டத்தின் மேலே ஏறி நின்று சுழன்று அதை நோக்கினான். "என்னையன்றி இதை அழிக்க எவரால் முடியும்!" என்று கூறி அவன் நகைத்தபோது அருகிலிருந்த இளையவரும் படைத்தலைவர்களும் திகைத்தனர். "ஆம், மூன்று தெய்வங்களாலும் இயலாது. ஆனால் நான் ஒற்றை சுட்டுவிரல் நீட்டி இதை அழிப்பேன்" என்று அவன் கூறினான். அச்சொல்லை அவன் இளையோன் குறி தேரும் நிமித்திகனிடம் கூறி "கூறுக நிமித்திகரே, அதன் பொருளென்ன, அத்தருணத்தில் அது எழுந்ததற்கு அடிப்படை என்ன?" என்று கேட்டான்.

நிமித்திகன் "உள்ளிருந்து அதை சொன்னது ஒரு தெய்வம். தருக்கி, தன்னைப் பெருக்கி எழும் ஒருவன் தனக்கு மேலாக அப்படி ஒரு தெய்வத்தை உருவாக்கி நிலைநிறுத்தவில்லை எனில் இத்துலாக்கோல் நிலைகொள்ளாதென்று உணர்க! இன்று ஆணவமும் அத்தெய்வமும் முற்றிலும் நிகர்நிலையில் நின்றிருக்கின்றன. ஆனால் அது தெய்வம் என்பதனால் அது ஒருகணம் முந்தும். முந்தும் கணம் இந்நகர் அழியும். ஆக்கியவனே அழிப்பதுதான் அனைத்துப் பெருங்கட்டமைவுகள் கொண்டுள்ள அழியா ஊழ் என்கின்றன நூல்கள்" என்றான். "சிலபோது அவ்வழிவை ஆக்கியவன் தன் விழிகளால்

காணாதொழியலாம். ஆயினும் அழிவை
தொடங்கிவைத்துவிட்டே அவன் செல்ல முடியும்.”

துவாரகை இப்போது அழிந்துவிட்டது. அதன்மேல் விண்ணின் விசைகளால் கடலில் எழுந்த பேரலை வந்து அறைந்தது. கல்மேல் கல் இன்றி அது வீழ்த்தப்பட்டது. அதன்மேல் கடல்மணல் பரவியது. சூறைக்காற்றுகள் அதை சென்று சென்று அறைந்தன. சூழ்ந்திருந்த பெரும்பாலையில் இருந்து காற்று கடல்நோக்கி வீசியபோது அதன்மேல் மணல் பொழிந்தது. மேலும் மேலுமென அலைகள் வந்து அந்நகரை கடலுக்குள் இழுத்துக்கொண்டிருக்கின்றன. நீரில் இறங்கிச் சென்றுகொண்டே இருக்கிறது அப்பெருநகர்.

நிகழும் ஒவ்வொன்றும் முன்னரே சொல்லென்று நிலைகொள்கின்றன. சொற்கள் ஒவ்வொன்றும் முன்னரே எண்ணமென்று நிலைகொள்கின்றன. எண்ணங்கள் ஒவ்வொன்றும் இயல்கை என்று இப்புடவியில் நிலைகொள்கின்றன. இங்கே நிகழ்வன அனைத்தும் அவ்வண்ணம் நிகழ்ந்தேயாகவேண்டும் என்று வகுக்கப்பட்டவை என்பதே நூலறிவோர் கூற்று. நீர்படும் புணைபோல் இங்கே வாழ்வென்பதனால் எளியோரை இகழ்தலும் பெரியோரை வியத்தலும் இணையாகவே பிழையென்று அறிந்தனர் சான்றோர். அவர் வாழ்க!

கேளுங்கள் இந்தத் தொல்கதையை. முன்பொருநாள் முதுமுனிவர் விஸ்வாமித்ரர் துவாரகைக்கு வந்தார். அவர் அவந்தியில் இருந்து பெரும்பாலை நிலத்திற்குள் புகுந்து பல நாட்கள் நீரின்றி உணவின்றி நெடுந்தொலைவு நடந்து வெடித்துப் புண்ணான கால்களுடன், நீராடாமையால் அழுக்கேறிய உடலுடன், நைந்து உடலில் கிழிந்து தொங்கிய

ஆடைகளுடன், தோளில் பகுத்திட்ட சடைக்கற்றைகளில் புழுதியும் சருகுப்பொடியும் நிறைந்திருக்க வந்து துவாரகையின் நுழைவுப்பெருவாயில் முன் நின்றார். மேலிருந்து அவரைக் கண்ட காவலன் படியிறங்கி ஓடிவந்து அவ்விசையிலேயே அவர் முன் முழந்தாளிட்டு நெற்றி நிலம்தொட வணங்கி "வருக முனிவரே, இப்பெருநகரம் தங்களால் வாழ்த்தப்பட்டது" என்றான்.

அவன் தலைதொட்டு வாழ்த்தி புன்னகைத்த விஸ்வாமித்ரர் "நான் இளைய யாதவரை பார்க்க வந்தேன்" என்றார். "வருக! அவர் தங்களால் வாழ்த்தப்படட்டும்" என்று அவன் சொன்னான். "என் தோற்றத்தை இவ்வண்ணம் கண்ட பின்னும் எவ்வாறு என்னை இந்த மங்கலப்பெருநகருக்கு வரவேற்கிறாய்?" என்று விஸ்வாமித்ரர் கேட்டார். "தங்கள் தோற்றத்தால்தான்" என்று அவன் மறுமொழி சொன்னான். "இந்நகரை இன்று பாரதவர்ஷத்தில் அனைவரும் அறிவார்கள். இங்கு தூய்மையும் மங்கலமும் கேளிக்கையும் நிலவுகிறதென்பதே உலகோர் சொல். திருமகள் கோயில் கொண்டுள்ள இந்த இடத்தை ஒவ்வொருவரும் நீராடி தூய்மை கொண்ட பிறகே அணுகுகிறார்கள். நெடுந்தொலைவு பயணம் செய்து வரும் வணிகர்கள்கூட சோலைகளில் தங்கள் ஆடைகளைத் திருத்தி குழல்திருத்தி முகம்மலர்ந்து நுழைகிறார்கள். இவ்வண்ணம் கடுந்தவக்கோலம் கொண்ட ஒருவர் இக்கோலத்தை தன் நோன்பெனக் கொண்ட ஒருவராகவே இருக்க இயலும்" என்றான் காவலன்.

விஸ்வாமித்ரர் உரக்க நகைத்து "மெய்" என்றார். "ஆயினும் என் வருகையால் இந்த நகரின் மங்கலம் குறைந்துவிடும் அல்லவா? என்னை இந்நகரில் பிறர் விழிகளில் இருந்து

மறைத்து அழைத்துச் செல்ல அல்லவா நீ முயலவேண்டும்?" என்றார். "முனிவரே, அனைத்து அழகுகளும், அனைத்து மங்கலங்களும், அனைத்து வெற்றிகளும், அனைத்துப் புகழும் தவத்திற்கு ஒரு படி கீழானவையே என்கின்றன மூத்தோர் சொற்கள். தவத்தை விட பெரிய மங்கலமும், தவத்திற்கு நிகரான செல்வமும், தவத்திற்கு நிகரான புகழும், தவத்திற்கு நிகரான வெற்றியும் இப்புவியில் இல்லை. தவத்தை வணங்குகையிலேயே இவை ஒவ்வொன்றும் பொருள் கொள்கின்றன. தவத்தோடு முரண்கொள்கையில் மங்கலங்கள் குலைகின்றன, செல்வம் பயனிழக்கிறது, புகழ் வெறுங்கதையாகிறது, வெற்றி தலைகீழாகிறது" என்று அவன் கூறினான்.

"நன்று, இத்தெளிவு இந்நகரில் இருக்கும் வரை இது வாழும்" என்றபின் அவர் தங்கள் அவைக்கு வந்தார். நீங்கள் உங்கள் அரண்மனை முற்றத்தில் தொழுத கையுடன் இறங்கி வந்து முடித்தலையும் எட்டுறுப்பும் புழுதிபட வணங்கி அவரை தங்கள் அவைக்கு அழைத்துச் சென்றீர்கள். அவர் தங்கள் அவையில் அமர்ந்திருக்க நீங்கள் அரியணை அமராமல் சிறுபீடத்தில் அமர்ந்து அவர் உரைத்த விழுப்பொருளை கேட்டீர்கள். அன்று அப்பெருநகர் திரண்டு வந்து அவரை வணங்கியது. அதன் அனைத்து மங்கல அவைகளிலும் அவர் சென்று வீற்றிருந்தார். நகரின் படைத்தலைவர்களும் அமைச்சர்களும் அவரை தாள்பணிந்து வணங்கினார்கள். மங்கல அன்னையின் விழித்தோற்றமென எழுந்த எட்டு அரசியரும் அவர் அடிபணிந்தனர்.

விஸ்வாமித்ரர் அந்நகரிலிருந்து திரும்பிச்செல்கையில் அளித்ததன்றி பெற்றுக்கொண்டதென ஏதுமில்லை.

அந்நுழைவாயிலைக் கடந்து செல்கையில் ஒருகணம் திரும்பி காலில் இருந்த புழுதியை தட்டிவிட்டு அக்கணமே அந்நகரை மறந்து அகன்றார். அவர் உரைத்த வாழ்த்துக்கள் மட்டும் அந்நகரில் எஞ்சியிருந்தன. அவர் வந்துநின்ற இடத்தில் இருந்து மண் எடுத்து கொண்டுசென்று துவாரகையின் தென்கிழக்கு அனல்மூலையில் சிற்றாலயம் ஒன்று அமைக்கப்பட்டது. அவர் வந்துநின்ற அந்நாள் ஆண்டுதோறும் விழாவென்று கொண்டாடப்பட்டது. அன்று அனலெழுப்பி வணங்கி அவருடைய மெய்ச்சொற்கள் ஓதப்பட்டன.

அரசே, மீண்டும் ஒருமுறை அவர் துவாரகைக்குள் நுழைந்தார். அப்போது நீங்கள் துவாரகையை நீங்கி நைமிஷாரண்யத்தில் தங்கியிருந்தீர்கள். துவாரகை உங்களை மறுக்க முனைந்துகொண்டிருந்தது. மறுக்கும்பொருட்டு வெறுக்க முனைந்தது. வெறுக்கும்பொருட்டு உங்களில் இருந்து விலக முயன்றது. விலகும்பொருட்டு நீங்கள் கூறியவையும் இயற்றியவையும் காட்டியவையும் ஆகிய அனைத்துக்கும் எதிர்த்திசைக்கு சென்றுகொண்டிருந்தனர்.

விஸ்வாமித்ரர் துவாரகையின் நுழைவாயிலை அடைந்த அன்று அங்கு காவல்படைவீரர்கள் பெருந்திரளென காத்திருந்தனர். அவர்கள் அவந்தியிலிருந்து வந்துகொண்டிருக்கும் வணிகர் குழு ஒன்றுக்காக பொறுமையிழந்து நின்றனர். தோரணவாயில் மேல் ஏறி நின்றிருந்த வழிநோக்கி நெடுந்தொலைவில் நோக்கை நிறுத்தியிருந்தான். அப்போது துவாரகையில் சாம்பனின் ஆட்சி நிலவியது. சாம்பன் தன் நெடுங்குடியைச் சேர்ந்த நிஷாதர்களையும் அசுரர்களையும் படைகளில் பெருமளவுக்கு கலந்திருந்தார். மைய அரசுநிலைகள் அனைத்திலும் தன்னவரே

நிலைகொள்ளவேண்டும் என்று முடிவு செய்திருந்தார். ஆகவே அசுரர் குடித்தலைவனாகிய விருஷபன் தலைமையில் அங்கு காவல் நிகழ்ந்திருந்தது.

அப்போது வணிக வண்டிகள் நகருள் நுழைகையில் அனைத்துக் காவல்நிலைகளிலும் அவர்களிடமிருந்து சிறு பரிசுகளும் கையூட்டுகளும் பெறுவது வழக்கமாக இருந்தது. முதலில் அதைக் குறித்த குற்றச்சாட்டுகள் சாம்பனின் அவைக்கு சென்றபோது சாம்பனின் அமைச்சரும் தங்கள் இளமைத்துணைவருமாகிய ஸ்ரீகரர் "அரசே, ஒருபோதும் இதை ஒப்பலாகாது. அரசுக்குக் கட்டுப்பட்டவர்கள் அரசு அளிக்கும் நெறிகளை மீறி இவ்வண்ணம் தங்களுக்கென பொருள் சேர்க்கலாகுமெனில் அவர்கள் அரசெனும் நெறியை மீறுகிறார்கள். அரசென்பதே நெறிகளின் தொகுதியான ஒரு பெருநெறிதான். அதில் ஒரு நெறியை மீறுகையில் அரசை மீறுகிறார்கள் என்றே பொருள். அரசை மீறி ஒருவன் அரசின் முகமென அங்கிருக்கிறான் எனில் அந்த அரசு முற்றாக தோற்றுப்போகும். காவல்நிலைகளில் கையூட்டென்பது அரசன் கோலுடன் நின்று வழிப்பறி செய்வதற்கு நிகரானது" என்றார்.

ஆனால் அசுர குடியினராகிய அமைச்சர் வக்ரர் "நாம் நமது படைத்தலைவர்களுக்கு செல்வத்தை ஊதியமாக அளிக்கிறோம். அச்செல்வமும் இவ்வணிகரிடமிருந்து கொள்ளப்பட்டதே. வணிகர்கள் நேரடியாக அவ்வூதியத்தை கொடுக்கிறார்கள் என்று மட்டுமே இதை பொருள்கொள்ள வேண்டும்" என்றார். "நாம் எத்தனை ஊதியம் கொடுத்தாலும் கீழே உள்ளோர் நிறைவடைய மாட்டார்கள். தங்கள் தகுதிக்கு அதைவிட மிகுதியான செல்வம் கிடைத்தாக வேண்டும் என்ற எண்ணமே அவர்களை ஆட்டுவிக்கும். அவர்களே தாங்களும் சிறிது

ஈட்டிக்கொண்டால் அது தங்கள் தகுதியினால் ஈட்டிக்கொண்டதாக எண்ணுவார்கள். அதனால் மகிழ்வார்கள். செயலூக்கம் கொண்டவர்கள் தங்கள் செயல்களால் ஈட்டப்படுவனவற்றிலேயே மகிழ்வார்கள்."

வக்ரர் தொடந்து சொன்னார் "அரசே, ஆயிரம் பொன் ஊதியமாக பெறும் ஒரு படைவீரன் ஐந்து பொன்னை கையூட்டாக பெற்றால் அடையும் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. சற்றேனும் சூறையாட ஒப்பாத படை வெற்றியை நாடுவதில்லை, சற்றேனும் கையூட்டு பெற வாய்ப்பற்ற அரசு நீடிப்பதில்லை என்பதே நடைமுறை. மாளிகைகளின் கற்களைத் தூக்கி அடுக்குகையில் சற்றே நெகிழ்வுடன் அவை அமைக்கப்படவேண்டும் என்று சொல்வார்கள். அவை தம்மைத் தாமே அசைத்து அமைத்துக்கொள்ள இடமளிக்கவேண்டும். அது போன்றதுதான் இது. இந்நெகிழ்வால் நாம் ஆற்றலுறுவோம் என்றே உணர்க!"

"அவர்களின் பற்றும் செயல்பாடும் அரசுக்கெதிராக இல்லாமல் பார்த்துக்கொள்வது நமது கடமை. சற்று அவர்கள் பொருளீட்டிக்கொள்ள நாம் ஒப்பினால் ஒவ்வொருவரும் மும்மடங்கு பணியாற்றுவாரகள். ஒவ்வொருவரும் தங்கள் நலனுக்குரியது என்று தாங்கள் கருதும் இவ்வரசை இறுதிவரை காத்து நிற்பார்கள். இதன் நிலைக்கோளும் வெற்றியும் அவர்களின் கூட்டுப்பொறுப்பு என்று ஆகுகையில் ஒவ்வொருவரும் தங்கள் முழு வீச்சையும் வெளிப்படுத்துவார்கள்" என்று வக்ரர் சொன்னார். "அறிக, அவர்கள் ஊதியத்துக்கு மட்டுமே பணியாற்றுவார்கள் எனில் அவர்களின் பணி எல்லைக்குட்பட்டது! அதை இடர்களில் நம்ப இயலாது. அதை நம் தேவைக்கேற்ப விரிக்கவும் இயலாது."

ஸ்ரீகரர் "அரசே, பேரரசுகள் மெய்யான பெருநம்பிக்கையால் நிலைநிறுத்தப்படுபவை. தன்னலநோக்கால் அல்ல. குலப் பற்றால், இனப் பற்றால், அறப் பற்றால், இறைப் பற்றால் அவற்றின் அடித்தளம் அமையவேண்டும். தன்னலத்தால் அமைந்த பெருநகரங்கள் எதுவும் வாழ்ந்ததில்லை. ஏனெனில் ஒவ்வொருவரின் தன்னலமும் இன்னொருவரின் தன்னலத்துடன் முரண்படுவது. ஒரு நகரத்தின் ஊழியர்கள் ஒவ்வொருவரும் தங்களுக்குள் கொள்ளும் ஒத்திசைவினால் அதன் ஆற்றல் உருவாகிறதே ஒழிய ஒருவரோடொருவர் போட்டி போடுவதனால் அல்ல. நாம் ஒருவரை கையூட்டு வாங்கவிட்டால் இன்னொருவரை வென்றே அவர் அதை கொள்ளமுடியும். ஒருவர் இன்னொருவரை அழித்தே தான் வெல்லமுடியும். நம்முடன் நாம் போரிடுவோம். நம்மைநாமே தோற்கடித்துக் கொள்வோம்" என்றார்.

ஸ்ரீகரர் சொன்னார் "எந்நிலையிலும் ஓர் அரசுக்கு அடிபணிந்து ஊழியர்களாக இருப்பவர்கள் தங்களுக்கென ஒரு தனிச்செயல்பாடு கொண்டிருக்கலாகாது. கணவன் மனைவிக்கோ மனைவி கணவனுக்கோ தெரியாத மந்தணச் செயல்பாடுகள் எதுவும் கொண்டிருக்கலாகாது என்பதுபோல. ஏனெனில் ஒரு மந்தணம் பல மந்தணங்களை உருவாக்குகிறது. அது அங்கு நிற்பதில்லை. அரசு ஊழியன் ஒருவன் அரசு என நூல் வகுக்கும் ஒரு நெறியை மீறும் செயலை எவரும் அறியாது செய்தாலும்கூட அது குற்றமே. அரசு என்பது நெறிகளாலானது எனில் ஒவ்வொரு அரசு ஊழியனும் அப்பெருநெறியின் ஒரு கூறென அமையும் சிறுநெறிகளால் ஆனவன். அவனுக்கு அளிக்கப்பட்டுள்ள பணியிடம், பொறுப்பு, எல்லை என்னும் மூன்று வரையறைகளை அவ்வூழியன் தலைக்கொண்டாக வேண்டும். அவற்றில் ஒன்றை மீறுவான்

எனினும் அவன் தன்னை அக்கணமே ஊழியனல்ல என்று ஆக்கிக்கொள்கிறான். அவன் பணிநீக்கம் செய்யப்பட வேண்டும் அல்லது உயிர்நீக்கம் செய்யப்பட வேண்டும்.”

ஆனால் வக்ரர் நகைத்து “இந்தச் சொற்கள் நூல்கள் கூறும் உயர்கொள்கைகள் மட்டுமே. அரசே, எங்கும் எந்நகரிலும் இவை நடைமுறையில் இல்லை. மானுடரின் இயல்பென்பது விழைவுகளால் ஆனது. நாம் இங்கு முனிவர்களைக் கொண்டு அரசு நடத்தவில்லை. போர்வீரர்களைக் கொண்டு நடத்துகிறோம். அமைச்சர்களைக் கொண்டு நடத்துகிறோம். வணிகர்களைக் கொண்டு நடத்துகிறோம். வேளாண்குடிகளைக் கொண்டு நடத்துகிறோம். அமைச்சர்கள் பொன் விழைவதனால்தான் வேதம் துறந்து இங்கு வருகிறார்கள். வெற்றியையும் புகழையும் செல்வத்தையும் விரும்புவதனால்தான் படைவீரர்கள் வாளெடுத்து வருகிறார்கள். வணிகர்களை எல்லைகடக்கச் செய்வதும் வேளாண்குடிகளை மண்ணில் வியர்வை வீழ்த்தச் செய்வதும் பொன்னே. அரசே, விழைவே அந்தணரையும் ஷத்ரியனையும் வணிகனையும் குடிகளையும் இயக்குகிறது” என்றார்.

“அவ்விழைவை எட்டு தளைகளில் பிணைத்துவிட்டு அவர்களை பணியாற்றச் செய்ய எவராலும் இயலாது. அவர்கள் தங்கள் விழைவு நிலைபெறவும் மேலும் விழைவுகள் கொள்ளவும் முன்னேறிச் சென்றுகொண்டே இருக்கவேண்டும். அரசன் அவ்வாய்ப்பை அறிந்தே அளித்தாகவேண்டும். மீள மீள ஒன்றையே செய்யும் சலிப்பிலிருந்து படைவீரர்களை மீட்பது அது. ஒன்றையே எதிர்பார்க்க முடியும் எனும் சோர்விலிருந்து அவர்களை விடுவிப்பது. சற்றேனும் வேட்டையாட

ஒப்பாவிட்டால் ஓநாயை வீட்டில் வளர்க்க இயலாது" என்றார் வக்ரர்.

சாம்பன் இருபுறமும் கேட்டு குழம்பியவர் போலிருக்க வக்ரர் உரத்த குரலில் "அரசே, இது அவையேயாயினும் நான் இதை கூறுகிறேன். ஒன்று எண்ணுக! நீங்கள் ஒரு படைவீரர் என காவல்கோட்டத்தில் அமர்ந்திருந்தால் எதை விரும்புவீர்கள்? வகுக்கப்பட்ட நெறிகளினூடாக ஒழுகிச் செல்வதையா, அன்றி வென்று முன்செல்வதையா? வகுக்கப்பட்ட வழியில் மாறாது அமைவது நோன்பு. அது படிவர்களுக்கும் வேதம்புரக்கும் அந்தணர்களுக்கும் உரியது. அவர்களின் தன்னிறைவு அதிலிருக்கிறது. மீறிச்சென்று வெற்றியை அடைந்து தானென தருக்கும் கணங்களை அடைவதே ஷத்ரியர்களின் வாழ்க்கை. அசுரர்களின் வாழ்க்கை. எதை நீங்கள் உங்கள் வீரர்களுக்கு பரிந்துரைப்பீர்கள்?" என்றார்.

சாம்பன் முடிவேதும் கூறாமல் அவையிலிருந்து எழுந்து சென்றார். ஆனால் அவர் வக்ரரின் முடிவையே எடுத்தார். எதுவும் அறிவிக்கப்படவில்லை எனினும் சிறிய குற்றச்சாட்டுகள் எவையும் கருத்தில் கொள்ளப்படவில்லை. அவை கருத்தில் கொள்ளப்படவில்லை என்று தெரிந்ததும் அவை சற்று பெரிதாயின. நகரெங்கும் அனைத்து வீரர்களுமே கையூட்டு பெறலாயினர். கையூட்டு பெற்றவர்கள் பெறாதவர்களைவிட செல்வமும் கோன்மையும் கொண்டவர்களாயினர். அவர்களை பிறர் மதித்தனர், அஞ்சினர். அவர்கள் வெற்றி பெற்றவர்களாக கருதப்பட்டபோது கையூட்டு பெறாதவர்கள் தோல்வி அடைந்தவர்களாக மாறினர். அவர்கள் கையூட்டு பெற்றேயாக வேண்டுமென்ற அழுத்தத்தை அவர்கள் குடும்பமும் குடியும் சுற்றமும் அளித்தன.

நாளடைவில் நகரத்தில் கையூட்டு ஒரு நிலைபெற்ற வழக்கமாகியது. பின்னர் அது ஒரு முறைமையாகியது. முறைமையாகியதனால் சலிப்படைய வைத்தது. அம்முறைமையை மீறி மேலும் மேலும் பெரிய கையூட்டுகள் பெறும் வழக்கம் தொடங்கியது. அதன்பொருட்டு நெறிகளை மீறுவது வீரம் என்றும் அறிவு என்றும் ஆகியது. ஒருகட்டத்தில் படைவீரர்கள் ஒரு பொன் ஊதியமாக பெற்றால் பத்து பொன்னை கையூட்டென பெற்றனர். வணிகர்கள் அக்கையூட்டுக்கும் சேர்த்து பொருட்களை விலைகூறினர். பொருட்கள் விலையேறியபோது அதை வாங்குபவர் ஒவ்வொருவரும் மேலும் பொருள் சேர்க்க வேண்டியிருந்தது. ஆகவே ஒவ்வொருவரும் தங்கள் உழைப்புக்கும் தங்கள் பொறுப்பிற்கும் மேலும் பொருள் விழைந்தனர்.

அதன் விளைவாக எளியோர் மேலும் எளியோராயினர். செல்வர் மேலும் செல்வராயினர். துவாரகை ஓரிரு மாதங்களுக்குள்ளாகவே இருபெரும் பிரிவுகளாக பிரிந்தது. எதையேனும் செய்து பெரும்பொருள் ஈட்டும் வாய்ப்புடையவர்கள் அனைத்து நெறிகளையும் கடந்து அதை ஈட்டி அப்பொருளைக்கொண்டு மேலும் பொருள் பெருக்கி மேலும் நுகர்ந்து மேலும் இடம் தகைந்து எழுந்தனர். ஒருவரை நூறு பேர் பணிய வேண்டியிருந்தது. அந்நூறு பேர் உழைத்தாலும் எழமுடியவில்லை. அவர்கள் பணியுந்தோறும் இழந்தனர். இழக்குந்தோறும் மீண்டும் பணிந்தனர். ஏதிலிகளாயினர். அவர்கள் தங்களை மிதித்து ஏறி தலைமேல் அமர்ந்து ஆண்டவர்களை தகுதியால் வென்றவர்கள் என்று எண்ணினார்கள். ஆகவே அவர்களை வழிபட்டனர். என்றேனும் அவர்களைப்போல் தாங்களும் ஆகிவிட முடியுமென்று கனவு

கண்டனர். தங்களைக் கொன்று புசிக்கும் புலியை தெய்வமென வழிபடும் வெள்ளாட்டுக்கூட்டங்களென மக்கள் ஆயினர்.

பிற நிலங்களில் பல ஆண்டுகளில் நிகழ்ந்த மாற்றம் ஒரு சில மாதங்களில் துவாரகையில் நிகழ்ந்தது. ஏனென்றால் பல பல ஆண்டுகளாக தலைமுறைகளாக வளர்ந்து வரும் நகரங்கள் அவை. துவாரகையோ ஒரு தலைமுறைக்குள் பொங்கிப் பெருகி பேருரு கொண்ட நகரம். அங்கே ஒவ்வொன்றும் ஏழுமடங்கு விரைவில் நிகழ்ந்தன. அதன் ஆக்கமும் அழிவும் அவ்வண்ணமே. அங்கே கலையும் சொல்லும் வளர்ந்ததும் அவ்வண்ணமே. நாளில் நிகழ்வது கனவில் மின்னுகிறது என்பார்கள். பாரதவர்ஷத்தில் ஒரு விதை மண்கீறி எழும் பொழுதில் துவாரகையில் அது கனியாகிவிட்டிருக்கும் என்றனர் கவிஞர்.

அந்நகரில் அன்று நுழையவிருந்த வணிகர் குழுவிடமிருந்து கையூட்டு பெற்று பகிர்ந்துகொள்வதற்காக விழைவெழுந்து புலரிமுதலே காத்திருந்து பொறுமையிழந்து நிலைகொள்ளாமல் நின்றிருந்த படைவீரர்களுக்கு முன்னால் நெடுந்தொலைவில் தன்னந்தனியாக விஸ்வாமித்ரர் தோன்றினார். கிழிந்த தோலாடையும் புழுதிச்சடைகளும் கொண்ட தவக்கோலத்தில் நடந்துவந்து அவர்கள் முன் நின்றார்.

அரசே, அறிக! சில தருணங்கள் ஊழால் வகுக்கப்பட்டவை. அவை சொல்லை பொருள் தொடுவதுபோல சொல்லிமுடியாத நுண்மைகள் கொண்டவை என்றான் முதிய சூதன்.

# கல்பொருசிறுநுரை - 56

## பகுதி ஐந்து : எரிசொல் – 2

அவந்தியில் இருந்து துவாரகைக்கு வரவேண்டியிருந்த வணிகக்குழுவினர் எதிர்க்காற்றில் புழுதி இருந்தமையால் சற்று பிந்தினர். ஆகவே அவர்களுக்கு முன்னரே எழுந்து நடந்து நகருக்கு வந்த விஸ்வாமித்ரர் கோட்டைமுகப்பில் காத்திருந்த காவல்வீரர்களால் எதிர்கொள்ளப்பட்டார். வண்டி நிறைய பொருட்களுடன், மடி நிறைய பொன்னுடன், திருமகள் வடிவென வரும் வணிகர்களை எதிர்பார்த்திருந்த காவலர்கள் அவள் தமக்கையின் வடிவென அழுக்கு உடையும் சடைமுடித் தலையுமாக வந்த விஸ்வாமித்ரரை கண்டதும் சீற்றம் கொண்டனர். முதலில் எவரோ தங்களை இளிவரல் செய்யும்பொருட்டே அவரை அனுப்பியிருப்பதாக அவர்கள் நினைத்தனர்.

"யார் அந்த பித்தன்?" என்று அசுரகுடியைச் சேர்ந்த காவலர்தலைவனான விருஷபன் உரக்க கேட்டான். "யாரோ வேண்டுமென்றே அவனை நமக்கு எதிராக அனுப்பியிருக்கிறார்கள் என நினைக்கிறேன். புலர்காலையில் பித்தர்கள் இப்படி கிளம்பி வருவதில்லை" என்றான் துணைக்காவலர்தலைவனாகிய சாகரன். "அவன் பித்தன் அல்ல. பித்தன் பெரும்பாலையை தன்னந்தனியாக எப்படி கடப்பான்?" என்றான் வில்லவர் தலைவனாகிய ஊர்வரன். "வேண்டுமென்றே வருகிறான். புலரியில் நமது முதல்விழி இன்று அவன்மேல் என்று அறிந்திருக்கிறான். மிகச் செருக்குடன் நடந்து வருகிறான்" என்றான் ஒரு வீரன். "அகற்று

அவனை" என்று விருஷபன் கூவினான். வாளை உருவியபடி "நான் அகற்றுகிறேன், அக்கீழ்மகனை" என்று எழுந்தான்.

விருஷபன் அவரை நோக்கி சென்று ஒரு சொல்லும் உரைக்காமல் கால் தூக்கி அவர் விலாவில் உதைத்து மையச்சாலையில் இருந்து அப்பால் வீழ்த்தினான். வாளை உருவி அவரை அணுகி முகத்தில் துப்பி "கீழ்மகனே, யார் நீ? இந்த இழிமங்கலத் தோற்றத்தில் ஏன் இப்புலர்காலையில் இப்பெருநகரின் வாயில் முன் தோன்றினாய்?" என்றான். புழுதியில் விழுந்த விஸ்வாமித்ரர் கையூன்றி எழுந்து அமர்ந்து "நான் தவம் செய்பவன். இப்புவியிலிருந்து எதை உரிமையெனக் கொண்டாலும் என் தவம் குறைவுபடும். ஆகவே அன்றன்று பெறுவனவற்றையே கொண்டிருக்கிறேன். இப்பாலையில் என்னை பேண எவருமில்லை. ஆகவேதான் இவ்வண்ணம் இருக்கிறேன்" என்று சொன்னார்.

"தவமா? நீயா?" என்று அவன் சிரித்தான். "உன் தேவதை என்ன மூத்தவளா? எனில் அத்தவத்தை நீ காட்டில் செய்யவேண்டும். இங்கு மங்கலமும் அழகும் வெற்றியும் திகழும் நகரில் புலரியில் வந்து உன் இழிமுகத்தை காட்டலாகாது. பாற்கடலின் நஞ்சென உன்னை இங்கே உணர்கிறேன்" என்றான். அவனுக்குப் பின்னால் வந்து நின்ற சாகரன் "பரிமாறப்பட்ட அறுசுவை உணவில் ஒரு துளி மலத்தை வைத்ததுபோல" என்று சொன்னான். அவர்கள் அதைப்போன்ற அணிச்சொற்றொடர்களை சொல்லிப் பழகி அதில் மகிழ்ந்துகொண்டிருந்தார்கள். விருஷபன் "உன்னை இங்கு கண்டமையால் நானும் மங்கலம் அழிந்தேன்" என்றான். "ஓடு, எழுந்து திரும்பி ஓடினால் உயிர் பிழைப்பாய்!"

விஸ்வாமித்ரர் "நான் உங்கள் அரசரை பார்க்கவேண்டும்" என்றார். "அரசரையா, நீயா? நீ என்னை சந்தித்ததனாலேயே உயிர்விடும் நிலையை அடைந்துவிட்டாய்" என்றான் விருஷபன். "நரியின் முகத்தில் முயல் காலையில் விழித்திருக்கிறது." ஊர்வரன் வெடித்துச் சிரித்தான். "நான் அவரை பார்ப்பதற்காக வந்தேன்" என்றார் விஸ்வாமித்ரர். "அரசர் இப்பொழுது எவரையும் பார்ப்பதில்லை" என்று ஊர்வரன் சொன்னான். "அதிலும் உன்னைப்போன்ற அழுக்குப்பிறப்பை அவர் சந்தித்தால் இன்று அவர் சொல்லால் உன் தலை மட்டுமல்ல பல ஏதிலார் தலையும் உருளும்." விஸ்வாமித்ரர் "நான் அவரை பார்க்கும் பொருட்டே வந்தேன். பார்த்துவிட்டே செல்வேன்" என்றார். "செத்து கீழுலகு செல்வதைப் பற்றி சொல்கிறான்" என்றான் ஊர்வரன். சாகரன் வெடித்துச் சிரித்தான்.

"இவனை என்ன செய்வது?" என்று விருஷபன் இன்னொரு காவலனிடம் கேட்டான். "இவனை இன்றைய நிலைமையில் நகருக்குள் நுழையவிட்டால் நம் குடிகளே அடித்துக் கிழித்துப் போட்டுவிடுவார்கள். இன்று இந்திரனுக்குரிய நாள். குடிக்களியாட்டு உச்சத்தில் நிகழ்ந்துகொண்டிருக்கிறது. குடிக்களியாட்டுக்களில் எவரையாவது தெருக்களில் அடித்து இழுத்துச்சென்று கொல்வது அவ்வப்போது நிகழ்கிறது" என்றான் சாகரன். "இவனை அவ்வாறு அவர்கள் கொன்று விளையாடட்டும்" என்றான் ஊர்வரன். "நம் வீரன் எவனாவது சாவதற்கு இந்த அழுக்குப்பித்தன் சாகட்டுமே."

பின்னால் நின்ற ஒரு வீரன் "நூற்றுடையோரே, ஒரு செய்தி. இவன் உடலில் இருக்கும் பச்சைகுத்தப்பட்ட குறிகளை பாருங்கள். இவன் அரசகுடியினன்..." என்றான். விருஷபன்

கூர்ந்து நோக்கி "ஆம், அழுக்கில் மறைந்துள்ளன அடையாளங்கள்... அரசகுடியினன் என்றே தோன்றுகிறது" என்றான். ஒரு வீரன் குந்தி அமர்ந்து நோக்கி "நூற்றுடையோரே, இவன் குறிகளில் இருந்து இவன் சந்திரகுலத்தவன், புரூரவஸின் மைந்தனாகிய அமரவசுவின் குருதிவழியில் வந்தவன் என்று தெரிகிறது. குசநாபரின் மைந்தர் காதி இவன் தந்தை. அவர் குசகுலத்தை ஆண்டவர், குசநகரியின் அரசர்" என்றான். விருஷபன் "அடேய், நீ அரசகுடியினனா?" என்று கேட்டான். "நான் கௌசிக குடியினனாகிய விஸ்வாமித்ரன்... தவம் பயில்பவன்" என்று அவர் மறுமொழி சொன்னார்.

"என்ன செய்வது இவனை?" என்றான் விருஷபன். "நம் கையிலிருந்து கடத்திவிடுவோம். மேலும் வணிக வண்டிகள் வரும் பொழுது இது" என்றான் சாகரன். "ஐயம் எழுந்தமையால் இவனை சிறைபிடித்தோம் என்று சொல்வோம். முறைப்படி மூடுவண்டியிலேற்றி அரசரிடம் கொண்டு போகலாம். அவர் இவனை உசாவட்டும்" என்றான் விருஷபன். "இவன் அரசகுடியினன். அரசகுடியினர் இப்படி நகர்புகலாமா? உளவறியக்கூட வந்திருக்கலாம்" என்றான் சாகரன். "ஆம், ஆனால் அரசர் இவனுக்குரிய தண்டனையை அளிக்கட்டும்" என்றான் விருஷபன். "காலையில் ஏன் இப்படி ஒரு சிக்கல் வந்து நம் தலையில் விழுகிறது?" என்று விருஷபன் திரும்பிப் பார்த்தான். "இவன் மெய்யாகவே பித்தன்தானா?" சாகரன் "பித்தனல்ல என்றால் அரசகுடியினன் ஏன் இப்படி இருக்கிறான்?" என்றான்.

அவர்கள் விஸ்வாமித்ரரைப் பிடித்து மதுக்கலங்களை கொண்டு செல்லும் கூண்டு வண்டி ஒன்றுக்குள் ஏற்றினார். அது

உண்மையில் ஒரு பெரிய பீப்பாய். அதற்குள்ளே இட்டு அவரை மூடி ஒற்றை அத்திரி இழுத்த வண்டியில் நகருக்குள் கொண்டு சென்றனர். அவர் அதற்குள் எந்த ஓசையுமில்லாமல் படுத்திருந்தார். அவரை அரண்மனை முற்றத்திற்கு கொண்டுசென்று இறக்கினர். அவருடன் வந்த ஊர்வரன் "காவலர்தலைவர் விருஷபன் என்னை அனுப்பினார். இந்த வண்டிக்குள் இருப்பவன் ஒரு பித்தன். ஆனால் அவன் உடலில் அரசகுடியினருக்குரிய குறிகள் இருக்கின்றன. ஆகவே இழுத்துவந்தோம். எவரும் பார்க்கவேண்டாம் என்று கூண்டுவண்டியில் கொண்டுவந்தோம்" என்றான்.

துணையமைச்சர் குடிலர் "இறக்கு அவனை" என்றார். விஸ்வாமித்ரர் இறங்கியதும் அவர் வந்து அவரை கூர்ந்து நோக்கி "யார் நீ?" என்றார். "கௌசிகனாகிய விஸ்வாமித்ரன். தவம் பயில்பவன். உங்கள் அரசரை சந்திக்கும்பொருட்டு வந்தேன்" என்றார் விஸ்வாமித்ரர். "அரசரை இப்போது சந்திக்க முடியாது. இது முதற்புலரி வேளை. அரசர் இன்னும் மதுத்துயிலில் இருந்து எழவில்லை" என்றார் குடிலர். "அவன் எவ்வண்ணம் இருந்தாலும் அவனை சந்தித்தாகவேண்டும் நான்" என்றார் விஸ்வாமித்ரர். "நெறி மறந்தா பேசுகிறாய், அறிவிலி?" என்று சொல்லி அருகே நின்ற காவலர்தலைவன் விஸ்வாமித்ரரின் கன்னத்தில் ஓங்கி அறைந்தான். குடிலர் "இவனை அடைத்து வையுங்கள். நான் என்ன செய்வதென்று சொல்கிறேன்" என்றார்.

அவர்கள் விஸ்வாமித்ரரை இழுத்துச் சென்று அங்கிருந்த சிறிய இருட்டறை ஒன்றில் தள்ளி மூடினர். அதற்குள் அமைச்சர் வக்ரர் குடிலரை அழைத்தார். அவரிடம் துறைநிலைக்குப் போகும்படி சொன்னார். அங்கே பீதர்நாட்டுக் கலம் ஒன்றை

துறைக்காவலர்களே இரவில் புகுந்து சூறையாடியிருந்தனர். "அவர்கள் எவரென்று பார். நம் குலத்தோர் என்றால் பெரிதாக தண்டிக்கவேண்டாம்" என்றார் வக்ரர். குடிலர் உடனே கிளம்பி துறைநிலைக்கு சென்றார். அங்கே யாதவர்களும் அசுரர்களும் ஷத்ரியர்களும் இணைந்துதான் அச்சூறையாடல் நடைபெற்றிருந்தது. பீதர் கலத்தின் காவலர்கள் அவர்களில் பன்னிருவரை சிறைப்பிடித்து வைத்திருந்தனர். பொருட்களை திரும்பக் கொடுக்கவில்லை என்றால் அவர்களைக் கொன்று நீரில் வீசிவிடுவதாக அவர்கள் சொன்னார்கள். துவாரகையின் காவலர்கள் பீதர் கலத்தை கொளுத்திவிடுவோம் என்று கொந்தளித்தனர்.

குடிலர் பீதர்களிடம் சென்று பேசினார். அவர்கள் சிறைப்பிடித்திருக்கும் வீரர்களை உடனே விடுவிக்கவேண்டும் என்றும் துவாரகையின் அரசர் உசாவி நீதி வழங்குவார் என்றும், பொருட்கள் அரசிடமிருந்து திரும்பக்கிடைக்கும் என்றும் சொன்னார். அவர்களை விடுவித்தார். அவர்களை மற்ற வீரர்கள் தோள்மேல் தூக்கி கூச்சலிட்டு நடனமிட்டபடி சென்றனர். பீதர்களிடம் பொறுத்திருங்கள் என்று சொல்லிவிட்டு அவர் திரும்பினார். "அவர்கள் அரசரிடம் முறையிடுவார்கள்" என்று அவருடன் வந்த உதவியாளன் சொன்னான். "முறையிட வாய்ப்பளிக்கவேண்டாம். அவர்கள் ஒரு வாரத்திற்கு மேல் இங்கே நிற்கமுடியாது. அவர்கள் செல்வதுவரை எந்தச் சொல்லும் அரசரிடம் வந்துசேரக் கூடாது" என்றார் குடிலர்.

குடிலர் திரும்பி வந்தபோது மாலையாகிவிட்டிருந்தது. வக்ரரிடம் அவர் நிகழ்ந்தவற்றை சுருக்கமாக சொன்னார். அப்போதுதான் அவருக்கு விஸ்வாமித்ரரின் நினைவு வந்தது. "மூத்தவரே, இன்று காலை அரசகுடியினன் ஆகிய ஒரு பித்தன்

இங்கே தேடிவந்தான்" என்றார். "பித்தனா? அரசகுடியினன் என்றால் என்ன பெயர் சொன்னான்?" என்று வக்ரர் கேட்டார். "அவன் பெயர் விஸ்வாமித்ரன். கௌசிக குடியினன்" என்றார் குடிலர். "எங்கோ கேட்ட பெயர். நன்று, அவனை அழைத்து வா" என்று வக்ரர் சொன்னார். குடிலர் ஏவலனிடம் விஸ்வாமித்ரரை அழைத்துவர ஆணையிட்டார். விஸ்வாமித்ரரை பார்த்தபோது வக்ரர் ஏமாற்றம் அடைந்தார். அவர் அரசகுடியினர் போலவே தோன்றவில்லை. "என்ன வேண்டும் உமக்கு?" என்று கேட்டார்.

"நான் அரசரை பார்க்கவேண்டும்" என்றார் விஸ்வாமித்ரர். "அரசரை அத்தனை எளிதாக பார்க்கமுடியாது" என்று வக்ரர் சொன்னார். "நான் அவரை பார்த்தாகவேண்டும்" என்று விஸ்வாமித்ரர் மீண்டும் சொன்னார். வக்ரர் அதை எப்படி கடப்பது என்று எண்ணி அவைமறுப்பை சாம்பனின் இளையோர் எவரேனும் செய்யட்டும் என்று முடிவுசெய்தார். அவர் ஏவலனிடம் "இவரை அரசவைக்கு அழைத்துச் செல்... அரசரைக் காண விழைகிறார் என்று கூறு. அரசகுடியினர் என்பதனால் அனுப்பினேன் என்று சொல்" என்றார். பின்னர் தாழ்ந்த குரலில் "அவர்கள் இவரைத் தூக்கி வெளியே வீசுவார்கள். அப்படியே இழுத்து நகரிலிருந்து வெளியே கொண்டு வீசிவிடு" என்றார்.

அவன் அவரை "வருக!" என்று அழைத்துச் சென்றான். செல்லும் வழியிலேயே "இப்படி ஒரு தோற்றத்தில் எவரும் அரசரை சந்திக்க முடியாது. உமக்கு நான் வேண்டுமென்றால் என் மேலாடையை தருகிறேன். மேலே உடுத்திக்கொள்ளும்" என்றான். "வேண்டாம்" என்று விஸ்வாமித்ரர் சொன்னார். அவன் அவரை சாம்பனின் அவைக்கு அழைத்துச் சென்றான். சாம்பனின் அரண்மனை முழுக்கவே அசுரகுடியினரின்

ஆட்சியில் இருந்தது. அவர்கள் கூடி நின்று விஸ்வாமித்ரரைப் பார்த்து சிரித்தனர். சிலர் "பித்தனை எதற்கு கொண்டுசெல்கிறீர்?" என்றனர். "இன்று அவைக் களியாட்டுக்கு ஒரு பித்தன் தேவையாகிறான்" என்று அவன் மறுமொழி சொன்னான்.

சாம்பன் அப்போது தன் உடன்பிறந்தாருடனும் காளிந்தியின் மைந்தருடனும் காப்பிரி நாட்டிலிருந்தும் யவன நாட்டிலிருந்தும் வந்த வணிகர்களுடன் சிற்றவைக்கூடத்தில் களியாட்டில் இருந்தார். அவர் காலையில் எழுந்து சிறுபொழுதே அரசப்பணிகளை நோக்கினார். அவை பெரும்பாலும் அரசி கிருஷ்ணையாலேயே நிறைவேற்றப்பட்டன. அரசர் என அவையில் தோற்றமளிப்பது ஒன்றே அவர் செய்யக்கூடுவது. ஒரு நாழிகைகூட அவரால் அங்கே அமரமுடியாது. பொறுமையிழந்து அசைந்துகொண்டிருப்பார். எழுந்து தன் அறைக்குச் சென்று அவையாடைகளைக் களைந்து வேற்று ஆடை அணிந்துகொண்டால் அதன்பின் நேராக களியாட்டறைக்குச் சென்றுவிடுவார். அங்கே அவருக்காக விறலியரும் பாணரும் பிறரும் கூடியிருப்பார்கள்.

அவர் பின்னிரவு வரை மதுக்களியாட்டில் ஈடுபட்டிருந்தார். மதுக்களியாட்டு அதனுடன் இளிவரலாடலை சேர்த்துக்கொண்டால்தான் கொண்டாட்டமாகிறது. இளிவரலாட்டு மேலும் மேலும் பொருளின்மைகொண்டு முழுப் பித்தாகவே ஆகும்போதுதான் அக்கொண்டாட்டம் உச்சமடைகிறது. அன்று உச்சிப்பொழுதிலேயே சாம்பன் குடிக்கத் தொடங்கியிருந்தார். விறலியர் நால்வரும் பாணர் நால்வரும் நடனமாடினர். பாணர் பெண்ணுருக்கொண்டும்

விறலியர் ஆணுருக்கொண்டும் ஆடினர். கீழ்மை நிறைந்த அசைவுகள், சொற்கள். அதற்கு அங்குளோர் சிரித்து கூச்சலிட்டனர்.

ஆட்டத்தின் ஒரு கட்டத்தில் சாம்பன் ஓடிச்சென்று ஒரு விறலியின் ஆடையை கிழித்து வீசினார். அங்கிருந்தோர் அனைவரும் பாய்ந்து சென்று அவர்களின் ஆடைகளை இழுத்துக் களைந்து வெற்றுடலாக்கினர். ஆடையில்லாத அவர்கள் அங்குமிங்கும் ஓட மற்றவர்கள் துரத்தினர். சிரிப்பும் கூச்சலும் வசைச்சொற்களும் அறைக்குள் நிறைந்திருந்தன. அந்த அறைக்குள் இருந்த ஏவலரும் காவலரும்கூட மது அருந்தி நிலையழிந்திருந்தனர். மது அருந்தாத எவரும் அங்கே நின்றிருக்க முடியாது. சாம்பன் விறலி ஒருத்தியின் ஆடையை எடுத்து அணிந்துகொண்டார். சுமித்ரன் "மிகச் சரியாக இருக்கிறது, மூத்தவரே! அழகு!" என்று கூச்சலிட்டார். வசுமான் "சாம்பவி! இளவரசி சாம்பவி!" என்று கூவினார்.

சாம்பன் ஆடையின்றி நின்ற விறலியின் முலைக்கச்சையையும் கைவளைகளையும் அணிந்து பெண்போலவே நடந்தார். இளையோர் கைதட்டி கூவினர். அவர் ஆடையை சுருட்டிக் கட்டியிருந்தார். பெரிய குடவயிறு கொண்டவராதலால் அது மேலும் பெரிதாகத் தெரிந்தது. சகஸ்ரஜித் "கருவுற்றிருக்கிறாள்! சாம்பவிக்கு கரு முதிர்ந்திருக்கிறது!" என்று கூச்சலிட்டார். சுருதனும் கவியும் விருஷனும் "ஆம்! கரு! கரு முதிர்ந்துள்ளது" என்று கூவினர். சித்ரகேது எழுந்து கையை குழவியை தூக்குவதுபோல வைத்து ஆட்டி தாலாட்டுப் பாட்டு ஒன்றை பாடினார். அதை விரைவான கைத்தாளத்தால் அவர்கள் ஆடலுக்குரிய பாடலாக மாற்றினர்.

அப்போதுதான் விஸ்வாமித்ரரை ஏவலன் அவை வாசலில் கொண்டுவந்து நிறுத்தினான். "என்ன?" என்று வசுமான் கேட்டார். "அரசகுடியினராகிய ஒரு முனிவர்... பித்தன் போலிருக்கிறார். அரசரை பார்க்கவேண்டும் என்றார். அழைத்துவந்தேன்... அரசர் ஆணையிட்டால் பிறகு அழைத்து வருகிறேன்" என்றான் காவலன். வசுமான் உள்ளே நோக்கி "பித்தனாகிய முனிவர் ஒருவர் வந்துள்ளார்!" என்றார். "ஆ! பித்தன்! பித்தனாகிய முனிவன். அவன்தான் நமக்குத் தேவை... அழைத்து வருக!" என்று சுருதன் கூவினார். கவி "பித்தன் வருக! நாமெல்லாம் பித்தர்கள்!" என்றார். விருஷன் விஸ்வாமித்ரரிடம் "உள்ளே வருக" என்றார்.

உள்ளே சென்ற விஸ்வாமித்ரர் அவர்களை பார்த்தபடி எந்த உணர்ச்சியும் எழாத முகத்துடன் நின்றார். "பித்துமுனிவரே, வருக... இதோ சாம்பவி என்ற அரசி நமக்கெல்லாம் அள்ளி வழங்க வந்திருக்கிறாள்" என்றார் சுருதன். "அவள் கருவுற்றிருக்கிறாள்! ஆம்!" என்றார் விருஷன். கவி "நமது முனிவர் இப்போது கணித்துச் சொல்வார், அக்கருவில் எழவிருப்பது ஆணா பெண்ணா?" என்றார். விஜயன் "ஆம், நாம் அறிந்தாகவேண்டும். ஆணா பெண்ணா?" என்றார். சித்ரகேது "ஆண் அல்லது பெண்! ஆகா!" என்றார். சுருதன் "அதற்கு முன் இந்த அழுக்குமுனிவன் அவன் குலத்தையும் குடியையும் சொல்லவேண்டும்..." என்றார்.

கிராது "அரசி, வருக! வந்து தங்கள் மணிவயிற்றை காட்டுக!" என்றார். சாம்பன் ஒசிந்து நடந்து அருகே வந்து வயிற்றைக் காட்டி "என் கருவில் வளர்வது ஆணா பெண்ணா, முனிவரே?" என்றார். விஸ்வாமித்ரர் "நான் கௌசிகனாகிய விஸ்வாமித்ரன். இந்தக் கருவில் வளர்வது ஆணுமல்ல, பெண்ணும் அல்ல"

என்றார். "இதற்குள் வளர்வது ஓர் இரும்பு உலக்கை. இது பிறந்து உங்கள் குடியை ஒரு துளியும் எச்சமின்றி அழிக்கும். இந்நகரை கற்குவியலாக ஆக்கும். நீரில் மூழ்கடிக்கும்... அறிக தெய்வங்கள்!" என்றார்.

ஆனால் அவர்கள் இருந்த நிலையில் அதை புரிந்துகொள்ள முடியவில்லை. "ஆ! இரும்பு உலக்கை!" என்று சுருதன் சிரித்தார். "முனிவரே, அந்த இரும்புலக்கை ஆணா பெண்ணா?" என்று விருஷன் கேட்டார். சித்ரகேது "இரும்புலக்கைக்கு என்ன பெயரிடுவது?" என்றார். கிராது "பெயரை நான் இடுகிறேன், முசலன்" என்றார். "டேய், அது ஆணல்ல பெண்" என்றார் கவி. "முசலி! முசலி!" என்று பலர் கூச்சலிட்டனர். "அது ஆணுமல்ல பெண்ணும் அல்ல. ஆகவே முசலம்!" என்றார் சுமித்ரன். "முசலம் எழுக! முசலம்!" என்று சகஸ்ரஜித்தும் விஜயனும் கூச்சலிட்டார்கள்.

"முசலத்தின் வரவை அறிவித்த முனிவருக்கு மூன்று வெள்ளிக் காசுகள் பரிசு... தம்பி வசு, இந்த அழுக்குவிலங்கை இட்டுச்செல். இதற்கு மூன்று வெள்ளிக்காசுகளை தரையில் வீசிக்கொடு. இது கவ்வி எடுத்துக்கொண்டால் ஓடவிடு... இல்லையேல் சாட்டையால் இதற்கு தவழ்வது எப்படி என்று சொல்லிக்கொடு" என்றார் சுமித்ரன். சாம்பன் "என் வயிற்றில் இதோ இரும்புலக்கை அசைகிறது! ஆ!" என்று நடிக்க மற்றவர்கள் கைகொட்டிச் சிரித்தார்கள். விஸ்வாமித்ரர் தலைவணங்கி அறையிலிருந்து வெளியே சென்றார்.

சீற்றத்துடன் அவருக்குப் பின்னால் ஓடி "நில்லுங்கள்! நில்லுங்கள்!" என்று கூவிய வசுமான் வாளை உருவி "என்ன சொல்லிவிட்டு செல்கிறீர்கள்? இவ்வண்ணம் ஒரு சொல்லை உரைத்தபின் இந்நகரத்திலிருந்து வெளிச்செல்ல முடியாது

உம்மால்!” என்றார். “உங்களில் எவரேனும் துணிவிருந்தால் என் தலையை வெட்டலாம்” என்று கூறி விஸ்வாமித்ரர் நடந்தார். மேலும் பின்னால் ஓடிய வசுமான் வாளை உருவி அவர் தலையை வெட்டினார். ஆனால் அரைக்கணத்தில் திரும்பி அவர் வசுமான் கண்களை பார்த்தார். அந்த நோக்கு அவர் உடலில் ஏதோ நரம்பு ஒன்றை அறுத்ததுபோல் அவர் உடல் விதிர்த்து பக்கவாட்டில் விழுந்தது. அவர் வாயில் நுரை வர இழுத்துக்கொண்டார்.

விஸ்வாமித்ரர் திரும்பி சூழ நின்ற மூன்று காவல்வீரர்களை பார்க்க அம்மூவருமே அக்கணமே நிலத்தில் விழுந்து வலிப்பு கொண்டனர். அங்கிருந்த அத்தனை வீரர்களும் அஞ்சி கூச்சலிட்டுக்கொண்டு விலகிச்சென்று படைக்கலங்களை கீழே போட்டு சுவரோரமாக நின்றனர். அவர் இறங்கி வெளியே சென்று அரண்மனை நீங்குவது வரை அவருக்கு எதிரே வருவதற்கு எவரும் துணியவில்லை. அவர் மதயானை என நடந்து துவாரகையை வகுந்து வெளியே சென்றார். செல்லச்செல்ல அவருக்கு பின்னால் அந்தத் தீச்சொல் பரவியது.

அன்று நிகழ்ந்தது எதையுமே சாம்பன் அறியவில்லை. களியாட்டுக்குப் பின் அவர் வழக்கம்போல் நிலையழிந்து விழுந்தார். அவரை கொண்டுசென்று மஞ்சத்தில் படுக்கவைத்தனர். துயிலில் அவர் ஒரு கனவு கண்டார். அவர் பெண்ணாக பேற்றுநோவு கொண்டு துடித்தார். அவருடைய கால்களுக்கு நடுவே தசை கிழிந்து பிளந்தது. உள்ளிருந்து சலமும் குருதியுமாக ஒரு பொருள் வெளியே வந்தது. அது ஓர் உலக்கை. அவர் அதை தன் காலால் தட்டி அப்பால் வீசிவிட்டு அலறினார். பிறரை அழைத்தார். அது நாகம் என குருதி படிந்த

உடலை நெளித்து ஏறி மஞ்சத்தில் அவர் அருகே படுத்துக்கொண்டது.

அவர் அதை தள்ளிவிட முயன்றார். அது கரிய நிறமுள்ள இரும்புத் தடி என்றாலும் நெளிந்து அவரை பற்றிக்கொண்டு சூழ்ந்தது. அவருடைய மார்பில் பால் அருந்த முற்பட்டது. அவர் உரக்க கூச்சலிட்டு கையால் மெத்தையை ஓங்கி தட்டித்தட்டி ஏவலனை அழைத்தார். வெளியிலிருந்து ஏவலர்களும் மருத்துவர்களும் உள்ளே வந்தபோது அவர் எழுந்து அமர்ந்து வியர்த்து மூச்சிரைத்து "கொடுங்கனவு!" என்றார். "கொடுங்கனவு... விந்தையானது" என்று சொல்லி "மது... மது கொண்டு வருக!" என்றார்.

"கூறுக, என்ன கனவு?" என்று மருத்துவர் கேட்டார். சாம்பன் "ஒன்றுமில்லை. பொருளற்றது" என்றார். "மதுவின் மிச்சம் அது..." மருத்துவர் "தங்கள் நோயை கணக்கிட அது உதவக்கூடும்" என்றார். "நான் கருவுற்றிருப்பதாகவும் ஒரு குழவியைப் பெற்றதாகவும் கனவு கண்டேன். ஆனால் ஆணாகவே இருந்தேன். அது குழவி அல்ல, ஓர் இரும்புத் தடி" என்றார் சாம்பன். சூழ நின்ற முகங்கள் வெளிறின. திகைப்புடன் அவர்கள் ஒருவருக்கொருவர் பார்த்துக்கொண்டனர். நான்கு நாழிகை நேரத்துக்கு முன்னர்தான் விஸ்வாமித்ரரின் அந்தத் தீச்சொல் அங்கு நிகழ்ந்திருந்தது. அது எவ்வண்ணமேனும் சாம்பனின் செவிகளுக்கு வர எந்த வாய்ப்புமில்லை. அவர் கள்மயக்கில் இருந்தார். அப்படியே துயின்றார்.

"ஆம் அரசே, அது பொருளற்ற கனவுதான். தங்கள் உடலுக்குள் ஒவ்வா உணவு ஒன்றிருக்கிறது. அவ்வண்ணம் இருக்கும்போதுதான் வாய் வழியாகவோ செவி வழியாகவோ பொருட்கள் வெளியேறுவதுபோல கனவு வரும். இது அது

போன்ற ஒன்றே” என்று மருத்துவர் கூறினார். சாம்பன் மீண்டும் சற்று மது அருந்தி படுத்துக்கொண்டார். ஆனால் அவர் துயிலில் ஆழ்ந்து கொண்டிருக்கையிலேயே அவ்வாறு கனவொன்றைக் கண்ட செய்தி நகரெங்கும் பரவியது. மறுநாள் புலர்வதற்குள் நகர் முழுக்க அச்செய்தியே திகழ்ந்தது. அந்நகர் அழிய வேண்டுமென்று அரசமுனிவர் வந்து தீச்சொல்லிட்டுச் சென்றார் என்று சூதர்கள் கதை பெருக்கினர். “ஊன்தடி பிறக்கும். வாள் போழ்ந்து புதைப்பர். முளைத்தெழுந்து பெருகும். முற்றழித்து செல்லும்” என்ற சொல் நிலைகொண்டது.

# கல்பொருசிறுநுரை - 57

**பகுதி ஆறு : படைப்புல் – 1**

தந்தையே, காளிந்தி அன்னையின் மைந்தனாகிய சோமகன் நான். நானே அவ்வாறு கூறிக்கொண்டாலொழிய எங்கும் எவரும் என்னை யாதவ மைந்தர் எண்பதின்மரில் ஒருவர் என்று அடையாளம் கண்டதே இல்லை. எந்தத் தருணத்திலும் எந்த அவையிலும் நான் எழுந்து ஒரு சொல் உரைத்ததில்லை. தங்கள் மைந்தன் என்று அன்னையால், அவையால் கூறப்பட்டிருக்கிறேன். அவை அதை ஏற்றிருக்கிறது. அரசமைந்தனுக்குரிய அடையாளங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் ஒருபோதும் அவ்வண்ணம் உணர்ந்ததில்லை.

தங்களை நான் கண்டதுண்டு. அன்னையைப் பார்க்க தாங்கள் வரும்போது என்னை அருகணைத்து இடைவளைத்து உடல் சேர்த்து ஓரிரு சொல் சொல்வீர்கள். அன்று என்னை கூச வைக்கும் ஒரு தொடுகையாகவும் உளம் விலக வைக்கும் சில சொற்களாகவுமே தாங்கள் இருந்தீர்கள். உங்களை சிறுசாளரப் பழுதுகளினூடாக ஒளிந்துநின்றே பெரும்பாலும் பார்த்திருக்கிறேன். அரசப்பேரவையில் தாங்கள் அரியணை அமர்ந்திருக்கையிலும், பெருவீதியில் யானைமேல் அமர்ந்து அணிவலம் செல்கையிலும்கூட ஒளிந்திருந்து பார்ப்பவனாகவே என்னை உணர்ந்திருக்கிறேன்.

தங்களை அறிந்துகொள்வதற்கான எந்தப் பாதையையும் தாங்கள் திறந்து தரவில்லை. தங்களிடமிருந்து அகல்வதற்கான அனைத்துப் பாதைகளும் திறந்திருந்தன. எத்தனை தடைகள், எத்தனை திரைகள் தங்களை என்னிடமிருந்து மறைத்தன! முதன்மையான திரை தாங்கள் கொண்ட பேருருதான். நான் சொல்லறிந்தபோதே தொல்கதைகளிலிருந்து எழுந்துவந்த பெருந்தெய்வமென நீங்கள் மாறிவிட்டிருந்தீர்கள். இளமையில் கோகுலத்தில் நீங்கள் ஆற்றிய விந்தைகள், வீரச்செயல்களை அன்னையரும் விறலியரும் பாடிக் கேட்டேன். கம்சனை வென்றதும் மதுராபுரியை கொண்டதும் சூதர்களின் சொற்களினூடாக எனக்கு உரைக்கப்பட்டது.

துவாரகை உங்களைப் பாடும் ஓர் இசைக்கலம் அன்றி வேறல்ல. இந்திரமாயக்காரன் கோலை அசைத்து உருவாக்கியதுபோல நீங்கள் மாயதுவாரகையை மின்னற்பொழுதென அமைத்ததைப்பற்றி பாடினர் பாணர். உங்கள் திசைவெற்றிகளை நடித்தனர் ஆட்டர். நீங்கள் தெய்வப்பேருரு என பாரதவர்ஷத்தால் வணங்கப்படுவதை

சொல்லினர் அயல்நிலத்து கவிஞர். துவாரகையில் உங்கள் புகழ்பாடலைச் செவிகொள்ளாமல் நூறு காலடி எடுத்து முன்வைக்க இயலாது, எங்கும் எந்தப் பொழுதிலும்.

விண்ணில் ஆழிவெண்சங்கம் அணிந்து அமுதக்கடலில் பள்ளிகொண்டிருக்கும் அந்தத் தொல்தெய்வமே என் முன் மஞ்சளாடையும் பீலி முடியும் என்று எழுந்தருள்கிறது என நினைத்துக்கொள்ளும் அளவுக்கு எனக்கு அறிவிருந்ததில்லை. அவ்வாறு எண்ணிக்கொள்ள மைந்தர் எண்பதின்மராலும் இயன்றதில்லை. ஏன் என்று எண்ணிப்பார்க்கிறேன். அவ்வாறு உங்களை தெய்வம் என்று தலைக்கொண்டால் தெய்வத்தின் மைந்தர் நாங்கள். நாங்களோ அவ்வண்ணம் எங்களை உணர்ந்ததே இல்லை. அச்சமும் தனிமையும் ஐயமும் விழைவுகளும் ஆட்டிவைக்கும் எளிய மைந்தராகவே எங்களை அறிந்தோம். எங்கள் தந்தை என்பதனால் நீங்களும் எங்களைப் போன்றவரே என்று துணிந்தோம்.

பெருமானுடரின் மைந்தர்கள் அவர்களை பொருட்டென நினைக்காமல் போகிறார்கள். ஏனென்றால் மைந்தரிடம் அப்பெருமானுடர் தங்கள் மணிமுடிகளை கழற்றிவிடுகிறார்கள். தங்கள் அணிகளை அகற்றிக்கொள்கிறார்கள். புகழையும் கல்வியையும் மறைத்து எளிய மானுடர்போல களிக்கிறார்கள். கையருகே சிக்கும் ஒன்று விண்வாழ்வது என்று எவ்வண்ணம் நம்ப முடியும்? பெருமானுடர் மைந்தர்களால் கொண்டாடப்படுவது அவர்கள் விண்புகுந்த பின்னரே. அதன்பின் அவர்கள் தெய்வங்களென்று ஆகிவிடுகிறார்கள். தெய்வங்களை நாம் கையாளலாம். மானுடருடன் புழங்கலாம். மானுடதெய்வங்கள் எங்கும் நிலைகொள்ளாதவர்.

ஆகவே நான் உங்களை விலக்கிக்கொண்டேன். உங்களைப்பற்றி எண்ணாதிருக்க என்னால் இயலாது. எனவே உங்களை பிறிதொருவர் என்று எண்ணிக்கொண்டேன். உங்களுடனான எனது தொடர்புகள் அனைத்தையும் நானே இல்லாமலாக்கிக் கொண்டேன். உங்கள் பெயரை நான் சொல்வதே இல்லை. காலையில் ஒவ்வொருநாளும் துவாரகையில் நிகழும் குடிவணக்கப் பாடலில் இறுதியில் உங்கள் பெயர் வரும். அதை நான் என் நாவால் சொல்லமாட்டேன். உங்கள் படங்களை ஏறிட்டுப் பார்க்கமாட்டேன். தந்தையே, நான் மயிலை கண்களால் பார்ப்பதில்லை. குழலோசையை செவிகொள்வதில்லை.

ஆனால் அவையிலும் பிற இடங்களிலும் துணையின்றி இருக்கமுடியாதவன், தனக்கென தனி வீரமோ கல்வியோ குடிச்சிறப்போ அற்றவன் நான். எனவே என்னை என் மூத்தவர் பத்ரனுடன் ஒட்டிக்கொண்டேன். அவருடைய அணுக்க விலங்காக, ஏவலனாக மாறினேன். அதனூடாக எனக்கான சிறு இடத்தை உருவாக்கி அதில் வாழ்ந்துகொண்டேன். தந்தையே, முள் முனைகளில் சொட்டி நிற்கும் நீரை மட்டுமே அருந்தி பாலையில் உயிர்வாழும் சிற்றுயிர்கள் உண்டு. அதைப்போன்றவன் நான்.

எப்பொழுதேனும் என் அன்னையின் சிற்றூருக்கு செல்வேன். அங்கு யமுனையில் படகோட்டி வாழும் மீனவர் குடிகளுடன் இணைந்துகொள்கையில் என் இடத்தை உணர்வேன். அங்கு பிறிதொருவனாக இருப்பேன். யமுனையில் நீந்தி திளைக்கையில் என் கைகளும் கால்களும் அந்நீர்ப்பெருக்கை முன்னரே உணர்ந்திருப்பதை அறிந்து நான் நான் என்று எழுவேன். நதியிலேயே பிறந்து வளர்ந்தவர்களைவிட

விரைவாக என்னால் நீந்த முடியும். அவர்களை பின்னுக்குத் தள்ளி முன்னும் பின்னும் அதை ஊடுருவிக் கடக்க முடிந்தது. அது நான் யாரென எனக்குக் காட்டியது. அங்கு அவர்களில் ஒருவனாக உணர்கிறேன். அவர்களில் மேலானவனாகவும். அவ்வண்ணம் அவர்களால் தலைவன் என உணரப்படுவதில் மகிழ்ந்தேன்.

மீண்டும் துவாரகைக்கு வரும்போது என் சிறகுகளை நீவி மடித்து என் அலகுகளைக் குவித்து முட்டைக்குள் மீண்டும் நுழையும் பறவைபோல மாறினேன். எத்திசையிலும் உள்நுழைய வாயில்கள் இல்லாத ஓர் உருளைபோல என்னை ஆக்கிக்கொண்டேன். எங்குமிருந்தேன், நாளுமிருந்தேன், எங்கும் திகழவில்லை, கணமும் வெளிப்பட்டதில்லை. இன்று இப்பேச்சை இவ்வண்ணம் விரித்துரைக்கையிலேயே நான் தோன்றுகிறேன். என்னை நானே வியந்து வியந்து இச்சொற்களினூடாக காண்கிறேன். என்னை நானே வரைந்துகொள்கிறேன்.

நான் உங்களை வெறுத்ததில்லை தந்தையே, ஒருகணமும் விரும்பியதும் இல்லை. அவ்வண்ணம் நான் சொல்லிக்கொள்வதுண்டு. ஆனால் தந்தையை வெறுப்பவர் மட்டும் தந்தைக்கு எதிரியல்ல, தந்தையை விரும்பாதவரும் தந்தைக்கு எதிரிதான் என்று மிக மிக பிந்திதான் புரிந்துகொண்டேன். இன்று தங்கள் முன் நின்றிருக்கையில் என்னை சிறுமை கொள்ளச் செய்வது இதுவே. தங்களை விலக்கி விலக்கி சிறுமை கொண்டு அச்சிறுமையுடன் இங்கு வந்து நின்றிருக்கிறேன். அச்சிறுமையையே தகுதியென்றாக்கி உங்களிடம் இரக்க வந்துள்ளேன்.

தங்களை அணுகினால் சிறுமை கொள்வேன் என்று அஞ்சியவன் நான். அணுகியிருந்தால் சிறுமையை உணர்ந்திருப்பேன் என்பதில் ஐயமில்லை. ஆனால் அச்சிறுமையிலிருந்து என் ஆழத்தை நான் கண்டிருக்க முடியும். எனக்கென ஒன்றை உருவாக்கிக்கொண்டிருக்க முடியும். இப்பயணம் எதிர்த்திசையில் அமைந்திருந்தால் இன்று இவ்வண்ணம் வந்து நின்றிருக்கமாட்டேன். தந்தையே, இத்தருணம் என் சாவுக்கு நிகர்.

காளிந்தியின் மைந்தனான சோமகன் சொன்னான். தந்தையே, நான் துவாரகையின் பேரழிவை கண்களால் பார்த்தேன். பிறந்து வளர்ந்து தன் நிலமென்றும் தன் அகமென்றும் ஆன ஒரு நகர் கண்ணெதிரே உடைந்து கல்மேல் கல்லென விழுந்துகிடப்பதைக் காணும் தீயுழ் கொண்டவன் நான். அதைவிட அவ்வாறு இடிந்து சரிவதைக் கண்டு அகம் மகிழ்வதை தானே உணர்ந்து தருக்கி பின் தற்சிறுமை கொண்டு கூசி விழிநீர் சிந்தி அமர்ந்து, தன்னைத் தானே வெறுத்து, பலமுறை இறந்தவன் என ஆகும் பெருந்தீயூழ் கொண்டவன்.

துவாரகை எனக்கு என்னவாகப் பொருள்பட்டிருக்கிறது என அதன் சரிவிலேயே நான் உணர்ந்தேன். அதை நான் வெறுத்தேன். அது என் நகரல்ல என்று எண்ணினேன். அதிலிருந்து கிளம்பிவிடவேண்டும் என்று விழைந்தேன். அவ்வாறு கிளம்புவதைப் பற்றி கனவு கண்டேன். தந்தையே, கிளம்பிச்சென்று குகர்களின் பேரரசு ஒன்றை அமைத்து பெரும்

படையுடன் திரும்பிவந்து துவாரகையை வென்று கைப்பற்றுவதை, பின் அதை கற்குவியல் என்று இடித்துத் தள்ளிவிட்டு மீள்வதை நான் பகற்கனவில் கண்டிருக்கிறேன். கீழ்மை நிறைந்த காமக்கனவுகூட அத்தகைய தற்கூச்சத்தின் உவகையை எனக்கு அளித்ததில்லை.

ஆனால் அந்நகர் எனக்கு அரியது. ஏனென்றால் என் இனிய நினைவுகள் பல அதனுடன் இணைந்தவை. நான் அதை கனவுகளில் கண்டிருக்கிறேன். நான் உருவாக்க எண்ணிய நகர் ஒன்றுண்டு. களிந்தபுரி துவாரகையின் அதே வடிவிலேயே என் உள்ளத்தில் இருந்தது. அது நான் விரும்பும்படி சற்றே உருமாற்றப்பட்ட, சிறிதே வண்ணம் மாற்றப்பட்ட துவாரகை அன்றி வேறல்ல. நான் துவாரகையை அங்கிருந்து கொண்டுசென்று யமுனைக்கரையில் வைத்து எனக்குரியதாக்கிக் கொண்டிருக்கிறேன். நான் கண்டது துவாரகையின் அழிவு மட்டும் அல்ல, களிந்தபுரியின் அழிவும்தான்.

அரண்மனையின் உப்பரிகையில் நான் நின்றிருந்தேன். துவாரகையில் அன்று காலைதான் சிறிய நிலநடுக்கம் ஒன்று வந்திருந்தது. பல மாளிகைகள் விரிசலிட்டிருந்தன. நிலநடுக்கத்தை நான் உணர்ந்தபோது மூத்தவர் சுருதனின் அவையில் உடன்பிறந்தாருடன் பேசிக்கொண்டிருந்தேன். அனைவருமே மது அருந்தியிருந்தோம். எனக்கு நோக்கு அலைபாய தலைசுழன்றது. குமட்டல் எழ எழுந்து விரிகலம் நோக்கி சென்றேன். அதற்குள் மூத்தவர் சுருதனும் கவியும் குமட்டி வாயுமிழ்ந்தனர். விருஷன் "என்ன மது இது... குமட்டுகிறது" என்றார். சுருதன் "அடுமனையாளன் எவன்? அழை அவனை" என்றார்.

அப்போதுதான் ஏவலன் ஓடி வந்து அறிவிப்பின்றி "அரசே, நகரில் நிலநடுக்கம் தோன்றியிருக்கிறது" என்றான். "என்ன?" என்று அவர் கேட்டார். "மண் அதிர்ந்திருக்கிறது... கட்டடங்கள் விரிசல்கொண்டிருக்கின்றன" என்றான் ஏவலன். வெளியே மக்களின் கூச்சலும் கொந்தளிப்பும் அவர்களை அடக்கமுயலும் முரசுகளின் முழக்கமும் கேட்டது. சுருதன் எழுந்துகொண்டு "மூத்தவர் ஃபானுவை பார்க்கவேண்டும்... உடனே" என்றார். "நகர் நிலையழிந்துள்ளது. நாம் அவருடன் இருக்கவேண்டும்" என்று மேலாடையை எடுத்துப் போட்டுக்கொண்டு கிளம்பினார்.

நான் மாளிகை முகப்பில் நின்று விரிசல்விட்டு நின்ற கட்டடங்களை பார்த்தேன். அவை விரிசலிடுவதற்கான அடிப்படைகள் எதுவும் இல்லை. துவாரகையில் நிலம் நடுங்கினாலும் கட்டடங்கள் நிற்கும் பொருட்டு பாறைகளின் மீதாகவே அடித்தளங்கள் அமைக்கப்பட்டு அனைத்தும் கட்டப்பட்டிருந்தன. நடுங்கியது நிலம் அல்ல, நகர் அமைந்திருந்த பெரும்பாறைதான் என்று சிலர் கூவினர். நிலம் நடுங்கியமைக்கு அடிப்படை நிலமல்ல, நிலமென்றாகி அந்நகரைக் காத்திருந்த பிறிதொன்று அகன்றதே என்று அமைச்சர்கள் பேசிக்கொண்டனர்.

நகரம் கலைந்து குழம்பி சுழன்று கொண்டிருந்தது. அதை அமையவைக்கும் ஆணையென எதுவுமில்லை. அவ்வாறு ஆணையளிக்கும் தகுதிகொண்ட எவரும் மேலெழுந்து வரவுமில்லை. தன் இளையோனை தானே கொன்றதனால் பிரத்யும்னன் உளம் சிதறி மாறி மாறி உடன்பிறந்தாருடன் பேசிக்கொண்டிருந்தார். ஃபானு எழுந்து ஆணையிட வேண்டுமென்ற ஆணையை தனக்குத்தானே விடுத்துக்கொண்டு, அதற்கு ஏன் தன் உள்ளம் ஒருங்கவில்லை

என்று தானே வியந்துகொண்டு, தன்னறையில் தன் உடன்பிறந்தாருடன் இருந்தார். தொடர்ச்சியாக பேசிக்கொண்டே இருந்தார். எந்த முடிவையும் எடுக்க முடியாதவர்கள் கண்டடையும் வழி அது, பேசுவது. பேசிக்கொண்டிருக்கிறோம் என்பது முடிவை நெருங்கிக்கொண்டிருக்கிறோம் என்றும், செயல்படக்கூடும் என்றும் ஒருவர் தனக்கும் தன்னவர்க்கும் காட்டிக்கொள்வதற்கான வழி. ஆனால் பொய்யான வழி, உண்மை அனைவருக்கும் தெரிந்திருக்கும். அதை எவரும் மறைத்துவிட முடியாது.

சாம்பன் அத்தகைய அருந்தருணங்களுக்கு ஏற்ற வண்ணம் எழும் ஆற்றல் எப்போதும் உடையவரல்ல. அவர் குழம்பி நடுங்கி தன் அறைக்குள் ஒடுங்கியிருந்தார். அவர் உடன்பிறந்தார் ஒவ்வொருவரும் அவரைச் சென்று பார்த்தபோது பதறி எழுந்து வந்து "என்ன நிகழ்கிறது? என்ன நிகழ்கிறது?" என்று கேட்டார். "நகரம் அலைகொண்டிருக்கிறது" என்றபோது "முற்றாக இடிந்துவிட்டது என்றார்களே?" என்றார். "இல்லை, சில நூறு கட்டடங்களில் விரிசல்கள் விழுந்திருக்கின்றன. அவை நிலைகொள்ளவும்கூடும். பெரிதாக ஒன்றுமில்லை, இங்குள்ள கட்டடங்களை எளிதாக சீரமைத்துவிட முடியும் என்கிறார்கள் சிற்பிகள்" என்றார் சுமித்ரன்.

சாம்பன் உடனே எழுந்து கைநீட்டி "எங்கே? சிற்பிகள் எங்கே? சிற்பிகளை கூட்டிவாருங்கள்" என்றார். "சிற்பிகளை தேடித்தான் படைவீரர்கள் சென்றிருக்கிறார்கள். விரைவில் வந்துவிடுவார்கள்" என்று அவர்கள் கூறினர். "சிற்பிகள்! சிற்பிகள் உடனே செயல்படட்டும். இது அரசாணை! இன்றே கட்டடங்கள் சீரமைக்கும் பணி தொடங்கட்டும். அவர்கள்

கட்டடங்களை சீரமைத்த பின்னர் நான் அவற்றை பார்க்க விரும்புகிறேன்" என்றார் சாம்பன். அவருடைய உடன்பிறந்தோர் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டனர். "மூத்தவரே, முதலில் இங்கு நிகழவேண்டியது ஒழுங்கு. இத்தருணத்தில் குடிகள் அனைவரும் தெருவில் இறங்கி என்ன செய்வது என்று அறியாமல் நகரின் எல்லைகளில் ததும்பிக்கொண்டிருக்கையில் இங்கு வேறெதைப்பற்றியும் நாம் எண்ண முடியாது" என்றனர்.

"ஆம், ஒழுங்கமைய வேண்டும். ஒழுங்கமைய ஆணைகளை பிறப்பியுங்கள்" என்றபின் "ஆனால், நான் அரசன் அல்ல. எனக்கு மணிமுடி இல்லை. எந்தை எனக்களித்த பொறுப்பை அந்த யாதவ மூத்தவனுக்கு அளித்துவிட்டேன். இன்று நான் எழுந்து கூறினால் எவரும் கேட்கப்போவதில்லை" என்றார். "ஆணைகளை கடைபிடிக்கும்படி அவர்களுக்கு நாம் அறிவுறுத்தவேண்டும்" என்று சுமித்ரன் சொன்னார். சாம்பன் "ஆம், அறிவுறுத்தவேண்டும். நான் ஆணையிடுகிறேன். நமது படைகள் நகரில் இறங்கட்டும். ஆணைகளை கடைபிடிக்காத அனைவரின் தலைவெட்டி வீழ்த்தும்படி ஆணையிடுகிறேன்" என்றார்.

"எனில் மொத்த நகரையும் தலைவெட்டி வீழ்த்தவேண்டியிருக்கும். அதற்குரிய தருணம் இது அல்ல" என்று விஜயன் பொறுமையிழந்து சொன்னார். சித்ரகேது "தாங்கள் இங்கு இருங்கள் மூத்தவரே, வெளியே வரவேண்டியதில்லை. நாங்கள் பொறுப்பேற்றுக்கொள்கிறோம்" என்றார். "அவன் என்ன செய்கிறான் என்று கேட்டு வா... அவன் செய்யாவிட்டால் நான் செய்கிறேன். இந்நகரை நானே ஆள்கிறேன். என் தகுதியால்தான் என்னை எந்தை இந்நகரின் அரசராக ஆக்கினார்" என்று சாம்பன் சொன்னார். "அந்தக்

கோழை அரசமரக்கூடும் என்பதனால்தான் தெய்வங்கள் நிலமசைத்து எச்சரிக்கின்றன." கைவிரித்து "இந்நகரின் விரிசல்களை இணைக்க முடிந்தவன் நான் மட்டுமே" என்றார்.

வெளியே வந்து உடன்பிறந்தார் ஒருவரை ஒருவர் நோக்கினர். "இவரால் இத்தருணத்தை எதிர்கொள்ள இயலாது. இவருடைய தகுதி என்பது போர்க்களங்களில் எழும் கட்டற்ற வெறி மட்டுமே. அப்போது ஆயிரம் கைகள் கொண்டவர் போலாவார், நூறு விழிகொண்டவர் என மாறுவார். சூழ்ந்திருந்தவர்களை அழித்து காட்டெரி என உருகி முன் செல்வார். அதை பெருவீரம் என்று எண்ணிக்கொள்கிறோம். எதிர்விசையை தாங்குவதொன்றே அரசனின் வீரம் என்பார்கள். அதில் இவர் பாலாடைபோல மென்மையானவர்" என்றார் சுமித்ரன்.

வசுமான் "நாம் ஒன்று செய்யலாம்..." என்றார். "சொல்" என்று சுமித்ரன் திரும்பினார். "நாம் அரசியிடம் கூறுவோம். முழுப் பொறுப்பையும் அரசியிடம் ஒப்படைப்போம்" என்றார். "ஆம், அவரால் இயலும். அதுவே வழி" என்று புருஜித் கூறினார். "அரசி இப்போது அவைச்செயல்பாடுகளில் இல்லை. செய்திகளை மட்டும் தெரிந்துகொள்கிறார். இப்போது ஃபானுவை அரசர் என இளையவர்கள் கூடி முடிவெடுத்திருப்பதனால் அரசப்பொறுப்பில் இருந்து அவர் எதையும் செய்யவும் முடியாது" என்றார் சுமித்ரன். "ஆம், ஆனால் இடர்க்காலங்களில் எதைச் செய்யவும் ஒப்புதல் உண்டு. இன்று மக்கள் நம்பும் ஒரு அரசவடிவம் அரசி கிருஷ்ணை மட்டுமே" என்றார் வசுமான்.

சாம்பனின் உடன்பிறந்தவர்கள் சென்று அரசி கிருஷ்ணையை பார்த்தனர். அரசி தன் தனியறையில் தனக்குரிய ஒற்றர்களிடம் கூடிப்பேசிக்கொண்டிருக்கையில் அவர்கள் அங்கு சென்று

வணங்கினர். ஒற்றர்களை அனுப்பிவிட்டு அவர்களை உள்ளே அழைத்த அரசி அவர்கள் சொல்வதை கண்களை தாழ்த்தியபடி கேட்டுக்கொண்டார். "அரசி, தாங்கள் இந்நகரின் பொறுப்பை ஏற்றுக்கொள்ளவேண்டும். நகரிலுள்ள அனைத்துச் சரடுகளையும் தாங்கள் பற்றிக்கொள்ள வேண்டும். இல்லையேல் இது தன்னைத் தானே சிதறடித்துக்கொள்ளும்" என்றார் வசுமான்.

"ஆம், ஒற்றர்களை இங்கு வரவழைத்து உசாவினேன். என்ன நிகழ்கிறது என்று நன்று அறிந்துள்ளேன்" என்று அவர் சொன்னார். "மக்களுக்கு எதுவுமே தெரியாது. உண்மையில் இங்கிருந்து மொத்த நகரையும் பார்ப்பதற்கு எவராலும் இயலாது. கண்ணெதிரே ஒரு கட்டடம் அல்லது இரு கட்டடம் சிதறுண்டு விழுவதைத்தான் பார்த்திருக்கிறார்கள். ஆகவே மொத்த நகரும் இடிந்து சரிந்திருக்கிறது என்ற கற்பனையை அடைகிறார்கள். அக்கற்பனையை தானே நம்பும்பொருட்டு பிறரிடம் சொல்கிறார்கள். சொல்லிச் சொல்லி பெருக்கி நகரமே இடிந்து அனைவர் தலைமேலும் விழுந்துகொண்டிருக்கிறது என்ற உளமயக்கை அனைவரும் அடைந்திருக்கிறார்கள்" என்றார்.

அவருடைய குரலின் உறுதி அவர்களை ஆறுதல்கொள்ளச் செய்தது. "ஒருசில சிறு விரிசல்கள்தான் நிகழ்ந்திருக்கின்றன என்பதுதான் நாம் அவர்களிடம் தெரிவிக்க வேண்டியது" என்று அரசி சொன்னார். "ஆம், ஆனால் அதற்கு இயற்றவேண்டியது என்ன என்று தெரியவில்லை" என்றார் சுமித்ரன். கிருஷ்ணை "நகரின் எல்லையில் துர்க்கை அன்னையின் ஆலயம் ஒன்றுள்ளது. இன்று எட்டாம் எழுநிலவு. அன்னைக்கு மாதந்தோறும் செய்யப்படவேண்டிய தனிப்பூசனைகளுக்கான

நாள்" என்று அவர் சொன்னார். "நான் வழக்கம்போல அணியூர்வலமாக அப்பூசனைக்கு செல்கிறேன்."

அவர் அதை சொன்னபோது ஒவ்வொருவரும் தங்களுக்குள் பூசனைக்குரிய தருணமா இது என்றனர். ஒருவரை ஒருவர் விழிநோக்கினர். "உண்மையில் இப்போது நான் மக்கள் முன் எழுந்தாகவேண்டும். இந்நகரைக் கைவிடும் எண்ணம் அரசுக்கு இல்லை என்றும் நாம் அஞ்சிக்கொண்டிருக்கவில்லை என்றும் எல்லாமே நம் ஆட்சியில்தான் உள்ளன என்றும் மக்களுக்கு தெரிவித்தாக வேண்டும். இந்நகரத்தில் ஒவ்வொன்றும் தனக்குரிய நிலையிலேயே நீடிக்க வேண்டுமென்று நாம் ஆணையிடுவதை அவர்களுக்கு அறிவிக்கவேண்டும். அதற்கு ஒரே வழி அவர்கள் முன் தோன்றுவது. நேரில் ஆட்சியாளர்களை பார்க்காமல் இத்தருணத்தில் எவரும் எதையும் நம்ப மாட்டார்கள்."

"அரசு என்பது பெரும்பாலான பொழுதுகளில் ஒரு நம்பிக்கை, ஓர் உருவகம், அருகிருக்கும் சில தொடர்பு அமைப்புக்கள். ஆனால் இடர்க்காலங்களில் அரசு என்பது கண்முன் எழும் அரசனே. அவனுடைய மணிமுடியும் செங்கோலுமே. மனிதர்கள் மனிதர்களை மட்டுமே தலைவர்கள் என ஏற்கமுடியும்" என்று கிருஷ்ணை சொன்னார். "ஆனால் அறிவிப்புகள் அளிக்கவோ, அறிவுறுத்தவோ, ஆணையிடவோ அவர்களிடையே தோன்றினால் அதுவே மேலும் அச்சத்தை அளிக்கும், நான் வழக்கமான இறைபூசனைக்குச் சென்றால் மட்டும் போதும், இங்கு நிகழ்ந்த விரிசல்களைப் பற்றி நாம் எவ்வகையிலும் பொருட்படுத்தவில்லை என்று குடிகள் அதிலிருந்தே அறிவார்கள்."

“ஆனால்” என்று ஐயத்துடன் சுமித்ரன் சொன்னார். “அதுவே நிகழட்டும்” என்று கிருஷ்ணை ஆணையிட்டார் “முழு அணிவகுப்பு எனக்குத் தேவை. படைக்கலங்கள் கொண்ட வீரர்கள் என்னைச் சூழ்ந்து வரவேண்டும். மங்கலச்சேடியரின் அணிநிரை, இசைச்சூதர்களின் சூழ்கை, பட்டங்கள், பரிவட்டங்கள் என அனைத்தும் தேவை. துவாரகை பொலிந்த நாட்களில் என்ன நடந்ததோ அது நடக்கவேண்டும்” என்று கிருஷ்ணை சொன்னார்.

# கல்பொருசிறுநுரை - 58

**பகுதி ஆறு : படைப்புல் – 2**

தந்தையே, பேரரசி கிருஷ்ணையின் ஆணைப்படி மிக விரைவில் ஓர் அணி ஊர்வலம் ஒருங்கமைக்கப்பட்டது. அரண்மனையில் இருந்து அணிச்சேடியர் அனைவரும் அழைத்து வரப்பட்டு விரைந்து அணிகொள்ளச் செய்யப்பட்டனர். யானைகள் முகபடாமும் பட்டமும் அணிவிக்கப்பட்டு ஒருக்கப்பட்டன. குதிரைகள் கவசம் பூண்டன. இசைச்சூதர்களும் அந்தணர்களும் நிரைவகுத்தனர். அனைத்தையும் பூர்ணநமாம்ஷுவும் நானும் சேர்ந்து ஒருங்கிணைத்தோம்.

முதலில் அனைவரும் எங்கள் ஆணைகளால் திகைத்தனர். என்ன செய்வதென்றறியாது குழம்பினர். ஆனால் மிக விரைவில் அவர்கள் அதில் அமைந்தனர். அது அவர்களுக்கு

ஒவ்வொன்றும் அதன் பழைய நிலையிலேயே இருக்கிறது என்ற உறுதிப்பாட்டை அளித்தது. அனைத்தும் நிலைமீள்கிறது என்ற செய்தியை கொடுத்தது. ஒவ்வொருவரும் அதை பற்றிக்கொண்டு மீண்டு வந்தனர். அவர்களின் முகங்கள் தெளிந்தன. சிரித்தனர், கூவினர், ஒருவரை ஒருவர் அழைத்துக்கொண்டனர். கண்ணெதிரிலேயே களமுற்றத்தில் அணி ஊர்வலம் ஒருங்கி நின்றது. அனைத்து முகங்களும் மலர்ந்திருந்தன.

அணியெழுகைக்கான முரசுகள் முழங்கின. கொம்பொலிகள் எழுந்தன. அணிநிரை அசைவு கொண்டது. அரண்மனையின் உப்பரிகையில் முழுதணிக்கோலத்தில் பேரரசி கிருஷ்ணை தோன்றியதுமே அனைவரும் மேலே பார்த்து "எழுகதிர் வாழ்க! தலைநூறுகொண்டோன் மகள் வாழ்க! அஸ்தினபுரியின் அரசி வாழ்க! துவாரகையின் பேரரசி வாழ்க!" என்று வெறிகொண்டு கூச்சலிட்டனர். ஒளிர்முடி சூடி, மின்னும் பொற்பட்டாடைகள் அணிந்து, உடலெங்கும் அருமணி நகைகள் சுடர்விட அங்கு நின்றிருந்த கிருஷ்ணையும் இளங்கதிர் என்றே தோன்றினார்.

உப்பரிகையில் இருந்து படிகளில் இறங்கி கைகூப்பியபடி அவர் வந்துநின்றபோது அமைச்சர் சுகிர்தர் சென்று வணங்கி "அரசி, தங்களுக்குரிய பல்லக்கு ஒருங்கியிருக்கிறது" என்றார். "வேண்டியதில்லை, பட்டத்து யானை வரட்டும்" என்றார் கிருஷ்ணை. முன்செலவுக்காக பட்டத்து யானையை ஒருக்கியிருந்தனர். முகபடாமும் பட்டுப் புறச்சீலையும் அருமணி மின்னும் நகைகளும் அணிந்து நின்றிருந்த பெருங்களிறான மகாரதம் அசைந்து வந்து நின்றது. அரசி கிருஷ்ணை அதன்மேல் ஏறி நாற்புறமும் திறந்த அம்பாரியில் கையில் செங்கோலுடனும் மணிமுடியுடனும் அமர்ந்தார்.

அணி ஊர்வலம் அரசமுற்றத்திலிருந்து கிளம்பி நகரத்தெருக்களூடாக சென்றது. நகரத்தெருக்கள் முழுக்க நெரிந்து தோளோடு தோள்முட்டி மோதி சரிந்து விழுந்து எழுந்து தவித்துக்கொண்டிருந்த கூட்டம் வேல் சுழற்றி முரசறைந்து கூச்சலிட்ட படைவீரர்களால் பிளந்து விலக்கப்பட்டது. அந்த இடைவெளியில்தான் அணியூர்வலம் முன்னால் சென்றது. முதலில் அது என்னவென்றே எவருக்கும் புரியவில்லை. அதை கண்டவர்கள் முதலில் திகைத்தனர். பின்னர் சொல்லிழந்து வாய்பிளந்து சுவரோரங்களில் ஒண்டினர்.

வீட்டு முகப்புகளில், அங்காடி முகப்புகளில் நின்று மக்கள் அதை பார்த்தனர். அணியூர்வலத்தின் முரசொலி அருகில் இருந்த காவல்மாடங்களில் இருந்து பெருகி மேலெழுந்தது. அதுவரை ஆணைகளையும் எச்சரிக்கைகளையும் விடுத்து பதறிக்கொண்டிருந்த காவல்மாடங்கள் அனைத்திலும் இருந்து மங்கலப் பேரொலி எழத் தொடங்கியது. அது தன்னைத்தானே பெருக்கிக்கொண்டது. முரசறைவோர் உடல் வியர்த்துவழிய வெறிகொண்டவர்களாக மங்கல இசை எழுப்புவதை கண்டேன். அவர்கள் உடலில் தெய்வம் எழுந்ததெனத் தோன்றியது. பலர் கண்ணீர்விட்டுக்கொண்டும் கூச்சலிட்டுக்கொண்டும் வெறியுடன் நகைத்தபடியும் முரசறைந்தனர். மின்னும் வியர்வையை அவர்கள் உடலில் காணமுடிந்தது.

முரசுகளிலிருந்து முரசுகளுக்கென மங்கல இசை பரவியது. சூழ்ந்திருந்த பெரு நிலத்திலிருந்து எதிரொலித்து திரும்பி வந்தது. துவாரகை மேல் அது படிந்தது. மங்கல இசை எத்தனை நினைவுகளை மீட்டுகிறது என்று நான் வியந்து நோக்கினேன். இந்நகர் பொலிந்த நாட்கள். பெருவிழவுகள்,

களியாட்டுகள். இதன் தலைவன் என்று மணிமுடி சூடி நீங்கள் அமர்ந்திருந்த கோலம். தந்தையே, மொத்த நகரும் மெல்ல அமைவதை கண்டேன். ஆங்காங்கே மக்கள் அசைவிழந்து நின்றனர். முதலில் பெருங்கூட்டம் எழுப்பிய முழக்கத்திற்குள் தனி அதிர்வென ஒலித்துக்கொண்டிருந்த மங்கல இசை மெல்ல மெல்ல வலுத்தது. பின்னர் அது மட்டுமே ஒலித்தது.

நகரின் அனைத்து அரண்மனைகளின் உப்பரிகைகளிலும் ஏவலர்கள் வந்து நின்றனர். பின்னர் அரசமைந்தர் பிரத்யும்னனும் சாம்பனும் ஃபானுவும் இளையோரும் கூட வந்து உப்பரிகையில் நின்று கீழே பார்த்தனர். கிருதவர்மனும் சாத்யகியும் தங்கள் மாளிகையில் இருந்து நோக்கினர். நகரினூடாக அந்தி ஒளியில் மின்னியபடி அரசி செல்வதை நான் என் உப்பரிகையிலிருந்து பார்த்துக்கொண்டிருந்தேன். அரசி செல்லும் வழியெங்கும் மக்கள்திரள் நாவாய்க்குப் பின் நீளலை எழுவதுபோல் விரிந்து கொண்டிருந்தது.

சற்று நேரத்தில் துவாரகை முற்றாகவே நிலைமீண்டது. பேரரசி கிருஷ்ணை துர்க்கை ஆலயம் வரை சென்று இறங்கினார். அங்கு வழக்கமான பூசனைகளை முடித்து மீண்டும் பல்லக்கில் ஏறி நகருக்குள் நுழைந்தார். ஒருகணம் எங்கோ ஓர் உடைவென ஒரு வாழ்த்தொலி எழுந்தது. பின்னர் முழு நகரமுமே வாழ்த்தொலியால் மூடியது. "அன்னை! அன்னை!" என்று கூத்தாடினர் மக்கள். "எழுக கிருஷ்ணை! இளங்கதிர்போல் எழுக எங்கள் அரசி!" சிலர் அழுதனர். சிலர் கைவீசி கூவினர். குழந்தைகளை தலைக்குமேல் தூக்கிக் காட்டினர்.

நான் மெய்ப்பு கொண்டேன். தந்தையே, பெண் வடிவில் பீலிசூடி நீங்களே அங்கு எழுந்தருளியதென உணர்ந்தேன். கைகூப்பி

கண்ணீர் மல்கி அங்கு நின்றேன். அரசி நகரினூடாக நிறைந்து ஒழுகி வந்தார். அரண்மனையை அவர் நெருங்கும்போது பழைய துவாரகை எழுந்திருந்தது. நான் திரும்பிப்பார்த்தபோது எல்லா உப்பரிகைகளிலும் துவாரகையின் அரசமைந்தர் நின்றிருப்பதை கண்டேன். ஃபானுவும் பிரத்யும்னனும் அங்கே நின்றிருந்தனர். பிரகோஷனும் சுருதனும் விருகனும் வீராவும் சங்க்ரமஜித்தும் என அனைவரும் ஒரே முகமும் உணர்வும் கொண்டிருந்தனர்.

கிருஷ்ணையின் அவைக்குச் செல்லும்படி எங்களுக்கு அழைப்பு வந்தது. பூர்ணநமாம்ஷுவும் நானும் அங்கே சென்றபோது அமைச்சர்களையும் படைத்தலைவர்களையும் அரசி அங்கே வரச்சொல்லியிருந்தார். பூர்ணநமாம்ஷு வணங்கியதும் "இப்போதே செய்யவேண்டியவற்றைப் பற்றி பேசிக்கொண்டிருந்தேன். நகரிலிருந்து எட்டு மூத்த அரசியரும் அகன்று சென்றாகவேண்டும்" என்றார். சுமித்ரன் "இது பெரிய முடிவு. நாம் எடுக்க முடியாது" என்றார். "அவர்கள் எடுக்கலாம், அவர்கள் எடுக்கவேண்டிய முடிவு இது என அவர்களிடம் தெரிவிக்கவேண்டும் நாம்" என்று கிருஷ்ணை சொன்னார். "இம்முடிவு ஏன் எடுக்கப்பட்டது என்பதை நாம் அரச மைந்தர்களுக்கு பின்னர் விளக்கலாம். நமக்கு பொழுது இல்லை."

"ஏன்? ஒவ்வொன்றும் நிலைமீண்டு கொண்டிருக்கின்றன" என்று சுமித்ரன் சொன்னார். கிருஷ்ணை சீரான குரலில் "இல்லை,

நகரில் ஏதேனும் பெரிய அழிவு தொடரக்கூடும் என்று அறிந்தோர் சொல்கிறார்கள். நிலநடுக்கம் என்பது ஓர் அறிவிப்புதான். தொடர்வது என்ன என்று நாம் பார்க்கவேண்டும். இப்போது நாம் செய்தது மக்களின் அச்சத்தை போக்குவதை மட்டுமே. அவர்கள் அஞ்சி கலைந்திருந்தால் நாம் செய்யக்கூடுவன ஒன்றுமில்லை. ஆனால் மக்களையும் நாம் அச்சுறுத்தாமல் சீராக இந்நகரிலிருந்து அகற்றவேண்டும்" என்றார்.

"நிமித்திகர்கள்..." என சுமித்ரன் ஏதோ சொல்ல கையமர்த்தி "நான் பேசுவது நிமித்திகர் கூற்றைப் பற்றி அல்ல. சிற்பிகள்கூட இப்போது சொல்ல ஏதுமில்லை. இப்போது சீற்றம்கொண்டிருப்பது கடல். கடலை அறிந்தவர்கள் கடலோடிகள். முதிய கடலோடிகள் எழுவரை நான் அழைத்துவரச் சொன்னேன். அவர்கள் எண்ணுவதை கேட்டேன். இந்த நிலஅதிர்வு கடலுக்குள் இருந்து வந்திருக்கிறது என்று அவர்கள் சொன்னார்கள். ஆகவேதான் நிலம் நடுங்கியபோது அலைகள் பெரிதாக எழவில்லை. ஆகவே இது முழுமையாகவே கடல்சார் நிகழ்வு" என்றார்.

"அவர்கள் சில குறிகளை தேர்ந்து சொன்னார்கள். கடல் உள்வாங்கியிருக்கிறது. திறந்த வாய்க்குள் நாக்கு உள்வளைவது போன்றது அது. வாய் விழுங்க வருகிறதென்றே பொருள். நகரிலிருந்து அத்தனை காகங்களும் பறவைகளும் அகன்றுவிட்டன. அதைவிட கடலோரத்தில் கடற்காகங்கள் ஒன்றுகூட இல்லை. கடலில் இருந்து எதுவோ வரவிருக்கிறது. எதுவென்று சொல்ல எவராலும் முடியாது. அது இங்கு வராமல் திசைமாறிப் போகலாம். ஒன்றும் நிகழாமலும் போகலாம். ஆனால் இது எச்சரிக்கை. நாம் அதற்கு ஒருங்கவேண்டும்."

சுமித்ரன் “நான் அரசியரிடம் என்ன சொல்ல?” என்றார். “விளக்கவேண்டாம். என் சொல் என்று மட்டுமே சொல்க! அவர்கள் எவரும் மீறப்போவதில்லை” என்று கிருஷ்ணை சொன்னார். “அத்தனை அரசியரும் அவர்களின் பிறந்த நிலத்திற்கு செல்லட்டும். நாம் அறிவிக்கும் வரை அவர்கள் அங்கே இருக்கட்டும். ஆனால் அவர்கள் செல்வது எவருக்கும் தெரியலாகாது. இன்று மாலைக்குள் அவர்கள் படகுகள் மூலமாக சென்றுவிடவேண்டும். ஆனால் கடலில் நெடுந்தொலைவு செல்லக்கூடாது. துவாரகையின் எல்லைக்கு அருகே இருக்கும் இறுதி படகுத்துறைவரை படகில் சென்றால் போதும். மிஞ்சிப்போனால் இரண்டு நாழிகைப் பொழுது ஆகும். அங்கே கரையேறி கரைவழியாக சிந்துவை அடைந்து அங்கிருந்து மீண்டும் படகில் சிந்துவின் வழியாக செல்லட்டும்.”

“கடலில் இருப்பது உகந்தது அல்ல. ஆனால் நகர்ச்சாலைகள் அனைத்தும் மக்களால் நிறைந்துள்ளன. நகரின் எல்லைகளில் மக்கள் நெரிபடுகிறார்கள். அவர்கள் அறிய கடந்துசெல்ல முடியாது. அறிவது நன்றும் அல்ல. துறைமேடைகள் ஒழிந்து கிடக்கின்றன. அவர்கள் உடனே கிளம்பவேண்டும்... எந்த மரபுகளும் முறைமைகளும் பேணப்பட வேண்டியதில்லை. எத்தனை விரைவாக கிளம்பமுடியுமோ அத்தனை விரைவாக கிளம்பவேண்டும்” என்று கிருஷ்ணை சொன்னார்.

சகஸ்ரஜித் “ஆனால் அரசியர் கிளம்புவது எளிதல்ல. அவர்கள் கிளம்புவதற்கு முன்னர் செய்யவேண்டியவை என பல உள்ளன. அவர்கள் எந்தெந்தப் பொருட்களை எடுத்துக்கொள்வது என்பதை முடிவெடுக்கவே நெடும்பொழுதாகும். ஒவ்வொரு அரசியுடனும் ஓரிரு மூத்த சேடியர் உள்ளனர். அனைத்து முடிவுகளையும் அவர்களே எடுப்பார்கள். தங்கள் மூப்பை

காட்டும்பொருட்டு புதிய இடர்களை உருவாக்குவார்கள்" என்றார்.

கிருஷ்ணை "எனில் என் ஆணையை நான் ஏட்டில் அளிக்கிறேன். இன்னும் ஒரு நாழிகைக்குள் அரசியர் அனைவரும் படகுகளில் ஏறிக்கொள்ளவேண்டும். அதற்கு மாற்றோ தடையோ உரைக்கும் எவரும் அக்கணமே தலைவெட்டி வீழ்த்தப்படவேண்டும்... ஒரு நாழிகைக்கு மேல் எந்த அரசியாவது அரண்மனையில் இருந்தால் அந்த அரசியின் தலைமைச் சேடியர் அனைவரும் அங்கேயே கொல்லப்படவேண்டும்" என்றார்.

நான் நடுங்கிவிட்டேன். அப்போது அவரைப் பார்க்க கொற்றவை போலிருந்தார். அனைவருமே நடுங்கிவிட்டனர். அமைச்சர்களின் கைகள் நடுங்கிக்கொண்டிருந்தன. "எட்டு அரசியரிலும் எவரேனும் மறுப்போ தயக்கமோ காட்டினால் அவர்களை சிறைப்பிடித்து கட்டி படகுக்கு கொண்டு செல்க! எழுதுங்கள் ஆணையை" என்றார் கிருஷ்ணை. திருவெழுத்தனின் கைகள் நடுங்கிக்கொண்டிருந்தன. அவனால் எழுத முடியவில்லை. கிருஷ்ணை எழுந்து கொண்டு "நான் ஒற்றர்களை சந்திக்கவேண்டும்... ஃபானுவுக்கும் பிறருக்கும் ஓலைகளை கூறியிருக்கிறேன். அவை உடனே செல்லட்டும்" என்றார்.

அவர் சென்றதும் ஒவ்வொருவரும் பரபரத்தனர். ஓலைகள் எழுதப்பட்டன. அங்கே நின்ற மூத்த கடலோடியிடம் "நீங்கள் எதிர்பார்ப்பது என்ன?" என்றேன். "ஆழிப்பேரலை ஒன்று..." என்றார். "நான் அதை பார்த்ததில்லை. என் தந்தையோ பாட்டனோ பார்த்ததில்லை. ஆனால் அனைவரும் அதை சொல்லிக்கொண்டிருக்கிறோம். அதைப் பற்றிய

எச்சரிக்கையுடன் இருக்கிறோம்." பிறர் எவரும் அவர் சொற்களில் ஆர்வம் காட்டவில்லை. ஆனால் நான் எச்சரிக்கை அடைந்தேன். அவரை கூர்ந்து நோக்கினேன். "அலைகள் என்பவை கடலோரமாக எழுபவை. கடலுக்கு மேலே எழுபவை. ஆழத்தில் இருந்து எழும் பேரலை இது."

"கடலின் ஆழத்தில் வருணன் பேருருவனாக துயில்கிறான். மாமலைகள் கூழாங்கற்களாகத் தோன்றும் அளவு பேருரு அவனுடையது. அவன் ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒருமுறை புரண்டு படுக்கிறான். அது எப்போது என்று நம்மால் கணிக்க முடியாது. ஆனால் அவனுடைய அசைவால் கடலில் ஓர் அலை எழுகிறது. அலைகள் அல்ல, ஒற்றை அலை. அது நீராலான மலைபோல் கரை நோக்கி வரும் என்கிறார்கள். சேடனின் படம்போல் இருக்கும் என்கிறார்கள்." நான் "அது அணுகிக்கொண்டிருக்கிறது என்கிறீர்களா?" என்றேன். "என்னால் சொல்லக்கூடவில்லை. ஆனால் அறிகுறிகள் உள்ளன" என்றார்.

ஓலைகளுடன் ஒவ்வொருவரும் ஒவ்வொரு திசைக்கு ஓடினார்கள். எனக்கான பணி கிருதவர்மனை சந்திப்பது. நான் ஓலையுடன் மையஅரண்மனையின் முகப்பிலிருந்து புரவியில் அவருடைய அரண்மனைக்கு சென்றேன். அங்கே சாத்யகியும் இருந்தார். அவர்கள் ஒரே அறையில் நாற்களம் ஆடிக்கொண்டிருந்தனர். ஆனால் அருகணைந்ததும் தெரிந்தது, அவர்கள் விளையாடவில்லை. நாற்களப் பலகைக்கு இருபுறமும் அமர்ந்திருந்தார்கள். கைகள் செயலற்றிருந்தன. என் வருகையை ஏவலன் அறிவித்ததும் சாத்யகி வெறுமனே அணுகச்சொல்லி கைகாட்டினார். நான் அணுகினேன்.

என் ஓலையை பார்த்ததும் சாத்யகி "என்ன நிகழ்கிறது? முழுப் பொறுப்பையும் துரியோதனனின் மகள்

எடுத்துக்கொண்டதுபோல் உள்ளதே?" என்றார். "அது நன்று... அவ்வாறே நிகழட்டும். அவர் ஆணைத்திறன் கொண்டவர்" என்ற கிருதவர்மன் ஓலையை படித்த பின் "தீங்கு எதையோ எதிர்பார்க்கிறார் அரசி" என்றார். "அவர் கடலோடிகளிடம் உசாவியிருக்கிறார்" என்று நான் சொன்னேன். சாத்யகி "ஆணையின்படி என் படைகளை சீராக அணிவகுத்து பாலைக்குள் செல்ல வைக்கிறேன் என்று அரசியிடம் கூறுக!" என்றார்.

நான் திரும்பி வந்தபோது விஜயனும் சித்ரகேதுவும் வந்தனர். "எட்டு அரசியரையும் படகில் ஏற்றிவிட்டோம்... படகு இன்னும் சற்றுநேரத்தில் கிளம்பிவிடும்" என்றார் விஜயன். "எவரேனும் ஏதேனும் சொன்னார்களா?" என்றேன். "அதுதான் விந்தை, எவருமே எந்த மாற்றுச்சொல்லுமே உரைக்கவில்லை. ஆனால் எதிர்பார்த்ததுபோல மூத்த சேடிகள் ஒருநாள் பொழுதேனும் அளிக்காமல் முடியாது என்று பேசத்தொடங்கினர். அரசியின் ஓலையைக் காட்டிய மறுகணமே எலிகளைப்போல சிதறி ஓடினர்."

ஃபானுவிடமிருந்து அழைப்பு என்று சந்திரஃபானு வந்து மூத்தவர் பூர்ணநமாம்ஷுவிடம் சொன்னார். வருகிறேன் என்று சந்திரஃபானுவை அனுப்பிவிட்டு "என்ன நிகழ்கிறது?" என்று அவர் என்னிடம் கேட்டார். "பெரும்பாலும் அரசி கிருஷ்ணையின் ஆணைகளைப் பற்றிய தன் நிறைவின்மையையே அரசர் நம்மிடம் சொல்வார். இன்று நகரம் இயல்பாக அரசியின் கைகளுக்கு சென்றுவிட்டது." பூர்ணநமாம்ஷு "இவர் முடிவெடுக்காமல் இருந்தால் அவ்வாறுதான் ஆகும்" என்றார். "அதைத்தான் நம்மிடம் சொல்வார், எண்ணிச் சூழ்ந்து அவர் முடிவெடுக்கவிருக்கையில்

முந்திக்கொண்டு முடிவுகள் எடுத்து அரசி கிருஷ்ணை என்னென்ன சிக்கல்களை உருவாக்கியிருக்கிறார் என்று" என்றேன்.

நாங்கள் ஃபானுவின் அவைக்கு சென்றோம். அங்கே நிகழ்ந்துகொண்டிருப்பது என்ன என்று எனக்கு புரியவில்லை. எப்போதும் ஃபானுவுடன் இருந்துகொண்டிருக்கும் சுஃபானுவை அங்கே காணவில்லை. பிரத்யும்னனின் இளையவர்கள் அங்கே இருந்தனர். ஃபானு எங்களைக் கண்டதுமே "எந்த உரிமையின்படி அரசி கிருஷ்ணையின் ஆணைகள் நிறைவேற்றப்பட்டன? ஓலைகள் கொண்டுசென்ற ஒவ்வொருவரும் அதற்கு பொறுப்பு" என்று கூவினார். பூர்ணநமாம்ஷு "அரசே, நாங்கள் கொண்டுசென்றது ஆணை ஓலைகளை அல்ல, நாங்கள் அரசியருக்கான வேண்டுகோளையே கொண்டுசென்றோம்" என்றார். "உடன் சென்ற ஓலையில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியும். இந்த அரசில் எவரை தலைவெட்டுவது என்று அரசரன்றி எவரும் முடிவெடுக்க இயலாது" என்று ஃபானு சொன்னார்.

நான் "அரசே..." என்றேன். ஃபானு என்னை பார்த்தார். "நாங்கள் கொண்டுசென்ற ஓலை தங்கள் ஆணையென்றே இப்போது கொள்ளப்படும். அந்த எண்ணத்தை தாங்களே இல்லாமலாக்க வேண்டியதில்லை" என்றேன். அவர் திடுக்கிட்டு என்னை பார்த்தார். நான் சொன்னதன் பொருள் புரிந்தவராக "ம்ம்ம்" என்று உறுமினார். "நான் ஆணையிடுவதற்குரிய தருணம் வரும். ஆணை என்னவென்று எனக்கும் தெரியும்... இடர்ப்பொழுதை பயன்படுத்திக்கொண்டு எவரும் ஆள

எண்ணவேண்டாம்" என்றார். நான் தலைவணங்கினேன். "செல்க!" என்றார். நாங்கள் வெளியேறினோம்.

எங்களுடன் வந்த ஃபானுமான் "இங்கே பூசல் ஒன்று ஓடிக்கொண்டிருக்கிறது" என்றான். "அவந்தியின் எல்லையிலிருந்து ருக்மி வந்துகொண்டிருக்கிறார். அவர் வந்த பின்னர்தான் சுஃபானுவுக்கும் சுதேஷ்ணனுக்கும் இடையேயான உறவு என்ன என்பது தெரியவரும்" என்றார். எனக்கு திகைப்பாக இருந்தது. "என்ன உறவு?" என்று கேட்டேன். "அவர்கள் ஏதோ திட்டமிட்டதாக மூத்தவர் எண்ணுகிறார்" என்றான் ஃபானுமான். எங்களுடன் வந்து சேர்ந்துகொண்ட தர்ஷனிடம் மூத்தவர் "எங்கே சென்றாய்?" என்றார். தர்ஷன் "விதர்ப்பராகிய ருக்மி இங்கே வந்துகொண்டிருப்பதாக செய்தி வந்தது. வரவேண்டியதில்லை, இந்நகரை ஒழிந்துகொண்டிருக்கிறோம் என்று செய்தி அனுப்பும்படி அரசியின் ஆணை" என்றார்.

ஃபானுமான் திகைத்துவிட்டான். "அரசர் ருக்மியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்" என்றான். "ஆம், அறிவேன். ஆனால் இந்நகரை பல சிறுபகுதிகளாக பிரித்து மக்களை சீராக வெளியேற்றும்படி அரசி ஆணையிட்டிருக்கிறார். ஒவ்வொருவருக்கும் அதற்கான பொறுப்புகளை பகிர்ந்து அளித்துக்கொண்டிருக்கிறார்" என்றார். "அரசியின் செய்தி ருக்மிக்கு சென்றுவிட்டதா?" என்று ஃபானுமான் கேட்டான். "ஆம், அது சென்று சற்றுநேரமாகிறது" என்று தர்ஷன் சொன்னார். ஃபானுமான் "மூத்தவரிடம் சொல்லவேண்டும்" என்று கூறிவிட்டு திரும்பி ஓடினான்.

நாங்கள் அரசியின் அரண்மனை நோக்கி சென்றோம். நான் சூழ்ந்திருக்கும் காற்றுவெளியை பார்த்துக்கொண்டே நடந்தேன். ஒரு கொடிகூட அசையவில்லை. ஒரு இலையில்கூட

அசைவில்லை. புழுதியில்கூட அசைவில்லை. வழக்கமாக நகரில் எப்பொழுதும் காற்று சீறிக்கொண்டிருக்கும். ஆகவே அங்கு கொசுக்களோ சிறு பூச்சிகளோ இருப்பதில்லை. அங்கு வீசும் காற்றில் உடைகளும் தலைகளும் பறக்க நின்று பழகியவர்கள் நாங்கள் அனைவரும். அவ்வண்ணம் ஒரு அசைவிலா நிலை நினைவறிந்த ஒரு நாளும் வந்ததில்லை.

நகரில் கட்டுண்டிருக்காத அத்தனை விலங்குகளும் விலகிச்சென்றுவிட்டிருந்தன. யானைகள் கட்டுக்கயிற்றை இழுத்து சுற்றி வந்தன. புரவிகள் நிலையழிந்து காலை உதைத்து வாலை சுழற்றிக்கொண்டிருந்தன. கட்டுகளில்லாத புரவிகள் அனைத்தும் அனைவரையும் உதைத்தும் கடித்தும் விலக்கி வெறிகொண்டவைபோல் பல்லிளித்தபடி நகரிலிருந்து கடலுக்கு மறுபக்கமாக சென்றுகொண்டிருந்தன. உப்பரிகையிலிருந்து பார்த்தபோது நுற்றுக்கணக்கான புரவிகள் வடகிழக்கு வாயிலை நோக்கி திரண்டு செல்வதை கண்டேன். அவை தெருக்களில் நிறைந்திருந்த கூட்டத்தை முட்டி பிளந்து சென்றன. அந்த கலைந்த உணர்வுநிலையில் அவ்வாறு புரவிகள் தங்களை முட்டி விலகி நகரிலிருந்து அகன்று செல்வதை எவரும் அறியவில்லை.

அதைவிட நகருக்கு மேல் ஒரு பறவை கூட இல்லை. பல கோடி பறவைகளால் சூழப்பட்டது துவாரகை. துவாரகையின் அனைத்துப் பாறைகளிலும் அவற்றின் எச்சம் வில்லையாக வழிந்திருக்கும். முதல் மழையில் சுண்ணப்பெருக்கென கரைந்து வழியும். நகரிலுள்ள அனைத்துச் செடிக்கும் நல்லுணவாக ஆவது அந்த வெண்மை. தலைக்குமேல் அலையோசைக்கு நிகராக நிறைந்திருக்கும் வானத்தின் ஓசை

என்றும் அதை சூதர் சொல்வதுண்டு. அன்று ஒரு சிறகசைவு கூட தென்படவில்லை என்பது என்னை அச்சமுறச் செய்தது.

அச்சத்துடன் சாளரம் வழியாகச் சென்று கடலை பார்த்தேன். முதற்கணம் எனக்கு அங்கே ஒரு கடல் இருந்ததே எங்கே என்ற திகைப்புதான் ஏற்பட்டது. பின்னர்தான் கடலின் எல்லை மிகத் தொலைவில் துறைமேடைக்கு அருகே சென்றிருப்பதை கண்டேன். அங்கே நின்றிருந்த பீதர் நாட்டுப் பெருங்கலம் அலைவிலாதிருந்தது. அதன் கொடிகள் அனைத்தும் துவண்டு கிடந்தன. நகரின் ஓசைகள் அனைத்தும் உருமாறிக்கொண்டிருந்தன. என் அச்சத்தை மூத்தவர் பகிர்ந்துகொள்ளவில்லை. "அரசி ஆட்சியை கைக்கொள்வதை ஃபானு ஒப்புக்கொள்ள மாட்டார். இப்போது பூசல் அவர்களிடையேதான் எழும் என நினைக்கிறேன்" என்றார்.

நாங்கள் மடப்பள்ளிக்குச் சென்று உணவுண்டு அரசி கிருஷ்ணையின் அவைக்கு சென்றோம். செல்லும் வழியிலேயே ஸ்ரீகரர் எங்களை எதிர்கொண்டு "என்ன நடக்கிறது? நகரிலிருந்து மக்களை எல்லா வழிகள் வழியாகவும் பகுதி பகுதியாக வெளியே கொண்டுசெல்லும் திட்டம் ஒன்றை வகுக்க அரசி சொன்னார். நான் வகுத்த திட்டப்படி ஆணைகள் விடப்பட்டன. ஆனால் ஆணைகளுடன் படைகள் நகரில் இறங்குவதற்குள் அனைத்து ஆணைகளையும் நிறுத்திவைக்க வேண்டும் என்று மூத்தவர் ஃபானு ஆணையிட்டிருக்கிறார். அனைவரும் திரும்பி வந்திருக்கின்றனர்" என்றார்.

மூத்தவர் "நான் அதை எதிர்பார்த்தேன்... அரசி மூத்தவரிடம் சென்று பேசவேண்டும்" என்றார். "என்ன பேசுவது? பேசிப் புரியவைத்து செயல்படவேண்டிய நேரமா இது? நமக்கு பொழுதில்லை. மிஞ்சிப்போனால் நாலைந்து நாழிகை நமக்கு

கிடைக்கும் என்கின்றனர் கடலோடிகள்...” என்றார் ஸ்ரீகரர். “அமைச்சரே, நீங்கள் வாருங்கள். என்ன நிகழ்கிறது என்று நாம் மூத்தவர் ஃபானுவுக்கு விளக்குவோம். இனி ஓலைகள் எல்லாம் மூத்தவரின் பெயராலேயே வெளியிடப்படும் என்று அரசியிடமிருந்து ஓர் ஓலையைப் பெற்று அதை ஃபானுவிடம் அளிப்போம். அவர் ஒரு தலையசைப்பை அளித்தால் போதும், பணிகளை தொடங்கிவிடலாம்” என்றார் பூர்ணநமாம்ஷு.

நாங்கள் கிருஷ்ணையின் அவை நோக்கி கிட்டத்தட்ட ஓடினோம். ஸ்ரீகரர் “என்ன நிகழ்கிறது என்றே எனக்கு புரியவில்லை. செய்தி கேட்டு சாம்பன் உடனே தன் படைகளைத் திரட்டி ஃபானுவின் படைகளுடன் மோதவிருப்பதாக கூச்சலிடுகிறார். அவர் ஆணைகளை தனியாக பிறப்பிக்கிறார். அவர் எந்த ஆணையை இட்டாலும் அதை நிறைவேற்றவேண்டியதில்லை என்று சொல்லிவிட்டு வந்தேன்” என்றார். பூர்ணநமாம்ஷு “அது நன்று” என்றார். “ஆனால் அவருக்கு ஓர் அமைச்சர் இருக்கிறார், வக்ரர். தனக்கு மேல்கோன்மை வருவதற்காக சாம்பனை தன் கைப்பாவை என கையாள்பவர். அவர் எதை வேண்டுமென்றாலும் செய்யக்கூடும்.”

நாங்கள் கிருஷ்ணையின் அரசவைக்குச் சென்றபோது வாயிலிலேயே மறிக்கப்பட்டோம். காவலர்தலைவன் நான் அறியாதவன். அவன் “அரசியை சந்திக்க எவருக்கும் ஒப்புதல் இல்லை. அரசர் ஃபானுவின் ஆணையின்படி சாம்பனும் அவர் துணைவி கிருஷ்ணையும் அவர்களின் அரண்மனையிலேயே சிறைவைக்கப்பட்டிருக்கிறார்கள்” என்றான். “சிறைவைப்பதா? என்ன சொல்கிறாய்?” என்று ஸ்ரீகரர் கூவினார். “அரசியின் அமைச்சன் நான்.” அவன் “ஆம் அமைச்சரே, தங்களையும்

சிறைவைக்கவேண்டும் என்று ஆணை" என்றான். இரு வீரர்கள் ஸ்ரீகரரை அழைத்துச் சென்றனர்.

நானும் பூர்ணநமாம்ஷுவும் அரண்மனையின் இடைநாழியின் வழியாக ஓடினோம். ஃபானுவை சென்று பார்க்கலாம் என்றுதான் எண்ணினோம். பூர்ணநமாம்ஷு வழியிலேயே நின்று "இப்போது சென்று ஃபானுவை பார்த்தால் நாமும் சிறைப்படுவோம்" என்றார். "நாம் கிருதவர்மனையோ சாத்யகியையோ சென்று பார்ப்போம். அவர்கள் இன்றிருக்கும் நிலையினை சற்றேனும் புரிந்துகொண்டால் நன்று" என்றார். "ஆம், சாத்யகியை புரிந்துகொள்ளச் செய்ய முடியும்" என்றபடி நானும் அவருடன் ஓடினேன்.

ஆனால் கிருதவர்மன் சாத்யகி இருவருமே அவர்களின் அரண்மனையில் இல்லை. திரும்பிவரும் வழியில் பூர்ணநமாம்ஷு "நாம் பிரத்யும்னனை பார்ப்போம். இன்னும் சற்று உளத்தெளிவுடன் பேசக்கூடியவர் அவர்" என்றார். நாங்கள் அங்கே சென்றபோது வழியிலேயே படைகளால் தடுக்கப்பட்டோம். சுதேஷ்ணன் கொல்லப்பட்ட பின் அவருடைய ஆதரவுப்படைகளால் பிரத்யும்னன் தாக்கப்படலாம் என்பதனால் கடுமையான பாதுகாப்பு உருவாக்கப்பட்டிருப்பதாக காவலன் சொன்னான். அனிருத்தனுக்கும் பிரத்யும்னனுக்கும் பூசல் உருவாகியிருப்பதாக அவன் அருகே நின்ற காவலன் சொன்னான்.

நாங்கள் அதன் பின்னரும் அலைந்தோம். "முழு நகரையும் பாலைநிலத்திற்குள் இடம்பெயர்த்துவிட்டிருக்கலாம். அரிய பொழுது வீணாகிக்கொண்டே இருக்கிறது" என்று பூர்ணநமாம்ஷு சொன்னார். "சாத்யகியும் கிருதவர்மனும் இங்கே இருந்திருக்க வேண்டும்" என்று நான் சொன்னேன்.

“பொழுது சென்றுகொண்டிருக்கிறது... இந்நேரம் முழு நகரும் வெளியேறியிருக்க முடியும்” என்று பூர்ணநமாம்ஷு புலம்பினார். “நாம் இதை ஊழ் என்றே கருதவேண்டும். நாம் செய்வதற்கொன்றும் இல்லை” என்றேன்.

சோர்ந்து திரும்பும்போது நான் மீண்டும் கடலை பார்த்தேன். அங்கே அந்த பீதர் மரக்கலம் இல்லை. கடல் மிக உள்வாங்கியது. அலைகள் பின்னிழுபட்டு கடல் ஒரு பெரிய அலையாக விலகிச் செல்வதுபோல தோன்றியது. திகைப்புடன் கடலை நான் பார்த்துக்கொண்டிருக்கையிலேயே அந்தப் பெருங்கலம் தொலைவில் ஒரு வெண்பறவை என தெரிந்தது. அலகு நீட்டி சிறகு குவித்து பாய்ந்து வருவதுபோல் முழு விசையுடன் அது வந்து துவாரகையின் துறைமேடையை முட்டுவதை பார்த்தேன்.

அதன் விசையில் நகரின் அனைத்துக் கட்டடங்களும் அதிர்ந்தன. கற்கள் பெயர்ந்து ஒன்றின்மேல் ஒன்று விழுந்தன. தீபமுகப்பு உடைய தன்னை சிதைத்துக்கொண்டு அது துறைமேடைக்குள் புகுந்து கல்மண்டபங்களை நொறுக்கி கல்மேடைகளை கலைத்து பாதி தரையிலும் மீதி நீரிலுமாக நின்றது. கட்டடங்களின் கற்கள் பெயர்ந்து ஒன்றுடன் ஒன்று விழுந்தன. அந்த அதிர்வில் நகரில் விரிசலிட்டு நின்றிருந்த பலநூறு கட்டடங்கள் விழுந்தன. நகரெங்கும் ஓலம் எழுந்தது.

தந்தையே, அதைத் தொடர்ந்து மொத்தக் கடலும் ஒற்றைப் பேரலையென மாறி திசையை நிறைத்து ஓசையே இல்லாமல் அணுகி வந்தது. கடல் வானை நோக்கி எழுந்து அசைவிலாது நின்றது போலிருந்தது. நீராலான பெருங்கோட்டை என தோன்றியது. என்ன நிகழ்கிறது என்ற எண்ணம் அற்று நான் பார்த்துக்கொண்டிருக்கையிலேயே ஆழித்திரை வந்து நகரை

அறைந்தது. அனைத்துக் கட்டடங்களையும் அலை அறைந்து அனைத்து வாயில்கள், சாளரங்களினூடாகவும் அறைகளை நிறைத்தது. நகரில் நடுவே பீதர்கலம் உருவாக்கியிருந்த பிளவினூடாக ஆழிப்பேரலையின் நீர் உள்ளே புகுந்து துவாரகையை இரு பிளவுகளாக மாற்றியது.

# கல்பொருசிறுநுரை - 59

**பகுதி ஆறு : படைப்புல் – 3**

தந்தையே, என் இடப்பக்கம் மிக மெல்ல ஒரு வருகை ஒலியை உணர்ந்தேன். நத்தை ஒன்று இலைச்சருகின்மேல் படிவதுபோல நொறுங்கும் ஒலி. பொருட்கள் அடிபணிவதன் முனகலோசை. காய்ந்த கற்பரப்பின்மீது அனல் என நீர் எழ அவை பற்றிக்கொள்ளும் அரவம். திடுக்கிடலுடன் நான் திரும்பிப் பார்த்தபோது என் அருகே கடல் நின்றிருந்தது. கடலா, இங்கா, எவ்வண்ணம் என்று நான் அதை பார்த்து நின்றேன். தலைக்கு மேல் எழுந்த நீல நிற நீர்க்குன்று. நீர் அவ்வண்ணம் வானில் எழுந்து நிற்கக்கூடுமா என்ற திகைப்பை நான் அடைந்து முடிப்பதற்குள்ளாகவே அத்தனை கட்டடங்களையும் ஓங்கி அறைந்தது அலை. சரிந்து நின்ற மாளிகைகளுக்குள் புகுந்த நீர் அதன் மாடிகளின் சாளரத்தினூடாக பீறிட்டு வெளியே பாய்வதை பார்த்தேன். கட்டடங்களுக்கு மேலே அதன் அறைதல் நுரைத்தொகுதிகளென கிழிபடுவதை கண்டேன்.

கடலலை அத்தனை ஓசையிலாது வரக்கூடும் என்று நகரில் எவருமே எண்ணியிருக்கமாட்டார்கள். கடற்கரையில் பிறந்து வளர்ந்த நான் அலையையும் ஓசையையும் எப்போதும் இணைத்தே புரிந்துகொண்டிருக்கிறேன். பாம்பு எழுப்பும் அச்சத்தின் முதல் அடிப்படையாக அமைவது அதன் ஓசையின்மை. மாபெரும் பாம்புபோல பத்தி எழுப்பி வந்தது அந்த அலை. அலை என்று அதை கூறுவது பிழை. அது ஒரு நீர் எழுகைமட்டுமே. கடலின் கை ஒன்று நீண்டு வந்து விடுத்த அறை. அல்லது கடலென்னும் நீலப் பெருந்தவளையின் நாக்கு. நீண்டுவந்து சுழற்றி நக்கி இழுபட்டு பின்சென்று மறைந்தது.

என் கண் முன் கட்டடங்கள் முன்னரே அவ்வண்ணம் வகுக்கப்பட்டு, அதற்கேற்ப அவ்வண்ணம் அமைவதுபோல நொறுங்கி ஒன்றன்மேல் ஒன்றென விழுந்து படிந்துகொண்டிருப்பதை விழிகளும் செயலிழக்க பார்த்துக்கொண்டிருந்தேன், உடலற்று, உளமற்று. மாளிகைகளின் உப்பரிகைகளில் மட்டுமல்ல கீழே தரைத்தளங்களில்கூட பலநூறு பேர் அதை பார்த்துக்கொண்டிருந்தனர். எவரும் தப்பி ஓடவில்லை. அலறவோ பதறவோ இல்லை. அவர்கள் அசைவிலாது நின்று அந்த நீரறைதலுக்கு தங்களை அளித்து முற்றாக மறைந்துபோனார்கள்.

கீழே துறைமுகப்பில் இருந்து படகுகளும், இல்லங்களின் மரக்கூரைச் சட்டகங்களும், மரமேடைகளும் பொங்கி எழுந்து வந்து கற்சுவர்களில் அறைபட்டன. கற்பலகைகளும் கற்தூண்களும் கூட எழுந்து வந்து அறைந்தன. நான் நின்றிருந்த மாளிகையின் கீழே இரண்டாம் தளம் வரை தண்ணீர் பெருக்கெடுத்தது. மாளிகையின் அடித்தளம் சரிய

நான் நின்றிருந்த ஏழாவது தளம் நொறுங்கி விரிசல் ஓசையிட்டு பக்கவாட்டில் சரிந்து அமைவதை உணர்ந்தேன்.

கால் கீழ் நிலம் நொறுங்குவது நம்முள்ளிருக்கும் உயிர் நீர்மையை நலுங்க வைக்கிறது. நான் சரிந்து அமர்ந்து வாயுமிழ்ந்தேன். முற்றிலும் சரிந்து நீண்டு கிடந்த இடைநாழியில் சறுக்கி கீழே சென்றேன். செல்லும் வழியிலேயே தூண் ஒன்றை பற்றிக்கொண்டேன். பின்னர் அதைப் பற்றி ஏறி அச்சரிவினூடாக நடந்து வந்தேன். சிலகணங்களிலேயே சரிந்த நிலத்தை காலடி நிலம் என உணர்ந்து அதற்கேற்ப தன்னை அமைத்துக்கொண்ட உடல் விந்தையான காட்சிகளை கண்டது. சாளரத்திற்கு வெளியே கோணலாக விரிந்திருந்தது நிலம். தூண்கள் சரிந்து வடிவுகள் குழம்பிப்போய் நின்றன. ஒவ்வொன்றும் ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கப்பட்டிருந்தது.

கண்களைத் திறந்து என்னால் நடக்க முடியவில்லை. என் உடலை உந்தி உந்தி மேலே தள்ளவேண்டியிருந்தது. தலைசுழன்று குமட்டி வாயுமிழ்ந்தேன். ஆகவே கண்களை மூடியபடி அந்தப் பாதையில் தொற்றி நடந்தேன். பின்னர் சிறுசாளரத்தினூடாக மறுபக்கம் குதித்தேன். அங்கு இடிந்து நின்ற பிறிதொரு இல்லத்தின் கூரை மேல் விழுந்தேன். அதன் சரிவில் சறுக்கி உருண்டு விளிம்பிலிருந்து கீழே உதிர்ந்தேன்.

அங்கு மணல் சேர்ந்திருந்தமையால் நான் புதைந்து இடைவரை சென்று எழுந்து கைவீசி நீச்சலிட்டு வெளியே வந்தேன். புதுமழைக்குப் பின் கூரையடியில் தேங்கும் மணல்போல இடையளவு குவிந்து பரவியிருந்தது. எங்ஙனம் வந்தது அத்தனை மணல் என்று எனக்கு தெரியவில்லை. மணலில் கால் புதைய, விழுந்து உடல் புதைய எழுந்து நடந்து ஓர் உடல்

மேல் முட்டிக்கொண்டேன். வாயிலும் கண்களிலும் காதுகளிலும் மணல் புகுந்து செறிந்திருக்க உப்பிய வயிறுடன் ஒரு வீரன் சுவருடன் ஒட்டிக்கிடந்தான். அவன் உடலெங்கும் மணல் படிந்திருந்தது. மணலால் ஆன சிற்பம் போலிருந்தான்.

பின்னர்தான் நான் உடல்களை பார்த்தேன். இடிபாடுகள் முழுக்க இறந்த உடல்களே கிடந்தன. அத்தனைபேரும் மணலால் ஆன சிற்பங்கள். பாதி புதைந்தவை. பாதி எழுந்தவை. மணலை உந்தி எழமுயன்று மணலாக ஆனவை. மணல்முகங்களின் வெறிப்பு. மணற்கைகளின் முறுக்கல். மணல் செறிந்து உப்பிய வயிறுகள். ஓர் அலை அத்தனை பேரை கொல்ல முடியுமா? ஓர் அலை அத்தனை மணலைக்கொண்டு வந்து நகர் முழுக்க நிறைக்க முடியுமா? ஒற்றை அலை மட்டுமென கடல் மாறிவிட முடியுமா? அவ்வண்ணம் ஒன்றை அறிந்ததே இல்லை. எப்போதும் தன் எல்லை மீறாத பெண் தெய்வமொன்று சினந்தெழுந்து விழிகோர்த்து மாபெரும் தீச்சொல் ஒன்றை அறியாது உரைத்துவிட்டதுபோல்.

நான் அந்தப் பகுதியை என் நெஞ்சுக்குள் அழியாத வரைவு என கொண்டவன். அங்கு பிறந்து வளர்ந்தவன். பல்லாயிரம் முறை அத்தெருக்களில் அலைந்தவன். ஆனால் துவாரகையின் அப்பகுதி எனக்குள் முற்றாகவே அழிந்துவிட்டிருந்தது. அங்கிருந்த தெருக்களும் அரண்மனைகளும் ஊடுபாதைகளுமென அனைத்தும் சிதைந்து கலந்து எந்த நெறிகளிலும் நில்லாத எண்ணக் குவியல்களாக மாறியிருந்தன.

என் காலடியில் ஒரு சடலம் மிதிபட்டது. தசைமென்மை விதிர்க்க நான் துள்ளிப்பாய்ந்து அப்பால் சென்றேன். அதன் நெஞ்சில் மணற்பரப்பில் என் காலடி. நான் கூர்ந்து

நோக்கியபின் காலால் அதை தட்டினேன். மணல் உதிரவில்லை ஓங்கி உதைத்தேன். மணல் உதிர்ந்தபோதும் உடல் மணலால் ஆனதாகவே இருந்தது. அப்போது தெரிந்தது, மணல் அவற்றின் தோலின்மேல் தன்னை அறைந்து புகுந்து தைத்துக்கொண்டிருக்கிறது என்று.

நான் என் உடன்பிறந்தாரை சந்திக்க விழைந்தேன். ஏவலரும் காவலருமென எனக்குத் தெரிந்த எவரேனும் தேவை என்று எனக்கு தோன்றியது. ஆனால் அங்கு மேலும் நீடிக்கக் கூடாதென்று உள்ளுணர்வு சொன்னது. தலைக்கு மேல் நொறுங்கி சரிந்து அசைவின்றி நின்றிருந்த எந்த மாளிகையும் மீண்டும் ஒரு சிறுநடுக்கத்தில் கல்மழையென பொழிந்துவிடக்கூடும். என் தலை பதைத்து 'வெளியே ஓடு! ஓடு வெளியே! ஓடு!' என்று பதறிப்பதறி எனக்கு ஆணையிட்டது. நான் சிறிய சந்துகளினூடாக ஓடினேன். வழி சுழன்று வழிபிழைத்து மீண்டும் கண்டுபிடித்து மீண்டும் சுவர்களில் சென்று முட்டிக்கொண்டேன். திரும்பி மீண்டும் வழியறிந்து ஓடிக்கொண்டிருந்தேன்.

ஒரு தருணத்தில் உணர்ந்தேன், நான் கூச்சலிட்டுக் கொண்டிருந்ததை. எப்பொருளும் இல்லாத சொற்களை நான் சொல்லிக்கொண்டிருந்தேன். "ஓடு! ஓடு!" என்றேன். "எங்கே? எங்கே?" என்றேன். "யாரங்கே? யாரங்கே?" என்று கூச்சலிட்டேன். "இரண்டு! இரண்டு!" என்று சொல்லிக் கொண்டிருந்தேன். அச்சொல்லுக்கு என்ன பொருள் என்று உணர்ந்து திடுக்கிட்டு நானே நின்றுவிட்டேன். அதன்பின் "தந்தையே! தந்தையே!" என்று கூவியபடி ஓடினேன். தந்தையே, நாக்கூச்சம் உளக்கூச்சம் இன்றி உங்களை அவ்வண்ணம் நான் அழைத்தது

அதுவே முதல்முறை. நெஞ்சிலறைந்து கூவினேன். கண்ணீருடன் அலறினேன். அழுதுகொண்டே ஓடினேன்.

நாவில் கூச்சலில்லாது ஓட இயலாது என்று தெரிந்துகொண்டேன். என்னைச் சூழ்ந்து அங்கங்கே ஓடிக்கொண்டிருந்த ஒவ்வொருவரும் எதையோ சொல்லி கூச்சலிட்டுக்கொண்டிருந்தனர். தங்கள் உற்றாரின் பெயர்களை கூறினர். பலர் "கிருஷ்ணா! கிருஷ்ணா! யாதவா! மாயவா!" என்று வெறிகொண்டு அலறினர். துவாரகையினர் தங்களை அன்றி எவரையும் உற்றாரென, காப்பவர் என, தலைவர் என, தெய்வம் என கருதவில்லை என்று அப்போது உணர்ந்தேன். என் உடன்பிறந்தார் அனைவருமே தங்கள் மாற்றுமுகங்கள்தான். தந்தையே, நீங்களன்றி எனக்கு இப்புவியில் எவருமில்லை என நான் அப்போதுதான் தெளிவுற உணர்ந்தேன்.

நகருக்கு வெளியே நெடுந்தொலைவு வந்த பின்னர்தான் நான் என்னை உணர்ந்தேன். என் உடலெங்கும் மணல் படிந்திருந்தது. என் ஆடைகள் கிழிந்து தொங்கின. நின்று மூச்சிரைத்து துப்பியபோது வாயிலிருந்து குருதியும் கோழையும் கொட்டியது. மலைநீர் ஊறி பெருகி இணைந்து சிற்றோடைகளாக மாறி வெளிவருவதுபோல் துவாரகையிலிருந்து மக்கள் வெளிவந்தனர். ஒவ்வொருவரும் நெஞ்சில் அறைந்து கதறிக்கொண்டிருந்தனர். தலையிலும் மார்பிலும் அறைந்துகொண்டனர். சிலர் இறந்த குழந்தைகளின் உடல்களை தோளோடு அணைத்திருந்தனர். புண்பட்ட

குழந்தைகளை நெஞ்சிலும் தோளிலும் அழுத்திக்கொண்டிருந்தனர். உடைந்த கால்களையும் கைகளையும் இழுத்துக்கொண்டு உந்தியும் தள்ளாடியும் நடந்தனர். சூழ நோக்கியபோது துயரற்ற, வலியற்ற ஒரு முகமும் காணக் கிடைக்கவில்லை. ஒவ்வொருவரும் "கிருஷ்ணா! பெருமானே!" என்று கூச்சலிட்டுக்கொண்டிருந்தனர். "தெய்வமே! விண்ணளந்தோனே, நீயே காப்பு..." என்று வானோக்கி அலறினர்.

விந்தையானதோர் நரகக் காட்சி. துயர் துயர் என்று ஒவ்வொரு முகமும் தன்னை காட்டியது. வலி வலி என்று ஒவ்வொரு உடலும் துடித்துக்கொண்டிருந்தது. இத்தனை துயர் மானுடத்தில் திகழமுடியும். இத்தனை வலி இதன் உடல்களில் எழமுடியும். துயரும் வலியும் சேர்ந்து சூழுணர்வையும் தன்னுணர்வையும் முற்றாக அழித்து ஒவ்வொருவரையும் பித்தர்கள் என்று ஆக்கியிருந்தன. எதற்கென்று அறியாமல் ஒவ்வொருவரும் மாறி மாறி கூவினர். வானை நோக்கி அலறினர். சிலர் நெஞ்சிலும் சிலர் தரையிலும் அறைந்து கூவி அழுதனர். நான் ஒவ்வொருவரையும் பிடித்து விலக்கி முட்டி மோதி சென்று கொண்டிருந்தேன். துவாரகையின் மக்கள்தொகையில் பாதிக்கு மேல் உயிரிழந்திருக்கக்கூடும் என்று தோன்றியது.

நிலையழிந்திருந்த புரவி ஒன்றை தொலைவில் கண்டேன். அதை நோக்கி நான் செல்லச் செல்ல அது கனைத்து வாய் சீறி என்னை கடிக்க வந்தது. அதன் தோல்நாடா ஒரு கல்லில் சிக்கியிருந்தது. நகரில் எங்கேனும் பிணைக்கப்படாத எல்லா உயிர்களும் கிளம்பிச் சென்றுவிட்டிருந்ததை அதன் பின்னர்தான் உணர்ந்தேன். அவை முன்னரே

அறிந்திருக்கின்றன இவ்வண்ணம் ஒன்று நிகழும் என்று. அந்த முதல் நிலநடுக்கத்திற்கு முன்னரே பெரும்பாலான புரவிகளும் யானைகளும் காளைகளும் அத்திரிகளும் கட்டறுத்து திமிறி ஓடி பாலைநிலத்தை சென்றடைந்திருந்தன. அவற்றை பிடிப்பதன் பொருட்டு ஒரு சாரார் தேடிச் சென்றுகொண்டிருந்தனர். காகங்களும் பறவைகளும் அகன்றுவிட்டிருந்தன.

ஒற்றர்கள் சிலர் நகரிலிருந்து பல்லாயிரம் எலிகள் அழுக்கு நீரின் சிற்றலைகள்போல பாலைநிலத்தை நோக்கி சென்றுகொண்டிருப்பதாக மூத்தவர் ஃபானுவிடம் கூறினார்கள். அப்போது நான் உடனிருந்தேன். "எங்கு செல்கின்றன அவை?" என்று அவர் கேட்டார். "அறியேன். நான் வரும்போது தொலைவில் கரிய நீர் சிற்றலைகளாக பெருகி வருவதை கண்டேன். எங்கிருந்து வருகிறது மழையேதேனும் பெய்ததா என்று எண்ணி அருகணைந்தபோதுதான் அவை எலிகள் என்று தெரிந்தது. பல்லாயிரம் எலிகள். அவை ஒன்றின் பின் ஒன்றாக அலைகளாக பாலைநிலம் நோக்கி சென்றுகொண்டிருந்தன. இந்நகரில் இத்தனை எலிகள் வாழ்ந்தன என்பதே விந்தையானது" என்றான். "அவை ஏன் இப்போது கிளம்பிச்செல்கின்றன?" என்றார் மூத்தவர். "அறியேன்" என்று ஒற்றன் சொன்னான். "எவ்வண்ணமாயினும் நன்று. இனி இந்நகரில் எலிகள் இல்லை" என்று மூத்தவர் கூற மற்றவர் சிரித்தனர். ஆனால் எனக்கொரு விந்தையான அச்சம்தான் ஏற்பட்டது.

அப்புரவியை நோக்கி செல்லச் செல்ல அது நின்று என்னை பார்த்தது. அதன் உடல் விதிர்ப்பு கொண்டது. பற்கள் தெரிய வாய் திறந்து என்னை கடிக்க வந்தது. கைநீட்டி அதன்

கடிவாளத்தை பிடித்தேன். அதன் மூக்கையும் கழுத்தையும் தடவினேன். மெல்ல அது ஆறுதலடைந்து பெருமூச்சுவிட்டது. அதுவே ஒரு மனிதனின் உதவி நாடி நின்றிருக்கிறது. அது தன்னுள் வாழ்ந்த வழியுணர்வையும் தன்னுணர்வையும் முற்றிழந்திருக்கையில் அதை ஆளும் ஒருவன் அதை நடத்த முடியும். நான் அதை தட்டி அதன்மேல் அமர்ந்தேன். அதை முன்செலுத்தினேன்.

துவாரகையின் தெருக்கள் முழுக்க பதிக்கப்பட்டிருந்த எடைமிக்க கற்பாளங்கள் மறைந்திருந்தன. அவை எங்கு சென்றிருக்க முடியும்? அவற்றுக்கு மேல் மணல் படிந்திருக்கிறதா என்று முதலில் எண்ணினேன். பின்னர் பக்கவாட்டில் பார்த்தபோது அக்கற்பாளங்கள் அனைத்தும் அருகிலிருந்த மாளிகையின் கூரைகளுக்கு மேல் தூக்கி வீசப்பட்டிருப்பதை கண்டேன். கற்பாறைகளை தூக்கி வீசும் நீரலைகள் பற்றி எங்கும் எந்த நூலிலும் அறிந்ததில்லை. கற்தூண்கள் கூரைகள் மேல் சென்று அமைந்திருந்தன. நீர் பின்விலகிய பின் மணல் உலரத்தொடங்கியமையால் சரிந்து நின்ற மாளிகைகளின் விளிம்புகளில் இருந்து மணல் மழை பொழிந்து கொண்டிருந்தது.

புரவி கனைத்தபடி சிறிய தடைகளை தாவிக்கடந்து, விழுந்து கிடந்த மனிதர்களின் உடல்மேல் கால் படாமல் துள்ளி சென்று கொண்டிருந்தது. துவாரகைக்கு வெளியே அதன் தோரண நுழைவாயில் அவ்வண்ணமே நின்றுகொண்டிருந்தது. எதையும் அறியாததாக. வேறொரு காலத்தில் ஊன்றியதாக. நான் அதை நோக்கி செல்லச் செல்ல பெருகிப் பெருகி என் தலைக்கு மேல் எழுந்தது. அதன் சிற்பங்கள் திகைப்புடன் கண்விழித்து என்னை

பார்த்தன. அவற்றின் திறந்த வாய்களில் அமைந்த சொற்களை அருகெனக் கண்டேன்.

நெடுநாட்களாக அச்சொற்கள் என்ன என்று நான் எண்ணியிருக்கிறேன். அவற்றுக்கு பொருள் சொல்லும் சூதர்களும் புலவர்களும் ஆளுக்கொன்றை அளிப்பதுண்டு. அப்போது உணர்ந்தேன், அவை துவாரகையின் அழிவை சொல்லிக்கொண்டிருக்கின்றன என்று. முன்னரே அவை அதனை கண்டுவிட்டன. அலை என்றன, ஆழி என்றன, ஆம் என்றன, ஆனால் என்றன, அப்பால் என்றன, அதுவே என்றன. தொலைவு என்றன, தொன்மை என்றன. இனி என்றன, இல்லை இப்போது என்றன, இங்கே என்றன. ஏன் என்றன, எவர் என்றன, எது என்றன. தந்தையே, பெரும்பாலானவை ஏன் ஏன் என்றே சொல்லிக்கொண்டிருந்தன.

நான் அந்தத் தோரணவாயிலை அணுகி அதை தாங்கி நின்ற பெரும் பூதத்தின் காலடியில் அமைந்திருந்த ஆமையின் ஒற்றைக்கால் அருகே சென்று நின்றேன். அதன் மேல் என் தலையை வைத்து மூச்சிளைத்தேன். ஆமை என்னை தன் காலால் அழுத்தி மண்ணுக்குள் செலுத்த முயல்வதுபோல் தோன்றியது. புரவி தானும் தலை தாழ்த்தி நுரை உதிர்த்து மூச்சுவாங்கியது. அதன் உடலிலிருந்து வியர்வை வழிந்தது. நான் ஓர் எண்ணம் எழ புரவியை அங்கேயே நிறுத்திவிட்டு கீழிறங்கி தோரணவாயிலின் உள்ளே சென்றேன். அதன் மேலே செல்வதற்கான குறுகலான படிக்கட்டுகளை கண்டேன்.

அக்கதவுகள் பூட்டப்பட்டிருந்தன. அருகிருந்த கல்லை எடுத்து அதை உடைத்து திறந்தேன். அதன்மீது ஏறி படிகளினூடாக மேலே சென்றேன். அங்கு அப்போதும் காவலர்கள் இருந்தார்கள். அவர்கள் அனைவருமே அதை அவ்வண்ணமே

விட்டுவிட்டு விலகிச்சென்றிருந்தார்கள். முதல் மூன்று நிலைகளில் உள்ளே காவலர்கள் தங்குவதற்கான விரிந்த கூடங்களே இருந்தன. அலை அடிப்பது வரை அங்கு தங்கியிருந்த காவலர்களின் ஆடைகளும் படைக்கலங்களும் படுக்கைகளும் பரவியிருந்தன. தரை முழுக்க அவர்கள் ஆடிய தாயங்களும் பாம்பேணி ஆட்டத்திற்காக வரையப்பட்ட கட்டங்களும் தெரிந்தன. நாற்கள வரைவின்மேல் சிதறிய காய்கள்.

அறைச்சுவர்களில் யாதவர்களின் தொல்கதைகள். யயாதிக்கு தேவயானியில் நம் குல மூதாதையான யது பிறக்கும் தருணம். யது தன் குடியினருடன் மேய்ச்சல் நிலம் தேடிச் செல்லும் காட்சி. அவர் மைந்தர்களான சகஸ்ரஜித், குரோஷ்டா, நளன், ரிபு ஆகியோருடன் அரசுவீற்றிருக்கும் காட்சி. சகஸ்ரஜித் சதஜித்துடன் கன்றோட்டுகிறார். சதஜித் தன் மைந்தர்களான மகாபயன், வேனுஹயன், ஹேகயன் ஆகியோருடன் மன்றமர்ந்திருக்கிறார். கார்த்தவீரியர். ஜயத்வஜன், சூரசேனன், விருஷபன், மது, ஊர்ஜிதன் எனும் அவருடைய மைந்தர்கள். மதுவின் மைந்தரான விருஷ்ணி. நான் விருஷ்ணியின் முகத்தை நோக்கியபடி நின்றேன். தந்தையே, அது தங்கள் முகமெனத் தோன்றியது.

மேலே செல்லச் செல்ல அறைகள் குறுகி வந்தன. அவற்றின் உட்சுவர்களில் ஓவியங்கள் வரையப்பட்டிருந்தன. கந்தர்வர்களும் தேவர்களும் விழித்து நோக்கிக்கொண்டிருந்தனர். கீழ் அடுக்குகளில் அவர்கள் குனிந்து நோக்கி அருட்சொல் கூவி புன்னகைத்தனர். மேலே செல்லச் செல்ல அவர்கள் சினந்து அச்சுறுத்தினர். மேலும் ஏறிச்சென்றபோது இளிவரல் நகைப்புடன் கைசுட்டி ஏதோ

சொல்லினர். அதற்குமேல் தேவர்கள் ஊழ்கத்திலென கண்மூடி அமர்ந்திருந்தனர். மானுடர் இருப்பதை அவர்கள் அறிந்திருக்கவில்லை என்பதுபோல.

அதற்குமேல் சென்று தோரணவாயிலின் உச்சியை அடைந்தேன். அதன் சுவர்களில் நாற்புறமும் உங்கள் முகம் மட்டுமே. ஆழியும் வெண்சங்கும் கொண்டு விண்ணளந்தோன் என நின்றீர்கள். புற்குழல் மீட்டி விழிகனிந்து அமர்ந்திருந்தீர்கள். வேதம் உரைத்து குருக்ஷேத்ரத் தேர்மேல் அமர்ந்திருந்தீர்கள். அனைத்தையும் விடுத்து கையை மடிமீதமைத்து ஊழ்கத்தில் அமர்ந்திருந்தீர்கள். அவ்வறையிலிருந்து பக்கவாட்டில் திறந்த ஒரு வாசலினூடாக சென்றேன். தோரணவாயிலின் மையத்தை அடைந்தேன். அதன் மாபெரும் சாளரம் திறந்து கிடந்தது. அங்கிருந்து பார்த்தபோது இருபுறமும் நீலவானம்தான் தெரிந்தது.

கையூன்றித் தாவி அந்தக் கற்பீடத்தில் ஏறிநின்று விளிம்பை சென்றடைந்து கீழே பார்த்தேன். துவாரகையிலிருந்து மக்கள் எறும்புத்திரள்கள்போல கிளம்பிவந்து, தயங்கி, செறிந்து பருத்து, முட்டி மோதி தோரணவாயிலை நோக்கி வந்து கடந்து அப்பால் சென்றுகொண்டிருப்பதை பார்த்தேன். ஒரு கலங்கிய சிற்றோடை என. அதற்கப்பால் துவாரகையை கண்டேன். அங்கு நான் கண்டது ஒரு மாபெரும் கற்குப்பைமேட்டை மட்டுமே. பொருளற்ற வடிவற்ற இடிபாடுகளின் தொகை.

ஒரு கணத்திற்கு மேல் எனக்கு அதை பார்க்க இயலவில்லை. விம்மலுடன் நான் திரும்பிப் பாய்ந்தேன். கண்களை மூடி உடல் குறுக்கி நின்று அழுதேன். பின்னர் மறுமுனைக்கு ஓடி அந்தச் சாளரத்தின் நிலைப்படியை தாவி ஏறி மறுபுறம் பார்த்தேன். விழி தொடும் நெடுந்தொலைவு வரை விரிந்திருந்த

வெறும் பாலைவெளியைப் பார்த்து கண்ணீர்விட்டு அழுதபடி அங்கு நின்றிருந்தேன்.

# கல்பொருசிறுநுரை - 60

## பகுதி ஆறு : படைப்புல் – 4

தந்தையே, எங்கு செல்வதென்று முடிவெடுக்க இயலாமல் துவாரகைக்கு வெளியே பாலைநிலத்தில் பதினைந்து நாட்களுக்கு மேல் தங்கியிருந்தோம். பல்வேறு ஓடைகளாக திரண்டு நகரிலிருந்து வெளிவந்தவர்கள் பாலைநிலத்தில் ஒருங்கிணைந்தோம். அங்கே மூத்தவர் ஃபானு அரண்மனைகளைக் கைவிட்டு தன் படையினருடனும் சுற்றத்துடனும் வந்து தங்கினார். அவரைத் தொடர்ந்து வந்த பிரத்யும்னனும் அனிருத்தனும் சற்று அப்பால் தங்கினார்கள். அரசி கிருஷ்ணையும் சாம்பனும் இறுதியாக வந்து தங்கினர். ஒவ்வொருநாளும் என அந்தக் கூட்டம் பெருகிக்கொண்டே சென்றது.

துவாரகையை கைவிடும் முடிவை எடுப்பதற்கே எங்களுக்கு மூன்று நாட்களுக்கு மேல் ஆயிற்று. நகரில் என்ன நிகழ்ந்து கொண்டிருக்கிறதென்பதை நாங்கள் அறியவில்லை. எங்களிடம் வந்து சொல்லும் ஒற்றர் பேரமைப்பும் முற்றிலும் சிதறிவிட்டிருந்தது. நாங்கள் திகைத்து சொல்லிழந்து ஒருவரை ஒருவர் பார்த்து விழித்துக்கொண்டிருந்தோம். எவரிடமும் எந்த விதமான திட்டங்களும் இருக்கவில்லை. ஆனால்

ஒவ்வொருவரும் இன்னொருவரை தேடிச்சென்று உரையாட விரும்பினோம். ஏதேனும் ஒரு வழி இருக்கிறது என்று பிறிதொருவர் சொன்னால் அதை நாம் கேட்டுக்கொள்ளலாம் என்ற எண்ணமே எங்களை உந்தியது.

மூத்தவர் ஃபானு தன் அரண்மனை அறையில் முழு நேரமும் தாழ்வான பீடத்தில் கால்களைத் தூக்கி மேலே வைத்துக்கொண்டு உடல்குறுக்கி அமர்ந்திருந்தார். அதுதான் அவருடைய இயல்பான அமர்வு முறை. இளமையிலேயே எந்த பீடத்திலும் காலை மேலே தூக்கி உடல் குறுக்கி அமர்வதே அவர் வழக்கம். எங்களுக்கு அரசமுறைகளை கற்பித்த திரிவக்ரர் அவரை பலமுறை கண்டித்து திருத்தி கால் விரித்து கையமர்த்தி நிமிர்ந்து அமர்ந்திருக்கும் அரச தோரணையை கற்பித்தார். அதை ஒரு பயிற்சியாகவே அவர் நெடுங்காலம் மேற்கொண்டார். எனினும் அவைகளில் அமர்கையில் எதையோ ஒன்றை கூர்ந்து உளம்கொள்கையிலோ, உளம் தளர்ந்து தன்னுள் அமிழ்கையிலோ இயல்பாக அவரிடம் அந்தக் குறுகல் வரும். தனி அவைகளில் அவ்வப்போது அவர் கால்களைத் தூக்கி மேலே வைத்துக்கொள்வதுண்டு.

சிற்றவைகளில் மது அருந்திக் களித்திருந்தால் முதலில் அவருடைய இரு கால்களும் பீடத்திற்கு மேல் செல்லும். உடல் குறுகி தலை தாழும். கண்கள் பிறிதொன்றாக மாறும். தன் மேல் ஏற்றப்பட்டிருந்த அரசப்பொறுப்புகள் அனைத்திலும் இருந்து விடுபட்டு எளிய யாதவராக அவர் மாறுவார். அதன் பின்னரே அவர் குரல் மேலெழத் தொடங்கும். உடைந்த நீள்குரலில் பாடுவார். கைகளைத் தட்டி தாளமிடுவார். அரிதாக குழலெடுத்து மீட்டவும் செய்வார். அப்போது மட்டுமே அவர் மகிழ்ச்சியாக இருப்பதாகத் தோன்றும். அவரில் தொன்மையான

யாதவ மூதாதையர் ஒவ்வொருவராக எழுந்து வருவதாக எண்ணிக்கொள்வேன்.

இரும்பாலான பிறிதொரு ஃபானுவை செய்து அவர் மேல் சுமத்தியிருந்தார்கள். தன் முழு விசையாலும் அதைச் சுமந்து அவர் அலைந்தார். அதற்குள் அவர் சிக்கிக்கொண்டு உடல் இறுகி இருந்தார். துவாரகை சரிந்த செய்தியிலிருந்தே மெல்ல மெல்ல அவரிடம் இருந்த இறுக்கம் அகன்றது. எவரும் எவரையும் நோக்காமல் ஆனபோது அவர் ஒரு விடுதலையை அடைந்தார். தனக்குத்தானே பேசிக்கொண்டும் மெல்ல சிரித்துக்கொண்டும் இருந்தார். பெரும்பாலான நேரங்களில் மது அருந்தி களியில் இருந்ததனால் தன்னுணர்வை முற்றாக இழந்திருந்தார். பீடங்கள் அனைத்திலும் அவர் கால் தூக்கி அமர்வதை எவரும் ஒரு பொருட்டாக எண்ணவில்லை என்பது மட்டும் அல்ல அது அப்போது சற்று உகந்ததாகவும் இருந்தது. யாதவக் குடியின் தொல்மூதாதை ஒருவர் வந்து தன்னுடன் அமர்ந்திருப்பதுபோல ஒவ்வொருவரும் உணரத்தலைப்பட்டனர்.

ஒவ்வொருவரும் அவரிடமே சென்று பேசினர். அவர் எவருக்கும் எந்தத் தீர்வும் சொல்லவில்லை. எந்த மறுமொழியும் நேரிடையாக இல்லை. எனினும் ஒவ்வொருவரும் அவர் அருகே இருக்கவும் அவரிடம் பேசவும் விழைந்தார்கள். அவருடைய சிற்றறை எப்போதும் உடன்பிறந்தாரால் நிறைந்து நெரிசல் கொண்டிருந்தது. சில தருணங்களில் சிலர் வெளியேறினாலே சிலர் உள்ளே செல்ல முடியும் என்ற நிலை இருந்தது. அவர் தன்னை தளர்த்திக்கொண்டு பெருந்தந்தை என்ற பாவனையை சென்றடைந்தார். அவர் அதை தன்னுள் நெடுங்காலமாக

நடித்திருக்கக்கூடும். இயல்பாக அதில் சென்று அமைய அவரால் முடிந்தது.

யாதவ மைந்தர் எவருமே அரண்மனை விட்டு வெளியே செல்லவில்லை. வெளியே சென்றால் இடிந்துசரிந்த நகரைக் கண்டு நிலையழிய வேண்டியிருக்கும் என அவர்கள் அஞ்சினர். அரண்மனைக்குள் இருக்கையில் வெளியே நிகழ்வதென்ன என்று நன்றாகவே தெரிந்திருந்தாலும் மெல்லமெல்ல அனைத்தும் முன்பெனவே உள்ளன என்னும் பாவனைக்குள் செல்ல முடிந்தது. ஒன்றை உடல் நடிக்கையில் உள்ளம் அதை தொடர்கிறது. அரண்மனைக்குள் விருந்துகள் நடந்தன. அவைக்கூடல்கள் இடைவிடாது நிகழ்ந்தன. குடிக்களியாட்டு எப்போதுமிருந்தது. சூதர்களும் விறலியரும் பாடி ஆடினர். நாற்களமாடலும் நிகழ்ந்தது.

இளையவர் பத்ரன் மட்டும் வெளியே சென்று பார்த்துவிட்டு வந்து "நகரம் சரிந்துகொண்டிருக்கிறது, மூத்தவரே" என்றார். "மக்கள் அஞ்சி கிளம்பிவிட்டார்கள். விட்டுச்செல்ல முடியாதவர்கள் தெருக்களில் அலைமோதுகிறார்கள். எங்கும் இறந்த உடல்கள். உளம்பிறழ்ந்த மக்கள் எங்கும் கூச்சலிட்டுக்கொண்டிருக்கிறார்கள்... இந்நகரம் அழிந்துவிட்டது." நக்னஜித்தி அன்னையின் மைந்தரான வீரா "சில மாளிகைகள் சரிந்ததனால் நகருக்கு ஒன்றும் ஆகபோவதில்லை" என்று சொன்னார். "இந்நகரம் ஆயிரக்கணக்கான மாளிகைகளால் ஆனது." பத்ரன் எரிச்சலுடன் "சில மாளிகைகள் அல்ல. நகரில் பெரும்பாலான மாளிகைகள் சரிந்துகொண்டிருக்கின்றன" என்றார்.

"மாளிகைகள் சரிந்தாலும் கட்டிவிடலாம், நம்மிடம் கருவூலம் இருந்தால் போதும்" என்றார் மூத்தவர் சுருதன். பத்ரன்

“துறைமேடை உடைந்ததும் கடல்நீர் உட்புகுந்திருக்கிறது. இந்நகரைத் தாங்கியிருந்த இரு அடித்தளப் பாறைகளும் விலகிவிட்டிருக்கின்றன. அவை மெல்ல உருண்டு கடலுக்குள் செல்வதுபோல் தோன்றுகிறது” என்றார். சுருதன் “நகர் உருண்டு கடலுக்குள் செல்வதா? நன்று! சீரிய கற்பனை” என்றார். “மெய்யாகவே கடலுக்குள் சென்றுகொண்டிருக்கிறது இந்நகர். மலைச்சரிவில் சில இல்லங்கள் இவ்வாறு வழுக்கி நகர்ந்து கீழிறங்குவதுண்டு” என்று பத்ரன் சொன்னார். “நான் விழிகளால் கண்டேன், இந்நகர் கடல்நோக்கி இறங்கிச் செல்கிறது.”

ஆனால் ஒவ்வொருவரும் அவரை நகையாடி சிறுமைசெய்யத் தொடங்கினர். அதனூடாக அத்தருணத்தில் தங்களுக்கிருந்த அனைத்து இறுக்கங்களையும் தளர்த்திக் கொண்டனர். நகையாட்டு பொறுக்க இயலாத பத்ரன் சீற்றத்துடன் “எனில் எவரேனும் வெளியே சென்று பாருங்கள். அருகிலிருக்கும் உயரமான காவல்மாடம் எதிலேனும் சென்று பாருங்கள். இப்போது கடல் எங்கே இருக்கிறது என்று பாருங்கள். முன்பு கடல் மிக ஆழத்திலிருந்தது. சாளரங்களினூடாக மரக்கலங்களின் உச்சிப்பாயையும் கொடியையும் நாம் பார்த்துக் கொண்டிருந்தோம். இப்போது கடல் நமக்கு நேராக இருக்கிறது. கீழ்த்தளத்தில் ஒவ்வொரு சாளரத்தினூடாகவும் கடலலைகளை பார்க்க இயல்கிறது” என்றார்.

அது உண்மை என்பதனால் அனைவரும் அமைதியடைந்தனர். “கடலோரமாக அமைந்திருந்த சுங்கநிலைகளும் பண்டகநிலைகளும் முற்றிலும் மறைந்திருக்கின்றன. வணிகர்களுக்காக அமைக்கப்பட்ட பெருந்தெரு மீது கடல்அலைகள் வந்து அறைந்து கொண்டிருக்கின்றன. துவாரகையின் ஆறு தெருக்கள் இப்போதே கடலுக்குள்

சென்றுவிட்டன. இங்கிருந்தே பார்க்க இயல்கிறது" என்றார். எவரும் எதுவும் சொல்லவில்லை. மித்ரவிந்தை அன்னையின் மைந்தரான விருகன் "நான் அதை நோக்கினேன். இந்நகர் கடலை நோக்கி கவிழ்ந்திருப்பதுபோல தோன்றியது... பெரும்பாலான மாளிகைகள் சரிந்துள்ளன" என்றார்.

அப்படியும் மூத்தவர் ஃபானு நிறைவடையவில்லை. உடன்பிறந்தார் புரவியில் சென்று நேரில் பார்த்துவரும்படி ஆணையிட்டார். அவர்கள் செல்லும்போதே ஒவ்வொருவருக்கும் நகரில் என்ன நிகழ்கிறது என்று தெரிந்திருந்தது. எனினும் எவரும் எதையும் சொல்லவில்லை. பத்ரன் எரிச்சலுடன் "நகருக்குள் நீர் புகுந்திருக்கிறது என்ற செய்தியை மட்டும் வந்து சொல்க! ஏனெனில் அதற்கு அப்பால் ஏதும் செய்தியில்லை" என்றார். "நகருக்குள் அனல் புகுந்திருக்கிறது என்று சொல். மேலும் சில நாள் சொல்லாடுவதற்கு உகந்ததாக இருக்கும்" என்றார் விருகன்.

அவர்கள் சென்ற பின்னர் சுருதன் "நாம் அஞ்சுவதற்கு ஏதுமில்லை. உண்மையில் இந்நகர் சற்று சிறுப்பது நன்று. இதன் குடிகளில் பாதி பேர் வெளியேறினால் இது இன்னும் உகந்த நகரமாகும். இதில் விரிசல்விட்டிருக்கும் அனைத்துக் கட்டடங்களையும் நாமே இடித்துத் தள்ளுவோம். அவ்விடிபாடுகளைக் கொண்டுசென்று கடலோரமாக அடுக்கினோமெனில் கடலையும் கட்டுப்படுத்த முடியும். நமக்கிருக்கும் கருவூலச் செல்வம் இங்கிருக்கும் குடிகள் பாதியாக குறைந்தால் இன்னும் ஒரு தலைமுறை இங்கு வாழ்வதற்கு போதுமானதாகும். ஆகவே எதைப்பற்றியும் நாம் கவலைகொள்ள வேண்டியதில்லை" என்றார்.

அந்த எண்ணம் மிகச் சிறிய ஓர் ஆறுதலாக இருந்தது. "ஆம், கருவூலம் இருக்கிறது. அது இன்னும் ஒரு தலைமுறைக்கு போதுமானதாக இருக்கும். ஆனால் நம் குடிகளில் ஒரு சாராரை கைவிடுவது போலாகுமல்லவா?" என்று பத்ரன் கேட்டார். "நாம் கைவிடவில்லை. அவர்கள் நம்மை கைவிட்டுச் செல்கிறார்கள். இந்நகரை இந்த இக்கட்டில் கைவிடாது இங்கு நின்றிருப்பவர்களுக்குரிய பரிசென்று நம்முடைய கருவூலச் செல்வம் அமையட்டும். விட்டுச் செல்பவர்கள் தங்கள் நிலத்தை தேடிக்கொள்ளட்டும். நாம் ஒன்றும் செய்வதற்கில்லை" என்றார் சுருதன். கருவூலச் செல்வம் என்ற சொல் அனைவரையும் ஆறுதலடையச் செய்தது. அனைவரும் அச்சொல்லையே உள்ளத்துள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை விழிகள் காட்டின.

"இப்போது நாம் என்னதான் செய்வது?" என்றார் பத்ரன். "இந்நகர் தன்னைத்தானே ஒருங்கமைத்துக்கொள்ளட்டும். இதிலிருந்து பறந்து செல்பவர்கள் அகன்று, இதிலேயே தங்குபவர்கள் நீடிக்கட்டும். நிலைகொண்ட மாளிகைகள் எஞ்சி நிலையற்ற மாளிகைகள் இடிந்து இது தன்னை புதுப்பித்துக்கொள்கிறது. அந்தப் புதிய நகரத்தை நாம் உகந்த முறையில் கட்டியமைப்போம்" என்றார் சுருதன். "ஆம், நாம் இந்நகரை மீட்டமைப்போம்" என்றார் விருகன். "இது நமது நிலம்... நாம் இங்கே வென்று காட்டுவோம்... கடல் அறியட்டும் யாதவ மைந்தரின் ஆற்றலை" என்றார் வீரா.

ஃபானு தலையை அசைத்து "எனக்கு ஒன்றும் புரியவில்லை. ஒவ்வொரு நாளும் நூற்றுக்கணக்கான எண்ணங்கள் என்னை வந்து சேர்கின்றன. எல்லாமே சரி என்றும் பிழை என்றும் எனக்கு தோன்றுகிறது. இத்தருணத்தில் முற்றிலும்

தனித்துவிடப்பட்டிருக்கிறேன்" என்றார். "அது நன்று, எல்லா தரப்பும் வரட்டும். நாம் ஆராய்ந்து முடிவெடுப்போம். எந்த முடிவையும் நாம் அஞ்சி எடுப்பதாக இருக்கவேண்டாம்" என்றார் சுருதன். "நாம் சாத்யகியிடமும் கிருதவர்மனிடமும் கலந்துகொள்வோம்" என்று வீரா சொன்னார். "பிரத்யும்னனும் அனிருத்தனும் இத்தருணத்தில் நம்முடன் நிலைகொள்ளவேண்டும்" என்று ஃபானுமான் சொன்னான். "நம்முடன் முரண்படுபவர் அஸ்தினபுரியின் அரசி மட்டுமே... அவர் சொல்லை சாம்பன் கேட்பார் என்றால் நன்றல்ல" என்றார் ஃபானு.

கொந்தளிப்பும் குழப்பமும் நிறைந்த பொழுதுகள் வீணே கடந்து சென்றன. வெளியே சென்றவர்கள் திரும்பி வந்தனர். அவர்கள் எண்ணியதைவிட திகைத்து வெளிறி சொல்லடங்கிப் போயிருந்தனர். ஃபானு "என்ன நிகழ்கிறது? நகரில் நீர் புகுந்திருக்கிறதா?" என்று கேட்டார். "நகருக்குள் படகுப் போக்குவரத்தை தொடங்க முடியுமா?" என்று சுருதன் நகையாட்டாகக் கேட்டார். ஆனால் மூத்தவரான பிரஃபானு ஃபானுவைப் பார்த்து "மூத்தவரே, இந்நகரை இனி நாம் காப்பாற்ற இயலாது. இங்கு இனி எவரும் தங்க இயலாது" என்றார். "என்ன சொல்கிறாய்?" என்றார் ஃபானு. "என் கண்ணெதிரில் மாளிகை ஒன்று இறங்கிs சென்று கடலுக்குள் மூழ்குவதை பார்த்தேன். இந்நகரைத் தாங்கியிருந்த பெருந்தாலம் சற்றே சாய்ந்ததுபோல இதிலுள்ள ஒவ்வொன்றும் நகர்ந்து கடலுக்குள் சென்றுகொண்டிருக்கிறது" என்றார் பிரஃபானு.

"நாம் இந்த அரண்மனையில் இருக்கிறோம். அவ்வாறு இங்கு எதையும் உணரவில்லையே" என்றார் ஃபானு. "இது உச்சியில்

அமைந்த மாளிகை. இங்கும் அந்த அசைவு வரும். நிகழ்ந்துகொண்டிருக்கிறது, அது நமக்கு இன்னும் தெரியவில்லை" என்றார் பிரஃபானு. "வேளாண்குடித் தலைவர்களின் மாளிகைகளும், படைத்தலைவர் இல்லங்களும் கடலுக்குள் சென்றுவிட்டன. நகரின் பெரும்பாலான தெருக்கள் ஒழிந்து கிடக்கின்றன. தங்களுக்கு உகந்த பொருட்களையும் உறவினரையும் சேர்த்துக்கொண்டு மக்கள் நகரைவிட்டு வெளியேறி சிந்துவுக்குச் செல்லும் பாதையிலும் பாலைநிலத்துச் சோலைகளிலும் நிறைந்து செறிந்திருக்கிறார்கள்" என்றார் பிரஃபானு.

"கைவிடுவதா? இந்நகரையா? எங்கு செல்வது?" என்றார் ஃபானு. "மதுராவுக்கு செல்வோம், பிற யாதவ நிலங்களுக்கு செல்வோம். எங்கேனும் செல்வோம். ஆனால் இங்கு இனி நீடிக்கமுடியாது. ஐயமே வேண்டியதில்லை" என்றார் பிரஃபானு. "இனி நீரெழ வாய்ப்பில்லை என்றார்களே?" என்று ஃபானு மீண்டும் கேட்டார். "சரிந்துகொண்டிருக்கும் மரத்தில் இறுதி வரை தங்கியிருக்கும் பறவைகளைப்போல நாம் இந்த நகரை நம்பியிருக்கிறோம். ஆயினும் இது விழுந்து கொண்டிருக்கிறது என்பது உண்மை. மூத்தவரே, இனி பேரலை வரவில்லை என்றாலும், இனி ஒரு காற்று கூட அடிக்கவில்லையென்றாலும்கூட இந்நகர் விழுந்துவிடும்" என்றான் ஃபானுமான்.

"நகரின் கீழ் அடுக்குகள் அனைத்தும் கடலுக்குள் விழுகின்றன. அந்த இடத்தை நிரப்ப மேலுள்ள அமைப்புகள் மேலும் கீழிறங்கிச் செல்கின்றன. தாங்கள் அறிந்திருப்பீர்கள், துவாரகையின் கடல் மிக மிக ஆழமானது. இறங்கிச்செல்லும் அத்தனை கட்டடங்களும் மிகப் பாதாளத்தில் சென்று மறைந்து

கொண்டிருக்கின்றன. துவாரகை என்பது கடலாழத்தில் உடல் மறைத்து தலைமட்டும் காட்டி அமைந்திருக்கும் மாபெரும் மலையொன்றின் உச்சியில் அமைக்கப்பட்ட நகர் என்பதை மறக்க வேண்டியதில்லை. நாம் உண்மையில் மலைச்சரிவில் இறங்கிக்கொண்டிருக்கிறோம்" என்றார் சந்திர꞉பானு.

"என்னால் எந்த முடிவையும் எடுக்க முடியவில்லை. இங்கிருந்து எப்படிச் செல்வது? நமது கருவூலம் மிகப் பெரியது. நம் கருவூல அறைகளை ஒழித்து கையிலெடுத்துக்கொண்டால் நம்மால் அதை பாதுகாத்து கொண்டுசெல்ல இயலாது. நமது படைவீரர்கள் சிதறிவிட்டிருக்கிறார்கள். மிகக் குறைவான படைவீரர்களுடன் நாம் இந்தக் கருவூலத்தை கொண்டு பாலைநிலத்தில் நிற்பதென்பது கள்வருக்கு முன் கதவை திறப்பதற்கு நிகர்" என்றார் ꞉பானு. "மதுராவுக்குச் செல்லலாம். ஆனால் அது நெடுந்தொலைவில் இருக்கிறது. மதுவனம் அதைவிட நெடுந்தொலைவில் இருக்கிறது. கூர்ஜரமோ அவந்தியோ நம்மை இப்போது வெல்வதென்றால் சேற்றில் சிக்கிய விலங்கை வேட்டையாடுவதைப்போல. இந்நகரே நமக்கு பாதுகாப்பு. இதிலிருந்து வெளியேறுவதென்பதை பலமுறை எண்ணியே நாம் முடிவெடுக்க வேண்டும்."

"வெளியேறாமல் இருக்க முடியாது. நெருப்பு என நீர் எரிந்தேறி வருகிறது. வெளியே சென்று ஒருமுறை பாருங்கள், தங்களுக்குத் தெரியும்" என்றான் ꞉பானுமான். "என்ன முடிவெடுப்பது என்று தெரியவில்லையே! இந்நகரை நம்மால் உதற முடியாது" என்று ꞉பானு சொன்னார். "எனில் ஒரு சிற்பியை அழைத்து வருவோம். இந்நகரை முற்றறிந்த சிற்பி ஒருவன் சொல்லட்டும் இது மீளுமா என்று" என்றார் பிர꞉பானு. "ஆம், அப்படி செய்வோம். அது நன்று" என்றார் ꞉பானு.

அனைத்தையும் ஒத்திப்போட ஒரு வாய்ப்பு கிடைத்தது என்ற நிறைவு அவரில் தெரிந்தது. மதுக்கோப்பையை அவர் உள்ளம் நாடிவிட்டது என்று புரிந்தது.

மூன்று நாட்களுக்குப் பிறகுதான் துவாரகையின் சிற்ப அமைப்பை சற்றேனும் அறிந்த ஒருவர் ஒற்றர்களால் எங்களிடம் அழைத்து வரப்பட்டார். அவர் பெயர் சுப்ரதீபர். சிற்பிகளின் மரபைச் சார்ந்தவராயினும் சிற்பக்கலை முழுதறிந்தவர் அல்ல. நகரிலிருந்து பிற சிற்பிகள் ஒழிந்து சென்ற பிறகும் அவர் அங்கே தங்கியிருந்தது அவருடைய இரு கால்களும் பழுதடைந்தமையால் அவரால் சிற்ப பணியில் ஈடுபடமுடியாது என்பதால்தான். வணிகர்களுக்கு அவர்களின் குலமுத்திரைகளை பலகைகளில் வரைந்துகொடுத்து சிறுபொருள் ஈட்டி அவர் அங்கு வாழ்ந்தார்.

அவ்வாறு ஒருவர் அங்கிருப்பது எவருக்கும் தெரியவில்லை. நகரெங்கும் அலைந்த ஒற்றர்களிடம் ஒருவர் இவ்வாறு ஓவியம் வரையும் ஒருவர் இருப்பதாக சொன்னார். அங்கு சென்றபோது சிறிய இல்லத்தின் திண்ணையில் காலோய்ந்து அவர் அமர்ந்திருந்தார். அவருடைய மைந்தர்கள் அவரை அவ்வண்ணமே விட்டுவிட்டுச் சென்றுவிட்டிருந்தார்கள். அணுக்கத்து வீட்டில் இருந்து அவருக்கு அன்னமும் நீரும் அளிக்கப்பட்டிருந்தது. அவரை அந்நகரின் சிற்ப அமைப்பை தெரிந்த சிற்பி என்று பொய்யுரைத்து அவை முன் கொண்டு நிறுத்தலாம் என்று முடிவு செய்து வீரர்கள் அவரை அழைத்து வந்தனர். அவ்வாறு வருகையில் அவரிடம்

பேச்சுக்கொடுத்தபோதுதான் அவர் மெய்யாகவே சிற்ப அமைப்பை நன்கு தெரிந்தவர் என்று தெரிந்தது.

ஆயினும் அவர்கள் நம்பிக்கை கொள்ளவில்லை. "எவ்வாறு இந்நகரின் அமைப்பு உங்களுக்கு தெரிந்தது?" என்று அவரிடம் மீண்டும் மீண்டும் கேட்டனர். அவர் அங்கிருந்த ஒவ்வொரு மாளிகையையும் சுட்டி அவற்றை எவ்வாறு அவர் வரைபடமாக பார்த்திருக்கிறார் என்பதை விளக்கினார். அதன் பின்னரே அச்சிற்ப அமைப்பு அவருக்கு தெரியும் என்பதை உணர்ந்து அவரை ஃபானுவின் அவைக்கு கொண்டுவந்தனர். அப்போது நாங்கள் அங்கிருந்தோம். அவர் அத்தனை விரைவாக கண்டடையப்பட்டது மூத்தவர் ஃபானுவுக்கு பிடிக்கவில்லை என்பது அவருடைய அமைதியிலிருந்து தெரிந்தது.

முகமன்கள் முடிந்ததும் ஃபானு அவரிடம் முதல் வினாவை நேரடியாக எழுப்பினார். "சிற்பியே, கூறுக! இந்நகரை மீட்க இயலுமா? ஏதேனும் ஒரு பகுதியை தக்கவைத்துக்கொள்ள முடியுமா?" சுப்ரதீபர் "தக்கவைத்துக்கொள்வதா? என்ன சொல்கிறீர்கள்?" என்று திகைப்புடன் கேட்டார். ஃபானு எரிச்சலுடன் "தக்கவைத்துக்கொள்வதென்றால் இந்நகரம் மீண்டும் பழைய பொலிவுடன் எழ முடியுமா என்று பொருள்" என்றார். "பழைய பொலிவுடனா? அரசே, மெய்யாகவே நீங்கள் இதை கேட்கிறீர்களா?" என்றார். ஃபானு சினத்துடன் "உமது உளப்பதிவென்ன? அதை சொல்லுங்கள்" என்றார்.

அதன் பின்னரே சுப்ரதீபர் ஃபானுவின் உளநிலையை புரிந்துகொண்டார். "அரசே, இந்நகர் அழிந்துகொண்டிருக்கிறது. இனி எத்தனை நாட்கள் என்பதே வினா" என்றார். "நாட்கள் என்றால்?" என்றார் ஃபானு. "எனது கணிப்பின்படி இன்னும் மூன்று நாட்களில் பெரும்பாலான துவாரகையின்

பகுதிகளுக்குள் நீர்புகும். பதினைந்து நாட்களுக்குள் துவாரகையின் அனைத்துக் கட்டடங்களும் நீருக்குள் மூழ்கிச் செல்லும். இன்னும் ஒரு மாதத்திற்குள் துவாரகையின் தோரண வாயில் வரைக்கும் கடல் நீர் சென்று அடிக்கும்" என்றார் சுப்ரதீபர்.

மூத்தவர் ஃபானு திகைப்புடன் எழுந்து "என்ன சொல்கிறீர்கள்?" என்றார். "தோரணவாயில் வரைக்குமா?" என்றார். "ஆம், தோரணவாயில் வரைக்கும் இந்நகரின் முழு நிலமும் நீருக்குள் சென்றுவிடும்" என்றார் சுப்ரதீபர். "ஏன்?" என்று ஃபானு கேட்டார். "இது அமைந்திருக்கும் பாறைகள் இரண்டு திசைகளிலாக விலகிவிட்டன. நிலையழிந்து அவை கடலுக்குள் மூழ்கிக்கொண்டிருக்கின்றன. இரண்டு யானைகளின் அம்பாரிகளாக இந்நகரம் அமைந்திருந்தது. யானைகள் இறங்கி ஆழத்தில் மூழ்கிக்கொண்டிருக்கின்றன. அம்பாரிகள் மட்டும் எவ்வாறு இங்கிருக்க முடியும்?"

ஃபானு உரக்க கூச்சலிட்டு அவரிடம் "எனில் எதை நம்பி இந்த நகரத்தை அமைத்தீர்கள்?" என்றார். "அந்த இரு பாறைகளும் தெய்வ ஆணைக்கு கட்டுப்பட்டவை" என்றார் சுப்ரதீபர். "இந்நகரை அமைக்கையில் நான் இளஞ்சிறுவன். எந்தை இதன் முதன்மைச் சிற்பிகளில் ஒருவர். பாரதவர்ஷத்தின் பெருஞ்சிற்பிகளை இங்கு அழைத்து இளைய யாதவர் பேரவை ஒன்றை கூட்டினார். அதில் இந்த நிலத்தை ஆராய்ந்து தங்கள் கருத்துக்களை கூறும்படி பணித்திருந்தார். எந்தை இந்நிலத்தின் இயல்பை அறிந்து இது இரண்டு யானைகளால் ஆனது என்று வகுத்துரைத்தார். அவை கீழே ஆழத்தில் உளைச்சேற்றில் கால்மிதித்து நின்றிருக்கின்றன. இங்கிருக்கும் இரண்டு மலைகளின் உச்சிகள் அவை. இங்கே ஒரு நகரம் உறுதிபட

அமையும், கடல் அதை ஒன்றும் செய்யாது. ஆனால் அந்தப் பாறைகள் தங்களை அசைவில்லாமல் நிறுத்திக்கொள்ளவேண்டும். அவை எந்த நெறிகளின்படி இங்கு நின்றிருக்கின்றனவோ அந்த நெறிகள் நீடிக்கவேண்டும் என்றார் எந்தை."

பிற சிற்பிகளும் அதையே சொன்னார்கள். "இந்நகரம் இங்கு இந்தப் பாறைகளில் ஏதேனும் ஒன்று அசைந்தாலும் சரிந்துவிடும்" என்றனர். ஆனால் அவையில் அமர்ந்து அவற்றை கேட்டுக்கொண்டிருந்த இளைய யாதவர் ஒரு கணத்திற்குப் பின் "இந்நகர் இங்கு அமையட்டும்" என்றார். "அரசே, எண்ணிதான் முடிவெடுக்கிறீர்களா?" என்று கேட்டபோது "நெறிகளின்மீது கட்டப்படும் நகரங்கள் மட்டுமே அறம் வளர்க்கும் தகுதிகொண்டவை. அறம் பிழைத்த கணமே அழியும் நகரையே விரும்புகிறேன்" என்றார். சிற்பிகள் "நிலையான பெருநகரை அமைக்கவே அரசர்கள் முயல்வார்கள்" என்றனர். இளைய யாதவர் "என் நகர் தன் பெருமை அழிந்தபின் ஒரு கணமும் நீடிக்கலாகாது, இடிபாடுகளென இதை எவரும் பார்க்க வாய்ப்பிருக்கக் கூடாது. இது அழியுமெனில் முற்றாக மூழ்கி மறையவேண்டும்" என்றார்.

எந்தை அந்த அவையில் உரக்க "யாதவரே, நாம் எழுப்பப்படாத ஒரு நகரத்தின் அழிவைப்பற்றி பேசிக்கொண்டிருக்கிறோம்" என்றார். "இல்லங்களை கட்டுபவர்கள் ஒவ்வொருவரும் அதன் அழிவைப்பற்றித்தான் பேசுகிறார்கள் என்பதை எண்ணிக்கொள்ளுங்கள்" என்றார் இளைய யாதவர். "கால்கோளிடும்போது சொல்லும் நுண்சொற்களில் ஒன்று நூறாண்டுகாலம், ஏழு தலைமுறைக்காலம் இவ்வில்லம் வாழவேண்டும் என்பதல்லவா?" என்று மூத்த சிற்பி சாயர்

கேட்டார். இளைய யாதவர் சிரித்து "நோக்குக, அதன் அழிவைப்பற்றி ஒரு குறிப்பு அதில் உள்ளது!" என்றார். "இந்தப் பெருநகர் நூறு ஆயிரம் ஆண்டுகாலம் வாழலாம். ஆனால் ஒவ்வொரு கணமும் இதன் நெறி பேணப்படவேண்டும். யானை மீதிருப்பவன் ஒன்று அறிவான், யானையுடனான அவனுடைய உறவு ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு கணமும் பேணப்படவேண்டும். இல்லையேல் அவனால் அங்கே அமர இயலாது. பாறையின் மேலல்ல, யானையின்மேல்தான் இந்நகரை கட்ட விரும்புகிறேன்" என்றார். "எனில் அவ்வாறே ஆகுக" என்று சிற்பிகள் உரைத்தனர்.

"அதன்பிறகுதான் இந்நகரம் கட்டப்பட்டது. இதோ யானைகள் நெறி பிறழ்ந்திருக்கின்றன. இனி அவற்றை ஆள நம்மால் இயலாது" என்றார் சுப்ரதீபர். உளம்தளர்ந்து "இனி என்ன செய்வது?" என்று மூத்தவர் கேட்டார். "எத்தனை விரைவாக இந்நகரை கைவிடுகிறீர்களோ அத்தனை நன்று" என்று அவர் சொன்னார். "எங்கு செல்வது?" என்று அவரிடமே மூத்தவர் கேட்டார். "அதை நான் அறியேன். அதை நீங்கள்தான் முடிவெடுக்க வேண்டும். முதலில் இந்நகரிலிருந்து வெளியேறுக! வெளியேறியபின் எங்கு செல்வது என்று முடிவு எடுக்கலாம். எங்கு செல்வது என்று முடிவெடுத்தபின் நகரத்திலிருந்து வெளியேறுவீர்கள் என்றால் ஒவ்வொரு கணமும் பெருகிவரும் இடர் ஒன்றை சந்திக்கிறீர்கள்" என்றார்.

"ஒருவேளை நான் உரைத்த கணக்கை மீறி ஒரே நாளில் துவாரகை நீருக்குள் செல்லுமெனில் நீங்கள் நீந்திக்கூட வெளியேறிட முடியும். துவாரகையின் கருவூலங்கள் முற்றாகவே நீருக்குள் சென்றுவிடும். அவற்றை நம்மால் மீட்க இயலாது" என்று சுப்ரதீபர் சொன்னார். அந்தச் சொல் பிறர்

அனைவரையும் விட ஃபானுவை அசைத்தது. ஏனெனில் அவருடைய தன்னம்பிக்கையும் கனவும் முழுக்க துவாரகையின் கருவூலத்தின் மீது அவருக்கு இருந்த உரிமையினாலேயே நிறுவப்பட்டது. எங்கு சென்றாலும் தான் ஒரு அரசன் என்று நிலைநிறுத்துவது அந்தக் கருவூலம் என்று அவர் அறிந்திருந்தார். துவாரகையின் மாளிகைகள் இடிந்து கருவூலம் மீட்கப்படாது போகுமெனில் அதன் பின்னர் கன்றோட்டும் எளிய யாதவனாக தான் ஆகிவிடவேண்டும் என்பதை அவர் எண்ணியிருந்தார். தன்னை ஒவ்வொருமுறையும் உள்ளத்தால் யாதவனாக எண்ணியிருந்தவர் அப்போது அதை அஞ்சி அகம் நடுங்கினார். ஒரு கணத்தில் முடிவெடுத்து "நாம் வெளியேறுகிறோம், இன்றே" என்று அவர் கூறினார்.

# கல்பொருசிறுநுரை - 61

**பகுதி ஆறு : படைப்புல் – 5**

துவாரகையில் இருந்து கிளம்புவதற்கான ஆணையை விடுப்பதற்கு ஃபானு மேலும் ஒருநாள் எடுத்துக்கொண்டார். "நமது கருவூலங்களை கொண்டுசெல்ல உரிய வண்டிகள் தேவை" என்றார். "அவை முறையாக பாதுகாக்கப்படவேண்டும். அதற்கான படைசூழ்கை அமைக்கப்படவேண்டும். கருவூல வண்டிகளைச் சுற்றி நாம் இருக்கவேண்டும். எந்நிலையிலும் அவை நம்மிடமிருந்து விலகிச் சென்றுவிடக்கூடாது."

பிரஃபானு அதற்கான பொறுப்பை ஏற்றுக்கொண்டார். "இங்கே அரண்மனையிலேயே போதிய காவலர் இருக்கிறார்கள். அவர்களைக் கொண்டு நாம் காவற்படையை அமைத்துக்கொள்ள முடியும்" என்றார். "அவர்களில் வில்லவர் எத்தனை பேர்? வில்லவர்கள் வேண்டும். ஏனென்றால் நாம் செல்லவிருப்பது திறந்த பாலைநிலம்..." என்றார் ஃபானு. "வில்லவர் போதிய அளவுக்கு உள்ளனர். குதிரைகள் குறைவாக உள்ளன. ஆனால் நாம் செல்லும் வழியில் அவற்றை சேர்த்துக்கொள்ள முடியும்" என்று பிரஃபானு சொன்னார்.

"அனைத்தும் விரைந்து முடிக்கப்படவேண்டும். நமக்கு பொழுதில்லை" என்றார் ஃபானு. ஆணைகளை விடுத்துவிட்டோம் என்னும் நிறைவை அவர் அடைவதை பார்த்தேன். "நாம் எங்கு செல்கிறோம்?" என்று சந்திரஃபானு கேட்டார். "சிற்பிகள் சொல்வதை கேட்டாயல்லவா? எங்கே செல்கிறோம் என்பதை எண்ணிக்கொண்டிருக்கும் பொழுது அல்ல இது. உடனே கிளம்பியாகவேண்டும். இல்லையேல் துவாரகையின் கருவூலமே நீரில் மூழ்கிவிடும்." அவைவிட்டு நீங்கும்போது சுருதன் "கருவூலத்தைப் பற்றி மட்டுமே பேசிக்கொண்டிருக்கிறார். அதுதான் துவாரகை என்பதுபோல" என்றார். "அது உண்மைதானே? நம்மையும் அவரையும் வேறுபடுத்துவது கருவூலம் அவருடைய கட்டுப்பாட்டில் இருக்கிறது என்பதுதானே?" என்றார் வீரா.

பிரஃபானு உண்மையாகவே விசைகொண்டு செயல்பட்டார். அரண்மனையிலும் சூழ்ந்திருந்த காவல்கோட்டங்களிலும் இருந்து எல்லா படைவீரர்களும் வரவழைக்கப்பட்டனர். அவர்களை எண்ணி வகுத்து புதிய காவல்படை ஒன்று உருவாக்கப்பட்டது. அனைவருக்கும் படைக்கலங்கள்

வழங்கப்பட்டன. பதின்மருக்கு ஒருவரும் நூற்றுவருக்கு ஒருவரும் என தலைமை வகுக்கப்பட்டது. நாலாயிரவரும் நால்வரால் தலைமை கொள்ளப்பட்டனர். தலைமைப்பொறுப்பு படைத்தலைவன் நிகும்பனிடம் அளிக்கப்பட்டது. படை உருவாகி வந்ததுமே மீண்டும் துவாரகையில் ஓர் அரசு உருவாகி வந்தது என்னும் எண்ணம் அமைந்தது.

துவாரகையின் கருவூலங்கள் மைய அரண்மனைக்கு அடியில் பெரும்பாறையை வெட்டிக்குடைந்து உருவாக்கப்பட்ட கல்லால் ஆன நிலவறைகளில் இருந்தன. அவற்றை திறப்பதற்கான தாழ்க்கோல்கள் சாம்பனிடமும் பிரத்யும்னனிடமும் ஃபானுவிடமும் பிரித்து அளிக்கப்பட்டிருந்தன. மூவரும் இணையாமல் கருவூல அறையை திறக்கமுடியாது. ஃபானு "அவர்களை உடனே வரசொல்லுங்கள். அவர்களிடமிருக்கும் தாழ்க்கோல்கள் அளிக்கப்படவேண்டும், நமக்கு பொழுதில்லை" என்றார்.

ஆனால் கணிகர் "அரசே, அது இப்போது நிகழாது. அவர்கள் கருவூலத்தை உங்கள் கையில் ஒப்படைப்பார்கள் என நினைக்கிறீர்களா?" என்றார். ஃபானு சீற்றத்துடன் "வேறு என்ன செய்வார்கள்? போரிடுவார்களா? இந்த இடிந்த நகரில் கிடந்து போரிட்டு சாக முற்படுவார்களா?" என்றார். "ஆம், அதற்குத்தான் முற்படுவார்கள்" என்று கணிகர் சொன்னார். ஃபானு திகைத்துவிட்டார். "நாம் செய்வதற்கு ஒன்றே உள்ளது. மூத்தவர்களான சாத்யகியும் கிருதவர்மனும் சென்று அவர்கள் இருவரையும் கண்டு தாழ்க்கோல்களை பெற்றுவரட்டும். கருவூலத்தை அவர்களின் பொறுப்பில் விட்டுவிடுவோம்."

ஃபானு "என்ன சொல்கிறீர்கள்? நான் அரசன். கருவூலத்தை எப்படி அவர்களின் பொறுப்பில் விடுவேன்?" என்றார்.

“அவர்கள்தான் உங்களை அரசராக்குபவர்கள். நீங்கள் நாளை முடிசூடி ஆளவேண்டும் என்றாலும் அவர்களின் வில்லின் துணை தேவை. கருவூலம் அவர்களின் பொறுப்பில் இருக்கட்டும். அதுவே நமக்கு நல்லது” என்று கணிகர் சொன்னார். “அவர்களிடம் கருவூலம் இருப்பது நம்மிடம் இருப்பதற்கு நிகர். அவர்கள் நம்மை ஆதரிப்பவர்கள். அவர்களிடம் இருக்கையில் கருவூலத்தை நாம் கைப்பற்றிக்கொண்டோம் என்னும் பதற்றம் அவர்களுக்கு வராமலும் இருக்கும்” என்றார் கணிகர்.

பிரஃபானு “ஆம், கணிகர் சொல்வது உண்மை” என்றார். ஃபானு “எனில் அவ்வாறே செய்யுங்கள். இளையோனே, நீயே அவர்களிடம் பேசு” என்றார். கணிகர் “அதற்கு முன் வேறொன்றை தெளிவுபடுத்தியாகவேண்டும். கருவூலத்தின்மேல் அவர்களுக்கு இருக்கும் உரிமை என்ன என்று” என்றார். “அவர்கள் அதை கிருதவர்மனிடமும் சாத்யகியிடமும் கேட்பார்கள் என்பதில் ஐயமில்லை.” ஃபானு “இதென்ன? குடிகள் அனைவருக்கும் உரியதா என்ன கருவூலம்? என்ன சொல்கிறீர்கள்?” என்றார். “இப்போது நாம் இப்படிப் பேசுவதில் பொருளில்லை. நாம் மிகச் சிறிய படையுடன் பாதுகாப்பில்லாமல் பாலையில் கருவூலத்துடன் செல்லவிருக்கிறோம். நமக்கு உடன்பிறந்தார் அனைவரின் உதவியும் தேவை” என்றார் கணிகர்.

“என்ன சொல்கிறீர்கள்?” என்று ஃபானு சலிப்புடன் கேட்டார். “அவர்கள் இருவருக்கும் கருவூலத்தில் இணையான உரிமை அளிக்கப்படும் என்று கிருதவர்மனும் சாத்யகியும் சொல்லளிக்கட்டும்” என்றார் கணிகர். “அதெப்படி? இணையுரிமையா?” என்று ஃபானு கூச்சலிட்டார். “அச்சொல்

அவர்களால் அளிக்கப்படுகிறது, உங்களால் அல்ல. நாம் முதலில் உரிய இடத்திற்கு சென்றுசேர்வோம். அங்கே கருவூலத்தை பாதுகாப்போம். நமக்கான படையையும் நமக்குரிய நட்பு அரசுகளையும் உருவாக்கிக் கொள்வோம். அதுவரை கருவூலம் கிருதவர்மன் சாத்யகி இருவர் பொறுப்பிலும் இருக்கட்டும். அது மூன்று தரப்பினருக்கும் இணையான உரிமை கொண்டது என அவர்கள் நம்பட்டும்."

"நாம் முற்றுரிமை அடைந்து முடிசூடியதும் என்ன செய்யவேண்டும் என அறிவிப்போம். அரசே, அப்போது சாத்யகியும் கிருதவர்மனும்கூட உங்கள் குடிகளே. குடிகளில் எவரும் அரசரின் பொருட்டு சொல்லளிக்கும் உரிமை கொண்டவர்கள் அல்ல" என்றார் கணிகர். ஃபானு பெருமூச்சுவிட்டார். "சூழ்ச்சியே அரசனின் முதன்மைப் படைக்கலம்" என்றார் கணிகர். "ஆம், அதை செய்வோம்" என்றார் ஃபானு. பிரஃபானு "அவ்வாறே நான் அவர்கள் இருவரிடமும் பேசுகிறேன்" என்றார்.

அப்போது ஸ்ரீஃபானு அவைக்குள் வந்து நின்றான். "சொல்க!" என்றார் ஃபானு. "மூத்தவரே, இந்நகரை இடித்து அழித்த பிரதிஃபானுவின் மைந்தரையும் துணைவியையும் என்ன செய்வது?" என்றான். "அவர்கள் நம்மிடமா இருக்கிறார்கள்?" என்று ஃபானு கேட்டார். "அவர்கள் அப்போதே பிடிபட்டுவிட்டனர். நகருக்குள் ஒரு மாளிகையில் சிறையில் இருக்கிறார்கள். அவர்களை நாம் கொண்டுசெல்லவிருக்கிறோமா?" ஃபானு "பிரதிபானு எங்குள்ளான்? மனைவியையும் மைந்தரையும் தேடி அவன் வரக்கூடுமா?" என்றார்.

கணிகர் "எதன்பொருட்டும் அவர் இந்நகருக்குள் இனி வரப்போவதில்லை" என்றார். பின்னர் உதடை கோணலாக்கிச் சிரித்து "வருவார் என்றால் படைவல்லமையுடன் வருவார்... அவருக்கு எங்கேனும் துணையரசர்கள் இருக்கக்கூடும். அவர்கள் படையொருக்கி நின்றிருக்கவும் வாய்ப்புண்டு" என்றார். ஃபானு "அவனா? அவன் அப்படி செய்வானா என்ன?" என்றார். "அரசே, பிறகெதற்கு அவர் நகரை இடிக்கவேண்டும்? இடிக்கப்பட்டு பாதுகாப்பில்லாமல் சிதைந்து கிடக்கும் நகரை தாக்கி வெல்வது அவர் எண்ணமாக இருக்கவே வாய்ப்பு. துணைக்கு படையுடன் மன்னர்கள் இல்லாமல் அவர் அதைச் செய்ய ஏன் துணியவேண்டும்?" ஃபானு "ஆம், அவனுக்கு அப்படி எண்ணமிருக்கலாம்" என்றார்.

"நகரின் கருவூலமே அவர் இலக்காக இருக்கும்" என்றார் கணிகர். ஃபானு உரக்க கைகளை அறைந்துகொண்டு "அறிவிலி... கீழ்மகன்" என்றார். சீற்றத்துடன் எழுந்து "இது என் ஆணை, அந்த இழிமகனின் மனைவியை எரித்தே கொல்லுங்கள். அவன் மைந்தரை முதுகுத்தோலை உரித்து கழுவிலேற்றுங்கள்..." என்றார். "மூத்தவரே..." என்று நான் கூவினேன். "வஞ்சகர்களுக்கு இது எச்சரிக்கை. என் குருதியினரே ஆயினும் என் இளையோரே ஆயினும் இதுவே என் நெறி... இது என் ஆணை!" என்றார் ஃபானு. நான் பெருமூச்சுடன் அதனை கடந்துசென்றேன்.

கருவூலங்களுக்கான தாழ்க்கோல்கள் வந்து சேர்ந்தன. அவற்றை ஏவலர் தலைச்சுமைகளாக எடுத்துச் சென்று அப்பால் மணல்மூடிக் கிடந்த வழியில் கொண்டுவந்து நிறுத்தப்பட்டிருந்த வண்டிகளில் ஏற்றினர். அவற்றை பாயும் தோலும் போட்டு மூடிக்கட்டினர். "கருவூலம் சென்று

ஒருங்கிவிட்டதா?" என்று ஃபானு கேட்டுக்கொண்டே இருந்தார். "ஆம் அரசே, கருவூலத்தை முழுமையாகவே வண்டிகளில் ஏற்றிவிட்டோம்" என்று பிரஃபானு சொன்னார். "நம் படையினர் சூழவே செல்லட்டும்" என்று ஃபானு சொன்னார்.

அரண்மனையை விட்டு ஒவ்வொருவராக கிளம்பிச் சென்றோம். ஆனால் எவரும் பெரிய அளவில் உணர்வெழுச்சி கொள்வதாகத் தெரியவில்லை. தங்களுக்குரிய பொருட்களை எடுத்துக்கொள்ளவும் எதையும் விட்டுவிடாதிருக்கவும் மட்டுமே ஒவ்வொருவரும் முனைப்பு கொண்டனர். எதையாவது மறந்துவிட்டு ஓடிச்சென்று எடுத்துக்கொண்டனர். ஏவலர்களுக்கு ஆணைகளை பிறப்பித்தனர். அவர்கள் விட்டுவிட்டு வந்த பொருட்களுக்காக வசைபாடினர். கூச்சலும் சந்தடியுமாக அரண்மனைமுகப்பு கலைவு கொண்டிருந்தது.

எறும்புகள் மழைக்காலத்தில் துளைகளிலிருந்து வெளியேறுவது போலிருந்தது அக்காட்சி. ஒவ்வொருவரும் ஏதேனும் பொதியை வைத்திருந்தனர். வெறுங்கையுடன் ஒருவர்கூட வெளியே செல்லவில்லை. அரசர் ஃபானுகூட கையில் ஒரு பெரிய பொதியை வைத்திருந்தார். "அது துவாரகையின் மணிமுடி. அதை அவரே தன் கையில் வைத்திருக்கிறார்" என்று சுருதன் சொன்னார். "இந்தப் பையை வைத்துக்கொள். இதற்குள் இருப்பவை சில ஓலைகள். இவை துவாரகை வெவ்வேறு மன்னர்களுக்கு அளித்துள்ள கடனுக்கான சான்றோலைகள். நம்மால் இவற்றைக்கொண்டு பெரும்பொருள் ஈட்ட முடியும்."

கையில் எதுவுமில்லாமல் அங்கிருந்து வெளியேறியவர் கணிகர் மட்டுமே. அவரை ஒரு தாலத்தில் வைத்து இரு வீரர்கள் கொண்டுசென்றனர். அவர் கைகளை விரித்து

புன்னகையுடன் அமர்ந்திருந்தார். சூழ்ந்திருந்த அலைக்கழிதல்களை நோக்கி நோக்கி மகிழ்ந்தார். அரண்மனையின் முகப்பில் நெரிசல் ஏற்பட்டிருந்தது. அரசரே அந்த நெரிசலில் முட்டி ததும்பவேண்டியிருந்தது. அதுவரை அரண்மனையில் யாதவ மைந்தர் எவரும் கிளம்பாமல் ஒருவரோடொருவர் முட்டிக்கொண்டிருந்தார்கள். ஆனால் கருவூலம் கிளம்பியதுமே அத்தனை பேருமே உடன்கிளம்ப முண்டியடித்தனர்.

ஃபானு வெளியே வந்தபோது அரண்மனை முகப்பில் பிரதிஃபானுவின் மைந்தர் கழுவிலேற்றப்பட்டிருப்பதை பார்த்தார். அதற்குள் ஃபானுமான் வந்து "மூத்தவரே, நம் அன்னையர் அனைவரும் உரிய இடங்களுக்குச் சென்று சேர்ந்துவிட்டார்கள்" என்றான். "நம் கருவூலம் எங்கே? கிளம்பிச்செல்கிறதா?" என்றார் ஃபானு. "ஆம், உடன் சாத்யகியும் கிருதவர்மனும் செல்கிறார்கள்" என்று ஃபானுமான் சொன்னான். "நாமும் உடன் செல்லவேண்டும். அவர்கள் அதைச் சூழ்ந்துகொள்ள இடமளிக்கலாகாது" என்றார் ஃபானு.

நீண்ட நிரையாக துவாரகையில் இருந்து கிளம்பியவர்கள் தோரணவாயிலைக் கடந்து பாலைவெளி நோக்கி சென்றனர். ஃபானு தோரணவாயிலைக் கண்டதும் "இதோ நின்றிருக்கிறதே, பெருவாயில் வீழ்ந்தது என்றார்கள்?" என்றார். "அரசே, அது இரண்டு குன்றுகளில் ஒன்றின்மேல் நின்றிருந்த கடல்நோக்கிய பெருவாயில். இது பாலைநோக்கிய தோரணவாயில்." அவர் "ஆம், இரண்டு உண்டு அல்லவா?" என்றார். "மிகப் பெரியது" என்று விழிதூக்கினார். "ஆம், விண்ணவர் நகர்புகும் வாயில் என்பார்கள்" என்றார் கணிகர். ஃபானு "புகுந்தவர்கள்

விண்ணவர்கள் அல்ல, பாதாள தேவர்கள்...”என்று சொல்லி சிரித்தார்.

அந்தச் சிரிப்பின் பொருளின்மையை உணர்ந்து சூழ்ந்திருந்தவர்கள் திகைத்து ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டார்கள். ஆனால் கணிகர் உரக்க நகைத்தார்.

பெரும்பாலையில் தோரணவாயிலுக்கு சற்று அப்பால் இருந்த முதல் சோலைக்குச் சுற்றும் துவாரகையினர் தங்கினர். மூங்கில் தட்டிகளாலும் தோலாலுமான கூடாரங்கள் அமைக்கப்பட்டன. நகரைவிட்டு வெளியே வந்ததும் ஃபானு பதற்றம் மிக்கவராக ஆனார். ஏதேதோ சொல்லி கூச்சலிட்டுக் கொண்டிருந்தார். பின்னர் அதை அவரே உணர்ந்து இளிவரலாக ஏதேனும் சொன்னார். அது மிகமிக இழிந்ததாக, எரிச்சலூட்டுவதாக இருந்தது. அவரை சற்றும் தாங்கமுடியாதவராக அது ஆக்கியது. வாளை உருவி அவரை வெட்டி வீழ்த்திவிடவேண்டும் என எனக்கே உளம் பொங்கியது.

முதல்நாள் உச்சிப்பொழுதிலேயே பாலைநிலத்திற்குள் வந்துவிட்டோம். அது மழைக்காலம் அல்ல என்பதனால் கூரைகள் அமைக்கப்படவில்லை. பெரும்பாலானவர்கள் வெட்டவெளியிலேயே தங்கினார்கள். ஏற்கெனவே பாலைநிலம் முழுக்க பரவிக்கிடந்தவர்கள் அரசரும் பிறரும் அங்கே வந்துவிட்டதை அறிந்து திரும்பிவந்து சேர்ந்துகொண்டமையால் அந்திக்குள் அப்பகுதி மக்கள்திரளால் நிறைந்திருந்தது. மேலும் மேலும் வந்துகொண்டிருந்தனர். மூத்தவர் ஃபானு வெளியே

வந்து அந்த மக்கள் பெருக்கை பார்த்தார். “நமது மக்கள்!” என்று பிர꞉பானு சொன்னார். அவர் கைவிரித்தபோது அத்திரளில் இருந்து தேனீக்கூடு போன்ற பெருமுழக்கம் எழுந்தது. ꞉பானு முகம் மலர்ந்து “என் குடி! என் அரசு!” என்றார். “அவர்களை கண்ணெதிரே பார்க்கிறேன்!”

துவாரகையின் களஞ்சியத்தில் இருந்து பல நாட்களுக்குப் போதுமான உணவுப்பொருட்கள் கொண்டுவரப்பட்டிருந்தன. அந்தியில் அடுமனைகள் அமைந்தன. உணவு சமைக்கப்பட்டு அனைவருக்கும் வழங்கப்பட்டது. உணவு அங்கே அதுவரை இருந்த சோர்வையும் சலிப்பையும் இல்லாமலாக்கியது. அடுமனைப்புகை விழவுக்கொடி என வானிலேறியது. கூட்டத்தின் ஓசையையே அது மாற்றியது. உணவு உண்டபோது அது விழவுக்களியாட்டாக மாறியது. மக்கள் கூச்சலிட்டு நகைத்தனர். ஒருவரை ஒருவர் கூவி அழைத்தனர். ஆங்காங்கே பாடல்களும் எழுந்தன.

இரவு விண்மீன்கள் செறிந்த வான்கீழ் தங்கினோம். உணவு உண்டு ஓய்வுக்கு படுத்தபோது ஒவ்வொருவரும் இயல்படைந்தனர். பல நாட்கள் நீண்ட பதற்றத்திற்குப் பின் அந்தத் தளர்வே கொண்டாட்டமாக ஆகியது. எங்கிருந்தோ ஒரு பாடல் எழுந்தது. பின்னர் மெல்ல அந்தப் பெருந்திரளே இருளுக்குள் பாடிக்கொண்டிருந்தது. அவர்கள் நம்பிக்கை அடைந்தனர். நம்பிக்கையை மேலும் மேலும் வளர்த்துக்கொண்டனர். அன்றிரவு மக்கள் துயில நெடும்பொழுதாகியது. அந்த உள எழுச்சியை உடற்களைப்பு வென்றமையால்தான் அவர்களால் துயிலமுடிந்தது.

மறுநாள் எழுந்தபோது அந்த இடமே நன்கு பழகியதாக இருந்தது. நெடுநாட்கள் அங்கேயே இருப்பதைப்போல.

துவாரகை மிகமிக அப்பால் மறைந்துவிட்டிருந்தது. உடைந்து சரிந்த துவாரகையை மக்கள் மறக்க விரும்பினர். பழைய துவாரகையை இனிய நினைவாக பேணிக்கொண்டனர். ஆகவே இருக்கும் இடத்தில் முற்றாக உளம் அமைந்தனர். காலையில் அங்கே ஒவ்வொருவரும் கொண்டிருந்த சுறுசுறுப்பை, அவர்களின் முகங்களில் இருந்த களிப்பை பார்த்தபோது வியப்பாக இருந்தது. சுருதன் என்னிடம் "மக்கள் குழந்தைகளைப்போல. எந்த மாற்றமும் அவர்களுக்கு உகந்ததே. ஆகவேதான் நல்ல ஆட்சியாளர்கள் மக்களுக்கு மாற்றங்களை அளித்துக்கொண்டே இருக்கிறார்கள்" என்றார்.

அங்கேயே தொடர்ந்து தங்கினோம். மேலே எங்கு செல்வது என்று முடிவெடுக்க முடியவில்லை. ஒவ்வொருநாளும் ஃபானு அவைகூடி மேலே செய்யவேண்டுவன குறித்து பேசினார். அப்பேச்சு நூறு முனைகளில் தொட்டு அறுந்து அமைய ஊணுக்கு எழுந்து செல்வார்கள். "எங்கேனும் சென்றாகவேண்டும்... இங்கே எத்தனை நாள் நீடிப்பது?" என்றுதான் பேச்சு தொடங்கும். "எங்கேனும் சென்றே ஆகவேண்டும்" என்று முடியும். "அவர் இங்கே அமைந்துவிட்டார். இந்த வாழ்வே நன்றாகத்தான் இருக்கிறது என்று எண்ணுகிறார் போலும்" என்றார் சுருதன்.

பதினைந்து நாட்களுக்குப் பின்னர் நாளும் பொழுதும் குறிக்கும்பொருட்டு மூத்தவர் ஃபானுவின் ஆணையின்படி நிமித்திகர் எழுவர் அழைத்து வரப்பட்டனர். உண்மையில் சிதைந்த துவாரகையிலிருந்து சிதறி வெளிப்போந்து அங்குமிங்கும் அலைந்துகொண்டிருந்த குழுவிலிருந்து அவர்களை தேடிக் கண்டடைந்து அழைத்து வந்தனர். அவர்கள் ஒருவரை ஒருவர் நிமித்திகர் என்று அடையாளம்

காட்டியமையால்தான் பிறரால் நிமித்திகர் என்று உணர முடிந்தது.

அவர்களைக் கண்டதுமே அவர்கள் எத்தகைய நிமித்திகர் என்பதை அறிந்தேன். கேட்பவருக்கு உகந்ததைக் கூறுவதே நிமித்திகத் தொழிலின் முதன்மை அறம் என்று நினைக்கும் எளியோர். ஆனால் அத்தகையோரே மக்களால் விரும்பப்படுகிறார்கள். தன் நூலில் ஆழ்ந்த நம்பிக்கையும் ஒழியாது அதில் உழன்றுகொண்டிருக்கும் உள்ளமும் கொண்டவனே நல்ல நிமித்திகன். மெல்ல மெல்ல அவன் புறத்தே இயங்கும் உலகின் நெறிகளை முற்றாக மறந்துவிடுகிறான். தன் நூலின் நெறிகளுடன் அதை ஒப்பிடுவதையும் விட்டுவிடுகிறான். வாழ்க்கை என்பது முற்றாகவே தன் நூல்களுக்குள் நிகழ்வது என்று நினைத்துக்கொள்கிறான். அந்நிலையிலேயே அவனால் உய்த்துணர்ந்தும் உசாவி உணர்ந்தும் சிலவற்றை சொல்ல முடிகிறது.

மெய்வாழ்வுடன் நூல் வாழ்வை இடையறாது ஒப்பிட்டுக்கொண்டிருக்கும் நிமித்திகன் ஐயம் கொண்டவனாகிறான். அவனால் எதையும் அறுதியாக கூற இயல்வதில்லை. அறுதியாக உணராதபோது அவன் ஆணித்தரமாக உரைக்க முற்படுகிறான். சொல் பெருக்குகிறான். தன்னை அறிந்தோனாகவும் கடந்தோனாகவும் காட்டிக்கொள்கிறான். ஓசையிடும் நிமித்திகன் உள்ளீடற்றவன். ஓசையடங்குதலே நிமித்திகத் தொழிலின் அடையாளம் என்பார்கள். வந்தவர்கள் வரும்போதே தங்களுக்குள் சொல்லாடிக்கொண்டிருந்தார்கள். ஒவ்வொரு பேச்சுக்கும் ஒரு சொல்லுக்கு நூறுசொல் எடுத்தனர். தந்தையே, பாரதவர்ஷத்தின்

மாபெரும் குடியொன்றின் முதன்மை முடிவு அவ்வாறு அவர்களால் எடுக்கப்பட்டது.

அவர்களைக் கண்டதுமே அவர்களால் ஆகக்கூடியது ஒன்றுமில்லை என்று எனக்கு தோன்றியது. ஆனால் அத்தருணத்தில் நிமித்திகர் ஒருவர் வந்தாலொழிய எந்த முடிவையும் எடுக்க இயலாது. நிமித்திகர் கூறியதனால் மட்டும் எங்கும் எந்த முடிவும் எடுக்கப்படப் போவதில்லை, நிமித்திகரைக் கொண்டு எதையேனும் சொல்லவைத்து அவற்றில் ஒரு முடிவையே மூத்தவர் எடுக்கவிருக்கிறார். நிமித்திகர் இன்றி முடிவெடுக்க முடியாத நெடுங்கால வழக்கத்தின் விளைவு அது. நிமித்திகர் வந்துவிட்டதை அறிந்து யாதவ மைந்தர் அனைவரும் சூழக் கூடிநின்று நோக்கினோம். ஒவ்வொருவரும் ஒவ்வொரு கணக்குகள் கொண்டிருந்தோம். ஆனால் அங்கிருந்து கிளம்பிவிடவேண்டும் என்பதில் அனைவரும் ஓரெண்ணத்துடன் இருந்தோம்.

மணலில் சூழ்ந்து நின்றிருந்த யாதவ மைந்தருக்கு நடுவே நிமித்திகர் அமர்ந்தனர். வெறும் மணலிலேயே சுட்டுவிரலால் களம் கிழித்தனர். சூழ்ந்திருந்த சிறு கற்களை சோழிகளென அமைத்தனர். அவற்றை நகர்த்தி கணக்கிட்டனர். பின்னர் அவர்களில் மூத்தவர் "இங்கிருந்து வடக்கு நோக்கி செல்வதே உகந்தது. வடக்கே பன்னிருநாள் நடையில் பிரபாச க்ஷேத்ரம் எனும் ஒரு இடம் இருக்கிறது. அங்கு சென்று நகர் அமைக்கலாம்" என்றார். மற்றவர்கள் "ஆம்" என்றனர். "அதுவே எங்கள் கணிப்புகளிலும் வெளிப்படுகிறது."

"அது உகந்ததா?" என்று மூத்தவர் கேட்டார். "மிக உகந்தது. அங்கு பெரும்புல்வெளி ஒன்றிருக்கிறது. யாதவர்கள் புல்வெளிகளில் பெருக இயலும் என்பதை அறிந்திருப்பீர்கள்.

மிக அருகே கடலும் இருக்கிறது. நாம் கடலோரம் பிறந்து வளர்ந்தவர்கள். அங்கொரு சிறு படகுத்துறை அமையலாம். எதிர்காலத்தில் அது துறைமுகமாக வளரவும் கூடும். அங்கு பிறிதொரு துவாரகை எழும். அது தங்கள் புகழ் சொல்லும். நன்றே வளர்க!" என்றார் நிமித்திகர். மற்ற நிமித்திகர்களும் பிரபாச க்ஷேத்ரம் பற்றி சொல்ல தொடங்கினார்கள். அந்நிலத்தின் வளமும் அதன் இடப்பொருத்தமும் அதற்கும் யாதவர்களுக்கும் நடுவே இருக்கும் ஊழின் பொருத்தமும் அவர்களால் விளக்கப்பட்டன. யாதவ மைந்தர் விழிவிரித்து மறு சொல் இன்றி கேட்டு நின்றனர்.

"அவ்வாறே ஆகட்டும்! நாம் பிரபாச க்ஷேத்ரத்திற்கு கிளம்புவோம்!" என்று மூத்தவர் ஃபானு கூறினார். "பிரபாச க்ஷேத்ரத்தில் நமது குடி வேரூன்றட்டும். நம் கோல் அங்கே எழட்டும். நமது கொடிவழியினர் அங்கே செழிக்கட்டும். இது நம் எழுகை! வெல்க யாதவக்குடி! வெல்க யதுவின் குருதி! ஆம், அவ்வாறே ஆகுக!" கூடி நின்ற யாதவ மைந்தர் உரக்க குரலெழுப்பி வாழ்த்தினர். அவ்வாழ்த்தொலி அங்கிருந்து சூழ்ந்திருந்த துவாரகையினரிடம் பரவ மெல்லமெல்ல அந்தப் பெருந்திரள் பரப்பு அமைதி அடைந்தது.

அவரிடம் இருந்த அந்தத் தெளிவு எனக்கு பதற்றத்தை அளித்தது. அரசர் எவரும் அத்தனை உறுதியாக முடிவெடுத்துவிடக் கூடாது, அம்முடிவை அவ்வண்ணம் அப்போதே சொல்லிவிடவும் கூடாது. அமைச்சர்களிடமும் படைத்தலைவர்களிடமும் பிறிதொரு முறை உசாவவேண்டும். மாற்றுச் சொல் இருந்தால் தெரிந்துகொள்ளவேண்டும். அந்த இடத்தின் அனைத்துச் செய்திகளையும் அங்கு செல்வதற்கான வழிகளையும் ஆராய வேண்டும். ஆனால் மூத்தவர்

அரசருக்குரிய தன்னொதுக்கம் உடையவரல்ல. அவர் எளிய யாதவர்களைப்போல உணர்ச்சிகளால் ஆளப்படுபவர். அந்த நேரத்து உளச்சோர்விலிருந்து அவர் அடைந்தது அந்த உளஎழுச்சி. மூடிய கதவை முட்டித்திறப்பது போன்றது அது. அத்தனை விசையுடன் மோதாவிட்டால் அந்த உளச்சோர்வை வெல்லமுடியாது.

நான் "மூத்தவரே!" என்றேன். "இனி ஒன்றும் எண்ணுவதற்கில்லை. இந்தப் பாலைவனத்தில் போதுமான அளவுக்கு தங்கிவிட்டோம். மேலும் மேலும் இங்கு நம்பிக்கை இழந்துகொண்டிருக்கிறோம். தனிமையை கொண்டிருக்கிறோம். இங்கிருந்து கிளம்புவதொன்றே நாம் செய்யவேண்டியது!" என்ற பின்னர் மூத்தவர் எழுந்து கைகூப்பினார். இளையோர் அளித்த பரிசுகளை எடுத்து நிமித்திகர்களுக்கு அளித்த பின்னர் கைகளைத் தட்டி "அனைவரும் கேளுங்கள், அனைவரும் கேளுங்கள்!" என்றார். நான் "மூத்தவரே!" என்று சொல்வதற்குள் "அரச அறிவிப்பு!" என்றார்.

கூடி நின்ற அனைத்து இளையோரும் குடிகளும் எழுந்து நின்று அவரை பார்த்தனர். "ஆம், பிறிதொரு துவாரகையை உருவாக்கவிருக்கிறோம்!" என்றார். சற்றுநேரம் எவரும் எதுவும் சொல்லவில்லை. வெற்றுவிழிகளுடன் வெறித்து நோக்கி அமர்ந்திருந்தார்கள். "நாம் துவாரகையிலிருந்து வெளியேறியது மேலும் சிறந்த நகரை உருவாக்குவதற்காக! உறுதியானதும் வெற்றிகொள்ளமுடியாததுமான பெருநகர் ஒன்றை நாம் உருவாக்குவோம்! இதோ அதன்பொருட்டு எழுகிறோம்" என்று மூத்தவர் ஃபானு கூறினார். ஃபானுமான் "வெல்க யாதவப் பெருங்குடி! வெல்க அரசர் ஃபானு!" என்று கூவினான். அப்போதும் எவரும் வாழ்த்தொலி எழுப்பவில்லை.

ஃபானுமானும் பிரஃபானுவும் பிறரை நோக்கி கைகாட்டிவிட்டு “வெல்க! வெல்க!” என்று கூச்சலிட்டனர். ஒருகணம் கழித்து அனைத்து மக்களும் உரக்க ஒலியெழுப்பி கூச்சலிட்டனர். “நாம் பிரபாச க்ஷேத்ரத்திற்கு செல்லவிருக்கிறோம். அந்த நிலத்தில் ஒரு நகரை உருவாக்குவோம். அருகே கடல் உள்ளது. அங்கொரு கடல் துறைமுகத்தை உருவாக்குவோம். நாம் செல்லுமிடம் துவாரகைபோல் வெறுநிலமல்ல. பாறை முகடுமல்ல. அது யாதவருக்கு உகந்த புல்வெளி. அங்கு கன்று பெருக்குவோம். செல்வம் செழித்ததும் நகர் முனைவோம். நம்மிடம் கருவூலம் உள்ளது. நாம் இன்னும் எதையும் இழந்துவிடவில்லை” என்றார் ஃபானு. “அஸ்தினபுரிக்கு நிகரான கருவூலத்துடன்தான் அங்கு செல்கிறோம். அங்கு சென்று ஒரு பெருநகரை எதிரிகளின் கண்முன் உருவாக்கி எழுப்புவோம். துவாரகை இங்கு சரிந்து அங்கு எழுந்தது என்றே பொருள்! கிளம்புக!” என்றார்.

# கல்பொருசிறுநுரை - 62

**பகுதி ஆறு : படைப்புல் – 6**

தந்தையே, ஃபானுவின் சொல் அனைவரையும் எழச் செய்தது. குடிகள் அனைவரும் அத்தனை பொழுதும் அத்தகைய ஒரு சொல்லுக்காகத்தான் காத்திருந்தனர். கண்ணீருடன் நெஞ்சில் அறைந்து அவர்கள் அழுதனர். எழுந்து நின்று கைவிரித்து கூச்சலிட்டனர். எண்ணி எண்ணி களிவெறிகொண்டு குதித்துச் சுழன்று ஆர்ப்பரித்தனர்.

கொண்டாட்டமும் களியாட்டமும் எங்கும் நிறைந்திருந்தது. அந்தப் பொழுதில் பிறிதொன்றையும் அங்கு சொல்ல இயலாதென்று உணர்ந்தேன்.

ஃபானு அந்தக் களியாட்டை தனக்கான ஏற்பாக எடுத்துக்கொண்டார். அதில் தானும் கலந்து கண்ணீர்விட்டு நடனமாடினார். அருகணைந்து அனைவரையும் தழுவிக்கொண்டார். இளையோரை முத்தமிட்டார். படைத்தலைவர்களை தோளைப் பிடித்து உலுக்கினார். நெடுநேரம் அந்தக் கொண்டாட்டம் நிகழ்ந்தது. பின்னர் ஃபானு "கிளம்புவோம். அதற்குரிய ஒருக்கங்கள் நடக்கட்டும். வண்டிகள் கட்டப்படட்டும். கூடாரங்கள் சுருட்டப்படட்டும்!" என்றார்.

படைத்தலைவர்கள் பிரிந்து சென்று ஆணைகளை பிறப்பிக்கத் தொடங்க அங்கிருந்த அலைக்கொந்தளிப்பு அடங்கி ஒவ்வொருவரும் அவரவர் பணிகளுக்கு சென்றார்கள். புரவிகளுக்கு சேணங்கள் பூட்டப்பட்டன. மூத்தவர் ஃபானு கவிழ்த்திட்ட மரக்கலம் ஒன்றில் அமர்ந்தார். அவர் அருகே வந்த சுருதன் "மூத்தவரே, தாங்கள் அதை அவ்வண்ணம் சொல்லியிருக்கக் கூடாது" என்றார். "ஏன்?" என்று ஃபானு கேட்டார். அந்தக் கணத்தின் மகிழ்ச்சியை அழிக்க வந்தவராகவே அவருக்கு சுருதன் தோன்றினார். "நம்மிடம் இத்தனை பெரிய கருவூலம் இருப்பதை இங்கு ஏன் சொல்லவேண்டும்?" என்றார் சுருதன்.

ஃபானு எரிச்சலுடன் "அதை எவரும் பார்த்தாலே தெரிந்துகொள்ளலாமே. இத்தனை வண்டிகளில் ஏற்றிக்கொண்டு செல்லப்படுவது கருவூலம் அன்றி வேறென்ன?" என்றார். சுருதன் "ஆனாலும் அக்கருவூலம் இருக்கிறதென்பதை சொல்லியிருக்கக்கூடாது. இங்கு எவருடைய ஒற்றர்கள்

இருப்பார்கள் என்று நமக்கு தெரியாது. நம்மை எவரேனும் தாக்கினால் எப்படி நம்மால் கருவூலத்தை பாதுகாக்க முடியும்?" என்றார். ஃபானு "எவர்?" என்றார். "எவராயினும்... இக்கருவூலம் பேரரசு ஒன்றின் ஐம்பதாண்டுக்கால செல்வம். இதற்கிணையான ஒன்று பாரதவர்ஷத்தில் இல்லை" என்றார் சுருதன்.

ஃபானு திகைத்துவிட்டார். சுருதன் அதை பயன்படுத்திக்கொண்டு மேலே சென்றார். "நாம் பிரபாச க்ஷேத்ரத்திற்குச் சென்ற பிறகே கூட நம்மை எதிரிகள் தாக்க வாய்ப்பிருக்கிறது. அது கூர்ஜரத்துக்கு மிக அருகே இருக்கிறது" என்றார். ஃபானுமான் சினத்துடன் "கூர்ஜரம் நொறுங்கிக் கிடக்கிறது. நம்மைத் தாக்கும் அளவுக்கு அவர்களுக்கு ஆற்றல் இல்லை" என்றான். "சிந்து தாக்கலாம், சிந்துவை உறுதியான மன்னனொருவன் ஆளத்தொடங்கியிருக்கிறான்" என்றார் சுருதன். "நமக்கு அஸ்தினபுரியின் உதவி இருக்கிறது" என்றார் ஃபானு. "ஆம், ஆனால் அவர்கள் மிக மிகத் தொலைவில் இருக்கிறார்கள்" என்றார் சுருதன்.

ஃபானு அவ்வண்ணம் சுவற்றுடன் அழுத்தப்பட்டதனால் சீற்றம்கொண்டார். "அஞ்சி அஞ்சி வாழ்வதில் பொருளில்லை. நமது படைக்கலங்கள் இன்னும் தாழவில்லை. நம்மிடம் பெருவீரர் இருவர் உள்ளனர். சாத்யகியும் கிருதவர்மனும் நம்முடன் இருக்கிறார்கள் என்ற செய்திக்குப் பிறகு எவரும் நம்மை எதிர்க்கப் போவதில்லை" என்றார். சுருதன் மேலும் சொல்லத் தொடங்க "உனக்கு அச்சமிருந்தால் நீ வரவேண்டாம். இங்கே பாலையில் கிடப்பதைவிட செல்வது மேல்... என் முடிவு அறிவிக்கப்பட்டுவிட்டது" என்றார் ஃபானு. சுருதன் தலைவணங்கி "அவ்வாறே" என்றார்.

“மூத்தவரே, ஆணை என்ன? என்ன செய்வது?” என்று ஃபானுமான் கேட்டான். “கிளம்ப வேண்டியதுதான்” என்றார் ஃபானு. “விதர்ப்பத்தின் ருக்மி நம்முடன் வந்து சேர்ந்துகொள்வதாக செய்தி வந்திருக்கிறது” என்றான் ஃபானுமான். “அவரை கிளம்பி பிரபாச க்ஷேத்ரத்திற்கு வரச்சொல். நாம் அங்கு சென்றுகொண்டிருக்கிறோம். இங்கு இனி எவருக்குமாக நாம் காத்திருக்க வேண்டியதில்லை” என்றார் ஃபானு. “அவர் நமக்காக வந்து கொண்டிருந்தார். நகர் சரிந்த செய்தி அறிந்ததும் படைகளை நிறுத்திவிட்டு நம் தூதுக்காக காத்திருந்தார்” என்றார் பிரஃபானு.

நான் “மூத்தவரே” என்றேன். “கூறு” என்றார் ஃபானு. “இந்தப் பிரபாச க்ஷேத்ரம் என்ற சொல்லை எங்கோ கேள்விப்பட்டதுபோல இருக்கிறது” என்றேன். ஃபானு என் உணர்வுகளை புரிந்துகொள்ளாமல் முகம் மலர்ந்து “அது புகழ்பெற்ற நிலமாக இருக்கலாம். நமது மூதாதையர் அங்கிருந்து வந்திருக்கலாம்” என்றார். “இல்லை மூத்தவரே, பிறிதொன்று” என்றேன். “நீ புதிய ஐயங்கள் எதையும் எழுப்ப வேண்டியதில்லை. கிருதவர்மனிடமும் சாத்யகியிடமும் இங்கிருந்து நாம் கிளம்பும் செய்தியை சென்று சொல்” என்றார். தலைவணங்கி “ஆணை!” என்றேன்.

உளச்சோர்வுடன் நான் கிருதவர்மனை சந்திக்கச் சென்றேன். அவர்கள் இருவரும் துவாரகையிலிருந்து கருவூலம் ஏற்றிய வண்டிகளுடன் சேர்ந்துகொண்டார்கள். அவர்கள் நடத்திவந்த காவலர்படை கருவூலத்தைச்

சூழ்ந்திருக்க அவர்கள் தங்கள் தனிப்பட்ட காவலர்படையுடன் பெருந்திரளுக்கு சற்று அப்பால் தனியாக தங்கியிருந்தனர். அவர்கள் இருவருடைய விற்களையும் நம்பியே ஃபானு தன்னை ஒரு அரசரென்று எண்ணிக்கொள்கிறார் என்று அனைவரும் அறிந்திருந்தமையால் அவர்களை அரசருக்கு நிகராகவே அனைவரும் நினைத்தனர். ஆனால் அவர்கள் அரசுநடத்தலில் நேரடியாக தலையிடக்கூடாது என்று எண்ணினர்.

நான் சாத்யகியின் படைகளை அணுகியபோது அவருடைய முதற்காவலன் என்னை நோக்கி வந்து வணங்கினான். என்னிடம் என் அலுவல் ஏது என்று வினவினான். "நான் சிறிய தந்தை கிருதவர்மனையும் மூத்தவர் சாத்யகியையும் சந்திக்க வந்தேன். இது அரசாணை" என்றேன். "அவர்களிருவரும் இன்று காலைதான் பாலையில் வேட்டைக்கு சென்றார்கள்" என்றான். "வேட்டைக்கா? இப்பொழுதா?" என்றேன். "ஆம், தனிப் புரவிகளில் சென்றார்கள்" என்றான்.

பாலையில் சில நாட்களாக வேட்டை உணவைத்தான் உண்டு கொண்டிருந்தோம். வேட்டைக்கென வில்லவர்களை இரவுகளில் பாலையில் அனுப்பி முயல்களையும் பாலைவனப் புல்வெளியில் வளரும் சிறிய மறிமான்களையும் கொண்டுவந்தோம். பொதுமக்களுக்கு பாலை நிலக்கழுதைகளும் பறவைகளும் கூட உணவாயின. துவாரகையில் இருந்து காலொடிந்தும் உடல் புண்பட்டும் வெளியே வந்த புரவிகளை உண்ணலாம் என்று சாம்பனின் அணுக்கரான அசுரகுலத்தவர் சொன்னார்கள். ஆனால் அவ்வாறு குதிரையை உண்ட பின் நம்மிடம் இசைந்திருக்கும்

குதிரைகளை ஆளமுடியாது, அவை முரண்கொள்ளும் என்றார் அமைச்சர் ஸ்ரீகரர்.

நான் அவர்களுக்காகக் காத்து அங்கேயே பாலையின் ஒரு சிறு மணல் மேட்டில் அமர்ந்திருந்தேன். அத்தனைக்கு அப்பாலும் அவர்கள் இருவரும் விளையாட விரும்புவதைப் பற்றி எண்ணிக்கொண்டேன். மேய்ச்சல் விலங்குகள் விரைவிலேயே விளையாடுவதை நிறுத்திக்கொள்கின்றன. வேட்டை விலங்குகள் எத்தனை வளர்ந்தாலும் விளையாடிக்கொண்டே இருக்கின்றன. போர்வீரர்கள் விளையாடாமல் இருக்க முடியாது. துரத்தாமல், வெல்லாமல் அமைய முடியாது.

தொலைவில் அவர்கள் இருவரும் வருவதை கண்டேன். ஒருவரோடொருவர் பேசிச் சிரித்துக்கொண்டு இணையாக இரு புரவிகளில் ஊர்ந்து வந்தனர். அவர்களுக்குப் பின்னால் செம்புழுதிப் படலம் சிறகென எழுந்திருந்தது. அவர்களின் புரவிகளுக்கு இருபுறமும் முயல்கள் சேர்த்து கட்டப்பட்டு தொங்கின. காற்றில் நீந்தி அருகணைந்து புரவியிலிருந்து இறங்கினர். நூறு முயல்களுக்கு மேல் அவர்களிடம் இருந்தன. அவர்களை அணுகிய ஏவலரிடம் அம்முயல்களை அளித்துவிட்டு என்னை பார்த்தனர்.

நான் தலைவணங்கி "நூறு முயல்களா? அத்தனை அம்புகளுடன் சென்றீர்களா?" என்றேன். "இங்கே நாணல்கள் மிகக் கூர்மையானவை" என்று கிருதவர்மன் சொன்னார். "சரியாக ஏவினால் முயலின் இதயத்தில் பாய்ந்துவிடுவன." சாத்யகி "சொல்க!" என்றார். நான் "மூத்தவர் ஃபானு இங்கிருந்து கிளம்பிச் செல்வதற்கு முடிவெடுத்துவிட்டார். ஆணை பிறப்பிக்கப்பட்டுவிட்டது" என்றேன்.

கிருதவர்மன் வியப்புடன் “ஆணை பிறப்பிக்கப்பட்டுவிட்டதா? எப்போது? எதையும் உசாவவில்லையே?” என்றார். சாத்யகி “எங்கே செல்வதற்கு?” என்றார். “நேற்று மாலை நான் அவனிடம் பேசினேனே” என்றார் கிருதவர்மன். “இம்முடிவு சற்றுமுன்னர் எடுக்கப்பட்டது” என்றேன்.

“என்ன நடந்தது?” என்று சாத்யகி கேட்டார். “அவர் சற்றுமுன் நிமித்திகரை அழைத்து எங்கு செல்லக்கூடும் என்று கேட்டார். அவர்கள் கூறியதும் அக்கணமே ஆணை பிறப்பித்துவிட்டார்” என்றேன். சாத்யகி “அறிவிலி!” என்றார். “அந்நிமித்திகரின் வடிவில் எவர் வேண்டுமானாலும் வந்து அந்த எண்ணத்தை சொல்லமுடியும். ஒவ்வொன்றுக்கும் குலமூத்தார், நிமித்திகர், படைத்தலைவர், அமைச்சர், குடித்தலைவர் என்ற ஐந்து தரப்பினரின் சொல் கேட்காமல் அரசன் எந்த முடிவையும் எடுக்கக்கூடாது. ஐம்பேராயம் தலைக்கொள்ளலே அவன் கடன்” என்றார்.

கிருதவர்மன் “அவன் பல தருணங்களில் வெறும் உணர்ச்சிகளால் இயங்கும் யாதவர் போலவே இருக்கிறான்” என்றார். சாத்யகி “அவர் எப்போதும் அப்படித்தான்” என்றார். “எங்கு செல்கிறான்?” என்று கிருதவர்மன் கேட்டார். “பிரபாச க்ஷேத்ரம் என்னும் நிலம் இங்கிருந்து பதினைந்து நாள் நடைத்தொலைவில் உள்ளது என்றும், அது ஒரு புல்வெளி என்றும், கடலோரமாக அமைந்திருக்கிறதென்றும், அதுவே நல்லதென்றும் நிமித்திகர்கள் கூறினார்கள்” என்றேன். சில கணங்களுக்குப் பின் கிருதவர்மன் “எவ்வண்ணம் கூறினார்கள்?” என்றார். “இத்தனை தெளிவாக எந்த நிமித்திகரும் கூறுவதில்லை.”

“அவர்கள் தரையில் களம் வரைத்து கவடி நிரப்பி கணித்து கூறினார்கள்” என்றேன். “திசை மட்டும் சொன்னார்களா இடத்தையும் சேர்த்துச் சொன்னார்களா?” என்று கிருதவர்மன் கேட்டார். “திசை மட்டுமல்ல, இடத்தையும் செல்லும் தொலைவையும்கூடச் சொன்னார்கள். அந்நிலத்தின் நன்மைகளையும் விரித்துரைத்தனர்” என்றேன். “முதல் முறையிலேயே கூறிவிட்டனரா?” என்று கிருதவர்மன் மீண்டும் கேட்டார். “ஆம்” என்றேன். “எனில் அதற்கு என்ன பொருள்?” என்றார். நான் என்ன சொல்வதென்றறியாமல் பேசாமல் நின்றேன். “சொல்க, என்ன பொருள்?” என்றார்.

நான் “தெரியவில்லை, தந்தையே” என்றேன். “அறிவிலி, அவர்கள் முன்னரே அதை முடிவு செய்திருக்கிறார்கள். அந்த முடிவை எடுத்தபின் அதை நெடுநாட்களாக பேசிக்கொண்டிருக்கிறார்கள். அதைத்தான் இங்கு வந்து சொல்லியிருக்கிறார்கள். அங்கு வந்தபின் அவர்கள் எதையும் கணிக்கவில்லை” என்றார் கிருதவர்மன். எனக்கு உடனே அது உண்மை என்று தெரிந்தது. “ஆம், அவ்வாறுதான் இருக்கவேண்டும்” என்றேன். பின்னர் அச்சத்துடன் “அவர்கள் ஒற்றர்களா?” என்று கேட்டேன்.

“ஒற்றர்களாக இருக்க வாய்ப்பில்லை. ஒற்றர்கள் நிமித்திகர்களாக வருவதும் இல்லை. இவர்கள் எளிய தெருநிமித்திகர்கள். அரசருக்கு நூல் நவின்று சொல்லும் தகுதி உடையவர்கள் அல்ல. அவர்களை அழைத்து குறிகேட்டபோது உடனடியாக நெஞ்சிலிருப்பதை சொன்னார்கள். அவர்களின் அந்த எண்ணம் துவாரகையின் குடிகளுக்கு ஏற்கெனவே இருந்திருக்கவேண்டும். அவர்கள் தங்களுக்குள் பேசிக்கொண்டிருந்திருக்கவேண்டும். அது உடனே இவர்களின் நெஞ்சில் எழ அவ்வண்ணமே சொல்லியிருக்கிறார்கள்.”

சாத்யகி "ஆம், இதை நான் முன்னரும் கேட்டிருக்கிறேன்" என்றார். "துவாரகையின் மக்களின் எதிர்வினை என்னவாக இருந்தது?" என்று கிருதவர்மன் கேட்டார். "மக்கள் கண்ணீருடன் எதிர்கொண்டார்கள், கொண்டாடினார்கள்" என்றேன். "எவருமே ஐயம் எழுப்பவில்லையா? அங்கே எப்படி செல்வதென்று கேட்கவில்லையா?" என்றார் கிருதவர்மன். "இல்லை" என்றேன். "அது எங்ஙனம்? எந்த ஒரு முடிவுக்கும் மக்களில் ஒரு சாரார் ஐயம் தெரிவிப்பார்கள். ஒரு சாரார் மறுப்பு தெரிவிப்பார்கள். பெரும்பான்மை உணர்வுகள் எழுந்த பிறகு மெல்ல மெல்லத்தான் ஒற்றை உணர்வு உருவாகும். பெரும்பான்மை நோக்கியே எஞ்சியவர்கள் வந்து சேர்வார்கள். இது விந்தையாக உள்ளதே."

நானும் அதை அப்போதுதான் உணர்ந்தேன். "ஒரு முடிவு கூறப்பட்ட உடனே அத்தனை பேரும் சேர்ந்து அதை ஏற்றுக்கொள்கிறார்கள் என்றால் என்ன பொருள்? அனைவரும் அந்த முடிவை நோக்கி முன்னரே வந்திருக்கிறார்கள். அதை அரசர் சொல்லவேண்டுமென்று எதிர்பார்த்திருந்திருக்கிறார்கள். அரசர் இப்போது மக்களுக்கு ஆணையிடவில்லை. மக்கள் அரசருக்கு ஆணையிட்டிருக்கிறார்கள்" என்றார் கிருதவர்மன். "ஆம்" என்று நான் சொன்னேன். "ஆக இனி ஒன்றும் சொல்வதற்கில்லை. முடிவு எடுக்கப்பட்டுவிட்டது" என்றார் சாத்யகி. "ஆம், முடிவு எடுக்கப்பட்டுவிட்டது. அதன் விளைவுகளையாவது நாம் எண்ணவேண்டும்" என்று கிருதவர்மன் கூறினார்.

"அத்தனை பேர் உள்ளத்திலும் திரண்டெழுந்து அப்படி ஓர் எண்ணம் எப்படி வந்தது? இந்த இடத்தின் பெயர், இதன் வழி, இதன் சிறப்பு இவர்களிடம் எவ்வாறு விதைக்கப்பட்டது? இது

எங்கிருந்து கிளம்பி வந்தது?" என்று கிருதவர்மன் தனக்குத்தானே சொல்லிக்கொண்டார். "ஏன் அங்கு செல்ல வேண்டுமென்ற முடிவை அவர்கள் எடுக்கிறார்கள்? எங்கோ ஆழத்தில் இது எப்போதும் இருந்துகொண்டிருக்கிறது." சாத்யகி மெல்லிய குரலில் "ஆம், இருந்துகொண்டிருக்க வாய்ப்பிருக்கிறது" என்று சொன்னார். கிருதவர்மன் "என்ன?" என்று திரும்பி கேட்டார்.

"அந்தகரே, இந்தப் பிரபாச க்ஷேத்ரம் என்பது இங்கு சில ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்த தீய நிகழ்வின் முதிர்வுப்புள்ளி" என்றார் சாத்யகி. "முன்பு விஸ்வாமித்ரர் இங்கு வந்தபோது அவருடைய தீச்சொல் இந்நகர் மேல் விழுந்தது நினைவிருக்கும்." நான் "ஆம்" என்றேன். "அதைப்பற்றி நானும் அறிந்திருக்கிறேன்" என்று கிருதவர்மன் சொன்னார். "அதன்பின் சாம்பன் தொடர்ந்து கொடுங்கனவுகளை கண்டுகொண்டிருந்தார். ஊன்தடி ஒன்று தன் உடலில் இருந்து பிறந்ததாகவும், அது நாளும் வளர்ந்து கொண்டிருப்பதாகவும், தன் குருதியை பாலென அது அருந்துவதாகவும் சொன்னார். அதற்கு பிழைநிகர் என்ன செய்வது, எவ்வண்ணம் ஆற்றி ஒழிப்பதெனத் தெரியாமல் அமைச்சர்கள் திகைத்தனர்."

'பல பூசனைகளுக்கும் சடங்குகளுக்கும் பின் வேறு நிமித்திகர்களிடம் கோரலாம் என்று முடிவு செய்யப்பட்டது. அதன்படி நிமித்திகர் எழுவர் அவை கூடி, களம் வரைந்து, கல் பரப்பி, தெய்வங்களிடம் உசாவி ஒரு மறுமொழி உரைத்தனர். அதன்படி ஒரு பிழைநிகர் செய்யப்பட்டது" என்றார் சாத்யகி. நான் "அவர்கள் துவாரகையின் நிமித்திகர்கள் அல்ல. துவாரகையின் நிமித்திகர்கள் முனிவரின் தீச்சொல்லுக்கு மாற்றே இல்லை என்றே கூறினர். எவரும் அதிலிருந்து

தப்பமுடியாது என்றே அறிவுறுத்தினர். மூத்தவர் சுருதன் சினந்து அவர்களை அறைந்தார். சாம்பன் அவர்களை அரியணையில் இருந்து எழுந்து வந்து ஓங்கி உதைத்து வீழ்த்தினார்" என்றேன். "அதன் பிறகு அசுர குலத்தைச் சேர்ந்த நிமித்திகர் எழுவர் அழைத்து வரப்பட்டனர். அவர்களே இந்தப் பிழைநிகர்ச் செயலை கூறினர்."

"கூறுக, என்ன அது?" என்று கிருதவர்மன் கேட்டார். "அக்கனவு ஒரு முன்னெச்சரிக்கை. அவ்வண்ணம் ஒரு தீய கனவு வருமெனில் அக்கனவை அவ்வண்ணமே நிகழ்த்தி தீங்கிலாது முடிப்பதே அக்கனவிலிருந்து தப்பும் வழியாக அசுரர்களால் கடைப்பிடிக்கப்படுகிறது. இல்லத்தில் பாம்பு வருகிறது என்று கனவு கண்டால் நஞ்சிலாத பாம்பு ஒன்றை இல்லத்திற்கு கொண்டுவந்து விட்டு அதை பிடித்து திரும்பக் கொண்டு சென்று விட்டுவிட்டால் அந்த வருநிகழ்வில் இருந்து மீள முடியும் என்று அவர்கள் நம்புகிறார்கள். அதைப்போல இதற்கும் செய்யலாம் என்றனர்" என்றேன்.

"அவர்களின் சொற்களின்படி ஒரு பூசனைச் சடங்கு ஒருங்கிணைக்கப்பட்டது. சாம்பன் கனவில் கண்டவை என்னென்ன என்று விரிவாக உசாவப்பட்டு அவ்வண்ணமே அனைத்தும் ஒருக்கப்பட்டன. அரண்மனையில் பெண்ணுக்குரிய ஆடையை அணிந்து சாம்பன் மஞ்சத்தில் படுத்திருந்தார். அவர் உடலில் வயிற்றுடன் சேர்த்து ஒரு இரும்புத்தடி வைத்து கட்டப்பட்டது. பின்னர் சுண்ணமும் மஞ்சளும் கலந்த செங்குருதிக் கலம் ஒன்று அவர் கால் நடுவே உடைக்கப்பட்டது. மெய்யாகவே அந்த இரும்புத்தடியை அவர் ஈன்று புறந்தருவதுபோல நடித்தனர். குழவியென அதை எடுத்துக்கொண்டு சென்று நீராட்டு, பெயர்சூட்டு முதலிய

அனைத்து பிறவிச் சடங்குகளையும் செய்தனர். அச்சடங்கில் நானும் பங்கேற்றேன். என் மைந்தனுக்குச் செய்யவேண்டிய அனைத்தையும் செய்தேன். இனிப்பு தொட்டு நாவில் வைப்பது, மலர் எடுத்து இட்டு வணங்கி வாழ்த்துவது என...”

“அன்னையர் இச்சடங்கு நடந்ததை அறியவில்லை. அரண்மனையில் யாதவ மைந்தர் மட்டுமே அறிய இது நடந்தது. அதன் பிறகு அந்த இரும்புத்தடி இறந்துவிட்டது என அவர்கள் அறிவித்தனர். நாங்கள் அதற்கு இறுதிச்சடங்குகள் அனைத்தையும் செய்தோம். நாவில் பால்தொட்டு வைத்தோம். அரிமலரிட்டு வணங்கினோம். ஆடை நீக்கி அதை அவர்கள் ஒரு தொட்டிலில் வைத்து எடுத்துச் சென்றனர். என்ன செய்யப்போகிறீர்கள் என்று சாம்பன் கேட்டார். அதை கீழே கற்களை நொறுக்கும் இரும்பு உருளைகளுக்கு நடுவே கொடுத்து துண்டு துண்டாக பொடித்து தொலைவில் எங்கேனும் வீசப்போவதாக சொன்னார்கள். அவர்கள் அதை கொண்டுசெல்வதை சாம்பன் நெடுந்தொலைவு வரை பார்த்துக்கொண்டிருந்தார்” என்று நான் சொன்னேன். “மெய்யாகவே சாம்பன் அதன்பின் அக்கனவிலிருந்து விடுபட்டார். அதை மறந்தும்போனார்.”

“அவர்கள் கொண்டு வீசிய நிலம்தான் பிரபாச க்ஷேத்ரம்” என்று சாத்யகி சொன்னார். “தங்களுக்கு எவ்வண்ணம் தெரியும்?” என்று நான் கேட்டேன். “அனைவருக்கும் தெரிந்ததுதான் அது. அங்கு கொண்டு வீசியவர்கள் இங்கு வந்து சொன்னார்கள். சில நாட்களிலேயே துவாரகை முழுக்க பிரபாச க்ஷேத்ரத்தில் அந்த ஊன் தடி வீசப்பட்ட செய்தி தெரிந்துவிட்டது. அங்கு அந்த ஊன்தடியின் பொடிகள் மணலில் விதைகளாக முளைத்து கூரிய இரும்புமுனை கொண்ட புற்களாக செறிந்திருப்பதாக

சூதன் ஒருவன் பாடினான். அவை இயற்கையாகவே முளைத்த கூரிய அம்புகள் என்றான். யாதவர்களின் குலத்திற்கு காவலாக அந்த அம்புகளை தெய்வங்கள் படைத்திருப்பதாகவும் அவை மூதாதையரின் வாழ்த்து என யாதவருக்கு வழங்கப்பட்டவை என்றும் சொன்னான்."

"லோகநாசிகை என்று அந்தப் புல்லை இங்கே சூதர்கள் சொன்னார்கள். லோகநாஸிகா பிரபோதனம் என்று ஒரு குறுங்காவியம்கூட ஒரு புலவரால் இயற்றப்பட்டது. இங்கு சில நாட்கள் அந்தப் பாடல் புழங்கியது. அவ்வப்போது சிறு பூசைகளிலோ இல்லக்களியாட்டுகளிலோ அந்தப் பாடல் ஒலிக்கிறது" என்றார் சாத்யகி. "தங்கள் மூதாதையரின் படைக்கலங்கள் புற்களாக எழுந்து நிற்கும் நிலம் என்று இம்மக்கள் பிரபாச க்ஷேத்ரத்தை நம்புகிறார்கள். இங்கிருந்து முதலில் சிறுகுழுக்களாக கிளம்பியபோதே ஒரு சிலர் அங்கு செல்லவிருப்பதாக சொல்லிக்கொண்டிருந்தார்கள். அங்கு சென்றுவிட்டால் எவரும் தங்களை தாக்க முடியாதென்றும், மூதாதையரின் புல்முனைப் படைக்கலங்கள் தங்களுக்கு காவல் இருக்கும் என்றும் சொன்னார்கள். அவர்களின் உறுதியான நம்பிக்கை பிறரிடமும் பரவியிருக்கலாம்."

"அனைவரும் சேர்ந்து அந்த முடிவை எடுத்துவிட்டார்கள். அனைவரின் பொருட்டும் ஃபானு அதை அறிவித்துவிட்டார்" என்று நான் சொன்னேன். "அங்கு செல்ல வேண்டியதில்லை என்றே எனக்கு தோன்றுகிறது" என்று கிருதவர்மன் சொன்னார். சாத்யகி "ஆனால் இனி ஒரு மறுசொல் எழவியலாது. அரசர் ஒன்று உரைத்த பின்னர் நாம் அதை மாற்றக்கூடாது. மேலும் இன்று ஃபானு அரசரல்ல. அவருக்கு நிலமில்லை, முடியில்லை, அரண்மனையில்லை. நமது நம்பிக்கையால், நம்

சொல்லால்தான் அவர் அரசராகிறார். அவரை மறுத்தோமெனில் அவர் அரசராக அல்லாமல் ஆவார். எனில் அரசரில்லாத வெற்று மக்கள்திரளாக இது ஆகும். பின்னர் இதை ஆணையால் கட்டுப்படுத்த இயலாது" என்றார்.

கிருதவர்மன் "நான் சொல்வதை அவனிடம் சொல்லியாகவேண்டும்" என்றார். "இனி சொல்லி ஒன்றும் ஆவதில்லை. முதலில் பிரபாச க்ஷேத்ரத்திற்கு செல்வோம். அது உகந்ததல்ல என்று அங்கிருந்து பிற நிலங்களுக்கு செல்வோம். இப்போது செய்வதற்குகந்தது அது ஒன்றே" என்றார் சாத்யகி. "இல்லை, இது அழிவுக்குச் செல்லும் பாதை. இதை தடுத்தாகவேண்டும்" என்று கிருதவர்மன் சொன்னார். "நாம் உடனே கிளம்புவோம். புறப்பாட்டை நிறுத்தியே ஆகவேண்டும்."

சாத்யகி "பிரபாச க்ஷேத்ரத்தை நோக்கிய யாதவர்களின் பயணம் எவராலும் ஆணையிடப்படவில்லை. உண்மையில் அது யாதவர்களின் உள்ளுறைந்த ஏதோ விசையால் முடிவெடுக்கப்பட்டது. அவ்விசை அவர்களை கொண்டுசெல்கிறது. ஃபானு பிரபாச க்ஷேத்ரத்திற்குச் செல்லவேண்டுமென்ற முடிவை எடுப்பதற்கும் அறிவிப்பதற்கும் யாதவர்களின் தொகைக்குள் வாழ்ந்த அறியாத் தெய்வமொன்றே வழி வகுத்தது என்றே நான் கொள்கிறேன்" என்றார்.

"நான் முற்கூறும் நம்பிக்கைகளை ஏற்பவனல்ல. எனினும் இதில் ஏதோ ஒவ்வாமை இருக்கிறது. பிரபாச க்ஷேத்ரம் உகந்த இடம்தானா என்பதை நாம் முதலில் முன்னோடி ஒற்றர்களைக் கொண்டு நோக்கவேண்டும். அவர்கள் அங்கு நாம் தங்குவதற்கும் பெருகுவதற்கும் வழியிருக்கிறதென்று கூறிய

பின்னரே நாம் கிளம்பவேண்டும். இங்கிருந்து கிளம்பிச் சென்ற பின்னர் அந்த இடம் பொருத்தமல்ல எனில் மீண்டும் ஒரு நெடும்பயணத்தை நாம் செய்யமுடியாமலாகும். அது அழிவுக்கே வழிவகுக்கும்" என்றார் கிருதவர்மன்.

சாத்யகி "ஆம், ஆனால்..." என்று தொடங்க கிருதவர்மன் இடைமறித்து "ஆம், அங்கிருந்து பிற நாட்டு நிலங்களின் தொலைவு என்ன, எதிரிகள் எளிதில் வந்து தாக்கும் வாய்ப்புண்டா என்றெல்லாம் ஆராய வேண்டும். தகுதியுடைய ஒற்றர்களும் அவர்களுடன் வழிநடத்தும் அரசகுடியினரும் சென்று நோக்கி வந்தாலொழிய இங்கிருந்து கிளம்புவது அறிவின்மை" என்றார். நான் "இத்தருணத்தில் எவரும் அதை மூத்தவர் ஃபானுவிடம் உரைக்க இயலாது" என்றேன். "உரைக்கலாம். அது நமது கூட்டான முடிவாக இருக்குமெனில்" என்று சாத்யகி சொன்னார்.

"நாம் இங்குள்ள மூன்று அரசத் தரப்பினரிடமும் பேசுவோம். நான் பிரத்யும்னனிடம் பேசுகிறேன். அவன் இதை ஏற்பான். ஃபானுவைவிட அரசுசூழ்தலில் பழக்கமும் அதில் நம்பிக்கையும் கொண்டவன். அதன்பின் கிருஷ்ணையுடன் பேசுவோம். அதன்பின் அவர்கள் என்ன எண்ணுகிறார்கள் என்பதை நமது எண்ணத்துடன் கலந்து ஃபானுவிடம் சொல்வோம்" என்று கிருதவர்மன் சொன்னார். "ஆனால் எடுத்த முடிவை அரசன் மாற்றலாகாது" என்றார் சாத்யகி. "பிரபாச க்ஷேத்ரத்திற்கு கிளம்பப்போவதில்லை என்பதை அவன் அறிவிக்க வேண்டியதில்லை. நற்செய்தி ஒன்றுக்காக காத்திருக்கிறோம் என்று மக்களிடம் கூறலாம்" என்றார் கிருதவர்மன்.

நான் “எனில் நாம் அனைவரும் ருக்மிக்காக காத்திருக்கிறோம், அவர் நமக்கு உரிய பொருட்களுடன் வந்துகொண்டிருக்கிறார் என்று மக்களிடம் கூறுவோம். மெய்யாகவே அவர் இங்கு வந்துகொண்டிருக்கிறார் என்று செய்தி வந்திருக்கிறது. மக்களும் அதை அறிவார்கள். அதன்பொருட்டு காத்திருக்கலாம்” என்றேன். “ஆம், அதன்பொருட்டு காத்திருக்கலாமே. அனைத்து வகையிலும் அது உகந்ததே. ருக்மி பொருட்களுடனும் படைகளுடனும் கிளம்பி ஃபானுவை பார்க்க வருகிறார் என்பது ஃபானுவின் நிமிர்வை மேலும் கூட்டுவதுதான். எந்த வகையிலும் அவனுக்கு இழிவல்ல” என்றார் கிருதவர்மன்.

“எவ்வகையிலாயினும் நாம் காத்திருக்கத்தான் வேண்டும். உடனே இங்கிருந்து கிளம்புவது என்பது அறியா நிலம் ஒன்றிற்குள் நாம் இறங்குவதுபோல. தவளை எங்கும் பாயும். யானை ஏழுமுறை தொட்ட பின்னரே முதல் காலெடுத்து வைக்கும் என்பார்கள்” என்றார் கிருதவர்மன். “ஆம், முயல்வோம்” என்றார் சாத்யகி.

# கல்பொருசிறுநுரை - 63

**பகுதி ஆறு : படைப்புல் – 7**

பிரத்யும்னனை சந்திக்க கிளம்பிக்கொண்டிருந்த கிருதவர்மனிடம் நான் “தந்தையே, தாங்கள் நேரில் செல்லத்தான் வேண்டுமா? ஒரு சொல்லில் ஆணையிட்டால்

போதுமல்லவா?" என்றேன். அவர் "அல்ல, அன்று அவர்கள் இருந்த உளநிலை வேறு. இன்று ஒவ்வொருவரும் நகரிழந்த நிலையில் இருக்கிறார்கள். ஒரு நகருள் திகழும் நெறிகள் அந்நகரைவிட்டு வெளியேறியதுமே மறைந்துவிடுகின்றன. ஓர் இல்லத்தில் வாழ்பவர்கள் அதைவிட்டு வெளியேறி தெருவில் வாழத்தொடங்கினால் ஓரிரு நாட்களிலேயே நாடோடிகளின் இயல்பை கொள்வதை நீ பார்க்கலாம்" என்றார்.

"இங்கு இப்போது எந்த அரச நெறியும் திகழாது. இங்கு மேலெழுந்து ஆள்வது ஃபானுவின் ஐயமும் அச்சமும் மட்டும்தான். இத்தருணத்தில் எவரும் தன்னை மதிக்கமாட்டார்கள், தன்னைக் கடந்துசென்று படைகொள்வார்கள் என்ற அச்சம் அவனை ஆட்டிப்படைக்கிறது. இன்று அவன் இரவும்பகலும் தன் கருவூலத்தைப் பற்றியே எண்ணிக்கொண்டிருக்கிறான். அதை எவர் வேண்டுமானாலும் கைப்பற்றிக்கொள்வார்கள் என்ற அச்சமே துயிலவிடாது தடுக்கும். இப்போது எவர் எதைச் சென்று சொன்னாலும் கருவூலத்தை கைப்பற்றும் முயற்சி என்றே அவனுக்குத் தோன்றும்" என்றார் கிருதவர்மன். "அந்த உளநிலையில் அவன் இருக்கையில் அதற்கு எதிரான எதிர்வினைகளாகவே பிற உளநிலைகள் அனைத்தும் இருக்கும்."

"எனில் பிரத்யும்னனையும் கிருஷ்ணையையும் சென்று பார்ப்பதில் பொருளில்லை அல்லவா?" என்று நான் கேட்டேன். "அல்ல, கூட்டான முடிவென்பது ஃபானுவைச் சற்று தயங்கவைக்கும். அவன் கிளம்பிச்செல்லவேண்டும் என்று ஆணையிட்ட பிறகு, அதை தவிர்த்து பிரத்யும்னனையும் கிருஷ்ணையையும் பின் தொடரும் யாதவர்கள் இங்கு நின்றுவிட்டால் மூன்றில் ஒரு பங்கினரே அவனுடன்

கிளம்புவார்கள். அது மெய்யாகவே அவன் மூன்றிலொரு பங்கினருக்கு மட்டுமே தலைவன், எஞ்சியவர்கள் அவனை ஏற்றுக்கொள்ளவில்லை என்று கண்கூடாக காட்டியதாகவே அமையும். ஆகவே அவன் அதை எண்ணி தயங்குவான். நாம் அதை எடுத்துக் கூறி அவனுக்கு உணர்த்தினால் அவனால் புரிந்துகொள்ள முடியும்" என்று கிருதவர்மன் கூறினார்.

நான் அவருடன் சென்றேன். அந்தப் பொழுதில் துவாரகையை ஒட்டிய அந்த மணற்பரப்பு முழுக்க மக்கள் புயலுக்குப் பின் சருகுக்குவியல் என நிறைந்திருந்தனர். சருகின் வண்ணம்தான். அழுக்கும் மண்ணும் மட்டும் அல்ல மானுட உடலே கூட சருகின் வண்ணமே. பிரத்யும்னன் தன் படைகளுக்கு நடுவே மணலில் இழுத்துக் கட்டிய கூடாரங்களுக்கு வெளியே சுற்றத்துடன் அமர்ந்திருந்தார். வெயில் படாமலிருக்க அங்கு நின்றிருந்த முள்மரங்களை இணைத்து மூங்கிலை வைத்து அவற்றுக்கு மேல் மூங்கில் தட்டிகளை அடுக்கி குடில்போல் கட்டியிருந்தார்கள். கீழே மணல்மேல் விரிக்கபட்ட கம்பளத்தில் அவர் அமர்ந்திருக்க சூழ அவருடைய இளையவர்கள் அமர்ந்திருந்தனர்.

தொலைவிலேயே அவர்களின் உடல்மொழியைக் கொண்டு உளநிலையை உணரமுடிந்தது. பிரத்யும்னன் பதற்றம் கொண்டவராக இருந்தார். அவர் இளையவர்களில் மூவர் ஃபானுவுடன் சென்று சேர்ந்திருந்தனர். இருவர் கொல்லப்பட்டுவிட்டனர். சேர்ந்து அமர்கையில் கண்ணெதிரே தன் உடன்பிறந்தார் பாதியெனக் குறைந்திருப்பதை அவர்

பார்த்துக்கொண்டிருந்தார். அவர்களில் எவர் தனக்கான கத்தியுடன் இருப்பார் என்று அவர் அகம் ஐயமும் கொண்டிருந்தது. ஆகவே படைத்தலைவர்களால் சூழப்பட்டவராக படைக்கலத்தை மடியிலேயே வைத்திருப்பவராக ஐயத்துடன் சூழ விழியோட்டிக்கொண்டிருப்பவராக இருந்தார்.

அவருக்கு நேர்க்குருதி மரபினனாகவும் இளவரசனாகவும் இருந்த அநிருத்தன் அங்கே அவருடன் இல்லை. அவருடைய படைப்பிரிவுக்குள்ளேயே அவர்கள் தனியாக பிறிதொரு இடத்தில் இருந்தனர். தந்தைக்கும் மைந்தனுக்கும் இடையே எக்கணத்திலும் பூசல் நிகழும் என்று சொல்லப்பட்டது. "அநிருத்தனை தனியாக சந்திக்கவேண்டுமா?" என்று நான் கிருதவர்மனிடம் கேட்டேன். "தேவையில்லை என நினைக்கிறேன். முரண் என ஏதேனும் தெரிந்தால் சந்திக்கலாம். ஆனால் நமக்கு பொழுதும் இல்லை" என்றார் கிருதவர்மன்.

கிருதவர்மனும் நானும் அவரை சந்திக்கவேண்டும் என விரும்புவதை ஏவலரிடம் அறிவித்தோம். அவன் சென்று அவரிடம் தெரிவித்தபோது தொலைவிலேயே பிரத்யும்னன் மாறி மாறி வினாக்களை கேட்டும் அவ்வப்போது எங்களைப் பார்த்தும் குழம்பிக்கொண்டிருப்பதை பார்த்தோம். கிருதவர்மன் சலிப்புடன் "சந்திப்பதற்கு எதற்கு இவ்வளவு தயங்குகிறான்?" என்றார். நான் எரிச்சலுடன் "நாம் நேராகச் சென்று பார்ப்போம்" என்று நடந்து செல்லத்தொடங்கினேன். கிருதவர்மன் "இல்லை, இங்கு கோட்டையும் அரண்மனையும் இல்லை. ஆயினும் கோட்டையையும் அரண்மனையையும் நாம் கற்பனையில் உருவகித்துக் கொண்டாலொழிய இங்குள்ள அரசமுறைமைகளை கடைபிடிக்க இயலாது.

அரசமுறைமைகள் கடைபிடிக்கப்படாவிட்டால் அவன் அரசன் அல்லாமல் ஆகிவிடுவான். அரசன் இல்லாத சூழலில் எவரும் வாழ இயலாது" என்றார்.

நான் அங்கே மாளிகைக்கதவுகளையும் இடைநாழிகளையும் பார்க்கத்தொடங்கினேன். அப்போதுதான் அங்குள்ள ஒவ்வொரு ஏவலரும் அங்கே ஓர் அரண்மனையை உளப்படமாக வரைந்திருப்பதை கண்டேன். பிரத்யும்னன் வெட்டவெளியில் அமர்ந்திருந்தாலும் கூட அவர் ஏவலன் அவன் வாசல் என நினைத்திருந்த ஓர் எல்லைக்கு வெளியிலேயே நின்றான். அதற்கு அப்பால் செல்லும்போது காலெடுத்து வைத்து மெல்ல தயங்கி கதவைத் திறப்பவன்போல உடல் அசைவு காட்டி மேலே சென்றான். வணங்கி மீண்டு வரும்போதும் அவன் அந்த கற்பனையான கதவைத் தாண்டி வருவதை காணமுடிந்தது.

சில கணங்களில் அங்குள்ள அனைவருமே கோட்டைகளை, காவல்மாடங்களை, தெருக்களை, இல்லங்களை நடித்துக்கொண்டிருப்பதை பார்த்தேன். சூழவும் நோக்க நோக்க என் வியப்பு விரிந்துகொண்டே சென்றது. இல்லாத ஒன்று இருப்பவர்களினூடாக அங்கே திகழ்ந்து வந்தது. புரவிகளும் யானைகளும் எழுந்தன. முரசுகளும் கொம்புகளும் வந்தன. காவலர்களும் ஏவலர்களும் உருவாயினர். அரண்மனை என்பது பொருளில் இல்லை, உள்ளத்தில் இருக்கிறது என்பதை அப்போது கண்டேன். மறுகணம் ஒரு புன்னகையுடன் எண்ணம் எழுந்தது, கால் நோக்கி சிறுநீர் கழிக்கும் நாயின் அருகே அது தன் உள்ளத்தில் கண்ட மரம் ஒன்றிருக்கிறது என்று முன்னர் என் ஆசிரியர் கூறினார். அவர் விளையாட்டாக அதை உரைத்திருந்த போதிலும்கூட அது என் உள்ளத்தில் பல தளங்களில் விரிந்த ஒன்றாக இருந்தது. சில தருணங்களில்

அது தெய்வத்தை புரிந்துகொள்வதற்கான உருவகமாகவே ஆகிவிட்டிருந்தது.

ஏவலன் வந்து பிரத்யும்னனை சந்திக்க ஒப்புதல் கிடைத்திருப்பதாகச் சொல்லி அழைத்துச் சென்றான். காவல்நிலைகளையும் கதவுகளையும் கடந்து சென்று பிரத்யும்னனை அணுகி வணங்கி முகமன் உரைத்தோம். பிரத்யும்னன் வணங்கி அமரும்படி கைகாட்டினார். அமர்ந்ததும் இருவரும் அனைத்து சொற்களையும் அரசமுறைப்படியே உரைத்தனர். பின்னர் கிருதவர்மன் நிகழ்வினை சுருங்க சொன்னார். "பிரபாச க்ஷேத்ரத்திற்குப் போவதில் பிழையென ஒன்றுமில்லை. எனினும் இவ்வண்ணம் ஒரு முற்சொல் உள்ளது. அது பொய்யென்றாகலாம். ஆயினும் அவ்வண்ணம் ஒன்று உள்ளது என்பதே உகந்ததல்ல" என்றார் கிருதவர்மன்.

"ஒரு இல்லத்தில் பூசல் நிகழக்கூடுமென நிமித்திகரின் சொல் இருந்தால் அங்குள்ள அனைவரும் இயல்பாக அனைத்து சொல் செயல் வழியாகவும் பூசல் நோக்கி செல்வதை பார்க்கலாம். ஓர் அவையில் உளவிரிசல் நிகழுமென்று முன்னரே ஐயமிருந்தால் அனைத்து நிகழ்வுகளும் அவ் உளவிரிசல் நோக்கியே ஒழுகும்" என்று கிருதவர்மன் சொன்னார். "ஆகவே நாம் பிரபாச க்ஷேத்ரத்திற்குச் செல்வது இன்று உகந்ததல்ல. மேலும் இத்தகைய முடிவுகளை நாம் மிக எண்ணி எடுக்கவேண்டும். சிறந்த பிற இடங்கள் உள்ளனவா, வேறு எங்கேனும் மேலும் உகந்த எதையேனும் நாம் கண்டடைய முடியுமா என்ற விரிவான தேடலுக்குப் பின்னரே கிளம்பவேண்டும்."

ஆனால் பிரத்யும்னன் எதையும் செவி கொள்ளவில்லை. ஆர்வமில்லாமல் தலையை அசைத்து "தாங்களே முடிவை

எடுக்கலாம். எங்கு சென்றாலும் எனக்கு ஒப்புதலே. உண்மையில் நான் பிரபாச க்ஷேத்ரத்திற்கு வருவதற்கான வாய்ப்புகள் குறைவு. எனது படைகளுடன் கிளம்பி விதர்ப்பத்திற்கே செல்லலாம் என்று எண்ணுகிறேன்" என்றார். "விதர்ப்பத்திற்குச் செல்வது உகந்த எண்ணமல்ல. அங்கு தாங்கள் அரசர் அல்ல. விருந்தினராக அரசர் ஒருவர் பிறிதொரு நாட்டில் நெடுநாள் இருக்கமுடியாது" என்றார் கிருதவர்மன். "ஆம், ஆனால் நான் மாதுலர் ருக்மியிடம் விதர்ப்பத்தின் ஒரு நிலப்பகுதியை விலைகொடுத்து வாங்கலாம் என்று நினைக்கிறேன். அதற்கான செல்வம் அவரிடம் முன்னரே கொடுக்கப்பட்டுள்ளது. அதற்கு ஈடாக அவர் நிலத்தை கொடுக்கட்டும். அங்கு ஒரு அரசை நான் அமைத்துக்கொள்கிறேன். பின்னர் எனக்குரிய நிலத்தை நான் வென்று பெறுவேன்" என்றார் பிரத்யும்னன்.

"இன்று பிரபாச க்ஷேத்ரத்திற்கு வந்தால்கூட ஒரு புதிய சதுப்புநிலத்தில் பிறிதொருவரின் இளையவனாக இருப்பதில் பெரிய பொருளில்லை" என்றார் பிரத்யும்னன். "ஆனால் நாம் எடுத்த முடிவு ஃபானுவை அரசராக்குவதென்று" என்று கிருதவர்மன் சொன்னார். "மெய். ஆனால் அது துவாரகையின் அரசர் என்னும் நிலை. அன்று துவாரகை மண்ணில் இருந்த மாபெரும் நகர் என்று இருந்தது. இன்று நம்மிடம் நகரில்லை. ஒரு சதுப்பை பங்குவைப்பதற்காக நான் எதற்கு இவருடன் இருக்கவேண்டும்?" என்றார். "மெய்தான்" என்று கிருதவர்மன் சொன்னார். "நீ கிளம்புவதாக இருப்பினும் அது ஒருவகையில் நன்றே. ஆனால் எதுவாயினும் நாம் இங்கு ருக்மி வந்துசேர்வது வரை காத்திருப்போம். அதுவே முறை." பிரத்யும்னன் "ஆம், எனக்கு மாற்றுச்சொல் இல்லை" என்றார்.

பிரத்யும்னனின் முடிவை அங்கிருந்து கிளம்பிச்செல்லும்போது கிருதவர்மனும் நானும் எங்களுக்குள் பேசிக்கொள்ளவில்லை. சாத்யகி அப்போதும் சாம்பனை சந்திக்க கிளம்பியிருக்கவில்லை. அவர் எங்களுக்காக காத்திருந்தார். அவரை சந்தித்ததும் கிருதவர்மன் பிரத்யும்னனின் எண்ணத்தை சொன்னார். சாத்யகி "அவர் கிளம்பிச்செல்வது எவ்வகையிலும் உகந்த முடிவல்ல. குறிப்பாக யாதவருக்கு" என்றார். "நாம் சென்று நின்றிருக்கப்போவது ஒரு திறந்தவெளியில், புதுநிலத்தில். எந்தப் புதுநிலமும் எவருக்கும் உரியதாக எளிதில் ஆவதில்லை. அங்கு எவருக்கேனும் ஏதேனும் உரிமை இருக்கும். அவர்கள் கிளம்பிவருவார்கள். போரிடாது வெல்லாது எந்த நிலத்தையும் அடைய முடியாது. போரிட்டு வென்ற நிலத்திற்கு மட்டுமே மக்கள் மனதில் மதிப்பும் இருக்கும். அநிருத்தனும் பிரத்யும்னனும் இல்லாமல் ஃபானுவால் ஒரு புதுநிலத்தை வென்று தனக்கென முடிசூட்டிக்கொள்ள இயலாது."

"ஆனால் நிலம் வென்று மூத்தவருக்கு கொடுங்கள் என்று நாம் எப்படி பிரத்யும்னனிடம் கேட்க முடியும்?" என்றார் கிருதவர்மன். "பிரத்யும்னன் ருக்மிக்கு செல்வத்தை அளித்திருக்கிறார். பெற்ற செல்வத்தை எவரும் திருப்பிக்கொடுக்கமாட்டார்கள். அதற்கு நிகராக ஒரு பொருளைப் பெறுவதே எளிது" என்றார். சாத்யகி "ஆம்" என்றார். "ருக்மி துவாரகையே தனக்கு வேண்டுமென்று விரும்பியவர். இன்று அவர் விரும்பியது போலவே இளைய யாதவரின் பெயர் எஞ்சாது துவாரகை அழிந்துவிட்டது. இளைய

யாதவரின் மைந்தரை அழைத்துச்சென்று தன் நிலத்தில் ஒரு பகுதியை அவருக்கு அளித்து அங்கு ஓர் அரசை உருவாக்கி இளைய யாதவரின் பெயர்கூட இல்லாத மணிமுடியொன்றை அங்கு எழச் செய்தால் ருக்மி வெற்றி அடைந்தவராவார். அதை அவர் விரும்பத்தான் செய்வார்" என்று கிருதவர்மன் சொன்னார்.

"எனில் சாம்பனை நாம் உடனழைத்துச் செல்கிறோமா?" என்றார் சாத்யகி. "சாம்பன் களிமகனாயினும் கட்டற்றவனாயினும் போர்க்களத்தில் வெல்பவன். அசுரர்கள் புதுநிலத்தை வென்று கோல்கொள்வதில் இயல்பான ஊக்கமும் பயிற்சியும் கொண்டவர்கள். புதுநிலத்தில் அவர்கள் வெல்லலாம்" என்றார் கிருதவர்மன். சாத்யகி "ஆனால் அது நாம் அடையும் புதுநிலம் மேய்ச்சல் நிலமா காடா என்பதைப் பொறுத்தது. மேய்ச்சல் நிலமெனில் யாதவர் கை ஓங்கும். காடெனில் அசுரர் கை ஓங்கும்" என்றார். கிருதவர்மன் "நாம் இன்னும் முடிவெடுக்கவில்லை. மேய்ச்சல் நிலத்தில் புல்வெளிகளும் நீர்நிலைகளும் நமக்கு உகந்தது. ஆனால் பிறரால் எளிதில் தாக்கத்தக்கது. படைக்கலம் இல்லாது வெட்டவெளியில் நின்றிருப்பது அது" என்றார்.

"புல்வெளியில் ஆ புரக்கலாம். ஆனால் சில நாட்களேனும் எவருக்கேனும் கப்பம் கொடுத்தே ஆகவேண்டும். அல்லது கடும்போரிட வேண்டும். காட்டில் வாழ்பவர்களுக்கு காடே கோட்டையாகிறது. காட்டை தெரிவு செய்வதா அல்லது மேய்ச்சல் நிலத்தையா என்பதை பிறகு முடிவெடுக்கலாம். கிருஷ்ணை என்ன சொல்கிறார் என்பதை அவரிடம் கேட்போம்" என்று சாத்யகி சொன்னார். "கிருஷ்ணை ஒருபோதும் புல்வெளி வாழ்வை விரும்பமாட்டார். காட்டையே தெரிவுசெய்வார். எனக்கும்கூட புல்வெளிமேல் ஒவ்வாமை உண்டு. மேயும்

விலங்குகளில் மாறாதிருக்கும் அச்சமும் பதற்றமும் எனக்கு அருவருப்பூட்டுவன" என்றார் கிருதவர்மன்.

சாம்பனின் படைப்பிரிவை அடைந்தபோது அங்கு மானுட உடல்களாலான கோட்டை ஒன்று இருப்பதை கண்டேன். எட்டு பேராக படைவீரர்கள் நீண்ட நிரை அமைத்து ஒரு கோட்டையை உருவாக்கியிருந்தார்கள். அந்தக் கோட்டைக்கு வாயிலும், அதற்குள் நெடுஞ்சாலையும் இருந்தது. உள்ளே சென்றபோது நிரைவகுத்த மனித உடல்களாலான அரண்மனை. அவ்வரண்மனைக்கு நடுவே கூடங்கள், அவைகள் ஆகியவை இருந்தன. "எறும்புகளின் வழி இது. அவை உடலாலேயே பாலங்களையும் கோட்டைகளையும் அமைக்கும். உடலே படகும் தெப்பமும் ஆக மாறும்" என்று சாத்யகி சொன்னார்.

எங்கள் வருகையை அறிவித்தபோது சாம்பன் மது அருந்தி துயின்றுகொண்டிருக்கிறார் என்று ஏவலன் கூறினான். நாங்கள் அரசி கிருஷ்ணையை சந்திக்க விழைகிறோம் என்று சொன்னோம். அதையே எதிர்பார்த்துமிருந்தோம். கிருஷ்ணையை சந்திக்கும்பொருட்டு எங்களை அழைத்துச் சென்றான் ஏவலன். அவனுடன் மானுட உடல்களால் ஆன இடைநாழி வழியாக சென்றோம். மானுட உடலால் ஆன வாயிலைக் கடந்து கூடத்துள் நுழைந்தோம். கிருஷ்ணை வழக்கம்போல் தனக்கு வந்த ஓலைச்செய்திகள் அனைத்தையும் தொகுத்து படித்துக்கொண்டிருந்தார். சாத்யகியையும் கிருதவர்மனையும் ஏவலன் அறிவித்ததுமே எழுந்து வந்து கைகூப்பி வணங்கினார். இருவரையும் அழைத்துச் சென்று அமர வைத்தார்.

அங்கு மணலை அள்ளி மேடாக்கி பீடங்கள்போல உருக் கொடுத்து, அவற்றுக்கு மேல் கம்பளங்களை விரித்து

மெய்யாகவே ஓர் அவை உருவாக்கப்பட்டிருந்தது. அமர்ந்தபோது மிக உகந்த பீடங்களாக அவை இருந்தன. மூங்கில் கழிகள் நடப்பட்டு அனைத்து சுவர்களும் கண்கூடாக வரையறுக்கப்பட்டிருந்தன. இவை அனைத்தையும் ஓரிரு நாட்களில் பேரரசி உருவாக்கிக்கொண்டிருக்கிறார் என்பதை நான் உணர்ந்தேன். பெண்கள் எங்கும் ஒரே நாளில் அடுமனைகளை உருவாக்கிக்கொள்வதைப்போல அரசியர் எங்கும் சில கணங்களிலேயே அரசை உருவாக்கிவிடுகின்றனர்.

சாத்யகி தன் வருகையின் நோக்கத்தை உரைத்தார். கிருஷ்ணை அதை விழிசரித்து கேட்டிருந்தார். பின்னர் "நானே தங்களிடம் வந்து இதை கூறுவதாக இருந்தேன். இங்கு நாம் சற்று நாட்கள் தங்குவதே உகந்தது. இங்கிருந்து எங்கு செல்லவேண்டும் என்பதை முடிவெடுப்பதற்கு நாம் சற்று பொழுதை அளிக்கவேண்டும்" என்றார். "ஏனெனில் நம் எதிரிகள் என்ன முடிவெடுக்கப் போகிறார்கள் என்பதை நாம் பார்க்க வேண்டும். அவர்களில் எவர் நம்முடன் இருக்கிறார்கள் எவர் இப்போது நம்மை வெல்ல முயல்வார்கள் என்பதை உணரக்கூடிய பொழுது இது."

அந்தக் கோணத்தில் சாத்யகியும் கிருதவர்மனும் எண்ணியிருக்கவில்லை. அவர்கள் வியப்பது தெரிந்தது. "ஒருவேளை நமது எதிரிகள் நம்மை ஆதரிக்கக்கூடும். நண்பர்கள் நம்மை கைவிடவும் கூடும். எந்த நிலத்திற்குச் சென்றாலும் அங்கு நம்மை எதிர்க்கப்போவது யார், நம்முடன் இருக்கப்போவது யார் என்பது தெளிவடைந்த பின்னர் கிளம்புவதே உகந்தது. அறியா நிலத்தில் நின்று நட்பும் பகையும் அறியாது இருப்பதைபோல் இடர் ஏதுமில்லை"

என்றார் கிருஷ்ணை. "ஆம், மெய். நாங்கள் இதை எண்ணவில்லை" என்றார் கிருதவர்மன்.

"பிரபாச க்ஷேத்ரத்தைப் பற்றி இப்போதுதான் ஒற்றர்கள் சொன்னார்கள். அது எவ்வகையிலும் உகந்த இடமல்ல. அது கடலோரமாக அமைந்திருக்கிறது, ஆனால் அங்கு ஒரு துறைமுகம் அமைய முடியாது. சேற்றுப்பரப்பு அது. சேற்றுப்பரப்பை எவ்வகையிலும் நம்மால் உருமாற்றமுடியாது. ஓர் இடத்தில் எதனால் சேறு உருவாகிறதோ அங்கே அந்த அடிப்படைகள் இருக்கும் வரை சேறே உருவாகும். சேற்றில் சிறு படகுகள் மட்டுமே வரமுடியும். பெருங்கலங்கள் ஒருநாளும் அந்தக் கரையை அணுகமுடியாது" என்று கிருஷ்ணை சொன்னார்.

"அது புல்வெளி. ஆனால் ஆழமான சதுப்பு. அடியில் பாறை ஏழு கோல் ஆழத்தில் உள்ளது. ஆகவே அங்கு நாம் பெரிய கட்டடங்களை அமைக்கமுடியாது. சென்றதுமே குடில்களைத்தான் அமைக்கமுடியும். அங்கு உறுதியான பாதைகள் அமைய முடியாது. ஆகவே பெரிய சந்தைகள் அமையாது. எவ்வகையிலும் நாம் செழித்து வளர்வதற்கு உகந்த பகுதியல்ல. அங்கு செல்லலாம் என்ற எண்ணம் எவ்வண்ணம் இவர்களுக்கு ஏற்பட்டது என்று எனக்கு தெரியவில்லை. பிரபாச க்ஷேத்ரத்திற்கு செல்ல வேண்டியதில்லை என்பதே எனது முடிவு. அதை விரிவாக எழுதி சற்று முன்னர்தான் ஃபானுவுக்கு அனுப்பினேன்" என்றார் கிருஷ்ணை.

"அனுப்பிவிட்டீர்களா?" என்றார் சாத்யகி. "ஆம், நான் எனது எண்ணத்தை தெரிவிக்கவேண்டும்" என்றார் கிருஷ்ணை. "ஆனால் தாங்கள் எத்தனை தெளிவாக சொன்னாலும் தாங்கள்

சொன்னதனாலேயே அது பொருட்படுத்தப்படமாட்டாது" என்றார் சாத்யகி. "ஆம், நான் அறிவேன். என்னை சிறையிட்ட பிறகுதான் பெருவெள்ளம் அங்கு வந்தது. அந்நகரை ஒழிந்து இங்கு வந்தபோதிலும்கூட அரசரிடமிருந்து எனக்கு சிறைமீட்பு ஆணை வராதவரை நான் சிறையில் இருப்பவளாகவே கருதப்படுவேன் என்பது எனக்குத் தெரியும். ஆனால் எனது சொற்களை சொல்லியாகவேண்டும்" என்றார் கிருஷ்ணை.

"எந்த வகையிலும் பிரபாச க்ஷேத்ரம் யாதவர்கள் சென்று குடியேற உகந்ததல்ல" என்று கிருஷ்ணை தொடர்ந்தார். "இன்று யாதவர்கள் சென்று குடியேற உகந்த இடம் காடுதான். ஜாம்பவானின் நிலம் இன்னும் வெல்லப்படாததாகவே உள்ளது. அங்கு மிக எளிதில் ஓர் அரசை அமைக்கமுடியும். ஜாம்பகிரி எனும் மலை அருகே உள்ளது. அது நெடுங்காலமாக எவராலும் குடியேறப்படாதது. மலைகளில் அடுக்கடுக்காக நமது அரசை அமைத்துகொள்வோம். பல வகையிலும் அது உகந்தது. ஏனெனில் ஏற்கெனவே மலைகளில்தான் நமது அரசை அமைத்திருக்கிறோம். அந்தப் பழக்கமும் உளப்பதிவும் நம்மிடம் உள்ளது. நமது புரவிகளும் தேரும் அனைத்துமே குன்றில் அமைந்த நகருக்காக உருவாக்கப்பட்டவை."

"மேலும் இன்று நம்மிடம் இருக்கும் மிகப் பெரிய ஆற்றல் என்பது கருவூலம்தான். எவர் வேண்டுமானாலும் நமது கருவூலத்தை தேடி வரக்கூடும். தேனீ சேர்த்து வைத்திருக்கும் தேன்போல அது சூழ்ந்திருக்கும் அனைத்து அரசர்களுக்கும் அழைப்பு. ஒரு தலைமுறைக்காலம் நமது கருவூலத்தை நாம் பாதுகாத்துக் கொண்டோம் எனில் இயல்பாகவே நாம் ஒரு அரசாக ஆகிவிடுவோம். நாம் சந்தைகளை அமைக்கமுடியும். சாலைகளை விரிக்கமுடியும். இன்று நமக்குத் தேவை

அணுகமுடியாத ஓர் இடம். வெல்லமுடியாத ஒரு கோட்டை. திறந்த வெளியில் கருவூலத்தை கொண்டு வைப்பதல்ல, எவரும் அணுக முடியாத உச்சத்தில் கொண்டு வைப்பதே இன்று உகந்தது."

"இது தங்கள் முடிவென்றால் நாங்கள் ஃபானுவிடம் பேசுகிறோம்" என்றார் கிருதவர்மன். "நான் இதை அவருக்கு அனுப்பிவிட்டேன். அந்த ஓலையை இந்நேரம் அவர் படித்துவிட்டிருப்பார். அவர் முடிவெடுக்க தயங்கி இருக்கும் நேரம் இது. உடனே நீங்கள் சென்று அவரிடம் பேசலாம். சற்று வற்புறுத்தினால் அவர் இணங்குவார்" என்று கிருஷ்ணை சொன்னார். "நன்று, அரசி. தங்களின் தெளிவான பார்வை உடனிருந்தால் ஃபானுவுக்கு தாங்கள் பெருமளவுக்கு உதவியாக இருக்கக்கூடும். அதை அவர் உணரவேண்டும்" என்றபின் சாத்யகி கிருதவர்மனுடன் எழுந்தார்.

நாங்கள் வெளிவந்தோம். "உடனே ஃபானுவை நோக்கி செல்வோம். கிருஷ்ணையின் ஓலை ஃபானுவை மிரள வைக்கும். இத்தனை தெளிவாக எண்ணம் ஓட்டும் ஒருவரை தன் எதிரியாகவே கருதுவார். ஒருபோதும் அவர் அச்சொல்லை ஏற்றுக்கொள்ளமாட்டார்" என்று சாத்யகி சொன்னார். கிருதவர்மன் "இல்லை, அவ்வண்ணம் அச்சம் எழுந்தாலும் கூட இத்தருணத்தில் ஒரு முடிவையே அவன் எடுப்பான். அவனால் மற்றொரு கருத்தை எண்ணமுடியாது" என்றார். "அவன் இன்று அஞ்சிக்கொண்டிருப்பது கருவூலத்தைப்பற்றி. வெட்டவெளியில் கருவூலத்துடன் சென்று நின்றிருப்பது சாவுக்கு நிகர் என்று அரசி சொல்லியிருக்கிறார். அந்த வரியிலிருந்து அவனால் வெளியே வரமுடியாது" என்றார்.

ஃபானுவின் அவையை நெருங்கினோம். அங்கு ஃபானு தன் உடன்பிறந்தாருடன் உரத்த குரலில் பேசிக்கொண்டிருப்பதை பார்த்தோம். கிருதவர்மனையும் சாத்யகியையும் கண்டதும் ஃபானு அவரே முன்னால் ஓடிவந்து "மூத்தவரே, பிரபாச க்ஷேத்ரத்திற்கு செல்வதாக தெரிவித்திருந்தேன். இன்று சற்று பொறுத்து இங்கு வரும் ருக்மியையும் பிற அரசர்களையும் கண்டு பேசிய பிறகு கிளம்பலாம் என்ற முடிவை எடுத்திருக்கிறேன். தங்கள் கருத்தென்ன?" என்றார். "எங்கள் எண்ணமும் அதுவே. அதை சொல்லவே நாங்கள் வந்தோம்" என்று சாத்யகி சொன்னார்.

"நான் ஒன்றை எண்ணினேன், நமது கருவூலமே நமது ஆற்றல். கருவூலத்தை கொண்டுசென்று வெட்டவெளியில் திறந்து வைப்பதைப்போல் அழிவை வரவழைப்பது வேறெதுவும் இல்லை. கருவூலம் உயரமான அணுகமுடியாத இடமொன்றில் இருக்கையில் மட்டுமே நம்மால் வெல்ல முடியும். அதற்கான இடம் ஒன்றை தேர்வோம். அதுவரை இங்கு காத்திருப்போம்" என்றார் ஃபானு. "ஆம், உகந்தது அதுவே" என்றார் கிருதவர்மன்.

ஆனால் அதற்குள் முரசொலிகள் கேட்டன. "என்ன நிகழ்கிறது?" என்று ஃபானு திரும்பிப் பார்த்தார். "எல்லையில் முரசொலிகள்..." என்றான் ஃபானுமான். பிரஃபானு ஓடிவந்து "மூத்தவரே, நம் மக்கள் கிளம்பிச் சென்றுவிட்டார்கள். அவர்களை ஆணையிட்டு நிறுத்த முடியவில்லை. ஆணைமுரசுகள் வீணே ஒலிக்கின்றன" என்றார். ஃபானு இருந்த இடமே அப்பகுதியின் மேடு. அங்கு நின்றபோது தெளிவாகவே

பார்க்க முடிந்தது, பள்ளத்தில் விழிதொடும் எல்லை வரை தேங்கி நின்றிருந்த யாதவர்களின் கிழக்குப் பகுதி உருகி ஓடையென்றாகி வழிந்து நீண்டு முன் செல்லத் தொடங்கியிருந்தது.

“எங்கு செல்கிறார்கள்? எங்கு செல்கிறார்கள்?” என்று ஃபானு கூவினார். புரவியில் ஓடி இறங்கி அருகே வந்த எல்லைப்படைவீரன் “அரசே, எண்ணியிராக் கணத்தில் பெருந்திரளின் விளிம்பு உடைந்து அத்தனை பேரும் பிரபாச க்ஷேத்ரம் நோக்கி செல்லத்தொடங்கிவிட்டார்கள்!” என்றான்.

# கல்பொருசிறுநுரை - 64

**பகுதி ஆறு : படைப்புல் – 8**

பிரஃபாச க்ஷேத்ரத்திற்கான பயணம் முதலில் கட்டற்ற ஒற்றைப்பெருக்காக இருந்தது. எவரும் எவரையும் வழி நடத்தவில்லை. எவரும் தலைமை அளிக்கவும் இல்லை. ஒவ்வொருவரும் தங்களுக்குள்ளிருந்து எழுந்த ஆணையொன்றுக்கு அடிபணிந்தவர்கள்போல சென்றனர். திரள் நீரென்று ஆவதை முன்பும் பலமுறை பார்த்திருந்தவன் நான் என்றாலும் அப்போதும் திரளுயிர் என்ற ஒன்று உருவாகிவிட்டதுபோல் தோன்றியது. அந்தப் பெருக்கு ஒரு பாம்புபோல் ஒற்றை உடலாக மாறியது. சரிவுகளில் நெளிந்திறங்கியது. மேடுகளில் சுழன்று ஏறியது. தேங்கி

இரண்டாகவோ மூன்றாகவோ ஒழுகி வழி கண்டடைந்து நின்று ஒருங்கிணைந்துகொண்டது.

பிர꞉பாச க்ஷேத்ரத்துக்கான செல்வழி எவர் உள்ளத்தில் இருக்கிறது என்பதை உணர முடியவில்லை. செல்லும் வழி சரிதானா என்ற ஐயமும் இருந்தது. மூத்தவரான சுருதன் எங்கள் குழு மூத்த காவலர்தலைவனை அழைத்து "இங்கு நிலப்பகுதியை நன்கு அறிந்த ஒற்றர் சிலர் என் அறிதலில் உள்ளனர்... பெயர்களை தருகிறேன். உடனே அவர்களை அழைத்து வருக!" என்று ஆணையிட்டார். ஒற்றர்கள் பலர் அந்நிலத்தில் பரவியிருந்தார்கள் என்றாலும் அவர்களிடையே ஒருங்கிணைப்பு முற்றாக இல்லாமலாகிவிட்டிருந்தது. கிருஷ்ணைக்கு மட்டுமே முறையான தனிப்பட்ட ஒற்றர் அமைப்பு இருந்தது. அதில் பலரை சுருதனுக்கு தெரியும். அவர்களை கொண்டுவந்து ꞉பானுவிடம் சேர்த்து ஓர் அமைப்பை உருவாக்க அவர் முயன்றார்.

அவர் அந்தப் பொழுதில் மெல்லமெல்ல தன் கையில் ஆட்சியை எடுத்துக்கொள்ள முயல்வதை நான் கண்டேன். சாம்பன் ஆட்சிசெய்தபோது அவர் சாம்பனின் ஆதரவாளராக, பின் இரண்டாமிடத்தவராக ஆகி ஒரு கட்டத்தில் ஆணைகளை பிறப்பிப்பவராக மாறினார். கிருஷ்ணையால் வெளியே நிறுத்தப்பட்டார். இப்போது கிருஷ்ணையை வெல்ல ꞉பானுவை சார்ந்திருக்கிறார். ꞉பானுவிடம் உரிய கருத்துக்களை அழுத்தமாகச் சொன்னார். அப்போது ꞉பானுவால் வசைபாடப்பட்டார். ஆனால் பின்னர் ꞉பானு அங்கே வந்து சேர்ந்தபோது அவருடைய உள்ளத்தில் சுருதன் ஆற்றல்கொண்டவர் என்னும் எண்ணம் ஏற்பட்டது. சு꞉பானு அவையில் இருந்து விலகி இரு உடன்பிறந்தாருடன்

தனியாகவே வந்தார். அந்த இடத்தை கைப்பற்ற சுருதன் முயன்றார்.

காவலர்தலைவன் இரண்டு ஒற்றர்களை அழைத்துவந்தான். முதிய ஒற்றரான முத்ரன் சுருதனை வணங்கினார். "முத்ரரே, இன்று துவாரகையின் அரசராக விளங்கும் ஃபானுவின் பொருட்டு என் ஆணை இது. இந்தப் பாதையைப் பற்றி உமக்குத் தெரிந்ததை சொல்க!" என்றார் சுருதன். "ஆம், நான் இப்பகுதியில் நெடுங்காலம் பணியாற்றியிருக்கிறேன். இந்நிலத்தை நன்றாகவே எனக்குத் தெரியும்" என்றார் சுருதன். "எனில் கூறுக, இப்போது நாம் செல்லும் வழி சரிதானா? இவர்கள் தங்களை எப்படி வழிநடத்திக்கொள்கிறார்கள்? உளம்போன போக்கில் கால்களை செலுத்துகிறார்களா?" என்றார். "இல்லை இளவரசே, அதைத்தான் நான் விந்தையுடன் நினைத்துக்கொள்கிறேன். வழியை நன்கு தேர்ந்து அறிந்திருக்கும் நான் எப்படி தெரிவு செய்வேனோ அதே போன்று திசையும் நிலமும் தெரிவு செய்து அவர்கள் சென்றுகொண்டிருக்கிறார்கள்" என்றார் முத்ரன்.

"எனில் இவர்களை நன்கு அறிந்த எவரோ வழி காட்டுகிறார்களா? ஆணைகளை எவரேனும் பிறப்பிக்கிறார்களா?" என்று சுருதன் கேட்டார். "இல்லை. இத்திரளின் முகப்புக்குச் சென்று அதை நான் கவனித்தேன். எவரும் வழிகாட்டவில்லை. ஆணைகள் எதுவும் எழவும் இல்லை. ஆனால் வழி அறிந்த சிலர் தன்னியல்பாகவே முன் நிரையை அடைகிறார்கள். அவர்கள் உடல்மொழியிலும் அசைவுகளிலும் இருக்கும் உறுதி பிறர் அவரை தொடர வைக்கிறது. அவர்கள் இந்த நீளுயிரியின் உணர்கொம்புகளாக தங்களை மாற்றிக்கொண்டுவிட்டிருக்கிறார்கள்" என்றார் முத்ரன்.

“எனில் ஒன்றும் செய்வதற்கில்லை. அத்திசையை தொடர்ந்து செல்வது மட்டும்தான் வழி” என்றார் சுருதன்.

ஆனால் ஃபானுவிடம் அதையே மாற்றிச் சொன்னார். “நாம் சென்றுகொண்டிருக்கும் வழியை நான் கண்காணித்துக்கொண்டிருக்கிறேன், அரசே. உரிய ஆணைகளை திரள்முகப்புக்கு அனுப்பிக்கொண்டும் இருக்கிறேன். இதுவரை சரியான திசையிலேயே சென்றுகொண்டிருக்கிறோம்...” ஃபானு “எவரேனும் மாற்றுச் சொல் உரைத்தார்களா?” என்றார். “இல்லை, அனைவரும் திரளிலேயே மிதப்பவர்களாக வந்துகொண்டிருக்கிறார்கள். கிருஷ்ணைக்கு தெரிந்திருக்கும், பிரஃபாச க்ஷேத்ரம் செல்லும் வழிதான் இது என்று.” ஃபானு “எனில் நன்று... நமக்காக ஊழ் தெரிவுசெய்த இடம்போலும் இது” என்றார். பின்னர் “இனி எவரும் நான் பிழையாக அழைத்துச் செல்கிறேன் என்று சொல்லிவிட முடியாதல்லவா? இது மக்களின் தெரிவு” என்றார்.

“இல்லை, அவ்வாறல்ல” என்று சுருதன் சொன்னார். “இது மக்களின் தெரிவு என்பது நமக்கே தெரியும். மக்கள் இது உங்கள் தெரிவென்று நினைக்கிறார்கள். நாம் ஆணையிட்டோம் என பிற மைந்தர் எண்ணுகிறார்கள். அவ்வண்ணமே நீடிக்கட்டும். இந்தப் பெருந்திரள் மேல் முழுமையான கட்டுப்பாடு உங்களுக்கே என்றிருக்கட்டும். அது நமக்கு பலவகையிலும் நன்று... நம்மை பிறர் அஞ்சுவார்கள். நாம் இவர்களை நடத்திக்கொண்டுசெல்கிறோம் என்பது இதற்குள் மற்ற அரசர்களிடம் சென்று சேரும். அவர்கள் நம்மை அரசன் என மதிப்பார்கள்...” ஃபானு “ஆம், அதுவும் உண்மை” என்றார். “ஆகவே முகப்பில் நம் ஆணைமுரசுகள் ஒலிக்க ஏற்பாடு செய்திருக்கிறேன். நம் ஆணைமுரசுகளால் அவர்கள்

செலுத்தப்படுவதாக தோன்றும்... அது செல்லும் வழியையே முரசுகள் சொல்கின்றன என்று எவருக்கும் தெரியப்போவதில்லை" என்றார் சுருதன்.

பாலைநிலத்தினூடாக ஏழு நாட்கள் சென்றோம். பகலில் வெயில் ஏறுகையில் ஆங்காங்கே தங்கி, துணியாலும் மூங்கில் தட்டிகளாலும் கூரைசாய்வுகள் அமைத்துக்கொண்டு அவற்றுக்குள் புகுந்து துயின்றோம். கிளம்பிய ஒரு நாளிலேயே அந்நிலத்தில் செல்வதற்கான வழிமுறைகளை ஒவ்வொருவரும் கற்றுக்கொண்டார்கள். மணலை ஆழமாகத் தோண்டி ஓரிருவர் புகுந்து கொள்ளும் அளவுக்கு துளைபோன்ற பள்ளங்களை உருவாக்கினர். அப்பள்ளங்களுக்கு மேல் தட்டிகளாலோ துணியாலோ கூரையிட்டனர். உள்ளே இறங்கி படுத்துக் கொண்டால் பாலையில் எரியும் கொடுவெயிலை தவிர்க்க முடிந்தது. நெஞ்சளவு ஆழத்து மண்ணை தோண்டிவிட்டால் அடியிலிருக்கும் மண் தண்மை கொண்டது என்பதை அறிந்தனர். மென்மையான மணலை எங்கே கண்டடைவது என்று உணர்ந்தனர்.

பின்னர் ஒரு நாழிகைக்குள் மொத்தத் திரளும் மண்ணுக்குள் புகுந்துவிடும் அளவுக்கு இரண்டு ஆள் ஆழமான குழிகளை அமைத்தனர். அதற்குள் மூச்சுக்காற்று உள்ளே வரும்படி வாசல்களை அமைக்க பழகினர். கூரையாக இட்ட தட்டியின்மீது தடிமனாக மணலை அள்ளிப்போட்டுக்கொண்டால் உள்ளிருப்பவர் இன்னும் குறைவாகவே வெப்பத்தை உணரமுடியும். சிலர் மூங்கில்தட்டியை வளைத்து குழலென அமைத்து அதை பாலைமணல் சரிவில் பதித்து உள்ளிருக்கும் மணலை எடுத்து எடுத்து அதை உள்ளே செலுத்தி பொந்து ஒன்றை உருவாக்கி அதற்குள் இறங்கி உள்ளே

படுத்துக்கொண்டனர். மணலுக்கு அடியில் பல்லாயிரம் பேர் படுத்து துயில வெளியே அனலென எரியும் வெயிலும் சுட்டுப்பழுத்த மணல் அலைகளும் பரவியிருந்ததை ஒருநாள் பார்த்தேன். வியப்புடன் அது பாலைவன எலிகளின் வழிமுறை என்று புரிந்துகொண்டேன்.

பாலைவனச்சோலைகள் அரசருக்கும் அரசனின் விலங்குகளுக்கும் மட்டும் உரியதாக இருந்தன. சோலையை ஒட்டிய இடங்களில் மணல் ஆழம் நீரின் தண்மை கொண்டிருந்தது. சோலைக்குள்ளேயே அரசருக்கான குடில்களை மண்ணை அகழ்ந்து ஆழத்திலேயே அமைத்தனர். ஒருநாள் காலையில் அனைவரும் மண்ணுக்குள் அடங்கிய பின்னர் ஓசையின்மையை உணர்ந்து எழுந்து சோலையிலிருந்து வெளிவந்து சுற்றும் நோக்கிய ஃபானு திகைத்து "என்ன நிகழ்கிறது? எங்கு சென்றுவிட்டார்கள் அனைவரும்?" என்றார். விழிதொடும் தொலைவு வரை ஒவ்வொருவரும் கொண்டு வந்த பொருட்கள் மட்டும் சிதறிக்கிடந்தன. விலங்குகள்கூட மண்ணுக்குள் சென்றுவிட்டிருந்தன. "விட்டுச்சென்றுவிட்டார்களா? எப்படி? எங்கே?" என்று ஃபானு பதறிப்போய் கேட்டார். அவருள் என்றுமிருக்கும் அச்சம் அது என்று தெரிந்தது.

"அனைவரும் மணலுக்குள் புகுந்துவிட்டார்கள்" என்று பிரஃபானு சொன்னார். "மணலுக்குள்ளா? எவ்வாறு?" என்று வியப்புடன் ஃபானு கேட்டார். "அது பாலையில் வாழும் எலிகளின் நெறி. இங்குள்ள அனைவருமே அதைத்தான் செய்கின்றனர். மானுடருக்கு எப்போதுமே சிற்றுயிர்கள்தான் வழிகாட்டி" என்று ஃபானுமான் சொன்னான். "துவாரகையில் இவர்கள் பறவைகளாக வாழ்ந்தனர், இப்போது எலிகளாக்கிவிட்டோம்"

என்றார் ஃபானு. ஃபானுமான் "அவர்கள் சிறகு கொள்ளும் காலம் வரும், மூத்தவரே" என்றான். சுருதன் "ஒவ்வொன்றிலும் அதற்கான மகிழ்ச்சி உள்ளது" என்றார். "வானில்லாத வாழ்க்கை!" என்று ஃபானு சொன்னார். "நாம் கதிரவனையே பார்க்காதவர்களாக ஆகிவிட்டோம்!"

தொடங்கிய மறுநாளே பயணப்பொழுது இயல்பாக வகுக்கப்பட்டது. பயணம் முழுக்கமுழுக்க இரவில்தான். பகலில் முழுமையான ஓய்வு. அந்த ஒழுங்கை உடலும் ஓரிரு நாட்களில் கற்றுக்கொண்டது. இரவில் பாலைநிலம் குளிர்ந்திருந்தது. குளிர்காற்று வீசியது. விண்ணில் விண்மீன்களின் ஒளிப்படலம். கண் அந்த வானொளிக்கு பழகியபோது கூழாங்கற்கள் கூட தெளிவாகத் தெரிந்தன. விடாய் மிகவில்லை. மூன்று இடங்களில் அமர்ந்து உணவு உண்டு புலரிவரை சென்றோம். அந்தத் தொலைவை பகலில் கடக்கவே முடியாது.

புலரிக்கு முன்னரே பகலணையும் இடத்தை கண்டுகொண்டோம். இரவெல்லாம் இருளை நோக்கி நடந்துவிட்டு வந்தால் புலரிவெளிச்சம் கண்களை கூசவைத்து பணியாற்ற முடியாமல் ஆக்குகிறது என்று அறிந்தோம். ஆகவே விடிவெள்ளி தோன்றியதுமே பயணத்தை நிறுத்திவிட்டு ஒரு சாரார் குழிகளை தோண்டத் தொடங்கினோம். ஒரு சாரார் அடுமனை கூட்டினர். இருள் விலகிக்கொண்டிருக்கையிலேயே உணவுண்டு துயில்கொண்டோம். ஒளியில் விழித்துக்கொண்டால் இரவின் இருளுக்கு விழி பழக பொழுதாகியது. ஆகவே கதிர் நன்கணைந்த பின்னரே விழித்தெழுந்தோம். உணவு உண்டபின் நடை தொடங்கினோம். இருளிலேயே இருந்த விழிகள்

கூர்கொண்டபடியே வந்தன. நாங்கள் இருளுக்குள் வாழும் உயிர்களென மாறிக்கொண்டிருந்தோம்.

ஸாமி மரத்தின் இலைகளை வெட்டி சருகுகளையும் கலந்து சற்றே உப்புநீர் கலந்து ஊறவைத்து அளித்தால் சுமைவிலங்குகள் அவற்றை உண்பதை கண்டுகொண்டோம். சற்றே மாவும் சேர்த்து அவற்றுக்கு அளித்தால் அது போதுமான உணவு. அதன்பின் புல்லுக்கோ பிறவற்றுக்கோ தேடல் இருக்கவில்லை. வெயிலை முழுமையாகவே தவிர்த்துவிட்டமையால் நீரின் தேவை மிகமிகக் குறைந்தது. வியர்வை இல்லாமலாகியபோது உணவில் உப்பை குறைத்து நீர் அருந்துவதையும் குறைக்க முடிந்தது. மெல்ல இரவின் உலகை அறியலானோம். விண்மீன்களால், திசைமாறும் காற்றுகளால், சிற்றுயிர்களால் ஆன முற்றிலும் புதிய ஓர் உலகம். "கந்தர்வர்களே, தேவர்களே, உடனிருங்கள். உங்கள் உலகில் வாழ்கிறோம் நாங்கள்!" என்ற பாணனின் பாடல் மக்களிடையே அன்றாடமென ஒலித்தது.

நாளடைவில் அப்பயணம் பின்னர் புதிய கண்டடைவுகள் இல்லாமல், புதிய துயரங்கள் இல்லாமல், ஓர் அன்றாடமென நிகழத்தொடங்கியது. அப்போது பூசல்கள் நிகழத்தொடங்கின. சாம்பன் எங்கள் அணிநிரைக்கு மிகப் பிந்தி தனியாக வந்துகொண்டிருந்தார். பிரத்யும்னனின் படைகளே முகப்பில் சென்றன. நடுவில் ஃபானுவின் படைகள் சென்றன. பின்னர் ஃபானு முந்த பிரத்யும்னன் இரண்டாவதாக வந்தார். மூன்று படைகளும் ஒற்றை உடலெனச் செல்லும் அந்தப்

பெருக்கின் உள்ளே மூன்று பகுதிகளாகவே நீண்டன. “எறும்புபோல. மூன்று தனி உடல்கள் வேறு வழியின்றி ஒன்றையொன்று கவ்விக்கொண்டது போன்றது எறும்பின் உருவம்” என்று மூத்தவர் சுருதன் கூறினார்.

பின்னர் ஃபானுவின் படைகளுக்கு இடையே பூசல்கள் தொடங்கின. அந்தகர்களும் விருஷ்ணிகளும் போஜர்களும் ஹேகயர்களும் ஒருவரை ஒருவர் கசந்தும் இளிவரல் செய்தும் விலக்கியும் பேசத்தொடங்கினர். ஏன் அந்த உணர்வுகள் ஏற்பட்டன என்பதை நான் கூர்ந்து பார்த்துக்கொண்டிருந்தேன். முதலில் தோன்றியது, தங்கள் இடர்களுக்கான பொறுப்பை இன்னொருவர் மேல் சுமத்துவதில் ஒவ்வொருவருக்கும் இருக்கும் ஆர்வத்தாலேயே என்று. விருஷ்ணிகள் செய்த பழியால் யாதவர்கள் அனைவரும் உயிர்கொடுக்க வேண்டிவந்தது என்று ஹேகய குடிதலைவர் ஒருவர் சொன்னார். அச்சொல் அவரிடமிருந்து நோய் என அனைவருக்கும் பரவியது. விருஷ்ணிகள் செய்த பிழையல்ல அது, ஷத்ரியக் குருதியினராலேயே அது நிகழ்ந்தது. விதர்ப்பர்களின் பழி அது என்று விருஷ்ணிகள் கூறினார்கள். ஷத்ரியர்களே அனைத்துப் போர்முனைகளிலும் முன்னின்றவர்கள் ஆகவே அவர்களே கொல்லவும் கொல்லப்படவும் தகுதியானவர்கள் என்று விருஷ்ணிகள் மறுமொழி கூறினார்கள்.

அந்தகர்கள் விருஷ்ணிகளுக்கு மேலாக துவாரகையின் அரசப்பொறுப்புக்கு எப்படி வந்தனர் என்று விருஷ்ணி குலத்தலைவர்கள் அலர் தூற்றினர். “மகளிர் வழி முடிகொள்பவனைப் போல் இழிந்தவன் எவன்?” விருஷ்ணிகளின் தலைவன் அமைத்த மாநகரை அந்தகர்கள்

அழித்துவிட்டனர் என்று வசைபாடினர். அந்தகக் குடியின் மைந்தராகிய ஃபானு அரசருக்குரிய நிமிர்வு இல்லாமல் முடிவெடுப்பதற்கு பிந்தியமையாலேயே துவாரகையின் குடிகளில் பெரும்பகுதி உயிரிழக்க நேரிட்டது. அவர்களின் களஞ்சியங்களையும் கருவூலச் செல்வங்களையும் கடல் கொண்டுசென்றது. இன்று இறந்துகிடக்கும் எங்கள் மைந்தர்களை அள்ளி நெஞ்சோடு அணைக்கும் தீயூழ் எங்களுக்கு அமைந்ததற்கு வழி வகுத்தவர் அவர். அச்சொல்லுடன் ஹேகயர்களும் போஜர்களும் இணைந்துகொண்டது அந்தகர்களை கொந்தளிக்கச் செய்தது.

"அந்தகர்கள் ஒருபோதும் அரசாளக் கூடாது என்பது எங்கள் குடிக்கூற்று" என்றனர் விருஷ்ணிகள். "இந்நகரை நிறுவியவரின் முதல் மைந்தர் அவர்" என்றார்கள் அந்தகர்கள். "ஆம், ஆனால் தன் அழகாலும் ஆணவத்தாலும் அவர் மேல் செல்வாக்கு கொண்ட அந்தகக் குலத்து பெண்ணின் வழியாக அவர் குருதிமுதன்மை பெற்றார்" என்றனர் விருஷ்ணிகள். "சத்யபாமையை அரசி அல்ல என்கிறீர்களா?" என்றனர் அந்தகர். "அவரை அரசியென குடியவைக்கு வெளியே இளைய யாதவர் காட்டியதே இல்லை. அரசியென அமைந்தவர் ருக்மிணி" என்றனர் ஷத்ரியர். "ஆகவே ருக்மிக்கு முடியை அளித்துவிடுவோமா?" என்று அந்தகர் ஏளனம் செய்தனர்.

அப்பூசல்களுக்குப் பின்னால் இருப்பது வெறும் சலிப்புதானோ என்று நான் ஐயுற்றேன். அந்தப் பயணத்தில் முதலில் வெற்றுடலாக தங்களை ஆக்கிகொண்டு, ஒருவரை ஒருவர் இணைத்துக்கொண்டு, ஒற்றைப் பேருரு என ஆகி ஒழுகிச் செல்வதே ஒவ்வொருவரும் சந்தித்த அறைகூவலாக இருந்தது. அவ்வாறு அவர்கள் இயல்பாக மாறினார்கள். எறும்புகள்

உடலால் பாலம் கட்டி நீர்ப்பெருக்கை கடப்பதுபோல, உடலை ஏணியாக்கி படிகளாகி ஏறிச்செல்வதுபோல், உடலையே அரண்மனையும் கோட்டையுமாக ஆக்கிக்கொள்வதுபோல் பாலையில் திகழ்ந்தனர். ஆனால் உடல் முற்றாகப் பழகி தன்னியல்பாக அனைத்தையும் செய்யத் தொடங்கியதுமே உள்ளம் பிரிந்து தனக்கான இடத்தை தனி வழியை நாடியது. அது வெறுப்பினூடாகவே தன் இருப்பை அடையாளம் காட்டியது.

பிறரை வெறுக்கையிலேயே ஒருவர் தனக்கென ஒரு தனியிருப்பு உண்டென்பதை உணர்கிறார். தன்னை திரளென்று உணர்ந்தவர் பின்னர் யாதவர் என்று உணர்கிறார், பின்னர் அந்தகர் என்றோ போஜர் என்றோ உணர்கிறார். அவ்வாறு தன்னை குறுக்கிக்கொண்டு வந்து தன்னிடம் முடிகிறார். தன் குடித்திறனை, மூதாதையர் வரிசையை சொல்லிக்கொண்டிருக்கிறார். விடியலில் பாலையில் அமர்ந்து வளைகள் தோண்டிக்கொண்டிருக்கும் மக்களினூடாக கடந்து செல்கையில் ஒவ்வொருவரும் தங்கள் குலப்பெருமையை, குடித்தொன்மையை, மூதாதையர் மரபையே வெவ்வேறு சொற்களில் கூறிக்கொண்டிருப்பதை பார்த்தேன். சிலர் உரக்க கூவினர். சிலர் பூசலிட்டனர். சிலர் பாடினர். ஒவ்வொருவரும் வெவ்வேறு சொற்களில் அதையே கூறிக்கொண்டிருந்தனர்.

ஒருவர் மரபை பிறிதொருவர் சிறுமை செய்தார். அதற்கு மறுமொழியாக தங்கள் மரபை கூவிச்சொன்னார். அவ்வாறு கூவிச்சொல்லும் பொருட்டு பிறர் தங்களை சிறுமை செய்யவேண்டும் என்று எதிர்பார்த்தனர். நட்புடன் ஒருவரோடொருவர் பேசிக்கொண்டிருந்தவர்கள்கூட தங்கள் பெருமையையே கூறிக்கொண்டிருந்தனர். பூசல்கள்

பெருகிக்கொண்டே இருந்தன. நான் சுருதனிடம் "இங்கு ஒவ்வொருவரும் தங்கள் குடிப்பெருமையையே சொல்லி பூசலிட்டுக்கொண்டிருக்கிறார்கள்" என்றேன். "அது நிகழட்டும். அதுவே அவர்களை மானுடராக்குகிறது. இல்லையேல் வெறும் எறும்புத்திரளென அவர்கள் ஆகிவிடுவார்கள்" என்று சுருதன் கூறினார். "இந்தப் பூசல்களெல்லாம் வெறும் நாப்பயிற்சியாகவே இருக்கின்றன. எவரும் எவரையும் தாக்கிக்கொள்ளாதவரை இதனால் இடரொன்றுமில்லை."

"அல்ல, இவர்கள் சொல்லிச் சொல்லி பகைமையை பெருக்குகிறார்கள். அப்பகைமையையே மேலும் எண்ணி எண்ணி பெருக்கிக்கொள்கிறார்கள். இந்த வெறுமையில் அவர்களுக்கு ஆற்றுவதற்கு தொழிலேதும் இல்லை, ஆக்குவதற்கும் ஏதுமில்லை. எனவே இங்கு எதிர்மறை எண்ணங்களே பெருகுகின்றன. ஒருபோதும் நாம் இதை ஒப்ப இயலாது. இவ்வாறு பெருகும் வெறுப்பு உறுதியாக போராக வெடிக்கும், ஐயம் தேவையில்லை" என்று நான் சொன்னேன். "ஐயம் வேண்டாம், இவர்கள் சொல்லிச் சொல்லி உமிழ்ந்துகொண்டிருக்கிறார்கள். செல்லும் நிலத்தில் இந்த அடையாளங்கள் எவருக்கும் எஞ்சாது. அங்கே இவர்கள் வெறும் கையும்காலும்தான். நாடோடிகளுக்கு ஏது குலம்?" என்றார் சுருதன். "மாறாக பெருக்கில் இறங்கும்போது தெப்பத்தை தழுவிக்கொள்வதுபோல இவர்கள் குலங்களை பற்றிக்கொள்வார்கள். பூசலிடுவார்கள்" என்றேன்.

"என்ன செய்யலாம் அதற்கு?" என்று சுருதன் கேட்டார். "அவர்களை தனித்தனியாக பிரிக்க வேண்டும். அந்தகர்களுக்கும் விருஷ்ணிகளுக்கும் முதன்மையான போராட்டம் நடந்துகொண்டிருக்கிறது. ஹேகயர்களுக்கும்

போஜர்களுக்கும் தொன்மையான பகையொன்று இருக்கிறது. விருஷ்ணிகள் பிற அனைவருடனும் போரிட்டுக்கொண்டிருக்கிறார்கள். விருஷ்ணிகளாகவும் போஜர்களாகவும் அந்தகர்களாகவும் இவர்கள் ஒருங்கு திரள்வதை தடுக்கவேண்டும். இவர்களைக் கலந்து ஒவ்வொருவரும் தனித்தனி யாதவர்களாக உணர்வதற்கு வழி அமைக்கவேண்டும்" என்றேன். "அது இயல்வதென்று எண்ணுகிறாயா?" என்றார் சுருதன். "குலமில்லையேல் இவர்கள் சிதறிவிடுவார்கள். உளமிழந்து பித்தர்களாக மாறிவிடுவார்கள்."

"இவர்கள் ஒற்றை விசையெனத் திரண்டு பணியாற்றுவதற்கு, ஒருவரோடொருவர் ஊக்கி நம்பிக்கை கொண்டு இந்நெடுவழிப் பயணத்தை மேற்கொள்வதற்கு வழி அமைப்பது அவர்களின் குலம்தான். அவர்களை தனித்தனியாக பிரித்தால் ஒவ்வொருவரும் உடல் சோர்ந்துவிடுவார்கள். அவர்களால் இப்பணியை செய்ய இயலாது. நாம் தங்க முடிவெடுத்த ஒரு நாழிகைக்குள்ளேயே ஒவ்வொருவரும் வெவ்வேறு பணிக்குழுக்களாக பிரிந்துவிடுகிறார்கள். சிலர் மணலை அள்ளுகிறார்கள், சிலர் கூடாரங்களை கட்டுகிறார்கள். சிலர் உணவு சமைக்கத் தொடங்கிவிடுகிறார்கள். ஓரிரு நாழிகைக்குள்ளேயே உணவுண்டு மகளிருடனும் குழந்தைகளுடனும் பொந்துகளுக்குள் புகுந்து துயிலத்தொடங்கிவிடுகிறார்கள், இதை கலைத்து மீண்டும் ஒரு அமைப்பை இப்போது உருவாக்க இயலாது" என்றார்.

நான் அதை உண்மையென்று உணர்ந்தேன். ஆனால் வேறு வழியில்லை என்று சொன்னேன். "வேறு வழியில்லை என்று நானும் சொல்லவருகிறேன். அவர்களை கலைத்தால் இப்பணி நிகழாது என்பது இருக்கட்டும். கலைப்பதை அவர்கள்

எதிர்த்தால் என்ன செய்வது? அவர்களை எவரைக்கொண்டு கலைப்பது? அவர்களைக் கொண்டே அவர்களை அடக்க முடியுமா என்ன? இந்தப் பெருந்திரளில் இன்று ஏவலரும் காவலரும் குடிகளும் கலந்து ஒன்றாக இருக்கிறார்கள். இங்கு அரசப்படை ஒன்று இல்லை என்பதை மறக்கவேண்டியதில்லை" என்றார் சுருதன். நான் ஒன்றும் சொல்லாமல் திகைப்புடன் பார்த்துக்கொண்டிருந்தேன். பின்னர் நெடுமூச்சுடன் "உண்மை" என்றேன்.

தீயவை நிகழுமென்ற அச்சம் என்னை ஆட்டிப்படைத்துக்கொண்டே இருந்தது. எக்கணமும் யாதவர்களுக்குள்ளே ஒரு பூசல் வெடிக்கக்கூடும். ஒவ்வொருமுறை பேச்சுகள் உச்சத்தை அடையும்போதும் இதோ படைக்கலங்களுடன் எழுந்து தாக்கப்போகிறார்கள் என்று எண்ணி நான் நடுங்கினேன். ஆனால் பொங்கி எழுந்து ஓர் உச்சத்தை அடைந்து ஏதோ இறையாணைக்கு கட்டுப்பட்டவர்கள்போல் ஒவ்வொருவரும் அடங்கி பின்னகர்வதை கண்டேன்.

பின்னர் நான் அதை புரிந்துகொண்டேன். ஒவ்வொரு தரப்பினரிடமும் பூசலை எழுப்புவதற்கான சிலர் இருந்தனர். எந்நேரமும் கொதிநிலையில் இருப்பவர்கள், ஒரு சிறு பூசலையே கடுமையான சொற்களால் உடல் கொந்தளிக்கும்படி மாற்றுபவர்கள், ஒவ்வொரு சொல்லுக்கும் இழிபொருள் கண்டடைபவர்கள். எப்போதும் பூசலை அவர்கள் முன்னெடுத்தனர். அதற்கென்றே அவர்கள் துணிந்து நின்றனர். அந்தத் திரளின் ஒருவகையான உணர்கொம்புகளும் நச்சுக்கொடுக்குகளுமாக அவர்கள் இருந்தனர். பூசல்களை அவர்களே தொடங்கினர், வளர்த்தனர். பிறகு ஒவ்வொருவராக

அதில் ஈடுபட அது நுரைத்து மேலெழுந்தபோது அதுவரை அப்பூசல்களுக்கு அப்பால் இருந்த சிலர் எழுந்து வந்து பூசல்களை தணித்தனர்.

எப்போதும் அவர்களால்தான் பூசல் தீர்த்து வைக்கப்பட்டது. அவர்கள் பெரும்பாலும் முதியோர்கள். அனைத்திலும் ஆர்வமிழந்து தங்களுக்குள் சொற்களோடு தனித்திருப்பவர்கள். அவ்விலக்கத்தாலேயே அத்திரள் மேல் ஆணை கொண்டவர்களாக ஆனவர்கள். ஓங்கிய குரலில் "நிறுத்துங்கள்! என்ன இது? அறிவிலிகளே, போரிட்டு சாகவா போகிறீர்கள்? உங்கள் மைந்தர்களையும் பெண்டிரையும் இந்தப் பாலையில் சாகவிடப்போகிறீர்களா என்ன?" என்று அவர்கள் கூறியதுமே ஒவ்வொருவரும் தங்கள் நிலை உணர்ந்து மீண்டனர். முணுமுணுப்புகளுடன், கசப்புச் சொற்களுடன், காறித் துப்பியபடியும் முகங்களை இளித்து ஒருவருக்கொருவர் பழிப்புக் காட்டியபடியும் விலகிச்சென்றனர்.

அப்பூசல் ஓர் எல்லை கடந்த பிறகே அதை அணைப்பவர் எழுந்தனர். அந்த எல்லையை அது கடந்த பின்னர்தான் அது அணைக்கப்பட இயலும். பூசலில் ஒவ்வொருவரும் தங்கள் உள ஆற்றலை வீணடித்த பின்னர் மேலும் எழ முடியாது திகைத்து நிற்கும்போதுதான் அதை நிறுத்துபவர்களின் சொல் ஏற்கப்பட்டது. அதை அத்தீயை அணைக்கும் அம்முதியவர்களும் அறிந்திருந்தனர். எண்ணி அறிந்திருக்கவில்லை, இயல்பாகவே அப்போதுதான் அவர்கள் உள்ளம் அங்கே சென்றது. இந்த அமைப்பு இப்படித்தான் செயல்படும் என்ற உணர்வை நான் அடைந்தேன். இந்தக் காடு தன்னைத்தானே பற்றவைத்துக்கொள்ளவும்

அணைத்துக்கொள்ளவும் பயின்றிருக்கிறது. அது என்னை சற்று ஆறுதல்படுத்தியது.

# கல்பொருசிறுநுரை - 65

**பகுதி ஆறு : படைப்புல் – 9**

பதினாறாவது நாள் பாலையின் மறு எல்லையை நெருங்கிக்கொண்டிருந்தோம். விடிவெள்ளி எழத்தொடங்கியிருந்தது. தங்குவதற்கான மென்மணல்குவைகள் கொண்ட இடம் ஒன்றை கண்டடைந்து, அங்கே அமைவதற்கான ஆணையை கொம்பொலிகளினூடாக அளித்து, ஒவ்வொருவரும் மணலில் நுரை ஊறிப் படிவதுபோல் மெல்லிய ஓசையுடன் அடங்கத் தொடங்கியிருந்தனர். வளை தோண்டுபவர்கள் அதற்கான தொழிற்கலன்களுடன் கூட்டமாகச் சென்றனர். பெண்கள் அடுமனைப் பணிக்கு இறங்கினர். குழந்தைகளை உலருணவும் நீரும் அளித்து துயில வைத்தனர்.

இரவில் ஓசையில்லாமல்தான் நடந்துகொண்டிருப்போம். இருட்டுக்குள் ஒரு கரிய நதி ஒழுகிச் செல்வதுபோல என்று தோன்றும். அல்லது மரக்கிளைகளில் காற்று செல்வதுபோல. காலையில் அமையப்போகும் இடம் கண்டடையப்பட்டதுமே ஓசை எழும். முதலில் அது கலைவோசையாக, பின்னர் பேச்சொலிகள் கலந்த முழக்கமாக, பின்னர் ஓங்கி ஓங்கி பெருகும் ஓசையலைகளாக எழும். பின்னர் மெல்ல அடங்கத் தொடங்கும். ஒவ்வொருவரும் உண்டு உறக்கம் நோக்கி

செல்வார்கள். விரைவிலேயே அங்கே ஒரு பெருந்திரள் இருப்பதற்கான சான்றே இல்லாமல் அனைவரும் மறைந்துவிட்டிருப்பார்கள்.

அன்று அந்தக் கலைவோசை அடங்கிக்கொண்டே செல்கையில் முகப்பு முனையில் உரத்த குரலில் பூசலிடும் ஓசை எழுந்தது. சிலர் ஓடினார்கள். சிலர் கூச்சலிட்டார்கள். பெண்களும் குழந்தைகளும் அழுதனர். நான் எழுந்து என்னருகே நின்ற காவலனிடம் "என்ன? என்ன?" என்றேன். அவன் "நோக்கிவருகிறேன், இளவரசே" என்று முன்னால் ஓடினான். இன்னொருவன் என்னை நோக்கி வந்து "முகப்பில் தென்மேற்கு முனையில் அந்தகர்களுக்கும் ஹேகயர்களுக்குமிடையே பூசல் எழுந்துள்ளது..." என்றான். "எதன் பொருட்டு?" என்றேன். "அறியேன். பூசல்கள்..." என்று அவன் சொன்னான்.

நான் என் புரவியை ஆற்றுப்படுத்தி அதற்கு ஸாமி மரஇலைகளை உப்பு கலந்த மாவுடன் உணவாக வைத்துக்கொண்டிருந்தேன். பூசல் அதுவாகவே அமைந்துவிடும் என்று எண்ணினேன். அந்த நீண்ட பாலைநிலப் பயணத்தில் துவாரகையில் இருந்த பூசல்களும் கசப்புகளும் பொருளற்றதாக பின்னகர்ந்துவிட்டிருந்தன என்று எனக்கு தோன்றியது. துவாரகையே ஏதோ பழைய நினைவெனத் தோன்றியது. ஆனால் அங்கு பூசல் ஓங்கிக்கொண்டே இருப்பதை உணர்ந்தேன். அதன் பின் அதை தணிக்கும் குரல்கள் எழுந்திருக்கலாம். ஓசைகள் நின்றன. செவிகளாலேயே அவர்கள் ஒவ்வொருவரும் பிரிந்து விலகி அகல்வதை அறிந்து கொண்டிருந்தேன்.

எண்ணியிராக் கணத்தில் அலறலோசை கேட்டு திரும்பிப்பார்த்தேன். எவரோ எவரையோ கடுமையாகத்

தாக்கிவிட்டார்கள் என்று தெரிந்தது. "அந்தகர்கள் கொன்றுவிட்டார்கள்! போஜர்களை அந்தகர்கள் கொன்றுவிட்டார்கள்!" ஒரு மின்னல் திரள் மேலே பாய்ந்ததுபோல மொத்த யாதவக் குடியும் ஒரு திடுக்கிடலை அடைந்தது. பின்னர் என்ன நிகழ்ந்தது என்று தெரியவில்லை. ஒவ்வொருவரும் வெறிகொண்டு ஒவ்வொருவரையும் தாக்கிக்கொள்ளத் தொடங்கினார்கள். படைக்கலங்களாலும் தொழிற்கலன்களாலும் போரிட்டனர். அருகிலிருந்த அனைத்துப் பொருட்களையும் எடுத்து வீசினர். ஒருவர் மேல் ஒருவர் பாய்ந்து பற்களாலும் நகங்களாலும் கடித்தனர்.

முதலில் தங்கள் எதிரிகளை அவர்கள் தாக்கிக்கொண்டார்கள். அவ்வாறு தாக்குவதை பலமுறை அவர்கள் உள்ளத்தில் நிகழ்த்திக்கொண்டிருந்ததனால், கனவுகளில் அது பலமுறை நிகழ்ந்துவிட்டிருந்ததனால், வெறிகொண்டபோது அது கணந்தோறும் மிகுந்து எழ அதை இயல்பாக செய்தார்கள். பாய்ந்து குரல்வளைகளைக் கடித்து குருதியுடன் நரம்புகளை பிய்த்தெடுத்தார்கள். அறைந்து செவிகளையும் மூக்கையும் கடித்து துப்பினார்கள். கைகளை முறுக்கி ஒடித்தனர். உயிர்க்குலைகளை கவ்வி கசக்கினர். பெரும்பாலானவர்களிடம் கொல்லும் படைக்கலம் எதுவும் இல்லை. துவாரகையில் இருந்து கிளம்பும்போது மிகக் குறைவாகவே எங்களிடம் படைக்கலங்கள் இருந்தன. எளிய யாதவரும் வேளாண்குடியினரும் படைக்கலம் பயின்றவர்கள் அல்ல என்பதனால் அவர்களுக்கு அவை அளிக்கப்படவில்லை.

உண்மையில் படைக்கலங்களை வைத்திருந்தவர்களுக்கு ஒரு கட்டுப்பாடு இருந்தது. வெறி கொண்டு தாக்கியவர்கள் எந்த படைக்கலமும் இல்லாதவர்கள். அவர்கள் அதை தங்கள்

வெறியால் ஈடுகட்டினர். ஒரு மனிதன் இன்னொரு மனிதனை கொல்ல உள்ளமே போதுமானது என்று அப்போது கண்டேன். ஒரு கணத்தில் என்னைச் சூழ்ந்து வெறிகொண்ட முகங்களும், பித்தெடுத்த கண்களும், வலிப்பெழுந்த உடல்களுமாக நான் அன்றுவரை கண்டுவந்த மக்களே பாதாள உலகங்களிலிருந்து எழுந்து வந்த பேயுருவங்களாக மாறுவதை கண்டேன். குருதி மணம் எழுந்தது. அது ஆணையிடும், கவரும், பித்தெடுக்க வைக்கும் மணம். தெய்வங்களுக்கு திமிரேற்றுவது, மானுடரை பற்றி எரியவைப்பது. குருதி மணம் ஒவ்வொருவரையும் விலங்குகளாக்கியது. பலிகொள்ளும் தெய்வங்களாக்கியது.

ஃபானு தன் குடிலிலிருந்து வெளிவந்து "என்ன நடக்கிறது? பூசலா? உடனடியாக அமையச் சொல்லுங்கள். இங்கு பூசலுக்கு ஒப்புதல் இல்லை. பூசல்களில் ஈடுபடுவோர் கடுமையாக ஒடுக்கப்படுவார்கள். இது எனது ஆணை" என்றார். பிரஃபானு சலிப்புடன் "எவரிடம் ஆணையிடுவது?" என்றார். "நமது படையினரை அவர்களை அடக்கச் சொல்லுங்கள்" என்றார் ஃபானு. "அரசே, இப்போது படையென இருப்பது கருவூலத்தைக் காத்துவரும் இந்த ஆயிரம் பேர்தான். இவர்களை இங்கிருந்து அனுப்பினால் நாம் பாதுகாப்பற்றவர்கள் ஆகிவிடுவோம்" என்றார் பிரஃபானு.

"என்ன செய்வது? பிறகென்ன செய்வது இப்போது?" என்று ஃபானு பதறினார். "அவர்களே அடித்துக் கொன்று விலகட்டும். இத்திரளில் எத்தனை பேர் செத்துவிழுகிறார்களோ அத்தனை நன்மையென்று கொள்வோம். நம்மிடம் இருக்கும் உணவு போதாமலாகுமோ என்ற ஐயம் நமக்கு இருந்தது. அவர்கள் அவ்விடருக்கு தாங்களே விடை காண்கிறார்கள். இதில் உயிரிழப்பவர்கள் நமக்கு உணவை மிச்சம் ஆக்குகிறார்கள்

என்று கொள்வோம்" என்றார். "அரசனென இதை பார்த்து நிற்பது பதற வைக்கிறது" என்றார் ஃபானு. "அரசர்களை இது பதற வைக்காது. குடித்தலைவர்களையே இது பதற வைக்கும்" என்று பிரஃபானு சொன்னார்.

கூச்சலிட்டும் கொன்றும் அலறியும் செத்தும் கொப்பளித்துக்கொண்டிருந்த கும்பல் மிக விரைவிலேயே உணர்ச்சிகளை இழந்தது. உடலாற்றல் கூடவே சரிந்தது. போர்வீரர்கள் என்பவர்கள் சினமின்றி போராடக் கற்றவர்கள். ஆகவே அவர்களால் நெடுநேரம் போரிட முடியும். தங்களை ஒற்றைத்திரள் என்று ஆக்கிக்கொண்டவர்கள், ஆகவே ஒருவர் களைப்புற இன்னொருவர் மேலெழ விசை குறையாது அவர்களால் நெடுந்தொலைவு செல்லவும் முடியும். பெருந்திரள் மிக விரைவிலேயே உடலாற்றலையும் உணர்வாற்றலையும் இழந்தது. பெருந்திரளால் மிகக் குறைவான பொழுதே அழிவை உருவாக்க முடியும் என்பதை அப்போது கண்டேன்.

ஒரு நாழிகைக்குள் ஒவ்வொருவரும் விலகி அங்கங்கே படிந்தனர். புண்பட்டவர்களும் இறந்தவர்களும் பிரித்தறிய முடியாதபடி கிடந்தனர். கொன்றவர்களும் கொல்லப்பட்டவர்களும் ஒன்றேபோல மணலில் வெற்றுடல்களாக விழுந்து கிடந்தனர். விழிதொடும் எல்லைவரை நெளிந்துகொண்டிருந்த புழுக்கூட்டங்களைப்போல் அத்திரளை பார்த்தேன். விருகன் புரவியில் வந்து பாய்ந்திறங்கி "என்ன நிகழ்கிறது அங்கே? எதிரிகளா?" என்றார். "ஒன்றுமில்லை, நெடும்பொழுதாக அவர்கள் வெறும் உடல்களாக வந்துகொண்டிருந்தார்கள். இப்போது உள்ளங்களாக வெளிப்பட்டுவிட்டார்கள். மீண்டும் உடல்களாக மாறுவார்கள்" என்று பிரஃபானு சொன்னார்.

மெல்ல அவர்கள் அடங்கினர். ஒவ்வொருவரும் நிலைமீண்டனர். பெருமூச்சுடன் தனிமையுடன். என்ன நிகழ்ந்தது என்றே தெரியாத திகைப்புடன். பெண்கள் மட்டும் கதறிக்கொண்டிருக்க ஆண்கள் மணலில் விண்ணையோ மண்ணையோ வெறித்து நோக்கி அமர்ந்திருந்தனர். அன்று அத்திரளில் ஐந்தில் ஒருவர் கொல்லப்பட்டனர். அவ்வுடல்களுடன் அங்கே தங்கமுடியாதென்பதனால் உடனடியாகக் கிளம்பி அடுத்த சோலைக்கு செல்ல ஃபானு ஆணையிட்டார். அவ்வெண்ணத்தை அவருக்கு சொன்னவர் பிரஃபானு. "இங்கிருந்து நாம் விலகிச்செல்ல வேண்டும். ஒன்று, இவ்வுடல்களைவிட்டுச் செல்வதற்காக. இன்னொன்று, இங்கிருந்து நம்முடன் எழுந்து வருபவர்கள் மட்டும் வந்தால் போதும் என்பதற்காக" என்றார்.

ஃபானு "புண்பட்டவர்கள்..." என்று சொல்லத் தொடங்க பிரஃபானு "புண்பட்டவர்கள், நடக்க முடியாதவர்கள் இங்கேயே கைவிடப்படவேண்டும். அவர்கள் இங்கேயே இறந்துபோவது நமக்கு நல்லது. நம்மால் நோயாளிகளை சுமந்துகொண்டு பயணம் செய்ய இயலாது. அவர்கள் அங்கே வந்து நமக்கு சுமையாக ஆகக்கூடும்" என்றார். நான் "ஆனால் அவர்கள் நம்மவர்" என்றேன். "அங்கே துவாரகையில் பேரலையில் பல்லாயிரம் பேர் இறந்தனர். அந்த உடல்களை அப்படியே மணலில் புதையவிட்டுவிட்டு நாம் கிளம்பினோம். அவர்களில் மேலும் சிலர் இறந்தால், கைவிடப்பட்டால் என்ன குறைகிறது?" என்று பிரஃபானு கேட்டார்.

உடனே கிளம்பும்படி ஃபானுவின் ஆணை வந்தது. அது முரசொலியாக எழுந்ததும் அனைவரும் திடுக்கிட்டனர். ஆணைதானா என்று குழம்பினர். உறுதியாக முரசுகள்

ஆணையிட்டுக்கொண்டே இருந்தன. அவர்கள் எழுந்து நிரைகொண்டனர். பொருட்களையும் குழந்தைகளையும் எடுத்துக்கொண்டனர். புண்பட்டவர்களும் நோயுற்றவர்களும் கூடவே எழுந்து நின்று கூச்சலிட்டனர். அவர்களின் உற்றார்கள் அவர்களை அழைத்து வருவதற்கு முயன்றனர். ஆனால் அரசப்படையும் உடல்நலம் கொண்டவர்களும் விரைந்து விலகிச்செல்ல ஆணை எழுந்தது. அவர்கள் விரைந்து செல்ல செல்ல மற்றவர்கள் கூச்சலிட்டனர்.

வேறுவழி இருக்கவில்லை. மிக விரைவில் கதிர் மேலெழுந்து வெப்பம்கொள்ளத் தொடங்கிவிடும். அதன்பின் நடக்க முடியாது. உடனே அடுத்த சோலைக்கு சென்றாக வேண்டும் என்பதனால் ஒவ்வொருவரும் முடிந்த விரைவில் சென்றனர். அவர்களின் விசையைக் கண்ட பின்னர் மற்றவர்கள் தங்கள் உற்றவர்களை ஆங்காங்கே அப்படியே விட்டுவிட்டு ஓடிவந்தனர். காலொடிந்தவர்கள் தசைகிழிந்தவர்கள் தங்களை விட்டுவிட்டு செல்ல வேண்டாம் என்று கைநீட்டி கூச்சலிட்டு அழுதனர். "அழைத்துச் செல்லுங்கள், தந்தையே!" என்று மைந்தர்கள் அலறினர். "மைந்தா, நான் உடன் வருகிறேன்!" என்று தந்தையர் கூவினர்.

சற்று நேரத்தில் தொலைவில் இருந்து பார்த்தபோது அங்கு உடல்கள் சிதறிக் கிடந்தன. அவ்வுடல்களிலிருந்து தவழ்ந்தும் உந்தியும் தங்களை முன்னெழுப்பிக்கொண்ட உடல்கள் நெடுந்தொலைவு வரை வழிந்து வந்திருந்தனர். தளர்ந்து நடந்து வந்தவர்களின் நிரை எங்களுக்குப் பின்னால் வந்துகொண்டிருந்தது. நடைதளராதவர்கள் முன்னால் நடந்து சென்றனர். திரும்பிப் பார்த்த ஃபானு "குறைந்துகொண்டே

வருகிறோம்" என்றார். பிரஃபானு "ஆம், ஆனால் வருபவர்கள் அனைவரும் உடலூக்கம் கொண்டவர்கள்" என்றார்.

பிரஃபாச க்ஷேத்ரம் மேலும் இரண்டு நாள் நடையில் வந்து சேர்ந்துவிடும் என்று சுருதன் கூறினார். அங்கு சென்று சேரும்போது கிளம்பியவரில் மூன்றில் ஒரு பங்கினரே இருப்பர். "பசியில், நோயில், பூசலில் இரு பங்கினரை இழந்திருக்கிறோம். ஒருவகையில் நன்று. எத்தனை குறைவானவர்கள் செல்கிறோமோ அத்தனை நிறைவானவர்கள் நாம். நமது செல்வம் அங்கு மேலும் பல ஆண்டுகள் வாழ்வதற்குப் போதுமானது. அங்கு உணவில்லையென்றாலும் கூட பதினைந்து நாட்களுக்கு மேல் நம் உணவைக்கொண்டு அங்கு வாழமுடியும்" என்றார் பிரஃபானு.

இரவெல்லாம் நடப்பதும் பகலெல்லாம் ஓய்வெடுப்பதுமாக எங்கள் பயணம் நீடித்தது. நிலக்காட்சி மாறத்தொடங்கியது. அது எங்களுக்கு தெளிவுறத் தெரியவில்லை. ஏனென்றால் மிகமிக மெல்ல அது மாறிக்கொண்டிருந்தது. வானில் பறவைகளின் எண்ணிக்கை மிகுந்தது. பறவைகள் எங்கள் அருகே வந்து இறங்கி எழலாயின. பின்னர் நீராவி கொண்ட காற்று பச்சிலை மணத்துடன் வந்தது. நிலத்தில் மெல்லிய தீற்றல்போல ஆங்காங்கே புற்கள். புல்லை கொறிக்கும் சிற்றுயிர்கள். ஒவ்வொன்றாக நாங்கள் புல்வெளியை நெருங்குவதை காட்டின. ஆனால் அந்த அறிதல் சிலருக்கே இருந்தது.

குறும்புதர்களும் தழைந்த மரங்களும் கொண்ட புல்நிலம் வரத்தொடங்கியபோதும் கூட எங்கள் ஒழுங்கு பெரிதாக மாறவில்லை. இரவில் விழித்திருக்கவும் ஊக்கம் கொண்டு நடக்கவும் மானுடரும் விலங்குகளும் பயின்றுவிட்டிருந்தனர். இரவில் அனைவருக்குமே நன்றாக விழிகள் தெரியத்தொடங்கின. இரவு பயணத்தின் விசையும் தொடர்ச்சியும் பகலில் அமைவதுமில்லை. ஆகவே இரவிலேயே தொடர்ந்து செல்லலாம் என்று படைத்தலைவர்கள் முடிவெடுத்தனர்.

பாலைநிலங்களைக் கடந்ததும் புல்வெளிகளில் வண்டிகளின் சகடங்கள் அவ்வப்போது சேற்றில் பதிந்தன. ஏழெட்டு முறை சகடங்கள் மண்ணில் தாழ்ந்து வண்டிகளைத் தூக்கி கொண்டு செல்லவேண்டும் என்ற நிலை வந்தபோது ஒரு வழி கண்டுபிடிக்கப்பட்டது. மரப்பலகைகளையும் தடிகளையும் விரைந்து அடுக்கி ஒரு நீண்ட சாலை போடப்பட்டது. அச்சாலையினூடாக வண்டிகள் முன்னால் சென்றன. பின்னர் அச்சாலைகளை பெயர்த்து எடுத்து முன்னால் கொண்டு சென்றனர். அது வண்டிகள் எங்கும் புதையாமல் இயல்பாக உருண்டு செல்ல வழி வகுத்தது. விலங்குகள் களைப்படையாமல் இருக்கவும் உதவியது. பின்னர் அதற்கும் ஒரு வழி கண்டுபிடித்தனர். பகலில் பாதை அமைப்பவர்கள் முன்னரே சென்று நெடுந்தொலைவு வரைக்கும் மரப்பாதைகளை அமைத்தனர். அதை தொடர்ந்து இரவில் நாங்கள் கிளம்பிச்சென்றோம்.

முதல் சிலநாள் பயணத்திற்குப் பின்னர் அப்பயணத்தை ஒவ்வொருவரும் மகிழத் தொடங்கியிருந்தனர். அதிலிருந்த அச்சமும் தயக்கமும் ஐயங்களும் அகன்றன.

ஒவ்வொருவருக்கும் அதில் செய்வதற்கு ஏதோ இருந்தது. அந்தியில் ஒரு இடத்தில் படுத்ததுமே இரு பக்கங்களிலாக பிரிந்து சென்று பறவைகளை பிடிப்பதற்கு, வலைவிரிப்பதற்கு திறன்கொண்டவர்கள் உருவானார்கள். பாலைவனப் பறவைகள் கூட்டம் கூட்டமாக தங்குமிடங்களை அவற்றின் எச்சங்களைக் கொண்டே கண்டுபிடிக்கத் தொடங்கினார்கள். உணவில் பெரும்பகுதி பாலைவனப் பறவைகளாலானதாக ஆகியது.

பிரஃபாச க்ஷேத்ரத்திற்கு சென்றபின்னும் பல மாதங்களுக்கு எங்களிடம் உணவு எஞ்சியிருக்கிறது என்ற செய்தி ஒவ்வொருவரையும் மகிழ வைத்தது. பிரஃபாச க்ஷேத்ரத்திலும் வேட்டை விலங்குகள் உண்டு, அருகே சிந்து ஓடுவதனால் மீன் பிடிக்கமுடியும். கடலில் இருந்தும் மீன் பிடிக்க முடியும் என்ற செய்தி ஒவ்வொருவருக்கும் நிறைவளித்தது.

மரப்பலகைகளை அடுக்கி இரவு தங்குவதற்கான பாடி வீடுகளை அமைப்பதும், குடில்களை தட்டிகளாக தனித்தனியாக செய்துகொண்டு சிறிய மூங்கில் உருளைகளால் சகடங்கள் அமைத்து அவற்றை அதன்மேல் ஏற்றி தள்ளிக்கொண்டு செல்வதும், தேவையான இடங்களில் நிறுத்தி நான்கு பக்கமும் இழுத்து விரிய வைத்து விரைவில் குடிலாக்கிக்கொள்வதும் பயிலப்பட்டது.

பிரஃபாச க்ஷேத்ரத்தை நெருங்கியபோது முடிவிலாது அவ்வண்ணமே சென்றுகொண்டிருக்கும் ஒரு பெருந்திரளாக நாங்கள் மாறிவிட்டிருந்தோம். முதல் புலரியில் பிரஃபாச க்ஷேத்ரத்திற்கு ஒரு நாழிகைத் தொலைவில் வந்தபோது கடற்பறவைகளின் தொடர்குரலைக் கேட்டோம். முதலில் என்ன என்று ஏன் என்று தெரியாமல் துவாரகை நினைவில் வந்து அறைந்தது. துவாரகையின் காட்சிகள் கனவுகள்போல்

ஓடத்தொடங்கின. பின்னர்தான் அந்நினைவையும் கனவையும் எழுப்புவது அந்த ஓசை என்று தெரிந்தது. அதன் பின்னரே அது கடற்காகங்களின் பெருங்குரலென்று தெளிந்தது.

அப்போது நான் மூத்தவர் ஃபானுவின் அருகில் இருந்தேன். "கடற்காகங்களா?" என்று அவர் மலர்ந்த முகத்தோடு என்னை நோக்கி சொன்னார். "அருகிலிருக்கிறது கடல் எனில் நாம் பிரஃபாச க்ஷேத்ரம் வந்துவிட்டோம் என்றுதான் பொருள்." நான் "இங்கிருந்து இன்னும் ஒரு நாழிகைத் தொலைவிலேயே பிரஃபாச க்ஷேத்ரம் உள்ளது. பிரஃபாச க்ஷேத்ரத்திலிருந்து சிந்துவின் புறநீர் தேக்கத்தின் வழியாகவே நாம் கடலுக்குள் செல்ல முடியும்" என்று சொன்னேன். "சிந்து கடலுக்கு நிகரானது. கடலின் ஒரு கை அது" என்று ஃபானு சொன்னார்.

பிரஃபாச க்ஷேத்ரத்தை அடைந்துவிட்டோம் என்ற செய்தி அனைவரையும் சென்று அடைந்தபோது ஒவ்வொருவரும் மேலும் ஊக்கம் கொண்டனர். முதற்புலரியில் பெரும்பாலானவர்கள் நடைதளர்ந்து மெல்ல மெல்ல ஊர்ந்துகொண்டிருப்பார்கள். எவரும் அறிவிக்காமலேயே அச்செய்தி ஒவ்வொருவரையும் சென்று தொட எங்களைச் சூழ்ந்து இருளின் அலைகளென வந்துகொண்டிருந்த பெருந்திரளில் ஊக்கம் எழுவதை நான் அசைவெனக் கண்டேன். மெல்ல அந்த ஓசை பெருகி அலையலையென எழுந்து சூழ்ந்துகொண்டது.

மலைவெள்ளம் செல்வதுபோல வழி நிறைத்து முன்னால் சென்றது மக்கள் திரள். எவராலும் வழிநடத்தப்படாததால் ஆணைகள் அனைத்தையும் கடந்து தன்னைத்தானே ஒழுங்கமைத்துக்கொண்டதாக அது மாறிவிட்டிருந்தது. நெடுங்காலத்திற்கு முன்பெனத் தோன்றிய ஒரு காலத்தில்

துவாரகையிலிருந்து கிளம்பும்போது அனைத்து ஆணைகளையும் கடந்து மக்கள் தாங்களே பெருகி எழுந்ததுபோல அப்போதும் நிகழ்ந்தது.

விண்ணில் மீன்கள் நிறைந்திருந்தன. தொலைவில் விடிவெள்ளி தனித்து மின்னிக்கொண்டிருந்தது. கடலிலிருந்து வந்த காற்றில் நீர்வெம்மையை உணர்ந்தோம். சிலர் அழுதனர். சிலர் வான்நோக்கி கைவிரித்தனர். ஒருவரை ஒருவர் தழுவிக்கொண்டார்கள். இன்னமும் எவரும் அந்நிலத்தை பார்க்கவில்லை. ஆனால் அங்கே உள்ளம் சென்றுவிட்டிருந்தது. தந்தையே, அங்கே ஒருவரேனும் அத்தருணத்தில் துவாரகையை நினைவுற்றார்களா என்று நான் எண்ணினேன். துவாரகை என்ற சொல்லை ஒருவர் சொன்னாலும் உளம் மலர்ந்திருப்பேன். ஆனால் ஒருவரும் கூறவில்லை.

நெஞ்சில் அறைந்துகொண்டு "துவாரகை துவாரகை!" என்று கூவவேண்டும் என்று நினைத்தேன். என் நரம்புகள் உடைந்துவிடுமளவுக்கு உள்ளம் இறுகி இறுகிச் சென்றது. அதன் உச்சியில் மெல்ல தளர்ந்தேன். பின்னர் புன்னகைத்தேன். இந்தப் பெருக்கு ஒரு கலத்தில் இருந்து இன்னொரு கலத்திற்கு எண்ணை விழுதுபோல ஒழுகிச் சென்றுகொண்டிருக்கிறது. என்றும் அது அவ்வாறுதான் இருந்துள்ளது. நேற்றைக் களைந்து நாளை நோக்கி சென்றுகொண்டே இருக்கிறது. காலத்தில் நகர்கையில் நம் கண்ணுக்குத் தெரிவதில்லை. இடத்தில் அந்நகர்வு நிகழ்கையில் நமக்குத் தெரிகிறது.

அல்லது ஒரு சிறு பஞ்சுவிதை. காற்றில் பறந்து அலைக்கழிந்து சுழன்று சென்று தனக்கான மண்ணில் படியவிருக்கிறது. அந்த மண்ணில் அதற்கான உணவும் நீரும் இருக்கவேண்டும். அனைத்து அலைக்கழிப்புகளும் விலக நான்

விழிநீர் கோத்து மெய்ப்பு கொண்டேன். “தெய்வங்களே, மூதாதையரே! காத்தருள்க!” என்று என்னுள் கூவினேன்.

# கல்பொருசிறுநுரை - 66

**பகுதி ஆறு : படைப்புல் – 10**

பிரஃபாச க்ஷேத்ரத்தின் தென்கிழக்கு எல்லையென அமைந்த மண்மேட்டை அடைந்து மேலேறத் தொடங்கியதும் அனைவரும் தயங்கினர். அதுவரை உள்ளம் எழுந்து எழுந்து முன்செலுத்திக்கொண்டிருந்தது. மேடேறுவதன் சுமையால் மூச்சு இறுகி உடல் களைத்தபோது உள்ளமும் தளர்ந்தது. முன்னால் சென்றவர்கள் தயங்க பின்னால் சென்றவர்கள் வந்துகொண்டிருக்க அந்தத் திரள் தன்னைத்தானே முட்டிச் சுழித்து பக்கவாட்டில் விரித்துக்கொண்டது.

இருளுக்குள் நீர் வந்து நிறைவதுபோல அம்மேட்டை கீழிருந்து நிரப்பி முடி வரை சென்றோம். அதன் மேற்குச்சரிவு முழுக்க மக்கள் இடைவெளியில்லாமல் நிறைந்திருந்தனர். அதன் உச்சியில் நின்றிருந்த உருளைப்பாறை ஒன்றின்மேல் கால் மடித்தமர்ந்து ஃபானு மேற்கே தெரிந்த இருண்ட வெளியை பார்த்துக்கொண்டிருந்தார். அது அப்போது மென்மையான நீராவியாக, பசுந்தழை வாசனையாக மட்டுமே தெரிந்துகொண்டிருந்தது. வானின் ஒளியில் ஆங்காங்கே இருந்த நீர்ப்படலங்கள் மின்னின.

இளையோர் ஃபானுவைச் சூழ்ந்து நின்றிருந்தார்கள். எவரும் எதுவும் பேசவில்லை. விழிகளால் அங்கே தங்களை நிரப்பிக்கொள்ள முயன்றவர்கள் போலிருந்தனர். ஃபானு பெருமூச்சுகளாக விட்டுக்கொண்டிருந்தார். அவர் உள்ளம் எங்கிருக்கிறது என்று எனக்கு புரிந்தது. பிரஃபானு ஃபானுவிடம் "இங்கே நாம் நிலைகொண்டது நன்று, மூத்தவரே. இது நாம் வளரவிருக்கும் நிலம். ஆனால் இங்கு இப்போது நமக்கு என்ன காத்திருக்கிறதென்பதை அறியோம். விடிந்தபின் நன்கு நோக்கி உள்ளே நுழைவதே உகந்தது" என்றார்.

அந்தச் சொற்களால் ஃபானு கலைந்து திரும்பிப் பார்த்தார். அவருக்கு ஒன்றும் புரியவில்லை என்று தோன்றியது. ஃபானுமான் பிரஃபானு சொன்னதை மீண்டும் சொன்னான். ஃபானு "ஆம், அது நன்று. அவ்வாறே செய்வோம்" என்றார். அப்போதும் அவருக்கு ஒன்றும் புரிந்திருக்கவில்லை. பிரஃபானு "நிமித்திகர்கள் பொழுது கணித்து சொல்லட்டும். முதல் நற்காலை நூல்முறைப்படி வைத்து நாம் உள்ளே நுழைவோம். நாம் அரசர் என்று இந்நிலத்திற்குள் நுழையவேண்டும். இதற்குரிய தெய்வங்கள் நம்மை அவ்வண்ணமே அறியவேண்டும்" என்றார்.

"ஆம், தெய்வங்கள் அறியவேண்டும்" என்றார் ஃபானு. "எனில் நிமித்திகர்களை அழைத்து வரச்சொல்கிறேன்" என்றார் பிரஃபானு. "ஆம், அழைத்து வாருங்கள்" என்று ஃபானு சொன்னார். ஏவலர்கள் அவ்வாணையை ஏற்று தலைவணங்கினர். நான் "இத்திரளில் ஒவ்வொருவரும் அடையாளம் அழிந்து கலந்துவிட்டிருக்கின்றனர். நிமித்திகர்களை எப்படி தேடுவது?" என்றேன். "அனைவரும் சொல்லிழந்து அமைதியாக நின்றிருக்கிறார்கள். கூவி

அழைத்தால் நிமித்திகர்கள் மறுமொழி சொல்வார்கள்" என்றார் பிரஃபானு. ஏவலர் தலைவணங்கி அப்பால் சென்றனர்.

பொழுது மெல்ல விடிந்து வந்தது. வானில் முகில்கள் தெளியத் தொடங்கின. கீழ்ச்சரிவில் சிவப்பு திரண்டது. கடலோரங்களில் மட்டுமே தெரியும் ஆழ்சிவப்பு அது. சில மலர்களில் மட்டுமே அவ்வண்ணம் தெரியும். கண்கள் துலங்கி வந்தன. காட்சி தெளிந்தபோது எங்களைச் சுற்றி மானுடத்தலைகளாலான ஏழு குன்றுகள் இருப்பதை நாங்கள் கண்டோம். மரங்களோ புல்லோ பாறைகளோ தெரியாத மானுட அலைகள். ஓசையற்று செறிந்து எழுந்து வான்கீழ் நின்றிருந்தன.

ஃபானு திரும்பிப்பார்த்து "நமது குடி! நம் மக்கள்!" என்றார். அவர் முகம் மலர்ந்திருந்தது. கைகளை விரித்து "வெல்லும் குடி! அழியாக் குடி!" என்று சொன்னபோது அவர் நெஞ்சு விம்முவதை என்னால் உணரமுடிந்தது. ஏனோ அந்த உணர்வை அப்போது என்னால் பகிர்ந்துகொள்ள இயலவில்லை. அவர்கள் ஒற்றை உடல் என ஒருவருக்கொருவர் அழுத்திக்கொண்டு அங்கு செறிந்திருந்தார்கள். ஆனால் ஒருவரை ஒருவர் முந்தவும் வெல்லவுமே உள்ளங்கள் முயன்றுகொண்டிருந்தன. உடல்கள் பருப்பொருளால் ஆனவை என்பதனால்தான் அவர்கள் அங்கு தேங்கியிருந்தார்கள். அவர்களுக்குள் இருக்கும் உணர்வு அவர்களை ஒன்றாக்கவில்லை. ஒவ்வொருவரையும் தனித்தனியாக பிரிக்கிறதென்றே எனக்கு தோன்றிக் கொண்டிருந்தது.

எங்களுக்கு முன்னால் எழுந்த நிலத்தின் மீது காலை வெண்முகில் பரவியிருந்தது. நிலத்தில் இருக்கும் முகில்களுக்கே உரிய பாற்படலம் போன்ற வெண்மை. புல்வெளியிலிருந்து பகல் முழுக்க எழுந்த நீராவி குளிர்ந்து

நீராக மாறி அதன் மேலேயே படிந்து உருவான முகில் அது. அப்பாலிருந்து கடலும் அங்கே நீராவியை பொழியக்கூடும். பிரஃபாச க்ஷேத்ரம் முன்னிரவுகளில் மூச்சுத்திணற வைக்கும் அளவுக்கு நீராவிப் புழுக்கம் கொண்டிருக்கும் என்றும் பின்மாலையிலேயே உடலில் வியர்வை ஊறி எரிச்சல் எழும் என்றும் சிற்றுண்ணிகள் கடிக்கத் தொடங்கும் என்றும் ஒவ்வொரு நாளும் மழைக் கருக்கல்போல வானம் ஒரு பாவனை காட்டி, சிறுதுளிச் சாரலை காட்டி மீண்டும் வெளிக்கும் என்றும் நான் எண்ணிக்கொண்டேன். அது யமுனைக்கரை புல்வெளிகளின் இயல்பு.

அப்பால் இருக்கும் கடலிலிருந்து நீராவி எழுந்து வானில் பறந்துகொண்டே இருக்கும். ஆனால் மழையாகாமல் கீழிருந்து காற்று அதை தள்ளி அகற்றும். முதல் மழைக்காலத்தில் பெருங்காற்று கடலில் இருந்து நிலத்தின்மேல் பரவும். அலையோசை காதில் விழும். கோடையிடியும் மின்னலும் வானை நிறைக்கும். அங்கே மழை வஞ்சம் கொண்டதுபோல் மண்ணை அறையும். புதர்கள் குமுறிக்கொந்தளிக்கும். புல்லை நிறைத்து நீர் பெருகி ஒழுகும். நீர் வடியும்போது கோதப்பட்ட புற்களின் மேல் சருகுகள் படிந்திருக்கும். அங்கே விசிறிகள் இன்றி வாழமுடியாது. சிற்றுயிர்கள் பெருகி வாழும். ஆகவே தூபப் புகை சூழாமல் இருக்கமுடியாது.

நுரையென புல் பெருகுவதால் ஆநிரைகள் செழிக்கும். ஆனால் மானுடர் வெவ்வேறு தோல்நோய்களால் துன்புறுவார்கள். சற்றே எச்சரிக்கையுடன் இல்லையென்றால் மூச்சு நோயும் குடல் நோயும் பெருகும். கொசுக்களும் ஈக்களும் வண்டுகளும் என சிற்றுயிர்களால் எப்போதும் சூழப்பட்டிருப்பார்கள். உணவுப்பொருட்களை எப்போதும் மூடியே வைக்கவேண்டும்.

ஆறிப்போனவற்றை உண்ணக்கூடாது. நான் புன்னகைத்தேன். அங்கே நான் முழு வாழ்க்கையையும் முடித்துவிட்டிருந்தேன். தனியாக, எனக்குள். திரும்பி சூழ்ந்திருந்த திரளைப் பார்த்தபோது ஒரு நாணத்தை அடைந்து விழி திருப்பிக்கொண்டேன்.

வெயில் வெம்மைகொண்டபோது வெண்முகில் திரை நிலத்தில் இருந்து மேலெழுந்தது. கடற்காற்றால் மெல்ல மெல்ல அகற்றப்பட்டது. வெயில் எழுந்து நிலம் சூடாகும் தோறும் மேலே தூக்கப்பட்டது. அந்தப் பெருவிரிவில் திரைவிலகி ஒழுகிச் சுருண்டு அகல நிலம் தெளியத் தொடங்கிய காட்சி உளம்விரியச் செய்வதாக இருந்தது. செழித்து நீலமோ என இலைப்பசுமை கொண்ட புல் நிறைந்த வெளி சிற்றலைகளாக விழி தொடும் எல்லை வரை நிறைந்திருந்தது. அதற்கப்பால் பச்சை வரம்பென மிகப் பெரிய கோட்டை ஒன்று இருந்தது.

"அது என்ன?" என்று ஃபானு என்னிடம் கேட்டார். "தென்னையா? ஈச்சையா?" நான் கூர்ந்து பார்த்தபோது அது உயரமற்ற குறுங்காட்டுச் செறிவென்றே தோன்றியது. "மூங்கில்களா?" என்றார் ஃபானு. என்னால் சொல்லக்கூடவில்லை. "ஒற்றர்களை வரச்சொல்" என்றார் ஃபானு. சற்று நேரத்தில் வந்து தலைவணங்கிய முதிய ஒற்றனிடம் "அது என்ன, அங்கே மறு எல்லையில் வேலியிட்டிருப்பது?" என்றார். அவன் "அரசே, அது ஒருவகை நாணல். நம் கைகளின் கட்டைவிரலைவிட தடிமனான உறுதியான தண்டுகள் கொண்ட நாணல்கள் அவை. அக்கரையில் அவைதான் இடைவெளியில்லாமல் செறிந்திருக்கின்றன" என்றான்.

"நாணலா?" என்று ஃபானு கேட்டார். "ஆம், அது சற்றே உப்பு கலந்த சதுப்பில் மட்டுமே வளர்கிறது. இந்தப் புல்வெளிச்

சதுப்பிற்கு அப்பால் கடல்நீர் வந்து கலக்கும் உப்புச் சதுப்பு உள்ளது. அதற்கு அப்பால் மணலும் அதற்கப்பால் கடல் விளிம்பும் உள்ளன. அந்த உப்புச் சதுப்பு மிக ஆழமானது. அதில் இறங்கினால் மனிதர்கள் முற்றாகவே புதைந்துவிடக்கூடும். நெடுந்தொலைவிற்கு கடலையும் இப்புல்வெளியையும் பிரிப்பது அது. கடலிலிருந்து வரும் உப்புநீர்த் துளிகளை அச்சதுப்பும் நாணலும் தடுத்து விடுவதனால்தான் இப்புல்வெளி இத்தனை பசுமைகொண்டு செழித்திருக்கிறது. வேறெங்கும் கடலோரமாக இத்தனை பெரிய புல்வெளியை நாம் பார்க்க முடியாது" என்றான்.

"ஆம், இந்த நாணல்களைப்பற்றி எவரோ எப்போதோ சொன்னார்கள்" என்றார் ஃபானு. "அங்கே மணலில் ஆமைகள் வந்து முட்டையிடுகின்றன. பாறைகளில் சிப்பிகள் செறிந்துள்ளன. ஆழமற்ற புற நீரில் மீன்கள் நிறைந்துள்ளன" என்று ஒற்றன் சொன்னான். "சதுப்பில் செல்லும் திறன் கொண்ட பன்றிகள் சில சென்று அந்த நாணலின் இனிய தண்டுகளை உண்பதுண்டு. யானைகளும் அரிதாக அத்தனை தொலைவு சென்றுவிடுகின்றன."

நான் அக்கணம் என் தலைக்குள் ஒரு குளிர்ந்த ஊசி நுழைவதுபோல் உணர்ந்தேன். அந்த நாணல்களைப் பற்றித்தான் சூதர்கள் பாடினார்கள், விஸ்வாமித்ரரின் தீச்சொல்லால் பிறந்த இரும்புத் தடியின் துகள்கள் அலைகளில் மிதந்துசென்று படிந்து முளைத்தவை அந்நாணல்கள். கூரிய படைக்கலங்களாகி யாதவக் குடியை அழிக்கவிருப்பவை. நான் எண்ணிக்கொண்டிருக்கையிலேயே ஒற்றன் சொன்னான் "அந்நாணல்கள் மிகமிக உறுதியானவை. ஆனால் எடையற்றவை. கூர்முனையாக செதுக்கினால் ஆற்றல்மிக்க

அம்புகளாக ஆக்கலாம். இவ்விடத்தை நாங்கள் முதலில் பார்க்கவந்தபோதே அதை செய்து பார்த்தோம். மிகமிகச் சிறப்பானவை.”

ஆனால் ஃபானு அவ்வுணர்வுகளை அறியவில்லை. “நிமித்திகர்கள் வரட்டும். இந்நிலத்திற்குள் நாம் எழுவதற்கான பொழுதென்ன என்று பார்க்கவேண்டும்” என்றார். பிரஃபானு “நிமித்திகர்கள் வந்துகொண்டிருக்கிறார்கள், மூத்தவரே” என்றார். நிமித்திகர்கள் ஏவலரால் அழைத்துவரப்பட்டனர். அவர்கள் அங்கேயே புற்பரப்பை ஒதுக்கி அமர்ந்து தோலாடையை விரித்து அதன்மேல் கோடு கிழித்து களம் வரைந்து கூழாங்கற்களை பரப்பி குறிநோக்கத் தொடங்கினார்கள். இடையில் கை வைத்தபடி அவர்கள் கணிப்பதை ஃபானு நோக்கி நின்றார். பிற இளையோர் அவரைச் சூழ்ந்து நின்றனர்.

வெயில் ஏறிக்கொண்டே வந்தது. வெண்முகில்திரை மேலெழ மேலெழ அந்நிலம் மேலும் தெளிவாகத் தெரிந்தது. ஒவ்வொரு புல்லிதழும் தனித்தனியாகத் தெரியும்படி அது அருகே எழுந்து திரையெனத் தொங்கியது. நிலத்திற்குள் நுழையும் தவிப்புடன் அரசரின் ஆணைக்காக காத்து நின்றிருந்த யாதவப் பெருந்திரள் எழுப்பிய ஓசை வலுத்தபடியே வந்தது. அத்திரளே காற்றில் அலைவுறுவதுபோல் அந்த ஓசை எழுந்தமைந்தது.

“இந்த நிலம் மெய்யாகவே உகந்ததுதானா?” என்று சுருதன் கேட்டார். எரிச்சலுடன் திரும்பி “இல்லையென்றால் என்ன செய்யப்போகிறீர்கள்? திரும்பிச்செல்லலாமா?” என்று ஃபானு கேட்டார். “அல்ல, இது புதையும் சதுப்பென்று தோன்றுகிறது. இதில் இப்போது நாம் சிறிய குடில்களை அமைக்க முடியும். ஆநிரைகள் இதில் பெருகவும் கூடும். ஆனால் ஒரு பெருநகரை இதில் அமைக்க முடியாது” என்றார் சுருதன்.

“எனில் அது மிதக்கும் பெருநகராக அமையட்டும். கல்லால் அமைக்கவேண்டியதில்லை, மரத்தால் அமைப்போம். அங்கே மரத்தெப்பங்களை அடுக்கி அவற்றின்மேல் ஒரு நகரத்தை அமைப்போம். இது நம் நிலம். இங்கு எதைக்கொண்டு நகரமைப்பது என்பதை பின்னர் முடிவு செய்வோம்” என்றார் ஃபானு. பிரஃபானு “மூத்தவரே, இது உகந்தது அல்ல என்றால் பிறிதொரு இடத்தை தெரிவுசெய்யும் வரை, ஆநிரைகள் பெருகி வலுவான யாதவக் குடிகளாக நாம் ஆகும் வரை, இங்கிருப்போம். பின்னர் இங்கிருந்து அகன்று சென்று பிறிதொரு நகரத்தை வென்றெடுப்போம்” என்றார்.

நிமித்திகர் எழுந்து “அரசே, நற்பொழுது இன்னும் ஒரு நாழிகை கழிந்து எழுகிறது. அப்போது கதிர் சற்று மேலெழுந்திருக்கும். இப்புல்வெளியில் ஈரம் உலர்ந்திருக்கும். இதில் பாம்புகள் இருந்திருந்தால் அவை தங்கள் வளைகளுக்குள் நுழைந்திருக்கும். நாம் புல்வெளிக்குள் நுழையும் தருணம் அதுவே” என்றார். ஃபானு “அதற்கு முன் நமது வண்டிகள் இந்நிலத்திற்குள் நுழைவதற்கு பாதை அமைக்கப்படவேண்டும்” என்றார்.

பிரஃபானு “ஆம், ஆனால் அதற்கு முன் நற்பொழுதில் முறையாக ஐம்மங்கலங்களுடன் தாங்கள் இந்நிலத்தில் காலடி வைத்து முன் நுழையுங்கள். மங்கலச்சேடியரும் இசைச்சூதரும் எழுக! அனைவருக்கும் முன்னால் வேதம் ஓதி அந்தணர் செல்க! கங்கை நீர் முதலில் அதன்மேல் விழவேண்டும். நாம் இதனுள் நுழைகையில் வேதச்சொல்லே முதற்சொல்லென எழவேண்டும். அதுவே நம் குடிக்கு உகந்த வழக்கம், நாம் செழிக்கும் வழி” என்றார்.

“ஆணை, அந்தணரும் சேடியரும் இசைச்சூதரும் ஒருங்கட்டும்” என்றார் ஃபானு. “அரசே, தங்கள் மணிமுடியும் செங்கோலும் இங்கே கொண்டுவரப்பட்டுள்ளன. அவற்றை நீங்கள் அணிந்துகொள்ளலாம்” என்றார் பிரஃபானு. ஃபானு “இப்பொழுதில் அரச உடை என்பது...” என்று தயங்கினர். “அரசருக்குரிய அணிப்பொன் மேலாடை ஒன்றையேனும் அணிந்துகொள்ளுங்கள். மணிமுடியை சூடி செங்கோலை கையிலேந்திக் கொள்ளுங்கள். தங்களை பல்லாயிரம் விழிகள் பார்க்கின்றன என்பதை மறக்க வேண்டியதில்லை. அவர்கள் தங்கள் நிலமென்றும், இதை தாங்கள் ஆளவேண்டும் என்றும் எண்ணவேண்டும். அவர்களில் நம் தெய்வங்கள் எழ வேண்டும்” என்றார் பிரஃபானு.

மூத்தவர் ஃபானு அங்கே ஒரு பாறையில் அமர்ந்தார். இரு ஏவலர் வந்து அவருக்கு பொன்னூல் பட்டாடைகளை அணிவித்தனர். மூங்கில் பெட்டிகளிலிருந்து அரச அணிக்கோலத்திற்கான நகைகளை அவருக்கு சூட்டினர். மணிமுடியும் துவாரகை செங்கோலும் வந்து அருகே பிறிதொரு பாறையில் காத்திருந்தன. முதலில் சற்று தயங்கினாலும் அணிகொள்கையில் மூத்தவர் ஃபானு மகிழ்வதை பார்க்க முடிந்தது. அவர் முகம் மலர்ந்தபடியே வந்தது. தோள்கள் எழுந்தன. ஒவ்வொரு அணியாகச் சுட்டி அதை அணிவிக்கும்படி ஆணையிட்டார். அவர்கள் தவறவிட்டார்கள் எனில் அதை சற்று சுட்டிக்காட்டினார். ஒவ்வொன்றையும் அணிந்து அணிசெய்த ஏவலன் காட்டிய ஆடியில் தன்னை பார்த்துக்கொண்டார்.

மணிமுடிக்கு காவலாக நானும் சுருதனும் நின்றிருந்தோம். அந்தணர்கள் கங்கை நீர் நிறைத்த சிறு குடங்களுடன்

முன்னால் அணிவகுத்தனர். அணிச்சேடியர் மங்கலத்தாலங்களை ஏந்தி நின்றனர். இசைச்சூதர்கள் தங்கள் இசைக்கலன்களை இறுக்கி சுதி சேர்த்துக்கொண்டனர். ஒவ்வொன்றும் ஒருங்கிக்கொண்டிருந்தது. மெல்ல மெல்ல எனக்கும் ஒரு நிறைவு எழுந்தது. முறையாக ஒரு புது நிலத்திற்குள் செல்லவிருக்கிறோம். ஐயங்களும் தயக்கங்களும் விலகவேண்டும். தெய்வங்கள் உடன் நிற்கவேண்டும். இங்கு யாதவ அரசு எழவிருக்கிறது.

நான் வேண்டிக்கொண்டேன். மீண்டும் மீண்டும் அறிந்த தெய்வங்களையெல்லாம் அகத்தால் தொழுதேன். மூதாதையரை வழுத்தினேன். தந்தையே, அப்போது ஒருமுறைகூட தங்களை நினைத்துக்கொள்ளவில்லை. மறந்தும் எவர் நாவிலும் தங்கள் பெயர் எழவில்லை. தங்களை எண்ணிக்கொள்வதாக ஃபானு கூறவில்லை. நிமித்திகரோ அந்தணரோ அமைச்சரோ கூட உங்களைப் பற்றி சொல்லவில்லை. எவரும் உண்மையிலேயே நினைவுகூரவில்லை.

முதிய அந்தணர் இருவர் வந்து செங்கோலையும் மணிமுடியையும் எடுத்து ஃபானுவுக்கு அணிவித்தனர். மணிமுடி சூட்டப்பட்டபோது ஃபானு மூதாதையர் பெயர்களை சொல்லும் நீண்ட பாடல் ஒன்றை சொன்னார். அதில் உங்கள் பெயர் வருகிறது. ஆனால் ஃபானு ஒரு சொல்லென அதை கடந்து சென்றார். செங்கோல் அவருக்கு அளிக்கப்பட்டபோது "மூதாதையரே! தெய்வங்களே! காத்தருள்க தேவர்களே!" என்றார். அப்போதும் தங்கள் பெயர் வரவில்லை.

இப்போது இங்கே நின்று எவ்வளவு இயல்பாக உள்ளம் உங்கள் பெயரை வெளியே தள்ளிவிட்டது என்று எண்ணி எண்ணி

வியக்கிறேன். வேண்டும் என்றே அல்ல. நாவில் எழவில்லை. தேவையில்லை என்று ஆனதனால் அவ்வண்ணம் சுருங்கி உதிர்ந்துவிட்டிருந்தது.

ஃபானு மணிமுடி சூடி அந்தப் பாறைமேல் அமர்ந்தார். செங்கோலை தோளில் வைத்துக்கொண்டார். ஓர் அந்தணர் "ஒரு கன்றும் பசுவும் பின்தொடரட்டும்" என்றார். "கன்றும் பசுவும்!" என்று குரல்கள் எழுந்தன. ஒருவர் அப்பால் சென்று "ஒரு கன்றும் பசுவும் வரட்டும். வெண் பசு, கரிய மூக்கும் கரிய காம்புகளும் கொண்டது" என்றார். பசுவுக்காக பல குரல்கள் சென்றன. பசுக்களை குன்றுக்குக் கீழே நிரைவகுத்து நிறுத்தியிருந்தோம். அங்கிருந்து பசுக்களை மேலே கொண்டு வர வழியெங்கும் செறிந்து இருந்த மக்களைப் பிளந்து வழியமைக்க வேண்டியிருந்தது.

அப்போது அந்த ஓசையை கேட்டேன். முதலில் அது என்ன என்று எனக்கு தெரியவில்லை. நான் சூழப் பார்த்தபின் அதை அறியமுடியாமல் அருகிலிருந்த சிறுபாறைமேல் ஏறிப் பார்த்தேன். தேங்கி நின்றிருந்த துவாரகையின் குடிகளில் ஒரு பகுதி முன்விளிம்பு உடைந்து ஒரு கையென நீண்டு பிரஃபாச க்ஷேத்ரத்தின் புல்வெளிக்குள் ஊடுருவிச் சென்றுகொண்டிருப்பதை பார்த்தேன். அதன் முகப்பில் சாம்பனும் அவர் இளையோரும் குவிந்த அம்புபோல சென்றுகொண்டிருந்தனர்.

"என்ன ஆயிற்று? என்ன ஆயிற்று?" என்று நான் கூவினேன். ஃபானு "என்ன அது ஓசை?" என்று கூவினார். ஓடிவந்த சிற்றமைச்சர் "அரசே, அந்தப் புல்வெளியில் யானை ஒன்றை சாம்பன் பார்த்தார். அது சேற்றில் இடைவரை புதைந்து வெளியே வராமல் தவிக்கிறது. தன்னை மறந்து அதை

வேட்டையாடிக் கொல்லும்பொருட்டு அவர் வேலுடன் பாய்ந்துவிட்டார். அவர் உடன்பிறந்தாரும் குடிகளும் தொடர்ந்து சென்றார்கள்" என்றார். ஃபானு "அறிவிலி!" என்று கூவியபடி எழுந்தார். பிரஃபானு "மூத்தவரே, அமர்க! நாம் இப்போது ஒன்றும் செய்யமுடியாது" என்றார்.

நான் நோக்கிக்கொண்டிருந்தபோதே அந்த உடைவினூடாக அதுவரை தேங்கித் ததும்பி நின்றிருந்த துவாரகையின் குடிகள் அனைவரும் பெருகி பிரஃபாச க்ஷேத்ரத்தின் விரிந்த புல்வெளிக்குள் நுழைந்தனர். மொத்தத் திரளும் நீண்டு நீண்டு பெருக்கென ஆகிச் சரிந்து ஒழுகி புல்வெளியில் இறங்கி சிதறிப் பரவி நிறைந்துகொண்டிருந்தது.

# கல்பொருசிறுநுரை - 67

**பகுதி ஆறு : படைப்புல் – 11**

பிரஃபாச க்ஷேத்ரத்தில் மிக விரைவாக குடில்கள் அமைந்தன. அத்தகைய ஒரு நிலத்தில் யாதவர்கள் எவரும் அதற்கு முன் குடியேறியதில்லை. பெரும்பாலும் அவர்கள் அனைவருமே துவாரகையில் பிறந்து வளர்ந்தவர்கள். முதியவர்களோ வடக்கே செழித்த புல்வெளிகளிலும், மதுவனம், மதுராபுரி போன்ற அரசு நிலைத்த நகர்களிலும் பிறந்தவர்கள். ஒரு கடலோரச் சதுப்பு நிலத்தில் குடில் கட்டி நகர் அமைக்கும் பயிற்சியை அவர்கள் எங்கிருந்தும் பெற்றிருக்கவில்லை. ஆனால் ஆணையிடாமலேயே ஒவ்வொருவருக்கும்

அனைத்தும் தெரிந்திருந்தது. நூற்றுக்கணக்கான குலக்கதை அடுக்குகளினூடாக அவர்கள் வெவ்வேறு நிலங்களில் யாதவர்கள் எவ்வண்ணம் குடியேறினார்கள் என்பதை அறிந்திருந்தார்கள். தேவையில்லை என்பதனால் மறந்திருந்தார்கள். தேவையென்பதனால் தெய்வம் எழுந்ததுபோல் அந்த அறிதல் எழுந்தது.

சதுப்பு நிலத்தில் இறங்கியதுமே அங்கே பெரும்பாலான இடங்களில் இடையளவு சேறு புதைந்து உடல் உள்ளே செல்லும் என்பதை அறிந்துகொண்டார்கள். ஆகவே எடைமிக்க பொருட்களை அங்கே இறக்கலாகாது என்று சொல்வழியாகவே ஆணைகள் பரவிச்சென்றன. காளைகளையும் பசுக்களையும் அச்சதுப்பில் இறக்குவதென்பது இடர் அளிப்பது என்று உணர்ந்து முதியவர்கள் "பசுக்களையும் காளைகளையும் பின்னுக்கு கொண்டு செல்லுங்கள். புரவிகளும் அத்திரிகளும்கூட பின்னால் இருக்கட்டும். நம்மிடம் இருக்கும் எருமைகள் மட்டும் முன்னால் வரட்டும்" என்றனர்.

அவர்களிடம் எருமைகள் மிகக் குறைவாகவே இருந்தன. அவை பாலையின் அந்த வறுபரப்பில் நீரிலாது வாழக்கூடியவை அல்ல. எனினும் வரும்பெருக்கில் முற்றிலும் எருமை இல்லாமல் ஆகிவிடக்கூடாது என்பதற்காகவே எருமைகளை கொண்டுவந்திருந்தனர். வியத்தகு முறையில் அவை பாலைநிலத்தின் வெம்மையை ஏற்றுக்கொண்டன. குறைவான நீரில் உயிர்வாழ்ந்தன. திரளின் உணர்வுகளை புரிந்துகொண்டு ஒத்துழைத்தன. இயல்பாக அந்த நெடுந்தொலைவை கடந்து வந்தன.

நாற்பது எருமைகள் முன்னால் அழைத்துவரப்பட்டன. அவை புல் செறிந்த சேற்று நிலத்தைக் கண்டதுமே மகிழ்ந்து

முக்காரையிட்டுக்கொண்டு செவி குவித்து முன்னால் செல்ல விரும்பின. குட்டிகளிடம் நிறைய புல், நிறைய நீர் என அறிவித்தன. ஆணையிடப்பட்டதும் சதுப்பில் இறங்கி வயிற்றை உப்பி தெப்பங்கள்போல மாறி உழன்றும் மிதந்தும் சென்றன.

அவற்றின் உடலில் கட்டப்பட்டிருந்த கயிறுகளைக் கொண்டு பலகைகளை இழுத்து சேற்றுப் பரப்பின்மீது நீண்ட பாதை ஒன்றை அமைத்தனர். பலகைகள் ஒன்றுடன் ஒன்று சேர்த்து கட்டப்பட்டன. அவை எடையால் சேற்றில் மூழ்காமல் இருக்க அவற்றுக்கு அடியில் பெரிய மூங்கில்கள் குறுக்காக அமைக்கப்பட்டன. அம்மூங்கில்களுடன் மேலும் மரச்சிம்புகள் இணைக்கப்பட்டன. மேலிருந்து பார்த்தபோது ஒரு பெரிய முதுகெலும்பு அச்சேற்று நிலத்தில் பதிந்ததுபோல் தோன்றியது.

“நிலம் முதுகெலும்பு கொண்டுவிட்டது. இனி இது எழுந்து நின்றிருக்கும். பேருருக்கொண்டு போர்புரியும். நிலம் வெல்லும். புகழ்கூடும்!” என்று ஒரு சூதன் சொன்னான். யாதவர்கள் அனைவரும் மகிழ்ந்து கூச்சலெழுப்பி நகைத்தனர். கால்கள் விரிந்த அந்தப் பாதையை பூரான் என்று அழைத்தனர். அதில் ஏறியபோது படகில் செல்லும் உணர்வு ஏற்பட்டது. ஆனால் எளிதில் அதற்கு அவர்கள் உடல்பழகினர். மானுடரும் விலங்குகளும்.

வண்டிகளும் பசுக்களும் காளைகளும் சுமை விலங்குகளும் பெருந்திரளான மக்களும் அதன்மேல் ஏறிய போதும்கூட அது சேற்றிலேயே மிதந்து சற்றே அசைவு அளித்தாலும் கவிழாமல் நின்றது. அதனூடாக மக்கள் சென்று பரவினர். குடில்கள் அமைக்கும் பணியை உடனே தொடங்கினர். “சேற்றில் மூங்கில்களை ஓங்கிக் குத்தி அடிநிலம் எங்குள்ளது என்று

பாருங்கள். எங்கு அவை உறுதியாக நிலைகொள்கின்றனவோ அங்கு நாட்டுங்கள். அவற்றை வேர் என்றாக்கி குடில் அமைக்கலாம்" என்றார் முதியவர்.

அதுவரை நான் நான்கு மூங்கில்கள் குத்த இடம் இருந்தால் மட்டுமே ஒரு இல்லத்தை அமைக்கமுடியும் என்று எண்ணியிருந்தேன். அப்போதுதான் ஒற்றைப் பெருமூங்கிலை அழுத்தமாக நட்டு அதை மேலிருந்து மரத்தடிகளால் அறைந்து அறைந்து உள்ளே செலுத்தி நாட்டிய பின் அதிலிருந்து நாற்புறமும் இணைப்பு கொடுத்து சதுப்புக் குடில்களை கட்ட முடியும் என்று கண்டேன்.

பெரும்பாலான குடில்கள் ஆணிவேர் மட்டுமே கொண்டவை. அவற்றின் எடை சதுப்பில் பரவும் பொருட்டு ஒவ்வொன்றுக்கு அடியிலும் பெரிய கிடைமூங்கில்கள் அமைக்கப்பட்டன. குடில்கள் கட்டப்பட்டு அவை ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்டன. அவை வலைபோலப் பரவியபோது சேறு அவற்றை தாங்கிக்கொண்டது. அந்தக் குடில்பரப்பே ஒரு மாபெரும் பாசிப்படர்வு என்று தோன்றியது.

முதல் நாளிலேயே அங்கு கரையோரம் பெருகி நின்றிருந்த உயரமான நாணல்புதர்கள் பயன்படக்கூடியவை என்று ஆயர்கள் கண்டனர். அந்த நாணல் மூங்கில் போலவே உள்ளே துளைகொண்டது. மிகமிக உறுதியானது. சிறிய மூங்கிலென பயன்படக்கூடியதென்பதை யாதவர்கள் கண்டுகொண்டதும் மட்கிய மரத்தடிகளை தெப்பங்களாக்கி உள்ளே சென்று அந்த நாணல்களை வெட்டிக் குவித்து கயிற்றால் இழுத்துக் கொண்டுவந்து முடைந்து தட்டிகளும் பாய்களும் ஆக்கினர். அவற்றைக் கொண்டே இல்லங்களுக்கு சுவர் அமைக்கலாம்

என்றும் கூரை அமைத்து அதன்மேல் மூங்கில் தாள்களையே பரப்பி நீரொழுகாது ஆக்கலாம் என்றும் கண்டுகொண்டார்கள்.

பின்னர் அந்தப் புல் தண்டுகளை அடுக்கடுக்காக சேர்த்துக் கட்டி ஒன்றுடன் ஒன்று இணைத்து பெரிய பரப்பென்றாக்கி சதுப்பின்மேல் போட்டால் அது மிதந்து கிடக்கும் நிலப்பரப்பென ஆவதை கண்டுபிடித்தனர். மூங்கில்வேர்கள் இல்லாமலேயே அந்த மிதக்கும் நிலத்தின்மேல் இல்லங்களை அமைக்க முடியும். அந்த நாணல் சதுப்பின் ஈரத்தில் மட்குவதில்லை. அழுந்தும்போது சதுப்பிலிருந்து நீரை மேலே ஊறிஎழச் செய்வதுமில்லை.

ஒவ்வொருநாளும் புதியன கண்டறியப்பட்டன. புதியவை உருவாகி வந்தன. ஐந்து நாட்களுக்குள் பிரஃபாச க்ஷேத்ரம் முழுக்க பரவி எழுந்த ஒரு நகரத்தை கண்டேன். நாணற் கூரைகளும் நாணல் சுவர்களும் கொண்டது. சீரான தெருக்களுக்கு இருபுறமும் மூங்கில்கால்களின் மேல் எழுந்து நின்ற இரண்டு அடுக்கு மாளிகைகளின் நிரை. அங்காடி ஒன்று. அதனருகே கேளிக்கை களம். குடிமூத்தோருக்கும் குலதெய்வங்களுக்குமான ஆலயங்கள். அனைத்துமே நாணல்களால் ஆனவை.

பன்னிரண்டு மூங்கில்களை நாட்டும் இடமிருந்த ஒரு இடத்தில் மூன்றடுக்கு மாளிகை எழுந்தது. சாம்பனுக்கும் பிரத்யும்னனுக்கும் அநிருத்தனுக்கும் தனித்தனி மாளிகைகள் கட்டப்பட்டன. அவை தனி மையங்களாக மாறின. அவற்றைச் சுற்றி அவர்களின் ஆதரவாளர்களின் குடில்கள் அமைய அவை நகரத்திற்குள் தனிநகரங்களாக மாறின.

நகரத்தைச் சுற்றி இருபது காவல்மாடங்கள் அமைந்தன. அவற்றில் இரவுபகலாக வில்லேந்திய காவலர்கள் அமர்ந்திருந்தனர். பிரஃபாச க்ஷேத்ரத்தில் பெருகிக்கிடந்த லோகநாசிகை என்னும் அந்தப் புல் அம்புக்கு மிக உகந்தது என்று கண்டடையப்பட்டது. அதைக் கொண்டு நெடுந்தொலைவுக்கு அம்பு செலுத்த முடிந்தது. சிறகு கொண்ட பறவைபோல அவை எழுந்து விண்ணில் நீந்திச்சென்று இலக்கை அடைந்தன.

அந்த அம்புகள் யாதவர்களை நம்பிக்கையும் மிதப்பும் கொண்டவர்கள் ஆக்கின. எவரும் பிரஃபாச க்ஷேத்ரத்தை அணுகிவிட முடியாது என்ற நம்பிக்கை எழுந்தது. அந்நகருக்கு ஒரு கோட்டைகூட தேவையில்லை என்றார் பிரத்யும்னன். "இந்த அம்புகளைக் கடந்து கொசுக்களும் ஈக்களும்கூட இங்கே வந்துசேர முடியாது" என்றார்.

தெப்பங்கள்போல் மிதந்து கிடந்த பாதைகளினூடாக புரவிகள் நனைந்த முரசுத்தோலில் கோல் ஒலிப்பதுபோல் குளம்புகள் முழங்க விரைந்தோடின. அங்கே விலங்குகளுக்கான புல்லுக்கு குறைவே இல்லை. ஆகவே பசுக்களும் எருமைகளும் தின்றுகொண்டே இருந்தன. ஓரிரு நாட்களிலேயே அவை வாட்டம் அகன்று மின்னும் விழிகள் கொண்டவையாக ஆயின. பசுக்களும் எருமைகளும் குடமென அகிடு கனத்தன. கலங்கள் நிறைந்து நுரைக்க பால் அளித்தன.

புல்வெளியில் விலங்குகளை வேட்டையாடி கொண்டுவருவது எளிதாக இருந்தது. அங்கே விலங்குகள் பெருகிக்கிடந்தன. அவை மானுடர் வேட்டையாடுவதை அறிந்திருக்கவில்லை என்பதனால் மிகச் சிறிய பொறிகளிலேயே சதுப்பில் மேயும் மறிமான்களும் முயல்களும் சிக்கிக்கொண்டன. பன்றிகள்

இரவில் படையென கிளம்பி வந்தன. ஓரிரு நாட்களுக்குள்ளேயே மூன்று வேளையும் பன்றி இறைச்சியை உண்ணலாயினர். பாலையில் நடந்த மெலிவும் கருகலும் உடல்களிலிருந்து மறைந்தன. முகங்களில் மகிழ்ச்சியும் கண்களில் ஒளியும் ஏற்பட்டது.

யாதவர்கள் புல்வெளிகளில் மட்டுமே மகிழ்ச்சியாக இருக்க முடியும் என்று அப்போது கண்டேன். புது நிலம் ஒன்றை வென்று கையகப்படுத்துவதே அவர்கள் அடையும் முதன்மை மகிழ்ச்சி என்பதையும் அப்போது உணர்ந்தேன். கலைகள், கேளிக்கைகள், வெற்றிகள், புகழ் எதுவுமே அவர்களுக்கு மெய்யாகவே பொருட்டு அல்ல.

ஒவ்வொரு நாளும் புதிய முறைகள் உருவாகி வந்தன. எருமைகளைக் கொண்டு பிற எருமைகளை வெல்லும் உத்தி ஒன்றை முதியவரான சக்ரர் வகுத்தார். புணர்வுக்கு மணம் எழுப்பிய இளம் எருமை ஒன்றின் பின்பக்கத்திலிருந்து எடுத்த மதநீரை நீரில் கரைத்து அனைத்து எருமைகள் மேலும் தெளித்து அவற்றை பிரஃபாச க்ஷேத்ரத்தின் எல்லைகளில் கட்டி வைத்தார்கள். ஒவ்வொரு எருமையைச் சுற்றியும் புலரியில் பல ஆண் எருமைகள் நிற்பதைக் கண்டனர். அவற்றை கயிறு எறிந்து கொம்புகளில் சுருக்கிட்டு துள்ள வைத்து கால்களில் சுருக்கிட்டு வீழ்த்தி பிடித்துவந்தனர்.

பின்னர் அவற்றை கட்டி வைத்து பட்டினி இட்டு, நீரும் உணவும் இட்டு, உணவுடன் ஆணைகளை இணைத்து சில நாட்களிலேயே பழக்கினர். அந்த மதம் எழுந்த ஆண் எருமைகளை கொண்டுசென்று சதுப்பில் எடை இழுக்கவும் உழவும் பழக்கினர். அவற்றின் விந்து நீரை வெளியே எடுத்து நீரில் கலக்கி பிற எருமைகளின் உடலில் தெளித்து காட்டில்

இரவில் கட்டிவைத்து மறுநாள் அழைத்து வந்தபோது கன்னி எருமைகள் பெருந்திரளாக பிரஃபாச க்ஷேத்ரத்திற்கு வந்தன.

ஒரு மாதத்திற்குள் பிரஃபாச க்ஷேத்ரம் எருமைகளின் முக்காரைகளால் நிறைந்தது. எங்கும் எருமைகளின் செவியாட்டல், வால் சுழற்றல். அவை அச்சேற்றில் திளைத்தன. உண்டு கழித்து அந்த நிலத்தை வளம் கொண்டதாக்கின. சேற்றில் செழித்து விளையும் செடிகளை கண்டடைந்தனர். சேம்பு முதலிய பல்வேறு கிழங்குகள் சேற்றில் மிகச் சிறப்பாக விளையுமென்பதை கண்டனர்.

பின்னர் சேற்றுநிலத்தை விளைநிலமாக்கத் தொடங்கினர். சேற்றுக்குள் காற்று நுழையாததனாலேயே அங்கு செடிகள் வளர்வதில்லை. நாணல் குழாய்த் துண்டுகளை நறுக்கி அச்சேற்றில் விட்டு அவை புதைந்தபோது உள்ளே காற்று புகுந்து நுரைக்குமிழிகள் எழுந்தன. உள்ளிருந்து அழுகலை உண்ணும் சிறு வெண்புழுக்கள் பெருகி வந்தன. பின்னர் கிழங்குகளை நட்டால் அவை பெருகும் என்று தெரிந்தது.

சேற்றுக்கு நடுவே இடையளவு ஆழத்தில் நீண்ட ஓடைகளை வெட்டி ஆங்காங்கே வெட்டப்பட்ட பெரிய குளத்தில் சேர்த்தனர். நீர் வடிந்ததும் சேற்றுப்பரப்பு வறண்டு வெடித்தது. அதன் பின்பு அங்கு நடப்பட்ட வாழைகள் தளிரெழுப்பி, குளிர்ந்த உடல் எழுப்பி தலைக்குமேல் வளர்ந்தன. எருமைகளின் சாணி அவற்றுக்கு சிறந்த வளமென ஆயிற்று. பிரஃபாச க்ஷேத்ரம் எட்டு மாதங்களுக்குள் மாபெரும் வாழைத்தோட்டமென மாறியது.

சதுப்பு நிலம் வேளாண்மைக்கு உரியதல்ல என்று நான் அறிந்திருந்தேன். அதை வேளாண்மை நிலமாக ஆக்குவது

எப்படி என்பது யாதவ முதியவர் ஒவ்வொருவருக்கும் தெரிந்திருந்தது என்பதை வியப்புடன் உணர்ந்தேன். முதியவராகிய சம்பூதர் பல தலைமுறைகளுக்கு முன்பு யாதவர்களுக்கு நிலம் தேடிச்சென்று யமுனை நதிக்கரையிலிருந்த சதுப்பு ஒன்றை அடைந்து அதைத் திருத்தி நிலமென்று ஆக்கியதைப்பற்றி சொன்னார். அது பின்னர் மதுராபுரி என்று ஆகி கோல் கொண்டு முடிசிறந்தது.

அந்நிலத்தில் இருந்து அவர்கள் உயிரை மீட்டெடுத்ததைப் பற்றி கூறும் யமுனாவிலாசம் எனும் காவியம் நீண்ட மேய்ச்சல் பாடலாகவே அவர் நினைவில் இருந்தது. அதிலிருந்த ஒவ்வொன்றையாக பிரஃபாச க்ஷேத்ரத்தில் செய்தனர். மண்ணில் சுண்ணமும் சாம்பலும் சேர்த்தனர். மணலையும் கூழாங்கற்களையும் கொண்டுவந்து கலந்தனர். மூங்கிலை ஆழமாகப் பதித்து எடுத்து கூரிய சிறு குழிகளை உருவாக்கினர்.

சதுப்பு நிலத்துக்குள் நூறு தெய்வங்கள் ஆவி வடிவில் குடிகொள்கின்றன. அவை மழை பெய்து நீர் பெருகும்போது குமிழிகளாக வெளிக்கிளம்புகின்றன. வெயில் மூத்து நிலம் வெடிக்கும்போது அனலாக எழுந்து பற்றிக்கொள்வதும் உண்டு. அந்த தெய்வங்களை அந்நிலத்திலிருந்து உரிய முறையில் வெளியேற்றுவதே மானுடன் அங்கே செய்யவேண்டியது.

பிரஃபாச க்ஷேத்ரத்தில் எங்கெல்லாம் மாடுகள் மேயாமல் ஒழிகின்றனவோ அங்கே அடியில் தீய தெய்வங்கள் வாழ்கின்றன என்று பொருள். அங்கே மூங்கில்களை அறைந்து ஆழ்ந்த துளைகள் இடப்பட்டன. பக்கவாட்டில் பலநூறு துளைகள் கொண்ட சல்லடைமூங்கில்கள் அவை. அந்த மூங்கில்களுக்குள் வந்த ஆவி மேலெழுந்து தலைக்கு மேல்

சென்று மறைந்தது. எப்போதாவது அதில் அனல்துளி பட்டால் நீலநிறமாக பற்றிக்கொண்டு சிறிய ஒற்றைக்குமிழி என கொப்பளித்து வானில் எழுந்தது.

அதன் பிறகு வழிபடும் தெய்வங்களை மண்ணுக்குள் அனுப்பினார்கள். துளையிடப்பட்ட பலநூறு மூங்கில்கள் மண்ணில் அழுத்தப்பட்டன. நெற்றுகளும் ஓடுகளும் அம்மண்ணுக்குள் புதைக்கப்பட்டன. அவை போதாமலானபோது நெற்றுகள்போல் குழாய்கள்போல் மண்ணில் செய்து உலர வைத்து சுட்டு அம்மண்ணில் புதைத்தனர்.

“நூற்றெட்டு மாருத மைந்தர்கள் மண்ணுக்குள் குடியேற வேண்டும். அவர்கள் உள்ளே வாழும் புழுக்களை, வேர்களை புரக்கவேண்டும். அதன் பின்னரே இங்கே உயிர்க்குலம் எழும்” என்றார் சக்ரர். மாருதர்கள் மண்ணுக்குள் வாழத் தொடங்கினர். அவர்கள் அங்கே உயிர் பெருக்கினர். மண்ணின் மணம் மாறத்தொடங்கியது. அதில் எப்போதுமிருந்த புளித்த வாடை அகன்றது. எரியும் சாம்பல்சுவை தோன்றியது. மண்ணின் நிறம் ஆழ்ந்த நீலச் சாம்பல் நிறத்தில் இருந்து வெளிறி சிவப்பு கொண்டது.

அங்கு வந்தபோது அச்சதுப்பு நிலமெங்கும் ஒற்றைப் புல்லே நிரம்பியிருந்தது. கூரிய அரம் கொண்ட குறுவாட்கள் போன்ற இலைகளும் நீர்நிறைந்த தண்டும் கொண்டது. பிறிதொரு நிலையுயிர் அங்கே எழமுடியாமல் இருந்தது. அந்தப் புல் தன் வேர்களை வளர்த்து மேலே கொண்டுவந்து செந்நிறமான புழுக்கூட்டங்களைப்போல மிதக்கவிட்டு வெளிக்காற்றில் மூச்சுவிட்டது. வேர் அழுந்தும் செடிகள் அங்கே எழமுடியவில்லை. அவற்றின் விதைகள் சேற்றுள் வாழ்ந்த நீலநிற அனலால் எரித்து அழிக்கப்பட்டன.

மண்ணுக்குள் மாருதர்கள் சென்றதும் மண்புழுக்கள் எழுந்தன. உள்ளிருந்து மண்ணை கொண்டுவந்து மேலே குவித்தன. ஒவ்வொரு நாளும் பிர꞉பாச க்ஷேத்ரத்தில் காலை எழுந்து மண்ணை நோக்கினால் பல்லாயிரம் மண்குவைகளை காணமுடிந்தது. உள்ளே மண்புழுக்கள் வேர்கள் என நெளிந்து இறங்கின. அவை மாருதர்களின் மைந்தர்கள். மாருதர்கள் நிலத்திற்குள் செல்வதற்கான வழி அமைப்பவை என்றார்கள் மூத்தவர்கள்.

உள்ளே சென்ற மாருதர்கள் அங்குள்ள அனைத்து உயிர்களையும் தொட்டெழுப்பினார்கள். ஒவ்வொருநாளும் புதிய செடிகள் மேலெந்து வந்தன. அங்கே கோடை காலம் வந்தபோது முதல் முறையாக மிதக்கும் நகரம் முழுக்க பலவண்ண மலர்கள் மலர்ந்தன. "முதல் முறையாக இம்மண்ணில் இளவேனில் எழுந்திருக்கிறது" என்று மூத்தவர் ꞉பானு கூறினார். "இத்தனை வண்ண மலர்கள் இங்கு மலரக்கூடுமென எவரும் எண்ணியிருக்கமாட்டார்கள்."

சூதர் ஒருவர் "மலர்கள் கந்தர்வர்களையும் தேவர்களையும் அழைப்பவை. வண்டுகளாகவும் தேனீக்களாகவும் வண்ணத்துப்பூச்சிகளாகவும் அவர்கள் இங்கு வருவர்கள். தேவர்கள் குடிகொள்ளும் நிலம் மானுடர் வாழ்வை பெருக்குவது" என்றார். "தேவர் வருக! மூத்தார் வருக! இந்நிலத்தில் எங்கள் குலம் எழுக!" என்றார் ꞉பானு.

எங்கிருந்தென்று தெரியாமல் வண்ணத்துப்பூச்சிகள் வந்து பிர꞉பாச க்ஷேத்ரத்தை நிரப்பின. மலர்களும் வண்ணத்துப்பூச்சிகளும் நிறைந்து அந்நிலம் முதல் முறையாக வண்ணம் பொலிந்தது. அதன் நடுவே சிறுவர்கள் ஓடி விளையாடினார்கள். வண்ணத்துப்பூச்சிகளைப் பற்றிய

தொன்மையான யாதவப் பாடல்கள் அனைத்தும் நினைவிலிருந்து மீண்டு வந்தன. யாதவர் வண்ணத்துபூச்சிகளை அந்த அளவுக்கு கொண்டாடியிருக்கிறார்கள் என்று அப்போது அறிந்தேன்.

அங்கே வந்த சில நாட்களிலேயே ஒவ்வொருவரும் சதுப்புக்குள் வாழும் கலையை கற்றுக்கொண்டிருந்தார்கள். வாழைத்தண்டுகளை இணைத்து பாதையாக்கி சதுப்புகளுக்குள் செல்லவும் மிதக்கும் மரங்களை படகுகளாக்கி கழிகளை ஊன்றி உளைச்சதுப்புக்கு மேலே நீந்தவும் அவர்கள் பழகியிருந்தார்கள். "முதன்முறையாக இந்நிலம் புன்னகைக்கிறது. வருக என்கிறது. இங்கு வாழ்வு செழிக்கும்" என்றார் ஃபானு.

"எங்கும் மனித வாழ்வு செழிக்க முடியும். பாலை நிலத்தில் துவாரகை எழமுடியும் எனில் இந்நிலத்தில் மும்மடங்கு செழிப்பும் செல்வமும் கொண்ட பெருநகரொன்று எழமுடியும்" என்றார் பிரஃபானு. தன் மாளிகையின் மூங்கில் முகப்பில் நின்றபடி சுற்றிலும் நிகழ்ந்துகொண்டிருந்த இளவேனிற்கால பணிகளை பார்த்துக்கொண்டிருந்தார். பணிகளையே விளையாட்டென, களியாட்டென மாற்றிக்கொண்டிருந்தனர். கைகொட்டி பாடியபடி, நடனமிட்டபடி வேலை செய்தனர்.

இளவேனிற்காலத்தில்தான் யாதவர்கள் தேன் எடுக்கும் கலையை கற்றனர். பலநூறு தேன் கூடுகள் அங்கே அமைக்கப்பட்டன. தேன்கூடுகளிலிருந்து தேன் எடுப்பதற்கான வழிமுறைகள் அனைத்தையுமே அவர்கள் தங்கள் தொன்மையான குலப்பாடல்களில் இருந்தே கற்றுக்கொண்டனர். தேன் கலந்த மதுவை தயாரிப்பதும் அங்கு அறிந்ததுதான். "தொன்மையான நூல்கள் விதைத்தொகுதிகள்.

நம் முன்னோர் வாழ்ந்த முழு வாழ்வையும் அவற்றிலிருந்து நாம் மீட்டுக்கொள்ள முடியும் போலும்" என்றார் சுருதன்.

மூத்தவர் ஃபானுவும் உடன்பிறந்தவர்களும் அவருடைய மூங்கில் மாளிகையின் உப்பரிகையில் நின்றிருந்தோம். அங்கே வந்தபின் துவாரகையில் இருந்த பூசல்களும் காழ்ப்புகளும் மறைந்துவிட்டிருந்தன. நான்கு மையங்களாகவே அங்கும் இருந்தனர் என்றாலும் பகைமை இல்லாமலாகிவிட்டிருந்தது. பகைமைகொள்ள எவருக்கும் பொழுது இருக்கவில்லை. கண்டடைதலின், வென்றுசெல்லலின் கொண்டாட்டம் வாழ்கையை நிறைத்திருந்தது.

யாதவ மைந்தர் மூவர் கொல்லப்பட்டிருப்பதையே கூட அனைவரும் மறந்துவிட்டனர். அங்கு வருவதற்கு முன்புவரை இருந்த வாழ்க்கையை பாம்பு சட்டையை உரிப்பதுபோல கழற்றி அப்பால் விட்டுவிட்டிருந்தனர். அதுவும் நன்றே என்று தோன்றியது.

அங்கு வந்தபின் அனைவருமே உடல்நிலை மேம்பட்டிருந்தனர். அங்கிருந்த வெம்மைமிக்க காற்றும் அந்திச்சாரலும் முதல் சில நாட்களுக்குப் பின் பழகிவிட்டிருந்தன. கணிகர் ஒருவருக்கு மட்டுமே உடல்நிலை சீர்கெட்டிருக்கிறது என்றார்கள். அவருக்கு மூச்சிளைப்பும் வெப்பும் இருந்தது. ஆனால் அதை எவரும் பொருட்டெனக் கருதவில்லை. அவர் தேவையற்றவராக ஆகிவிட்டிருந்தார். அவர் இறந்தாலும் நன்றே என்று பொதுவாக அனைவரும் எண்ணினர்.

அங்கே அரசு உருவாகவில்லை. மூத்தவர் ஃபானு முடிசூட்டிக்கொள்ளவில்லை. அரசவை கூடவோ அமைச்சரும் படைத்தலைவரும் வகுக்கப்படவோ இல்லை. சுருதன் வந்த

நாள் முதல் அதை சொல்லிக்கொண்டிருந்தார். "அரசு என ஒன்று உருவாகவேண்டும். அதன் பின்னரே நாம் இங்கே வேரூன்றிவிட்டோம் என்று பொருள். முடிகொண்ட அரசனின் ஆணைகளின்படி இங்கே ஒவ்வொன்றும் நிகழவேண்டும்..."

"இன்று என்ன குறைகிறது?" என்று நான் கேட்டேன். "ஒவ்வொருவரும் நலமாகத்தானே இருக்கிறார்கள்?" சுருதன் "ஆம், ஆனால் எக்கணமும் பூசல் தொடங்கும். குற்றங்கள் நிகழும். இங்கே இன்னமும் நிலம் பகுக்கப்படவில்லை. அனைவருக்கும் உரியதாகவே நிலம் உள்ளது. மக்கள் பெருகும்போது நிலம் பெருகுவதில்லை. அதை இன்றே பகுத்தாகவேண்டும்... பூசலுக்குப் பின் பகுக்க இயலாது" என்றார்.

"அத்துடன் இங்கே இன்னும் குலம் பகுக்கப்படவில்லை. அனைவரும் ஆ புரக்கின்றனர். அனைவரும் மண் உழுகின்றனர். அனைவரும் வேட்டையாடவும் மீன்கொள்ளவும் செல்கிறார்கள். இவ்வண்ணம் அது நீடிக்க முடியாது. அதை வகுக்க முனையும்போது ஏற்றதாழ்வு உருவாகும். அங்கும் பூசல்கள் எழும்."

"இதையெல்லாம் ஏன் செய்யவேண்டும்?" என்று நான் கேட்டேன். "இன்னும் நாம் மக்களிடமிருந்து வரிகொள்ளத் தொடங்கவில்லை. நம் கருவூலத்தையே செலவிட்டு வருகிறோம். இங்கே இப்போதே வணிகம் தொடங்கிவிட்டது. அதற்கு நாம் காப்பு அளிக்கவேண்டும். அதற்கு நமக்கு படை வேண்டும். படைபுரக்க செல்வம் வேண்டும். செல்வத்தின்பொருட்டு நாம் குடிகளைப் பகுத்து நிலத்தை பங்கிட்டாகவேண்டும்."

“அவ்வண்ணமென்றால் பூசல்களை போக்குவதல்ல அரசின் பணி, உருவாக்குவதுதான் என்கிறீர்கள்” என்றேன்.
“ஒருவகையில் அது மெய். அரசு தன் குடிகளை ஆளவேண்டும் என்றால் பிரித்தாக வேண்டும். அரசு என்பது களிற்றின் கொம்புபோல” என்றார் சுருதன்.

மூத்தவர் ஃபானு மகிழ்ந்திருந்தார். உரக்க நகைத்தார். எண்ணியிராக் கணத்தில் கையைத் தூக்கி “இளவேனிற்காலக் கொண்டாட்டம் ஒன்று இங்கு நிகழட்டும். நாம் இங்கு நிலைகொண்டுவிட்டோம் என்று தெய்வங்கள் உணரட்டும். தெய்வங்களுக்கான கொடையும் பலியும் களியாட்டும் எழுக!” என்று ஆணையிட்டார்.

# கல்பொருசிறுநுரை - 68

**பகுதி ஆறு : படைப்புல் – 12**

பிரஃபாச க்ஷேத்ரத்தில் இளவேனிற்காலக் கொண்டாட்டங்கள் இயல்பாக தொடங்கின. ஒவ்வொருவரும் ஆற்றவேண்டியதென்ன என்பதை முன்னரே அறிந்திருப்பதுபோல, மகிழ வேண்டியது எங்ஙனம் என்று பயின்றிருப்பதைபோல. அரசஆணை எழுந்ததுமே மக்கள் ஒருங்கிவிட்டனர். அரசஆணைக்காக அவர்கள் முன்னரே காத்திருந்தனர் என்று தோன்றியது. இளவேனிலில் அதற்கான ஆணை இருந்தது. “கொண்டாடுக, எழுக!”

இளவேனிற் கொண்டாட்டத்திற்கான மது முன்னரே வடிக்கப்பட்டு பெரிய நிலைக்கலங்களில் நுரைத்து ஒருங்கியிருந்தது. அங்கு வந்த பின்னர் பலவகையான புதிய மதுவகைகளை வடிக்க மக்கள் பழகியிருந்தனர். வெல்லத்தை நீரில் ஊறவைத்து புளிக்கவிட்டு நொதித்த கலவையை மெல்லிய வெம்மை அளித்து ஆவியாக்கி அதை குளிரவைத்து எடுக்கும் மரபான மது அங்கு வந்த சில நாட்களிலேயே விற்பனைக்கு வந்துவிட்டது. பின்னர் ஒவ்வொருநாளும் அதில் புதிய பொருட்கள் சேர்க்கப்பட்டன. சதுப்பில் மலரும் பெருங்குவளை மலரின் தேனும் பொடியும் சேர்த்த மது பலராலும் விரும்பப்பட்டது. ஒருவகை கொடியின் தண்டு மதுவில் நுரையை நிறைத்தது.

பின்னர் கிழங்குகளிலிருந்தும் அரிசியிலிருந்தும் எரியும் அனற்துளி போன்ற கடும்மது வாற்றி எடுக்கப்பட்டது. ஊன் புளிக்க வைத்த குமட்டும் கெடுமணம் கொண்டதும் பித்தெடுக்கவைப்பதுமான மது ஒன்று அரிதாக சிலரால் அருந்தப்பட்டது. பின்னர்தான் பிரஃபாச க்ஷேத்ரத்தின் கடலோர எல்லையில் செறிந்திருக்கும் பெருநாணலின் இளந்தளிரைப் பிழிந்து சாறெடுத்து அதை மதுவுடன் கலக்கலாம் என்று கண்டுபிடித்தனர். அது மதுவின் மயக்கை மேம்படுத்தியது. அதை அருந்தினால் எண்ணங்களும் கனவுகளும் மட்டுமன்றி கண்முன் தெரியும் காட்சிகளும்கூட நொறுங்கி ஆயிரம் பல்லாயிரம் சிதறல்களாக மாறிவிடும் என்று கூறினார்கள்.

இளவேனில் தொடங்கியதும் அந்த நாணல் பூக்கத் தொடங்கியது. ஓயாது தளிர்விட்டுக்கொண்டே இருக்கும் நாணல் அது. சில நாட்களாகவே அவற்றில் தளிர் எழாமை கண்டு இளையோர் முதியோரிடம் உசாவினர். தளிர்

எழவில்லை எனில் மலர் எழப்போகிறது என்றனர் மூத்தோர். சதுப்பின் உள்ளிருந்து சிறிய கூரிய துளைகள் உருவாகி வந்து வாய் திறந்தன. அவை என்ன என்று நோக்கிய இளையோர் சிறு நாணல்களை உள்ளே விட்டு வெளியே எடுத்தனர். அவை சிறுவண்டுகள். முட்டையிலிருந்து வெளிவந்து சிறகுகொண்டு மெல்ல எழுந்து கொண்டிருந்தன. பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மலர்வது அந்த நாணல் என்று பின்னர் மூத்தவர் வகுத்தனர். பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை முட்டை பொரித்து வெளிவருபவை அந்த வண்டுகள்.

அந்நாணலை அவர்கள் கூர்ந்து நோக்கிக்கொண்டே இருந்தனர். அவர்களின் இல்லங்கள் அந்த நாணலால் அமைந்தவை. அந்த நிலமே அந்நாணலால் மூடப்பட்டு அமைந்தது. அவர்களின் இல்லங்களின் பெட்டிகள், கலங்கள், பீடங்கள் நாணலே. நாணல் நாரால் சிறந்த மரவுரி ஆடைகளை நெய்து அணிந்தனர். அந்நாணலில் நிகழும் ஒவ்வொரு சிறு மாற்றத்தையும் அவர்கள் அறிந்திருந்தனர். நாணல் இலைகளின் பல்லாயிரம் பச்சை உடைவாட்களுக்கு நடுவிலிருந்து உயரமான கொடித்தூண்போல தண்டு எழுந்தது. அதில் வெள்ளியாலான மாபெரும் செண்டுபோல் மலர்கள் தோன்றின. தூய வெண்ணிற மலர்கள்.

அவற்றில் தேன் குடிப்பதற்கென்று அதுவரை அந்நிலத்தில் தோன்றியிராத பலநூறாயிரம் வண்டுகள் வந்தன. மின்னும் மணியுடல் கொண்டவை. குருதித்துளி போன்றவை. விழிகளென சிறகுகள் விரிந்த பட்டாம்பூச்சிகள். சில பட்டாம்பூச்சிகள் உள்ளங்கையளவு பெரிய சிறகுகள் கொண்டிருந்தன. அந்த மலர்களுக்காகவே பிறந்து அதன்பொருட்டே தவம் செய்து அங்கு வந்தவை அவை.

தொலைவிலிருந்து நோக்கியபோது அப்பால் அலைகொண்ட கடல் அருகணைந்து நுரை எழுப்பி நின்றிருப்பதாகவே தோன்றச்செய்தது. அதற்கு மேலெழுந்த சிற்றுயிர்கள் அலைமேல் துமிகளென, துளிகளென சுழன்றன. காற்று நாணல் இலைகளை கொப்பளிக்கச் செய்து கடலலைபோல் ஓசையெழுப்பியது.

மது செய்து விற்கும் அடுமனையாளன் ஒருவன் அந்த மலரின் சாறு மேலும் கள்மயக்கு கொண்டதென்பதை கண்டுபிடித்தான். யானைகள் அந்த மலரை உண்பதற்காகவே நெடுந்தொலைவிலிருந்து தேடிவந்தன. பிரஃபாச க்ஷேத்ரத்தில் சதுப்புநிலம் முழுக்க யாதவர்களின் குடிகள் அமைந்துவிட்டிருந்தமையால் அவை நெடுந்தொலைவிலேயே கடலோரமாக இறங்கி மணல்விளிம்பினூடாகவே நாணல்குவையை அடைந்து அம்மலரை உண்டன. நாணல் புதருக்குள் கால்விரித்து நீந்திச் சென்று துதிக்கையால் அம்மலர்களைப் பற்றி கீழே தாழ்த்தி அவை உண்டன. அவை உண்டு சென்ற மிச்சங்களை உண்ண எருமைகளும் பன்றிகளும் முட்டி மோதின.

அவன் ஒரு சிறு காவல்மேடையில் நின்று பார்த்தபோது யானை முதல் கண்ணுக்குத் தெரியா சிற்றுயிர் வரை அனைத்துமே அந்த நாணல் மலரை உண்பதற்கு முட்டித் ததும்பிக்கொண்டிருப்பதை கண்டான். அதன் பின்னரே அது ஓர் அரிய பொருளென்று அவன் கண்டுகொண்டான். அந்த மலரை பறித்துக் கொண்டுவந்து அரைத்து சாறெடுத்து வடிகட்டி முதலில் தான் வளர்க்கும் முயல்களுக்கு கொடுத்தான். அக்கணமே அவை உயிர் துறந்தன. அது கொடுநஞ்சென்று

அறிந்த பின்னர் மேலும் நீர்க்கவைத்து அவற்றுக்கு அளித்தான். ஏழுமுறை நீர்க்கவைத்தபோது அது முயல்களை பித்தாக்கியது.

அவை நிலத்திலிருந்து சுருள்வில்லால் இயக்கப்பட்டவைபோல் எழுந்து குதித்தன. ஓடிச்சென்று சுவர்களில் முட்டி சுருண்டு விழுந்தன. ஒன்றையொன்று கடித்துக் குதறின. உடல்கவ்விக்கொண்டு புரண்டன. அவன் அச்சாறை நூறு முயல்களுக்கு அளித்தான். தன் தோட்டத்திற்கு வந்து பார்த்தபோது தோட்டமெங்கும் பந்துகள்போல் எழுந்து எழுந்து துள்ளிக்கொண்டிருந்த முயல்களைக் கண்டு திகைதான். அவை சிறகு கொண்டவைபோல வானில் எழ முயன்றன. அவற்றின் விழிகள் விரிந்து முத்துக்கள்போல் தெரிந்தன.

ஓடிச்சென்று தன்னுடன் பணியாற்றுபவனிடம் இரு கைகளையும் விரித்து "கண்டுகொண்டேன்! பெருங்களிப்பை அளிக்கும் அருமருந்தொன்றை கண்டுகொண்டேன்! மதுக்களில் இது அரசன். இந்திரனுக்கு நிகரானவன்!" என்றான். அவர்கள் திகைப்புடன் "என்ன?" என்றனர். அந்த நஞ்சில் ஒரு துளியை தொட்டு ஒருவனின் நாக்குக்கு அடியில் வைத்தான். சற்று நேரத்திலேயே அவன் விழிகள் பெரிதாக நாக்குழற வாய்கோணலாகி சிரித்து கைநீட்டி பொருளில்லாத சொற்கள் பேசி சுழன்று ஆடத்தொடங்கினான். மற்றவர்கள் திகைப்புடன் அவனை பார்த்தனர்.

"இது போதும்! இனி வேறெந்த மதுவும் இங்கு வடிக்க வேண்டியதில்லை!" என்றான் முதிய அடுமனையாளன். "ஆம், இது ஒன்றே போதும்!" என்றனர் பிறர். "இப்போது இதை நாம் வெளியே கொண்டுவரவேண்டியதில்லை. இன்னும் நாணல் முழுமையாக பூக்கத் தொடங்கவில்லை. பல இடங்களில் தண்டுகள் மேலெழுந்துகொண்டே இருக்கின்றன. முழுநிலவு

எழும் நாளில் இங்கு இளவேனில் விழவு எழும். கொண்டாடப்படாவிட்டாலும் இளவேனிலில் இங்குள்ள அனைவருக்கும் இதன் சாறு வடித்த இனிய மது வழங்கப்படும். இளவேனிலை அவர்கள் கொண்டாடுவார்கள்" என்றான் முதியோன்.

"அவர்கள் இப்புவியுடன் தங்களைக் கட்டியிருக்கும் எடையென்பதை இழப்பார்கள். இங்கு தங்கள் வாழ்வை பிணைத்திருக்கும் உறவென்பதை மறப்பார்கள். அனைத்து நினைவுகளுக்கும் தடையாக இருக்கும் நெறியென்பதை துறப்பார்கள். தேவர்களுக்குரிய களியாட்டு மட்டுமே இங்கு எஞ்சியிருக்கும்" என்று அவன் சொன்னான். "ஆம், தேவமது! தேவமது!" என்று பிறர் கூவினார்கள். அவர்கள் ஒரு சிறு குழுவென ஆனார்கள். எவருமறியாமல் அந்த மதுவைக் காய்ச்சி வாற்றி சேர்த்து வைப்பது என்று முடிவு செய்த்னர்.

அதன்பின் நாணல்பூக்களை தின்பதற்கு வரும் யானைகளையும் பன்றிகளையும் விரட்டும் பொருட்டு முழவுகளுடன் கடல்நீர் எல்லையிலும் வீரர்கள் நிறுத்தப்பட்டனர். இரவும் பகலும் முழவுகள் முழங்கி அவ்விலங்குகளை துரத்திக்கொண்டே இருந்தன. காற்றிலேயே சுழன்று முழவை அடிக்கும் காற்றாடியுடன் இணைக்கப்பட்ட சுழற்கோல்களை ஒருவன் கண்டுபிடித்தான். அதன்பின் நாணல்வெளி உறுமிக்கொண்டே இருந்தது. நாணல் மலர்கொண்டு எழுந்ததும் தெப்பங்களில் சென்று அவற்றை வெட்டிச் சேர்த்து கொண்டுவந்தனர். மர உரலில் இட்டு இடித்து பிழிந்து சாறெடுத்தனர். ஏழு முறை நீர்க்கவைத்து மலர்த்தேனும் கரும்புச்சாறும் கலந்து இனிமையாக்கினர். அரித்து தூய்மை செய்தனர். மரத்தாலான பெருங்குடுவைகளில் ஊற்றி நொதிக்க வைத்தனர்.

இளவேனிலுக்கு முன்னரே பெண்டிர் ஒவ்வொருவரும் அதற்காக அரிய உணவுகளை ஒருக்கி வைத்திருந்தனர். இன்கனிகளை உலரச்செய்து தேனிலிட்டு ஊறவைத்தனர். உலரவைக்கப்பட்ட ஊனும் பருப்புகளும் மூங்கில்குழாய்களுக்குள் இட்டு இறுக மூடப்பட்டன. இன்கிழங்குகள், வெல்லப்பொடியிட்டு நெய்யுடன் உருட்டப்பட்ட இன்னுருளைகள் என பல நாட்கள் இடைவெளியே இல்லாமல் உண்டு தீர்ப்பதற்கான உணவு ஒருங்கியிருந்தது.

இசைக்கலைஞர்கள் தங்கள் முழவுகளையும் யாழ்களையும் ஒருக்கினர். அங்கு வந்து சில நாட்களிலேயே சூதர்கள் அந்த மூங்கிலின் தண்டைப்போல் சிறந்த புல்லாங்குழல் இல்லை என்பதை கண்டுகொண்டனர். இயல்பிலேயே அது புல்லாங்குழலாக மாறும் தன்மை கொண்டிருந்தது. அதை துளைத்த வண்டுகளால் அதற்குள் சென்ற காற்று இசையாக மாறியது. மறுபுறம் கடல் இருந்தமையால் ஓயாத காற்றில் அந்நாணல் குவையிலிருந்து எப்பொழுதும் பல ஆயிரம் புல்லாங்குழல்கள் எழுப்பும் இசை ஒன்றெனத் திரண்டும் பல நூறெனப் பிரிந்தும் ஆடிச்சுழன்று ஒன்றிணைந்தும் கேட்டுக்கொண்டிருக்கும்.

அதை வெட்டி துளையிட்டு மீட்டிய முதல் சூதன் புல்லாங்குழலில் ஒருபோதும் கேட்டிருக்காத ஆழ் முழக்கம் கொண்ட இசையொன்றை எழுப்பினான். அதன்பின் எளிய புற்குழல்களை ஊத எவருமே விரும்பவில்லை. அக்குழலுக்குள் நிறைப்பதற்குத் தேவையான மூச்சுக்கான பயிற்சியில் ஈடுபட்டனர். மூச்சை தொகுத்து உள்ளே வழங்குவதற்கான சிறு குழாய்களை கண்டுபிடித்தனர். ஊதுவாயில் மெழுகால் வாய்ப்பொருத்து செய்து ஊதினால் மூச்சு சிதறாமல்

நிற்குமென்று கண்டுபிடித்தனர். பலநூறு புல்லாங்குழல்கள் அந்த இளவேனில் விழாவுக்காக ஒருங்கின.

நாணல்களை வெவ்வேறு தடிமனில் நீளமாக வெட்டி அடுக்கி உருவாக்கப்பட்ட இசைக்கலன்கள் அவர்களுக்கு செவிக்கினியவையாக இருந்தன. சிட்டுக்குருவிச் சிலைப்புமுதல் கூகைக் குழறல்வரை அதில் ஒலியாக எழுந்தது. உலோக ஒலியும் முழவொலியும் உருவாகியது. அவற்றை வேறொரு நாணல் தலையால் விரைந்து தட்டி உருவாக்கப்பட்ட இசை கொஞ்சியது, துள்ளி ஓடியது, சிரித்தது.

வணிகர்கள் புறநீர் பெருக்கினூடாகச் சென்ற மென்மரக்குடைவுப் படகுகளில் சிந்துவை அடைந்து அதனூடாக தேவபாலபுரம் சென்று அங்கிருந்த அயல் வணிகரிடம் புதிய ஆடைகளையும் அருமணிகளையும் வாங்கி வந்தனர். பிரஃபாச க்ஷேத்ரத்தில் சந்தைகள் அமையவில்லை. “நம்மிடம் இருக்கும் கருவூலத்திற்குக் காப்பு என்பது இந்நிலத்திற்குள் வேறெவரும் வராமலிருப்பதே” என்று ஃபானு அறிவுறுத்தினார். “விற்கவேண்டியற்றை நாம் கொண்டுசென்று விற்போம். வாங்குவன நமக்கு கைமாறப்படட்டும். இது அயலவர் கால்படாமல் நிலைகொள்ளும் கன்னி நிலமே ஆகுக!”

பிரஃபாச க்ஷேத்ரத்தில் அகிடுபெருத்த மோட்டெருமைகளின் பாலில் இருந்து திரண்டுவரும் மஞ்சள் பொற்துகள்போல் ஒளி விடும் தூய நெய்க்கு அதற்குள்ளாகவே தேவபாலபுரத்தில் பெருவிருப்பம் இருந்தது. விளிம்புபொருத்தி உருக்கி ஒட்டப்பட்ட நூறு நெய்க்கலங்களை இருபுறமும் நிகரெடையில் கட்டி நீருக்குள் போட்டு முட்டைகளை உடலெங்கும் ஏந்தி வரும் மீன்போல தேவபாலபுரத்தை நோக்கி செல்லும் பிரஃபாச

க்ஷேத்ரத்தின் படகுகளைக் காத்து அங்கே வணிகர்கள் நின்றிருந்தனர். தொலைவிலேயே திரண்டு வரும் படகு நிரைகளைக் கண்டு அவர்கள் கொடிகளை வீசியும் கொம்புகளை ஊதியும் "எங்களிடம் வருக! எங்களிடம் வருக!" என்று கூவினர். பொற்காசுகளை கையில் அள்ளி மேலே தூக்கிப்போட்டு பிடித்து "இங்கே! இங்கே!" என்று ஆர்ப்பரித்தனர்.

பிர꞉பாச க்ஷேத்ரத்திலிருந்து கொண்டு வரப்படும் புற்சாறு கொண்ட மதுவுக்கும் அங்கே பெருமதிப்பு இருந்தது. பீதர்களும் யவனர்களும் அவற்றை விரும்பி வாங்கினார்கள். பெரிய கொப்பரைக் காய்களுக்குள் அடைக்கப்பட்டு களிமண் மூடியிட்டு இறுக்கி அவை கொண்டுவரப்பட்டன. யவன வணிகர்கள் அவற்றை வாங்கி தூய்மைப்படுத்தி படிகப்புட்டிகளில் மீண்டும் அடைத்து தங்கள் நாட்டுக்கு கொண்டுசென்றனர். செல்லும் வழியிலெல்லாம் சிற்றூர்களில் அவை மும்மடங்கு நான்மடங்கு ஏழுமடங்கு பன்னிரு மடங்கு விலைவைத்து வாங்கப்பட்டன.

தேவபாலபுரத்திலிருந்து சென்ற செல்வம் பிர꞉பாச க்ஷேத்ரத்தில் புதிய இல்லங்களாகியது. ஆழ ஊன்றிய மரக்கால்களின் மேல் ஏழு அடுக்கு மாளிகைகள் எழுந்தன. அவை மென்மரத்தட்டிகளால் சுவரிடப்பட்டவை. நாணல் தாள்களால் கூரையிடப்பட்டவை. உள்ளே பீதர்நாட்டுப் பட்டு திரைச்சீலைகளும் பட்டு விரிக்கப்பட்ட மெத்தை பதிந்த பீடங்களும் மஞ்சங்களும் கொண்டிருந்தன. அனைத்து அறைகளிலும் இடைவிடாது தூபம் எரிந்துகொண்டிருந்தது. அங்கேயே தூபத்திற்கான பொருளை உருவாக்கினர். பிர꞉பாச தரு என்றும் லோகநாசிகை என்றும் அழைக்கப்பட்ட

அப்புல்லின் இலைகளை நிழலில் காயவைத்து தூபமிடுவதே நறுமணமாகியது.

அது மூக்குச் சவ்வை சற்றே எரிக்கும் மணம் கொண்டிருந்தது. புதியவர்கள் அதை முகர்ந்தால் தும்மல்கொண்டு விழிநீர் வார்ப்பார்கள். யாதவர்களுக்கு அது இயல்பான மணமாக மாறியிருந்தது. அவர்களின் கன்றுகளுக்கு மேல் அத்தைலத்தை பூசி காட்டுக்கு அனுப்பினார்கள். தொழுவங்களில் புகையெழுப்பினார்கள். யாதவர்களின் மணம் என்று அது வெளியே கருதப்பட்டது.

இளவேனில் ஐந்தாம் நிலவன்று விழவு என்று மூத்தவர் ஃபானுவின் அறிவிப்பு எழுந்ததும் பிரஃபாச க்ஷேத்ரம் வாழ்த்தொலிகளால் கொந்தளித்தது. களிவெறிகொண்ட மக்கள் தெருக்களில் கைவிரித்தபடி ஓடினார்கள். கூச்சலிட்டு ஒருவரை ஒருவர் தழுவிக்கொண்டார்கள். பிறர் கூடி ஒருவரை காற்றில் மேலே எறிந்து பிடித்தார்கள். தரையிலிட்டு புரட்டினார்கள். ஆடைகளை கழற்றிவிட்டு ஓடவைத்தனர். பின்னர் அது பூசலாகியது. கைக்குக் கிடைத்த பொருட்களைக்கொண்டு ஒருவரை ஒருவர் தாக்கிக்கொண்டனர். கட்டிப்புரண்டு புழுதியில் விழுந்தெழுந்து சண்டையிட்டனர். மீண்டும் சிரித்து அதை களியாட்டென மாற்றிக்கொண்டனர்.

அறிவிப்பின்போது தொடங்கிய அந்தக் களிவெறி எழுந்தெழுந்து சென்று அன்றிரவு குடி கொண்டாட்டத்தில் முடிந்தது. பின்னர் விழவுநாள் வரை குடியும் களிப்பும் துயிலும் விழிப்புமென

நாட்கள் சென்றன. முந்தையநாள் முன்னிரவிலேயே அனைவரும் இல்லங்களுக்குள் விழுந்து தூங்கினர். நள்ளிரவில் நான் எழுந்து மாளிகை முகப்பில் நின்று பார்த்தபோது பந்தங்கள் எரியும் பிரஃபாச க்ஷேத்ரத்தில் யாதவக் குடியிருப்பு முழுக்க விலங்குகளின் செருக்கடிப்போசை மட்டுமே கேட்டுக்கொண்டிருந்தது. குடிகளில் ஒருவர் கூட விழித்திருக்கவில்லை.

என்னருகே நின்றிருந்த மூத்தவர் சுருதன் "துயின்றுகொண்டிருக்கிறார்கள். நாளை முற்புலரி எழுகையில் இளவேனில் விழா தொடங்கும். அத்தனை யாதவரும் முழுதணிகோலத்தில் தெருவிலிறங்கி கொண்டாடுவார்கள்" என்றார். "அது எவ்வண்ணம் என்று எனக்கு புரியவில்லை. அவர்கள் எப்போது எழுவார்கள்? எப்போது அணி செய்துகொள்வார்கள்?" என்றேன். "இந்நிலத்தில் வண்டுகள் துயின்றுகொண்டிருப்பதைப்போல. அவற்றுக்குச் சிறகு முளைத்துக்கொண்டே இருக்கிறது" என்றார் சுருதன். "ஐந்தாம் நிலவு என்பது மானுடர் வகுப்பது அல்ல. அதை வகுப்பது நிலவு. நாம் மட்டுமல்ல இங்குள்ள அனைத்து உயிர்களும் அதை அறியும்."

என் உளம் எழுந்தெழுந்து அமைந்துகொண்டிருந்தமையால் நான் அன்றிரவு தூங்கவில்லை. மஞ்சத்தில் வெறுமனே விழித்து படுத்திருந்தேன். தொலைவில் முரசொலி எழுந்தது. நான் எழுந்து வெளிவந்து பார்த்தபோது விடிவெள்ளியை கண்டேன். முரசொலி எழுவதற்குள்ளாகவே கடலலை ஒன்று பொங்கி எழுந்ததுபோல் யாதவக் குடிகளில் இருந்து மக்கள் விழித்தெழுந்த ஓசை முழங்கியது. அனைத்து இல்லங்களிலும் புது விளக்குகள் முளைத்தன. விளக்குகள் இருளில்

அங்குமிங்கும் மிதந்தலையத் தொடங்கின. பிரஃபாச க்ஷேத்ரம் எங்கும் எரிபற்றி படர்வதுபோல் விளக்கொளி பெருகியது. அங்கு மட்டும் ஒரு புலரி எழுந்ததுபோல. விளக்கொளியில் எழுந்த நிழல்கள் பல்லாயிரம் பூதங்கள் அங்கு இறங்கிவிட்டதுபோல தோன்றச் செய்தன.

வானம் ஒளிகொண்டு முகில்கள் நிறம்மாறி புலரிவெளிச்சம் நகர் மேல் பரவியபோது மிதக்கும் கற்பலகைப் பாதைகள் அனைத்திலும் பட்டிலும் பொன்னணி செய்த பருத்தியிலும் அணியாடைகள், மென்துகில்கள், முகிலாடைகள் அணிந்த யாதவர்கள் நிறைந்திருப்பதை கண்டேன். விந்தையென ஒன்று நிகழ்ந்தது. சதுப்பில் பல்லாயிரம் பல்லாயிரம் சிறிய விழிகள் என துளைகள் திறந்தன. ஒளிரும் சிறகுகள் கொண்ட பட்டாம்பூச்சிகள் மேலெழுந்தன. பொன்னிறச் சிறகு கொண்டவை. குருதிச்செந்நிறச் சிறகு கொண்டவை. விழிகள் மலர்ந்த சிறகுகள் கொண்டவை. அவை பெருகிப்பெருகி இளவெயில் ஊறிப் பெருகியிருந்த வானை முற்றாகவே நிறைத்தன. வண்ணங்களால் கண்குருடாக முடியும் என்று அன்று கண்டேன்.

வண்ணத்துப்பூச்சிச் சிறகுகள் நடுவே பெரிய வண்ணத்துப்பூச்சிகள் என சிறுவர்களும் சிறுமியரும் களித்தனர். அவர்கள் மூங்கில் கூடைகளில் உணவைக் கொண்டுசென்று ஒருவருக்கொருவர் அளித்து வாழ்த்து தெரிவித்தனர். பெண்கள் முப்பிரி, ஐம்பிரி குழல்களை தோளுக்கு மேல் விரித்திட்டு அவற்றில் மலர்சூடி, முலைகள் மேல் தொய்யில் எழுதி பறவைகள்போல் அங்குமிங்கும் நடந்துகொண்டிருந்தனர். அவர்கள் கால்கள் மண்ணில் படவில்லை என தோன்றியது. காற்றில் புகையென,

வண்டுகளென, வண்ண இறகுகளென அவர்கள் தாவிக்கொண்டிருந்தனர்.

ஒவ்வொரு இல்லத்திலிருந்தும் கொம்புகளும் மணி ஓசைகளும் எழுந்தன. அவர்கள் கதிரவனையும் இந்திரனையும் வழிபடுகிறார்கள் என்று தெரிந்தது. மூதாதையருக்குரிய உணவுப்படையல்கள் அங்கு நிகழ்ந்தன. இல்லங்களுக்குப் பின்னால் தென்மேற்கு மூலையில் சிறுகற்களாக நிறுவப்பட்டிருந்த மூதாதையருக்கு முன்னால் ஏழு இலைகள் பரப்பி ஊனுணவும் இன்னுணவும் படைத்து வழிபட்டனர்.

நான் புரவியிலேறி பாதையினூடாகச் சென்றபோது எனக்கு முன் வந்த அத்தனை முகங்களும் சிரித்து மலர்ந்திருந்தன. விழிகளில் உவகை ஒளியென ததும்பிக்கொண்டிருந்தது. ஓராண்டுக்கு முன்னர் அவர்கள் வாழ்ந்த நிலம் கடல்கொண்டது என்பதையோ அவர்களில் மூன்றில் ஒருவர் அங்கு இறந்தார்கள் என்பதையோ வரும் வழியில் மீண்டும் மூன்றிலொருவர் மறைந்தார்கள் என்பதையோ அவர்கள் எவருமே எண்ணியிருப்பதுபோல் தெரியவில்லை. ஊழை மனிதன் வெல்வது இக்களியாட்டுகளினூடாகத்தான். தெய்வங்களுக்கு முன் ஓர் அறைகூவல். என்னை நீங்கள் என்ன செய்யமுடியும் என்று மானுடன் ஊழிடமும் தெய்வத்திடமும் கேட்கிறான்.

அவ்வண்ணம் அகன்றிருந்து அவர்களை பார்த்துக்கொண்டிருப்பதே பிழை என்று தோன்றியது. நானும் அவர்களுடன் கலந்திருக்கவேண்டும். நான் மது அருந்த விரும்பினேன். மது ஒன்றே என்னை மறக்கச்செய்து என் எண்ணங்களை அவர்களுடன் முற்றாக கலக்கும் என்று தோன்றியது. புரவியை நிறுத்திவிட்டு அங்கே மது

விற்றுக்கொண்டிருந்த ஒருவனிடம் மது கோரினேன். “விற்பனைக்கு அல்ல இளவரசே, இன்று அத்தனை மதுவும் விலையற்றது. விலையை கருவூலத்திலிருந்து முன்னரே அளித்துவிட்டனர்” என்றான். நான் உடல்நிறைய மது அருந்திவிட்டு நகரினூடாகச் சென்றேன். என் புரவியின் கால்கள் நிலம்விட்டு மேலெழத் தொடங்கின.

# கல்பொருசிறுநுரை - 69

**பகுதி ஆறு : படைப்புல் – 13**

எல்லாக் கொண்டாட்டங்களையும்போல ஆர்வத்துடனும் தயக்கத்துடனும் மெல்ல தொடங்கியது இளவேனில் விழா. ஆர்வம் எப்போதும் இருப்பது. உவகையை நோக்கிச் செல்லும் உயிரின் விழைவு அது. தன்னை மறந்தாடவும், தக்கவைத்துக்கொண்ட அனைத்தையும் கைவிடவும், அனைத்திலிருந்தும் விடுபடவும், வேறொரு வெளிக்குச் சென்று திளைக்கவும் உள்ளம் கொள்ளும் துடிப்பு. ஆனால் அறியாத ஒன்றைப் பற்றிய அச்சம் எப்போதும் இருக்கிறது. ஈட்டி, சேர்த்து, தக்கவைத்துக் கொண்டிருப்பவற்றின் மேலான பற்று தடுக்கிறது. தன்முனைப்பும் தன்னுணர்வும் தன் இடம் குறித்த பதற்றமும் நிலைகொள்ள வைக்கிறது.

எல்லாக் கேளிக்கைகளுக்கும் எவர் முந்தி எழுகிறார்கள் என்பதிலிருந்து ஒருவர் அகத்தின் எடையென்ன என்பதை உணர முடியும். அகத்தில் எடையே அற்ற குழந்தைகள்

முதலில் எழுகின்றன. மென்காற்றில் பறக்கும் பட்டுக்கொடிகள்போல. இலையசையாதபோதே சுழன்றலையும் பஞ்சுப்பிசிறுகள்போல. விழா என்ற சொல் எழுவதற்கு முன்னரே அவை கிளம்பிவிடுகின்றன. பின்னர் பெண்கள், பின்னர் இளையோர், அதன் பின்னர்தான் முதிர்ந்த ஆண்கள். இறுதியில்தான் முதியோர். அரசகுடியினரோ அதற்கும் பின் எழ வேண்டியவர்கள். அதுவரை கற்பாறையென தங்களை நிலைநிறுத்திக்கொள்ள வேண்டியவர்கள்.

பிரஃபாச க்ஷேத்ரத்தின் தெருக்களிலெல்லாம் நுரைத்துத் ததும்பி ஆடி மகிழ்ந்துகொண்டிருந்த மக்களை தெருக்களில் புரவியில் ஓடியும் காவல்மாடங்களில் ஏறி நின்றும் நான் பார்த்துக்கொண்டிருந்தேன். முதலில் இளையோரும் பின்னர் பெண்டிரும் பின்னர் ஆடவரும் என அவர்கள் வரும்தோறும் அப்பெருந்திரளின் வண்ணமே மாறிக்கொண்டிருந்தது. அசைவுகள் மாறின, ஓசைகள் மாறுபட்டன. கிளிக்குரல்கள் குயில்குரல்களாகி, அகவல்களாகி, முழவோசை என்றாகி, முழக்கமாக மாறின. விந்தை என்னவென்றால் சில முதியோர் இளமைந்தருக்கு நிகராக எழுந்தனர். சில குழந்தைகள் முதியோருடன் ஒட்டிக்கொண்டு இறுதியாகவே வந்தன. மானுடரின் வண்ணங்களை வரைந்து தெய்வம் சலிப்படைவதே இல்லை.

அனைத்து தெரு முனம்புகளிலும் பெருங்கலங்களில் மது கொண்டுவந்து வைக்கப்பட்டது. மதுவை விலைக்கு விற்கலாகாது என்று அரசனின் ஆணை இருந்தமையால் குடிகளுக்கு கணக்கின்றி அளிக்கப்பட்டது. மது அருந்துவதில் நிரை நேர் தலைகீழாக இருந்தது. முதலில் முதியோர் அருந்தினர். பின்னர் ஆடவர். அதன் பின்னர் இளையோர்.

தயங்கியபடி முதிய பெண்கள். சிரித்து நாணி கூச்சலிட்டபடி கூட்டமாக வந்து கன்னியர். கன்னியர் ஊட்ட சிறுவர்களும் சிறுமியரும் அருந்தத் தொடங்கிய பின்னர் அனைத்துத் தளைகளும் கடந்தன. மக்கள் விலங்குகள் என, சிறு பூச்சிகள் என, ஒற்றை உடல் திரளென மாறினர்.

விழவுகளில் மானுடர் ஒருவரை ஒருவர் புதிதெனக் கண்டுகொள்கிறார்கள். வெல்லவும் வெல்லப்படவும் ஏதுமில்லாத உறவு. பதியவும் நிலைக்கவும் தேவையில்லாத உலவுதல். பஞ்சுத்துகள்கள்போல வானில் ஒட்டிக்கொண்டு மெல்ல பறந்திறங்குகின்றனர். ஆணும் பெண்ணும் விழவுகளில் மிக இயல்பாக உளம்தொட்டுக் கொள்கிறார்கள். உடலிணைந்துவிடுகிறார்கள். கள் எல்லா எல்லைகளையும் கடக்கச் செய்கிறது. தொன்மையான மரபுகள் அனைத்துக் கட்டுகளையும் தளர வைக்கின்றன. நாணல் புதர்கள்தோறும் இளையோர் தழுவி நின்றிருப்பதை உடல்பிணைத்துக் கிடப்பதை கண்டேன். ஒவ்வொரு பொருளிலும் காமம் நிறைந்திருந்தது. கள் என்பது என்ன? மரம் கொண்ட காமம். இனிமையை காய்ச்சி குறுக்கி எடுக்கும் மது என்னும் பித்து இப்புவி கொண்ட காமத்தின் உச்சம் அன்றி வேறென்ன?

நாணல்வெளிக்கு அப்பால் கடலோர மணற்பரப்பில் வேனில்விழாவுக்கான இடம் ஒருக்கப்பட்டிருந்தது. வண்ணம் பூசப்பட்ட நாணல்தட்டிகளை இழுத்து கட்டப்பட்ட நிழல்கூடாரங்களில் மூத்தவர் ஃபானுவும் உடன்பிறந்தோரும் கொலுவமரவேண்டும் என்று வகுக்கப்பட்டிருந்தது. அங்கே மணல்வெளி தூய்மை செய்யப்பட்டது. நாணலை உரித்து நாராக்கி பின்னப்பட்ட வண்ணக் கம்பளங்கள் விரிக்கப்பட்டன.

நாணலைக் கொண்டே வளைவுகளும் தொங்குபட்டங்களும் அணித்தூண்களும் ஒருக்கப்பட்டன.

சாம்பனும் பிரத்யும்னனும் அநிருத்தனும் ஃபானுவுடன் ஒற்றை இடத்தில் அமையவேண்டுமென்பது எனது எண்ணமாக இருந்தது. அதை நான் முன்னரே ஃபானுவின் அவையில் உரைத்தேன். "இப்போது இந்நகருக்குள் நான்கு பகுதிகளாக அமைந்திருக்கின்றன நமது தலைமைகள் என்பதே நமக்கு நலம் பயப்பது அல்ல. இவ்விழவில் தாங்கள் தலைமை கொள்ளவேண்டும். தங்கள் தலைமையை அவர்கள் ஏற்கிறார்கள் என்பது விழிக்கூடென தெரியவும் வேண்டும். அதற்கு அனைவரும் ஓரிடத்தில் கூட வேண்டும்" என்று நான் சொன்னேன்.

"அதிலென்ன? நான் ஆணையிடுகிறேன்" என்றார் ஃபானு. பிரஃபானு "நமது ஆணைகளை அவர்கள் தலைக்கொள்ளாமல் இருக்கக்கூடும்" என்று சொன்னார். சுருதன் "நான் அவர்களிடம் சென்று பேசுகிறேன்" என்றார். "அதில் பயனில்லை" என்று வீரா சொன்னார். "அவர்கள் இத்தருணத்தில் அவ்வண்ணம் வந்தமர்ந்தால் அதன் பின் இந்நிலத்தில் அவர்கள் தலைமை கொண்டு எழவே இயலாது போகும். அவர்கள் வரக்கூடும் என்று எனக்கு தோன்றவில்லை" என்றார். "நாம் முயல்வோம்" என்று நான் கூறினேன்.

இளவேனில் கொண்டாட்டத்தின்போது கடற்கரையில் ஃபானு அரசு வீற்றிருக்கையில் உடன் வந்து அமர்ந்திருக்கவேண்டும் என்று கோரி உடன்பிறந்தாரை பிரத்யும்னனிடமும் சாம்பனிடமும் தூதனுப்ப எண்ணினோம். ஆனால் அவர்கள் இளையோர் என்பதனால் அவர்களின் சொற்கள் செவிகொள்ளப்படுமா என்ற ஐயம் எழுந்தது. ஆகவே

சாத்யகியை சாம்பனிடமும் கிருதவர்மனை பிரத்யும்னனிடமும் அனுப்பினோம். அவர்கள் அப்பொறுப்பை உவந்து ஏற்றுக்கொண்டார்கள். பிர꞉பாச க்ஷேத்ரத்திற்கு வந்த பின்னர் அவர்கள் பெரும்பாலான பொழுதை இணைந்து வேட்டையாடிக் கழித்தனர். அரசப்பணிகளை செய்ய விழைந்தனர்.

இளவரசி கிருஷ்ணையிடமிருந்து மறுமொழி வந்தது. சாத்யகி வந்து அவருடைய மறுமொழியை ꞉பானுவின் அவையில் சொன்னார். சாம்பன் வந்து ꞉பானுவின் அருகமர்வதில் தடையேதுமில்லை, ஆனால் அவருடைய பீடம் ꞉பானுவுக்கு ஒரு படி கூட கீழே அமையமுடியாது, முற்றிலும் இணையாக அமையவேண்டும். ஆனால் விழவு தொடங்குகையில் தன்னை மூத்தவரின் இளையோன் என்று முன்வைப்பதில் சாம்பனுக்கு தடையேதுமில்லை.

அதைக் கேட்டு ꞉பானு சீற்றத்துடன் எழுந்து "அரசருக்கு இணையாக அரசமர விழைகிறானா அவன்?" என்றார். பிர꞉பானு "மூத்தவரே, மூத்தவரே" என்று சென்று அவர் கையை பற்றினார். "உளம் அமையுங்கள். இத்தருணத்தில் இவ்வளவேனும் அவர்கள் இறங்கி வந்தது நமக்கு நல்லூழ் என்றே கொள்ளுங்கள். அவர்கள் வரட்டும்" என்றார். சாத்யகி "நான் கிருஷ்ணையிடம் ஆம் அவ்வாறே ஆகுமென்று சொல்லளித்துவிட்டு வந்தேன்" என்றார். "நீங்கள் எவ்வண்ணம் சொல்லளிக்கலாம்? அரசருக்கு நிகராக தான் அமரவேண்டும் என்று ஒருவர் கேட்கும்போது ஆணை அளிக்க உங்களுக்கு என்ன உரிமை?" என்றார் வீரா.

சாத்யகி அச்சொற்களால் உளம் புண்பட்டார். "நான் என் கடமையை செய்தேன். இக்குடிக்கு அரசமுடியென ஒன்று இருந்தது. இளைய யாதவர் அதை சாம்பனுக்குத்தான்

அளித்துச் சென்றார். யாதவக் குடியின் நெறியின்படி மூத்தவர் ஆளவேண்டுமென்று நானும் கிருதவர்மனும் இணைந்து ஃபானுவை அரசமையச் செய்தோம்" என்றார். ஃபானு சீற்றத்துடன் "ஆனால் அது துவாரகையில். அங்கு தந்தையின் சொல் ஒருவேளை நின்று ஆளலாம், அவருடைய நகரம் அது. இது நான் உருவாக்கிய நகரம்" என்றார். சாத்யகி சினத்தை அடக்கி "இதன் கருவூலம் இன்னும் உங்கள் தந்தையுடையதே" என்றார்.

"அதை என்ன செய்யவேண்டுமென்கிறீர்கள்? அவ்வீணர்களிடம் பகிர்ந்துகொள்ளவேண்டும் என்கிறீர்களா?" என்று ஃபானு கேட்டார். "நான் அவ்வண்ணம் சொல்லவில்லை. நீங்கள் உங்களை இயல்பாகவே அரசர் என எண்ணவேண்டாம் என்றேன். முடியுரிமையில் அவர்களுக்கும் முறையான பங்கு உண்டு. அவர்களிடம் அதை நாம் கோரியே பெறவேண்டும். நிகராக அவர்கள் என்ன கோருகிறார்களோ அதை நாம் கொடுக்கவும் வேண்டும்" என்று சாத்யகி சொன்னார்.

வீரா "ஒருபோதும் இதற்கு ஒப்பலாகாது. மக்கள் சொற்களால் அல்ல, விழிகளால்தான் புரிந்துகொள்கிறார்கள். அரசருக்கு இணையாக சாம்பன் அமர்ந்தார் என்றால் இங்கு அரசருக்கு இணையானவர் அவர் என்பது நிறுவப்பட்டுவிடும். பின்னர் அதை எளிதில் மாற்ற முடியாது" என்றார். சாத்யகி "அவர்கள் தனியாக கடற்கரையின் வடமுனைக்குச் சென்று அமர்வதாகவே திட்டமிட்டிருந்தார்கள். அதற்காக அங்கே தங்களுக்கு வேனிற்பந்தல் அமைக்கவும் ஆணையிட்டிருந்தார். உங்கள் அருகே வந்தமரும்படி சொல்லி அவர்களை அழைத்து வந்தவன் நான். என் கடமை முடிந்தது. அவர்கள் உங்கள்

அரியணைக்கு கீழே அமரவேண்டுமா என்பதை நீங்களும் அவர்களும் இணைந்து முடிவு கொள்ளலாம்" என்றார்.

அவர் சென்றதும் பிரஃபானு "ஆயிரம் பேசினாலும் அவர் விருஷ்ணி குலத்தவர். அந்தகர்கள் முழுமுற்றான முடியுரிமை கொள்வதை அவரால் ஏற்க இயலாது. முடி அசுரர்களுக்கோ ஷத்ரியர்களுக்கோ செல்வதை அவர் விரும்பவில்லை. ஆனால் அது நம்மிடம் உறுதிகொள்வதையும் அஞ்சுகிறார். இரு பக்கமும் இரு எதிரிக்காய்களை நிறுத்தி நாற்களத்தில் அரசனை கட்டுப்படுத்துவதுபோல ஆடவிழைகிறார்" என்றார். "நானும் அவ்வண்ணமே எண்ணினேன்" என்றார் சுருதன்.

பிரத்யும்னனிடம் பேசச் சென்ற கிருதவர்மன் திரும்பி வந்து "பிரத்யும்னன் வருவான். அரசனுக்குரிய முறைமைகளை உனக்கு செய்வான். ஆனால் எந்நிலையிலும் தலைவணங்கவோ தாழவோ மாட்டான். இதை அவன் என்னிடம் முறையாக அறிவித்திருக்கிறான்" என்றார். "அவர்கள் இருவரும் பேசி முடிவு செய்திருக்கிறார்கள்! பேசி முடிவு செய்திருக்கிறார்கள்!" என்று ஃபானு கூவினார். "பொறுங்கள். அவர்கள் இயல்பாகவே அதை முடிவு செய்திருக்கவும் கூடும்" என்று நான் சொன்னேன். "அவர்கள் இருவருக்கும் ஒரே நோக்கங்கள் இருக்கின்றன. ஒரே முடிவுக்கு வருவதும் இயல்பே." சுருதன் என்னை நோக்கி "ஆம், இளையோன் சொல்வதும் மெய்யே" என்றார்.

"பிரத்யும்னன் இங்கிருந்து கிளம்பும் எண்ணத்தில் இருக்கிறார். அவருடைய தூதர்கள் ருக்மியிடம் பேசிக்கொண்டிருக்கிறார்கள். ருக்மி அவர்களுக்கு அளந்து அளிக்கவிருந்த நிலம் எது என்று இன்னும் முடிவு செய்யவில்லை. அங்குள்ள குடிகள் பிரத்யும்னனை அரசராக ஏற்க மறுக்கிறார்கள். அப்பேச்சுகள்

முடிந்து நிலம் முடிவு செய்யப்பட்டதும் அவர் இங்கிருந்து கிளம்பிச்செல்வார். அப்போது நாம் அவருக்கு முறையாகவே விடைகொடுத்து அனுப்புவோம். அவரை நம் நட்பு நாடாகவே பின்னர் கருதுவோம். இந்நிலையில் இப்போது பூசல் எழவேண்டியதில்லை. அவர்களை நாம் அரசருக்கு இணையாகவே இப்போது வைப்பதே முறை" என்றேன்.

கிருதவர்மன் "இது ஒன்றே இயல்வது. இதை நிகழ்த்துவதே நன்று" என்றார். "இன்னும் ஒரு நாள் இருக்கிறது இளவேனில் விழாவுக்கு. அதற்கு முன் இந்நிலைமையை மாற்ற எவராலும் முடிந்தால் அதை செய்யலாம்" என்றார் பிரஃபானு. "கணிகர் உடல்நலமின்றி இருக்கிறார். அவர் இருந்தால் இங்கிருந்து சொற்களாலேயே இதை நிகழ்த்தித் தருவார்" என்று ஃபானு கூறினார். கிருதவர்மன் அந்தச் சொற்களை கேட்டதாகக் காட்டாமல் விழிகளை வேறு பக்கம் திருப்பிக்கொண்டார். அன்று முழுக்க ஃபானுவின் உடன்பிறந்தார் ஒருவருக்கொருவர் பேசிப் பேசி பொழுது கழித்தனர். அதன் பின்னர் வேறு எதுவும் செய்வதற்கில்லை என்பதனால் அவ்வண்ணமே ஆகுக என்று முடிவெடுத்தனர்.

பிரஃபாச க்ஷேத்ரத்தின் கடலோரத்தில் செழித்த நாணல்தொகையிலிருந்து சில நாணல்கள் முற்றும்போது பொன்னிறம் கொண்டன. அவற்றை ஹிரண்யகுசம் என்றனர். அந்நாணல் தண்டுகளை வெட்டிக்கொண்டு வந்து நீரில் ஊற வைத்து வளைத்து முடைந்த அரியணை ஒன்று அமைக்கப்பட்டது. கைஎட்டும் தொலைவுக்கு அப்பால் நின்று பார்த்தால் அது பொன்னென்றே விழிமயக்கு காட்டியது. மூன்றடுக்குக் கூரை கொண்ட வண்ணப் பந்தலில் அரசமேடையில் அதை அமைத்தனர். அதைச் சூழ்ந்து மணலில்

நாணல் நாரால் செய்யப்பட்ட வண்ண விரிப்புகளைப் போட்டு குடிகளும் பிறரும் அமர்வதற்கு இடம் ஒருக்கினர்.

ஃபானுவின் அரியணைக்கு இருபுறமும் அதே உயரத்தில், ஆனால் சற்றே சிறிதாக, இரு பீடங்கள் சாம்பனுக்கும் பிரத்யும்னனுக்கும் அமைக்கப்பட்டன. அவையின் முகப்பில் அநிருத்தனுக்கென பீடம் ஒன்று போடப்பட்டது. இளையோர் அமர்வதற்கான தனிப் பீடங்கள் இருபுறமும் நின்றன. பந்தலுக்கு வெளியே இணைப்பாக அமைந்த சிறுபந்தலில் அரசகுடியினரும் மகளிரும் அமரும் இடங்கள் ஒருக்கப்பட்டன. அங்கே அரசி கிருஷ்ணைக்கான தனிப் பீடம் ஒன்று போடப்பட்டது.

அப்பீடங்கள் போடப்படுவதை நானே சென்று பார்வையிட்டேன். அப்பீடங்கள் அமைப்பதில் ஒவ்வொரு தருணத்திலும் ஐயங்களும் குழப்பங்களும் எழுந்துகொண்டே இருந்தன. ஒருகணத்தில் இதேதான் துவாரகையிலும் நிகழ்ந்தது என்று நினைவுகூர்ந்தேன். அங்கு ஒவ்வொரு வெளிநாட்டு அரசர் நகர்புகுகையிலும் அவர்களின் அரசமுறைமைகள் என்ன, படிநிலைகள் என்ன என்பதை விரிவாக உசாவி அறிந்துகொள்ள வேண்டியிருக்கும். அவர்களின் ஒவ்வொரு அமைச்சரும் சற்றே மாறுபட்ட படிநிலைகளையே கூறுவார்கள். அப்படிநிலைகளை வெளிப்படையாகக் கூறவும் தயங்குவார்கள்.

ஏனெனில் அப்படிநிலைகளை அவர்களே மாற்றினார்கள் என்றோ அமைத்தார்கள் என்றோ தோன்றுவது அவர்கள்மேல் வஞ்சங்களை உருவாக்கும். அவர்களிடமிருந்து அச்செய்திகளைப் பெற்று முடிவெடுத்து நம் பொறுப்பில் அதைச் செய்து பழிகொள்ளமால் முடிப்பதென்பது ஒரு நுண்ணிய அரசாடல். பல தருணங்களில் நம்மிடம் அந்தப்

படிநிலைகளைச் சொன்னவர்களே அரசர் முன்போ அவையிலோ முற்றிலும் மாற்றிச் சொல்லி நம்மை குற்றம்சாட்டவும் கூடும்.

துவாரகையில் ஒவ்வொரு ஆண்டும் படிநிலையில் மிகச் சிறிய மாற்றம் ஒன்று நிகழ்ந்துகொண்டே இருக்கும். "இளைய யாதவர் இங்கிருக்கையில் இருக்கும் படிநிலை அவர் சென்ற பின்னர் வருவதில்லை. சாம்பன் அவரில்லாதபோது மேலெழுந்து இருக்கையில் கீழே செல்கிறார். அவர் உளம் மகிழ்ந்திருக்கையில் ருக்மிணி மேலெழுகிறார். சலிப்புற்றிருக்கையில் சத்யபாமை முதன்மை கொள்கிறார்" என்று ஒருமுறை விளையாட்டாக ஸ்ரீகரர் சொன்னார். ஆனால் அது உண்மை. துவாரகையில் ஒருநாள்கூட படிநிலைகளுக்கான போர் முடிந்ததில்லை. பிரஃபாச க்ஷேத்ரத்தில் அரண்மனைகளோ கோட்டைகளோ படைகளோ இல்லை. அரசர்கள் எவரும் வருவதில்லை. இன்னமும்கூட குடிகள் வேர் கொள்ளவில்லை. ஆயினும் படிநிலைகளுக்கான பூசல் அதே உணர்வுகளுடனும் விசையுடனும் இருந்தது.

மூத்தவர் ஃபானு அரண்மனையிலிருந்து அணி ஊர்வலமாக கடற்கரைக்கு வந்தார். அவருக்குப் பின்னால் இளையோர் நிரைவகுத்தனர். மங்கலச்சேடியரும் இசைச்சூதரும் முன்னே வர அகம்படியினர் தொடர ஃபானு கைகூப்பியபடி நுழைந்தார். முன்னரே அங்கு சாம்பனும் பிரத்யும்னனும் அநிருத்தனும் வந்து தங்களுக்குரிய பீடங்களில் அமர்ந்திருந்தனர். ஃபானு அவை நுழைந்ததும் அனைவரும் எழுந்து வணங்கி நின்றனர். சாம்பன் மூன்றடி வைத்து முன் சென்று உடைவாளை உருவி கால்நோக்கித் தாழ்த்தி ஃபானுவை வணங்கி அழைத்து வந்து பீடத்தில் அமர்த்தினார். பிரத்யும்னன் வாள் தாழ்த்தி அவரை

அரியணையில் அமரும்படி வழிகாட்டினார். ஃபானு அரசப்பந்தலில் நடுவே அமைந்த மூங்கில் அரியணையில் அமர்ந்தார்.

ஃபானு அங்கு கிளம்புவது வரை இருந்த பதற்றங்களையும் பூசல்களையும் மறந்து அத்திரளையும் உடன்பிறந்தாரையும் கண்டு உளம் மகிழ்வு கொண்டவராகத் தோன்றினார். அரியணையில் அமர்ந்ததும் குடிகளின் வாழ்த்துகளும் மங்கல இசையும் முழங்கின. மகளிர் வந்து அவையமர்ந்தனர். கிருஷ்ணை முகப்பில் அமர்ந்தார்.

துவாரகையில் அரசர் அவை அமர்கையில் என்னென்ன முறைமைகளும் சடங்குகளும் நிகழுமோ அவையனைத்தும் அங்கு நிகழ்ந்தன. முதுமூத்தோர் எழுவர் சென்று செங்கோலையும் மணிமுடியையும் கொண்டு வந்தனர். மூவர் சேர்ந்து மணிமுடியை ஃபானுவின் தலையில் சூட்டினர். நால்வர் சேர்ந்து செங்கோலை அவரிடம் அளித்தனர். செங்கோல் ஏந்தி மணிமுடி சூடி ஃபானு அரியணை அமர்ந்து அவைமங்கலம் கொண்டார்.

குடிகள் எழுந்து அரிமலர் தூவி அவரை வாழ்த்தினார்கள். முரசுகள் அதிர்ந்தன. குடிகள் கைதூக்கி "வெல்க யாதவ குலம்! வெல்க முடிமன்னர் ஃபானு! ஓங்குக யதுவின் கொடிவழி! ஓங்குக அறக் குலம்!" என்று வாழ்த்தொலி எழுப்பினர்.

சாத்யகியும் கிருதவர்மனும் அருகருகே அமர்ந்து தங்களுக்குள் மெல்லிய குரலில் சிரித்து பேசிக்கொண்டிருந்தனர். அவர்களின் உள்ளம் இணைந்திருப்பதை அவர்கள் சற்றே தொட்டுக்கொண்டிருப்பது காட்டியது. அவர்கள் அவ்வப்போது கைகளாலும் தோள்களாலும் ஒருவரை ஒருவர்

உரசிக்கொண்டனர். அவர்கள் மைந்தரின் விளையாட்டைக் கண்டு மகிழ்ந்திருக்கும் தந்தையரின் முகம் கொண்டிருந்தனர். அங்கு நிகழும் ஒவ்வொன்றையும் கிருதவர்மன் களியாடுகிறார் என்றும் சாத்யகி மகிழ்ந்து நகைக்கிறார் என்றும் தோன்றியது. சில சமயங்களில் சாத்யகி போதும் என்று பொய்யான சீற்றத்துடன் சொல்லி கிருதவர்மனின் கையில் அடித்தார்.

குடிகள் அனைவரும் ஏற்கெனவே மது அருந்தி மயக்கத்திலிருந்தனர். முதிய குடியினன் ஒருவன் எழுந்து "இங்கு நாம் பேரரசை அமைப்போம்! இங்கு எவரும் நம்மை அணுக முடியாது. எவர் வந்தாலும் நமது சேற்று வெளிக்கு வளமாக மாறுவார்கள்!" என்றான். இன்னொருவன் "ஆம், குருதி தேவை! இங்கு நாம் மண்ணுக்கு வளம் இடுகிறோம்! தழையும் சுண்ணமும் சாம்பலும் போடுகிறோம். ஆனால் பேரரசு நிலைகொள்ளும் நிலங்களில் குருதி சிந்தப்படவேண்டும். குருதி உயிர் கொண்டது, அனல் கொண்டது, பல்லாயிரம் விதைகள் கொண்டது. இந்நிலத்தில் குருதி சிந்தாதவரை நாம் வென்றவர்கள் அல்ல, ஓங்குபவர்கள் அல்ல!" என்றான்.

சிரித்தபடி "முதலில் இவன் கழுத்தை வெட்டி குருதி சிந்துங்கள் இங்கே!" என்று ஃபானு கைநீட்டி கூவினார். அனைவரும் சிரித்தனர். அவன் அச்சிரிப்பை தனக்கெதிரான நகையாட்டாக எடுத்துக்கொண்டு சீற்றம்கொண்டு "ஆம், நான் சிந்துகிறேன்! இங்கு குருதி சிந்துகிறேன்! எனக்கொரு வாளை கொடுங்கள். இங்கேயே இக்கணத்திலேயே சங்கறுத்து விழுகிறேன். என் குருதி இந்நிலத்தில் ஊறி இதை உயிர்கொள்ளச் செய்யுமெனில் நன்று. இன்று இந்நிலம் செத்த பாம்பென கிடக்கிறது, மிதிபடுகிறது, நெளிந்து குழைகிறது. இது படமெடுத்து சீறி எழும் காலம் வரவேண்டும். அதற்கு என்

முதற்குருதி இங்கே விழுந்தால் நன்று எனில் அது நிகழ்க!" என்றான்.

"முதலில் அவனுக்கு ஒரு மொந்தை கள் கொடுங்கள்" என்று பிர꞉பானு சொன்னார். "விழவுகள் தொடங்கட்டும்" என்று ꞉பானு ஆணையிட்டார். முரசுகள் முழங்கி விழவு தொடங்கியதை அறிவித்தன. "அரசே, விழவு காலையிலேயே தொடங்கிவிட்டது" என்றான் ஒருவன். "ஆம், இனி கலைநிகழ்ச்சிகள் மட்டும்தான்" என்றார் சுருதன். "அதற்கு முன் ஒரு சிறு அறிவிப்பு" என்றபடி அடுமனையாளராகிய பத்ரர் எழுந்தார். "இங்கு நமது குடியினர் மிகச் சிறந்த மது ஒன்றை ஒருக்கியிருக்கிறார்கள். இதோ இங்கிருக்கும் இந்நாணற்புல்லின் நுரை போன்ற வெண்மலரின் மகரந்தத்தையும் தேனையும் பிழிந்தெடுத்துச் செய்த மது."

அனைவரும் உரக்க கூச்சலிட்டனர். "கந்தர்வர்களுக்கும் பித்தெழச் செய்வது இது என்று சொல்கிறார்கள். இந்நாணல்மதுவை அருந்திய முயல்கள் சிறகுகொண்டு பறக்கத் துடித்தன. நாம் அனைவரும் பறப்போம். முதல் குவளை மதுவை அருந்தி அரசர் இந்நிகழ்வை தொடங்கிவைக்கவேண்டும்" என்றார். குடிகள் அனைவரும் கூச்சலிட்டனர். தொலைவில் ஒரு பொற்குவளையில் அம்மதுவை ஏந்தியபடி ஒருவன் வந்தான். அவன் கையிலிருந்து ஒருவன் பறித்து இன்னொருவனிடம் அளித்தான். அவன் சிரித்தபடி தள்ளாட இன்னொருவன் அதை பறித்தான். அலைகளின்மேல் சிறு நெற்றென அந்தக் குவளை யாதவக் குடிகளின் தலைக்குமேல் வட்டமிட்டது. எழுந்து அமைந்து சுழன்று மூத்தவர் ꞉பானுவை நோக்கி சென்றது.

இறுதியாக ஒருவன் தன் தலைக்குமேல் வந்த அதை பிடித்துச் சுழற்றி அவரை நோக்கி எறிய அவர் வலக்கையால் அதை பிடித்துக்கொண்டார். தலைக்கு மேல் அதை தூக்கியபின் "வெல்க யாதவக் குடி!" என்று கூவி அதை குடித்தார். "சுவையானது!" என்று முகம் மலரக் கூறினார். "அனைவருக்கும் வழங்கப்படட்டும்" என்றார். பிரத்யும்னனுக்கும் சாம்பனுக்கும் குவளைகளில் அந்த மது வழங்கப்பட்டது. சாத்யகியும் கிருதவர்மனும் அதை வாங்கி அருந்தினர். பின்னர் குடிமூத்தோருக்கு கொடுக்கப்பட்டது. அதன் பின் ஒவ்வொருவரும் முட்டி மோதி அதை வாங்கி அருந்தினர்.

அருந்தியவர்கள் மீண்டும் அருந்தினார்கள். சற்று நேரத்திலேயே ஒவ்வொருவரும் வியர்த்து விழிமயங்கி நாக்குழைந்து உடல் தள்ளாடத் தொடங்கினார்கள். நீர் நிறைந்த கலங்கள்போல் தங்களுக்குள் முட்டி மோதினார்கள். குழைந்த சுழன்ற சொற்களில் பேசிக்கொண்டார்கள். ஒன்றையே திரும்பத் திரும்ப சொன்னார்கள். அழுதார்கள், சிரித்தார்கள். கைகளை விரித்து எழுந்து எழுந்து பறக்கத் துடித்தார்கள். பெருங்காற்றொன்று அவர்களை அள்ளி மண்ணிலிருந்து மேலே தூக்குவதுபோல் அவர்கள் உடல்கள் ததும்பின.

சூதர்கள் எழுந்து பாடத் தொடங்கினார்கள். துவாரகை பிறந்த கதையை ஒருவன் பாடத் தொடங்க இளைஞன் ஒருவன் எழுந்து "நிறுத்து! எதற்கு அந்த இடிந்த பழைய நகரத்தை பாடுகிறாய்? அது பழைய கதை. புதிய கதை இங்கு தொடங்கியிருக்கிறது. பிரஃபாச க்ஷேத்ரத்தை பாடுக!" என்றான். "ஆம், பிரஃபாச க்ஷேத்ரத்தை! பிரஃபாச க்ஷேத்ரத்தை பாடு!" என்று பல குரல்கள் எழுந்தன. "பிரஃபாச க்ஷேத்ரத்தின் கதையை நான் பாடுகிறேன்!" என்று இன்னொரு சூதன்

எழுந்தான். "இந்நகர் இப்பாரதவர்ஷம் எனும் நாணலில் ஊறி வந்த ஒரு சொட்டு மது. இது களிமயக்கின் நகர். மதுவின் நகர்."

"ஆம்! ஆம்!" என்று அனைவரும் கூவினர். "விண்ணிலிருந்து தெய்வங்கள் இதை நமக்கு அளித்தன. ஒன்பது ஊர்களை அவை படங்களாக வரைந்து நமக்கு காட்டின. வைர ஒளிகொண்ட நகரம் ஒன்று. பொன்னொளிர் நகரம் ஒன்று. வெள்ளி நகரம் ஒன்று. வெண்கலத்தால் விளங்கிய நகரம் ஒன்று. இரும்பால் கோட்டை கட்டப்பட்ட நகர் பிறிதொன்று. கல்லால் ஆனது ஒன்று. மண்நகர் மற்றொன்று. மரத்தாலானது மற்றொரு நகர். இந்நகரா இந்நகரா என்று அவை நம்மை கேட்டன. இறுதியில் நாம் இந்நகரை தெரிவு செய்தோம், இந்த நாணல் நகரை."

"ஏனெனில் இங்கு இனிய மது நிறைந்திருக்கிறது. வைரம் அல்ல, பொன் அல்ல, வெள்ளி அல்ல, வெண்கலமோ இரும்போ அல்ல, கள்ளே நம் ஆற்றல். கல்லல்ல, மண்ணல்ல, மரமல்ல, கள்ளூறும் மூங்கிலே நமது நகர்." அவன் பாடி முடிப்பதற்குள்ளாகவே "ஆம்! ஆம்! என்று அனைவரும் கூவினர். ஒருவரை ஒருவர் பிடித்து தள்ளிக்கொண்டும் அறைந்துகொண்டும் தலைப்பாகைகளையும் மேலாடைகளையும் ஒருவர்மேல் ஒருவர் எறிந்தும் கூச்சலிட்டனர்.

# கல்பொருசிறுநுரை - 70

**பகுதி ஆறு : படைப்புல் – 14**

தந்தையே, அந்த ஒரு நாள் ஊழின் தருணம். அது ஒரு எண்ணமாக எவ்வாறு தொடங்கியது, பலநூறு செயல்களினூடாக எவ்வாறு ஒருங்கிணைந்தது, பல்லாயிரம் பேரினூடாக எவ்வண்ணம் தன்னை நிகழ்த்திக்கொண்டது என்று துளித்துளியாக என்னால் நினைவுகூர இயல்கிறது. ஆனால் அதன் உச்சம் இவ்வண்ணம் நிகழ்ந்தது என்பதை எத்தனை எண்ணியும் என்னால் இன்றும் நினைவுகூர இயலவில்லை.

எண்ணி நெஞ்சு நடுங்கும் ஓர் நாள். என் நாவினூடாக வரும் தலைமுறைகளுக்கு செல்லவேண்டிய ஒரு நாள். எனினும் என்னால் அக்கணத்தை சென்றடைய முடியவில்லை. இத்தனைக்கும் நான் அதிலிருந்தேன். அனைத்தையும் பார்த்துக்கொண்டிருந்தேன். எதையும் நிகழ்த்தவில்லை என்பதனால் நான் அனைத்தையும் எண்ணிக்கோத்து எடுக்க வாய்ப்புள்ளவன். ஒருவேளை அதன்பொருட்டே விட்டுவைக்கப்பட்டவன்.

இத்தனை முயற்சிகளுக்குப்பின் இப்போது தெளிவடைந்திருக்கிறேன் எனினும் அத்தருணத்தை என்னால் மிகச் சரியாக கூறிவிட இயலாது. ஏனெனில் அத்தகைய தருணங்களை எவராலும் சென்றடைய இயலாது. கண்ணெதிரே நிகழ்ந்தாலும் அறிய முடியாதென ஊழ் நம்முடன் மாயம் காட்டி விளையாடும் உச்சத் தருணங்களில் ஒன்று அது. தந்தையே, ஒருவகையில் அனைத்துத் தருணங்களும் அப்படித்தானோ? இங்கு நிகழும் அனைத்து கணங்களும் விதியின் திருப்புமுனைத் தருணங்கள்தானோ?

நெஞ்சம் மலைக்கிறது. சொற்கள் வெற்றொலிகளென மாறிச் சூழ்கின்றன. அனைத்தையும் உதறி மானுடர் கரைக்க இயலாத சொல்லின்மைகளுக்குச் செல்லும் அந்த ஆழ்ந்த பாதை என்ன என்று இப்போது தெரிகிறது. நான் நின்றிருப்பது இருண்ட குகை ஒன்றின் தொடக்கம். ஒற்றை அடியில் அவ்விளிம்பில் நின்றிருக்கிறேன். ஒரு சிறு நிலைகுலைவு போதும், அதற்குள் சென்றுவிடுவேன். மொழியை முற்றாக இழந்துவிடுவேன். சொல்லின்மையின் இருளுக்குள், அதன் ஆழத்திற்குள், அடியிலிக்குள் சென்று கொண்டிருப்பேன். அது யோகியரும் முனிவரும் சென்றடையும் சொல்லின்மையின் எண்புறமும் திறந்த பெருவெளி அல்ல. சொல்லின்மை தவிப்புகள் என மாறி எண்புறமும் அழுத்தும் எடைமிக்க சிறு கடலடிக்கூடு.

அன்று உண்டாட்டும் மதுக்களியாட்டும் இயல்பாக நிகழ்ந்து உச்சம் கொண்டன. நானும் உண்டேன், மகிழ்ந்தேன், களியாடினேன். பெண்டிருடன் நடனமாடினேன், பல கன்னியருடன் காமத்திலாடினேன். உடல் களைத்து உள்ளம் சோர்ந்து மீண்டு வந்து மணற்கரையில் படுத்தபோது இன்னும் இன்னும் என எழுந்தேன். மீண்டும் சலித்தேன். நிறைகையில் சலிக்கவும் சலிக்கையில் மீளவும் செய்து மானுடனை ஆட்டுவிக்கின்றன விழைவுகள். அந்தியில் அதன் எல்லை கண்டேன். மீண்டும் அரசவையை ஒட்டி நாணலால் அமைக்கப்பட்டிருந்த எண்கோண வடிவுகொண்ட கூத்தம்பலத்திற்கு மீண்டேன்.

அங்கே நான்கு இளிவரல் சூதர்கள் என் முன் நகையாட்டு நாடகம் ஒன்றை நடத்திக்கொண்டிருந்தனர். அவர்களுக்கு முன் கையில் மதுக் கலங்களுடன் சாத்யகியும் கிருதவர்மனும் தோள் தொட்டு அமர்ந்திருந்தனர். சற்று அப்பால் ஆடை

கலைந்து பரவியிருக்க, தலைமயிர் குலைந்து முகத்தில் விழ, மூக்கினூடாக கள் வழிய, கைகளை பின்னால் ஊன்றி ஃபானு பொருளின்றி சிரித்துக்கொண்டு அமர்ந்திருந்தார். நேர் எதிர்ப்புறம் பிரத்யும்னன் பேசிச் சிரித்து தொடையிலறைந்து கூச்சலிட்டபடி இருந்தார். சாம்பன் அங்கில்லை என்பதை கண்டேன். உடன்பிறந்தார் எவரெவர் என்று அறியக்கூடவில்லை. அத்தனைபேரும் களியாடிச் சலித்துவிட்டிருந்தார்கள். களைப்பும் சலிப்பும் நிறைவும் ஒன்றே என ஆன ஓய்ந்த நிலை.

அவையில் யாதவர்கள் வந்தும் எழுந்தும் சென்றுகொண்டிருந்தார்கள். இளிவரல் நாடகத்தை எவரும் அறிவதுபோல் தெரியவில்லை. இளிவரல் சூதர்களோ அவர்களுக்கே என அதை நடித்துக்கொண்டிருந்தனர். அவர்கள் பேச்சுக்குரல்கள் செவியில் விழவில்லை. ஆனால் அதிலொன்று செவியில் விழுந்ததும் மொத்தச் சொல்லடுக்குகளும் கேட்கத் தொடங்கின. அப்போதுதான் உணர்ந்தேன், அவர்கள் சியமந்தக மணியைப்பற்றி நடித்துக்கொண்டிருந்தனர். நான் அதை கண்டதில்லை. அதைப்பற்றிய கதைகளை கேட்டிருந்தேன். அந்தகர் மேல் விருஷ்ணிகளின் வெற்றியாகவும் விருஷ்ணிகளும் அந்தகர்களும் கொண்ட இணைப்பாகவும் அதை விளக்கும் பாடல்களும் கூத்துக்களும் பல உண்டு.

அங்கே அதை இகழ்ந்து களியாடி நடித்தனர். சியமந்தக மணி உண்மையில் மணியே அல்ல. அது பீதர்நாட்டு செந்நிற மதுப்புட்டி ஒன்று விழுந்து உடைந்ததன் துண்டு. ஒரு வணிகன் அதை சிறிய கழியொன்றில் பொருத்தி வைத்திருந்தான். முதுகு அரிக்கும்போது அதைக்கொண்டு சொறிந்துகொண்டான். அவன்

யாதவ நிலம் வழியாகச் சென்றபோது அது கழியிலிருந்து உதிர்ந்து கிடந்தது.

கன்றோட்டும் யாதவர்கள் அப்படி ஒன்றை அதற்கு முன் கண்டதில்லை. ஆகவே அவர்கள் அதை சூழ்ந்துகொண்டனர். அதை எடுத்து கூர்ந்து பார்த்தனர். அது ஒரு மலர் என்று ஒருவன் சொன்னான். இல்லை அனல் என்றான் ஒருவன். அதை கொண்டு சென்று சருகில் வைத்து ஊதிஊதி பற்றவைக்கப் பார்த்தார்கள். அது ஒரு விழி என்று ஒருவன் கூற அதற்கு முன் நின்று வெவ்வேறு வகையில் நடித்துப் பார்த்தார்கள். இளித்தனர், சொறிந்துகொண்டனர், குதித்தனர், மிரட்டினர். அதை ஒருவன் துளி நீரென்று கூற ஒருவன் அதை விழுங்க முற்பட்டான். அது உயிரினம் என்று கூற அதை குச்சிகளால் குத்தி கிளப்ப முயன்றார்கள். ஒரு துளிக் குருதி என்று காட்ட நாய்க்கு முன் காட்டி அதை மோப்பம் பிடிக்கச் சொன்னார்கள்.

அந்த ஒவ்வொன்றையும் அவர்கள் செய்து காட்ட கூடிநின்றவர்கள் சிரித்து கூத்தாடினர். இறுதியில் அதை தங்கள் அரசரும் அந்தகக் குடித்தலைவரும் சத்யபாமையின் தந்தையுமான சத்ராஜித்துக்கு கொண்டுசென்று பரிசாகக் கொடுத்தனர். அவர் அதைக் கண்டதும் பாய்ந்து அஞ்சி அரியணை மேல் ஏறிக்கொண்டார். அவர் இளையோனாகிய பிரசேனன் அதை எடுத்து கூர்ந்து பார்த்தார். அதன்மேல் சற்று உப்பைத் தடவி வாயிலிட்டு மென்று பார்த்தபின் சுவையாக இல்லை என்று சத்ராஜித்திடம் சொன்னார். அவர் அதை தான் வாங்கி தேன் சேர்த்து வாயிலிட்டு சற்றே சுவையாக இருக்கிறது என்றார். அவையிலிருந்த ஒவ்வொருவரும் சுவைத்துப் பார்த்தனர்.

பின்னர் அவர்கள் சத்யபாமையை வரச்சொல்லி அது என்ன என்று கேட்டனர். சத்யபாமை அதைக் கண்டு திகைத்தாள். அதன்பின் அது ஓர் அருமணி என்றும், சூரியன் தன் மார்பில் அணிந்திருந்தது என்றும், வானில் உலா சென்றபோது அது உதிர்ந்து மண்ணில் கிடந்தது என்றும் சொன்னாள். அதை சத்ராஜித் தன் மார்பில் அணியலாம் என்றாள். மார்பில் எவ்வாறு அணிவது என்று எண்ணி குழம்பினார்கள். அதன்பிறகு அரசர் அதை கன்றின் நெற்றியில் கட்டும் கயிற்றில் கட்டி தன் மார்பில் அணிந்துகொண்டார்.

ஆனால் அவர் படுத்துக்கொண்டிருந்தபோது அரச மருத்துவர் அதை ஒரு குருதிப்புண்ணென்று எண்ணி அதன்மேல் மருந்து பூசினார். அரண்மனைப் பெண்டிர் அது அரசரின் கண் என்று எண்ணி ஒரு கையால் அவர் கண்களையும் மறுகையால் அதையும் மூடிய பின்னரே அவருடன் கூடினார்கள். இளிவரல் முதிர்ந்துகொண்டே இருக்க கூடியிருந்தவர்கள் சிரித்துக் குழைந்தனர். ஒருவரை ஒருவர் தோளில் அறைந்துகொண்டு கூச்சலிட்டு நகைத்தனர். அதை அரசர் தன் காதல்கிழத்தி ஒருத்திக்கு அளித்தார். அது பெண்ணுறுப்பென்று எண்ணி பிரசேனன் அதை புணர முயன்றார். அதை நடித்தபோது கிருதவர்மன் சிரித்தபடி எழுந்து ஓடிவிட்டார். சாத்யகி ஓடிச்சென்று அவரைப் பிடித்து சுழற்றிக்கொண்டுவந்து மணலில்விட்டார்.

பின்னர் அந்த மணிக்கான பூசல் தொடங்கியது. அந்த மணி தனக்குத் தேவை என்று சூரசேனர் தன் பெயர்மைந்தர் பலராமனையும் கிருஷ்ணனையும் தூதனுப்பினார். தரமுடியாது, அதன்பொருட்டு அந்தகக் குடியே உயிர்விட ஒருக்கமாக இருப்பதாக சத்ராஜித் சொன்னார். அந்த அருமணியை கையில்

வைத்திருப்பவரை எவராலும் கொல்லமுடியாது என்றார் சத்ராஜித். அதை நம்பிய பிரசேனன் அதை அணிந்துகொண்டு காட்டுக்குச் சென்று அங்கிருந்த சிம்மம் ஒன்றின் பிடரி மயிரை பிடித்து உலுக்கினார். அது அவரை அடித்துக் கொன்றது.

அந்த சிம்மத்தின் வாயிலிருந்து சியமந்தகத்தை ஜாம்பவான் கொண்டுசென்றார். அதை அவர் தன் மகளிடம் அளித்தார். அவள் அதை வைத்து விளையாடிக்கொண்டிருந்தாள். அவ்வழியாகச் சென்ற இளைய யாதவர் அதை பார்த்தார். அந்த அருமணியை பெறவிரும்பி விலைபேசினார். தன் மகளை மணந்தால் அதை தருகிறேன் என்றார் ஜாம்பவான். கரடிபோல மரத்தின் மேல் இருந்த பெண்ணைப் பார்த்து அஞ்சினாலும் சியமந்தகத்திற்காக இளைய யாதவர் அவளை மணந்துகொண்டார்.

இளிவரல் நாடகங்களுக்கு ஓர் இயல்புண்டு. அவை சிரித்து ஊக்கும்தோறும் அதன் நிலை கீழிறங்கும். எப்போதுமே இழிந்த நகையாடலுக்கு மிகுதியான சிரிப்பு எழும். நடிக்கும் சூதரோ அந்நாடகம் தொடங்கியதுமே அரங்கிலிருப்பவர்களுடன் ஒரு உரையாடலை தொடுத்துவிட்டிருப்பார். பிற கூத்தும் ஆட்டமும் பெரும்பாலும் மேடையில் முழு இசைவு கொண்ட உடனேயே அரங்கினரிடமிருந்து விலகி தங்களுக்கென ஓர் உலகை உருவாக்கிக்கொள்ளும். அவ்வடிவின் முழுமைக்காகவே அவை முயலும். வாழ்விலிருந்து எடுத்த ஒரு கட்டமைப்பை திருப்பித் திருப்பி சீரமைத்துக்கொண்டே செல்லும். ஆனால் இளிவரல் நாடகம் மட்டும் மேலும் மேலும் அரங்கினரை நோக்கி வரும். அரங்கினருக்கேற்ப தன்னை மாற்றிக்கொண்டே செல்லும்.

அன்று அரங்கிலிருந்த அனைவருமே கள்வெறி கொண்டிருந்தனர். சிரித்துக் களியாடி தங்கள் தயக்கங்களையும்

விலக்கங்களையும் களைந்துவிட்டிருந்தனர். உள்ளத்தின் முதல் திரையை விலக்கியதுமே கீழ்மைதான் வெளித்தெரிகிறது. மேலும் பல திரைகளை விலக்கிய பின்னரே மேன்மை எழுகிறது. எனவே அங்கு அரங்கினர் கொண்டிருந்தது அவர்கள் தலைமுறைகளாகச் சேர்த்து பேணிக்கொண்ட கீழ்மையும் சிறுமையும்தான். ஒருவரை ஒருவர் சீண்டி இழிவுபடுத்தி அடித்து துரத்திப் பிடித்து மண்ணில் உருட்டி விளையாடிக்கொண்டிருந்தனர்.

அவர்களிடமிருந்து எழுந்து ஆடியிலென நிகழ்ந்து அந்தச் சிறுமை சூதரில் பல மடங்காகப் பெருகி அவர்களிடம் திரும்பி வந்தது. அவர்கள் அன்று உளவிழிப்புள்ள உள்ளங்களுக்கு முன் சொன்னால் ஓரிரு சொற்களுக்குள்ளேயே உடைவாள் உருவி கழுத்தை வெட்டி வீசத்தக்க கீழ்சொற்களை நாணமில்லாது உரைத்தனர். அவை ஒவ்வொன்றும் அனைவராலும் மகிழ்ந்து கொண்டாடப்பட்டன. ஒவ்வொன்றுக்கும் களிப்பேறிய கூச்சலும் பாராட்டும் எழுந்தன.

சியமந்தக மணியை விரும்பி சிசுபாலன் அங்கு வந்ததை அவர்கள் நடித்தனர். வெண்குடையும் சாமரமுமாக அணிப்படகில் வந்திறங்கிய சிசுபாலன் சத்ராஜித்தாலும் கூட்டத்தினராலும் அழைக்கப்பட்டு கொண்டுசெல்லப்பட்டான். "எங்கள் அரண்மனைக்கு நல்வரவு" என்றார் சத்ராஜித். அரசனின் அரண்மனை ஒருவர் உள்ளே சென்றால் ஒருவர் வெளியே வரவேண்டிய புற்குடிலாக இருந்தது. அதன் திண்ணையில் பசுவை கட்டியிருந்தார்கள். "சற்று பொறுங்கள், அரசே" என்று சொல்லிவிட்டு பசுவை வெளியே கொண்டுவந்து சிசுபாலனை உள்ளே அமர வைத்தார்கள்.

பெருங்குவளையில் அவருக்கு கறந்த பாலை கொண்டுவந்தனர். “வருபவர்களுக்கு பால் அருந்தக் கொடுப்பதில் நாங்கள் எந்தக் கணக்கும் பார்ப்பதில்லை. ஏனெனில் ஒருநாள் புளித்த பாலை எப்படியும் வெளியேதானே வீசப்போகிறோம்” என்று சத்ராஜித் சொன்னார். பெண்ணை பார்க்க விரும்புவதாக சிசுபாலனின் அமைச்சர் சொன்னார். “இளவரசியை அழைத்து வாருங்கள்!” என்று சத்ராஜித் ஆணையிட்டார். ஆனால் இளவரசி மாட்டுத் தொழுவத்தில் சாணி வழித்துக்கொண்டிருந்தாள். முழங்கை வரை சாணியுடன் வந்து கைகூப்பி நின்றாள். சிசுபாலன் வாயுமிழ்ந்து கண்கலங்கினான். மயங்கி விழுந்த அவன் முகத்தில் பசுவின் சிறுநீர் தெளித்து எழுப்பினார்கள். அந்தக் கெடுமணத்தில் மீண்டும் வாயுமிழ்ந்து அவன் மயக்கமடைந்தான்.

பின்னர் சததன்வா அங்கு வந்து அந்த மணி தனக்கு வேண்டும் என்று கேட்டான். அதை அளிப்பதாக இருந்தால் சத்யபாமையை மணம்புரிய ஒருக்கம் என்றான். அது தன்னிடம் இல்லை என்றார் சத்ராஜித். அதை அறியாமல் கிருதவர்மனும் சததன்வாவும் அந்த மணிக்காக பூசலிட்டனர். நடுவே இளைய யாதவர் வந்து சத்யபாமையையும் மணந்துகொண்டார். சியமந்தகத்தை தலையில் சூடி அவையில் கொலுவீற்றிருந்தார். அந்த அவைக்கு வந்த பீதர்நாட்டு வணிகர்கள் சியமந்தகத்தைக் கண்டு திகைத்தனர். ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டனர். ஒருவன் சிரிக்கத் தொடங்க இன்னொருவன் மேலும் வெடித்துச் சிரித்தான்.

சததன்வா துவாரகையில் இருந்து அந்த மணியை திருடிக்கொண்டு ஓடினான். அவனைத் துரத்தி இளைய யாதவர் சென்றார். கிருதவர்மனும் சததன்வாவும் இளைய யாதவரும்

அந்த மணிக்காக பூசலிட்டனர். சததன்வா தோற்று அந்த மணியை திருப்பி இளைய யாதவரிடம் கொடுத்துவிடுவதாக சொன்னான். கொடு என்று சொல்லி இளைய யாதவர் கைநீட்டினார். கிருதவர்மன் கண்ணீர்விட்டு கதறி அழுது தன் குடியின் அருமணியை அளிப்பதை எண்ணி புலம்பினான். இந்திரனும் வருணனும் எமனும் குபேரனும் அதன்பொருட்டு ஏழு முறை அந்தகக் குடியுடன் போருக்கு வந்திருக்கிறார்கள் என்றான். அதை அளித்த பின்னர் முத்தை இழந்த சிப்பி போலாகும் யாதவர் குடி என்றான்.

"அதை அளிக்காவிடில் இக்கணமே உன் தலையை வெட்டுவேன்!" என்று ஆழியை எடுத்தார் இளைய யாதவர். தன் இடையிலிருந்து ஒரு பட்டுத் துணியை எடுத்து அதை விரித்து இளைய யாதவர் முன் வைத்து கைநடுங்கி நின்றான் சததன்வா. குனிந்து அந்தக் கல்லைப் பார்த்த இளைய யாதவர் திகைத்து சாத்யகியிடம் "இது என்ன?" என்றார். சாத்யகி அதை கையில் எடுத்துப் பார்த்து "நானும் இதை இப்போதுதான் கூர்ந்து பார்க்கிறேன். இது ஏதோ பீதர்நாட்டுப் பொருள்" என்றான். இளைய யாதவர் தன் படையில் இருந்த ஒரு பீதனிடம் இது என்ன என்றார். "இது மதுப்புட்டி உடைந்த துண்டு" என்று அவன் சொன்னான்.

இளைய யாதவர் சீற்றத்துடன் "இதையா சியமந்தகம் என்றீர்கள்?" என்றார். "ஆம் இளைய யாதவனே, இதுதான் சியமந்தகம் என எங்கள் தலைமுறைகளை ஆட்டிவைக்கும் அருமணி" என்றான் சததன்வா. "அறிவிலி, இதன் பொருட்டா என்னை துவாரகையிலிருந்து இத்தனை தொலைவுக்கு படைகொண்டுவரச் சொன்னாய்?" என்று கூவி ஆழியை எடுத்து சததன்வாவின் தலையை சீவினார் இளைய யாதவர்.

சததன்வா கீழே விழுந்ததுமே கிருதவர்மன் கைகூப்பி "நான் ஒரு சொல்லளிக்கிறேன்! நான் ஒரு சொல்லளிக்கிறேன்!" என்றான்.

"இது ஏதோ வணிகனின் கோலிலிருந்து விழுந்தது என்று நான் எங்கும் சொல்லமாட்டேன். இதை அருமணி என்றே சொல்வேன். எஞ்சிய வாழ்நாள் முழுக்க இதை கவர்வதற்காக வஞ்சினம் கொண்டு காத்திருப்பேன். இதன்பொருட்டு பகை நோற்பேன்" என்று கிருதவர்மன் கதறினான். சாத்யகி "எனில் நீ எஞ்சிய வாழ்நாள் முழுக்க இந்த மணியை உன்னிடம் இருந்து கவர்ந்ததன் பொருட்டு போர்புரிய வேண்டும். எவர் கேட்டாலும் எங்கள் குலத்து அருமணிக்காகவே இப்போர் நிகழ்கிறது என்று சொல்லவேண்டும்" என்றான். "சொல்கிறேன்! சொல்கிறேன்!" என்று கிருதவர்மன் கூறினான். "பகை நோற்கிறேன்! வஞ்சினம் கொள்கிறேன்!"

"நன்று, எனில் நீ பிழைப்பாய்" என்று சாத்யகி கூறினான். இளைய யாதவர் "இந்த அருமணியை இக்கணமே தூக்கி எங்காவது போட்டுவிடுங்கள். இதைப்பற்றி கவிஞர்களைக்கொண்டு பாடல் புனைய வைப்போம். அப்பாடல்களில் எல்லாம் மணியை இழந்த வஞ்சத்துடன் எரிந்துகொண்டிருக்கும் மாவீரனாக இவனை காட்டுவோம். நாம் பெரும்படைகொண்டு இத்தனை தொலைவுக்கு இதை துரத்தி வந்த சிறுமையை அவ்வாறன்றி மறைக்க இயலாது" என்றார்.

"அன்றி இம்மணி எவர் கையிலேனும் சிக்கினால், இங்கு நிகழ்ந்ததென்ன என்று எவரேனும் அறிந்தால் பாரதவர்ஷத்தில் அரசர்கள் நம்மை எள்ளி நகையாடுவார்கள். அவர்கள் தங்களிடம் வைத்திருக்கும் கூழாங்கற்களுக்கெல்லாம் யாதவ மணி என்று பெயரிடுவார்கள்" என்றார் அக்ரூரர். "ஆம், நான்

எஞ்சிய வாழ்நாளெல்லாம் இனி இம்மணியை இழந்தமைக்காக வஞ்சம் கொண்டாடுவேன், இது உறுதி!" என்றான் கிருதவர்மன். "அவ்வாறே ஆகுக!" என்றபின் "ஓடு" என்று கைகாட்டினார் இளைய யாதவர்.

கிருதவர்மன் அங்கிருந்து கிளம்பி அப்பால் சென்று "யாதவனே, இந்திரனும் விரும்பும் விண்ணளந்தோன் நெஞ்சில் அமைந்திருப்பதற்கு தகுதி கொண்ட அருமணியை எங்கள் குலத்திலிருந்து பறித்தாய். இதன்பொருட்டு உன்னை பழி கொள்வோம். இது உறுதி! இது உறுதி!" என்று வஞ்சினம் உரைத்துவிட்டு தப்பி ஓடினான். அருமணியை எடுத்து தன் மடியில் வைத்தபின் இளைய யாதவரும் சாத்யகியும் நடனமாடிக்கொண்டு துவாரகை திரும்பினார்கள்.

சூழ்ந்திருந்த ஒவ்வொருவரும் சிரித்துக்கொண்டிருந்தனர். களிவெறியில் தன்னை மறந்திருந்த ஃபானுவுக்கு அவர்கள் ஏன் சிரிக்கிறார்கள் என்று புரியவில்லை. "ஏன் சிரிக்கிறீர்கள்? என்ன ஆயிற்று? ஏன் சிரிக்கிறீர்கள்?" என்று மாறி மாறி கேட்டுக்கொண்டிருந்தார். பிரத்யும்னன் "நல்ல நாடகம். இவனுக்கு நான் இன்னொரு மொந்தை கள் அளிப்பேன்" என்றார். "எங்கே? இன்னொரு மொந்தை கள் கொண்டு வருக!" என்று கூவினார். கிருதவர்மன் சலிப்பும் எரிச்சலும்கொண்ட முகத்துடன் இருப்பதாகத் தோன்றியது.

ஆனால் சாத்யகி இரு கைகளையும் பின்னால் ஊன்றி உரக்க நகைத்துக்கொண்டிருந்தார். கிருதவர்மனும் சற்றே தயக்கத்துடன் அவருடன் இணைந்து நகைத்தார். சாத்யகி கண்களில் வழிந்த நீரை துடைத்த பின் "ஆனால் அது இளிவரல் அல்ல, உண்மை" என்றார். "அது உண்மை... ஆமாம், அது உண்மை... இப்போது சொல்கிறேன் அது உண்மை..."

கிருதவர்மன் விழிகளைச் சுருக்கியபடி "உண்மையில் அந்த அந்த மணி எங்கே?" என்றார். "அது போயிற்று... அதை இனி எவரும் பார்க்கமுடியாது. அது என்ன என்று எவருக்குமே தெரியாது!" என்று சாத்யகி மீண்டும் சிரித்தார்.

கிருதவர்மன் "அது உங்கள் கருவூலத்தில் அல்லவா இருக்கிறது?" என்றார். "இல்லை! இல்லை! அஹ்ஹஹ்ஹா!" என்று சாத்யகி வெடித்துச் சிரித்தார். "அதை அப்போதே கடலில் தூக்கி வீசிவிட்டார்கள். அது கடலுக்கடியில் இருக்கிறது." கிருதவர்மன் "மெய்யாகவா?" என்றார். "தெய்வங்கள்மேல் ஆணை, மூதாதையர் மேல் ஆணை, அதுதான் உண்மை" என்றார் சாத்யகி. "பொய் கூறவேண்டாம். நான் மெய்யை கேட்கிறேன். அது எங்கே?" என்றார் கிருதவர்மன். அவர் முகம் சிவந்திருந்தது.

அதை சாத்யகி உணரவில்லை. "கேள், இங்குள்ள எவரிடம் வேண்டுமென்றாலும் கேள். அப்போதே அதை கடலுக்குள் வீசிவிட்டார்கள். ஏனெனில் இந்த இளிவரல் கதையில் வருவது போலவே அது வெறும் கல், வெறும் கூழாங்கல்" என்றார். உரக்க நகைத்து தன் நெஞ்சில் அறைந்து "அது அந்தகர்களின் கூழாங்கல். அந்தகர்களின் கூழாங்கல் அது!" என்றார். "அந்தகர்களை நம்பி அதை அருமணியென விருஷ்ணிகள் எண்ணினார்கள். அதன் பின் படைகொண்டு சென்றார்கள். வென்று வந்து நோக்கினால் அது கூழாங்கல்."

"எங்கிருக்கிறது அது?" என்று கிருதவர்மன் கேட்டார். அவர் விம்மிக்கொண்டிருந்தார். "அதை அரசியர் அருவருத்து ஒதுக்கினர். அறியாமைகொண்ட காளிந்தி அது கூழாங்கல் என்றே சொல்லிவிட்டார். சுபத்திரை அதைத் தூக்கி சாளரம் வழியாக துவாரகையின் கடலுக்குள் வீசினார்" என்றார் சாத்யகி.

கிருதவர்மன் திரும்பி ஸ்ரீகரரிடம் "மெய்யாகவே அது இல்லையா? அது எங்கே? சொல்க, எங்கிருக்கிறது அது?" என்றார். "கடலுக்குள், கடலுக்குள் ஆயிரம்கோடி கூழாங்கற்களுக்குள் இன்னொன்று..." என்று சாத்யகி நகைத்துக்கொண்டிருந்தார்.

"மெய்யாகவே அந்த மணி எவரிடமும் இல்லையா?" என்றார் கிருதவர்மன். பிரஃபானு "ஆம், அதை கடலுக்குள் வீசிவிட்டார்கள். காளிந்தி அன்னை வீசியதாகச் சொன்னார்கள்" என்றார். பிரத்யும்னன் "காளிந்தி அன்னை வீசவில்லை. எனது அன்னை வீசப்போனபோது எந்தை அதை வீசவேண்டாம் என்றார். பின்னர் இளைய அரசி சுபத்திரை எடுத்து அதை கடலுக்குள் வீசினார்" என்றார். ஒவ்வொருவரையாக பார்த்துக்கொண்டிருந்த கிருதவர்மன் உரத்த குரலில் "மெய்யாகவே சியமந்தகம் கடலுக்குள் வீசப்பட்டதா?" என்றார்.

சாத்யகி சீற்றம்கொண்டார். "பிறகென்ன சொல்லிக்கொண்டிருக்கிறோம்? கேட்டுப்பார் இங்கிருக்கும் யாதவ மைந்தரிடம். மெய்யாகவே கடலுக்குள் வீசப்பட்டது. என் குல தெய்வங்கள் மேல் ஆணையாக கடலுக்குள் வீசப்பட்டது" என்றார் சாத்யகி. கிருதவர்மன் "மெய்யாகவா? ஸ்ரீகரரே, மெய்யாகவா?" என்றார். ஸ்ரீகரர் "யாதவரே, அதை சுபத்ரை கடலுள் வீசியது உண்மை" என்றார். கிருதவர்மன் "கடலுக்குள் ஏன் வீசினார்கள்?" என்றார்.

சாத்யகி "இத்தனை பொழுதும் இளிவரல் நாடகமாக நடித்துக்காட்டினார்களே இன்னமும் உனக்கு புரியவில்லையா? அது அருமணி அல்ல, முதுகு சொறிவதற்கான கல். அந்தகர்களின் நாட்டிலிருந்து யாதவ அரசி கொண்டுவந்த பெண்செல்வம் அக்கூழாங்கல். அக்கூழாங்கல்லுக்கு நிகராக விருஷ்ணிகள் கொடுத்ததோ அதோ அங்கே ஆயிரம்

வீரர்களால் காவல் காக்கப்படும் கருவூலம். நல்ல வணிகம்! இதைப்போல் ஒரு வணிகம் வேறில்லை! கல் கொடுத்து பொன் பெறும் வணிகம்! ஆஹஹ்ஹஹஹா! கூழாங்கல் கொடுத்து மணிமுடி பெறும் வணிகம்! நன்று! நன்று!" என்றார்.

"வாயை மூடு!" என்று கிருதவர்மன் கூவினார். சாத்யகி "மூடாவிட்டால் என்ன செய்வாய்? நான் தூங்கும்போது தீ வைப்பாயா? தூங்குபவர்களை எரிக்கும் மாவீரன்! எவரும் தூங்கவேண்டாம், இவர் எரித்துவிடுவார்! அஹஹஹஹஹா!" என்று கூவிச் சிரித்தார். அக்கணத்தில் பின்னிருந்து பெரிய கால் ஒன்றால் உதைக்கப்பட்ட பந்துபோல சாத்யகியை நோக்கி ஓடிவந்த கிருதவர்மன் எட்டி அவர் நெஞ்சில் உதைத்தார். சாத்யகி மல்லாந்து விழுந்த அதே கணத்தில் இடையிலிருந்து வாளை உருவி அவர் தலையை வெட்டித் துணித்தார்.

சாத்யகியின் தலை நிலத்தில் விழுந்தது. கிருதவர்மன் குருதி சுழல வாளை தூக்கி வீசி "கீழ்மக்களே! கீழ்மக்களே! அந்தகர்கள் மேல் இழிவை சுமத்துகிறீர்களா? அந்தகன் என்று இங்கிருந்தால் எழுக! கொன்றழியுங்கள் இந்த விருஷ்ணிகளை! கொன்றழியுங்கள் இக்கீழ்மக்களை!" என்று கூவினார்.

# கல்பொருசிறுநுரை - 71

**பகுதி ஆறு : படைப்புல் – 15**

தந்தையே, அங்கு நிகழ்ந்ததை நான் எவ்வகையிலும் விளக்கிவிட இயலாது. சற்று நேரத்திலேயே அங்கு யாதவர்கள் ஒவ்வொருவரும் ஒருவரை ஒருவர் கொன்று கொண்டிருந்தார்கள் என்று ஒற்றை வரியில் கூறி முடிப்பதே உகந்ததாக இருக்கும். எனினும் எண்ணி எண்ணி எடுத்து, சொல் சொல்லெனக் கோத்து, அதை நிகழ்த்தாமல் இருக்க முடியவில்லை. நூறு முறை ஆயிரம் முறை என் உள்ளத்தில் அக்காட்சிகளை மீண்டும் விரித்துக்கொண்டேன். இங்கு தேடிவரும் இந்நீண்ட பயணத்தில் என் உள்ளத்தில் நிகழ்ந்தது அது மட்டுமே.

ஆனால் இன்றுகூட அங்கே என்ன நடந்தது என்று என்னால் சொல்லிவிடமுடியாது. அந்த நாணல்மது எங்கள் அனைவரையும் முற்றிலும் நிலையழியச் செய்திருந்தது. காட்சிகள் உடைந்து உடைந்து இணைந்து மீண்டும் சிதறின. கடந்தகாலக் காட்சிகளும் கற்பனைகளும் நிகழ்வுகளினூடாக கலந்தன. தந்தையே, அங்கே நீங்கள் இருப்பதுபோல நான் கண்டேன். அன்னையரும் மைந்தரும் இருப்பதுபோல கண்டேன். தேவர்களும் தெய்வங்களும் ஊடே அலைவதுபோல கண்டேன். எவர் எவரை கொன்றனர் என்று என்னால் இப்போதும் நினைவுகூர முடியவில்லை. நினைவுகள் என எழுவன அந்த மாபெரும் பித்துவெளியிலிருந்தே ஊறிக்கொப்பளித்து அணைகின்றன.

சாத்யகியின் தலை துண்டாகி கீழே விழுந்ததை கண்டேன். கையில் குருதி சொட்டும் வாளுடன் நின்ற கிருதவர்மன் அதை

தலைக்குமேல் தூக்கி கூச்சலிட்டார். "கொல்லுங்கள். நம்மை இழிவு செய்த ஒவ்வொருவரையும் கொன்று அழியுங்கள். அந்தகர்களின் கூட்டத்தை கொன்று அழியுங்கள்." நான் தலைசுழல குமட்டி வாயுமிழ்ந்தேன். கையூன்றி கண்ணீர் வழிய தலைதூக்கி பார்த்தேன். கையில் வாளுடன் நின்றிருந்தவர் சாத்யகி. கீழே துண்டான தலையுடன் கிருதவர்மன் கிடந்தார். கிருதவர்மனின் கால்கள்தான் இழுபட்டு அதிர்ந்துகொண்டிருந்தன.

அவரைச் சூழ்ந்து எட்டு கைகள் கொண்ட கவந்த உடலும் அதன்மேல் இளிக்கும் வாயில் வெண்பற்கள் நிறைந்த தலையும் கொண்ட சிலந்தி வடிவமான பாதாளதேவர்கள் நால்வர் சுற்றிவந்து நடனமிட்டனர். அவர்களின் நிழல்கள் தனியாக நாகங்கள்போல நெளிந்தன. வெளவால்கள்போல தலையை கீழே தாழ்த்தி கரிய சிறகுகள் கொண்ட இருட்தேவர்கள் காற்றில் சுற்றிப்பறந்தனர். தரையெல்லாம் புழுக்கள். அவற்றின்மேல் துள்ளித் துள்ளிச் சுழன்றன நெளியும் வால்கள் கொண்ட தவளைமுகமான கீழுலகத்து இருப்புகள்.

சூழ்ந்திருந்த அனைவரும் முதலில் அதுவும் ஓர் இளிவரல் நடிப்பென்பதுபோல் சிரிப்புறைந்த வாயுடன் செயலற்று பார்த்துக்கொண்டிருந்தார்கள். மூத்தவர் ஃபானுவின் அருகே பெரிய வெண்புழுக்கள்போல நெளியும் எட்டு கைகளுடன் ஒரு பெண் நின்று அவரை வருடிக்கொண்டிருந்தாள். பிரத்யும்னனின் மேல் சிவந்த சீழ்போல வழியும் உடல்கொண்ட ஒரு பெண் துவண்டு கிடந்தாள். எங்கள் நடுவே கரிய ஓடை ஒன்று சுழித்தோடியது. அது உருவமில்லாமல் நெளிந்துகொண்டே சென்ற முடிவிலாத ஒரு புழு.

அங்கே விரிக்கப்பட்டிருந்த நாணல் கம்பளத்திலிருந்தே அவை எழுகின்றன என்பதை கண்டேன். நாணலில் அந்த உருவங்களை பின்னி வரைந்திருந்தார்கள். அவை புடைத்தெழுந்து உயிர்கொண்டன. எனில் எவரோ அவற்றை வேண்டுமென்றே படைத்திருக்கிறார்கள். ஆனால் அவை நீர்ப்பாவைகள்போல உருமாறிக்கொண்டும் இருந்தன. ஒன்றுடன் ஒன்று இணைந்தும் துண்டுகளாக பிரிந்தும் அவை வெவ்வேறு வடிவங்களாயின. உயிர்கொண்டு எழுந்து சீறின, சினந்து வால் நெளிந்தன.

மணலில் விழுந்து அந்த உடல் துடித்து கைகளும் கால்களும் இழுத்துக்கொள்வதைக் கண்டு எந்த ஓசையும் எழவில்லை. பின்னர் எவரோ வெறிகொண்டு அலறி ஓடிவந்து அவ்விசையிலேயே முன்னால் விழுந்து "ரிஷபவனத்து மூதாதையே! எந்தையே!" என்று கூவினார்கள். எனில் அது சாத்யகிதான். ஆனால் அப்பால் பலர் "அந்தகர் கொல்லப்பட்டார்! அந்தக மூதாதையை விருஷ்ணிகள் கொன்றுவிட்டார்கள்!" என்று ஓலமிட்டனர். அந்தகர்களின் குடித்தலைவர்கள் ஓடிவந்து அப்பிணத்தின் கால்களை பற்றிக்கொண்டனர். "எந்தையே! எந்தையே!" என்று கூச்சலிட்டார்கள்.

மறுகணம் அனைவருக்குள்ளும் அந்தச் செய்தி சென்றடைந்தது. ஒவ்வொருவரும் அலறிக்கூச்சலிடத் தொடங்கினர். எங்கோ எவரோ "அந்தகக் குடி மூத்தார் கிருதவர்மன் கொல்லப்பட்டார்! விருஷ்ணிகளால் அந்தகர் கொல்லப்பட்டார்!" என்று கூச்சலிட்டனர். ஃபானுமான் பாய்ந்து சுஃபானுவுக்கும் ஃபானுவுக்கும் மீதாக தாவி வந்து "கொல்லுங்கள்! விருஷ்ணிகள் அனைவரையும் கொல்லுங்கள்! எந்தை குருதி

வீழ்ந்த இந்த மண்ணை அந்தக் குருதி கொண்டு கழுவுவோம்! எழுக! எழுக! எழுக! அந்தகப் படை எழுக!" என்று கூவினான்.

ஃபானு தவிப்புடன் "இளையோனே! இளையோனே!" என்று கூவுவதற்குள் சாத்யகி தன் வாளைச் சுழற்றியபடி முன்னால் பாய்ந்தார். ஃபானுமானும் ஸ்ரீபானுவும் சாத்யகியை வெட்ட முயன்றனர். சாத்யகி அவர்களை வாளால் தடுத்தார். அதற்குள் அப்பகுதியில் போர் தொடங்கிவிட்டிருந்தது. விருஷ்ணிகுலத் தலைவர் ஒருவர் "எழுக! விருஷ்ணிகளின் படை எழுக!" என்று கூவினார். சாம்பன் "கொல்லுங்கள்! கொல்லுங்கள்!" என்று கூவியபடி தன் கையிலிருந்த நீண்ட நாணல்தண்டு வேலைச் சுழற்றியபடி கூட்டத்தின் நடுவே பாய்ந்தார். அவரை கிருதவர்மன் எதிர்கொண்டார். அவர்கள் நாணல்தண்டுகளை வேல்களாகச் சுழற்றி போரிட்டனர்.

தந்தையே, அந்தக் குடிக்களியாட்டு ஓய்ந்த பின் மாலையில் அங்கே வில்விளையாட்டும் வேல்விளையாட்டும் நடைபெறுவதாக இருந்தது. லோகநாசிகையின் நாணல்தண்டு எளிதில் ஒடியாததும் விசைமிக்கதுமான வில்கழி. அதன் சிறுதண்டுகள் அம்புகள். அவற்றை அங்கே குவித்து வைத்திருந்தனர். எவரோ ஓடிச்சென்று அக்குவியலில் இருந்து வில் ஒன்றை எடுத்தனர். உடனே குவிந்திருந்த விற்கள் மேல் பாய்ந்து ஒவ்வொருவரும் எடுத்துக்கொண்டனர். அவர்கள் எவருமே விழிப்புள்ளம் கொண்டிருக்கவில்லை. "கொல்லுங்கள்! அந்தகர்களை கொல்லுங்கள்!" என்று அந்தகர்களே கூவிக்கொண்டிருந்தனர். "பேயுருவங்கள்! பேய்கள் நுழைந்துவிட்டன. கொல்லுங்கள் பேய்களை!" என்று சிலர் கூவினர்.

அவர்களுக்குள் இருந்தே அனைத்தும் தோன்றின. அந்தகர்களுக்கும் போஜர்களுக்கும் ஹேகயர்களுக்கும் விருஷ்ணிகளுக்கும் இடையே நீடுநாட்களாக நொதித்த வஞ்சம் அவர்களின் எதிரிகளை உருவாக்கியது. அந்த வஞ்சம் அச்சமென்றும் ஐயமென்றும் வெறுப்பென்றும் ஆகி இறுகி உருவான தெய்வங்கள் பேருருக்கொண்டன. அவை "கொல்! கொல்! கொல்!" என அறைகூவின. எதிரி என எழுந்து வந்து கண்முன் நின்றன.

ஒவ்வொருவரும் செவிவரை இழுத்து அம்புகளை தொடுத்தனர். அம்புகளை இழுப்பதில் தெரிகிறது உள்ளத்தின் விசை. வெறிகொண்டவர்களே அப்படி அம்புகளை இழுக்கமுடியும். சினமும் வஞ்சமும் மட்டுமே அந்த வெறியை உருவாக்க முடியும். சிலர் உடைவாட்களால் நாணலை வெட்டி அங்கேயே இணைத்து வில்லென ஆக்கிகொண்டனர். அம்புகள் என நாணல்கள் பறக்கத்தொடங்கின. அவற்றின் விசையும் விரைவும் வியப்படைய வைத்தன. பெரும்பாலும் அவை குறிதவறவில்லை. அங்கு எவரும் கவசங்கள் அணிந்திருக்கவில்லை என்பதனால் அவை நெஞ்சிலும் விலாவிலும் புதைந்து மறுபக்கம் வரை பாய்ந்து நின்று வால் துடித்தன.

தந்தையே, அந்த நாணல் அம்புகளை இப்போது கூற்றென நினைவுகூர்கிறேன். அவற்றின் மேல்நுனியில் இருந்த புல்லிலைகள் சிறகென அமைந்து அவற்றுக்கு விசை கூட்டின. அவற்றின் எடை குறைவுமின்றி மிகையுமின்றி மிகச் சரியாக அமைந்திருந்தது. அவற்றின் கீழ்முனையை ஒரே வீச்சில் சரித்து வெட்டினால் கூரிய அம்பு அமைந்தது. அது உலோகம்போல் இறுகி எடைகொண்டிருந்தது. கீழே

எடைமிகுந்து வால்நுனியில் எடையில்லாமலிருந்தமையால் காற்றை அலகால் கிழித்து பறக்கும் பறவை என அவை சென்றன. எந்த திசைதிரும்பலும் இன்றி காற்றில் மிதந்து சென்று இலக்கடைந்தன. உள்ளே நுழைந்து குருதி உண்டன.

ஒவ்வொருவரும் பிறிதொருவரை கொன்று கொண்டிருந்தனர். பிரத்யும்னன் பாய்ந்து சாரகுப்தனின் மேலேறி சுஃபானுவை வெட்டி வீழ்த்தினார். சாம்பனும் அவருடைய இளையவர்கள் சகஸ்ரஜித்தும் சதாஜித்தும் ஃபானுவை எதிர்த்தனர். ஃபானுவை அவர்கள் அம்புகளால் அறைந்துகொண்டே இருந்தனர். உடலெங்கும் அம்புகள் நின்றிருக்க அவர் முடிசிலிர்த்த இலைப்புழுபோல கிடந்து நெளிந்தார். கிருதவர்மனை பிரத்யும்னனும் சந்திரஃபானுவும் சூழ்ந்துகொண்டார்கள். அவர் நிலத்தில் விழுந்து துடித்தபோது சாத்யகியாக தெரிந்தார்.

தந்தையே, அங்கு நிகழ்ந்த அருங்கொலையை எவ்வகையிலும் என்னால் விளக்க முடியாது. எல்லா கொலைகளுமே பொருளற்றவை. ஆனால் பொருளின்மையன்றி வேறேதும் இல்லாத கொலை அது. சாம்பன் தன் இளையோரை தானே கொன்றார். சித்ரகேதுவையும் வசுமானையும் கழுத்தரிந்து கொன்ற பின் அவர் வெடித்துச் சிரிப்பதை நான் கண்டேன். பிரஃபானு தன் இளையோன் ஸ்வரஃபானுவை அம்பால் கொன்றார். கொன்றபடியே இருந்தனர். இறந்து விழுந்தபடியே இருந்தனர்.

விழுந்த உடல்களை எட்டி உதைத்தனர். அவர்களின் நெஞ்சிலும் கன்னிலும் நாணல்வேல்களால் குத்தினர். உடல்களில் மிதித்து நின்று வெறிநடனமிட்டனர். தந்தையே, சிலர் தங்கள் உடன்பிறந்தாரின் குருதியை அள்ளி முகமெங்கும் பூசி சிரித்து வெறிகொண்டாடுவதை கண்டேன். சிலர் குருதியை

அள்ளி அள்ளி குடிப்பதை கண்டேன். பிரகோஷன் தன் நேர் இளையோனும் இணைபிரியாது உடனிருந்தவனுமான காத்ரவானின் தலையை தலைமுடியைப் பற்றி தூக்கியபடி சிரித்துத் தாண்டவமாடுவதை கண்டேன்.

ஒவ்வொருவரும் குருதியை விரும்பினார்கள். ஒவ்வொருவரும் சாகவும் விரும்பினர் என்று பட்டது. அங்கே எவருமே கவசங்கள் அணிந்திருக்கவில்லை. எவருமே தங்களை நோக்கி வரும் படைக்கலங்களை தடுக்கும் ஆற்றல் கொண்டிருக்கவில்லை. அதற்கு முயலக்கூட அவர்களால் இயலவில்லை. எளிய பூச்சிகள்போல செத்து நிலம்பதிந்தனர். அவர்கள் மேல் கால்கள் மிதித்துச் சென்றபோது இளித்த வாயில் நிலைத்த நகைப்புடன் ஆம் ஆம் என தலையசைத்தனர்.

நான் மட்டும் வேறெங்கோ இருந்தேன். "வேண்டாம்! வேண்டாம்!" என்று கூவிக்கொண்டிருந்தேன். "பிரத்யும்னரே, வேண்டாம்! அநிருத்தா, விலகுக!" என் குரல் அங்கே எழுந்த ஓலங்களில் குமிழியென ஓசையில்லாமல் வெடித்தழிந்தது. நான் அங்கிருந்து விலகி ஓடி காவல்மாடம் ஒன்றின் மேல் ஏறி அங்கிருந்த அறிவிப்பு முரசை வெறிகொண்டவனாக அறைந்தேன். "அமைக! அமைக! அசைவழிக!" என்று முரசு ஒலி எழுப்பியது. "அடங்குக... அணிசேர்க!" என்று அது குமுறியது. நான் கண்ணீருடன் முரசை அறைந்துகொண்டிருந்தேன். ஆனால் ஒருவர் கூட அதை கேட்கவில்லை.

ஒருகணத்தில் உணர்ந்தேன், அந்தக் கொலையை அங்கு செய்துகொண்டிருந்தது அந்த நாணல்தான். அதுவே அரியணையும் பந்தலும் விரிப்பும் ஆயிற்று. அதுவே கள்ளென்று அனைவரின் உள்ளத்தையும் நிறைத்தது. அதுவே

வில்லும் அம்பும் வேலும் என்றாகி அவர்களைக் கொன்று குருதி உண்டது. யாதவக் குடியே அங்கே முற்றாக அழிந்துகொண்டிருந்தது. எழுந்து பொலிந்த நுரைக்குமிழிகள் உடைந்து வற்றி மறைவதுபோல. சுருதன் ஃபானுமானை கொன்றார். அவரை வீரா கொன்றார். அவரை அநிருத்தன் கொன்றான். அநிருத்தனை அவன் தந்தையான பிரத்யும்னனே கொன்றார். பிரத்யும்னனை அவருடைய இளையோனாகிய பரதசாரு கொன்றான்.

முரசின் மேலேயே கோலை விட்டுவிட்டு நான் விழிமலைத்து நோக்கியபோது ஓர் உருமயக்கக் காட்சி எனக் கண்டேன், அந்த நாணல்கள் அனைத்துமே பாம்புகளாகிவிட்டிருந்தன. அம்புகளும் விற்களும் வேல்களும் நாகங்கள். அந்தப் பந்தல்கால்கள் எல்லாமே நாகங்கள். நாகங்கள் பின்னி உருவான பந்தல். நாகங்களால் ஆன அரியணை. நாகங்கள் கொண்டு முடைந்த தரை. அப்பால் நாகங்கள் இலைகளென படமெடுத்துச் செறிந்த காடு. நாகங்கள் சீறிப்பறந்தன. கொத்தி துளைத்தன. நின்று நெளிந்தன. துடித்துத்துடித்து உடல்புகுந்தன. துளைத்து மறுபக்கம் வந்து மண்ணை முத்தமிட்டன.

அப்போது அந்தக் களத்தில் நான் உங்களை கண்டேன், தந்தையே. அந்தப் பூசல்நிலத்தின் மறு எல்லையில் விற்போர் பார்ப்பதற்காக கட்டப்பட்டிருந்த நாணல்மேடையில் நீங்கள் அமர்ந்திருந்தீர்கள். உங்களருகே விஸ்வாமித்ரர் இருந்தார். உங்கள் இருவர் முகங்களும் நகைப்பில் என பொலிந்திருந்தன. ஒரு பெருங்களியாட்டை பார்க்கும் உவகையுடன் அந்த கொலைக்கூத்தாட்டத்தை பார்த்துக்கொண்டிருந்தீர்கள்.

தந்தையே, தொல்புகழ்கொண்ட யாதவ நெடுங்குடியில், உங்கள் குருதியில் முளைத்து துவாரகையில் பெருகிய மைந்தர் எண்பதின்மரில் இன்று நான் ஒருவன் மட்டிலுமே உயிருடன் இருக்கிறேன். அங்குள்ள யாதவக்குடி மக்களில் பெண்டிரும் குழ்ந்தைகளும் என மிகச் சிலரே எஞ்சினார்கள். கொலைக்களியாட்டு முடிந்தபோது அங்கே நிலமெங்கும் இடைவெளி இல்லாமல் பரவிக்கிடந்தன உடல்கள். எஞ்சிய ஓரிரு வீரர் இறுதி ஆற்றலையும் தொகுத்து எழுந்து அப்போதும் போரிட்டுக்கொண்டிருந்தார்கள். உதிரிக் குமிழிகள் வெடிப்பதுபோல ஆங்காங்கே சிலர் எழுந்தனர். அவர்களை வேறு சிலர் வெட்டி வீழ்த்தினர்.

பின்னர் ஆழ்ந்த அமைதி. அந்த உடற்பரப்பை நான் வெறித்து நோக்கிக்கொண்டு அமர்ந்திருந்தேன். அங்கே உயிர் ஏதேனும் எஞ்சுமா என்று. ஒருவன் தள்ளாடி கையூன்றி எழுந்தான். திகைத்து சுற்றிலும் பார்த்தான். கோணலான உதடுகளுடன் சூழ நோக்கி பின்னர் வெடித்துச் சிரித்தான். அவ்வோசை கேட்டு அப்பால் கிடந்த ஒருவன் எழுந்தான். தன் கையிலிருந்த நாணல்வேலை அவனை நோக்கி வீசிவிட்டு விழுந்து இறந்தான். நாணல் பாய்ந்தவன் மறுபக்கமாக விழுந்தான். மீண்டும் நெடுநேரம். யுகங்களெனக் கழிந்த நேரம்.

மீண்டும் ஒருவன் எழுந்தான். அவன் உடலெங்கும் குருதி. அவன் சுற்றிச் சுற்றி நோக்கினான். தள்ளாடியபடி பிணங்கள் நடுவே நடந்தான். கால்களால் ஒவ்வொருவரையாக உதைத்து அழைத்தான். சுற்றி நோக்கி கூவினான். அலறலோசை எழுந்து

அந்தப் பாழ்வெளியை நிறைத்தது. அந்த நிலமே அலறுவது போலிருந்தது. சூழ்ந்திருந்த நாணல்கள் இலையசைத்து உடல்நெளித்து அவனை பார்த்துக்கொண்டிருந்தன. அவன் தலையில் வெறிகொண்டு அறைந்து அறைந்து கூச்சலிட்டான். பின்னர் கீழே கிடந்த அம்பொன்றை எடுத்து தன் கழுத்தை கிழித்துக்கொண்டு அப்பிணக்குவியல்களில் விழுந்து அவற்றை அணைத்துக்கொண்டு துடித்து அடங்கினான்.

அவனே இறுதி என ஐயமின்றி தெரிந்தது. அந்தச் சடலங்கள் மாலைவெயிலில் வெறித்த சிரிப்புடன், அசைவிலா குமிழிகள் என துறித்த விழிகளுடன் கைகாலுடல்தலைக் குவியலாக அங்கே கிடந்தன. எஞ்சிய மகளிரும் குழந்தைகளும் முன்னரே அலறி ஓடி தங்கள் இல்லங்களுக்குள் புகுந்துகொண்டுவிட்டிருந்தார்கள். அங்கிருந்து அவர்கள் ஓசையின்றி நடுங்கிக்கொண்டிருந்தனர். முற்றாக ஓசையழிந்ததும் அவர்களில் ஒருத்தி கதவைத் திறந்து வெளியே வந்தாள். அவர் அஸ்தினபுரியின் அரசி கிருஷ்ணை என்று கண்டேன். அவிழ்ந்து திரிகளாகத் தொங்கிய குழலை அள்ளிச் சுழற்றி முடிந்து கொண்டையாக ஆக்கியபின் அவர் திரும்பி தன் குடிலுக்குள் ஒளிந்திருந்தவர்களை அழைத்தார்.

உள்ளிருந்து ஒவ்வொருவராக வெளியே வந்தனர். குழவிகள் அன்னையருடன் ஒட்டிக்கொண்டிருந்தன. சிறுவரும் சிறுமியரும் அன்னையரின் ஆடைகளை பற்றிக்கொண்டு அவர்களின் உடலுக்குள் புக விழைபவர்கள்போல தங்களை ஆடைகளால் மூடிக்கொண்டு அவர்களை நடைபின்னச் செய்தனர். கிருஷ்ணை ஆணையிட அவருடன் வந்த சேடி ஒருத்தி குடிலுக்குள் இருந்து ஒரு சங்கை எடுத்துவந்து

ஊதினாள். மீண்டும் மீண்டும் என அந்த ஓசை எழுந்தது. அது ஒரு அன்னைப்பறவையின் அகவல் என கேட்டது.

கதவுகளைத் திறந்து பெண்டிர் வந்துகொண்டே இருந்தனர். அவர்கள் ஓர் அணி என திரண்டனர். கிருஷ்ணை அவர்களுக்கு தலைமைகொண்டார். அவருடைய கையசைவுகளை கொம்பொலியாக மாற்றினாள் சேடி. அவர்கள் அந்த கொலைக்களத்தை நோக்கினர். எவரும் அதை நோக்கி ஓடவில்லை. தங்கள் கொழுநரையோ மைந்தரையோ தேட விழையவில்லை. அந்தத் திரளை அவர்கள் அருவருத்ததுபோல, அங்கிருந்து விலகிச்செல்ல விழைவதுபோலத் தோன்றியது. அவர்களின் நிரை அக்களத்தை முற்றாக விலக்கி அப்பால் வளைந்து சிந்துவின் புறநீர்ப் பரப்பு நோக்கி சென்றது.

புறநீர்ப் பரப்பில் வணிகப்படகுகள் சிற்றலைகளில் ஆடி நின்றிருந்தன. கிருஷ்ணை ஆணையிட அவர்கள் சீராக அவற்றில் ஏறிக்கொண்டனர். அனைவரும் ஏறிக்கொண்டதும் படகுகள் கட்டுகளை அவிழ்த்துக்கொண்டன. நீரிலேறி துடுப்புகளால் அலைதுழாவி அகன்று சென்றன. அவை வாத்துக்கூட்டம் என சென்று மறைவதை காவல்மாடத்தில் உடல் ஓய்ந்து விழிநீரும் வற்றி நான் பார்த்துக்கொண்டிருந்தேன். அவர்கள் சென்ற பின்னர் நான் மெல்ல இறங்கி கீழே வந்தேன்.

நான் எண்ணியதுபோல அனைவரும் செத்துவிட்டிருக்கவில்லை. ஆழ்ந்த புண்பட்டவர்கள் பலர் எஞ்சிய உயிருடன் முனகிக்கொண்டிருந்தார்கள். நான் "யார் இருக்கிறீர்கள்? யார் எழும்நிலையில் இருக்கிறீர்கள்?" என்று கூவியபடி ஒரு கழியை ஊன்றி பிணங்கள் நடுவே

உலவினேன். ஆனால் புண்பட்டவர்கள் கள்ளில் மயங்கி இருந்ததனால் தலை தூக்கி மறுமொழி உரைக்கும் நிலையில் இல்லை.

அந்த நாணல்மது ஒவ்வொருவருக்கும் குருதியை இளகச்செய்திருந்ததனால் சிறிய புண்ணே நிலைக்காத குருதிப்பெருக்கை உருவாக்கி அவர்களை உயிரிழக்கச் செய்துகொண்டிருந்தது. குருதி வழிய வழிய அவர்கள் நினைவு குழம்பினர். சித்தம் மயங்கியதும் உயிர்வாழ வேண்டுமென்ற வேட்கையையும் இழந்தனர். மேலும் குருதி வழிந்து மேலும் நினைவழிய வேண்டுமென்றே அவர்கள் விரும்புவதுபோல தெரிந்தது. அவர்களின் விழிகள் கனவிலென மயங்கியிருந்தன. பலர் முகங்கள் இனிய புன்னகையால் ததும்பிக்கொண்டிருந்தன.

ஒருவர்கூட தன்னை காப்பாற்றும்படி கோரவில்லை. ஒருவர்கூட தன் உயிரை காத்துக்கொள்ள எழுந்தோடவோ தவழ்ந்து அகலவோ முயலவில்லை. கண்ணுக்குத் தெரியாத தெய்வமொன்றுக்கு தன்னை பலியென அளிப்பவர்கள்போல் அந்த நிலத்தை அடைத்தபடி கிடந்தனர். அங்கே காலமே பருவடிவென்றாகிச் சூழ்ந்ததுபோல, ஒவ்வொருவரும் தங்களை அதில் மூழ்கடித்து மறைய விரும்புவதுபோல தோன்றியது.

அங்கே எழுந்துகொண்டிருந்த விலங்குகளின் ஓசையை அதன் பின்னரே நான் கேட்டேன். வாள் ஒன்றை எடுத்துக்கொண்டு சென்று கொட்டில்களிலும் தொழுவங்களிலும் இருந்த அனைத்து காளைகளையும் பசுக்களையும் எருமைகளையும் புரவிகளையும் அத்திரிகளையும் கட்டறுத்துவிட்டேன். யானைகளின் சங்கிலிகளை விடுவித்தேன். அவை உறுமிக்கொண்டும் கூவிக்கொண்டும் கனைத்துக் கொண்டும்

அந்நிலத்திலிருந்து எரியனலிலிருந்து பறவைகள் அகல்வதுபோல் ஓடி அகன்றன.

தந்தையே, நான் மேலும் ஒருநாள் அங்கிருந்தேன். உணவின்றி நீரின்றி. அதில் ஒருவரேனும் எழுவார்களா என வீணில் எதிர்பார்த்தபடி. நாய்களும் நரிகளும் தேடி வரத்தொடங்கின. வானிலிருந்து கரிய சிற்றலைகள் என சிறகடித்து கழுகுகள் வந்தமர்ந்து எழுந்து பூசலிட்டன. நான் அப்பெருநிலத்தில் ஏழு இடங்களில் அனலிட்டேன். பிரஃபாச க்ஷேத்ரத்தின் நாணல் மாளிகைகள் மிக எளிதாக பற்றி எரியத்தொடங்கின. அந்நாணல் தன்னுள் நெய் நிரப்பி வைத்திருப்பது. ஆகவே செந்தழலுடன் சீறி வெடித்து எரியத்தொடங்கியது.

வெம்மையும் அனலும் சூழ என் கண்முன் பிரஃபாச க்ஷேத்ரம் தழல்குளம் என்றாயிற்று. அதன் செவ்வனல்பரப்புக்கு மேல் நீலத்தழல் அலைகொண்டது. வெடித்து வெடித்துச் சீறி தழலுமிழ்ந்தது அந்த சாவுப்பரப்பு. என் உற்றார், உடன்பிறந்தார், குடியினர் அனைவரும் அங்கு எரிந்துகொண்டிருந்தனர். மாபெரும் வேள்வி ஒன்றின் எரிகுளம் என பிரஃபாச க்ஷேத்ரம் விண்கீழ் நின்றிருந்தது. அத்தழலைப் பார்த்தபடி வணங்கினேன்.

நான் ஏன் உயிருடன் எஞ்சியிருக்கிறேன் என்ற திகைப்பை அதன் பிறகுதான் அடைந்தேன். நான் உயிருடனிருப்பதே ஒவ்வாததாகத் தோன்றி திடுக்கிடச் செய்தது. பின்னர் தெளிந்தேன், நான் வாழ்வது இவையனைத்தையும் உங்கள் முன் வந்து உரைப்பதற்காக மட்டுமே. நீங்கள் இவற்றை கணந்தோறும் நிகழும் காட்சி என்று காணவேண்டும் என்பதற்காக. இது நீங்களே வகுத்ததாகக் ட இருக்கலாம். அதன்பொருட்டே இத்தனை நெடுந்தொலைவைக் கடந்து இங்கு வந்தேன். இதோ உரைத்துவிட்டேன்.

காளிந்தியின் மைந்தனாகிய சோமகன் சொன்னான். “தந்தையே, உங்களிடம் பிறிதொன்று எனக்கு கூறுவதற்கில்லை. உங்கள் மைந்தன் என கேட்பதற்கும் பெறுவதற்கும் ஒன்றுமில்லை. பொறுத்தருளும்படி கோரவோ பிழையுணர்ந்துவிட்டேன் என்று உரைக்கவோகூட இன்று நான் தகுதி உடையவன் அல்ல. என் கடன் முடிந்தது.”

அவனுடைய சொற்களை இளைய யாதவர் விழிதழைந்திருக்க கைகள் மடியில் விரல்கோத்துப் படிய அமர்ந்து கேட்டுக்கொண்டிருந்தார். கருவறைத்தெய்வம் என, கல் என அங்கிருந்தார். அவருடைய தலையில் அந்தப் பீலிவிழி அவனை நோக்கிக்கொண்டிருந்தது.

அவன் அவரை சற்றுநேரம் நோக்கிக்கொண்டிருந்தான். பின்னர் பெருமூச்சுடன் எழுந்து வெளியே சென்றான். முற்றத்தைக் கடந்து, சிறுபாதையினூடாக ஊர்மன்றைக் கடந்து தண்டகாரண்யத்தின் நடுவே பதினெட்டு மலைமுடிகளால் சூழப்பட்ட பள்ளத்தாக்கில் நடுவே அமைந்திருந்த மந்தரம் எனும் அச்சிற்றூரை நீத்து சௌந்தர்யம், சௌம்யம் என அழைக்கப்பட்ட இரு மலைமுகடுகளுக்கு நடுவே வளைந்தெழுந்து மேலே செல்லும் பாதையினூடாக மேலேறிச் சென்று மலைமுகட்டில் நின்றான். திரும்பி அந்த ஊரை ஒருகணம் பார்த்தான். தன் இடையில் இருந்த கூரிய குறுங்கத்தி ஒன்றை எடுத்து தன் கழுத்தில் வைத்து விரைந்து இழுத்தான். குருதி இரு செஞ்சரடுகளாக பீறிட்டுப் பொழிய தலை மடிந்து மார்பில் முகம் படிய முன்னால் சரிந்து விழுந்து துடித்து மெல்ல அடங்கினான்.

# கல்பொருசிறுநுரை - 72

## பகுதி ஏழு : நீர்புகுதல் – 1

மந்தரம் எனும் சிற்றூரில் புறங்காட்டில் அமைந்த கரிய சிறு பாறையில் இளைய யாதவர் இரு கைகளையும் தலைக்கு பின் கொடுத்து வான் நோக்கி படுத்திருந்தார். விண்மீன்கள் நிறைந்த கரிய வானம் அவர்மீது வளைந்திருந்தது. விண்மீன்கள் சில துலங்கியும் பல வான் என மயங்கியும் அவர் மேல் படர்ந்திருந்தன. சற்று அப்பால் சாலமரத்தின் வேர்ப்புடைப்பொன்றில் அமர்ந்திருந்த ஸ்ரீகரர் தாழ்ந்த குரலில் உணர்ச்சிகள் ஏதுமில்லாத அமைதியுடன் சொன்னார்.

யாதவரே, தங்களைத் தேடி இத்தொலைவு வரை என்னால் வர இயலுமென்று நான் எண்ணியிருக்கவில்லை. இந்த அகவையில் நான் நெடுந்தூரம் பயணம் செய்ய இயலும் என்பதையும், துணை இன்றி பாதையும் அறியாமல் இங்கு வந்து சேர்வேன் என்பதையும் எண்ணுகையில் இது ஊழ் என்றே உணர்கிறேன். இச்சொற்களை இங்கு நான் வந்து சொல்ல வேண்டுமென்று வகுக்கப்பட்டிருக்கிறது.

தாங்கள் அறிவீர்கள், முன்பு கோகுலத்தில் இதுபோல் ஓர் இரவில் நாம் இருவரும் புறங்காட்டில் தனித்திருந்தோம். இவ்வண்ணமே தாங்கள் ஒரு பாறையில் படுத்து விண்மீன்களை பார்த்துக்கொண்டிருந்தீர்கள். நான் அருகிருந்தேன். விண்மீன்களை என்னால் நிமிர்ந்து பார்க்க இயலவில்லை. உங்களிடம் நான் கேட்டேன் “யாதவனே,

விண்மீன்களை உன்னால் எத்தனை பொழுது விழிவிரித்து பார்க்கமுடியும்?" என்று. விழிவிலக்காமல் "விடியும்வரை, முடிவிலிவரை" என்று நீங்கள் சொன்னீர்கள்.

நான் தவிப்புடன் "என்னால் சற்று நேரம் கூட பார்க்க முடியவில்லை. என் உள்ளம் பதைக்கிறது. விண்ணில் இருப்பவை முடிவிலா விழிகள் என்று தோன்றுகின்றன. அவை அலகிலாது பெருகிய கதிரவன்கள் என்று நூலோர் கூறுகிறார்கள். ஆதித்யப் பெருவெள்ளம் என்று என் ஆசிரியர் ஒருமுறை கூறியபோது என் அகம் நடுங்கியது. அதற்குப் பின் ஒருமுறைகூட என்னால் விண்ணை நேர்நோக்க இயலவில்லை. சிறுத்து இன்மை என்றாகி பொருளிழந்து செல்கிறேன்" என்றேன்.

ஒருமுறை வானை நோக்கிவிட்டு விழிதாழ்த்தி நான் தொடர்ந்தேன் "இருப்பே நம்மை கோக்கிறது. எண்ணங்கள் ஆகிறது. இன்மைபோல் அச்சுறுத்துவது பிறிதொன்றும் இல்லை. விண் நோக்கி அதை நோக்குகிறேன் எனும் இருப்புணர்வை அறுதியாக தக்க வைத்துக்கொண்டு அமைந்திருக்கலாம். நான் நோக்கிக் கொண்டிருக்கிறேன் என்ற உணர்வு ஏதேனும் ஒரு கணத்தில் அறுபடும் எனில் விண்மட்டுமே எஞ்சும். அது சாவு. அதிலிருந்து ஓரிரு கணத்தில் விடுபட்டு வெளிவந்துவிட முடியும். அது மறு பிறப்பு. சாவு கணநேரமெனினும் சாவுக்குரிய அனைத்து அச்சங்களும் பதற்றங்களும் வெறுமையும் கொண்டதே" என்றேன்.

உங்கள் விழிகளில் வானின் ஒளியை கண்டேன். "யாதவனே, எவ்வண்ணம் விண்ணை நோக்கிக்கொண்டிருகிறாய்?" என்றேன். நீங்கள் புன்னகைத்து "நான் விண்வடிவாகி குனிந்து மண்ணை

நோக்கிக்கொண்டிருப்பேன்" என்றீர்கள். திகைப்புடன் "அதெப்படி? விண்வடிவாக எப்படி மானுடன் தன்னை உணர முடியும்?" என்று கேட்டேன். "நான் மானுடன் அல்ல" என்று சொன்னீர்கள். அக்கணம் என் நெஞ்சு நடுங்கியதை நான் உணர்ந்தேன். இன்றும் அதை மீண்டும் உணர்கிறேன். என் கைகள் குளிர்ந்து உறைந்துவிட்டன.

பின்னர் மூச்சை மீட்டுக்கொண்டு சிரித்து "ஆம், நீ மானுடன் அல்ல. தொல்லசுரர் குடியில் வந்தவன், லவணக்குருதியினன் என்று இங்கு சொல்கிறார்கள்" என்று நகையாட்டாக மாற்றிக்கொண்டேன். நீங்களும் நகைத்து "நான் அசுரன், நான் அரக்கன். நான் இங்குள்ள அனைத்துயிரும் ஆனவன். விண்சூழ் தேவர்களும் மண்வாழ் உயிர்களும் ஆழத்து இருளிருப்புகளும் நானே. நானே பிரம்மம்" என்றீர்கள். "வேதமுடிபுபோல அனைத்துக்கும் மறுமொழியாகும் ஒற்றைச் சொல் வேறேது?" என்று நான் சொன்னேன். நாம் சிரித்தோம்.

ஆனால் உங்களுடன் இருந்த நீண்டகாலத்தில் பலநூறு முறை அவ்விண்மீன்களுக்குக் கீழே பள்ளிகொண்டிருந்த உங்களை நினைவுகூர்கிறேன். அவ்விண்மீன்களை உடலெங்கும் அணிந்து விண்பேருருவெனப் படுத்து நீங்கள் கீழே நோக்கிக் கொண்டிருக்கும் கனவு எனக்கு ஒருமுறை வந்திருக்கிறது. இத்தருணத்திலும் அதையே உணர்கிறேன். இது அத்தருணத்தை மீண்டும் நடிப்பது. இதன் பொருட்டே அன்று அது நிகழ்ந்தது. இன்று இவ்வண்ணம் இத்தனை தொலைவு நான் வரநேர்ந்தது.

அரசே, சூதர் சொல்லினூடாகவும் பயணியர் பேச்சினூடாகவும் நீங்கள் அறிந்திருக்கலாம். எனினும் மீண்டும் உங்கள் அணுக்கன், துவாரகையின் அமைச்சன் என நின்று நான் அதை

சொல்லவேண்டியுள்ளது. உங்கள் குருதியில் ஒரு துளி கூட இன்று இப்புவியில் எஞ்சவில்லை. உங்கள் மைந்தர் எண்பதின்மரும் இறந்தனர். உங்கள் பெயர்மைந்தர் எண்ணூற்றுவரில் ஒருவர் கூட எஞ்சவில்லை. உங்கள் பெயர்சொல்லி கைநீர் அள்ளி விட்டு அன்னம் அளிக்க இப்புவியில் உங்கள் வழித்தோன்றல்கள் என எவருமில்லை.

நீங்கள் சமைத்த பெருநகர் துவாரகை மண்ணிலிருந்து நழுவி இறங்கி ஆழ்கடலுக்குள் சென்றுவிட்டது. இப்போது கடல் பெருகி எழுந்து தோரணவாயில்வரை வந்துள்ளது. இன்று பெரும்பாலை நிலத்தின் விளிம்பில் அலைகள் வந்து அறைந்துகொண்டிருக்கின்றன. பாதியளவு மூழ்கி கடலுக்குள் அத்தோரணவாயில் மட்டும் நின்றிருக்கிறது. அங்கு ஒரு மாநகர் இருந்தது என்றும் இரு குன்றுகள் மேல் ஒன்றில் பெருவாயில் திறந்து வானை அழைத்ததென்றும் பிறிதொன்றின்மேல் இப்புவி கண்டதில் பெருநகரொன்று அமைந்திருந்ததென்றும் எவரேனும் சொன்னால் அறிவுடையோர் நம்ப இயலாது.

அந்நகர் உப்பால் கட்டப்பட்டது என்றும் கடலில் முற்றாகக் கரைந்து மீண்டும் உப்பென்று மாறிவிட்டதென்றும் கதைகள் உருவாகியிருக்கின்றன. விதர்ப்பத்திற்கு வந்தபோது ஒரு முதியவன் துவாரகை கடல்நுரையால் உருவாக்கப்பட்டது என்றான். இன்னும் கடந்து சென்றால் ஒருவேளை அது சொல்லால் கட்டப்பட்டது என்று சிலர் சொல்லக்கூடும். மேலும் தெற்கே சென்றால் அது வெறும் கனவால் கட்டப்பட்டதென்று கூறுபவரும் இருப்பார்கள்.

அங்கே பிரஃபாச க்ஷேத்ரமும் சிந்துவின் புறநீர் எழுந்து மூழ்கி மறைந்துவிட்டது. அச்சதுப்பை நீர்ப்பரப்பிலிருந்து காத்த

நாணல்சுவர் அழிந்ததும் நீர் எல்லைகடந்துவிட்டது. அந்நிலமும் முற்றாகவே நீரில் மூழ்கி இருந்ததோ என்றாகிவிட்டது. அங்கே யாதவக் குடியினர் வந்து தங்கி ஒரு நகரைப் படைத்து கொண்டாடி போரிட்டு அழிந்தார்கள் என்பதற்கு விழிச்சான்றுகள் என எவருமில்லை.

இருக்கலாம், அங்கிருந்து உங்கள் மைந்தர் சாம்பனின் அரசி கிருஷ்ணை பெண்டிரும் குழந்தைகளுமாக கிளம்பிச் சென்றார்கள். அவர்களின் படகுகள் எங்கு சென்றன என்று எவருக்கும் தெரியாது. அவர்கள் நாமறிந்த எந்நிலத்திலும் சென்றுசேரவில்லை. அவர்கள் கடலூடாக தென்னிலம் சென்றனர் என்று சிலர் சொல்கிறார்கள். மேற்கே சோனக நிலம் தேடிச் சென்றனர் என்றும் கூறுகின்றனர். எங்கோ அவர்கள் நினைவுகொண்டிருக்கலாம். அல்லது மறந்துவிட்டிருக்கலாம்.

பிறிதொரு விழிச்சான்றும் உண்டு. கணிகர் என்னும் அந்தணர். அவர் பிரஃபாச க்ஷேத்ரத்திற்கு வந்தநாள் முதலே நோயுற்றிருந்தார். அக்களியாட்டு நாளின் காலையில் அவரால் எழவே முடியவில்லை. அவர் தன்னை பிரஃபச க்ஷேத்ரத்தில் இருந்து கொண்டுசென்று அப்பால் கிழக்கெல்லையாக அமைந்திருந்த குன்றுகளில் ஒன்றின்மேல் பாறையின் மேல் வைக்கும்படி கோரினார். அவ்வண்ணமே கொண்டுசென்று வைத்தார்கள். விழவு தொடங்கும் வரை அவர் அங்கிருந்ததைக் கண்ட ஒற்றர்கள் உண்டு.

விழவு பூசலில் முடிந்து நகர் அழிந்து எரியுண்டு மறைந்த பின் அவரும் மறைந்துவிட்டார். அவர் எங்கேனும் இருக்கலாம். அனைத்தையும் அவர் பார்த்துக்கொண்டிருந்தார் என நினைக்கிறேன். அவர் விழிகளை நினைவுகூர்கிறேன். அந்த உச்சிப்பாறையில் தவளைபோல் அமர்ந்து அவர் நகரத்தின்

அழிவை நோக்கி புன்னகை கொண்டிருப்பார். அவருடைய நோய் அனைத்தும் நீங்கியிருக்கும். முகம் பொலிவுகொண்டிருக்கும். உடலின் ஒடிவுகளும் வளைவுகளும்கூட சீராகியிருக்கும். அந்தப் பாறையில் இருந்து அவர் நடந்து அகன்றிருந்தால், புரவியூர்ந்திருந்தால் வியப்படைய மாட்டேன்.

ஸ்ரீகரர் சொன்னார். யாதவரே, பிரஃபாச க்ஷேத்ரத்தில் உங்கள் மைந்தர்கள் போரிட்டு மடிந்தபோது நான் அங்கில்லை. என்னை உங்கள் மைந்தர் பிரத்யும்னன் தன் மாதுலர் ருக்மியுடன் பேசி அவருக்கு சொல்லளிக்கப்பட்ட நிலத்தை பெற்றுத் தரும்படி கோரி அனுப்பியிருந்தார். நான் பிரஃபாச க்ஷேத்ரத்தில் இருந்து கிளம்பி பாலைநிலத்தைக் கடந்து அவந்திக்கு வந்து அங்கிருந்து விதர்ப்பத்திற்கு சென்று கொண்டிருக்கும்போதுதான் பிரஃபாச க்ஷேத்ரம் பெருங்களியாட்டில் மூழ்கி உட்பூசல்களால் போருக்குச் சென்று முற்றழிந்தது என்று கேள்விப்பட்டேன்.

அது எனக்கு வியப்பளிக்கவில்லை. அவ்வண்ணம் நிகழும் என நான் எங்கோ எதிர்பார்த்திருந்தேன். அதை நீங்கள் துவாரகை விட்டுச் சென்றபோதே எதிர்பார்த்தேன். துவாரகையின் அழிவால் உறுதி செய்துகொண்டேன். ஆனாலும் ஏதேனும் ஒரு நல்லது நடக்கும் என நம்பி முயன்றேன். பிரத்யும்னனும் அநிருத்தனும் பிரஃபாச க்ஷேத்ரத்தில் இருந்து விலகிச்சென்றால் அந்நகர் பிழைக்கும் என நம்பினேன். அவர்களும் ஒவ்வொருநாளும் அதற்காக

துடித்துக்கொண்டிருந்தனர். ஓலைகளும் தூதுகளும் ருக்மிக்கு சென்றுகொண்டிருந்தன. அவர் அனைத்தையும் வெவ்வேறு சொற்களால் தட்டிக்கழித்துக்கொண்டிருந்தார்.

திரும்பி பிரஃபாச க்ஷேத்ரத்திற்குச் செல்வதா அன்றி விதர்ப்பத்துக்கே சென்று என் தூதை தொடர்வதா என்ற குழப்பத்தை அடைந்தேன். பிரஃபாச க்ஷேத்ரத்தில் என்ன நிகழ்ந்தது என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள அவந்தியிலிருந்த துவாரகையின் ஒற்றர்கள் சிலரை சந்தித்தேன். யாதவ மைந்தரில் ஒருவர்கூட அங்கு எஞ்சவில்லை என்பதை அறிந்தேன். ஒருவர் கூடவா என்று மீள மீள கேட்டுக்கொண்டேன். ஆம் ஒருவர் கூட என்று ஒற்றர்கள் சொன்னார்கள். நிலமில்லை, அரசகுடியினர் ஒருவர்கூட இல்லை. எனில் தூதுக்குப் பொருள் என்ன? ஆனால் எனக்குப் பணிக்கப்பட்ட செயல் அது. அதை உதற எனக்கு உரிமை உண்டா?

ஆவதென்ன என்று எனக்கு தெரியவில்லை. நான் நாணயம் ஒன்றை தூக்கி வீசி மலரா முத்திரையா என்று பார்த்தேன். சங்கு முத்திரை வந்தபோது அதை வைத்து முடிவெடுத்தேன். விதர்ப்பத்துக்கு கிளம்பிச் சென்றேன். குருக்ஷேத்ரப் போரில் கௌண்டின்யபுரியை ஆண்ட பீஷ்மகரும் மைந்தர்களும் கொல்லப்பட்டனர். ருக்மி போஜகடகத்தை விட்டு கௌண்டின்யபுரிக்கே தலைநகரை மாற்றிக்கொண்டார். போஜகடகம் இரண்டாம் தலைநகராக நீடித்தது. போஜகடகத்தையும் ஒட்டியுள்ள நிலத்தையும் பிரத்யும்னனுக்கு அளிப்பதாகவே முதலில் பேசப்பட்டது. அது குறைந்து குறைந்து வந்து வரதாவின் கரையோர சதுப்புநிலமும்

பதினெட்டு ஊர்களும் மட்டும் என்று ஆகியது. பின்னர் அதிலும் தடைகளை சொல்லத் தொடங்கினார் ருக்மி.

நான் வரதாவின் படித்துறையை வந்தடைந்து அங்கிருந்து நதிக்கரைப் பாதை வழியாக கௌண்டின்யபுரிக்கு சென்றுகொண்டிருந்தேன். யாதவ இளவரசர்களின் உயிர்நீப்பால் விதர்ப்பம் துயர்கொண்டிருக்கும் என்றும் அங்கு குடிகள் தங்கள் குடிமைந்தர் அழிவின்பொருட்டு புலைகாப்பார்கள் என்றும் நான் எண்ணினேன். ஆனால் செல்லும் வழியெங்கும் இளவேனில் கொண்டாட்டங்கள் நிகழ்ந்துகொண்டிருந்தன. தெருக்களில் மலராடையும் தளிராடையும் அணிந்த மக்கள் அலைமோதினர். எங்கும் மதுக்களியாட்டமும் காமக்கொண்டாட்டமும் நிகழ்ந்தது. அச்செய்தி வந்து சேரவேயில்லையோ என நான் ஐயம் கொண்டேன்.

விதர்ப்பத்தில் இளவேனில் பருவத்தில் காமனை உயிர்த்தெழ வைத்து கொண்டாடும் வழக்கம் இருந்தது. தளிர்களால் ஆன பல்லக்கில் கரும்பாலான வில்லையும் ஐந்து மலர்களால் ஆன அம்புகளையும் வைத்து காமனை நிறுவி இளமகளிர் தூக்கிக்கொண்டு சென்று புதுப்பெருக்கெடுத்த ஆற்றின் கரைகளில் வைத்து மலர் வழிபாடு செய்த பின்னர் நீரில் ஒழுக்குவார்கள். அவ்வாறு பல்லக்கு தூக்கிச்செல்லும் பெண்டிர் ஆடையணியாது வெற்றுடலுடன் செல்லும் வழக்கம் இருந்தது. தொன்மையான அக்கொண்டாட்டம் அப்போதும் நிகழ்ந்துகொண்டிருந்தது வியப்பூட்டியது.

அது பெண்களின் விடுதலைநாள். எங்கும் ஆண்களையே காணவில்லை என்பதை நான் உணரவில்லை. ஆற்றங்கரை தோறும் ஆடையற்ற பெண்கள் சிரித்துக் கூத்தாடினார்கள். ஆடைகளிலிருந்து விடுதலை பெறுவதை பெண்கள் எவ்வளவு

விரும்புகிறார்கள் என்பதை முன்பு நான் அறிந்திருந்தேன் எனினும் அது வியப்பாகவே இருந்தது. ஆடைகளால் தாங்கள் சிறையிடப்பட்டிருப்பதாக பெண்ணுடல் எண்ணுகிறது. ஆடை களைந்ததுமே பெண்ணுடல்களின் அசைவுகளும் அவர்களின் கண்களும் மாறிவிடுகின்றன. அவர்களுள் அறியாத் தெய்வம் ஒன்று வந்து குடியேறுகிறது.

வரதா நதிக்கரையில் நான் சென்றுகொண்டிருந்தபோது ஆடையில்லாத பெண்கள் எழுவர் கூச்சலிட்டபடி ஓடிவந்து என்னை இழுத்துக்கொண்டு சென்று நீரில் தூக்கி வீசினர். சேற்றில் என்னை புரட்டி எடுத்தனர். நான் அவர்களிடமிருந்து தப்பும்பொருட்டு புரண்டெழுந்து நீர்துழாவி பிறிதொரு கரையில் ஏறி நாணல் காட்டுக்குள் புகுந்து சேற்று ஓடைகளினூடாக கௌண்டின்யபுரிக்குள் நுழைந்தேன். அங்கே என்னைக் கண்ட காவலர்களிடம் என் அடையாளத்தை சொன்னேன். அவர்கள் பலர் சிரிப்பை அடக்கிக்கொண்டு என்னை அழைத்துச் சென்றனர்.

விதர்ப்பத்தின் அமைச்சர்கள் என்னை வரவேற்றபோது எந்த ஆர்வத்தையும் காட்டவில்லை. ஒரு நாட்டின் அமைச்சனென எனக்கு அளிக்கவேண்டிய எந்த முறைமையும் செய்யப்படவில்லை. எளிய யாதவ முதியோனுக்குரிய சொற்களும் முறைமைகளுமே இயற்றப்பட்டன. என்னை அவர்கள் கொண்டுசென்று சிறுகுடிலொன்றில் தங்க வைத்தனர். அங்கே மேலும் செய்திகளை உறுதிப்படுத்திக்கொண்டேன். விதர்ப்பத்தின் சிற்றமைச்சர்கள் அனைவருக்குமே எல்லாச் செய்திகளும் தெரிந்திருந்தன. எண்பதின்மரில் ஒருவர்கூட எஞ்சவில்லை என்று அனைவரும் மீள மீள சொன்னார்கள்.

ஆனால் எவரிடமும் சற்றும் துயர் இருக்கவில்லை. உண்மையில் அனைவரும் மகிழ்ந்து கொண்டாடிக்கொண்டிருந்தனர். உலகியலாளர்களுக்கு பிறிதொருவரின் வீழ்ச்சி எத்தனை உவகையை அளிக்கும் என்பதை அமைச்சன் என நான் நன்றாக அறிந்திருந்தேன் என்றபோதிலும்கூட அது எனக்கு வியப்பையும் கசப்பையுமே அளித்தது. மானுடர் பிறர் என்பதை எவ்வண்ணமோ தங்களுக்கான போட்டியாளர்களாகவே என்னுகிறார்கள். ஆயினும் இறந்தவர்களில் பதின்மர் விதர்ப்பத்தின் மருகர், நூற்றுவர் விதர்ப்பத்தின் கொடிவழியினர். அவர்கள் விதர்ப்பத்திற்கு பெரும் காவலென அமையும் வாய்ப்பு கொண்ட மாவீரர். அதைக்கூட அவர்கள் எண்ணவில்லை.

நான் சென்று மூன்றாவது நாள்தான் ருக்மி என்னை அவைக்கு அழைத்தார். அவர் என்னை தன் தனியறைக்கு அழைப்பார் என்றுதான் நான் எண்ணினேன். ஆனால் அந்தணரும் அமைச்சரும் படைத்தலைவரும் குடித்தலைவரும் வணிகரும் என ஐம்பேராயம் அமர்ந்த அவைக்கு நான் அழைத்துச் செல்லப்பட்டேன். எனக்குரிய ஆடைகள் அளிக்கப்படவில்லை. சேற்றில் விழுந்து பழுதுபட்ட என் ஆடைகளை நானே துவைத்து காயவைத்து அணிந்துகொண்டிருந்தேன். இருமுறை அமைச்சருக்குரிய ஆடைகள் எனக்கு அளிக்கப்படவேண்டும் என்று நான் கோரியும்கூட ஏவலர் எனக்கு அவற்றை கொண்டுவந்து தரவில்லை. வெறுந்தலையோடு அவைபுகக்கூடாது என்பதற்காக என் அறையிலிருந்த எளிய மரவுரி ஒன்றை எடுத்து என் தலைப்பாகையாக கட்டிக்கொண்டேன். என் உடலில் அணியேதுமில்லை. அவைநுழைந்தபோது பரிசல் வாங்க வந்த இரவலன்போல என்னை உணர்ந்தேன்.

விதர்ப்பத்தின் பேரவைக்குள் என்னை அறிவித்தபோது விருஷ்ணிகுலத்து யாதவராகிய ஸ்ரீகரர் என்று மட்டுமே குறிப்பிட்டனர். ஆகவே நான் அவைநுழைந்தபோது எவரும் முகமன் உரைக்கவில்லை. வரவேற்கும் பொருட்டு எந்த அசைவும் எழவில்லை. அரசன் முன் சென்று நின்று நானே கைதூக்கி அவரை வாழ்த்தினேன். "விருஷ்ணிகுலத்தவனாகிய என் பெயர் ஸ்ரீகரன். பாரதவர்ஷத்தின் பெரும்புகழ் கொண்ட நகரமாகிய துவாரகையின் அமைச்சன். இன்று துவாரகை சற்று அப்பால் பிர꞉பாச க்ஷேத்ரம் என்னுமிடத்தில் நிலைகொண்டுள்ளது. அங்கிருக்கும் அரசர் ꞉பானுவுக்கும் அவருடைய உடன்பிறந்தார் எண்பதின்மருக்கும் அமைச்சர் என்று திகழ்கிறேன். இளையவர் பிரத்யும்னனின் செய்தியுடன் இந்த அவைக்கு வந்துள்ளேன்" என்றேன்.

ருக்மி தன் நீண்ட செந்நிறத் தாடிக்குள் கைவிரல்களை நுழைத்து நீவியபடி வஞ்சநகைப்பு ஒளிவிட்ட விழிகளால் என்னை கூர்ந்து பார்த்தார். நான் சொல்லி முடித்ததும் அவருடைய புன்னகை பெரிதாகியது. அவையை ஒரு முறை பார்த்துவிட்டு "தாங்கள் அமைச்சர் ஆயினும் போதிய செய்திகளை அறியாமல் இருக்க வாய்ப்புள்ளது. ஆகவே உரைக்கிறேன். ஒன்று, துவாரகை என்னும் நகரம் இன்றில்லை, அது இருந்தது என்பதற்கான நூல் சான்றுகளன்றி பிறிது ஏதும் இல்லை. இரண்டு, பிர꞉பாச க்ஷேத்ரம் என்னும் ஊர் இன்றில்லை. அது இருந்தது என்பதற்கான நூல் சான்றும் இல்லை. மூன்று, யாதவ மைந்தர் எண்பதின்மர் இன்றில்லை. அவர்கள் இருந்தார்கள் என்பதற்கு சான்றென மைந்தர்களோ பெயர் மைந்தர்களோகூட இல்லை" என்றார்.

நகைப்பு விரிய "ஆகவே நீங்கள் அமைச்சர் என்பதற்கான சான்றுகளை இந்த அவைக்கு நீங்கள் அறிவிக்கலாம்" என்றார். அவையிலிருந்தும் சிரிப்பொலி எழுந்து முழக்கமாகச் சூழ்ந்தது. நான் சினத்தை அடக்கி "நான் இங்கு சொல் விளையாட வரவில்லை. இங்கிருக்கும் அனைவருக்கும் உண்மையென ஒன்று தெரியும், நான் பிரத்யும்னனின் தூதனாக இங்கு வந்துள்ளேன். அவர் படைதிரட்டும் பொருட்டு முன்பு விதர்ப்பத்திற்கு அளித்த கருவூலச் செல்வத்திற்கு விதர்ப்பம் இன்னும் ஈடு சொல்லவில்லை. அதற்கிணையாக விதர்ப்பத்தின் நிலம் அவருக்கு அளிக்கப்படும் என்று அரசர் தன் வாயால் அளித்த சொல்லுறுதி உள்ளது. அதை அவருக்கு மீண்டும் நினைவுறுத்துவதே என் பொறுப்பு" என்றேன்.

"நான் அளித்தேனா இல்லையா என்பது பிறிதொன்று. ஆனால் அளித்தேன் என்று கொண்டால்கூட அதை கொள்வதற்கு இன்று யார் இருக்கிறார்கள்? பிரத்யும்னனா, அநிருத்தனா, அவன் மைந்தரா? அக்குருதியினர் எவரேனும் இன்று உளரா?" என்று ருக்மி கேட்டார். "என் உடன்பிறந்தாள் ருக்மணியின் மைந்தர் பதின்மரும் இன்றில்லை. அவர்களின் மைந்தர் நூற்றுவரும் இல்லை. அவர்களின் பெயர்மைந்தர்களும் இல்லை. எவருக்காக நீங்கள் நிலம் நாடி வந்திருக்கிறீர்கள்?"

"அரசே, அதை கொள்வது எவர் என்பது நாங்கள் முடிவு செய்யவேண்டியது. அந்நிலம் யாதவர்களுக்குரியது. எஞ்சிய யாதவர்கள் வந்து தங்குவதற்கான நிலமாக அது அமையலாம். மதுராபுரியின் பலராமர் அதை கேட்கக்கூடும். நான் வந்த தூது அந்நிலம் யாதவர்களுக்குரியது என்பதை உறுதி செய்வதற்காகவே" என்றேன். ருக்மி உரக்க நகைத்து "நான் யாதவர்களுக்கும் எந்தச் சொல்லுறுதியும் அளிக்கவில்லை.

பேச்சு நடந்தது எனக்கும் பிரத்யும்னனுக்கும் நடுவேதான். பிரத்யும்னனின் கொடிவழியில் வந்த எவரேனும் கேட்கும் பொருட்டு நான் காத்திருக்கிறேன். பிறிதெவரும் இதைப்பற்றி என்னிடம் பேச வேண்டியதில்லை" என்றார்.

அவருடைய குரல் மாறியது. "விதர்ப்பத்திற்கு நிதியளிக்கப்பட்டதென்றால் அது ஊழ். போரில் சிதறுண்டு கிடக்கும் பாரதவர்ஷத்தில் விதர்ப்பம் தனக்கென படைதிரட்டவும் பெருநகரென கௌண்டின்யபுரி மாறவும் உதவும் நிதி அது. மையநிலத்தில் பேரரசு ஒன்றை அமைக்க நமக்கு ஊழ் ஆணையிடுகிறது. யாதவர்கள் என்று இன்று எவரும் இல்லை. இளைய யாதவர் வரட்டும், அல்லது அவரது மூத்தவர் வரட்டும். அவர்களிடமும் இதையே சொல்வேன். அவர்களிடம் நான் எந்தச் சொல்லையும் அளிக்கவில்லை. பிரத்யும்னனிடம் மட்டுமே நான் பேசியிருக்கிறேன். பிரத்யும்னனின் குருதியினரிடம் மட்டுமே எனக்கு பேச்சு" என்றார்.

"இதுதான் உங்கள் அறுதியான மறுமொழியா?" என்று நான் கேட்டேன். "நான் பிறிதொன்று சொல்வதில்லை" என்று அவர் சொன்னார். நான் ஏளனத்துடன் சிரித்து "உங்கள் சொல்லுக்கு என்ன மதிப்பு? காற்றின் நிலைபேறுகூட இல்லாத உள்ளம் கொண்டவர் நீங்கள் என்பதை நன்கறிவேன்" என்றேன். சீற்றத்துடன் அவர் எழுந்து "எவரிடம் பேசுகிறீர் என்று தெரிகிறதா?" என்று கூவினார்.

"ஆம், விதர்ப்பத்தின் அரசனிடம் பேசுகிறேன். அரசனின் சொல் பாறைபோல் நின்றிருக்கவேண்டும் என்று கேட்டிருக்கிறேன். நீங்கள் நீரலைப் பாவை. அதை குருக்ஷேத்ரப் போரின்போதே வெளிப்படுத்தினீர்கள். உடன்பிறந்தாரையும் தந்தையையும்

குருக்ஷேத்ரத்தில் பலியிட்டு மண்பெற்றவர். எனினும் உங்களை நம்பி அப்பெரும்செல்வத்தை உங்களிடம் கொண்டுவந்த பிரத்யும்னன்தான் பழி கூறத்தக்கவர்" என்று நான் சொன்னேன். "நன்று, இதன் விளைவை நீங்கள் அடைந்தாகவேண்டும். ஊழ் உன்னுவது ஒருங்குக!" என்று சொல்லிவிட்டு நான் அவைவிட்டு வெளியே சென்றேன்.

# கல்பொருசிறுநுரை - 73

**பகுதி ஏழு : நீர்புகுதல் – 2**

ஸ்ரீகரர் சொன்னார். நான் விதர்ப்பினியாகிய ருக்மிணியைக் கண்டு நிகழ்ந்தவற்றைச் சொல்லி மீளலாம் என்று எண்ணினேன். அவர்கள் இதை அறிந்திருக்க வேண்டும் என்று தோன்றியது. ஒருவேளை அவர்களுக்கு விதர்ப்பத்தின் அரசமைவில் ஏதாவது சொல்லுரிமை இருக்கலாம். பிரத்யும்னனின் செல்வத்தை கோரும்போது அவருடைய சொல்லும் உடனிருப்பது நன்று. பிரத்யும்னனும் அநிருத்தனும் பெயர்மைந்தரும் அழிந்திருந்தாலும்கூட துவாரகையின் கருவூலத்தில் இருந்து ருக்மியிடம் அளிக்கப்பட்டு எஞ்சியிருக்கும் பகுதிக்கு ருக்மிணி உரிமைகொண்டாடலாம். ருக்மிணி ஒரு சிறுவனை பெறுமைந்தனாக குடியில் இருந்து எடுத்துக்கொள்ளலாம். அவன் பிரத்யும்னனுக்கும் அநிருத்தனுக்கும் நீர்க்கடன் செய்யக்கூடும் எனில் அச்செல்வம் அவனுக்குரியது.

நான் அவ்வெண்ணத்தை அடைந்ததுமே பரபரப்பு கொண்டேன். அவையில் ருக்மி பிரத்யும்னனின் மைந்தரோ பெயர்மைந்தர்களோ எவரேனும் எஞ்சியுள்ளனரா, அவர்கள் எவரேனும் ஒருவர் வந்து கேட்டால் அக்கருவூலத்தை அளிக்கிறேன் என்று அறைகூவியபோது என் நா தாழ்ந்தது. ஏனெனில் எவர் உயிரோடிருக்கிறார்கள் என்று எனக்கு தெரியவில்லை. எம்முறைப்படி அதை கோருவதென்பதும் தெளிவாக இல்லை. நான் அங்கு வந்தமைக்காகவே, எனக்கு பணிக்கப்பட்டதை இயற்றுவதே என் கடமை என்பதற்காகவே அப்போது அவைநின்றேன். ஆனால் அனைத்து நெறிகளின்படியும் நீர்க்கடன் செய்பவர்களுக்குரியது தந்தையின் செல்வம்.

மைந்தர்களும் பெயர்மைந்தர்களும் வழிமைந்தர்களும் மறைந்து துயருற்றிருந்தாலும் ருக்மிணி இயற்ற வேண்டியதை இயற்றும் உளநிலையிலேயே இருப்பார் என்று நான் எண்ணினேன். எவராயினும் இப்புவியில் இருந்து வரும் அன்னமும் நீரும் இன்றி விண்புக இயலாது. ருக்மிணி விதர்ப்பத்தின் இரண்டாம்தலைநகரான போஜகடகத்தில் வரதாவின் கரையில் அமைக்கப்பட்டிருந்த சிறு மாளிகையில் இருப்பதாக அறிந்தேன். வரதாவின் பெருக்கினூடாக படகில் சென்று போஜகடகத்தை அடைந்து அங்கே படித்துறையில் இறங்கியபின் அங்கிருந்த காவலனிடம் ருக்மிணியை சந்திக்க விரும்பி செய்தி அனுப்பினேன்.

படித்துறையிலேயே காத்திருந்த என்னை ருக்மிணியின் ஏவற்பெண்டு வண்டியில் வந்து அழைத்துச் சென்றாள். வரதாவில் கோடைகால நீர்ப்பெருக்கு கலங்கி சிவந்து சுழித்து சென்று கொண்டிருந்தது. இளையோர் அதில் குதித்து நீந்தி

மறுகரை சென்று மீண்டு வந்துகொண்டிருந்தனர். கரையெங்கும் மலர்க்கிளைகளில் மகளிர் அமர்ந்து மயில்கள்போல கூவிக்கொண்டிருந்தனர். எங்கும் கூச்சலும் சிரிப்புகளுமாக இருந்தது. என்னை அழைத்துச் சென்ற சேடி திரையிடப்பட்ட சிறு வண்டியை மாளிகையின் முற்றத்தில் நிறுத்தினாள். "வருக!" என்று உள்ளே அழைத்துச் சென்றாள்.

மரத்தாலான சிறிய மாளிகை அது. அதன் முகப்பில் இருந்த படைக்கலமேந்திய இரு காவலரை தவிர்த்தால் அங்கு அரசகுடியினர் தங்கியிருப்பதற்கான சான்றே இல்லை. உள்ளே இரண்டு ஏவற்பெண்டுகளுடன் ருக்மிணி தனித்து தங்கியிருந்தார். அதை ஒரு தவக்குடில் என்றே சொல்ல வேண்டும். முகப்பின் சிற்றறையில் நான் அரசிக்காக காத்திருந்தேன். சற்று நேரத்தில் ஏவற்பெண்டு உள்ளே வந்து "விதர்ப்பினியாகிய அரசி ருக்மிணி வருகை" என்று தாழ்ந்த குரலில் அறிவித்தாள். நான் எழுந்து கைகூப்பி நின்றேன். மங்கலத்தாலமேந்திய சேடி முதலில் வந்தாள். தொடர்ந்து ருக்மிணி வெண்ணிற ஆடை அணிந்து சிற்றடிகளுடன் வந்தார்.

நான் கைதொழுது முகமன் உரைத்தேன். அவற்றை கேட்காதவர்போல் பீடத்தில் அமர்ந்தார். என்னை அதன் பின்னரே பார்த்தவர்போல விழிமலர்ந்து "நலமா?" என்று மெல்லிய குரலில் கேட்டபின் அமரும்படி கைகாட்டினார். அமர்ந்ததுமே நான் அங்கு வந்தது எதற்காக என்று கூறத்தொடங்கினேன். அவர் அனைத்தையும் முன்னரே அறிந்திருந்தார் என்று தெரிந்தது. "தேவி, இத்தருணத்தில் பிரத்யும்னனின் தூதை ஏன் தலைக்கொண்டேன் எனில் அவர் அதை என்னிடம் சொன்ன ஏழு நாட்களில் பிரஃபாச க்ஷேத்ரத்தில் விழவு தொடங்கியது. அவர் அதில் உயிரிழந்தார்.

எனில் அவர் எனக்கிட்ட இறுதி ஆணை அது. ஆகவே அதை முற்றாக நிறைவேற்ற நான் கடமைப்பட்டவன்.”

“ஆம், அவர் தன் இறப்பை முன்னுணர்ந்து அதை கூறாமல் இருந்திருக்கலாம். ஆனால் ஊழ்நெறியை வைத்து பார்க்கையில் அவர் சாவுக்கு முன் சொன்ன விழைவு அது. ஆகவே ஒவ்வொருவரும் அதை தலைக்கொள்ள வேண்டியுள்ளது” என்று நான் சொன்னேன். “அச்செல்வத்தைப் பற்றிய அவரது பதற்றத்தையும் ஐயத்தையும் அருகமர்ந்து பார்த்துக்கொண்டிருந்தேன். தனக்கென ஒரு துண்டு நிலமேனும் அச்செல்வத்தைக் கொண்டு ஈட்டிக்கொள்ளவேண்டும் என்றும் பிரஃபாச க்ஷேத்ரத்திலிருந்து கூடிய விரைவில் அகன்று சென்றுவிடவேண்டும் என்றும் அவர் விரும்பினார். அதுவே அவருடைய முதன்மை விழைவாக இருந்தது என்றும் சொல்வேன்.”

“பிரஃபாச க்ஷேத்ரத்திலேயே அவர் இருக்கலாமே என்று நான் சொன்னபோது அவர் அதை மறுத்தார். இல்லை, இங்கு ஏதோ தீங்கு நிகழப்போகிறது என்று எனக்கு தோன்றுகிறது, நானும் இளையோரும் இங்கிருந்தால் அத்தீங்கு நிகழும், அகன்று சென்றால் அது நிகழாது என்று தோன்றுகிறது என்றார். எரிச்சலுடனும் சீற்றத்துடனும் ஓராண்டு ஆகிவிட்டது, இன்று வரை உரிய மறுமொழி எதையும் சொல்லாமல் இருக்கிறார் மாதுலர், இம்முறை அவரிடம் உறுதியாகக் கேட்டு வாருங்கள், நாங்கள் அளித்த அச்செல்வம் எங்களுக்குரியது, அதை அவர் திருப்பி அளித்தே ஆகவேண்டும் என்றார். அவர் எங்களுக்கு அளிக்கவிருக்கும் நிலம் எது என்று தெரியவேண்டும், இந்த இளவேனிலிலேயே நாங்கள் கிளம்பி அங்கு சென்று தங்க எண்ணுகிறோம், இனியும் பொறுப்பது இயலாது என்றார்.”

“நான் இளவேனிலில் கிளம்பினால் மக்கள் அத்தனை பொழுது நடந்து செல்வதற்குள் முதுவேனிலாகிவிடுமே என்றேன். ஆம், அவந்தியை அடைகையில் முதுவேனிலாகியிருக்கும். ஒருவகையில் அதுவும் நன்று. விதர்ப்பத்தில் வேனிலில் குடியேறுவதே சிறந்தது. கோடைகளில் ஆறுகளில் நீர் குறைந்திருக்கும். அணைகளையும் பாலங்களையும் நாம் அமைத்துக்கொள்ள முடியும். உறுதியான நிலத்தில் இல்லங்களையும் குடிலையும் கட்டிக்கொள்ள முடியும் என்றார். அவருடைய உள்ளம் அமைந்துவிட்டது என்று தெரிந்தது. உரத்த குரலில் கோடைக்குள் நமது சிறுநகர் விதர்ப்ப நிலத்தில் எழுந்தாக வேண்டும் என்று அவர் சொன்னபோதிருந்த அந்த முகத்தை மறக்கமுடியவில்லை.”

“அரசி, நான் அவரிடம் நிலைமையை விளக்கினேன். அரசே, எட்டு முறைக்கு மேல் தூது சென்றும் கூட விதர்ப்பத்தின் அரசர் சொல்லொழிகிறார் என்றால் அவருக்கு அச்செல்வத்தை திருப்பி அளிப்பதற்கான எண்ணமில்லை என்றே தோன்றுகிறது, ஆகவே மீண்டும் மீண்டும் தூது செல்வதில் பொருளில்லை என்றேன். அவர் ஆம், அதை நானும் அறிவேன் என்றார். குடிகள் எதிர்க்கிறார்கள், எந்த இடம் என்று முடிவுசெய்ய முடியவில்லை, அண்டை நாட்டரசர் தலையிடுகிறார்கள் என்று அவர் சொல்வதெல்லாமே இதை ஒத்திப்போடுவதற்கான முயற்சிதான். ஆனால் மாதுலருக்கு எதிராக நான் படைகொண்டு செல்ல இயலாது. படைகொண்டு செல்லும் இடத்திலும் நாம் இல்லை. கேட்டுத்தான் பெற்றாகவேண்டும் என்று பிரத்யும்னன் சொன்னார்.”

“அப்போது அவரிடம் தெரிந்த சோர்வை எண்ணுகையில் உள்ளம் நெகிழ்கிறது. இம்முறை அவரிடம் கூறுக, அவர்

எதன்பொருட்டேனும் மறுப்பாரெனில் நான் மதுராபுரிக்குச் சென்று என் பெரிய தந்தையிடம் முறையிட வேண்டியிருக்கும், மதுராபுரியிலிருந்து சூரசேனரும் பலராமரும் நானும் என் இளையோனும் படை கொண்டு வந்தால் விதர்ப்பம் அதை எதிர்கொள்ள இயலாது, ஆகவே சொல்காக்குமாறு அவரிடம் கூறுக என்றார். அந்த வஞ்சினமும் பொருளற்றது என்பதை நாங்கள் இருவருமே அறிந்திருந்தோம். ஆனால் அது அவருடைய அகத்தின் தவிப்பு" என்றேன்.

"அரசி, இன்று இளவரசர் பிரத்யும்னன் இல்லை, அவர் மைந்தன் அநிருத்தன் இல்லை, அவர் மைந்தரும் இல்லை. எனினும் அச்செல்வம் நமக்குரியது. அதை தாங்கள் பெற்றாகவேண்டும்" என்றேன். ருக்மிணியின் கண்களில் எந்த உணர்ச்சியும் எழவில்லை. ஆகவே நான் அடுத்த கருத்தை நோக்கி சென்றேன். "அரசி, தாங்கள் தங்கள் குடியிலோ யாதவக்குடியிலோ ஒரு சிறுவனை பெறுமைந்தனாக எடுத்துக்கொள்ளலாம். அவனுக்கு அச்செல்வத்தை உரிமையாக்குங்கள். அவனும் அவன் குடியினரும் வரும் தலைமுறைகள் தோறும் மாண்டவர்களுக்கு நீர்க்கடன்கள் அளிக்கவேண்டுமென்று ஒருங்கு செய்யுங்கள். இத்தருணத்தில் தாங்கள் ஆற்றவேண்டியது அதுவே" என்றேன்.

அரசி தலைகுனிந்து அமர்ந்திருந்தார். நான் "ஒருவேளை பிரத்யும்னன் என்னிடம் பணித்ததே இதற்காகத்தான் போலும்" என்றேன். அதற்கும் அவர்கள் மறுமொழி கூறவில்லை. "தாங்கள் தங்கள் மூத்தவருடன் முரண்பட தயங்குகிறீர்கள் என்று தோன்றுகிறது. ஆனால் தங்கள் மூத்தவர் பற்றி எந்த நல்லெண்ணமும் எவரிடமும் இல்லை. ஒவ்வொரு தருணத்திலும் அலைமோதுபவராகவே அவர் இருந்திருக்கிறார்.

குருக்ஷேத்ரத்தில் ஊசலாட்டத்தால் விலகி நின்றமை ஒரு நல்வாய்ப்பு என்றும் இப்பெருஞ்செல்வம் விதர்ப்பத்தை முதன்மை நாடாக்கும் என்றும் அவர் கருதுகிறார். பாரதவர்ஷம் கலங்கி நிலையழிந்திருக்கும் இத்தருணத்தில் கருவூலம் நிறைந்திருப்பது ஆற்றலை பெருக்குவதென்று எண்ணுகிறார்."

"ஆனால் அவர் எண்ணுவதுபோல அது எளிதாக நிகழப்போவதில்லை. மதுராபுரி இன்னும் ஆற்றலுடனேயே இருக்கிறது. பலராமரின் யாதவப் படைகளும் பெரும்பகுதி அழியாமல் எஞ்சுகின்றன. பலராமரும் ஆற்றலுடனேயே இருக்கிறார். அவர் விழைந்தால் அஸ்தினபுரியின் உதவியையும் நாடமுடியும். எனவே யாதவச் செல்வத்துடன் அவர் அவ்வளவு எளிதாக சென்றுவிட முடியாது" என்றேன். மேலும் கூர்மையாக "அரசி, ஒருவேளை உரிய தருணத்தில் உங்கள் மூத்தவர் உதவியிருந்தால் உங்கள் மைந்தர்களும் பெயர்மைந்தர்களும் இந்நேரம் உயிருடன் இருந்திருக்கக் கூடும். விதர்ப்ப மண்ணில் ஒரு தனியரசு அவர்களுக்கு அமைந்திருக்கவும் கூடும். ஒரு நோக்கில் முழுப் பழியையும் ஏற்றுக்கொள்ள வேண்டியவர் உங்கள் மூத்தவர்தான். அவர் மேல் எந்தப் பரிவும் வேண்டியதில்லை" என்றேன்.

ருக்மிணி பெருமூச்சுடன் நிமிர்ந்து அமர்ந்தபோது ஆடை சற்றே சரிந்தமைய முகம் தெரிந்தது. அதில் எந்த உணர்வும் இல்லை. விழிகள் வெறுமை கொண்டிருந்தன. மெல்லிய குரலில் "இருப்பவர் இல்லாதவர் எவருக்காகவும் நான் துயருறவில்லை" என்று அவர் சொன்னார். "இதில் நான் தலையிடுவதாகவும் இல்லை. இவ்வுலகியல் நிகழ்வுகளிலிருந்து முற்றாக விலகிவிடவேண்டும் என்று எண்ணினேன், விலகியும்விட்டிருக்கிறேன். இனி திரும்ப வந்து

எதையும் தொட்டுக்கொள்வதாகவும் இல்லை. நான் இனி செய்வதற்கு ஒன்றே உள்ளது.”

நான் ஊடே புகுந்து “ஆனால் மாண்டவர்களுக்கான கடன்கள்...” என்று சொல்ல “எச்சமின்றி அழியவேண்டும் என அவர் விழையாமல் இவ்வண்ணம் நடந்திருக்குமா?” என்றார். நான் திகைத்துவிட்டேன். “அவருடைய அவ்விழைவுக்கு எதிராக நான் போரிடவேண்டுமா? இவையனைத்தும் நிகழ்ந்தவை அல்ல, தெய்வப்பேருருவனால் நிகழ்த்தப்பட்டவை. நான் அதில் ஒரு சிறு துளி. என் பணிகளும் முடிந்தன. நான் காத்திருக்கும் செய்தி ஒன்று மட்டுமே” என்றார் ருக்மிணி. “இதில் தாங்கள் ஆற்றுவது எதுவோ அதை செய்யலாம். விளைவுகள் எதுவோ அது நிகழட்டும். ஊழ் வகுத்ததற்கு நடுவே புகுந்து கைவிரித்து நின்றிருக்கும் நிலையில் நான் இல்லை.”

“ஆனால்...” என்று நான் சொல்ல மெல்லிய புன்னகையுடன் “அவ்வண்ணமே” என்று சொல்லி தலைவணங்கி அவர் எழுந்துகொண்டார்.

நான் வரதாவினூடாக கங்கைக்குச் சென்று அங்கே பிறிதொரு படகிலேறி யமுனையை அடைந்து மீண்டுமொரு சிறுபடகில் மதுராவுக்கு சென்றேன். மூன்றாவது நாள் மதுராவின் துறைமுகத்தில் இறங்கியபோது என் உள்ளம் அடங்கி உரைக்கவேண்டிய அனைத்தும் சொல்கோக்கப்பட்டுவிட்டிருந்தன. அந்தப் பயணத்தில் நான் என்னை பலமுறை நம்பிக்கையின்மையின் இருட்டில் இருந்து

மீட்டுக்கொண்டேன். நானே இயற்றுகிறேன் என்னும் மேலும் பெரிய இருட்டிலிருந்து பிடுங்கி அகற்றிக்கொண்டேன்.

நான் வருவதை முன்னரே ஒற்றர்களுக்கு அறிவித்திருந்தேன். அவர்கள் அனுப்பிய பறவைச்செய்தியினூடாக பலராமர் என் வரவை அறிந்திருந்தார். என்னை துறைமேடையில் வரவேற்க மதுராவின் சிற்றமைச்சர் கர்க்கர் காத்து நின்றிருந்தார். அவர் புன்னகை இல்லாமல் என்னை வரவேற்றார். நடுப்பகலிலும் இருள்மூடியதுபோல ஓசையழிந்து ஓய்ந்து கிடந்த மதுராவின் சாலைகள் வழியாக சென்றோம்.

கர்க்கருடன் துணைமாளிகைக்குச் சென்று உணவருந்தி ஓய்வெடுத்தேன். உரிய உடைகளை அணிந்துகொண்டு பின்மாலைப்பொழுதில் பலராமர் அவைக்கு சென்றேன். அரண்மனையே சோர்ந்து கிடப்பதை கண்டேன். தூண்கள் நீர்ப்பாவைகள்போல நெளிவதாக, சுவர்கள் அலைகொள்வதாக தோன்றியது. காற்று எடைமிகுந்துவிட்டதைப்போல. ஒவ்வொருவரும் அடிக்கடி மூச்சை இழுத்து நீளொலியுடன் விட்டனர்.

பலராமர் தன்னுடைய அவையில் அமைச்சர்களும் குடித்தலைவர்களும் சூழ அமர்ந்திருந்தார். அவர் முதல் நோக்கில் துயர்கொண்டிருப்பதாக தோன்றவில்லை. வழக்கம்போல மிகையாக உணவும் மதுவும் உண்டு களைத்த விழிகளுடன் உடலை பீடத்தில் தளர்வாக நீட்டி அரை உள்ளத்துடன் சொற்களைச் செவிகொண்டு அமர்ந்திருப்பதாகவே தோன்றினார். எல்லா அவைகளிலும் அவர் துயிலில் இருப்பதாகவே தோன்றும்.

ஆனால் அருகணைந்து வணங்கியபோது அவருடைய கண்களை பார்த்தேன். அவை களைத்துச் சலித்திருந்தன. கண்களுக்குக் கிழே தசைவளையங்கள் கருகி அடுக்கடுக்காக படிந்திருந்தன. வாயைச் சுற்றி அழுத்தமான மடிப்புகளும் கோடுகளும் தெரிந்தன. அவர் துயரடைந்து, அத்துயரில் நெடுந்தொலைவு சென்று, சலித்து கரையொதுங்கிவிட்டார் என்பதை காட்டின அவை. மிகுந்த துயர்கொண்டவர்கள் அடையும் அச்சலிப்பு நஞ்சு போன்றது. ஒருபோதும் அவர்களை அது விடுவதில்லை.

அப்போது உணர்ந்தேன், நெடுநாட்கள் அவர் உயிருடன் இருக்கப்போவதில்லை என்று. அது அவர் உடல் நலிந்திருப்பதனால் அல்ல, உள்ளம் உயிர்வாழ்வதற்கான விளைவை முற்றாக இழந்துவிட்டதனால். சுடர் அகலிலிருந்து பறந்தெழ விரும்பி படபடத்துக்கொண்டிருக்கும்போது அணைவது குறைவு. தன்னைத் தானே சுருக்கி கரி உமிழ்ந்து சிறுமொட்டென அசைவிலாதிருக்கும் நிலையில் அது மீள்வது அரிது.

அவையினரும் எந்த ஆர்வமும் இல்லாதவர்களாக இருந்தனர். பலராமரின் மைந்தர்கள் நிஷதனும் உல்முகனும் அவையில் இருந்தனர். விஜயன் என்ற பேரில் நிஷதனை மதுராவுக்கு பட்டத்து இளவரசனாக முடிசூட்டும் விழவு ஓராண்டுக்கு முன் நிகழ்ந்திருந்தது. துவாரகையின் வீழ்ச்சியால் அதை ஒரு எளிய அரண்மனைச் சடங்காகவே முடித்துவிட்டிருந்தனர். அதன்பின் வசுதேவரும் தேவகியும் ரோகிணியும் மதுவனத்திற்கு கிளம்பிச் சென்றுவிட்டிருந்தார்கள்.

நான் முகமன் உரைத்து பீடம் கொண்டேன். முறைமைச் சொற்களும் சடங்குகளும் முடிந்த பின் சலிப்பும் சோர்வும்

நிறைந்த முகத்துடன் பலராமர் என்னைப் பார்த்து "என்ன நிகழ்ந்தது?" என்று கேட்டார். நான் அனைத்தையும் அவரிடம் கூறினேன். நான் எதன் பொருட்டு பிரத்யும்னனின் ஆணையை தலைக்கொண்டு அங்கே சென்றேன் என்பதை விளக்கும்போதேனும் அவரிடம் சிறு உணர்வெழுச்சி உருவாகும் என்று எதிர்பார்த்தேன்.

அவர் மாறாத விழிகளுடன் என்னை பார்த்துக்கொண்டிருந்தார். பின்னர் "நீர்க்கடனுக்கு எவருமில்லை என்று எண்ணவேண்டியதில்லை. மதுரா இங்கிருக்கிறது. என் மைந்தர்கள் இருக்கிறர்கள்" என்றார். "ஆம்" என்று நான் சொன்னேன். "ஆனால் அந்தச் செல்வத்தை தனக்குரியது என்று எண்ணி தன் மாதுலரிடம் கொடுத்திருக்கிறார் மறைந்த இளவரசர். நிறைவேறாத விழைவொன்றுடன் அவர் இறந்தார் என்று ஆக வேண்டியதில்லை. அவரை ஒருவன் ஏமாற்றி சிறுமைசெய்தான் என்ற சொல் நிலைகொள்ள வேண்டியதில்லை. அவர் நிறைவுற்று விண்ணேகட்டும். அதன்பொருட்டே இதை சொல்லவந்தேன்" என்றேன்.

அதுவும் பலராமரை உணர்வெழுச்சி கொள்ளச் செய்யவில்லை. "அதற்கென்ன?" என்று அவர் மீண்டும் சலிப்புற்ற குரலில் சொன்னார். அவையை கலைக்கப்போவதுபோல மெல்ல அசைந்தார். "துவாரகையின் பெருஞ்செல்வம் அங்கே பிரஃபாச க்ஷேத்ரத்தில் கிடக்கிறது. ஃபானு அக்கருவூலத்தை உடன்கொண்டு சென்றான் என நான் அறிவேன். இங்கு சிலர் அதை கொண்டுவரவேண்டும் என்றார்கள். அது தேவையில்லை என்று நான் தடுத்துவிட்டேன். தன் குடி முற்றழியட்டும் என அவன் எண்ணாமல் அது நிகழாது. தன் நகர் எஞ்சலாகாது என

அவன் விழையாமல் கடல் எழுந்து வராது. அச்செல்வமும் கடல்கொள்வதே முறை என்றேன்" என்றார்.

நான் இறுதியாக பிரத்யும்னனை சந்தித்தபோது பேசிக்கொண்டிருந்ததை சொன்னேன். என்னையறியாமல் என் குரலில் உணர்வெழுச்சி ஓங்கியது. "அன்று இளவரசரின் கண்களில் இருந்த அந்த நெகிழ்வை இன்னமும் நினைவுகூர்கிறேன். இவையனைத்திற்கும் ஒருவரை பழிசாற்ற முடியுமெனில் அது ருக்மியை மட்டுமே. உரிய பொழுதில் அவர் நிலத்தை பிரத்யும்னனுக்கு அளித்திருந்தாரெனில் இன்று மைந்தர் உயிருடன் இருந்திருப்பார்கள்" என்றேன். "அதை இனிமேல் பேசவேண்டியதில்லை. அதை அவன் மட்டுமே தடுத்திருக்க முடியும். அவன் அகன்றுவிட்டான் என்னும் நிலையில் எவரும் எதுவும் செய்திருக்க முடியாது" என்றார் பலராமர்.

"அரசே, அழிவை பிரத்யும்னனும் அஞ்சிக்கொண்டிருந்தார், அதிலிருந்து விடுபட முயன்றார். இறுதியாக அவர் எண்ணியது தங்களைத்தான். மதுராவிலிருந்து குலமூதாதை பலராமரின் உதவி வரும், அவருடன் சேர்ந்து படைகொண்டு வருவேன் என்றுதான் அவர் ருக்மிக்கு சொல்லி அனுப்பினார்" என்றேன். அச்சொற்களின் விளைவை உடனே கண்டேன். ஒருகணத்தில் பலராமரின் இரு கைகளும் இறுகுவதை காணமுடிந்தது. பீடத்தின் கைப்பிடிகளை இறுகப்பற்றி பற்களைக் கடித்து, தாடையை முறுக வைத்தார். சிறிய கண்கள் என்னை கூர்ந்து பார்த்தன.

"ஆம், தாங்கள் கூறியபடி அவர் இயற்றியதே அனைத்தும். ஒவ்வொன்றும் இணைந்துதான் அவ்வாறு நிகழ்ந்தன. ஊழ் அவ்வாறு வகுக்கிறது என்றால் நாம் செய்வதற்கொன்றும்

இல்லைதான். எனினும் மானுடப்பிழை என்று அதில் இருந்தால் அதற்கு மானுடன் பொறுப்பேற்றுத்தான் ஆகவேண்டும்" என்றேன். "அனைத்தையும்விட மறைவதற்கு முன் தந்தையை எண்ணாமல் தன் குலமூதாதை என பெரியதந்தையை எண்ணிய மைந்தனின் உணர்வை நாம் எண்ணாமலிருக்க முடியுமா என்ன?"

பலராமர் உறுமினார். நான் மேலும் முன்னகர்ந்தேன். "அங்கே தூதுசெல்லும்போது நான் எண்ணியது என்னிடமிருக்கும் இறுதிப் படைக்கலம் தங்கள் பெயரே என்றுதான். தாங்கள் ருக்மியின் ஆசிரியர், அவருக்கு தந்தையெனும் நிலையில் இருந்தவர். தங்கள் மைந்தனுக்கு அளித்த சொல்லில் இருந்து அவர் மீறிச் செல்வார் என்றால் அதன் பொருள் என்ன? தங்கள் பெயர் அவரை நடுங்கச் செய்யும் என எண்ணினேன். ஆனால் ஒரு சிறு இளிவரலையே அவரிடமிருந்து பெற்றேன்."

முறுகிய குரலில் "அறிவிலி!" என்று பலராமர் கூறினார். அது ஒரு தொடக்கச் சொல். அவையிலிருந்து ஒரு முதிய யாதவர் எழுந்து "நம் மைந்தனுக்கு இழைத்த அத்தீங்குக்கு நிகர்செய்யாமல் இங்கே வீணே அமர்ந்திருக்கப் போகிறோமா என்ன?" என்றார். பலராமர் "நாம் இயற்றக்கூடுவதென்ன?" என்றார். "செல்வம் அல்ல, அவனை அவ்வண்ணம் ஒருவன் ஏமாற்றக்கூடும் என்றால் நமக்கு பீடு அல்ல" என்றார் அவர். "அவனை பழிகொள்வோம். அச்செல்வத்தை அவனிடமிருந்து பிடுங்குவோம். அது நமக்கு தேவையில்லை, அதை அள்ளி யமுனையில் வீசுவோம். ஆனால் யாதவ மைந்தன் ஒருவனிடம் சொல்பிறழ்ந்து செல்வத்தை பெற்றுக்கொண்டு வென்றோம் என ஆணவம் கொண்டு அவன் அங்கிருந்தால் அதைவிடக் கீழ்மை எதுவுமில்லை" என்றார்.

அதுவரை நான் பேசிய எதிலும் ஆர்வம் காட்டாமல் அமர்ந்திருந்த அந்த அவை கலைந்து ஓசை எழுப்பத் தொடங்கியது. ஒவ்வொருவரும் பேச முயன்றபோது முழக்கம் பெருகியது. பலர் கூச்சலிட்டனர். அங்கிருந்த சோர்வை அப்படியே வெறியாக மாற்றிக்கொண்டார்கள். மெல்ல மெல்ல உணர்வெழுச்சிகள் கூடின. "கொல்லவேண்டும் அவனை! அவன் தலையை கொண்டுவந்து மதுராவில் வைப்போம்!" என்றார்கள். "மதுராவில் அல்ல, பிரஃபாச க்ஷேத்ரத்தில் அவன் தலை கொண்டுவைக்கப்பட வேண்டும்!" என்றார் பிறிதொருவர். "யாதவரை எவரும் ஏமாற்றி மகிழ்ந்திருக்கப் போவதில்லை என்ற செய்தி சென்று சேரட்டும் பாரதவர்ஷமெங்கும்!" என்றார் இன்னொருவர்.

அவை கூச்சலிட்டுக்கொண்டே இருந்தது. பலராமர் என்னிடம் "அவன் அந்தச் செல்வம் அனைத்தையும் அதை செய்ததற்கான பிழையீடான செல்வத்தையும் சேர்த்து கொண்டுவந்து இங்கு மதுராவில் என் காலடியில் வைத்து வணங்கவில்லை எனில் அவன் தலையை மதுராவில் கோட்டைமுகப்பில் தொங்கவிடுவேன் என்று சென்று சொல்க!" என்றார். அவை கைவீசி ஆர்ப்பரித்தது. "ருக்மி வந்தாகவேண்டும். அடிபணிந்தாகவேண்டும்!"

அக்கணத்தில் ஓர் எண்ணம் எனக்கு எழுந்தது. நான் ஏன் இதை செய்கிறேன்? இந்தச் செல்வத்தை ருக்மியிடமிருந்து மீட்டு நான் செய்யப்போவதுதான் என்ன? அதைவிடப் பெருஞ்செல்வம் அங்கே கடலில் மூழ்கிக்கிடக்கிறது. உள்ளாழத்தில் எனக்கு தெரிந்திருந்தது, எதையேனும் ஒன்றை செய்வதனூடாகவே நான் வாழ்வை பொருள்கொள்ளச் செய்யமுடியும் என்று. பெருக்கில் செல்லும் பாம்பு சுள்ளியில் தொட்டதுமே உடலே

கையாகி அள்ளிச் சுற்றிக்கொள்வதுபோல எனக்கு ஏதேனும் ஒன்று தேவைப்பட்டது. அவ்வண்ணமே பலராமருக்கும் என்று புரிந்துகொண்டேன். அந்த அவையில் இருந்த அனைவருக்கும் அப்படியே என்று தெளிந்தேன்.

பிரத்யும்னனைப் பற்றி நான் சொன்னவை எல்லாம் ருக்மியிடமும் பின் ருக்மிணியிடமும் சொன்னபோது உருவாக்கி வளர்த்துக்கொண்டவை. அங்கே சொல்லச்சொல்ல பெருகியவை. அவை பொய் அல்ல, ஆனால் அவற்றுடன் இணைந்திருந்த உணர்வுகள் மிகையானவை. மிகையெல்லாம் பொய்யே. மீண்டும் ஒரு போர் நிகழலாம். புரவியின் நோயெல்லாம் அது ஓடினால் சீராகிவிடும் என்பார்கள். போரினூடாகவே அரசகுடியினரின் சோர்வும் துயரும் இல்லாமலாகுமா என்ன?

# கல்பொருசிறுநுரை - 74

**பகுதி ஏழு : நீர்புகுதல் – 3**

மதுராவிலிருந்து மீண்டும் விதர்ப்பத்திற்கே நான் கிளம்பினேன். இம்முறை என்னுடன் மதுராவின் இரண்டு அமைச்சர்களும் உடன்வந்தனர். யமுனையினூடாக படகில் கங்கையை அடைந்து, அங்கிருந்து எதிரோட்டத்தை தாங்கும் சிறிய பாய்கொண்ட மென்மரப் படகில் வரதாவினூடாக கௌண்டின்யபுரியை சென்றடைந்தோம். முன்னரே எங்கள் வருகையை ருக்மிக்கு அறிவித்திருந்தோம். ஆகவே எங்களை

வரவேற்க படகுத்துறையில் விதர்ப்பத்தின் சிற்றமைச்சர் ஒருங்கியிருந்தார்.

நாங்கள் சென்றிறங்கியபோது எங்களுக்கு முறையான வரவேற்பு அளிக்கப்பட்டது. எங்களை அழைத்துச்சென்ற அமைச்சர் ஒரு மாளிகையை அளித்து ஓய்வெடுத்து ஆடைமாற்றும்படி பணித்தார். ஆனால் அது எங்கள் தகுதிக்கான இடமல்ல என்று அப்போதும் உணர்ந்தேன். முறைமை செய்யவேண்டும், ஆனால் தன் பொருட்டின்மையை தெளிவுற அறிவுறுத்த வேண்டும் என்றும் ருக்மி விரும்புவதை உணர்ந்துகொண்டேன். அதை பொருட்டெனக் கருதியதாக காட்டிக்கொள்ளவேண்டாம் என்று என் உடன் வந்த மதுராவின் அமைச்சர்களிடம் கூறினேன்.

நாங்கள் ஓய்வெடுத்த பின்னர் அந்தியில் எங்களை அவைக்கு அழைத்துச்செல்ல ருக்மியின் சிற்றமைச்சர்கள் வந்தார்கள். அவர்கள் கவலைகொண்ட முகத்துடன் இருப்பதை, தங்களுக்குள் எரிச்சலுடன் பேசிக்கொள்வதை நான் உணர்ந்தேன். கௌண்டின்யபுரியில் ஏதோ நிறைவின்மை கருக்கொண்டிருக்கிறது என்று தெரிந்தது. அவைமுகப்பிலேயே எங்களைக் காத்து ருக்மியின் மைந்தர்களான ருக்மகனும் ருக்மதேஜஸும் ருக்மாங்கதனும் ருக்மவீரனும் ருக்மராஜனும் நின்றிருந்தனர். அவர்களின் முகங்கள் எங்களிடம் ஏதோ சொல்ல விழைவதுபோல தோன்றின.

அவர்களில் ருக்மாங்கதனும் ருக்மராஜனும் ருக்மியின் உடன்பிறந்தவரான ருக்மகேதுவின் மைந்தர்கள். ருக்மவீரன் ருக்மியின் இளையோன் ருக்மரதனின் மைந்தன். குருக்ஷேத்ரப் போரில் ருக்மியின் தந்தையும் கௌண்டின்யபுரியின் அரசருமான பீஷ்மகர் தன் மைந்தர்களான ருக்மரதன்,

ருக்மகேது, ருக்மபாகு, ருக்மநேத்ரன் ஆகியோருடன் உயிர்துறந்தார். அவர்களில் ருக்மபாகு, ருக்மநேத்ரன் இருவரும் விதர்ப்பத்தின் முதன்மையான நிஷாத குடியான விடூபர்களை சேர்ந்தவர்கள். விடூபர்கள் ருக்மியிடமிருந்து உளமாறுபாடு கொண்டு விலகியிருப்பதாக நான் அறிந்திருந்தேன்.

நான் எண்ணியதற்கு மாறாக விதர்ப்பத்தின் அந்தணரும் அமைச்சர்களும் படைத்தலைவர்களும் பெருவணிகர்களும் குடித்தலைவர்களும் அடங்கிய ஐம்பேரவை அது. முன்னரே எங்கள் வருகை அவர்கள் அனைவருக்கும் தெரிந்திருந்தது. ஆகவே நாங்கள் அவைக்குள் நுழைந்தபோது மெல்லிய ஒரு சலசலப்பாக அவர்களின் உணர்வுகள் வெளிப்பட்டன. நான் முகப்பில் சென்றுநின்று ருக்மியை முறைப்படி முகமனுரைத்து வணங்கினேன். அவர் எனக்கு வெறும் தலையசைப்பையே மறுமுகமனாக உரைத்தார். நாங்கள் பீடம்கொண்டதும் நிமித்திகன் அவை நிகழ்வுகளை அறிவித்தான்.

எங்கள் வருகைக்கு தொடர்பற்ற நிகழ்ச்சிகள் தொடங்கின. நான் பொறுமையிழந்து காத்திருந்தேன். ருக்மி எங்கள் வருகை அவர்களுக்கு பொருட்டல்ல என்று காட்டவிரும்புகிறார் என்று தெரிந்தது. என்னுடன் வந்த அமைச்சர்கள் சிவந்து மூச்சை இழுத்துவிட்டுக் கொண்டிருந்தனர். பொறுமை என நான் அவர்களுக்கு விழிகாட்டினேன். முதன்மை நிகழ்வுகள் முடிந்து எளிய நிகழ்வுகள் சென்றுகொண்டிருந்தபோது நடுவே எங்கள் வருகை அறிவிக்கப்பட்டது. ருக்மி அப்போதுதான் எங்களை பார்ப்பவர்போல திரும்பி "கூறுக!" என்றார்.

நான் எழுந்து குரலில் அலைவின்மையை தக்கவைத்துக்கொண்டு "விதர்ப்பத்தின் அரசே, இன்று யாதவர்களின் குடித்தலைவராகவும், மதுராவின் அரசராகவும்,

பாரதவர்ஷத்தின் வெல்லப்படாத பெருவீரராகவும் இருக்கும் மூத்த யாதவர் பலராமரின் ஆணைப்படி இங்கு வந்துள்ளேன். தாங்கள் பலராமரின் மாணவர் என்பதை இங்கு அறிவுறுத்த விரும்புகிறேன். விதர்ப்பம் இன்று அஸ்தினபுரிக்கு கப்பம் கட்டிக்கொண்டிருக்கும் மகதத்திற்கு கப்பம் கட்டிக்கொண்டிருந்த நாடு. அஸ்தினபுரி மதுராவின் நட்பு நாடு. ஆகவே விதர்ப்பத்தை மதுராபுரி தனக்கு கப்பம்கட்டும் நாடென்று மட்டுமே கருத முடியும். அவ்வாறல்ல என்று விதர்ப்பம் கருதுமாயின் அதை அஸ்தினபுரியிடம் பேசியே முடிவுசெய்ய வேண்டும்" என்றேன்.

அவை ஓசையின்றி அமைந்திருந்தது. ருக்மியின் விரல்கள் பதறத் தொடங்குவதை கண்டேன். "அரசே, தாங்கள் மதுராபுரியின் இணையரசான துவாரகையை ஆண்ட இளைய யாதவர் கிருஷ்ணனின் மைந்தர் பிரத்யும்னனிடமிருந்து கருவூலத்தில் ஒரு பகுதியை முறைப்படி சொல்லளித்து பெற்றுக்கொண்டீர்கள் என்பதை மறுக்கமாட்டீர்கள். அந்தக் கருவூலச்செல்வத்தையும், அதை நாங்கள் பலமுறை கோரியும் மறுத்தமைக்குரிய பிழையீட்டுச் செல்வத்தையும் இன்னும் ஏழு நாட்களில் படகுகளில் மதுராவுக்கு அனுப்பவேண்டும். அந்தச் செல்வத்தை ஏற்றுக்கொண்டதாக அரசரின் ஒப்புதலை பெற்றாகவேண்டும்."

ருக்மியின் இறுகிய முகத்தை நோக்கி நான் சொன்னேன் "இல்லையெனில் யாதவர்களின் படை வந்து விதர்ப்பத்தை சூழ்ந்துகொள்ளும். ஐயம் வேண்டியதில்லை. விதர்ப்பம் முற்றழியும். கௌண்டின்யபுரியின் ஒவ்வொரு மாளிகையும் இடிக்கப்படும். ஒவ்வொரு இளைஞனும் கொல்லப்படுவான். வயல்கள் உப்பிடப்படும். நீர்நிலைகள் இடித்தழிக்கப்படும்.

இங்கே எரிபுகையும் இடிபாடுகளும் மட்டுமே எஞ்சும்” என்றேன். “அவ்வழிவிலிருந்து விதர்ப்பம் மீண்டெழ ஏழு தலைமுறைகளாகும். ஆகவே ஆற்றவேண்டியதை உடனே ஆற்றுக! உரிய முடிவை எடுத்து என்னிடம் தெரிவித்து அனுப்புக!” என்றேன்.

அவை உறைந்து சொல்லிழந்து அமர்ந்திருந்தது. ருக்மி ஏற்கெனவே முடிவெடுத்துவிட்டார் என்பது தெரிந்தது. ஆயினும் என் குரலிலிருந்த விசை அவரை சொல்லெழாது செய்தது. திகைப்புடன் அவையை மாறிமாறிப் பார்த்தார். கைகளை ஒன்றுடன் ஒன்று சேர்த்து கோத்துகொண்டபோது மரக்கட்டை உரசுவதுபோல ஓசை எழுந்தது. சொற்கள் எதுவும் அவர் நாவில் எழவில்லை என்பது தெரிந்தது. பின்னர் தன்னைத் தானே விசைகூட்டிக் கொண்டு எழுந்து கைகளை விரித்து உடைந்த குரலில் “எங்கு எதை பேசுகிறீர்கள்? எவரை வந்து மிரட்டுகிறீர்கள்?” என்று கூவினார். அக்குரலை அவரே கேட்டு உணர்வெழுச்சி கொண்டார்.

“விழுந்துபட்ட துவாரகையா, அழிந்துபட்ட பிரஃபாச க்ஷேத்ரமா, எங்கிருந்து கிளம்பி வந்திருக்கிறீர்கள்? நாய்க்குடை நகரங்கள் அவை. வேரூன்றி கிளைவிரித்து பாரதவர்ஷத்தின் பெரு மணிமுடிகளில் ஒன்றாக நின்றிருக்கும் விதர்ப்பத்தை நோக்கி இதை சொல்ல எப்படி துணிகிறீர்கள்? விதர்ப்பம் இனி எவருக்கும் எந்நிலையிலும் கப்பம் கட்ட எண்ணவில்லை” என்றார். கைகளை ஓங்கி அறைந்து “இங்கு பேசப்பட்ட ஒவ்வொரு சொல்லையும் அறைகூவலாகவே கொள்கிறேன். இதன்பொருட்டு மதுராபுரியை அழிப்பேன்!” என்றார்.

நான் அவரை மறித்து “நீங்கள் கட்டிய கப்பத்தால் வீங்கிய மகதத்தின் அரசரை சிற்றுயிரை நசுக்குவதுபோல்

வென்றவர்கள் யாதவர்கள்" என்றேன். ருக்மி பற்கள் தெரிய கூச்சலிட்டபடி என்னை நோக்கி கைநீட்டினார். "யார் நீ? இங்கு எனக்கு நிகராக நின்று அவை விவாதம் செய்வதற்கு தகுதியானவனா? போ, உன் நிலத்தில் கன்றோட்டு. சாணி அள்ளு. பால் கறந்து நெய் எடு..." என்றார். அவர் உடல் பதறிக்கொண்டிருந்தது. "சென்று சொல் உன் அரசரிடம், நான் படைக்கு ஒருக்கம் என்று" என்றார். "ஆனால் ஒன்று, நான் வென்றால் மதுராபுரி என்ற ஒரு நகர் அதன்பின் இருக்காது. மூன்றாவது பேரழிவு யாதவர்களுக்கு காத்திருக்கிறது. யாதவக் குடியில் ஒற்றை ஆண்மகன்கூட இல்லாது அழிக்கப்படுவான். இனி ஒருபோதும் யாதவர் எங்கும் தலையெடுக்க முடியாது செய்வேன். இது என் குலதெய்வங்கள்மேல், என் மூதாதையர்மேல் ஆணை!"

அது போர்வஞ்சினம். ஆனால் அவர் முன் அமர்ந்திருந்த அவையிலிருந்து அத்தருணத்தில் வெளிப்படவேண்டிய ஓசைகளோ உணர்வுகளோ வெளிப்படவில்லை. அரசன் வஞ்சினம் உரைத்தால் எழுந்து நின்று படைக்கலங்களை தூக்கி வீசி போர்க்குரல் எழுப்பி அவ்வஞ்சினத்தை தாங்களும் ஏற்பதும் மேலும் மேலும் கூச்சலிட்டு அவ்வஞ்சினத்தை பன்மடங்காக பெருக்குவதும் அவையினரின் இயல்பு மட்டுமல்ல கடமையும் கூட. அவையினர் திகைத்த விழிகளுடன் அசைவிலாது ஓசையில்லாது அமர்ந்திருந்தனர். ஆனால் தன் மிகையுணர்ச்சிகளால் ததும்பிக்கொண்டிருந்த ருக்மி அதையும் உணரவில்லை.

அவை அமைதியாக இருப்பதை நான் வேண்டுமென்றே தலைசுழற்றி திரும்பிப் பார்த்தேன். புன்னகையுடன் "அரசே, இந்த அவை உங்கள் சொல்லை ஏற்கிறதா?" என்றேன். "ஏற்கும்!

எனது அவை எனது சொல்லை ஏற்றே ஆகவேண்டும்!" என்றார் ருக்மி. அப்போதும் அவரால் உணரமுடியவில்லை. "அது உங்கள் ஆணைதான். ஆனால் உங்கள் உணர்வுகளை இந்த அவை ஏற்கிறதா?" என்று மீண்டும் கேட்டேன். "அதை பார்க்கவேண்டியவன் நான், நீ அல்ல" என்று ருக்மி கூவினார். "இது எனது சொல். சென்று சொல்க, பலராமரிடம்! அவர் முதியவர், படை நடத்தும் திறனற்றவர், நானோ இன்னும் உடலாற்றலுடன், உளவிசையுடன் இருப்பவன்."

வெறியுடன் இளித்தபடி அவர் சொன்னார். "நான் எவரென்று இன்னமும் நீங்கள் உணரவில்லை. விதர்ப்பத்தின் முழுப் படையையும் அப்படியே பாதுகாத்து வைத்திருக்கிறேன். நாங்கள் குருக்ஷேத்ரப் போரில் ஒரு வீரனையும் இழக்கவில்லை. இன்று முழுப் படையுடன் இருக்கும் பாரதவர்ஷத்தின் நாடுகளில் ஒன்று நாங்கள். இந்த பாரதவர்ஷத்தின் அனைத்து அரசுகளையும் வென்று விதர்ப்பம் முடிசூடக்கூடிய வாய்ப்பு எங்களுக்கு ஒருங்கி வந்திருக்கிறது. ஆம், பிரத்யும்னனின் செல்வம் என்னிடம் இருக்கிறது. அது ஊழின் ஆணையால் எனக்கு வந்துசேர்ந்தது. ஊழ் ஒருங்கியிருக்கிறது விதர்ப்பம் முதன்மைகொள்வதற்காக!"

"சென்று சொல்க, விதர்ப்பம் ஒரு வெள்ளி நாணயத்தைக் கூட எவருக்கும் அளிக்கப்போவதில்லை! அதற்கு மாறாக அச்செல்வத்தைக் கொண்டு மேலும் பலமடங்கு படை திரட்டப் போகிறேன். மதுரா என் மேல் படைகொண்டுவருமா? நன்று, அவர்களிடம் எவ்வளவு படை இருக்கிறதென்று எனக்குத் தெரியும். அவர்கள் இங்கு வரும்போது மழைக்கால நீர்போல எட்டு திசையிலிருந்தும் விதர்ப்பத்திற்கு படைப்பெருக்கு வந்துகொண்டிருப்பதை காண்பார்கள்." அவ்வெண்ணத்தால்

ருக்மி அவரே மகிழ்ந்தார். உரக்க நகைத்து கைவீசினார். “விதர்ப்பம் பாரதவர்ஷத்தின் மாபெரும் படைவல்லமை கொண்டிருக்கும். யாதவர்களின் செல்வத்தால் படைபெருக்கி யாதவர்களை வெல்லும்.”

“எங்கள் படை பெருகிக்கொண்டே இருக்கும்” என்று ருக்மி கைதூக்கி கூவினார். “இன்று எங்களைச் சூழ்ந்திருக்கும் அனைத்து அரசுகளும் ஆற்றலிழந்திருக்கின்றன. பெரும்பாலான நாடுகளில் படைவீரர்கள் காவல்பணியும் இன்றி, ஊதியமின்றி இருக்கிறார்கள். இங்கு படைவீரர்களுக்கு பொன்னால் ஊதியம் அளிக்கப்படுகிறது என்று ஒரு முரசறைவு நிகழ்ந்தால் போதும், ஏழு நாட்களில் விதர்ப்பம் படைகளால் நிறையும்.” உளவிசையால் அவர் அரசமேடையில் இருந்தே இறங்கி என்னை நோக்கி வந்துவிட்டார்.

“ஒருவேளை ஊழ் எண்ணுவதும் இதுவே போலும். பாரதவர்ஷத்தின் பெருவீரர் என்று அறியப்பட்ட பலராமரை வென்று, தலைகொய்தேன் என்று இங்குள்ள ஷத்ரியர்கள் என்னைப் பற்றி அறியட்டும். அதன்பின் போரில்லாமலே காங்கேயத்தை வெல்வேன். சைந்தவத்தை அடைவேன். வேசரத்தை கைப்பற்றுவேன். அதன்பின் படைகொண்டு சென்று திருவிடத்தையும் கொள்வேன். மும்முடிசூடி கடல்சூழ் நாவலந்தீவில் அரியணை அமர்ந்திருப்பேன். தெய்வங்கள் அருள்கின்றன போலும்! மூதாதையரின் ஆணை போலும் இது! போர் எழுக! போரில் வென்று விதர்ப்பம் பொலிவு கொள்க!” என்று ருக்மி சொன்னார்.

“இதுவே உங்கள் மறுமொழி எனில் இச்சொல்லுடன் நான் திரும்பிச்செல்கிறேன்” என்று நான் சொன்னேன். அப்போது “பொறுங்கள், யாதவரே” என்று அருகிலிருந்த பட்டுத்திரைக்கு

அப்பால் அரசி ருக்மிணியின் குரல் கேட்டது. அவர்கள் போஜகடகத்தில் இருந்து எப்போது வந்தார்கள், அங்கு எப்போது வந்து அமர்ந்தார்கள் என்று எனக்கு தெரியவில்லை. ஓசையிலாது வந்து அமர்வது அவர்களின் வழக்கமும் அல்ல. ஆனால் வெண்ணிற ஆடை அணிந்ததுமே அவர்கள் உடல்மொழியில் மாற்றம் வந்திருந்ததை முன்னரே உணர்ந்திருந்தேன். வெண்ணிறம் முகிலுக்குரியது. வெண்ணிற ஆடை அணிந்தவர்களுக்கு அப்பண்புகள் வந்தமைகின்றன போலும்.

அரசியின் குரல் அங்கிருந்த அனைவருக்கும் கேட்டது. அவையே பட்டுத்திரைச்சீலையில் தெரிந்த நிழலுருவம் நோக்கி திரும்பியது. "கூறுங்கள் அரசி, தங்கள் ஆணை என்ன?" என்றேன். "இங்கு உரைக்கப்பட்ட அனைத்தையும் கேட்டேன். அரசர் எடுக்கும் முடிவுக்கு அப்பால் சென்று ஒரு முடிவை கோரும் நிலையில் நானில்லை. என் மைந்தன் பிரத்யும்னன் விதர்ப்பத்துக்கு அளித்த செல்வத்தை அடையும் உரிமைகொண்டவள் நான். ஆனால் அதை நான் கோரவில்லை. ஆகவே அதை கோர மதுராவுக்கு உரிமையில்லை" என்றார் ருக்மிணி.

அவையில் சிலர் "ஆம்! உண்மை! மெய்!" என்றனர். நான் "சற்று பொறுங்கள் அரசி, தாங்கள் சொல்வது முதலில் கேட்கும்போது முறையெனத் தோன்றுமெனினும் அது பொருளற்றது. தங்களின் மைந்தனின் செல்வத்தை கேட்டுப்பெறுவதில் தங்களுக்கு உரிமையுண்டு. ஆனால் அவ்வுரிமை ஒன்றின்பொருட்டே. தங்கள் மைந்தருக்கு நீர்க்கடன் செய்யும்பொருட்டு தாங்கள் ஒரு சிறுவனை பெறுமைந்தனாக எடுத்துக்கொண்டால் மட்டுமே அவன் பொருட்டு

அச்செல்வத்தை கோரமுடியும். அவ்வாறு அல்லவெனில் அவ்வாறு பெறுமைந்தனை எடுத்து நீர்க்கடன் முடிக்கும் குடிமூத்தாருக்கே அச்செல்வம் சென்று சேரும்" என்றேன்.

"நீங்கள் உங்கள் மைந்தனுக்கும் பெயர்மைந்தனுக்கும் வழிமைந்தனுக்கும் நீர்க்கடன் செய்ய விரும்பவில்லை என்று கூறினீர்கள். அதன்படி அச்செல்வத்தை நீங்கள் முற்றிலும் இழந்துவிட்டீர்கள். அதை எவருக்கும் அளிக்க உங்களுக்கு உரிமை கிடையாது" என்று நான் கூறினேன். "இப்போது அச்செல்வம் யாதவக் குடிக்கே திரும்பச்சென்றுவிட்டது. அதை கோரவே நான் வந்திருக்கிறேன்." அவையை நோக்கி திரும்பி "பிரத்யும்னன் இளைய யாதவரின் மைந்தர் என்பதை இந்த அவை மறக்கவேண்டியதில்லை. அச்செல்வம் இளைய யாதவரால் ஈட்டப்பட்டது என்பதையும் எவரும் மறுக்கப் போவதில்லை. இளைய யாதவரின் குடிக்கே அச்செல்வம் சென்று சேரவேண்டும். இளைய யாதவரின் குடியில் எஞ்சியிருக்கும் அவரது மூத்தவர் பலராமர். அவரும் அவர் மைந்தரும்தான் தன் குடிமைந்தருக்கு நீர்க்கடன் செய்யும் குருதி முறைமையை கொண்டிருக்கிறார்கள்" என்றேன்.

"நன்று, அதை மூத்தவர் கூறியதுபோல போர்க்களத்தில் தீர்த்துக்கொள்ளுங்கள்" என்று ருக்மிணி சொன்னார். "ஆனால் அதன் பொருட்டு இரு நாடுகளும் போர்புரியுமெனில் மீண்டும் ஒரு பேரழிவே உருவாகும். அப்படி ஒரு அழிவை பாரதவர்ஷத்தின்மேல் மீண்டும் சுமத்த எண்ணுகிறாரா மூத்தவர்? குருக்ஷேத்ரத்தின் அழிவைக் கண்ட பின்னரும் பிறிதொரு போரா?" என்று ருக்மிணி கேட்டார். எவரும் எதிர்வினையாற்றவில்லை என்றாலும் அங்கிருந்த அத்தனை

பேரும் அச்சொற்களுடன் அகவொருமை கொள்வதை உணரமுடிந்தது.

“விதர்ப்பம் தூய ஷத்ரியக்குருதி கொண்டதல்ல என்று எண்ணுபவர்கள் இருக்கிறார்கள். யாதவர்களோ ஷத்ரியர்களாக இன்னும் ஏற்கப்படாதவர்கள். யாதவர்களும் விதர்ப்பமும் போரிட்டு அழியுமெனில் அத்தொன்மையான ஷத்ரியக்குடிகளே மகிழ்ச்சி அடைவார்கள். அவர்களுக்கு அந்த மகிழ்ச்சியை அளிப்பதற்காகத்தான் இதை செய்யப்போகிறோமா?” என்றார் ருக்மிணி. “ஆம், அதையே நானும் கேட்க எண்ணினேன். இந்தப் போரால் எவருக்கு அறுதியாக நன்மை?” என்றார் முதிய குடித்தலைவர் ஒருவர்.

“பொறுத்தருளுங்கள் அரசி, போருக்கு அறைகூவியவர் உங்கள் மூத்தவர். இதை அவரிடம் சொல்லுங்கள்” என்றேன். “இருவருக்காகவும்தான் இதை கூறுகிறேன். இங்கு அவையிலிருக்கும் விதர்ப்பர்கள் கூறட்டும், பிறிதொரு பேரழிவுப்போரை அவர்கள் விரும்புகிறார்களா?” என்றார் அரசி. “அவ்வளவு எளிதாக என் மூத்தவரை மூத்த யாதவர் வெல்ல இயலாது. ஏனெனில் அவர் மூத்த யாதவரின் மாணவர். ஆனால் ஒன்று உறுதியாக சொல்லமுடியும், போர் நிகழ்ந்தால் மதுராவும் அழியும் விதர்ப்பமும் அழியும்” என்று அரசி சொன்னார்.

ஆங்காங்கே பலர் அவையில் எழுந்தனர். “ஆம், விதர்ப்பத்தினரும் போரை முழுமையாக கண்டுவிட்டோம். நம் அரசரும் இளவரசரும் மறைந்த துயரே இன்னும் மறையவில்லை. ஒருபோதும் விதர்ப்ப மக்கள் போருக்கு ஒருக்கமில்லை” என்றார் முதிய குடித்தலைவர். “எனது ஆணை! எனது ஆணையை மீறுகிறதா விதர்ப்பம்?” என்றபடி

ருக்மி எழுந்தார். “அரசே, இதை வாழவைக்கும் பொறுப்பு உங்களுக்கு உள்ளது. இதை அழிக்கும் முடிவை நீங்கள் எடுத்தால் அதற்கு நாங்கள் உடன்பட முடியாது” என்றார் ஒருவர். “அழிப்பதும் வளர்ப்பதும் எனது முடிவு” என்று ருக்மி கூவினார். “அது உங்களைப் பற்றிய முடிவு எனில் நீங்கள் எடுக்கலாம். விதர்ப்பம் நூற்றெட்டு குடிகளால் ஆனது. எங்கள் குடியின் நலனை நாங்கள் பேணவேண்டும்” என்று இன்னொருவர் சொன்னார்.

சினம்கொண்டு நிலையழிந்து உடைவாளில் கைவைத்து “என்னை மறுக்கிறீர்களா?” என்றார் ருக்மி. “ஆம் மறுக்கிறோம், விதர்ப்பத்தின் விடுபட குடி போருக்கு வரப்போவதில்லை” என்றார் முதியவர். “அம்பர் குடியும் போருக்கு எழாது” என்றார் இன்னொருவர். ருக்மி ருக்மிணியை நோக்கி சீற்றத்துடன் திரும்பி “இதைத்தான் நீ விரும்பினாயா? இவர்களை எனக்கெதிராக தூண்டிவிடுவதற்காகத்தான் இங்கு வந்தாயா?” என்றார். “அல்ல. அவர்கள் எந்த நிலையிலிருக்கிறார்கள் என்று எனக்கு முன்னரே தெரியும் என்பதனால்தான் அவைக்கு வந்தேன். உங்கள் சொல் இங்கே சிறுமைப்படலாகாது என்பதற்காக” என்று ருக்மிணி சொன்னார்.

“எவருடைய ஆதரவும் எனக்கு தேவையில்லை. என்னிடம் இருக்கும் கருவூலச் செல்வத்தால் நான் படைதிரட்டிக் கொள்கிறேன். ஆனால் அப்படை இங்கே கோன்மைகொண்டால் இங்குள்ள ஒவ்வொரு குடியையும் அடக்குவேன். குடித்தலைவர்களை கழுவிலேற்றுவேன்” என்று ருக்மி கூச்சலிட்டார். “மூத்தவரே, அதற்கு முன் உங்கள் மைந்தரிடம் உசாவுக!” என்றார் ருக்மிணி. “என் மைந்தரா?” என்று ருக்மி திரும்பினார். மூத்தவரான ருக்மகன் “தந்தையே, விதர்ப்பம்

போருக்கு எழவேண்டியதில்லை என்பதே என் எண்ணம். என் இளையோரின் எண்ணமும் மற்றல்ல" என்றார். ருக்மதேஜஸ் "யாதவர்களுடன் போரிடுவது என்பது நம் இயற்கையான துணைவரை பகைத்துக்கொள்வது, அது தற்கொலை முயற்சி" என்றார்.

ருக்மாங்கதன் "யாதவர்களுக்கான செல்வத்தை அளித்துவிடுவதே உகந்தது. அவர்களுடன் நீண்டநாள் படையொத்துழைப்புக்கான புரிதல்சாத்து ஒன்றையும் உருவாக்கிக் கொள்ளவேண்டும்" என்றார். ருக்மவீரன் "ஆம், அதுவே எங்கள் இருவரின் எண்ணமும்" என்றார். ருக்மி தளர்ந்து அரசமேடையில் நின்றார். பின்னர் மெல்ல நடந்துசென்று அரியணையில் அமர்ந்தார். அவர் உடல் சோர்ந்து கைகள் உயிரற்றவை என அமைந்தன.

ருக்மிணி "மூத்தவரே, தாங்கள் மதுராவை போருக்கு அழைத்துவிட்டீர்கள். இன்று உங்கள் குடியினர் உங்களுடன் இல்லையென்ற செய்தி வெளியே செல்லும் என்றால் அந்த வஞ்சினச் சொல் வீணாகும். அதனால் உங்களுக்கு இழிவே சூழும். அவ்வாறு நிகழக்கூடாது என்பதற்காகத்தான் இங்கு வந்தேன்" என்றார். ருக்மி "என்ன நிகழப்போகிறது? படைகொண்டு வருக என்று நான் மதுராவுக்கு அறைகூவிவிட்டேன். என் சொல்லை நான் மாற்றபோவதில்லை. மதுரா படைகொண்டு வரும்போது இங்கிருக்கும் இக்கோழைகள் சென்று வணங்கி அடிபணிவார்கள் என்றால் அவ்வண்ணமே ஆகுக! என் மைந்தர் என்னை சிறைபிடித்து அவர்களிடம் கையளிப்பார்கள் என்றால் அது நடக்கட்டும்" என்றார்.

“ஆனால் அவைச்சிறுமை நிகழ்ந்த பின் நான் ஏன் உயிர்வாழவேண்டும்...” என்று கூவியபடி எழுந்தார். அவருடைய உடலில் ஒரு துடிப்பு எழுந்தது. “அவ்வண்ணம் சிறுமைகொள்வதைவிட இந்த அவையிலேயே வாளெடுத்து என் சங்கை அறுத்துக்கொள்கிறேன்” என்றார். “பொறுங்கள்” என்று ருக்மிணி சொன்னார். “போருக்கு பல வழிகள் உள்ளன, நிகரிபோர் அதில் ஒன்று. முன்னரும் நிகழ்ந்ததுதான் இது. வஞ்சினம் உரைத்தவர் நீங்கள், அறைகூவியவர் அவர். அதை இருவரும் ஒரு நாற்களத்தில் ஆடி தீர்த்துக்கொள்ளலாம்” என்றார். அவையை நோக்கியபின் “மூத்தவரே, இந்தக் கருவூலச்செல்வம் குறித்த பூசலை நாற்களத்தில் போர்புரிந்து முடித்துக்கொள்ளலாம் என்று நீங்கள் எண்ணுவதாக மூத்த யாதவரிடம் கூறுங்கள்”
என்றார்.

“நாற்களத்திலா?” என்று ருக்மி குழப்பமாக கேட்டார். “ஆம், அதுவும் போரே. நிகர்ப்போருக்கு நூலொப்புதல் உண்டு. அரசர் சூழ அது முறைப்படி நடக்கட்டும். குருக்ஷேத்ரப் போருக்குப் பின் மீண்டும் ஒரு குருதிப்போருக்கு எவருமே ஒருக்கமல்ல. அங்கு அவர் தரப்பின் யாதவக் குடிகளும் அப்படித்தான் உணர்வார்கள். ஆகவே அவரை ஒரு நிகர்ப்போருக்கு அழையுங்கள். நாற்களத்தில் அமர்ந்து போரிடுங்கள். வெல்பவரும் தோற்பவரும் இறுதி முடிவுக்கு வாருங்கள்” என்றார் ருக்மிணி. “ஆம், அதுவே முறை. நாற்களப் போர் போதும். நிகரிப்போர் போதும்” என்று மாறி மாறி அவையினர் குரல் எழுப்பினர்.

ருக்மி தளர்ந்து அரியணையில் அமர்ந்து தலையை அசைத்தார். பெருமூச்சுடன் “ஆம், வேறு வழியில்லை” என்றார். ருக்மிணி

என்னிடம் “ஸ்ரீகரரே, சென்று மூத்த யாதவரிடம் கூறுங்கள் நிகரிப்போர் ஒன்றுக்கு விதர்ப்பம் அறைகூவுவதாக” என்றார். “ருக்மி அவையமர்ந்து போரிடலாம் என்று எண்ணுகிறார் என்றும் அதற்கு யாதவ மூத்தவர் ஒருக்கமா என்று கேட்கிறார் என்றும் சென்று சொல்லுங்கள்.” எனக்கும் அந்த எண்ணம் ஆழ்ந்த ஆறுதலை அளித்தது. “ஆம், அவ்வண்ணமே” என்று நான் தலைவணங்கினேன்.

# கல்பொருசிறுநுரை - 75

**பகுதி ஏழு : நீர்புகுதல் – 4**

கௌண்டின்யபுரியிலேயே நாற்களமாடல் நிகழலாம் என்றுதான் முதலில் முடிவு செய்யப்பட்டது. போருக்கு அழைக்கப்பட்டவருக்கே அதை நிகழ்த்துவதற்கான இடத்தை வகுக்கும் உரிமை. அதற்கான திட்டங்கள் மதுராவில் இருந்து விரிவாக ருக்மிக்கு அனுப்பப்பட்டன. ஆனால் சில நாட்களுக்குப் பிறகு ருக்மியிடமிருந்து அந்த நிகழ்வை மதுராபுரியிலேயே வைத்துக்கொள்ளலாம் என்றும் அவர் தன் அணுக்கர்களுடனும் அகம்படியினருடனும் மதுராவுக்கு வந்து சேர்வதாகவும் செய்தி வந்தது.

பலராமர் தன் ஆசிரியர் அகவை முதிர்ந்தவர் என்பதனால் அதுவே முறை என்று கருதுவதாக ருக்மி குறிப்பிட்டிருந்தார். அதை கேட்கும்போது இயல்பானதாகவும், முறையானதாகவும் தோன்றினாலும்கூட அவருக்கு முதலில் அது ஏன்

தோன்றவில்லை என்பது ஐயத்திற்குரியதாக இருந்தது. அதை நான் பலராமர் அவையில் முன்வைத்தேன். ஆனால் பலராமர் "எல்லாவற்றையும் ஐயப்படுவது அமைச்சர் தொழில். இவ்வாறு ஒவ்வொன்றையும் நாம் உட்புகுந்து எண்ணிக்கொண்டிருப்பதில் பொருளில்லை. ருக்மி எப்போதுமே எண்ணித் துணிபவன் அல்ல. எப்போதுமே உற்றோரின் சொற்களை செவிமடுப்பவனும் அல்ல. இப்போது பிந்தியேனும் இவ்வாறு தோன்றியது என்று கொள்ளவேண்டியதுதான்" என்றார்.

நான் பிறிதொரு முறை ஒற்றர்களைக் கொண்டு உசாவியபோது அமைச்சர் ஒருவரின் சொல்படி அம்முடிவை ருக்மி எடுத்திருப்பதாக தெரிந்தது. அவ்வமைச்சர் புதிதாக ருக்மியின் அவைக்கு வந்து சேர்ந்தவர் என்று கூறினார்கள். அவ்வாறெனில் அது நன்று என்று எனக்கும் தோன்றியது. பிந்தியேனும் ஓர் அமைச்சரின் சொல்கேட்க ருக்மிக்கு தோன்றியது உகந்ததே என்று நான் எண்ணினேன். கௌண்டின்யபுரியைப்பற்றி பேசுகையில் மதுராவின் பேரவையில் அதை சொன்னேன். பலராமர் "நன்று, பெரும்பாலும் இந்த நாற்களமாடலுக்குப் பின்பு அவன் இதைப்பற்றி எல்லோருடைய சொற்களையும் கேட்டுக்கொள்ளக்கூடும்" என்று சிரித்தார்.

பலராமர் அவருடைய வழக்கமான நகையாட்டையும் பெருங்கூச்சலுடன் பேசும் இயல்பையும் மீண்டும் அடைந்தவராகத் தோன்றினார். பிரஃபாச க்ஷேத்ரத்தின் அழிவிற்குப் பின் ஆழ்ந்த சோர்விலிருந்த அவர் அதிலிருந்து ஒவ்வொரு திரையாக விலக்கி வெளிவந்துகொண்டிருந்தார். அதன்பொருட்டேனும் அந்த நாற்களமாடல் நன்று என்று எனக்குத் தோன்றியது. ருக்மியால் நாற்களமாடலில்

எந்நிலையிலும் பலராமரை வெல்ல இயலாது என்று நான் அறிந்திருந்தேன். பலராமர் நாற்களமாடலை வாழ்நாள் முழுக்க இடைவெளியில்லாமல் செய்து வந்தவர்.

எவர் ஒருவர் தனது உள்ளச்செயல்பாட்டை ஆடல் ஒன்றுடன் இணைத்துக்கொள்கிறாரோ அவருக்கு அது உள்ளமே ஆகிவிடுகிறது. பலராமருக்குள் எண்ணங்கள் இயல்பாக எழுவதே நாற்களமாடலாகத்தான். அதை அவர் பேசும்போதும் எண்ணம் ஓட்டும்போதும் விரல்களால் நாற்களக் காய்களை நகர்த்துவதில் இருந்தே காணமுடியும். ஆகவே நாற்களத்தில் அவர் இயல்பாக திகழ்வார். ருக்மி அவ்வாறல்ல. எப்போதேனும் அவையமர்கையில் மட்டும் விளையாடுபவர். எனில் களத்தில் ஒவ்வொன்றையும் எண்ணிச் சூழ்ந்து முடிவெடுக்க வேண்டியிருக்கும். பலராமருக்கு கனவில் இருந்த கை நீண்டு காய்களை நகர்த்தும்.

ஒருவேளை பலராமர் அவ்வாடலில் தோல்வியுற்றால்கூட அது பிரஃபாச க்ஷேத்ரத்தில் மறைந்த செல்வத்தின் இன்னொரு பகுதி இழக்கப்பட்டதாகவே முடியும். ஈட்டினாலும்கூட பலராமர் அதை தனக்கெனக் கொள்ளுவதாக எண்ணவில்லை. துவாரகை இளைய யாதவரால் கைவிடப்பட்டது என்ற எண்ணம் அவருக்குள் இருந்தது. அவர் மைந்தரின் பொருட்டு அதை அகற்ற முயன்றாலும் அதுவே ஓங்கியது. ஆகவே அவர் துவாரகையின் அழிவை அதிர்ச்சியாக எடுத்துக்கொள்ளவில்லை. பிரஃபாச க்ஷேத்ரத்தின் அழிவேகூட அவருக்கு நிலைகுலையச் செய்யும் செய்தி அல்ல. அவர் ஆழத்தில் அவற்றை தன்னிடமிருந்து கழற்றிவிட்டிருந்தார்.

நான் அந்த நாற்களமாடலுக்கான ஒருக்கங்களைச் செய்வதில் ஈடுபட்டேன். மதுராவின் அரசப்பேரவையை ஒட்டி

நாற்களமாடுவதற்கான பந்தல் அமைக்கப்பட்டது. நிமித்திகர் வகுத்த பொழுதில் வேதியர் எரியெழுப்பி அவியிட்டு கங்கைநீர் தெளித்து கால்நாட்டுச் சடங்கை செய்தனர். எண்கோண வடிவில் எட்டு வாயில்களுடன் அப்பந்தல் சிற்பிகளால் எழுப்பப்பட்டது. நடுவே ருக்மியும் பலராமரும் அமர்ந்து ஆடுவதற்கான எதிரெதிர் பீடங்கள். அருகே ஆட்டத்துணைவருக்கான சிறு பீடங்கள். நாற்களம் பரப்பப்பட்ட தாழ்வான பீடம். சுற்றிலும் பிற நாட்டு அரசர்களும் அவர்களுக்குப் பின்னால் அமைச்சரும் படைத்தலைவர்களும் வணிகரும் பிறரும் அமர்ந்து பார்ப்பதற்கான பீடங்கள்.

எட்டு வாயிலுக்கும் வெளியே காத்து நின்றிருக்கும் காவல்படைகளுக்கான தங்குமிடங்கள் ஒருங்கின. எவருக்கும் நாற்களமாடலுக்கு என்னென்ன தேவை என்பது தெரிந்திருக்கவில்லை. ஏனெனில் மதுராவில் அதற்கு முன் அவ்வாறொன்று நிகழ்ந்திருக்கவில்லை. அரங்கு எண்கோண வடிவில் அமைந்திருக்க வேண்டும் என்று நான் சொன்னபோது "ஏன்? அதற்கான தேவை என்ன?" என்று பலராமர் கேட்டார். "ஷத்ரிய மன்னர்கள் வரக்கூடும். அவர்களில் எவரை முதலில் அரங்குக்கு அழைத்துச்செல்வது என்பது எப்போதும் இடருடைய வினா. ஒரே கணத்தில் சிலரை உள்ளே அழைத்துச்செல்ல பல வாயில்கள் இருப்பது நன்று. அது மூப்பிளமை குறித்த பூசல்களை தவிர்க்கும் வழி" என்றேன்.

"தாங்கள் அவைநுழையும்போது தங்களைவிடத் தாழ்ந்தவர்கள் உடன்நுழைந்தார்கள் என்றும் ஏவலர்களும் உடன் வந்தால் ஏவலருடன் உள்ளே அழைத்துச் சென்றார்கள் என்றும் அரசர்கள் பூசலிடுவார்கள். அரசர்களுக்கு இவ்வாறு அவைப்பூசல் இடுவது தங்களை நிலைநிறுத்திக்கொள்ளும்

வழி. ஓர் அவைப்பூசல் வழியாகவே தங்கள் முந்தைய நிலையில் மாற்றம் வந்துள்ளது என்பதை அவர்கள் அறிவிக்க முடியும்" என்றேன். "குடித்தலைவர்கள் தங்களுடன் இணையாக நடத்தப்படுபவர் எவர் என்று நோக்கிக்கொண்டே இருப்பார்கள். அவர்களிடையே பூசல்கள் முடிவே அற்றவை."

"ஆகவே ஏவலர்க்கும் காவலர்களுக்கும் ஒரு வாயிலையும் குடித்தலைவர்களுக்கு இரண்டு வாயில்களையும் ஒதுக்கிவிட்டு ஐந்து வாயில்களை இணையான அணி செய்யப்பட்ட அரசவாயில்களாக அமைத்து ஐந்தினூடாகவும் இணையாக அரசர்களை வரவேற்று அவையமரச் செய்யவேண்டும்" என்று நான் கூறினேன். "இது நாற்களமாடலைவிட சிக்கலானதாக இருக்கிறதே!" என்று சொல்லி பலராமர் உரக்க நகைத்தார். பின்னர் குரல் தாழ்த்தி "மெய்யாகவே இவ்வண்ணம் எண்ணி எண்ணி தங்கள் மூப்பிளமையை கணித்து நோக்கும் எவரேனும் இருக்கிறார்களா?" என்றார். "நோக்குங்கள்! ஒவ்வொருவராக தங்கள் சொற்களுடன் கிளம்பி வருவார்கள்" என்று நான் சொன்னேன்.

நாற்களமாடல் நிகழவிருப்பதை அரசர்களுக்கு முறைப்படி அறிவித்தோம். தூதுகளும் ஓலைகளும் சென்றன. பாரதவர்ஷம் குருக்ஷேத்ரப் போருக்குப் பின் உளம் சோர்வுற்றிருப்பதனாலும் பெரும்பாலான நாடுகளில் உட்பூசல்களும் குடிப்போர்களும் நிகழ்ந்துகொண்டிருப்பதனாலும் பெரும்பாலும் எவருமே வர வாய்ப்பில்லை என்றே மதுராபுரியின் அமைச்சர்கள்கூட எண்ணினார்கள். ஆனால் பதினெட்டு அரசர்கள் உடனே ஆடல் நோக்க வருவதாக குறிப்பிட்டார்கள். ஒவ்வொருநாளும் அவ்விழாவிற்கு வரும் அரசர்களின் செய்திகள் வந்துகொண்டே இருந்தன.

வழக்கம்போல கலிங்கமும் வங்கமும் தாங்கள் இணையாக நடத்தப்படலாகாது, தாங்கள் ஒருவருக்கொருவர் மிஞ்சியவர்கள் என்ற செய்தியை அனுப்பினார்கள். கேகயனும் கோசலனும் தங்களுக்கிடையே இருக்கும் பூசலை தங்கள் அழைப்பு ஏற்பு ஓலையிலேயே காட்டியிருந்தார்கள். ஷத்ரியர்கள் வருகிறார்கள் என்ற செய்தி அறிந்ததுமே மச்சர்களும் நிஷாதர்களுமாகிய பல சிறு அரசர்கள் தாங்களும் வருவதாக செய்தி அனுப்பினார்கள். ஒவ்வொருவரும் தங்கள் குடிமேன்மையை அந்த ஓலைகளில் தெரிவித்திருந்தனர். தாங்கள் தொல்குடி ஷத்ரியர்கள் என்றும் பரசுராமரால் முடிசூட்டப்பட்டவர்கள் என்றும் பலர் ஓலைகளில் குறிப்பிட்டிருந்தனர்.

பெரும்பாலான ஓலைகளில் குருக்ஷேத்ரப் போரில் தங்கள் குடியினர் பங்குபெற்று பெருஞ்செயல் புரிந்து புகழ் நிறுத்தியதைப்பற்றிய குறிப்பிருந்தது. குருக்ஷேத்ரப் போரில் களத்தில் படைநிரத்தியபோது தங்கள் படை எந்த இடத்திலிருந்தது என்பதைக் குறிப்பிட்டு அதன் அடிப்படையில் தங்கள் நோக்கை வகுத்திருந்தார்கள் சிலர். பலராமர் ஒருகணத்தில் சோர்வுற்று "இது புதிய பூசல்களுக்கு வழிவகுக்கும் என்றே தோன்றுகிறது. இவர்களை யார் வரவேற்பது? இதில் என் உள்ளம் செல்லாது" என்றார். நான் "மதுவனத்திலிருந்து சூரசேனரையும் வசுதேவரையும் வரச்சொல்லலாம். அவர்கள் முதியவர்கள். அவர்கள் வாயிலில் நின்று வரவேற்றால் அதையே தனக்கு அளிக்கப்படும் மதிப்பென்று கருதுவார்கள். பிற வாயில்களில் தங்கள் மைந்தர்கள் நின்றால் போதும்" என்றேன்.

விழா நெருங்க நெருங்க ஒருக்கங்கள் மேலும் கூடிக்கொண்டே சென்றன. வந்து இறங்கும்போதே ஒவ்வொருவரையும்

தனித்தனியாக வரவேற்க வேண்டியிருந்தது. அவர்களுக்கான மாளிகைகள் முன்னரே அவர்களுக்கான கொடிகளுடன் காத்திருக்கவேண்டும். அவர்களின் அகம்படியினர் தனித்தனியாக வரவேற்கப்படவேண்டும். பொதுவாக அகம்படியினர் தாங்கள் சரியானபடி வரவேற்கப்படவில்லை என அரசரிடம் முறையிட்டுக்கொண்டே இருப்பார்கள். அரசர் அதன்பொருட்டு சற்று சீற்றம் காட்டினால் தங்களுக்கு உரிய இடம் கிடைத்துவிட்டதாக மகிழ்வார்கள், அது பிற அகம்படியினர் நடுவே தங்களை முன்னிறுத்திக்கொள்ளும் வழி.

ஒவ்வொரு அரசருக்கும் ஒரு துணையமைச்சர் உடனிருந்தேயாகவேண்டும். அத்தனை துணைஅமைச்சர்களையும் ஒருங்கிணைக்கும் ஒரு அமைச்சர் வேண்டும். அந்த அமைச்சருக்கு முதன்மை அமைச்சருடன் தொடர்பிருக்க வேண்டும். எந்த அரசர் எந்த அரசரை எப்போது சந்திப்பது என்பது வகுக்கப்பட்டிருக்க வேண்டும். அரசர்கள் ஒருவரை ஒருவர் சந்திப்பது அமைச்சர்களின் கட்டுப்பாட்டில் இருக்கவேண்டும். அவர்கள் ஒருவரை ஒருவர் தற்செயலாக சந்தித்துக்கொள்ள நேரக்கூடாது. அது தேவையற்ற சொல்லாடல்களுக்கும் பூசலுக்கும் வழிவகுக்கும்.

பலராமரின் மைந்தர் உல்முகன் சிரித்து "எவ்வண்ணமாயினும் இங்கே மேலும் பத்து நாற்களமாடலுக்கான அறைகூவல் நிகழாமல் போகாது" என்றார். "போர் நிகழாமல் இருந்தால் போதும்" என்று நான் சொன்னேன். "போர் நிகழாது, மூத்தவரே. ஒவ்வொருவரும் குருக்ஷேத்ரத்தை எண்ணி அஞ்சிக்கொண்டிருக்கிறார்கள். இன்னும் நூறு ஆண்டுகளுக்கு அனைத்துப் போர்களும் இவ்வண்ணம் நாற்கள

மேடையிலேயே நிகழவிருக்கின்றன. இவர்கள் அனைவரும் திரண்டு நாற்கள ஆடலை பார்ப்பதற்காக வருவதே அதற்காகத்தான். இதில் முறைமைகளை தெரிந்துகொள்வார்கள். தங்கள் நாட்டில் தாங்களும் நாற்களமாடலை தொடங்குவார்கள்" என்றார் உல்முகன். "நோக்குக, பெரும்பாலானவர்கள் தங்கள் முதன்மை அமைச்சருடனேயே வருவார்கள்!"

விழாவுக்கு முதலில் வந்த கோசல நாட்டு மன்னன் தீர்கயக்ஞன் தன் இரண்டு முதன்மை அமைச்சர்களையும் அழைத்து வந்திருந்தார். படகில் மதுராபுரி வந்திறங்கிய அவரை வரவேற்க நானே சென்றிருந்தேன். அவர் இறங்கியதும் கைகூப்பி அணுகி முகமன் உரைத்து வரவேற்றேன். அவர் என்னிடம் "நாங்கள் எந்த நாற்களமாடலுக்கும் பொதுவாக செல்வதில்லை. இங்கே இளைய யாதவர் மீதான மதிப்பின் பொருட்டே வந்தேன். கோசலம் தொன்மையான நாடு. பெரும்புகழ் கொண்ட ராமன் பிறந்த மண். மதுராபுரி குலப்பெருமையில் ஒரு படி தாழ்ந்ததெனினும்கூட எங்கள் அரசியை இளைய யாதவர் மணந்ததனால் நிகரான பெருமையை அடைந்தது. ஆகையினால் இங்கு வரலாம் என்று முடிவெடுத்தேன்" என்றார்.

"மதுரா வாழ்த்தப்பட்டது, வருக!" என்று அழைத்துச்சென்றேன். என்னுடன் வந்த உல்முகன் "நான் ஒன்றையே நோக்கவிருக்கிறேன், இவர்களில் ஒருவரேனும் தங்கள் குலப்பெருமையை இணைக்காது ஒரு முகமன் உரைக்கிறார்களா என்று" என்றார். நான் "முகமன் என்பதே ஒருவகையில் குலப்பெருமை உரைப்பது மட்டும்தான்" என்றேன். "மறுமுகமன் என்பது அக்குலப்பெருமையை நாம்

ஏற்றுக்கொள்கிறோம் எனும் சொல்" என்றேன். உல்முகன் சிரித்து "கூடவே நம் குலப்பெருமையை அவர்கள் பக்கமாக நீட்டிவிடலாம்" என்றார்.

மதுராபுரி சோர்ந்து, குளிர்ந்து, அங்கே மானுடரே இல்லையோ என்று தோன்றும் நிலையில் ஓராண்டுக்கு மேலாக கிடந்தது. துவாரகை விழுந்த செய்தி வந்தபோதே மதுராபுரியில் அச்சோர்வு நிறைந்தது. கருமுகிலென வான் மூடி கரிய பிசின் என மண்ணில் இறங்கி ஒவ்வொருவரையும் சிக்கவைத்து அசைவிலாதாக்கியது அது. அவர்களின் உடல் அசைவுகளே மிக மெல்ல நிகழ்ந்தன. சிரிப்பொலிகள் அணைந்தன. அழுகையும் துயரும் நிகழ்ந்து மெல்ல மெல்ல அன்றாடமென ஆகி ஒவ்வொருவரின் முகமும் அழுவதற்கே உரியவை என ஆகிவிட்டிருந்தன.

ஒரு துயர் நெடுநாள் நிகழ்கையில் அதை இயல்பெனக் கொள்ள மக்களும் நகரும் பழகிவிடுகின்றனர். ஒருவரை ஒருவர் சந்திக்கையில், முகமன் உரைக்கையில், புன்னகைக்காமல் இருக்க ஒவ்வொருவரும் பழகினர். குழந்தைகள் கூவிச் சிரிக்காமல் ஆயினர். பெண்டிர் வண்ண அணி ஆடைகளை ஒழிந்தனர். இல்லங்கள் முன் கோலமும் தோரணமும் அமைக்கும் வழக்கம் மறைந்தது. நகர மையங்களில் எரிந்த விளக்குகள் கூட ஒளி குறைந்து இருள் சூழ நின்றன. அந்தியில் மிக முந்தியே நகரம் அடங்கியது. காலையில் மிகப் பிந்தியே விழித்தது.

முதற்காலையிலும் பின்மாலையில் வணிகம் சிறப்புற நிகழும் பொழுதிலும்கூட நகரிலிருந்து பேரோசை ஏதும் எழவில்லை. கோட்டை மேலிருந்து அப்போது நகரத்தை பார்த்தால் ஓசையற்ற சிறு எறும்புப்புற்றென அது

அசைந்துகொண்டிருப்பதாகத் தோன்றும். அல்லது ஓவியங்கள் வரையப்பட்ட திரைச்சீலையொன்றின் நெளிவென விழிமயக்கம் காட்டும். துவாரகையின் அழிவின் துயரிலிருந்த மக்கள் மீள்வதற்கு முன்னரே பிரஃபாச க்ஷேத்ரத்தின் அழிவுச் செய்தி அவர்களுக்கு வந்தது. சற்றே விலகிய துயர் எழுந்து மீண்டும் அவர்களை மூடிக்கொண்டது.

மதுராவின் மக்களில் ஒரு சிலருக்கேனும் அங்கிருந்து கிளம்பிச்சென்றுவிடும் எண்ணம் இருந்திருக்கலாம். முதியவர் சிலர் யாதவர்கள் கன்றோட்டும் வாழ்வில் இருந்து விலகி க்ஷத்ரிய வாழ்க்கையை மேற்கொண்டதை தெய்வங்கள் விரும்பவில்லை என்று சொல்லிக்கொண்டிருந்தார்கள். அந்த எண்ணம் ஏறத்தாழ அனைவரிடமும் இருந்தது. ஆனால் பெரும்பாலானவர்கள் மூழ்கும் தெப்பத்துடன் தானும் மூழ்குபவர்கள்போல அந்நகரையே பற்றிக்கொண்டிருந்தார்கள். ஏனென்றால் அவர்கள் பிறிதொன்றை அறிந்திருக்கவில்லை. அவர்கள் அறிந்த ஆயர்வாழ்வெல்லாம் நூலிலும் கலைகளிலுமே.

உளச்சோர்வை மனிதர்கள் பழகி தங்கள் இயல்பென கொள்ளத் தொடங்கும்போது அது ஒரு மறைமுக இன்பத்தை அளிக்கிறது போலும். சோர்ந்து தோள்தளர்ந்து மெல்ல நடந்துசெல்லும் மதுராபுரியின் ஒரு குடியினனுக்கு மிக மகிழ்ச்சியான செய்தியை சொன்னால் கூட இயல்பாக உவகை கொள்ள அவனுக்கு பழக்கமில்லை என்றே தோன்றும். புன்னகைகள் உதடுகளில் மட்டுமே நிகழ கண்கள் அப்பால் இரு பளிங்குத் துண்டுகளென உணர்வற்றிருக்கும்.

மதுராவில் ஒவ்வொருவருக்கும் ஒரு உறவினரேனும் துவாரகையில் உயிர்நீத்திருந்தனர். அங்கிருந்து நீத்தார் கரிய

நிழல்களென வந்து மதுராபுரியில் செறிந்துவிட்டதாக சூதன் ஒருவன் சொன்னான். ஆகவே மதுராவின் மக்கள் ஒவ்வொருவரும் தங்களைச் சூழ்ந்து பல நிழல்கள் இருப்பதாக உணரத்தொடங்கினர். இல்லங்களில் பல நூறு நிழல்கள் ஆடின. நிழல் பெருகி ஒன்றுடன் ஒன்று இணைந்து இரவாகியது. ஒருமுறை உச்சிப்பொழுதிலேயே முற்றிலும் இருண்டு நகர் ஒன்றும் தெரியாமல் ஆகியது. அன்று கலைந்த பறவைக்கூட்டமென மதுரா ஓலமிட்டது.

மதுராவில் நாற்களமாடலுக்கு களம் ஒருங்கிய செய்தி மக்களிடம் எந்த விருப்பையும் உருவாக்கவில்லை. எவரும் அதை செவி கொடுத்து கேட்கவுமில்லை. அது நன்றென்றே தோன்றியது. பந்தல் அமைக்கவும், பாதைகள் சீரமைக்கவும், காவலும் ஏவலும் ஒருக்கவும் முயலும்தோறும் மக்கள் அவற்றில் இருந்து அகன்று செல்வதாகவே தோன்றியது. ஆனால் முந்தையநாள் கோசலத்திலிருந்து அரசர் வந்து இறங்கியபோது முதல் அசைவு நிகழ்ந்தது.

சோர்ந்து ஒலியடங்கிக்கிடந்த நகரத்தினூடாக அணிசெல்கையில் வாழ்த்தொலி எழாமலிருந்தால் கோசலர் தனக்கெதிரான புறக்கணிப்பாக அதை எடுத்துக்கொள்ளக்கூடும் என்பதற்காக ஊதியமளித்து ஆங்காங்கே படைவீரர்களை குடிமக்களென நிறுத்தி வாழ்த்தொலி எழுப்பச்செய்தோம். அணைந்து கிடந்த நகரில் எழுந்த அந்த வாழ்த்தொலி துயிலில் இருந்து விழித்துக்கொண்டவனின் குரலென ஒலித்தது. அது நகரின் ஆழத்திற்குக் கேட்டது. எங்கிருந்தோ அதற்கு எதிரொலி எழுந்தது.

உச்சிப்பொழுது கடந்து மிதிலையில் இருந்து ஜனகர் நகருள் நுழைந்தபோது மதுராவின் குடிகளில் ஒருசாரார் சாலையில்

வந்து நின்று வாழ்த்தொலி கூவினர். அன்று மாலையே மதுராபுரி மாறியது. இல்லங்களுக்கு முன் கோலங்கள் எழுந்தன. தளிர்த்தோரணங்களும் மலர்த்தோரணங்களும் உருவாயின. வண்ண ஆடை அணிந்த மக்கள் சாலைகளில் குவிந்தனர். மன்றுகளில் வண்ணத்தலைப்பாகைகளுடன் குடிமக்களை காண முடிந்தது. சிரிப்பொலிகளும் விழியொளிகளும் தென்பட்டன. மெல்ல மெல்ல நகர் மங்கலம் கொள்ளத் தொடங்கியது.

"நன்று, ஒழிந்த மங்கலம் இன்று மீள்கிறது. அவ்வகையில் நன்று" என்று என்னருகே நின்ற அமைச்சர் ஒருவர் சொன்னபோது நான் உளச்சோர்வையே அடைந்தேன். பிறிதொன்றையே நான் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். ஒவ்வாத ஒன்று. ஏனெனில் அக்கொண்டாட்டத்திற்கு அடியில் இருப்பது ஒரு கசப்பென்று நான் அறிந்திருந்தேன். அது என் உள்ளக்கசப்பா என்று எண்ணி அதை தவிர்த்தேன். ஆனாலும் என் உள்ளம் காற்றிலா கொடி என துவண்டே கிடந்தது.

ருக்மி அன்று மாலை மதுராபுரிக்குள் நுழைவதாக இருந்தது. கௌண்டின்யபுரியிலிருந்து அவரும் அமைச்சரும் கிளம்பிவிட்டதாக செய்தி வந்தது. பன்னிரண்டு படகுகள் யமுனைக்குள் நுழைந்தன. மதுராவிலிருந்து எட்டு படகுகள் சென்று அவர்களை நீரிலேயே கொடி காட்டி வரவேற்று சூழ்ந்து அழைத்து வந்தன. ருக்மியின் படகு மதுராவின் படகுத்துறையை வந்து அடைந்தபோது நானும் பட்டத்து இளவரசனாகிய நிஷதனும் துறைமேடையில் நின்று அவர்களை வரவேற்றோம்.

ருக்மி படகில் இருந்து கூப்பிய கையுடன் இறங்கி வந்தபோது நான் முன் சென்று தலைகுனிந்து "வருக விதர்ப்பரே, இது

தங்கள் கால் பழகிய நிலம், மீண்டும் தங்கள் கால் பட்டு இது மங்கலம் கொள்க!" என்றேன். அவர் உரக்க நகைத்து "ஆம், நான் அறிந்த நிலம். அறிந்த ஆசிரியர். நான் நன்கறிந்த ஆடல்கள்" என்றார். பலராமரின் மைந்தர்கள் நிஷதனும் உல்முகனும் அவரை முறைப்படி முகமன் கூறி வரவேற்றனர். நிஷதனின் தோளில் தட்டி "எப்படி இருக்கிறீர்கள்? தந்தையைப்போலவே தோள்பெருத்திருக்கிறீர்கள். கதை பழகியிருக்கிறீர்களா?" என்றார். அவர்கள் புன்னகைத்தனர்.

அவரை அழைத்துச்சென்று அணித்தேரில் ஏறினோம். தேரில் ருக்மி மதுராவின் தெருக்களினூடாகச் சென்றபோது குடிமக்கள் இருபுறமும் வந்து கூடி வாழ்த்துரைத்தனர். "விதர்ப்பர் வெல்க! ருக்மி வெல்க!" என்ற குரல்களைக் கேட்டு அவர் திகைத்தார். பின்னர் உரக்க நகைத்து இருபுறமும் நோக்கி கைதொழுதார். மதுராவின் மக்களின் வாழ்த்தென்பது அவர்கள் நெடுங்காலம் இருந்த உளச்சோர்விலிருந்து வெளிவந்தமையால் என்று எனக்கு தெரிந்திருந்தது. அமைச்சர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டனர். நான் "எவ்வகையில் என்றாலும் அது நன்று" என்றேன்.

நிஷதனும் உல்முகனும் ருக்மியுடன் சென்றனர். நான் படகுத்துறைக்கு மீண்டேன். அமைச்சர்கள் வந்த படகு வந்து நின்றது. நான் அங்கு நின்று ஒவ்வொருவரையாக வணங்கி முகமன் உரைத்து உரிய தேர்களுக்கு அனுப்பிக்கொண்டிருந்தேன். ஒரு தேரிலிருந்து அகன்ற தாலத்தில் கணிகர் கொண்டுவரப்படுவதை பார்த்தேன். முதலில் அது ஏதோ பொருள் என்று எண்ணினேன். கணிகர் என்று கண்டதுமே என் உளம் திகைத்தது. பின்னர் புரிந்துகொண்டேன். முன்னரே எனக்கு அது மெலிதாக தோன்றியிருந்தது. புதிய

அமைச்சராக கௌண்டின்யபுரியில் சேர்ந்த அமைச்சர் கணிகர்தான். நாற்களமாடல் மதுராவில் நிகழவேண்டும் என்று அறிவுரைத்தவர் அவரே.

அதில் அவரது ஆடல் என்ன என்று என் உள்ளம் எண்ணியது. எவ்வகையிலும் அது ருக்மிக்கு உகந்ததல்ல என்றுதான் தோன்றியது. அப்போதுதான் பிறிதொரு எண்ணம் வந்தது. ஒருவேளை இந்த நகரில் ருக்மிக்கு அளிக்கப்பட்ட இந்த வரவேற்பை கணிகர் முன்னுணர்ந்திருப்பாரா? அதன்பொருட்டுதான் இந்த மாற்றத்தை அவர் உரைத்தாரா? அத்தனை முன்சென்று எண்ண எவரால் முடியும்? ஆனால் அவரால் இயலும் என்றும் தோன்றியது.

# கல்பொருசிறுநுரை - 76

**பகுதி ஏழு : நீர்புகுதல் – 5**

யுதிஷ்டிரனுக்கும் சகுனிக்கும் இடையே நிகழ்ந்த அந்த நாற்களமாடலை சூதர்கள் பாரதவர்ஷமெங்கும் ஓயாது பாடிக்கொண்டிருந்தனர். நூறுநூறு முறை அதைப்பற்றிய வரிப்பாடல்களை, பழமொழிகளை, கவிதைகளை, பகடிகளை நான் கேட்டிருக்கிறேன். நாடகமாக, கூத்தாக, இளிவரல் நடிப்பென அதை சலிக்காது நிகழ்த்திக்கொண்டிருந்தனர். ஒவ்வொருமுறையும் அது புதிதாகத் தோன்றியது. அதன் முடிவில்லாத ஆழங்களில் மானுடருடன் ஊழ் ஆடும் விளையாட்டின் சில கரவுப்பாதைகள் இருந்தன. எந்த

ஆட்டமும் மானுடனின் ஆணவத்தையும் திறனையும் ஒருபக்கமும் ஊழை மறுபக்கமும் நிறுத்தி ஆடுவதே. மானுட வாழ்க்கையை குறுக்கி கையளவாக்கி கண்முன் பரப்பி வைப்பதே.

அஸ்தினபுரியில் நிகழ்ந்தது போரைத் தவிர்க்கும் பொருட்டு அமைக்கப்பட்ட நிகரிப்போர். அதுவே பிறகு நடந்த முற்றழிவுப் போருக்கான அனைத்து அடிப்படைகளையும் வகுத்தளித்தது. உணர்வுகளை, வஞ்சினங்களை. குருக்ஷேத்ரப் போரின் முன் வடிவம் என அமைந்தது அந்த நாற்களமாடல். அதைப்பற்றி பேசும் ஒவ்வொருவரும் குருக்ஷேத்ரப் போரிலிருந்து அதற்கு வந்தனர். அதிலிருந்து குருக்ஷேத்ரப் போருக்குச் சென்றனர். ஒருமுறை செய்துபார்த்து பிழை களைந்தமையால்தான் குருக்ஷேத்ரப் போர் அத்தனை கூரியதாக, முற்றழிவுத்தன்மை கொண்டதாக அமைந்தது என்றுகூட பாவலர் பாடினர்.

ஆகவே நிகரிப்போர் என்றதுமே நான் அதிர்ச்சியை அடைந்தேன். அது எங்கோ எப்படியோ அழிவில்தான் சென்று முடியும் என்று எனக்கு தோன்றியது. அல்லது அவ்வாறு தோன்றியதனால் நான் அப்போது அவ்வகையில் படபடப்படைந்தேன் என்று பின்னர் அத்தருணங்களை எண்ணி நோக்குகையில் விளக்கிக்கொண்டேன். அது வெறும் அச்சம், நான் அதை குருக்ஷேத்ரத்துடன் ஒப்பிட்டுக்கொள்கிறேன், அதில் பொருளே இல்லை என எனக்கு நானே சொல்லிக்கொண்டேன். ஆனால் தொடர்ந்து ஒரு பதற்றம் இருந்துகொண்டிருந்தது. நான் அதை சுமந்து அலைந்தேன். என் காலடியோசைபோல அது எனக்குப் பின்னால் ஒலித்துக்கொண்டிருந்தது.

நாற்கள மேடை ஒருங்குவதிலும் பார்வையாளர்களின் இருக்கைகள் அமைக்கப்படுவதிலும் விருந்தினர்களை

ஒவ்வொருவராக வரவேற்று அமரச்செய்வதிலும் என் சித்தத்தை திருப்பி அந்தப் பதற்றத்திலிருந்து விலகிக்கொள்ள முயன்றேன். ஒன்று உருவாக்கும் பதற்றத்தை வெல்வதென்பது அதிலிருந்து விலகுவதல்ல. விலகுந்தோறும் பதற்றம் ஆழத்திற்குச் சென்று பெரிதாகிறது. சிறுதுளியென மாற்றி அதை அகத்திற்கு பழக்கிக்கொள்வதுதான் நல்ல வழி என்று நான் கற்றிருந்தேன். ஆகவே நாற்களமாடலை ஒருக்குவதே நாற்களமாடல் பற்றிய அச்சத்தை அகற்றியது. நாற்கள மேடை கண்ணுக்கு பழகப்பழக அது அங்கேயே எப்போதும் இருந்துகொண்டிருக்கும் ஒன்று என்று அகம் எண்ணிக்கொண்டது.

நாற்களமாடலின் நாள் நெருங்க நெருங்க என் பதற்றம் நன்கு பழகியது. அதன் ஆழங்கள் தெளியத் தொடங்கின. என்னை நான் ஆளமுடியும் என்ற நம்பிக்கையை அடைந்தேன். ஆனால் கணிகர் படகிலிருந்து இறங்குவதைப் பார்த்ததுமே என் உள்ளம் கலைந்துவிட்டது. அரசே, முன்பு துவாரகைக்கு அவர் வந்த அன்றே அவர் பேரழிவுடன் வருகிறார் என்று நான் முன்னுணர்ந்திருந்தேன். அவரைப்பற்றி ஒற்றர்களினூடாகவும் பல்வேறு சூதர்பாடல்களினூடாகவும் விரிவாக அறிந்திருந்தேன். அவர் அறியாத் தெய்வம் ஒன்றால் மானுடர்மேல் ஏவப்பட்டவர் அல்லது அவரே மாற்றுருக்கொண்ட பாதாள மூர்த்தி. அழிவினூடாகவே அவர் உயிர்வாழ முடியும். எந்த இலக்கும் இன்றி அழிவை சமைப்பவர்கள். எந்த நோக்கமும் இன்றி தீமையில் மகிழ்பவர்கள். இயல்பிலேயே இருளுக்கு பழகியவர்கள். இருள்மூர்த்திகளின் வடிவங்கள்.

காலந்தோறும் அத்தகையோர் பிறந்துகொண்டே இருக்கிறார்கள். இப்புவி நெசவில் ஒரு சரடென அவர்களும்

சேர்ந்திருக்கிறார்கள். அவர்களைப் பார்த்த முதற்கணமே ஒவ்வொருவரும் அதை உணர்ந்துகொள்கிறார்கள். பேய்களை நாய்கள் கண்டுகொள்வதுபோல. ஆனால் ஒருவர்கூட அவர்களை விலக்குவதில்லை. அவர்கள் கொண்டிருக்கும் விந்தையான ஒரு ஈர்ப்பு ஒவ்வொருவரையும் அவர்களை நோக்கி செலுத்துகிறது. அந்த ஈர்ப்பு அச்சத்தால், வெறுப்பால், ஆர்வத்தால் ஆனது. நாகப்பாம்பை காணும் எலிகள் ஓடுவதில்லை, தவிர்க்க முடியாத ஆர்வத்துடன், அச்சத்தால் சிலிர்த்த மயிர்ப்பரப்புடன் மெல்ல மெல்ல அணுகி கூர்ந்து பார்க்கின்றன. அசையாமல் மயங்கி நின்றிருக்கின்றன.

அவர்கள் அதை நுட்பமாக பயன்படுத்திக்கொள்கிறார்கள். எவ்வாறு கணிகர் பயன்படுத்திக்கொண்டார் என்பதை நான் எண்ணி எண்ணி வியப்பதுண்டு. துவாரகையில் கணிகர் வந்த அன்றே நான் பிரத்யும்னனிடமும் ஃபானுவிடமும் சாம்பனிடமும் "அவர் இடரளிப்பவர், எச்சரிக்கையாக இருக்கவேண்டியவர்" என்று கூறினேன். அவரை எப்போதும் கண்காணித்துக் கொண்டிருக்க ஒற்றர்களை அனுப்பினேன். ஆனால் அவை இரண்டுமே பயனற்ற செயல்கள். கணிகர் எதையுமே மந்தணமாக செய்பவரல்ல. ஆகவே அவரை கண்காணிப்பதும் உளவறிவதும் முற்றிலும் பொருளற்றவை. கணிகர் மீதான எச்சரிக்கை என்பது இயல்பாக ஒவ்வொருவரும் அடைவது, அதை மீண்டும் எவரிடமும் கூறிக்கொண்டிருக்க வேண்டியதில்லை.

நேர்மாறாக அந்த எச்சரிக்கையுணர்வால்தான் பெரும்பாலானோர் அவரை நோக்கி செல்கிறார்கள். அவரையே நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஒன்றை நாம் எண்ணிக்கொண்டிருந்தால் ஏதோ ஒருவகையில் அது நமது

அகத்தில் ஒரு பகுதியாக ஆகிவிடும். அதை விரும்பத் தொடங்கிவிடுவோம். பழிச்செயல்களின், மீறல்களின் ஆற்றலென்பதே அவ்வாறு உருவாவதுதான். கணிகர் கொண்ட வெற்றி என்பது அச்சம் அளிக்கும் ஈர்ப்பிலிருந்து எழுவது. முற்றாகவே அவரை ஒருவர் புறக்கணித்துவிட முடியுமெனில் அவரால் ஒன்றும் செய்ய இயலாது. அவருடைய மாயங்கள் பயனற்றுப்போகும் இடம் அது. தீமையை உணரமுடியாத குழந்தைகளும் அறிவுகுறைந்தவர்களும் அவரால் எவ்வகையிலும் தீங்கடைய மாட்டார்கள்.

கணிகர் பிறருடைய உள்ளத்தில் உறையும் தீங்கையே தனது படைக்கலமாகக் கொண்டவர். தன் வலைப்பின்னலுக்கான பசையாக அதை அவர் தொட்டெடுத்துக் கொள்கிறார். அவருடைய கீழியல்பை உணர்ந்ததும் ஒவ்வொருவரும் தங்கள் உள்ளுறையும் கீழியல்பை அவரை நோக்கி திருப்புகிறார்கள். அக்கீழியல்பு இரண்டுமுனை கொண்டது... ஆணவம், தன்னலம். கணிகரின் தீங்கைவிட சற்று கூரிய விசை மிகுந்த தீங்கு தன்னிடம் உள்ளது என்று ஒவ்வொரு எளிய மனிதனும் நம்புகிறான். ஆகவே அவரை வென்றுவிடலாம் என எண்ணுகிறான். மதம்கொண்ட எருமைக்களிறுகள் தங்கள் கொம்புகளை உரசி நீளத்தை ஒப்பிட்டுக்கொள்வதுபோல.

கணிகர் அவ்வெண்ணத்தை வளர்க்கிறார். நம்முடைய தீங்கைக் கண்டு அவர் அஞ்சுவது போலவும் எச்சரிக்கை கொள்வது போலவும் பதுங்கிக்கொள்வது போலவும் நடிக்கிறார். அது நம்மை மகிழ்விக்கிறது. நாம் அவரைவிட ஆற்றல் கொண்டவர் என்று நம்பும்போது அவரை நமது படைக்கலமாக ஆக்கிக்கொள்ளலாம் என்ற எண்ணம் வருகிறது. நமது ஏவல் விலங்கென அவரை பழக்க முயல்கிறோம். அவரை நாம்

அணுகுகிறோம். நம்மை அவர் அணுக வாய்ப்பளிக்கிறோம். அந்தத் தன்னலத்தால் அவர் நம்மை பற்றிக்கொள்ள இடமளிக்கிறோம். மென்மையான தளிர்க்கொடிக்கு இடமளிக்கும் பெருமரம் தன்னை அது சுற்றி இறுக்கி நெரித்து உண்ணப்போவதை அப்போது உணர்வதே இல்லை.

அவர் நாம் அறியாமலேயே நம்மை பயன்படுத்தியிருப்பதை, தன் இலக்கை இயல்பாக சென்றடைந்துவிட்டிருப்பதை அனைத்தும் முடிந்த பின் நாம் உணர்வோம். அல்லது பலர் உணர்வதே இல்லை. பிரத்யும்னனும் சாம்பனும் ஃபானுவும் மைந்தர் எண்பதின்மரும் அதை உணராமலேயே விண்ணுலகு எய்தினர். துரியோதனனும் சகுனியும்கூட உணர்ந்திருப்பார்களா என்று ஐயுறுகிறேன். மிக வல்லமையான நஞ்சு நஞ்சென்றே தெரியாதது, இனிமையானது. அரசே, மிகமிக வல்லமையான நஞ்சு நஞ்சென்று அறிவித்துக்கொண்டு நஞ்சென்ற ஈர்ப்பையே பயன்படுத்தி கசப்பிலேயே திளைக்க வைப்பது. கொடிய நஞ்சு நம்மை கொல்வது, மிகக் கொடிய நஞ்சு நம்மை தற்கொலை செய்துகொள்ளச் செய்கிறது.

கணிகரைப் பார்த்ததுமே அந்த நாற்களம் எண்ணியதுபோல் முடியப்போவதில்லை என்ற முன்னுணர்வை அடைந்தேன். முன்பு துவாரகையில் கணிகர் என்னை வென்றது நான் கணிகரைவிடத் திறமையானவன் என்ற எண்ணத்தை என்னில் உருவாக்குவதினூடாக என நினைவுகூர்ந்தேன். கணிகரை பயன்படுத்தி சாம்பனையும் பிரத்யும்னனையும் அச்சுறுத்தி ஃபானுவை அரசனாக அவர்கள் ஏற்கச்செய்து துவாரகையில் ஒற்றுமையை கொண்டுவரமுடியும் என்று நான் நம்பினேன். இம்முறை அதை செய்யக்கூடாது என்று நான் முடிவு செய்தேன்.

அதற்கு ஒரே வழி கணிகரை முற்றாக களத்திலிருந்து அகற்றிவிடவேண்டும் என்பதே. அவருக்கு எவ்வகையிலும் எதிர்வினையாற்றக் கூடாது. நமது எதிர்வினைகளினூடாகவே அவர் செயல்படுகிறார். அசைவில்லாத உயிரை வேட்டையாட முடியாத பல்லி போன்றவர் அவர். அவரை எதிர்க்காதவர்களை அவர் காணவே முடியாது. கணிகர் ஏற்கெனவே ருக்மியின் உள்ளத்தில் விதைத்தவை என்ன என்று எனக்கு தெரியாது. அவை நாற்கள அவையில் எவ்வாறு முளைக்கும் என்பதும் எண்ணற்கு அரியது. ஆகவே அவரை முற்றாகத் தோற்கடிப்பது இயல்வதே அல்ல.

எனினும் எப்படி அவரை அகற்றுவது, அவர் உருவாக்கவிருக்கும் பேரழிவை எவ்வண்ணம் தவிர்ப்பது என்று நான் எண்ணத்தொடங்கியிருந்தேன். அரசே, அவ்வாறு எண்ணத் தொடங்குகையிலேயே அவருடைய வெல்ல முடியாத வலையில் நான் சிக்கிக்கொண்டிருந்தேன். அதை உணர அனைத்தும் நடந்து முடிய வேண்டியிருந்தது.

பொதுவாக நாற்களமாடல்களில் என்னென்ன இடர்கள் உருவாகக் கூடுமென்பதை நான் விரிவாக கணித்து ஒரு நீண்ட அட்டவணையை போட்டு வைத்திருந்தேன். நாற்களமாடலில் மிகப் பெரிய சிக்கல் என்பது அது விளையாட்டென நடிக்கும் போர் என்பது. அது போரென்பது அனைவருக்கும் தெரியும். அது உருவாக்குவது போரின் விளைவையே. ஆகவே அது ஒருபோதும் விளையாட்டாக அமைவதில்லை.

போரின் சிறப்பென்பது அதில் தோற்றவர் ஒருபோதும் தோல்வியை ஒப்புக்கொள்ளாமல் இருக்க இயலாது என்பதுதான். இழப்புகள், சிறுமைகள் வழியாக அவர் ஊழின்முன் என்பதுபோல நிலம் படிகிறார். அவர் தன் தோல்வியை மறுக்கவே இயலாது. வென்றவரை எவ்வண்ணமும் மீற இயலாது. போர் முடிவென்பது அப்பட்டமானது, மாற்றில்லாதது. ஆனால் நாற்களமாடலில் தோற்றவர் ஒவ்வொருமுறையும் மெய்யாகவே தான் தோற்கவில்லை என்ற எண்ணத்தை அடைகிறார். தான் வஞ்சகமாக வீழ்த்தப்பட்டோம் என்றோ ஆட்டத்தின் நெறிகளில் பிழை இருக்கிறதென்றோ அவர் கூறுவார்.

அரசர்களின் முன் தெளிவான ஆட்டநெறிகளின்படி ஆடும் ஆட்டத்தில் உடனடியாக எந்த மறுப்பையும் தெரிவிக்க இயலாதெனினும் கூட பெரும்பாலான நாற்களமாடலில் அரசர்கள் மறுப்பு தெரிவித்திருந்தார்கள். பெரும்பாலான நாற்களமாடல்களுக்குப் பிறகு அங்கே சிறிய கைகலப்பும் பூசலும் நிகழ்ந்திருந்தன. நாற்களமாடல் ஒருபோதும் ஓர் ஆட்டத்தில் முடிவடைந்ததே இல்லை. 'சூது முடிவற்ற ஆடல்' என்று ஒரு சொல் உண்டு.

அதையே மணத்தன்னேற்புக்கும் கூற முடியும். அதுவும் ஒரு நிகரிப்போர். அதுவும் கைகலப்பு இல்லாது முடிந்ததில்லை. ஆனால் ஒருவர் ஒரு பெண்ணை மணந்துகொண்டார் எனில் மேலும் அதைப்பற்றி எண்ணி பயனில்லை என்பதனால் அது அங்கேயே முடித்துக்கொள்ளப்படுகிறது. அதன் உணர்வுகள் மட்டுமே எஞ்சுகின்றன.

நாற்களத்தில் எந்தப் பூசலாவது முற்றாக தீர்க்கப்பட்டிருக்கிறதா என்று நான் பாரதவர்ஷத்தின் இருநூறு ஆண்டுகால

வரலாற்றை எடுத்து ஒவ்வொன்றாக ஆராய்ந்தேன். நூற்றுக்கும் மேற்பட்ட நாற்களமாடல்களில் ஒன்றில்கூட அக்களத்தில் போர் முடிந்ததில்லை. ஆனால் ஒத்திப்போடப்பட்டிருந்தது. ஒத்திப்போட்டதனாலேயே புதிய சிக்கல்கள் எழுந்து போர் தவிர்க்கப்பட்டிருந்தது. போருக்கு எழுந்தவர்களின் உணர்வுகள் காலத்தால் கூர்மழுங்கியமையால், அவர்களுக்கு அகவை முதிர்ந்தமையால், அவர்களின் மைந்தர்கள் அவ்வுணர்வுகளை பகிர்ந்துகொள்ளாமையால் போர் தவிர்க்கப்பட்டிருந்தது.

இங்கு அவ்வண்ணமே நிகழும் என்று எண்ணினேன். ருக்மி தன் தோல்வியை ஒப்புக்கொள்ளப் போவதில்லை. ஆனால் வேறு வழியிலாது அவர் பிரத்யும்னனிடம் பெற்ற செல்வத்தில் ஒரு பகுதியையேனும் திருப்பி அளிப்பார். அந்த வெற்றி எவ்வகையிலோ அப்போது யாதவர்களுக்கு தேவைப்பட்டது என்று எனக்கு தோன்றியது. பிரத்யும்னனுக்கு யாதவர்கள் செய்யும் பிழையீடென அது அமையும். எவ்வகையிலோ அது ஒருவகை நீர்க்கடன்.

நான் நிமித்திகர்களை அழைத்து என் அறைக்குள் வைத்து வழிகளை ஆராய்ந்தேன். தெளிவாகவே அவர்களிடம் கணிகரை தவிர்ப்பது எப்படி என்று சொல்லும்படி கோரினேன். அவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொன்றை சொல்லிவந்தனர். எவராலும் எதுவும் வலுவாக சொல்லமுடியவில்லை. நான் சினத்துடன் “நாம் இதை பாரதவர்ஷத்தின் அமைச்சர்கள் பலர் கூடிய அவையில் செய்யவிருக்கிறோம் என்பதை மறக்கவேண்டியதில்லை. நாம் நெறிமீறுகிறோம் என்று தோன்றினால் அதன்பின் நம் சொல்லுக்கு மதிப்பிருக்காது” என்றேன்.

அவையில் ஓர் இளைஞன் இருந்தான். இளமையில் தேருக்குக் கீழே விழுந்து இடை எலும்பு ஒடிந்த அவனை இருவர் தூக்கிவந்தனர். மிக மெலிந்த உருவம். மின்னும் எலிக்கண்கள். அவனை கண்டதும் நான் ஓர் அதிர்வை அடைந்து விழிவிலக்கிக்கொண்டேன். அங்கே சொல்லெழத் தொடங்கியதுமே அவன் அங்கே இல்லாதவன்போல் ஆனான். அனைவரும் சொல்லின்றி அமைந்தபோது அவன் மிக மெல்ல அசைந்தான். அந்த ஓசை நோக்கி நான் திரும்பினேன்.

"இங்கே நெறிவிலக்கு அல்லது நெறிமீறல் வழியாக அவரை தவிர்ப்பதெப்படி என்று ஆராய்ந்தனர். அது பெரும்பிழை. நாம் நெறிகளில் ஒரு சிறு விலக்கோ மீறலோ அளித்தால் அனைத்து நெறிகளையும் நாமே அகற்றுவதில்தான் அது சென்று முடியும். சூதாட்டம் என்பதே மீறமுடியாத நெறிகளின்மேல்தான் நிகழமுடியும். வென்றவனை தோற்றவன் ஏற்பது எந்த இயற்கைநெறிகளின்படியும் அல்ல, வகுக்கப்பட்ட அவைநெறிகளின்படியே" என்றான். "ஆகவே நாம் நெறிகளை இறுக்குவதை மட்டுமே செய்யமுடியும். அதனூடாக அவரை விலக்கினால் மட்டுமே நம் நோக்கம் நிறைவேறும்."

நான் அவனை வெறுமனே நோக்கிக்கொண்டிருந்தேன். "நாற்களமாடும் அவைக்குள் உடற்குறை கொண்டோர் நுழைய முடியாதென வகுக்கும் நெறி ஏதேனும் உண்டா?" என்று அவன் உசாவினான். நிமித்திகர் அவன் எண்ணத்தை புரிந்துகொண்டனர். "அவ்வாறு நெறி ஒன்றும் இன்றில்லை. ஆனால் கணிகர்களும் அந்தணர்களும் இனைந்து அவ்வாறு ஒரு நெறியை உருவாக்க முடியும். இந்த அவைக்கு நாம் என்ன பொருள் அளிக்கிறோம் என்பதைச் சார்ந்தது அது. இதை கேளிக்கை என்றோ போர்க்களம் என்றோ வகுத்தால்

எவருக்கும் விலக்கில்லை. இது மங்கலக் களம் என்றோ வழிபாட்டு இடம் என்றோ வகுத்தால் விலக்குகள் உண்டு" என்றார் முதிய நிமித்திகர் ஒருவர்.

அக்கணமே அவர் எண்ணியதை புரிந்துகொண்ட இன்னொரு நிமித்திகர் "துவாரகையிலும் பிரஃபாச க்ஷேத்ரத்திலும் இறந்தவர்களுக்கான நீர்க்கடன்கள் இன்னும் நிறைவுறவில்லை. இது நீத்தோர் விண்ணடங்குவதற்கு முன்பு நிகழும் களமாடல். ஆகவே அவர்களின் நுண்ணுடல்கள் இக்களத்திற்கு வரக்கூடும். எனவே இந்தக் களம் நீத்தார்கடன் நிகழும் களமாகவே கொள்ளப்படவேண்டும். அது முற்றாக மங்கலம் கொண்டிருக்கவேண்டும். ஒரு சிறு மங்கலமின்மை இருந்தால்கூட நீத்தார் நிறைவுறாது போகக்கூடும்" என்றார்.

"ஆகவே மங்கலம் அற்ற எதுவும் அந்த அவையில் இருக்கலாகாது" என்று அவர் தொடர்ந்தார். "நீலம் அல்லது கரிய ஆடைகள். நீலம் செந்நீலம் கருநீலம் கொண்ட மலர்கள். நிறையாக் கலம், நில்லா நாழி, உடைந்த கலங்கள், உருகும் பொருட்கள், கைம்பெண்கள், குறையுடைய மனிதர் தவிர்க்கப்படவேண்டும்." நான் புன்னகைத்து "இது இரு சாராருக்கும் சொல்லப்படட்டும்" என்றேன். "அந்தணர்களிடம் இதை சொல்க! அவர்கள் நாவிலிருந்து இது எழட்டும்." நான் திரும்பி அந்த இளைஞனின் விழிகளை பார்த்தேன். ஒருகணம் உணர்ந்தேன், அவன் கணிகரின் சிறுவடிவம்.

அது சிறந்த சூழ்கை என்று தெரிந்தது. எவ்வண்ணம் அதை கணிகர் எதிர்கொள்ளப்போகிறார்? கணிகர் ஒருபோதும் மறுக்க முடியாத ஒன்று அவருடைய உடற்குறை. உடற்குறைகொண்ட ஒருவரை அழைத்து வருவதென்பது ருக்மியை களத்தில் தோற்கடிப்பதே என்று ருக்மியிடம் கூறவேண்டும் என்று நான்

அந்தணருக்கு ஆணையிட்டேன். ருக்மி அதை தலைக்கொள்வார் என நான் அறிந்திருந்தேன். எவரும் அதை தவிர்க்கமுடியாது.

நாற்களமாடலுக்கு முன் ஒவ்வொருவரும் நுண்ணிய பதற்றத்துடன் இருந்துகொண்டிருப்பார்கள். ஏனெனில் நாற்களம் திறமையால் ஆடப்படுவது எனினும் நல்லூழால் முடிக்கப்படுவது. தன் நல்லூழை உய்த்து நோக்கும் எவரும் நம்பிக்கையையும் நம்பிக்கையின்மையையும் இணையாகவே அடைவார்கள். தன்னுடைய வாழ்வென்பது நல்லூழாலும் இணையாக தீயூழாலும் நடத்தப்படுவது என்பதை அறியாதவர் எவர்? ருக்மி பதறிக்கொண்டிருப்பார். அத்தருணத்தில் தீயூழை கொண்டுவரும் ஒரு சிறு பொருளைக்கூட அவரால் தாங்கிக்கொள்ள முடியாது. அவர் கணிகரை அவைக்கு அழைத்துவரப் போவதில்லை. இம்முறை கணிகர் தோற்பார், தோற்றாக வேண்டும்.

அன்றிரவு முழுக்க மறுநாள் என்ன நிகழுமென்பதை என் கற்பனையில் நிகழ்த்திக்கொண்டேன். அங்கே நிகழுமென நான் எதிர்பார்க்கும் மிகச் சிறந்தது என்ன? பலராமர் ருக்மியை களத்தில் வெல்வார். அச்செல்வத்தை ஒருபோதும் அவர் மதுராவுக்கென எடுத்துக்கொள்ளமாட்டார். துவாரகையின் செல்வம் நன்றல்ல என்று அவருக்கு தோன்றிவிட்டிருந்தது. ஆகவே அதை அவர் பெருங்கொடையாக அளிக்கக்கூடும். அதைக்கொண்டு பிரத்யும்னனுக்கும் அநிருத்தனுக்கும் பிறருக்கும் நீர்க்கடன்கள் செய்வதற்கான மைந்தர் ஏற்பு முறை ஒன்றை உருவாக்கக்கூடும்.

செல்வம் அல்ல, வெற்றியே முதன்மையான பெறுபயன். அதனூடாக யாதவர்களின் தணிந்த உளவிசை மேலெழும்.

அவர்கள் நம்பிக்கை கொள்வார்கள். அவர்களால் எழும் காலத்தை திறனுடன் எதிர்கொள்ள இயலும். தீயது என என்ன நிகழும்? பலராமர் தோற்கக்கூடும். ருக்மி வெற்றி கொண்டாடி அச்செல்வத்துடன் திரும்பக் கூடும். யாதவர்கள் இருளை நோக்கி செல்வார்கள். ஆனால் ஏற்கெனவே அவர்கள் இருளில்தான் இருந்தனர். ஆக அவர்கள் இழப்பதற்கென ஏதுமில்லை. அவ்வெண்ணம் எனக்கு ஆறுதலை அளித்தது.

புலரி விடிந்ததும் நான் நீராடி ஆடை மாற்றி அன்றைய எனது தோற்றத்தை புனைந்துகொண்டு நாற்கள அவைக்கு சென்றேன். அங்கு ஒவ்வொன்றும் முறையாக ஒருங்கியிருக்கின்றனவா என்று பார்த்தேன். அவைக்களத்தின் அமைப்பு, அரசர்களுக்குரிய பீடங்கள், பார்வையாளர்கள் என அனைத்தையும் மறுமுறை சீர்நோக்கினேன். என் அணுக்க ஒற்றனிடம் "மங்கலமற்ற எதுவும் இந்த அவைக்குள் வந்துவிடக்கூடாது என்று அந்தணரும் நிமித்திகரும் உரைத்தது நினைவிருக்கிறதல்லவா?" என்றேன். "ஆம், அனைத்து ஏவலருக்கும் செய்திகள் அளிக்கப்பட்டுள்ளன" என்று அவன் சொன்னான். நான் தலையசைத்தேன்.

அவனே மேலும் தாழ்ந்த குரலில் "அதற்கான தேவை இருக்காது என்று தோன்றுகிறது" என்றான். நான் அவனை நோக்க "இன்று காலை கணிகர் இங்கிருந்து கிளம்பிச் செல்கிறார்" என்றான். நான் "ஏன்?" என்று கேட்டேன். படபடப்பாக உணர்ந்தேன். "மங்கலம் இல்லாத உடலுடன் கணிகர் அவை புக வேண்டியதில்லை என்று ருக்மியே அவரிடம் கூறியதாகவும் அவர் அதை ஏற்றுக்கொண்டு தன் குடிலுக்கு திரும்பிச் சென்ற பின்னர் புலரியில் தான் நகர்விட்டு கிளம்புவதாக ருக்மிக்கு செய்தி அளித்ததாகவும் ஏவலர்

வழியாக அறிந்தேன். ருக்மி அவரை தணிவிக்க மீண்டும் இருமுறை தூதனுப்பியும் அவர் ஏற்காமல் கிளம்பிக்கொண்டிருப்பதாகவும் கேள்விப்பட்டேன்" என்றான் ஒற்றன்.

நான் அதில் மகிழ வேண்டும். ஆனால் விந்தையான ஒரு அச்சம்தான் எனக்கு ஏற்பட்டது. எனது அச்சத்தை நானே அணுவணுவாக பார்த்துக்கொண்டிருந்தேன். கணிகரைப் போன்ற ஒருவர் அவ்வண்ணம் எளிதாக அகன்று சென்றுவிடமாட்டார் என்று எனக்கு தோன்றியது. அவரிடம் ஏதோ ஒன்று எஞ்சியிருக்கும். அத்தனை எளிதாக அவர் அகன்று செல்கிறார் என்றால் இங்கு எதையோ நட்டுவிட்டுச் செல்கிறார். அந்த விதை முளைக்கும் என்பதில் அவருக்கு எந்த ஐயமும் இல்லை.

நான் என் சித்தத்தை துழாவித் துழாவி அவர் என்ன செய்திருக்கக்கூடும் என்று எண்ணிக்கொண்டிருந்தேன். பின்னர் பெருமூச்சுடன் இனி ஒன்றும் செய்வதற்கில்லை என்று தளர்ந்தேன். அவையை நான் ஒருக்கிக்கொண்டிருந்தபோது என் ஒற்றன் வந்து கூறினான், கணிகர் நகரிலிருந்து சிறுபடகொன்றில் கிளம்பி கங்கையை நோக்கி சென்றுகொண்டிருக்கிறார் என்று. நான் "நன்று" என்று நீள்மூச்செறிந்தேன்.

# கல்பொருசிறுநுரை - 77

**பகுதி ஏழு : நீர்புகுதல் – 6**

நாற்களப் பந்தலில் இடதுமூலையில் நிமித்திகருக்குரிய அறிவிப்புமேடையில் நின்றபடி நான் அவையை பார்த்தேன். அனைத்து அரசர்களும் வந்து அமர்ந்துவிட்டிருந்தனர். முதலில் குடித்தலைவர்கள், பின்னர் சிற்றரசர்கள், தொடர்ந்து இரண்டாம்நிலை நாடுகளின் அரசர்கள். இறுதியாக முதன்மை அரசர்கள் முறையாக அவைக்குள் நுழைந்தனர். அவர்கள் குலத்தொன்மை, அரசின் அளவு ஆகிய இரண்டைக் கொண்டும் மதிப்பிடப்பட்டனர்.

ஒவ்வொருவருடைய மதிப்பையும் குருக்ஷேத்ரப் போர் மாற்றி அமைத்திருந்ததை கண்டேன். குருக்ஷேத்ரத்தில் தோல்வியடைந்த அரசுகள் வென்றவர்களால் கைப்பற்றப்பட்டு சிறுநாடுகளாக உடைக்கப்பட்டு வென்றவர்களுக்கு கப்பம் கட்டும் நாடுகளாக மாறிவிட்டிருந்தன. மூன்று மகதங்கள், ஏழு கலிங்கங்கள், நான்கு வங்கங்கள், இரண்டு பிரக்ஜ்யோதிஷங்கள். அவர்களிடையே எவர் மெய்யான வங்க அரசர் என்பதில் பூசல். அவர்களின் அமைச்சர்கள் ஒருவரோடொருவர் சீறிக்கொண்டனர். ஆனால் அவர்கள் கப்பம் கட்டும் அரசர்களிடம் பணிந்து குழைந்தனர்.

கோசலம், கேகயம், காசி போன்ற நாடுகள் தொன்மையான குடிப்பெருமையாலேயே அதுவரை அவைகளில் முதன்மையை அடைந்திருந்தன. அவை சிற்றரசுகளாக தங்கள் இடத்தை ஒத்துக்கொண்டுவிட்டிருந்தன. சால்வன் சிற்றரசர்கள் நடுவே அமர்ந்திருந்ததைக் கண்டபோது அவனுடைய பாட்டன் மதுரா மேல் படைகொண்டு வந்ததை நினைவுகூர்ந்தேன். ஆனால்

சிற்றரசே ஆயினும் தவநிலம் என்று பெயர் பெற்றிருந்தமையால் மிதிலை அவைமுதன்மை பெற்றது. ஜனகர் அனைவராலும் வணங்கப்பட்டார்.

அரசர்களின் சிறுசிறு ஆணவ வெளிப்பாடுகளும், மூப்பிளமை பூசல்களும், எவருக்கு எவ்வகையில் அவைமுதன்மை என்பது பற்றி அவர்களுக்கிடையே இருந்த கணிப்புகளும், அது சார்ந்த சூழ்ச்சிகளும் காலையில் இருந்தே என்னை பித்துபிடிக்க வைத்திருந்தன. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொன்றைச் சொல்லி அவைக்குள் கொண்டுவர வேண்டியிருந்தது. நிஷாத குலத்து அரசரான சௌமித்ரன் என்னை அழைத்து "அமைச்சரே, கீழ்க்குடியினரான மச்சர்களுக்கு நிகராக எங்களை நிறுத்தியதற்காக நான் இங்கிருந்து கிளம்பிச்செல்கிறேன்" என்றார். "என் வண்டிகளை ஒருக்கச் சொல்க... நான் இதை பொறுக்கலாகாது." அவருடைய நிஷாத அரசு முன்பு மகதர்களுக்கு கப்பம் கட்டிய பலநூறு சிற்றரசர்களில் ஒன்று என்பதை நான் அறிந்திருந்தேன். அதை அவர் அங்கே கூறுவது ஏன் என்றும் புரிந்தது.

நான் "மச்சர்களை உங்களுக்கு நிகராக நிறுத்தலாகாது என்று எங்களுக்கும் தெரியும். உங்கள் குடிப்பெருமையை அறியாதவர்கள் அல்ல யாதவர்கள். ஆனால் அது அஸ்தினபுரியின் அரசரின் முதன்மை ஆட்சியாளர் வக்ரசீர்ஷரின் விருப்பம். பேரரசர் யுயுத்ஸுவுக்கு அவர் அணுக்கமானவர். அவர் அவைக்கு வந்ததுமே மச்சரையே உசாவுவார் என்று அவர் கூறினார். தங்களுக்கு மாற்று எண்ணம் இருப்பதை நாங்கள் வக்ரரிடம் முறையாக தெரிவித்துவிடுகிறோம்" என்றேன். சௌமித்ரன் திகைத்து "மச்சர்கள் எவ்வகையிலோ வக்ரரின் அணுக்கத்தை

பெற்றுவிட்டார்கள். வக்ரரோ அரசி சம்வகையின் உறவினர். இன்று அவர்களிடம் நாங்கள் பூசலிடுவதில் பொருளில்லை. பிறகு இதை நான் பார்த்துக்கொள்கிறேன்" என்று கூறி உள்ளே சென்றார்.

அவையின் முகப்புவாயிலில் சூரசேனர் நின்று தேரிலிருந்து இறங்கும் ஒவ்வொரு அரசரையும் கைகூப்பி முகமனுரைத்து வரவேற்றார். பெரிய அரசர்கள் அனைவருமே அது அவர்களுக்கு அளிக்கப்பட்ட பெருமதிப்பு என்று எடுத்துக்கொண்டார்கள். இன்னொரு முகப்பு வாசலில் வசுதேவர் நின்று அனைவரையும் வரவேற்றார். முந்தைய நாள் காலையில்தான் அவர்களிருவரும் மதுவனத்தில் இருந்து மதுராவுக்குள் நுழைந்திருந்தனர்.

அவர்களை இதன்பொருட்டு அங்கிருந்து இத்தனை தொலைவு வரவழைக்கவேண்டுமா என்ற ஐயம் பலராமருக்கு இருந்தது. அவர்கள் இருவருமே துயருற்றிருந்தனர். துயரிலிருந்து வரும் உடல்நலிவும் கொண்டிருந்தனர். சூரசேனர் எவரிடமும் உரையாடாமலாகி நெடுநாட்களாகியிருந்தது. மதுவனத்தில் காட்டின் ஓரத்தில் கட்டப்பட்ட சிறுகுடில் ஒன்றில் அவர் ஏழு பசுக்களுடனும் கன்றுகளுடனும் தன்னந்தனியாக வாழ்ந்துவந்தார்.

வசுதேவர் பெரும்பாலும் தனிமையிலேயே இருந்தார். இரு துணைவியரிடமும் அவர் பேசுவதில்லை என்றனர். கன்றுகளை ஓட்டிக்கொண்டு காட்டுக்குள் சென்று ஏதேனும் நிழல் மரம் ஒன்றை தெரிவு செய்து அதனடியில் பகல் முழுக்க அமர்ந்திருந்தார். நெடுநாட்களுக்கு முன் அந்தக் கன்றோட்டும் தொழிலை வெறுத்து சொல்தேர்ந்து மதுராவுக்கு கிளம்பிவந்தவர் அவர். கம்சரின் அமைச்சரானார், கம்சரின்

தங்கையை மணந்தார். மதுவனத்திலிருந்து மேய்ச்சல்கழியை வீசிவிட்டுக் கிளம்பும்போது கனவுகண்டதுபோல மதுராவை முடிசூடி ஆளும் வாய்ப்பையே அடைந்தார். இப்போது சலித்து மீண்டும் மதுவனத்தின் காடுகளுக்கு சென்றிருக்கிறார்.

"ஒரு வட்டம் முழுமையாகிறது. அதை மீண்டும் உடைக்கவேண்டுமா என்ன?" என்று அமைச்சர் பூர்ணகோபர் கேட்டார். "நான் அவர்கள் வருவது நலம் பயக்கும். அவர்களுக்கு அது நன்றா இல்லையா என்று எனக்கு தெரியாது. இங்கிருந்து இளமைந்தர் எவரேனும் சென்று அவர்களை பார்க்கலாம். அவர்கள் உகந்த நிலையில் இருந்தால் அழைத்து வரலாம்" என்றேன். அதன்படி உல்முகன் மதுவனத்திற்கு சென்றார். அங்கிருந்து அவரே இருவரையும் அழைத்து வந்தார்.

உல்முகன் திரும்பி வந்தபோது நிறைவுகொண்டு ததும்பிக்கொண்டிருந்தார். "தந்தையே, இங்கிருந்து செல்கையில் அவர்கள் இருவரும் வருவதற்கு விரும்புவார்களா என்ற ஐயம் எனக்கு இருந்தது. வரமாட்டார்கள் என்றே அனைவரும் சொன்னார்கள். மூத்தவர் என்னிடம் எவரேனும் அவர்களை அழைத்துவருவதென்றால் உன்னால்தான் முடியும். நம் இளமைந்தர்களில் மீசை கருமைகொள்ளாதவன் நீ மட்டுமே என்றார்" என்றார். "நான் முதலில் முதுதாதை சூரசேனரை சென்று பார்த்தேன். தந்தையே தாங்கள் மதுராவுக்கு வரவேண்டும், அங்கொரு அரசவிளையாட்டு நிகழவிருக்கிறது, மூதரசராக நீங்கள் அங்கு நின்று அரசர்களை வரவேற்க வேண்டும் என்றேன்."

"எனக்கு அவரது இயல்பு முன்னரே தெரியும். தன்னை ஓர் யாதவனென உணர்பவர் அவர். கன்றோட்டுகையிலேயே

மகிழ்பவர். ஆனால் அரசனென்றும் தன்னை கற்பனை செய்துகொள்பவர். ஓர் அரசர் என அவரை முன்நிறுத்தும் எச்செயலையும் பெருமகிழ்வுடன் எதிர்கொள்பவர். ஆயினும் அன்று அந்நிலையில் அவ்வுளத்துடன் இருப்பாரா என்ற ஐயமும் எனக்கிருந்தது. ஆனால் நான் அதை சொன்னதுமே மகிழ்ந்து 'ஆம், நான் மதுராவுக்கு வந்து நெடுநாட்களாகிறது' என்றார். பின்னர் என் கையை பற்றிக்கொண்டு 'என் விழிகள் மங்கிவிட்டன. என்னால் எந்த அரசரையும் பார்த்து அவர் எவர் என்று உடனடியாக புரிந்துகொள்ள இயலாது. என்னருகே அமைச்சர் ஒருவர் இருந்து அதை அறிவிக்க வேண்டும்' என்றார். நான் 'அதற்கு இரு அமைச்சர்களை தங்கள் அருகே நிறுத்துகிறேன்' என்றேன்" என்றார் உல்முகன்.

"அவர் மீண்டும் என் கையைப்பற்றி 'அரசருக்கான உடைகள் இப்போது என்னிடம் இல்லை. என்னிடம் இருந்த உடைகள் அனைத்தையும் முன்னரே எங்கோ விட்டுவிட்டேன். அவை நல்ல நிலையில் இருப்பதற்கான வாய்ப்பில்லை' என்றார். 'தாங்கள் இப்போது அரசர் அல்ல, பேரரசர். தங்களுக்குகந்த அணியாடைகளும் நகைகளும் மதுராவில் ஒருக்கப்பட்டுவிடும்' என்றேன். 'நன்று, நானும் அரசர்களைப் பார்த்து நெடுநாட்களாகிறது' என்று அவர் கூறினார். மகிழ்ந்து சிரித்து 'அரசர்கள் உண்மையில் அரசர்களுடன்தான் மகிழ்ச்சியாக இருக்க முடியும், கன்றுகளுடன் அல்ல' என்றார். அதை சொல்லிக்கொண்டே இருந்தார்" என்று சொல்லிச் சிரித்து "உதிரக் காத்திருக்கும் கனியை ஊதி உதிர்க்கமுடியும் என்று ஒரு சொல் உண்டு" என்றார்.

"மீண்டுவர விழையாத உள்ளங்கள் இல்லை. துயரிலிருந்தும் கசப்பிலிருந்தும் தனிமையிலிருந்தும் மட்டுமல்ல, சென்ற

எல்லா தொலைவுகளிலிருந்தும் மனிதர்கள் திரும்பிவரவே எண்ணுகிறார்கள். உவகையிலிருந்தும் நிறைவிலிருந்தும்கூட நெடுந்தொலைவு சென்றதாக உணர்ந்தால் உடனே திரும்ப முயல்கிறார்கள்" என்று அமைச்சர் பூர்ணகோபர் சொன்னார். உல்முகன் "நான் மூத்த தாதை சூரசேனர் வரும் செய்தியை தாதை வசுதேவரிடம் உரைப்பதற்காக செல்கிறேன் எனும் முறையில் அவரைச் சென்று சந்தித்தேன். சூரசேனரை மதுராவுக்கு அழைத்துச் செல்ல தந்தையின் ஆணையுடன் வந்திருப்பதாகவும், அதற்கான ஒப்புதலை தாதை வசுதேவரிடமிருந்து பெற விரும்புவதாகவும் கூறினேன்" என்றார்.

தனக்குத்தானே சிரித்துக்கொண்டு உல்முகன் தொடர்ந்தார் "நான் எண்ணியது போலவே அச்செய்தியைக் கேட்டதும் வசுதேவர் முகம் சுருங்கியது. 'அவர் உடல்நிலை எவ்வண்ணம் இருக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை' என்றார். என் மகிழ்வை அடக்கிக்கொண்டு 'நான் அவரிடமே கேட்டேன், அவர் வர விரும்புகிறார். உரிய உடல்நிலையிலும் இருக்கிறார் என்றார்' என்றேன். 'எனில் அழைத்துச் செல்' என்றபின் கண்கள் கூர்ந்து 'என்ன நிகழ்கிறது மதுராவில்?' என்றார். அதுவே அவர் ஆர்வம் கொண்டிருப்பதை காட்டியது. எனக்குள் புன்னகைத்து 'தந்தையே, ருக்மிக்கு எதிரான போர் ஒன்றை தந்தை அறைகூவினார். அதை நாற்களமாடலாக மாற்றிக்கொண்டார்' என்றேன்."

"தாதை வசுதேவர் தலையை அசைத்து தன் நிறைவின்மையை வெளிப்படுத்தினார். 'நாற்களமாடல் என்பது நிகரிப்போரல்ல, பொய்ப்போர். அது சிக்கல்களை பெரிதாக்கும், ஒத்திப்போடும், ஒருபோதும் தீர்க்காது' என்று அவர் சொன்னார். 'ஆம், நானும்

அதைத்தான் சொன்னேன். நிகரிப்போரெல்லாம் பொய். இங்கே தாதை வசுதேவரைப்போல அரசுசூழ்தல் அறிந்த ஒருவர் இருந்தால் அவ்வாறே கூறியிருப்பார், அவர் இல்லாத குறையை இப்போது உணர்கிறோம் என்றேன். தந்தை ஆம் என்றார்' என்றேன். அவர் முகம் மலர்ந்தது. ஆனால் உடனே முகத்தை திருப்பிக்கொண்டு 'நான் அனைத்திலிருந்தும் என்னை விடுவித்துக்கொண்டு நெடுநாட்களாகிறது. இவை எவற்றிலும் எனக்கு ஆர்வமில்லை. என் இடம் இது. இங்கு நான் இவ்வண்ணம் எளிய சிற்றுயிரென மடிந்து மறையவேண்டும் என்று விரும்புகிறேன்' என்றார்."

உல்முகன் சிரித்துக்கொண்டே சொன்னார். "நான் அவர் சொல்வதை ஏற்றுக்கொண்டேன். 'ஆம் தாதையே, துறந்து ஏகுவதே அரசமுனிவரும் தவமுனிவரும் கடைக்கொள்ளும் வழி' என்றேன். 'ஆகவே இதை தங்கள் கடமை என்று சொல்லமாட்டேன். ஆனால் ஓர் எளிய ஆடல் என்று தாங்கள் அங்கு வரலாமே?' என்றேன். வசுதேவர் 'என்னை அவன் அழைக்கவில்லையே' என்றார். அவர் அதை சொன்னபோது நான் எப்படி சிரிக்காமலிருந்தேன் என இன்று எண்ணினாலும் புரியவில்லை."

"நான் அவருடைய அச்சொல்லுக்காகவே காத்திருந்தேன். 'தந்தையே, உண்மையில் தங்களை அழைப்பதற்காகத்தான் நான் வந்தேன். தவம் மேற்கொண்ட தாங்கள் வரக்கூடுமா என்ற ஐயம் இருப்பதனால்தான் இவ்வளவு நேரம் பேசிக்கொண்டிருக்கிறேன்' என்றேன். 'ஒருமுறை வந்து மீளலாம் என்றே தோன்றுகிறது. தந்தைக்கும் துணையாக எவராவது வருவது நன்று. தன்னுடன் நான் இருந்தால் அவர்

இன்னும் நம்பிக்கையாக உணர்வார்' என்று வசுதேவர் சொன்னார். இருவரையும் கூட்டிக்கொண்டு வந்துவிட்டேன்."

பலராமர் புன்னகைத்து "இருவரும் இதனூடாக தங்கள் சோர்வுகளில் இருந்து வெளிவந்தால் நன்றுதானே?" என்றார். நான் "இந்நகரில் ஒவ்வொருவரும் தங்கள் துயர்களிலிருந்தும் தனிமையிலிருந்தும் வெளிவந்துகொண்டிருக்கிறார்கள். இந்த ஆடலின் பெறுபயன் என்பது முதன்மையாக இதுவே" என்றேன். "ஆம், நானும் அதையே எண்ணினேன். இங்கே மெல்லமெல்ல உயிர் திரும்பிக்கொண்டிருக்கிறது. புதுமழைக்குப் பின் பசுமை மீள்வதைப்போல" என்றார் பலராமர்.

வந்தது முதலே அவர்களிருவருமே அந்த அவைகூடலை விரும்புவதை கண்டேன். வந்தவுடனேயே சூரசேனர் வசுதேவரை அழைத்துக்கொண்டு சென்று அந்த நாற்களப் பந்தலை சுற்றிப் பார்த்தார். அதில் ஒவ்வொரு இருக்கையும் எவருக்கென போடப்பட்டிருக்கிறது என்று உசாவி அறிந்துகொண்டார். அவர் மிக அரிதாகவே மதுவனத்தில் இருந்து வெளியே வந்தார். மதுவனம் ஓர் அரசோ நகரமோ அல்ல, ஆகவே அவருக்கு எல்லாமே வியப்பூட்டியது. அவர் நன்கறிந்த அனைத்தையும் மறந்து மீண்டும் கண்டறிந்து திகைப்பும் வியப்பும் மகிழ்ச்சியும் அடைந்தார். "இத்தனை அரசர்கள் ஓரிடத்திற்கு வருகிறார்களா? ஓர் ஆடலுக்காகவா?" என்றார்.

வசுதேவருக்கு ஒவ்வொன்றிலும் ஏதேனும் ஒன்று சொல்வதற்கு இருந்தது. "மகதனின் அருகே கலிங்கனை அமரவைக்கலாகாது. அவர்களுக்குள் நெடுநாட்கள் நீண்ட பூசலொன்று உண்டு. இந்த அவையில் அவர்கள் இருவரும் வெளிப்படுத்தும் உடல்மொழியிலிருந்து ஏதேனும் கசப்புகள்

உருவாகக்கூடும்" என்றார். "மச்சர்கள் அனைவரையும் ஒரே இடத்தில் அமரவைப்பதுபோல் இங்கு பீடம் வைக்கப்பட்டுள்ளது. அவ்வாறு நிகழக்கூடாது. தனித்தனியாக அவர்கள் செயலற்றவர்கள். ஒருங்கு திரண்டால் விந்தையானதொரு திமிறலை அடைகிறார்கள்" என்றார்.

அவர்களுக்கு மேலும் ஆர்வம் வரும்படி விழா ஒருங்கிணைப்புக்கான அனைத்துச் செயல்களிலும் அவர்களை ஈடுபடுத்தினேன். ஒற்றர்களில் ஒருசாராரை சீராக அவர்களை சந்தித்து நிகழ்வதை சுருக்கி உரைக்க சொன்னேன். இரவெல்லாம் இருவரும் விழா ஒருங்கமைப்புகளில் முற்றாகவே ஈடுபட்டிருந்தனர். அவர்களின் வருகை இன்றி அவ்விழா நிகழ்ந்திருக்காது என்று சொல்லும் அளவுக்கு அவர்கள் இருவரும் பங்களிப்பாற்றினார்கள்.

பிரக்ஜ்யோதிஷத்தின் இளைய பகதத்தனுக்கும் அவருடன் வந்த இளையோனுக்குமிடையே சிறு பூசலொன்று உருவாகி அது நாப்பிறழ்ச் சொற்களாக வளர்ந்துவிட்டதென்று ஒற்றர்கள் சொன்னதுமே நான் சூரசேனரை அவர்களின் மாளிகைக்கு அனுப்பினேன். அவர் அங்கு அவர்களை தேடிச் சென்றதுமே இருவரின் உளநிலைகளும் மாறிவிட்டன. அவர் இருவரையும் அமரவைத்து ஓரிரு நற்சொற்கள் சொன்னதும் அவர்கள் தந்தை சொல்லென அதை ஏற்றுக்கொண்டார்கள்.

அவர்கள் மகிழ்ந்ததைவிட பலமடங்கு சூரசேனர் மகிழ்ந்தார். ஒரு சொல்லில் அவர்களின் பூசலை தீர்த்ததைப்பற்றி பலமுறை என்னிடம் சொன்னார். "அரசர்களிடையே நிகழும் பூசல் என்பது ஒரு சிறு நோய்க்கொப்புளம் போன்றது. அத்தருணத்திலேயே அதை சீர்படுத்திவிடுவது நன்று. இல்லையேல் அது பெருகும், உயிர் கவ்வி அழிக்கும்" என்றார்.

“பொதுவாகவே நான் சொல்வதை அனைவரும் ஏற்றுக்கொள்கிறார்கள். ஏனென்றால் நான் முறையென அல்லாதவற்றை சொல்வதில்லை.”

அந்த நாற்களமாடலுக்கான நெறிகள் அனைத்தையும் நான் முன்னரே முறையாக எழுதி அனைவருக்கும் அளித்திருந்தேன். அதை அவர்கள் ஒவ்வொருவரும் கடைபிடிக்க வேண்டும் என்றும், அதில் மீறல் ஏதேனும் நிகழ்ந்தால் அதை முறைப்படி எனக்கு அறிவிக்க வேண்டும் என்றும் கூறியிருந்தேன். ஆனால் நெறிகள் அனைத்தையுமே சூரசேனரும் வசுதேவரும் தொடர்ந்து மாற்றிகொண்டிருந்தனர். அவர்கள் மாற்றுவதை உடனடியாக ஏற்றுக்கொண்டு சிறிய இடைவேளைக்குப் பின் எது முன்னரே ஏற்கப்பட்டதோ அதை மட்டுமே தொடரும்படி நான் அனைவருக்கும் மந்தணமாக சொல்லியிருந்தேன்.

அவர்கள் ஆர்வத்தையும் உவகையையும் பார்த்த பின் உல்முகன் என்னிடம் “ஒருமுறையேனும் தவறுதலாகவேனும் அவர்கள் இளைய தந்தை பெயரை சொல்வார்களா என்று நான் முழு இரவும் செவிகொண்டிருந்தேன். அவர்கள் அவரை முற்றாக மறந்துவிட்டார்கள்” என்று சொன்னார். “குற்றவுணர்ச்சி தாளமுடியாததனால் அவர்கள் அவரை முற்றாக மறக்க முயன்றார்கள்” என்று நான் சொன்னேன். “அவர்கள் எண்ணியதைவிட இயல்பாகவே அவர்கள் மறந்துவிட்டார்கள். பார்வையிலிருந்து ஒருவரை விலக்குவது அவரை நம் வாழ்வில் இருந்தும் விலக்கிவிடுகிறது.”

“நம் வாழ்வில் அன்றாடத்திற்கு இருக்கும் இடம் என்ன என்று நமக்கே தெரியாது. அன்றாடம் நம் சித்தத்தின் பெரும்பகுதியை நிறைக்கிறது, நம் வாழ்வில் பெரும்பொழுதை நிறைக்கிறது. அன்றாடத்திற்கு அப்பால் நாம் சில கணங்கள் சென்று

வருகிறோம். கனவுகள் நம்மை ஊடுருவிச் செல்கின்றன. அங்கு மட்டுமே இளைய யாதவர் இருப்பார். கனவுகள் நிகழ்காலத்தில் இல்லை. நோக்குக, இங்கு வரும் எந்த அரசரும் அவர் பெயரை சொல்லப்போவதில்லை! இங்கு நிகழும் எந்தச் சடங்கிலும் அவர் நினைவுகூரப்படுவதும் இல்லை. அவர் பெயர் வரும்போதுகூட அது மூதாதை பெயர்களின் நீண்ட நிரையில் ஒன்றுபோல அத்தனை எளிதாக இயல்பாக கடந்து செல்லப்படும்" என்றேன்.

"அதைத்தான் நானும் எண்ணிக்கொண்டிருக்கிறேன். எனக்கு மட்டும் ஏன் அவர் அவ்வப்போது நினைவுக்கு வருகிறார் என்று தெரியவில்லை" என்றார் உல்முகன். நான் புன்னகைத்து "அந்நினைவு நமக்கு அவ்வண்ணம் வருவதில் இருக்கும் விந்தையால் அதை மீண்டும் மீண்டும் நினைவுகூர்கிறோம் போலும். அது இயல்பானதே என்று உணர்கையில் கடந்து செல்வோம். இளைய யாதவரின் பெயர் நம்மில் எவருக்கும் இன்று ஒவ்வா உணர்வையோ, பெருந்துயரையோ அளித்து மகிழ்ச்சியை குலைப்பதில்லை, அன்றாடத்தின் ஒழுங்கை மாற்றி அமைப்பதுமில்லை" என்றேன்.

அரசர்கள் ஒவ்வொருவராக வந்து அவை நிறைந்துகொண்டிருந்தது. நிறைவடையும் அவையில் ஏற்படும் ஒலி மாறுபாட்டை உணர்ந்தேன். விழிகளால் தொட்டுத்தொட்டு அனைவரையும் நோக்கினேன். ஏற்கெனவே துணையமைச்சர்களிடம் பட்டியல் வைத்து அனைவரையும் வருகை நோக்கச் சொல்லியிருந்தேன். வேண்டுமென்றே பிந்திவந்து தானில்லாமல் அவை தொடங்கிவிட்டதைச் சொல்லிப் பூசலிடுவோர் எப்போதும் உண்டு. அரசர்கள் பொய்ச்சிரிப்புடன் முகமன்களை உரைத்தனர். செயற்கையாக

உரக்க நகைத்தனர். அதைவிட செயற்கையாக நெருக்கத்தை நடித்தனர்.

அஸ்தினபுரியில் இருந்து யுயுத்ஸு வருவாரா என்ற ஐயமிருந்தது. அதைவிட அவரை பிற ஷத்ரிய மன்னர்கள் எப்படி எதிர்கொள்வார்கள் என்ற தயக்கமும். யுயுத்ஸுவை மதுராபுரி அஸ்தினபுரியின் பேரரசராகவே ஏற்கிறது என்று வெளிப்படையாக காட்டிவிடவேண்டும், அரசர்களுக்கு எந்த ஐயமும் அதில் எழக்கூடாது என்று நினைத்தேன். ஆகவே யுயுத்ஸு வருகிறார் என்ற செய்தி வந்ததுமே வசுதேவரையும் நிஷதனையும் படகுத்துறைக்கே அனுப்பினேன். ஆனால் அவர்கள் அங்கே செல்வதற்குள்ளாகவே பதினெட்டு அரசர்கள் தங்கள் அமைச்சர்களை யுயுத்ஸுவை வரவேற்க படகுத்துறைக்கு அனுப்பியிருந்தனர்.

யுயுத்ஸு அவைக்களத்திற்கு வந்தபோது வாசல் முகப்பில் சூரசேனர் நின்று வரவேற்றார். கலிங்கர்களும் மகதர்களும் வங்கர்களும் என பாரதவர்ஷத்தின் அனைத்து அரசர்களும் வாயிலுக்கே சென்று யுயுத்ஸுவை வரவேற்று அழைத்து வந்தனர். அவருடன் ஒரு சொல் பேச, அவர் அருகே அமர அவர்களிடையே போட்டியே நடந்தது. அந்த அவை நடுவே வந்து யுயுத்ஸு அமர்ந்தபோது அவரே பேரரசர் என்பது அவையினரின் முகங்களிலேயே நன்கு தெரிந்தது. யுயுத்ஸுவும் அதை உணர்ந்திருந்தார். அவர் ஜனகருக்கு மட்டுமே தலைவணங்கினார்.

அவைநிறைவு நிகழ்ந்துவிட்டதை உல்முகன் என்னிடம் கைகாட்டி தெரிவித்தார். நான் தலையசைத்த பின்னர் திரும்பி அவைக்காவலனிடம் அவைநிறைவை அறிவித்தேன். பின்னர் இறங்கிச் சென்று அரங்கின் சிறு மூலையில் அனைவரையும் பார்க்கும்படி நின்றேன். ஒருகணத்தில் இயல்பாக என் பார்வை கணிகர் எங்கிருக்கிறார் என்று தேடி சலித்து மறுகணத்தில் அவர் அங்கில்லை, கிளம்பிச் சென்றுவிட்டார் என்று தெளிந்து, அவ் இன்மையில் துணுக்குற்று, பின்னர் சிறு மகிழ்வை அடைந்தது. அவர் அங்கில்லை என்பதில் அவ்வண்ணம் மகிழலாமா என்ற எண்ணம் தொடர்ந்து எழுந்தது. அவர் வந்து வேறு எதையோ நிகழ்த்திவிட்டுச் சென்றிருக்கிறார். அது என்ன? அது ருக்மியின் உள்ளத்தில் நுண்வடிவில் இருக்கும். நச்சுவிதை என, அறியா நரம்பின் ஒரு முடிச்சு என. ருக்மி அங்கு வரும்போது அது தெரியும்.

நிமித்திகன் மேடையேறி அவைநிறைவை தெரிவித்தான். அங்கு கூடியிருக்கும் அனைத்து அரசர்களையும் குலமுறை மூப்பு வரிசையில் ஓங்கிய குரலில் வரவேற்றான். “அவையோரே, விஷ்ணுவில் இருந்து பிரம்மா பிறந்தார். அவரிலிருந்து பிரஜாபதியாகிய அத்ரி எழுந்தார். அத்ரியின் மைந்தர் சந்திரன். சந்திரனின் மைந்தன் புதன். அவர்களின் கொடிவழி புரூரவஸ், ஆயுஷ், நகுஷன், யயாதி என நீண்டு யாதவ குடிமூதாதையான யதுவில் நிரப்புற்றது. யதுவின் குருதிமரபு சகஸ்ரஜித், சதஜித், ஹேகயன், தர்மன், குந்தி, பத்ரசேனர், தனகன், கிருதவீரியன், கார்த்தவீரியன், ஜயத்வஜன்,

தாலஜம்பன், வீதிஹோத்ரன், அனந்தன், துர்ஜயன், யுதாஜித், சினி, சத்யகன், ஜயன், குணி, அனாமிஸ்ரன், பிரஸ்னி, சித்ரரதன், விடூரதன், சூரன், சினி, ஃபோஜன், ஹ்ருதீகன் என வளர்ந்து எங்கள் குடிமூதாதையான சூரசேனரை வந்தடைந்தது. அவர் மைந்தர் வசுதேவர். அவர் மைந்தராகிய பலராமர் இங்கே அவையமர்ந்திருக்கிறார்."

"இங்கு அவைகொண்டுள்ள அரசர்கள், குடித்தலைவர்கள் அனைவருக்கும் தொல்புகழ்கொண்ட யாதவக் குடிமரபின் மூதாதையரின் வாழ்த்துக்கள் அமைவதாக! குலதெய்வங்கள் இங்கே எழுந்தருள்க! அவையோரே, இந்த அவையில் இன்று ஒரு நிகரிப்போர் நிகழவிருக்கிறது. போர்புரிபவர்கள் ஆசிரியரும் மாணவரும் என திகழ்ந்தவர்கள். அவர்களிடையே அன்பும் மதிப்பும் உள்ளது. ஆகவே ஓர் அரசப்பூசலை இவ்வண்ணம் நிகரிப்போரில் தீர்த்துக்கொள்ளலாம் என்ற எண்ணம் ஏற்பட்டது. இது இருவரில் எவர் வென்றார் என்று அறுதியாக அறிவிக்கும் ஆடல். வென்றவரின் கோரிக்கையை தோற்றவர் ஏற்றுக்கொண்டாகவேண்டும். அதற்கு இங்கு அவையமர்ந்திருக்கும் அனைத்து அரசர்களும் சான்றாவார்கள்."

அவையினர் கைதூக்கி "ஆம்! ஆம்! ஆம்!" என்று ஓசையெழுப்பினர். "நிகரிப்போருக்கு தொல்நூல்கள் அமைக்கும் வழிமுறைப்படியே இந்த அவை அமைந்துள்ளது. இங்கு அனைத்து முறைமைகளும் கடைபிடிக்கப்படும். அதற்கு இந்த அவையே சான்றும் வழிகாட்டியுமாக திகழவேண்டும். அன்பும் அளியும் எல்லை மீறாது நிகழும் இந்தப் போர் தெய்வங்களுக்கும் மூதாதையருக்கும் இனிதாகுக!" நிமித்திகன் தலைவணங்கினான்.

கொம்புகளும் மங்கல இசையும் முழங்க அந்தணர் எழுவர் அவைபுகுந்தனர். கங்கை நீர் நிறைந்த பொற்கலங்களுடன் வந்து அவையையும் அரியணையையும் நீர்தெளித்து வேதம் ஓதி தூய்மைப்படுத்தினர். மீண்டும் முரசொலிகள் எழுந்தன. இசைச்சூதர் அவைபுகுந்து இரண்டு பிரிவாக விலக அணிச்சேடியர் மங்கலத்தாலங்களுடன் வந்து பிரிந்து விலகினர். மதுராவின் கருடக்கொடியுடன் ஏவலன் ஒருவன் அவைபுகுந்தான். தொடர்ந்து வந்த அறிவிப்பாளன் வலம்புரிச் சங்கை ஊதி "மதுவனத்தின் சூரசேனரின் பெயர்மைந்தர், வசுதேவரின் முதல் மைந்தர், மதுராவின் அரசர் பலராமர் வருகை!" என்று அறிவித்தான்.

அதை தொடர்ந்து அரசணிக்கோலத்தில் மதுராவின் தொன்மையான மணிமுடியைச் சூடி, மேழிவடிவில் அமைக்கப்பட்ட செங்கோலை ஏந்தி, சீரான நடையில் பலராமர் நடந்து வந்தார். அவருடைய பெரிய வெண்ணிற உடலில் நகைகளில் எழுந்த அருமணிகள் ஆயிரம் விழிகள் திறந்ததுபோல மின்னின. நீல நரம்போடிய வெண்பளிங்குக் கைகளே அவருடைய அழகு என சூதர் பாடுவதுண்டு. கண்கள் களைத்திருந்தாலும் அவர் உடல் மெருகு கொண்டிருந்தது. அவை அவரையே நோக்கிக்கொண்டிருந்தது.

பலராமர் முப்புறமும் திரும்பி அவையை வணங்கினார். அவைகூடல் அவருக்கு வழக்கம்போல உவகையை அளிக்கவில்லை என்று தெரிந்தது. அவர் முந்தையநாள் மிகுதியாக மது அருந்தியிருந்தார். ஆகவே காலையில் தலைப்பெருப்பும் கண்கூச்சமும் இருப்பது தெரிந்தது. அவையின் ஒளியும் ஒலியும் பெருகிச்சூழ்ந்து அவரை எரிச்சலுறச் செய்தன. அவர் பொதுவாக தலையசைத்துவிட்டு

விழிகளைத் தாழ்த்தி நிலம்நோக்கியபடி வந்தார். அவையமர்ந்த அரசர்கள் எழுந்து கைதூக்கி அவரை வாழ்த்தினர். வாழ்த்தொலிகளும் இசையும் சூழ்ந்து அலைகொள்ள அவர் களிக்களத்தில் இடப்பட்ட அவருக்கான பீடத்தில் அமர்ந்தார். ஏவலர் வந்து மணிமுடியையும் செங்கோலையும் உடைவாளையும் பெற்றுக்கொண்டு அருகிருந்த பெரிய மேடையில் வைத்தனர். பலராமரின் அருகே ஆட்டத்துணைவனாக நிஷதன் அமர்ந்தார்.

அதன்பின் நிமித்திகன் மேடையேறி "விதர்ப்பத்தின் அரசரும், கௌண்டின்யபுரியின் பீஷ்மகரின் மைந்தரும், போஜகடகத்தின் தலைவருமான அரசர் ருக்மி அவைபுகுகிறார்" என்று அறிவித்தான். மீண்டும் கொம்போசை எழுந்தது. இசைச்சூதர்கள் முன்னால் வந்து விலக, மங்கலச்சேடியர் வந்து மறுபுறம் விலக, விதர்ப்பத்தின் கொடியுடன் முதன்மைக் காவலன் வந்தான். தொடர்ந்து வலம்புரிச் சங்கு ஊதியபடி ஒரு காவலன் முன்னால் வர விதர்ப்பத்தின் மணிமுடியை அணிந்து கையில் செங்கோலுடன் ருக்மி அவைபுகுந்தார்.

கணிகரின் சொல் அங்கு என்ன என்பது அப்போது தெரிந்தது. பிறிதொரு நாட்டுக்குள் மணிமுடியும் செங்கோலுமாக அரசர்கள் நுழையும் வழக்கம் இல்லை. அங்கு அவ்வாறு நுழையவேண்டும் என்பது ருக்மிக்கே தோன்றியிருக்க வாய்ப்பில்லை. ருக்மி அவைபுகுந்ததும் அனைவரும் தன்னியல்பாக அவரை வாழ்த்தி குரலெழுப்பினர். அரசர்கள் முன்பெனவே கைதூக்கி அவரை வாழ்த்தினார்கள். அவையெங்கும் வாழ்த்தொலி முழங்கிக்கொண்டே இருக்க ருக்மி கைகூப்பி அதை ஏற்றுக்கொண்டு வந்து தனக்கான இருக்கையில் அமர்ந்தார். அவரிடமிருந்து மணிமுடியையும்

செங்கோலையும் பெற்றுக்கொண்டு பலராமரின் மணிமுடியும் செங்கோலும் வைக்கப்பட்டிருந்த அதே மேடையில் அருகே வைத்தனர் விதர்ப்பத்தின் ஏவலர்.

அது அரசக்கோலம் எதுவாயினும் இயல்பாக உருவாக்கும் ஏற்பு. பலராமர் சோர்ந்திருந்தமையால் ருக்மியின் முகமலர்வு அவர்களுக்கு மேலும் உவப்பாக இருந்திருக்கலாம். அது அவைமுறை அல்ல என்பது அப்போது அங்கிருக்கும் எவருக்கும் தோன்றியிருக்காது. ஆயினும் அது ருக்மியை மலரவைத்தது. முந்தைய நாள் நகர்நுழைந்தபோது குடிகளின் ஏற்பில் அவர் ஏற்கெனவே உளம் மயங்கியிருந்தார். அங்கிருக்கும் ஒவ்வொருவரும் தன்னை பேரரசராக எண்ணி வரவேற்பதாக கற்பனை செய்துகொண்டார். அந்த ஆட்டத்திற்கு அவருடன் இருப்பதற்காக கணிகர் அனுப்பிய பேய் அது என்று எனக்கு தெரிந்தது.

# கல்பொருசிறுநுரை - 78

**பகுதி ஏழு : நீர்புகுதல் – 7**

ருக்மியும் பலராமரும் நாற்களத்தின் இரு பக்கங்களிலும் எதிரெதிராக அமர்ந்ததுமே உண்மையில் ஆட்டம் தொடங்கிவிட்டது. அதன் பின் நிகழ்ந்த ஒவ்வொன்றும் ஆட்டத்தின் பகுதிகளே. அவர்கள் பெரிய அணிகளையும் ஆடைகளையும் களைந்து ஏவலரிடம் அளித்துவிட்டு இயல்புநிலை அடைந்தனர். நிஷதன் பலராமருக்கு வாய்மணம்

சுருட்டி கொடுத்தார். அவர் அதை வாங்கி வாயிலிட்டு மென்றபடி புன்னகையுடன் ருக்மியை பார்த்தார்.

ருக்மி அங்கு அமர்ந்து களத்தை பார்ப்பது வரை இருந்த நம்பிக்கையையும் திளைப்பையும் இழந்து உள்ளூர அஞ்சிவிட்டதுபோல் அவர் முகம் பதற்றத்தை காட்டியது. நாற்களப் பலகையின் விளிம்பில் இரு கைகளையும் பற்றியபடி குனிந்து கால்களை பார்த்துக்கொண்டிருந்தார். ருக்மியின் களத்துணைவனாக அவருடைய படைத்தலைவன் சந்திரசேனன் அமர்ந்தான். நிமித்திகன் என் ஆணைக்காக காத்திருந்தான். அவர்கள் இயல்படைய நான் காத்திருந்தேன். அவை அவர்களை நோக்கியபடி ஓசையின்றி இருந்தது.

இருவருடைய களத்துணைவர்களும் நாற்களத்தில் கருக்களை சீராக நகர்த்தி வைத்தனர். தேர்யானைபுரவிகாலாள் படைகளும் அரசனும் அரசியும் அமைச்சர்களும் படைத்தலைவர்களும் ஏவலர்களும் காவலர்களும் நிரைகொண்டனர். அவர்கள் தாங்கள் அறியாத களத்தில், தங்களால் ஆடப்படாத ஆட்டத்திற்காக ஒருக்கமாயினர். அந்த ஆடல் பகடை இல்லாதது. முழுக்க முழுக்க சூழ்திறனால் ஆடப்படுவது. நான் கைகாட்டினேன். நிமித்திகன் மேடையேறி சங்கை ஊதியதும் பலராமர் கைகாட்டினார். "தொடங்குக!" என்றார்.

போருக்கு அறைகூவப்பட்டவர் என்பதனால் முதல் ஆடலுக்கான உரிமை ருக்மிக்கு இருந்தது. ருக்மி கருக்களின் மீது கண்கள் தொட்டுத் தொட்டு நகர பதறியபடி அமர்ந்திருந்தார். முதல் கருவை நகர்த்துவது பற்றிய முடிவை அவரால் எடுக்க முடியவில்லை. அப்போதே அவ்வாட்டத்தில் எவர் தோற்கப்போகிறார்கள் என்பது அனைவருக்கும் தெளிவாக தெரிந்துவிட்டிருந்தது. ருக்மியின் பதறும் விரல்கள் ஒவ்வொரு

காயாக வண்ணத்துப்பூச்சி மலர்களில் என பட்டு பதறி எழுந்து சென்றன. எவரோ ஏளனமாக மெல்ல முனகினர்.

பின்னர் ருக்மி ஒரு காயை முன்னால் நீக்கினார். அது அமைச்சன். எந்த வகையிலும் அவ்வாட்டத்தை அது தொடங்கி வைப்பதல்ல. பலராமர் சற்று குழம்பியபின் தானும் ஒரு காயை நகர்த்தினார், அது ருக்மியின் நகர்வுக்கு இணையான நகர்வு மட்டுமே. ஆட்டம் தொடங்கவில்லை. எவரும் எவரையும் குறி வைக்கவில்லை. ருக்மி செந்நிறம் பூசப்பட்ட நீண்ட மீசையையும் தாடியையும் கையால் உருவிக்கொண்டிருந்தார். தனக்குத்தானே தலையசைத்த பின்னர் இன்னொரு காயை நகர்த்தினார். அதுவும் எவ்வகையிலும் ஒரு சூழ்கையை அமைக்கவில்லை. பலராமர் பிறிதொரு காயை நகர்த்தினார்.

ஆட்டம் தொடங்காமலேயே நகர்ந்து கொண்டிருந்தது. சூழ்ந்திருந்த அரசர்கள் ஆவலுடனும் நாணேறிய வில்லின் இறுக்கத்துடனும் பார்த்துக்கொண்டிருந்தனர். இருவரும் மாறிமாறி யானைகளையும் குதிரைகளையும் நகர்த்திக்கொண்டிருந்தனர். அது உண்மையில் மொத்தப் படையையும் சற்று முன்னகர்த்தி வைப்பதாகவே இருந்தது. பலராமர் எண்ணியிராக் கணத்தில் இரு படைத்தலைவர்கள் நடுவே இருந்த அரசனை முன்னே கொண்டு சென்று ருக்மியின் அரசியை வீழ்த்தினார்.

ருக்மி திகைத்தவர்போல இரு கைகளையும் மேலே தூக்கினார், அவருக்கு ஏதோ நெறியின்மை இழைக்கப்பட்டதுபோல. பலராமரின் ஆடல்முறை என்ன என்று எனக்கு எப்போதும் தெளிவாக தெரிந்திருந்தது. அவர் நுண்ணிய சூழ்ச்சிகளை இயற்றுபவரல்ல. முழுச் சூழ்கையையும் நினைவில்

வைத்துக்கொண்டு அதில் ஒரு பகுதியாக ஒவ்வொரு கருநகர்வையும் நகர்த்துவது அவரால் இயல்வதும் அல்ல. முழுப் படையையும் ஒற்றைக்காய் என்று எண்ணி விசைகொண்டு எடைகொண்டு முழுமையாகத் தாக்குவது அவருடைய வழக்கம். உருண்டு வரும் மலைச்சரிவுப் பெரும்பாறையின் பயணம்.

எதிர்த்து நின்றிருக்கும் ஆடல் அவருடையது என நான் அறிந்திருந்தேன். ஆடல் தொடங்கியபின் ஏதோ ஓர் இடத்தில் அவர் தாக்கத் தொடங்கினால் அங்கேயே தாக்கித் தாக்கி முன்னகர்ந்து ஊடுருவி உள்ளே சென்றுவிடுவார். அவ்வழிமுறை பெரும்பாலான ஆடல்களில் அவருக்கு வெற்றியை அளித்தது. நாற்களம் ஆடுவதில் அந்த முழுமுனைவு எவ்வகையிலும் உகந்தது அல்ல. அது கரவின் ஆட்டம். தன் ஆடல்முறையை அவ்வண்ணம் முன்வைப்பது எதிரியை வரவேற்பதுதான்.

ஆனால் அவருடைய இயல்புக்கு அது ஒத்துவந்தது. அவ்வண்ணமே நெடுங்காலம் விளையாடி விளையாடி அதற்குரிய வழிமுறைகளும் உளநிலைகளும் வாய்த்திருந்தன. கதையின் விசையையும் எடையையும் மட்டுமே நம்பி போரிடுபவர் அவர். மற்போரில் தோள்வல்லமையை மட்டுமே நம்புபவர். அது மதயானையின் வழி என்று நாற்களமாடலில் குறிப்பிடப்பட்டது. பெருவண்டு சிலந்தி வலையை அறுத்துச் செல்வதுபோல என்று அதை முன்பொரு சூதன் பாடியிருந்தான்.

அவருடைய ஆடலைப்பற்றி நன்கறிந்திருந்த போதிலும்கூட அதற்கெதிரான ஒரு சூழ்கையை அமைக்க ருக்மியால் இயலவில்லை. அதற்கெதிரான மிகச் சிறந்த சூழ்கை என்பது

அவருக்கெதிரான வலையை அமைப்பதல்ல. அவருக்கெதிராக நிகர்விசையை செலுத்த எவராலும் முடியாது. அவரது விசையை எதையும் தாக்காமல் திசையழிந்து உழல வைப்பதுதான் நல்ல சூழ்கை. மதயானை எதையும் முட்டுவதற்கு இலக்கு கிடைக்காமல் மத்தகம் உலைய களத்தில் சுற்றியலைய வேண்டும். அது பொறுமை இழக்கவேண்டும். எஞ்சிய முழு விசையையும் எங்கேனும் தாக்கி வீணடிக்க வேண்டும்.

இறுதியில் தளர்ந்து அதுவே எங்கேனும் சிக்கிக்கொள்கையில் அதை சூழ்ந்துகொள்ளலாம். அல்லது தன்னைத் தானே சிதறடித்துக்கொண்டு அவருடைய சூழ்கை வெறும் நாற்கள கருக்களாக மட்டுமே மாறும்போது தனித்தனியாக தாக்கி வெல்லலாம். மிகக் குறைவானவர்களே பலராமரை வென்றிருக்கிறார்கள். இளையவர், சகுனி, யுதிஷ்டிரர். ஆனால் அவர்கள் எல்லாருமே மிக மிக எளிதாக அவரை வென்றார்கள். வெல்லும் போதும் தோற்கும் போதும் அவர் ஆடலை மிக விரைவாக முடித்தார்.

ருக்மியால் எந்த வகையிலும் அவரை எதிர்கொள்ள முடியவில்லை. தொடக்கத்திலிருந்தே அந்த ஆடல் ஒருபக்கம் ஓங்கி ஒருபக்கம் மேலும் மேலும் தணிந்து செல்வதாக இருந்தது. பலராமரின் அரசரும் அரசியும் அமைச்சர்களும் படைத்தலைவர்களும் சூழ்ந்து ருக்மியின் அமைச்சர்களையும் படைத்தலைவர்களையும் ஓர் எல்லைக்கு கொண்டு சென்று அறைந்து அகற்றினார்கள். அப்படியே திரும்பி மறுஎல்லைக்குச் சென்று அவருடைய அரசனை அகற்றினார்கள். ருக்மி உடைந்து உடைந்து சரியும் கோட்டைபோல பின்னடைந்து சிதறினார்.

ருக்மி மிச்சமின்றி தோற்றதும் அனைத்துக் கருக்களையும் அவ்வண்ணம் வைத்துவிட்டு புன்னகையுடன் இரு கைகளையும் தூக்கினார் பலராமர். அவையிலிருந்து எவரும் வியப்பொலியும் வாழ்த்தொலியும் எழுப்பவில்லை. சிலர் சலிப்புடனும் சிலர் எரிச்சலுடனும் வெறுமனே பார்த்துக்கொண்டிருந்தனர். மெல்லிய பேச்சொலிகள் கேட்டன. நிமித்திகன் அறிவிப்புமேடையேறி கழியைச் சுழற்றி கொம்பூதி முதற்சுற்றில் பலராமர் வென்றிருப்பதை அறிவித்தான். மீண்டும் கொம்போசை எழுந்தது, அடுத்த ஆடல் தொடங்கியது.

இரண்டாவது சுற்றிலும் பலராமரே தொடக்கத்திலிருந்து வென்றுகொண்டிருந்தார். ருக்மியை அனைத்து திசைகளிலிருந்தும் முட்டி கொண்டு சென்று ஒரு மூலையில் நிறுத்தி அறைந்து வெளியே வீசினார். ஒரு நாழிகைக்குள் அந்த ஆட்டம் முடிந்தது. நிமித்திகன் மேடையேறி பலராமரின் வெற்றியை அறிவித்தான். ருக்மியின் முகம் சிவந்து பழுத்து கண்கள் நீர்மை கொண்டிருந்தன. பற்களை இறுகக் கடித்து, தன் கைகளை விரித்து நோக்கிக்கொண்டிருந்தார்.

நான் கணிகரை எண்ணிக்கொண்டிருந்தேன். அந்த ஆடல் அவ்வண்ணம்தான் முடியும். பலராமரை எவ்வண்ணமும் நாற்களத்திலோ கதைக்களத்திலோ எதிர்கொள்ள ருக்மியால் இயலாது. நாற்களமாடலில் ருக்மி தோற்று யாதவர்களுக்குரிய செல்வம் யாதவர்களுக்கே வந்து சேரும் என்றுதான் ருக்மிணி அதை சொல்லியிருக்கவும் கூடும். எனில் கணிகர் அதிலென்ன செய்தார்? ஆட்டத்தை ஏன் இங்கு கொண்டு வந்தார்? எந்த வகையான எண்ணங்களை விதைத்து அவர் ருக்மியை மதுராவுக்கு அனுப்பினார்?

என் எண்ணம் முழுக்க அங்கிலாத கணிகரை சுற்றி சென்று கொண்டிருந்தது. அங்கு அவர் மட்டும்தான் இருக்கிறார் என்ற எண்ணம் எனக்கு ஏற்பட்டது. பிரஃபாச க்ஷேத்ரம் அழிந்தபோது அங்கிருந்து அவர் எவ்வாறு அகன்றார்? தன்னை ஏன் மலைமேல் கொண்டுவைக்கச் சொன்னார்? அங்கே அவரை மீட்டுக்கொண்டு செல்ல வேறெவரையேனும் ஏற்பாடு செய்திருந்தாரா? பிரஃபாச க்ஷேத்ரம் அன்று அழியுமென்று அவருக்கு தெரிந்திருக்க வேண்டும். முன்னரே ருக்மியிடம் வரவேண்டும் என்ற எண்ணம் அவருக்கு இருந்திருக்க வேண்டும்.

எனில் அவர் ருக்மியை அழிப்பதற்கே எண்ணியிருக்கிறார். ஒருகணத்தில் திரை விலகியதுபோல் அனைத்தும் தெளிவாக தெரிந்தது. ருக்மி அங்கு உயிர்விடப் போகிறார். ஐயமே இல்லை, இது அவர் கொலைக்களம். ஆனால் எவ்வண்ணம்? அதை அறிய ஊழை கடந்து செல்லவேண்டும். அதை நோக்கும் அகக்கண் கணிகருக்கு உண்டு. அவர் எல்லையற்ற இருட்டை நோக்கும் விழிக்கூர் கொண்டவர்.

அதன் பின் ருக்மியின் முகத்தை பார்த்தபோது என்ன நிகழ்ந்துகொண்டிருக்கிறது என்று எனக்கு தெரிந்தது, வந்து இறங்கிய கணமே ருக்மியின் ஆணவம் மிகப் பெரிதாக ஊதிப்பெருக்கப்பட்டது. அவை நுழைந்தபோது மேலும் பெருகியது. அந்த உச்சத்திலிருந்து இழிவுமிக்க தோல்வியின் கீழ்ப்படிகளில் சென்று கொண்டிருக்கிறார். ஒரு கட்டத்தில் அனைத்து தற்கட்டுகளும் நிலை மீறும். இழிந்த எதையோ இயற்றப்போகிறார். விளைவாக பலராமர் கையால் அவர் இறக்கவிருக்கிறார்.

ருக்மியின் அரசன் அறைபட்டு களத்திலிருந்து வெளியேறினான். அடுத்த நகர்வில் அரசியும் அதற்கு அடுத்த நகர்வில் படைத்தலைவரும் வெளியேறினார்கள். அமைச்சன் மேல் கையை வைத்தபடி ருக்மி நடுங்கினார். ஒரு சுற்றில்கூட ஒரு காயில்கூட வெற்றியை அறியாத கீழ்மை மிக்க தோல்வி. அவர் உள்ளே என்ன நிகழ்கிறது? என் உள்ளம் முள்முனையில் திகழ்ந்தது. ஒரு சரடு அங்கே முறுகுகிறது. முறுகி முறுகி அது வெடித்து முறிய முடிவெடுக்கிறது. சற்றும் எண்ணியிராக் கணத்தில் கருக்களை கையால் தட்டி வீசிவிட்டு எழுந்து உரத்த குரலில் ருக்மி கூச்சலிட்டார். "இந்தக் களம் நீங்கள் வெல்லும் பொருட்டு பொய்யாக அமைக்கப்பட்டது! இக்களத்தில் அனைத்தும் வஞ்சம்!"

அதை நான் எவ்வண்ணமோ எதிர்பார்த்திருந்தபோதிலும் கூட அத்தருணத்தில் என்னை திடுக்கிடச் செய்தது. பலராமர் அத்தனை நேரடியான சிறுமைப்படுத்தலை வாழ்நாளில் ஒருபோதும் எதிர்கொண்டவர் அல்ல. சொல்கூட எழாமல் நடுங்கியபடி "என்ன சொல்கிறாய்? ருக்மி, என்ன இது?" என்று கைநீட்டினார். "இக்களத்தில் ஆடிய கருக்கள் திரும்ப வருகின்றன. நீங்கள் ஆடிய கருக்களை உங்கள் மைந்தன் எடுத்து மீண்டும் அருகே வைக்கிறான். அவற்றை திரும்ப எடுத்து ஆடுகிறீர்கள்" என்று ருக்மி கூவினார்.

"இது சூது, இது கீழ்மை... நிகரில்லாத சிறுமை. அவையில் இத்தனை அரசர்கள் பார்த்துக்கொண்டிருக்க இது நிகழ்ந்தது என்பது கீழ்மையிலும் கீழ்மை! இதையா யாதவ மரபென்கிறீர்கள்? இதையா யாதவரின் அன்னையரின் பெண்டிரின் கற்புக்கும் நெறியாக்குவீர்கள்? இதை நம்பியா இங்கு என்னை அழைத்து வந்தீர்கள்?" என்று ருக்மி கூவினார்.

உடல் நடுங்க எழுந்து உரத்த குரலில் "வாயை மூடு, அறிவிலி!" என்று பலராமர் கூவினார். "இனி ஒரு சொல் உரைத்தால் உன்னை கொல்வேன்!"

"இது கீழ்மை என்று எனக்கு இப்போதுதான் தெரிகிறது. சூழ்ச்சி செய்து என்னை வரவழைத்தீர்கள். கீழ்மையான சூழ்ச்சி ஒன்றில்லையேல் இங்கு என்னை வரவழைத்திருக்கமாட்டீர்கள்... என்னிடம் சொன்னார்கள் யாதவர் சூழ்ச்சிசெய்வார்கள் என்று. யாதவரின் கீழ்மையால்தான் அவர்களின் நகரங்கள் அழிந்தன என்றார்கள். தெய்வங்களுக்கே சினமூட்டும் சிறுமைசெய்த குலம் இது!" என்றார் ருக்மி. "என்னை சிறுமை செய்கிறாய். இதை ஒருபோதும் ஏற்கமாட்டேன்!" என்று பலராமர் நடுங்கி தாழ்ந்த குரலில் சொன்னார். அவரால் பேசவே முடியவில்லை.

ருக்மி அவரை நோக்கித் திரும்பி காறித்துப்பினார். "இத்தனை அரசர்கள் முன் நான்தான் சிறுமை செய்யப்படுகிறேன்" என்றார். "இதுநாள் வரை உங்களை உயர்ந்தவர் என்று நினைத்திருந்தேன். ஆசிரியன் என்று அடிபணிந்திருந்தேன். இப்போது தெரிகிறது, கள்வனும் கீழ்மகனுமான ஒருவனின் தமையன் அதைவிடக் கள்வனாகவும் கீழ்மகனாகவுமே இருக்க இயலும் என்று" என்று கைநீட்டி வெறுப்புடன் கூச்சலிட்டார்.

பலராமர் "கீழ்மகனே!" என்று கூவியபடி வலக் கையால் ஓங்கி சூதுக்களத்தை அறைந்தார். அப்பலகை பிளந்து கீழே விழுந்து முன்னால் காய்கள் சிதறின. அவர் ருக்மியை தோளிலும் கழுத்திலும் பற்றித் தூக்கி அப்பால் வீசினார். அவர் நிலத்திலிருந்து காற்றிலெழுந்து சென்று தரையில் உடல் அறைபட விழுந்து, புரண்டெழுந்து அருகே இருந்த தூணொன்றைப் பிடுங்கி அதைக்கொண்டு பலராமரை அறைய

வந்தார். "கீழ்மகனே! வஞ்சகனே! சிறுமதியனே!" என்று பித்தன்போல கூச்சலிட்டுக்கொண்டிருந்தார். அவர்மேல் ஏதோ தெய்வம் குடியேறியதுபோல் தோன்றியது.

பலராமர் பாய்ந்து சென்று அவர் அடிவயிற்றை காலால் எற்றினார். அப்படியே துள்ளி எழுந்து அவர் நெஞ்சில் ஓங்கி உதைத்தார். பின் அவரை இரு கைகளாலும் தூக்கி அவர் முதுகெலும்பை தன் கால் மூட்டில் ஓங்கி அறைந்து உடைத்தார். அவரது துடிக்கும் உடலைத் தூக்கி அப்பாலிட்டார். ருக்மி ஓசை எதையும் எழுப்பவில்லை. அவர் ஒரு கையும் ஒரு காலும் ஓரிரு முறை இழுத்துக்கொண்டு அசைவிழந்தன.

"என்னை சிறுமை செய்த இக்கீழ்மகனை கொன்றிருக்கிறேன். எவருக்கேனும் மாற்றுச் சொல்லிருக்கிறதா? உள்ளதா மாற்றுச்சொல்? சொல்மாறு இருப்பவர் எழுக! அவருடன் இந்தக் களத்திலேயே போர்புரிந்து பூசலை தீர்த்துக் கொள்கிறேன்!" என்று பலராமர் அறைகூவினார். திரண்ட வெண்ணிறக் கைகளை மேலே தூக்கி "என்னை எதிர்ப்பவர் எவராயினும் மற்போருக்கு எழுக! அன்றி கதைப்போருக்கு வருக..." என்று கூவியபடி சுற்றிச்சுற்றி அவையை பார்த்தார்.

மகதன் "அரசே, அவன் கூறியது இழிசொல். நாங்கள் அனைவரும் பார்த்துக்கொண்டுதான் இருந்தோம். அவன் கூறியதுபோல எந்தக் கருவும் திரும்ப வைக்கப்படவில்லை. ஆகவே இப்போருக்கு அறைகூவியவன் அவன்தான். முதலில் படைக்கலம் எடுத்தவனும் அவனே. ஆகவே அவன் கொல்லப்படுவது போர்முறைகளுக்கு உகந்ததே" என்றார். "ஆம், அது முறையானதே" என்று கோசலன் சொன்னார். பிற அரசர்களும் கைதூக்கி "ஆம், முறையானதே இச்செயல்!" என்றனர்.

பலராமர் ஒருகணம் திரும்பி தரையில் உடல் உடைந்து சுருண்டு குழந்தைபோல் கிடந்த ருக்மியை பார்த்தார். அவருடைய கைகால்கள் தளர்ந்தன. சற்று பின்னடைந்து மூங்கில் தூணொன்றை பற்றி நின்றார். தலையை அசைத்து "அறிவிலி! அறிவிலி!" என்றார். வாயில் ஏதோ ஊறியதுபோல காறித் துப்பிக்கொண்டு "சிறுமகன்! சிறுமகன்!" என்றார். அவரை அணுகி அவரது மேலாடையை அளிக்க வந்த ஏவலனை புறங்கையால் தட்டி அப்பாலிட்டார். துப்பியபடியே அவையிலிருந்து வெளியே சென்றார்.

நான் நிமித்திகனிடம் அவை கலைகிறது என்று அறிவிக்கலாம் என்று செய்கையால் சொன்னேன். அவன் மேடையேறி "அவையோரே, குடித்தலைவர்களே, அரசர்களே, இந்த அவையில் இப்போது நாற்களமாடல் முடிவுக்கு வருகிறது. இதில் மதுராவின் பலராமர் வென்றிருக்கிறார், விதர்ப்பத்தின் ருக்மி தோல்வியடைந்திருக்கிறார். திகழ்க நெறிகள்! ஓங்குக தொல்மூதாதையர் புகழ்! செழிக்கட்டும் பாரதவர்ஷம்! ஆம், அவ்வாறே ஆகுக!" என்று அறிவித்தான்.

விதர்ப்பத்தின் படைத்தலைவர்களும் அமைச்சர்களும் சேர்ந்து ருக்மியின் உடலைத் தூக்கி கைகால்களை நன்றாக நீட்டி மல்லாந்து படுக்க வைத்தார்கள். இழுபட்டு சுளிப்புகொண்ட முகத்துடன் அவர் கிடந்தார். இளிவரலுடன் எதையோ சொல்லிக்கொண்டிருப்பதுபோல தோன்றியது. ஒருகணம் அவர் முகத்தை பார்த்த பின் நான் திரும்பிக்கொண்டேன். விதர்ப்பத்தின் அமைச்சரிடம் "அமைச்சரே, இங்குள்ள சிற்றமைச்சர்கள் உங்களுக்கு வேண்டியவற்றை செய்வார்கள். உரிய முறையில் விதர்ப்பத்தின் அரசரின் உடலை நீங்கள் எடுத்துக்கொண்டு செல்லலாம்" என்றேன்.

“நீங்களே சான்று, இங்குள்ள நெறிகளை மீறி அரசரை போருக்கு அறைகூவியவர் அவர். சிறுமைச் சொற்களை எதிர்கொள்ள அரசருக்கு இருக்கும் ஒரே வழி போரே. ஆகவே அவர் தன் சாவை ஈட்டிக்கொண்டிருக்கிறார்” என்றேன். “ஆம்” என்று அவர் சொன்னார். “இங்கே ஷத்ரிய அரசர்கள் அவையென அமைந்து முடிவெடுத்து உரைத்த பின் அதற்கு விதர்ப்பம் மாற்றுரைக்க இயலாது. மாற்றென எதுவும் உண்டெனில் அதை முடிவுசெய்ய வேண்டியவர்கள் எங்கள் இளவரசர்கள்” என்றார் படைத்தலைவர். “ஆகுக!” என்று நான் தலைவணங்கினேன்.

அவைக்களத்தில் இருந்து அரசர்கள் வெளியேறிக்கொண்டிருந்தனர். ஏவலருக்கான வாயில் வழியாக நான் வெளியே சென்று புதுக் காற்றில் நின்று என் உடலில் வியர்வையை ஆற்றிக்கொண்டேன். என்னை அணுகிய சிற்றமைச்சர் சாமர் “சூரசேனர் தளர்ந்து விழுந்துவிட்டார். அவரை அரண்மனைக்கு அனுப்பிவிட்டேன். வசுதேவருக்கும் நெஞ்சுக்களைப்பு. அவரையும் அரண்மனைக்கு அனுப்பிவிட்டேன்” என்றார்.

“அரசர்களில் எவர் இன்று கிளம்புகிறார்கள் என்று உசாவுக!” என்றேன். “பெரும்பாலும் அனைவருமே நாளையோ மறுநாளோ கிளம்புவதாகவே சொன்னார்கள்” என்றார். “அது இந்த ஆடல் இங்கே முறையாக நிறைவுற்றிருந்தால். இன்றும் நாளையும் இங்கே ஆடலும் உண்டாட்டும் ஒருக்கப்பட்டிருந்தன. ஆனால் இன்றைய சூழலில் அரசர்கள் இங்கே தங்க விரும்பமாட்டார்கள்” என்றேன். “ஆமாம், அவ்வண்ணம்தான் தோன்றுகிறது” என்றார். “கிளம்புபவர்கள் அனைவருக்கும் உரியன செய்யப்படவேண்டும். நான் வருகிறேன். அதுவரை பொறுப்பேற்று நிகழ்த்துக!” என்றேன்.

அவர் சென்றதும் உல்முகன் என்னை நோக்கி வந்தார். தணிந்த குரலில் "அமைச்சரே" என்றார். "கூறுக!" என்றேன். "ருக்மி கூறியது உண்மை. நாற்களத்தில் காய் மாற்றி வைக்கப்பட்டது" என்றார். "என்ன சொல்கிறீர்?" என்றேன். "அதை நான் பார்த்தேன்!" என்றார். "என்ன உளறுகிறீர்?" என்று கூவினேன். "ஒருமுறை... மெய்யாகவே அந்தக் காய் ஒருமுறை மீண்டும் வைக்கப்பட்டது" என்றார். நான் மூச்சொலியாக "யார்?" என்றேன்.

"அருகே அமர்ந்த உதவியாளராகிய மூத்தவர் நிஷதனின் கை அவ்வாறு செய்தது. அதை அவர் வேண்டுமென்றே செய்தாரா என்று எனக்கு தெரியவில்லை. ஆனால் வெளியே சென்ற காய் மீண்டும் களத்திற்கு வந்தது. அதை ருக்மி கண்டார். ஆனால் தந்தை தொடர்ந்து தாக்கிக்கொண்டிருந்ததனால் சற்று பிந்திதான் அது அவர் கண்ணில் இருந்து உள்ளத்திற்குச் சென்றது. அவர் அதை கூறும்போது பலமுறை கருநீக்கங்களும் ஆடலும் முன்னகர்ந்துவிட்டிருந்தன" என்றார் உல்முகன்.

நான் வாயால் மூச்சுவிட்டுக்கொண்டு நெஞ்சில் சொல் அடைத்துக்கொள்ள அதைக் கேட்டு நின்றேன். பின்னர் "உங்கள் விழிமயக்காகக் கூட இருக்கலாம்" என்றேன். "மூத்தவரிடம் கேட்டுப் பாருங்கள். தந்தைக்கு அது தெரியாது. அதில் எனக்கு எந்த ஐயமும் இல்லை. மூத்தவர் இதை அறியாது செய்திருக்கலாம். அவர் கைபதறிக் கொண்டிருப்பதை கண்டேன்" என்றார் உல்முகன்.

நாங்கள் பேசிக்கொண்டிருக்கையிலேயே நிஷதன் எங்கள் அருகே வந்தார். தலைகுனிந்து நடுங்கிக்கொண்டு நின்றார் நான் "கூறுக!" என்றேன். "நீங்கள் எதைப்பற்றி பேசிக்கொண்டிருக்கிறீர்கள் என்று எனக்குத் தெரியும். ஒருமுறை கரு மாற்றி வைக்கப்பட்டது" என்றார். "எவ்வாறு?"

என்றேன். "தெரியவில்லை. நான் ஆட்டத்தில் விழி நட்டிருந்தேன். ஆடவேண்டிய கருவுக்கு பதிலாக ஆடிமுடித்த கருவை வைத்தேன். கைமறதியாக வைத்ததுமே அதை உணர்ந்தேன். பிழை செய்துவிட்டேன் என்று பதறினேன்."

"ஆனால் தந்தை வெறிகொண்டு தாக்கிக்கொண்டிருந்தார். ஆட்டம் ஏறத்தாழ முடிந்து அனைத்தும் நிறைவடையவிருந்தது. ஆகவே அதை நான் வெளிப்படுத்தாமல் அப்படியே விட்டுவிடலாம் என்று நினைத்தேன். அவையிலும் எவருமே அதை பார்க்கவில்லை. ஆட்டம் எல்லா சுற்றிலும் தந்தையே வெல்லும்படிதான் நிகழ்ந்துகொண்டிருந்தது. அக்கருவை மாற்றிவைத்து திரும்ப ஆடினாலும் தந்தைதான் வெல்லப்போகிறார், என்ன மாற்றம் வந்துவிடப் போகிறதென்று எனக்கு நானே சொல்லிக்கொண்டேன்" என்று நிஷதன் தொடர்ந்தார்.

"ருக்மி அதை அறியவில்லை என்று நினைத்தேன். அவர் கண்களிலிருந்து சித்தத்திற்குப் போக அவ்வளவு பிந்துமென்றும் எனக்கு தெரியவில்லை. அமைச்சரே, இப்பிழையை ஆற்றியவன் நான். இதற்கு முழுப் பொறுப்பு நான் மட்டுமே. அதற்காக எந்தப் பிழைநிகர் செய்யவும் நான் ஒருக்கமே" என்றார் நிஷதன். "என்ன நிகழ்ந்தது என்று எங்கும் நான் சொல்கிறேன்... சூழ்ச்சி என்றோ வஞ்சமென்றோ சொல்லப்பட்டாலும் சரி."

"இதை இப்போது நீங்கள் வெளிப்படுத்த வேண்டியதில்லை. இது மேலும் சிக்கல்களையே உருவாக்கும். இது நம் மூவருக்கும் மட்டுமே இப்போது தெரியும். அவை கலைந்துவிட்ட பிறகு இனி இதை அவர்கள் தரப்பில் எவர் கூறினாலும் இது தோல்வியினால் கூறப்படும் வெற்று அலர்

என்றே பொருள்படும்" என்றேன். "ஆனால் ஒன்றுண்டு, இதை எவர் அறிந்தாலும் பலராமர் அறியக்கூடாது. ஒருபோதும் அவர் செவியில் இச்செய்தி சென்று சேரக்கூடாது எனில் நாம் மூவரும் முற்றிலும் நாவடங்க வேண்டும். நான்காவது ஒருவரிடம் இச்சொல் சென்று சேரலாகாது" என்றேன். நிஷதன் ஆம் என்று தலையசைத்தார்.

# கல்பொருசிறுநுரை - 79

## பகுதி ஏழு : நீர்புகுதல் – 8

நான் பலராமரின் அறைக்குச் சென்றபோது அங்கே அமைச்சர்களும் படைத்தலைவர்களும் நிறைந்திருந்தனர். ஏவலன் என் வருகையை அறிவித்து எனக்கு நுழைவொப்புதல் அளித்தான். நான் உள்ளே சென்று பலராமரை வணங்கினேன். படைத்தலைவர்கள் எந்தத் தொடர்பும் இல்லாமல் தங்களுக்குள் மாறி மாறி பேசிக்கொண்டிருப்பதாகத் தோன்றியது. பலராமர் எந்த சொற்களையும் செவி மடுக்கவில்லை என்பதை உணர்ந்தேன்.

நான் நுழைந்ததும் என்னை நிமிர்ந்து பார்த்து "என்ன?" என்று கேட்டபோது என் சொற்களையும் அவர் கேட்கப்போவதில்லை என்று தோன்றியது. நான் முகமனுரைத்த பின் "இது நமது வெற்றி என்றே நாம் கொள்ள வேண்டும், அரசே" என்று சொன்னேன். "இந்தச் சிறு போரில் நாம் அடைந்த வெற்றி ஒரு தொடக்கமாக இருக்கவேண்டும். மதுரா இதுவரை அடைந்த

தோல்விகளில் இருந்து வெளிவந்து முதல் வெற்றியை அடைந்துள்ளது. திருமகளுக்கு ஓர் இயல்புண்டு, திரு இருக்கும் இடத்திலேயே திரு மீண்டும் செல்வாள். வெற்றிமகள் வெற்றிமகளை சேர்வாள். வெற்றிமகளை செல்வமகள் தேடிவருவாள்" என்றேன்.

பலராமர் என்னிடம் "மதுராவின் குடிகள் எப்படி உணர்கிறார்கள்?" என்றார். நான் தயங்கி "அவர்கள் வெற்றியை இன்னமும் முழுதுணரவில்லை, ஆனால் உணரவைக்க முடியும்" என்றவுடன் அவர் கைநீட்டி தடுத்து அருகிருந்த படைத்தலைவரிடம் "விக்ரமரே, கூறுக!" என்றார். படைத்தலைவர் என்னிடம் "மக்கள் மீண்டும் உளச்சோர்வுக்குள் சென்றுவிட்டார்கள். எவ்வகையிலோ அவர்கள் இந்தச் செயலை விரும்பவில்லை. இது ஒரு தீய தொடக்கம் என்றே நினைக்கிறார்கள்" என்றார். "தீய தொடக்கம் என்றால்?" என்று நான் சீறினேன். "வெற்றி எவ்வண்ணம் தீய தொடக்கமாகும்?" என்றேன்.

அவர் "அவர்கள் அதை வெற்றி என்று நினைக்கவில்லை. ஆசிரியர் கையால் மாணவர் கொலையுண்டிருக்கிறார் என்றே நினைக்கிறார்கள்" என்றார். "இது போர்" என்று நான் சொன்னேன். "ஆமாம், ஆனால் அவர்கள் எவரும் இதை போர் என்று நினைத்திருக்கவில்லை. இதை ஒரு இனிய விளையாட்டாக எண்ணியிருந்தார்கள் என்று தோன்றுகிறது. நகரெங்கும் துயர் நிறைந்திருக்கிறது. பலர் அழுதுகொண்டும் உரக்க பழி சாற்றி கூவிக்கொண்டும் இருக்கிறார்கள்" என்றார்.

நான் என் சினத்தை அடக்கிக்கொண்டு "எவரை பழி சாற்றுகிறார்கள்?" என்றேன். அவர் விழி தாழ்த்தி "நம் அரசரை" என்றார். "இதில் அரசர் செய்த பிழை என்ன? அவரைச் சிறுமை

செய்து அவைமுன் நின்று எதிர்த்தவனை அரசர் என்ன செய்ய வேண்டும் என்கிறார்கள்?" என்றேன். "அவர் விதர்ப்பரை சிறைப்பிடித்திருக்க வேண்டும் என்கிறார்கள். பொறுத்தருளி திருப்பி அவருடைய நாட்டுக்கே அனுப்பியிருக்க வேண்டும் என்கிறார்கள். அது எளிய செயல் என்றும் நினைத்தால் செய்திருக்கலாம் என்றும் சொல்கிறார்கள். இது கொலைப்பழி விழுந்த நிலம் என்று பலர் கூறுவதை கேட்டேன்" என்றார்.

"அரசே, குடிகள் ஏற்கெனவே உளச்சோர்வில் இருந்தார்கள். அவர்கள் சற்றே வெளிவந்தபோது இந்நிகழ்ச்சி நடந்தது. அவர்கள் மீண்டும் உளச்சோர்வுக்குள் சென்றுவிட்டிருக்கிறார்கள், அவ்வளவுதான். இங்கே நிகழ்ந்த போரில் எந்த நெறியும் முறையும் மீறப்படவில்லை. ஆகவே குடிகளின் சோர்வு பற்றி நாம் கவலைகொள்ளத் தேவையில்லை" என்றேன். "அதை நாம் சொன்னால் போதாது, நம் குடிகளுக்கு தெரியவேண்டும்" என்றார் பலராமர். "அங்கிருந்த அரசர்கள் ஏற்றுக்கொண்டார்கள்" என்றேன். "அவைச்சான்று அவர்கள். நெறி நிலைகொள்வது அவர்களின் சொல்லில். நூல்கள் நினைவுறப்போவது அவர்களின் முடிவை."

"அரசர்கள் ஏற்றுக்கொள்வார்கள். ஏனெனில் அவர்கள் எப்போதும் வலிமையானவர்களுடன் நின்றிருப்பவர்கள். நாம் பாரதவர்ஷத்தை ஆளும் ஆற்றலுடன் ஓங்கி நின்றிருக்கும் குலம் என்று அவர்கள் அறிவார்கள். விதர்ப்பத்தின் ருக்மி மேல் ஒவ்வாமை இல்லாத அரசர்களும் கிடையாது. ஆனால் குடிகள் ஏற்க வேண்டும். அவர்களின் உளச்சான்று முன் நாம் நிமிர்ந்து நிற்கவேண்டும். நான் அவர்களின் அரசன், அதை மீறி நம் மீதே குடிகள் பழி சொல்கிறார்கள் என்பது உண்மை" என்றார்

பலராமர். “அவர்கள் சொல்வதில் ஒரு பொருள் உள்ளது என்றே உணர்கிறேன்.”

“என்ன சொல்கிறீர்கள்?” என்று நான் சலிப்புடன் கேட்டேன். “ஆசிரியன் தந்தைக்கு நிகரானவன். அந்த அவையில் நிஷதன் இதேபோல் நடந்திருந்தால் அவனை நான் இவ்வண்ணம் கொன்றிருப்பேனா?” என்றார் பலராமர். “கொல்லவேண்டும், கொன்றிருப்பீர்கள்” என்றேன். “இல்லை, கொல்லமாட்டேன். நன்றாகத் தெரியும், கொல்லமாட்டேன். அவன் உடலை தொட்டதுமே என் கை தயங்கியிருக்கும். ஆனால் இவன் உடலை தொட்டபோது தயங்கவில்லை.”

“இவன் உடலை எத்தனை முறை தொட்டிருப்பேன். இளமைந்தனாக என்னிடம் கதை பயில வந்தான். அன்று அவன் தோளைத் தொட்டு நிமிர்த்து காலைப் பிடித்து முன்னால் வைத்து எப்படி களத்தில் நிலைநிற்பது என்று சொல்லிக்கொடுத்தேன். என் உடனேயே இருந்தான். என்னிடம் கதையும் மற்போரும் பயின்றான். என்னுடன் மற்போரிட்ட ஒவ்வொருவரையும் நூறு முறை ஆயிரம் முறை தழுவியிருப்பேன். இன்று என் கையால் அவனை கொல்லும்படி ஆகிவிட்டது.”

“ஆசிரியர் கையால் மாணவனைக் கொல்வதென்பது மைந்தர் கொலைக்கு நிகரானதே. இப்போது உணர்கிறேன், பீஷ்மரும் துரோணரும் கிருபரும் ஏன் அர்ஜுனனை கொல்லவில்லை என்று. அவர்களால் கொன்றிருக்க முடியும். ஐயமறத் தெரிகிறது, கொன்றிருக்க முடியும். மாணவன் எழுந்து வந்து தன்முன் நிற்கும்போது ஆசிரியன் உளம் கனிந்துவிடுகிறான். இளமைந்தனாக அவனை பார்த்த கணங்கள், அவனை மடியிலேற்றி அமரவைத்து சொல்லளித்த நாட்கள் நினைவிற்கு

வருகின்றன. அவன் அவருடைய எதிர்காலம். மைந்தனைவிட மாணவனே நம்மை நினைத்திருக்கப்போகிறவன். ஆசிரியரால் மாணவனை கொல்ல இயலாது. ஆசிரியர்கள் மாணவர்கள் முன் விரும்பித் தோற்கிறார்கள். எப்போதும் அதுவே நிகழ்கிறது."

"ஆனால் நான் கொன்றிருக்கிறேன்.... மைந்தர்கொலை புரிந்த தந்தை என இங்கே அமர்ந்திருக்கிறேன். பழிகொண்டவனாக உணர்கிறேன். என் குடிகள் பழிப்பது இயல்பே" என்றார் பலராமர். நான் "இந்த உளச்சோர்விலிருந்து நீங்கள் வெளிவந்தே ஆகவேண்டும். இப்போது நீங்கள் சொல்வது அனைத்தும் நெறி சார்ந்ததோ, முறை சார்ந்ததோ, அறம் சார்ந்ததோ அல்ல. வெறும் உளச்சோர்வு மட்டுமே. சில நாட்களில் இச்சோர்விலிருந்து வெளியே செல்வீர்கள். இந்நகரிலிருந்து வெளிச்செல்வது அதற்கு உதவும். இந்நகர் மீண்டும் தன் சோர்வுடன் வாழட்டும். சில நாட்களுக்குப் பின்பு ஏதோ ஒரு திருவிழாவினூடாக இது மீண்டு வரும், ஏனென்றால் மானுடத்திரள் அனைத்திலிருந்தும் மீண்டு வந்தாகவேண்டும் என்பது தெய்வங்களின் ஆணை" என்றேன்.

நான் திரும்பி படைத்தலைவரிடம் "அரசரிடம் தெரிவிக்கவேண்டியவை மட்டுமே அரசரிடம் தெரிவிக்கப்படவேண்டும். அரசுசூழ்தல் என்பதன் முதல் நெறி அனைத்தையும் அரசர் முன் வைத்து பேசவேண்டியதில்லை என்பது" என்றேன். அவர் திகைத்து "ஆம்" என்றார். முணுமுணுப்பாக "பொறுத்தருளவேண்டும்" என்றார். என் முகத்தைக் கண்டு ஒவ்வொருவரும் தங்களுக்குள் என பார்த்தபடி பின்னடைந்தனர். "ஆம், அதைத்தான் நான் சொன்னேன்" என்றான் ஒருவன். "வெளியே செல்க!" என்று

அவர்களிடம் சொன்ன பின் “தாங்கள் ஓய்வெடுங்கள், அரசே” என்று தலைவணங்கினேன்.

படைத்தலைவர்களும் அமைச்சர்களும் ஒவ்வொருவராக வெளியே சென்றனர். பலராமர் என்னிடம் “மெய்யாகவே சொல்லுங்கள், இது பழி அல்லவா?” என்றார். “இல்லை” என்று நான் உறுதியான குரலில் சொன்னேன். “இளைய யாதவர் ஏகலவ்யனை கொன்றதுபோல் ஒரு நிகழ்வு இது. அதற்கப்பால் ஒன்றுமில்லை.” பலராமர் “இது பிழையல்ல, முறையே என்று நானே ஆயிரம் முறை எனக்குள் சொல்லிக்கொள்கிறேன். ஆயினும் என் உள்ளம் அதை ஒப்புக்கொள்ள மறுக்கிறது. மீள மீள அவ்வாறல்ல அவ்வாறல்ல என்று அது சொல்லிக்கொண்டிருக்கிறது” என்றார்.

“மது அருந்துங்கள், ஓய்வெடுங்கள்” என்றபின் தலைவணங்கி நான் வெளியே வந்தேன். ஏவலனிடம் “அவர் விரும்பும் கடுமதுவை மட்டிலாது அளியுங்கள். நன்கு ஓய்வெடுக்கட்டும், நீடு துயிலட்டும்” என்றேன். சற்று அப்பால் என்னை காத்து நின்ற படைத்தலைவர்களிடம் சென்று “நகரம் என்ன எண்ணுகிறது என்பதை இப்போது அவரிடம் சொன்னவர் யார்?” என்றேன். “அவர்தான் கேட்டார்” என்றார். “அவர் கேட்கலாம். அதைச் சொல்ல முடிவெடுத்தவர் எவர்? இத்தகைய முடிவை அமைச்சர் எடுக்கவேண்டும், படைத்தலைவர் எவ்வாறு எடுக்கலாம்?” என்றேன்.

“இங்கு எப்போதுமே முறைமைகள் எதுவுமே பேணப்படுவதில்லை. அரசரின் அவை நாங்கள் விளையாட்டாக எதையும் பேசுமிடமாகவே எப்போதும் இருந்துள்ளது. பொழுதுபோகாதபோதுகூட நாங்கள் இங்கே வந்து இயல்பாக பேசிக்கொண்டிருப்போம்” என்றார் படைத்தலைவர். “அது

இயல்பான நிலையில். அவருடைய பேருள்ளம் அது. இன்று உளம் கலங்கியிருக்கும் இத்தகைய நிலையில் அவரிடம் எதை சொல்லவேண்டும் என்று முடிவெடுக்க வேண்டியவர் அமைச்சர் மட்டுமே" என்றேன்.

"அவர் உளம் கலங்கியிருப்பது எங்களுக்கு தெரியவில்லை" என்றார் படைத்தலைவர். "தெரியவில்லை என்றால் நீங்கள் எப்படி அவரிடம் உரையாடலாம்? அவர் உளம் கலங்கி இருப்பது கூட தெரியாதவர்கள் எப்படி அவரிடம் நட்பாக இருக்கலாம்?" என்றேன். அவர் "பொறுத்தருள்க, அவர் இத்தனை தூரம் உளம் சோர்ந்து போவார் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை" என்றார். "அவரே கேட்டார். நகர்மக்கள் என்ன நினைக்கிறார்கள், குடிகளிடம் நிலவும் உணர்வென்ன என்று" என்று மீண்டும் படைத்தலைவர் சொன்னார். "அரசரிடம் உண்மை உரைப்பது இன்றியமையாதது என்று எண்ணினோம்" என்றார் இன்னொருவர்.

"அறிவிலிகள்!" என்றபின் நான் கீழே வந்தேன். சிற்றமைச்சர்களை என் அறைக்கு வரவழைத்து ருக்மியின் உடலை விதர்ப்பத்திற்கு கொண்டுசெல்வதற்கான ஒருக்கங்களை செய்வதற்கு ஆணையிட்டேன். ஏற்கெனவே அவருடைய உடலை மருத்துவர்கள் தேன் தடவி பதமிட்டு நீண்ட மரப்பேழைக்குள் வைத்து மூடி படகில் ஏற்றிக்கொண்டிருந்தார்கள் என்று சிற்றமைச்சர் காதரர் சொன்னார். ஒற்றர்தலைவர் சம்பகன் "அவர்கள் இன்னும் அரைநாழிகைப்பொழுதில் கிளம்பிச்செல்வார்கள்" என்றார். "ஒருக்கங்கள் என்று பெரிதாக ஏதுமில்லை. தங்கள் நாட்டுக்கு செய்தி அனுப்பிவிட்டார்கள்."

ஒற்றரான கஜராஜன் "அமைச்சரே, ஒவ்வாத செய்தி ஒன்று உண்டு. நமது குடிகள் திரளாக கிளம்பிச்சென்று அவருக்கு வீர வணக்கம் செய்துகொண்டிருக்கிறார்கள். விதர்ப்பத்தின் படகுகள் நின்றிருக்கும் இடத்தில் மதுராவின் மக்கள்திரள் செறிந்திருக்கிறது" என்றார். "என்ன இது?" என்று நான் கேட்டேன். "அந்த உணர்வுகளை புரிந்துகொள்ள முடியவில்லை. எவ்வண்ணம் அரசருக்கு எதிராக மக்கள் கிளம்பினார்கள் என்று தெரியவில்லை. அவர்களில் சிலர் பலராமருக்கு எதிராக முழக்கமும் இடுகிறார்கள். ருக்மி ஆடலில் வென்றார் என்றும் அதை சூழ்ச்சியால் பலராமர் முறியடித்தமையால் அவர் எதிர்த்து குரல் எழுப்பினாரென்றும் அதன்பொருட்டே அவர் கொல்லப்பட்டார் என்றும் சொல்லிக்கொள்கிறார்கள்" என்றார் கஜராஜன்.

நான் திகைத்துவிட்டேன். "இந்தப் பேச்சுகள் எவ்வாறு பரவுகின்றன, எவர் இதை கொண்டுசெல்கிறார்கள் என்பது புரியவில்லை" என்று கஜராஜன் சொன்னார். "ஆனால் இதைத்தான் எங்கும் பேசிக்கொண்டிருக்கிறார்கள். உணர்வுகள் மிகையாகிக்கொண்டே செல்கின்றன." "விதர்ப்பத்தின் ஒற்றர்கள் இதில் ஏதாவது பங்களிப்பாற்றுகிறார்களா?" என்று நான் கேட்டேன். "இல்லை, அவ்வண்ணம் விதர்ப்பத்திற்கு ஒற்றர்கள் எவரும் இங்கிருப்பதாக தெரியவில்லை" என்று காதரர் சொன்னார்.

"விதர்ப்ப மைந்தர்கள் அதில் ஆர்வம் காட்டவில்லை. அவர்களுடன் வந்தவர்களும் மிகச் சிலர்தான். அவர்களும் இந்தச் சாவினால் பெரிய அளவில் துயருற்றவர்களாக தெரியவில்லை. உண்மையில் அவர்கள் இதை விரும்புகிறார்களோ என்று கூட தோன்றுகிறது.

நெடுநாட்களாகவே ருக்மி விதர்ப்பத்திற்கு ஒரு சுமை என்றே ஆகிவிட்டிருக்கிறார். ருக்மியின் இறப்பினால் அவர் மைந்தர்கள் எழுந்து விதர்ப்பத்திற்கு இன்னும் சிறந்த ஆட்சியை அளிக்கக்கூடும். விதர்ப்பர்கள் ருக்மியை எந்த வகையிலும் மதிப்பதாக நான் அறிந்ததே இல்லை" என்று கஜராஜன் சொன்னார்.

ருக்மியின் உடலை கொண்டு செல்லுமிடத்திற்கு நான் நேரில் செல்வதே முறை என்று தோன்றியது. அரசமுறைப்படி அவ்வுடலை அனுப்பிவைக்காமலிருந்தால் அதுவே சூழ்ச்சி என்றும் அறத்தயக்கம் என்றும் அச்சம் என்றும் சொல் பெருக வாய்ப்பளிக்கும். என் மாளிகைக்குச் சென்று உடைமாற்றிக்கொண்டேன். வெளியே வந்து காத்திருந்த சிற்றமைச்சர்களிடம் "நகர்மக்கள் எவரும் படகுத்துறைக்கு செல்லக்கூடாது. ஆனால் இதை அறிவிப்பாகவோ ஆணையாகவோ வெளியிடவேண்டியதில்லை. இயல்பாகவே படைகளை நிறுத்தி மக்கள் திரண்டு செல்வதை தடுத்து படித்துறையை தனிமைப்படுத்துங்கள்" என்று ஆணையிட்டேன். "ருக்மிக்கான அரசமுறைமைகள் செய்யப்படவேண்டும். அதற்கு சிற்றமைச்சர் காதரர் பொறுப்பேற்கட்டும்."

விரைவுத்தேரில் ஏறி படகுத்துறைக்கு சென்றேன். அங்கே ஒரு மேடையில் ருக்மியின் உடல் சந்தனப் பலகையாலான நீள்பேழையில் வைக்கப்பட்டிருந்தது. தலையருகே விதர்ப்பத்தின் கொடி பறந்தது. ருக்மியுடன் வந்த அமைச்சர்களும் படைவீரர்களும் சூழ நின்றிருந்தனர்.

விதர்ப்பத்தின் கொடி பறந்த படகுகள் ஒருங்கிக்கொண்டிருந்தன. முன்னரே படகுத்துறையில் இருந்த மூன்று கலிங்கப் படகுகள் வெளியேறிய பிறகே விதர்ப்பத்தின் படகு நகரமுடியும் என்பதனால் அவர்கள் காத்திருந்தார்கள். அனைவருமே எரிச்சலுற்றவர்களாக, நிலையழிந்த உடல்மொழி கொண்டவர்களாகத் தோன்றினர்.

அங்கு கூடியிருந்த மதுராவின் மக்கள் " விதர்ப்பர் வெல்க! ருக்மி வெல்க! புகழ்ூர் செல்க மாவீரர்! நூல்புகழ் கொள்க விதர்ப்பர்!" என்று கூவிக்கொண்டிருந்தனர். எனது கொடி பறந்த தேரைப் பார்த்ததுமே அவர்கள் திரும்பி நின்று என்னை நோக்கி கூவி முழக்கமிட்டனர். அது எனக்கு எதிரான எதிர்ப்புக்குரல் போலிருந்தது. நான் இறங்கி விதர்ப்பத்தின் படைவீரர்களை நோக்கி சென்றேன். அவர்கள் என்னைக் கண்டதும் குழம்பினார்கள். அவர்களது அமைச்சர் என்னைப் பார்த்து தலைவணங்கினார்.

"அரசாணையை அறிவிக்கவே வந்தேன் நான். விதர்ப்பத்தின் அரசர் இங்கிருந்து செல்வதற்கு அரசருக்குரிய எல்லா முறைமைகளும் செய்யப்படும்" என்றேன். அவர் ஆமென்று தலைவணங்கினார். அவர்கள் அனைவருமே குழம்பிக்கொண்டிருந்தார்கள். படகு கரையணைந்தபோது அவர்கள் கலைந்து அதை நோக்கி சென்றார்கள். எதிர்த்திசையிலிருந்து பிறிதொரு தேரில் உல்முகன் வந்திறங்கினார். அவரைக் கண்டதும் ருக்மிக்கான வாழ்த்துக்களில் வெறி கூடியது.

உல்முகன் என்னை நோக்கிவந்து "என்ன நிகழ்கிறது, அமைச்சரே? நகரில் படைகள் இறக்கப்பட்டிருக்கின்றன. அனைத்து வழிகளும் படைகளால் மூடப்பட்டிருக்கின்றன"

என்றார். "மக்கள் திரண்டு இங்கு வரவேண்டாம் என்பதற்காக" என்றேன். "மக்கள் ருக்மிக்கு வணக்கம் தெரிவித்தால் அதிலென்ன பிழை?" என்றார். "எது தேவை என்பதை நான் முடிவு செய்கிறேன்" என்று நான் சலிப்புடன் சொன்னேன். "ருக்மி எல்லை மீறி கொல்லப்பட்டிருக்கிறார் என்பது உண்மை. அதை மக்கள் எவ்வகையிலோ உணர்ந்திருக்கிறார்கள். அதை ஈடுசெய்ய விரும்புகிறார்கள். மதுராவின் மக்கள் இன்னமும் அறம் சார்ந்து உளம் கொண்டிருக்கிறார்கள் என்பது நிறைவளிப்பதுதான்" என்றார்.

"அது வேறுவகையாக விளக்கப்படலாம்" என்று நான் சொன்னேன். உல்முகன் "நான் கிளம்பும்போது நிஷதனை பார்த்தேன். அவரை தந்தை வரச்சொல்லியிருக்கிறார்" என்றார். "யார்?" என்று கேட்டேன். "தந்தை அவரை உடனே பார்க்கவேண்டும் என்று சொல்லி அனுப்பியிருக்கிறார்." நான் திகைப்புடன் "ஆனால் அரசர் மது அருந்தி ஓய்வெடுப்பதாகத்தானே சொன்னார்கள்?" என்றேன். "ஆம், மதுவருந்தியிருக்கிறார், நிலையழிந்திருக்கிறார், பீடங்களிலும் தன்னைத்தானே நெஞ்சிலும் அறைந்துகொண்டு அலறி அழுகிறார். ஒவ்வொருவரையும் அழைத்துவரச் சொல்லியிருக்கிறார்" என்றார் உல்முகன்.

"நிஷதன் போயிருக்கலாகாது" என்றேன். "அவரை துயில்கொள்ள விட்டிருக்கவேண்டும்." உல்முகன் "நிஷதனை அழைத்து மூன்று முறை ஏவலர் வந்த பிறகே அவர் சென்றார்" என்றார். "அவர்கள் என்ன பேசுவார்கள் என்று தெரியவில்லையே" என்று நான் தலையை உலுக்கினேன். "நிஷதன் உளம் குலைந்திருக்கிறார், அவர் தந்தையிடம் நிகழ்ந்ததை கூறிவிடக்கூடும்" என்றார் உல்முகன். "என்ன

சொல்கிறீர்கள்?" என்றேன். "தந்தையும் அவரும் ஒரே இயல்பு கொண்டவர்கள். அவர்களின் உள்ளத்தில் எந்த மறைசொல்லும் தங்காது. அரச மந்தணங்களைக் கூட அவர்கள் இருவரிடமும் கூறலாகாது என்பது இந்நகரின் வழக்கங்களில் ஒன்று. அதை எந்த அரசரிடம் வேண்டுமென்றாலும் சொல்லிவிடுவார்கள்" என்றார்.

நான் உடனடியாகக் கிளம்பி அரண்மனைக்கு செல்ல விரும்பினேன். ஆனால் அதில் பயனில்லை என்று தோன்றியது. நிஷதன் பலராமரை சந்தித்து உரையாடியிருந்தால் அது இந்நேரம் முடிந்திருக்கும். நான் கிளம்பிச்செல்வதற்குள் என்ன வேண்டுமானாலும் நிகழ்ந்திருக்கும். இங்கு வந்துவிட்டு ருக்மியின் உடலை படகிலேற்றுவதற்கு முன் நான் சென்றால் அது பிழையென்றும் ஆகும். ஒன்றும் செய்வதற்கில்லை. அரச முறைமைகளை முடித்துவிட்டுச் செல்வதுதான் ஒரே வழி. அமைதியை காட்டியபடி அங்கு நின்றிருந்தேன். ஆனால் என் அகம் நிலையழிந்து பதறிக்கொண்டிருந்தது. கைகளை உரசிக்கொண்டும் தலையை தடவிக்கொண்டு உடலை அங்குமிங்கும் அசைத்துக்கொண்டும் பொறுமையிழந்து நின்றேன்.

மையச்சாலையில் இருந்து மதுராவின் அணிக்காவல்படையினர் நூற்றெண்மர் உடைவாள்களை உருவி ஏந்தியபடி சீர்நடையிட்டு வந்து மூன்று நீள்நிரைகளாக நின்றனர். அவர்களின் முகப்பில் கவசஉடையணிந்த மூன்று வீரர்கள் மதுராவின் கொடிகளுடன் நின்றனர். தொடர்ந்து பன்னிருவர் போர்முரசுகளையும் கொம்புகளையும் ஏந்தி நின்றிருந்தனர். முகப்பில் வெள்ளிக்கோலுடன் படையிசை

நடத்துநன் நின்றான். ஆயிரத்தார் படைத்தலைவன் ஒருவன் முழுக்கவச உடையில் முன்னால் வந்து நின்றான்.

விதர்ப்பத்தின் படகு துறைமேடை அருகே வந்து நின்றது. படைத்தலைவன் கையசைக்க கொம்புகளும் முரசுகளும் முழங்கின. உடைவாளை உருவியபடி மதுராவின் படைவீரர்கள் நடந்துவந்து வாள்தாழ்த்தி ருக்மிக்கு வணக்கம் அறிவித்தனர். மதுராவின் கொடி மும்முறை தாழ்த்தப்பட்டு வாழ்த்து அளிக்கப்பட்டது. படைத்தலைவன் நெஞ்சில் கைவைத்து வணங்கி "விதர்ப்ப மன்னர் ருக்மி விண்ணுலகம் எய்துக!" என்று வாழ்த்தினான். பின்னர் அந்தப் படை அவ்வண்ணமே பின்னடி எடுத்து வைத்து விலகிச் சென்றது.

ருக்மியின் உடல் அடங்கிய பேழையை படைவீரர்கள் ஏந்திக்கொண்டு படகுக்கு கொண்டுசென்றனர். குடிகளும் ஏவலரும் "விதர்ப்பர் வெல்க! மாமன்னர் ருக்மி வெல்க!" என்று கண்ணீருடன் கூவி ஆர்ப்பரித்த வாழ்த்தொலிகள் நடுவே ருக்மியின் உடல் படகில் ஏற்றப்பட்டது. பாலத்தினூடாக பிறரும் படகில் ஏறிக்கொண்டனர். ஒவ்வொருவராக படகில் ஏறி உள்ளே அமர்ந்தனர். கலக்காவலன் கொம்போசை எழுப்பினான். துடுப்புகள் வெளிவந்து நீரில் அளைய படகு மெல்ல அசைவுகொண்டு யமுனைக்கு மேல் சென்றது. அதன் மூன்று பாய்களும் விரிந்தபோது விசை கொண்டது. அதைச் சூழ்ந்து காவல் படகுகள் சென்றன.

அனைத்துப் படகுகளும் சென்று மறைவது வரை அங்கு வாழ்த்தொலிகள் எழுந்துகொண்டே இருந்தன. நான் உல்முகனின் தோளைத்தட்டி "செல்வோம்" என்றேன். அப்போது தொலைவில் மதுராவின் கொடி பறந்த அரசத்தேர் நீரலைகள் மேல் நெற்று என வருவதை கண்டேன். "தந்தை!" என்று

உல்முகன் சொன்னார். என் நெஞ்சு படபடத்தது. நான் அசைவில்லாமல் நோக்கி நின்றேன். குடிகளின் வாழ்த்தொலிகள் மேலும் வெறிகொண்டன. "விதர்ப்பர் வெல்க! மாமன்னர் ருக்மி வெல்க!" அவை எக்கணமும் பலராமருக்கான பழிச்சொற்களாக உருமாறக்கூடும் என நான் அஞ்சினேன்.

தேர் வந்து நின்று அதிலிருந்து பலராமர் இறங்கி இரு கைகளையும் விரித்தபடி ஓடிவந்தார். அவருக்குப் பின்னால் நிஷதன் ஓடிவந்தார். நான் முன் சென்று "அரசே, என்ன இது?" என்றேன். மது மயக்கில் முகம் சிவந்து, கண்களிலும் மூக்கிலும் நீர் வழிய, பலராமர் இரு கைகளையும் தூக்கி அசைத்தபடி உடைந்த குரலில் "எங்கே என் மைந்தன்? எங்கே அவன்? ருக்மி எங்கே?" என்றார். "அரசே, சொல்வதை கேளுங்கள்... குடிகள் சூழ்ந்திருக்கிறார்கள்" என்றேன். "ஸ்ரீகரரே, இந்த அறிவிலி காயை மாற்றி வைத்திருக்கிறான். அறியாமல் செய்தாலும் அது அங்கே நிகழ்ந்தது. அதைப் பார்த்து அவன் உண்மையைத்தான் சொல்லியிருக்கிறான். அவனை நான் கொன்றுவிட்டேன். பெரும்பழி செய்துவிட்டேன். மைந்தர்கொலை செய்யும் தந்தை என்று ஆகிவிட்டேன். என் மைந்தன் எங்கே?" என்றார் பலராமர்.

"உடல் படகில் சென்றுவிட்டது" என்றேன். "ஐயோ! ஐயோ! ஐயோ!" என்று பலராமர் தலையில் ஓங்கி ஓங்கி அறைந்துகொண்டு கூவினார். "நான் பழி செய்துவிட்டேன்! கீழ்மகனாகிவிட்டேன்!" என்றபடி அவர் கால் தளர்ந்து நிலத்தில் விழுந்தார். நான் விழிகாட்டி அனைத்துப் படைவீரர்களும் அவரை சூழ்ந்துகொள்ளச் செய்தேன். அவரை தொட்டுத் தூக்கி "அரசே, குடிகள் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்" என்றேன். "அனைவரும் பார்க்கட்டும். இவ்வுலகமே பார்க்கட்டும். நான்

பழி சூழ்ந்தவன். என் கைகளால் வளர்த்த மைந்தனைக் கொன்ற தந்தை நான். கீழ்மகன்! கீழ்மகன்!” என்று அவர் கதறினார்.

“எப்பழி கொண்டேனோ என் நகர்கள் அழிந்தன. என் மைந்தர்கள் மறைந்தனர். இப்பழி இனி எங்கு விளையுமென்றும் தெரியவில்லை. தெய்வங்களே, மூதாதையரே!” என்று அவர் அழுதார். நான் நிஷதனிடமும் உல்முகனிடமும் அவரை தூக்கும்படி கைகாட்டினேன். அவர்கள் இருவரும் அவர் இரு பக்கமும் நின்று கைகளால் தூக்கிக்கொண்டார்கள். அவர்கள் இழுத்துக்கொண்டு செல்ல புலம்பி அழுதபடி அவர் சென்றார்.

# கல்பொருசிறுநுரை - 80

**பகுதி ஏழு : நீர்புகுதல் – 9**

நான் பலராமரின் மஞ்சத்தறைக்கு முன் சென்று நின்றேன். வாயிலில் அவருடைய இரு மைந்தர்களும் நின்றிருந்தனர். நிஷதன் உளம் கலங்கியதுபோல் தோள்கள் தொய்ந்து, கைகள் தளர்ந்து, தலைகுனிந்து நின்றிருந்தார். உல்முகன் என்னிடம் “தந்தை எவரையும் பார்க்க விரும்பவில்லை. நாங்கள் பார்க்க விரும்பியபோதுகூட உளம் ஒருங்கவில்லை” என்றார். “நான் அவரிடம் சில சொற்கள் சொல்லவேண்டும்” என்று சொன்னேன். சில கணங்களுக்குப் பின் உல்முகன் “அவர் முடிவெடுத்துவிட்டார். எவர்

சொல்வதையும் அவர் கேட்க விரும்பவில்லை" என்றார். நான் "என்ன முடிவு?" என்றேன். அவர் ஒன்றும் சொல்லவில்லை.

நான் ஏவலனிடம் எனது வருகையை அறிவிக்கும்படி கோரினேன். "இளவரசே, என்ன நிகழுமென்று முன்னரே கணித்து என் செயல்களை மட்டுப்படுத்திக்கொள்பவன் நான். இளமையிலிருந்தே என் முன் நின்றிருப்பது ஊழென்பதை உணர்ந்திருக்கிறேன். எப்போதுமே நான் செய்யக்கூடியதென்ன, எனக்காக இடப்பட்டிருப்பது என்ன என்று மட்டுமே பார்ப்பேன். அவற்றை இயற்றுவது மட்டுமே எனது பணி" என்றேன். "இப்போது எனக்கு ஒரு பணி உள்ளது என நினைக்கிறேன். அதை இயற்றியே ஆகவேண்டும் என்றே முனைவேன்." உல்முகன் "நீங்கள் இம்முயற்சியில் வென்றால் மகிழ்வேன்" என்றார்.

ஏவலன் வெளியே வந்து "அமைச்சர் மட்டும் தன்னை சந்திக்கவேண்டும் என்று அரசர் ஆணையிட்டிருக்கிறார்" என்றான். நான் உள்ளே சென்றேன். அமைச்சர் மட்டும் என்றதனால் உல்முகனும் நிஷதனும் வெளியே நின்றுவிட்டார்கள். நான் உள்ளே செல்லும் கணத்தில் அவர்களின் பதற்றம் நிறைந்த முகத்தை பார்த்துக்கொண்டிருந்தேன். அவர்களின் உணர்வுகளை என்னால் வகுக்க முடியவில்லை. உள்ளே தாழ்வான மஞ்சத்தில் பலராமர் படுத்திருந்தார். அவர் அருகே மருத்துவர் நின்றிருந்தார். நான் அருகே சென்று பலராமருக்கு முறைப்படி தலைவணங்கிய பின் மருத்துவரை பார்த்தேன். மருத்துவர் அவர் நலமாக இருக்கிறார் என்பதற்கு அடையாளமாக தலையை அசைத்தார்.

பலராமர் மருத்துவர் வெளியே செல்லலாம் என்று கைகாட்டினார். மருத்துவர் சென்றதும் என்னிடம் "நான் சில உறுதியான முடிவுகளை எடுத்திருக்கிறேன். அதை முறையாக அறிவிக்க விரும்புகிறேன். அதை குறித்து உங்களிடம் பேசுவதற்காகவே அழைத்தேன்" என்றார். நான் தலைவணங்கினேன். "ஸ்ரீகரரே, இங்கு நான் ஆற்றவேண்டிய பணிகள் அனைத்தும் முடிந்துவிட்டன. என் புவிவாழ்க்கையை நிறைவுறச் செய்யவேண்டும் என்ற இடத்தில் இருக்கிறேன். உரிய முறையில் நிறைவுறச் செய்யும் வாழ்வே விண்ணவர்க்கும் மூதாதையருக்கும் இனியது என்பது மூதாதையர் சொல்" என்றார். அவர் சொல்ல வருவதென்ன என்று புரிந்து என் நெஞ்சு படபடத்தது.

"பெருஞ்செயல்களினூடாக நிறைவுறும் வாழ்வென்பது தெய்வக்கொடை. காலத்தின் முன் படையலென தன் உடலை வைப்பதென்பது அதற்கு அடுத்த படி. எனக்கு களமரணமோ தவமரணமோ அமையவில்லை. தன்னிறப்பேனும் அமைந்தால் விண்புகுவேன்" என்றார். "அரசே!" என்று நான் சொன்னேன். "துயருற வேண்டியதில்லை. என் மைந்தர் தகுதியானவர். அவர்கள் என்னுருவே ஆனவர்கள். ஆகவே இங்கே மதுராபுரியில் எதுவும் மாறப்போவதில்லை. என்னைவிட இளமையான, என் வடிவமேயான ஒருவர் ஆள்வதென்பது மக்களுக்கு மிகவும் மகிழ்வளிக்கும்" என்றார் பலராமர். அவரிடமிருந்த அந்தத் தெளிவை அதற்கு முன் கண்டதில்லை.

"உண்மையில் மதுரா இன்றிருக்கும் சோர்வு நிலையிலிருந்து வெளிவருவதற்கு நான் மண்நீங்குவதே ஒரே வழி. மதுராவுக்குள் ருக்மி நுழைந்தபோது மக்கள் பெருந்திரளாகச் சென்று வரவேற்று ஆர்ப்பரித்தார்கள் என்று அறிந்தேன். ருக்மி

மணிமுடி சூடி அவைக்குள் நுழைந்தபோதும் மக்கள் கொண்டாடினார்கள். அவன் இறப்பிற்காக இன்று துயரம் கொண்டிருக்கிறார்கள். பிழைபுரிந்து அவனை கொன்றதற்காக என் மீது கசப்பும் வெறுப்பும் கொண்டிருக்கிறார்கள். அது ஏன் என்பதை அமர்ந்து எண்ணிப்பார்த்தேன். அவர்களில் பலர் நினைவறிந்த நாள் முதலே நான் இங்கு அரசனாக இருந்துகொண்டிருக்கிறேன். இங்கு வெற்றி எதுவும் நிகழவில்லை. தோல்வி என்றும் எதுவுமே நிகழவில்லை. எதுவுமே மாறவில்லை. தீங்கென்று எதுவும் நிகழவில்லை எனினும்கூட மாற்றமின்மை மக்களை சலிப்புற வைக்கிறது. தீங்கேயானாலும் ஒரு மாற்றம் நிகழலாம் என்று அவர்கள் விழைவு கொள்கிறார்கள்.”

“அத்துடன் என் இளையோன் நாடுநீங்க, அவன் மைந்தரும் நகரும் முற்றழிந்ததும் இவர்கள் ஒவ்வொருவரிடமும் அச்சத்தை உருவாக்கியிருக்கிறது. அத்தகைய ஒரு ஊழை மதுராவுக்கும் நான் கொண்டுவந்துவிடுவேனோ என்று இவர்கள் அஞ்சுகிறார்கள். அது இயல்பே. இளையோனுக்கு என ஒரு ஊழ் வகுக்கப்பட்டிருந்தால் அது எனக்கும் உரியதே. நாங்கள் இருவரும் ஒன்றின் இரு பக்கங்களாகவே இருந்திருக்கிறோம். இங்கு நான் இருந்தால் இளையோனைச் சூழ்ந்த தீயூழின் ஒரு பகுதியை இங்கு கொண்டு வந்துவிடுவேன் என்று எனக்கே ஐயமாக இருக்கிறது. அதற்கு மீள்வழி ஒன்றே. உகந்த முறையில் நான் விண்ணேகுவது” என்றார் பலராமர்.

“தங்கள் முடிவு அது என்றால் நான் அதை மறுத்துரைக்கப் போவதில்லை” என்று தணிந்த குரலில் சொன்னேன். “ஆனால் தங்கள் குடிகளை எண்ணிப்பாருங்கள். அவர்கள் இதுநாள் வரை நம்பியிருந்தது இளைய யாதவரின் போர்த்திறனையும்

சூழ்திறனையும். இப்போது அவர் அகன்றிருக்கிறார், அவர் நகரும் படையும் அழிந்தன. மைந்தர்கள் மறைந்தனர். இன்று எஞ்சியவர்களில் பெரும்பகுதியினர் உங்கள் படைத்திறனையும் சூழ்திறனையும் நம்பியிருக்கிறார்கள். ஒருவேளை இவ்வண்ணம் நீங்கள் எண்ணுவதுகூட தீயூழோ என்று அவர்கள் எண்ணலாம். இன்று அவர்கள் கொண்டிருக்கும் சலிப்பும் துயரும் பலமடங்கு பெருகவும் கூடும்" என்றேன்.

"நானும் அவ்வாறுதான் எண்ணினேன். ஆனால் தேரில் துறைமுகத்திலிருந்து இங்கு வருவது வரை இருபுறமும் பெருகிக்கொண்டிருந்த மக்களின் முகங்களை பார்த்துக்கொண்டிருந்தேன். அவ்வாறில்லை என்று எனக்கு உறுதியாகத் தெரிந்த்து. ஒவ்வொரு முகமாக எடுத்து எடுத்துப் பார்க்கையில் 'செல்க! அகல்க!' என்றே அவை சொல்கின்றன" என்றார் பலராமர். "அரசே, தெய்வம் என்று தங்களை வழிபட்டவர்கள் அவர்கள்" என்றேன். "ஆம், அத்தகைய வழிபாட்டை ஒருவன் பெறும்போதே உறுதியாகிவிடுகிறது, ஒருநாள் அவர்கள் அவனிடம் 'போதும், அகன்று செல்க!' என்பார்கள் என்று" என்று பலராமர் நகைத்தார். "நூல்களில் பயின்றது, மெய்யென்று எழுந்து முன்னால் நின்றிருக்கிறது இப்போது."

"ஸ்ரீகரரே, மனிதர்களால் தங்களைவிடப் பெரியவர்களை நெடுநாள் தாங்க முடிவதில்லை. இலைப்பரப்பு எடை தாங்குவதில்லை என்று ஒரு சொல் உண்டு. மானுடர் விண்ணோக்கி விரியவும் தளிர்கொள்ளவும் விழைகிறார்கள். ஆகவே எடைகளை உதிர்த்துவிடுகிறார்கள். இப்புவியில் உள்ள அனைத்து இலைகளும் எடைகளை கீழே விடும்பொருட்டே வடிவமைக்கப்பட்டிருக்கின்றன. மக்கள் உள்ளங்களும்

அவ்வாறே. அவர்கள் பெருஞ்செயல்களை, மாமனிதர்களை தவிர்ப்பார்கள். தங்கள் இயல்புகளால், தங்கள் சிறு ஊழால் தங்கள் அன்றாடத்தை சமைத்துக்கொண்டு அதில் திளைப்பார்கள்."

"நூல்களில் நான் பயின்றதுண்டு, மானுடத்திரளை பெருமானுடரே ஆளவும் வழிநடத்தவும் முடியும். பெருமானுடரை அவர்கள் அஞ்சவும் வெறுக்கவும் செய்வார்கள். அரசுசூழ்தலில் மாற்றமில்லா முரண்பாடு இது. அவர்களே தெரிவுசெய்தால் அவர்கள் மிகமிகச் சிறியவர்களை, அவர்களைப் போலவே இருப்பவர்களை தலைமை என ஏற்பார்கள். அவர்களால் அழிக்கப்படுவார்கள்" என்று பலராமர் சொன்னார். "ஆகவேதான் அரசன் தன்னையல்ல தன் புனைவையே மக்கள்முன் வைக்கவேண்டும். அதை மக்கள் தங்கள் விருப்பம்போல புனைந்துகொள்ள விட்டுவிடவேண்டும். அவன் அகன்றிருந்து அவர்களை ஆட்சிசெய்ய வேண்டும். உரிய தருணத்தில் அப்புனைவை எஞ்சவிட்டு தான் மறைந்துவிடவேண்டும்."

"இப்புவியில் பெரும்பாலான மானுடர்கள் அன்றாடத்தில் திளைக்கும்பொருட்டே உருவாக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களை பெருமானுடர் எவ்வகையிலோ மேலும் சிறுமைகொள்ளச் செய்கிறார்கள், துயருற வைக்கிறார்கள். அவர்களின் வாழ்த்துரைகளும் வழிபாடுகளும் அச்சத்தால் உருவாகின்றவை, அடைக்கலம் கோருபவை. ஆனால் தொடர்ந்து அகன்றுகொண்டும் இருக்கிறார்கள். அகன்றுசெல்லுந்தோறும் வெறுப்பும் எழுகிறது. பேருருக்கொண்டு இவர்கள் நடுவே நின்றிருப்பதைப்போல் துயர் வேறில்லை. சில தருணங்களில் பெரும் சலிப்பு அது.

முதுமையில் முதுமை அளிக்கும் சலிப்புடன் இச்சலிப்பும் இணைந்துகொள்கிறது. தனிமை இந்நகரில் இந்நகரைப்போன்றே விந்தையானது. ஆனால் அதுவே என் பீடம்.”

அவர் பெருமூச்சுடன் நெடுநேரம் எண்ணத்தில் ஆழ்ந்திருந்தார். பின்னர் “எங்கோ என் இளையோனும் தனித்திருக்கிறான். முற்றிலும் தனித்து. ஒரு சொல்லோ புன்னகையோ நெருங்க முடியாத தனிமையில். ஒருவேளை அவன் இவ்வுடலை உதிர்க்க விரும்பக்கூடும். அவன் உடலுதிர்க்காமல் வாழ்வது நான் உயிர் வாழ்கிறேன் என்ற எண்ணத்தின் பொருட்டே. எந்தையும் அவர் தந்தையும் நானும் இருக்கையில் அவன் உடல் உதிர்க்கும் முடிவை எடுக்க முடியாது, நெறிகள் அதை ஒப்புவ்தில்லை” என்றார்.

என் உள்ளத்தில் எழுந்த எண்ணத்தை உணர்ந்து “நான் தங்களை அழைத்தது அதற்காகவே. எந்தை வசுதேவரிடமும் அவர் தந்தை சூரசேனரிடமும் செல்க! நான் வடக்கிருந்து உயிர்விட எண்ணியிருப்பதை அவர்களிடம் உரையுங்கள்” என்றார் பலராமர். “அரசே, துயர்மிகுந்த பெரும் பொறுப்பை எனக்கு அளிக்கிறீர்கள்” என்றேன். “அவர்களிடம் என் சொற்களை கூறுக! நேற்றைய நிகழ்வுக்குப் பின் அவர்களும் உளம் சோர்ந்து தங்கள் அறைகளுக்கு மீண்டிருக்கிறார்கள். எவரையும் சந்திப்பதில்லை. தன்னந்தனிமையில் இருந்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஏற்கெனவே இருந்த சோர்விலிருந்து மீள சிறு மின்மினி வெளிச்சத்தை நம்பி வெளிவந்தார்கள். அது கைவிட்டதும் மீண்டும் தங்கள் இருளுக்கே திரும்பியிருக்கிறார்கள். சென்று கூறுக என் எண்ணத்தை!”

“எவ்வண்ணம் நான் கூற வேண்டும்?” என்று நான் கேட்டேன். “சூரசேனரிடமும் வசுதேவரிடமும் நான் வடக்கிருந்து உயிர் துறப்பதற்கான ஒப்புதலை கோரினேன் என்று கூறுங்கள். அவர்களின் வாழ்த்துகளை விரும்பினேன் என்று கூறுங்கள்” என்றார். “அரசே...” என்று நான் அழுதேன். “அதன் பொருளென்ன என்று தெரியுமல்லவா?” என்றார். “ஆம்” என்றேன். அவர் “எனக்கு ஒரு நாள் முன்னதாகவே அவர்கள் வடக்கிருந்து அல்லது எரிபுகுந்து அல்லது நீர்மூழ்கி மறையவேண்டும்” என்றார். நான் “அதை அவர்களிடம் கோருகிறேன்” என்றேன்.

“நன்று, நீங்கள் செல்லுங்கள். இது நம் இளையோனின் பொருட்டு என்று கூறுங்கள். நிகழ்ந்து, பேருருக்கொண்டு, அருஞ்செயலாற்றி, எழுயுகங்களுக்கு முன் மலைமுடிகளென பொன்னொளி கொண்டு நின்றிருக்கும் சொற்களைப் படைத்து நிறைவடைந்துவிட்டான் என் இளையோன். இன்று அவன் மேற்குக் கோட்டில் கதிர் மறைவதுபோல் சென்றுவிட விழைகிறான். நமக்காக காத்திருக்கிறான். அவனுக்கு அந்த ஒப்புதலை அளிக்குமிடத்தில் நாமிருக்கிறோம். அதை அவர்களிடம் கூறுக!” என்றார் பலராமர்.

நான் தலைவணங்கினேன். அவர் கைகூப்பிவிட்டு கண்களை மூடிக்கொண்டார். அவர் முகத்தைப் பார்த்தபடி நான் நின்றேன். அந்த முகத்தில் துயரில்லை, மகிழ்வும் இல்லை, முற்றிலும் விடுபட்ட நிலையே தெரிந்தது. உதிர்ந்த கனிகள் பொன்னொளிகொண்டு மரத்தடியில் கிடப்பதை அவ்வப்போது பார்த்திருக்கிறேன். அவற்றில் உயிர் இருக்கும், ஆனால் நிறைவடைந்தமையால் மேலும் வளரவேண்டியதில்லை என்றோ வெல்ல வேண்டியதில்லை என்றோ

முடிவெடுத்துவிட்டவை அவை. நான் நெடுநேரம் அவரையே பார்த்துக்கொண்டிருந்தேன்.

நான் வெளியே வந்தபோது அங்கு நின்றிருந்த உல்முகனும் நிஷதனும் பதற்றத்துடன் என் அருகே வந்தனர். நிஷதன் என் கையைப்பற்றி "என்ன கூறினார்?" என்றார். நான் நிகழ்ந்தவற்றை சுருக்கிக் கூறியதும் உளம் உடைந்து விசும்பல் ஒன்று அறியாது எழ தளர்ந்து நடந்து அங்கிருந்த சிறுமஞ்சத்தில் அமர்ந்துகொண்டார். அவருடைய வெண்ணிறப் பெருந்தோள்கள் குலுங்குவதை, விழிநீர் நெஞ்சில் விழுவதை பார்த்துக்கொண்டிருந்தேன். மிக நெடுங்காலத்துக்கு முன் முதிரா இளமையில் இருந்த பலராமரின் அதே உரு. மானுடர் அவ்வண்ணமே மீண்டும் மீண்டும் நிகழ்கிறார்கள். பலராமரும் அதைப்போல எளிதில் உளமுடைந்து அழுபவரே.

ஒருகணத்தில் எனக்குள் ஓர் உவகை எழுந்ததை மறுக்கவில்லை. பலராமர் மறைந்தால் இளமையான, அழகான, மக்கள் என்றென்றும் நினைவில் நிறுத்தி மகிழ்கிற, இன்னொரு பலராமர் அவர்களுக்கு கிடைக்கப்போகிறார். இந்நகரை தன் கள்ளமின்மையால் காத்து நின்றவர், தன் தீரா இளமையால் அதை ஒளியுடன் நிறுத்தியவர், பெருமல்லர், திறந்த உளம் கொண்ட நல்லாசிரியர். அனைத்துப் பண்புகளையும் அவ்வண்ணமே கொண்டவர் நிஷதன் என்பதை அறிந்திருந்தேன். பலராமரின் அறையிலிருந்து வெளிவரும் கணத்தில் என்னிடம் இருந்த உளச்சோர்வு முற்றகன்றது.

நான் அவர் அருகே சென்று அவர் தோளைத்தட்டி “ஊழுக்கு பொறுப்பேற்காதீர்கள், இளவரசே. அரசர் என்று அவை அமரவிருக்கிறீர்கள். அதற்குமுன் கற்று பயின்று நெஞ்சில் நிறுத்திக்கொண்டிருக்க வேண்டிய பாடம் இது” என்றேன். அவர் நிமிர்ந்து என்னை பார்த்தார். “அது நல்லூழே. அவர் நிறைவுறட்டும். அவர் பொன்றாப் புகழ் பெறுவார். நம் இல்லங்கள் அனைத்திலும் தெய்வமென நிலைகொள்வார். எழுயுகங்கள் தோறும் விண்ணளந்தோனின் வடிவங்களில் ஒருவர் என்று கருதப்படுவார். கலப்பையேந்தி பாரதவர்ஷத்தின் ஆலயங்கள் அனைத்திலும் நின்றிருப்பார்” என்றேன்.

“இளவரசே, அவரை விண்ணளந்தோன் பள்ளிகொண்ட பெரும்பாம்பின் மண் வடிவமென்று சூதர்கள் பாடுகிறார்கள். அச்சொல் இங்கு நிலைபெற வேண்டும். இங்கு அவர் நோயுற்று, மதுவருந்தி, மெலிந்து மறைவதைவிட உகந்தது இதுதான் அல்லவா? இனி அவருக்கு எஞ்சியிருக்கும் பேறு என்பது தெய்வநிலை அன்றி வேறென்ன?” என்றேன். அவர் தலையசைத்தார். “வருக! நாம் சென்று சூரசேனரை பார்ப்போம்” என்றேன். “நான் வரவேண்டுமா?” என்றார். “நீங்கள் இருவரும் வருவது நன்று” என்றேன். உல்முகன் “நானுமா?” என்றார். “இருவரும்” என்றேன். “இருவரும் வருவதே நன்று. இருவரையும் பார்க்கையிலேயே அவர் நன்முடிவை எடுக்க முடியும்.”

நாங்கள் மூவரும் ஒரே தேரில் சூரசேனரின் மாளிகையை அடைந்தோம். நடுப்பகலிலும் அம்மாளிகை இருண்டிருப்பதுபோல் இருந்தது. துயிலில் நடப்பவன்போல் வந்த ஏவலன் “மூதரசர் துயில்கொண்டிருக்கிறார்” என்றான். “நான் வந்திருக்கிறேன் என்றும் அவருடைய பெயர்மைந்தர்கள்

உடனிருக்கிறார்கள் என்றும் கூறுக! அரசச் செய்தி" என்றேன். சற்று நேரத்தில் அவன் திரும்பி வந்து "வருக!" என்றபின் "அவர் மது அருந்தியிருக்கிறார். உள்ளம் நன்னிலையில் இல்லை. இரு நாட்களாகவே உளம்கலங்கி விழிநீர் விடுவதும், மீண்டும் தேறி மதுவருந்தி மயங்குவதுமாக இருக்கிறார்" என்றான்.

நான் ஒன்றும் கூறவில்லை. "அவர் உடல்நிலை எவ்வாறுள்ளது?" என்று நிஷதன் கேட்டார். "அவருடைய நாடித்துடிப்பு மிகவும் குறைந்து நின்றுவிடுவதுபோல் ஆகி மீண்டு கொண்டிருக்கிறது. பசியில்லை. இயற்கையான துயிலும் இல்லை" என்றான் ஏவலன். சூரசேனரின் அறைக்கு வெளியே சிற்றமைச்சர் நின்றுகொண்டிருந்தார். "உள்ளே மருத்துவர் இருக்கிறார்" என்று அவர் சொன்னார். சற்று நேரம் நாங்கள் சொல்லின்றி காத்து நின்றிருந்தோம்.

மருத்துவர் வெளியே வந்து தலைவணங்கி "அவருடைய நாடி விரைந்து எழுந்து கொண்டிருக்கிறது. அவரை இத்தருணத்தில் நாம் பேணியாகவேண்டும். அவரிடம் உளக்குலைவு அளிக்கும் செய்திகளை கூறாதொழிக!" என்றார். நிஷதனையும் உல்முகனையும் பார்த்தபின் "குலமைந்தர் வந்தது நன்று. குருதியின் எச்சம்போல் முதியோரை மகிழ்விப்பது வேறில்லை. ஒரு மகிழ்வான தருணம் அவருக்கு அமையட்டும்" என்றார். நான் புன்னகைத்து "இது மகிழ்வான தருணம்தான்" என்றேன். அனைவரும் என்னை நோக்க நான் புன்னகைத்தேன்.

என் சொற்களை வகுத்துக்கொண்டேன். மருத்துவ ஏவலன் வந்து அழைக்க நாங்கள் அறைக்குள் சென்றோம். சூரசேனர் மஞ்சத்தில் தலையணைகளை முதுகுக்கு அண்டக்கொடுத்து எழுந்து அமர்ந்திருந்தார். உடல் இருநாட்களுக்கு முன் பார்த்த

ஆற்றல் அனைத்தும் இழந்து மட்கிய சுள்ளிபோல் தசை தொய்ந்து ஓய்ந்திருந்தது. கண்கள் அழுகிய பழங்கள்போல் ஒளியிழந்திருந்தன. நான் அவரிடம் "மூத்தவரே, வணங்குகிறேன். உங்கள் பெயர்மைந்தனின் செய்தியுடன் வந்திருக்கிறேன்" என்றேன். "கூறுக!" என்றார். அவர் கண்களில் எந்த உணர்ச்சியும் வெளிப்படவில்லை.

"இச்செய்தியை அவர் உங்களிடம் உரைப்பதற்காக என்னை அனுப்பினார். உங்களிடம் உரைத்த பின் இதை வசுதேவரிடம் உரைக்க வேண்டும் என்று ஆணை" என்றேன். அவர் தலையசைத்தார். "மூதாதையே, இக்குடியின் முதற்சுடர் இளைய யாதவரே என்று அறிவீர்கள். அவர் உலகை வென்று, சொல் நிறுத்தி, புவிநிறைவை அடைந்துவிட்டார். அவர் மண்நீங்காமல் இருப்பது ஒருவேளை அவரது மூத்தவரும் தந்தையும் முதுதாதையும் மண்ணில் இருப்பதனால் என்று அரசர் எண்ணுகிறார். ஏனென்றால் குருதிமூத்தோர் இருக்க உடல்துறப்பதை நெறிகள் ஒப்புவதில்லை. அவரை நாம் கட்டுப்படுத்தலாகாது என்றும், புகழ் கொண்டு நிறைவடைய அவருக்கு ஒப்புதல் அளிக்கவேண்டும் என்றும் பலராமர் எண்ணுகிறார். அதன் பொருட்டு உண்ணாநோன்பு இருந்து உயிர்விட முடிவெடுத்திருக்கிறார். அதற்கு தாங்களும் தங்கள் மைந்தர் வசுதேவரும் ஒப்புதலளிக்க வேண்டும் என்று கோருகிறார்."

சூரசேனர் தலை நடுங்க என்னை பார்த்துக்கொண்டிருந்தார். நிஷதன் மெல்ல என் தோளை தொட்டார். "என்னிடம் என் பெயர்மைந்தன் இவ்வண்ணம் ஒரு சொல்லுடன் வந்தது நிறைவளிக்கிறது. நான் எளிய யாதவன் அல்ல, அரசன் என்பதையே என்னிடம் நானே சொல்லிவந்திருக்கிறேன்.

ஆனால் அதை நானே முழுமையாக ஏற்றுக்கொண்டதில்லை என்பதே என் துயர். என் மைந்தன் பாரதவர்ஷத்தின் முதன்மைப் பேரரசன் என்று எழுந்தபோதும்கூட கன்றோட்டும் எளிய யாதவன்தானோ நான் என்று எனக்கு நானே உசாவிக்கொண்டிருந்திருக்கிறேன். இப்போது தெளிவடைந்தேன், நான் அரசனே. அரசனுக்குரிய முறையில் மண்நீங்குவேன்" என்றார் சூரசேனர்.

"என்னிடம் அச்சொற்களை நீங்கள் சொல்லும்போது என்னுள் அச்சம் எழவில்லை. ஒரு துளியும் இழப்புணர்வு எழவில்லை. ஆம் இதுவே உகந்தது, முறையானது என்று தோன்றுகிறது. நாளை புலரியில் யமுனையில் மூழ்கி உயிர்துறக்க எண்ணுகிறேன். நீர்புகுதலே யாதவர்களுக்கு உகந்தது. எரி என்றும் நம் எதிரி, நீராலானவர் நாம். யமுனைச்சேற்றில் பிறந்து யமுனையில் மறையும் எளிய புழு நான்" என்றார் சூரசேனர். "இச்செய்தியை என் மைந்தனிடமும் பெயர்மைந்தனிடமும் கூறுக! உரியவற்றை ஒருங்குசெய்க!" என்றார். அவர் முகம் புன்னகையில் விரிந்திருந்தது. தலைமட்டும் உணர்வெழுச்சியால் நடுங்கிக்கொண்டிருந்தது.

நிஷதனும் உல்முகனும் அவர் கால்தொட்டு வணங்கினார்கள். இருவர் தலைமேலும் கைவைத்து "பெயர் நிலைக்க வாழ்க! வெற்றி சூழ்க! குடிகளுக்கு இனியவராகுக! கொள்வதற்கு இணையாகவே கடந்து செல்வதற்கும் துணிவு கூடுக!" என்று அவர் வாழ்த்தினார். நான் வணங்கி "தங்கள் ஆணைப்படி அனைத்தையும் ஒருக்குகிறேன், அரசே. நெறிகளின்படி அரசர் இனிமேல் எவரிடமும் விடைபெற்றுக்கொள்ள வேண்டியதில்லை. நீங்களும் எவரிடமும் சொல்லிக்கொள்ளவேண்டியதில்லை" என்றேன். "ஆம்,

முடிவெடுத்த கணமே உயிர் விண்ணை நோக்கிவிட்டது. இனி இப்புவியில் உறவென்று எவருமில்லை" என்றார் சூரசேனர்.

நாங்கள் வெளியே வரும்போது உல்முகனும் நிஷதனும் துயரின் எடைகொண்ட ஆழ்ந்த அமைதியில் நடந்தனர். அவர்களின் காலடியில் அந்த எடை ஒலித்துக்கொண்டிருந்தது. நான் அவர்களிடம் கூறுவதற்கு எதுவுமில்லை என்று உணர்ந்தேன். காலடியோசைகள் வேறெவரோ எதையோ பேசிக்கொள்ளும் ஓசையென ஒலிக்க நாங்கள் நடந்தோம். மாளிகை முற்றத்திற்கு வந்து தேரிலேறி வசுதேவரின் மாளிகைக்கு சென்றோம். சூரசேனரின் மாளிகை போலவே அதுவும் இருண்டு துயிலிலென இருந்தது. காவலனிடம் நாங்கள் வசுதேவரை பார்க்கவேண்டும் என்று உரைத்தோம். ஏவலன் உள்ளே சென்று ஒப்புதல் பெற்று எங்களை அழைத்துச் சென்றான்.

வசுதேவர் தன் அறையில் தனியாக நாற்களம் விளையாடிக்கொண்டிருந்தார். முதற்பார்வையில் அவ்வாறு தோன்றியது எனினும் அவர் விளையாடிக்கொண்டிருக்கவில்லை என பின்னர் தெளிந்தது. நாற்களத்தில் காய்களை விரித்து வைத்து வெறுமனே நோக்கிக்கொண்டிருந்தார். ஒருவேளை உள்ளத்தால் ஆடுகிறாரா என்று பார்த்தேன். வெறுமனே நோக்கிக்கொண்டிருக்கிறார் என்று தெரிந்தது. எங்களைக் கண்டதும் வெறுமை நிறைந்த விழிகளுடன் நிமிர்ந்து பார்த்தார். நாங்கள் தலைவணங்கி முகமன் உரைத்தோம். அவர் என்னை ஒருகணம் பார்த்த பின் இரு பெயர்மைந்தரையும் விழி திறந்து மாறி மாறி பார்த்துக்கொண்டிருந்தார்.

நான் பலராமர் கூறியதையும் சூரசேனரிடம் ஒப்புதல் பெற்றதையும் உரைத்தேன். அவர் இரு பெயர்மைந்தரையும் பார்த்துக்கொண்டே என் சொற்களை கேட்டுக்கொண்டிருந்தார். அவர் என்ன எண்ணுகிறார் என்று தெரியவில்லை. சொற்கள் சென்று சேர்ந்தனவா என்று நான் ஐயம் கொண்டேன். ஆனால் அவர் புன்னகையுடன் திரும்பி "நன்னாள் இது, நற்சொல் தேடி வந்திருக்கிறது" என்றார்.

"இன்று காலை இந்த நாற்களத்தை விரித்தேன். முற்புலரியில் விளக்கு வைத்து இதை பார்க்கலானேன். இப்போது எட்டு நாழிகைப்பொழுதுக்கு மேல் ஆகிவிட்டது. இதுவரை ஒரு காயைக்கூட நகர்த்த முடியவில்லை. கையால் அல்ல, உள்ளத்தாலும். ஆனால் என்னால் இந்த நாற்களத்திலிருந்து எழுந்து விலகவும் முடியவில்லை. வெறுமனே இதை பார்த்துக்கொண்டிருக்கிறேன். அவ்வாறு உணர்ந்ததும் இதை என்ன செய்வது என்று தெரியாமல் தயங்கினேன். இப்போது ஒரு பெருவாயில் திறந்ததுபோல் உள்ளது. நான் செய்வதற்கு இது மட்டுமே உள்ளது."

நான் தலைவணங்கினேன். வசுதேவர் "நாளை புலரியில் தந்தையுடன் இணைந்து நானும் யமுனையில் நீர்புகுகிறேன். நானே தந்தையை அழைத்துச் செல்கிறேன். இதை முறையாக அரசருக்கும் நகர்க்குடிகளுக்கும் அறிவித்துவிடுங்கள்" என்றார். "ஆணை" என்று நான் சொன்னேன். "என் துணைவியருக்கும் மற்ற குடித்தலைவர்களுக்கும் ஓலைகள் செல்லட்டும். அவர்களிடமும் நான் சொல்வதற்கென ஏதுமில்லை. இது வெறும் அரசச்செய்தி மட்டுமே, அவ்வண்ணமே சொல்லமைக!" என்றார் வசுதேவர்.

நிஷதனும் உல்முகனும் அவர் கால்தொட்டு வணங்கி வாழ்த்து பெற்றனர். நாங்கள் மீண்டும் முற்றத்திற்கு வந்தபோது நான் இடையில் கைவைத்து நின்று வானை பார்த்தேன். வெட்டவெளியாக, ஒரு முகில்கணம்கூட இல்லாமல் வெறித்து திறந்துகிடந்த வானை நோக்கியபடி நெடுநேரம் நின்றிருந்தேன்.

# கல்பொருசிறுநுரை - 81

**பகுதி ஏழு : நீர்புகுதல் – 10**

யாதவரே, இச்செய்தியை உரைக்கும்பொருட்டே இங்கு வந்துள்ளேன். மதுராவில் உங்கள் மூத்தவர் உயிர்நீப்பதை பார்த்த பின்னரே இங்கு வந்தேன். அவர் மதுராவின் தென்மேற்கே வடக்கிருப்பதற்கான இடத்தை ஒருக்கும்படி ஆணையிட்டார். அமைச்சர்களும் நானும் சென்று அதற்குரிய இடத்தை அங்கே கண்டடைந்தோம். நிமித்திகர்கள் வகுத்துக்கொடுத்த இடத்தில் பதினெட்டு சிறுகற்களை பிறைவட்டமாக நிறுவி பதினெட்டு தலைமுறை மூதாதையரையும் அக்கற்களில் வருகை செய்து நிறுவினோம். தர்ப்பைப் புல் விரித்த சிறு மேடை அமைக்கப்பட்டது. அச்சோலையைச் சூழ்ந்து எவரும் அணுக முடியாதபடி மூங்கில் வேலி அமைக்கப்பட்டு படைவீரர்கள் காவலுக்கு நிறுத்தப்பட்டனர்.

பலராமர் வடக்கிருப்பதற்கு கிளம்புவதற்கு முந்தையநாள் மூவந்தியில் வசுதேவரும் சூரசேனரும் அவர்களின்

மாளிகையிலிருந்து கிளம்பினார்கள். அது ஒரு விழவாக நிகழக்கூடாதென்றும் அவ்வண்ணம் நிகழ்ந்த பின்னரே பிறருக்கு அறிவிக்கப்பட வேண்டும் என்றும் கூறியிருந்தமையால் நான் மட்டுமே உடனிருந்தேன். நான் முற்றத்தில் காத்திருந்தபோது சூரசேனர் எளிய வெண்ணிற ஆடையணிந்து தன் மாளிகையிலிருந்து ஏவலனின் தோள் பற்றி இறங்கி வந்து முற்றத்தில் நின்றார். நான் வணங்கினேன். நாங்கள் பேசிக்கொள்ளவில்லை.

நாங்கள் வசுதேவருக்காக காத்திருந்தோம். அவர் கிளம்பிவிட்டார் என்று செய்தி வந்தது. வசுதேவர் தனது தேரில் வெண்ணிற ஆடை அணிந்து, அணிகலன்கள் ஏதுமின்றி வந்திறங்கினார். தந்தையை அவர் வணங்கினார். சூரசேனர் சொல்லின்றி வாழ்த்தளித்தார். இருவரும் அங்கிருந்து சிறு ஊடுவழியினூடாக நடந்து யமுனையை சென்றடைந்தனர். வசுதேவர் நீர்புகுவதற்கான பொழுதை கணித்திருந்தார். அவர்கள் நடந்து யமுனையைச் சென்றடைந்தபோது அந்த நற்பொழுது அமைந்திருந்தது.

யமுனையின் கரையில் மணல் அள்ளி ஏழு குவைகளை உருவாக்கி ஏழு தலைமுறை மூதாதைகளை அங்கு நிறுவி மலரிட்டு வழிபட்டனர். பின்னர் தன் மேலாடையால் கைகளை நன்கு சுற்றி கட்டிக்கொண்டு எழுகதிரை நோக்கியபடி கைகூப்பியபடி சூரசேனர் நீரிலிறங்கி மறைந்தார். அதை நோக்கிநின்ற வசுதேவர் மும்முறை நீரை அள்ளி இறைத்து தந்தையை விண்ணேற்றும் நுண்சொற்களை உரைத்தபின் தன் மேலாடையால் கால்களையும் கைகளையும் சேர்த்து சுற்றி கட்டிக்கொண்டார். எழுகதிரை நோக்கியபடி நீரில் சென்று யமுனையின் அலைகளில் மூழ்கி மறைந்தார்.

கரையில் நானும் சிற்றமைச்சர் சந்திரசூடரும் மட்டும் நின்றிருந்தோம். அவர்கள் இரு குமிழிகள்போல நீரில் மறைவதை நான் பார்த்துக்கொண்டிருந்தேன். இருண்ட யமுனை நீர் அந்தியில் மேலும் இருண்டிருந்தது. அதில் அவ்வண்ணம் இரு குமிழிகள் வெடித்தமைந்ததற்கான எந்தத் தடயமும் இல்லை. அவ்வாறு பல்லாயிரம் குமிழிகள் வெடித்தழிந்த நீர்ப்பரப்பு அது. முற்றிலும் இருண்டு அந்தியாவது வரை நாங்கள் பார்த்துக்கொண்டிருந்தோம். பின்னர் மும்முறை நீரள்ளி விட்டு "ஆம், அவ்வாறே அகுக!" என வணங்கிவிட்டு திரும்பினோம்.

இருள் படிந்துகிடந்த மதுராவின் தெருக்களினூடாக நாங்கள் அரண்மனைக்கு மீண்டோம். அரண்மனை முகப்பில் அமைச்சர்கள் நின்றிருந்தனர். அவர்களிடம் நான் தலைவணக்கத்தால் நிறைவுற்றது என்பதை அறிவித்தேன். அனைவவரும் நோக்கை விலக்கி மூச்செறிந்தனர். அரண்மனையெங்கும் நூற்றுக்கணக்கான விழிகள் எங்களை நோக்கிக்கொண்டிருப்பதை உணர்ந்தேன். என்ன நிகழ்ந்தது என அனைவரும் அறிந்துகொண்டனர். நான் சந்திரசூடரிடம் "அரசமுறை அறிவிப்பை நாளை காலையில் வெளியிட்டால் போதும். இரவில் மங்கலச்செய்திகளை அறிவிக்கும் முறைமை இல்லை" என்றேன். அவர் தலைவணங்கினார்.

பலராமர் அவருடைய தனியறையில் நோன்பில் இருந்தார். அறைவாயிலில் நிஷதனும் உல்முகனும் நின்றனர். நான் வருவதைக் கண்டதுமே நிஷதன் அருகணைந்தார். நான் தலையசைத்து நீர்நிறைவு நிகழ்ந்துவிட்டதை அறிவித்தேன். அவர் அப்படியே நின்றுவிட்டார். அவர் உடலசைவைக் கண்ட உல்முகனும் துயரம் கொண்டு தலைகுனிந்தார். பலராமரிடம்

என் வருகையை அறிவிக்கும்படி கோரினேன். ஏவலன் உள்ளே சென்று அறிவித்து வந்ததும் உள்ளே சென்றேன்.

திறந்த சாளரத்தை நோக்கி மஞ்சத்தில் பலராமர் அமர்ந்திருந்தார். நான் அவர் அருகே சென்று வணங்கி நின்றேன். அவர் திரும்பிப் பார்க்கவில்லை. சாளரம் வழியாக தொலைவில் யமுனையின் நீர்வளைவு தெரிந்தது. வானின் ஒளியில் அது கரிய ஒளிகொண்டிருந்தது. நான் தாழ்ந்த குரலில் "இரு நிறைவுகள், அரசே" என்றேன். "இறையருள் கூடுக!" என்று அவர் கூறினார். நான் பிறிதொன்றும் பேசாமல் தலைவணங்கினேன். பின்னடி எடுத்துவைத்து வெளியே வந்தேன்.

சூரசேனரும் வசுதேவரும் மண்நீங்கிய செய்தியை புறாக்களினூடாக மதுவனத்திற்கும் பிற யாதவ நிலங்களுக்கும் அனுப்பினர். இரவு முழுக்க அச்செய்திகளை அனுப்புவதிலேயே கடந்தது. பின்னிரவில் நான் நீள்மஞ்சத்தில் சாய்ந்து விண்மீன்கள் செறிந்த வானை பார்த்துக்கொண்டிருந்தேன். மறுநாள் முதற்புலரியிலேயே நகரில் முரசுகள் ஒலித்து அச்செய்தியை அறிவித்தன. எதிர்பார்த்தது போலவே அது பெரிய அலை எதையுமே உருவாக்கவில்லை. மக்களின் கசப்பும் வெறுப்பும் குறையவில்லை.

நகரில் சூரசேனரையோ வசுதேவரையோ புகழ்ந்து தன்னியல்பாக எவரும் வாழ்த்துரைக்கவில்லை. அரசு சார்பில் காவல்மாடங்கள் அனைத்திலும் முரசுகள் முழங்கிக்கொண்டிருந்தன. முச்சந்திகளில் சூதர்கள் அரசாணையின்படி நீத்தார் பெருமை சொல்லும் பாடல்களை உரக்க பாடினார்கள். ஓரிருவர் வெறுமை நிறைந்த கண்களுடன் நின்று பார்த்தார்கள். நகரெங்கும் முன்னரே பரவியிருந்த துயர்

எந்த வகையிலும் கூடவோ குறையவோ இல்லை. நகரினூடாக நானும் சந்திரசூடரும் சென்று பலராமரின் வடக்கிருத்தல் இடத்தை பார்வையிட்டு மீண்டோம். நகரம் வெற்றொலி எழுப்பிக்கொண்டிருப்பதை நான் பார்த்தேன்.

என் தேரை ஓட்டிய பாகன் "மக்களுக்கு துயர் பழகிவிட்டது. இனி அவர்களால் இன்பத்தை அடையாளம் காணமுடியுமா என்றே ஐயமாக இருக்கிறது" என்றான். நான் ஒன்றும் சொல்லவில்லை. சந்திரசூடர் என்னிடம் "பட்டெனில் நெளியும் கம்பளி நெளியாது என்று என் தந்தை கூறுவதுண்டு" என்றார். நான் அவரை வெறுமனே திரும்பிப் பார்த்தேன். அவர்கள் அந்த உளநிலையை புரிந்துகொள்ள முயன்றார்கள். அது புரிதலுக்கு அப்பாற்பட்டது என்று ஒப்ப அவர்களால் இயலவில்லை. நம்மைச் சூழ்ந்துள்ள எதையுமே நாம் புரிந்துகொள்வதில்லை, நம்மால் புரிந்துகொள்ள முயலாமல் இருக்கவும் முடிவதில்லை. ஆகவே புரிந்த அளவைக்கொண்டு வகுத்துக்கொள்கிறோம். மானுடர் இப்புவியில் அடையும் எல்லா புரிதல்களும் அவர்களுக்கு மட்டுமே பொருந்துபவை.

வசுதேவருக்கும் சூரசேனருக்கும் விண்ணேற்றச் சடங்குகள் நிகழும் பொருட்டு மூன்று நாட்களுக்கு ஒரு வேளை உணவும் துயர்கூடலும் அரசு முறையாக அறிவிக்கப்பட்டது. ஆலயங்களில் விண்ணேற்றச் சுடர்கள் ஏற்றப்பட்டன. மதுவனத்திற்கு செய்தி சென்றதுமே அங்கே முறைப்படி அரசுத்துயர் ஆணையிடப்பட்டது. அரசியர் ரோகிணிதேவியும் தேவகியும் நீர்புகுவது அறிவிக்கப்பட்டது. சூரசேனரும் வசுதேவரும் நீர் புக எண்ணியிருப்பதை முன்னரே அவர்களுக்கு தெரிவித்திருந்தோம். அவர்கள் தங்கள்

மைந்தர்களிடமும் பெயர்மைந்தர்களிடமும் விடைகொண்டு உணவொழிந்து யமுனைக்கரையில் நோன்பில் இருந்தார்கள்.

யாதவ மூதன்னையருக்குரிய முறைமைப்படி முன்புலரியில் அவர்கள் நீர்புகுந்தபோது குடியினர் எவரும் உடன் செல்லவில்லை. மூதன்னையர் இருவர் மட்டுமே கைபற்றி அவர்களை அழைத்துச் சென்றனர். ஒற்றை மரவுரி ஆடை அணிந்த அவர்கள் மூதன்னையரை வழிபடும் சொற்களை மெல்ல உரைத்தபடி யமுனைக்குச் சென்று கைகூப்பியபடி யமுனையில் இறங்கி மூழ்கி அகன்றனர். அவர்கள் இருவரும் மறைந்ததும் மூதன்னையர் தங்கள் கைகளில் இருந்த சங்குகளை முழக்கினர். யாதவர்கள் அனைவரும் தங்கள் இல்லங்களிலிருந்து வெளியே வந்து கைமணிகளையும் சங்குகளையும் முழக்கி விண்புகுவோர்க்கு வாழ்த்துரைத்தனர்.

யமுனையின் கரைகளில் பறவைகளும் உடன் கலைந்தெழுந்து ஓசையிட்டன. அந்த ஓசை வழியாக யாதவ ஊர்கள் தோறும் செய்தி பரவ அனைவரும் மணிகளையும் சங்குகளையும் முழக்கினர். புலரி வெளிச்சம் எழுவ்து வரை இருபுறமும் ஓசை பெருகிப் பெருகி அலையடித்துக்கொண்டிருந்தது என்று ஒற்றன் சொன்னான். யமுனையே தேம்பி அழுவதுபோல் தோன்றியது என்றான். அவர்கள் விண்புகுந்த செய்தியை மதுராவில் முரசறைந்து அறிவித்தோம். நீத்தோருக்கான கொடிகள் கோட்டைவாயிலில் ஏற்றப்பட்டன.

முற்புலரியிலேயே பலராமர் எழுந்து நீராடி அனைத்து அணிகளையும் களைந்து வெண்ணிற ஆடை அணிந்து நின்றார். அவருடைய இரு மைந்தர்களும் வணங்கி நின்றனர். அவர் தன் அரசக்கணையாழியைக் கழற்றி நிஷதனின் கையில் அணிவித்தார். அவர் விழிகளிலிருந்து நீர் பெருக கைகளைக்

கூப்பியபடி நின்றார். பலராமர் இளையவரிடம் "மூத்தவனுடன் இரு" என்றார். அமைச்சர்களும் படைத்தலைவர்களும் சூழ்ந்து நின்றனர். அனைவரும் விழிநீர் வடித்துக்கொண்டிருந்தனர். அவர் கைகூப்பியபடி நடந்து வெளியே சென்று முற்றத்தில் நின்றார். திரும்பி தன் அரண்மனையை வணங்கிவிட்டு நடந்தார்.

நடந்தே தான் வடக்கிருக்கப் போகும் இடத்திற்கு சென்றார் பலராமர். உடன் ஓர் அமைச்சரும் நானும் மட்டுமே சென்றோம். அவர் தன் வடக்கிருத்தலிடத்தை அடைந்து மூதாதையருக்கு பூசெய்கை செய்தபின் தர்ப்பைப் புல் இருக்கைமேல் அமர்ந்து ஊழ்கத்தில் ஆழ்ந்ததும் நாங்கள் வணங்கி அவரிடமிருந்து விலகினோம். அவர் அங்கே ஏழு நாட்கள் உணவும் நீரும் ஒழித்து ஊழ்கத்திலிருந்தார். தொலைவிலிருந்தே அவரை பார்த்துக்கொண்டிருந்தோம். ஏழாவது நாள் அவர் உடல் அசைவிழந்தது என்று கண்ட மருத்துவர் அருகே சென்று கைதொட்டு நோக்கி தலையசைத்தார்.

நான் கையசைத்ததும் செய்தி பரவி அரண்மனையை அடைந்தது. அரண்மனையில் கொம்பொலி எழுந்தது. தொடர்ந்து பலராமர் விண்புகுந்ததை அறிவித்து முரசுகள் முழங்கின. பலராமரின் துணைவி ரேவதி தன் அணுக்கச்சேடியர் இருவருடன் அன்று அந்திப்பொழுதில் யமுனைக்குச் சென்று நீருள் புகுந்து உயிர் மாய்த்துக்கொண்டார். அவர்கள் இருவருக்கும் கோட்டைமுகப்பில் கொடிகள் ஏறின. ஆலய கோபுரங்களில் விண்ணூர் விளக்குகள் ஏற்றப்பட்டன.

பலராமர் வடக்கிருக்கத் தொடங்கியதும் மதுராவின் உளநிலை மாறியது. அவர்கள் குற்றஉணர்வு கொண்டவர்கள்போல் துயரை பெருக்கிக்கொண்டனர். ஒவ்வொருவரும் தெருக்களில் வந்து நின்று நெஞ்சில் அறைந்து அழுதனர். பலர் ஆங்காங்கே விழுந்து கிடந்தனர். நகரெங்கும் பரவியிருந்த கடுந்துயரை வெறும் விழிகளாலேயே பார்க்க முடிந்தது. பலராமர் உயிர்விடுவதற்கு முன்னரே பல முதியவர்களும் தங்கள் இல்லங்களில் வடக்கிருந்து உயிர்விட்டனர். நகரில் முதியவர்களின் தொடர்சாவு நிகழ்ந்துகொண்டிருந்தது. ஒவ்வொரு நாளும் நூற்றுக்கணக்கான உடல்கள் நகரிலிருந்து தெற்கே கொண்டுசெல்லப்பட்டு எரியூட்டப்பட்டன.

அவர் உயிரிழந்த செய்தி வந்ததுமே மேலும் பல நூறுபேர் நீர்புகுந்து உயிர் நீத்தனர். மறுநாளும் அதற்கு மறுநாளும்கூட அந்த நீர்புகுதல் தொடர்ந்துகொண்டிருந்தது. நீர்புகுபவர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு நாளும் கூடிக்கூடி வந்தது. நீர்புகுகிறார்கள் என்னும் செய்தியே பிறரை அதற்கு தூண்டியது. "நகரில் முதியவர்கள் எவருமே இல்லாமலாகிவிட்டார்கள்" என்று அமைச்சர் கூறினார். "இந்த நகர் தன்னைத்தானே அழித்துக்கொள்கிறது" என்று இன்னொரு அமைச்சர் கூறினார். "சில தருணங்களில் பறவைகளும் மீன்களும் இவ்வண்ணம் தங்களை முற்றழித்துக்கொள்வதுண்டு" என்றார் படைத்தலைவர்.

நீர்புகுபவர்களின் எண்ணிக்கை கூடிவரும் செய்தியை அறிந்து நான் பதற்றம் கொண்டேன். அகவை மூத்த வேதியரான சுலஃபரிடம் நானும் அமைச்சர்களும் சென்று அதைப்பற்றி உசாவினோம். அவர் மெல்லிய புன்னகையுடன் "பாம்பு தன் சட்டையை உரித்துக்கொள்வது போலத்தான் இது. அவர்கள்

உயிர்நீத்து முடித்ததுமே இந்நகர் துயரிலிருந்து எழுந்துவிடும். மீண்டும் புதிதென பிறந்துவிடும். அஞ்சவேண்டியதில்லை, நலமே நிகழும்" என்றார். "காட்டெரி நோயுற்ற மரங்களை அழிக்கிறது" என்று அவருடன் இருந்த இன்னொரு அந்தணரான கல்பர் சொன்னார்.

அதற்கேற்ப ஏழு நாட்களுக்குள் நீர்புகுவோரின் எண்ணிக்கை குறைந்து வந்தது. பின்னர் இல்லை என்றாயிற்று. மேலும் ஏழு நாட்கள் அவர்களுக்கான நீத்தார் கடன்களும் நீர்சடங்குகளும் நிகழ்ந்தன. அந்நாட்கள் முழுக்க மதுராவெங்கும் துயரே நிறைந்திருந்தது. பின்னர் நகர் அதிலிருந்து விடுபடுவதை நான் கண்டேன். பதினாறாம்நாள் நோன்பொழியும் சடங்குகளும் இணைந்த விருந்தும் தொடங்கின. நீத்தார் ஒவ்வொவருக்கும் பதினாறு நாட்கணக்கில் அவ்வாறு சடங்குகள் அளிக்கப்பட்டமையால் பெரும்பாலும் ஒவ்வொரு நாளும் மதுராவில் விருந்துகள் நடைபெற்றன.

முதலில் தயங்கியும் துயருற்றும் அவ்விருந்துகளுக்குச் சென்றவர்கள் மெல்ல மெல்ல அதை உண்டு மகிழத் தொடங்கினார்கள். அடுமனையாளர்கள் ஒவ்வொரு நாளும் வெவ்வேறு வகையாக சமைத்தனர். உணவு பற்றிய பேச்சுகள் நகரில் நிறைந்தன. இன்பங்களில் எளியதும் தலையாயதும் உணவே, மானுடர் எத்தருணத்திலும் கடக்க முடியாத பற்றும் அதுவே என்று கண்கூடாக கண்டேன். சில நாட்களுக்கு முன் அரசரையும் தங்கள் ஒவ்வொரு இல்லத்திலும் முதியவரையும் இழந்த மதுராவின் குடிகள் தெருமுனைகளில், அங்காடிகளில் எங்கும் உணவைப்பற்றியே பேசிக்கொண்டிருப்பதை கண்டேன்.

அவர்களில் பலர் பல மாதங்களாக உளச்சோர்வால் எதையும் உண்ணாமல் இருந்தவர்கள். பல வீடுகளில் முறையான

சமையலே இல்லாமல் இருந்தது. இனிப்பும் நல்லுணவும் தவிர்த்து வாழ்வதை தங்களுக்கு எதிரான ஊழ்மேல் தங்கள் கசப்பை வெளிப்படுத்துவதாக அவர்கள் எடுத்துக்கொண்டார்கள். தங்களையே வெறுத்துக்கொள்ளும் வழி அது. சென்றவர் செல்ல இருப்பவர் இருக்கும் குற்றவுணர்வுக்கான வடிகாலே உண்ணாநோன்பு. அந்த பலநாள் நோன்பின் மறுபக்கமென அவர்கள் உணவு நோக்கி திரும்பினார்கள். புதிய புதிய உணவுகள், விந்தையான இனிப்புகள், ஊன்வகைகள், கனிவகைகள்.

அரசே, பத்து நாட்களில் புதுமழை பெய்து தளிர்த்து பசுமை எழுவதுபோல மதுராபுரியின் மக்கள் அனைவரும் ஒளியுடல் கொண்டனர். முகங்கள் மெருகேறின. நகரெங்கும் சிரிப்பொலிகளும் உரத்த பேச்சொலிகளும் எழுந்தன. மேலும் ஓரிரு நாட்களில் மதுரா நீத்தார் அனைவரையும் முற்றாக மறந்தது. புதிய எதிர்பார்ப்புகளும் புதிய கொண்டாட்டங்களும் தொடங்கின. சந்தைகளில் பொருட்கள் வந்து நிறைந்தன. மக்கள் பல மாதங்களாக எதையும் வாங்காமலிருந்தமையால் அத்தனை பொருட்களும் வந்ததுமே விற்றொழிந்தன. ஆகவே மேலும் மேலும் வணிகர்கள் வந்து குவிந்தனர்.

உணவுக்கு அடுத்தபடியாக மக்களை மகிழ்விப்பவை பொருட்கள் என்று கண்டேன். பொருட்கள் அல்ல, பொருட்களை உரிமைகொள்ளுதல், வென்றெடுத்தல். அங்காடிகள் உயிர்கொண்டபோது சூதர்களும் பாணர்களும் விறலியரும் வந்தனர். கலை எழுந்தது. நகரெங்கும் ஆடல்களும் பாடல்களும் நாடகங்களும் நடந்தன. மானுடனின் மூன்றாவது பேரின்பம் அது. இங்குள்ள அத்தனை குறைகளையும் நிறைப்பது கலை, இடைவெளிகளை நீர் நிறைப்பதுபோல. கலை

உருவான பின் துயரென்பதே இல்லை. இருத்தலை இனிப்பாக்குவதில் கலைக்கு நிகர் பிறிதில்லை.

அந்தணர் கல்பர் அரசரிடம் "இதுவே நல்ல நிமித்தம், இந்திரவிழவுக்கு ஆணையிடுக!" என்றார். "இந்திரவிழவு யாதவர்களுக்கு தடை செய்யப்பட்ட ஒன்றாயிற்றே?" என்று நான் சொன்னேன். "எனில் அதை மழைக்காலத் தொடக்கம் என்று கொண்டாடுவோம். மழை இந்திரனுக்குரியது மட்டுமல்ல, யாதவருக்கும் உகந்ததே. விழவு எதுவாயினும் அன்று காமன் கொண்டாடப்பட வேண்டும், இந்திரன் கொண்டாடப்பட வேண்டும். காமமும் மதுவும் இந்நகரில் கட்டவிழ வேண்டும். புதிய தலைமுறை கருக்கொள்ள வேண்டும்" என்றார் கல்பர்.

அவ்வண்ணம் ஆணையிடப்பட்டது. நகரெங்கும் முரசுகள் முழங்கி மழைக்கொண்டாட்டத்தை அறிவித்தபோது நான் என் மாளிகையின் முகப்பில் நின்று அதை கேட்டுக்கொண்டிருந்தேன். முரசொலிகள் ஓய்ந்ததும் மும்மடங்கு பேரோசையுடன் மக்களின் குரல் எழுந்தது. அவர்கள் தெருக்களில் வந்து நடனமிட்டனர். பட்டு மேலாடைகளையும் தலைப்பாகைகளையும் தூக்கி வானில் வீசி கொண்டாடினர். சந்தனப் புழுதியையும் குங்குமத்தையும் மஞ்சள்பொடியையும் ஒருவர் மீது ஒருவர் அள்ளி வீசி நடனமிட்டனர்.

நகரெங்கும் மலர்வனத்தில் காற்று புகுந்ததுபோல வண்ணங்கள் கொந்தளிப்பதை கண்டேன். "நன்று, வாழ்க! துயரென்றும் உவகை என்றும் கண்கட்டி மாயம் காட்டும் ஊழே உனக்கு அனைத்து வாழ்த்துகளும் நிறைக! பொலிக!" என்று கூறிக்கொண்டேன். என் சால்வையை எடுத்து

அணிந்துகொண்டு மதுராவிலிருந்து கிளம்பினேன். உங்களை நாடி வந்தேன். நீங்கள் அறிந்திருக்கலாம், அன்றி அறியாமலிருக்கலாம். ஆனால் முறைப்படி கூறுவது என் கடன். அரசே, நான் சூதர்பாடல்களினூடாக இங்கே வந்தேன்.

ஸ்ரீகரர் சொல்லிமுடித்த பின் அமர்ந்திருந்தார். இளைய யாதவர் அங்கில்லாதவராக தெரிந்தார். சொல்லுக்கென எதிர்பார்க்காமல் ஸ்ரீகரர் எழுந்து தலைவணங்கி ஒருசொல் உரைக்காமல் திரும்பி நடந்தார். விண்மீன்களைப் பார்த்தபடி நடந்து மந்தரம் என்னும் அச்சிற்றூரை விட்டு விலகினார். மூன்று நாட்கள் நடந்து தண்டகாரண்யத்தை அடைந்து ஒரு மலை முடியில் நின்று சூழ நோக்கியபோது தொலைவில் தனக்கான சிறு குகை ஒன்றை கண்டடைந்தார். அதை அடைந்து உள்ளே ஒடுக்கிக்கொண்டு படுத்து உணவும் நீரும் நீத்து ஏழு நாட்களில் உயிர்துறந்தார்.

# கல்பொருசிறுநுரை - 82

## பகுதி எட்டு : சொல்லும் இசையும் – 1

மணிப்பூரக நாட்டிலிருந்து நள்ளிரவில் எவரிடமும் கூறாமல் கிளம்பி, மூங்கில் செறிந்த சாலையினூடாக காட்டுக்குள் புகுந்து, கிழக்கு ஒன்றையே இலக்கெனக் கொண்டு பன்னிரண்டு இரவுகள் பகல்கள் பயணம் செய்து, நாகநாட்டின் எல்லையை அர்ஜுனன் சென்றடைந்தான். காண்டீபம் ஒன்றே துணையென அவனுடன் இருந்தது.

தனிமை அவன் உடலை எடையென அழுத்தி, உள்ளத்தில் வெறுமை என நிறைந்திருந்தது. ஒவ்வொரு எண்ணத்தையும் பொருளின்மைக்கு கொண்டுசென்று நிறுத்தியது. ஒவ்வொரு நினைவையும் உணர்வின்றி வெறும் செய்தியாக மாற்றியது. ஒவ்வொரு முகத்தையும் படித்தறிய முடியாத மொழியின் சொற்களென ஆக்கியது.

ஆனால் அத்தனிமையை வெல்லும்பொருட்டு எங்கேனும் சென்று மனிதர்களுடன் தங்கினால் முதல் ஓரிருநாள் களியாட்டிற்கும் அன்பாடலுக்கும் பிறகு அவன் மீண்டும் தனிமையை உணரத்தொடங்கினான். அவன் பேசும் ஒவ்வொரு சொல்லும் பொருளற்று வெற்றொலியாக மாறின. அவனுடைய கையசைவுகள் ஒவ்வொன்றும் அவனை உந்தி விலக்குவதுபோல் இருந்தன.

மீண்டும் மீண்டும் அங்கே தன்னை நிறுத்திக்கொள்ள, அவ்விடத்தை பற்றிக்கொள்ள அவன் முயலும்தோறும் அவ்வசைவுகள் அனைத்தும் அங்கிருந்து விலகத் துடிப்பவையாக மாறின. ஒவ்வொரு கையசைவும் செல்க என்று விலக்குவதுபோல, அகல்க என்று உந்தித் தள்ளுவதுபோல, இல்லை என்று மறுப்பதுபோல, நீயல்ல என்று சுட்டுவதுபோல தோன்றும் மாயத்தை அவன் பலமுறை வியந்தான்.

பிரக்ஜ்யோதிஷத்திலும் காமரூபத்திலும் நூறுநூறு சிற்றூர்களிலிருந்து அவன் கிளம்பிச் சென்றான். ஒவ்வொரு ஊரிலும் நுழைவதற்குமுன் அவன் அக்குடிகளை எதிர்த்து போரிட்டான். அவர்களை வென்று அவர்களுக்கு அரசன் என்றும் தலைவன் என்றும் ஆனான். அவர்கள் கொண்ட பேரிடர்களை தீர்த்து அவர்களால் வழிபடப்படும் தெய்வம்

என்று மாறினான். அவர்களின் முற்றங்களில் நிலைக்கல்லென தலைமுறைகள் தோறும் நின்றிருக்கும் குடித்தெய்வமென்று வழிபடப்பட்டான். அதற்குள் அவன் அங்கே உளம் விலகிவிட்டிருந்தான். கனி உதிர்வதுபோல அவ்வூரிலிருந்து அகன்றான்.

தன்னுள் இருக்கும் இத்தனிமை நஞ்சென தன்னைச் சூழ்ந்து ஒரு வளையத்தை உருவாக்குகிறது, அதைக் கடந்து எவரும் தன்னை அணுக முடியவில்லை என்று அவன் உணர்ந்தான். அதை கலைப்பதற்கு என்ன வழி என தொடக்கத்தில் பலமுறை பல கோணங்களில் எண்ணிப் பார்த்தான். எங்கும் அவன் தன்னை அர்ஜுனன் என்று சொல்லிக்கொள்ளவில்லை. அர்ஜுனன் புகழ்பாடும் சூதர்களின் அரங்கில்கூட அவன் இமையசையாமல் நோக்கி வெறுமனே அமர்ந்திருந்தான்.

தன்னை பலவாறாக உருமாற்றிக்கொண்டான். தான் பயின்ற நிகரற்ற உருமாற்றக் கலையினூடாக ஆட்டனாக, நாடோடியாக, மலைமகனாக, ஆணிலியாக, பெண்ணாக, முனிவனாக மாறினான். காண்பவர் கருத்தையும் முற்றிலும் நிறைத்து தன்னை நிறுவிக்கொள்ளும் பிறிதுருவை அவன் அடைந்தபோதிலும் கூட, அதற்கேற்ப தன் எண்ணங்களை, செயலை மாற்றிக்கொள்ளும்போதும் கூட, அவன் அகத்தே மாறாமல் எஞ்சியிருந்தான்.

காமரூபத்தைக் கடந்து மணிப்பூரகத்தின் எல்லையை அவன் அடைந்தபோது முதல்முறையாக அவனுள் வைரமென இறுகி உடைக்கமுடியாததாக மாறிவிட்டிருந்த தனிமை விரிசலிட்டது. அவ்வெல்லையில் அமைந்த ஆற்றை தன் வெல்லப்படாத வில்லுடன், சூழலை அறியாத உள்ளத்தின் அகநோக்குடன்

அவன் கடந்தபோது மூங்கில்குவைக்கு அப்புறமிருந்து "நில்! யார் நீ?" என்று ஒரு குரல் கேட்டது.

அவன் நிமிர்ந்து பார்த்தபோது தன் முன் தன்னுடைய இளைய உருவம் நின்றிருப்பதைக் கண்டு திகைத்தான். முதலில் அது ஒரு மாயத் தோற்றம் என்று எண்ணினான். கந்தர்வர்களோ தேவர்களோ ஆடும் விளையாட்டு. கூர்ந்து நோக்கியபடி "நான் பாண்டவனாகிய அர்ஜுனன். நெடுநிலம் கடந்து கிழக்கே சென்றுகொண்டிருக்கிறேன்" என்று அவன் சொன்னான்.

"நீர் எவராயினும் இவ்வெல்லை கடந்து எங்கள் நிலத்திற்குள் நுழைவதற்கு ஒப்புதல் இல்லை" என்றான் எதிரில் நின்றவன். "இது எங்கள் பாதுகாக்கப்பட்ட நிலம். இங்கு ஷத்ரியரோ அசுரரோ நுழைவது ஏற்கப்படுவதில்லை." அர்ஜுனன் "நான் எவரிடமும் ஒப்புதல் கோருவதில்லை" என்று சொன்னான். "ஒப்புதல் கோரி இந்நிலத்திற்குள் நுழைவது உங்களுக்கு நன்று" என்றான் அவன்.

அர்ஜுனன் எரிச்சலடைந்தான். "என் பெயரை நீ முன்னர் அறிந்திருக்க வாய்ப்பில்லை" என்று சொன்னபோது அந்த எரிச்சலையே அவன் விலகிநின்று நோக்கினான். அவன் துறந்தலைவதாக எண்ணிக்கொண்டிருந்தான், உண்மையில் எதையும் துறக்கவில்லை, பெயரிலிருந்து தொடங்குகின்றன அனைத்தும். குலம், குடி, முடி, புகழ் எல்லாம். அனைத்தையும் இழுத்துக்கொண்டு சென்றுகொண்டிருக்கிறேன். நான் பறவை என நினைத்தேன், வீட்டைச் சுமந்தலையும் ஆமைதான் போலும்.

"நன்கறிவேன்" என்று அவன் ஏளனத்துடன் சொன்னான். "இளைய பாண்டவராகிய அர்ஜுனனின் கதையை இங்கே

ஏதேனும் சூதர் சொல்லாத நாளில்லை.” அவன் ஏளனத்தால் மேலும் சீற்றம் அடைந்து “உன் பெயரென்ன?” என்று அர்ஜுனன் கேட்டான். அவன் மாயத்தோற்றமல்ல மெய்யுருவே என்று தெளிந்திருந்தான். தன் உருவமே தன் முன் எப்படி அவ்வாறு எழமுடியுமென்று அப்போதும் அவனுக்கு புரிந்திருக்கவில்லை.

“என் பெயர் பப்ருவாகனன். மணிப்பூரகத்தின் அரசரின் மகள் என் அன்னை சித்ராங்கதை” என்று அவன் சொன்னான். அர்ஜுனன் திகைத்து அவனை நோக்கி சொல்லிழந்து நின்றான். பின்னர் “நீ என் மகன்” என்றான். “நீங்களே அவ்வாறு கூறிய பின்னரே அதை நான் சொல்லவேண்டும். என் அன்னையால் அவ்வாறுதான் எனக்கு கூறப்பட்டிருக்கிறது” என்றான் பப்ருவாகனன்.

அர்ஜுனன் உரக்க நகைத்து “ஆம். இதை எவ்வாறு எண்ணாமல் போனேன்? உன்னிடம் சொல் தெளிவதற்கு முன்னரே நான் இங்கிருந்து கிளம்பிச் சென்றுவிட்டேன்” என்றான். “ஆம், அஸ்தினபுரிக்கு எங்களை அழைத்துச் செல்வதாகவும் அரசமர்த்துவதாகவும் சொல் அளித்துவிட்டுச் சென்றீர்கள். என் அன்னை அதற்காக காத்திருந்தார்.”

“ஆம், ஆனால் நானே அங்கே முடிசூடவில்லை. என் குருதியில் நீயேனும் எஞ்சவேண்டும் என்று விழைந்தேன்...” என்றான் அர்ஜுனன். “நான் இங்கே உங்கள் மைந்தன் என இல்லை” என்று பப்ருவாகனன் சொன்னான். “இந்த நீண்ட இடைவெளிக்குப் பின் இங்கு நீங்கள் வருவதற்கு எந்தத் தேவையும் இல்லை. இந்த எல்லைக்குள் ஷத்ரியர்கள் எவரையும் நாங்கள் ஒப்புவதில்லை” என்றான்.

அர்ஜுனன் “ஷத்ரியன் என்றல்ல, அனைத்தையும் துறந்து அலையும் எளிய நாடோடியாகவே நான் வந்திருக்கிறேன்” என்றான். “ஷத்ரியர்களின் மாயங்கள் எல்லையற்றவை. படைகொண்டு வந்து அவர்கள் நிலம் வெல்கிறார்கள். பெண்களை வென்று தங்கள் மைந்தர்களை உருவாக்கி நிலத்தை கவர்ந்துகொள்கிறார்கள். நட்பு கொள்கிறார்கள், பகைமைகளை மூட்டிவிடுகிறார்கள், தெய்வங்களை அளித்து நம்மை கவர்கிறார்கள், நம் தெய்வங்களை எடுத்து தங்கள் தெய்வங்களாக்கி நம்மை அடிமைப்படுத்துகிறார்கள்.”

“ஷத்ரியர்களால் தொடப்பட்ட எக்குடியும் தங்கள் தனித்தன்மையுடன் நீடித்ததில்லை. ஷத்ரியர்களைத் தொட்ட எக்குடியும் நீடித்ததில்லை. எந்நிலத்தில் ஏதேனும் ஒரு வடிவில் ஷத்ரியன் கால் பட்டதோ அந்நிலம் தன் தனித்தன்மையையும் தன்னுரிமையையும் இழக்காமல் இருந்ததில்லை. ஆகவே எங்கள் நிலத்தில் நுழைந்த ஒவ்வொரு ஷத்ரியனையும் கொல்வது என்று முடிவெடுத்திருக்கிறோம்” என்றான் பப்ருவாகனன்.

அர்ஜுனன் புன்னகைத்து “நன்று! அது உங்கள் அரசநிலைப்பாடு. ஆனால் பிற அரசநிலைப்பாடுகளை ஏற்கும் நிலையில் நான் இல்லை. எப்போதும் எவருக்கும் ஆணையிடும் நிலையிலும் இல்லை, எவர் ஆணையை பெற்றுக்கொண்டதும் இல்லை” என்றான். பப்ருவாகனன் “உங்கள் காண்டீபத்தை நம்பி அதை சொல்கிறீர்கள். நன்று, அக்காண்டீபம் பாரதப் பெரும்போரை பதினெட்டு நாட்கள் நடத்தியது” என்றான். தன் மூங்கில்வில்லைத் தூக்கி “இவ்வில்லுடன் நான் வந்திருந்தால் ஒருநாளில் போர் முடிந்திருக்கும்” என்று சிரித்தான்.

அர்ஜுனன் “எனில் அதை எடு. உன் திறனை எனக்குக் காட்டு” என்றான். சொல்லி முடிப்பதற்குள் பப்ருவாகனன் எய்த அம்பு அவனை மயிரிழையில் கடந்து சென்றது. உடலில் அமைந்திருந்த அம்பறியும் திறனால் அவன் திரும்பிக்கொண்டமையால் அவன் மேலாடையை மட்டுமே அது கிழித்தது. அர்ஜுனன் தன் காண்டீபத்தை கணத்தில் நாணேற்றி அம்பால் அவனை அறைந்தான். அவனும் அதைப்போலவே கண் அறியா விரைவில் ஒழிந்தான்.

மூங்கில் புதர்களுக்குள் அவனுடைய தோழர்கள் விற்களுடன் தோன்றினர். அவர்கள் வில்தாழ்த்தி பப்ருவாகனனும் அர்ஜுனனும் நிகழ்த்தும் அந்தப் போரை பார்த்து நின்றனர். அம்புகளால் அவர்களிருவரும் அந்தத் தூய உரையாடலை நிகழ்த்தினர். எழுந்தும் வளைந்தும் நெளிந்தும் குழைந்தும் நடமிடும் இரு நாவுகள். நடுவே பறக்கும் புள் என சொற்கள். கூர்கொண்டவை, மின்னுபவை, விம்மி அணைபவை.

அர்ஜுனன் வேறெந்த வகையிலும் இன்னொரு மானுடனுடன் தான் உரையாடியதே இல்லை என்று அப்போது உணர்ந்தான். தனக்கு நிகராக எதிர்நின்று போரிடும் ஒருவரையே தன்னால் புரிந்துகொள்ள முடிகிறது. அவர்கள் அகத்தை கடக்க முடிகிறது. ஏனெனில் அப்போது வேறு வழியின்றி அவராக மாறி நின்று தன்னுடனும் போரிட வேண்டியிருக்கிறது. எய்வதும் ஒழிவதும் ஒருவரே. கொல்வதும் சாவதும் ஒருவரே.

சொற்களால் எப்போதும் தன்னை மறைத்துக்கொண்டே இருந்திருக்கிறோம் என அவன் எண்ணினான். சொற்கள் பொருள்கள் கொள்ளும் மாற்றுருக்கள் அன்றி வேறல்ல. அம்புகளோ எவ்வுருவிலும் அம்புகளாகவே நிலைகொள்பவை. அம்புக்கு இலக்கென ஒன்றே இருக்கமுடியும். அதன் விசையும்

வடிவும் ஒளியும் விம்மலும் அந்த இலக்கின்பொருட்டு மட்டுமே. இலக்கை தவறிய மறுகணமே அது பொருளற்றுவிடுகிறது.

அம்புகள் இருவருக்கிடையே காற்றை நிறைத்திருந்தன. அம்புகளாலான ஒரு படலத்தால் அவர்கள் இருவரும் இணைந்திருந்தனர். கூரியவை, பிறைவடிவு கொண்டவை, இலைகள் என நாக்குகள் என ஆனவை. அனலென நீரென மாறியவை, காக அலகென்றும் வாத்து அலகென்றும் கொக்கு அலகென்றும் உருக்கொள்பவை. எரிதழலென்றும் மலர்ச்செண்டென்றும் உருக்கொள்பவை. சுழல்பவை, முழங்குபவை, துள்ளுபவை, வளைந்து இறங்குபவை, சூழ்ந்துகொள்பவை, உறுமுபவை. ஆயினும் அவை மாற்றுப் பொருளற்றவை. ஒன்றெனில் ஒன்றே ஆனவை.

அப்போர் ஏழு நாழிகைப் பொழுது நிகழ்ந்தது. அர்ஜுனன் பப்ருவாகனன் என்றாகி அர்ஜுனனுடன் போரிட்டான். இளந்தோள் பெற்றான். நம்பிக்கை நிறைந்த உளமானான். ஒளி நிறைந்த விழிகளை அடைந்தான். புன்னகை மாறாத முகம் கொண்டான். நினைப்பதற்கெல்லாம் இனிய நினைவுகளே உடையவனானான். அழுத்தும் தனிமையிலிருந்து விடைபெற்றான். சூழ்ந்திருக்கும் ஒவ்வொருவரிடமும் சென்று படிந்து அவர்களையும் தானாக்கி தன்னை சூழவைக்கும் இனிய இளமையை அடைந்தான்.

பப்ருவாகனன் அவன் தந்தையென முதிர்ந்தபடி சென்றான். அம்புகளால் அவன் அர்ஜுனனை ஏழுமுறை தோளிலும் நெஞ்சிலும் அறைந்தான். அவன் அம்பை பார்க்கமுடியாமல் செய்யும் அந்தர்த்தான முறையில் அர்ஜுனனை சுற்றிச்சுற்றி பார்க்கச் செய்தான். அம்புகளை முழக்கமிடச் செய்யும்

ஆக்ரோஷம் என்னும் முறையில் அர்ஜுனன் தன் அம்புகளை வீணடிக்கச் செய்தான். எழுந்து பின்னால் சென்று திரும்பவரும் பரோக்ஷகம் என்னும் முறையில் அர்ஜுனனை அவன் வீழ்த்தினான்.

அர்ஜுனன் சிரித்தபடி எழுந்து நின்று தன் மைந்தனை பார்த்தான். மைந்தனிலிருந்து பெற்ற இளமையுடன் அர்ஜுனனாக இருந்து அடைந்த முதுமையை இணைத்து விசைகூட்டிக் கொண்டான். ஏழு அம்புகளால் பப்ருவாகனனை அவன் வீழ்த்தினான். எட்டாவது அம்பை அவன் நெஞ்சுக்குக் குறி வைத்து "உன்னை நான் கொல்ல விரும்பவில்லை. உன் அன்னையை பார்க்க விரும்புகிறேன்" என்றான்.

பப்ருவாகனனைச் சூழ்ந்திருந்த அவன் குடியினர் விற்களைத் தூக்கி "மணிபூரகம் தலை தாழ்த்துகிறது" என்று அறிவித்தனர். அர்ஜுனன் காண்டீபத்தை கீழே இட்டு ஓடிச்சென்று மைந்தனை அள்ளி தன் தோளுடன் சேர்த்து இறுக்கி அவன் தலையில் முத்தமிட்டு தோளில் அறைந்து கூவிச் சிரித்து கொண்டாடினான். பின்னர் மறைந்த மைந்தரின் மணத்தை அவன் உடலில் உணர்ந்து விம்மி அழத்தொடங்கினான்.

"என்ன? என்ன, தந்தையே?" என்று பப்ருவாகனன் கேட்டான். "உன் தமையர்... உன் உடன்பிறந்தார்" என்றான் அர்ஜுனன். அரவானையும் அபிமன்யூவையும் சுருதகீர்த்தியையும் ஒரே தருணத்தில் எண்ணிக்கொண்டமையால் அவன் நெஞ்சு வெடித்துவிடுவதுபோல இறுகியது. மூச்சுவிட முடியாமல் அவன் திணறினான். இருமலும் திணறலுமாக நிலத்தில் விழுந்தான். பப்ருவாகனன் அவனை தாங்கிக்கொண்டான்.

அவனை மைந்தன் ஆறுதல்படுத்தினான். ஓடைநீர் அருந்தி மீண்ட அர்ஜுனன் விழிநீர் வழிய மீண்டும் மைந்தனை அள்ளி அணைத்துக்கொண்டான். "அஸ்தினபுரியிலிருந்து தொலைவில் நீ வாழ்ந்தமையால் இன்று எனக்கு இப்பேறு வாய்த்தது. மீண்டும் மைந்தனின் மணத்தை முகர்ந்து நிறைவுற்றேன்" என்றான். "போர் நிறைவுற்ற பின் நீங்கள் வந்திருக்கலாமே?" என்றான் பப்ருவாகனன். "நான் வந்திருக்கக்கூடாது. மைந்தன் என்று எண்ணி நான் உளம் மகிழலாகாது" என்று அர்ஜுனன் சொன்னான்.

பப்ருவாகனனுடன் இணைந்து அவன் மணிப்பூரகத்திற்குள் நுழைந்தான். அந்நாடு அவன் முன்பு விட்டுச்சென்ற அதே வடிவில் இருந்தது. மூங்கில்கால்களின் மேல் இல்லங்கள் நின்றன. கன்றுகள் நிறைந்த கொட்டில்களில் புல்லெரித்த புகை எழுந்தது. ஒளிமாறா முகம் கொண்ட மனிதர்கள் அவனை சிறிய விழிகளைச் சுருக்கி பார்த்தனர். எங்கும் ஒளிகொண்ட பசுமை.

அவன் தன் முதுமையை, நினைவுச்சுமையை, தனிமையின் எடையை இழந்து மீண்டும் அங்கு வந்த இளமைக்கால அர்ஜுனன் ஆனான். சிரித்தபடி புரவியில் பாய்ந்து சென்றான். அரண்மனை முற்றத்தில் அவன் வருகையைக் காத்து நின்றிருந்த சித்ராங்கதை அவன் விட்டுச்சென்ற அதே இளமையில் இருப்பதாகத் தோன்றியது. அவள் கைநீட்டி ஓடிவந்து அவனை தழுவிக்கொண்டபோது தன் தோள்களிலும் இளமை நிறைந்திருப்பதை அர்ஜுனன் உணர்ந்தான்.

மலைக்குடிகளுக்குரிய முறைமையின்மையின் விடுதலையில் அங்கு அனைவரும் திளைத்தனர். சித்ராங்கதை அனைவர் முன்னாலும் அவனை ஆரத்தழுவி அவன் தோள்களிலும் கைகளிலும் முத்தமிட்டுக்கொண்டே இருந்தாள். அங்கிருந்த ஏவலரும் காவலரும் வந்து அவனை தொட்டுப் பார்த்தனர். முதுபெண்டிர் அவன் கைகளையும் தோள்களையும் முத்தமிட்டனர். அவனை தங்களை நோக்கி இழுத்தனர்.

அவனைத் தழுவி உள்ளே அழைத்துச் சென்று பீடத்தில் அமரச்செய்து அவன் காலடியில் அமர்ந்து சித்ராங்கதை சிரித்துக்கொண்டிருந்தாள். ஷத்ரியர்குலப் பெண்கள் நெடும்பிரிவுக்குப் பின்னால் சந்திக்கையில் கண்ணீர் சிந்துவார்கள் என்று அர்ஜுனன் எண்ணிக்கொண்டான். எந்நிலையிலும் சித்ராங்கதை விழிநீர் சிந்துவதில்லை என்றும் தோன்றியது. அருகணையும் வரை சித்ராங்கதையின் அகவை அவனுக்குத் தெரியவில்லை. கண்களைச் சுற்றியும் வாயைச் சுற்றியும் இளம்பாளை வரிகள் என சுருக்கங்கள். ஆனால் அதே சிரிக்கும் சிறிய கண்கள்.

பப்ருவாகனனை அழைத்து அவள் "இவன் உங்கள் மைந்தன், உங்கள் வடிவானவன்" என்றாள். "என்னைவிட மேம்பட்டவன், எனக்கிருந்த தளைகள் ஏதுமற்றவன். அவ்வண்ணமே அவன் இலங்குக!" என்று அர்ஜுனன் அவனை வாழ்த்தினான். சித்ராங்கதை "உங்கள் வெற்றிகளை அவன் அடையவேண்டும்" என்றாள். "வேண்டாம், இழப்பில்லாது வெற்றியே இல்லை. வெற்றிகள் சுருங்கிக்கொண்டே செல்ல இழப்புகள் பெருகுகின்றன" என்றான் அர்ஜுனன்.

பப்ருவாகனனுடனும் சித்ராங்கதையுடனும் மூன்று மாதம் அந்நிலத்தில் அவன் இருந்தான். புரவிகளிலேறி அந்நிலத்தில்

இருவரும் துரத்திக்கொண்டு சென்றனர். லோகதடாகத்தில் நீராழத்திற்குள் தலைக்குமேல் கோடி விரல்களென பிசையும் நீர்வளரிகளின் வேர்களை உலைத்தபடி நீந்தி விளையாடினர். இலைத்தீவுகளுக்கு மேல் பறவைகளுடன் அந்திச் சேக்கேறினர். உண்டு குடித்து விளையாடி களிகூர்ந்தனர்.

ஒருகணத்தில் அவன் அங்கிருந்து கிளம்பியாக வேண்டும் என்று உணர்ந்தான். ஒருநாள் இலைத்தீவில் படுத்திருந்த மைந்தனை அவன் நோக்கிக்கொண்டிருக்கையில் விந்தையானதோர் நடுக்கை உணர்ந்தான். அவன் மைந்தன் மேல் பெரும்பற்று கொள்ளத் தொடங்கியிருந்தான். மைந்தனையே எண்ணிக்கொண்டிருந்தான். மைந்தன் அவன் கனவில் வரத்தொடங்கியிருந்தான். ஒவ்வொரு முறையும் கனவில் மைந்தனுடன் அவன் பாம்பையும் பார்த்தான்.

அர்ஜுனன் துயில்கொண்டிருந்த மைந்தனை மெல்ல புரட்டினான். குளிர்ந்த நீர்வளரிப்பரப்பின்மேல் பலகையிட்டு பப்ருவாகனன் படுத்திருந்தான். அப்பலகைக்கு அடியில் செந்நிறப் புழு என நெளிந்தது நாகம். அவன் கழி தேடுவதற்குள் அது பாய்ந்து நீரில் குதித்து நெளிந்து மூழ்கி மறைந்தது. அர்ஜுனன் நடுங்கிக்கொண்டே அமர்ந்திருந்தான்.

அதை அவன் சித்ராங்கதையிடம் சொன்னான். “நாகர்களின் பழி என்னை தொடர்கிறது. அது என்மேல் வஞ்சநிறைவுகொள்ளும். என் மைந்தன் நாகர்களிடமிருந்து காக்கப்படவேண்டும்.” அவள் அவன் கையைப் பிடித்து “இதெல்லாம் வீண் ஐயம். இங்கே நாங்கள் பாம்புகளுடன் சேர்ந்தே வாழக் கற்றவர்கள்” என்றாள்.

“என் ஆணை இது. ஒருபோதும் தன் நாட்டின் எல்லைக்கு வெளியே என் மைந்தன் நிலம்வெல்ல செல்லக்கூடாது.

ஒருபோதும் நாகர்களின் மண்ணுக்குள் நுழையக்கூடாது. தன் வில்லை தன் குடியை காப்பதற்கன்றி தன் புகழுக்காகவோ தனக்கு பெண்ணோ பொருளோ கொள்வதற்காகவோ பயன்படுத்தக்கூடாது" என்று அர்ஜுனன் சொன்னான்.

"உங்கள் சொற்கள் அவனுக்கு இறையாணை. அவை அவனுடைய தந்தைவழிச் செல்வமென்றே கொள்ளப்படும்" என்றாள் சித்ராங்கதை. "ஆனால் நீங்கள் தேவையின்றி அஞ்சுகிறீர்கள்." அர்ஜுனன் "இல்லை, நீ நாகங்களை அறியமாட்டாய். வெளியே வரும் பாம்புகள் அல்ல அவை. உள்ளுறையும் நஞ்சுகளும் கூட. புனத்தில் சுருண்டுள்ளது பாம்பு. அதற்கு முன் முட்டைக்குள் சுருண்டிருந்தபோது கற்றுக்கொண்ட ஆழ்துயிலில் இருக்கிறது. அது எக்கணமும் எழும். அது நிகழலாகாது" என்றான்.

அங்கிருக்கையில் ஒவ்வொரு நாளும் கணமுமென அவன் பப்ருவாகனனின் இடத்தை குலைத்துக்கொண்டிருந்தான் என உணர்ந்தான். ஒருமுறை அவன் சந்தைக்குள் நுழைகையில் ஒரு முதியவன் திரும்பி நோக்கி பப்ருவாகனனை நோக்கி "இவன் பாண்டவனாகிய அர்ஜுனனின் மைந்தன். நேற்றும் வந்து இங்கு பொன்பொருட்களை வாங்கிச் சென்றான்" என்று சொன்னான். பப்ருவாகனனின் பின்னால் வந்து கொண்டிருந்த அர்ஜுனன் குதிரையின் கடிவாளத்தை இழுத்து நிறுத்தினான்.

பப்ருவாகனன் சிரித்துக்கொண்டு அவனுடன் பேசி பொன்னுக்குரிய பணத்தை அளித்து கடந்து சென்றான். அக்கணம் அவன் மூட்டைக்குள் இருந்த நாகத்தை கண்டுவிட்டான். பப்ருவாகனன் "வருக, தந்தையே!" என்றான். அர்ஜுனன் அவனிடம் "உன்னை இதற்கு முன் எவரேனும் பாண்டவ மைந்தன் என்று கூறியிருக்கிறார்களா?" என்றான்.

“இல்லை, இங்கு குடிப்பெயரும் முதற்பெயரும் சொல்வதே வழக்கம். அவன் அயல்நாட்டு வணிகன். முதன்முறையாக இவ்வண்ணம் அழைக்கப்படுகிறேன்” என்று மலர்ந்த முகத்துடன் பப்ருவாகனன் சொன்னான்.

அர்ஜுனன் ஒன்றும் சொல்லவில்லை. தனக்குத்தானே எண்ணம் சூழ்ந்தபடி தனித்திருந்தான். அன்று மாலை அங்கிருந்து கிளம்ப வேண்டுமென்று முடிவெடுத்தான். இரவில் ஓசையில்லாமல் எழுந்து தன் காண்டீபத்தை எடுத்துக்கொண்டு கதவை திறந்தான். வெளியிலிருந்து கரிய எருமை என குளிர்காற்று வந்து அறையை நிறைத்தது. சித்ராங்கதை விழித்துக்கொண்டாள். ஆனால் அவனை பார்க்காதவள்போல படுத்திருந்தாள்.

“நான் செல்கிறேன், மீண்டும் வரமாட்டேன்” என்று அர்ஜுனன் சொன்னான். “நான் இங்கிருந்தால் உன் மைந்தனுக்கு நாகப்பழி சூழும். ஆகவே செல்கிறேன். அவன் நீடுவாழவேண்டும், நூறாண்டிருந்து நிறையவேண்டும் என்று வாழ்த்துகிறேன்” என்றபின் “நீ நில் என ஒரு சொல் சொன்னால் செல்லமாட்டேன். அதை சொல்லும் உரிமை உனக்கு உண்டு” என்றான்.

அவன் காத்திருந்தான். பின்னர் “வாழ்க!” என்று சொல்லி வில்லுடன் வெளி முற்றத்திற்குச் சென்று ஊரெல்லையைக் கடந்து காட்டுக்குள் சென்றான். மேலும் கிழக்காக செல்லத் தொடங்கினான்.

ஒவ்வொரு முறை ஒவ்வொரு ஊரிலிருந்து கிளம்புகையிலும் அவனுடைய உளநிலை கிழக்கு நோக்கி செல்க என்பதாக இருந்தது. அது ஏன் என்று அவனால் உய்த்துணர

முடியவில்லை. கிழக்கு அவன் தந்தையின் திசை என்பதனால், கிழக்கைச் சொல்லியே அவன் வளர்க்கப்பட்டான் என்பதனால், ஒளியை நோக்கி செல்பவனாகவே தன்னை எப்போதும் உணர்ந்திருந்தான் என்பதனால்.

கிழக்கை அறிய அவனுக்கு எப்போதுமே இடர் இருந்ததில்லை. அவன் உடலிலேயே கிழக்குணர்வு இருக்கும். எக்காட்டிலும் எவ்விருளிலும் மிகச் சரியாக அவனால் கிழக்கு நோக்கி நடக்க முடிந்தது. கிழக்கு அவனை மாபெரும் காந்தமென இழுத்தது. அங்கு எதோ ஒன்று இருக்கக்கூடும். அவனை முற்றாக தன்னுள் இழுத்து கரைத்து எச்சமின்றி ஆக்கக்கூடியது.

அத்தனிமையை மீண்டும் உணர்ந்தான். அது தன்னுணர்வு முதிர்ந்து உருவாகும் எடை. அதை உதிர்க்காமல் தனிமையிலிருந்து தப்ப இயலாது. அதை உதிர்க்கும் இடம் அன்றி பிறிதொன்றும் தான் தேடுவதற்கில்லை என எண்ணிக்கொண்டிருந்தான். பின்னர் உணர்ந்தான், அவன் சென்றுகொண்டிருந்தது நாகநாடு நோக்கி. அங்கே என் கடன் கழிந்து என் மைந்தன் விடுபடுவான் என்றால் அதுவே எஞ்சும் கடமை என்று சொல்லிக்கொண்டான்.

# கல்பொருசிறுநுரை - 83

**பகுதி எட்டு : சொல்லும் இசையும் – 2**

அர்ஜுனன் சிற்றோடைக்கரையில் நீர்மருத மரத்தின் வேரில் உடல் சாய்த்து கால் நீட்டி படுத்திருந்தான். அவன் கால்களைத் தொட்டு ஆறு ஓடிக்கொண்டிருந்தது. அதில் மிதந்து வந்த இலைகளும் சற்று ஆர்வம் கொண்ட மீன்களும் அவன் விரல்களைத் தொட்டு அவ்வப்போது விழிப்புணர்த்திக்கொண்டிருந்தன. அவன் தன்னை இழந்து அமைந்திருந்த வெறுமைக்குள் ஒரு நோக்குணர்வை அடைந்தான். கை இயல்பாக நீண்டு காண்டீபத்தை தொட்டது.

அவன் தன் உடலெங்கும் நிறைந்திருந்த விழிகளால் அந்த எழுவரையும் பார்த்துவிட்டான். ஏழு நாகர்குலத்து இளைஞர்கள் கைகளில் விற்களும் அவற்றில் தொடுத்து நாணிறுக்கி நீட்டி குறிபார்த்த நச்சுஅம்புகளுமாக நுண்ணிதின் அணுகி வந்துகொண்டிருந்தனர். அவர்களின் விழிகள் அவனை நோக்கி கூர்ந்திருந்தன. அவர்களுக்குரிய காணா விழி ஒன்றால் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டிருந்தனர். அனைவரும் ஒரே அசைவை அடைந்தனர். ஒரே கணத்தில் சிலிர்த்துக்கொண்டனர். ஒரே கணத்தில் சொடுக்கினர். ஒரு பாம்பின் உடல் வளையம்போல் அவர்கள் இருந்தனர்.

அர்ஜுனன் தன் உடலைத் திரட்டி ஒரு கணத்தில் சுழன்றெழுந்து அமர்ந்தான். அவர்கள் அனைவரையும் நேருக்கு நேர் பார்த்தான். அதை எதிர்பாராத அவர்கள் திகைத்ததுபோல் நின்றனர். அவன் கை காண்டீபத்தை தொட்டுக்கொண்டிருந்தது. அவர்களில் தலைமை என நின்ற இளைஞனின் விழிகளை மிக அருகில் பார்த்து அர்ஜுனன் புன்னகைத்தான். அதைக் கண்டு

அஞ்சி ஒருகணம் அவன் பின்னடைந்தான். அவன் உடலில் அப்பின்னடைவு நிகழவில்லை. உள்ளத்தில் நிகழ்ந்த அப்பின்னடைவு விழிகளில் தெரிந்தது.

பின்னர் அவன் தன்னை முழுக்க திரட்டிக்கொண்டு மெல்லிய உறுமலோசை ஒன்றை எழுப்பியபடி அவனை நோக்கி அம்பெய்தான். அதே கணத்தில் மற்ற அம்புகளும் எழுந்தன. அர்ஜுனன் தன்னுடலை பாம்பென ஏழு நெளிவுகளுக்குள்ளாக்கி அவனை நோக்கி வந்த ஏழு அம்புகளையும் தவிர்த்து காண்டீபத்தை எடுக்க முயன்றான். ஆனால் அவன் கைக்கு அப்பால் அது நீர்மருத மரத்தின் தடித்த வேரென மாறியதுபோல் மண்ணுடன் படிந்து கிடந்தது. முழு மரத்தின் எடையையும் தான் கொண்டுவிட்டதுபோல. பேருருக் கொண்ட புவியால் மறுபக்கம் பற்றி இழுக்கப்பட்டதுபோல.

அவன் காண்டீபத்தை பற்றித் தூக்க முழு விசையாலும் முயன்றான், அதை அவனால் அசைக்கவே முடியவில்லை. கற்பாறைபோல், அங்கே நிழலென வரையப்பட்டதுபோல் அது கிடந்தது. அவர்கள் மீண்டும் நாணேற்றி மீண்டும் அம்புகளை தொடுத்த பின்னரும் அவனால் வில்லை அசைக்க முடியவில்லை. அவனால் வில்லை எடுக்க முடியவில்லை என்பதை தலைவன் கண்டுகொண்டான். அம்பை செலுத்த வேண்டாம் என்று அவன் கைகாட்ட மற்றவர்கள் வில் தாழ்த்தினர்.

அவர்கள் அவனை பார்த்தபடி நின்றனர். அர்ஜுனன் வில்லை எடுப்பதற்கு மீண்டும் முழு ஆற்றலோடு முயன்றான். அவன் இடக்கையும் இடக்காலும் உயிரற்றவைபோல் தளர்ந்திருந்தன. மேலும் உந்தியபோது அவன் சரிந்து காண்டீபத்தின் மேலேயே விழுந்தான். தலைவன் கைகாட்ட நாகர்கள் எழுவரும் ஒரே

கணத்தில் பாய்ந்து அவன் மேல் விழுந்தனர். பதினான்கு கைகள் அவனை பாம்புகள்போல் பற்றிக்கொண்டன. அவன் உடலின் நுண்ணிய பகுதிகள் அனைத்தையும் ஒரே கணத்தில் அழுத்தி அவனை செயலிழக்கச் செய்தனர்.

அவனை புரட்டிப்போட்டு கைகளை சேர்த்து பின்னால் காட்டுக்கொடிகளால் இறுகக் கட்டினர். கால்களைக் கட்டி மீண்டும் புரட்டி மலர்த்திப் போட்டனர். அவர்களின் தலைவன் அர்ஜுனனின் முகத்தை கூர்ந்து பார்த்தான். அவர்களின் மயிரற்ற முகங்கள் குளிராலும் வெயிலாலும் வெந்து சுருங்கி விழிகள் உள்ளடங்கி இருந்தன. தலைவன் வெறியுடன் தன் வெறுங்கையால் அர்ஜுனனின் முகத்திலிருந்த மீசையின் மயிர்களை பிடுங்கி பறிக்கத்தொடங்கினான். அர்ஜுனன் திமிறி புரண்டபோது அவன் முகத்தில் ஓங்கி அறைந்து காறி துப்பினான். தலைமயிரைப்பற்றி மண்ணில் பலமுறை அறைந்தான். பிறகு எழுந்து நின்று அவனை காலால் உதைத்தான்.

அர்ஜுனன் அசைவழிந்தபோது தலைவனும் அவனைத் தொடர்ந்து வந்த அறுவரும் சேர்ந்து அர்ஜுனனின் தாடியையும் மீசையையும் முழுக்கவே கைகளால் பிடுங்கி எடுத்தனர். முகமெங்கும் குருதி வழிய, உடலில் மெல்லிய துடிப்புடன் அவன் அங்கே கிடந்தான். தலைவன் அவனை காலால் ஓங்கி ஓங்கி உதைத்தான். பின்னர் அவன் நீண்ட தலைமயிரை தன் கையில் பற்றி சுற்றித் தூக்கி இழுத்துக்கொண்டு நடந்தான். அவர்கள் கூச்சலிட்டபடி அவனை தொடர்ந்தனர். அவன் உடல்மேல் எச்சில் துப்பினர்.

அர்ஜுனனின் உடல் காட்டின் கற்கள் மீதும், முட்கள் மீதும், வேர் முடிச்சுகள் மீதும் முட்டி புரண்டு எழுந்து அதிர்ந்து

அவர்களுடன் சென்றது. அவர்களில் ஒருவன் இடக்கையால் காண்டீபத்தை எடுத்துக்கொண்டு அவன் பின்னால் வந்தான். அதைக் கொண்டு அவன் தழைகளையும் புற்களையும் அறைந்தான். அர்ஜுனன் அவன் கையிலிருந்த காண்டீபத்தை திகைப்புடன் பார்த்துக்கொண்டிருந்தான். அவன் உள்ளம் எந்தச் சொல்லுமின்றி மலைத்ததுபோல் இருந்தது. நெடுநேரத்திற்குப் பின்னரே என்ன என்ன என்று அவன் அகம் அரற்றத் தொடங்கியது. என்ன நிகழ்ந்து கொண்டிருக்கிறது? இதுதான் இறுதியா? இவ்வண்ணமா?

அவர்கள் அவனை காட்டினூடாக இழுத்துக்கொண்டு நாகர்களின் சிறுகுடிக்கு சென்றனர். அவர்களின் ஓசை கேட்டு அங்கிருந்து ஓடி வந்த நாகர் குலத்து முதியவர்கள் அவனைப் பார்த்ததுமே சூழ்ந்துகொண்டு கால்களால் மாறி மாறி மிதிக்கத் தொடங்கினார்கள். அவனை நசுக்கிவிட விழைபவர்கள்போல் வெறிகொண்டு கூச்சலிட்டபடி மிதித்தனர். அவன்மேல் பெண்கள் காறி உமிழ்ந்தனர். சிறுவர்கள் கூட எட்டி மிதித்தனர்.

பின்னர் அவன் இழுத்துக் கொண்டுசெல்லப்பட்டு நாகர்களின் சிற்றூரின் முற்றத்தில் போடப்பட்டான். அவன் ஆடை களையப்பட்டது. பகல் முழுக்க வெறும் உடலாக அவன் அங்கு கிடந்தான். நாகர்குலக் குழந்தைகள் அவன் அருகே வந்து விளையாடின. அவன் செவியிலும் கண்களிலும் மண்ணை அள்ளி போட்டன. அவன் உடலில் முட்களால் குத்தின. அவன் மேல் ஏறி அமர்ந்து கூச்சலிட்டன. அப்பாலிருந்த ஓடையிலிருந்து மண்ணையும் சேற்றையும் அள்ளி வந்து அவன் மேல் வீசின. அவர்கள் இழிவுச்சொற்களை கூவியபடியே இருந்தனர்.

நான்கு நாகர்குலக் குழந்தைகள் அவன் காலை ஒரு கயிற்றால் கட்டி அங்கிருந்த கழுதை ஒன்றின் வாலில் கட்டினர். கழுதையை அவர்கள் முள்ளால் குத்தி துரத்திவிட அவன் உடலை இழுத்தபடி அது அச்சிற்றூரின் முற்றத்தில் பதறிக் கனைத்து சுற்றி வந்தது. அவன் உடலில் தோல் உரிந்து குருதியில் மண்ணும் புழுதியும் ஒட்டிக்கொண்டிருந்தன. அவர்களில் ஒரு குழந்தை உள்ளே சென்று சாம்பலை அள்ளி அதன்மேல் போட்டது.

குழந்தைகளை அதட்டி நீக்கி ஒரு பெண் அவனை தலைமயிர் பற்றி இழுத்து வந்து திரும்ப முற்றத்தில் போட்டாள். அவன் வாயைத் திறந்து உள்ளே புளித்த காடி ஒன்றை ஊற்றினாள். அவர்கள் உண்ட எச்சில் உணவுகள் அனைத்தையும் கலந்த அந்தக் காடியை அவன் விடாயுடனும் பசியுடனும் அருந்தினான். கால்கள் தள்ளாட அவனை நோக்கி வந்த களிமகன் ஒருவன் அவன் முகத்திலும் வாயிலும் சிறுநீர் கழித்தான். அர்ஜுனன் அருவருப்புடன் புரண்டபோது அவன் வசைபாடியபடி அவனை இழுத்துச்சென்று அவ்வூரார் அனைவரும் மலம்கழிக்கும் குழி ஒன்றுக்குள் தூக்கி போட்டான். புளித்து நாறிய மலத்தில் அவன் புரண்டு கிடந்தான். மேலே நின்று களிமகன் இழிசொல் கூறி கூச்சலிட்டான்.

அந்தி இருண்டு கொண்டிருந்தது. இரவு சரிந்த பின்னர் அவர்களின் முற்றத்தில் ஏழு எண்ணைப் பந்தங்கள் நடப்பட்டு நடுவே தோல்பீடங்கள் போடப்பட்டன. அவற்றில் குடிமூத்தார் வந்து அமர்ந்தனர். தோலாடை அணிந்து மலை எருதின் வாலால் ஆன தலையணி சூடி கழுத்தில் நாகபடம் வைத்தது போன்ற கல்மணிமாலைகளுடன் அவர்கள் மன்று

தலைக்கொண்டனர். சூழவும் அவர்களின் மைந்தர்களும் பெயர்மைந்தர்களும் அமர்ந்தனர். பெண்டிர் வலப்பக்கம் நிரை வகுத்திருந்தனர்.

அவர்கள் அர்ஜுனனை மேலே எடுத்து அவன் மேல் நீரை அள்ளி அறைந்து வீசி கழுவிய பின் இழுத்துவந்து முற்றத்தின் முன் போட்டனர். ஊர்த்தலைவர் எழுந்து வந்து அவன் முகத்தில் உமிழ்ந்த பின் காலால் பல முறை உதைத்தார். முடிபற்றி தூக்கி நிறுத்தினார். இருவர் அவன் கால்களை அழுந்த பிடித்துக்கொண்டனர். ஊர்த்தலைவர் "கூறுக, உன் பெயரென்ன?" என்றார். அர்ஜுனன் மறுமொழி எதுவும் உரைக்கவில்லை. "கூறு, உன் பெயரென்ன?" என்று அவர் மீண்டும் உரக்க கேட்டார். பலமுறை கேட்ட பின்னும் அவன் மறுமொழி சொல்லவில்லை.

அவர் அருகிருந்த ஒரு இளைஞனிடம் "அவர்கள் மொழியில் கூறு" என்றார். அவன் மழுங்கிய செம்மொழியில் "உன் பெயரென்ன?" என்றான். பின்னர் காமரூபத்தின் மொழியில் "உன் பெயர் என்ன? நீ எக்குடி?" என்று கேட்டான். "பெயரும் குலமும் கூறாதொழிந்தால் இங்கு நீ இன்னும் இடர்படுவாய். உயிருடன் எஞ்ச இயலாது" என்றான். அர்ஜுனன் ஒரு சொல்லும் உரைக்கவில்லை. அவர்களில் ஒருவன் சீற்றம்கொண்டு தன் கழுத்தை அறுப்பதை எதிர்பார்த்திருந்தான்.

குடித்தலைவர் மீண்டும் எழுந்து வந்து அவனை மிதித்தார். அவன் மேல் உமிழ்ந்து "கூறுக, உன் பெயரென்ன?" என்று மீண்டும் மீண்டும் கேட்டார். அவன் விழிகளை சந்தித்த பின் அவன் கூறப்போவதில்லை என்பதை உணர்ந்து சினத்துடன் நடுங்கியபடி சில கணங்கள் நின்றார். பின்னர் கைகட்டியபடி சென்று தன் இருக்கையில் அமர்ந்து கொண்டார். இருவர்

கைதூக்க பெண்கள் குரவையிடத் தொடங்கினர். சிறுவர்களும் அக்குரவையில் கலந்துகொண்டனர். நூற்றுக்கணக்கான நரிகள் அவனைச் சுற்றி எழுந்து ஓசையிட்டது போலிருந்தது.

ஒரு நாக வீரன் தன் இடையிலிருந்த தோலால் ஆன வாளுறையை எடுத்து உள்ளிருந்து கூரிய கத்தியை உருவினான். அதை தன் கையிலேயே ஒருமுறை தீட்டிக்கொண்டு அர்ஜுனனை அணுகினான். அவன் தலைமுடிபற்றி தூக்கி நிறுத்தினான். இரு இளைஞர்கள் அருகிலிருந்த ஓடையிலிருந்து மரக்குடைவுக் கலத்தில் நீரள்ளி வந்தனர். அதை அவன் தலையில் ஊற்றி மீண்டும் நீராட்டினர். அவன் தலை மயிரை பற்றி இழுத்துச் சென்று அங்கே வடகிழக்கு திசையில் பதிக்கப்பட்டிருந்த ஏழு மாநாகங்களுக்கு முன் அவனை மண்டியிட வைத்தனர். மாநாகங்களைச் சுற்றி பந்தங்கள் கொளுத்தப்பட்டன.

குரவை ஒலிகள் வலுத்தன. ஒருவன் அவன் பின்னால் நின்று அர்ஜுனனின் தலைமயிரைப் **பிடித்து** தலையை மேலே தூக்கிக்கொண்டான். அவன் கழுத்துக்குழாய் புடைத்து மேலெழுந்தது. பந்தங்களின் ஒளியில் அர்ஜுனனின் உடல் ஈரத்தால் மின்னிக்கொண்டிருந்தது. நாக வீரன் அந்தக் கத்தியை அவன் கழுத்தில் வைத்து நாகர்களுக்கான வாழ்த்துச்சொற்களை முணுமுணுத்தான். கத்தியின் ஒளி அவன் முகத்தில் பட்டது. இந்தக் கத்திதானா? பல்லாயிரம் அம்புகளில், வாள்களில், வேல்முனைகளில் இருந்து இது எவ்வகையில் வேறுபட்டது? இல்லை, இது அல்ல.

அவனை பார்த்துக்கொண்டிருந்த நாகர்குடித் தலைவர் ஏதோ நினைவுகூர்ந்தவர்போல கைகாட்டி நிறுத்தி அருகணைந்து அவனை விலகச்சொல்லி அர்ஜுனனைப் பிடித்து அவன்

கட்டுகளை அவிழ்த்து அவனைத் தூக்கி "நீ நாகர்களில் குருதியுறவு உடையவனா?" என்றார். அவன் மறுமொழி சொல்லவில்லை. "நான் ஒரு குரலை கேட்டேன். மிக அண்மையில் என் செவியருகே... நாகன் ஒருவன் சொன்னான், நீ அவன் தந்தை என்று... உனக்கு நாகமைந்தன் இருந்தானா? உயிர்நீத்து முன்னோர்வடிவு கொண்டானா?"

அர்ஜுனன் நெஞ்சு விம்ம முனகலோசையை எழுப்பினான். அவன் தலை குனிய விழிகளில் இருந்து நீர் வழிந்தது. "சொல், உனக்கு நாகர்மைந்தன் இருந்தானா? அவன் இங்குள்ளான். உன் பொருட்டு துயர்கொள்கிறான்" என்றார் குடித்தலைவர். "என்னை கொல்லுங்கள்... என்னை கொல்லுங்கள்" என்று அர்ஜுனன் சொன்னான். "அவன் பெயர் என்ன? சொல், அவனுக்காக நாங்கள் இங்கே படையலிடவேண்டும்" என்றார் குடித்தலைவர்.

"அரவான், அவன் பெயர் அரவான்" என்று அர்ஜுனன் சொன்னான். பின்னர் உரத்த ஒலியுடன் கதறி அழத்தொடங்கினான். "அவனிடமிருந்து எனக்கு விடுதலை இல்லை. என் மைந்தரிடமிருந்து நான் விடுதலை பெறப்போவதே இல்லை. என்னை கொல்லுங்கள்... அளிகூர்ந்து என்னை கொன்றுவிடுங்கள்" என்று கூவினான். அவர்கள் திகைத்துப்போய் நோக்கி நின்றனர்.

குடித்தலைவர்கள் அப்பால் சென்று கூடிநின்று அறியாத மொழியில் விரைந்து பேசிக்கொண்டனர். பின்னர் குடித்தலைவர் ஏதோ ஆணையிட்டுவிட்டு நாகபடம் கொண்ட குடிக்கோலை தூக்கிக்கொண்டு தன் குடிலுக்குள் சென்றுவிட்டார். பிறர் அமைதியாக அவனைப் பார்த்து அமர்ந்திருந்தனர். அர்ஜுனன் "என் மைந்தன் குரலை நான்

கேட்கவில்லை... மூத்தவரே, என் மைந்தன் குரலை நான் கேட்கச்செய்யுங்கள்" என்று அலறினான்.

நாகர் குலத்து இளைஞர்கள் அவனை தூக்கி நிறுத்தி உந்தி கொண்டுசென்றனர். இரவு முழுக்க காடுகளினூடாக அவனை நடக்க வைத்து கூட்டிச்சென்றனர். அவர்களின் நிலத்தின் எல்லையாக அமைந்த ஓடை ஒன்றை அடைந்து அதில் அவனை இறக்கி மறுபுறம் கொண்டு சென்றனர். அவன் கட்டுகளை அவிழ்த்து அவனை அங்கே விட்டுவிட்டு அவர்களில் ஒருவன் "நீ உன் மைந்தனால் காக்கப்பட்டாய்" என்றான். இன்னொருவன் "மூதாதை என மைந்தனின் காவல் உனக்குள்ளது, நீ நல்லூழ் கொண்டவன். செல்க!" என்றான். அவர்கள் அவனுக்கு ஒரு தோலாடையை வீசினர்.

அவர்கள் ஓடையில் இறங்கி அப்பால் சென்று மறைந்தனர். அர்ஜுனன் அவர்கள் விட்டுச் சென்ற அதே இடத்திலேயே அமர்ந்திருந்தான். பின்னர் எழுந்தபோது தன் இடக்காலும் இடக்கையும் முற்றிலும் செயலற்றிருப்பதை கண்டான். வலக்காலும் வலக்கையும்கூட ஆற்றல் இழந்து நனைந்து துணிச்சுருள்கள்போல் இருந்தன. ஆடையை இடையில் சுற்றிக்கொண்டு வலக்காலால் உந்தி வலக்கையால் மரக்கிளைகளைப் பற்றியபடி தளர்ந்து அவன் நடந்தான். வழியில் ஒரு நீரோடையில் விழுந்து புரண்டு மண்ணை அள்ளி உடலெங்கும் பூசி நீராடினான்.

பசி உடலெங்கும் பரவத்தொடங்கியது. ஆனால் அங்கு கிழங்குகள் எதுவும் கிடைப்பதாகத் தெரியவில்லை. மூங்கில் காடுகளில் கனிகளும் காய்களும் இல்லை. பறவைகள் செறிந்திருந்தன. ஆனால் அவற்றை ஒரு அம்பு செய்து எய்து வீழ்த்த அவனால் முடியாதென்று தோன்றியது. முயல்வோம்

என்று ஒரு நாணலைப் பிடுங்கி அம்பென எய்தான். அவன் கையில் இருந்து நடுங்கியது அவன் எண்ணியிராத திசை நோக்கி சென்றது.

அவன் ஒரு கணத்தில் உளம் உடைந்து விம்மி அழத்தொடங்கினான். அப்படியே சரிந்து நிலத்தில் அமர்ந்து முழங்கால் மேல் தலைவைத்து அழுதான். நெடுநேரம் அழுது மீண்டபோது உளம் சற்று தெளிந்திருந்தது. கையூன்றி எழுந்து மூங்கில்களையும் மரங்களையும் பற்றியபடி மீண்டும் நடந்தான். தொலைவில் புகை மணத்தை உணர்ந்தான். அங்கு நாகர்கள் இருப்பார்களோ என்று எண்ணினான். ஆனால் அதற்கு மேல் அஞ்சுவதற்கு ஒன்றுமில்லை என்று தோன்றியது.

அவன் தன் உடலை இழுத்துக்கொண்டு சென்றான். தேர் ஏறிய நாகம் நசுங்கிய பாதியை நசுங்காத பாதியால் உந்திக்கொண்டு செல்வதுபோல. அங்கு சிற்றோடை ஒன்றின் கரையில் பறவைகளை தோலுரித்து மூங்கில் கழியில் குத்தி தீயில் வாட்டிக்கொண்டிருந்த கரிய உடல் கொண்ட ஒருவனை பார்த்தான். அவன் நிறமே அவன் நாகனல்ல, காமரூபத்தவனும் அல்ல என்று காட்டியது.

அர்ஜுனன் உடலைத் திரட்டி முழு மூச்சு செலுத்தி உந்தி அவனை நோக்கி சென்றான். அவ்வோசை கேட்டு அவன் திரும்பிப் பார்த்தான். கன்னங்கரியவன். கண்கள் வெண் சிப்பிகள்போல் தெரிந்தன. அவனைப் பார்த்ததுமே திடுக்கிட்டவன்போல் எழுந்தான். கைநீட்டி உரக்க "இளைய பாண்டவரே!" என்றான். அர்ஜுனன் திகைப்பில் தன் வலுவிழந்த கால் அதிர்ந்து துள்ள தொய்ந்த இடதுகை பாம்பென நெளிய நின்றான். அவன் அர்ஜுனனின் அருகில் வந்து "முற்றிலும் மாறியிருக்கிறீர்கள். முகமெங்கும் குருதிப்புண். ஆயினும்

தங்கள் விழிகளால் தங்களை கண்டுகொண்டேன். தாங்கள் இளைய பாண்டவர்தான்" என்றான்.

"ஆம்" என்றான் அர்ஜுனன். "நான் இதுவரை தங்களை பார்த்ததில்லை. தங்களைப் பற்றிய கதைகளை மட்டுமே கேட்டிருந்தேன். என் பெயர் மலையன். தெற்கே முக்கடல் முனம்பு அருகே ஸ்ரீபதம் என்னும் சிற்றூரை சேர்ந்தவன். பாணர் குலத்தவன்" என்றான். "அரசே, நான் உங்கள் தொல்குடியின் கதைகளை கேட்டு வளர்ந்தவன். அதைப் பாடி இவ்விரிநிலமெங்கும் அலைபவன். நான் உங்களைத் தேடியே இங்கு வந்தேன். உங்களிடம் சொல்வதற்கு எனக்கு ஒரு செய்தி உண்டு."

அர்ஜுனன் வெறுமனே பார்த்துக்கொண்டிருந்தான். மலையன் உளஎழுச்சியுடன் "நான் விழிகளால் பார்த்தது அது. நான் விழிகளால் பார்த்தமையினாலேயே அதை உங்களிடம் சொல்லும் பொறுப்பு எனக்கு இருக்கிறதென்றும், இந்த மாபெரும் நாடகத்தில் நான் நடிக்க வேண்டிய இடம் அது என்றும், அதன் பொருட்டே புவியில் பிறந்திருக்கிறேன் என்றும் புரிந்துகொண்டேன். நீங்கள் எங்கு சென்றிருப்பீர்கள் என்று எண்ணிப்பார்த்தேன். கிழக்கே அன்றி வேறெங்கும் செல்ல முடியாது என்று தோன்றி நானும் கிழக்கு நோக்கி வந்தேன். இதோ சந்தித்துவிட்டேன்" என்றான்.

"கூறுக!" என்று அர்ஜுனன் சொன்னான். "அரசே, இச்செய்தியை அறிக! சாந்தீபனி குருநிலையின் முதன்மை ஆசிரியரும், விருஷ்ணிகுலத்து இளைய யாதவரும், துவாரகையின் அரசருமான கிருஷ்ணன் விண்புகுந்தார்" என்று அவன் சொன்னான். சற்றுநேரம் அர்ஜுனன் வெறுமையில்

அமர்ந்திருந்தான். பின்னர் மூச்சொலியுடன் அசைந்து "எப்போது?" என்று குழறலான குரலில் கேட்டான்.

"இன்றைக்கு சரியாக நாற்பத்திரண்டு நாட்களுக்கு முன்பு" என்று மலையன் சொன்னான். "எனில் நேற்று நாற்பத்தோராவது நாள், அல்லவா?" என்றான் அர்ஜுனன். "ஆம், நேற்று காலை எழுகதிர் நான்காம் சாமத்தில் அவர் மறைந்து மிகச் சரியாக நாற்பத்தொரு நாளாகிறது" என்றான் மலையன். அர்ஜுனன் "அவர் விண் புகுந்த தருணம், அதே பொழுது" என்று தனக்குள் சொல்லிக்கொண்டான். "அதனால்தானா?" என்று அவன் முனகினான். சுட்டுவிரலால் மண்ணைத் தொட்டு "அவ்வண்ணமே" என்றான்.

"அரசே, அவர் விண்புகுந்தபோது நான் அவருடன் இருந்தேன். அதை தங்களிடம் கூறவே நான் ஊழால் பணிக்கப்பட்டிருக்கிறேன்" என்று மலையன் சொன்னான்.

# கல்பொருசிறுநுரை - 84

**பகுதி எட்டு : சொல்லும் இசையும் – 3**

மலையன் சொன்னான். நான் தென்னிலத்திலிருந்து வடக்கு நோக்கி வருந்தோறும் கதைகள் பெருகின. தலைகீழ் பெருமரம் ஒன்றை பார்ப்பதுபோல என்று எனக்கு தோன்றியது. அங்கே தென்னிலத்தில் பல்லாயிரம் கிளைகள் விரித்து, சில்லைகள் செறிந்து, இலைகள் செழித்து, கணமொழியாது

தளிர்விட்டு, கொடிச்சுருள் நீட்டி பரவிக்கொண்டே இருக்கின்றன கதைகள்.

இங்கு வடக்கே அவை வேர்கொண்டிருக்கின்றன. வடக்கில் எங்கோ ஒரு சிறு ஊற்றில் இருந்து அவை தொடங்கி பெருகிவளர்கின்றன என்ற எண்ணம் எனக்கு இருந்தது. இங்கு வருந்தோறும் அவ்வேர்கள் பல்லாயிரம் கிளைவேர்களாக சல்லிவேர்களாக பிரிந்து, கணம் கணம் என பரவி, மண் கவ்வி நீர் உறிஞ்சி, உயிர் பெருக்கிக்கொண்டிருப்பதை கண்டேன். எவ்வண்ணம் இக்கதைகளின் கிளைவிரிவை ஒருவன் அள்ளிவிட இயலாதோ அவ்வண்ணமே இவற்றின் வேர்ச்செறிவையும் கண்டுவிட இயலாது.

ஒன்றுடன் ஒன்று முரண்படும் கதைகள் ஒன்றை ஒன்று வளர்க்கும் கதைகள் என மாறும் விந்தையை இதில்தான் பார்க்க முடிகிறது. ஒன்றையொன்று மறுக்கும் கதைகள் ஒற்றைப்பேருண்மையை ஏந்தியிருப்பதைக் கண்டு திகைக்க முடிகிறது. இந்தக் கதைவெளியில் ஒவ்வொருவரும் தீயோரும் நல்லோருமென தென்படுகிறார்கள். தீயோர் நல்லோரென உருமாறுகிறார்கள், நல்லோர் இயல்பாக தெரிகிறார்கள். அது இயல்பென்றும் அதுவே வாழ்வென்றும் தன்னை காட்டுகிறது கதையின் முடிவில்லாத மாயம்.

முதலில் இக்கதைகளின் சிடுக்கெடுத்து, ஒழுங்கு அமைத்துக்கொண்டு, மையம் ஒன்றை எடுக்க முயன்றேன். அவ்வாறு முயலுந்தோறும் மையமின்மையில் சிக்கி நானே பலவாறாக சிதைந்து பரவினேன். ஒரு தருணத்தில் இக்கதைகளினூடாக சென்று கொண்டிருக்கும் நான் ஒருவனல்ல, பிளந்து பிளந்து பல்லாயிரம் மானுடத்திரள் என்றானவன் என்று உணர்ந்தேன். ஓரிடத்தில் நான் சொல்லும்

கதைக்கும் இன்னொரு இடத்தில் நான் சொல்லும் கதைக்கும் இடையே எந்தத் தொடர்பும் இல்லாததுபோல் தோன்றியது. பின்னர் ஒருகணத்தில் நான் எண்ணுவதற்கும் மறுகணத்தில் நான் எண்ணுவதற்குமிடையே தொடர்பில்லையோ என்று ஐயுற்றேன்.

அவ்வண்ணம் என்னை தொகுத்துக்கொள்ளும் பொருட்டு இக்கதைகளின் மையமொன்றை எடுத்துக்கொள்ள முயன்றேன். இதன் முடிவில்லா கிளைபிரிதல்களுக்கு ஓர் ஒழுங்கையும் நெறியையும் கண்டடைய முயன்றேன். இதன் அத்தனை வளர்ச்சியும் பின்னலும் செறிவும் வாடலும் கருகலும் மலர்களென கனிகளென விதைகளென ஆவதற்காகவே என்று ஒரு பயன்நோக்கை உருவாக்கிக்கொள்ள என் எண்ணத்திறன் அனைத்தையும் செலவிட்டேன். இக்கதைகளுடன் நான் போரிட்டுக்கொண்டிருந்தேன். கை ஆயிரம் கொண்ட கார்த்தவீரியனுடன், துளியிலிருந்து பெருகும் ரத்தபீஜாசுரனுடன், பாதி வல்லமையை தன்னுடையதெனக் கொள்ளும் பாலியுடன்.

ஒரு புள்ளியில் திகைத்து செயலற்றேன். இக்கதைகளை இவ்வண்ணம் அசுரப்பேருருவாக அரக்கப்பெருவிசையாக மாற்றுவது நானே என்று உணர்ந்த பின் என் முயற்சிகளை முற்றாக கைவிட்டேன். இது இவ்வண்ணமே என்றுமிருக்கும், பெருகும், உருமாறும், அழிவின்மை கொண்டு முடிவின்மை நோக்கி செல்லும். இதில் சிக்கி இந்த மாபெரும் வலைப்பின்னலில் ஒரு துளி என்றாவதே இதை கேட்பவருக்கு அளிக்கப்பட்டுள்ள ஊழ் என்று உணர்ந்தேன். அவ்விடுதலைக்குப் பின் எளியவனானேன். இக்கதைகளில் எது என் அருகே இருக்கிறதோ, எது என் உணர்வுகளை தொடுகிறதோ அதனுடன் என்னை இயல்பாக

இணைத்துக்கொண்டேன். அத்தருணத்தில் இருந்து என் வாழ்க்கையை நோக்கி வளர்ந்தேன். இன்று இக்கதைகளின் ஒரு பகுதி நான்.

இளைய பாண்டவரே, நான் தண்டகாரண்யத்தை கடந்தபோது அங்கு எங்கோ ஒரு ஊரில் இளைய யாதவர் தன்னந்தனிமையில் தங்கியிருப்பதாக கேள்விப்பட்டேன். சூதர் சொல்லில் அச்செய்தி ஒரு மந்தணமாக, ஆனால் எங்குமுள்ளதாக திகழ்ந்தது. ஆனால் அதற்கு முன்னரே அவர் மண்நீத்துவிட்டார் என்றும், அவர் குடி முற்றழிந்தது என்றும் கதைகள் எனக்கு வந்தன. துவாரகை கடற்கோளால் அழிந்ததென்றும், முழு நகரும் மண்ணிலிருந்து நழுவி கடலுக்குள் இறங்கி மூழ்கி ஆழத்திற்கு சென்று மறைந்ததென்றும் கூறினார்கள்.

கதைகள் இவ்வாறு கூறின. அப்போது இளைய யாதவர் தன் மைந்தர் எண்பதின்மருடன் துவாரகையின் பொன்னுருக்கிச் செய்த பேரவையில் அமர்ந்து அவையாடிக்கொண்டிருந்தார். அப்போது சிறுபறவைகள் கலைந்து பறக்கும் ஓசையை அவர்களில் சிலர் கேட்டார்கள். பின்னர் பெரும்பறவைகள் பூசலிட்டு பறந்து சென்றன. பின்னர் புரவிகளும் யானைகளும் ஓசையிட்டன. இளைய யாதவரின் சொற்களில் செவியொன்றே புலனாக மூழ்கி அமர்ந்திருந்த மைந்தரும் அவையினரும் அவற்றை கேட்கவில்லை.

கடலோசை பெருகிப்பெருகி வந்தது. பேரலை ஒன்று வந்து துறைமுகத்தை அறைந்தது. அவையின் அனைத்துச் சாளரங்களினூடாகவும் பெருகி வந்த நீர் அவர்களை அறைந்தது. அலை துவாரகையை மூழ்கடித்து மேலெழுந்தது. நகரை கடல் ஒரு மாபெரும் மீன் என வாய்திறந்து

விழுங்கியது. இளைய யாதவரின் சொற்கள் முறியவில்லை, அவர்கள் விழிகளே செவிகளாக கேட்டிருந்தனர். நகரை கடல்கொண்டதையே அவர்கள் அறியவில்லை. அச்சொற்கள் நீர்க்குமிழிகளாக மாறி அவர்களைச் சூழ்ந்து பறந்தன.

யாதவர் அனைவரும் மீன்களென உருமாறி கடலாழத்திற்குள் சென்று மறைந்தனர். இளநீல உடலும் பீலிமுடியும் கொண்ட பெருமீனாக மாறி இளைய யாதவர் அலை அமைந்த ஆழத்திற்கு தன் குலத்தினரை இட்டுச்சென்றார். அங்கு அவரைத் தொடர்ந்து சென்ற யாதவக் குடிகள் துவாரகையின் நீராழத்து வடிவம் ஒன்று அங்கு முன்னரே அமைந்திருப்பதை கண்டனர். ஒளிரும் பவளங்களாலான கோட்டைகள். சாலைகள், அரண்மனைகள், அணிமாளிகைகள், கலைக்கூடங்கள், ஆலயங்கள் அங்கிருந்தன. அவர்கள் அங்கு குடியேறினர். ஆழத்து துவாரகையொன்று அங்கு அமைந்தது. அங்கு அவர்கள் பெருகி செழிக்கலாயினர்.

பிறிதொரு கதையில் துவாரகை உருவானது சொல்லப்பட்டது. மதுராவில் இருந்து தனக்கென நிலம்தேடி கிளம்பிய இளைய யாதவர் நடந்து நெடும்பாலையைக் கடந்து கடல்நோக்கி எழுந்த அந்நிலத் துருத்தின்மேல் வந்து நின்றார். பாரதவர்ஷத்திலேயே அலைக்கொந்தளிப்பு மிகுந்த கடற்கரை அது. வருணன் அடங்காச் சீற்றத்துடன் என்றும் தென்படும் முனம்பு. அங்கு கடற்பயணிகள் அணுகுவதில்லை. அத்திசை நோக்கி இளைய யாதவர் வந்தபோது உடன் வந்த அக்ரூரர் “இந்நிலம் மனிதர் வாழ்வதற்கு உகந்ததல்ல. இங்கு வருணன் பெரும் சீற்றம் கொண்டவன். இது அவன் காக்கும் அருநிலம்” என்றார்.

“அச்சீற்றம் ஏனென்று பார்க்க வேண்டும். நாகம் வழக்கத்தைவிட சீற்றம் கொண்டிருந்தால் அது நாகமணியை காக்கிறது என்பார்கள். இங்கு வருணன் பொன்றாப் பெருஞ்செல்வம் எதையோ தன்னுள் கரந்துள்ளான்” என்றார் இளைய யாதவர். “இந்நிலத்தைக் கடப்பது எனில் வருணனை போருக்கு அழைப்பதாகவே பொருள்” என்று அக்ரூரர் கூறினார். “இம்முனம்பு அரசர்களுக்கும் அசுரர்களுக்கும் ஓர் அறைகூவலாகவே என்றும் இருந்துள்ளது. நம் குடிமூதாதையான கார்த்தவீரியன் இங்கு வந்து வருணனை போருக்கு அழைத்திருக்கிறார். அவரது இரண்டாயிரம் கைகளையும் நொறுக்கி சிறுவண்டென அப்பால் வீசிச்சென்றன வருணனின் நீர்க்கைகள்.”

“நரகாசுரனும் ஹிரண்யாக்ஷனும் ஹிரண்யகசிபுவும் இலங்கையர்கோன் ராவணனும் இன்னும் மாபெரும் வீரர் பலரும் வந்து வருணனை எதிர்கொண்டு தோற்றுச் சென்ற இடம் இது. இங்கு மானுடரோ அரக்கரோ அசுரரோ வருணனை எதிர்கொள்ள இயலாது. வருணனுடன் போரிடும் படைக்கலம் ஏதும் மானுடரிடம் இல்லை” என்றார் அக்ரூரர். இளைய யாதவர் புன்னகைத்து “பொறுங்கள், நீங்கள் இங்கிருங்கள். நான் சென்று பொருதி நோக்குகிறேன்” என்றார். “நீங்கள் தனியர், இன்னமும் சிறுவர், போரிடும் வல்லமை பெற்றவருமல்ல” என்றார் அக்ரூரர்.

தன் இடையிலிருந்த புல்லாங்குழலை கையில் எடுத்தபடி இளைய யாதவர் அம்முனம்பு நோக்கி செல்ல அக்ரூரர் “படைக்கலமில்லாது பொருதச் செல்கிறீர்கள், இளவரசே. அளியற்ற அசுரன் என்றும், ஆயிரம் கோடி கைகள் கொண்ட அரசன் என்றும், அனைத்து உயிருக்கும் அமுதளித்து

வேதச்சொல்லுடன் அவி பெற்று தெய்வமானவன் என்றும் வருணனை நூல்கள் சொல்கின்றன" என்றார். "ஆம், அத்துடன் அணையாப் பேரோசை கொண்டவன் என்றும் சொல்கின்றன" என்று சொல்லி புன்னகைத்து இளைய யாதவர் தன்னந்தனியாக நடந்து மறைந்தார்.

அம்முனம்புக்குச் சென்று அதன் உச்சியென நின்றிருந்த இரட்டைப்பாறையில் ஒன்றின்மேல் நின்றார். தன் இடையிலிருந்த புல்லாங்குழலை எடுத்து இனிய இசை ஒன்றை மீட்டத்தொடங்கினார். சுழன்று சுழன்று எழுந்து உளம் மயக்கிய அந்த மெல்லிய இசையை வருணன் கேட்டான். மேலும் அதை கூர்ந்து கேட்கும் பொருட்டு அவன் செவி கூரலானான். அவன் உளமடங்கும்தோறும் கடல் அலையடங்கி அமைதி கொண்டது. நீலப்பளிங்குப் பரப்பென மாறியது. இன்னொரு மலையுச்சியில் வருணன் வந்தமர்ந்து குழலிசையை கேட்டான்.

தொலைவில் நின்றிருந்த அக்ரூரரும் பிறரும் கடல் உறைந்துவிட்டதை கண்டனர். வருணன் அடிபணிந்துவிட்டானா என்று திகைத்தனர். இசை முடிந்ததும் கண்மயங்கி விழிநிறைந்து எழுந்த வருணன் "கூறுக இளையோனே, நீ விரும்பும் பரிசில் என்ன?" என்றான். "தேவா, இங்கு உன் சிறகுகளுக்குள் நீ ஒளித்து வைத்திருக்கும் அருமணி எதுவோ அது. இங்கு நான் ஒரு நகர் அமைக்கவேண்டும்" என்றார் இளைய யாதவர். "அவ்வண்ணமே ஆகுக!" என்றான் வருணன்.

கடல் சுருட்டி மேலெழுந்து வந்த பேரலை ஒன்று நிலத்தை அறைய கரையெங்கும் முத்துக்களும் பவளங்களும் அருமணிகளும் மழையென கொட்டின. வலம்புரிச்சங்குகள் கூழாங்கல்லென இறைந்து கிடந்தன. பெரும் பொற்பாறைகள்

உருண்டு வந்து விழுந்தன. "கொள்க! கொள்க!" என்று வருணன் கூறினான். "இங்கே ஒரு நகரை நான் அமைப்பேன். பாரதவர்ஷத்தின் கையிலேந்திய செங்கோலென அது அமையும்" என்று இளைய யாதவர் சொன்னார். "அவ்வண்ணமே ஆகுக!" என்று வருணன் வாழ்த்தினான்.

"ஆயின் ஒன்று உணர்க! அந்நகரில் ஒருகணமும் ஓழியாமல் உவகையின் ஓசை என நல்லிசை கேட்டுக்கொண்டிருக்க வேண்டும். ஒருகணம் அந்த இசை அறுபடுமெனில் என் அலைகள் எழுந்துவந்து அந்நகரை அறைந்து மூடி அள்ளி ஆழத்திற்கு கொண்டு செல்லும். எதுவும் எஞ்சாது" என்று வருணன் கூறினான். "அவ்வண்ணமே" என்று இளைய யாதவர் சொல்லளித்தார். அவர் எழுந்து வந்தபோது அக்ரூரரும் பிறரும் ஓடிவந்து தழுவிக்கொண்டனர். அவர் தலைமுடியெங்கும் வருணன் சொரிந்த அருமணிகள் மின்னிக்கொண்டிருந்தன.

அந்தப் பெருஞ்செல்வத்தால் துவாரகை அமைக்கப்பட்டது. அந்நகரில் ஒவ்வொரு கணமும் பல்லாயிரம் இடங்களில் இசை முழங்கிக்கொண்டிருந்தது. நள்ளிரவிலும் முன்புலரியிலும்கூட இசை முழங்கிக்கொண்டிருந்தது. உலகில் உள்ள அனைத்து இசைச்சூதர்களும் அங்கே வந்தனர். அவர்களுக்கு அள்ளி அள்ளிக் கொடுக்க அங்கு கருவூலங்கள் திறந்தன. வணிகர்களும் கடலோடிகளும் இரவெல்லாம் இசை கேட்டனர். பகல் முழுக்க நகர்மக்கள் இசை கேட்டனர்.

ஊழ்கத்தின் இசை, இறைவழிபாட்டின் இசை, களியாட்டின் இசை, துயர் மன்றாட்டின் இசை, போரெழுகையின் இசை என ஐவகை இசைகளும் அங்கு கேட்டுக்கொண்டிருந்தன. துளைகளிலும் விரிசல்களிலும் காற்று எழுப்பும் இசை, நீர் சொட்டும் இசை, முட்டிக்கொள்ளும் உலோகங்கள் எழுப்பும்

இசை, வண்டுகளின் இசை, குயில்களின் இசை என்னும் ஐவகை இயற்கை இசைகளும் எழுந்தன. யாழ், குழல், முழவு, மூச்சு, குரல் என்னும் ஐவகை மானுட இசைகளும் அவற்றுடன் ஊடுகலந்தன. அவை அனைத்தையும் ஒருங்கிணைக்கும் முதல் சுதியென இளைய யாதவரின் குழலிசை அமைந்தது.

இளைய யாதவரின் குழலிசைக்கு தனி மாணவர்கள் எவருமில்லை. ஆனால் அதை கேட்ட ஒவ்வொருவரிடமும் அது கொஞ்சமேனும் எஞ்சியிருந்தது. ஒவ்வொருவரிடமும் அது தனக்குரிய முறையில் முளைத்து வெளிப்பட்டது. துவாரகையின் முழவோசையிலும் முரசொலியிலும்கூட இளைய யாதவரின் குழலிசையின் பண்ணே வெளிப்படுகிறது என்றனர் சூதர். அங்குள்ள பெருஞ்சுவர்களில் செவி பதித்தால்கூட இசையை கேட்கமுடிந்தது.

எந்நேரமும் இசையும் உவகையும் துவாரகையில் இருந்தன. முடிவில்லாத செல்வங்கள் அதன் கருவூலத்தில் இருந்தன. புன்னகைக்கும் வாயில் வெண்பற்கள்போல பளிங்கு மாளிகைகள் நகரில் செறிந்திருந்தன. பட்டும் அருமணிகளும் கொண்டு அமைக்கப்பட்ட இல்ல முகப்புகள். உலகின் அழகியவையும் அரியவையும் குவிந்த அங்காடிகள். அழகியரும் இளையோரும் உலவும் தெருக்கள். அங்கே வந்து சேரும் அயல்நிலத்துச் சூதன் திகைத்து விழிமலைத்து சொல்லிழந்து ஒருநாள் அலைந்த பின்னரே ஒரு சொல்லை தன்னுள் இருந்து எடுத்தான். பின் அங்கிருந்து கிளம்பும்வரை அவன் நா ஓடும் காளையின் கழுத்து மணி நாவென ஒலித்துக்கொண்டிருந்தது. அங்கிருந்து சென்ற பின்னர் அந்நினைவுகளை கனவில் பெருக்கி அவன் அதைப்பற்றி அன்றி பிறிதெதையும் பேசாதவன் ஆனான்.

விண்தொட புகழ் நிறுத்தியிருந்த துவாரகை தன் பொன்றாப் பெரும் செல்வத்தாலே, எதிர்க்க எவருமிலாத பேராற்றலினாலே, காலப்போக்கில் அசைவிழக்கலாயிற்று. அறுவடை மட்டுமே நிகழும் வயல் அது என்றனர் சூதர். மண்பெருக்கி பொன்பெருக்கி மைந்தர்பெருக்கி சொல்பெருக்கி புகழும் பெருக்கியபின் தன் கடன் முடிந்தது என்று இளைய யாதவர் அந்நகரிலிருந்து அகன்றார்.

பெருந்தந்தையரை அவ்வண்ணம் காட்டிலிருந்து விலக்குவது சிம்மங்களின் இயல்பு. மைந்தர் எண்பதின்மரும் தங்கள் தந்தையை வெல்லவும் கடக்கவும் முயன்றனர். தங்கள் தந்தையின் அரியணையில் அமர கனவு கண்டனர். "எனில் அவ்வாறே ஆகுக!" என்று இளைய யாதவர் நகர் நீங்கினார். அவ்வாறு செல்லும்போது அங்கு எழுந்த ஒவ்வொரு ஓசையிலும் பட்டு நூலென ஊடுருவி ஒன்றாக்கித் தைத்திருந்த அவருடைய குழலிசையும் உடன்சென்றது. அவர் சென்ற மறுநாளே அதை அங்குள்ள இசைச்சூதர் உணரலாயினர். பெருமுரசுகளிலும் மெல்லிய யாழிசையிலும் சுதிப்பிழை தொடங்கியது.

ஆனால் சுதிப்பிழைக்கு ஒரு தனி இயல்புண்டு. தேர்ந்த இசை வல்லுநர்களுக்கு மட்டுமே அது செவிக்கு தட்டுப்படும். அவர்களில் சிலருக்கு மட்டுமே செவி கடந்து சுவைக்கு பிடிபடும். அது பெருகி அனைவர் செவிக்கும் தெரியவருகையில் அது தீர்க்க முடியாத ஒன்றாக மாறிவிட்டிருக்கும். துவாரகையில் அனைத்து இசைக்கலன்களும் சுதி பிழைக்கலாயின. சுதி என்பது ஒவ்வொரு இசையும் பிறிதொன்றுடன் தன்னை பிணைத்துக்கொள்ளும் முறைமை. ஒரு சுதிவிலகல்

பல்லாயிரம் இசைக்கலன்களை பிறவற்றுடன் இணையாமல் தனித்து ஒலிக்கச் செய்துவிடுகிறது. அப்பிழை மேலும் பல்லாயிரம் இசைக்கலங்களை பிறழவைக்கிறது. பிறழ்வு கணம் கணமென பெருகிக்கொண்டிருக்கிறது.

சுதியொருமைபோல அமையக் கடினமானதும் பிறழ எளிமையானதும் பிறிதொன்றில்லை. ஏனென்றால் அது மானுடர் உருவாக்கும் இசைவு. மானுடர் உருவாக்கும் ஒவ்வொன்றும் எழுவதற்கு அரிதும் வீழ்வதற்கு எளிதும் ஆகும். ஏனென்றால் அவ்வெழுச்சி தெய்வங்களுக்கு எதிரானது. அதனாலேயே அடைந்த கணமே ஆணவம் என அடைந்தோனில் நிழல் வீழ்த்துவது. அதை வீழ்த்துவது தெய்வங்களின் ஆணையை தலைக்கொண்ட காலம்.

ஒரு தருணத்தில் துவாரகையில் அனைத்து இசைக்கலங்களும் தனித்தனியாக ஒலிக்கத் தொடங்கின. தனித்தொலிக்கும் இசைக்கலம் கந்தர்வர்களே மீட்டுவதாயினும் இசையொருமை அற்றது. பிறிதொரு கந்தர்வன் மீட்டும் இசைக்கலத்துடன் முரண்படும்போதுகூட செவிக்கு ஒவ்வா ஓசை என்று மாறுவது. துவாரகை பொருட்களின் ஓசைகளின், காற்றின் உறுமல்களின், தீயின் முனகல்களின், நீரின் குழறல்களின், கடலின் அலறல்களின் நகரமாக மாறியது. அங்கு முதற்சுவை பிறழ்ந்தபோதே இசைச்சூதரில் முதல்வர் அகன்றுவிட்டிருந்தனர். பின்னர் ஒவ்வொருவராக அகன்று செல்லத்தொடங்கினர்.

ஒரு கட்டத்தில் அங்கு இசை மீட்டத்தெரிந்த ஒருவர் கூட எஞ்சவில்லை. இசைக்கலன்களை குரங்குகள் மீட்டுவதுபோல் இயக்கிக்கொண்டிருந்த இளையோர் சிலரும், சித்தம் பிறழ்ந்த முதியோரும் மட்டுமே இருந்தனர். ஆயினும் அந்நகரில்

இருந்த கட்டடங்கள் அந்த ஓசையை எவ்வண்ணமோ தொகுத்து இசையென்றாக்கின. அவை அவ்வோசைக்கு தொலைவிலிருந்து கேட்கையில் உருவாகும் ஓர் ஒழுங்கையும் இனிமையையும் கூட்டிக்கொண்டிருந்தன.

அந்நாளில் ஒருமுறை நிலம் நடுங்கி அதில் ஒரு கட்டடம் உடைந்து மண்ணில் சேர்ந்தது. அத்தருணத்தில் அங்கு ஒலித்துக்கொண்டிருந்த இசை முழுமையாக நின்றுவிட்டது. மறுகணமே கடல் ஒற்றைப் பேரலையென பெருகி வந்து அந்நகரை அறைந்து சுருட்டி இழுத்து தன் ஆழத்திற்கு கொண்டு சென்றது. இளைய யாதவரின் மைந்தரும் சுற்றமும் முற்றழிந்தனர்.

அவர்கள் விழித்த விழிகளுடன் நீரில் மூழ்கி ஆழத்திற்கு சென்றபோது அங்கு கடலாழத்தில் அதுவரை யாதவ நிலத்தில் அந்நெடுங்காலம் முழங்கிய இசை முழுக்க கடலால் இழுத்து உள்வாங்கப்பட்டு அழுத்திச் சுருக்கி சிறிதாக்கப்பட்டு முத்தென சுடர்விட்டுக்கொண்டிருப்பதை கண்டனர். மண்ணில் இருக்கும் பேருருவங்கள் அனைத்தும் அறுதியாக கடலாழத்திற்குச் சென்று சிறுகுமிழிகளாக அழுத்தப்பட்டிருந்தன. ஏனென்றால் காலம் அசைவிலாது தேங்கிய இடம் அது ஒன்றே. ஒழுகாத இசை நிலைத்து ஒரு பொருளென்று ஆயிற்று. கண்ணுக்குச் சுடர்ந்தது, கைத்தொடுகைக்கு குளிர்ந்தது.

மலையன் சொன்னான். கதைகள் அவ்வண்ணம் பெருகிக்கொண்டே இருந்தன. இன்னொரு கதையில் யாதவ இளையோர் துவாரகையை கடல்கொண்ட பின்னர் பிரஃபாச க்ஷேத்ரத்திற்கு சென்றனர். மைந்தர் அங்கே அடைக்கலம் கூடியிருப்பதாக அறிந்து இளைய யாதவர் தன் தவம் முறித்து அங்கே சென்றார். அவர்கள் துவாரகையின் கோன்மைக்கென

போரிட்டு நகரை இழந்து அங்கு வந்து சேர்ந்திருந்தனர். அங்கும் போரிட்டுக்கொண்டிருந்தனர். அவர்கள் அனைவரையும் ஓர் அவையில் அமரவைத்து ஒற்றைச் சொல்லளித்து ஓர் அரசனை அமைத்துச் செல்லலாம் என்று அவர் எண்ணினார்.

எண்பதின்மரையும், யாதவ குலங்களையும், பிற குடியினரையும் ஒருங்கிணைத்து அவைகூடி அமரசெய்து, தான் அரியணை அமர்ந்து, அவர் மைந்தரிடம் பேசலானார். அவர் தன் முதற்சொல்லை எடுப்பதற்குள்ளாகவே அவர் மைந்தர்கள் அவரை நோக்கி கூச்சலிடத் தொடங்கினர். ஒவ்வொருவருக்கும் அவர்மேல் உளக்குறைகள் இருந்தன, தங்களுக்கான கோரிக்கைகள் இருந்தன, பிறர்மேல் குற்றச்சாட்டுகள் இருந்தன. அனைவரும் எழுந்து நின்று ஒன்றிணைந்து கூச்சலிட்டபோது கடற்பறவைகளின் சதுப்புநிலக் கூச்சல் என ஓசை எழுந்தது.

"என் சொல் கேளுங்கள்! என் சொல் கேளுங்கள்! அமைக! அமைக!" என்று இளைய யாதவர் கூவிக்கொண்டிருந்தார். அவருடைய ஒரு சொல்லையும் கேட்க அவர்கள் சித்தமாக இல்லை. ஒருவருக்கொருவர் கையிலிருந்த பொருட்களை வீசிக்கொண்டனர். பின்னர் எழுந்து ஓடி படைக்கலங்களை எடுத்தனர். அவர்களில் ஒருவன் அங்கு நின்ற நாணல் ஒன்றை அம்பென்றாக்கி தன் தந்தையின் நெஞ்சு நோக்கி செலுத்தினான். அது அவர் இடநெஞ்சில் பட்டு தைத்து நின்றது. அதிலிருந்து குருதி வழிந்தது.

அக்குருதி நிலத்தில் விழுந்த ஒவ்வொரு துளியில் இருந்தும் பேருருவ அரக்கன் ஒருவன் எழுந்தான். வெறியெழுந்த கண்களும் வெறித்த வாயும் எட்டு பெருங்கைகளும் கொண்ட அரக்கர்கள் எழுந்தபடியே இருந்தனர். அவர்கள் குருதிசிந்தி தங்களை பெருக்கிக்கொண்டனர். ஆயிரம் பல்லாயிரம் கரிய

பேருருவர்களாக எழுந்த அவர்கள் அங்கிருந்த நாணற்புற்களை பிடுங்கியபோது அவை உலக்கைகள்போல் ஆயின. அவர்கள் யாதவர்கள் ஒவ்வொருவரையும் அறைந்து கொன்றனர். அவர்களைக் கிழித்து குருதி உறிஞ்சி ஊன் உண்டனர். நெஞ்சிலறைந்து கூச்சலிட்டு, வெண்பற்கள் காட்டி வெறிநகைப்பு கொண்டு அமலையாடினர்.

வெள்ளெலும்புகள் மட்டுமென்றாகி அங்கே எஞ்சினர் யாதவர். அவர்கள் நடுவே மேலும் மேலும் ஊன் தேடி அலைந்தனர் அந்த அரக்கர். ஒருவரோடொருவர் மோதிக்கொண்டு கூச்சலிட்டனர். இளைய யாதவர் அங்கு நின்று குருதி வழியும் நெஞ்சை வலக்கையால் பொத்தியபடி அவர்களை பார்த்தார். பின்னர் மெல்ல நடந்து சென்று கடல் புகுந்து மறைந்தார். தன் குருதியிலிருந்து மேலும் பேரரக்கர்கள் எழுந்தால் அவர்கள் இப்புவியை அழித்துவிடுவார்கள் என அவர் உணர்ந்தார். அவரைத் தொடர்ந்து நிழலுருவங்களென அசைந்து சென்று அந்தப் பேரரக்கர்களும் கடலில் மூழ்கிமறைந்தனர்.

கதைகள் பெருகிக்கொண்டே இருக்கின்றன. ஆயிரம்முறை கதைகளில் மண்மறைந்த இளைய யாதவர் அங்கே மந்தரம் என்னும் ஊரில் சாவுக்கென நோன்பிருக்கிறார் என்று கேள்விப்பட்டேன். தண்டகாரண்யத்தில் நான் கண்ட முதுசூதன் ஒருவனிடமிருந்து அங்கு செல்வதற்கான வழியை ஒரு பாடலென அறிந்து உளம்பதித்துக் கொண்டபின் அத்திசை நோக்கி செல்லலானேன்.

# கல்பொருசிறுநுரை - 85

**பகுதி எட்டு : சொல்லும் இசையும் – 4**

மலைச்சாரலில் நான் சந்தித்த அந்த முதிய சூதரின் பெயர் சௌம்யர். வெள்ளிமலை அடுக்குகள் வான் தொட எழுந்த வடக்குதிசைகொண்ட நிலத்தை சார்ந்தவர். கோமதி ஆறு இமையமலையிலிருந்து தரையிறங்கும் இடத்தில் அமைந்தது தன் சிற்றூர் என்று சொன்னார். மாகத குலத்தவர். என்னைப்போலவே இக்கதைகளில் தானும் சிக்கிக்கொண்டவர். கதையில் படிந்து, கதையென்று தானுமாகி, அதன் கருவி என்று தன்னை அளித்து, அதனால் இயக்கப்படுபவராக அலைந்துகொண்டிருந்தவர்.

தண்டகாரண்யத்தில் நீரூற்று ஒன்றின் அருகே எழுந்துநின்றிருந்த ஆலமரத்தின் அடியில் அந்தியில் சருகுகூட்டி தீயிட்டு அமர்ந்திருந்த அவர் அருகே நானும் அமர்ந்திருந்தேன். குளிர் சுற்றிக்கொண்டிருந்தது, அணுகவில்லை. அனலுக்கு விழிப்புகொண்ட பறவைகள் தலைக்குமேல் ஓசையிட்டன. சௌம்யர் அப்பத்திற்கான மாவு பிசைந்துகொண்டிருந்தார். நான் அவரிடம் "சௌம்யரே, நீங்கள் இளைய யாதவரை பார்த்தீரா?" என்று கேட்டேன். "ஆம், பார்த்தேன். அங்கிருந்துதான் கிளம்பி வந்துகொண்டிருக்கிறேன்" என்று அவர் சொன்னார்.

"அவரை பார்த்ததில் எதை உணர்ந்தீர்?" என்று நான் கேட்டேன். "இன்னும் ஏழு நாட்களில் அவர் விண்புகுவார். மாகதர்களின் காலக்கணக்குகள் பிறழ்வதில்லை" என்றார். "எவ்வண்ணம் நீங்கள் இந்நிமித்தம் உரைக்கிறீர்கள்?" என்று நான் கேட்டேன். அவர் "முன்னோர்களின் வழி, சொல்கொண்டு உளத்துடன்

விளையாடுவது, கணக்கு கொண்டு சொல்லுடன் விளையாடுவது" என்றார். "கணக்கை கைதொட்டு அறியவே களம். தொடும் கைகளினூடாக உள்ளம் கடந்த ஆழம் உலகை அறிகிறது."

வடபுலத்து மாகதர்களுக்கு அவர்களுக்குரிய நிமித்தமுறைகள் உள்ளன. பன்னிரு இலைகளைப் பறித்து மண்ணில் வைத்து ஒன்றில் கையூன்றி ஊழ்கத்திலாழ்ந்து இலைகளை தொட்டுத் தொட்டு கை செலுத்தி விழி திறக்கையில் அமைந்திருக்கும் கையிலிருந்து அந்தக் கணிப்பை அவர்கள் நிகழ்த்துகிறார்கள். அது கணிப்பல்ல, அவர்கள் உள்ளத்திலிருந்து எழும் ஓர் கனவுதான். அக்கனவை மீட்டவே அப்பன்னிரு இலைகளையும் பயன்படுத்துகிறார்கள். பாலைநிலமெனில் பன்னிரு கற்களை, இல்லங்களுக்குள் எனில் பன்னிரு பொருட்களை.

பன்னிரண்டு என்று என் உள்ளத்தை வகுத்துக்கொள்ள வேண்டும். பன்னிரு களங்களை பன்னிரு முறைகளில் தொட்டு இணைகையில் உருவாகும் முடிவின்மையே ஊழின் களம். ஆனால் அது அறுதியாக பன்னிரண்டுக்கு கட்டுப்பட்டது என்பதனால் கைதொட்டுவிடவும் இயல்வது. "எவ்வண்ணமும் பகுத்துக்கொள்ளலாம். பன்னிரண்டு என்பது தொல்மூதாதையரின் எண், அவ்வளவுதான்" என்று அவர் சொன்னார்.

"ஆகவே எங்கள் கணக்குகளின்படி பன்னிரண்டு வகையான கதைகளே இப்புவியில் உள்ளன. பன்னிரண்டு வகையான தத்துவங்கள், பன்னிரண்டு வகையான உணர்ச்சிகள், பன்னிரண்டு வகையான மெய்மைகள். கதைகளினூடாக கதைகளைத் தொட்டு நான் செல்கிறேன். அறிந்த கதைகளிலிருந்து அறியாக் கதை எவ்வாறு எழ முடியும் என்று உணர்கிறேன். இங்கு

நிகழ்ந்தவை அனைத்தும் கதையென்றால் நிகழ்பவையும் கதையே. இன்றுள்ளவை நேற்றைய நிகழ்வுகள். இன்றைய நிகழ்வுகள் நாளைய கதைகள். நாளைய நிகழ்வுகள் இன்றைய கதைகளும் இன்றைய நிகழ்வுகள் நேற்றைய கதைகளும் என பின்னால் செல்லவும் கூடும்" என்று அவர் கூறினார்.

"நீங்கள் இலை தொட்டு அறிந்ததென்ன?" என்று நான் கேட்டேன். "இளைய யாதவர் விண்புகுவார். அவருக்கு நிகழவிருப்பது வீரனுக்குரிய இறப்பல்ல, யோகியருக்குரிய இறப்பல்ல, பெருந்தந்தையருக்குரிய இறப்பும் அல்ல. அது எளியோருக்கும் சிறியோருக்குமான இறப்பு. இறப்பின் பொருளின்மையை அனைத்து கோணங்களிலும் வெளிப்படுத்தும் ஓர் இறப்பு" என்று அவர் கூறினார். "அவரை கதைகள் ஒரு நீலக்கொண்டை வானம்பாடி என்றே சொல்கின்றன. மின்னும் உடலும் இனிய இசையும் அழகிய கண்களும் எங்கும் நிலைகொள்ளா இயல்பும் கொண்டது. பறவைகளுக்குரிய இறப்பே அவருக்கும்" என்றார்.

நான் அதிர்ச்சியுடன் "ஏன்?" என்றேன். "அதை எவரும் அறியமுடியாது. ஆயிரம் பல்லாயிரம் தலைமுறைகளாக அதை எண்ணி எண்ணி வியப்பார்கள்" என்று அவர் சொன்னார். "ஏன்?" என்று நான் மீண்டும் திகைப்புடன் கேட்டேன். "ஏனெனில் ஒவ்வொரு செயலிலும் எல்லையில்லாத உட்பொருட்களை இயற்றி அறியமுடியாமையின் எல்லை வரை கொண்டு சென்றவர் அவர்" என்றார். "அதனால் என்ன?" என்று நான் மீண்டும் கேட்டேன். "அது அவ்வண்ணமே. தெய்வங்கள் மனிதனை நோக்கி புன்னகைக்கின்றன. தெய்வங்களை நோக்கி தெய்வங்களே வாய்விட்டு சிரிக்கின்றன" என்று அவர் கூறினார்.

நான் நெடுநேரம் அதை எண்ணிக்கொண்டு கைகளை மார்பில் கட்டிக்கொண்டு அமர்ந்திருந்தேன். சுள்ளிகளை மேலும் சேர்த்து தீ பெருக்கி அதில் கோதுமை மாவை வாட்டி ஒருவகை அப்பமாக்கிய சௌம்யர் அதை இரண்டாகக் கிழித்து ஒரு பகுதியை எனக்களித்து "நலம் நிறைக, அன்னம் நிறைவடைக!" என்றார். நான் அதை வாங்கிக்கொண்டு "மாகதரே, அவ்வண்ணம் ஒரு பொருளிலா நிகழ்வு நடப்பதற்கு முன்நீட்சி என்றோ ஏது என்றோ ஒன்று இங்குண்டா?" என்றேன். "விளைவுகள் அனைத்தும் முன்நிகழ்வுகள் கொண்டவை. அனைத்துக்கும் முன்நீட்சி உண்டு என்பதனால் அவை நீண்டு நீண்டு முடிவிலி வரை செல்கின்றன."

"மாகதரே கூறுக, இந்நிகழ்வுக்கான முன் நிகழ்வென்ன?" என்று நான் கேட்டேன். அவர் அங்கேயே பன்னிரு கூழாங்கற்களை அடுக்கி விரித்து கைதொட்டு ஊழ்கத்திலாழ்ந்து விழித்து தொட்ட கல்லை நோக்கி கணித்து ஒரு கதையை சொன்னார்.

முன்பு ஆசுரநிலத்தில் ஹிரண்யவாகா ஆற்றின் கரையில் அமைந்த ஹிரண்யபதம் என்னும் நாட்டை நிஷாதகுலத்தவனாகிய கருடகுலத்து ஹிரண்யதனுஸ் என்னும் அரசன் ஆண்டுவந்தான். அவன் துணைவி சுவர்ணை. அவர்களின் மைந்தனாகப் பிறந்த பெருவில்லவனின் பெயர் ஏகலவ்யன் என்று மாகதர் சொல்லத்தொடங்கினார். அவனுக்கு முற்பிறப்பின் தொடர்ச்சியென விற்கலை வந்தது. அவன் குடியில் அவனுக்கு நிகரான வில்லவர் எவரும் எழுந்ததில்லை. அவனை அவர்கள் தங்கள்

தொல்மூதாதையான ஹிரண்யகசிபுவின் மறுவடிவம் என வழிபட்டார்கள்.

ஹிரண்யதனுஸ் மகதத்திற்கு கப்பம் கட்டும் நிஷாத அரசர்களில் ஒருவர். நிஷாத குடியில் 'நிலைகொள்க!' எனும் ஆணையே வீரர்களில் திகழ்கிறது. 'வென்று செல்க, விரிக!' என்ற ஆணை அவர்களில் எழுவதில்லை. அந்த ஆணை எழுந்த உள்ளம் கொண்டவன் ஏகலவ்யன். விற்கலைகளில் தேர்ந்த ஆசிரியர் ஒருவரை தேரும் பொருட்டு அவன் சூதர்களிடமும் நிமித்திகர்களிடமும் உசாவினான். அவர்கள் துரோணரின் பெயரை கூறினார்கள். இளைய பாண்டவன் அர்ஜுனனும் பெருவில்லவனாகிய அஸ்வத்தாமனும் வில் பயிலும் களம் அது என்றனர்.

அங்கு செல்வதற்காக தந்தையிடம் விடைபெற்று ஏகலவ்யன் கிளம்பினான். அஸ்தினபுரியை அடைந்து துரோணரின் குருநிலைக்குச் சென்று உரிய காணிக்கைகளுடன் அவர் முன் பணிந்து "நான் நிஷாதன். ஆசுரநாட்டு கருடகுலத்து அரசன் ஹிரண்யதனுஸின் மைந்தன். என் பெயர் ஏகலவ்யன்" என்றான். "தங்கள் பாதங்களைப் பணியும் உரிமையை அளிக்கவேண்டும்" என்று கோரினான். ஆனால் தான் அஸ்தினபுரி அரசர்களுக்கு கட்டுப்பட்ட ஆசிரியர் என்றும், ஷத்ரியர்களுக்கு மட்டுமே விற்கலை அளிக்கவேண்டும் என்பது தனது நெறி என்றும் துரோணர் கூறினார்.

துரோணர் "நிஷாதனே, திறன் ஒவ்வொன்றும் கடன் நூறு கொண்டதே. ஷத்ரியர்கள் படைக்கலம் ஏந்துபவர்கள் என்பதனால் அவர்களுக்குரிய நெறிகளும் வரையறைகளும் நூல்களால் வகுக்கப்பட்டுள்ளன. அந்நெறிகளை ஏற்று அவ்வரையறைகளுக்குள் நிற்கும் வஞ்சினத்தை

எடுத்துக்கொண்ட ஷத்ரியர்களுக்கே போர்க்கலை அளிக்கப்படவேண்டும். அவர்களை ஆளவும் வழிகாட்டவும் தண்டிக்கவும் வலுவான அரசு தேவை. இல்லையேல் வேங்கப்புலிக் கூட்டத்தை ஊருக்குள் உலவவிட்டதுபோல அழிவே மிகும். நிஷாதனாகிய உன்னுடைய குலநெறிகளும் அரசுமுறைகளும் வேறு. ஆகவே நான் உனக்கு கற்பிக்க இயலாது" என்றார்.

"நீ வேடன். விற்கலை தேர்ந்த வேடன் காட்டுவிலங்குகளை முற்றழித்துவிடக்கூடும். உன் குடி பல்லாயிரம் வேடர் குடிகளில் ஒன்று. முதன்மை விற்கலை பயின்றால் நீ பிற குடிகளை அழிக்கக்கூடும். பேரரசென திரண்டு எழுந்து ஷத்ரிய அரசுகளை வெல்லக்கூடும். வேதங்களுக்கு கட்டுப்படாத உனது வில் வேத எதிர்ப்பை கைக்கொள்ளக் கூடும். உபவேதங்களில் ஒன்றாகிய தனுர்வித்தையை வேத மறுப்பாளனுக்கு கற்றுக்கொடுக்கலாகாது என்பது அதன் முதல்நெறி என்று அறிக!" என்று துரோணர் சொன்னார்.

அவன் மீண்டும் மன்றாடி நின்றான். "நால்வேதத்தை ஏற்பாய் என்று இங்கே நிலம்தொட்டு ஆணையிடு, உனக்கு கலையளிக்கிறேன்" என்றார். "நான் என் குடிக்கும் குடிகாக்கும் அசுரவேதத்திற்கும் கட்டுப்பட்டவன், பிறிதொன்றை ஏற்கவியலாது" என்றான் ஏகலவ்யன். "எனில் நீ அசுரகுருவிடமே விற்கலை பயிலவேண்டும். சுக்ராச்சாரியாரின் கொடிவழி வந்த ஆசிரியர்களை தேடிச்செல்க!" என்றார் துரோணர். "நான் உங்கள் சொல்லுக்கு கட்டுப்படுவேன் என்று சொல்லளிக்கிறேன்" என்றான் ஏகலவ்யன். "நான் உன் வேதத்தைவிட உயர்ந்தவனா?" என்றார் துரோணர். "மண்ணில் புழுக்கள் என நாங்கள் எங்கள் வேதத்தில் முளைத்து அதில்

திகழ்ந்து அதில் முடிபவர்கள்" என்றான். "எனில் நான் மற்றொன்று சொல்ல இயலாது" என்றார் துரோணர்.

ஏகலவ்யன் உளம்சோராமல் அக்குருநிலையின் தொலைவில் நின்ற ஒரு மரத்தின் மீது ஏறி அமர்ந்து துரோணர் தன் மாணவர்களுக்கு அளிக்கும் பயிற்சிகளை அகன்றிருந்து கண்டு உளம்பதித்துக் கொண்டான். பின்னர் தானே அதை செய்து பயின்று தேர்ந்தவனானான். அவன் அர்ஜுனனுக்கு நிகரான வில் திறனை அடைந்துவிட்டான் என்று சொல் பரவியது. துரோணர் அவனை தேடிச்சென்றார். "உன் ஆசிரியர் யார்?" என்று கேட்டார். "நீங்களே. உங்களிடமே விற்தொழிலை கற்றுக்கொண்டேன்" என்று அவன் கூறினான்.

"எனில் எனக்கு ஆசிரியக்கொடை அளி" என்று அவர் கேட்டார். "எதுவும் கோருக!" என்று அவன் சொன்னான். "உனது கட்டைவிரல் வேண்டும்" என்று துரோணர் கேட்டார். அக்கணமே அதை வெட்டி அவன் ஆசிரியக்கொடை என அளித்தான். ஏகலவ்யனின் அன்னை சுவர்ணை மைந்தனின் துண்டான விரலை எடுத்து தன் நெஞ்சோடணைத்துக் கொண்டாள். "வெட்டுண்ட என் மைந்தனின் பொருட்டு" என்று கூவி அவள் துரோணருக்கும் அஸ்தினபுரிக்கும் தீச்சொல்லிட்டாள். அச்சொல்லை நிலைநிறுத்தும் பொருட்டு அக்கணமே தன் சங்கரிந்து விழுந்து உயிர்விட்டாள்.

"எந்த மைந்தனுக்காக நீர் இதை செய்தீரோ அந்த மைந்தனுக்காக புத்திரசோகத்தில் நீர் உயிர்துறப்பீர். எந்த மாணவனுக்காக இப்பழியை ஆற்றினீரோ அந்த மாணவனின் வில்திறத்தாலேயே நீர் இறப்பீர். ஷத்ரிய வீரருக்குரிய இறப்பை அடையும் நல்லூழும் உமக்கிருக்காது. வாழையடி வாழையாக வரும் தலைமுறைகளின் எள்ளும் நீரும் உமக்கு கிடைக்காது.

உமது மைந்தன் சொற்களாலேயே நீர் பழிக்கப்படுவீர்" என்றாள் சுவர்ணை.

அவ்வண்ணமே துரோணர் தன் மைந்தனின் விழிமுன் தான் மைந்தனுக்கு மேலாக எண்ணிய மாணவனாலேயே கொல்லப்பட்டார். அவர் மைந்தன் சாவில்லாதவன் ஆனான், ஆகவே தலைமுறைகளென நீளும் நீர்க்கொடை பெறாதவராக ஆனார் துரோணர். அஸ்தினபுரியின் மைந்தர்கள் அனைவரும் களம்பட்டனர். எஞ்சிய ஒருவனோ வில் தொட ஆற்றல் இல்லாத வீண்பிறவியென அமைந்தான்.

சௌம்யர் தொடர்ந்து சொன்னார். குறைபட்ட கைகொண்ட ஏகலவ்யன் தன் குடிக்கு தலைமகன் என்றானான். தன் அன்னை சுவர்ணையின் நவகண்டச்சிலை முன் நின்று "இன்று முதல் இக்குலத்தின் அரசன் நான். அசுரகுலமாகிய நாம் மலரோ இலையோ கிளையோ தடியோ அல்ல, நாம் வேர். பறவையோ மிருகமோ மீனோ பாம்போ அல்ல. என்றுமழியாத புழுக்கள். இதோ என் ஆணை, இன்று முதல் நமது வில்வேதம் நான்கு விரல் கொண்டது. நம் குலத்துக்கு நானே குருநாதனுமாவேன்" என்றான்.

அவ்விரல் குறைந்த நிலையில் கடும்பயிற்சி எடுத்து மீண்டும் பெருவில்லவன் என்று மாறினான். வில்லவர்கள் என்று தன் குடியில் ஆயிரம் பேரை திரட்டிக்கொண்டான். அவர்கள் அனைவருமே வலக்கையின் கட்டை விரலை அகற்றிக்கொண்டனர். நான்கு விரல் அம்பெடுத்துத் தொடுக்கும் ஒரு கலை அது. சதுராங்குலி வித்தை என்றே அது அறியப்படலாயிற்று. அவ்வில்லவர்கள் ஒரே நாணில் ஏழு அம்புகளை தொடுக்கும் சப்தசரம் என்னும் விற்திறன் கொண்டவர்கள். நிகரற்ற பொறுமை கொண்டவர்கள்.

நிலத்தோடு நிலம் படிந்து படுத்து அந்நிலையிலேயே அம்பெய்யும் ஆற்றல் கொண்டவர்கள். ஆகவே அவர்களை மறு அம்பெய்து வீழ்த்துவது எளிதல்ல.

அவர்கள் புகழறிந்த மகத மன்னன் ஜராசந்தன் அவர்களை தன் படையில் சேர்த்துக்கொண்டான். ஹிரண்யதனுஸின் மைந்தனாகிய ஏகலவ்யன் ஜராசந்தனின் படையில் முதன்மைப் படைவீரன் ஆனான். அவன் ஜராசந்தனின் தாய் ஜரையுடன் குலமுறை உறவு கொண்டவன். அவனுடைய அத்தைமுறை கொண்டவள் கம்சரின் இரண்டாவது அரசியான பிராப்தி. அஸ்தினபுரிக்கும் யாதவர்களுக்கும் எதிராக ஏகலவ்யனின் சினத்தை தூண்டி நிலைநிறுத்த ஜராசந்தன் முயன்றான். ஆகவே இளைய யாதவரால் கம்சர் கொல்லப்பட்டபோது மதுராவை விட்டு நீங்கிய கம்சரின் அரசியரை வரவேற்க ஜராசந்தன் ஏகலவ்யனை அனுப்பினான். மெலிந்து சோர்ந்து கந்தலாடை அணிந்து பசித்து வந்த தன் அத்தையைக் கண்ட ஏகலவ்யன் உளம்கொதித்து அங்கேயே வில்தூக்கி மதுராவை அழிப்பேன் என்று வஞ்சினம் உரைத்தான். அசுர அரசிகள் மகதத்தை அடைந்தபோது மறுபக்கம் ஏகலவ்யனின் படை நான்கு பக்கமும் சூழ்ந்து கொண்டு மதுராவை தாக்கத் தொடங்கியது.

அஸ்தினபுரியில் பீஷ்மர் இருக்கும்வரை மதுராவை மகதம் தாக்காது என எண்ணியிருந்தார் இளைய யாதவர். ஆகவே யாதவர்கள் படைவல்லமையுடன் இருக்கவில்லை. ஏழு நாட்களில் மதுராவை ஏகலவ்யன் பிடித்துக்கொண்டான். வசுதேவர் தன் மனைவியருடன் யமுனைவழியாக தப்பி ஓடி மதுவனத்தை சென்றடைந்தார். ஏகலவ்யன் படைகள் பதினைந்து நாட்கள் மதுராவை சூறையாடின. ஏகலவ்யன்

ஆயிரம் படகுகளுடன் இரு துறைமுகங்களையும் அழித்தான். கன்றுகளை எல்லாம் கொன்று அவன் படைகள் உண்டன. மதுராவின் அனைத்து வீடுகளையும் அவன் எரித்தான். அதற்கு மதுராவின் நெய்க்களஞ்சியத்தையே பயன்படுத்திக்கொண்டான்.

ஏழு நாட்கள் மதுரா நின்றெரிந்தது. மதுராவின் தெருக்களில் மக்களின் சடலங்கள் குவிந்து கிடந்தமையால் குதிரைகள்கூட நடக்கமுடியாமலாயின. மதுராவின் மண் ரத்தமும் சாம்பலும் கலந்து கருமைகொண்டது. மறுநாள் ஏகலவ்யனின் படைகள் ஆயிரம் படகுகளில் வந்து மதுவனத்தை தாக்கின. கொந்தளிக்கும் யமுனைப்பெருக்கில் அலைபாயும் படகுகளில் இருந்தபடி அம்புகளை எய்து கரையில் நிற்பவர்களின் கண்ணுக்குள் அம்பைச் செலுத்தும் வில்லாளிகள் அவர்கள். அலைபாயும் படகுகளில் நின்ற அவர்களை யாதவர்களின் அம்புகள் ஒன்றுகூட சென்று தொடவில்லை.

அன்று இளைய யாதவர் வடக்கே சாந்தீபனி குருநிலையில் கல்வி கற்கும் பொருட்டு சென்றிருந்தார். மதுராவிலிருந்த பலராமர் எஞ்சிய யாதவர்களைத் திரட்டி அனைத்துக் கன்றுகளையும் சேர்த்துக்கொண்டு மதுவனத்தின் மறுபக்கத்துக்கு காட்டுக்குள் சென்றார். அடர்ந்த காட்டுக்குள் செல்ல யாதவர்கள் கற்றிருக்கவில்லை. அவர்களின் ஆநிரைகளை பசுமையை மீறி கொண்டுசெல்வதும் கடினமாக இருந்தது. குழந்தைகளுடனும் உடைமைகளுடனும் அவர்கள் காட்டுமரங்கள் நடுவே திணறியும் விழுந்தும் அழுதபடி சென்றனர்.

ஏகலவ்யனின் படையினர் மதுவனத்தில் புகுந்து அத்தனை வீடுகளையும் எரியூட்டினர். அதைக் கண்டு யாதவர்கள் நெஞ்சில் அறைந்துகொண்டு கதறி அழுதனர். முதியவர்களை

மதுவனத்தில் விட்டுவிட்டு வந்திருந்தனர். போர்நெறிப்படி அவர்களை ஏகலவ்யனின் படைகள் ஒன்றும் செய்யாதென்று எண்ணினார்கள். ஆனால் அவர்கள் அனைவரையும் எரியும் வீடுகளுக்குள் தூக்கி வீசிவிட்டன ஏகலவ்யனின் படைகள்.

யமுனைக்கரைக் காட்டைக் கடந்து தெற்குப் பெருநிலத்தின் காடுகளை அடைந்ததும் பலராமர் ஏழு தூதுவர்களை தொடர்ந்து வரும் ஏகலவ்யனிடம் அனுப்பி தீர்வு கோரி மன்றாடினார். யாதவர்களின் இறுதிக் குழந்தையையும் கொன்ற பின்னரே ஹிரண்யபதத்துக்கு மீளவிருப்பதாக ஏகலவ்யன் சொன்னான். தூது சென்றவர்களின் காதுகளையும் மூக்கையும் வெட்டிவிட்டு திருப்பியனுப்பினான். செய்வதறியாது யாதவர்கள் காடுகளுக்குள் திகைத்தனர்.

அப்போது தன்னந்தனியனாக இளைய யாதவர் அங்கே வந்து சேர்ந்தார். யாதவ குலமே அவரை நோக்கி தந்தைமுன் அஞ்சிய குழவி என கைநீட்டி பாய்ந்தோடியது. இளைய யாதவர் சொன்னார் 'ஏகலவ்யனை நான் அறிந்துள்ளேன். அவன் வஞ்சினம் உரைத்திருக்கிறான் என்றால் இறுதிக்குருதித் துளி எஞ்சுவதுவரை அதை நிறைவேற்றவே முயல்வான். மகதம் அணுகமுடியாத இடத்துக்குச் செல்வதே நாம் செய்யக்கூடுவது. முடிந்தவரை இந்நிலத்தை விலகிச்செல்வோம். யாதவர்களாகிய நமக்கு புல்லிருக்கும் நிலமெல்லாம் உணவிருக்கும்.' அவ்வண்ணம் அவர்கள் அகன்று சென்று உருவாக்கியதே துவாரகை.

அஸ்தினபுரியின் வளர்ச்சி கண்டு பிரக்ஜ்யோதிஷத்தின் அரசனாகிய பகதத்தன் அச்சமும் பொறாமையும் கொண்டிருந்தான். அந்நகர் மீது படைகொண்டு செல்லவேண்டும் என்று விழைந்தான். ஆனால் அவன்

குடிகளும் அவன் பதினெட்டு துணைநாடுகளும் அதற்கு ஒப்பவில்லை. துணைநாடுகளின் படைகொண்டு சென்றாலன்றி அஸ்தினபுரியை வெல்லவும் இயலாது. அவனுடைய அமைச்சர்களில் ஒருவனாகிய நிமலன் "அவர்களை நாம் படைகொண்டு தாக்க வேண்டுமென்றால் அவர்கள் நம்மை தாக்கவைப்பதே முதலில் செய்யவேண்டியது" என்று கூறினான். "அவர்களுக்கு சினமூட்ட வேண்டும். அவர்களே நம்மை தாக்கினார்கள் எனில் நாம் அவர்களை தாக்குவதும் வெல்வதும் முற்றழிப்பதும் அரசமுறை என்றாகிவிடும்" என்றான்.

பிரக்ஜ்யோதிஷத்தின் படைகள் கங்கையில் செல்லும் அஸ்தினபுரியின் படைகளை தடுக்கலாயின. அஸ்தினபுரியின் வணிகர்களை சிறைப்படுத்தி பொருட்களை கவர்ந்தன. ஓர் எல்லையில் பொறுமையிழந்து கர்ணனின் தலைமையில் அஸ்தினபுரியின் படை பிரக்ஜ்யோதிஷத்தின் படைநிலைகளுக்கு எதிராக எழவிருக்கிறது என்று தெரிந்தது. "கானுறைவு முடிந்து பாண்டவர்கள் மீண்டிருக்கும் பொழுது இது. இத்தருணத்தில் அர்ஜுனன் அஸ்தினபுரிக்கு உதவினால் நாம் அழிந்தோம். " என்றான் நிமலன். "நம்மில் ஒரு கிளை யாதவர்களை தாக்கவேண்டும். அவர்களைக் காக்க அர்ஜுனன் சென்றே ஆகவேண்டும்" என்றான்

பிரக்ஜ்யோதிஷத்தின் ஆணை ஹிரண்யபதத்தின் அரசன் ஏகலவ்யனுக்கு அனுப்பப்பட்டது. ஏகலவ்யனை யாதவர் அதற்கு முன் எட்டு களங்களில் சந்தித்திருந்தனர். இறுதியாக பலராமரின் தலைமையில் எழுந்த மதுராவின் படை ஹிரண்யபதத்தை தாக்கியபோது ஏகலவ்யன் காட்டுக்குள் தப்பியோடியிருந்தான். அந்த வஞ்சினம் அவனில் எரிந்துகொண்டிருந்தது. அவன் தன் பெருவில்லவர்

பன்னிரண்டாயிரம் பேரை திரட்டிக்கொண்டு மதுவனத்தை நோக்கி சென்றான். மதுவனத்தின் ஆயர்கள் அஞ்சி ஓடி காடுகளுக்குள் புகுந்தனர். அவர்களின் பசுக்குலங்களை கொன்றழித்தான். மதுவனத்தின் மீது எரி படரவிட்டான்.

அங்கிருந்த ஆயிரம் படகுகளில் அவன் வீரர்கள் மதுரா நோக்கி வந்தனர். அப்போது அங்கு பலராமர் இல்லை. ஏகலவ்யனை ஒடுக்கிவிட்டோம் என நம்பி அவர் தன் திசைப்பயணத்திற்காக வடபுலம் சென்றிருந்தார். மதுராவைத் தாக்கிய ஏகலவ்யன் அதன் கோட்டைகளை உடைத்தான். நகரத்திற்குள் அவன் அம்புகள் நச்சுப்பறவைகளென வந்து விழுந்து உயிர் குடித்தன. மதுரா நகர் எரியூட்டப்பட்டது. அதன் கருவூலங்கள் கொள்ளையடிக்கப்பட்டன. மதுராவின் ஏழாயிரம் படைவீரர்களும் கொல்லப்பட்டனர்.

அங்கிருந்து ஏகலவ்யன் துவாரகை நோக்கி சென்றான். முடிந்தவரை விரைவில் துவாரகை நோக்கி செல்லவேண்டும் என்றும், துவாரகையிலிருந்து வரும் இளைய யாதவரின் படையை நடுப்பாலையிலேயே சந்திக்கவேண்டும் என்றும், ஏகலவ்யனுக்கு ஆணையிடப்பட்டிருந்தது. உபப்லாவ்யத்தில் இருந்து அர்ஜுனனை தன்னை துரத்தி வரச்செய்து பாலைநிலத்தில் நெடுந்தொலைவு கொண்டுவந்து சிக்க வைக்கவேண்டும் என்றும் அஸ்தினபுரி தாக்கப்படும் செய்தி கேட்டாலும் பதினெட்டு நாட்கள் அவன் திரும்பிவரலாகாது என்றும் நிமலன் வகுத்திருந்தான்.

ஏகலவ்யனின் படை மதுராவை தாக்குவதை அறிந்து உபப்லாவ்யத்தில் இருந்து படைகளுடன் வந்த அர்ஜுனன் அங்கே எரியூட்டப்பட்ட நகரைக் கண்டு திகைத்தான். ஏகலவ்யன் மதுராவை அழித்துவிட்டு துவாரகை நோக்கி

செல்வதை அறிந்து அவர்களை துரத்திச்சென்றான். ஆனால் ஏகலவ்யனை அர்ஜுனன் நெருங்குவதற்குள்ளாகவே இளைய யாதவர் எதிர்கொண்டார். அந்தப் போர் நடுப் பாலையில் நிகழ்ந்தது.

ஏகலவ்யனை எதிர்க்க துவாரகையிலிருந்து படை திரட்டிக்கொண்டு வந்து பாலைவனத்திற்குள் நிலைகொள்வது என்பது துவாரகையை கைவிடுவது போன்றது. கடல்படையெடுப்பாளர்கள் அந்நகரை சுற்றிவந்துகொண்டிருந்த காலம் துவாரகை அன்று அத்தனை எதிரிகளும் சூழ்ந்திருந்த இடர்நிலையில் இருந்தது. படைகளுடன் துவாரகையில் காத்திருந்து ஏகலவ்யனை அருகே வரவிடுவது என்பது துரத்திவரும் அர்ஜுனனை பாலையில் நெடுந்தொலைவு வரச்செய்து சிக்க வைப்பது. ஆகவே இளைய யாதவர் வெறும் நூறுபடைவீரர்களுடன் ஏகலவ்யனை எதிர்க்க கிளம்பினார்.

அவர்கள் பாலைநிலத்தில் கால்களில் அகலமான செயற்கைக்குளம்பு அணிந்த விரைவுப்புரவிகளில் வந்து ஏகலவ்யனின் படைவீரர்களை எதிர்கொண்டனர். இளைய யாதவர் செய்த ஒரு சூழ்ச்சியால் ஏகலவ்யன் பாலைநிலத்தில் சிக்கிக்கொண்டான். பாலைநிலத்தில் வரும் படைகள் நீர் நோக்கவும் திசையறியவும் பறவைகளை கூர்ந்து கணிக்கும் முறைமையை கடைப்பிடிப்பதே வழக்கம். அந்திப்பறவைகள் எத்திசையில் செல்கின்றனவோ அங்குதான் பாலைவனச்சோலைகள் அமைந்திருக்கும். இளைய யாதவர் துவாரகையிலிருந்து பயிற்றுவித்துக் கொண்டு வந்த பறவைகளை ஏகலவ்யனின் படைகளுக்கு குறுக்காக அனுப்பினார். அவை அவன் படைகளை தலைவழியாக கடந்து அப்பால் சென்று விழிமறைந்ததும் மண்ணிலிறங்கி மீண்டும்

அங்கிருந்த துவாரகையின் படையினரின் கூண்டுகளுக்குள் சென்று நீரருந்தி உணவுகொண்டன.

பறவைகளின் செலவைக் கண்டு அத்திசையில் பாலைவனச்சோலை இருக்கிறதென்று வழிகாட்டிகள் கணிக்க ஏகலவ்யன் தன் படைகளைத் திருப்பி அங்கே கொண்டுசென்றான். இரவு எழும் வரை சென்றும் சோலையோ நீரோ தென்படாமல் அவன் படைகள் சோர்ந்தன. மறுநாள் புலரியில் அவர்கள் கிளம்பியபோது மீண்டும் அதேபோல பயிற்றுவிக்கப்பட்ட பறவைகள் திசைமாற்றி அழைத்துச்சென்றன. மூன்று நாட்கள் அவ்வண்ணம் திசைமாற்றி பாலைவனத்தில் அலைக்கழிக்கப்பட்ட ஏகலவ்யன் படைகள் தளர்ந்து செயலிழந்து மணலில் உழன்றன.

அவர்களை தான் விரும்பிய இடத்திற்கு இளைய யாதவர் அழைத்து வந்தார். அங்கு உரிய தருணத்திற்காக அவர் காத்திருந்தார். அவர் எதிர்பார்த்திருந்தது போலவே மணல்புயல் எழுந்து அவர்களை சூழ்ந்துகொண்டபோது அதை திரையென்றாக்கி அதனூடாக இளைய யாதவரின் நூறு வில்லவர்கள் நச்சு தடவிய அம்புகளுடன் ஏகலவ்யனின் படையை சூழ்ந்துகொண்டனர். விழி கட்டப்பட்டவர்களை கொன்று குவிப்பதுதான் அங்கே நிகழ்ந்தது. ஏகலவ்யனின் படைகள் முற்றழிந்தன.

புயல் தணிந்தபோது புண்பட்டு மண்ணில் புதைந்து கிடந்த ஏகலவ்யனை தேடிப்பிடித்து பின்கை கட்டி அழைத்து வந்தனர் இளைய யாதவரின் வீரர்கள். அவர்களுடன் நாற்பத்தெட்டு நிஷாத வீரர்களும் சிறையுண்டனர். ஏகலவ்யன் “நான் பிரக்ஜ்யோதிஷத்தின் படைத்தலைவன். அரசமுறைப்படி போர்புரிய படைகொண்டு வந்தவன். இங்கு நிகழ்ந்தது

போரல்ல, சூழ்ச்சி மட்டுமே" என்றான். "எனினும் போர்த்தலைவனுக்குரிய நெறிமுறைகளை நாடுகிறேன். உரிய முறையில் நான் களப்பலியாக வேண்டும். இறுதிச்சடங்குகள் நடத்தப்பட வேண்டும்" என்றான்.

இளைய யாதவர் "உன் உடற்குறையை நீ உளக்குறையென்று ஆக்கிக்கொண்டாய். மதுராவிலும் மதுவனத்திலும் நீ செய்தது போரல்ல, உன் வஞ்சத்தை எளியவரிடம் தீர்த்துக்கொண்டாய். இதோ நெறிபிழைத்து தோற்கடிக்கப்பட்டாய் என்று உன் வாயால் சொன்னாய். அது இனிமேல் நீயும் உன் குடியும் நெறிகளை கடைப்பிடிக்க போவதில்லை என்பதற்கான அறிவிப்புதான். நாங்கள் முளைத்தெழும் குலம். தொடர்ந்து வரும் தாக்குதல்களால் எங்கள் இளம்பயிர் அழியலாகாது. எனவே இனி எவரும் எங்கள்மேல் படைகொண்டுவர எண்ணமுடியாதபடி உன் அழிவு நிகழவேண்டும்" என்றார்.

ஏகலவ்யன் "கொல்ல உங்களுக்கு உரிமை உண்டு யாதவரே, நான் மண்புகுவதை தடுக்கும் உரிமை இல்லை" என்றான். இளைய யாதவர் "நீ மண்புகக்கூடாது. மண்ணில் வேரென உறையும் உன் முன்னோருடன் நீ சேர நான் விடமாட்டேன்" என்றார். தன் வாளை உருவி அவன் தலையை வெட்டி வீழ்த்தினார். அந்தத் தலை தனியாக துவாரகைக்கு கொண்டுசெல்லப்பட்டு கடலில் வீசப்பட்டது. உடல் பாலைநிலத்தில் பறவைகளுக்கு உணவாக அளிக்கப்பட்டது. ஒரு துளியும் மண்ணை அடையவில்லை. அச்செயல்கள் அனைத்தையும் நிஷாத வீரர்கள் பார்க்கும்படி செய்யப்பட்டனர். அவர்கள் அதை சென்று அறிவிக்கவேண்டும் என பாலைநிலத்தைக் கடந்து ஊர்திரும்பச் செய்யப்பட்டனர்.

“அக்கொலை அதற்கு முன் நிகழ்ந்தவற்றின் தொடர்ச்சி. அந்நிகழ்வுகள் அதற்கு முன் நிகழ்ந்தவற்றால் மூட்டப்பட்டவை. அது ஒரு நீள்சரடு. ஒருவேளை அதை இங்கு இவ்வண்ணம் முற்றறுத்து நிறுத்த அவர் விழைகிறார் போலும்” என்றார் சௌம்யர்.

# கல்பொருசிறுநுரை - 86

## பகுதி எட்டு : சொல்லும் இசையும் – 5

மலையன் சொன்னான். நான் மலையேறி இறங்கி சௌம்யர் சொன்ன அடையாளங்களினூடாகs சென்று தண்டகாரண்யத்தின் நடுவே பதினெட்டு மலைமுடிகளால் சூழப்பட்ட பள்ளத்தாக்கில் சௌந்தர்யம், சௌம்யம் என அழைக்கப்பட்ட இரு மலைமுகடுகளுக்கு நடுவே மண்மடிந்து மலைச்சரிவு என்றாகி இறங்கி வந்து வளைந்தெழுந்து மேலே செல்லும் கணவாயினூடாகs செல்லும் பாதை சென்றடையும் இடத்தில் அமைந்திருந்த மந்தரம் எனும் ஆயர்சிற்றூரை அடைந்தேன். அங்கு இளைய யாதவர் தங்கியிருக்கிறாரா என்று உசாவினேன். அங்கு எவருக்கும் அவ்வண்ணம் எவரையுமே தெரியவில்லை. முதலில் நான் பெற்றது ஒரு பிழைச் செய்தியாக இருக்குமோ என்ற ஐயத்தை அடைந்தேன். பின்னர் அவ்வண்ணம் இருக்க வழியில்லை என்று உணர்ந்து மேலும் பல வினாக்களை கேட்டேன்.

அங்கிருந்த தயை என்னும் சிறுமி பாணர்களும் பிறரும் வந்து சந்தித்துச் செல்லும் முனிவர் ஒருவர் இங்கிருக்கிறார் என்றும், அவர் தவம் இயற்றுவதில்லை, மைந்தருடன் விளையாடி புற்குழலிசைத்தும் தனித்தமர்ந்தும் பொழுது கழிக்கிறார் என்றும் சொன்னாள். "அவர்தான்! அவரை சந்திக்கவே நான் வந்தேன்!" என்று சொன்னேன். ஒரு சிறுவன் "நான் அழைத்துச் செல்கிறேன்! நான் அழைத்துச் செல்கிறேன்!" என்று துள்ளினான். "என் பெயர் ருத்ரன், எனக்கு அவரை தெரியும்" என்றான். ஏராளமான குழந்தைகள் "நான் அழைத்துச் செல்கிறேன்" என்று கூச்சலிட்டார்கள். "சரி, எல்லோரும் சேர்ந்து அழைத்துச் செல்லுங்கள்!" என்று நான் சொன்னேன்.

அவர்கள் சிறு பறவைகள்போல கூச்சலிட்டபடி எனக்கு முன்னால் துள்ளித் துள்ளி ஓடினார்கள். பறவைச் சுழல்போல அவ்வூரின் நடுவிலிருந்த சிறிய புற்குடிலை வளைத்துக்கொண்டு உள்ளே நுழைந்தார்கள். "உள்ளே அவர் இல்லை!" என்று ஒருவன் கூறினான். "எனக்குத் தெரியும், அவர் காட்டுக்குள் இருக்கிறார். காட்டுக்குள் இருக்கும் இடம் எனக்குத் தெரியும்" என்று இன்னொரு சிறுவன் கூறினான். "நான் அழைத்துச் செல்கிறேன்! நான் அழைத்துச் செல்கிறேன்!" என்று நூறு குரல்கள் வெவ்வேறு சுதியில் கூவின.

நான் தொடர்வதற்குள்ளாகவே பலர் காட்டுக்குள் ஊடுருவி ஓடத்தொடங்கினர். "ஓட வேண்டாம், மெதுவாகச் செல்லுங்கள்" என்று நான் கூறினேன். அவர்களுக்கு இணையாக என்னால் புதர்களில் ஊடுருவிச்செல்ல இயலவில்லை. முன்னால் சென்றவர்கள் நின்று திரும்பி வந்தனர். பின்னால் சென்றவர்கள் முந்திச் செல்ல மீண்டும் அவர்கள் முன்னால் சென்றனர். அந்தி வானில் பறவைக்கூட்டம் பறக்கும் துகிலெனச்

சுழல்வதைப்போல அவர்கள் அலைவுகொண்டனர். புதர்களினூடாக கீரிக்கூட்டம்போல ஊடுருவினர். புதர்களுக்குமேல் தவளைகள் என எழுந்து குதித்தனர்.

அந்தக் குறுங்காடே மலர்கள் பூத்துச் செறிந்து வண்ணம் கொண்டிருந்தது. அவ்வாறு முழுக் காடே மலர் எனப் பூப்பதை நான் அதற்குமுன் பார்த்ததில்லை. கடல் ஒன்று வண்ண நுரைகொண்டு அலைகொள்வதுபோல பூங்குலைகள் செறிந்த கிளைகள் உலைந்தன. பூம்பொடி உதிர்ந்து அக்காட்டின் தரையே பொன்னிற விரிப்பாகக் கிடந்தது. அதன் மேல் கால்வைப்பதே பிழையென்று தோன்றும் அளவுக்கு மென்மையான மலர்ப்பொடி பரவியிருந்தது. கால்வைத்த இடமெங்கும் சிறுபூச்சிகள் எழுந்து ரீங்கரித்து பறந்தன. பலநூறு சிறு பறவைகள் அமர்ந்தும் எழுந்தும் கொத்திக்கொண்டிருந்தன. எங்களைக் கண்டு காற்றில் சிறகடித்து எழுந்து மலர்களை மழைத்துளிகள்போல உதிரச்செய்தன.

தலைக்குமேல் குருதிச்செந்நிறமும் வெண்ணிறமும் பொன்னிறமும் என மலர்கள் பூத்த கிளைகள் தழைந்து சலிப்புற்று நின்றன. பொன்மஞ்சள் நிறமே ஓங்கியிருந்தமையால் செந்நிறமும் வெண்ணிறமும் அதன் வேறுவேறு நிலைகள் என்று ஆகி பேரோவியம் ஒன்று கண்முன் விரிந்தது. ஒரு சிறு காற்று கடந்து சென்றபோது மலர்களும் பொடிகளும் உதிர்ந்து அவ்வண்ணம் திரையென்றாகி என் முன் நெளிந்தது. குழந்தைகள் அம்மலர்ப்பொடியில் குதித்து விளையாடின. துள்ளி கிளைகளைப்பற்றி உலுக்கி மலர் உதிரச் செய்தன. அம்மலர்களிலிருந்து வண்டுகள் முழங்கி எழுந்தன.

ஒவ்வொரு மரமும் ஒரு யாழென்று தோன்றியது. தொட்டதும் நரம்பதிரும் இசையை தேக்கி வைத்த ஆழம் கொண்டவை. விரலுக்காக காத்திருப்பவை. இசைக்கு முந்தைய கணத்தில் இறுகி நின்றிருப்பவை. எனில் இந்தப் பாறைகள் அனைத்தும் முழவுகளா? தேன் உண்ணும் பறவைகள் காற்றில் சிறகடித்து நின்றன. அவற்றின் துளித்துளிப் பேச்சொலிகள். உலையும் கிளையிலிருந்து வண்டொலியுடன் உதிர்ந்த மலரொன்று ரீங்கரித்தபடி மண்சேர்ந்தது. அதிலிருந்து எழுந்த வண்டு மீண்டும் சென்று கிளையில் அமைந்தது.

வண்ணமும் ஒளியும் மணமும் இளங்காற்றின் தண்மையும் ஒன்றென்றே ஆன அச்சூழல் என்னை பித்தெழச் செய்தது. ஒரு கனவிலன்றி வேறெங்கும் அப்படி ஒரு நிலத்தை காண இயலாது. கற்பனையில் திளைத்து மெய்யுலகு மறைந்து வேறெங்கோ மொழி உருவாக்கிய நிலத்தில் வாழும் கவிஞனென்று என்னை உணர்ந்தேன். மெய்யாகவே அந்த மயக்கம் அப்போது உருவாயிற்று. அது ஒரு காடா அன்றி எதேனும் தொல்நூலின் அணிகொண்ட சொற்கள் சமைத்த கற்பனையில் நான் கடந்துவிட்டேனா? மரமெல்லாம் மலராகும் ஒரு நிலம் இப்புவியில் இருக்க இயலுமா என்ன?

அக்காடே ஒரு மாபெரும் மலரென்றாகிவிட்டது. ஒரு சிறுவண்டென அதற்குள் நுழைந்து திசை மறந்தேன். உடலெல்லாம் பூம்பொடி மூடியது. என் ஆடைகள், தலைமுடி, கைகால்கள் அனைத்திலும் செம்மஞ்சள்நிறப் பூச்சு. பொன்னென்றாகி பொன்னில் மூழ்கித் திளைத்து சென்றுகொண்டிருந்தேன். என் முன்னால் கடந்து சென்ற கீரியொன்று பூம்பொடியால் பொன்னென்றாகியிருந்தது. மரக்கிளை ஒன்றிலிருந்து தொங்கி இறங்கிய குரங்கு

பொன்னிறப் பூம்பொடியால் மூடப்பட்டிருந்தது. பூம்பொடியின்மேல் பாம்புகள் சென்ற தடங்கள் பொன் வடுக்களாக தெரிந்தன.

"அங்கே! அங்கே!" என்று ருத்ரன் கூறினான். "எங்கே?" என்றேன். "அங்கே... அங்கே புல்லாங்குழல் கேட்கிறது! அங்கிருக்கிறார்!" என்றான் ருத்ரன். அவன் கைகாட்டியதும் அனைவரும் அமைதியாயினர். ஓசைகள் முற்றடங்கியபோது அங்கிருந்த கிளிக் கொஞ்சல்களும் வண்டு மிழற்றல்களும் கலந்து காற்றின் ஓசையின் மேல் ஏறி என்னைச் சூழ்ந்தன. அவை அனைத்தினூடாகவும் கலந்து அனைத்தையும் இணைத்து அடிப்படை சுதியென்றாகி ஒலித்துக்கொண்டிருந்த குழலிசையை நான் கேட்டேன். அங்கு நின்று செவியே உயிரென்றாகி அதை கேட்டுக்கொண்டிருந்தோம்.

அந்த ஓசை சுழன்று சுழன்று வந்தது. சிலந்தியின் பட்டுநூல் வலை என வடிவம்கொண்டு அசைந்தது. புகைச்சுருளா, தளிர்முனையா, நீர்த்துளி நடுக்கா? வழிந்து பொன் கம்பியென இழுபட்டது. வழுக்கி வழுக்கிச் சென்று சுருண்டெழுந்தது. உயிர் நாடகங்கள் அனைத்தையும் அவ்விசையில் பார்த்தேன். சிறுபுழுவென நெளிந்து நெளிந்து பின் அசைவிழந்து தன்னை தன்னாலேயே சிறையிட்டுக்கொண்டு தவமிருந்து சிறகு கொண்டு எழுந்து காற்றில் பறந்து அலைவு கொண்டு மறைந்து மீண்டும் எழுந்தது. முட்டை உடைத்து எழுந்து வந்தன விழிவெறித்த பல்லிகள். கருக்குடம் உடைந்து ஈரம் சிலிர்க்க எழுந்து நின்றன கன்றுகள். நீரில் சேற்றில் துடிதுடித்து திளைத்தன பல்லாயிரம்கோடி புழுக்கள்.

கருவறை கிழித்து வெளிவந்து கண் திறந்து உலகைப் பார்த்து திகைக்கும் கன்றின் மயங்கல். பெரும் பசி கொண்டு உடல்

துள்ள அன்னை மடி தேடிய நாய்க்குட்டியின் துடிப்பு. சிறகு முளைத்த பின் கூண்டிலிருந்து தவிக்கும் குஞ்சின் தவிப்பு. புழுக்கள் வாய்கவ்வி நெளிந்தும் பூச்சிகள் சிறகிணைத்துப் பறந்தும், நாகங்கள் பிணைந்தும், நாரைகள் கழுத்து பிணைத்து ஆடியும், மான்கள் தழுவிக்கொண்டும், எருமைகள் கொம்புமுட்டியும், யானைகள் மலைப்பாறைகள் என மத்தகம் அறைந்துகொண்டும் இயற்றும் காதல். விழி மெல்ல சரியும் பறவையின் சாவு. வால்நுனி அணையும் நாகத்தின் மறைவு. மரத்தில் சாய்ந்து நின்றிருக்கும் யானையின் இறுதித் துதிக்கை அசைவு. விரல்கள் ஒவ்வொன்றாக விரிந்து விடுபடும் விலங்கின் விழிவெறிப்பு. எரிந்தெழுதல் அணைந்தமைதல். அலைகொள்ளல் அடங்கியமைதல். வீழ்தல் மறைந்து எழுதல். முடிவின்மை என நிகழும் தனிக்கணங்கள்.

என்ன நிகழவில்லை அங்கு என்று எனக்கு சொல்லத் தெரியவில்லை. இளைய பாண்டவரே, நான் கேட்டது இசைதானா என்றும் எனக்கு தெரியவில்லை. அது இங்கு இவையனைத்தையும் நிகழ்த்தும் ஒன்றின் செவியுணர் வெளிப்பாடு. இவையனைத்துமாகிய அது தானன்றி மாறி தன்னை தூய ஒலியென்றாக்கி காட்டுவது. ஒரு தருணம் உண்மையில் நான் கேட்டது ஒரு சிறு துளி மட்டும்தானா? அதை நான் செவிகளால் கேட்கவே இல்லையா? அலைகடலில், பேரருவியில், சுழற்காற்றில், எரிமலை வெடிப்பில் நிகழும் அதுவேதானா? அறியேன். அங்கு நான் கேட்டதை என்றோ ஒரு நாள் ஒரு காவியமென எழுதுவேன். அதன் சதுப்பில் ஒரு சிறு பட்டாம்பூச்சியெனச் சென்று பதிந்து தடமாகி மறைவேன்.

முடிவிலாது வெல்பவன் இசைக்கலைஞன். முடிவிலாது தோற்பவனே இசைஞானி. அங்கு விண்ணெழுந்து

விண்ணெழுந்து சரியும் ஒரு கோடி கைகளை கண்டேன். தொட்டுத் தொட்டு நழுவும் நோக்குகளை கண்டேன். விண் விண் என சொல்லி அமையும் மண் பொருட்கள் அனைத்தையும் கண்டேன். தன்னை தானென உணர்ந்து தருக்கி, தானே என தனையுணர்ந்து இறங்கி ஊசலாடும் முடிவிலியை கண்டேன். இங்கு இவையென்றாகி நிறைந்திருப்பதும், இவையெங்கிலும் நிறைந்து எஞ்சுவதும், இவையனைத்திலும் படிய இயலாதாகி பிறிதொரு வெளியில் நின்றிருப்பதும், இங்கிருந்து எழுந்து சென்று தொடத் தக்கதும், இங்கிருக்கும் அனைத்தையும் துறந்தால் மட்டுமே அறியத் தக்கதும் ஆகிய ஒன்று.

இசை அகநிகழ்வு. அகம் புறத்தை மீட்டுவது. மீட்டப்பட்ட புறம் பெருகி அகத்தை ஆள்வது. அந்த இசை பொறியுணரும் சுவைகளனைத்துமாகி அங்கெல்லாம் நிறைந்தது. எரிந்தது, இருண்டது, நாறியது, கசந்தது, முழங்கியது. பின்பு குளிர்ந்தது, ஒளிர்ந்தது, இனித்தது, இசைத்தது. இசை அலையடிப்பது, நிலை கொள்ளாதது, சென்று மீள்வது, நிகழ்கையிலேயே இருப்பு கொள்வது. அங்கோ நிகழாது அமைந்திருக்கும் இசை ஒன்றை கண்டேன். அருமணி நிகழ்வும் இருப்பும் ஒன்றே என ஆவதுபோல. அங்கு இசையென தன்னை வெளிப்படுத்திய ஒன்று பிறிதொன்றை நோக்கி நீயும் நானே என்றது. ஆம், நானே நீ என்றது அது.

நான் என்னை உணர்ந்தபோது இசை அங்கு நின்றுவிட்டிருந்தது. என்னைச் சுற்றி அக்குழந்தைகள்

அனைவரும் ஆங்காங்கே அசைவிலாது அமர்ந்திருந்தனர். ருத்ரன் தன்னிலை கொண்டு 'அங்கே' என்று கைகாட்டினான். 'ஆம்' என்று நான் தலையசைத்தேன். அவன் 'வருக' என்று கைகாட்டி என்னை மட்டும் அழைத்துச் சென்றான். பிற மைந்தர் அப்போதும் எஞ்சும் இசையில் அங்கேயே ஆழ்ந்திருந்தனர். நாங்கள் நடந்து அனலெனப் பூத்த சிறுபுதர்களை விலக்கி, மலர்களிலிருந்து மலர்களுக்குச் சென்று, மலர்களில் புதைந்து, மலர்களில் எழுந்து, மலர்களில் நீந்தி முன்னால் சென்றோம்.

சிற்றோடை ஒன்றை நோக்கிச் சரிந்த மலைச்சரிவில் சிறுமலர்ச்செடிகள் பூத்து பொன்னிறப் பெருவிரிப்பு என விரிந்திருந்தன. அதன்மேல் இளைய யாதவர் அந்தப் புற்குழலை தன் நெஞ்சில் வைத்து இரு கைகளையும் தலைக்குமேல் அணையென வைத்து மல்லாந்து படுத்திருப்பதை பார்த்தேன். அவர் தலையில் அம்மயிற்பீலி இளங்காற்றில் நலுங்கிக்கொண்டிருந்தது. அக்குழல் தன் இசை அனைத்தையும் வெளிப்படுத்திவிட்டதுபோல் மயங்கி அமைந்திருந்தது. அவர் உடலில் எங்கும் அசைவில்லை. இடது கால் பாதத்தை மட்டும் மெல்ல சுழற்றிக்கொண்டிருந்தார்.

அக்காலில் கட்டைவிரல் நகம் மட்டும் கருமை கொண்டிருப்பதை கண்டேன். குறையற்ற முழுமை கொண்ட அவர் உடலில் அது ஒன்றே குறையென்று தெய்வங்களால் அமைக்கப்பட்டதென்று முன்னரே அறிந்திருந்தேன். அத்தருணத்தில் அது அவர் அழகின் உச்சமென்று தோன்றியது. புற்சுவை உணர்ந்து தன்னில் மயங்கிய மானின் அரைவிழியென ஈரக்கரிய ஒளி கொண்டிருந்தது அது.

ஒருகணம் நோக்குகையில் புதருக்குள் நின்று மேயும் மானொன்றின் விழியென்றே அது அசைந்தது.

எழுகதிரொளி அவர் தலைக்குப் பின்னால் இருந்தது. அங்கிருந்து மரங்களினூடாக வந்த வெளிச்சத்தில் அவருடைய நிழல் காலடி நிலத்தில் விழுந்து நுடங்கிக் கிடந்தது. அது முதலில் நிழலென்று தோன்றியது. பின்னர் அது ஓர் உருவென்று கண்டேன். இடையொடிந்து முற்றாக மடிந்த ஒரு மானுட உடல். முதியவர், அந்தணர். மின்னும் கண்கள் கொண்டவர். அவர் இளைய யாதவரைப் பார்த்தபடி அங்கே அமர்ந்திருந்தார். அவர் முகத்திலும் பேரழகு மிக்க ஊழ்கப் புன்னகை இருந்தது.

"அது யார்?" என்று நான் கேட்டேன். கைசுட்டி "அவர் காலடியில் அமர்ந்திருப்பவர்?" என்று மீண்டும் கேட்டேன். "அவர் நேற்று இங்கே வந்தார். இரண்டு சூதர்கள் அவரை ஒரு தாலத்தில் வைத்து கொண்டுவந்தனர். அவர் முனிவருடன் அக்குடிலிலேயே தங்கினார். அவர்கள் ஒரு சொல்லும் பேசிக்கொள்ளவில்லை. ஒருவரை ஒருவர் பார்த்தபடி இதேபோல அமர்ந்திருந்தார்கள்" என்று ருத்ரன் சொன்னான். "இங்கே எப்படி வந்தார்?" என்றேன். ருத்ரன் "ஆம், எப்படி வந்தார்?" என்றான். "அவரிடம் சென்று வணங்க விழைகிறேன்" என்றேன். "ஆனால் அவ்வூழ்க நிறைவை நான் ஊடுருவலாமா என்று தயங்குகிறேன்."

அச்சொற்களை நான் முடிப்பதற்குள் தொலைவிலிருந்து நீள்அம்பொன்று வந்து அவர் இடநெஞ்சில் பாய்ந்து தைத்து நின்றது. கண்விரைவால் கணமென அதை காணமுடிந்தது. சித்தமுணர்வதற்குள் அவர் உடலில் சிற்றலைபோல் மெல்லிய துடிப்பொன்று எழுந்து அடங்கியது. "என்ன? என்ன?" என்று நான்

கேட்டேன். “அம்பு!” என்று ருத்ரன் சொன்னான். “அம்பா? யார்?” என்றேன். அவன் ஓடத்தொடங்கியிருந்தான். நானும் புதர்களை விலக்கி அவரை நோக்கி ஓடினேன். அணுகி அவ்விசையிலேயே விழுந்து மண்டியிட்டு அவரை தொட்டேன். அவர் உடலிலிருந்து உயிர் அகன்றிருந்தது.

அவர் முகத்தில் அனைத்தும் அறிந்ததுபோல் இளநகை குடிகொண்டிருந்தது. சிரித்துக்கொண்டே எழுந்து அனைத்தையும் களியாட்டென மாற்றிவிடுவார் என்பதுபோல். அந்த அம்பு அவர் விலாவின் நடுவே புகுந்து ஆழப் புதைந்து நெஞ்சக்குலையை தைத்திருந்தது. அது தைத்த அக்கணத்திலேயே அவர் உயிர்துறந்திருந்தார். சுடர் அணைவதுபோல், கனியுதிர்வதுபோல் மிகமிக எளிதான ஒரு நிகழ்வு. இருத்தலுக்கும் இன்மைக்கும் நடுவே காலம் என்று ஒன்று இல்லை என்று ஒரு தொல்கூற்று உண்டு. பாண்டவரே, காலமின்மையில் நிகழ்ந்தது அவரது இறப்பு.

அப்பாலிருந்து இரு வேடர்கள் ஓடிவந்தனர். அவர்மேல் அம்பு தொடுத்த முதிய வேடன் அருகணைந்து “மானுடன்!” என்றான். “யார்?” என்று பின்னால் வந்த இளைஞன் கேட்டான். “அது மானின் விழியல்ல, இங்கே ஒருவன் படுத்திருந்திருக்கிறான்!” என்று முதியவன் சொன்னான். நான் எழுந்ததும் அவர்கள் இருவரும் என்னை அம்பு எடுத்து குறிவைத்தனர். என் கையில் படைக்கலம் எதுவும் இல்லை என்று கண்டதும் “நாங்கள் மான்விழி என்று எண்ணினோம். மானுக்காகவே அம்பு தொடுத்தோம். மானுடர் என்று அறிந்திருக்கவில்லை” என்றான்.

இளையவன் “சிறுவன் உடனிருக்கிறான். இங்கே அருகே ஊர் இருக்கிறது. இங்கு நிற்கவேண்டாம், ஓடிவிடுவோம்” என்றான். இருவரும் திரும்பி விரைந்து அகன்று ஓடினர். அவர்கள்

இருவருமே வலக்கையில் நான்கு விரல் மட்டுமே கொண்டிருந்தனர். நான் அவர்களை திகைப்புடன் நோக்கிக்கொண்டிருந்தேன். அவர்கள் புதர்களில் மீன்கள் நீரில் மூழ்குவதுபோல் மறைந்தனர். பின்னாலிருந்து சிறுவர்கள் ஓடிவந்தனர். "இறந்துவிட்டார்!" என்று ஒருவன் கூவினான். "நான் முதலிலேயே பார்த்தேன்... நான் முதலிலேயே பார்த்தேன்" என்றான் இன்னொருவன். "வேடர்கள் வருவதையே நான் பார்த்தேன்!" என்று இன்னொருவன் கூவினான். "நான் பார்த்தேன்! நான் பார்த்தேன்!" என்று கூச்சல்களுடன் அவர்கள் பூசலிட்டனர்.

"ஊருக்குள் சென்று கூறுக..." என்று நான் சொன்னேன். "நான் சொல்கிறேன்... நான் சொல்கிறேன்" என்று கூவியபடி அவர்கள் ஓடினர். இறுதியாக ஒரு சிறுவன் திரும்பி என்னிடம் மழலைக்குரலில் திக்கலுடன் "நான் நான் நான் போய் சொல்லுவேன்" என்று கைசுட்டி காட்டினான். அவனும் அவர்களைத் தொடர்ந்து ஓடினான். ருத்ரன் "அவர் இங்கே உயிர்விட வந்திருப்பதாக பலமுறை சொல்லியிருக்கிறார். ஆகவே எவருக்கும் இதில் திகைப்பில்லை" என்றான்.

நான் அப்போதுதான் உளமுணர்ந்து "அவர் எங்கே?" என்றேன். "இங்கிருந்த உடல்மடிந்த முதியவர்? எங்கே அவர்?" சுற்றிலும் திரும்பித் திரும்பி நோக்கி புதருக்குள் அவர் மல்லாந்து விழுந்திருப்பதை கண்டேன். அவர் அந்த அம்பு வந்ததைக் கண்ட அதிர்ச்சியில் உயிர்துறந்திருந்தார். கைகள் இருபுறமும் விலகி விரிந்திருக்க முகம் ஊழ்கப் புன்னகையுடனே உறைந்திருந்தது. நான் திரும்பி இளைய யாதவரை பார்த்தேன். இருவர் முகத்திலும் ஒரே புன்னகை இருப்பதாகத் தோன்றியது.

என் உளமயக்கா அது? ஆனால் ருத்ரன் "அம்பு படுவதற்கு முன்பு நான் ஒன்றை கண்டேன்" என்றான். நான் திரும்பிப் பார்த்தேன். "அந்த முதியவர் கரிய வண்டுபோல வந்து அவர் கட்டைவிரலின் கரிய நகத்தில் அமர்ந்து அப்படியே உள்ளே சென்று மறைந்தார். அதன்பின் அந்தக் கரிய நகம் மேலும் ஒளிவிட்டது" என்றான். நான் பொருள் விளங்கா வெறிப்புடன் அவனை நோக்கிக்கொண்டு நின்றேன். தொலைவில் மந்தரம் என்னும் அச்சிற்றூருக்குள் சங்கொலி எழுந்து இளைய யாதவரின் இறப்பை அறிவித்தது.

# கல்பொருசிறுநுரை - 87

**பகுதி எட்டு : சொல்லும் இசையும் – 6**

மலையன் சொன்னான். அரசே, இளைய யாதவரின் விண்புகுதல் செய்தியை புறவுலகுக்குச் சொல்லும் கடமையை ஊழ் எனக்கு அளித்தது. சான்றாக அவருடைய காதில் கிடந்த குண்டலங்களையும் கையிலிருந்த கணையாழியையும் எடுத்துக்கொண்டேன். அவற்றிலிருந்த அருமணிகள் அனைத்திலும் உள்ளே சங்கும் ஆழியும் பொறிக்கப்பட்டிருந்தன. அவற்றை கண்ணெதிரில் தூக்கிப்பார்க்கும் எவருக்கும் அது எவருடையதென்பது ஐயமில்லாது தெரியும்.

செல்லும் வழியெங்கும் நான் சூதரிடமும் வணிகரிடமும் அச்செய்தியை உரைத்துக்கொண்டே இருந்தேன். ஆகவே ஒற்றர்கள் வழியாக நான் செல்லும் இடத்திற்கெல்லாம்

அச்செய்தி முன்னரே சென்று சேர்ந்திருந்தது. நான் சான்று காட்டி அதை உறுதிப்படுத்த மட்டுமே வேண்டியிருந்தது. என்னை யாதவ ஒற்றர்கள் பிடித்துக்கொண்டு படகினூடாக மதுரா நகருக்கு கொண்டு சென்றனர்.

யமுனையில் படகிறங்கி நகர்புகுந்து தெருக்களினூடாக வருகையில் அங்கு துயரம் நிறைந்திருப்பதை கண்டேன். ஆனால் பொன்றாப் பெருந்துயர் அல்ல அது. எதிர்பார்த்திருந்த ஒன்று நிகழ்கையில் எழும் நிறைவு கலந்த துயர். அது அசைவில்லாதது, மற்ற துயர்களைப்போல ஓங்கி தணிந்து அலைகொள்வதில்லை. இல்லத்து மாமுதியவர்கள் விழுகையில் அதை கண்டதுண்டு. மங்கலச் சாவு என்று அதை சொல்வார்கள்.

அது அவ்வண்ணமே நிகழும் என வாழ்வை அறிந்தமைந்தமையால் எழுவது. அல்லது நெடுங்காலம் தங்களைச் சூழ்ந்திருந்த ஒன்று அகல்கையில் ஏற்படும் விடுதலை உணர்வு. உண்மையில் சாவல்ல மனிதர்களை அலைக்கழிப்பது, சாவின் பொருளின்மைதான். இளமையில் நிகழும் சாவு துணுக்குறச் செய்கிறது. அது ஒரு பொருளில்லா விடுகதை. முதுமைச்சாவு தன் பொருளை தானே விளக்குவது. ஆகவே முடிவுகொண்ட பாடல் போன்றது.

நான் செல்கையில் மதுராவின் அரண்மனையின் சிற்றவையில் நிஷதன் தன் இளையோருடன் அமர்ந்திருந்தார். அவையில் என்னை கொண்டுசென்ற ஒற்றன் என் வருகையை அறிவித்தான். நான் உள்ளே சென்று என் ஊரையும் குலத்தையும் பெயரையும் அறிவித்து நிகழ்ந்தனவற்றை சுருக்கமான சொற்களால் கூறினேன். கூறிக் கூறி ஒரு செய்யுள்போல் அதை யாத்திருந்தேன். அவை முறைமைப்படி

“இளைய யாதவர் விண்புகுக! வெல்க விருஷ்ணி குலம்! வெல்க யாதவப் பெருங்குலம்!” என்று ஓசையிட்டது.

ஆனால் நிஷதனும் உல்முகனும் இயல்பாகவே இருந்தனர். இருவர் முகங்களிலும் அதிர்ச்சியோ துயரோ தென்படவில்லை. நிஷதன் சற்று அசைந்து அமர்ந்து “தெய்வங்களும் மூதாதையரும் அருள்க! இதை இந்த அவை பல நாட்களாக எதிர்பார்த்திருந்தது” என்றார். “துயரத்திற்குரியது, எனினும் இயன்றே ஆவது. இவ்வண்ணம் இது நிகழவேண்டும் என்பதே ஊழ் எனில் அவ்வாறே.”

அமைச்சர் ஒருவர் “முறைப்படி இதை நகருக்கு அறிவிக்கலாமல்லவா?” என்றார். “நகர் முன்னரே அறிந்திருக்கிறது. நாம் அளிக்க வேண்டியது அரச உறுதிப்பாட்டை மட்டுமே. அரசமுறையாக பதினாறு நாள் துயரத்திற்கும், நாற்பத்தியோராவது நாள் விண்ணேற்றச் சடங்குகளுக்கும் ஆணையிடுக! அனைத்தையும் ஒருங்கு செய்க!” என்றார் நிஷதன். “ஆணை” என்று அமைச்சர் தலைவணங்கினார்.

பின்னர் அங்கு நிகழ்ந்ததெல்லாம் அரசுசூழ்தல் மட்டுமே. எவ்வண்ணம் அத்துயர் அறிவிக்கப்படவேண்டும், அரசகுடியினரில் எவருக்கெல்லாம் அத்துயர் அறிவிக்கப்படவேண்டும், அதற்கான சொற்கள் மற்றும் முறைமைகள் என்னென்ன, விருஷ்ணி குலத்தில் எவரெவருக்கெல்லாம் செய்திகள் செல்லவேண்டும், எந்த அடுக்கில் அனுப்பப்படவேண்டும் என்பவை பேசப்பட்டன. நான் சிறு பீடத்தில் கைகளைக் கட்டி அமர்ந்து அதை கேட்டுக்கொண்டிருந்தேன். முதலில் என் உள்ளம் எரிந்தது,

கொந்தளித்தது, பின் அடங்கியது, இறுதியில் நான் புன்னகைத்துக் கொண்டிருந்தேன்.

“மதுராவிலிருந்து இளைய யாதவரின் எட்டு அரசியருக்கும் முறைப்படி செய்தி அறிவிக்கப்படவேண்டும்” என்று நிஷதன் கூறினார். “அவர்கள் முன்னரே அறிந்திருப்பார்கள் எனினும் உறுதிப்பாட்டை அறிவிக்க விருஷ்ணி குலத்தவராகிய நாம் கடமைகொண்டுள்ளோம். அவருடைய கொடிவழியில் இனி எஞ்சியிருப்பவர்கள் நாங்கள் இருவருமே. மைந்தரென நீர்க்கடன் செய்யவேண்டியவர்களும் நாங்களே” என்றார்.

நான் அங்கிருந்து அஸ்தினபுரிக்குச் செல்லலாம் என்று எண்ணியிருந்தேன். ஆனால் மதுராவிலிருந்தே அஸ்தினபுரிக்கு அமைச்சர் ஒருவர் செய்தியுடன் அனுப்பப்பட்டார். எட்டு அரசியரையும் தனித்தனியாக சென்று பார்த்து செய்தி சொல்ல வேண்டுமென்ற எண்ணமும் எனக்கு இருந்தது. அதற்கான தேவையும் இல்லை என்று தெரிந்தது. எனது பணி அறிவித்தல் அல்ல, உறுதிப்படுத்தலே. அதை நான் செய்துவிட்டேன்.

இளைய யாதவரின் கணையாழியையும் குண்டலங்களையும் நிஷதனின் அவையில் ஒப்படைத்துவிட்டு அன்றே அங்கிருந்து கிளம்பினேன். இனியென்ன என்ற எண்ணம் எழுந்து சலிப்புற்றேன். மதுராவின் தெருக்களில் வருகையில் ஏதோ சூதன் ‘வில்லேந்திய விஜயனும் தேரோட்டியாகிய கிருஷ்ணனும்’ என்ற சொல்லை பாடினான். அக்கணம் எனக்கு தெரிந்தது, என் ஊழ் என்னை செலுத்துவது எங்கே என்று. உங்களைக் கண்டு இச்செய்தியை சொல்லவேண்டும் என்ற முடிவை அப்போதுதான் எடுத்தேன். அங்கிருந்து நேராக இங்கு வந்தேன்.

நான் வரும் வழியிலேயே தொடர்ந்த செய்திகள் வந்தடைந்தன. இளைய யாதவரின் எட்டு அரசியரும் நீர் புகுந்தும் எரிபுகுந்தும் உயிர் துறந்தனர். ஷத்ரிய அரசியரான ருக்மிணியும், நக்னஜித்தியும், லக்ஷ்மணையும், மித்ரவிந்தையும், பத்ரையும் தங்கள் நகர்களில் ஷத்ரிய முறைப்படி எரிபுகுந்தனர். தென்புலத்தில் சிதைகூட்டி, எரி எழச்செய்து, மங்கலத்தோற்றத்துடன் மலர் மாலை சூடி கைகூப்பி எரிபுகுந்து விண் எழுந்தனர்.

முறைப்படி அவர்களின் ஆடைகளும் அவர்கள் தங்கள் கொழுநருடையதென்று கொண்டிருந்த நினைவுப்பொருட்களும் அச்சிதையிலேயே வைக்கப்பட்டன. "சதி அன்னை விண்புகுந்தார்!" என்று சூழ்ந்திருந்த வீரர்களும் குடியினரும் புகழொலி எழுப்பினர். அனல் அணைந்த பின்னர் அவர்கள் அணிந்திருந்த மாலைகள் வாடாமல் சிதையில் எஞ்சின. அவர்கள் அணிந்திருந்த பொற்கலங்கள் உருகாமல் ஒளிகொண்டு கண்டெடுக்கப்பட்டன. அச்சிதையின் கன்னிமூலையில் சதிக்கல் நாட்டப்பட்டு அங்கே அவை கொண்டுசென்று வைக்கப்பட்டன.

அவர்களின் நகரிலிருந்து பெருந்திரளென குடிகள் சென்று எரிபுகுந்த அன்னையரை வணங்கி வாழ்த்து கொண்டனர். சிறுமியரை அன்னையர் கொண்டுவந்து அங்கு பணிந்து வணங்கச்செய்து அச்சிதையிலிருந்து எடுத்த சாம்பலை நெற்றியிலும் வகிடிலும் அணிவித்து நெறிச்சூளுரை கொண்டனர். அரசகுடிப் பெண்டிர் அனைவரும் வந்து அங்கே முழுநாள் உண்ணாநோன்பிருந்து வழிபட்டனர்.

ஏழு நாட்கள் விண் நீங்கிய அன்னைக்கு பூசனையும் வழிபாடும் நடந்தது. ஏழாம் நாள் பேருண்டாட்டும் களியாட்டும்

ஆணையிடப்பட்டது. அங்கே துயர் மறைந்து கொண்டாட்டம் எழுந்தது. வண்ணக் கொடிகளும் தோரணங்களும் மங்கல இசையும் சிரிப்பொலிகளும் பெருகி நகரங்கள் அதிரத் தொடங்கின. ருக்மிணியின் விதர்ப்பத்திலும், நக்னஜித்தியின் கோசலத்திலும், மித்ரவிந்தையின் அவந்தியிலும், லக்ஷ்மணையின் மத்ரநாட்டிலும், பத்ரையின் கேகயத்திலும் நாடெங்கும் அவ்விழா கொண்டாடப்பட்டது.

நீர்புகும் மரபு கொண்ட தொல்குடிகளின் அரசியராகிய யாதவகுலத்து சத்யபாமையும், களிந்தமச்சர் குலத்து காளிந்தியும் யமுனையிலும், நிஷாதகுலத்து அரசி ஜாம்பவதி கங்கையிலும் மூழ்கி உயிர்நீத்தனர். தொல்முறைப்படி எளிய வெண்ணிற ஆடை அணிந்து, மங்கல அணிகள் சூடி, மலர்மாலைகள் அணிந்து கைகூப்பியபடி அவர்கள் நீரில் இறங்கி மூழ்கி மறைந்தனர். அப்போது அவர்களின் அணுக்கச்சேடியர் மட்டுமே உடன் சென்றனர். நீர்மறைந்தவர் பெருக்கில் குமிழிகளாக மறைந்த பின்னர் கரையில் நின்றவர்கள் தங்கள் கையிலிருந்த கலங்களை முழக்கி ஓசை எழுப்பினர். அதை கேட்ட அவர்களின் குடியினர் தங்கள் கலங்களை முழக்கியபடி "நீர்மகள் விண்புகுக! மூதன்னையர் அருள்க!" என்று வாழ்த்தொலி எழுப்பினர்.

அவ்வோசை யாதவ நகர்கள் தோறும் பரவிச்சென்றது. யமுனையின் இரு கரைகளும் அவ்வாழ்த்தொலியால் முழங்கின. ஏழு நாட்கள் அங்கு துயர் கொண்டாடப்பட்டது. அன்னையர் நீர்புகுந்த இடங்களில் ஆற்றுக்கரையோரம் அவர்களுக்கு நடுகல் நிறுவப்பட்டு அருகே ஆலமரக்கன்று நடப்பட்டது. குடிப்பெண்கள் வந்து ஏழு நாட்கள் நீரும் அன்னமும் அளித்து மலரிட்டு வணங்கினார்கள்.

ஏழாவது நாள் அவர்களின் விண்ணேற்றத்திற்கான சடங்குகள் நிகழ்ந்தன. யாதவகுடிப் பெண்கள் அன்றுவரை ஒருவேளை உணவுண்ணும் நோன்பு கொண்டிருந்தனர். ஏழாம் நாள் இன்னுணவு உண்டு மலர் மாலை சூடி புத்தாடை அணிந்து தெருக்களில் இறங்கி கொண்டாடினர். "உடன்நீத்த அன்னையர் வாழ்க! விண்புகுக மூதன்னையர்!" என்று யாதவநிலம்தோறும் வாழ்த்தொலிகள் எழுந்தன.

இளைய யாதவருக்கான நாற்பத்தொன்றாவது நாள் நீர்ச்சடங்கு யாதவ ஊர்கள்தோறும் அறிவிக்கப்பட்டது. நாற்பத்தொரு நாளும் ஆண்களுக்கு ஒருவேளை நோன்பு என மரபு. ஆனால் அவரது குடியாகிய விருஷ்ணிகள் அன்றி எவரும் அதை முறையாக கடைபிடிக்கவில்லை என்று அறிந்தேன். போஜர்களும் ஹேகயர்களும் அந்தகர்களும் அவரை தங்களவர் என்றே எண்ணவில்லை. ஒரு வெற்றுச்சடங்காகவே அந்நோன்பு நிகழ்ந்தது.

இளைய யாதவர் அரசியல் நீத்ததுமே பெரும்பாலானவர்கள் அவரை மறந்துவிட்டிருந்தனர். அவர் இறந்துவிட்டார் எனும் செய்தி மீள மீள பல முறை வந்து அவர்களின் உணர்வுகளை பழக்கிவிட்டிருந்தமையால் மெய்யாகவே உயிர்நீத்தார் என்ற செய்தி எவரிலுமே எத்துயரையுமே உருவாக்கவில்லை. நீரில் ஒரு குமிழி உடைந்து மறைவதுபோல் அவர் குடிகளின் நினைவிலிருந்து அகன்றுவிட்டிருந்தார். பல ஊர்களில் திருமணநிகழ்வுகளும் பிற மங்கலநிகழ்வுகளும் இயல்பாக நடைபெற்றன.

நான் சூதர்களிடமிருந்து செய்திகளை பெற்றுக்கொண்டு கிழக்கு நோக்கி வந்துகொண்டிருந்தேன். பின்னர் கிழக்கில் தங்கியிருக்கையில் நகர்களினூடாக வந்த வணிகனொருவனை

கண்டேன். அவன் இளைய யாதவர் மறைந்த செய்தி மக்களால் ஏற்கெனவே மறக்கப்பட்டுவிட்டது என்று கூறினான். இன்று தொல்கதைகளில் இருக்கும் ஒரு தெய்வ உருவகம் என்பதற்கப்பால் எவருக்கும் அவரைப்பற்றி ஏதேனும் தெரிந்திருக்குமா என்பதே ஐயம்தான் என்றான்.

"இளையோருக்கு அவர் வெறும் கதை மட்டுமே. முதியவருக்கோ அவர் மீது உளக்குறைகளும் கசப்புகளும் இருந்தன. மக்கள் குருக்ஷேத்ரப் பெரும்போரை உருவாக்கி, பல்லாயிரவரை கொன்றழித்து, பாரதவர்ஷத்தின் ஷத்ரியர்களை ஆற்றலிழக்கச் செய்து, தன் குடியை நிலைநிறுத்த முயன்ற ஒரு யாதவ அரசன் என்பதற்கு அப்பால் அவரைப்பற்றி எக்கருத்தும் கொண்டிருக்கவில்லை. அவர் செய்த அப்பழியால் தெய்வங்கள் முனிந்து அவர் குலத்தை முற்றழித்தன என்று முதியவர் ஒருவர் ஊர்மன்றில் கூறியபோது அங்கிருந்த பிற முதியவர் அனைவரும் அதை ஏற்பதை கண்டேன்" என்று அந்த வணிகன் சொன்னான்.

இன்று அவரைப்பற்றி பாரதவர்ஷம் அவ்வாறே எண்ணிக்கொள்கிறது என்று தோன்றுகிறது. அவர் உரைத்த நூல் ஒன்று வேதமுடிபுக்கொள்கை கொண்டோர் நடுவே புழங்குகிறது என்றார்கள். வேதமுடிபுக் கொள்கையுடையவர்கள் அவ்வண்ணம் பல நூல்களை கொண்டிருக்கிறார்கள். 'தன்னளவே உயரமாக சுவடிகளை அடுக்கி அவற்றை பயின்று முடிப்பவனே முதல் வேதமுடிபுக்கொள்கையினன். அவற்றை ஒட்டி தானே ஒன்று எழுதி முடிப்பவன் அக்கொள்கையை கடந்தவனாகிறான்' என்று சூதரிடையே இளிவரல் உண்டு. அந்த நூலடுக்குகளில் ஒன்றென அவருடைய வேதமும் மறைந்துவிட்டிருக்கக் கூடும். எஞ்சுவது ஒன்றுமில்லை.

“ஆம் அரசே, எஞ்சுவது ஒரு துளியுமில்லை. எஞ்சுவது என்பது எப்போதும்போல் ஒரு நினைவு. அந்நினைவோ நினைக்கப்படுபவரால் நினைக்க நினைக்க புனையப்படுவதன்றி மெய்யல்ல. இப்புவியில் மெய்யென திகழ்வதெல்லாம் பொய்யென புரிந்துகொள்ளப்படுகின்றன. கண்முன் இருந்து மெய் மறைந்த பிறகு பொய் எஞ்சியிருக்கிறது” என்று மலையன் கூறினான்.

அர்ஜுனன் கூப்பிய கைகளுடன் அதைக் கேட்டு அமர்ந்திருந்தான். அவன் விழிநீர்விடவில்லை. அவன் உடல் மெய்ப்பாடென எதையும் காட்டவில்லை. விழிகள் தழைந்து நிலம்நோக்கி இருந்தன. ஒருசொல்லும் உரைக்கவில்லை. பின்னர் நீள்மூச்சுடன் நிமிர்ந்து விண்ணை நோக்கி வலக்கை சுட்டுவிரலால் மண்ணைத் தொட்டு “ஆம், அவ்வாறே ஆகுக!” என்றான்.

நாக நிலத்தின் எல்லையிலிருந்து அர்ஜுனன் நேராக அஸ்தினபுரி நோக்கி கிளம்பினான். கிளம்பிய பின் மெல்லிய ஓர் அமைதியின்மை என அச்செய்தி அவனில் வேரோடியது. மெல்லமெல்ல அவனை ஆட்கொண்டது. பித்தனென்றாக்கியது. செல்லச் செல்ல அவன் உள்ளம் கொந்தளிப்படைந்தது.

முதல் சில நாட்கள் எங்கும் நிற்கவோ அமரவோ படுக்கவோ முடியாதபடி அவன் உணர்வுகள் அலைகொண்டன. ‘எவ்வாறு! எவ்வாறு! எவ்வாறு! எவ்வாறு!’ என்று அவன் ஆழம் கரைகளில்

வந்து அலையறைந்து கொண்டிருந்தது. எவ்வாறு நிகழக்கூடும்! எவ்வாறு அது இயலக்கூடும்! எவ்வாறு அது மறையக்கூடும்! மறையுமெனில் நிகழ்ந்தவை முற்றிலும் பொருளற்றவை. ஒவ்வொன்றும் பொருளற்றவை.

பின்னர் மெல்ல அவன் உள்ளம் அடங்கலானான். நீண்ட பயணத்தின் சலிப்பே உள்ளத்தையும் அமையச்செய்தது. ஆழ்ந்த துயரை சென்றடைந்தது அவன் அகம். 'அவ்வண்ணமே! ஆம், அவ்வண்ணமே! அவ்வண்ணமே!' என்று அவன் உள்ளம் மாறியது. இங்கு வந்த அனைவரும் அவ்வண்ணமே ஆயினர். ராகவராமனின் வெற்றி தொல்கவிஞனின் கவிப்பொருள் என்றாகியது. அவன் காவியத்தலைவன் என்று சொல்லில் நின்றிருக்கிறான். அன்றி இங்கெதுவும் நிலைகொள்வதில்லை.

எனில் எதற்கு எழுகிறார்கள்? ஏன் அனல் பெருக்கி பேருருக் கொள்கிறார்கள்? அலை நிகழ்த்துகிறார்கள், விண் வெடித்துச் சென்று மறைகிறார்கள். பேருருவர்கள் எழுந்து எழுந்து மறைய இப்புவி இவ்வண்ணமே இருக்குமெனில் அவர்கள் பேருருவர்கள்தானா? அலைகடலில் ஆயிரம் பல்லாயிரம் அலைகளுக்கு ஒருமுறை பேரலை எழுந்து வரும் என்பார்கள். கரைநிற்பவரின் அச்சமே சிற்றலையிலிருந்து பேரலையை பெரிதாக்கி காண்கிறது. கடலுக்கு அனைத்தும் ஒன்றே.

பின்னர் அவன் தெளிவுற்றான். 'இனி! இனி! இனி!' என்று அவன் உளம் மாறியது. சென்று இயற்றவேண்டிய பணியை அது குறிக்கிறது. வென்று ஒரு நாட்டை இளைய யாதவர் தனக்களித்தது ஒருவேளை இதற்காக இருக்கலாம். ஐந்தாவது வேதம் நிலைகொள்ள வேண்டும். புதுநெறி புவி தழைக்க வேண்டும். அதற்கு எழவேண்டும் அஸ்தினபுரியின் செங்கோல்.

அதற்கென்றே நான் திரும்பிச்செல்கிறேன். ஆணையிடும் பொருட்டு, நிறுவும் பொருட்டு.

ஆனால் அப்போது அச்சமூட்டும் ஓர் எண்ணமாக உணர்ந்தான், இளைய யாதவரின் ஐந்தாம் வேதத்தின் ஒரு சொல்கூட அவன் நினைவுக்கு வரவில்லை. பதற்றத்துடன் துழாவுந்தோறும் சொற்கள் முற்றகன்று சென்றன. மீண்டும் மீண்டும் உள்ளத்தின் அடுக்குகளைத் துழாவி, சலித்து, கண்ணீருடன் அவன் பின்னடைந்தான். ஒரு சொல்கூட எஞ்சவில்லை. முற்றாக தானும் மறைந்துவிட்டிருந்தது.

இனி வாழ்வதில் பயனில்லை என்று தோன்றியது. அங்கேயே ஏதாவது குகையில் அமர்ந்து உயிர்விடவேண்டும். அதுவே இனி உகந்த செயல். அறியப்படாதவனாக, எஞ்சாதவனாக. எஞ்சுவதைப் பற்றிய எண்ணங்கள் எல்லாமே பொய்யானவை. எஞ்சாதொழிவதிலேயே இன்றிமையாத ஒழுங்கு உள்ளது. அவன் தனக்குரிய குகையொன்றைத் தேடி அந்த வறண்ட காட்டில் அலைந்தான். பின்னர் மலையுச்சியில் நின்று வெளவால்கள் அந்தியில் எழும் திசையை கண்டான். அதை நோக்கிச் சென்று அங்கே ஒரு சுண்ணக்கல் குகையை கண்டடைந்தான்.

குகைக்குள் சென்று, அதன் இருட்டில் தவழ்ந்து, தனக்கென்றே அமைக்கப்பட்டிருந்த சிறு பீடமொன்றில் அமர்ந்தான். கைகளை மடிமேல் முழுவிடுகை முத்திரையில் வைத்து, மூக்கு நுனியில் விழி சேர்த்து, உளம் குவித்து அமர்ந்தான். உணவும் நீரும் ஒழிந்தமையால் ஏழு நாட்களில் தன் உயிர் பிரியுமென்று எண்ணிக்கொண்டான். ஏழு நாட்களில் என் அலைகள் ஓய்ந்து நான் விடுபடுவேன் எனில் விண்புகுவேன்.

உணவை ஒழிப்பதுபோல் எண்ணம் ஒழிவதற்கு சிறந்த வழி வேறில்லை. அது அடுப்பிலிருந்து விறகை விலக்குவதுபோல. உண்ணா நோன்பிருந்தவர்கள் உளம் அடங்கி விண் ஏகுவதை அவன் கண்டிருந்தான். என்னால் இயலவேண்டும். இயன்றாகவேண்டும். இனி வெல்வதற்கென எஞ்சுவது அது மட்டுமே. அதில் தோற்றால் அடைந்தவை எல்லாம் தோல்விகளே.

அந்த எண்ணமே தன் இயலாமை குறித்த பதற்றமாக, துயராக எழுந்தது. அவன் மூன்று நாட்கள் அங்கு அமர்ந்திருந்தான். மூன்று நாளும் உள்ளம் முழு விழிப்புநிலையிலேயே இருந்தது. மூன்றாவது நாள் வெளியே பேச்சுக்குரல்களை கேட்டான். கொடியேணியை உச்சிப்பாறையிலிருந்து கட்டித்தொங்கவிட்டு அதனூடாக இறங்கி வந்து மலைத்தேன் எடுத்துக்கொண்டிருந்த நிஷாதர்களின் பேச்சு அது என உணர்ந்தான்.

மெல்லிய சொற்கசங்கல்களாக அவர்களின் உரையாடல் கேட்டது. அவர்களில் ஒருவன் கூறினான். "அஞ்சுவதற்கு என்ன உள்ளது இங்கே? மறம் ஓங்கி அறம் அழிகையில் நான் நிகழ்ந்துகொண்டே இருப்பேன் என்று பரம்பொருள் மானுடனுக்கு ஒரு சொல்லளித்திருக்கிறது அல்லவா?"

மேலிருந்து அறுந்து மண்ணில் வந்து அறைந்து விழுந்ததுபோல் அர்ஜுனன் விழித்துக்கொண்டான். எழுந்து இருளில் தடுக்கி விழுந்து எழுந்து ஓடி குகையிலிருந்து வெளிவந்து அவ்வேடர்களை பார்த்தான். இருவரும் இளையவர்கள். "என்ன சொன்னீர்கள்?" என்று கூவினான். "சற்று முன் ஒரு பாடல்வரியை சொன்னீர்கள்... அது என்ன?"

அவர்களில் மூத்தவன் “முனிவரே, நீங்கள் யார்? இக்குகைக்குள்ளா இருந்தீர்கள்?” என்றான். “சற்றுமுன் நீங்கள் கூறியதென்ன? அவ்வரியை எங்கு பெற்றீர்கள்?” என்றான். “இது எங்கோ சூதர் ஒருவரால் கூறப்பட்டது. எங்கள் முதியவர்கள் இதை அடிக்கடி கூறுவதுண்டு” என்றான் முதியவன்.

அர்ஜுனன் “இது ஒரு புது வேதத்தின் வரி என்பதை அறிவீர்களா?” என்றான். “ஆம், இதன் ஒரு வரியையேனும் அறியாத எவரும் இங்கில்லை. யாரோ பாடிக்கொண்டே இருக்கிறார்கள். ஏனென்றால் இது பாடுவதற்கு எளியது, இனியது. நானே ஒவ்வொரு நாளும் கடமையை செய்க, பயனை அளிப்பது படைத்தவனின் கடன் என்று கூறிக்கொள்வதுண்டு” என்றான் முதியவன்.

அர்ஜுனன் ஒரு கணத்தில் ஐந்தாம் வேதத்தின் ஒவ்வொரு சொல்லையும், ஒலியையும் தன் நினைவிலிருந்து மீட்டெடுத்துக்கொண்டான். இரு கைகளையும் தலைக்குமேல் கூப்பி கண்ணீருடன் அங்கிருந்து திரும்பி நடந்தான். சிரித்துக்கொண்டும் தலையசைத்து தனக்குத்தானே பேசிக்கொண்டும் நடந்து அருகிருந்த சிறு நகரின் விடுதியை அடைந்தான். அங்கு கிடைத்த உணவை உண்டு அதன் ஓரமாக மரவுரியை விரித்து படுத்துக்கொண்டான்.

அங்கு வணிகர்கள் கூடி அமர்ந்தனர். நடுவே விழியிலாத சூதன் ஒருவன் அமர்ந்து புற்குழல் இசைக்கத் தொடங்கினான். முதற்சுருள் எழுந்தபோதே அர்ஜுனன் திகைத்து எழுந்து அமர்ந்தான். அவன் அசைவைக் கண்டு அனைவரும் திரும்பிப்பார்த்தனர். சூதன் குழல் தாழ்த்தி “கூறுக, முனிவரே!” என்றான். “இதை எங்கு கற்றீர்?” என்றான். “இது என்

ஆசிரியராகிய முதுசூதர் பாசர் பயணியாகிய சூதர் ஒருவரிடமிருந்து கற்றது" என்றான் சூதன்.

"அவர் எங்கு கற்றார்? இந்த இசை நான் நன்கு அறிந்தது. இங்கு அனைத்தையும் நிகழ்த்திய இசை இது" என்றான் அர்ஜுனன். "என் ஆசிரியரின் ஆசிரியர் இதை விழியிழந்த இளங்குமரன் ஒருவனிடம் இருந்து கற்றார். நாவும் செவியும் விழியும் அற்றவன். இசையொன்றினால் மட்டுமே உலகுடன் பேசுபவன். அவன் பெயர் முரளி. யாதவ அரசகுடியில் பிறந்தவன், யமுனைக்கரையில் புற்குடிலொன்றில் தனிமையில் தங்கியிருக்கிறான். அவனைத் தேடி சூதர்கள் சென்றுகொண்டிருக்கிறார்கள். அவனிடமிருந்து அந்த இசை எங்கும் பரவுகிறது" என்றான் சூதன்.

"சூதரே, நீங்கள் எங்கிருந்து இதை கற்றீர்?" என்று அர்ஜுனன் கேட்டான். "நான் தென்திசையைச் சேர்ந்தவன். என் பெயர் கந்தன். இதை மேற்குப்புலத்தைச் சார்ந்த யவனச்சூதராகிய பாசரிடமிருந்து கற்றேன்" என்று அவன் சொன்னான். "இவன் என் மாணவன்" என்று அருகிருந்தவனை சுட்டிக்காட்டி "இவன் கிழக்கு நிலத்தை சேர்ந்தவன்" என்றான்.

இசைக்குமாறு கைகாட்டி அர்ஜுனன் மல்லாந்து படுத்தான். அவனைச் சூழ்ந்து குழலிசை எழுந்து பரவியது. அது ஐந்தாம் வேதத்தின் சொற்களில் பரவியிருப்பதை அவன் அறிந்தான். அவ்விசையில் ஐந்தாம் வேதத்தின் சொற்கள் ஊடுருவியிருந்தன. கண்ணீர் வழிய புன்னகைத்தபடி அவன் அதை கேட்டுக்கொண்டிருந்தான். பெருநதியில் சிறு துரும்பென அதில் மிதந்து சென்றுகொண்டிருந்தான்.

[**கல்பொருசிறுநுரை நிறைவு]**